D
V2:11,31 N82
N83·3452
122241

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
நான்காவது கூட்டத்தொடர்

**1982 மார்ச் 17, 18, மற்றும் 19 ஆம் நாட்கள்**

**(தொகுதி XXXIV - எண்கள் 1 முதல் 3 வரை)**

©
தமிழ்நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-6000 09.

விலை ரூ. 2]

D
V211,31 N82
N83·34;2
122241



*17.* மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி *(ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு,* மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

*18.* மாண்புமிகு திருமதி கோமதி ஸ்ரீனிவாசன் *(சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு,* பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister) Public, General Administration, Indian Admistrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backword Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru. S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Smal Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts' Prisons, Legislations on Weigths and Measuresr) Regisiiation of Companies, Debt Relief including Legislation on Money Lending and Lgislation on Chits and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Commu i y Developmen , Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Hihgways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing Slum Clearance Board, S a is ics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Acc mmodation Cont.ol.

12. Hon. Dr. H. V. HANDE (Minis er for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-o erative Societies, Irriga ion including Minor Irriga ion and Wakf.

14. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transpor — Transpor , Na ionalised Transpor , Mo or Veiicles Act and Por s.

15. Hon. Thiru. S. THIRTNAVUKKARALU (Minister for Industries)—Large Scale Indus ries, Mines and Minerals and Tex iles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minis er for Public Works and Kadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Pass or s, Public Works Department and Es abltshment ma er rela ing o Public Works Depar men .

17. Ho . T iru M. M. VIJAYASARATHI (Minis er for did Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, And Prin ing Governmen Press, News Prin Con(rol, Hill Tribes ana Bonded Labour anq Employment and Training

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minis er for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and correc ional Administration



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரைமுருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி,ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.,பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்-சி. (குழு அலுவலர்).
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி,ஏ., பி.எல். (சார்புச் செயலாளர்).
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ பி எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்).
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்).
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்).

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ் அனந்தநாராயணன். பி.லிட்.

---

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 2—2—1982 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் [தமிழ் அகர வரிசைப்படி] தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|---|
| | (1) | | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | .. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | .. | திநவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | .. | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை திரு. மு. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | .. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ். | .. | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | .. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | .. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. வெ. | .. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | .. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | .. | நாமக்கல் (செ.வ. |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | .. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன் திரு. தி. | .. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில்தர்மலிங்கம், திரு. | .. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | .. | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | .. | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | .. | சேலம்—2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | .. | அரியலூர் |
| 21 | ஆனூர் ஜெகதீசன், திரு. | .. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | .. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. | .. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | .. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | .. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி தா. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 27 | இராசாராம், திரு. க. | .. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். | .. | பாபநாசம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் வ. |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி (செ.) |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் [செ.வ.] |
| 39 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வெ. | இராதகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையப்பெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர் மு. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 | நன்னிலம் கலையரசன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 65 | காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ. வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 | கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 5 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர்... | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. .. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. .. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. .. | சோழவந்தான். |
| 95 | சபாபதி, திரு. சி. .. | அரூர் (செ.வ.). |
| 96 | சமரசம், டாக்டர், கே. .. | காவேரிப்பட்டணம். |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர். |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம். |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம். |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி. |
| 101 | சிவசாமி, திரு. செ. .. | இளையான்குடி. |
| 102 | சிவஞானம், திரு. ந. .. | திருவோணம். |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சி. .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவபெருமான், திரு. மு. .. | ஓமலூர். |
| 105 | சிவராமன், திரு. எ. எஸ். .. | சின்னசேலம். |
| 106 | சின்னசாமி, திரு. எம். .. | கரூர். |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர். |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 109 | சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர். |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 111 | சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 112 | சுந்தரம், திரு. மு. .. | ரிஷிவந்தியம். |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர். |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். .. | போடிநாயக்கனூர். |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர். |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி. |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிபாளையம். |
| 123 | செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 124 | செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 125 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. .. | அரவக்குறிச்சி. |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு. |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. .. | திருப்போரூர். |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர். |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2. |
| 132 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 133 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 134 | தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி. |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 | தங்கவேலு, திரு. பி. .. | ஜெயங்கொண்டான். |
| 137 | தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ. வ.). |
| 138 | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ. வ.). |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. .. | முதுகுளத்தூர். |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 141 | தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 142 | திருச்சி சௌந்திரராசன் திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம். |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ்... | அறந்தாங்கி. |
| 144 | திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 145 | திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (செ.வ.). |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு... | கலசப்பாக்கம். |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. .. | பொன்னகரம். |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர். |
| 149 | துரைமுருகன், திரு. இரா .. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 151 | துரைராஜ், திரு. பி. .. | சங்கரநாயினார் கோவில் (செ. வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| 153 | நடராஜன், திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 156 | நவநீத கிருஷ்ண பாண்டியன், திரு. .. | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே.பி. .. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். .. | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். .. | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. .. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.) |
| 178 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. .. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 181 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே.சி.டி. .. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. .. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 183 | பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 191 | பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம்.எஸ். .. | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. .. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. .. | திருச்சி-1 |
| 198 | முத்துகிருஷ்ணன், திரு. சு. .. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. .. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா.சா. .. | கும்மிடிபூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. .. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. .. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி, செல்வி வி. .. | வீரபாண்டி |
| 217 | வின்செண்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ. வ.) |
| 219 | விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம், திரு. க.வெ. .. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. .. | காஞ்சி |
| 225 | வெங்கட ரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு. பி.எம். .. | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்செண்ட், திரு. மு. .. | நாங்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு.வே.இரா. .. | தேனி |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. .. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1982 மார்ச் 17,18,19 ஆம் நாட்கள்
(தொகுதி 34—எண்கள் 1 முதல் 3 வரை).

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii |
| (ii) Personel of the Government of Tamil Nadu .. | v |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. | vii |
| (iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட—அகரவரிசையில்) .. | ix |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. | 333—334 |
| சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. | 334 |
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்த சட்டமுன் வடிவு 1982 .. | 333 |
| நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்டமுன் வடிவு, 1982 .. | 333 |
| பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. | 332—333 |
| அரசினர் தீர்மானங்கள்— | |
| அவைக்குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. | 332 |
| உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. | 331 |
| பொதுக் கணக்குக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. | 49 |
| பொது நிறுவனங்கள் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. | 49 |
| மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. | 49 |

பக்கங்கள்

அரைமணி நேர விவாதம்—

தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர் அகல இரயில் பாதை .. 413—425

அறிக்கை அளித்தல்—

கன்னியாகுமரி மாவட்ட சம்பவங்கள் பற்றி முதல் அமைச்சரின் அறிக்கை .. 29—36

துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் .. 689

பொது நிறுவனங்கள் குழு .. 331

அறிவிப்புகள்—

பேரவை அலுவல் .. 334

மதிப்பீட்டுக்குழு, பொதுக்கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்தல் .. 50

உரிமைப் பிரச்சினை—

வானொலி மீது .. 329—330

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

கொச்சி வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பெற்ற சிமெண்ட் மூட்டைகள் .. 37—43

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலைக் கிடங்கில் தீ விபத்து .. 685—688

கவன ஈர்ப்புகள்—

ஏட்டேரி—கொளப்பாக்கம் நெடுஞ்சாலை மூடப்பெற்றது .. 43—47

கோவை மாவட்டத்தில் பல தொழில் நிறுவனங்கள் இயங்காதது .. 695—700

சேலத்தில் சிமெண்டில் கலப்படம் செய்வது .. 47—48

நந்தனம் காலனியில் ஒரு இளைஞர் கொலை செய்யப் பெற்றது .. 690—695

தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் .. 330—331
684—685

கொள்கை விளக்கக் குறிப்புகள் கொடுப்பதில் தாமதம் .. 331

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 202—203
539—540
875—876



பக்கங்கள்

வரவு—செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—

கதர்
பொதுப்பணிகள், கட்டிடங்கள்
பொதுப்பணிகள், பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்
பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு } 495—538

தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு } 701—818

நிலவரித்துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் } 335—413

பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
எழுதுபொருள் அச்சுத் துறை } 50—202

பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு } 425—495

முத்திரைத்தாள்கள் நிர்வாகம்
பத்திரப்பதிவு
பால்வழங்கு திட்டங்கள் } 819—875

வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. 1—29
297—329
645—684

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும்; (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும், ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றப்(கள்)', 'மாநகராட்சி(கள்)', ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர் மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.



அகர வரிசை தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப்பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:—

| | | |
|---|---|---|
| அ | .. | அறிக்கை |
| அறிவி. | .. | அறிவிப்பு |
| அ.வி. | .. | அரை மணி நேர வாதம் |
| கு.வி. | .. | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | .. | கவன ஈர்ப்புகள் |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| அ.நி. | .. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ஆ.நி. | .. | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| பிரி.ஆ. | .. | சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்தல். |
| ச.பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |

தீ. ... தீர்மானம்
உ.தீ. .. உரிமைத் தீர்மானம்
ஒ.தீ. .. ஒத்திவைப்புத் தீர்மானம்
த.தீ. ... தனித் தீர்மானம்
து.மா.கோ. .. துணை மானியக் கோரிக்கை
மி.மா.கோ. .. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை
பே.அ. .. பேரவையின் அலுவல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கை அட்டவணை.
இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.
1982 மார்ச் 17, 18, 19 ஆம் நாட்கள்
(தொகுதி 34 - எண்கள் 1 முதல் 3 வரை.)

'அ'


பக்கங்கள்

அங்குசாமி, திரு. ச.—
அரசு அலுவலகங்கள், வாரம் 2 நாள் விடுமுறை .. 2—3
தொண்டி, மீன்பிடித் துறைமுகம், அமைத்தல் .. 7

அப்பாதுரை, திரு மு.—
தூத்துக்குடி-திண்டுக்கல்—கரூர் அகல ரயில்பாதை அமைக்கும் திட்டம் (அ.வி.) .. 419

அம்பிகாபதி, திரு. மு—
ஏரிகள் மேம்பாடு, உலக வங்கி உதவி .. 25—26
தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில் தீ விபத்து (ஒ.தீ.) .. 685—686
வரவு-செலவுத் திட்டம், 1982—83 வாக்கெடுப்பு—
கதர்
பொதுப்பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள்—பணியாளரமைப்புக் கருவிகளும் தளவாடமும்
பொதுப்பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு
} 519—522

அரங்கராசன், திரு. வெ—
வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
எழுதுபொருள் அச்சுத்துறை .. 75—80

அரைமணி நேர விவாதம்—
தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர் அகல ரயில் பாதை அமைக்கும் திட்டம் .. 413—425

பக்கங்கள்

அ—தொடர்ச்சி

அலுவலகங்கள்—
அரசு அலுவலகங்கள் வாரம் 2 நாள் விடுமுறை. 2—3

அழகர்சாமி, திரு. சோ—
வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்
} 370—380

அன்பழகன், திரு. க—
தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர் அகல ரயில் பாதை அமைக்கும் திட்டம் (அ.வி.) .. 420—421
வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்
} 344—345, 347—348

அன்பழகன், திரு. தி—
பொது நிறுவனங்கள் குழு, 15-வது அறிக்கை; அளித்தல் .. 331

ஆ

ஆசிரியர்கள்—
மாஞ்சோலை எஸ்டேட் (திருநெல்வேலி), அரசு உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு மலை அலவன்ஸ் .. 665—666
மேல்நிலை பள்ளிகள், நியமனம் .. 660—662

ஆண்டித்தேவர், திரு. எஸ்—
தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர் அகல ரயில் பாதை அமைக்கும் திட்டம் (அ.வி.) .. 417

பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி


ஆண்டித்தேவர், திரு. எஸ்.—தொடர்ச்சி
- வரவு-செலவுத் திட்டம், 1982–83 வாக்கெடுப்பு—
  - நிலவரித்துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 384—389

ஆதிதிராவிடர் நலன்—
- ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தல் .. 680—682
- ஆதிதிராவிடர் விடுதி உணவுக்காக செலவிடும் தொகை .. 682—684
- "இருளர்" சமுதாயத்தினர் வீடுகள் கட்டும் திட்டம் .. 679
- இறந்துவிடும் மாணவர்களின் ஸ்காலர்ஷிப் விவரம் .. 10—11

ஆறுமுகம், திரு. எம்—
- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - தொழில்கள், தொழில் வளர்ச்சிக் குறித்த மூலதனச் செலவு 700, 752—757

ஆறுமுகம், திரு. சேலம் மு—
- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - முத்திரைத்தாள்கள் நிர்வாகம், பத்திரப்பதிவு, பால்வழங்கு திட்டங்கள் 852—854

ஆறுமுகம், திரு. த—
- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு 472—474


இ


இரத்தினம், திரு. எம். வி—
- பொள்ளாச்சி தாலுகா, தனி நபர் அணைகள் .. 673—674




இ—தொடர்ச்சி பக்கங்கள்


இராகவானந்தம், திரு. எஸ்—
- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 205—706
  - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன், எழுதுபொருள் அச்சுத்துறை 124—125

இராசகுமார், திரு. மே. அ—
- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன், எழுதுபொருள் அச்சுத்துறை 90—93

இராசமாணிக்கம், திரு. இரெ—
- கொச்சி வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பெற்ற சிமெண்ட் மூட்டைகள் (ஒ.தீ.) .. 37—38

இராசாம்பாள், திருமதி தா—
- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன், எழுதுபொருள் அச்சுத்துறை 114—126

இராசு, திரு. ஜே. எஸ்—
- இறந்துவிடும் மாணவர்களின் ஸ்காலர்ஷிப், 10—11
- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - நிலவரித்துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 389—395
  - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன், எழுதுபொருள் அச்சுத்துறை 166—177

இராசேந்திரன், திரு. எஸ். என்—
- வரவு செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - கதர்
  - பொதுப்பணிகள் கட்டிடங்கள், பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும், பொதுப்பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு 495—496, 497, 526—537

இ—தொடர்ச்சி — பக்கங்கள்

இராமச்சந்திரன், திரு. எம். ஜி—
கன்னியாகுமரி மாவட்ட சம்பவங்கள் (அறி.) .. 29—36

இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந—
மருத்துவக் கல்லூரிகள் வெளிநாட்டு மாணவர்கள் .. 322—324

இராமலிங்கம், திரு. ஏ—
வரவு செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் } 106—109
எழுதுபொருள் அச்சுத்துறை

இராமலிங்கம், டாக்டர் கே. பி—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
தொழில்கள் } 719—725
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

இராமலிங்கம். திரு. செ—
தையல் தொழிலாளர்கள், குறைந்த பட்ச ஊதியம். 17—19
வரவு செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 457—460
ஐப்தி கொடுமைகள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம எடுத்துக் கொள்வது (த.கோ.) .. 330

இராஜா முகமது, திரு. கே—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பாசனம் 425, 426,
பாசனம் குறித்த மூலதனச் செலவு 427, 484—494

இளையபெருமாள், திரு. எல்—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கதர்
பொதுப்பணிகள் கட்டடங்கள்
பொதுப் பணிகளும் பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும் } 504—509
பொதுப்பணிகள் கட்டடங்கள்குறித்த மூலதனச் செலவு
பழங்குடியினர்
ஆதிதிராவிடர் முதலியோர் நலன் } 6[illegible]—75 76
எழுதுபொருள் அச்சுத்துறை



இ—தொடர்ச்சி — பக்கங்கள்

இளையபெருமாள் திரு. எல்—தொடர்ச்சி
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—தொடர்ச்சி
முத்திரைத்தாள்கள் நிர்வாகம்
பத்திரப்பதிவு 829—834
பால் வழங்கு திட்டங்கள்

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—
குறைந்தபட்ச ஊதியம், அமல் நடத்த தனி பிரிவு .. 671—672
கொச்சி வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப் பெற்ற சிமெண்ட் மூட்டைகள் (ஒ.தீ.) .. 38—39
கோவை மாவட்டத்தில் பல தொழில் நிறுவனங் கள் இயங்காதது (க.ஈ.) .. 695
தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில் தீ விபத்து (ஒ.தீ.) .. 685
தையல் தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியம். 17—19
பி.எஸ்ஸி பட்டதாரிகள், மருத்துவக்கல்லூரிகளில் இடஒதுக்கீடு .. 322

உ

உகம்சந்த், திரு. எஸ். டி.—
ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தல் .. 680—682
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்ப—
நிலவரித்துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு } 380—334
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

உச்சி, திரு. கே.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
முத்திரைத்தாள்கள் நிர்வாகம்,
பத்திரப்பதிவு,
பால் வழங்குத் திட்டங்கள் .. 289—291A 841—843

உணவுத் தானியங்கள்.—
கோதுமை ஒதுக்கீடு. 654—655
நெல் கொள்முதல் விலை, மற்ற மாநிலங்களுடன் ஒப்பீடு .. 3—6

உ—தொடர்ச்சி பக்கங்கள்

உமாநாத், திரு. ரா.—

சிறைகளில் கேன்டீன் வசதி .. 15—16

நந்தனம் காலனியில் ஓர் இளைஞர் கொலை செய்யப் பெற்றது (க.ஈ) .. 694—695

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.. 725—740

உரிமைப் பிரச்னை.—

பார்க்க—தலைவர். ..

உள்ளாட்சிகள்.—

கரசமங்கலம் பஞ்சாயத்து, கருங்கல் பாறைகளை உடைப்பதைத் தடுக்கும் திட்டம் .. 317—318

'ஏ'

ஏடுகள்.—

பேரவை முன் வைக்கப்பெற்றவை .. 220—203
.. 539—540
.. 875—876

'ஒ'

ஒய்வூதியம்.—

வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினர், ஒய்வூதியத்தை உயர்த்தல் .. 648—651

'க'

கணபதி, திரு. கே. ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு 456—457

கணேசன், திரு. சி.—

பள்ளிப்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி 319

கருப்பையா, திரு. இரா.—

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில் தீவிபத்து (ஓ.தீ.) .. 685

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—பாசனம், பசனம் குறித்த மூலதனச் செலவு 464—465





க—தொடர்ச்சி பக்கங்கள்

கருப்பையா, திரு. ஏ. டி.—

கட்டாய சேமிப்புத் திட்டம், தொகை திருப்பியளித்தல் .. 19

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் எழுதுபொருள் அச்சுத்துறை .. 51,93—98

கல்லன், திரு. கே.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—நில வரித்துறை மாவட்ட நிர்வாகம் இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 337

கல்வி—

கல்லூரித் தேர்வுகள், முடிவு வெளியீட்டில் காலதாமதம் .. 662—665

பி.எஸ்சி. பட்டதாரிகள் மருத்துவ கல்லூரிகளில் இட ஒதுக்கீடு 322

மருத்துவக் கல்லூரிகள், வெளிநாட்டு மாணவர்கள், அனுமதிக்கப்பட்டோர் எண்ணிக்கை .. 322—324

கல்விக் கூடங்கள்.—

சிறுபான்மையோர் பள்ளிகள், நிர்வாகக் குழுக்கள் அமைத்தல் .. 659

பழனியாண்டவர், கலைக் கல்லூரி, பழனி .. 304—305

கவன ஈர்ப்புகள்—

ஒட்டேரி—கொளப்பாக்கம் நெடுஞ்சாலை, மூடப்பெற்றது .. 43—47

கோவை மாவட்டத்தில் தொழில் நிறுவனங்கள் இயங்காதது .. 695—700

சேலத்தில் சிமெண்டில் கலப்படம் செய்வது .. 47—48

நந்தனம் காலனியில் ஓர் இளைஞர் கொலை செய்யப்பெற்றது .. 690—695

கனிமங்கள்.—

வனநில, மலைத்தடப் பகுதிகள், புவியியல் ஆய்வு .. 27—29

காவல் துறை—

தமிழ்நாடு சிறப்புக் காவலர்களின் பணி விவரம் 645—648

நந்தனம் காலனியில் ஓர் இளைஞர் கொலை செய்யப் பெற்றது (க.ஈ.) .. 690—695

க—தொடர்ச்சி — பக்கங்கள்


கிருஷ்ணசாமி, திரு. கா. கோ.—

- வரவு-செலவுத்திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
  - பாசனம்,
  - பாசனம் குறித்த மூலதனச் செலவு 452—454

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—

- பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1982 .. 332
- வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
  - தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 776,797—748
- முத்திரைத்தாள்கள் நிர்வாகம், பத்திரப்பதிவு, பால் வழங்கு திட்டங்கள் .. 819—820 .. 861—873

கிருஷ்ணன், திரு. ரா.—

- தமிழ்நாடு சிறப்புக் காவலர்களின் பணி, விவரம் 645—648
- தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில் தீ விபத்து (ஒ. தீ.) — 685
- நந்தனம் காலனியில் ஓர் இளைஞர் கொலை செய்யப்பெற்றது .. 690, 693— .. 694
- வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
  - நிலவரித்துறை
  - மாவட்ட நிர்வாகம்
  - இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 337

குடிநீர்—

- அம்பத்தூர் நகரியம் (வில்லிவாக்கம்), குடிநீர் வழங்கல் 672—673
- குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய கிராமங்கள், குடிநீர் வழங்குதல் .. 669—670
- பெண்ணாறு, வேட்டவலத்திற்கு குடிநீர் 19—20
- மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, பள்ளிப் பேட்டை .. 319

குப்புசாமி, திரு. கே.—

- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—

Plaindent

- பாசனம்
  - பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 470—472




பக்கங்கள்.

க—தொடர்ச்சி.


குமரி அனந்தன், திரு.—

- தமிழ்நாடு சிறப்புக் காவலர்களின் பணி விவரம் .. 645—648
- தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர் அகல ரயில் பாதை அமைக்கும் திட்டம் (அ.வி.) .. 418

குலசேகர், திரு. ஏ. டி.—

- கோவை மாவட்டத்தில் பல தொழில் நிறுவனங்கள் இயங்காதது (க.ஈ.) .. 695—697

குலசேகர பாண்டியன், திரு. ந.—

- வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
  - தொழில்கள்
  - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.. 740—744

குழந்தைவேலு, திரு. ப.—

- கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. 333,334
- சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. 334
- நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1982 ... 333
- நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் (மதிப்பீட்டு) திருத்த சட்ட முன்வடிவு, 1982 .. 333

குழுக்கள்—

- அவைக் குழு, தேர்தல் (தீ) .. 332
- உரிமைக் குழு, தேர்தல் (தீ) .. 331
- பொது நிறுவனங்கள் குழு, 15 வது அறிக்கை அளித்தல் .. 331

கூட்டுறவு—

- திருவள்ளுவர் கூட்டுறவு அச்சகம், பர்மா தமிழர் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தல் .. 667—669
- பாளையங்கோட்டை—நெல்லை கூட்டுறவு பண்டக சாலை, கையாடல் .. 13—15

பக்கங்கள்.

க— தொடர்ச்சி.

கோபால், திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
முத்திரைத் தாள்கள் நிர்வாகம், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள் .. 834—838

கோபாலகிருஷ்ணன், திரு. கா.—

சிறுபான்மையோர் பள்ளிகள், நிர்வாகக் குழுக்கள் அமைத்தல் .. 659

கோவைத்தம்பி, திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 365—369

'ச'

சக்கரபாணி, திரு. ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் எழுதுபொருள் அச்சுத்துறை .. 99—106

சட்டம் ஒழுங்கு—

கன்னியாகுமரி மாவட்ட சம்பவங்கள் (அ.நி.) .. 29—36

சட்ட முன்வடிவுகள்—

கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) .. 333,334
சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) .. 334
நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) .. 333
நீதி மன்றங்கள் கட்டணங்கள்—வழக்குகள் (மதிப்பீட்டு) (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) .. 333
பத்திரப் [illegible] (தமிழ்நாடு) (திருத்த) சட்ட [illegible] (அ.நி.) .. 332—334



பக்கங்கள்.

'ச'— தொடர்ச்சி.

சண்முகம் திரு. ஏ. சி.—

தமிழ்நாடு—கேரளா எல்லைகள் விவரம் .. 7

வரவு—செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
தொழில்கள், தொழில் வளர்ச்சிக் குறித்த மூலதனச் செலவு .. 711—719

சத்தியமூர்த்தி திரு. வ.—

வரவு செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
கதர்—
பொதுப் பணிகள் கட்டடங்கள்
பொதுப் பணிகள் – பணியாளரமைப்பும்
கடைகளும் தளவாடமும்
பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு .. 517—519
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 430—432

சந்திரசேகரன் திரு. ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 467,468

சமரசம் டாக்டர் கே.—

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
கதர்
பொதுப் பணிகள் கட்டடங்கள்
பொதுப் பணிகளும் பணியாளரமைப்பும்
கடைகளும் தளவாடமும்
பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு .. 499—504
நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 357—362

சமூக நலன்—

ஏழை விதவைகளின் குழந்தைகள், இலவசப் பாடப் புத்தகங்கள் .. 328,329
படித்த கைதிகள், விடுதலைக்குப்பின் அரசுப் பணி .. 666—667

பக்கங்கள்.

'ச'—தொடர்ச்சி.


சாலைகள்—

ஓட்டேரி — கொளப்பாக்கம் நெடுஞ்சாலை மூடப்பெற்றது (க.ஈ.) .. 43—47

சித்தன் திரு. என். எஸ். வி.—

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில் தீவிபத்து .. 685

மாஞ்சோலை எஸ்டேட் (திருநெல்வேலி) அரசு உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஹில் அலவன்ஸ் .. 666—666

சிமெண்ட்—

சேலத்தில் சிமெண்டில் கலப்படம் செய்வது (க. ஈ.) .. 47,48

சிவசாமி திரு. செ.—

சாயல்குடி, கடலின் நல்ல தண்ணீர் திட்டை சுற்றுலா மையமாக்கல் .. 651—654

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—

நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள்
குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 335

பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் சேலவு 444—447

சிவப்பிரகாசம், திரு. சீ.—

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு
பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
எழுதுபொருள் அச்சுத்துறை .. 135—141

சிவராமன், திரு.எஸ்.—

கல்ராயன் மலைப் பகுதி நீர்வீழ்ச்சி .. 299—300

பாக்கம்பாடி அணை .. 676—678

வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 481—484

சிறைச்சாலைகள்—

சிறைகளில் கேன்டீன் வசதி 15—1




பக்கங்கள்.

ச—தொடர்ச்சி


சின்னசாமி, திரு. எம்.—

சென்னை கன்னிமரா நூலகம், நிர்வாக விவரம் 11—13

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், பேருந்துகளில் தூங்கும் வசதி .. 324—325

தூத்துக்குடி, திண்டுக்கல்—கரூர் அகல ரயில் பாதை அமைக்கும் திட்டம். (அ.வி.) .. 415—416

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

பாசனம்.
பாசனம் குறித்த மூலதனச் செலவு 454—456

சின்னராசு, திரு. க. இரா.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு 447—449

சின்னராசு, திரு.மா.—

கோவை மாவட்டத்தில் பல தொழில் நிறுவனங்கள் இயங்காதது. (க.ஈ.) .. 695

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

கதர்—

பொதுப் பணிகள் கட்டடங்கள்—

பொதுப் பணிகளும் பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்.

பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு. .. 509—512

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் எழுதுபொருள் அச்சுத்துறை .. 163—166

முத்திரைத் தாள்கள் நிர்வாகம்,
பத்திரப் பதிவு,
பால் வழங்குத் திட்டங்கள். } 826—829

சுந்தரம், திரு. கே.ஆர்.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) .. 684—685

குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதல் .. 669—670

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர நலன்
எழுதுபொருள் அச்சுத்துறை 81

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி


சுந்தரம், திரு. கே. ஆர்—தொடர்ச்சி.

பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 426

முத்திரைத் தாள்கள் நிர்வாகம்,
பத்திரப் பதிவு,
பால் வழங்கு திட்டங்கள். } 838—841

சுந்தரம், திரு. ப.—

டூரிஸ்ட் சினிமா, பகல் காட்சி அனுமதி. 307—309

சுந்தரமூர்த்தி, திரு. ஆர்.—

வேட்டவலத்திற்கு குடிநீர் 19—20

சுந்தரராஜ், திரு. நா.—

தூத்துக்குடி—திண்டுக்கல்—கரூர்—அகல ரயில் பாதை அமைக்கும் திட்டம். (அ.வி.) .. 416—417

சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
பாசனம்.
பாசனம் குறித்த மூலதனச் செலவு 462—464

சுப்பிரமணியன், திரு.மா.—

தஞ்சை, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டிப்போ .. 327—328

சுவாமிநாதன், திரு.வி.வி.—

மொழி வழி மாகாணப் பிரிவு, விவரம் 7—10

சுற்றுலா.—

சாயல்குடி, கடலின் நல்ல தண்ணீர் திட்டை சுற்றுலா மையமாக்கல் .. 651—654

செங்கோட்டையன், திரு.கு.அ.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 442—444




பக்கங்கள்.

ச—தொடர்ச்சி


செம்மலை, திரு.செ.—

ஆதிதிராவிடர் விடுதி, உணவுக்காகச் செலவிடும் தொகை. .. 682—684

ஏழை விதவைகளின் குழந்தைகள், இலவசப் பாடப் புத்தகங்கள் .. 328—329

செல்லமுத்து, திரு. எம்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
தொழில்கள்,
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 701

நிலவரித்துறை

மாவட்ட நிர்வாகம்

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 362—365

சேதுராமன், திரு. ஏ. எம்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
முத்திரைத் தாள்கள் நிர்வாகம்
பத்திரப் பதிவு
பால் வழங்குத் திட்டங்கள் } 846—849

சொக்கலிங்கம், திரு. கெ.—

ஒட்டேரி—கொளப்பாக்கம் நெடுஞ்சாலை மூடப் பெற்றது. (க.ஈ.) .. 43—45

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
எழுதுபொருள் அச்சுத்துறை 52—57

சோமசுந்தரம், திரு. எஸ்.டி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம்

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 335, 336, 337, 338, 395—411 57—59

பக்கங்கள்.


சோமு, திரு. என்.வி.என்.—

ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வது குறித்து. (த.கோ.) .. 330

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

முத்திரைத் தாள்கள் நிர்வாகம்
பத்திரப் பதிவு
பால் வழங்குத் திட்டங்கள் } 857—861

த

தங்கமணி, திரு.கே.எம்.—

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில் தீ விபத்து (ஒ.தீ.) .. 685

வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
தொழில்கள்,

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 700

நிலவரித்துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 336

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் 51
எழுதுபொருள் அச்சுத்துறை
முத்திரைத் தாள்கள் நிர்வாகம்
பத்திரப் பதிவு
பால் வழங்குத் திட்டங்கள் 819—820

தலைவர்—

அறிவிப்புகள்—

உரிமைக்குழு, அவைக்குழு, தேர்தல் விவரம் 332

பேரவையின் அலுவல்கள் .. 334

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—

அவையில் பயன்படுத்தப் பெறும் சொற்கள்.—
"அண்ணன்" அவையில் பேசும்போது ஓர் உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைக் குறிப்பிடுகிற நேரத்தில் இப்படிச் சொல்வது சரியல்ல. (வ.செ.தி.) .. 188





தலைவர்—தொடர்ச்சி பக்கங்கள்

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்-தொடர்ச்சி.—

உரிமைப் பிரச்சினை—

வானொலி மீது—தீர்ப்பு.

அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் ஒரு பகுதியை சொல்லிவிட்டு மறு பகுதியை வானொலி இருட்டடிப்பு செய்துள்ளது அவை உரிமை மீறிய செயலாகும் என 4-3-1982 அன்று வானொலியின் மீது ஓர் உறுப்பினர் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினையை மீது

தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:—

"இப்பிரச்சினை குறித்து வானொலி நிலையத்தாருக்கு எழுதிக் கேட்கப் பெற்றது. அவர்கள் தங்களது விளக்கத்தில் 'It could not find place in the broadcast of the review only due to constraints of time factor and not due to any delib arte blackout or wilfulomission of the proceedings on the part of A.I.R.' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களது விளக்கத்தைக் கவனிக்கும்போது அவர்கள் வேண்டும் என்றே விட்டுவிட்டதாகக் தெரியவில்லை. எனவே வானொலி இயக்குநர் அளித்துள்ள விளக்கத்தை ஏற்றுக் கொண்டு இப்பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம்" 329—330

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

" சாரம், தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலைக் கிடங்கில் 8-3-1982 அன்று தீ விபத்து ஏற்பட்டு அதனால் 5 இலட்சம் நூல் பேல்கள் சாம்பல். ஆனதினால் அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து"—
தொழில் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. 685—588

" தமிழ்நாட்டிலிருந்து கேரள மாநிலம் கொச்சி வளர்ச்சித் திட்டத்திற்கு அனுப்பப்பட்ட 11,80,000 ரூபாய் மதிப்புள்ள 1,720 டன் சிமெண்ட் மூட்டைகள் இடையில் மோசடி செய்யப்பட்டுவிட்டதாக வந்துள்ள செய்தி குறித்து"—

தொழில் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. 37 43

பக்கங்கள்.

குறுக்கீடுகள்—

அமைச்சர் பேசுகிறபோது குறுக்கிட அனுமதிப்பதற்கு இல்லை. (வ.செ.தி.) 201

ஒருவர் பேசிக் கொண்டிருக்கையில் இன்னொருவர் குறுக்கிடுவது சரியல்ல. விளக்கம் தேவை என்றால் அவர் பேசிமுடித்தபிறகு கேட்கலாம். (வ.செ.தி.) 1 4

தலைவர்-தொடர்ச்சி—

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்—தொடர்ச்சி

எந்தப் பிரச்சினையாயினும் முறைப்படி அவையில் எழுப்ப வேண்டும். திடீரென்று எழுந்து அவையில் கேட்பது சரியல்ல. 330, 331

தன்னிலை விளக்கம்—

ஒரு உறுப்பினரின் பெயரைச் சொன்ன உடனேயே தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. குற்றச்சாட்டு ஏதாவது சொன்னால்தான் தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும். (வ.செ.தி.) 162

விவாதம்—

ஓர் உறுப்பினர் சொன்ன அத்தனை கருத்துக்களுக்கும் மற்றொருவர் விளக்கம் சொல்வது என்பது வேண்டாம். (வ.செ.தி.) 134

விதி 106-ன் கீழ் அமைச்சர் அறிக்கை அளித்த பின் அதுபற்றி விவாதிக்க ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்ப முடியாது. (அ.இ.) 34, 35

வினாக்கள்—விடைகள்—

தொகுதியிலே நடந்ததை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. (து.வி.) 6

விடை நீண்டதாக இருப்பின் அதை அச்சிட்டு அவையில் வைத்து விடலாம் (து.வி.) 19

தனபால், திரு. ப.—

வரவு–செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் 57—62

எழுதுபொருள் அச்சுத் துறை.



பக்கங்கள்.

தாமரைக்கனி, திரு. இரா.—

சங்கராண்டான் பாளையம் (பெரியார்) பால் குளிரூட்டும் நிலையம். 300—302

சேலத்தில் சிமெண்டில் கலப்படம் செய்வது (க. ஈ.) 47

நில உச்சவரம்புச் சட்டம், தொழில் நிறுவனங்களின் நிலங்கள். 656—559

பாளையங்கோட்டை—நெல்லை கூட்டுறவு பண்டகசாலை, கையாடல் 13—15

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—

கொச்சி வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப் பெற்ற சிமெண்ட் மூட்டைகள் (ஒ.தீ.) 39—43

சேலத்தில் சிமெண்டில் கலப்படம் செய்வது (க. ஈ. அ.) 47—48

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலைக் கிடங்கில் தீ விபத்து (ஒ.தீ.) 687—688

வரவு–செலவுத்திட்டம், 1982–83, வாக்கெடுப்பு தொழில்கள்.

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு. 700,701, 702

798—817

திருமாறன், திரு. பெ.—

வரவு–செலவுத் திட்டம், 1982–83—வாக்கெடுப்பு, பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு— 469

திருவேங்கடம், திரு. பெ. சு.—

காலரா, புதுமருத்துவ முறை 319—322

கோதுமை ஒதுக்கீடு, அதிகப்படியாகக் கோருதல் 654—655

வரவு–செலவுத்திட்டம் .1982-83, வாக்கெடுப்பு—

கதர், பொதுப்பணிகள் கட்டடங்கள்.

பொதுப்பணிகள்—

பணியாளரமைப்பும் சாலைகளும் தளவாடமும், பொதுப்பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு. 523—52

தொழில்கள்,

தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு. 770—775

த—தொடர்ச்சி


பக்கங்கள்

திரு. பெ. சு. திருவேங்கடம்—தொடர்ச்சி
- வரவு-செலவுத் திட்டம் 1982—83 வாக்கெடுப்பு—தொடர்ச்சி
  - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
  - எழுதுபொருள் அச்சுத்துறை. 150—162
  - முத்திரைத் தாள்கள் நிர்வாகம், பத்திரப்பதிவு, பால் வழங்கு திட்டங்கள். 821

திரைப்படங்கள்—
- டூரிங் சினிமா, பகல் காட்சி அனுமதி 306—309

தீர்மானங்கள்—
- பொதுக் கணக்குக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். 49
- பொது நிறுவனங்கள் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், 49
- மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். 4

ஒத்திவைப்புத் தீர்மானம்
- பார்க்க-தலைவர்

துரைசாமி, திரு. பி. எஸ்.—
- ''இருளர்'' சமுதாயத்தினர், வீடுகள் கட்டும் திட்டம். 679

துரைராஜ், திரு. பி.—
- வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் எழுதுபொருள் அச்சுத்துறை. 126—136

தொழிலாளர்கள்—
- கட்டாய சேமிப்புத் திட்டம், தொகை திருப்பியளித்தல் 19
- குறைந்தபட்ச ஊதியம், அமுல் நடத்த தனி பிரிவு 671—672
- கோவை மாவட்டத்தில் பல தொழில் நிறுவனங்கள் இயங்காதது (க. ஈ.) 695—700
- தையல் தொழிலாளர்கள், குறைந்தபட்ச ஊதியம். 17—19

தொழிற்சாலைகள்—
- மாட்டுத் தீவனம், சேலம் மாவட்டம்: 302—303
- நூற்பாலை அமைக்க பொது மக்கள் நிதி, விளாத்திகுளம் தொகுதி, 26—27




த—தொடர்ச்சி


பக்கங்கள்

தோட்டப் பயிர்கள்—
- கன்னியாகுமரி, நெல் பயிரிடும் இடங்களில் ரப்பர் பயிரிடல். 312—315

'ந'

நல்லப்பன், திரு. தி. கா.—
- கோவை மாவட்டத்தில் தொழில் நிறுவனங்கள் இயங்காதது (க. ஈ.) 695, 698—699
- வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு,—தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, 701—702
- முத்திரைத் தாள்கள் நிர்வாகம் பத்திரப் பதிவு, பால் வழங்குத் திட்டங்கள் 844—846

நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ஆர்.—
- வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—பாசனம் பாசனம் குறித்த மூலதனச் செலவு 449—452

நிதி அலுவல்கள்—
- வரவு—செலவுத்திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
  - தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு. 700—818
  - நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம் இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 345—413
  - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் எழுதுபொருள் அச்சுத்துறை. 50—202
  - முத்திரைத் தாள்கள் நிர்வாகம், பத்திரப் பதிவு பால்வழங்குத் திட்டங்கள் 819—875

ந—தொடர்ச்சி

நிலங்கள்—
- தமிழ்நாடு–கேரளா, மாநில எல்லைகள் விவரம்.
- நில உச்ச வரம்புச் சட்டம். தொழில் நிறுவனங்களின் நிலங்கள். 656—659
- பால்குளம் கரும்பாறை எஸ்டேட், ஆக்கிரமிப்பு. 316—317
- மொழி வழி மாகாணப் பிரிவு, விவரம் .. 7—10
- வனத்துறை நிலங்கள்—தனியாருக்கு வழங்கல் .. 305—307

நினைவுச் சின்னங்கள்—
- பாரதிதாசன் நினைவு அஞ்சல் தலை, கோரிக்கை 1—2

நீக்கம்— 51, 33, 37, 167, 199, 698, 340

நூலகங்கள்—
- சென்னை கன்னிமரா நூலகம், நிர்வாக விவரம் 11—13

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—
- அவைக்குழு, தேர்தல் (தீ) .. 332
- உரிமைக் குழு, தேர்தல் (தீ) .. 331
- துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் (அறி) .. 689
- நந்தனம் காலனியில் ஓர் இளைஞர் கொலை செய்யப்பெற்றது (க.ஈ.அ.) .. 690—692, 692—693, 694, 995
- பொதுக் கணக்குக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் (தீ) .. 49
- பொது நிறுவனங்கள் குழுவிற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல் (தீ) 49
- மதிப்பீட்டுக் குழுவிற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் (தீ) .. 49

நெடுமாறன், திரு. ப.—
- தூத்துக்குடி–திண்டுக்கல்–கரூர். அகல ரயில் பாதை அமைக்கும் திட்டம் (அ.வி.) .. 413—415
- தொழில் பற்றி பாலிசி நோட் வழங்காதது (த.கோ.) .. 331
- வரவு–செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. .. 763—770



"ப"

பம்மல் நல்லதம்பி, திரு.— பக்கங்கள்
- திருவள்ளுவர் கூட்டுறவு அச்சகம், பர்மா தமிழர் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தல் .. 667—669
- மின்சார வாரியம், வாகனங்கள் பழுதுபார்த்தல் 297—298

பலராமன், திரு. இல.—
- வரவு–செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
  - கதர்
  - பொதுப்பணிகள் கட்டடங்கள்–பொதுப் பணிகள்–பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும் பொதுப்பணிகள் கூட்டங்கள் குறித்த மூலதனச் செலவு .. 495, 497
  - தொழில்கள்
  - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. 701
  - பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. 52
  - [எழுதுபொருள் அச்சுத்துறை]

பழனிமுத்து, திரு. சி.—
- வரவு–செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—நிலவரித்துறை மாவட்ட நிர்வாகம் இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 333

பாசனம்
- பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 426, 432—435

பழனியப்பன், திரு. கு. பா.—
- வரவு—செலவுத்திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—நிலவரித்துறை, மாவட்ட நிர்வாகம் இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 335

பழனிவேல், திரு. என்—
- கல்லூரித் தேர்வுகள், முடிவு வெளியீட்டில் காலதாமதம் 662—665
- பழனியாண்டவர் கலைக் கல்லூரி .. 304—305
- வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு நிலவரித்துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 336

ப—தொடர்ச்சி — பக்கங்கள்

பழனிவேல், திரு. என்.—தொடர்ச்சி

பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் எழுதுபொருள் அச்சுத்துறை — 80—90

பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு — 480—481

பாசனம்—

அம்பத்தூர் ஏரி, பயன்படும் விவரம் .. — 22—23

ஏரிகள் மேம்பாடு, உலக வங்கி உதவி .. — 25—26

சின்ன வேடப்பட்டி (கோவை) குளம் அமைத்தல் — 674—675

பாக்கம்பாடி அணை (கள்ளக்குறிச்சி) பரிசீலனை — 676—678

பொதுப் பாசனக் கிணறுகள், புதிய திட்டம் . — 23—24

பொள்ளாச்சி தாலுகா தனி நபர் அணைகள் — 673—674

வேடச்சந்தூர் தாலுக்கா, குட்டைகள் அமைத்தல் — 20—22

பாபு ஜனார்த்தனன், திரு.—

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில் தீ விபத்து (ஒ.தீ.) .. — 685

வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—

நிலவரித் துறை,
மாவட்ட நிர்வாகம்.
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளு .. — 338—342

முத்திரைத் தாள்கள் நிர்வாகம்,
பத்திரப்பதிவு,
பால் வழங்குத் திட்டங்கள் .. — 854—857

பாரமலை, திரு. க.—

மதுரை வீட்டு வசதி வாரியம், உயர்ந்த வருமான முள்ளவர்களுக்கான வீடுகள் .. — 16—17

வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினர், ஒய்வூதியத்தை உயர்த்தல் .. — 648—651

பால் வளம்—

சங்கராண்டான்பாளையம், பெரியார் மாவட்டம் — 300—302

பாலகிருஷ்ணன், திரு. ச.—

வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—

பாசனம்,
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. — 474—477

பாலங்கள்—

குண்டாறு, மேம்பாலம் கட்டும் திட்டம் .. — 315—316

பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி.—

நெல் விதை (வெள்ளைப் பொன்னி) வழங்குதல். — 309—312

மேல்நிலைப் பள்ளிகள், ஆசிரியர்கள் நியமனம்.. — 660—662





ப—தொடர்ச்சி

பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர். வி. பி.—தொடர்ச்சி. — பக்கங்கள்

வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—

நிலவரித் துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர்தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் — 342—352

வேடச்சந்தூர் தாலுக்கா, குட்டைகள் அடைத்தல். — 20—22

பாலன், திரு. சு.—

வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—

கதர்
பொதுப் பணிகள் கட்டடங்கள்
பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கம்பிகளும் தளவாடமும்
பொதுப் பணிகள், கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு. — 496, 497

தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. .. — 700, 701

நிலவரித் துறை,
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் — 336, 337

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
[எழுதுபொருள் அச்சுத்துறை] — 50

பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு.. — 425, 426

முத்திரைத் தாள்கள் நிர்வாகம்,
பத்திரப் பதிவு,
பால் வழங்குத் திட்டங்கள் — 819

பிச்சை, திரு. எம்.—

குண்டாறு, மேம்பாலம் கட்டும் திட்டம் .. — 315, 316

பிரபாகரன், திரு. ஜே. சி.டி.—

அம்பத்தூர் ஏரி, பயன்படும் விவரம் .. — 22—23

அம்பத்தூர் நகரியம் (வில்லிவாக்கம்) குடிநீர் வழங்கல் .. — 672—673

அம்பத்தூர் பேருந்து நிலையம் அமைத்தல் .. — 325—326

வரவு செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—

தொழில்கள்,
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு — 757—763

ப—தொடர்ச்சி

பக்கங்கள்

புருஷோத்தமன், திரு. து.—

பாரதிதாசன் நினைவு அஞ்சல் தலை, கோரிக்கை 1—2

வரவு—செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
தொழில்கள்,
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 702—712

பூங்காவனம், திரு. என். ஏ.—

கரசமங்கலம் பஞ்சாயத்து, கருங்கல் பாறைகளை உடைப்பதை தடுக்கும் திட்டம் .. 317—318

பெருமாள், திரு. ரா. கு.—

மேல் நிலைப் பள்ளிகள், ஆசிரியர்கள் நியமனம். 660—662

விளாத்திகுளம் தொகுதி, நூற்பாலை அமைக்க பொது மக்கள் நிதி .. 26—27

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

நந்தனம் சாலனியில் ஓர் இளைஞர் கொலை செய்யப் பெற்றது. (க.ஈ.) .. 690—692

பொதுப் பாசனக் கிணறுகள், புதிய திட்டம் .. 23—24

வரவு—செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
பாசனம்
[பாசனம் குறித்த மூலதனச் செலவு] .. 477—480

முத்திரைத் தாள்கள் நிர்வாகம்,
பத்திரப் பதிவு,
பால் வழங்குத் திட்டங்கள் } 849—852

போக்குவரத்து—

அம்பத்தூர், பேருந்து நிலையம் அமைத்தல் .. 325—329

தஞ்சை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டிப்போ .. 327—328

திருவள்ளுவர் போக்குவரத்து கழகம், பேருந்துகளில் தூங்கும் வசதி .. 324—325

ம

மணி, திரு. டி.—

கன்னியாகுமரி, நெல் பயிரிடும் இடங்களில் ரப்பர் பயிரிடல் .. 312—315

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில் தீ விபத்து (ஒ.தீ.) .. 685



ம—தொடர்ச்சி.

பக்கங்கள்.

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
கதர்
பொதுப் பணிகள் கட்டடங்கள்
பொதுப் பணிகள் பணியாளரமைப்பும் 496
கமபிகளும் தளவாடமும் 513—517
பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

மருத்துவம்—

காலரா, புது மருத்துவ முறை .. 319—322

மாணிக்கம், திரு. எம். எஸ்.—

மொழி வழி மாகாணப் பிரிவு, விவரம் .. 7—10

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 435—437

மாரிமுத்து, திரு. த.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்

எழுதுபொருள் அச்சுத்துறை .. 110—114

மின்சாரம்—

கல்ராயன் மலைப்பகுதி நீர்வீழ்ச்சி .. 299, 300
வாகனங்கள் பழுது பார்த்தல் .. 297—298

மீனளம்—

தொண்டி, மீன்பிடித் துறைமுகம் உத்தேசம் ..

தூத்துக்குடி-திண்டுக்கல்-கரூர் அகல ரயில்பாதை அமைக்கும் திட்டம் (அ.வி.) .. 421—425

முத்துவேல், திரு. என்—

வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு
கதர்
பொதுப் பணிகள் கட்டிடங்கள்
பொதுப் பணிகள் பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்
பொதுப்பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச்செலவு } 497—499

முத்தையா, திரு. இரா—

மொழி வழி மாகாணப் பிரிவு, விவரம் .. 7—10

பக்கங்கள்.

ம—தொடர்ச்சி.

மூர்த்தி, திரு. ஜி.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பழங்குடியினர்,
ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
எழுதுபொருள் அச்சுத்துறை .. 141—150

மொக்கையன், திரு. பி.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
பழங்குடியினர்,
ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
எழுதுபொருள் அச்சுத்துறை .. 62—65

ய

யசோதா, திருமதி. டி.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
நிலவரித்துறை
மாவட்ட நிர்வாகம்
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 352—357

ர

ரகுமான்கான், திரு. அ.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
முத்திரைத் தாள்கள் நிர்வாகம்
பத்திரப் பதிவு,
பால் வழங்குத் திட்டங்கள் .. 820—825

ரங்கசாமி, திரு ஆர்.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 465—467

ரமணி, திரு. கு.—
கோவை மாவட்டத்தில் தொழில் நிறுவனங்கள்
இயங்காதது (க.ஈ.) .. 695
சின்ன வேடப்பட்டி (கோவை), குளம் அமைத்தல் 674—675

வ

வரதராஜன், திரு. என்.
தூத்துக்குடி-திண்டுக்கல்-கரூர் அகல ரயில்பாதை
அமைக்கும் திட்டம் (அ. வி.) .. 419—420
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 437—440



வ—தொடர்ச்சி.

பக்கங்கள்.

விசயலட்சுமி, செல்வி ப.—
சேலம் மாவட்டம், மாட்டுத் தீவனத் தொழிற்
சாலை .. 302—303

விஜயசாரதி, திரு. எம்.—
வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
எழுதுபொருள் அச்சுத்துறை .. 50, 51, 52
.. 177—201

விஜயராகவன், திரு. பொ.—
கோதுமை ஒதுக்கீடு, அதிகப்படியாகக் கோருதல் 654—655
நெல் கொள்முதல் விலை மற்ற மாநிலங்களுடன்
ஒப்பீடு .. 3—6
பால்குளம் கரும்பாறை எஸ்டேட் ஆக்கிரமிப்பு 316—317

வீட்டுவசதி—
மதுரை வீட்டுவசதி வாரியம் உயர்ந்த வருமானம்
உள்ளவர்களுக்கான வீடுகள் .. 16—17

வீரப்பன், திரு. ஆர். எம்.—
ஒட்டேரி-கொளப்பாக்கம் நெடுஞ்சாலை மூடப்
பெற்றது (க. ஈ.அ.) 44, 45, 46, 47

வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.—
வன நில மலைத்தடப் பகுதிகள், புவியியல் ஆய்வு 27—29

வெள்ளைச்சாமி, திரு. ஆ.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 440—442

வேணுகோபால், திரு. த.—
படித்த கைதிகள், விடுதலைக்குப் பின் அரசுப்
பணி .. 666—667
வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
கதர்
பொதுப் பணிகள் கட்டடங்கள்
பொதுப் பணிகள் பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்
பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு } 495—496

வ—தொடர்ச்சி

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
எழுதுபொருள் அச்சுத்துறை .. 51—52

பாசனம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 427—430

**வேளாண்மை—**

நெல் விதை (வெள்ளைப் பொன்னி) வழங்குதல் 309—312

**ஜ**

ஜெயராமன், திரு. வே. இரா.—

வரவு செலவுத் திட்டம், 1982–83 வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 461—462

**ஹ**

**ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி.—**

வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—

தொழில்கள்
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 733, 744-751

**ஹேமச்சந்திரன், திரு. ஜே.—**

கன்னியாகுமரி நெல் பயிரிடும் இடங்களில் ரப்பர்
பயிரிடல் .. 312—315

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலை கிடங்கில்
தீ விபத்து (ஒ. தீ.) .. 685, 686, 687

வரவு-செலவுத் திட்டம், 1982–83, வாக்கெடுப்பு—
நிலவரித்துறை
மாவட்ட நிர்வாகம்

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்
தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. 335

வனத்துறை நிலங்கள் தனியார்களுக்கு வழங்கல் 305—307

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**புதன் கிழமை, 1982 மார்ச், 17.**
**பங்குனி 4, துன்மதி, திருவள்ளுவர் ஆண்டு 2013.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

எல்ல உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே; ஆயினும் அவர்கள் செய்கின்ற செயல்களின் உயர்வு தாழ்வு வேறுபடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு அஞ்சல் தலை வெளியிடுதல்.**

* வினா எண் 517—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு அஞ்சல் தலை வெளியிடும்படி இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிதாசன் தபால் தலையை வெளியிட முயற்சிக்கின்ற இந்த வேளையில், தன்னுடைய பாட்டுத் திறத்தாலே வையத்தை பாலிக்க வந்த புரட்சிக் கவிஞர் பாரதியாரின் தபால் தலையை வெளியிடுவதற்கு இந்த அரசு என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறது? என்ன பதில் மைய அரசிடமிருந்து கிடைத்திருக்கிறது? எப்போது அது வெளியிடப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பாரதியாருடைய அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அதுபற்றிய முடிவைக் கூற இருக்கிறார்கள். இன்னும் அதுபற்றிய விவரம் கிடைக்கவில்லை. அதே போல் பாரதிதாசன் அவர்களின் அஞ்சல் தலையை வெளியிடுவதற்கும் கடிதம் எழுதியிருக்கிறோம். மத்திய அரசு அதைப் பற்றிய பதிலை இன்னும் ஏதும் தெரிவிக்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் உருவத் தபால் தலையை வெளியிட மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்போது வெளியிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒப்புக்கொண்டார்கள் என்று நான் சொல்லவில்லை; கடிதம் எழுதியிருக்கிறோம். பல தடவை அவர்களுக்கு நினைவூட்டி கடிதம் எழுதியிருக்கிறோம். 1–6–81 தேதி பாரதிதாசன் அவர்களின் அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று கடிதம் எழுதினோம். அதற்குப் பிறகு 10–7–81, 18–8–81, 30–9–81, 11-11-81, 15–12–81, 9–2–82 ஆகிய நாட்களில் மீண்டும் நினைவுக் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராஜ சுவாமிகள் தபால் தலையை மத்திய அரசு வெளியிட விரும்பியபோது, இப்படி தபால் தலையை வெளியிடும்போது, அதிலே சீல் குத்தும்போது, அந்த முகத்தை பாதிப்பதாக உள்ளது என்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனவே, பாரதிதாசன் தலையை வெளியிடும்போது, முகத்தை பாதிக்காத அளவு ஒதுக்குப்புறமாக சீல் குத்துவதற்கு ஏற்பாடு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிட்ட பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம். இன்னும் வெளியிடவே இல்லை.

அரசு அலுவலகங்களுக்கு வாராந்திர விடுமுறை நாட்கள்.

* வினா எண் 518—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்கட்கு வாரம் இரண்டு நாட்கள் விடுமுறை விடும் திட்டம் அரசிடமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஐந்து நாட்கள் வேலை என்ற செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் இருந்து வந்தது.

(ஆ) மத்திய அரசு அலுவலகங்களில் இதே மாதிரியான செயற்குறிப்பினைக் கைவிட்டு விட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே மாநில அரசும் இச்செயற்குறிப்பினை கைவிட்டு விட்டது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அரசு அலுவலக நாட்கள் 5 நாட்களாகக் குறைக்கப்படுகின்றபோது, வேலை நேரம் கூட்டப்படுமா? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நம் நாட்டிலே உள்ள மக்களின் பல்வேறு யோசனைகள், சிந்தனைகள் ஆகியவற்றை ஆராய்ந்ததற்குப் பிறகு, அது கைவிடப்பட்டது. அப்படி 6 நாட்களை 5 நாட்களாகக் குறைக்கின்றபோது, வேலை நேரத்தைக் கூட்டுகின்ற சூழ்நிலை ஏற்படும். அப்படி கூட்டப்படுகின்றபோது, இதைப்பற்றி கருத்து பொது மக்களிடமிருந்தும், அரசுத் துறையிலிருந்தும் கேட்டறிந்தபோது, மத்திய அரசு இவைகளை ஆராய்ந்து பார்த்து, இந்த நிலை சரிப்பட்டு வராது என்று கைவிட்டது. அதை ஆராய்ந்து மாநில அரசும் அந்த நிலையை கைவிட்டிருக்கிறது.

அரசு நிர்ணயித்துள்ள நெல் கொள்முதல் விலை.

* வினா எண் 441—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நெல் கொள் முதல் விலை அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் நெல் கொள்முதல் விலைகளை விடக் குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(இ) ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூபாய் 150 வேண்டும் என்ற கோரிக்கை குறித்து அரசு என்ன முடிவு எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) நடப்பு பயிராண்டில் கேரள மாநிலத்திலும் தமிழ் நாட்டிலும் மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளிலேயே கொள்முதல் செய்யப் படுகிறது. கர்நாடகா மாநிலத்தில் மட்டும் மத்திய அரசு நிர்ணயித்துள்ள நெல்லின் கொள்முதல் விலைகளை விட குவிண்டாலுக்கு ரூ. 10, விவசாயிகளிடமிருந்து வாங்கப்படும் நெல்லுக்கு போனசாக தரப்படுவதாகத் தெரிகிறது.

(ஆ) மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்குமேல் கொடுத்து வாங்கினால் கொள்முதலுக்காக சலுகை வட்டியில் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் கிடைக்காது.

(இ) நெல்லின் உற்பத்திச் செலவின் அடிப்படையில் கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய அரசை இவ்வரசு வற்புறுத்தி வருகிறது. தொடர்ந்து வற்புறுத்தப் படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நெல் கொள்முதல் விலையை மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் கர்நாடக அரசு 10 ரூபாய் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல மேற்கு வங்கத்திலே குவிண்டாலுக்கு 125 ரூபாய் கொடுக்கப்படுகிறது. உற்பத்திச் செலவை கணக்கில் எடுத்துக்கொண்டு கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். உற்பத்திச் செலவு இந்த ரூ. 115-க்குள் தான் இருக்கிறதா? சில இடங்களிலே அதிகமாக இருப்பதால் மிகக்

குறைந்த லாபம்தான் கிடைக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நாம் போட்டிருக்கிற உச்சமட்டக் குழுவின் சிபார்சுகளை வைத்து அந்த அடிப்படையில் கொடுப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இது குறித்து ஏற்கனவே விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மத்திய அரசு நிர்ணயிப்பதைப் பொறுத்துதான் மற்றைய வசதிகள், சலுகைகள் எல்லாம் அளிக்கப்படுகின்றன. ஆகவே விலையை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசிற்கு எடுத்து தெரிவித்திருக்கிறோம். நம்முடைய விலை குவிண்டாலுக்கு 144 ரூபாய் ஆகிறது என்று கணக்கிட்டு (மற்கொண்டு மூன்று ரூபாய் வைத்து 147 ரூபாய் கொள்முதல் விலை நிர்ணயிக்கவேண்டு மென்று மத்திய அரசிற்கு எழுதியிருக்கிறோம். அதைப்போலவே வேறு பல மாநிலங்களும் எழுதியிருக்கின்றன. ஆனால் மத்திய அரசு ரூ. 115, 119, 123 என்ற வீதத்திலேதான் விலையை நிர்ணயித்திருக்கிறது. கேரள அரசும், தமிழக அரசும் 115 ரூபாய்தான் கொடுத்து வாங்குகின்றன. கர்நாடக அரசு பத்து ரூபாய் கூட கொடுத்தாலும் கிரெடிட் பெசிலிட்டிஸ் என்று சொல்லப்படுகிற கடன் வசதியை அவர்களுக்கு நிறுத்தி விட்டார்கள். பிறகு கேட்டதற்குப் பின்னாலே கடன் வசதி அளித்தார்கள். அளிக்கிற கடன் வசதிக்கு 18 சதவீதத்தில் அவர்களுக்கு அளிக்கிறார்கள். நமக்கு 12½ சதவீதம் என்று வைத்திருக்கிறார்கள். நாம் மறுத்தால் நமக்கும் 18 சதவீதத் திலேதான் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மத்திய அரசிடம் ரூ. 144 என்பதை மூன்று ரூபாய் அதிகமாக வைத்து 147 ரூபாய் என்று கேட்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு ரூ. 115, 119, 123 என்று குறிப்பிட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழகத்திலே விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு மிகவும் அதிகமாக இருக்கிறது. கொள்முதல் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. அதைக் கணக்கில் கொண்டு இந்த 10 ரூபாய் மற்ற மாநிலங்கள் கொடுப்பது போல விவசாயிகளின் நலன் கருதி, கிரெடிட் பெசிலிட்டியில் 18 சதவீதம் கொடுத்தாலும் கூட, அதைத் தாங்கிக் கொண்டாவது கொடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கொள்முதல் விலையை நிர்ணயித் தாலும் கூட வெளிச்சந்தையிலே கூடுதலான விலை போகிற நிலைமை இருப்பதால்தான், உற்பத்தியாளர்களுக்குக் கொள் முதல் லெவி வைக்காமல் வியாபாரிகளுக்கு, அரவை ஆலை யினருக்குதான் வைத்திருக்கிறோம். வெளிச்சந்தையிலே கூடுதலாக விலைக்கு 130, 135, 140 ரூபாய் வரையிலும் கூட போவதற்கு நாம் அனுமதித்திருப்பதற்குக் காரணமே அதன் மூலமாக ஒரு கணிசமான தொகை விவசாயிகளுக்குப் போய் சேரட்டும் என்பதுதான். வியாபாரிகள் வாங்கி 115 ரூபாய்



நமக்குத் தந்து விட்டு, அதிலே ஏற்படுகிற நஷ்டத்தைக் கூடுதலாக வைத்து வெளிச்சந்தையிலே விற்பதற்கு வாய்ப்பு அளிப்பதன் நோக்கமே அதுதான். ஆகவே முதலிலே எடுத்துச் சொன்னதை போல 10 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று வைத்தாலும் கூட அதனுடைய வட்டி செலவு 100 கோடி, 125 கோடி ரூபாய் ரிசர்வ் வங்கியிலே வாங்கும்போது ஏராளமாக நஷ்டம் ஏற்படக் கூடும். ஆகவேதான் விவசாயிகளுக்கு நல்ல வசதிகள் ஏற்பட வேண்டும் என்பதைத்தான் சொல்லியிருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்வதற்காக வெளிச்சந்தையிலே விற்பதிலே நாம் அவர்களுக்கு கருணையோடு விட்டுக் கொடுத்தோம் என்று சொன்னார்கள். ஆனால் சிதம்பரத்திலே, காட்டுமன்னார்குடி தாலுகாவிலே உற்பத்தியாளர்கள் வெளிச் சந்தைக்குக் கொண்டுபோன நெல்லை பறிமுதல் செய்கிற நிலை ஏற்பட்டு, அவர்கள் அரசாங்கத்திடம் முறையீடு செய்திருப்பது உண்மைதானா? விவசாயிகளிடம் 150, 200 மூட்டைகளைப் பறித்திருக்கிற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருப்பது உண்மைதானா? விவசாயிகளுக்கு நன்மை செய்ய அவர்களுக்கு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டாம் என்று நாம் உத்தரவிட்டிருக்கிறோம். வியாபாரிகளிடமிருந்துதான் செய்யவேண்டும். விவசாயிகள் விவசாயம் சம்பந்தமாகத்தான் தாங்கள் வைத்திருக்கிறோம் என்பதை நிரூபிப்பார்களேயானால் அந்தப் பொருள் அவர்களிடத்திலேயே ஒப்படைக்கப்படும். ஆனால் பல இடங்களிலே விவசாயிகள் பெயரிலே வியாபாரிகள் ஏமாற்றக்கூடிய இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. அதை நிரூபிப்பார்களேயானால் அதைப்பற்றி தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லின் அடக்கவிலை 144 ரூபாய் ஆகும் என்றும், ஆனால் கொடுக்கக் கூடிய விலை 115 ரூபாய் என்றும் சொன்னார்கள், இப்படி ஒரு குவிண்டால் நெல்லை 29 ரூபாய் நட்டத்திற்கு உற்பத்தி செய்த நெல்லை விவசாயிகள் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிக விலை கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்று அவை முன்னவர் அவர்கள் சொல்லும்போது கடன் வாங்குகின்ற வசதியைப் பெருக்குவதற்கும் ஓவர்டிராஃப்ட் வாங்காமல் இருப்ப தற்கும் அதிக விலை கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். விவசாயிகள் 29 ரூபாய் நட்டத்திலே ஒரு குவிண்டாலை விற்றுக் கொண்டு கடன்காரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு மானியம் என்ற அடிப்படையிலாவது தமிழக அரசாங்கத்தின் நிதியிலிருந்து கொடுத்து அவர்களை வாழ வைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டும் இது ஏற்படுவதல்ல. அகில இந்திய அளவிலே 22 மாநிலங்களைப் பொறுத்தும் அமைகின்றது. மத்திய அரசு நிர்ணயித்துதான் வசதிகளைக் கூடுதலாகச் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 214 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்கிறபோது எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்றால் அரசினுடைய நிதிநிலை தாங்காது. தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலே கூட இந்திய நிதியமைச்சர் அவர்கள் அதைப்பற்றி வேண்டுகோள் ஒன்று மாநில அரசுகளுக்கு விடுத்து இருக்கிறார்கள். மத்திய அரசு எந்த முடிவை எடுத்தாலும் அகில இந்தியாவைப் பொறுத்தும் அது அமைகிறது. நமக்குச் சாதகமாக நிர்ணயிக்க வேண்டுமென்று நாம் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களும் கேட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. அதே நிலையில் மற்றைய வசதிகளையும் வாய்ப்புகளையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலே விவசாயிகளிடமிருந்து லெவி வசூல் செய்யக் கூடாது. வியாபாரிகளிடமிருந்தும் அரவை மில் சொந்தக்காரர்களிடமிருந்தும்தான் வசூல் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் நான் என்னுடைய தொகுதிக்குச் சென்ற நேரத்திலே சிறு விவசாயிகள் 10,20 மூட்டைகள் விளைந்த நபர்களிடத்திலே கூடப் போய் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போய் கொள்முதல் செய்ய வந்தார்கள். விவசாயிகளிடத்திலே கொள்முதல் செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொண்டும், நகரங்களுக்குச் செல்கின்ற 1,2 மூட்டைகளை கூட செக்போஸ்டிலே தடுத்து நிறுத்திவிடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விலையைப்பற்றியது கேள்வி. அதைப்பற்றி மட்டும் கேளுங்கள். தொகுதியிலே நடந்ததை எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது அவைகளையெல்லாம் அமைச்சரைத் தனியாகச் சந்தித்து கேட்டுக்கொள்ளுங்கள்.

திரு. ரா. கு. பெருமாள் : விவசாயிகளிடமிருந்து பறிமுதல் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைத் தடுத்து பாதுகாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதில்லை. விவசாயிகள் ஒரு வருடத்திற்கு ஒரு முறைதான் கணக்குச் சொல்லலாம். ஒவ்வொரு தடவையும் அவர்கள் தனித்தனியாகச் செய்வோம் என்று சொல்கிறபோதுதான் பிரச்னைகள் ஏற்படுகின்றன. தன் வயலில் விளைந்தது இவ்வளவு, இதற்கு இவ்வளவு வைத்திருக்கிறேன் என்று வருடத்திற்கு ஒரு தடவை சொன்னால் சரி, அவர்கள் ஒவ்வொரு முறையும் சொல்வதால் அதைக் கவனித்துக்கொண்டிருக்கமுடியாது என்ற நிலையில்தான் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன. கூடுமானவரையில் அவர்களுக்குத் தொல்லைகள் இல்லாத அளவுக்குத்தான் வாங்கவேண்டும் என்பது அரசினுடைய நோக்கம்.



## தொண்டியில் மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண் 442—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொண்டியில் மீன்பிடித்துறைமுகம் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இங்கு மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தும் திட்டம் உத்தேசிக்கப்பட்டு இதற்குண்டான விரிவான அறிக்கையினை பெங்களூரில் உள்ள மீன்பிடி துறைமுக அளவை ஆய்வுக்குழுவால் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. தொண்டியில் தங்குதல் வசதியமைக்க மொத்தம் ரூபாய் 41.00 இலட்சமும், தவிர தரைவசதிகள் ஏற்படுத்த ரூபாய் 47.50 இலட்சமும், முன்னேற்றத்திற்கான முன்னேற்பாட்டிற்காக ரூ. 2.00 இலட்சமும் ஆகும். ஆக மொத்தம் ரூ. 90.50 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டம் மைய, மாநில அரசுகளின் பரிசீலனையில் உள்ளது. துறைமுகச் செலவில் 50 சதவீதத்தை மைய அரசு ஏற்கும். மற்ற செலவுகளை மாநில அரசே ஏற்கும்.

## தமிழ்நாடு – கேரளா எல்லைக்கோடு

*வினா எண் 519—திரு ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கும் கேரளவிற்குமிடையே மாநில எல்லைகள் நிலங்களின் மீது குறிக்கப்பட்டனவா?

(ஆ) இதற்கான நடவடிக்கை எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## மொழி வாரியாகப் பிரிக்கப்பட்ட சென்னை மாநிலம்

*வினா எண் 520—திரு வி. வி. சுவாமிநாதன், திரு எம். எஸ். மாணிக்கம், திரு இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரிவினையாகாத அன்றைய சென்னை மாநிலம் எந்த ஆண்டு மொழிவழி மாநிலமாக பிரிக்கப்பட்டது?

(ஆ) பிரிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு விட்டதா?

(இ) அல்லது எல்லை நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளதா?

(ஈ) அவ்வாறெனில் அதற்கான காரணம் என்ன?

** 203–ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 1.11.1956 முதல் ஏற்பட்ட மாநில சீரமைப்புக்குப் பிறகு பொது எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. எனினும் இதுபற்றி ஆவணங்களைத் தயாரிக்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. ஆவணங்களுடன் மற்ற மாநில அலுவலர்களுடன் கூட்டாய்வு செய்து பணி விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவரவர்களே, மாநில சீரமைப்புக் குழு பரிந்துரை செய்து மொழிவழி அடிப்படையில் தமிழ் மாநிலம் பிரிந்து சுமார் 25 ஆண்டுகள் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். அமைச்சருடைய அறிக்கையிலிருந்து புரிந்து கொள்கிறோம். இதுவரையில் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கேரளம், கர்நாடகம், புதுவை போன்ற மாநிலங்களுடன் இடையிலே உள்ள எல்லைக் கோடுகள் மொத்தத் தூரம் எவ்வளவு? இதுவரையில் எல்லை நிர்ணயம் செய்யப்படாத தூரம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, முதலிலே உங்களுக்கு இந்த விவர அறிக்கையிலே இருக்கிறது. சொல்ல வேண்டுமானால் கேரள மாநிலத்தினுடைய எல்லை மட்டும் 806 கிலோ மீட்டர்கள் இருக்கிறது. அந்த 806 கிலோ மீட்டர்களிலே முதலிலே 3[illegible] மைல்கள் அல்லது 558 கிலோ மீட்டர் எல்லைகள் அளந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மற்றவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாண்டிச்சேரியைப் பொறுத்தவரையிலும் எல்லைகள் பூராவும் அளந்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கேரளா, ஆந்திரா, மைசூர் பகுதுகளில் எல்லைகள் அளக்கின்ற முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணகி கோயில்உள்ள இடத்தில் தமிழ்நாடு, கேரளா ஆகிய இரு மாநிலங்களிலும் உள்ள அந்த இடத்தின் கூட்டாய்வு முடிந்து விட்டதா? அகில இந்திய நில அளவை அலுவலகத்தில் கண்ணகி கோயில் தமிழகத்தின் எல்லையில் உள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளனவா? சரித்திரம், இலக்கியங்களிலே இந்தக் கண்ணகி கோயில் தமிழகத்தின் எல்லையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம் என்றெல்லாம் சொல்லுவார்கள். ஆனால் இன்றையதினம் வடவேங்கடம் ஆந்திரா மாநிலத்தில் இருக்கிறது. இந்தியாவிற்கும், சீனாவிற்கும் போர் ஏற்பட்டதுகூட எல்லை சரியாக நிர்ணயிக்கப்படாததால்தான். ஆகவே, சரித்திரம் இலக்கியம் ஆகியவற்றில் இருப்பதோடு, அகிலஇந்திய நிலஅளவை அலுவலகத்தில் கண்ணகி கோயில் தமிழகத்தில் உள்ளது என்பதற்கான சான்றுகள் உள்ளனவா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியை, கேரள மாநிலத்தினுடைய நில அளவையும், தமிழ்நாட்டு நில அளவையும் கூட்டாய்வு செய்யவில்லை. ஆனால் இருக்கிற ஆய்வுப்படி, ஆவணங்கள்படி அது





தமிழ்நாட்டில்தான் இருக்கிறது என்பது தெரிய வருகிறது. அதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த எல்லைக்கோடுகள் நிர்ணயிக்கின்றபொழுது தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் கேரளத்திற்கு, தமிழகத்திற்குச் சேர வேண்டிய சில பகுதிகள் கேரளத்திற்குச் சென்றிருக்கின்றன. அதையும் பெற்று அங்கே நில அளவையை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநிலம் தனியாகப் பிரிகிறபொழுது அப்பொழுதிருந்த அரசு அரசியல் சூழ்நிலைக்கேற்றவாறு தேவிகுளம், பீர்மேட்டை அப்பொழுது விட்டு விட்டார்கள். அதை மீண்டும் வேண்டுமென்று கோரிக்கை எழுப்பப்பட்டால் அண்டை மாநிலங்களுக்கும் நமக்கும் சுமுகமான உறவு ஏற்படாமல் போகும். இருந்தாலும் தேவிகுளம், பீர்மேடு தமிழகத்திற்குத் தான் சேர வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திரா, மைசூர் எல்லைகளில் இன்னும் அளவுக் கற்கள் நடவில்லை என்று சொன்னார்கள். அங்கேயும் தமிழ் நாட்டினுடைய எல்லைப் பகுதியிலே மற்ற மாநிலங்கள் அதிகாரம் செலுத்தக்கூடிய வகையிலே நடைபெறுகிறது. அதை போக்குவதற்கு அந்த அரசுகளுடன் கலந்து தக்க நடவடிக்கை எடுத்து எல்லைக் கற்கள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான பகுதிகள் மலைப் பகுதிகளாக இருக்கின்றன; காடுகளாக இருக்கின்றன. இப்படியிருப்பதால் அதைத் தீவிரமாக, வேகமாகச் செய்ய முடியவில்லை. இரண்டு அரசுகளும் சேர்ந்து பொது ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. செலவையும் இரண்டு அரசுகளும் ஏற்றுக்கொள்வதாக இன்றைக்கு உடன்பாடு போடப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வேலைகள் நடைபெறும்; விரைவிலே முடிக்கப்படும்.

(முற்பகல் 9.20)

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலை வனப் பகுதிகளில் தமிழகம், கேரளம், கர்நாடகம் ஆகியவற்றினுடைய மாநில எல்லைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றனவா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, குறிப்பிட்ட ஒரு பகுதியைப்பற்றிக் கேட்டால், அதற்கு என்னிடத்திலே பதில் இல்லை. ஆனால், எல்லா இடங்களிலும் எல்லையை வரையறை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் என்னாலே சொல்ல முடியும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு மாநில எல்லைகளில் இன்னும் சர்வே நடந்து கற்கள் நடப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இத்தனை ஆண்டுகள் ஆகியும் காலதாமதமாக அந்தப் பணி நடைபெறுவானேன்? சில இடங்களில் கல்லை நட்டபிறகு எடுத்து விடுகிறார்கள், பிறகு மறுபடியும் அளந்து தான் கல் நடப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றதே, அந்தக் கற்கள் எல்லாம் எடுக்கப்பட முடியாத அளவுக்கு மிக உறுதியான முறையிலே அமைக்கக்கூடாதா? அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்கப்பட முடியாமல் உறுதியான அளவுக்கு நடுவது எப்படி என்பது தெரியவில்லை. எப்படி நட்டாலும் எடுத்து விடுவார்கள். பல இடங்களில் எடுக்கப் பட்ட செய்தி அரசுக்கு வந்திருக்கிறது. இரண்டு வருடத்திற்கு ஒரு முறை இவைகளையெல்லாம் சரிபார்க்க, இரண்டு அரசுகளும் சேர்ந்து அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று முடிவெடுக்கப் பட்டு அது நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லை நிர்ணயிப்பதில், ஏற்கனவே தமிழ்நாட்டைச் சேர்ந்த திருப்பதி விடப்பட்டிருக்கிறது. அதனை மீட்க அரசு மீண்டும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற கேள்வியே வரையறுக்கப்பட்ட எல்லைகளைச் சர்வே பார்ப்பது மட்டுமே அல்லாமல், புதிய எல்லைகளை மாற்றி அமைக்கின்ற கேள்வி இப்பொழுது எழ வில்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் நிதி உதவி

*வினா எண் 521—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

படிக்கும்போது இறக்க நேரிடும் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு சாங்ஷன் ஆன ஸ்காலர்ஷிப் தொகையை அவர்களது பெற்றோரிடம் கொடுக்கும் வழக்கம் நடைமுறையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால், 1979–80, 1980-81 ஆகிய இரு ஆண்டுகளிலே பெரம்பலூரில் இறந்துபோன மாணவர்களின் உதவித் தொகை அவர்கள் முழு ஆண்டு படித்தும், இறந்தபிறகும் கூட அவர்களுடைய பெற்றோர்களிடம் தரப்படாமல் இருந்தது என்பதை அமைச்சர் அறிவார்களா?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைக் குறிப்பாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்னைகள் பல்வேறு பள்ளிகளிலும் இருப்பதால் இதை அமைச்சர் ஆராய்ந்து எல்லா பள்ளிகளுக்கும் உகந்த வகையில், இறந்து போனாலுங்கூட அந்த ஸ்காலர்ஷிப் பெற்றோர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை அரசு அனுப்புமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடிமக்கள் நலத்துறை இயக்குநர் ஆகியோர் செய்ய வேண்டிய காரியம். அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் கொடுத்திருக்க வேண்டும் கொடுக்கவில்லையென்றால் என்னு டைய கவனத்திற்கு கொண்டு வந்தால் ஏன் கொடுக்கப்பட வில்லையென்று கேட்டு தக்க நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், இப்பொழுதே அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லித்தான் நாம் ஆணை பிறப்பித்திருக்கிறோம்.

## சென்னை கன்னிமாரா பொது நூலகம்

*வினா எண். 522—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கன்னிமாரா நூலகத்தின் நிர்வாக ஒழுங்கீனம் குறித்து அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்தனவா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; (அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவைகள் பொதுநூலக இயக்குநருக்கு அனுப்பப்பட்டன. அதில் குறிப்பிடப் பட்டுள்ள குறைகள் களையப்பட்டு, நூலகம் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூலகத்தில் புத்தங்களைக் கையெழுத்து போடாமல் நிர்வாகம் கொடுப்பதும், புத்தங்கள் சரியாக வரிசைக்கிரமமாக அடுக்கப் படாமல் இருப்பதும் ஆகிய புகார்கள் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே. பல்வேறு புகார்கள், கடிதங்கள் தொடர்ச்சியாக வந்ததன் காரணமாக, கன்னிமாரா பொது நூலகத்தில் கீழ்க் காணும் நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். 1. நூலகத் திற்கு வருகை புரியும் வாசகர்கள் தங்கள் கருத்துக்களை, குறைபாடுகளைத்தெரிவிக்கும்பொருட்டு, வாசகர்கள் கருத்தறியும் பெட்டி ஒன்று வைக்கப்பட ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

2. நூலகத்தில் புதிதாக அங்கத்தினர்களாகச் சேர விரும்புட்வர்க்ளுக்கு, அங்கத்தினர் விண்ணப்பத்துடன் நூலக விதிமுறைகள் அடங்கிய பிரசுரம் ஒன்று வழங்கப்படுகிறது. 3. நூலகத்தில் பணியாற்றும் நிரந்தர அடிப்படை ஊழியர்கள் அனைவருக்கும் சீருடை வழங்க்ப்பட்டுள்ளது. 4. நூலகத்தில் அன்றாட நிர்வாக நலனைக் கருதி, அனைத்துத் தொழில் நுட்பப் பணியாளர்களும் ஆண் பெண் என்ற பாகுபாடின்றி, முறைப்படி வகுக்கப்பட்டபடி பணி புரிகின்றனர். 5. நூலகத்திற்கு வருகை புரியும் அனைவரும் தங்களின் பெயர், முழு முகவரி, மற்றும் கையொப்பம் ஆகியவைகளை நிரப்பும்பொருட்டு, நுழைவு வாயிலிலே ஒரு பதிவேடு வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. 6. இந்நூலகத்தின் பழைய கட்டிடத்தில் 1930-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட அரிய நூல்கள் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. மேற்படி அரிய ஆராய்ச்சி நூல்களைப் படிக்கவும் குறிப்பு எடுக்கவும் வரும் ஆராய்ச்சியாளர் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கவும், பொதுவாக வரும் அனைத்து வாசகர்களையும் அனுமதித்தால் ஆராய்ச்சிக் குறிப்பெடுப்பவர்களுக்கு அது இடையூறாக அமையும் என்பதால்தான் அந்நூலகத்தை பயன்படுத்தும் வாசர்களை மட்டுமே அனுமதிக்கும் பொருட்டு அனுமதிச் சீட்டு தரப்பட்டு செயல்பட்டு வருகிறது. தூலகத்தில் பொதுமக்கள் தொடர்புடைய அனைத்துப் பணியாளர்களுக்கும் பெயர்வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. நூலகத்தில் நூல் எடுக்கும் பிரிவில் வாசகர்களுக்கு உதவும் பொருட்டு குறிப்புதவியாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்னிமாரா நூலகத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைய நூல்களைப் படித்ததாகக் குறிப்பிருக்கிறது. அந்த கன்னிமாரா நூலகம் தற்போது அன்னியர் பெயரிலே இருக்கின்றது. அதை மாற்றி அதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே அப்படிப்பட்ட கருத்துரு அரசின் ஆலோசனையில் இல்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கன்னிமாரா நூலகத்திலே நிர்வாக ஒழுங்கீனங்களுக்காக அந்த நூலகத்தின் நூலகர் திரு. தில்லைநாயகம் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது, ஆனால் அவர் நூலகத்துறைக்குச் சிறந்த முறையிலே பணியாற்றியவர், தொண்டாற்றியவர் என்று அரசாங்கம் உட்பட பல்வேறு நிறுவனங்கள் அவரைப் பாராட்டி உள்ளன. அத்தகைய ஒருவரை இன்னமும் சஸ்பென்சனில் வைத்திருப்பது சரியா? அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்-

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்ட அவர் பது சொல்லப்பட்ட புகார்களின் அடிப்படையில் விசாரிக்கப் மீட்டு, விளக்கங்கள் கேட்கப்பட்டு நடவடிக்கை தனியா



எடுக்கப்பட்டு வருகின்றது. இந்தநேரத்தில் உறுப்பினர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். அரசில் பணி புரியும் யாராக இருந்தாலும் தாங்கள் மக்களுக்குப் பாடுபட வேண்டும் என்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மக்களுடைய முன்னேற்றத்திற்காகத்தான் தங்கள் கையிலே வைத்திருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள், அமைச்சர்கள் போன்றவர்கள், மக்களுக்குப் பணிபுரியவேண்டும் என்ற வேகத்தோடு செயல் படுகிற போது, அதற்குத் தடையாக அதிகாரிகள் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுமானால், தனிப்பட்ட முறையில் அவர்கள் நல்லவர்களாக இருக்கலாம், அது வேறு அப்படி அவர்கள் தடையாக இருந்தால் அந்தத் தடையை நீக்குகின்ற பொறுப்பை அரசு எடுக்கத்தான் செய்யும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ர.சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, லைப்ரரி சயன்ஸ் என்ற துறையில் மிகவும் வல்லுநராக இருந்து. சிறந்த பெயரைத் தமிழ்நாட்டுக்குத் தேடித்தந்த ரங்காதனுடைய பெயரை அந்தக் கன்னிமாரா நூலகத்திற்கு வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கன்னிமாரா நூலகத்தின் பெயரை மாற்றவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அப்படி மாற்றவேண்டும் என்று நாம் நினைக்கின்றபோது அதை பேரறிஞர் அண்ணா பெயராலோ அல்லது ரங்கநாதன் பெயராலோ அல்லது வேறு பெயராலோ மாற்றுவது குறித்துப் அப்போது பேசலாம். ஆனால் இப்போது அந்தப் பெயரை மாற்றவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

## பாளையங்கோட்டை நெல்லை கூட்டுறவு பண்டகசாலையில் பணம் கையாடல்

*வினா எண் 523 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பாளையங்கோட்டை—நெல்லை கூட்டுறவு பண்டகசாலை நிர்வாகிகள் அவர்களது பதவி காலத்தில் ரூ.17 ஆயிரத்து 106 கையாடல் செய்ததாக சரக கூட்டுறவுச் சங்க பதிவாளருக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: (அ) ஆம்:

(ஆ) பாளையங்கோட்டை திருநெல்வேலி கூட்டுறவு பண்டக சாலையில், நிர்வாகிகள், பண்டகசாலையின் கட்டிடத்தை காலி செய்யும் பொருட்டு முறையற்ற வகூலாக பணம் பெற்று அதை தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டனர் என்று புகார் வந்ததின் பேரில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 65-ன் கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டது.

விசாரணையில் சண்முகம் டெக்ஸ்டைல் என்ற நிறுவனத்தினிடமிருந்து, பண்டகசாலை கட்டிடத்தை காலி செய்யும் பொருட்டு பண்டகசாலை நிர்வாகிகள் ரூ. 13,000/- பெற்று, அதனை, பண்டகாலைக் கணக்கில் வரவு வைக்காதது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் இவர்களால் செய்யப்பட்ட இதர கையாடல்களின் தொகை ரூ 4,106.25ம் என்றும் கண்டுபிடிக்கப் பட்டது. சட்டப்பிரிவு 71ன் கீழ் கண்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சம்பந்தப்பட்ட தொகையினை வசூலிக்க 4-2-82ல் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. மேலும் நிர்வாக தலைவர். கௌரவ செயலாளர் ஆகியோரை பதவி நீக்கம் செய்ய, சட்டப்பிரிவு 28-எயின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு பதவியிலிருந்து அவர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தொகையை வசூலிப்பதும் அல்லாமல் கையாடல் செய்த குற்றத்திற்காக இவ்விருவர் மீதும் மேலும் ஐந்து நபர்கள் மீதும் வணிகவியல் குற்றப்பிரிவு புலனாய்வுத் துறையினர் வசம் ஓர் குற்ற புகார் தாக்கல் செய்யப்பட்டு அது புலனாய்வில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி கூட்டுறவுப் பண்டகசாலையில் எந்த ஆண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மூன்று ஆண்டுகளுக்கு மேல் அந்தக் கூட்டுறவு அமைப்புப் பொறுப்பாளர்கள் இருந்தால் மீண்டும் தேர்தலை நடத்துவதற்கு அரசு முன் வருமா எனபதை அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட கூட்டுறவுப் பண்டகசாலை நிர்வாகிகள் குழுவைப் பொறுத்தவரையிலும், அது 8 ஆண்டு களுக்கு முன்னால் தேர்ந்து எடுக்கப்பட்ட குழுவாகும். 3ஆண்டு களுக்கு மேல் ஒரு அமைப்பு பதவியில் இருக்கக்கூடாது என்ற சட்டம் இருந்தபோதிலும், தேர்தல் நடத்துவதற்கு 1974 லே ஒரு சட்ட திருத்தம் கொண்டு வந்ததன் அடிப்படையில், ஏற்கனவே பதவியில் இருக்கின்றவர்கள் தொடர்ந்து அடுத்த தேர்தல் வருகின்ற வரையில் பதவியில் இருக்கலாம் என்ற அடிப்படையில் அந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அவர்கள் பதவியில் தொடர்ந்து 8 ஆண்டுகளுக்கு மேல் இருந்துவருகிறார்கள். புதிய கூட்டுறவுச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு இதுபோன்று பன்னெடும் ஆண்டுகாலமாக இருந்து வருகின்ற குழுக்கள் அனைத்தும் கலைக்கப்பட்டு முறையாக தேர்தல் நடத்தப்படும்.

[முற்பகல் 9-30]

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கொள்கையின் அடிப்படையில் கூட்டுறவு ஸ்தாபனங்களை நாம் அமைத்தாலும், அதிலே ஆதிக்கம் செலுத்தும் சில நபர்கள் கூட்டுறவே வீட்டுயர்வு என்ற வகையில் கொள்ளை அடிக்கிறார்கள். இப்படிக் கொள்ளை அடிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டம் திருத்தம் செய்யப்படுமா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வர இருக்கின்ற சட்டத்திலே, ஏற்கனவே இருக்கின்ற 'லூப்-ஹோல்ஸ்' அடைக்கப்பட்டு, 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற கொள்கையை உய்விக்கும் வகையில் புதிய சட்டம் வழிவகுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுமார் 13,003 அளவிற்கு கணக்கிற்கு வரவில்லை என்று சொன்னார்கள். அது சம்பந்தமாக எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது? அதிலே உயர்மட்டத்தில் இருப்பவர்கள் யார், கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் யார்? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே உயர் பதவியில் இருந்தவர் 8 ஆண்டு களுக்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சங்கத்தின் தலைவர். அதற்கு அடுத்தப்படியாக உள்ளவர் 8 ஆண்டுகளுக்கு முன்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சங்கத்தின் கௌரவ செயலாளர்.

## சிறைகளில் சிற்றுண்டிச்சாலை வசதி

***வினா எண். 524—திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது அனைத்து சிறைகளுக்கும் கேன்டீன் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அப்படி கேன்டின் வசதியில்லாத சிறைகளுக்கும் கேன்டின் வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டமுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) வேலூர் மாநில மகளிர் சிறையை தவிர மற்ற எல்லா மத்திய சிறைகளிலும் சிறைவாசிகள் கேன்டீன் திறக்கப்பட்டுள்ளது.

(ஆ) வேலூர் மாநில மகளிர் சிறையில் சிறைவாசிகள் கேன்டீன் திறப்பது தகுந்த சமயத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, சிறையில் கேன்டீன் வசதி செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது எல்லாம், அந்தக் கேன்டீனை யார் நடத்துகிறார்கள்? கேரள மாநிலத்தில் சிறைக்கைதிகளே கூட்டுறவாக இருந்து நடத்துகிறார்கள். அவர்கள் உழைப்புக்கான பணம் டோக்கனாக வழங்கப்பட்டு, அதன் மூலம் அவர்கள் விற்பனை செய்வதை வாங்கிக் கொள்வதாக அறிகிறோம். அந்த முறையில், அந்தக் கேன்டீன் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேன்டீனைப் பொறுத்த வரையில் சிறை நிர்வாகம் தான் அதை நடத்திக் கொண்டு இருக்கிறது. சிறை நிர்வாகம் தான் அதை நடத்த முடியும். வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல், சிறைக்குள்ளேயிருக்கிற கைதிகள் அடங்கிய குழு போட்டு, அதிலே முறைக்கேடுகள் ஏதும் நடக்காமல் இருக்க பாதுகாப்புகள் செய்து அவற்றை நடத்த அரசு ஆவண செய்யும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தத் கேன்டீன்கள் சிறை நிர்வாகம் நடத்துகின்றது என்றும், வருங்காலத்தில் குழுக்கள் அமைக்கப் படும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பார்வையிடுவதற்கும், அந்தக் கேன்டீனை பற்றிய கருத்துக் களைக் கூறுவதற்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சிறை கண்காணிப்புக் குழுக்கள் இருக்கின்றன. இந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவதில் தவறு இல்லை. அதையும் அரசு ஆலோசிக்கும்.

திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சிறைச்சாலையில் கேன்டீன்கள் நடைபெறுவதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். அங்கே நடத்துகின்ற அந்தக் கேன்டீன்களில் தேவையான சாமான்களை வாங்கிச் சாப்பிடுவதற்கு கைதிகள் பணம் வைத்துக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்து இருக்கிறதா? சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் பணம் வைத்துக் கொள்ளக்கூடாது என்று விதி இருக்கிறதே. அப்படி இருக்கின்றபோது எப்படி இதைச் செய்வதற்கு அரசு அனுமதித்து இருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பர்சனல் கேஷ் பிராபர்டி அவர்கள் வைத்துக் கொள்ள அனுமதி இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நடைமுறையில் அது இயங்கி வருகிறது.

### மதுரை வீட்டு வசதி வாரியத்தின் மூலம் உயர்ந்த வருமானம் உள்ளவர்களுச் கட்டப்பெற்ற வீடுகள்.

* வினா எண் 525— திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் மதுரையில் இதுவரை கட்டப்பட்டுள்ள உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீடுகள் எத்தனை?





(ஆ) அதில் எத்தனை வீடுகள், தாழ்த்தப்பட்ட, பழங்குடி யினர் வகுப்பை சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது?

(இ) மேற்படி வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு உரிய சதவீதப்படி வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) 64

(ஆ) மூன்று

(இ) தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து வந்த விண்ணப்பதாரர்கள் மூவருக்கும் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினரைச் சேர்ந்த எத்தனைப் பேர்கள் இந்த வீடுகள் வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள்? அவர்களில் எத்தனைப் பேர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே. முதலில் 3 பேர் கேட்டார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அதன் பிறகு ஒருவர் கேட்டார். அவருக்கும் கொடுக்கப்பட்டது. பின்னால் அவர் வேண்டாம் என்று சொல்லி விட்டார். வீடு கொடுத்த 3 பேர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கி றார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, மதுரையில் எல்லிஸ் நகரில் வீடு கட்ட நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது? அங்குள்ள நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை கொடுத்தும் பணம் கிடைக்கவில்லை நிலமும் அவர்களுக்கு திருப்பிக் கிடைக்க வில்லை, அதனால் அந்த நிலத்தை அவர்கள் பயன்படுத்த முடியாமல் இன்றைக்கு திரிசங்கு சொர்க்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு என்ன முடிவு எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் ; தலைவரவர்களே, இது ஒரு நல்ல கேள்வி. தனிக் கேள்வியாகப் போட்டால் விவரம் தரப்படும்.

### தையல் தொழிலாளருக்கு குறைந்தபட்ச ஊதியம்

* வினா எண். 526— திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) தையல் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய அரசிடம் செயற்திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது இது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்கீழ் தையல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு இந்த ஊதிய விகிதங்கள் 24-6-81 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே இந்த குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதை அமுலுக்கு கொண்டு வந்ததற்காக, இவ்வளவு காலதாமதமாகி அமுலுக்கு வந்தாலும், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்த பட்ச ஊதியம் எவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? அதை எந்த தேதியிலிருந்து அமுல்நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது? விதிகள் எல்லாம் இயற்றப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நான் எப்போதும் சொல்வதைப் போல இந்த அரசு எதையும் முன்கூட்டியே செய்யும். அட்டவணையில் இருக்கக்கூடிய வேலைகளுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் என்பது ஒன்று, சில வேலைகளை அட்டவணையில் சேர்க்காமல் விட்டுவிடுகிறார்கள். இந்தத் தொழிலை இந்த அரசு வந்த பிறகு 25-11-1978-ல் ஷெட்யூலில் சேர்த்திருக்கிறது. அதன் பிறகு குழு நியமித்து அவர்கள் கூலி நிர்ணயம் செய்தார்கள். 24-6-81 முதல் இது அமுலுக்கு வருகிறது. இதை எதிர்த்து சிலர் வழக்கு மன்றம் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் இடைக்காலத் தடை கொடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கு மன்றத்திற்கு செல்லாதவர்கள் இதைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, சில நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கோர்ட்டுக்குப் போய் தடை பெற்றிருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே இப்படிப்பட்டவர்கள் கோர்ட்டுக்கு போய் ஸ்டே வாங்கி, திட்டத்தை செயல்படுத்தாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதை அமைச்சரவர்களும் அறிவார்கள். அதைத் தடுப்பதற்கு, காலாகாலத்தில் ஸ்டே வெக்கேஷன் பெட்டிஷன் போட்டு, சீக்கிரமாக விசாரணையை முடித்து, அந்த நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் இதனுடைய பலனை அனுபவிக்கிற முறையில் ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், தலைவரவர்களே, இவ்வளவும் செய்த அரசாங்கம் அதையும் செய்வதற்கு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இல. பலராமன்: தலைவரவர்களே, இதைப் போன்ற தொழில்களில் அதிகமான சிறுவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். சிறு வயதிலேயிருந்தே இந்தத் தொழிலில் ஈடுபட்டால்தான் நல்ல பயிற்சி கிடைக்கும் என்று சிறுவர்களுடைய தாய், தந்தையர்கள் நினைக்கிறார்கள். அதை



அரசு உணருமா? அந்த சிறுவர்களுக்கு குறைந்தபட்சமாக என்ன கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே கேள்வியே குறைந்தபட்ச ஊதியத்தைப் பற்றியது. குறைந்த பட்ச ஊதியம் யார், யாருக்கு எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. அதைப் படிக்க அதிக நேரம் ஆகும். தலைவர் அவர்கள் அனுமதித்தால் அதைப்படிக்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதை பின்னால் அவையில் வைத்து விடுங்கள்.

## கட்டாயச் சேமிப்புத் திட்டம்

* வினா எண் 527 திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசு கொண்டுவந்த கட்டாய சேமிப்புத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகையை எத்தனை தவணைகளில் திரும்பக் கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) இன்னும் எத்தனை தவணை பாக்கி உள்ளது?

(இ) அதனை அரசு எப்போது கொடுக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) (ஆ) மற்றும் (இ) கட்டாய சேமிப்பு திட்டத்தில் அடங்கிய கட்டாயசேமிப்பு சம்பளக் கணக்கிலும், கட்டாய சேமிப்பு கூடுதல் பஞ்சப்படி (பழையது) கணக்கிலும் பிடித்தம் செய்யப்பட்ட எல்லாத் தொகைகளும் ஐந்து தவணைகளில் கொடுக்கப்பட்டு விட்டன.

கட்டாய சேமிப்பு பஞ்சப்படி (புதியது) கணக்கில் பிடித்தம் செய்ததொகையில் மூன்று தவணைகள் கொடுக்கப்பட்டு விட்டன. இன்னும் இரண்டு தவணைகள் அதாவது நான்காவது ஐந்தாவது தவணைகள் மட்டும் கொடுக்கப்பட வேண்டியுள்ளன.

இந்தக் கணக்கில் நான்காவது தவணை ஜூலை 1981ல் திருப்பித் தர தகுதி பெற்றது. அதற்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. ஐந்தாவது தவணை ஜூலை 1982ல் தான் திருப்பித் தர தகுதியடைகிறது.

## வேட்டவலத்திற்கு குடிதண்ணீர் வசதி செய்யும் திட்டம்

* வினா எண் 528 திரு ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம் பெண்ணாற்றிலிருந்து (திருக்கோவிலூர் அருகிலிருந்து) வேட்டவலத்திற்கு குடிநீர் கொண்டு செல்லுகின்ற திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) வேட்டவலம் செல்லும் வழியில் உள்ள கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்க வழி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

(ஆ) ஆம்.

**வேடசந்தூர் தாலுக்காவில் குட்டைகள் அமைக்கும் திட்டம்**

* வினா எண் 453 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலூக்காவில் குட்டைகள் அமைக்க எந்தெந்த கிராமங்களில் ஆய்வு செய்யப்பட்டது?

(ஆ) எந்தெந்த கிராமங்களில் குட்டைகள் அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது

(இ) எப்போது பணி துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகது:** (அ) வேடசந்தூர் வட்டத்தில் வி. புதுக்கோட்டை, குட்டம், வசைநாயக்கன்பட்டி வெள்ளேடு, மூலக்கவுண்டனூர் பாளையம், கன்னிமார்பாளையம் பாகநத்தம், உல்லியக்கோட்டை ஆகிய 9 கிராமங்களில் குட்டைகள் அமைக்க ஆய்வு செய்யப்பட்டது.

(ஆ) மற்றும்(இ) பாளையம் மற்றும் பாகநத்தம் ஆகிய இரண்டு கிராமங்களில் மட்டும் குட்டை அமைக்கும் திட்டங்கள் 1981—ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

(முற்பகல் 9·40)

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** தலைவரவர்களே: இந்தக் குட்டைகளை அமைப்பதைப் பொறுத்தவரையிலே அதனுடைய பயன் விகிதத்தைப் பார்த்து அதனை அமைப்பதைக் கைவிட்டுவிடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட குட்டைகளை அமைப்பதைப் பொறுத்தவரையிலே வறட்சி மிகுதியான பகுதிகளிலே அந்தப் பயன் விகிதத்திலிருந்து விதிவிலக்களித்து அமைத்துக் கொடுப்பதற்குரிய வகையிலே அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** தலைவரவர்களே, பொதுவாகப் பின்தங்கிய பகுதிகளில் பெனிபிட் காஸ்ட் ரேஷியோ அதிகமாகப் பார்க்கவேண்டாம் என்று அரசு வற்புறுத்தி இருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் கட



வறட்சி நிவாரணப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே ஒரு டன் உற்பத்திக்கு 13,000 ரூபாய் வரையில் கூட செலவழித்து குட்டை போன்றவைகளை ஏற்படுத்தலாம் என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஊருணி, குட்டைகள் அமைப்பதிலே சில நடைமுறைக் காரணங்கள் இருப்பதால் அரசு அதுபற்றி தனியாக யோசித்துக்கொண்டிருக்கின்றது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவரவர்களே, அரசு அமைக்கின்ற குளங்களைப் பொறுத்தவரையிலே விவசாயிகள் அந்தத் தண்ணீரை குறுகிய காலத்திலே பயன்படுத்தி விடுவதால் அது வீணாகிவிடுகின்றது. ஆகவே அந்தந்தப் பகுதிகளிலே நிலத்தடி நீரைப் பெருக்குகின்ற வகையிலே வருகின்ற தண்ணீரை உடனேயே எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற வகையிலே குளங்களின் மதகுகளை அடைத்து நீரைத் தேக்கி நிலத்தடி நீரினைப் பெருக்குவது பற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** தலைவரவர்களே, இந்த ஊருணி, குட்டை அமைப்பதன் நோக்கமே அதுதான். அருகிலே உள்ள நிலத்தடி நீர் வளத்தை அதிகப்படுத்தி மற்ற காலங்களிலே கூட அங்கே விவசாயம் செய்ய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதுதான் நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை அரசு செயல்படுத்தி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. செம்மலை:** தலைவரவர்களே, இதுபோன்ற பர்கோலேஷன் பான்ட்ஸ் திட்டத்தை அரசு ஆர்வமாகச் செய்து வந்தாலும் கூட இதை எந்தத் துறையிலே செய்வது என்ற கேள்வி எழுந்து பொதுப்பணித் துறை செய்யவேண்டுமா அல்லது வேளாண்மைத்துறை செய்யவேண்டுமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டு இப்போது அந்தத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன், ஆகவே அந்தத் தடையை நீக்கி ஏதாவது ஒரு துறையின் மூலமாக இந்தத் திட்டத்தினைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** தலைவரவர்களே, 1978-79—ஆம் ஆண்டு குட்டைகள் அமைக்கும் திட்டத்திற்கு சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின்கீழ் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த ஒப்புதல் நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டது. பிறகு திரும்பவும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சிறுபாசனத் துறை தலைமைப் பொறியாளரிடம் நாம் கேட்டிருந்தோம். அவர்களும் சில திட்டங்களை முன்னோடியாக ஆய்வு செய்து அறிக்கையை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். இதற்கிடையே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவது போல் நீர் நிர்வாக ஆணையாளர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே இந்த குட்டை அமைக்கும் திட்டங்களைச் சிறுபாசனத் திட்டங்களாக மேற்கொள்ளக்கூடாது என்றும்

மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக இவைகளை வேளாண்மைத் துறையோ அல்லது வசதிப் பணியாகக் கருதி உள்ளாட்சித் துறையோ மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே வேளாண்மைத் துறை இதனை நடத்தவேண்டுமா அல்லது உள்ளாட்சித் துறையிடம் கொடுக்கப்பட வேண்டுமா அல்லது பொதுப்பணித்துறையே தொடர்ந்து செய்யலாமா என்ற அந்தக் கருத்தின் மீது அரசு இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அம்பத்தூர் ஏரி.

*வினா எண் 454 திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அம்பத்தூர் பகுதியில் அமைந்துள்ள ஏரி நீர்ப்பாசனத்திற்கு பயன்படாததால் இதனை வேறு திட்டங்களுக்கு பயன்படுத்தும் நோக்கம் உள்ளதா?

(ஆ) மழைகாலங்களில் சோழபுரம், சத்தியபுரம் போன்ற பகுதிக்குள் ஏரியின் தண்ணீர் புகுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** (அ) அம்பத்தூர் ஏரி, அதன் கீழுள்ள நிலங்களின் பாசனத்திற்குப் பயன்படுவதால் வேறு வகையில் ஏரியைப் பயன்படுத்த தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) அம்பத்தூர் ஏரியின், வெள்ளக் காலத்தில் வரும் உபரி நீரை, மொகப்பையர் ஏரியின் வழியாக, கூவம் ஆற்றிற்கு திருப்புவதற்கான திட்டம், ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றிய பின் சோழபுரம், சத்தியபுரம் போன்ற பகுதிகளில் மழைக் காலங்களில் நீர் புகுவது தடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதி ஒரு காலத்திலே பயிர் செய்கிற நிலமாக இருந்த பகுதி. இன்றைக்குத் தொழிற்பேட்டைகளாக மலர்ந்து, மிச்சம் மீதியிருக்கிற விளைநிலங்களும் வீட்டு வசதி வாரியத்தினால், நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அப்படி இருக்கிறபோது, இந்த ஏரி நீர்ப்பாசனத்திற்கு அதிகமாக பயன்படுத்த முடியாத நிலை உருவாக்கப்படுகிறது. எனவே, இந்த ஏரியை நிரந்தரமாக, குடிதண்ணீர் உபயோகத்திற்காகவோ அல்லது ஏதாவதொரு தொழிற்பேட்டைக்காகவோ பயன்படுத்துகிற அளவுக்கு அரசு ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?



**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல அம்பத்தூர் ஏரி 2330 ஏக்கர் பாசன பரப்புக் கொண்டிருந்தது. அந்தப் பகுதியிலே தொழிற்பேட்டைகளும், குடியிருப்புகளும் பெருகி விட்டதால். தற்போது இந்த ஏரியின் கீழ் 250 ஏக்கர் நிலமே பாசனத்திற்காக உள்ளது. ஏனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல, சென்னைக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காக இந்த அம்பத்தூர் ஏரியைப் பயன்படுத்தலாமா என்பது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சருடன் பேசிக் கொண்டிருக்கிறோம், அது குறித்து அரசு தக்க முடிவுகளை விரைவிலே எடுக்கும்.

**மாண்புமிகு திரு. ஜே. சி. டி. பிரபாகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 50 இலட்சம் ரூபாய் செலவிலே இந்த ஏரியில் அதிகமாக வருகிற தண்ணீரை, மொகப்பையர் ஏரியின் வழியாக, கூவம் ஆற்றிற்கு திருப்பும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேறும் என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. இராஜமுகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எற்றுக் கொள்ளப் பெற்றிருக்கிறது. பணம் ஒதுக்கீடு செய்யப் பெற்றிருக்கிறது. விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

**திரு. து. இராமரத்தினம்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில், அம்பத்தூர் ஏரி 2 ஆயிரத்து சொச்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கொடுத்தது; தற்போது 250 ஏக்கருக்கு மட்டும் தான் கொடுத்து வருகிறது என்று சொன்னார்கள். ஆகவே, புறநகர்ப் பகுதிகளுக்கு அம்பத்தூர்ஏரியிலிருந்து தண்ணீர் சப்ளை செய்ய, ஏதாவது நடவடிக்கைஎடுத்து நல்ல ஏற்பாடாக செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காகவும், புறநகர்ப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காகவும், இந்த ஏரியைப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனை கூறப்பட்டது. அது வரவேற்கத் தகுந்த விஷயம் என்று கூறி, அதனை அரசு ஆலோசிக்கும் என்று ஏற்கெனவே கூறியிருக்கிறேன்.

### பொதுப் பாசனக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரைப்பகிர்ந்து கொள்ளும் திட்டம்

*வினா எண் 455 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பொது பாசனக்கிணறுகள் மூலம் நிலத்தடி நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றிய தீவிர திட்டம் ஒன்று தயார் செய்து கிணறு வெட்ட முடியாத சிறு விவசாயிகள் பயன் அடையும் வகையில் யூனியன் வாரியாக அமுல் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் என்றால் எப்போது அமுல் நடத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மாநில குழாய் கிணறு வாரியம் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த வாரியம் விரைவில் செயல்படவிருக்கிறது. இந்த வாரியத்தின் மூலம் சமுதாய கிணறுகள் முதலியவைகளை அமைத்து இயக்கி மேலும் அவைகளை பராமரித்து அதன்மூலம் விவசாயிகள் பயனடைவார்கள்.

**திரு. கோவைத்தம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சமுதாயக் கிணறுகளைப் பற்றிச் சொன்னார்கள். அந்த சமுதாயக் கிணறுகளில் கொடுக்கிற தண்ணீர் எந்த அடிப்படையில் சிறு விவசாயிகளுக்கு வழங்கப் படும்? எவ்வளவு ஏக்கருக்கு ஒரு சமுதாயக் கிணறு அமைக்கப் படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய நீர் வளத்தைப் பொறுத்துத்தான் எவ்வளவு ஏக்கருக்கு கொடுக்க முடியும் என்பதை தீர்மானிக்க முடியும். கூடுமானவரையில் நிலத்தடி நீரை தனிப்பட்ட முறையிலே பயன்படுத்தி விவசாயம் செய்யமுடியாத ஏழை விவசாயிகளுக்கும், சிறு விவசாயிகளுக்கும் அந்த நீரை பகிர்ந்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு, அதன் அடிப்படையில்தான், இந்த சமுதாயக்கிணறுகள் அமைக்கப்படவிருக்கிறது. அந்தந்தப்பகுதிக்கு எவ்வளவு கொடுப்பது என்பது இருக்கும் நிலத்தடி நீர் வளத்தைப் பார்த்து, எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு கொடுப்பது என்பது பற்றியும் இன்னும் பலவகையான உதவிகளைப் பற்றியும்-அரசு மானியம் உட்பட, விவசாயிகளுக்கு பல உதவிகளைச் செய்வதற்கு, அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. செ. சிவசாமி:** நிலத்தடி நீரைக் கண்டு பிடிப்பதற்கு எத்தகைய அமைப்புகள் உள்ளன? எங்கெங்கு இந்த சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படவிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி ஒட்டு மொத்தமாக தமிழ்நாடு பூராவும் கேட்டால் அமைச்சர் எப்படி பதில் சொல்வார்?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்து விவரமாகத் தரப்படும்.



**உலக வங்கி உதவியுடன் ஏரிகளை மேம்பாடு செய்யும் திட்டம்**

வினா எண். 456:—**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாட்டில் ஏரிகள் மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** ஆம் 500 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளுக்கு பாசனவசதி தரக்கூடிய 500 கண்மாய்களை உலக வங்கியின் உதவியுடன் நவீனப்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-50)

**திரு. கே. ஆர். சுந்தரம்:** 500 ஏக்கருக்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளுக்கு பாசனவசதி தரக்கூடிய கண்மாய்களை நவீனப் படுத்தும் திட்டம் உள்ளது என்று சொன்னார்கள். குடியாத்தத்தில் உள்ள பாக்கம் ஏரியை பெரிய ஏரியை ஆழப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அதை இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** உலக வங்கியிடம் நாம் நிதி உதவி பெறுவதற்கு முன்னால் அவர்கள் சில குறிப்புகளை கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்டையில் சில முன்னோடித் திட்டங்களை எடுத்து செயல்படுத்தி வருகிறோம். அதன்படி செங்கல்பட்டு மாவட்டத்தில் பிள்ளைப்பாக்கத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் கள்ளக்குடியிலும், ஏரிகள் நவீனப் படுத்தும் முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கட்டிக்குளம் ஏரியை நவீனப்படுத்தவும் இப்போதுஅதைப் பயன்படுத்தி அதுவும் முன்னோடித் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. முன்னோடித் திட்டத்தின் ஒருஅறிக்கை இப்போது கிடைத்திருக் கிறது. இரண்டு ஏரிகளின் அறிக்கைகளும் கிடைத்து இந்த முன்னோடித் திட்ட அறிக்கைகளைஅடிப்படையாக வைத்து உலக வங்கிக்கு திட்டங்கள் தயார் செய்வோம்.

**திரு. மா சின்னராஜ்:** இதுபோன்று உலக வங்கி நிதி உதவி பெறுவதோடு இன்னும் மற்ற பைனான்ஷியல் ஏஜென்ஸீஸ் உதவிகளைப் பெறுவதோடு நீர்ப்பாசனத் துறையில் சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு நீர்ப்பாசன வாரியம் அமைத்துவிட்டால் சாதகமாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது. அதுபோன்ற ஒரு கருத்தை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு சிறுபாசனத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீர்ப் பாசன வாரியம் ஒன்றை அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியில் உள்ள ஒரு சிறப்பு அம்சம் நிதி உதவி பெறுவதில், இந்தத் துறை மூலம் எத்திட்டங்களை நாம் உருவாக்கினாலும் அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறகிறது, ஆனால் ஒரு வாரியம் இருக்குமேயானால் உலக வங்கியிடமிருந்தோ அல்லது வேறு வங்கிகளிடமிருந்தோ உதவி பெற்று அது ஒரு கமர்ஷீயல் வெஞ்சராக இருக்கவேண்டும் என்று அந்தக் கருத்தை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அது ஒரு நல்ல கருத்து. அரசு அதை நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

திரு. இல. பலராமன்: உலக வங்கி மூலம் வாங்கக் கூடிய கடன்கள் மூலம் நவீனப்படுத்தும் ஏரிகளில் என்னென்ன காரியங்களுக்காக அரசு அதைப் பயன்படுத்தயிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: உலக வங்கி உதவி செய்கிறபோது சில நிபந்தனைகளைச் சொல்கிறார்கள். அது குறித்து நம் பாரதப் பிரதமர் அவர்கள் கூட ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உதவி செய்கிறபோது சொல்கிற அந்த நிபந்தனைகளில் அரசியல், சமூகப் பார்வைகள் கலந்து விடக்கூடாது என்று. உலக வங்கி இந்த நவீனப்படுத்தும் திட்டத்தில் முதலில் 25 ஏக்கருக்குக் குறையாமல் ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு நவீப்படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். அது உடைமையாளர்களுக்கு சாதகமாக இருக்குமே தவிர சிறு நிலம் வைத்திருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு அது சாதகமாக இருக்காது. இதில் மண்வளம், போன்ற அடிப்படை கொள்கைப் பிரச்னை இருக்கிறது. இருந்தாலும் கூட முன்னோடித் திட்டம் என்ற பெயரால் 25 ஏக்கர் ஒரே யூனிட்டாக இல்லாவிட்டாலும்கூட அந்தந்த உடைமையாளர்கள் உரிமையைபாதிக்காத அளவிற்கு அந்த நவீனப்படுத்துகிற நிலைமைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதோடு சிறிய கால்வாயாக இருந்தாலும்கூட காரை பூசி நவீனப்படுத்தி அந்தத் தண்ணீரை கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று நிபந்தனையில் சொல்லியிருக்கிறார்கள். அதைதான் இப்போது பரீட்சார்த்தமாகச் செய்து கொண்டிருக்கிறோம் அது வெற்றிகரமாக இருந்தால் அத்திட்டத்தின் அடிப்படையில் நாம் கடன் உதவி பெற முயற்சி செய்வோம்.

## விளாத்தி குளத்தில் நூற்பாலை ஏற்படுத்துதல்

*வினா எண்.529—திரு. ரா. கு பெருமாள்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியைச்சேர்ந்த வைப்பார், கீழ் வைப்பார், பொதுமக்கள் அரசு நூற்புஆலை அமைத்து வேலை வாய்ப்பு ஏற்படுத்த நூறு ஏக்கர் நிலமும்' பங்குத் தொகை ரூபாய் ஒருலட்சமும் இனாமாக கொடுக்க முன் வந்தும் இதுவரை அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணம் என்ன?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது அரசு நூற்பாலை அமைக்கப்படும்?

மாண்புமிகுதிரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) கீழ் வைப்பார் கிராமத்தில் உள்ள சில நபர்களிடம் இருந்து அரசுக்கு வந்துள்ள மனுவில் கிராம சமுதாயப் பொதுக்காடான 193 ஏக்கர் 83 செண்ட் நிலத்தை அரசு ஏற்று நூற்பாலை அமைத்துத் தரும்படி வேண்டியுள்ளனர்.

கூட்டுறவு நூற்பாலைகளே இல்லாத மாவட்டங்களில் மட்டுமே கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. மேலும் எட்டையபுரத்தில் பாரதியார் பெயரால் இன்னும் ஒரு நூற்பாலை அமைய இருக்கின்றது. ஆகவே கீழ் வைப்பார் கிராமத்தில் மேலும் அதிகப்படியாக ஒரு நூற்பாலை அமைப்பதற்கு வழியில்லை.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் விளாத்திக்குளம் தாலுகாவை தமிழக அரசின் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலில் பின் தங்கிய பகுதியாக அறிவித்து, ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால், அரசு இதற்கு வேறு ஏதாவது மாற்றுமுழி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை அங்கே இல்லை.

திரு ரா. கு. பெருமாள்; தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை இல்லாவிட்டாலும்கூட, ஒரு ஆயிரம் பேர்களுக்கு வேலை தருகின்ற வகையிலே சிப்காட் மூலம் ஒரு இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்சை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ் திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே] மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

## Geological Survey of Firest Lands and Hill tracts

*Q. No. 530 THIRU P. VENKATASUBRAMANIAN; Wll the Hon. theMinister fo Industries be pleased to state

Whether the Government hav conducted any Geologcial survey of the forest lands and hilly tracts in the State

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: ஆம் இந்திய புவியியல் ஆய்வுக் கழகம் தமிழ்நாட்டின் வன மற்றும் மலைப் பகுதிகளிலும் பொதுவான புவியியல் வரைப்பட ஆய்வுகளை மேற்கொண்டது. இத்துடன் தமிழ்நாடு மாநில புவியியல் பிரிவும் மாநிலத்தின் வன மற்றும் மலைப்பகுதிகளிலும் கனிம வளங்களை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வுகளை செய்தது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வின் மூலம் ஏதாவது கனிமப் பொருள்கள் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா? அந்தக் கனிமப் டுபாருள்களை வைத்துக்கொண்டு, தமிழகத்தில் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் உள்ள எல்லா கனிம வளங்களைப் பற்றியும் சொல்வதானால், அது பெரிய பதிலாக அமையும். இருந்தாலும்கூட, இந்த ஆய்வின் அடிப்படையிலே பாக்சைட், தங்கம், இரும்புத் தாது, செம்பு, மாக்னசைட், சுரும்பாறை, கற்கள், சிலிக்கான், வெண் களிமண் போன்ற பலவகையான கனிமங்கள் தமிழகத்தின் காட்டுப் பகுதிகளிலே பல்வேறு இடங்களில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே. வியாபார ரீதியாக, எந்தெந்தப் பகுதிகளில் பொருளாதார ரீதியாக வர்த்தக ரீதியாக இலாபகரமாக இருக்கும் என்பதைப் பரிசீலித்து அதற்குப் பின்னால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கனிமப் பொருள்களைக் கொண்டு, பாக்டரி ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன். கொடுக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் வியாபார ரீதியாக, லாபகரமாக எந்தெந்த பகுதிகளிலே கிடைக்கின்ற கனிமப் பொருள்களைப் பயன்படுத்த முடியுமோ அவற்றையெல்லாம் மீண்டும் ஆலோசித்த பின்னர் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பெருமளவிற்கு கனிமப் பொருள்கள் ..ருப்பதாக அமைசசர் அவர்கள் அளித்த பதிலிலே சொன்னார்கள். ஆனால், பிற மாநிலங்களோடு ஒப்பிடுகின்றபோது நம்முடைய தமிழகத்தில் அந்தக் கனிமப் பொருள்களை அதிகமாக எடுக்கவில்லை. வியாபார ரீதியாக அமைக்கப்படவில்லை. ஆகவே, இந்த புவியியற் ஆராய்ச்சியை இன்னும் விரிவுபடுத்தி, இப்படிப்பட்ட கனிமப் பொருள்களை எடுத்து, தொழிற்சாலைகள் ஏற்படுத்த அரசு அதிக அக்கறை செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய தீவிர நடவடிக்கைகளின் பலனாகத் தான் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இந்த அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. அவற்றைப் பயன்படுத்துவதற்கு, இந்த ஆய்விலே எந்தெந்தப் பகுதிகளில் இருக்கின்றது, என்று பரவலாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தொழிற்சாலை அமைக்க, அதிலே எவ்வளவு கன்டென்ட்ஸ் இருக்கிறது மொத்தம் எவ்வளவு அளவுக்கு கீழே பதிந்து கிடக்கின்றது



ஆகிய இவற்றையெல்லாம் கண்டு வியாபார ரீதியாக, வர்த்தக ரீதியாக ஏற்படுத்துவது என்பதையெல்லாம் தீவிரமாக கவனத்தில் கொண்டு அதற்குப் பின்னால் இதற்கான தொழிற்சாலை அமைக்கப்படும். எனவே, இவற்றையெல்லாம் ஆய்வு செய்ததற்குப் பின்னர் தான், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோவைத்தம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புவியியல் ஆய்வை மாநில சர்க்கார் நடத்துகிறதா? அல்லது மத்திய சர்க்கார் நடத்துகிறதா? இதற்காக மத்திய சர்க்கார் உதவி செய்கிறதா? இந்த பூமிக்கு அடியில் ஆய்வை நடத்துகின்றவர்கள், நிலத்தடியில காவேரிப் படுகையில் மண் எண்ணெய் பெட்ரோல் ஆகியவை இருப்பதாக மத்திய அரசு ஆராய்ந்திருக்கிறது. மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இதிலே சம்பந்தம் உண்டா? மாநில அரசு மத்திய அரசிடம் இதற்காக ஏதாவது உதவி கோரியுள்ளதா

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய புவியியல் கழகம் மத்திய அரசுக்குச் சொந்தமானது. அதேபோல் தமிழ்நாடு புவியியல் கழகம் தமிழக அரசின் வரம்பிற்கு உட்பட்டது. புவியியல் ஆய்வுகளை மேற்கொள்கின்றபோது கனிமப் பொருள்களைப் பொறுத்தவரைக்கும் மாநில அரசு மேற்கொள்கிறது. பெட்ரோலைப் பொறுத்த வரைக்கும் தனி இலாகா மத்திய, அரசினுடைய நிறுவனம் அதுகுறித்து ஆய்வு செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## (2) அறிக்கை அளித்தல்.

### கன்னியாகுமரி மாவட்ட சம்பவங்கள் பற்றி முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் விதி 106-ன் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்கள்.

[முற்பகல் 10.00]

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மண்டைக்காடு பகுதியில் இந்துக்கள், கிறிஸ்துவர்கள் ஆகியவர்களுக்கிடையே வாழ்க்கை பாதிக்கக்கூடிய அளவிற்கு அங்கே நிகழ்ந்த கலவரங்கள் அதன் பின்னர் நடந்த துப்பாக்கிச் சூடு, அதையடுத்து ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலை குறித்து நேரிலே கண்டறிவதற்காக 14-3-1982 அன்று நாகர்கோவில் சென்றேன்.

அன்று காலை மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகளுடன் நிலை பற்றி விவாதித்தேன். பின்னர் துப்பாக்கிச் சூடு நடந்த மண்டைக்காடு பகுதிக்கு நேரிலே சென்று கிறிஸ்துவர்கள் வசிக்கும் பகுதியான புதூரிலே உள்ள சர்ச் ஆலயத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தை பார்வையிட்டேன். சம்பவம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி அங்கேயிருந்த கிறிஸ்துவ பாதிரிமார்களிடம் விசாரித்து அறிந்தேன். அதன் பின்னர் பகவதி அம்மன் திருவிழாவின்போது இந்துக்கள் கடலில் குளிக்கும் இடத்திற்கு நான் சென்று பார்வையிட்டேன். நிகழ்ந்த சம்பவங்கள் பற்றி அங்கே குழுமியிருந்த கிறிஸ்துவ மக்களிடம் விவரங்களைக் கேட்டேன். துப்பாக்கிச் சூட்டிலே இறந்த மருதையா என்பவர் வீட்டுக்கு சென்று அவருடைய மனைவிக்கு ஆறுதல் கூறினேன். அரசின் சார்பாக பணம் கொடுக்க முயன்றேன். அவர் அந்த நேரத்திலே வாங்கிக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லையென்பதை அறிய முடிந்தது. பகவதி அம்மன் கோவில் இருக்கும் இடத்திற்கு வந்து அங்கே குழுமியிருந்த மக்களிடம் உரையாடி அவர்களுடைய கருத்தை அறிந்து கொண்டேன். பிறகு நாகர்கோவில் சென்றேன். அன்று மாலை 5 மணி அளவிலே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடைய அலுவலகத்தில் கிறிஸ்துவ, இந்து, இஸ்லாமிய சமயங்களைச் சார்ந்த தலைவர்களை தனித்தனியே சந்தித்து ஒவ்வொரு பிரிவினர்களுடைய கருத்துக்களையும் கேட்டு அறிந்தேன். அதன் பிறகு அனைத்து தலைவர்களையும், குமரி மாவட்ட சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்களையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்தி அவர்கள் கருத்தை நான் கேட்டு அறிந்தேன். கிறிஸ்துவ சமயத்தினர் கடந்த ஆறு மாதகாலமாக குமரி மாவட்டத்திலே நடந்த நிகழ்ச்சிகள், இதுவரை இந்துக்கள், கிறிஸ்துவர்களிடத்திலே நிலவி வந்த அமைதியான உறவு பாதித்து இரு பிரிவினரிடமும் விரோத மனப்பான்மை வளர்ந்து, துப்பாக்கிச் சூடு நடக்கும் அளவிற்கு கொண்டு சென்றிருக்கிறது என்பதை அவர்களுடைய அனுபவம் என்கிற அளவிலே நடந்ததை எல்லாம் தெரிவித்தார்கள். இங்கே நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் சொன்னவை எல்லாம் அப்படியே இங்கே வெளியிடுவது நாட்டின் அமைதிக்கு முறையாகாது என்ற காரணத்தால், விசாரணை நடைபெற இருக்கிற காரணத்தாலே இங்கே அவைகளை குறிப்பிடாமல் விட்டுவிடுகிறேன்.

கடந்த பிப்ரவரி மாதம் 13, 14 தேதிகளில் நாகர்கோவிலில் நடந்த ஒரு மாநாட்டிலே கிறிஸ்துவ மக்களை பலவாறாக தாக்கிப் பேசினார்கள் என்பது காரணம் என்று கூட அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல ஒவ்வொருவரும் அவர்களுடைய சூழ்நிலைக்கேற்ப, நம்பிக்கைக்கு ஏற்ப, அவர்களுடைய அனுபவத்தை உதாரணமாகச் சொல்லி பல கோணங்களிலே தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டார்கள். இதிலே குறிப்பிட வேண்டிய ஒன்று, முஸ்லீம் கடைகள் தாக்கப்பட்டிருக்கின்றன, கிறிஸ்துவர்களுடைய இடங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன, இந்துக்களுக்குச் சொந்தமான இடங்கள்



பல தாக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் சுடப்பட்டு மாண்டு இருக்கிறார்கள். மேலும் நேற்று இரண்டு பேர் சுடப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஈத்தாமொழி கிராமத்திற்கு நான் சென்ற போது இந்துக்களுக்குச் சொந்தமான வீடுகளில், முஸ்லீம்கள் வைத்திருந்த கடைகளும் தீயினால் அழிக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன். ஆகவே, இதிலே அடிப்படையான பிரச்னை மிக பலமானதாக வேரூன்றி இருக்கிறது என்பதை இந்த நாடு அறிந்து கொள்ள விசாரணை தேவை என்பதை நான் உணர முடிந்தது. இந்த மாமன்றம் நடந்து கொண்டிருக்கும்போது, இந்த மாமன்றத்திற்கு வெளியே சொன்னது இங்கே இருக்கிற உறுப்பினர்களை அலட்சியப்படுத்த வேண்டும் என்கிறதால் அல்ல அந்த நேரத்திலே அவர்களுடைய கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால் அமைதி ஏற்படாது என்ற சூழ்நிலைக்கு அங்கே வற்புறுத்தப்பட்டதால் நான் சிலவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டேன்.

அதில் ஒன்றுதான் நீதி விசாரணை. அதையொட்டி சில அதிகாரிகள் மாற்றம், அதற்கு மேலும் பத்திரிகைகள் செய்திகள் வெளியிடும்போது அளவோடு வெளியிட வேண்டும் என்பது அந்தக் கலவரப் பகுதிகளிலே மதுக்கடைகள் மூடப்பட வேண்டும் என்பது போன்ற பல கோரிக்கைகளை நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டுப்பாட்டுக்கு ஆளாக்கப்பட்டேன். எப்படியாவது அமைதி தேவை என்ற வகையில் நான் அவைகளைத் தெரிவித்தேன் என்பதை இந்த மன்றத்தில் சொல்வதின் மூலம் இந்த மன்றத்தை நான் மதிக்கவில்லை என்ற தவறான கருத்து யாருக்காவது இருந்தால் அதை மறந்து விடுவார்கள் அல்லது நான் சொல்வதை நியாயம் என்று ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அதோடு இன்னும் சிலவற்றை நான் சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்கள் உயர்நீதிமன்ற நீதிபதி—இப்போது பணியாற்றுகிறவர்கள் அல்லது ஓய்வு எடுத்திருக்கிறவர்கள்—யாரையாவது ஒருவரை நியமிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அனைத்துத் தரப்பிலிருந்தும் அந்தக் கோரிக்கை இருந்தது. இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சில சமயம் அந்த எண்ணத்தைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இதையொட்டி நீதிபதி வேணுகோபால் அவர்களை அந்த நீதி விசாரணைக்கு அவர்களுடைய சம்மதத்தைக் கேட்டு நியமிப்பது என்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே மகிழ்ச்சி என்னவென்றால் நேற்றுக் காலையிலே துப்பாக்கிச் சூடு நடந்திருந்தாலும் நேற்று மாலையிலிருந்து எந்தவிதமான அசம்பாவிதமும் கிடையாது என்பதை, அமைதியாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதிலேதான் நான் அந்த நிறைவைப் பெறுகிறேன்.

இனி அப்படி நடக்காத வகையில் என்ன செய்யவேண்டுமோ அதை அனைத்தையும் செய்யமுடியும் என்று நான் நம்புகிறேன். இந்த நேரத்திலே நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். எல்லா மதத்தினருக்கும். அங்கேயும் என்னுடைய உத்திரவாதமாகச் சொல்லியிருக்கிறேன். 144 இருந்தாலும்கூட அனுமதியைப் பெற்று அவரவர்கள் நம்பிக்கைப்படி வழிபாடு நடத்த அனுமதிக்கப்படும் என்று நான் சொல்லியிருக்கிறேன். நான் சொன்ன இரண்டு வார்த்தைகளை இங்கே நான் திரும்பச் சொல்வது கடமை என்று கருதுகிறேன்.

கடலிலே குளிக்கச் செல்வதற்கு உரிமை இல்லையென்றால் அவர்கள் தமிழகத்திலே பிறந்து பயனில்லை, அந்த உரிமை அவர்களுடையது என்று நான் சொன்னேன். அதேபோல் மதச் சார்பற்ற நாடாக இருக்கின்ற காரணத்தினால் மதத்தைப்பற்றிப் பேசுவதற்கு, பரப்புவதற்கு உரிமை உண்டு என்றும் நான் சொன்னேன். ஆனால் யாருடைய மனதையும் புண்படுத்தாமல் தனிப்பட்டவர்கள் யாரையும் இழிவுபடுத்தாமல் ஆத்திரத்திற்குட் படுத்தாமல் நடைபெறவேண்டும். நான் இப்போது வேண்டிக் கொள்வது எல்லாம் ஒரு 6 மாத காலத்திற்கு மதப் பிரச்சாரங்களை தயவு செய்து நிறுத்திவிடுவது, விட்டுவைப்பது இந்த நாட்டிற்கு நல்லது, தமிழகத்திற்கு மட்டுமல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நேரிலே நான் கண்டதன் விளைவாக சொல்கிறேன். அப்படி மதப் பிரச்சாரத்தைச் செய்வதற்கு ஒரு வழிமுறை வேண்டும்—வகை தொகை வேண்டும் என்று சொல்வார்களே—அதைப்போல் ஒரு எல்லைக்கோடு வேண்டும். அதை மீறிப் போகிற காரணத்தினால் தான் இந்தப் பிரச்சினைகள் எழுகின்றன என்பதை நான் உணரமுடிந்தது. ஆகவே அந்த உணர்வு பலர் உள்ளங்களை வேதனைக்கு ஆளாக்கக்கூடிய சூழ்நிலை வராமல் பார்த்துக்கொள்வது தேவை என்று நான் கருதுகிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். தாணுலிங்க நாடார் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு சேரவேண்டுமென்ற போராட்டத்திலே ஈடுபட்டவர், காங்கிரஸ்காரர். அப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் கூட மனம் நொந்து நாங்கள் எங்களைக் காப்பாற்றிக்கொள்கிறோம் நீங்கள் போலீஸை வேண்டுமென்றால் வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிற அளவுக்கு அங்கே நிலைமை உருவாகுமானால் அது கன்னியாகுமரி மாவட்டத்தோடு நின்றுவிடாது, தமிழ்நாட்டு எல்லைகளையெல்லாம் தொடும், அதற்கு அந்தப் பக்கத்தையும் தாண்டி வடநாடு முழுவதையும்கூட தொடக்கூடிய நிலைமையிலே மதம் என்ற காரணத்திற்காகச் சொல்கிறேன், அந்த உணர்வு பரவுமானால் நாம் எப்படிப்பட்ட அமைதியை வேண்டுகிறோமோ எந்த ஒருமைப்பாட்டைச் சொல்கிறோமோ அதற்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தினால் இந்த நேரத்திலே உங்கள் அனைவரின் சார்பாகவும் அரசின் சார்பாகவும் வேண்டுகோள் வைக்கிறேன். மதத்தைச் சேர்ந்தவர்கள் வழிபாடு நடத்தட்டும், ஆனால் மதப் பிரச்சாரத்தை ஒரு 6 மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கட்டும் என்று வேண்டுகோள் விடுகிறேன். அதை ஏற்றுக்கொள்வது நல்லது இந்த நாட்டிற்கும் நல்லது என்பதைச் சொல்கிறேன்.



நடவடிக்கைகள் ஒழுங்காக எடுக்கப்படுகின்றன. காவல்துறையில் அங்கே எஸ்.பி.யாக 1978 ஆம் ஆண்டு பணியாற்றிய ப்ரம்வீர்சிங் அவர்கள் இப்போது அங்கே பணியாற்றுகிறார்கள். அவர் மீது கல் எறியப்பட்டது. பிறகுதான் நேற்றையதினம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, காலையிலேயும், மாலையிலேயும் சில நிகழ்ச்சிகள் அங்கே நடந்தாலும்கூட நேற்றிரவிலிருந்து எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை; அமைதியாக இருக்கிறது. அந்த அமைதியை எப்படியும் இந்த அரசு அங்கே இருக்கின்ற மக்களுடைய ஒத்துழைப்பால் காப்பாற்றும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதற்கு அங்கே இருக்கின்ற—எம்.எல்.சி.யாக இருக்கின்ற சங்கரலிங்கனார் அவர்கள் மற்றும் ஹேமச்சந்திரன் அவர்கள், முத்துக்கிருஷ்ணன் அவர்கள், வின்சென்ட் அவர்கள் ஆகியவர்களைப் போன்றவர்கள் அனைவரும் அங்கே ஒத்துழைப்புத் தந்தார்கள்.

(முற்பகல் 10-10)

அதைப்போல அங்கே இருக்கின்ற அத்தனை மதங்களை சார்ந்தவர்களும் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறார்கள்.

நஷ்ட ஈட்டைப் பற்றி நாம் இன்னும் முடிவு செய்யவில்லை. பத்தாயிரம் ரூபாய் உயிருக்காகக் கொடுக்கிறோம் என்றாலும் முஸ்லீம்கள் அங்கே சொத்துக்களை இழந்திருக்கிறார்களே அவர்களுக்கு, குடிசைகளை இழந்தவர்களுக்கு, வீடுகளை இழந்தவர்களுக்கெல்லாம் இந்த அமைதிக்குப் பிறகு நாம் என்னென்ன செய்ய முடியுமோ அவர்களுடைய வாழ்க்கையிலே உதவி செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு நியாயமான வகையில், தலைவர்களைக் கொண்டு நிர்ணயிக்கச் செய்து எந்த அளவிற்கு அரசு உதவுமோ அந்த அளவிற்கு உதவும் என்பதையும் இங்கே சொல்லி இந்த நிலைமையில் என்னுடைய கடமையை ஆற்றியிருக்கிறேன் என்பதையும் எடுத்துக்கூறி அமைகிறேன். வணக்கம்.

S. G. HAJA SHAREEF: * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: * * *

திரு. என். சங்கய்யா: பேரவைத் தலைவரவர்களே, கோவளத்திலே போலீஸ்காரர் உடுப்பிலே சென்று அங்கே துப்பாக்கிப் பிரயோகம் நடந்து அதிலே ஒருவர் இறந்திருக்கிறார் என்று இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்று நடந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி வந்திருக்கிறது. ஆனால் கோவளத்தில் போலீஸ்காரர் உடுப்பிலே சென்று திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தி அதிலே ஒருவரைக் கொலை செய்திருக்கிறார்கள். அதிலே சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? அதிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற ஆட்கள் பூராவையும் கைது செய்ய உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் திட்டவட்டமாகச் சொல்லுகின்றேன் இதில் தாட்சண்யமே கிடையாது. யாராக இருந்தாலும் சட்டம் அவர்களை விட்டு வைக்காது; கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். இன்றுகூட இன்னொருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். பின்னால் நீங்கள் கேள்விப் படுவீர்கள். அவர் ஒரு கட்சியினுடைய தலைவர் என்றுகூடச் சொல்லப்படுபவர் அந்த மாவட்டத்தில், அப்படிப்பட்ட நிலமையில் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கிறது. எப்படியும் நாட்டிலே அமைதி வேண்டும். மதப் போராட்டங்கள் நடைபெற நாம் அனுமதிக்க முடியாது; ஜாதிப் போராட்டங்கள் நடைபெற அனுமதிக்க முடியாது. எந்தக் கட்சியின் பெயராலும், யார் என்ன செய்தாலும் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்கு அரசு உத்தரவாதம் அளிக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது.

திரு. அ. ரகுமான்கான்: நான் சொல்வதைக் கேட்டு விட்டு பிறகு நீங்கள் அதைப் பற்றிச் சொல்லுங்கள். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, நம்முடைய முதல்வரவர்கள் வகுப்புக் கலவரத்தையொட்டி, கன்னிய குமரி மாவட்டத்தில் நடைபெற்றதைப் பற்றிய விவர அறிக்கையை, விளக்கத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தச் சம்பவம் குறித்து நேற்று கேட்டபொழுது அறிக்கை வைக்கப்படும் என்று சொன்னார்கள். அதையொட்டி அறிக்கை வைக்கப்படாத காரணத்தினாலே அல்லது அரசுக்கு விளக்கம் இல்லாத காரணத்தினால், அதுகுறித்து நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அதிலே முக்கியமான விஷயம் என்னவென்றால், அரசின் கருத்தைச் சொல்லிவிட்டால், எங்கள் கருத்தைச் சொல்வதற்கு......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, அறிக்கை வைக்கவில்லை என்று சொல்ல முடியாது. இப்பொழுது நான் சொன்னதே அறிக்கைதான். என்னுடைய விளக்கம்தான் அறிக்கை என்பதைத் தயவுசெய்து பேரவைத் தலைவரவர்கள் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: நான் அதைச் சொல்லவில்லை. ஒத்தி வைப்புத் தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே இந்தப் பிரச்னை இல்லை.



திரு. அ. ரகுமான்கான்: எங்களுடைய வாய்ப்பு போகிறது இல்லையா? அரசாங்கத்தின் கருத்தைத் தானே சொல்கிறார்கள். எங்களுக்குக் கிடைத்த தகவலைச் சொன்னால்தானே முடியும். அரசாங்கம் ஒரு தரப்பான கருத்தைத்தானே சொல்லி இருக்கிறது. ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்பு அறிக்கை வைக்கலாம். ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்ததற்குப் பிறகு நாங்கள் பேசி சர்க்கார் அறிக்கை வைக்க வேண்டுமே தவிர.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அப்படி கிடையாது. நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். நேற்றே மாண்புமிகு என். எஸ். வி. சித்தன் அவர்கள் இது சம்பந்தம க முதல்வர் போய்விட்டு வந்தார், என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்டபொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிக்கை வைக்கப் போகிறார்கள், பொறுத்திருங்கள் என்று நேற்றே சொல்லியாகி விட்டது.

திரு. அ. ரகுமான்கான்: அவர் கேட்டது, நேற்று காலையில் நடந்த துப்பாக்கிச்சூடு பற்றி. நான் கொடுத்த அட்ஜர்ன்மென்ட் மோஷன் அது சம்பந்தமானது அல்ல. திரு. சித்தன் கொடுத்தது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் எடுத்துக் கொள்ளவில்லை. அட்ஜர்ன்மென்ட் மோஷனைப் பற்றி அறையிலேதான் கேட்க வேண்டும், இங்கே கேட்கக் கூடாது.

திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள் சொன்ன கருத்தும், அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன கருத்தும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே, கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று வந்த......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப்படையான கருத்துக்களாக இருந்தால் சொல்லலாம். விவரங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அறிக்கை கொடுத்தால் அதைக் கேட்டுக் கொள்ளவேண்டும். அதற்குப் பின்னால், ஏதாவது இருந்தால் பின்னணியில் சொல்ல வேண்டும். இப்பொழுது சொல்ல ஆரம்பித்தால், எல்லோரும் சொல்ல ஆரம்பிப்பார்கள். (திரு. அ. ரகுமான்கான் குறுக்கீடு) ஒவ்வொன்றிற்கும் திரு. ரகுமான்கானைக் கேட்டுக்கொண்டு சபையை நடத்த வேண்டுமா? இது ஒரு சூடான பிரச்னை. நாட்டிலே ஒரு சுமுகமான நிலை உண்டாக வேண்டுமென்பதற்காக முதல்வர் அவர்கள் நேராகப் போய்விட்டு வந்து, சுமுகமான சூழ்நிலையை உருவாக்க அறிக்கை தந்திருக்கிறார்கள். அதற்கு

மேற்கொண்டு எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்வகட்சித் தலைவர்கள் சேர்ந்து, எடுக்கின்ற முடிவின் பின்னணியில் செய்யலாம். சபைக்குள்ளே வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மிகச் சூடான ஒரு பிரச்னையைப் பற்றி மிக்க பொறுப்புணர்ச்சியோடு இங்கே ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்திலே எந்தக் கட்சி வேறுபாடும் இல்லாமல், எல்லா கட்சிக்காரர்களுமே இதைப் பற்றி வலை அடைந்திருக்கிறார்கள். அதிலே, அரசாங்கத்தின் கரங்களைப் பலப்படுத்தவும், அங்கே அமைதி தொடர்ந்து நீடிக்கவுமான வகையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி, எல்லோரும் சேர்ந்து ஒரு வேண்டுகோள், கன்னியாகுமரி ம வட்ட மக்களுக்கு விடுப்பது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் உடனடியாக, இன்றே அவர் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, ஒரு சுமுகமான ஒரு அறிக்கையை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் கலந்து பேசி, அவர்கள் ஒத்துக் கொண்ட பிறகுதான் இம்முடிவிற்கு வந்தோம். அங்கே அறிக்கையிலே கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். நாகர்கோவில் இந்து முன்னணி அளித்த மனுவும், கோட்டாறு இந்து முன்னணி தலைவரின் மனுவும், குமரி மாவட்ட ஆர் எஸ் எஸ். தலைவர் ஆர். முத்துசாமி அளித்த மனுவும், பொதுநலத்தைச் சேர்ந்த மகரிஷி அனைத்து நாடுகள் வேத ஞானக் கல்விக் கழகச் செயலாளரின் கடிதம், கண்டப்பற்றிவிளையைச் சேர்ந்த திரு. கந்தப்பன் மனுவும், அங்கேயிருக்கிற டையஸிஸ் பேராயர் பாதிரியார் ஃபாதர் மார்ட்டின் அலங்காரம், இதுபோல், அத்தனை பேர்களுடைய மனுக்களை விசாரித்து, அங்கேயிருக்கிற பாதிரியார்கள், இந்து மத தலைவர்கள், கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கையெழுத்திட்டு அங்கே ஏற்றுக்கொண்ட பிறகுதான் இந்த முடிவுகள் வந்தன. ஆகவே உங்களுடைய பிரதிநிதிகள் அங்கே கையெழுத்திட்டது போல்தான்; நீங்களே சொன்னது போல் தான். ஆனால், எப்பொழுது வேண்டுமானாலும் அறிக்கையை வெளியிடலாம். ஆனால், வெளியிடுவதை விட, என்னுடைய வேண்டுகோள், விரைவிலே அந்த நீதிபதியினுடைய தீர்ப்பு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அது கிடைத்தால்தான் எதிர்காலத்தில் இத்தகைய காரியத்தைத் தடுக்க முடியும் என்ற காரணத்தால், ஓராண்டுக் காலத்திற்கு முன்னாலேயே இருந்தே அதை விசாரிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த கமிஷனை நியமித்திருக்கிறோம்.



### (3) ஒத்திவைப்புத் தீர்மானம்
### கொச்சி வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பெற்ற சிமெண்ட் மூட்டைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் "தமிழ்நாட்டிலிருந்து கேரள மாநிலம் கொச்சி வளர்ச்சித் திட்டத்திற்கு அனுப்பப்பட்ட 11,80,000 ரூபாய் மதிப்புள்ள 1,720 டன் சிமெண்ட் மூட்டைகள் இடையில் மோசடி செய்யப்பட்டுவிட்டதாக வந்துள்ள செய்தி நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. இராசமாணிக்கம். . . .

(முற்பகல் 10.20)

* திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் தமிழகத்தில் நடைபெற்றுள்ள ஒரு பெரிய மோசடியை இங்கே கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். தமிழகத்திலே ஏழை எளிய மக்கள் வீடு கட்டுவதற்காக, விவசாயிகள் ஒரு சாதாரண மாட்டுக் கொட்டகை கட்டுவதற்குக்கூட சிமெண்ட் மூட்டை கிடைக்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கிராமப் பகுதியிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலையில் சிமெண்ட் கிடைக்கவில்லை என்று சொன்னாலும் கூட, 80 ரூபாய், 100 ரூபாய் கொடுத்தால் இன்றையதினம் வெளிமார்க்கெட்டில் தாராளமாக சிமெண்ட் கிடைத்து வருகிறது. அது எல்லோரும் அறிந்த விஷயம். இப்படி ஏராளமான முறைகேடுகள் நடைபெற்று வருவதை இந்த சட்டப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றையதினம் தமிழ்நாட்டிலிருந்து தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷனிலே இருந்து 1981-லே கேரள மாநிலம் கொச்சி வளர்ச்சித் திட்டத்திற்காக சிமெண்ட் மூட்டைகள் அனுப்பப்பட்டன. அப்படி அனுப்பப்பட்ட மூட்டைகள் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷனால் அங்கீகரிக்கப்பட்டு கான்ட்ராக்டர் மூலமாக லாரிகளில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளன. அவைகள் கிட்டத்தட்ட 34,400 மூட்டைகள். 1,720 டன் சிமெண்ட் மூட்டைகளைப் போலியாக தஸ்தாவேஜுகளைத் தயாரித்து, வெளிமார்க்கட்டிலே விற்கப்பட்டதாகவும் செய்திகள் மூலம் தெரிகின்றன. அதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் கிட்டத்தட்ட 25 லட்சம் ரூபாய்க்கு மேல் சம்பாதித்து இருக்கக்கூடும். பயன் அடைந்திருக்கக் கூடும் என்று அந்த செய்தியில் வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த மோசடியில் லாரி உரிமையாளர்கள், அரசு அலுவலர்கள், மிக முக்கியமான அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டு இருப்பதாகவும் பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகின்றன.

* *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராசமாணிக்கம் அவர்கள் சிமெண்ட் மோசடி பற்றி தாங்கள் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது மட்டும் பேச வேண்டும். அவர் எரிசாராயம் பற்றி குறிப்பிட்டவைகள் அனைத்தையும் நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தமிழகத்திலே கூட இப்படி மோசடியாக விற்பனை செய்வதாக செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படி பயங்கரமான மோசடி இந்த ஆட்சியில் வாடிக்கையாக நடைபெறும் நிகழ்ச்சியாகும். இந்தத் துறையை நிர்வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் இளைஞர், சுறுசுறுப்பானவர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சரைப் பற்றிய குறிப்புகள் தேவையில்லை. எந்தக் காரணத்திற்காக ஒத்தி வைக்க வேண்டும் என்பது குறித்து மட்டும் பேசவேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : இந்த மோசடியில் யார் யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்ற முழு விவரங்கள் நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட மோசடி மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கும், இது இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால், இது சம்பந்தப் பட்ட விவரங்களை தீர விசாரித்து, இதிலே யார் யார் சம்பந்தப் பட்டு இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கும், இது சம்பந்தமாக விசாரணை நடத்த ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட கமிஷன் அமைக்க வேண்டும் என்று கேட்டு, இதைக் குறித்து சபையில் தீர ஆலோசிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல லட்ச ரூபாய் பெறுமானமுள்ள சிமெண்ட் இங்கேயிருந்து காணாமல் போய் இருக்கும் ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை இருக்கிறது. சிமெண்ட் கலப்படம் குறித்து இன்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் கூட வந்து இருக்கிறது. கொஞ்சகாலமாக சிமெண்ட் நிலைமை எப்படி யிருக்கிறது என்பது நமக்கு எல்லாம் தெரியும். சிமெண்ட் தட்டுப்பாடு பற்றி திரு. ராசமாணிக்கம் சொன்னதை அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள் என்பதால் நான் மேலும் அதைப் பற்றிப் பேசி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. சிமெண்ட் தட்டுப்பாடு இருப்பதன் காரணமாக 50 ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது என்று சொல்லி, பின்னர் 55 ரூ. கொடுத்தாலும் கிடைக்காது என்று ஆகி, பிறகு அதன் விலை 65 ரூ. என்று ஆகி இன்றைக்கு ரூ. 85 என்று சொன்னாலும் கிடைக்காத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அந்த அளவிற்கு அது கிடைக்க சொன்னாலும் கிடைக்க முடியாத ஒரு பொருளாக இருக்கிறது. இப்போது விவகாரம்



என்னவென்றால், முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல், பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான சிமெண்ட் மோசடி நடந்து இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு மோசடி பல்வேறு நிலைகளில் தொடர்பு இல்லாமல் நடந்து இருக்க முடியாது. இதிலே யார் யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள், அரசாங்க அதிகாரிகளுக்கு இதில் பங்கு உண்டா, இதிலே சிவில் சப்ளைஸ் இலாகாவிற்கு என்ன பங்கு இருக்கிறது, இந்தத் தவறுக்கான காரணம் என்ன, என்பதைப் பற்றியெல்லாம் தீர விசாரித்து அறிக்கை அளிப்பதற்காக ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டு, இதிலே உண்மையான தவறு செய்தவர்களை கண்டுபிடித்து, தண்டனை அளிக்கவேண்டும் என்பதற்காக இந்தப் பிரச்னை குறித்து தீரவிசாரித்து, நடவடிக்கை எடுக்கவேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஏப்ரலில் இருந்து தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டை அரசுத் துறை, பொதுத் துறை நிறுவனங்கள், மற்றும் நுகர்வோருக்கு விநியோகம் செய்ய முகவர்களாக தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) மத்திய அரசு சிமெண்ட் கட்டுப்பாட்டு அலுவலரால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் சிமெண்டை சாலை வழியாக தமிழ் நாட்டில் இருந்து கேரள மாநிலத்தில் பல பகுதிகளுக்குக் கொண்டு செல்ல போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களை தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அமர்த்தியுள்ளது. சென்னையில் உள்ள பிராந்திய சிமெண்ட் கட்டுப்பாட்டு அலுவலர் கொச்சி வளர்ச்சித் திட்டக் குழுமத்திற்கு (கிரேடர் கொச்சின் டெவலப்மென்ட் அதாரிட்டி) தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படுகிற மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் உற்பத்தி செய்யப்படுகிற 3,860 டன் அளவுள்ள சிமெண்டை விநியோகம் செய்ய இரண்டு அதிகாரப் பத்திரங்களை அனுப்பியுள்ளார். அதன் விவரம் பின் வருமாறு :

9-6-81 தேதிய வெளியீட்டாணை—ரிலீஸ் ஆர்டர் நெ. 45—
2,860 டன்.

18-6-81 தேதிய வெளியீட்டாணை—ரிலீஸ் ஆர்டர் நெ. 57—
1,000 டன்.

மேற்படி வெளியீட்டாணை எண் 45-ன்படி தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 860 டன் இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட், 1481 ஜூலை மற்றும் ஆகஸ்ட் திங்களிலும், ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட 953 டன் சிமெண்டும் 8-11-81-லிருந்து 18-2-82 வரையிலும் போக்குவரத்து ஒப்பந்தக் காரர்கள் மூலம், கொச்சித் வளர்ச்சி திட்டக் குழுமத்திற்கு

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் வினியோகம் செய்தது. வெளி யீடாணை எண் 57-ன்படி தூத்துக்குடி துறைமுகத்தில இறக்குமதி செய்யப்பட்ட 970 டன் சிமெண்ட் 22-12-81-லிருந்து 7-2-82 வரையில் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் மூலம் கொச்சி வளர்ச்சித் திட்டக் குழுமத்திற்கு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் வினியோகம் செய்துள்ளது.

கேரள மாநிலத்தில் வெளியிடப்பட்டுள்ள 1-3-82 மற்றும் 3-3-82 நாளிட்ட ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' 'இந்து' நாளிதழ்களில் கொச்சிவளர்ச்சித் திட்டக்குழுமத்திற்கு அனுப்பப்பட்ட சிமெண்டில் கணி மான அளவு கிடைக்கவில்லை என்றும், அவைகளில் முறை கேடுகள் நிகழ்ந்துள்ளது எனவும் மேற்படி குழுமம் ஐயுறுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செய்தி கிடைத்த வுடன் ஆலங்குளம் மற்றும் தூத்துக்குடி அலுவலகங்களிலுள்ள கொச்சி வளர்ச்சித் திட்டக் குழுமத்திற்கு சிமெண்டு விநியோகம் செய்தது சம்பந்தமான எல்லா ஆவணங்களையும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் வரவழைத்தது. கொச்சி வளர்ச்சித் திட்ட குழுமத்திற்கு அந்த குழுமத்திற்குரிய சிமெண்டை சாலை வழியாக விநியோகம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள முகவர்கள் சிமெண்டு சேர்க்கப்பட வேண்டிய முகவரிதாரராகிய கொச்சி வளர்ச்சித் திட்டக் குழுமம் வழங்கிய அலுவலக முத்திரையுடன் ஒப்பம் அளித்த, பெற்றுக் கொண்டதற்கான சான்றிதழ்களை அனுப்பிவைத்துள்ளன.

(முற்பகல் 10-30)

மேற்படி சிமெண்டு சேர்க்கப்பட வேண்டிய முகவரிதாரர் அளித்துள்ள பெற்றுக்கொண்டதற்கான சான்றிதழ்களிலிருந்து முகவரிதாரருக்கு அனுப்பப்பட்ட சிமெண்ட் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களிலுள்ள சோதனைச் சாவடிகளைக் கடந்து சென்றுள்ளது என்றும் முகவரிதாரர் அளித்த பெற்றுக்கொண்ட தற்கான சான்றிதழ்களில் முகவரிதாரர் அலுவலகத்தின் பணி யாளர்கள் ஒப்பம் இட்டுள்ளார் என்பதும் முகவரிதாரரின் அலுவல முத்திரை பதிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வந்தது. கொச்சி வளர்ச்சித் திட்டக்குழுமத்திற்கு அனுப்பப்பட்ட சிமெண்டு அந்த குழுமத்திற்கு கிடைக்கவில்லை என்பது பற்றிய புகார் சம்பந்தமாக புலனாய்வு செய்யும்படி தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தை கேரள மாநிலம், எர்ணாகுளத்தைச் சேர்ந்த காவல் துறை அதிகாரிகள் குழு 4-3 82 அன்று அழைத்தது. காவல்துறை குழு கேட்ட விவரங்களை தமிழ்நாடு சிமெண்டு நிறுவன அதிகாரிகள் 5-3 82 அன்று கொடுத்தனர்.

காவல் துறைக் குழு புலனாய்வு செய்தபோது கொச்சி வளர்ச்சித் திட்ட குழுமத்தின் முகவரி அச்சிடப்பட்ட பேலிக் கடிதத்தை ஆதாரமாகக் கொண்டு பிராந்திய சிமெண்டு கட்டுப் பாட்டு அலுவலர் 18-6-81 நாளிட்ட அதிகாரப் பத்திர எண் 57-ல் 1000 டன் சிமெண்டை விநியோகம் செய்ய ஆணை பிறப்பித் துள்ளது தெரிய வந்தது. எனினும் மேற்படி சிமெண்டை விநியோகம் செய்வதற்காக தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம்



பெற்றுள்ள அதிகாரப் பத்திரம் சென்னையிலுள்ள மைய அரசு பிராந்திய சிமெண்டு கட்டுப்பாட்டு அலுவலர் (ரீஜினல் சிமின்டு கன்ட்ரோலர்) அனுப்பிய ஒன்றாகும். எனவே தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் அந்த அதிகாரப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதாக கருதப்படுகிறது.

கொச்சி வளர்ச்சித் திட்ட குழுமத்திற்கான மேற்படி அதிகாரப் பத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு ரூ. 7,55,650 செலுத்தப் பட்டுள்ளது. செலுத்தப்பட்ட தொகைகள் எல்லாம் கொச்சி வளர்ச்சித் திட்ட குழுமத்தின் நிதியிலிருந்து பெறப்படவில்லை என்பதும் ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலையில் 10-11-81 மற்றும் 3-12-81 அன்று செலுத்தப்பட்ட ரூ. 2,84,466 கொச்சி வளர்ச்சித் திட்ட குழுமத்தின் நிதியிலிருந்து பெறப்படவில்லை என்பதும் ரூ. 2,64,477.50-க்காக 20-1-82 நாளிட்ட உண்டி (டிமான்ட் டிராப்ட்) எண் 597451 உடன் அனுப்பப்பட்ட கொச்சி வளர்ச்சித்திட்ட குழுமத்தின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத்தில் ''சவுத்ராஜா ஸ்ரீட்ஸ்'' என்று எழுதப்பட்டுள்ளது. இதை இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள கொச்சி வளர்ச்சித் திட்டக் குழுமத்தின் பணியாளரான திரு. அபுபக்கர் என்பவர் எழுதியுள்ளார் என்பதும் புலனாய்வின்போது தெரிய வந்தது. நாளிதழ்களிலிருந்து மேற்படி நபர் ஏற்கெனவே எதிர்பார்ப்பு பிணையம் (ஆண்டிசிபேட்டட் பெயில்) பெற்றுள்ளார் என்று தெரிகிறது.

முகவரிதாரராகிய கொச்சி வளர்ச்சித் திட்டக் குழுமத்தின் சிமெண்டை பெற்றுக்கொண்டதற்கான சான்றிதழ்களை ஆய்வு செய்தபோது எல்லா சான்றிதழ்களிலும் மேற்படி நிறுவனத்தின் பணியாளர்கள் ஒப்பம் இட்டிருக்கிறார்கள் என்பதும் அலுவலக முத்திரை பதித்திருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 1981 ஜூலை மற்றும் ஆகஸ்டு திங்களில் அதிகாரப்பத்திர எண் 45-ன்படி விநியோகம் செய்யப்பட்ட 860 டன் இறக்குமதி சிமெண்டில் 570 டன் சிமின்டு கொச்சி வளர்ச்சித் திட்ட குழுமத்தால் பெறப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 290 டன் சிமெண்ட் மேற்படி குழுமத்தால் பெறப்பட வில்லை என்பதும் மேற்படி அதிகாரப்பத்திரப்படி 8-11-81 அன்றி லிருந்து 18-2-82 வரை ஆலங்குளம் சிமெண்ட் ஆலையிலிருந்து விநியோகம் செய்யப்பட்ட 953 டன் சிமின்டில் 333 டன் சிமெண்டு மட்டுமே மேற்படி குழுமத்தால் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 620 டன் சிமெண்டு அந்த குழுமத்தால் பெறப்பட வில்லை என்பதும் அதிகாரப் பத்திரம் 57-ன்படி 22-12-81-லிருந்து 7-2-82 வரை தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து விநியோகம் செய்யப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட 970 டன் அளவிலான சிமெண்டில் 170 டன் சிமெண்ட் மட்டுமே மேற்படி குழுமத்தினால் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 800 டன் சிமெண்டை அக்குழுமம் பெறவில்லை என்பது தெரிகிறது.

கொச்சி வளர்ச்சித் திட்டக் குழுமத்தால் சிமெண்டு பெறப்படவில்லை என்ற செய்தி கிடைத்தவுடன் தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் சம்பந்தப்பட்ட முகவர்களை சஸ்பெண்ட் செய்துள்ளது. தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து சச்சரவுக்குரிய இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டை சாலை வழியில் விநியோகம் செய்வதற்காகக் கொண்டு சென்ற நான்கு போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள், அதைப்போல ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் இருந்து நான்கு போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் ஆக 8 பேர்கள் மூலம் சரக்குகள் அனுப்பப்படுவதை தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் உடனடியாக நிறுத்தி வைத்துள்ளது.

அதைப்போன்று கேரள மாநில அரசின் காவல்துறையும் நம்முடைய காவல் துறையும் வழக்குகளைப் பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேற்படி விவரங்களிலிருந்து தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து ஆலங்குளம் சிமெண்ட் ஆலையிலிருந்து கொச்சி வளர்ச்சிக் குழுமத்திற்கு சிமெண்ட் அனுப்பப்பட்டபோது நடைபெற்ற தவறுகளுக்கு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் எந்தவிதத்திலும் பொறுப்பாளி அல்ல என்பது புலனாகிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் பேசுகின்ற போது தமிழகத்திலே சாதாரணமான ஏழை எளியவர்களுக்கு மாட்டுக் கொட்டகைகள் கட்டுவதற்குக் கூட சிமெண்ட் கிடைக்கவில்லை என்றும் அதைப்போல தமிழகத்திலிருந்து பெருமளவில் சிமெண்ட் அனுப்பப்பட்டதில் தவறுகள் நடந்திருக்கின்றன என்றும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஏதோ அவர்கள் சொல்கிறபோது ஏதோ நமக்கு ஒதுக்கப்பட்ட சிமெண்டை நமது மாநில அரசு அனுப்பியது போலவும் அதனாலே ஏழை எளியவர்களுக்கு சிமெண்ட் போதிய அளவுக்குக் கிடைக்காமல் பாதிக்கப்பட்டது போலவும் அந்த வகையிலே தவறுகள் நடந்திருப்பது போலவும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். சுருக்கமாகச் சொன்னால் சிமெண்ட் ஒதுக்குவது ரீஜினல் சிமெண்ட் கண்ட்ரோலர். ஒதுக்கப்பட்டது கிராண்ட் கொச்சின் டெவலப்மெண்ட் அதாரிட்டிக்கு. அதனைக் கொண்டு போகின்ற அல்லது ஏற்றிச் செல்கின்ற அந்த வேலையை மட்டும்தான் டேன்சம் நிறுவனம் செய்தது. கொண்டு போன ஏஜெண்ட்ஸ் பற்றி எல்லாம் ஆய்வுக்குப் பின்னர்தான் தெரியவரும். அதாவது ஃபார்வர்டிங் ஏஜெண்ட், லாரி காண்ட்ராக்ட்ஸ் அங்கே தான் கொண்டுபோய் சேர்த்திருக்கிறார்களா அப்படிச் சேர்த்ததற்குப் பிறகு அங்கேயுள்ள அந்த நிறுவனத்திலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் அங்கிருந்து கடத்திச் சென்றிருக்கிறார்களா என்பதெல்லாம் ஆய்வுக்குப் பின்னாலே தான் தெரியவரும். இதிலே நம்முடைய இலாக்காவைப் பொறுத்தவரையிலோ அல்லது டேன்சம் நிறுவனத்தைப் பொறுத்தவரையிலோ எத்தவிதமான தவறுகளும் நிகழ்வதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. இங்கிருந்து கொண்டுபோன அந்த சிமெண்ட் மூட்டைகளை அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சம்பந்தப்பட்டு அதாவது அபூபக்கர் என்பவருடன் சேர்ந்து மற்ற அதிகாரிகள் அங்கே இருந்து எடுத்துச் சென்றிருக்கிறார்களா என்பதெல்லாம் ஆய்வுக்குப் பிறகுதான் தெரியவரும்.



மேலும் இங்கிருந்து அங்கே அனுப்பியதைப் பொறுத்தவரையிலே நமக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை. பணம் எல்லாம் வந்து விட்டது. டிமாண்ட் டிராஃப்ட் அனுப்பப்பட்டிருக்கின்றது. எனவே அனுப்பப்பட்ட மூட்டைகளைப் பொறுத்தவரையிலே பணம் வந்து சேர்ந்திருக்கின்றது. லாரிகளிலே கொண்டு போனதற்குப் பிறகு பெற்றுக்கொண்டதற்கான ரசீது வந்திருக்கின்றது. அதிலே அந்த நிறுவனத்தினுடைய அதிகாரிகளின் கையொப்பம் இருக்கின்றது. அந்த நிறுவனத்தினுடைய முத்திரை வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே அவற்றை எல்லாம் ஆய்வு செய்த பிறகு அதிகாரப்பூர்வமாக நல்ல நம்பிக்கையோடு இங்கே இருந்து அனுப்பப்பட்டிருக்கின்றது. இதிலே தவறு நடந்திருப்பது கேரளாவிலே உள்ள மாநில அரசுக்குச் சொந்தமான அந்த கிராண்ட் கொச்சின் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி நிறுவனத்திலே. அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள் மத்திய அரசு ஒதுக்கிய அந்த சிமெண்டைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து எடுத்துச் செல்வதில் தவறுகள் நடந்ததிருப்பதாகத் தெரிய வருகின்றது. அதை அந்த மாநிலத்தின் காவல் துறையினர் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் நம்மைப் பொறுத்தவரையிலே நம்முடைய ஃபார்வர்டிங் ஏஜெண்ட்ஸ் அதாவது லாரி காண்ட்ராக்டர்களுக்கு இதிலே ஏதாவது தொடர்பு இருக்கின்றதா என்பதைக் கண்டறிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தற்காலிகமாக உரிமங்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இதுதான் இருக்கின்ற நிலைமை. மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்கள் கூட இதைத்தான் சொன்னார்கள். விலையேற்றத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். இதற்கும் மாநில அரசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. விலையினை மத்திய அரசுதான் நிர்ணயிக்கும் என்பது அவர்களுக்கும் கூட தெரிந்த விவகாரம்தான். இந்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## (4) கவன ஈர்ப்புகள்.

### (அ) ஒடடேரி—கொளப்பாக்கம் நெடுஞ்சாலை மூடப்பெறுவது.

திரு. கெ. சொக்கலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் பகுதியில் வண்டலூரில் மிருகக் காட்சி சாலை வருவதை முன்னிட்டு ஒட்டேரியிலிருந்து கொளப்பாக்கம் வரை உள்ள நெடுஞ்சாலை மூடப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு அரசு ரூ. 3 கோடி மதிப்பீட்டில் வண்டலூரில் விலங்ககம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. முதற் கட்ட வேலைகளுக்காக வண்டலூர் விலங்ககத்தில் பல வேலைகளைச் செய்ய ரூ. 105 இலட்சங்கள் செலவிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2. முதற்கட்ட திட்ட பணிகளின் துவக்க வேலைகள் அனைத்தும் முடிந்து எல்லா வேலைகளும் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

3. வண்டலூர் விலங்ககத்தின் தென் எல்லை ஓரமாக வண்டலூர் — கேளம்பாக்கம் சாலை செல்கிறது பொருட்கள் ஏற்றிச் செல்லும் ஊர்திகள் பயண ஊர்திகள் ஆகியவற்றின் இரைச்சல் மற்றும் புகை அசுத்தம் இவைகள் விலங்ககத்திலுள்ள மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் ஆரோக்கியத்திற்கு அதிகம் கேடு விளைவிக்கும். தற்போது பார்க் டவுனிலுள்ள மிருக காட்சி சாலையினை வண்டலூருக்கு மாற்றுவதற்கான பல காரணங்களில் முக்கியமான ஒன்று இரைச்சலையும் புகை அசுத்தத்தையும் தவிர்ப்பதே. ஆகவே, தற்போதுள்ள வண்டலூர் கொளப்பாக்கம் சாலையை கொளப்பாக்கம் வரை விலங்ககம் ஆரம்பிக்கும் முன்பே மூடப்பட வேண்டியதாகும்.

4 மாற்றுச் சாலை அமைப்பதினை பரிசீலனை செய்ததில் தற்போதுள்ள பெருங்களத்தூர், சதானந்தபுரம், அளப்பாக்கம் ஆகிய கிராமங்களை இணைக்கும் பயண ஊர்தி சாலை சிறந்த தென்று தெரிய வந்தது. மேலும் தற்போதைய வண்டலூர்—கேளப்பாக்கம் சாலையில் அளபாக்கம், நெடுங்குன்றம் மற்றும் கொளப்பாக்கம் கிராமங்களை இணைத்து ஒரு மண்சாலை அமைந்துள்ளது.

5 இச்சாலையை மேம்படுத்துவது கீழ் குறிப்பிட்ட காரணங்களால் தற்போதைய வண்டலூர்—கேளம்பாக்கம் சாலையைவிட சிறந்ததென்று அரசு கருதியது.

(அ) தற்போதைய வண்டலூர்—கேளம்பாக்கம் சாலையை விட மாற்று பாதை தூர அளவில் சற்று குறைவானது.

(ஆ) தற்போதைய வண்ட லூர்-கேளம்பாக்கம் சாலையானது எந்த கிராமத்நின் வழியாகவும் செல்லாமல் வண்டலூர் வழியாகச் செல்லும் போது முதலில் வருவது கொளப்பாக்கம் கிராமம் தான். மாற்றுப் பாதை அமைப்பதால் அந்த சாலை சதானந்தபுரம், அளப்பாக்கம் மற்றும் நெடுங்குன்றம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி பல கிராமங்கள் வழியாக செல்வதாக அமைக்கப்படுகிறது.



6 மாற்றுச் சாலை அமைக்கும் வகையில் தற்போதிய வண்டலூர் கேளம்பாக்கம் சாலை கொளப்பாக்கம் வரை விலங்ககத்திற்குரியதென்றாலும், விலங்ககம் திறக்கப்படும் வரை பொது மக்கள் மற்றும் வாகனங்கள் தற்போதைய சாலையினை உபயோகிக்க அனுமதி கொடுக்கப்படல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. புதுய மாற்று சாலை பெருங்களத்தூர் கேளம்பாக்கம் வழியில் சதானந்தபுரம், அளப்பாக்கம் மற்றும் நெடுங்குன்றம் ஆகிய கிராமங்களை இணைத்து செல்வதால் புதிய பாதை அமைப்பதற்கு ரூ. 11 இலட்சங்கள் அரசு ஆணை எண் 1204 வனம் மற்றும் மீன் துறை நாள் 17—9—80—ல் ஒப்புதல் அளித்துள்ளது. 29—10—81 தேதியிட்ட வனம் மற்றும் மீன் துறை அரசாணை எண். 1266—ல் சாலை அமைப்பு பணிக்கான மூலப்பொருட்களின் விலை அதிகமானதால் மேற்படி பணிக்கு ரூ. 17.20 இலட்சம் திருத்தப்பட்ட செலவினம் ஒப்பளிக்கப்பட்டது.

7 கேளம்பாக்கம் ஊமைஞ்சேரி, ரத்தினமங்கலம், கண்டிகை, கீரப்பாக்கம் மற்றும் நல்லாம்பாக்கம் கிராமமக்கள் மாற்று சாலை அமைப்பதினால் உள்ள சங்கடங்களை எடுத்துக்கூறி தற்போதையசாலை மூடப்பட்டால் அதற்குப் பக்கத்திலேயே ஜி. எஸ். டி. சாலையை இணைக்கும் சாலை ஒன்று அமைக்கப்பட வேண்டுமென நேரிலும் மனு மூலமாகவும் கோரியுள்ளனர். அரசு இதனை கவனத்துடன் பரிசீலித்து பொது மக்கள் வேண்டுகோளுக்கிணங்க இன்னொரு மாற்று சாலை அமைப்பது நல்லது என்று கருதியுள்ளது. இது குறித்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

8 மாற்றுச் சாலை எந்த வழியாக அமைத்தால் பொது மக்களுக்கு பாதகம் விளைவிக்காமல் இருக்கும் என்று அரசு தீவிரமாக வருவாய்த் துறையுடனும் மற்றும் நெடுஞ்சாலை ஊரக பணித் துறையுடன் கலந்து தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறது. அதுவரையில் தற்போதைய வண்டலூர் கேளம்பாக்கம் சாலை மூடப்படாது; பொது மக்கள் உபயோகத்தில் இருக்கும்.

திரு. கெ. சொக்கலிங்கம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கையை நான் வாசித்துப் பார்த்தேன். அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அந்தப் பகுதிக்கு வந்திருந்த போது பெருங்களத்தூர் ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற் சாலைப் பக்கத்திலிருக்கிற அந்தச் சாலையிலிருந்து நெடுங்குன்றம் வழியாக கொளப்பாக்கம் செல்லும் சாலையை விரிவுபடுத்துவதாக அங்கே சொல்லி இருக்கிறார். அந்தப் பகுதியிலே வாழ்கின்ற பொதுமக்கள் குறிப்பாக கொளப்பாக்கம், ரத்தினமங்கலம், கண்டிகை, ஊமைஞ்சேரி இப்படி 16 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் போக்குவரத்து சரியில்லை என்று கூறி அமைச்சரிடத்திலே நேரடியாக மனு கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. கெ. சொக்கலிங்கம்] [1982 மார்ச் 17

அவர் மாற்றுச் சாலை அமைப்பதாக வாக்குறுதியும் கொடுத்தார். ஆனால் இதுவரையில் அந்த மாற்றுச் சாலை அமைக்கப்படவில்லை. நாங்கள் கேட்பது, இந்தச் சாலை காட்டாங்கொளத்தூர் ஊன்றியத்தில் அடங்கியிருப்பதால், செங்கல்பட்டில் இருக்கும் தாலுக்கா ஆபீஸ், கோர்ட், மற்றும் பல அலுவலகங்களுக்குச் செல்ல, ஜி. எஸ். டி. சாலை வழியாக கிரிசென்ட் பள்ளிக்கூடம் அருகாமையில் திரீ ஸ்டார் பாட்டிலிங் கம்பெனி வழியாக அமைக்க வேண்டும் என்று அங்கேயுள்ள பொதுமக்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அமைச்சர் அவர்களும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அதற்காக நன்றி. ஆனாலும் (மணியடிக்கப் பெற்றது).

(முற்பகல் 10.40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நன்றி, உரையாக நீண்டுக் கொண்டிருக்கக்கூடாது. கேள்வியாக கேளுங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் முன்பே நேரிலேயே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப்பகுதி மக்களுடைய வேண்டுகோளும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த அறிக்கையிலேயே அந்த விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. "மாற்றுச் சாலை எந்த வழியாக அமைத்தால் பொது மக்களுக்கு பாதகம் விளைவிக்காமல் இருக்கும் என்று அரசு தீவிரமாக வருவாய்த் துறையுடனும் மற்றும் நெடுஞ்சாலை ஊரக பணித் துறையுடனும் கலந்து தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது" என்று இதிலேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ, அல்லது அந்தப் பகுதி மக்களோ அச்சம் கொள்ளத் தேவையில்லை. அவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல், எந்த அளவுக்கு செய்தால் மக்களுக்கு நன்மை பயக்கமுடியுமோ அந்த அடிப்படையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வாக்குறுதி கொடுத்ததல்லாமல் இப்போதும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நன்றி, அந்தத் திட்டமதிப்பீட்டில் 17.20 இலட்சம் ரூபாய் செலவில் அந்தச் சாலை அமைக்கப்படும் என்று இந்த அறிக்கையில் போட்டிருக்கிறது. அது மட்டும் அல்ல, எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மக்கள் 3 கிலோ மீட்டர் சாலையைத்தான் கேட்கிறார்கள். அவர்கள் கேட்கும் 3 கிலோ மீட்டர் சாலையை விட்டு விட்டு, 9 கிலோ மீட்டர் அளவில் சாலை போடுவது அவசியம் தானா? 3 கிலோ மீட்டர் போட்டால் அரசுக்கு செலவும் மிச்சமாகும் பொதுமக்களுக்கும் அதிகமாக பாதிப்பு இருக்காது. ஆகவே, 3 கிலோ மீட்டர் சாலையை, மக்களுக்கு பாதுகாப்பாகவும்.... (மணியடிக்கப் பெற்றது) அரசாங்கத்திற்கு செலவு குறைக்கப்படும் என்ற வகையிலும், அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா என்று அறியவிரும்புகிறேன்?



1982 மார்ச் 17]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த கருத்தை ஒட்டித்தான் அரசு தீவிரமாக பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறது.

(ஆ) சேலத்தில் சிமெண்டில் கலப்படம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலத்தில் கருங்கல் பொடி தயாரித்து அதை சிமெண்டில் கலப்படம் செய்து அதை வினியோகம் செய்தவர் சமீபத்தில் கைது செய்யப்பட்டதால் சிமெண்ட் உபயோகிப்பவர்கள் மத்தியில் எழுந்துள்ள அவதி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

7-1-1982 அன்று நிலவாரப்பட்டி கிராமத்தை சேர்ந்த பொது மக்களிடமிருந்து தொலைபேசி மூலம் வந்த தகவலின் பேரில் சேலம் வட்ட விநியோக அலுவலர் கிராமத்திற்குச் சென்று விசாரணை நடத்தியதில் சேலத்தைச் சேர்ந்த முனிராஜ் என்பவர் கருங்கல் பொடியை சிமெண்ட் பைகளில் கட்டி சிமெண்ட் என விற்க முயற்சி செய்ததாகவும் இதன் தொடர்ச்சியாக கோபால் மற்றும் பழனிசாமி என்ற இரண்டு நபர்க்கு 26 மூட்டைகளை ஒவ்வொன்றும் ரூ. 50 வீதம் விற்பனை செய்து விட்டதாகவும் தெரிந்தது. இதற்கிடையில் உள்ளூர் பொது மக்கள் எழுப்பிய சந்தேகத்தின் விளைவாக இந்த மூட்டைகள் யாவும் உண்மையான சிமெண்ட் அல்ல என்றும் அதற்கு மாறாக இவை போலி சிமெண்ட் என்றும் தெரியவந்ததால் பழனிசாமிக்கு மட்டும் சிமெண்ட் மூட்டைகளுக்குப் பெறப்பட்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு சிமெண்ட்டை விற்ற நபர்கள் ஓடிவிட்டதாகவும் பொது மக்கள் இவர்களை விரட்டியதில் பெருமாள் என்ற ஒரு நபர் மட்டும் சிக்கியதாகவும் தெரிந்தது. பெருமாளை விசாரித்ததில் சேலம் லைன்மெட்டைச் சேர்ந்த முனிராஜ் என்பவர்தான் இந்த சிமெண்ட் மூட்டைகளைத் தயாரிப்பவர் என்றும் இவரிடம் பெருமாள் கூலிவேலை செய்வதாகவும் சம்பவத்தன்று முனிராஜ் மற்றும் பெருமாள் ஆகியவர்களுடன் மற்ற இரண்டு ஆண்களும் டெம்போவில் வந்ததாகவும் தெரிய வந்தது. வட்ட விநியோக அலுவலரின் தணிக்கையின் போது பெருமாள் மட்டுமே இருந்தார். ஆகையால் அவரையும், சிமெண்ட் மூட்டைகள், அவற்றை ஏற்றி வந்த டெம்போ, ஆகியவற்றையும் முறைப்படி கைப்பற்றி மேல் நடவடிக்கைக்காக மல்லூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

2 இந்த வழக்கை மல்லூர் காவல் இ.பி.கோ. 420 மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் சட்ட பிரிவுகள் 7 (1) (எ) (11) ஆகியவற்றின் கீழ் வழக்கு ஒன்று பதியப்பட்டுள்ளது. அத்துடன் பெருமாள் என்பவரையும் கைது செய்து சேலம் முதல் வகுப்பு இணை நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். இந்த சிமெண்ட்டை தயாரிப்பவரும் உரிமையாளருமான முனிராஜ் என்பவரும் மற்ற இரண்டு நபர்களும் தலைமறைவாகி விட்டதாலும் அவர்களது சரியான விவரங்கள் தெரியாததாலும் அவர்களை காவல்துறையினர் தேடி வருகின்றனர். மாதிரி சிமெண்ட் எடுத்து பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

3 இந்த ஒரு சம்பவத்தைத் தவிர இம்மாவட்டத்தில் இது போன்ற சம்பவங்கள் வேறு எதுவும் நிகழவில்லை. பொது மக்களிடம் இதைப்போன்ற பீதி எதுவும் இல்லை எனலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலப்பட சிமெண்ட் விற்ற கூலியாள் தான் கைது செய்யப்பட்டுள்ளார். சிமெண்ட் கலப்படம் செய்தவர் சிக்கவில்லை என்ற காரணத்தால், கலப்படம் செய்த அந்த நபரின் போட்டோவை பத்திரிகைகளில், டெலிவிஷன், சினிமா ஸ்லைடுகள் போன்றவற்றின் மூலம் வெளியிட்டு, அவரைப் பிடித்துக் கொடுப்பவருக்கு 5009 பரிசு தரப்படும் என்ற வகையில் அறிவிப்புச் செய்து, அவசியமானால் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்ய அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காவல் துறையினர் நிர்வாகத் திறமையும், வேலையில் புகழும் பெற்றவர்கள், எனவே குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சேலத்தில் கருங்கல் பொடி வேறு சில உபயோகத்திற்காக பெரிய பெரிய தொழிற்சாலைகளில்; அதிகஅளவில் தயார் செய்யப்படுகிறது.

சிமென்டில் கலப்படம் செய்வதற்கு இந்தக் கருங்கல் பொடி ஒரு வாய்ப்பாக இருப்பதால் அப்படி கருங்கல் பொடி தயாரிப்பதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: சிமெண்டில் கருங்கல் பொடியை கலப்பதற்கு யாருக்கும் அரசு அனுமதி கொடுப்பதில்லை. தவறு செய்பவர்களைக் கவனிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.



(5). அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 210—வது விதியின் கீழ் 1982–83ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) பொதுக்கணக்குக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 222–வது விதியின் கீழ், 1982–83 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(இ) பொது நிறுவனங்கள் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 235–வது விதியின் கீழ் 1982–83 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(6). அறிவிப்பு.

**மதிப்பீட்டுக்குழு, பொதுக்கணக்குக்குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி), பொதுக் கணக்குக் குழு, (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி), பொது நிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி), ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிககவேண்டும். வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி புதன் கிழமை காலை 9-00 மணிக்கும் பகல் 1-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(7). வரவுசெலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 31 — பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.**

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 31 —பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 41,10,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. சு. பாலன்:** துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வட்டி இல்லா கடனை ரூ. 2,000 உள்பட்ட தொகையினை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை பற்றி நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மானியக் கோரிக்கை எண். 31 — பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,10,31,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கே. எம். தங்கமணி:** துணைத் தலைவரவர்களே: திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி — மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் எரையானூர் ஆதி திராவிடர் காலனியில் உள்ள மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கி அங்கு தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தருவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 31— பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,10,31,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கே. ஆர். சுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர் பின்தங்கிய மாணவ–மாணவிகளுக்குத் தங்கும் விடுதிகள் அதிகமாக கட்டுவதற்கும் போதிய அளவிற்கு உபகார சம்பளம் வழங்குவதற்கும் வசதி செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண்: 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,10,31,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

**திரு. ஏ. டி. கருப்பையா:** துணைத் தலைவரவர்களே, பழங்குடியினருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,10,31,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.

(முற்பகல் 10-50)

**(ஆ) கோரிக்கை எண் 44.**

**எழுதுபொருள் அச்சுத் துறை.**

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 44 — எழுது பொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,21,26,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

வெட்டுத் தீர்மானங்கள்:

**திரு. த. வேணுகோபால்:** துணைத் தலைவரவர்களே,

"அரசு அச்சகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பது பற்றி விவாதிக்க"

நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 44 – எழுது பொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,21,26,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. இல. பலராமன்:** துணைத் தலைவரவர்களே,

"வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் எழுதுப் பொருள் அச்சுத் துறை அமைக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"மானியக் கோரிக்கை எண் 44 – எழுது பொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,2126,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் மானியக் கோரிக்கைகளின் மீது கொள்கை விளக்கக் குறிப்புகள் * அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே கண்டிருக்கக்கூடிய குறிப்புகளை இந்த அவையில் நான் ஆற்றிய உரையாக பேரவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இவற்றை அவைக் குறிப்பேட்டிலே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்குப் பின்பு, அரசின் சார்பிலே என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன்.

**திரு. கெ. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆதிதிராவிடர் நலத் துறை மானியத்தின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் ஆதி திராவிடர் நல மானியம் குறித்து நமது ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்கள் இங்கே சில புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அரிசனங்கள் என்பதற்குப் திலாக ஆதிதிராவிடர்கள் என்று பெயரை மாற்றியிருக்கிறார்கள், அதற்காக நான் நன்றி செலுத்திக் கொள்கிறேன். ஆனால்

* 204—293–ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.



பெயரை மாற்றுவதினாலே பல பிரச்னைகள் தீர்ந்து விடாது. இந்த அரசாங்கம் பெயரை மாற்றுவதில் மிக சாதுரியமாக இருக்கிறது என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, அரிசனங்களுக்காக இந்த நிதிநிலையிலே ரூ. 21 கோடி ஒதுக்கியிருப்பதை நான் பார்த்தேன். இது எந்த வகையிலும் போதாது என்பதை நான் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், ஆதிதிராவிடர் நலத்திலே குறிப்பாக கல்விக்கு 1982–83–லே இந்த அறிக்கையில் 2,117.58 இலட்சம் செலவிடப் படும் என்ற குறிப்பு இருக்கிறது. முதலில் கல்வியை எடுத்துக் கொண்டால்; ஆதிதிராவிடர்கள் கல்வியில் போதிய வளர்ச்சி அடையவில்லை. காரணம், குறிப்பாக கல்விக்காக ஒதுக்கப் பட்டிருக்கின்ற பணங்கள், அந்த உதவித் தொகைகள் குறிப்பாக பள்ளிக்கூடங்களில் குறித்த நேரத்தில் கிடைப்பதில்லை. பள்ளிக் கூடங்களிலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை சென்ற ஆண்டுகூட கேட்டேன். மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்களும் இதைப்பற்றிக் கேட்டார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், எந்தப் பள்ளிக்கூடத்தை எடுத்துக் கொண்டாலும், அவர்களால் வழங்கப்படுகின்ற நிதி குறித்த நேரத்தில் கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கூடமாக இருந்தாலும், அல்லது அரிசன பள்ளியாக இருந்தாலும் அந்தப் பள்ளிகளில் குறித்த காலத்தில் உதவித் தொகை கொடுக்காதது வருந்தத்தக்க விஷயமாகும்.

அது மட்டுமல்ல. இங்கே கட்டிடத்திற்காக நிதி நிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், அரிசனப் பள்ளிக்கூட கட்டிடங்கள் எதுவும் ஒழுங்காக இல்லை. ஏதோ பழங்காலத்திலே கட்டப்பட்ட சத்திரங்களைப் போல் அந்தப் பள்ளிகள் எல்லாம் காட்சியளிக்கின்றன. எந்தப் பள்ளிக் கூடத்திலும் கட்டிட வசதி போதுமானதாக இல்லை என்று நான் 78-லே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதே குறிப்பிட்டிருக் கிறேன். அரிசன பள்ளிக்கூடங்களை பழுது பார்க்கவேண்டும் என்று நான் ஒரு கடிதம் எழுதிய நேரத்திலேகூட, பணமில்லை என்று அதிகாரிகளிடமிருந்து பதில் வருகிறது. நாங்கள் என்ன செய்வோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள், அப்படிப்பட்ட கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்குகூட பணமில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. எனவே, இப்படிப் பட்ட பள்ளிக் கட்டிடங்கள் சீரமைக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல. புதியதாக பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் போன்ற அளவிலாவது, ஓரளவுக்கு அந்த அளவாவது இந்தக் கட்டிடங் களைக் கட்டித் தரவேண்டும்; பழைய கட்டிடங்கள் புதுப்பிக்கப் பட்டு சீரமைக்கப்பட வேண்டும் என்று உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாணவர் இல்லங்கள். இந்த 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 432.10 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த நிதியும் போதாது. இங்கே அடிக்கடி கூறுவது போல், யானைப் பசிக்கு சோளப் பொறி போட்டதுபோல்

இருக்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, இந்த இல்லங்களுக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இல்லங்கள் வளர்ந்து வரக் கூடிய சமுதாயத்திற்குப் போதுமானதாக இல்லை. தவிர, புதிதாக இட நெருக்கடியும் அதிகமாக இருக்கிறது. எந்தப் பள்ளிக்கூடத் திற்குச் சென்றாலும், எந்த இல்லங்களுக்குச் சென்றாலும், எந்த விடுதிகளுக்குச் சென்றாலும் அங்கே இடமில்லை என்ற குறை இப்போது இருக்கிறது; இன்றையதினம் இது தமிழகத்திலே வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த இல்லங்களை விரிவுபடுத்த, இதற்காக கூடுதலான நிதியை இந்த அரசு ஒதுக்கவேண்டும் என்று தலைவர் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உதவி களை வழங்குகிறார்கள். அப்படி உதவி வழங்குவது ஒருபக்கம் இருந்தாலும், அதற்கான பணத்தைப் பெறுவதில், அவர்கள் படுகின்ற சங்கடங்கள் மிக அதிகம்; மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உதாரணமாக, ரூ.500 சிறு தொழிலுக்காக கடன் பெற வேண்டுமென்றால், அவர்கள் ரூ. 300 அதற்காக செலவிட வேண்டி இருக்கிறது. இதிலே இவ்வளவு பெரிய சங்கடங்களெல்லாம் இருக்கிறது. ஒரு பாரத்தை பூர்த்தி செய்து, மாவட்ட அரிசன நலத் துறை அதிகாரிடத்திலே இருந்து, இங்கே சென்னையிலே இருக்கின்ற அரிசன நலத் துறை இயக்குநருக்கு அனுப்புகின்ற வரையில் நடந்து சென்று, ஓராண்டு, இரண்டாண்டுகள் அந்தக் கடனைப் பெறுகின்ற நிலைமைகள் இன்றையதினம் இருக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ. 2,000 பெற்று, அவர்கள் சிறு கடைகள் வைத்து நடத்துவதற்காக கொடுக்கப்படுகிறது. கடந்த சில ஆண்டு காலமாக, சென்னை, மற்றும் கிராமப் பகுதிகளிலே ஏற்பட்ட இயற்கை சீற்றத்தின் காரணமாக அவர்கள் வைத்திருந்த கடைகள் எல்லாம் பாதிக்கப் பட்டுள்ளது. எனவே, இந்த ரூ.2,000 கடனை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இயற்கை சீற்றம் ஏற்பட்டு, எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். விவசாயிகள் எல்லாம்கூட பாதிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில் இவர்களால் கடனை திருப்பிக் கட்ட முடியவில்லை. யார் யார் கடன்களையோ ரத்து செய்கின்ற இந்த சர்க்கார், இந்த அரிசனங்கள் வாங்கிய கடனையும் ரத்து செய்யவேண்டும் என்று தலைவர் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் சொத்து ஜாமீன் இருந்தால்தான் கடன் வழங்கப்படும் என்று சொல்வதால், மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, சொத்து ஜாமீன் கொடுக்க வேண்டுமென்பதையும் ரத்து செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் சரியான முறை யிலே செலவழிக்கப்படுகின்றதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். தற்போது சட்டப் பேரவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல குழுக் கள் உள்ளன. இந்தச் சட்டப் பேரவையில் எந்தெந்த துறைக்கோ,



பல குழுக்களை அமைத்திருக்கிறார்கள். ஆனால், இதற் கென்று ஒரு குழு அமைக்கப்படவில்லை. எனவே, இதற்கென்று ஒரு குழுவை இந்த அரசு அமைத்தால், இந்தத் துறையிலே வரக்கூடிய பிரச்சனைகளையும், எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும். மற்றும் ஆதி திராவிடர்கள் பிரச்னைகளையும் அறிந்து. வாதாடுவதற்கும், அதிலே கவனம் செலுத்துவதற்கும், வசதியாக இருக்கும். எனவே, அப்படிப்பட்ட ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகள் காப்பகம், இந்த குழந்தைகள் காப் பகத்தைப் பற்றி நிதி நிலை அறிக்கையிலே நிதி அமைச்சர் அவர்களும் பேசினார்கள். பொதுவாக இன்றையதினம் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 100 கோடி ரூபாய் செலவழிக்கப் படும் என்று சொன்னார்கள் ஆனால் அது செலவழிக்கப் படுமா இல்லையா என்பதைப் பார்க்கும் போது, அவர் நிறுத்தி வைத்திருப்பதாகவும் இங்கே கூறப்பட்டிருக்கிறது. நான் அதிலே உள்ள ஒரு சில சம்பவங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த குழந்தைகள் காப்பகம் எந்த முறையிலே நடத்தப்பட இருக் கின்றது? அதற்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? இந்த அரிசன குழந்தைகளுக்கும், அந்தக் குழந்தைகளுக்கும் ஏதா வது வேறுபாடு உண்டா? அல்லது அத்துடன் இதுவும் இணைக்கப் படுமா? ஆனால், முதல்வர் அவர்கள் சொன்னார்கள்—தாய்மார்கள் அந்த குழந்தைகள் காப்பகத்தை கவனிப்பார்கள், தாய்மார்கள் அதிலே அமர்த்தப்படுவார்கள், என்றார்கள். அப்படியானால், அரிசன தாய்மார்கள் அதிலே அமர்த்தப்படுவார்களா? எந்தவிதத் திலே அரிசன தாய்மார்கள் அந்தக் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிப்பார்கள்? இப்போதுகூட. கேர் நிறுவனம் மூலம் உணவு களை அளிக்கிறார்கள். குறிப்பாக, எந்த கிராமத்தில் இருக்கிற தோ, அந்தக் கிராமத்திற்குத் தான் உணவு அளிப்பார்கள். குறிப்பாக அரிசன சமுதாயத்தினருக்கு அவர்களால் உணவு அளிக்கப்படுகிறது. அதுவும் யாராவது வந்து கேட்டால்தான், ஒருசில குழந்தைகளுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. கிராமங் களைக் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை; பொதுவாக உள்ளதைச் சொல்கிறேன். ஆனால், இந்த உணவுப் பங்கீட்டைப் பரவலாகத் தரவேண்டும். அந்த அடிப்படையில், இந்த உணவுப் பங்கீடு முறையாக, நியாயமான முறையில் நடைபெற வேண்டும் என்று நான் தலைவர் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

இந்த குழந்தைகள் காப்பகத்திற்கு ரூ. 5.77 இலட்சம் ஒதுக்க பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், இந்த குழந்தைகள் காப்பகத்தைப் பற்றி ஏற்கனவே நிதி நிலை அறிக்கையில் 2 முதல் 10 வயது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள். 3 முதல் 5 வயது என்றிருக்கிறது. இதற்குள் வேறுபாடு என்றால் எண்ணங்கள் ஏற்படுவதை பார்க்கும்போது, வேடிக்கையாகவும், விந்தையாகவும் இருக்கிறது. அதிலே 2 முதல் 10 வயது என்றும், இதிலே 3 முதல் 5 வயது என்று சொல்கிறார்கள்.

[திரு. கெ. சொக்கலிங்கம்] [1982 மார்ச் 17

இவைகளை எப்படி ஒட்டு மொத்தமாக செய்வீர்கள் என்பதை நாங்கள் பொறுத்து தான் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த திட்டங்கள் நடைமுறையிலே செயல்படுத்தப்படும் என்றால், நீங்கள் எத்தனையோ அறிவிப்புகளை கொடுத்திருக்கிறீர்கள். பெயர் மாற்றுவதிலே வல்லவர்கள் நீங்கள். கருணை இல்லத்தை அன்பு இல்லமாக மாற்றியவர்கள் நீங்கள். பல பெயர்களை மாற்றினீர்கள், அரிசனங்கள் ஆதிதிராவிடர்கள் என்று வந்தது. ஆகவே இவைகள் எல்லாம் செவல்படுமா என்றால், நிச்சயமாக முடியாது.

முற்பகல் (11–00)

அடுத்தது வீடு கட்டும் திட்டம். அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. கிராமங்களிலே இருந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து ஒட்டு மொத்தமாக அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள், அரிசனங்களுக்கு வீடுகளை தனியாக கட்டுகிறார்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அவர்களுக்கு அக்கிரகாரத்தில் கட்டிக்கொடுப்போம் என்று சொன்னீர்கள். எந்த அக்கிரகாரத்தில் அவர்களுக்கு கட்டிக் கொடுக்கிறீர்கள்? அறிவிப்போடு நின்று விட்டதே அது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

4,000 ரூபாய் ஒரு நபருக்கு தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் செங்கல் வாங்கவே 2,000 ரூபாய் ஆகிறது. நான் சென்னையிலே இருக்கிற விலையை சொல்லவில்லை, கிராமங்களிலே இருக்கிற நாட்டுச் செங்கலை தான் சொல்கிறேன். 1000 செங்கல் இன்றைக்கு 200 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது, என்று சொன்னால் எத்தனை செங்கலை வாங்கி அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வீடு கட்டிக் கொள்ள முடியும். ஆகவே கொடுக்கப்படும் பணத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சென்ற சட்ட மன்றக் கூட்டத்திலே கூட நானே சொல்லியிருக்கிறேன். ஆகவே இந்த பணத்தை கூடுதலாக தரவேண்டும்.

அடுத்தது இந்த வீட்டு மனைப்பட்டா. என்னுடைய பகுதியிலே ஒரு நபருக்கு கூட தரப்படவில்லை. நானும் பல தடவை சொல்லியிருக்கிறேன். வீட்டு மனைப்பட்டா அங்கே இருக்கிற அரிசன குடிமக்களுக்கு ஒரு இடத்திலேயும் இன்றைய தினம் கொடுக்கப்படவில்லை. அனைவரும் வீட்டு மனையே இல்லாமல் இருப்பதால் அவர்களால் வீட்டை எப்படி கட்டிக் கொள்ள முடியும் என்பதை பார்க்க வேண்டும். அரசுக்கு சொந்தமாக இருக்கிற நிலங்களை அரிசன குடிமக்களுக்கு வீட்டு மனை போட்டு வழங்கவேண்டுமென்று தலைவர் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 17] [திரு. கெ. சொக்கலிங்கம்]

அடுத்து அரிசனங்கள் அர்ச்சகராகிற சட்டம். உங்களுக்கு நன்றாகத் தெரியும். திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் அரிசன மக்கள் அறங்காவலராக, அர்ச்சராக வரவேண்டுமென்றும் அவர்கள் வரமுடியாத நிலை இருப்பதாக சொன்னார்கள். பல நேரங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஐ. ஏ. எஸ்.—ஆக வரலாம், அமைச்சராகவும் வரலாம். ஆனால அர்ச்சகராக மட்டும் வரமுடியாது என்று சொன்னார்கள். அந்த சட்டம் உச்ச நீதிமன்றத்திலே முடங்கி கிடக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அரிசனங்கள் அர்ச்சகர் ஆகிற இந்த சட்டத்தை, முடங்கி இருப்பதை வாதிட்டு கொண்டு வரக்கூடாதா, அதை நிறைவேற்றக் கூடாதா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன், (மணியடிக்கப் பெற்றது) தலைவர் அவர்கள் இன்னும் ஒரே ஒரு விஷயம். என்னுடைய தொகுதியை பற்றியது கூறி முடித்து விடுகிறேன். ஆகவே இந்த சட்டத்தை இந்த அரசு அமல் படுத்த முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே குடிதண்ணீர் பிரச்னை. குறிப்பாக பாலூர், ஒரகடம் போன்ற இடங்களில் மேல்நிலை தொட்டி சரியாக இயங்கவில்லை. பாலூரில் அரிசன இலாக்கா மூலம் செய்து கொடுத்த அந்த மேல்நிலைத் தொட்டி ஆறு ஆண்டு காலமாக இயங்காமல் இருக்கிறது. அவற்றை சீர் செய்து கொடுக்க அரசு அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. தனபால் : மாண்புமிகு பேரவைக் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் நலத்துறையினுடைய மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைய தினம் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற புரட்சித்தலைவர் அவர்கள் தமிழகத்திலே சமதர்ம சமுதாயம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக பல்வேறு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் சமதர்ம சமுதாயத்தைக் காண்பதற்காக கீழ்த்தட்டிலே இருக்கின்ற மக்களை மேலுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்தோடு, புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு புரட்சித திட்டங்களை, இந்தத் துறையிலே நடைமுறைப் படுத்தி சிறப்புக் கூட்டு அமைப்புத் திட்டம், பழங்குடியினர் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள மக்களை எல்லாம் மேலுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற முறையிலே அவர்கள் வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு ஏற்றவாறு இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு புரட்சித்தலைவர் அவர்கள் இந்தத் துறைக்கு தாராள மனப்பான்மையோடு நிதி ஒதுக்கீடு செய்து படிப்படியாக நிதியாதாரங்களை அதிகரித்து வந்திருக்கிறார்கள். 1977–78 ஆம் ஆண்டிலே இந்தத் துறைக்கு 15.95 கோடியும் 1978-79-இல் 16.94 கோடியும், 1979-80 ஆம் ஆண்டிலே 19.41 கோடியும்

[திரு. ப. தனபால்] [1982 மார்ச் 17

1980-81 ஆம் ஆண்டு 24.68 கோடியும், 1981–82 ஆம் ஆண்டிலே 27.02 கோடியும் இந்த ஆண்டு, 1982-83 ஆம் ஆண்டு 42.85 அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் படிப்படியாக நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி இந்தத் துறையினுடைய மக்களுடைய நல்வாழ்வுக்காக திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இந்த வருடம் 42.85 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதற்கு ஆதிதிராவிடர் பழங்குடியினருக்காக உயர்ந்த தொகையை ஒதுக்கியிருப்பதற்காக என்னுடைய மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையிலே 40 சதவீதம் வளர்ச்சித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிற வகையிலே காரியங்களைச் செய்கிற நிலை இருப்பதைப் பார்க்கிறபோது புரட்சித் தலைவர் அவர்கள் இந்த சமுதாய மக்களிடம் எவ்வளவு பற்று வைத்திருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இந்தத் துறையின் மூலமாக ஒதுக்கப்படுகின்ற பணம் அந்த நலிவுற்ற மக்கள் கல்வியிலே வளர்ந்தால் தான் மற்றவர்களோடு போட்டியிட முடியும் என்ற நிலைமையிலே அதற்காக பயன்படுத்தப்படுகிறது. அந்த வகையிலே தான் ஒதுக்கப்பட்ட பணத்திலே 50 சதவீதம் கல்வி வளர்ச்சித் திட்டத்திற்குச் செலவிடப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டு, 1982–83 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்திலே 50 சதவீதம் கல்வியின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படுவது மிகவும் பாராட்டுக்குரியது. இப்படிச் சீரோடும் சிறப்போடும் செயல்படுகின்ற இந்தத் திட்டங்களையெல்லாம் மத்தியிலிருந்து இங்கே வருகின்ற குழுக்களும் மற்ற மாநிலங்களிலிருந்து வருகின்ற குழுக்களும் தமிழகத்திலே அரிசன நலத்துறை நன்றாகச் செயல்படுகின்றது என்று பாராட்டி விட்டுப் போய் இருக்கிறார்கள். மகாராட்டிராவிலிருந்து வந்த மகாராஷ்டிரா லெஜிஸ்லேச்சர் கமிட்டி தமிழ்நாட்டிலே நடைமுறைப்படுத்தப்படுகிற இந்தத் திட்டங்களையெல்லாம் பாராட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். திரு. நாயக், பார்லிமெண்டரி மைனாரிட்டி கமிட்டி இங்கே வந்திருந்தபோது தமிழ்நாட்டிலே நடைமுறைப் படுத்தப்படுகிற இந்தத் திட்டங்களை முழுமனதோடு பாராட்டி விட்டுச் சென்றார்கள். திரு. ராஜ்மல்லு அவர்கள் ஷெட்யூல்டு காஸ்ட்ஸ் அண்ட் ஷெட்யூல்டு டிரைப்ஸ் கமிட்டி 'இட் இஸ் புல் ஆப் ஆதிதிராவிடர் ஆக்டிவிடிஸ்' என்று சொல்லி தமிழ்நாட்டிலே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்று மனதாரப் பாராட்டி விட்டுப் போயிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலிருந்து இங்கே வந்து பார்த்து பாராட்டக் கூடிய முறையிலே ஆதிதிராவிடர் நலத்துறை புரட்சித் தலைவர் அரசிலே சீரோடும் செம்மையாகவும் நடத்தப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வளவு சீரோடும் சிறப்போடும் செயல்படுகின்ற இந்தத் துறை மேலும் சிறப்போடு செயல்படுவதற்கு ஒரு சில ஆலோசனைகளைச் சொல்வது என்



1982 மார்ச் 17] [திரு. ப. தனபால்]

பழங்குடி மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்ய சட்டம் கொண்டு வந்தாலும் உயர்நீதி மன்றத்திலே அது தள்ளப்பட்டது என்று சொல்லப்பட்டாலும் 1894 ஆம் ஆண்டு நிலங்கள் கையகப்படுத்தும் சட்டத்தை வைத்துக்கொண்டே பல நல்ல காரியங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய தி. மு. க. உறுப்பினர் சொன்னார். நில ஆர்ஜிதம் செய்வதற்கு விரைவாகச் செயல்படவில்லை என்று சொன்னார்கள். நான் பணிவோடு புள்ளி விவரத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1967 முதல் 1977 வரையில் உள்ள பத்தாண்டுக் காலத்திலே நில ஆர்ஜிதத்திற்காக 323.32 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 1,10,712 பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள்.

ஆனால், புரட்சித் தலைவருடைய அரசு அமைக்கப்பட்டதற்குப் பின்னாலே, 1977-லேயிருந்து 1982 வரை 4 ஆண்டுக் காலத்திற்குள் 419.65 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, இதுவரை, 1,15,256 வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறோம் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 10 ஆண்டுக் காலத்திலே நடைபெற்ற காரியத்தை இந்த 4 ஆண்டுக்காலத்திலே மாத்திரம் புரட்சித் தலைவர் அரசு செய்திருக்கிறது என்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11.10.)

இதைச் சொல்கின்ற நேரத்திலே, அப்படிப்பட்ட நில ஆர்ஜிதம் செய்கின்ற சட்டங்கள் நீதிமன்றத்திற்குப் போய் தடைகள் வாங்கப்பட்டு விடுவதாலே, பல நேரங்களிலே காரியங்கள் நின்று போய் விடுகின்றன. அந்தக் காரியங்களை விரைவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், உயர் நீதிமன்றத்திலே நில ஆர்ஜித வழக்குகளை விசாரிப்பதற்கென்று தனி நீதி மன்றங்களை அரசாங்கம் உருவாக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை விசாரிக்க நீதி மன்றம் இருப்பதைப் போல் இப்படிப்பட்ட நிலஆர்ஜித சட்டங்களுக்குத் தடை வாங்குகின்ற அந்த வழக்குகளைக் கொண்டு செல்கின்றவர்களை விசாரித்து உடனடியாக பைசல் செய்வதற்கு உயர்நீதி மன்றத்திலே ஒரு தனி நீதிமன்ற அமைப்பினை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே புரட்சித் தலைவரைப் பணிவன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களிலே வீடு கட்டுகிற திட்டம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னாலும், கிராம வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் இன்றைக்குப் புரட்சித் தலைவர் அரசு ரூ. 4,000 ஒரு வீட்டுக்குத் தருகிறது. அந்த ரூ. 4000/-லே, ரூ. 1,000-ஐ அரசு மானியமாக வழங்குகிறது. அந்தப் பணம் இப்பொழுதிருக்கிற சூழ் நிலையிலே சற்றும் போதாமல் இருக்கிற காரணத்தாலே, அதை ரூ. 7,000, ரூ. 8,000 அளவுக்கு உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிற அதே நேரத்திலே

மானியத் தொகையை ரூ. 2,000 அளவுக்கு ரூ. 3,000 அளவுக்கு உயர்த்தித் தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வேண்டி, விரும்பி கேட்டுக் கொள்வது தங்களுக்கு கார் ஷெட் அல்ல. அதற்குமாறாக வெயிலிலேயிருந்து மறைவிடம் பெறுவதற்கும், மழையிலிருந்து தப்பிக்கவும் ஒழுகாத வீடுகள் தான் வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கிராம வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இன்னும் அதிகப்படியான பணம் ஒதுக்கி, நம்முடைய தன்னிறைவுத் திட்டம் செயல்படுவதைப் போல, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித்தரும் பணிக்காக, ரூ. 7,000 ரூ. 8,000 என்று ஒவ்வொரு வீட்டிற்கும் ஒதுக்கி, ஒரு நிதி ஆண்டிலே, இரண்டு மாவட்டம், 3 மாவட்டங்கள் என்கின்ற அளவுக்கு எடுத்து, தன்னிறைவுத் திட்டத்தைப் போல நடத்துகிற வகையிலே வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்ற காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புரட்சித் தலைவர் அரசு ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்காக, கலப்பு மணமானவர்களுக்கு எம். பி. பி. எஸ்.ஸிலே 6 இடங்களை ஒதுக்கி ஜாதி மதமற்ற சமுதாயம் உருவாவதற்கு, இந்திய துணைக் கண்டத்திலேயே முன்னோடியாக விளங்க வழிகோலியிருக்கிறது. அதே போல், அரசுப் பணிகளிலே, அரசு நிறுவனங்களிலே பணிக்குச் சேர்கிற பொழுது, இப்படிப்பட்ட கலப்பு மணம் செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதற்கு மேலாக, அரசு இப்பொழுது புதிய ஆணை ஒன்றை ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக வெளியிட்டிருக்கிறது. புதிய பள்ளிக்கூடங்கள் கட்ட வேண்டுமா? கால்நடை மருத்துவ மனைகள் கட்ட வேண்டுமா? ரேஷன் கடைகள் கொண்டு வர வேண்டுமா? பால்வாடி நிலையங்களை உருவாக்க வேண்டுமா? இப்படி, எது புதிதாக அரசாங்கத்தின் சார்பாக உருவாக்கப்பட்டாலும் அது தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிற குடியிருப்புப் பகுதியிலே அமைக்கப்பட வேண்டுமென்ற புதிய விதிகளைக் கொண்டு வநதிருக்கிறீர்கள். இது ஜாதி மதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு மேலும் உதவும் என்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



கன்சல்டேடிவ் கமிட்டி உருவாக்குவதன் மூலம் விரிவான காரியங்களை உருவாக்க அது பல்வேறு வகையிலும் உதவும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்தத் துறையினுடைய பணிகள் விரைந்து நடைபெற, நான் இந்த நேரத்திலே பணிவன்போடு புரட்சித் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன், இந்தத் துறைக்கு நியமிக்கப்படுகிற தாசில்தார்கள் வயதானவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அந்தத் துறையிலே பணியாற்றி வருகின்றவர்கள், ஆர். டி. ஓ. வாக வரக்கூடியவர்களாக இருப்பதால், அவர்களைத் தாசில்தார்களாக நியமித்தால், அவர்கள் எப்பொழுது தங்களுக்கு ஆர். டி. ஓ. பதவி கிடைக்கும், டிவிஷன கிடைக்கும் என்று கணக்கிடுவதிலேயே இருப்பதனாலே, அப்படிப்பட்ட பணிகள் சுணக்கம் அடைகிற நிலையிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட துறைகளிலேயெல்லாம் இளைஞர்களை நியமிக்கும் வகையிலே, புதிதாக ஐ. ஏ. எஸ். பயிற்சி பெற்று வரும் அதிகாரிகளை இரண்டு மூன்றாண்டுக் காலம் இந்தத் துறையில் கண்டிப்பாகப் பணியாற்ற வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதைப் போல் புதிதாக வரும் ஆர். டி. ஓக்கள் இப்படிப்பட்ட துறைகளிலே கண்டிப்பாக பணியாற்ற வேண்டுமென்று சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் புதிதாக வருகின்றவர்கள் இலட்சியப் பிடிப்போடு வேகமாகவும், விரைவாகவும் இப்படிப்பட்ட துறைகளில், இப்படிப்பட்ட வேலைகளில் பணியாற்ற வாய்ப்பு வசதிகள் ஏற்படும்.

தாழ்த்தப்பட்ட இனத்தில் அருந்ததி என்ற ஒரு இனம் இருக்கிறது. அந்த இனம் தாழ்த்தப்பட்ட இனத்திலேயே தாழ்த்தப்பட்ட இனமாக இருக்கிறது. அந்த இனம் முன்னேற வேண்டுமென்றால் தமிழ்நாட்டிலுள்ள அருந்ததி பெருங்குடி மக்களுக்குத் தனி திட்டத்தைக் கொண்டு வந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் என்னென்ன சலுகைகளை இந்தத் துறையின் மூலமாகச் செய்கிறது, இதனால் தங்களுக்கு என்னென்ன நன்மைகள் கிடைக்கின்றன என்பதை பற்றிக் கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் தெரியாமல் இருக்கிறார்கள். இவற்றைப்பற்றியெல்லாம் அவர்கள் நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு வசதியாக திரைப்படம் மூலமாக, இந்தத் துறை என்னென்ன காரியங்களை, என்னென்ன சலுகைகளைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கிறது என்று எடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் அவற்றைப் போட்டுக் காட்டுவதன் மூலம் விவரம் தெரியாதவர்கள் விவரங்களைத் தெரிந்துக் கொள்வதற்கும், அநதச் சமுதாயம் விரைவாக முன்னேறுவதற்கும் வாய்ப்பு வசதிகள் ஏற்படும் என்பதை இந்நேரதத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவரவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்; அந்த மக்களுடைய வளர்ச்சியிலே ஆக்கம் கொண்டு பல்வேறு புதிய திட்டங்களை, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு கிராம அதிகாரிகளுக்கு 18 சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கினார்கள்

ஆனால் கிராம அதிகாரிகள் சம்பந்தமாக வழக்கு சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. அந்த வழக்கின் முடிவு எப்படியிருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தக் கிராம நிர்வாகத்திலே 18 சதவீதம் வாய்ப்பைப் புரட்சித் தலைவர் அரசியலே பெற இருக்கிறார்கள்.

பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலிலேயும் 18 சதவீதம் ஒதுக்கி இது வரையில் பஞ்சாயத்து ஒன்றியங்களில் பெருந்தலைவர்களாக வராதிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வருவதற்கு நல்ல சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

100 கோடி ரூபாய் சத்துணவுக்காக ஒதுக்குகின்ற திட்டத்தைக் கொண்டு வந்து தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தைகள் அதிகமாகப் பலன் பெறுகின்ற வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன.

இவ்வளவு சலுகைகளையெல்லாம் புரட்சித் தலைவரவர்கள் அளித்து இப்படிப்பட்ட சமுதாய மக்கள் முன்னேற்றம் அடைவதற்குக் கண்ணுறங்கருத்துமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கண்ணை இமை காப்பதைப்போல இன்றைய தினம் புரட்சித் தலைவரவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலம் ஒரு பொற்காலம் என்பதை நினைவு படுத்தி, This is a year of Scoeduled caste and Scheduled Tribles என்று சொல்லி. பேசவாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. பி. மொக்கையன் : மாண்புமிகு உதவி சபாநாயகரவர்களே, பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலனுக்கான இந்த மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்த தங்களுக்கு நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பிலேயும், என்னுடைய சார்பிலேயும் நன்றி கலந்த வணக்கத்தை மிகமிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டு வந்துள்ள பல முனைத் திட்டங்கள், கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு தொழில் போன்ற பல இனங்களில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்குச் சிறப்புக் கவனத்தின் கீழ் பயன் கிடைக்கும் வண்ணம் இந்த அரசு கொண்டு வந்திருப்பதை மிக மிக மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றேன்.



[முற்பகல் 11-30]

ஒரு அருந்ததியர் 10 பறி தைத்தால் போதும். ஒரு வெள்ளாமைக்கு ஒரு கலம் சம்சாரி தருவார். 10 பறி தைத்தால் ஒரு போகத்திற்கு 10 கலம் கிடைத்திருந்தது. வருடத்திலே 30 கலம் கிடைத்து அவனும் ஒரு சம்சாரியைப்போல 4 ஏக்கர் நிலம் வாங்கி வைத்து வாழ்ந்ததுபோல, நல்ல முறையிலே வாழ்ந்து கொண்டு வந்தார். ஆனால் இந்த எலக்ட்டிரிக் வந்தது. அதன் பிறகு அந்த வேலையை அவன் இழந்து விட்டான். திக்கு திசை இல்லாமல் ஒவ்வொரு தினமும், ஒவ்வொரு நகரத்திற்குச் சென்று ரயில்வே ஸ்டேஷனிலும், பஸ் ஸ்டான்டிலும் நின்று கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து போன தரம் இந்த சட்ட மன்றத்திலேயே நான் சொல்லி இருக்கிறேன். அன்புக்குரிய இந்த அரசாங்கம், ஏழைமக்கள் பால் அன்பு கொண்ட இந்த அரசாங்கம் தெருவிலே உட்கார்ந்திருக்கின்ற ரயில்வே ஸ்டேஷனிலே, பஸ் ஸ்டேன்டிலே வரக்கூடியவர்களுடைய காலையே பார்த்து, அவன் செருப்பில் ஒரு வார் அறுந்து போனால் அதைத் தைத்து கால் ரூபாய் சம்பாதிக்கும் இந்த அருந்ததியர் குடும்பங்களைக் காப்பாற்ற தயவு செய்து ஒரு திட்டத்தைத் தீட்டி அவர்கள் வாழ வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் தோல் தொழிலில் இப்போது பெரிய கம்பெனிகள் எல்லாம் வந்துவிட்டன. பாட்டா, கரோனா, பிளக்ஸ் போன்ற பெரிய கம்பெனிகள் இப்போது நவநாகரிகமான பொருள்களைத் தயாரித்து விற்கின்றார்கள். அதனால் இந்த அருந்ததியர்கள் செய்கின்ற தோல் தொழில் செல்லுபடியாகவில்லை. ஆகையினாலே கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அந்தக் கூட்டுறவு அமைப்பின் மூலமாக அந்த ஆதிதிராவிடர்களிலேயே மிக மிக தாழ்ந்து இருக்கின்ற அருந்ததியர்களைக் காப்பாற்றுவதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லை என்றால் அவர்கள் இன்னும் சீரழிந்து சின்னாப்பின்னப் படுவார்கள். அவர்கள் படிப்பில் மிகவும் தாழ்ந்து இருக்கிறார்கள். அந்தப் படிப்பில் அவர்கள் கவனம் செலுத்தும் வகையில் அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் ஆதிதிராவிட அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அதாவது தெருக்களிலே, பால்கடை, வெற்றிலைபாக்குக் கடை வைத்துக் கொண்டு அவர்கள் பெண்டாட்டி பிள்ளைகளை எல்லாம் தெருக்களிலேயே வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பங்க் அந்தந்த இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதைக் கட்டிக் கொடுத்துள்ளார்கள் என்று நான் இப்போது கேள்விப்படுகிறேன். அத்தனை நகரங்களிலும் இதைத் தாங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. மொக்கையன்] [1982 மார்ச் 17

றார்கள். தாழ்ந்த ஜாதிக்காரர்கள் இருக்கிறார்கள். இன்றும் அந்த அருந்ததியர்கள், குடும்பமார்கள் தண்ணீர் எடுக்கும் கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாத நிலை இருக்கின்றது. பானையை அவர்கள் வைத்து அதில் இறைத்து ஊற்றுகின்ற நிலைமைதான் இருக்கின்றது. உலகத்திலே உள்ள அனைத்து மக்களையும் தங்களுக்குச் சரிசமமாக நினைத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிற இந்தக் காலத்திலே அந்த ஆதி திராவிட மக்களுக்கு அப்பேர்பட்ட நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட மனப்பான்மை உடையவர்கள் வாழ்கின்ற ஊர்களுக்கு சர்க்கார் எந்தவிதமான நன்மையையும் செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரைப் பொறுத்த வரையிலும் ஆயிரக்கணக்கான அருந்ததியர்கள் நடைபாதையிலே அமர்ந்து கொண்டு இருக்கிறார்கள். வீடுகள் ஒதுக்கிக் கொடுப்பதிலே அந்த அருந்ததியர்களுக்கு ஒரு பர்சன்ட் கூட கொடுத்து இருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித்தான் எத்தனையோ பேர்கள் தெரிவித்தார்கள். தயவு செய்து அதைக் கவனத்தில் வைத்து, அந்த அருந்ததிய மக்களுக்கு வீடு ஒதுக்காமல் ஏன் புறக்கணிக்கிறீர்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஏழை மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற இந்த அரசாங்கம் இதையெல்லாம் உன்னிப்பாய் ஆராய்ந்து அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களில் வாழுகின்ற அரிஜனங்களுக்கு, குறிப்பாக என்னுடைய தொகுதியிலே, ராஜபாளையத்திலே முத்துமேடு என்ற ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே, நானே நேரிலேயே சென்று பார்த்தேன். அந்த இடத்தைப் பார்த்துவிட்டு சர்வே நெம்பர் எல்லாம் எழுதிக் கொடுத்துவிட்டு, அங்குள்ள அந்த இடங்களை அரிஜன மக்களுக்கு ஒதுக்கித்தர வேண்டுமென்று அதிகாரிகளை எல்லாம் நான் பார்த்தேன். இன்னும் அதைச் செய்யவில்லை. நான் சட்டசபைக்கு வந்து கிட்டத்தட்ட 2½ வருஷம் ஆகப் போகின்றது. இதை விரைவில் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே 25 இடங்களில் அரிஜன மக்கள் சுடுகாடு போவதற்கு ரோடு போடப்பட்டு இருக்கிறது. அதைப்போன்று தயவு செய்து இந்த அரசாங்கம் சுடுகாடுகள் எங்கெல்லாம் இருக்கிறதோ எங்கெல்லாம் அரிஜனங்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்கு அந்த ரோடுகளைப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், சம்சாரி, வேளாண்மை செய்கிறார். ஒரு பிரேதத்தை எடுத்துக் கொண்டு, கிட்டத்தட்ட 100 அல்லது 200 பேர்கள் அந்த வழியாகப் போகிறார்கள். அப்படி நடந்து போகிற நேரத்தில், அந்த சம்சாரிக்கு கோபம் வருமா, வராதா? அதனால் ஜாதிக் கலவரங்கள் ஏற்படுகின்றன. எனவே, சுடுகாடுகள் எங்கெல்லாம் தமிழகத்தில் இருக்கிறதோ, அங்கெல்லாம் ரோடு வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 17] [திரு. பி. மொக்கையன்]

இந்த அருந்ததி மக்கள் தோல் பதனிடும் வேலைகளை செய்து வருகிறார்கள். தோல் மூலம் செய்யப்படுகின்ற சாமான்களை செய்து கொண்டு இருக்கிறார்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு, இந்த அருந்ததி மக்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு அதைத்தவிர வேறு வேலைகள் தெரியாது.

பள்ளிக்கூடத்தில் இந்த அரிஜன் மக்களுக்கு நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும். கட்டாயம் படிக்கச் செய்ய வேண்டும். ஒரு கட்டாயத் திட்டத்தை வைத்து இந்த அரிஜன மக்களை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும். நீங்கள் 2 வயதிலிருந்து 10 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு ஒரு நல்ல திட்டத்தை தீட்டி, சத்துணவு, எப்படி நீங்கள் குழந்தைகளுக்குக் கொடுப்பதாக இருக்கிறீர்களோ, அப்படி இந்த அரிஜன மாணவர்களுக்கும் நீங்கள் தயவுசெய்து கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். அவர்களுக்கு வயிரார உணவு போட வேண்டும. அதை இதன் மூலமாகச் செய்தாலே மிகவும் நன்றாக இருக்கும் அரிஜன பிள்ளைகள் அத்தனை பேரும் ஏழைகளாக இருக்கின்றார்கள். அத்தனை பேர்களும் பள்ளிக்கூடம் போகின்றார்கள். பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற அத்தனை பிள்ளைகளுக்கும் நீங்கள் உணவு வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் நிச்சயமாக கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்படிச் செய்தால் அந்த மக்கள் எல்லாம் நிச்சயம் நன்றாகப் படிப்பார்கள் என்று பணிவன்போடு தெரிவித்துக் கொண்டு,

[முற்பகல் 11.30]

இத்தனை மாந் ருக்கு ஒரு கோவில் போதாது
சத்தியத் திருநாயகா முருகா சத்தியத் திருநாயகா
(இத்தனை..)

படைத்தாலும் உயிர்களுக்கு ஒருவீடு வீணில்
பணத்தாசை சிலருக்கு பலிபீடமே
படுத்தாலும் எழுந்தாலும் கண்முன்னே எதற்கு
பதவி பதவி என்றஒரு எண்ணமே. (இத்தனை..)

பாவிகள் பலருண்டு உன்படைப்பிலே முருகா
அப்பாவிகள் பலருண்டு உன்படைப்பிலே
கோவில் எதற்கு வைத்தாய் கோலமுருகா
வெறும் கோஷத்தில் என்ன பயன். (இத்தனை..)

தானென்ற அகங்காரம்
அழித்திடுவாய் செல்வம்
தமக்கென்று நினைப்போரை
ஒழித்திடுவாய்
நீதி நியாயங்கள் நிலைக்கட்டுமே
நல்ல நேர்மை மடைய இவ்வுலகம்
மதிக்கட்டுமே (இத்தனை..)

ஜெய்ஹிந்த்.

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அருமைச் சகோதரர் திரு. மொக்கையன் அவர்களுடைய பாட்டைக் கேட்டு எல்லோரும் ஆனந்தப்பட்டீர்கள். ஆனால் அவர் ஒன்றைச் சொன்னார். தான் என்கிற அகங்காரம் இருக்கிற வரையில் அந்தக் கொடுமையிலேயும் வாழ்வோ என்று நினைத்த எண்ணம்தான் அந்தக் கண்ணீர்ப் பாட்டிலும் அவர்களுடைய அவல நிலைமை வெளிப்பட்டது. இந்த நாட்டிலே வாழ்கிற கோடிக்கணக்கான மக்களுடைய அவல நிலைமையை அவர் மிகைப்படுத்திக் காட்டினாலும் அதுதான் உண்மை என்பதை அனைவரும் உணர்வார்கள் என்ற நம்பிக்கையில் இந்த மானியத்திலே பேசுவதற்கு பெருமைப்படுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் தலைமை)

கிட்டத்தட்ட 26 மாண்புமிகு உறுப்பினர்கள் 169 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த 169 வெட்டுத் தீர்மானங்களையும் நம் அரசாங்கம் நிறைவேற்ற நினைத்தாலே இந்த ஆண்டுக்கான கொடுக்கின்ற நிதி போதுமா இல்லையா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. ஆனால் எனக்கு முன்னால் பேசிய அருமைச் சகோதரர் இந்த அரசாங்கம் செய்த செயலை யாரும் மறுத்துச் சொல்லவில்லை. 1894ஆம் ஆண்டே இந்தச் சமுதாய மக்களுக்குச் செய்ய வேண்டுமென்று அன்றைய வெள்ளைக்கார அரசாங்கமே இந்த நிலைமையை உருவாக்கியது என்பதை யாரும் மறைக்க முடியாது. 1947-க்கு முன்பே இந்த மக்களுக்கு பள்ளிக்கூடத்தில் இடம், தங்கு தற்ற இடம், உத்தியோகத்தில் இடம் தரவேண்டுமென்று சொன்னதை சுதந்திரத்திலே பாடுபட்ட பெரியவர்களாலும் மறைக்க முடியவில்லை. என்றால் வேறு எவராலும் மறைக்க முடியாது. தாங்களே செய்தோம் என்று சொல்லாவிட்டாலும் தாங்கள் செய்ய முன் வருகிறோம் என்று சொல்வதற்காக நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இன்று எடுத்துக்கொள்கிற விஷயங்களில் முக்கியமாக 1980—81ம் ஆண்டிலே ஆதிதிராவிடர் மக்களுக்காக இரண்டாவது பக்கத்திலே சொல்கிற இடத்திலே 71.61 கோடி ரூபாய், 1981—82 ஆம் ஆண்டிலே 83.04 கோடி ரூபாய், 1982—83 ஆம் ஆண்டிலே 114.04 கோடி ரூபாய் என்று இந்த மக்களுக்காக செலவழிக்க அல்லது வளம்பெறும் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று குறிப்புள்ளது. அதைப் போலவே, பழங்குடி மக்களுக்கு 1980-81—லே ரூ. 345.25 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1981-82லே ரூ. 591.65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தொகையில் நிர்வாகச் செலவுக்காக எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது, அந்தச் சமுதாய மக்களின் வளர்ச்சிக்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்கிற விவரங்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அப்படி குறிப்பிட்டுக் காட்டியிருந்தால் அந்த மக்களுக்கு எவ்வளவு பணம் இதன் காரணமாகச் சென்றது என்பதை நம்மால் புரிந்து கொண்டு இருக்க முடியும். இந்த அறிக்கையின் மூன்றாவது பக்கத்தில் 'உயர் மட்டக் குழு' இந்த மக்களின் நலனைக் கண்காணிக்க அமைத்து இருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். அதன் தலைவர், தமிழகத்தின் முதலமைச்சர் என்றும், அதன் செயலாளராக, தலைமைச் செயலாளரோ அல்லது அந்த நலத்துறையைச் சேர்ந்த செயலாளரோ, என்பது இதிலே குறிப்பிடப்படவில்லை. அதன் செயலாளராக தலைமைச் செயலாளர் இருந்தாலும், அந்தத் துறையைச் சேர்ந்த செயலாளர் இருந்தாலும், அதைப் பற்றி கவலையில்லை. ஆனால் அந்தக் குழு எத்தனை தடவை கூடியது, என்னென்ன தீர்மானங்களைப் போட்டது, அதிலே எத்தனை வெற்றி பெற்றன, எத்தனை தோல்வி அடைந்தன, அதற்கான காரணம் என்ன என்பதை இதிலே குறிப்பிட்டு இருந்தால் உண்மையிலேயே அந்த மக்களின் நலனிலே அக்கறையுடன் அவர்கள் செயல்படுகிறார்கள் என்கிற எண்ணத்தை அது ஏற்படுத்துகின்ற வகையில் அமைந்து இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். நான் 2—10—1981-லே உண்ணாவிரதம் தொடர்ந்தபோது, இதைத்தான் குறிப்பிட்டுக் கேட்டேன். அதன்பிறகு நவம்பர் மாதத்திலே குழு கூடியது. ஆனால் இந்த நாள் வரையில் அந்தக் குழு அந்த மக்களுக்காக என்ன செய்தது என்று அறிய விரும்புகிறேன். மேலும், 18% ஒதுக்கீடு அரசாங்கத்திலே எந்தெந்தத் துறையிலே கொடுக்கப்பட்டுள்ளது, எந்தெந்தத் துறையிலே கொடுக்கப்படவில்லை, ஏன் கொடுக்கப்படவில்லை, அது பற்றி இந்தக் குறிப்பிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. அதை இதிலே குறிப்பிட்டு இருந்தால் நான் முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டியிருப்பேன், அமைச்சர் அவர்களையும் பாராட்டியிருப்பேன்.

என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். ஒரு 6 மாத காலத்திற்கு முன்பு, மத்திய அமைச்சர் ஒருவர் முன்னிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த ஆதித்திராவிடர் நலத்துறையை எடுத்துக் கொள்ளப்போவதாகச் சொன்னதாக செய்தி பார்த்தேன். அப்போது மிகவும் மகிழ்ச்சி கொண்டேன். காரணம், சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆனதற்குப் பிறகு, ஒரு நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்த மக்களின் நலனுக்காக அக்கறை கொண்டு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார்களே என்று மகிழ்ச்சி அடைந்தேன். அந்த மக்கள் மேல் அவர் கொண்டுள்ள அக்கறைக்கு அது சாட்சியாக அமைந்து இருக்கிறது என்று எண்ணினேன். ஆனால் இன்றைக்கு அவர் இங்கேயிருந்து இந்த மானியக்கோரிக்கை மீதான விவாதத்தைக் கேட்பதற்குக்கூட இயலாத நிலையில் வேறு அலுவல்களில் ஈடுபட்டுக்கொண்டு இருக்க நேரிட்டு இருக்கிறதே என்றும் எண்ணுகிறேன். அந்தத் துறைக்கு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பதைப்பற்

[திரு. எல். இளையபெருமாள்] [1982 மார்ச் 1?

எனக்கு கவலை இல்லை. அவர் அன்றைக்குச் சொன்ன வார்த்தை என்ன ஆயிற்று. நான் அதற்கும் கவலைப்படவில்லை. ஆனால் இன்றைக்கு அந்தத் துறைக்கு யார் அமைச்சராக இருந்தாலும் ஒரு சாதாரண விஷயத்தைக் கூட அவர்கள் நிறைவேற்றவில்லையே என்ற கவலை எனக்கு இருக்கிறது. இந்தத் துறையிலே ஒரு ஆலோசனைக் குழு, மாவட்ட ரீதியாக, மாநில ரீதியாக கடந்த இரண்டாண்டு காலமாக ஏன் போடப்படவில்லை. அப்படிப் போடுவதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது, அந்த மக்களின் பால் இரக்கம் இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தாலும், இந்த ஒரு சாதாரண விஷயத்தை கூடச் செய்யாமல் இருப்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது என்பதைச்சொல்லிக்கொள்கிறேன்.

கல்வித்துறையிலே அரசு செய்து இருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் கல்வித் துறையில் அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கும் நிலை இருந்தது. அப்படி உதவித் தொகை கொடுப்பதற்கு பதிலாக புத்தகமாக வழங்கலாம் என்று ஒரு நல்ல எண்ணத்தில் செய்தார்கள். ஆனால் அப்படி புத்தகம் கொடுப்பது கூட, இராமநாதபுரம் மாவட்டத்தில் சிங்கம் புணரியிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம், சிதம்பரம அருகிலும், வடாற்காடு மாவட்டத்தில் அரக்கோணம் தாலுக்காவிலும், கோயம்புத்தூர் ஜில்லாவில் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிற . நான் அறிந்த தகவல், இதிலே என்னவென்றால், நலத் துறை இல்லாமல், அந்த டிஸ்டிரிக்டில் உள்ள சீப் எடுகேஷனல் ஆபீசர், டிஸ்டிரிக்ட் எடுகேஷனல் ஆபீசர் மூலமாக அது கொடுக்கப்படுகிறது என்று தெரிகிறது. அந்தத் தகவல்படி பார்த்தாலும் இன்னும் 30 நாளைக்குள் அவர்கள் பரீட்சை எழுத வேண்டிய நிலையில் இருக்கிறபோது, இன்னும் புத்தகங்கள் கொடுக்கப்படவில்லை என்பது சரியானதாகத் தெரியவில்லை. கல்வித் துறையில் இருக்கிறவர்களோ, அல்லது அரசாங்கமோ இதிலே விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். நேற்று கூட கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே மானியக் கோரிக்கை மீது நடத்திய விவாதத்தின்போது அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இங்கே கேட்டால் நலத்துறை என்பது, அங்கே கேட்டால் கல்வித்துறை என்பது. இரண்டையினையும் கேட்டால் தொழிலாளர் நலத்துறை என்பது. இப்படி புட் பால் விளையாடுகிற தோழர் புட் பாலை எப்படி எடுத்து திசைக்கேற்றமாதிரி அடிக்கிறாரோ அதைப்போல இந்த மக்களுக்குச் செய்கிற சேவை என்ற பெயராலே, ஒவ்வொரு துறையாக மாற்றி மாற்றி சொல்லிக் கொண்டேயிருப்பீர்களேயானால், யார் தான் இதற்கு பொறுப்பாக முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க உரையிலே சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன். மேலும் இந்த பிள்ளைகளுக்கு, விளையாட்டிற்காக ஒவ்வொரு பிள்ளைக்கும் 2 ரூபாய் வீதம், இந்த விளையாட்டுச் சாதனங்கள் வாங்கக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைய விலைவாசி ஏற்றம் உங்களுக்குத் தெரியும். ஸ்போர்ட்ஸ் கூட்ஸ்கள் இன்றைக்கு என்னவிலை



1982 மார்ச் 17] [திரு. எல். இளையபெருமாள்]

என்று உங்களுக்குத் தெரியும். ஆகவே அதைவிடச் சற்று கூடுதலாக உயர்த்திக் கொடுப்பீர்களேயானால், அது அந்தப் பிள்ளைகளுக்கு நல்லது செய்ததாக இருக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

கல்வித் துறையிலே நல்ல பல லைப்ரரிகளை உண்டாக்குவதாக சொல்லியிருக்கிறீர்கள். கிட்டத்தட்ட 50-க்கும் மேலாக ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. 30 அல்ல 400-க்கு மேலே எலிமெண்டரி ஸ்கூல்கள் இருக்கலாம். நான் எலிமெண்டரி ஸ்கூலைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஹைஸ்கூலிலே எத்தனை இடங்களில் லைப்ரரிகள் வைத்திருக்கிறீர்கள் என்பதைப்பற்றி இந்த குறிப்பிலே எதுவும் காட்டவில்லை. ஆகவே இந்தக் குறிப்புகளிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஏதோ எழுத்து மூலமாக எதையாவது தரவேண்டும் என்ற வகையில் சொல்லியிருக்கிறீர்களே தவிர, உண்மையான நிலையை இதில் சொல்லவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

அடுத்து 3-வது பக்கத்திலே, குறிப்பு கொடுத்திருக்கிறீர்கள். குடி உரிமைகள் கண்காணிப்பு சட்டம் என்று. இது எப்படி சரியான தமிழாக்கம் என்று எனக்குப் புரியவில்லை; நான் புரிந்த தமிழிலே பாதுகாப்புச் சட்டம் என்று இருக்க வேண்டும். தெரிந்தோ தெரியாமலோ அப்படி போட்டுவிட்டார்கள் என்று அதை விட்டுவிட்டாலும் கூட, அது நடைமுறையிலேயே இல்லை. அவர்களுக்காக ஃபைளையிங் ஸ்பெஷல் ஸ்குவாடு என்று மாவட்ட ரீதியில் வைக்கப்பட்டிருக்கிற . அதிலே இருக்கிற சப்-இன்ஸ்பெக்டருக்கோ, சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கோ, வாகன வசதி இல்லை. ஒரு நாளைக்கு ஒரு ஊருக்குக்கூட போக முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

போலீசிலே டி. ஐ. ஜி லெவலில் போஸ்டுகளை போட்டிருக்கிறோம் என்று சொல்லிவிட்டால் போதாது. அங்கே உண்மையில் நடைமுறை வேலைகளைச் செய்கிற கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளுக்கு வாய்ப்பு இல்லை, வசதியில்லை. என்றால் எப்படி சட்டத்தை அமுல் செய்யப் போகிறீர்கள்.

என்னுடைய அருமை சகோதரர் மொக்கையன் அவர்கள் பேசுகிறபோது அருந்ததியைப் பற்றிச் சொன்னார்கள். உண்மை தான். அதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அவர்களை கொடுமைப்படுத்தியதை தடுப்பதற்காக என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறீர்கள். அவர்கள் தண்ணீர்கூட எடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு என்ன செய்தது. டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீசர் என்ன செய்தார். டிஸ்டிரிக்ட் ஆபிசிலே தாலுக்கா அலுவலகத்திலே என்ன செய்தார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கம்ப்ளெயின்ட்டுகள் என்னவாகியது. தென்னாற்காடு மாவட்டத்திலே மாபுடையூர் என்ற கிராமத்திலே வில்லேஜ்ஜிலே, விருத்தாசலம் தாலுக்காவிலே, கல்லூரியிலே பி. ஏ. படித்த மாணவன்,

கிணற்றிலே தண்ணீர் எடுக்கும்போது கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டான் என்கிறபோது அது குறித்து அவன் அங்கேயுள்ள போலீஸ் அதிகாரிகளிடம் சொல்லியும், ஒரு நடவடிக்கையும் இல்லை என்பதை பார்க்கும்போது எவ்வளவு வேதனையாக இருக்கிறது. சிலபேர் சந்தோஷப்படலாம். ஆதிதிராவிடர்கள் என்றால், அரிசனங்கள் எல்லாம், அவர்களுக்குள்ளேயே உட்பிரிவுகள் இருப்பதைப்பற்றி, அவர்கள் வேடிக்கையாக நினைக்கலாம்.

ஆனால் தீண்டாமை என்பது வேறு, உட்பிரிவுகள் என்பது வேறு. ஐயரும், ஐயங்காரும் வித்தியாசமாகத்தான் இருக்கிறார்கள். காஞ்சிபுரத்து முதலியாரும், ஆற்காடு முதலியாரும் வித்தியாசமாகத்தான் இருக்கிறார்கள். திருநெல்வேலி பிள்ளைமாரும், செங்கல்பட்டு பிள்ளைமாரும் வேறு வேறாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் தீண்டாமை என்பது வேறு விதம்.

அதேபோல பள்ளர், பறையர், அருந்ததி என்று வெவ்வேறாகச் சொன்னாலும் எங்களிடம் தீண்டாமையில்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்ள முடியும். ஒன்றாக உட்கார முடியும். மேலும் இதில் கருத்து வேறுபாடு இருக்குமானால், அதைத்தடுக்க, இந்தச் சட்டத்திலேயே இடம் இருக்கிறது. 1955 லே தீண்டாமை ஒழிப்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை இந்திய அரசாங்கம் கொண்டு வந்தது. 1976 லே மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் அல்லது குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. அதிலே ஏதாவது கேஸ்கள் எடுக்கப்பட்டதா? உங்களுக்கு உண்மையிலேயே ஜாதி ஒழிய வேண்டும், தீண்டாமை ஒழிய வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருந்தால், அப்படிப்பட்ட உட்பிரிவுகளுக்குள்ளே நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இந்தச் சட்டம் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களுக்காக மட்டும் வைக்கப்பட்ட சட்டம் அல்ல. உட்பிரிவுகளிலே, ஆதித்திராவிடர்களுக்கும் அரிசனங்களுக்கும் அல்லது பள்ளர், பறையர், சக்கிலி, வண்ணார், வள்ளுவர் போன்றவர்களுக்கும் இடையே பேதங்கள் வருமேயானால், இந்தச்சட்டத்தின் மூலம் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம். சட்டம் போட்டுவிட்டால் மட்டும் போதுமா அவைகளை ஒழுங்காக அமுல் செய்யவேண்டாமா?

அது மட்டும் அல்ல, கல்லூரிப் பிள்ளைகளுக்கு இந்தச் சமுதாயத்து கல்லூரிப் பிள்ளைகளுக்கு மைய அரசு மட்டும் தான் உதவித் தொகை கொடுக்கிறது. மாநில அரசு ஒரு ரூபாய்க்கூட கொடுக்கவில்லை. கேட்டால் அங்கே வருவாய் அதிகம் இங்கே இல்லை என்று சொல்வார்கள். அதைப் பற்றிக் கவலையில்லை. உங்களுடைய உதவித் தொகையாக ஏதாவது அந்தக் கல்லூரிப் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டாமா? உயர்நிலைப் பள்ளிப் பிள்ளைகளுக்கு கொடுக்கும் உதவித்தொகையையும் ஏஜன்டுகள் என்ற முறையில் கொடுக்கிறீர்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்





இப்படிப்பட்ட குறை வந்தபோது அரசே அதை எடுத்துக் கொண்டது. ஆனால் 67-க்கு பின்னால் அது நிறுத்தப்பட்டு விட்டது. கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கேயிருந்தாலும் நிச்சயமாக இதைக் கேட்பார் என்றே நினைக்கிறேன். அவர் கருணை உள்ளத்தோடு நிறைய விஷயங்களை என்னிடத்திலே சொல்லியிருக்கிறார். அதைச் செய்வார்கள் என்றும் நம்புகிறேன். அடுத்ததாக அருமை நண்பர், அருமைச் சகோதரர் மொக்கையன் சொன்னதைப் போல அருந்ததி சமுதாயத்தினரைப் பற்றிச் சொன்னதைப் போல, அவர்களுக்காக இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? அந்த செக்கிலியர்களுக்கு பண உதவி செய்வதற்கு பதிலாக ஊசியும் லேத்து இரும்பு அல்லது சுத்தியல் போன்ற கருவிகளையும் வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதைவிட அந்த சமுதாய மக்களை ஒன்று கூட்டி அவர்களுக்கென்று ஒரு அதிகாரியை வைத்து அவர்களிடம் அந்த உதவித் தொகையை கொடுத்து அவர்களுக்கு தொழில் கொடுக்கச் செய்யுங்கள். எங்களிடம் கொடுக்க வேண்டாம்.

ஏனென்றால் நாங்கள் ஏழைகள். பணத்திற்குச் சரியாக கணக்கு எழுதவில்லை என்ற நிலைமைகள் உண்டாகும். இதை நான் உணருகிறேன். ஆனால் உங்களுடைய தாசில்தாருக்கு இப்போது வேலை இல்லை. உச்ச நீதிமன்றத்திலே தடை செய்ததைப் பற்றி இதைப்பற்றி எல்லாம் ஒன்றும் சொல்லக்கூடாது. ஏனென்றால் அவர்கள் எல்லாம் தேவலோகத்திலே இருந்து வந்திருக்கிறார்கள். ஆகவே எத்தனை சட்டங்கள் செய்தாலும் அவற்றை எல்லாம் தள்ளுபடி செய்கின்ற நிலைமையிலே தான் அவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களை ஒன்று சேர்த்து பணத்தைக் கொடுத்து ஒரு அதிகாரியைப் போட்டு ஏன் அவர்களிடம் தொழில் வாங்கக் கூடாது? ஸ்டேட் ட்ரெடிங் கார்ப்பரேஷன் என்று வைத்து மாநில அரசு மற்ற தொழில்களை எல்லாம் எடுத்துக் கொள்கிறீர்களே ஏன் இவர்களுடைய தொழில்களை எடுத்துக் கொள்ளக்கூடாது? அதுமட்டுமல்ல. பெங்களூரிலே இருப்பது போல பங்க் சிஸ்டத்தைக் கொடுத்து கார்ப்பரேஷனின் உதவி கேட்டு அந்த மக்களுக்கு பங்க் சிஸ்டத்தைக் கொடுத்து அவர்களிடத்திலே வாடகை வாங்கிக்கொண்டு ஏன் ஒரு பாதுகாப்பான நிலைமையைச் செய்யக்கூடாது? நிச்சயமாக அதைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் இது வரையிலும் செய்யவில்லை. அதை உடனடியாகச் செய்வார்கள் என்ற என்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி நான் சொல்லியபோதுகூட நம்முடைய ஆதி திராவிடர் நல இலாக்கா சமூக நல இலாக்கா ஆகியவற்றின் காரியதரிசி சொன்னார்கள். இளையபெருமாள் பொய் சொல்கிறார் என்று. நான் பொய் சொல்லவில்லை. 1974–5 லே டெல்லியிலே இருந்து கொடுக்கப்பட்ட பணம் இவர்களுக்காகச் சரியாக பயன்படுத்தப்படவில்லை. இப்போது கூட சொல்கிறேன். உங்களுடைய நிதி குறிப்புபடி ஒதுக்கப்பட்ட பணம் கடைசியாக

பாருங்கள். நீங்கள் சொன்னதற்கும் கணக்குக்கும் பார்த்தால் 73 சதவீதம்தான் செலவழிக்கப்பட்டுள்ளது. மிச்சம் செலவழிக்கப்படவில்லை. இப்போது மார்ச் 31-க்குள் செலவழிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். இன்றைக்குத் தேதி 17. இன்னும் 14 நாட்கள் இருக்கின்றன. இந்தப் 14 நாட்களுக்குள்ளே அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட பணத்தை எப்படிச் செலவழிக்க முடியும். ஆகவே பணங்கள் சில மாவட்டங்களிலே திருப்பிக் கொடுக்கப்படுகின்றன. விவரமாக எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கினோம், எத்தனை கோடி ரூபாய் செலவழித்தோம் சென்ற ஆண்டிலே இவ்வளவு தரப்பட்டது இந்த ஆண்டிலே எதுவும் திருப்பித் தரப்படவில்லை என்ற நிலைமை இருக்குமேயானால் நான் சந்தோஷப் பட்டிருப்பேன்.

அடுத்து, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு— மத்திய அரசு என்ற தலைப்பிலே 6-வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதற்கு மத்திய அரசு தொகை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் நம்முடைய தொகை எவ்வளவு என்று அதுபற்றி குறிப்பிடப்பட்டிருந்தால் அதுபற்றி நான் புரிந்துகொண்டிருக்க முடியும். அது இல்லாததால் நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லையோ என்ற சந்தேகம் எனக்கு எழும்புகின்றது.

அடுத்து 8—வது பக்கத்திலே காந்தி நினைவு பரிசுத் திட்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தப் பரிசுத் திட்டத்திற்கான பணம் காந்தி மெமோரியல் ஃபவுண்டேஷன் கொடுக்கின்ற பணமா அல்லது காந்தியின் பெயராலே நாம் கொடுக்கின்றோமா என்பது தெரியவில்லை. அவர்கள் கொடுப்பதாகத்தான் தெரிகிறதே தவிர இங்கே குறிப்பிடப்பட்ட விவரத்தைப் பொறுத்தவரையிலே நாம் கொடுப்பதாக இல்லை.

அடுத்து நிறைய நல்ல மாணவர்களுக்கு 60 சதவீதம் என்று மதிப்பு எண் பெற்ற அந்தப் பிள்ளைகளுக்கு ஊக்கம் கொடுத்திருக்கிறீர்கள். அது கல்வி வளர்ச்சியிலே அவர்களுக்கு ஊக்கத்தை உண்டாக்கும் வகையிலே செய்ததற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே மயத்திலே 10-வது பக்கத்திலே தொடக்கப்பள்ளிகள் 843. நடுநிலைப்பள்ளி 79, உயர்நிலைப் பள்ளி 31, மேல்நிலைப்பள்ளி 4, ஆக மொத்தம் 947 பள்ளிகள் என்று இருக்கின்றது. இந்தப் பள்ளிகளுக்கு எல்லாம் என்ன வசதிகள் கொடுக்கப்பட்டன. எத்தனை பள்ளிகளுக்கு வசதி இல்லை. விருத்தாசலம் தாலுக்காவிலே கங்கைகொண்டான் என்ற கிராமத்திலே ஒரு பள்ளியிலே 4 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கே இருப்பதோ ஒரு நாற்காலி ஒரே ஒரு மேஜை. இப்படி கடந்த 8 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. இதுபற்றி பலமுறைகளும் நான் வெல்ஃபேர் ஆபீஸரிடம் சொன்னேன். வெல்ஃபேர் ஆபீஸர், டைரக்டரிடம் போகவேண்டும் என்றும் செக்ரட்டரியிடம் சொல்லவேண்டும் என்று சொன்னார்கள். நான் செக்கரட்டரியிடத்திலே சொன்னபோது விதியைத் தளர்த்தி அவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள்.



டைரக்டரிடம் சொன்னபோதுகூட, ஆம் இந்த விதியைத் தளர்த்திவிட்டு ஜில்லாவில் இருக்கின்ற கலெக்டர் கோடிக் கணக்கான ரூபாயை செலவழிக்கிறார், அவர்களுக்கே அதிகாரம் கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால் கொடுத்தார்களா இல்லையா? அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் ஏன் இந்தப் பள்ளிக்கூடத்திலே 4 ஆசிரியர்கள் இருக்கின்றபோது ஒரு மேஜையும் ஒரு நாற்காலியும் இன்னும் இருக்க வேண்டும். இதுதான் ஆதி திராவிடர் நலமா, இதுதான் ஆதி திராவிடர் நலமா, இதைக்கொடுக்கவேண்டும் என்று சொல்கிறோம். நாங்கள் ஒன்றும் கொடுக்கமாட்டோம் என்று சொன்னால் ஆட்சேபணை இல்லை. ஆனால் கொடுக்கிறோம் என்று சொல்லி பத்திரிகைகளிலே இவர்களுக்கு 18 சதவீதம், இவர்களுக்கு 5 சதவீதம் உத்தியோகம் என்றெல்லாம் சொல்லி விட்டு ஆனால் கொடுக்கவில்லை.

(முற்பகல் 11–50)

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நாற்பது பேர்கள் பாரஸ்ட் ரேஞ்ச் ஆபீஸர்களாக தேர்வு செய்யப்பட்டார்கள். அதற்கு மினிமம் க்வாலிபிக்கேஷனாக பி. எஸ்ஸி (அக்ரி), பி. ஏ. என்று வைத்திருந்தார்கள். 17 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு இன்டர்வ்யூ அனுப்பப்பட்டது. அந்த 17 பேர்களும் வந்தார்கள். ஆனால் அவர்களுள் ஒருவர் கூட எடுக்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம்? காரணத்தைச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். உறுப்பினர்கள் இங்கே ஏதோ சொல்கிறார்கள், அவர்கள் ஏதோ பேசினார்கள், நாம் ஏதோ பதில் சொல்லி விட்டோம் என்று அமைச்சர்கள் இருந்தால் அது ஒரு பாவச் சுமையாகும். நாம் மக்கள் வரிப்பணத்திலிருந்து சம்பளம் வாங்குகிறோம். மக்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் நாம் இங்கே இருக்கிறோம். அதுஎந்த சர்க்காராக இருந்தாலும்சரி, காங்கிரஸ் சர்க்காராக இருந்தாலும்சரி அல்லது திராவிட முன்னேற்றக் கழக சர்க்காராக இருந்தாலும் சரி, அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காராக இருந்தாலும்சரி அமைச்சர்கள் உறுப்பினர்கள் பேசுவதை குறிப்பு எடுக்கிறார்கள். உறுப்பினர்களுக்கு சில சமயங்களில் உறுதி கொடுக்கிறார்கள். நாங்கள் ஏதாவது தவறுதலாகப் பேசியிருந்தால் தவறான கருத்தைச் சொல்லியிருந்தால் அதை எடுத்துச் சொல்லுங்கள். அப்படிச் சொன்னால்தான் அச்சம் வரும். உண்மையைச் சொல்ல விரும்புவார்கள். அப்போதுதான் மிகைப்படுத்திச் சொல்லாத நிலை உருவாகும். ஆனால் இதுவரை அப்படி ஒன்றும் சொல்லப் படவில்லை.

இந்த கொள்கை விளக்கக் குறிப்பின் -22வது பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். 1980–81 ஆண்டில் மத்திய அரசு சிறப்பு நிதியாக ரூ. 9.56 கோடி வழங்கப்பட்டது என்று. அதில் 50,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் வாய்ப்பு பெற்றனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜில்லாவாரியாக எந்தெந்த தொழில்களுக்கு கொடுக்கப்பட்டது? எவ்வளவு பேர்கள் அந்தப் பணத்தை

சரியாகப் பயன்படுத்தினார்கள், எவ்வளவு பேர்கள் சரியாக பணத்தை உபயோகிக்கவில்லை? இப்போது கூடச் சொல்கிறேன். இது குறித்து அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன், செக்ரட்டரியிடம் சொல்லியிருக்கிறேன், டைரக்டரிடம் சொல்லியிருக்கிறேன். இந்த மக்கள் பெயரால் யார் எல்லாம் தொழில் செய்வதாக பணம் வாங்கி ஏமாற்றியிருக்கிறார்களோ, அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களிடமிருந்து அந்தப் பணத்தை திரும்பப் பெற வேண்டும். இந்த ஏழை மக்களின் பெயரால் பணத்தைப் பெற்றுக் கொண்டு யார் எந்த அரசியல்வாதி ஏமாற்றியிருந்தாலும், ...... அது இளையபெருமாளாக இருந்தால் கூட சரி, ......அப்படி ஏய்க்கிற முறைக்கு முற்றுப்புள்ளி வக்க வேண்டும். இந்த ஏழை மக்களுக்காக செலவு செய்யப்படும் பணம் சரியான முறையில் செலவு செய்யப்பட வேண்டும்.

இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிணத்தை எரிக்க ரூ. 50 கொடுக்கிறார்கள். அங்கு சென்று இங்கு சென்று இந்த ரூ. 50 வாங்குவதற்கு சிரமமாக இருக்கிறது. நான் இதைப்பற்றிச் சொல்லும்போது என் சகோதரர்கள் என்னைக் கோபிப்பார்கள். என்னைத் திட்டுவார்கள். ரூ. 50 கிடைத்ததை இந்த பாவி கெடுத்தானே என்று சொல்வார்கள். நான் ஒன்று சொல்கிறேன், மானமுள்ள மனிதனாக வாழவேண்டும், மக்கள் சுயமரியாதையோடு வாழ வேண்டும். ரூ. 50 கொடுக்கிறோம் என்று சொல்லி அலைக்கழிக்காதீர்கள். இந்த ரூ. 50-ல், ரூ. 35-யை நடுவிலுள்ள நந்தி பெருமான் எடுத்துக்கொண்டு இந்த ரூ. 15-க்கு மானம் பறிபோக வேண்டுமா? இதை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இதை திருத்த வேண்டும். இதற்காக என் உடன் பிறந்த சகோதரர்கள் திட்டினாலும் பரவாயில்லை.

நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தென் பகுதியில் இந்த சமுதாயத்தின் கண்கண்ட தெய்வமாக இருந்த சுவாமி சகஜாநந்தா அவர்கள் ஒரு பள்ளி வைத்து நடத்தி வந்தார்கள். அவர்கள் 1959-ல் இறந்தார்கள். அந்தப் பள்ளியில் ஹரிஜன மாணவர்களை மட்டும்தான் சேர்க்க வேண்டும் என்று விதி இருந்தது. நான் அந்த விதியை மாற்ற வேண்டும் என்று கேட்டேன், அப்போது காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். அப்போது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், இளையபெருமாள் நீங்கள் சொல்வது நல்லதுதான், ஆனால் உங்கள் சகோதரர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்களே என்று. அப்போது நான் சொன்னேன், என்னைத் திட்டினாலும் பரவாயில்லை, ஜாதி உணர்வை நீக்க வேண்டுமென்றால். ஜாதி என்ற பாவமான காரியத்தை நீக்க வேண்டுமென்றால் ஆதிதிராவிட மாணவர்கள் 75 சதவீதமும், 25 சதவீதம் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களும், முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இருக்க வேண்டும் என்று சொன்னேன். அப்படிச் செய்ததால் அந்தப் பள்ளிக்கூடம் இப்போது அந்த மாவட்டத்தில் உயர்ந்த நிலையில் வெற்றிபெற்று உங்களுக்கு ஒரு நல்ல பெயரைக் கொடுத்திருக்கிறது. ஆகவே அதுபோன்று செய்யவேண்டும்.



திரு. ஜி. மூர்த்தி: மாற்றுத் தலைவர் அவர்களே, விடுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களும் சேர்ந்திருந்தால்தான் சமுதாய சமத்துவம் அமையும் என்று சொல்கிறார்கள். அது உண்மை என்றால் கிராமங்களில் ஒரு பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள், இன்னொரு பகுதியில் ஜாதி இந்துக்கள் என்று வாழ்கிற நிலையில் உள்ள தமிழ்நாட்டில் ஜாதிக்கலவரங்கள் நடப்பதற்கு என்ன காரணம் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவிப்பார்களா?

திரு. எல். இளையபெருமாள்: அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். நான் அமைச்சரில்லை. அவர்களைப் போல் உறுப்பினர் தான். இந்த ஜாதி கலவரங்களுக்கெல்லாம் காரணம் அரசியல்வாதிகளாக இருக்கின்ற நாம் ஒன்று கூடி தீர்க்கமான முடிவு செய்யாததுதான் காரணம். யார்மீதும் நான் சொல்லவில்லை, சொல்வதற்கு வழியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

இந்தக் குறிப்பிலே 28-வது பக்கத்திலே கிராம வீட்டுவசதித் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் 3,500 ரூபாய் கொடுத்தோம், இப்போது 4,000 கொடுக்கிறோம் என்று சொல்கிறார்களே அந்த கிராம வீட்டு வசதியா? அல்லது நம்முடைய துறையின் சார்பாக உள்ள காட்கோ ஒரு வருடமாக ஒரு வீடும் கட்டாத அவல நிலை இருக்கிறதே அந்தப் பணமா? இரண்டிலே எது இது என்று அமைச்சரவர்கள் சொல்லவேண்டும். (மணியடிக்கப்பட்டது)

இந்தக் குறிப்பிலே 29 வது பக்கத்திலே 'துப்புரவுப் பணியாளர்கள் பெருக்குவோர் பணிநிலைமை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலே' 1977—78 ஆம் ஆண்டில் 432 தள்ளுவண்டிகளும், 216 தட்டுகளும், சுரண்டு கருவிகளும் ரூ. 1.76 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன' என்று இருக்கிறது. இது உள்ளாட்சித் துறை செய்ய வேண்டிய கேள்வி. பஞ்சாயத்து போர்டு, முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் செய்ய வேண்டிய வேலை. எங்கள் பெயரால் பணம் எடுத்து அதை வாங்கக் கொடுத்த பணமா? நாம் ஏன் இதை செய்ய வேண்டும்? நம்முடைய துறைக்குச் சேர்ந்த பணம் என்பது உண்மையா? அவர்கள் சொல்கிறார்கள் நாங்கள் கொடுத்தோம் என்று, நீங்கள் சொல்கிறீர்கள், நாங்கள் கொடுத்தோம் என்று. அந்த இலாகா உங்களுக்கு கடிதம் எழுதிக் கேட்டிருக்கிறார்களா? உங்கள் குறிப்பிலே இதற்கு வழிவகை உண்டா என்பதை யோசிக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது). கன்க்ளூட் பண்ணிவிடுகிறேன். தஞ்சை ஜில்லாவைப் போன்ற இடங்களிலே பட்டா கொடுத்தும் கையகப்படுத்தவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் எனக்குப் பல கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதியதையெல்லாம் நிறைவேற்றவேண்டும். நான் சொன்னவைகளையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு நேரம் கொடுத்ததற்கும் நன்றி நேரம் கொடுக்காததற்கும் நன்றி. தமிழகத்திலே இந்த மக்கள் நடத்தப்படுகிற நிலைதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் நலன் மானியத்தின்

மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்காக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவர் அர ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்காக 41.11 கோடி ரூபா ஒதுக்கீடு செய்து இந்த அறிக்கையை மாண்புமிகு அமைச்ச அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள் புரட்சித் தலைவரின் அரசு ஏழை எளி அரிசன மக்களுக்காக நல்ல பல திட்டங்களைத் திட் செயல்பட்டுக் கொண்டிருப்பதை அனைவரும் பாராட்டி கொண்டிருக்கிறார்கள் என்பதை கிராமத்திலே உள்ள என்னை போன்ற மன்ற உறுப்புனர்களுக்கு மிக நன்றாகத் தெரியும் எதிர்க் கட்சியிலுள்ள உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்க பேசுகிறபோது இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிற நிதி மிக குறைவாக இருக்கிறது, போதாது என்று எடுத்துச்சொன்னார்கள் அவர்கள் ஆட்சி செய்த நேரத்திலே 1972—73 ஆம் ஆண்டிலே இதற்காக ஒதுக்கியிருக்கின்ற தொகை ரூ.8 கோடி. ரூ. 8 கோ எங்கே, இன்றைய தினம் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே ஒதுக்கியிருக்கிற 41 கோடி எங்கே என்பதை அவர்கள் சிந்தித்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எண்ணு எழுத்தும் கண்ணெனத் தகும் என்பார்கள். அதைப்போல இந் ஆண்டு கல்விக்காக இந்த அரசு 21.17 கோடி ரூபாயினை ஒதுக்கியிருக்கிறது. கிட்டதட்ட இந்த மானியத்திற்கு ஒதுக் யிருக்கிற தொகையில் பாதி அளவு தொகை ஒதுக்கி அரிச மக்கள் கல்வித் தரம் உயர்வின் மூலம் அவர்கள் வாழ்க்கை தரம் முன்னேறவும், மக்களோடு சரிசமமாக பழக இந் வாய்ப்பை இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12—00)

இந்த ஆண்டு இந்த அரசைப் பொறுத்தவரையில் மாணவ களுக்கு தகுதி மானியத்தை 300 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள் பள்ளி இறுதி தேர்வில் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்ற மாணவ கள் 1980-81 ஆம் ஆண்டு முதல் 10-ம் வகுப்பு இறுதி வகுப்பிலே படிக்கிறவர்கள், 10 பிளஸ் 2 கடைசியாண்டு படிக்கி மாணவர்கள் இந்த ஆண்டு மானியம் தர 9½ இலட்சம் ரூபா இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. அதேபோல இங்கே மாண்புமி உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் பேசுகிறபோது காந் நினைவு பரிசு திட்டத்தை யார் கொடுக்கிறார்கள் என் குறிப்பிடவில்லை என்று சொன்னார்கள். இந்தத் திட்ட புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கி திட்டம் . (குறுக்கீடு)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத்தலைவ அவர்களே, அருமை சகோதரர் சொல்கிறபோது, புரட்சித் தலைவர் அவர்களுடைய திட்டம் என்று சொன்னார். காந்தி பீஸ் பவுண்டேஷன் சென்டர் என்று டெல்லியிலே இருக்கிறது அவர்கள் கொடுத்து நம்முடைய அரசாங்கம் மூலமாக அ விநியோகிக்கப்படுகிறதா அல்லது காந்தி பெயராலே நம்முடைய தமிழக அரசு கொடுக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும்.



திரு. வெ. அரங்கராசன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இதைத் தமிழக அரசுதான் கொடுக்கிறது என்பதை திட்ட வட்டமாக எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்த திட்டம் 1976—77 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக்கிற ஆதிதிராவிட மாணவர் களிலே ஒருவரும், மாணவிகளிலே ஒருவரும், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிலே ஒருவரும், மாணவிகளிலே ஒருவரும், தாழ்த்தப்பட்ட மதத்திலேயிருந்து மதம் மாறிய கிறிஸ்தவ மாணவர்களில் ஒருவரும் ஆக ஐந்து பேர்களுக்கு கொடுப்பதற்கு புரட்சித் தலைவர் . அவர்களின் அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்கு பின்னாலே மாநில அரசு நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பின்னால் 1977–78-லேயிருந்து குழந்தைகள் காப்பகம் ஒவ்வொரு ஆண்டிற்கும் 50 விதம் 1980—81 வரை கிட்டத்தட்ட 200 காப்பகங்களை கட்டுவதற்கு உத்திரவிடப்பட்டுள்ளது. குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றிலும் 70 மாணவர்கள் பயில்கிற வகையிலே வசதி வாய்ப்பினை புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு உருவாக்கி இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். 1949 முதல் 31-12–1981 வரையில், ஆதிதிராவிட மக்களுக்காக வீட்டு மனைப் பட்டா கொடுப்பதற்கு 935 இலட்சம் ரூபாய்தான் கிட்டத்தட்ட 32 ஆண்டுகளாக அரசிடமிருந்து செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் 1982—83—ல் ஒரு ஆண்டிலே மட்டும் 125 இலட்சம் ரூபாய்க்கு இதற்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்து வீட்டுமனை கொடுப்பதற்கு புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏழை, எளியவர்களுக்கு என்ன செய்திருக்கிறது என்று கேட்கிறார்களே தவிர இந்த அளவிற்குச் செய்வதை செய்திருக்கிறார்கள் என்று பாராட்ட வேண்டுமென்ற எண்ணம் எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களுக்கு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அன்பில் அவர்கள் பேசுகிறபோது என்ன செய்ய இருக்கிறோம் என்று சொல்வதை விட்டு செய்ததை சொன்னால் நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் அரசு செய்து கொண்டிருக்கிறது, அதை எண்ணுகிறபோது உறுப்பினர்கள் பாராட்டுவதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும். ஏழை அரிசன மக்களுக்காக எதுவுமே செய்யவில்லை என்று சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வேட்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்) : அந்த உறுப்பினர் பேசுகிறார். அடுத்து, உங்கள் கட்சியிலே திருமதி இராசாம்பாள் பேச இருக்கிறார், அவர் மூலமாக நீங்கள் பதில் சொல்லலாம். நீங்கள் இரண்டு பேருமே பேசிக்கொண்டிருந்தால், மற்றவர்களுக்குப் பேசும்

சந்தர்ப்பம் போய்விடுகிறது. மறுப்புரை ஏதாவது இருந்தால், கட்சி சார்பிலே பேசும்போது, அவர் மூலமாகத் தெரிவிக்கலாம்.

திரு. வெ. அரங்கநாதன்: மாற்றுத் தலைவர் அவர்களே தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இந்த அரசு ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்குப் பலன் அளிக்கின்ற வகையில் பல அடிப்படையி திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வந்துள்ளது குடிநீர் வசதி, ஏழை, எளிய ஆதிதிராவிட மக்கள் இறந்ததற்குப் பின்னால் மயானத்திற்குச் செல்லக்கூட பாதை வசதி இதற்கு முன்னால் ஆண்ட காங்கிரஸ் ஆட்சியிலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் செய்து தராமல் இருந்ததால், அவர்கள் படுகின்ற அவதியை, இன்னல்களைக் கண்டு மயானத்திற்குச் சாலைகள் போடவும், அந்தப் பாதைகளிலே சிறிய பாலங்கள் கட்டுதல், பள்ளிக் கட்டிடம் கட்டித் தருதல் போன்றவற்றிற்காகத் தன்னிறைவுத் திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் அரசு, சென்ற 2 ஆண்டுக் காலத்திலே தன்னிறைவுத் திட்டம் மூலமாக கிட்டத்தட்ட ரூ.141 இலட்சம் செலவழித்திருக்கிறது. இந்த ஆண்டு, அதற்காக, ரூ. 75 இலட்சம் செலவிட இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

மேலும், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் கூடிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்காக சென்ற ஆண்டு 12 புதிதாகத் திறந்திருப்பதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே, என்னுடைய தொகுதியிலுள்ள பூதக்கால், நச்சிலிபட்டி ஆகிய ஊர்களில் இரண்டு தொடக்கப்பள்ளிகளை கொடுத்ததற்காக முதல்வர் புரட்சித் தலைவருக்கும் நலத்துறை அமைச்சருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் ஒரு தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும் 2 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தி இருக்கிறார்கள். இப்பொழுது பழங்குடியினருக்காக, கிட்டத்தட்ட 126 பள்ளிகள் மூலம் 7,643 மாணவர்கள் பயில்கின்ற ஒரு நல்ல வசதி வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்

எனது தொகுதியில் மலைவாழ் மக்கள் அதிகம் இருக்கிற காரணத்தால், கிட்டத்தட்ட 10,000 மக்கள் 33 கிராமங்களில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்காக, வருகின்ற ஆண்டில் இரண்டு நடுநிலைப்பள்ளிகளைத் திறந்து வைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். மேலும், மலையில் சாலை வசதிகள் சரியாக இல்லாததால், மிகச் சிரமமான சூழ்நிலையிலே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தால், சோபனபுரத்தில் இருந்து டாப் செங்காட்டுப்பட்டி வரையிலும், செங்காட்டுப்பட்டியிலிருந்து மணலோடை வரையிலும் ஆதிவாசிகள் பலன் அடைகின்ற வகையில் தார்ச் சாலைகளாகப் போட்டுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அங்கேயிருக்கிற ஆதிவாசி மக்களுக்கு வீட்டு மனைகளும் காலனிகளும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், மலைகளிலே இருக்கின்ற பழங்குடியினர் தரை மட்டத்திலே இருக்கிற மக்களோடு பழகுகின்ற வகையில், உப்பிலியாபுரம் கிராமத்திலே ஆதிவாசிகளுக்கென ஒரு ஆஸ்டல் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக, அங்கேயிருக்கிற ஆதிவாசி மாணவர்கள் கீழே இருக்கிற மக்களோடு பழகி, அவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பெற்று பயன் அடைகின்ற வகையிலே, அது வசதி வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால், இந்த ஆண்டு உப்பிலியாபுரத்தில் ஒரு பழங்குடியினர் ஆஸ்ட்டலைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சென்ற ஆண்டு இரண்டாவது திட்டத்தில் துறையூர் கண்ணனூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசு பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். அதை இந்த ஆண்டு துவக்கத்திலேயே உயர்நிலைப் பள்ளியாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் 18 சதவீதம் இதுவரைக்கும் ஒன்றாக இணைந்திருந்தது. ஆனால், மைய அரசு பழங்குடியினருக்கு 7½ சதவீதம், ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீதம் என்றிருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, தமிழகத்திலே இருக்கிற நமது புரட்சித்தலைவர் அரசு பழங்குடியினருக்குக் குறைந்தது 5 சதவீதத்தை மக்கள் பலன் அடைகின்ற வகையில் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், மக்கள் தொகையில்—படித்தவர்களுடைய சதவீதம் 39, அதில் பழங்குடியினர் 9 சதவீதம். எனவே, பழங்குடி மக்கள் பலன் அடைகின்ற வகையில் அவர்களுக்கென்று தனியாகக் குறைந்தது 5 சதவீதம் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–10)

டாப்சங்காட்டுப்பட்டியில் உள்ள ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் மருத்துவர்களுக்குத் தங்கும் வசதி இல்லை. அதனால் அவர்கள் வாரத்திற்கு இரண்டு நாட்கள் மூன்று நாட்கள் செல்லக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, மருத்துவர்கள் தங்கும் விடுதியைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

படிப்பு உதவித் தொகைக்காக ஆதிதிராவிடர்களின் பெற்றோர்களுக்கான ஆண்டு வருமானம் 1981–82-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 3000 ரூபாய் என்று இருந்ததை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியில் 6,000 ரூபாய் என்று உயர்த்தப் பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம அதிகாரிகளின் பதவிகளை ஒழித்து விட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒழித்திருந்தாலும்கூட புதிதாக அவர்களை நியமிக்கும்பொழுது ஆதி திராவிடர்களுக்கும் 18 சதவீதத்தை இந்த அரசு ஒதுக்கியிருப்பதன் மூலம் ஆதிதிராவிடர்கள் பலன் அடையும் வகையில் செய்திருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் பேசும்பொழுது பெயர் மாற்றுவதிலே வல்லவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த அரசு பெயர் மாற்றுவதில் வல்லவர்களாக இல்லை; ஆனால் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அவர்களுடைய பெயர்களையெல்லாம் நெல்லுக்கும், பயறுக்கும் இன்னும் எது எதற்கெல்லாம் முடியுமோ அது அதற்கெல்லாம் பெயர்களை வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆட்சியில் அப்படிப்பட்ட பெயர்களை வைக்கவில்லை என்பதை எடுத்துச்சொல்லி, இங்கே இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலன் பற்றிய மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்த மானியத்தின் மீது நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 1971—ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இன்றைக்கு இந்தத் தமிழகத்திலே 76 இலட்சம் மக்கள் பழங்குடியினரும், அரிசனங்களும் வாழ்வதாகச் சொல்லியிருக்கிறார்கள் ஏற்கனவே சென்ற ஆண்டும் இதே தலைப்பில் இதே வரிகளைத்தான் போட்டிருக்கிறார்கள். அதையே இப்பொழுதும் போட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், 1981—ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பு முடிந்து ஓராண்டுக்கு மேல் ஆகிறது. அதை ஏன் இந்த ஆண்டு சேர்த்து இன்றைய நிலவரம் என்னவென்பதைச் சொல்லாததன் காரணம் என்னவென்பதை நான் இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 41 கோடி ரூபாய் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. மொத்த பட்ஜெட்டிலே, இன்றைக்கு 1,773 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கும் இந்தத் தமிழகத்தின் பட்ஜெட்டிலே இவர்களுக்காக ஒதுக்கியிருக்கும் தொகை வெறும் 2.6 சதவீதமே என்றால் இது போதுமானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு அந்த மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்குப் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழித்தாலும் அவர்களை மேலே தூக்க முடியாத சூழ்நிலை இருக்கும்பொழுது இப்படி 2 சதவீதம் இரண்டேகால் சதவீதம் என்று ஒதுக்குவது ஏதோ கண் துடைப்புக்காக, அவர்களுக்கும் நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வதே தவிர வேறொன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் ஆதிதிராவிடர் நல அமைச்சராக இருப்பவர்கள் தமிழகத்திலே எந்தப் பக்கமுமே போனதாகத் தெரியவில்லை. அதற்கான காரணம் எனக்குப் புரியவில்லை. இன்றைக்குப் பல அமைச்சர்கள் பல ஊர்களுக்கும் மாதம் தவறாமல், வாரம் தவறாமல் செல்கிறார்கள். ஆனால் நம்முடைய ஆதிதிராவிடர்



நல அமைச்சரவர்கள் தமிழகத்திலே சுற்றுப் பயணம் செய்கிறார்களா என்ற சந்தேகமே எனக்கு இருக்கிறது. காலப் போக்கிலே அந்த நிலையைப் போக்கி எல்லாப் பகுதிகளுக்கும் சென்று பிரச்னைகளுக்கு ஓரளவுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர் கமிஷன் என்ற கமிஷன் முதல்வர்களே அந்த இலாக்காவைக் கவனிக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த வகையில் தமிழகத்தில் மாண்புமிகு முதல்வரவர்கள் இந்தத் துறையை எடுத்துக்கொண்டால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால் குறிப்பாகக் காவல் நிலையங்களுக்குத் தாழ்த்தப்பட்டவர்கள் சென்றால் அவர்களுக்கு அங்கே எந்தவிதமான மரியாதையும் இல்லை; அவர்களையும் மனிதர்களாகவே அங்குள்ளவர்கள் நினைப்பதில்லை; டா போட்டு பேசுவதும், அக்கிரமமாகப் பேசுவதும், வெளியே போ என்று சொல்வதும் தவிர அவர்கள் என்ன காரியங்களுக்காக அங்கே வந்தார்கள், நாம் என்ன செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வு காவல் நிலையங்களில் இருப்பதில்லை. எனவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தீர்ப்பதற்கு அரசு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கல்விக்கு என்றும் வீடுகள் கட்டுவதற்காக என்றும் சில சலுகைகளைச் சொல்லி இருக்கிறீர்கள். இவைகள் எல்லாம் பிரச்னைகளைத் தீர்க்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 34 ஆண்டுகாலமாக இந்தியா முழுவதிலும் இதை ஒரு சடங்காக செய்துகொண்டு இருக்கின்றார்களே ஒழிய, இது பிரச்சினைகளைத் தீர்க்கவே தீர்க்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலச் சீர்திருத்தத்தைக் கறாராக அமல்படுத்தி, அதன் மூலம் கிடைக்கும் நிலங்கள் அத்தனையும் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்குக் கொடுத்தால், நல்லது. அதைவிட்டு அவர்களுக்கு ஆடு, மாடு கொடுக்கிறோம், 2 செண்ட் வீட்டுமனைக் கொடுக்கிறோம் என்று சொல்வது சரியாகாது. நிலச்சீர்திருத்தத்தினால் கிடைக்கக்கூடிய நிலங்களை தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்குக் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால் இன்றைக்குக் கோவில் நிலங்கள் என்று சொல்லி, தமிழகத்திலே 6 லட்சத்துக்கும் மேற்பட்ட நிலங்கள் இருப்பதாகச் சொல்லி உள்ளார்கள். அந்த நிலங்கள் அத்தனையையும் எடுத்து, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்பதைக் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு அந்தக் கோவில் நிலங்களின் மூலம் பாக்கி 16 கோடி ரூபாய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி பாக்கி வைத்திருப்பவர்கள் யார்? மேல் ஜாதியைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள்தான் இப்படி பாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கே உள்ள நிலங்களை விளைவித்து அதனால்

கிடைக்கும் வருமானத்தைக் கோவிலுக்குக் கொடுக்காமல் டிமிக்கிக் கொடுத்து வந்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கூட பறிமுதல் செய்து அவைகளைத் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்தால் அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் காண உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியிலே முன்னுரிமைக் கொடுத்து, படிக்க வைப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். வேலைவாய்ப்பு குறித்து, சென்ற ஆண்டு நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தமிழகத்திலே இருக்கின்ற 54 துறைகளில் வெறும் 13 துறைகள் மட்டும் 6 சதவிகிதமும், இன்னும் 16 துறைகளில் 11 சதவிகிதமும் வேலைவாய்ப்பிலே அவர்களுக்கு கொடுத்துள்ளது என்றும் சொன்னார்கள். இந்த அறிக்கையிலே கூட பொதுத் துறையில் 17 சதவிகிதமும், அரசுத் துறையில் 13 சதவிகிதமும் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அரிசனங்களுக்காக ஒவ்வொரு சமயத்திலும் கொடுக்கக்கூடிய விளம்பரங்கள் எவ்வளவு? இவர்களுக்காகப் பேசப்படுகின்ற வார்த்தைகள்தான் என்ன? சென்ற ஆண்டு மீனாட்சிபுரத்திலே மதமாற்றம் நடைபெற்றபோது இந்தத்தமிழகமே அதிரும்படியான விளம்பரங்களைக் கொடுத்த போது, அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று சொன்னார்கள்.

அரிசனங்களுக்கு அதைச் செய்தோம் இதைச் செய்தோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் என்ன என்ன செய்தீர்கள் என்பதை இந்த அறிக்கையிலே சொல்லவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னின்ன செய்தோம். அதனால் இவ்வளவு பேர்கள் பயனடைந்தார்கள் என்று இந்த அறிக்கையிலே சொல்லி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட இதிலே சொல்லவில்லை.

இன்றைக்கு அரிசனப் பள்ளி மாணவர்களுக்கு உதவித் தொகை, புத்தகங்கள் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இந்தப் புத்தகங்கள் கொடுப்பதே மிகவும் வேதனைக்குரிய ஒன்று ஆகும். இன்னும் ஒரு மாதம்தான் இருக்கின்றது பரிட்சைகள் எல்லாம் முடிவதற்கு. இன்னும் சில பள்ளிக் கூடங்களில் இந்தப் புத்தகங்களைக் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் கேட்டால் அவைகள் எல்லாம் கொடுக்கப் பட்டுவிட்டன என்று சொல்லிவிடுகிறார்கள். நீங்கள் அதை நம்பி விடுகிறீர்கள். தமிழ், ஆங்கிலம், கணக்கு போன்ற எல்லா புத்தகங்களையும் கொடுக்கவேண்டும். ஆனால் அவர்கள் ஒரு புத்தகத்தை மட்டும் கொடுத்துவிட்டு, கொடுத்து விட்டோம் என்று அந்தத் தலைமை ஆசிரியர் அறிக்கை கொடுத்துவிடுகிறார். அமைச்சர் அவர்கள் அதைப் படித்துவிட்டு உட்கார்ந்து விடுகிறார். நாங்கள் மேலே கேட்க நினைத்தால், தனியாகக் கேள்வி போடுங்கள் என்று சொல்லி விடுகிறார். தனியாகக் கேள்வி போட்டு அதற்குப் பதில் கிடைக்க மேலும் ஒரு வருஷம் ஆகும். இது சாதாரணமான விஷயம் அல்ல. ஏழை எளிய மாணவர்கள் இன்றைக்குப் பள்ளிக்குப் போவதே பெரிய காரியம்



அதுவும் புத்தகங்கள் இல்லாமல் வெறும் மதிய உணவுக்காக மட்டும் பள்ளிக்குப் போவதென்றால் அது மிகவும் கேவலமாக இருக்கின்றது. எனவே அந்தப் பிள்ளைகளுக்கு புத்தகங்கள் உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும். இல்லையானால் அதற்குப் பணம் கொடுத்துவிடுங்கள். ஏழை எளியவர்கள் கடன் வாங்கி புத்தகத்தை வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள். பின்னாலே நீங்கள் புத்தகத்தைக் கொடுக்கின்றபோது அது உபயோகப்படுவது இல்லை. எனவே அதைப் பணமாகவே கொடுத்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு சென்ற ஆண்டு பட்ஜெட் அறிக்கையிலேயே சொன்னார்கள். உதவித் தொகையை 45 ரூபாயில் இருந்து 55 ரூபாயாக உயர்த்தப் பட்டதாக. அப்படி உயர்த்தி உத்தரவும் போடப்பட்டதாக சொல்கிறார்கள். ஆனால் இன்னும் அந்தப் பழைய ஸ்காலர்சிப் தான் கொடுக்கப்படுகிறது. அந்தப் புதிய உத்தரவு போய்ச் சேரவில்லை. இதை அமைச்சர் அவர்கள் கேட்கவேண்டாமா, துறை கேட்கவேண்டாமா? அந்த உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டாமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். உதாரணமாக பழனியிலே உள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலே சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட உதவித்தொகைதான் இப்போதும் கொடுக்கப்படுகிறது. இன்று வரையில் ஸ்காலர்ஷிப் போய் சேரவில்லை. அப்படி என்றால் என்ன அர்த்தம்? வருஷம் முடியப்போகிறது. இன்று வரையில் கொடுக்கவில்லை என்றால் எப்போது கொடுக்கப்போகிறீர்கள்? நினைத்துப் பார்த்தால் பெரிய வேதனையாக இருக்கின்றது. எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகள் உருவாவதைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல இன்றைக்கு 18 சதவீதம் என்று சொல்லி இருக்கின்றார்கள். இந்த 18 சதவீதத்தை சகல துறைகளிலும் உடனடியாக அமுலாக்குவதற்கு அரசு உத்தரவு போடுவதோடு அந்தந்த இலாகாக்களிலே இருக்கக்கூடிய காலி இடங்களை நிரப்பவேண்டும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் பல இடங்களில் ஒரு பள்ளிக்கூடத்திலோ, நகராட்சியிலோ அல்லது முனிசிபாலிட்டியிலோ ஒரு வேக்கன்சி வருகிறது என்று சொன்னால், யார் முன்னால் அவ்வேலையிலிருந்தார்களோ அந்த நபர்களுக்குத்தான் கொடுக்கிறார்களே ஒழிய, அங்கே நிரப்ப வேண்டிய இடம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று இருந்தால், அவர்களுக்கே அதை கொடுக்கவேண்டும். அது இல்லாமல் அங்கே சென்று கேட்டால் தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள் அமைச்சரிடம் இருந்து போன் வந்தது, அல்லது பெரிய அதிகாரிகளிடமிருந்து போன் வந்தது, அதனால் முடிந்துபோய்விட்டது, இனி ஒன்றும் செய்ய முடியாது என்று அதிகாரிகள் பகிரங்கமாக எங்களிடத்திலே சொல்லுகிறார். இதற்காக நாங்கள் அவர்களிடம் சண்டை போட முடியுமா? எந்த அமைச்சர் சொன்னார், எந்த அதிகாரி சொன்னார் என்று நாங்கள் கேட்க முடியுமா? முடியாது. ஆகையினாலே, இதிலே நீங்கள் பாரபட்சமில்லாமல் நியாயமான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதேபோல் இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய ஐ.ஏ.எஸ். பயிற்சி பள்ளியிலேயே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உணவுக்காக மாதம் 100 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்தக் காலத்திலே ஒரு ஐ.ஏ.எஸ், படிக்கிற மாணவனுக்கு 100 ரூபாய் கொடுத்தால் அது எதற்காக? நாட்டிலே நடக்கக்கூடிய யதார்த்தமான நிலைமைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒரு மாணவனுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும், அதிலும் ஐ.ஏ.எஸ். சென்டரிலே படிக்கிறான் என்று சொன்னால், அவனுக்கு உணவும் மற்றும் சுகாதார வசதிகளும் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஏற்பாடு செய்யவேண்டும். 200 ரூபாயாவது உயர்த்திக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தப்படியாக, இன்றைக்குச் சட்டக்கல்லூரி மாணவர்கள் கூட, நான்கு நாளைக்கு முன்னால் என்னைச் சந்தித்தார்கள். அங்கே ஒரு மாணவனுக்கு மாதம் 85 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதை 150 ரூபாயாக உயர்த்தி கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல, இன்றைக்குக் கலப்புத் திருமணம் பற்றி அரசு அதிகமாக விளம்பரங்களை சொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள், பல ஆண்டுகளாக, குறிப்பாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கலப்புத் திருமணம் செய்து, அதில் குழந்தைகள் எல்லாம் பெற்று நல்லமுறையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தும் கூட, அவர்களுக்கு அரசாங்கத்தின் உதவித் தொகை விளம்பரம் செய்தபடி கிடைக்கவில்லை. உதாரணத்திற்கு நான் சொல்ல வேண்டுமானால், கோவை மாவட்டத்திலே உள்ள உடுமலைப் பேட்டையைச் சேர்ந்த சந்தானம் என்ற ஒரு வாலிபன் கலப்புத் திருமணம் செய்து கொண்டு, அந்த மாவட்ட கலெக்டருக்கு மனு போட்டு, அப்புறம் மதுரை மாவட்ட கலெக்டருக்கு மனு போட்டு, இங்கே இருக்கிற டைரக்டரிடம் மனு போட்டிருக்கிறார். அமைச்சரிடத்திலே கூட இந்த சட்டப்பேரவையில் நான் சென்ற ஆண்டுகூட மனு கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. மனு வாங்கினால் பார்க்கலாம் என்று பேப்பரிலே எழுதுகிறார்களே, அது இன்னது ஆகிறது, கொடுப்பதற்கு லாயக்கில்லை என்று ஒரு பதிலாவது போட்டிருந்தால், அதையாவது அந்த மாதிரி ஆட்களுக்குச் சொல்லி பேசாமல் இருக்கலாம். அதுவும் தெரியமாட்டேன் என்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள், இதிலும் கறாராக இருந்து, அவர்களுக்கு கொடுக்கவேண்டிய உதவிகளை கொடுப்பதற்கு நீங்கள் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

அதேபோல வீட்டுமனைப் பட்டாக்கள். இன்றைக்கு 125 லட்ச ரூபாய் இந்த வீட்டு மனைப்பட்டாவிற்காக அரசு இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கிறது. இதைப்பற்றி ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பாராட்டுகிறார்கள். அதை நான் வேண்டா



மென்று சொல்லவில்லை. ஆனால் $1\frac{1}{4}$ கோடி ரூபாய்க்கு இந்தக்காலத்தில் எத்தனை ஏக்கர் நிலம் வாங்க முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தக் காலத்தில் ஒரு ஏக்கர் நாலாயிரம், ஐந்தாயிரம் விற்கிறது. அதிகமாக வாங்கினால் 3000 பேருக்கு நீங்கள் வாங்கிக் கொடுக்கலாம். இன்றைக்குத் தமிழகத்திலே 10 இலட்சம் பேர் வீடில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் நத்தம் புறம்போக்குகளிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும், பஸ் ஸ்டாண்டுகளிலும், கண்ட கண்ட இடங்களிலும், மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குடி இருக்க வீடில்லாமல் 10 இலட்சம் பேர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற நேரத்தில், நீங்கள் $1\frac{1}{4}$ கோடி ரூபாய் ஒதுக்கி, வீட்டுமனை வாங்கிக் கொடுக்கிறோம் என்று சொல்வதும் கண் துடைப்புதான். ஆகவே இதையெல்லாம், நீங்கள் ஏதோ ஒரு சடங்குக்காக வருஷம் எல்லாம் செய்கிற மாதிரி செய்யாமல் இதை உண்மையிலேயே, ஒரு மாறுதலை, ஒரு நவீனமான ஒரு புரட்சிகரமான கொள்கைகளைக் கொண்ட ஒரு பகுத்தறிவு கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் என்று சொல்லக்கூடிய இந்த அரசாங்கம் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட 3,4 வருடத்திலாவது இந்த வீட்டுமனைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அதிக அளவில் தொகையை ஒதுக்கி, வாங்கிக் கொடுக்கவேண்டும். கடந்த நான்கு ஆண்டு காலமாக பழனித் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக உள்ளேன். அங்கே பல ஊர்களிலே வீட்டுமனைப் பட்டாக்கள் வேண்டும் என்று நூற்றுக்கணக்கான மனுக்கள் கொடுத்தார்கள். அதையெல்லாம் சம்பந்தப்பட்ட கலெக்டர் இடத்திலும், அதிகாரிகளிடத்திலும் கொடுத்து இருக்கிறேன். ஆனால் குறிப்பிட்ட ஒன்றிரண்டு ஊர்களிலே பத்து பதினைந்து பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வாங்கிக் கொடுத்தாக எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறதே ஒழிய பெரிய அளவுக்கு 100 பேருக்கு, 200 பேருக்கு, எந்த ஊரிலேயும் வாங்கிக் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் பல தடவை நானே அந்த அதிகாரிகளுடன் சென்று நிலத்தைக் காட்டி 500 குடும்பங்கள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள்; இந்த இடத்தில் வீடு கட்டிக்கொடுங்கள் என்று சொல்லியும், இடத்தைக் காட்டியும் இன்னும் செய்யவில்லை.

என்னுடைய தொகுதியில், ஆயர்குடி மேஜர் பஞ்சாயத்தில் இடத்தைக் காட்டி, அரிசன நலத்துறை அதிகாரி வந்து பார்த்துப் போய் ஒரு வருஷம் ஆகியும் இன்றும் ஒன்றும் நடக்கவில்லை. அவர்கள் பார்த்து கணக்கு எடுத்து போனவுடனே வீடு என்னாச்சு, வீடு என்ன ச்சு என்று மக்கள் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு பதில் சொல்ல முடியவில்லை. இப்படிப்பட்ட பிரச்னைகள் பல இடங்களில் இருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்து, குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு தாட்கோ மூலம் வீடு கட்டிக்கொடுக்க கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதில் என்ன வேடிக்கை என்றால் வீடு கட்டுவதற்கு மனு போட்டு ஒரு வருஷம் கழித்து

சாங்ஷன் ஆகிறது. அதன் பிறகு ஆயிரம் ரூபாய் முதலில் கொடுக்கிறார்கள். அந்த ஆயிரம் ரூபாய்க்கு வேலை செய்து முடிந்த பிறகு பலமுறை அலைந்து திரிந்தால்தான் 6 மாதம், ஒரு வருஷம் கழித்து இன்னொரு பகுதி பணம் கொடுக்கிறார்கள். இப்படிப் போனால் வீடு எப்படி கட்ட முடியும்? கொடுக்கின்ற பணம் 4,000 ரூபாய். அதை 2 வருஷம், 3 வருஷமாகக் கொடுத்தால், எப்படி அதற்கு சாமான்கள் எல்லாம் வாங்கி கட்ட முடியும்? விலைவாசி நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது. வீட்டைக் கட்டி பாதியில் நிறுத்தினால் காற்று, மழை, வெயிலுக்குத் தாக்குப்பிடிக்குமா? இப்படிப்பட்ட சிரமங்கள் இருப்பதால் வாங்குகின்ற கடனைக்கொண்டு வீட்டையும் கட்டிமுடிக்க முடியவில்லை; கடனைத் திருப்பிக் கொடுக்கவும் முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த நேரத்தில் நான் கறாராக ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். வீடு கட்டுவதற்கு என்று நீங்கள் சாங்ஷன் செய்யும் பணத்தை சாங்ஷன் ஆகி 2, 3 மாதத்திற்குள் மொத்தப் பணத்தையும் கொடுத்துவிடுங்கள். இல்லை என்றால் அவர்களுக்குப் பணம் இல்லை என்று சொல்லிவிட்டால்கூட பரவாயில்லை. 500, 1,000 ரூபாய் செலவழித்து அலைந்து திரிவதாவது அவர்களுக்கு மிச்சமாகும்.

அதைப்போன்று இன்றைக்கு ஜாதிக் கொடுமைகள் இருக்கின்றன. இந்தியாவில் இருக்கிற பல மாநிலங்களிலும் இருப்பதற்கு தமிழ்நாடு ஒன்றும் ஜாதிக் கொடுமையில் இளைத்துவிடவில்லை. வடமாநிலங்களில் கடந்த 30 ஆண்டுகளாக இல்லாத கொடுமை இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. அந்த மக்களை கண்ட கண்ட இடங்களில் சுட்டுத்தள்ளுகிறார்கள்; நெருப்பிலே போடுகிறார்கள். அது பத்திரிகையிலும் வருகிறது. ஆனால் இங்கேயும் பல இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக நண்பர் மொக்கையன் அவர்கள் சொன்னதைப்போல இந்த அருந்ததி சமூகத்தினர் மிகவும் கேவலமாக நடத்தப்படுகிறார்கள். அவர்கள் இன்றைக்கும் மற்றவர்கள் வாழும் தெருவிலே நடக்கக்கூடாது; நேரில் நின்று பேசக்கூடாது; மேல் துண்டை கம்புகூட்டிலே எடுத்து வைத்துக்கொண்டு, குனிந்து நின்றுதான் பேச வேண்டும்; நிமிர்ந்து நிற்கக்கூடாது, இன்றைக்கும் அப்படி இருக்கிறது.

அதைப்போல அந்த மக்களுக்கு சுடுகாட்டுக்குப்போக பாதை வசதி கிடையாது. சமீபத்திலே கூட பார்த்தோம், சுடுகாட்டுக்குப் பிணத்தைக் கொண்டுபோகும்போது தடுக்கப்பட்டு, அவர்கள் பிணத்தை கீழே இறக்கிவைத்துவிட்டு, போலீஸ் ஸ்டேஷனில் வந்து ரிப்போர்ட் கொடுத்து, அதன்பிறகுதான் சுடுகாட்டுக்குப் போய் பிணத்தை அடக்கம் செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்குச் சுடுகாட்டுக்குத்தேவையான இடம் கொடுக்க வேண்டும். அந்தச் சுடுகாட்டுக்குச் செல்ல சரியான பாதை வசதி செய்துதர வேண்டும். எந்த இடத்திலும் சுடுகாட்டுக்கு இடம் இல்லை; பாதை வசதி இல்லை என்ற நிலை வரக்கூடாது.



அதைப்போல இன்றைக்கு அரிசன மாணவர்கள் விடுதிகளில் எந்தவிதமான வசதியும் கிடையாது. சேர் கிடையாது, படுக்க பாய் கிடையாது; நாற்காலி கிடையாது. அந்த விடுதிகள் நடைபெறுவது எல்லாம் பெரும்பாலும் தனியார் கட்டிடங்களில்தான். அந்த விடுதிகளிலே பன்றிகளும், மற்ற மிருகங்களும் போகக்கூடிய அளவுக்கு பழுதடைந்திருக்கின்றன. இதை ஏன் சரிசெய்யவில்லை என்றால் அரசாங்கத்திலிருந்து பணம் வரவில்லை, ஆர்டர் வரவில்லை என்று சொல்கிறார்கள். கட்டிடச் சொந்தக்காரர்களை ரிப்பேர் செய்து கொடுக்கக்கூடாதா என்று கேட்டால், எங்களுக்கு வாடகையே வரவில்லை; வீட்டை காலி செய்து கொடுத்தால் போதும் என்று சொல்கிறார்கள். அதனால் தான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் நேரடியாக அந்த இடங்களைச் சென்று பாருங்கள். அப்போது உங்களுக்கேத் தெரியும். அதன் பிறகாவது சீர்செய்ய வழி பிறக்கும்.

அதைப்போல மதுரையில் ஜனா விடுதி இருக்கிறது. அதற்கு ஜன்னல் கிடையாது, அங்கே மாணவர்கள் படுப்பதற்கு பாய் கிடையாது. மழை பெய்தால் தண்ணீர் உள்ளே போகிறது. கலெக்டர் ஆபீஸ் பக்கத்திலே தானே இருக்கிறது; அவரிடம் நீங்கள் சொல்லக்கூடாதா என்று மாணவர்களைக் கேட்டால் பல தடவை சொல்லிவிட்டோம்; வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். ஆனால் ஒன்றும் செய்யவில்லை என்று மாணவர்கள் சொல்கிறார்கள். இந்த மாதிரி எல்லா ஊர்களிலும் இருக்கிறது. இதைப்போக்க உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களுக்கு வேண்டிய மேசை, நாற்காலி போன்றவற்றையும் உடனடியாக வாங்கித்தர ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று அரசு செயல்படுத்திவரும் திட்டங்களைப் பரிசீலிப்பதற்காக மாநில அளவிலே, மாவட்ட அளவிலே ஆலோசனைக் குழு போடவேண்டும். அப்படி அமைத்தால் தான் ஏதாவது பிரச்னை எழுந்தால் அதை சால்வ் செய்ய முடியும், அவர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றனவா என்று ஆராய முடியும். ஆகவே, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் கண்டிப்பாக அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக ஏற்கனவே ஆலோசிக்கப்படும், போடப்படும், முதலமைச்சர் அவர்களிடத்திலே அந்தக் கோப்பு இருக்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்டது. அந்தக் கோப்பு என்ன ஆயிற்று, முதலமைச்சர் அவர்கள் அது குறித்து என்ன சொல்கிறார் என்பதை அமைச்சரவர்கள் அதிகாரிகள் மூலமாகக் கேட்டு, இங்கே அறிவிக்க வேண்டும். அப்படி அந்தக் குழுவை அமைக்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பகல் உணவுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரும்போது வரட்டும். ஆனால் இன்றைக்கு போடப்படும் மதிய உணவு நிலைமை என்ன என்ப தைப் பார்ப்போம். மதிய உணவுக்காக அரசு 10 பைசா கொடுக்கிறது. பஞ்சாயத்து யூனியன்கள் 10 பைசா கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. இன்றைக்குப் பல பஞ்சாயத்து யூனியன்களில் அது கொடுக்கப்படவில்லை. நிதியில்லை, கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிடுகிறார்கள். அதனால் இந்தப் பத்து பைசாவையும் வாங்கிக்கொண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றாத நிலைமை இருக்கிறது. இன்றைக்குள்ள நிலைமையில் இந்த 10 பைசாவை வாங்கி மதிய உணவு கொடுக்க முடியுமா? இப்போது 22 பைசா கொடுப்பதாக நீங்கள் அறிக்கையில் சொல்லியிருந்தாலும், இந்த 22 பைசாவை வைத்துக்கொண்டு ஒரு வேளை உணவு கொடுக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அனுபவ ரீதியாக இந்த 22 பைசாவைக் கொடுக்கமுடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். ஏற்கனவே 10 பைசா கொடுத்தோம். இப்போது 22 பைசா கொடுக்கிறோம் என்று சொன்னாலும், அந்த வகையில் நீங்கள் பெருமைப்பட்டுக்கொண்டாலும், ஒரு மனிதனுக்கு ஒரு வேளை உணவு 22 பைசாவுக்குக் கொடுக்க முடியுமா? அதிலே பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன. தலைமை ஆசிரியர் பாடங்கள் சொல்லித் தருவதை விட்டு விட்டு, சமையல் வேலைக்குப்போக வேண்டியிருக்கிறது. இந்த உணவு சமைப்பதிலும் பல்வேறு ஊழல் சரியான முறையில் அதைச் செய்யமுடியவில்லை. சமையல் செய்வதற்கு என்று தனியாக ஆட்கள் நியமிக்க வேண்டும். ஆசிரியர்களே இந்தச் சமையல் செய்வதை நிறுத்தவேண்டும். ஒருவேளை உணவுக்கு குறைந்த பட்சம் 35 பைசா அல்லது 50 பைசா கொடுக்கவேண்டும். நாமே போய்ச் சாப்பிடுகிறோம், 5ரூ. 6ரூ. ஆகிவிடுகிறது. 30–35ரூபாய்க்கு சாப்பிடுகிறவர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. ஒரு சாதாரண உணவு 5ரூ. 6ரூ. ஆகிவிடுகிறது. ஆகவே, இந்த மதிய உணவுக்காக கொடுக்கப்படுகிற தொகை 35 பைசா அல்லது 50 பைசா என்கிற அளவிற்கு உயர்த்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.ஆர்.டி.பி. அடிப்படையில் அரசாங்கம் அங்கீகரித்துள்ள தொழில்களைத் துவங்குவதற்காக அரிசனங்களுக்கு என்று சில தொழில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்குக் கடன் வசதிகளை அந்த வங்கிகள் அளிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் எந்த வங்கியும், கூட்டுறவு வங்கிகள் உள்பட, அந்த கடன் சலுகைகள் அளிக்க முன்வரவில்லை, போய்க் கேட்டால், சொல்கிறார்கள், பத்திரம் கொண்டுவா, ரிக்கார்ட்ஸ் கொண்டுவா, வில்லங்க சர்ட்டிபிகேட் கொண்டுவா, ஜாமீனுக்கு ஆள் கொண்டுவா என்று சொல்கிறார்கள். தாழ்த்தப்பட்டவனுக்கு பத்திரம் ஏது? வில்லங்க சர்ட்டிபிகேட் எதற்கு வாங்குவான், யார் ஜாமீன் போட வருவார்கள்? இ தயெல்லாம் அரசு கண்டும் காணாதது போல் இருப்பது சரியல்ல. ஆளும் கட்சி உறுப்பினர்கள் இதிலே உள்ள திட்டங்களை வரவேற்று,



பாராட்டிவிட்டுப் போய்விடுகிறார்கள். ஆனால் அனுபவரீதியில் அவர்களும் இந்த இன்னல்களுக்கு ஆட்படுகிறார்கள். ஆகவே, இந்த நிலையை அரசு தவிர்க்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கூட்டுறவு வங்கியில் ஆடு வளர்ப்புத் திட்டத்திற்காக
கடன் கேட்டு, அதற்காக 1,000 ரூ. டிபாசிட் தொகை கட்டி
விட்டார்கள். 1 வருஷம் ஆகிறது. இன்னும் லோன் கொடுக்க
வில்லை. மானேஜர் என்ன சொல்கிறார் என்றால், தமிழ்நாடு
அரசாங்கம் உத்தரவு போடலாம், ஆனால் எங்களுக்கு சரியான
சான்றிதழ் கொடுக்கின்றவர்களுக்குத்தான் நாங்கள் லோன்
கொடுக்க முடியும் என்று சொல்கிறார். இந்த வங்கிகள்
அரசாங்கம் கொடுக்கும் சப்சிடியைப் பெற்றுக்கொண்டு சரியான
படி உதவி செய்வது கிடையாது. இதையெல்லாம் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். மேலும், தாழ்த்தப்பட்ட இலாகாவிற்குப் பொறுப்பு
வகிக்கும் அமைச்சர் அவர்களுக்கு இது சம்பந்தப்பட்டது இல்லை
என்று சொன்னாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் கருதி
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தலையிடவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுவதைப் பொறுத்தவரையில்,
947 பள்ளிக்கூடங்கள் இருப்பினும், 182 பேர்களுக்குத்தான்
வீடுகள் கட்டப்போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். தாழ்த்தப்
பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கும் பள்ளிகளில்
வேலைபார்க்கும் ஆசிரியர்களுக்கு எந்த நகரத்திலும், கிராமத்
திலும் வீடுகள் கொடுப்பது இல்லை, அதனால் பல இடங்களில்
சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது. வீடுகொடுத்தவர் ஓரிரு மாதங்கள்
கழித்து அவன் இன்ன சமூகத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்து
கொண்டு அவரை காலி செய்யவோ அல்லது மாற்றம் செய்யவோ
நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழக்கமாகிவிட்டது. ஆகவே, இந்த
182 வீடுகள் கட்டிக்கொடுத்தால் மட்டும் போதாது. அவர்களுக்கு
அதிக அளவிலே 500 அல்லது 1,000 வீடுகள் என்ற முறையிலே
வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால்தான்
ஒரு சில ஆண்டுகளிலேயாவது அவர்களுடைய வீட்டுப் பிரச்னை
களை நீங்கள் தீர்க்க முடியும்.

அதேபோல தாழ்த்தப்பட்ட, அரிசன நல இலாகாவிலே
யிருந்து, அந்தப்பகுதி மக்களுக்கு, அவர்கள் வாழும் இடங்களில்,
சாக்கடை வசதி, ரோடுவசதி போன்ற சுகாதார வசதிகள் செய்து
கொடுப்பதற்காக தனியாக ஒரு ஸ்கீம் இருப்பதாகச் சொல்
கிறார்கள். அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம்
கேட்டால் கூட, ஆமாம் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
ஆனால் எந்த ஊரிலேயாவது அரிசன மக்கள் வாழக்கூடிய பகுதி
களிலே இப்படி நல்ல முறையில் சாக்கடை வசதிகளை ஏற்படுத்தி,
தார்ரோடு போட்டுக்கொடுத்து, குடிதண்ணீர் வசதிகளை செய்து

கொடுத்து அந்த மக்களுக்கு நன்மை செய்திருக்கிறார்களா இந்த இலாகாவினர் என்றுபார்த்தால், ஒரு ஊரிலே கூட செய்ததாகத் தெரியவில்லை; எந்த ஊரிலும் அப்படிப்பட்ட வேலைகள் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஆனால் ஸ்கீம் இருக்கிறது.

உதாரணமாகச் சொன்னால், மதுரை மாவட்டத்தில் பழனி தாலுக்காவிலே, நானே அரிசன நலத்துறை அதிகாரிகளை அழைத்துக்கொண்டுபோய், அந்த மக்கள் வாழும் ஒரு ரோட்டைக்காட்டி, இதற்கு வேண்டிய வசதிகளை, சாக்கடை வசதி, ரோடு வசதிகளை செய்துக்கொடுங்கள் என்று கேட்டேன். அவர்களும் சரி என்று சொல்லிவிட்டு இரண்டு மூன்று நாட்கள் வந்து, கிழக்காலும், மேற்காலும் நடந்தார்கள். இன்ச் டேப்பைக் கொண்டு வந்து, என்னவோ அளந்துக்கொண்டு போனார்கள். ஆனால் அதற்குப் பிறகு 8, 9 மாதங்கள் ஆகின்றன. அந்த வேலைகள் நிலைமை என்ன ஆச்சு என்று தெரியவில்லை. கேட்டால் கோப்பு மேலேபோயிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது எங்கே மேலே போயிருக்கிறதோ தெரியவில்லை. இது மாதிரி ஏமாற்றம் தரக்கூடிய அறிவிப்புகளை கொடுத்து, மக்களுக்கு நல்லது செய்வதாக சொல்லி, ஆனால் செய்ய முடியாமல் மக்களை ஏமாற்றுகிறீர்கள், ஆகவே அந்த நடவடிக்கை சரியில்லை என்று கூறிக்கொள்கிறேன். ஏனெனில் சொல்லியிருக்கும் சலுகைகளே மிகமிக குறைச்சல். அதிலே சொன்னதைச் செய்யாமல் விட்டால், அந்த இலாகாவும், அந்த மக்களும் மிகமிக கீழான நிலைக்குத் தள்ளப்படுகிற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதைப்போலவே, கோவை, வட ஆற்காடு போன்ற மாவட்டங்களில்..........

(மணியடிக்கப்பெற்று, திரு. மெ. அ. இராசகுமார் அவர்கள் பேச அழைக்கப்பெற்றார்.)

திரு. மெ. அ. இராசகுமார் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டு ஆதித்திராவிட நல மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்துவைக்க ஆசைப்படுகிறேன்.



போல உண்மையிலேயே என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் அந்த நினைவிலிருந்து எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது என்பதையும் கண்கூடாகப் பார்த்தோம்.

புரட்சித் தலைவர் அவர்களின் அரசானது இந்த மானியக் கோரிக்கைகளின் மூலம் பல்வேறு திட்டங்களை வகுத்து ஆதி திராவிட நல மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு தொகைகளை இங்கே ஒதுக்கி மொத்தத்தில் கிட்டத்தட்ட 41 கோடி ரூபாய்க்கு மேலே செலவிட உத்தேசித்திருக்கிறது. குறிப்பாக இந்த அரசானது, ஆதிதிராவிட மக்களின் நல மேம்பாட்டுக்காக பல வகைகளிலே முயன்று இருக்கிறது. பட்டாக்கள் வழங்குவதிலும், மற்றும் குடிதண்ணீர் ரோடு வசதிகளை செய்து கொடுப்பதில் சிறந்த முயற்சி எடுத்து நல்ல தொண்டாற்றி வருகிறது அதை நாம் கண்கூடாக பார்த்திருக்கிறோம். ஆனால் இதற்கு முந்தைய அரசு, அரிசன மக்களின் நலம் பேணப்படவேண்டும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மைகள் செய்யப்படவேண்டும் என்று சொல்லி, அந்த இலாகாவை பெயரளவிற்கு வைத்திருந்ததே தவிர, எந்த விதத்திலாவது அவர்களுக்கு தொல்லைதான் கொடுத்துக் கொண்டிருந்தது என்பதை, ஒரு சில உதாரணத்தின் மூலம் இந்த அவையிலே இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974 ஆம் ஆண்டிலே இப்போது இராஜ்யசபா உறுப்பினராக இருக்கிற திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம் என்ற பெயராலே ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். அப்போது ஜெயங்கொண்டான் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான சின்னசாமி என்பவர், அந்த தாழ்த்தப்பட்ட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக பதிவு செய்துக்கொண்டார் என்பதற்காக, அப்போது பொறுப்பிலிருந்த அரசு, குறிப்பாகச் சொல்லப்போனால் எதிர்க்கட்சித் தலைவர் தலைமை பொறுப்பை ஏற்றிருந்த அரசு அவருக்கு பலவகையிலும் தொல்லை கொடுத்து, அவரை என்ன பாடுபடுத்தினார்கள் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். உங்கள் அனைவருக்கும்கூட அது பற்றி தெரிந்திருக்கும்.

(பிற்பகல் 12.40)

முன்பு திருச்சி கோட்டை போலீஸாரின் மூலமாக குற்றப்பிரிவு எண் 292/74 மூலம் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் முத்துக்கிளி என்பவர் தன்னை நான்கு பேர்கள் கெடுத்து விட்டதாக ஒரு புகார் கொடுத்திருந்தார். 16–3–74 அன்று கொடுக்கப்பட்ட புகாராகும் அது. அந்தப் புகாரிலே அவர்களுடைய விலாசம் சரியாக இல்லை. அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படவில்லை. இந்த நிலைமையிலே அந்த வழக்கு பெண்டிங்காக இருக்கின்றது. ஆனால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதைய ஆளுங்கட்சியிலிருந்து விலகி தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து விட்டார்

திரு. சின்னசாமி என்பதற்காக அவர் மீது 6 மாதம் கழித்து உண்மைக்கு மாறான வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கிலே அவர் பல கஷ்டங்களை அனுபவித்தார்...... (குறுக்கீடு) நல்ல வேளையாக நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. இதை எதற்காக சொல்கிறேன் என்றால் அவர் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார் என்பதற்காக முந்தைய அரசு அந்த அரிஜன வகுப்பைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரை......

திரு. ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து சென்ற சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களுடன் சென்ற ஜெயங்கொண்டான் சின்னசாமி அவர்களைப்பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார் என்று நான் கருதுகிறேன். திராவிட முன்னேற்றக்கழக அரசு அவருக்கு எதிராக நடந்து கொண்டதாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக்கொண்டு வருகிறார். அவரைப் பற்றிய செய்திகளைச் சொல்வதற்கு நாங்கள் கூட தயாராக இருக்கிறோம். அவற்றை அவர்கள் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களா என்பதைப் பற்றி கொஞ்சம் நினைத்துப் பார்த்துப் பேசவேண்டும்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, காவல்துறையினருக்கு ஒரு புகார் செய்து அந்தப் புகாரின் அடிப்படையிலே காவல்துறையினர் வழக்கு தொடர்வார்களேயானால் அதற்கெல்லாம் அரசாங்கம் தானா பொறுப்பு என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கு சம்பந்தமான தீர்ப்பு விவரங்களைச் சொல்கிறார். அது தவறான தகவல் என்றால் அதற்கு எதிர் தரப்பிலே இருந்து விளக்கங்கள் சொல்லலாம் ....

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, காவல் துறையினருக்கு யாரோ புகார் தருகிறார்கள் என்றால் அப்படி காவல்துறையினருக்கு தரப்படுகின்ற புகாரின்மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கின்றது என்றால் அது ஆளுங்கட்சியினர் எடுக்கின்ற நடவடிக்கையாகத்தான் கருதப்படுமா? அப்படிப் பட்ட கருத்தின் அடிப்படையிலே தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களா?

திரு. மே. அ. இராசகுமார்; தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அந்தக் கருத்தினை எதிர்க்கும் வகையிலே அந்த வழக்கை நடத்தியவன் நான் என்ற முறையிலே வேண்டும் என்றால் அந்தத் ர்ப்பைக் கூட இங்கே எடுத்து வந்திருக்கிறேன். இதிலே



கருத்தினைத்தான் இங்கே கூறி இருக்கிறேனே தவிர நானே தன்னிச்சையாக எதுவும் இங்கே சொல்லவில்லை. ஆகவே 1974 ஆம் ஆண்டு செப்டம்பரிலே சின்னசாமி என்ற ரிசர்வ் தொகுதி எம். எல். ஏ. அவர்களுக்கு எந்தெந்த வகையிலே கொடுமை இழைக்கப்பட்டது முந்தைய அரசால் என்பது அவர்களே தன்னுடைய வாக்கு மூலத்திலே எடுத்துக் கூறியதை இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன்.

இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி இருப்பதை வரவேற்று என்னுடைய தொகுதியின் சார்பாக ஒருசில கருத்துக்களை இங்கே கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

மருங்காவூர் தொகுதி, திருச்சி மாவட்டத்திலேயே மிகவும் பிற்பட்ட தொகுதி. அங்கே தொழிற்சாலை கிடையாது; அங்கே வான்மழையை நம்பி விவசாயம் செய்கின்ற மக்கள் தான் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அங்கே முன்பு பாலாற்றின் குறுக்கே ஒரு அணை கட்ட சில ஆண்டுகளுக்கு முன்பு திட்டமிட்டு அது பல ஆண்டுகளாக செயற்படுத்தப்படாமல் இருக்கின்றது. ஆகவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருச்சியிலிருந்து மதுரை செல்லும் சாலையைப் பொறுத்த வரையிலே 20 கிலோ மீட்டர் தூரத்தைக் குறைக்கின்ற ஒரு குறுகிய சாலை முன்பு ராணி மங்கம்மாள் அவர்களாலே துவரங்குறிச்சியிலிருந்து நத்தம் வரை போடப்பட்டது. ஆனால் அந்தச் சாலை இன்று பழுதுபட்டு கிடக்கின்றது. பழுது பார்க்க முடியாத நிலைமையில் அது இருக்கின்றது. ஆகவே அதைப் பழுதுபார்த்து 20 கிலோ மீட்டர் தூரத்தை குறைக்கின்ற அந்தப் பாதையினை நல்ல முறையிலே புதுப்பித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருங்காபுரி ஒன்றியத்தில் கலிங்கப்பட்டி கிராமத்தில் இதற்கு முன்னால் இருந்த கர்ணம் பல புறம்போக்கு நிலங்களை பண்ணையார் பெயரில் பட்டா வழங்கி ஹரிஜனங்களுக்கு நலன் கிடைக்காமல் அவர்களே அனுபவித்து வருகிறார்கள். அதுபற்றி மனு கொடுக்கப்பட்டு அது விசாரணையில் இருந்து வருகிறது. அந்த விசாரணையை விரைவில் முடித்து அந்த நிலங்களை ஹரிஜன மக்களுக்கு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன். வணக்கம்.

இந்த மானியக் கோரிக்கை மீது, ஆதிதிராவிடர், பழங்குடியினர் இவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடைவதற்காக நிதி இங்கே ஒதுக்கப்பட்டு, சென்ற ஆண்டுகளை விட வரக்கூடிய ஆண்டுகளில் என்னென்ன திட்டங்கள் என்னென்ன முறையில் இயங்கி அவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடைய வழிவகை காணவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மானியம் கொண்டு வரப் படுகின்றது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொண்டு மனித சமுதாயம் சுரண்டலற்ற சமுதாயமாக மாற்றப்பட்டு மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனை மதிக்க வேண்டுமென்ற உன்னதமான லட்சியத்தோடு சுரண்டலற்றதொரு சமுதாயத்தை உலகில் படைக்க வேண்டும் என்ற நோக்தோடு இந்த மானியம் கொண்டுவரப்பட்டாலும் இது நிறைவேற்றப்படுமா? நிறைவேற்றப்பட்டிருக்கிறதா, இதற்கு முன்னால் ஆதிதிராவிட மக்களுக்காக கொண்டுவரப் பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவா? என்பதை சற்று பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்

நம் நாடு சுதந்திரம் பெற்று கிட்டத்தட்ட 34, 35 ஆண்டுகள் உருண்டோடிவிட்டபோதிலும்கூட இன்றைக்கும் ஆதிதிராவிடர் நலன்கள், ஆதிதிராவிடர் மேம்மாடு ஆதிதிராவிடருக்கானப் பள்ளிகள், ஆதி திராவிடருக்கான வீட்டுவசதி, ஆதிதிராவிடர்களுக்கான காலனிகள், இவற்றிற் காக மானியக் கோரிக்கைகள் வந்துள்ள போதிலும் வெள்ளையன் வெளியேறியத்ற்குப் பின்னால் நம்நாடு சுதந்திரம் அடைந்தது; அந்தத் தாய் பெற்ற சுதந்திரக் குழந்தைக்கு சேனைப்பால் கொடுத்தவர்கள் யார்? என்று நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி சேனைப்பால் கொடுத்தவர்கள் எப்படிப் பட்டவர்கள், எந்த நோக்கத்தோடு உள்ளவர்கள் என்று பார்க்க வேண்டும். சமுதாயத்தை வாழ வைப்பதற்கு, சுரண்டலை ஒழிப்பதற்கு அவர்கள் முன்னுக்கு நிற்பார்களா? அப்படிப்பட்ட குணாதிசியங்கள் இருக்கிறதா? என்று பார்க்கிற போது இல்லை என்றுதான் சொல்லமுடியும். அந்த குணாதிசியங்களோடு அந்தக் குழந்தை வளர்ந்ததால்தான் இன்று நாட்டில் கள்ளப்பணம், கறுப்புப்பணம், மனிதனுக்குத் தேவையான உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தல், கள்ளநோட்டு அச்சடித்தல், மனிதனை மனிதன் சுரண்டுதல், மதியாமை, மனித உறவுகளை பிளவுப்படுத்தல், மதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால், இனத்தின் பெயரால், சண்டைகளை ஏற்படுத்துதல், யார் அதிகமாகச் சுரண்டு கிறார்கள், யார் குறைவாகச் சுரண்டுகிறார்கள் என்பது போன்ற சூழ்நிலை இருக்கின்றது

(பிற்பகல் 12. 50)

இப்படிப்பட்ட சூழ்நிலை இங்கே மட்டுமல்ல, நாடு முழுவதிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், இதற்கு என்ன காரணம்? என்பதை பரிசிலனை பண்ணாமல்



ஆதிதிராவிடர் நலத்தை பாதுகாப்பதால் மட்டுமே, நாட்டிலே ஏற்றத்தாழ்வுகளை சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியுமா என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்

இன்றைக்கு நாட்டிலே என்ன நிலைமை ஆதிதிராவிடர் களை விடுங்கள் அதற்குள் நான் போக வில்ல. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் என்று சொன்னால், அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள்தான். அது யாராக இருந்தாலும் பரவாயில்லை. அது எந்த இனத்தவராக இருந்தாலும் பரவாயில்லை அது எந்த வகுப்பினராக இருந்தாலும் பரவாயில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் இன்றைக்கு நிம்மதியாக வாழ்வதற்கு ஏதாவது உத்தரவாதம். இருக்கிறதா? இன்றைக்கு அவர்களுக்கு சுடுகாடு கிடையாது சுடுகாட்டிற்குப் போவதற்கும் பாதை கிடையாது. அதே நேரத்தில் இறந்த பிணத்தை தூக்கிக் கொண்டுப் போவதற்கு வழி கிடையாது என்று நாம் சுதந்திரம் பெற்று, 35 ஆண்டுகளுக்குப் பின்னால், இந்த மன்றத்திலே அதற்கு ஒரு மானியம், அதற்கு ஒரு விவாதம்' அதைப்பற்றி பரிசீலனை செய்து, மேலும் அவர்களுக்கு என்ன செய்யலாம் என்று ஆலோசனை செய்வது என்று சொன்னால், அது மிகவும் வருந்தத்தக்கது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்ன நடந்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தைப் பார்ப்போமேயானால் நாடு முழுவதும் இன்றைக்கு சுடுகாடு இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. யாராவது இல்லை என்று சொல்ல முடியுமா? இது ஆளுங்கட்சியிலே உள்ளவர்களுக்கும் தெரியும் ஆனால், சுடுகாடு இல்லை என்று சொல்ல முன்வரமாட்டார்கள் அதேமாதிரி, காங்கிரஸ் காரர்களுக்கும் தெரியும் அவர்கள் தான் சுதந்திரம் வாங்கித் தந்தவர்கள் என்று சொல்வார்கள் அவர்கள் கையிலே இருந்துதான், இந்தக் குழந்தை பிறந்தது. அப்படிப் பிறந்த குழந்தையை 35 ஆண்டுகளாக வளர்த்துக் கொண்டிருக் கிறோம். ஆனால், அந்தக் குழந்தை இன்றைக்கு அக்கிரமும் அநியாயமும் செய்கின்றது என்பதை நாமே சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னால், அது நமக்குத் தானே கேவலம் என்று அவர்கள் சொல்லமாட்டேன் என்கிறார்கள். ஆனால், உண்மை எப்படியும் வெளியே வர வேண்டுமா வேண்டாமா? ஜனங்கள் மத்தியிலே சொல்லித்தானே ஆக வேண்டும். அதுநம்முடைய கடமை.

ஆதி திராவிடர்களுக்கு ஊரைவிட்டு, ஒதுக்குப்புறமாக தனியாக காலனி அமைத்துக் கொடுத்தால், ஆதி திராவிடர் களும் மற்றவர்களும் சமமாக, ஒரு பரஸ்பாமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியுமா? அவர்களுக்குள் ஒரு பரஸ்பர உறவு வளர்ந்துவிட முடியுமா? மனித சமுதாயம் பரஸ்பரமான உறவைப் பங்கிட்டுக் கொள்ள முடியுமா? ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமுதாயத்தைக் கொண்டு வர முடியுமா? இன்றைக்கும் நாம் அவர்களைத் தனியாக ஒதுக்கி வைத்திருக்கிறோம். அவர்களுக்கென்று ஒரு தனியாக

மயானம் இருக்கிறது. அவர்களுக்கென்று தனியாக பள்ளிக்கூடம் இருக்கிறது. அவர்களுக்கென்று தனியாக கிணறு, பைப்பு போன்றவைகள் எல்லாம் இருக்கின்றது. அவர்களுக்கென்று தனியாக குடியிருப்பை ஒதுக்கிவிட்டு, அவர்களுக்கான வசதிகளையும் தனியாக ஒதுக்கி வைத்துவிட்ட பின்னர் எப்படி மனித சமுதாயம் ஒன்று சேர முடியும்? மனித உணர்வை எப்படி ஒன்றாக வளர்க்க முடியும்? என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலே காலனி முறை இருப்பதை, சேரி இருப்பதை, ஆதி திராவிடர்களுக்கு தனியாக குடியிருப்பு இருப்பதைத் தடுத்து நிறுத்தினால்தான், அவர்களுக்கு ஊருக்குள்ளே, கிராமத்திற்குள்ளே வீடுகளை அமைத்துக் கொடுத்தால் தான், எல்லோருடைய வீடுகளுக்கும் பக்கத்து பக்கத்திலே அமைத்துக் கொடுத்தால்தான் இணைந்து வாழ முடியும். அப்படி வாழும் போது அந்த மக்களோடு ஒன்றாகப் பேசிப் பழகுகின்ற நிலைமை, அவர்கள் குழந்தைகளும் இவர்கள் குழந்தைகளும் பழகிப் பேசினால்தான் அவர்களுடைய கலாச்சாரம், நடைமுறை' பழக்கவழக்கங்கள் நாகரிகம் எல்லாமே ஒன்றாக இரண்டறக் கலந்து மனித சமுதாயத்தினிடையே பரஸ்பர உறவை வளர்த்துக் கொண்டு ஒன்றாக இணைந்து வாழ முடியும். ஒரே வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அவர்களோடு சேர்ந்து வாழ முடியும் ஆகவே ஆதி திராவிடர் காலனி அரிசன காலனி என்றிருப்பதை வேறு சில முறைகளில் மாற்றிக் கொடுத்திருக்கின்ற சலுகைகளை வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே, இந்த மன்றத்திலே பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு என்ன காரணம் என்றால்—காங்கிரஸ்காரர்கள் என்று சொன்னால், அவர்களுக்குக் கோபம் வரும். காங்கிரஸ்கட்சி தன்னுடைய கையில் ஆட்சியை எடுத்தபோது ஆதிதிராவிடர்களுக்கென்று தனியாகப் பிரித்து வீடுகளைக் கட்டி எங்கேயோ ஒரு மூலையிலே கொண்டுபோய் ஒதுக்கி விட்டார்கள், இந்த மக்களை ஒதுக்க அன்றைக்கே ஆரம்பித்து விட்டார்கள். அதை அவர்கள் சிந்திக்க மறுக்கிறார்கள் அதனால்தான் அவர்கள் வாழ்க்கையில் மற்ற சமுதாயத்தினரோடு சேர்ந்து வாழ்வதற்கு உதவவில்லை அவர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன் அவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டும் அவர்கள் இரண்டற கலந்து வாழ்வதற்கு வழிவகைகளை செய்தல் வேண்டும்

மலைவாழ் மக்கள் என்று சொல்கிறபோது காடுகளிலே மிருகங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு இனத்தவர் அங்கே அவர்கள் அருமையான பல பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள் ஏலக்காய் உற்பத்தி செய்கின்றார்கள். தேன் எடுக்கிறார்கள், மிளகு உற்பத்தி செய்கிறார்கள் சீயக்காய் உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் காடுகளிலே குடியிருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? அவர்களுக்கு மருத்துவமனை இருக்கிறதா? பள்ளிக்கூடம் இருக்கிறதா? வேறு ஏதாவது வசதிகள் செய்து



கொடுக்கப்பட்டிருக்கின்றதா? அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை கிராமங்களிலே இருக்கின்ற இடங்களில் உள்ள கடைகளுக்கு தங்கள் தோளிலேயே சுமந்துவந்து வியாபாரிகளிடம் கொடுக்கிறபோது அந்த வியாபாரிகள் அதை வாங்குகிறபோது கொள்ளையடிக்கிற சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் அப்பாவிகள், அவர்கள் விவரம் தெரியாதவர்கள், அவர்கள் படியாதவர்கள், மொழி புரியாதவர்கள் தனி பாஷையைப் பேசிக்கொண்டிருக்கிறவர்கள், என்ன விலைக்குக் கொடுப்பது, எவ்வளவு வாங்குவது என்பதைத் தெரிந்துகொள்ள அவர்களால் முடியவில்லை அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். ஆகவே கிராமங்களிலே உள்ள விஷயம் தெரிந்தவர்கள், படித்தவர்கள், அதிகாரிகள் அவர்களை ஏமாற்றக்கூடிய நிலைமை இருக்கின்றது. அங்கே இருக்கின்ற வர்த்தக சூதாடிகள் அவர்களுக்கு வருடக் கணக்கிலே கடனாக அரிசியைக் கொடுத்து, கோதுமையைக் கொடுத்து, சோளத்தைக் கொடுத்து, கேழ்வரகைக் கொடுத்து வெற்றிலைப்பாக்கு புகையிலையைக் கொடுத்து சோப்பைக் கொடுத்து கடனாகக் கொடுத்து அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு நியாயமான விலையைக் கொடுக்காமல் கொள்ளையோ கொள்ளையென்று அடிக்கிறாகள். அப்படிச் செய்வதன் மூலமாக அவர்களை நிரந்தர கடனுக்குள்ளாக்குகிறார்கள்.

அதைக் கண்காணித்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலையை வைத்து வாங்க வழிவகை செய்யப்பட வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். மலைவாழ் மக்கள் சம்பந்தப்பட்ட வகையில் என்னுடைய தொகுதியிலே மலையோரத்திலே தம்பம்பதி என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு குடிநீர் கிடையாது, லைட் கிடையாது, பள்ளிக்கூடம் கிடையாது மருத்துவமனை கிடையாது காட்டுக்குள்ளே இருக்கின்ற செடிகொடிகளை வைத்து குடிசைகளை அமைத்துக் கொண்டு வாழ்கிறார்சள். அங்கே ஒருவர் செத்து விட்டால் அந்த எல்லைக்குள்ளேயே புதைக்கமுடியாது அங்கிருந்து எங்காவது எடுத்துப் போக வேண்டும் அப்படி எடுத்துப்போகிறபோது நிலச்சொந்தக்காரர்கள் மறுக்கிறார்கள். எடுத்துப்போகக் கூடாது என்று தடுக்கிறார்கள். அதற்கு என்று ஒரு தடம் வேண்டும், சுடுகாடு வேண்டும். ஆனைமலை ஒன்றியத்திலே உள்ள குறைகளைப் பற்றி பலமுறைகள் சொல்லியுங்கூட இன்னும் அவைகள் போக்கப்படவில்லை அவைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நாசமலை என்ற பகுதி அங்கே இருக்கின்றது, அங்கேயும் அவர்கள் இருக்கிறார்கள். பாறையிலே கல்லிலே அவர்கள் குடிசைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்

[திரு. ஏ. டி. கருப்பையா] [1982 மார்ச் 17

நானே நேரடியாகப் பார்த்து ரொம்ப வருதப்படக்கூடியத் சூழ்நிலை இருந்தது. அவர்களுக்கு எந்தவிதமான வேலையும் கிடையாது, வெட்டியும் கிடையாது, அவர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே அவர்களையெல்லாம் கிராமங்களுக்கு கொண்டுவரவேண்டும், கிராமங்களிலே . வீடுகளைக் கட்டிக் கொடுத்து கிராம மக்களோடு இணைத்து வாழச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து அரசு அச்சகத் தொழிலாளர்கள் சம்பந்தமாக 1,2 விஷயங்களைச் சொல்லி உரையை முடித்துக் கொள்கிறேன். அரசு அச்சகம் அரசு மானியத்திலிருந்து நடத்தப்படுவது. அது வியாபார ரீதியில் நடத்தப்படும் அச்சகம் அல்ல.

(பிற்பகல் 1.00)

இங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் என். ஜி. ஓ.க்களாகவே தொன்று தொட்டு இருந்து வருகின்றனர். அவர்களுக்கு என். ஜி. ஓக்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பள கமிஷன் அடிப்படையில் சம்பளம் மற்றும் எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுகின்றது. அதன்படி 1979—ம் ஆண்டு பிறப்பிக்கப் பட்ட அரசு ஆணை எண் 1119—ன் படி 18 மாத மருத்துவ விடுப்பு வழங்க வேண்டும். இரவு நேரப்படி ரூ 1·50 என்பதை 5 ரூபாயாகவும் தேநீர்படி மாதம் 7.50 என்பதை ரூபாய் 25 ஆகவும் உயர்த்த வேண்டும். இல்லையென்றால் முன்பு போலவே 6 அவுன்ஸ் டீயும், 2 அவுன்ஸ் பாலும் வழங்க வேண்டும், வாரிசுகளுக்கு வேலை, சீருடை, சீரான கேன்டீன் வசதிகள் செய்து தரவேண்டும். அரசு அச்சகம் துவங்கி 150 ஆண்டு முடிந்ததை முன்னிட்டு தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்க வேண்டும், அந்த போனஸ் வழங்கப்படவில்லை அதையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அச்சுகோர்க்கும் பிரிவு தொழிலாளர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படும்போது உற்பத்தி திறனை காரணம் காட்டாமல் வழங்க வேண்டும்; அவுட் டர்னை மைனசாக காரணம் காட்டி பழி வாங்கும் போக்கை கைவிட வேண்டும். அப்படி பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 17]

திரு. ஆர். சக்கரபாணி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலஅமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சிற்றுரையைத் துவங்கலாம் என்று கருதுகிறேன். மானியக் கோரிக்கை குறிப்புகளைப் பார்த்து, படித்ததற்குப் பின்னால் ஆதி திராவிடர் மக்களுடைய வாழ்க்கை நலனை, இந்தச் சமுதாயத்தை வாழவைக்க வேண்டுமென்ற எண்ணத் தோடு இந்த நலத்துறையிலே அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன். அந்த உணர்வை நான் இருகூறாகப் பிரித்துப் பார்த்தேன். ஆதிதிராவிட மக்கள் வாழ்க்கையிலே வளமாக வாழ வேண்டுமென்றால் அடிப்படை கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். ஒருவனுக்கு இரண்டு கண்களும் ஒருசேர பார்க்கிறபோது எவ்வாறு பார்வை நன்றாக இருக்குமோ அது போன்று கல்வித்தரம் இருக்குமானால் ஒரு கண் பார்வை பெற்றவனாக கருதப்படுவான், அதற்குப் பின்னாலே அவர் களுக்குப் பொருளாதார ஏற்றம் இருக்குமானால் இரண்டாவது கண்ணைப் பெற்றவனாக கருதப்படுவான், அந்த வகையிலே முதலிலே பார்க்கிறபோது ஒதுக்கியிருக்கிற தொகையிலே பாதிக்கு மேலாக கல்விக்காக ஒதுக்கியிருப்பதைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் நலத்துறையில் பல்வேறு சலுகைகளைச் செய்திருந்தாலும் மேலும் சீர்செய் வதற்கு வேண்டிய குறிப்புகளைத் தீட்டியாக வேண்டும். அதில் இருக்கிற குறைபாடுகளை பார்க்க வேண்டும். கல்வி என்று எடுத்துக்கொண்டால் பள்ளிக் கட்டிடங்கள் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு எவ்வாறு தரம் கெட்டு சீர்கெட்டு இருக்கிறதோ அதைத்தான் பார்க்க முடிகிறது. தாழ்மையான வேண்டுகோளாக நான் கல்விக்காக 50 சத வீதத்தை ஒதுக்கியிருப்பதை, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை கேட்டுக் கொள்வதெல்லாம் பள்ளிக் கட்டிடத்தைச் சீர்படுத்தியாக வேண்டும் பள்ளிச்சிறார்கள், சிறு குழந்தைகள் செல்கிற போது ஒன்றைப் பார்க்கிறோம். காக்கி உடை அணிந்தவர்கள் என்றைக்கும் முரட்டுத்தனமாக இருப்பார்கள் என்று கூறப்படுகிறது. அதற்கு மேலாக சிவப்புத் துண்டை நாம் பார்ப்போமானால் புரட்சிக்கு ஆட்படுவோம். அதே போலத்தான் சிறு குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்கிறபோது பள்ளிக் கட்டிடம் சரியாக இல்லையென்றால், நிச்சயமாகக் கல்வி ஏற்றம் வராது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். அந்தக் கல்வி ஏற்றத்தைக் கொண்டுவர இந்த ஆண்டு சிறப்புத் திட்டமாக வைத்து, பள்ளிக் கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டு மென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடத்தைச் சரிப்படுத்தியதற்குப் பிறகு, நண்பகல் உணவைப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவர் அரசு நல்ல முறையில் அதில் கவனம் செலுத்தியுள்ளது. இதற்கு முன்னா லிருந்த அரசுகள் எல்லாம் கொடுத்தன, ஆனால் புரட்சித் தலைவர், அவர்களது குறைகளை உணர்ந்தவர். தாயுள்ளம் கொண்டவர், ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்·

ரூ. 100 கோடி அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நான் பணிவன்போடு சொல்லிக்கொள்வதெல்லாம் இந்த ஆதி திராவிடர்களுக்கு ஒரு தொகையை ஒதுக்க வேண்டும்.

கல்வித் துறையை இரண்டாக நான் பார்க்கிறேன். ஆதி திராவிடர் நலத் துறையில் அமைக்கப்பட்ட கல்வித்துறை ஒன்று. அதற்கு அதிகாரிகளாக இருப்பவர்கள், ஆதி திராவிட நல அதிகாரிகளாக இருக்கிறார்கள். இன்னொரு பக்கம் கல்வித் துறை இருக்கிறது, இந்த இரண்டையும் இன்றைக்கு நாம் ஒன்றாகப் பார்க்கிறபொழுது கல்வித்துறையிலே இருக்கிற அதிகாரிகள் அந்த ஆதி திராவிடர்கள் நலத்துறையால் நடத்தப்படுகிற பள்ளிகளை ஒழுங்காகக் கண்காணிக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாகக் கிடையாது. நான் பணிவான வேண்டுகோளாக விடுப்பதெல்லாம் கல்வித்துறை இதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். அதிக அக்கறை காட்டி பள்ளிப் பிள்ளைகள் ஒழுங்காகப் பள்ளிக்கு வருகிறார்களா அவர்களுடைய படிப்பு ஒழுங்காக இருக்கிறதா என்பதை நன்கு கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இன்னொன்றைச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். பள்ளிப் பிள்ளைகளுக்குப் புத்தகம் வழங்குகின்ற திட்டம். புத்தகம், சீருடை வழங்கப்படுகின்றபொழுது, ஆதி திராவிட நலத்துறையினரால் வழங்கப்படுகின்ற அதே நேரத்தில், கல்வித்துறை அதில் அக்கறை காட்ட வேண்டும். கல்வித்துறை அக்கறை காட்டுமானால், ஆதி திராவிடர் நலத்துறையில் இருப்பவர்கள் சற்றொப்ப விழிப்புணர்ச்சி கொள்ள முடியும். பள்ளிக்கூடம் ஆரம்பித்ததற்குப் பின்னால், 1 மாதம் அல்லது 2 மாதம் காலக்கெடுவை வைத்து பள்ளிக்கூடங்களுக்குப் புத்தகம் வழங்கப்படுகிறதா என்பதைத் தயவு செய்து பார்க்கவேண்டும் அந்தப் புத்தகம் வழங்கப்படாமல் இருப்பதன் காரணமாகத்தான் பிள்ளைகள் படிக்க முடியவில்லை. ஏழை அடித்தட்டில் இருக்கிற ஆதி திராவிட மக்கள், பொருளாதாரத்தில் சீரழிக்கப்பட்ட அவர்கள் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றபொழுது புத்தகத்தை அரசு கொடுக்கும் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், புத்தகம் வழங்குவதில் அரசு தாமதப்படுத்துமானால், பிள்ளைகள் சரியாகப் படிக்க இயலாது. தாயுள்ளம் கொண்ட இந்தப் புரட்சித் தலைவர் அரசும் மாண்புமிகு அமைசசர் அவர்களும் இதிலே அக்கறை செலுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகள் காப்பகங்கள், காப்பகங்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதி திராவிடர் நலத்துறையால் அமைக்கப்படும் காப்பகங்களுக்கு இடம் ஒதுக்கப்படுகிறதா என்று பார்த்தால் இதுவரையில் இல்லை. நலத்துறையால் ஒதுக்கப்படுகிற மானியமெல்லாம் இன்றைக்குப் பல்வேறு கால கட்டங்களில் விடுதிகளுக்காகவும் பள்ளிக்கூடங்



களுக்காகவும் இதுபோன்ற ஸ்தாபனங்களுக்காகவும் வாடகைத் தொகையாகத்தான் சென்று கொண்டிருக்கிறதே தவிர, அவர்களுடைய வாழ்வை உயர்த்துகின்ற வகையிலே அவை இல்லை என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும். எனவே, காப்பகங்கள், 3 வயது முதல் 5 வயது வரை உள்ள அந்த இளம் சிறார்கள் தங்குகின்ற காப்பகங்கள் நல்ல முறையிலே இருக்க வேண்டும். அங்கு குழந்தைகளுக்கு ஒழுங்குகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும், தேசத் தலைவர்கள் அண்ணா போன்றவர்கள், பெரியார் போன்றவர்கள், காந்தி போன்றவர்கள் இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அவர்கள் மனதிலே ஈர்க்கின்ற அளவுக்கு இந்தச் சிறார்கள் நல்ல வகையிலே பாடம் கற்றுக் கொள்ளும் வகையில் புரட்சித் தலைவர் அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால். அதற்கு இடம் ஒதுக்கவேண்டும். இடம் ஒதுக்கி, அந்த இடத்திலே பள்ளிக் கட்டிடத்தைக் கட்டி, காப்பகங்கள் அமைக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் கூறுவதெல்லாம் மாணவர்கள் இங்கெல்லாம் மாணவர்களுக்கென்று விடுதிகளைக் கட்டி இருக்கிறார்கள். அந்த விடுதிகளில் இன்றைக்கு நாம் ஒன்றைப் பார்க்கின்றோம். நான் ஒன்றைக் குறிப்பிட்டு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பொன்னேரி தொகுதியில் மாணவிகளுக்கு ஒரு இடத்தை நாம் பெற்றோம். அந்த இடம் ரோடு ஓரமாக இருந்தது. அங்கே ஒரு சிலர் அந்த இடம் ரோடு ஓரமாக இருக்கக்கூடாது, ஆதி திராவிட மாணவியர் விடுதி, வேறு ஓரிடத்தில் இருக்க வேண்டுமென்று சொல்லி, வேறிடத்தைக் காட்டுகிறார்கள். இது போன்ற நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். புரட்சித் தலைவர் அரசு ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆதி திராவிட மக்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதென்றால், நிலம் ஆர்ஜிதம் செய்து, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்றால், அந்த இடம் கிராமத்திற்கு அருகாமையில் இருக்க வேண்டுமென்று ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. இந்தக் காலத்தில் மாணவியருக்கு விடுதி கட்டும்போது அது சாலை ஓரத்தில் இருக்கக் கூடாது என்ற நிலைமையை உருவாக்குகிறார்கள். அதற்கு இந்த அரசு கண்காணிப்பாக இருந்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாணவர்களுக்கு உதவித் தொகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தத் தொகை கல்லூரி மாணவர்களுக்கு இது வரை சென்று சேரவில்லை, ஆண்டு இறுதித் தேர்வை அவர்கள் நெருங்கிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இது வரையில் பணம் சேரவில்லையென்றால் அவர்கள் இறுதித் தேர்வுக்குச் செல்ல முடியாது. எனவே தயவுசெய்து அந்தத் தொகையினை வெகு விரைவில் கொடுப்பதற்குத் தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

நம்முடைய புரட்சித் தலைவரின் அரசு, ஏழை தாழ்த்தப்பட்ட மக்களும், மலைவாழ் மக்களும் பயனடையக்கூடிய வகையில் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அந்த மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக உழவர்களுக்கு மாடு வழங்கும் திட்டம். பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கான திட்டம், தொழில் கருவிகளை அவர்களுக்கு வழங்குவதற்கான திட்டம், தட்டச்சு நிலையங்கள் வைப்பது போன்ற திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. இவைகளெல்லாம் அந்த மக்களை வாழவைக்கின்ற திட்டங்களாகும். இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்றால் யதார்த்த நிலையோடு அணுக வேண்டும். ஆதி திராவிட மக்கள் இன்றைக்கு தங்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்பதைக்கூட தெரிந்து வைத்துக்கொள்ளவில்லை. ஆகவேதான் அவர்கள் ஏழ்மையிலே உழன்றுகொண்டிருக்கிறார்கள். காலையில் எழுந்து விவசாயம் பார்க்கச் செல்வதற்குத்தான் அவர்களால் முடிகிறதே தவிர கல்விக்காகச் செல்ல முடியவில்லை. கல்விக்காகச் செல்லாத நிலையில் அவர்களுடைய பொருளாதார நிலையும் ஏறவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அந்த மக்களுடைய கல்விக் கண்ணைத் திறப்பதற்காகத் திட்டம் வைத்திருக்கின்ற இந்த அரசு அந்தத் திட்டங்களைப் பற்றி அவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அதை மற்றொரு கண்ணாகப் பாவித்துச் செயல்பட வேண்டும். எனவே, இந்தத் திட்டங்களை அவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அவைகளைத் திரைப்படமாக எடுத்துக்காட்ட வேண்டும். இதன் காரணமாக அவர்கள் தங்களுக்குள்ள சலுகைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

(பிற்பகல் 1'10)

அடுத்து, நான் இன்னொன்றையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், அவர்கள் ரிடையர் ஆகும் வரையில், அதாவது அந்தப் பதவியிலிருந்து வீட்டுக்குப் போகும் வரையில் அவர்களேதான் தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவரைப் பார்க்கின்றபொழுது அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் ஒழுங்காக இருப்பதில்லை. பிள்ளைகளும் ஒழுங்காகப் படிப்பதில்லை. எனவே, அதில் ஐந்தாண்டுக் காலம் அல்லது பத்தாண்டுக் காலம் என்ற ஒரு வரைமுறையை வைத்தாவது, அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னால் அவர்களை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை ஆதி திராவிட மக்கள் பொருளாதாரத்தில் ஏற்றம் காண வேண்டுமென்பதற்காக பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும், அவைகள் ஆதி திராவிட மக்களுக்கு முழுமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். உழுதவன் கணக்குப் பார்ப்பது என்று சொல்வார்கள். மேலும் செட்டியார் ஆற்றிலே இறங்கினாலும் அனாவசியமாக



இறங்கமாட்டார் என்று சொல்வார்கள். அந்த வகையில் இந்தச் சங்கங்கள் சிறப்பாக நடக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். பால் சொசைட்டிகளில் ஆதி திராவிடர்களுக்கு முழுமையாக வாய்ப்புக் கொடுத்தால்தான் நிலைமைகள் சரியாக இருக்கும் என்பதைக் கோடிட்டுக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

ஏழை ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் இருக்கிறது. இதை யதார்த்த உலகத்தோடு பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் கண்ணாடி முன் முகத்தைப் பார்ப்பது போல் தெரியும். கிராமங்களில் என்ன நிலைமை என்பதைப் பார்க்க வேண்டும். ஆதி திராவிட மக்கள் இருக்கும் இடங்களைச் சுற்றியிருக்கும் நிலங்கள் பட்டா நிலங்களாக இருக்கும். அவைகள் வெட் லேன்ட்' விவசாயத்திற்கு ஏற்ற நிலம். அவற்றை ஆதி திராவிடர்கள் பெற முடியாது என்று சட்டம் கூறுகிறது. அப்படிப்பட்ட சட்டம் இன்றைக்கு நாட்டிலே எதற்காக இருக்கிறது என்பதைச் சில நேரங்களிலே புரிந்துகொள்ள முடியவில்லை. ஏன் இந்தக் காரியங்களைச் செய்கிறார்கள் என்பதும் புரியவில்லை. இருந்தாலும் அந்தச் சட்டத்தை மீறி நாம் செல்ல முடியாது. ஆகவே இதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். நான் சொல்ல வருவது என்னவென்றால், காலனியைச் சுற்றியிருக்கும் நிலங்களை அவர்கள் நிச்சயமாகப் பெற முடியவில்லை. புறம்போக்கு நிலம் இருக்கும்; அது ஆழமான பகுதியில் காணப்படும். மழைக்காலத்திலும், மழைக்காலம் முடிந்து மூன்று நான்கு மாதங்கள் வரையிலும் அங்கே எங்கு பார்த்தாலும் தண்ணீர் தேங்கிக் குட்டைகளாகக் காட்சியளிக்கும். அந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுத்த பிறகு அங்கே வீடு கட்டிக் கொண்டால் அந்த வீடு நல்ல முறையில் அமையுமா? நல்ல முறையில் அமைவது கிடையாது. எனவே அந்தச் சட்டத்திற்கு விதிவிலக்கு கொடுக்க முடியுமா என்று பார்த்து வேண்டுமென்றால் அவசரச் சட்டமாவது பிறப்பித்து அந்த மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நிலங்கள் கிடைத்த பிறகு அரசு பார்வையிட்டு நிர்ணயித்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வீட்டு வசதிக் கழகத்தில் இன்றைக்கு நான்காயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த நான்காயிரம் ரூபாயைப் பெற்றுக் கொண்டு ஒருவர் எப்படிக் கட்ட முடியும், நாம் எண்ணுவதெல்லாம் ஏதோ கிராமப்புறத்தில் இருக்கின்ற அரிசனங்களின் வீட்டைச் சுற்றி மரம் வைத்திருக்கிறார்கள், மற்றவைகள் இருக்கும் என்று கருதிக்கொண்டிருக்கிறோம்.

மரம் எதற்காக என்று சொன்னால். கிராமத்திலே நாம் பார்க்கலாம். பனை மரத்தைத் துண்டுபோட்டு அதை வாரைகளாக அறுத்து துண்டுபோட்டு பயன்படுத்துவார்கள். இன்றைக்குப் பனை மரங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் பகுதியிலே இருக்கின்றதா என்றால் இல்லை. அதற்குப் பின்னாலே பூவரச மரம் இருக்கும் அல்லது வேப்ப மரம் இருக்கும். அந்த மரத்தை அறுத்து கதவுகள் நிலைகள் செய்துகொள்ள முடியும். ஆனால்

[திரு. ஆர். சக்கரபாணி] [1982 மார்ச் 17

அந்த மரங்கள் இப்போது இல்லை. இவைகள் எல்லாம் அவர்கள் ரூ. 4000 பெற்றதற்குப் பின்னால், மரத் தொட்டிக்குச் செல்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி ஏற்றத்தில் அந்த ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் நிச்சயமாக வீடு கட்ட முடிவதில்லை. எனவே, தயவுசெய்து நான் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம் இந்தத் தொகையை உயர்த்தியாக வேண்டும் அல்லது கச்சாப் பொருட்களாக மரம், நிலை, கதவு இவைகள் தேவையா அல்லது ஓடுகள் தேவையா என்பதை அறிந்து கொடுத்தாக வேண்டும, அவைகளைக் கொடுத்து, செலவுக்கு மட்டும் காசு கொடுத்தால்கூட அது நன்மையாகத் தோன்றும் அதை விட்டுவிட்டு ரூ. 4000 கொடுப்பது நிச்சயமாக அவர்களுக்கு பயன் தருகின்ற நிலையில் இல்லை என்பதைநான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அந்தத தொகையை அரசு பரிசீலனை செய்து ரூ. 4000-ஐ ரூ. 7 அல்லது 3 ஆயிரமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், மற்றொன்றையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள் கிராமங்களுக்குச் செலலுவதே இல்லை. அல்லது தொகுதிகளுக்குச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டை சொன்னார்கள். நான் 2 ஆண்டு காலமாக இந்த சட்ட மன்றத்திலே இருக்கிறேன். என்னுடைய தொகுதிக்கு மட்டும் 4 முறைகள் அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதிக்கு வந்ததால் அவர் எல்லா இடங்களுக்கும் சென்றதாக நான் கூறவில்லை. இளம் பிள்ளைகளை நாம் வளர்கின்றபோதே கண்டு கொள்ள முடியும் என்னுடைய வரலாற்றில் நான் அறிந்த வரையில், 5 வயது முதல் நான் ஓரளவுக்கு பக்குமானவன். நான் 5 வயது முதல் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எந்த ஒரு அமைச்சரும் ஒரு தொகுதியில் 4 முறை வந்ததாக தெரியவில்லை அல்லது வந்தார்களே அவர்கள் விடுதிகளைப் பார்த்திருக்கிறார்களா அல்லது நலத்துறை பள்ளிக் கூடங்களைப் பார்த்திருக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக கிடையாது. ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் 4 முறைகள் வந்து என்னுடைய தொகுதியில் உள்ள 5 மாணவர்கள் விடுதிகளைப் பார்வையிட்டார்கள், அவர் பார்த்ததற்குப் பின்னால் ஓரளவுக்கு நிலைமைகள் மாறி இருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டை வேறு வகையில் சொல்லியிருக்க முடியும் அவர்கள் நேரடியாகப் பேசியிருக்கலாம். அப்படிப் பேசுவதை விட்டுவிட்டு குற்றச்சாட்டு போல இங்கே சொல்வதை நான் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், எதை சொல்வதற்கும் இந்த அவையிலே உரிமை இருக்கிறது.— சுவரை இடித்துவிட்டு சித்திரம் எழுத வேண்டுமென்று ஒருவர் கருதுவாரேயானால், அவர் நிச்சயமாக அதிலே வெற்றி காணமுடியாது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் மீது எல்லாக் குற்றச்சாட்டையும் கொண்டு வந்துவிட்டு சுவரை இடிக்கிறீர்கள். அதே நேரத்தில் சித்திரம் எழுத வேண்டுமென்று கருதுகிறீர்கள். நிச்சயமாக எழுத முடியாது.



1982 மார்ச் 17]

திரு. என்.பழனிவேல்: துணைத் தலைவர் அவர்களே. நான் பேசியதை மனதிலே வைத்துத்தான் அவர் பேசுகிறார் என்று கருதுகிறேன். ஆனால், நான் அமைச்சர் மீது வேண்டுமென்றே குற்றம் சாட்டவில்லை. நான் சொன்னது முழுவதும் உண்மை. என்னுடைய தொகுதிக்கோ அல்லது பக்கத்து தொகுதிக்கோ அமைச்சர் அவர்கள் வரவேயில்லை என்பது உண்மை. ஆகவே, அவர்கள் நான் சுவரை இடித்துவிட்டு சித்திரம் எழுத வேண்டுமென்று சொன்னதாக கூறும் உதாரணம் பொருத்தமாக இல்லை. அவருடைய தொகுதி சென்னைக்கு ஒட்டியதாக இருக்கிறது. ஆகவே. வந்திருக்கலாம், என்னுடைய தொகுதி மதுரை மாவட்டம், ஆகவேதான் சொன்னேனே ஒழிய, குற்றம் சாட்டுவதற்கான முறையிலே சொல்லவில்லை.

திரு. ஆர். சக்கரபாணி: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் நான் கோடிட்டுக், காட்ட விரும்புவது, அங்கே அமைச்சர் அவர்களைக் கண்டு பேசியதற்குப் பின்னால், புரட்சித் தலைவர் அவர்களின் அனுமதியின் பேரில் ஒரு மாணவியர் விடுதி கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் வல்லூர் கிராமத்தில் ஏறத்தாழ 35 ஆண்டு காலமாக ஒரு பள்ளிக்கூடம் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளியை 8 ஆம் வகுப்பிலிருந்து உயர்நிலைத் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று பல்வேறு நிலைகளில் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம் அதற்கான ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன . அது வர இருப்பதாக நான் கருதுகிறேன். இந்த ஆண்டிலே அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் அதைப் பெற்றுத்தருமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பள்ளிக் கட்டிடங்கள் சரியாக இல்லை. வல்லூர் கிராமத்திலுள்ள அந்தப் பள்ளிக் கட்டிடத்தைப் பற்றி ஒரு நாள் பத்திரிகையிலே பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினர் பிறந்த ஓர் ஊரில் இப்படிப்பட்ட கட்டிடம் இருப்பது அவருக்கு அவமானமாக இருக்கிறது. 'அது மாட்டுக் கொட்டகை போல் இருப்பதாக எனக்கே சவால் விடுகிற வகையிலே 'தீச் சுடர்' என்ற பத்திரிகையிலே வந்தது. நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இதுபோன்ற நிலைமைகளை முதலிலே பார்க்க வேண்டும். எங்களைப் போன்றவர்கள் தொகுதியிலே செய்து கொடுத்தால்தான், மக்கள் நம்பிக்கையைப் பெற முடியும் என்பதைத் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பள்ளிக்கூடத்தை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். கும்முடிப் பூண்டி நகரத்திலே உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு மாணவர் விடுதி இதுவரை இல்லை. அங்கே ஒரு நலத்துறை விடுதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சக்கரபாணி] [1982 மார்ச் 17

ஒன்றை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த நாட்டிலே ஜாதி மத வேறுபாடு தீர்ந்தாக வேண்டும். அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கிறது. இந்த நேரத்தில் கலப்பு திருமணங்கள் செய்துகொள்பவர்களுடைய குழந்தைகள், கலப்பு திருமணங்கள் செய்துகொள்பவர்களுக்கு எல்லா வகையிலும் முன்னுரிமை கொடுத்து கொண்டு இருக்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்பதை நான் மறுக்கவில்லை. புரட்சித் தலைவர் அவர்களையும், இந்த அரசையும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில கலப்பு திருமணங்களை ஊக்குவிக்கின்ற வகையிலே நலத்துறையால் கொடுக்கப்படுகின்றதா என்று பார்த்தால் அவர்களுடைய கணக்கை நம்மால் பார்க்க முடியவில்லை தற்போது கோவில் அறங்காவல் மூலமாக கலப்பு திருமணங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு தோழரும், ஒரு சகோதரியும் எங்கே நாடுகிறார்கள் என்று பார்த்தால் அவர்கள் நாடுகின்ற இடம் எல்லாம் புரட்சித் தலைவர் முதல் அமைச்சர் அவர்களுடைய நிதியைத்தான் நாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் என்று நாடிக்கொண்டிருக்கிறார்கள். நலத்துறையை நாடுவதற்கு இன்னும்கூட அவர்களுக்குத் தெரியவில்லை. நான் படிக்கிற நேரத்தில ஒன்றைப் படித்தேன். அவர்களுக்கு 8 கிராம் தங்கப் பதக்கம் கொடுக்கப்படுகிறது என்று ஒரு கணக்கை கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் கணக்கு நிச்சயமாகத் தெரிந்தாக வேண்டும். நலத்துறையினால் கலப்புத் திருமணங்கள் செய்து கொள்பவர்களுக்கு கொடுக்கப்படுகிறது என்பதை நான் கோடிட்டுக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். நான் முன்பு கூறியதைப்போல் திரைப்படங்களில் காட்டுகின்ற வகையிலே அதைப் போன்ற ஒரு திட்டத்தை காட்டவேண்டும். அதே நேரத்தில் நான் முன்பு கூறியதைப்போல் குடிமக்களுக்கு இடங்களை ஆர்ஜிதம் செய்யும் போது, அதை முனைந்து செய்தால்தான் அவர்கள் வாழக்கூடிய இந்த நாட்டில் பல இடங்களில் மாறுகால், (மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

(பிற்பகல் 1.20)

திரு. ஆர். சக்கரபாணி: இந்த திட்டங்களையெல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கும் மற்ற அனைத்து திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் புரட்சித் தலைவர் அவர்களையும் மற்ற அமைச்சர்களையும் பாராட்டி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஏ. இராமலிங்கம்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன், குறிப்பாக கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தனையோ நல்ல காரியங்களையும், நல்ல திட்டங்களையும்



1982 மார்ச் 17] [திரு. ஏ. இராமலிங்கம்]

நிறைவேற்றி செயல்பட்டது. ஆனால் இந்த அரசு அதனை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்னென்ன திட்டங்கள் தீட்டினார்களோ அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது, என்பதனை கூறிக்கொள்ளுகிறேன். குறிப்பாக கடந்த எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் முதல்வராக இருந்த போது, ஏறக்குறைய தமிழ்நாட்டிலே அத்துணை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், சிமெண்ட கட்டிடம் அதாவது கூரையே இருக்கக் கூடாது என்ற ஒரு திட்டத்தைத் தீட்டி ஒரே ஆண்டில் ஏறக்குறைய 40 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தந்தார்கள். ஆனால் இந்த அரசு தற்போது இந்த திட்டத்தைக் கைவிட்டுவிட்டது மட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கிய 3 கோடி ரூபாயை அந்த தாட்கோ நிறுவனத்திற்கு சம்பளமாக கொடுத்து வருகிறது. இருப்பினும் அந்தத் தொகையை தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செலவு செய்வதாக கூறிக்கொள்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுமார் 40 ஆயிரத்திற்கு வீடுகள் கட்டி இருக்கிறார்கள், இருந்தாலும் அவர்களுக்குக் கடன் கொடுக்கிற திட்டம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். கடன் முதல் தவணையாக ஏறக்குறைய ஒரு ஆயிரத்தைக் கொடுத்துவிட்டு அப்படியே விட்டு விட்டார்கள். இப்போது அந்த வீடுகள் எல்லாம் தரைமட்டமாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள அத்துணை அரிசனக் காலனிகளுக்கும் ஒரே ஆண்டில் வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கும், மயானப் பாதைக்கு. சாலை வசதி செய்வதற்கும் கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு வாரியம் அமைத்தது. அதை இந்த அரசு நிறுத்தி விட்டது. மீண்டும் இந்த அரசு அதைப்போன்ற ஒரு வாரியத்தை அமைக்க முன்வர வேண்டும். அரிசனங்களுக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு மயான வசதி, மயானத்திற்குச் செல்ல பாதை வசதி, வீட்டுமனைப் பட்டா வசதி குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக ஆங்காங்கே இருக்கின்ற தனித் தாசில்தார்களுக்கு தற்போது ஜீப் வசதி இல்லை. அதனால் அவர்கள் உடனுக்குடன் மக்கள் குறைகளைச் சென்றறிந்து நடவடிக்கை எடுக்கவசதி இல்லை. உடனடியாக அரிசன நல தாசில்தார்களுக்கு ஜீப் வசதி செய்து கொடுத்து, வேலைகளை முடிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1 முதல் 12 ஆம் வகுப்புவரை படிக்கும் அரிசன மாணவ மாணவியர்களுக்கு அரிசன நலப் பள்ளியில் படித்தால்தான் இலவசமாக நோட்டு, புத்தகம், சீருடை வழங்கப்படுகிறது. மற்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு புத்தகம், சீருடை இலவசமாக வழங்கப்படுவதில்லை. இந்த நிலையை மாற்ற வேண்டும். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எந்தப் பள்ளியில் படித்தாலும் அவர்களுக்கு இலவச நோட்டு, புத்தகம், சீருடைகள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. இராமலிங்கம்] [1982 மார்ச் 17

ஆதிதிராவிட மக்களுக்கு தற்போது இட ஒதுக்கீட்டில் 18 சதவீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இது சில தனியார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இதர நிறுவனங்களிலும் அமுல்படுத்தப்படவில்லை. அதைக் கண்காணிக்க அரிசன நலத்துறை மூலம் ஒரு உயர்மட்ட அதிகாரியை நியமித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் சரியாகக் கிடைக்கிறதா என்பதைப் பார்த்து, அந்த மக்கள் பயனடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் பள்ளியிலோ அல்லது கல்லூரியிலோ படிப்பதற்கு வருமான வரி, சொத்து மதிப்புச் சான்றிதழ் கேட்கிறார்கள். அதனால் பல தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்பட்டு சில நேரங்களில் அவர்கள் படிக்க முடியாமல் செய்துவிடுகிறார்கள். அவர்களுடைய வருமானத்தையோ, சொத்தையோ பார்க்காமல் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சான்றிதழை வைத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய எல்லாச் சலுகைகளையும் எல்லோருக்கும் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், சென்ற கல்வி ஆண்டில் முன் அறிவிப்பு இன்றி பட்டப்படிப்பை நிறுத்தி விட்டதால் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், புவனகிரி பகுதிகளிலுள்ள தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மாணவர்கள் பட்டப் படிப்பு படிக்க முடியாமல் மிகவும் அவதியுறுகிறார்கள். அதனால் தற்போது சிதம்பரத்தில் அரிசன நலத்துறையால் நடத்தப்பெற்று வரும் அரசினர் நந்தனார் உயர்நிலைப் பள்ளியை கல்லூரியாக மாற்ற வேண்டும். அப்படி மாற்றினால் அந்தப் பகுதிகளிலுள்ள தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சிதம்பரத்தில் நடைபெற்றுவரும் நந்தனார் பெண்கள் உயர்நிலைப்பள்ளியிலும் விடுதியிலும் படிக்கும் சுமார் 2,000 மாணவியர்களுக்கு குடிப்பதற்கும், குளிப்பதற்கும் தண்ணீர் வசதியில்லை. இது சம்பந்தமாக அரிசன நல இயக்குநரிடம் நேரில் எடுத்துக் கூறினேன். அவர்கள் தற்காலிக குழாய்க்கிணறு அமைத்துத்தந்து, 3 பைப்புகள் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். வயதுவந்த பெண்கள் வெளியில் சென்று குளிக்க முடியாததால் அங்கே அவர்களுக்கு நிரந்தர தண்ணீர் வசதி செய்து கொடுத்து, அந்த விடுதியின் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மேலும் இந்த அரசு 5 ஏக்கருக்கு குறைவான ஏழை விவசாயிகளின் கடன்களை ரத்து செய்தது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுமார் 10 ஆண்டுக் காலத்திற்கு முன் கறவை மாடுகள் வாங்கவும், தொழில் நடத்தவும் கடன்கள் வழங்கி, அதைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கும் அரிசன மக்களின் கடன்களை ரத்து செய்யவில்லை, அந்தக் கடன்களை எல்லாம் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 17]

குறிப்பாக என்னுடைய காட்டுமன்னார் கோவில் தொகுதி கொள்ளிட வடக்குக் கரையில் வல்லம்படுகை முதல் அணைக்கரை வரையில் அரிசன காலனிகளில் வாழும் மக்களுக்கு பாதை வசதியே இல்லை. கொள்ளிடத்தில் வடக்குக்கரையினை சீர் செய்து, நல்ல தார் சாலையாக அமைத்துத் தந்தால் கொள்ளிடத்தில் கரையும் வலுப்பெறும்; தாழ்த்தப்பட்ட மக்களின் சாலை வசதியும் நிறைவுபெறும். கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தும் இதுவரையில் ஒன்றும் செய்யவில்லை, இந்த ஆண்டிலாவது அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

கொள்ளிடம் வடக்குக்கரைச் சாலையில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கு சரியான முறையில் போக்குவரத்து வசதி செய்துதரப்படவில்லை. எனவே இந்த ஆண்டாகிலும் கொள்ளிடம் வடக்குக்கரை சாலையினை சிறந்த முறையில் அமைத்து, அந்த அரிசன மக்கள் பயனடையும் வகையில் வல்லம்படுகையிலிருந்து அணைக்கரை வரையில் வடக்குக் கொள்ளிடக் கரைக்கு அவசியம் சாலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அரிசன நலத்துறை நடத்திவரும் காட்டுமன்னார் கோவில் ஆண்கள், பெண்கள் அரிசன மாணவர் விடுதிகளுக்கு நீண்டகாலமாக நல்ல வசதி இல்லை. அனைத்து அரிசன மாணவர் விடுதிகளுக்கும் அரிசன நலத்துறையின் மூலமாக கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டு மன்னார் கோவில் வட்டத்திலும் சிதம்பரம் வட்டத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல நன்செய் நிலத்தில் வீட்டுமனைப் பட்டாக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசு அவர்களுக்கு மானியம் கொடுத்து அல்லது அரசின் செலவிலே அந்த நன்செய் நிலத்தை தூர்த்து சீர்செய்து கொடுத்து அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே வீடுகள் கட்டிக் கொள்ள வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; பேரவையில் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(மாலை 4.00)

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, இங்கே அவைமுன் வைக்கப்பட்டுள்ள ஆதித்திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நான் முதற்கண் நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக பல முற்போக்குச் சிறப்புத் திட்டங்கள் இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ளதால் இந்தக் கோரிக்கையை ஆரம்பத்திலேயே வரவேற்று, பாராட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன். காலையிலே இருந்து இந்த மன்றத்திலே ஆதிதிராவிடர் நலத் துறை சம்பந்தமாக உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஆதித்திராவிட மக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்யவேண்டும், அவர்கள் முன்னேற்றம் அடையச் செய்ய இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று சொன்னார்களே தவிர ஆதித்திராவிட மக்கள் அவதிக்குள்ளாகின்றனர், கொடுமைப்படுத்தப்படுகின்றனர் என்று யாரும் குறிப்பிடாததிலிருந்து தமிழகத்தில் ஆதித்திராவிடர் சமுதாயம் எந்த அளவிற்குச் சீரோடும் சிறப்போடும் இங்கே இருந்து வருகிறது என்று பெருமைப்படுகிறேன்.

இந்த மன்றத்திலே நான் இப்போது சொல்வதை யாரும் தவறாகப் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக இந்தியாவின் தற்காப்பு அமைச்சர் ஒருவர் இந்த நாட்டின் தேசத்தந்தை தேசப்பிதாவாகக் கருதிய, அரிசன மக்களுக்கு ஆலயப் பிரவேசத்தை செய்வித்த, சுதந்திரப் பிதா மகாத்மா காந்தி அவர்களின் சிலையைத் திறந்து வைத்தார்கள். அவர் திறந்து வைத்தார் என்ற அந்தக் காரணத்தினால் அந்தச் சிலைக்கு தீட்டுப் பட்டு விட்டது என்று சொல்லி, வேதம் ஓதி சுத்தப்படுத்தினார்கள். அதை இந்த மன்றம் அறியும். நாடு அறியும். இப்படி இருந்த இந்தியத் துணைக் கண்டத்திலே தான் தமிழ்நாடு ஒரு பகுதியாக இருக்கிறது, இந்தத் தமிழகத்தில் அப்படிப்பட்ட கொடுமைகள், அப்படிப்பட்ட வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகள் இல்லாதது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இங்கே சீரோடும் சிறப்போடும் ஆதித்திராவிட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். பிறமாநிலங்களில் ஆதிதிராவிட மக்கள் சுடுநீராலும், சுடுநெருப்பாலும் கொடுமைப்படுத்தப்பட்டு வருகின்ற நேரத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாக காட்சியளித்துக்கொண்டு இருக்கிறது. அந்தப் பூங்காவில் ஆதித்திராவிட பெருமக்கள் 'ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே' என்று ஆனந்தக் கூத்து ஆடிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி தமிழகம் அமைதியாக இருப்பதற்கு காரணம் அந்த ஆதித்திராவிட மக்களோடு இணைந்து நின்று, அந்தப் பெருமக்களுக்குச் சமமாக நின்று, அவர்களுக்குச் சமவாய்ப்பு கொடுத்து, அந்தச் சமுதாயத்தோடு தோளோடு, தோள் நின்று காரியங்களை ஆற்றிவரும் இந்தத் தமிழ் சமுதாயத்திற்கும் நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அமைதிப்பூங்காவாக இருப்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும், பெரும் தலைவர் காமராஜரும் செய்த சேவைகள், அந்தச் சமுதாயத்தை பண்படுத்தி, வளம் உள்ளதாக ஆக்கியுள்ளது. அந்தச் சமுதாயத்தைக் கட்டிக்காக்கின்ற பொறுப்பினை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்டு, அந்தச் சமுதாயத்தை காப்பாற்றி வருகிறார்கள். அதற்காக அவர்களுக்கு அந்தச் சமுதாய மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காகப் பெருமைப் படுகிறேன்.



மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் ஆதித்திராவிடப் பெருங்குடி மக்கள் பல நன்மைகளை அடைந்து வருகிறார்கள். குறிப்பாக மாணவர் சமுதாயம் நல்ல வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடைந்து வந்துகொண்டு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட உடனேயே மாணவர்கள் விடுதிகளில் இறைச்சி உணவைக் கொடுத்து, அவர்கள் ஆக்கபூர்வமான சிந்தனை பெறுவதற்கு வாய்ப்பு கொடுத்து, அந்த உணவுத்திட்டத்திலே ஒரு சிறப்பான மாற்றத்தைச் செய்தார்கள் அதைப்போலவே விடுதியில் உள்ள மாணவர்கள் உதவித் தொகையை அதிகரித்துக் கொடுத்தார்கள். பல்தொழில் வளர்ச்சிப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான இடங்கள் 1971—72—ல் 5.83 சதவீதம் என்று இருந்தது, 1981—82—ல் 21 சதவீதம் என்று உயர்த்தப்பட்டது, பொறியியல் கல்லூரிகளில் 1971—72—ல் 4.37 சதவீதம் என்று இருந்தது. 1980—81-ல் 18.6 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்தக் கணக்கைப் பார்த்தால் மாண்புமிகு புரட்சித்தலைவர் ஆட்சியில் ஆதித் திராவிட மக்கள் எந்த அளவிற்கு வளர்ச்சி அடைந்து இருக்கிறார்கள் என்பதை எடுத்துச்சொல்லலாம்.

இப்படி மாநில அரசு பணிகளிலும் 18 சதவீத விழுக்காட்டை நிறைவேற்றுவதற்கு உயர் அதிகாரக் கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தியிருப்பது நாம் பெருமையோடு சொல்லிக் கொள்ள வேண்டிய ஒன்று. அதேபோல அறநிலையத் துறையிலும் ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்த ஒருவரை கட்டாயமாக நியமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதை பின்பற்றி, இப்போது அமைக்கப்பட்டிருக்கிற உயர்நிலைக் குழுவிலே சட்டமன்றப் பேரவையிலிருந்து 3 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிக்கிறார்கள். அந்த 3 உறுப்பினர்களும் ஆதித்திராவிட பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதிலேயிருந்து, இந்த ஆட்சி எத்தனை திறம்பட அந்த மக்களுக்கு உதவி செய்வதில் காரியங்களை ஆற்றுகிறது என்பதோடு, அந்த சமுதாயத்தின் முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதும் விளங்குகிறது.

அதைப்போலவே ஆதித்திராவிடர்களின் குடியிருப்புகளுக்கு மின் வசதி, பாதை வசதி, குடிநீர் வசதி, மயான பாதை வசதி திருமணக்கூடங்கள் கட்டித் தருகிற வசதி, மனைப்பட்டா வழங்குதல் போன்ற எத்தனையோ நடவடிக்கைகளை மிகவும் பாடுபட்டு எடுத்து வருகிறது. வறுமை கோட்டிற்கு கீழே வறுமையில் வாடும் மக்களில் பெரும்பான்மையினர் ஆதித்திராவிடர் வகுப்புகளைச் சேர்ந்தவர்களாகவே அதிகம் இருக்கிற

காரணத்தாலே 100 கோடி ரூபாயில் ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்தை அளித்து, அவர்களுடைய பசிப் பிணியை போக்குவதில் அரசு கண்ணும் கருத்துமாக இருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன். அந்த திட்டம் மிகச் சிறந்த திட்டம் என்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதை வரவேற்றிருக்கின்றனர்.

ஆதித்திராவிடர் பழங்குடியினர் பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்டத்தை, அன்பும் பண்புமாக மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கண்காணித்து செயல்படுத்தி வருகிறார்கள். என்னுடைய குளத்தூர் தொகுதியில் உள்ள ஆவூர் உயர்நிலைப் பள்ளிக்கு மாணவர்கள் விடுதி ஒன்று அமைத்துத் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். கீரானூர், இலுப்பூர் விராலிமலை போன்ற இடங்களில் உள்ள மாணவர் விடுதிகளில் உள்ள எண்ணிக்கையை அதிகரித்து தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் புதுக்கோட்டையில் உள்ள புத்தாம்பூர் என்ற கிராமத்தில் ஆதித்திராவிட மாணவர்களுக்கென்று தனியாக ஆதித்திராவிடர் உயர்நிலைப்பள்ளி ஒன்று அமைத்துத் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல தாலுக்கா அளவில் ஆதி திராவிட மக்களுக்கென்று தனியாக ஒரு தாசில்தார் அலுவலகம் அமைத்துக் கொடுத்து, அவர்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை திறம் படச் செய்வதற்கு வழி வகுத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல ஆதித்திராவிட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், ஆதித்திராவிட நலத்துறையின் பொறுப்பிலே தாலுக்கா அலுவலங்களில் தனியாக ஒரு அலுவலரை நியமித்து ஆதித்திராவிடர்களின் வேலைகளை—தேவைகளை விரைந்து செய்து கொடுப்பதற்கு வழிவகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நமது தமிழகத்தில் ஆதித்திராவிட பழங்குடிமக்களுக்கு என்று பல நன்மைகள் ஏற்பட்டு வருகின்றன. ஆனால் ஆதித் திராவிடர் நலனில் பெரிதும் உரிமை கொண்ட பேரறிஞர் அண்ணா, டாக்டர் நாவலர் போன்ற திராவிட இயக்கத் தலைமையின் கீழே, பட்டித்தொட்டிகள் எல்லாம், அவர்களுடைய நலனைப் பற்றி முழக்கம் செய்த அம்மையார் மாண்புமிகு சத்தியவாணி முத்து அவர்களிடமிருந்து பதவியை பறித்தார்கள். அப்படி பதவி பறிக்கப்பட்ட அந்த நிலையைப் போக்க, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த அந்த அம்மையாருக்கு மீண்டும் பதவி கொடுக்க, தரம் அறிந்து, தகுதி அறிந்து, மாநிலங்களின் அவையிலே மத்திய சர்க்காருடைய அமைச்சராக பதவி உயர்வு தந்து, ஆதிதிராவிடர்களுக்கு பெருமை தேடி தந்தார், மாண்புமிகு புரட்சித் தலைவர் (குறுக்கீடு)

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் நாவலர் அவர்கள் எங்களுடைய அமைச்சரவையில் இருக்கும்போது தான் சத்தியவாணி முத்து அம்மையார் பதவி விலகினார் என்பதை உறுப்பினர் அறிவாரா? அன்று நாவலர் அவர்கள் எதிர்த்து ஏதாவது சொன்னாரா? அதையும் தெளிவாக்கினால் நல்லதாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது டாக்டர் நாவலர் அவர்களுக்கு அதிகாரம் இருந்திருக்கிறதா என்பதை அவர் அறிவாரா? அப்போது டாக்டர் நாவலர் அவர்களுக்கு எவ்வளவு அதிகாரம் இருந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரியுமோ தெரியாதோ.

டாக்டர் கே சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெரிய பதவியில் இருக்கிறபோது பதவிவிலக்கப்பட்டார் என்பது உண்மைதானே? அதை மறுக்கிறாரா இல்லை ஏற்றுக் கொள்கிறாரா?

திரு. கெ. சொக்கலிங்கம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அம்மையார் சத்தியவாணி முத்து அவர்கள் ...... (குறுக்கீடு)

மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர் ; இப்படியெல்லாம் ஒரு உறுப்பினரின் பேச்சில் குறுக்கிட்டுப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. இதை அனுமதிப்பது இன்றைக்கு ஒரு நாள் தான். இதை முன் மாதிரியாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

மாண்மிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே உங்களுடைய மேலான பார்வைக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். முடிவுஎடுப்பது உங்களுடைய விருப்பம். மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருவர் பேசிக்கொண்டிருக்கிறார். அது குறித்து தங்களுடைய கருத்துக்களை மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அவர்களுக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கும் போது சொல்லிக் கொள்ளலாம். இப்படி பதிலுக்கு பதில் கொடுத்துக் கொண்டிருந்தால் சரியாக இருக்காது. அவர்களுடைய தலைவரும் தற்போது இங்கில்லை.

[மாலை 4.10]

ஆகவே அதைப்பற்றி அவர்கள்தான் பதில் சொல்வது நியாயமாக இருக்கும். எனவே இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விட்டு அவருக்கு தொடர்ந்து பேசுவதற்கு வாய்ப்பளித்துவிட்டு அதற்குப் பிறகு மாற்றுக் கருத்துக்கள் இருக்குமேயானால் அந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் பேசுகின்றபோது சொல்வதுதான் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது நல்ல யோசனை.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, விவாதத்தை நீட்டிக்கவோ, அல்லது அவர்களுக்கு நான் பதில் கொடுக்கவோ விரும்பவில்லை என்றாலும் மாண்புமிகு

[திரு. த. மாரிமுத்து] [1982 மார்ச் 17

சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களின் பதவி பறி போனதை யாரும் மறுக்க முடியாது. அது யாரால், எவரால் என்ற பேச்சுக்கு இடம் இல்லை. பதவி பறிக்கப்பட்டது. அது யாரால் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி பதவி போன அம்மையார் அவர்களை மாநிலங்கள் அவையிலே அமர்த்தி மத்திய சர்க்காரின் அமைச்சர் பதவியைப் பெற்றுத் தந்தவர் புரட்சித்தலைவர் அவர்கள் என்பதை ஆதி திராவிட மக்களின் சார்பாக நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. தன்னை இகழ்ந்தவர்களையும் மதித்துப் போற்றியது இந்த அரசு தான் என்பதை நாடறியும். அப்படிப்பட்ட நல்ல உணர்வுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்காகப் பல நன்மைகளைச் செய்து வருகிறார்கள்.

அமரர் கக்கன் அவர்களுக்கு அளித்த மரியாதையையும் மதிப்பையும் எண்ணிப்பார்த்து அப்படிப்பட்ட புரட்சித்தலைவர் அவர்களின் அரசை ஆதிதிராவிடர்களின் பேரரசு, பத்தரைமாற்றுத் தங்கம் என்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஆதி திராவிட மக்களுக்கு வேண்டிய காரியங்களை எல்லாம் செய்து வருகின்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களை வாழ்த்தி இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஆதிதிராவிட நலத் துறை அமைச்சரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனக்கு இந்த மாமன்றத்திலே ஆதிதிராவிடர் நல மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக முதலிலே நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுதுபொருள் அச்சுத்துறை என்ற தலைப்பைப் பொறுத்த வரையிலே இங்கே ஏறத்தாழ பல அலுவலகங்களிலே பாரங்களையும் பதிவேடுகளையும் அனாவசியமாக பதிவு செய்யப்பட்டு அவை கேட்பாரற்று கிடக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே தேவையற்ற படிவங்களை நீக்கியதிலும், படிவங்களின் அளவையும் அச்சடிக்கும் எண்ணிக்கையை குறைத்ததிலும் அரசின் செலவில் கணிசமான அளவு மிச்சம் ஏற்பட்டது என்று ஏற்பட்டிருக்கின்றது. இதே நிலைமை இருந்தால் அந்தத் துறையின் நிலைமை என்ன என்று நான் கேட்க விரும்புகிறேன். அதோடு மற்ற துறைகளுக்கும் உத்தரவைப் பெற்று முன் பணத்தைப் பெற்றுத் தான் அதற்காக அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றது என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றபோது ஏறத்தாழ 2 இலட்சம் ரூபாய் இதுவரையிலே பெறப்படாமல் நிலுவையாக இருக்கின்றது என்ற கணக்கு எப்படி வந்தது என்று புரியவில்லை. ஆகவே தொகை பெறாமல் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.



1982 மார்ச் 17] [திருமதி தா. இராசாம்பாள்]

அடுத்து அங்கே பணிபுரியும் ஊழியர்களை அரசு ஊழியர்கள் என்ற நிலைமையில் அனைத்துச் சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் பல கோரிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளன. அந்தக் கோரிக்கைகளை எல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆதிதிராவிடர் நல மானியத்திலே பல சகோதரர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அதன்படி இந்தத் துறை இயங்கி அந்த மக்கள் நன்மைகளைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தால் பரவாயில்லை என்ற நல்லெண்ணத்திலே தான் கூறினார்களே தவிர, அவர்கள் நல்ல நிலைமைக்கு வந்து விட்டார்களே என்று கருதி அதன்படி கூறவில்லை. இருந்த போதிலும் ஒருசில குறைகளை அவர்கள் எடுத்துக் கூறாமல் விடவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், குறைந்தது அவர்களுடைய தொகுதியைப் பற்றிக் கூறும்போது கூட தாம் கண்ணுற்ற பல பிரச்சினைகளைப் பற்றியும் இது வரையில் களையப்படாமல் இருக்கின்ற குறைகளைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.

அடுத்து ஆதி திராவிடர் நலத்துறையிலே கல்வி என்பதைப் பொறுத்த வரையிலே நஷ்டம் என்று கணக்கிடாமல் கல்விக்கு எவ்வளவு தொகை கொடுத்தாலும் நல்லதுதான். இந்தத் துறையிலே மற்றவைகளுக்கு ஒதுக்கிய பணத்தை எல்லாம் சேர்த்து கல்விக்காக மட்டுமே, அதாவது, குறிப்பாக பெண்களின் கல்விக்காக மட்டுமே நிறைய செலவு செய்திருந்தால் கூட அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால் இந்தச் சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சி வரவேண்டும். அவர்கள் நல்வாழ்வு வாழவேண்டும். அவர்கள் மற்றவர்களோடு சமமாக வாழவேண்டும் என்றால் அவர்களின் நிலைமை உயர்த்தப்பட வேண்டும். கொத்தடிமை சூழ்நிலையிலிருந்து விடுபட்டு தங்களுடைய வாழ்க்கையைத் தானே நடத்திக் கொள்ளக்கூடிய வகையிலே நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற கருத்தை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு நாம் ஸ்காலர்ஷிப்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். விடுதிகளில் மருத்துவ கல்லூரி, இஞ்ஜினியரிங் கல்லூரி இவற்றில் படிக்கும் மாணவர்களும் இருக்கிறார்கள். இந்த ஸ்காலர்ஷிப் தொகை தாமதமாகப் போய்ச் சேருவதால் அந்த மாணவர்கள் வேதனை அடையக் கூடியதொரு சூழ்நிலை இருக்கிறது. அந்த விடுதியில் இருந்து படிக்கும் பிள்ளைகள் பத்து பதினைந்து நாட்கள் வீட்டுக்கு வந்து விடுகிறார்கள். காரணம் என்ன என்று கேட்டால், அங்கே பணம் கட்டிப் படிக்கும் மாணவர்கள் நாங்கள் மட்டும் பணம் கட்டிவிட்டு சாப்பிட வேண்டியிருக்கிறது என்று மறைமுகமாகச் சொல்லக்கூடிய சூழ்நிலையில் அந்த மாணவர்கள் ஸ்காலர்ஷிப் காலாகாலத்தில் கிடைக்காததால் வீட்டுக்கு வந்து விடுகிறார்கள். ஆகவே இந்த ஸ்காலர்ஷிப் தொகை அந்த மாணவர்களுக்கு காலாகாலத்தில் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். அவர்கள் அடுத்த ஆண்டு

டாக்டர்களாக, இஞ்சினியர்களாக வர இருக்கிறார்கள். இருந்தும் அவர்கள் நிலை மாறவில்லை. இந்த நிலையைக் களைய இந்த அரசு அடுத்த ஆண்டிலாவது முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசு மேல் படிப்பிற்காக பண உதவி கொடுக்கிறது. ஆனால் மாநில அரசு அதற்கு உதவவில்லை. அந்த மாணவர்கள் அதிகப்படியான தொகை கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் மேல் படிப்பிற்கான தொகை முழுவதும் அந்த மாணவர்களுக்குக் கிடைக்கும்படியான முழுப் பொறுப்பையும் இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இப்போது வருமான வரம்பு வைத்திருக்கிறீர்கள். மத்திய அரசு ரூ. 12,000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு சலுகைகள் வழங்குகிறது. அதேபோல் மாநில அரசும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது கிடைக்கக் கூடிய ஸ்காலர்ஷிப்களுக்குக்கூட பத்து முறை வெல்பேர் ஆபீசர்கள், மற்ற அதிகாரிகளை மாணவர்கள் தலைவர்கள் கேட்டும் கூட பெறமுடியாத ஒரு சூழ்நிலை இருப்பதால், தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஸ்காலர்ஷிப் தொகை அவர்கள் கைகளுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் அரசுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. இது அவர்களுக்கும் சுலபமான காரியம். அதில் உள்ள ஊழல்கள் சிலவற்றை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. படிக்கிற பிள்ளைகளிடமே வசூல் செய்கிற ஒரு நிலை இருப்பதால் வங்கிகள் மூலம் காலாகாலத்தில் படிப்பிற்கு இடையூறு இல்லாத வகையில் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். விடுதிகளுக்கான சொந்தக் கட்டடங்கள் பலயிடங்களில் இல்லை. தறகமூர், வீரகனூர், தம்மம்பட்டி போன்றயிடங்களில் விடுதிகளுக்காக சொந்தக் கட்டடங்கள் இல்லை. தம்மம்பட்டியில் ஒரு மாணவி இல்லம் தனியாக அமைக்கப்பட வேண்டும். ஆத்தூரில் நீண்ட நாட்களாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக விடுதிகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அவை விரிவுப்படுத்தப்படவில்லை. முன்பு அங்கு 50 பிள்ளைகள் இருந்து படித்து வந்தார்கள்.

இப்போது அந்த எண்ணிக்கை அதிகமாக ஆகியிருக்கிறது. ஆகவே இன்னும் அதிகப்படியான பேர்களை அந்த விடுதியில் சேர்த்துக் கொள்ளும் வகையில் அதை விரிவுபடுத்த வேண்டும். கீரிபட்டி, பொத்தநாய்க்கன் பாளையம் போன்றயிடங்களில் ஹரிஜன மாணவர்கள் இல்லங்கள் தேவை.

கல்லூரி மாணவர்களுக்கு விடுதிகள் இருக்கின்றன பலயிடங்களில். ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகள் உள்ள பலயிடங்களில் விடுதிகள் இல்லை. ஆகவே மேல்நிலைப் பள்ளி உள்ள அனைத்து இடங்களிலும் விடுதிகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.





ஆத்தூர் தொகுதியில் அறிஞர் அண்ணா கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரிக்கு இதுவரை விடுதி அமைக்கப்படவில்லை. சென்ற ஆண்டு கூட அதைப் பற்றிக் கேட்டேன். ஆனால் இதுவரை அது நிறைவு செய்யப்படவில்லை. ஆகவே இந்த ஆண்டாவது ஒரு மாணவர் இல்லம் அவசியம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு பஞ்சம தரிசு நிலங்கள் இருந்தன. அவற்றை மற்றவர்கள் பராதீனப்படுத்தி ஆக்கிரமிப்பு செய்து லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நிலங்களை அவர்கள் கையில் வைத்துள்ளார்கள். ஆகவே நில ஒப்படைத் திட்டத்தின் கீழ் அந்த நிலங்களை அளந்து அவற்றை ஏழை ஹரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, ஹரிஜன் கண்டிஷன் நிலங்களை மற்றவர்கள் விலைக்கு வாங்கியிருந்தாலும் கூட அவை மீண்டும் ஹரிஜனங்களுக்குக் கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

(மாலை 4.20)

இப்போது தாலுகா அலுவலகத்தில் ஹரிஜன நல தாசில்தார் அலுவலகம் இயங்குகிறது. நான் உண்மையில் வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏன் இந்த ஹரிஜன் நல இலாகாவை ஹரிஜனங்களைப் போலவே வைத்திருக்கிறீர்கள்? காரணம் என்ன? அதற்கு ஒரு டைப்ரைட்டர் வாங்கிக் கொடுக்கக் கூடாதா? அவர்கள் இருக்கைக்கு இடம் கொடுக்கக் கூடாதா? அந்த அலுவலகங்களைச் சிறப்பாக இயங்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். மனைப்பட்டாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை சர்வே செய்து, அளந்து அவர்களுக்கு இன்னும் கொடுக்கவில்லை. அவர்கள் நிலங்களுக்குப் பட்டா மட்டும் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், அவர்கள் அந்த நிலத்திலே ஒரு சிறு குடிசை அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற உரிமைகூட கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் அவர்கள் நிலங்களை சர்வே செய்து, அளந்து கல் போட்டுக் கொடுத்து, அவர்கள் வீடுகள் அல்லது குடிசைகள் கட்டிக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லை. அதற்கு முக்கிய காரணம் சர்வேயர் இல்லாததுதான். ஆகவே ஒருவரே பல வட்டங்களுக்குப் போய் சர்வே செய்து அளந்து கொடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, அதற்காக ஒருவர், இருவரைக் கூடுதலாக நியமித்து, குறிப்பிட்ட நாட்களுக்குள், இந்த மாதத்திற்குள், இந்த ஆண்டிற்குள் கையகப் படுத்திய நிலங்களை சர்வே செய்து, அவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இங்கே சுடுசாடு தடம் பற்றிச் சொன்னார்கள். ஏதோ, எங்கேயோ ஒரு சந்தர்ப்பத்தில் இருக்கக்கூடியதாக சில பேர் சொன்னார்கள். பல இடங்களில் பாதை போடப்படவில்லை. இதன் காரணம் என்ன? அடிப்படைக் காரணம் என்னவென்றால், ஒரு இறந்த உடலத்தை மாமூலாக இருக்கக்கூடிய வழித் தடத்திலேதான் எடுத்துச் செல்லவேண்டும் என்று இந்துக்கள் கொள்கைபடி எடுத்துச் செல்லும் இடக்கை [illegible]

அவர்கள் வர மாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆகவே, நீண்ட நெடுங்காலமாக அவர்கள் தொன்று தொட்டு, இந்தப் பாதையிலேதான் எடுத்துச் செல்ல வேண்டும் என்றிருந்த அந்த இடங்களையெல்லாம் கையகப்படுத்தி புதிய பாதைகளைப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ ஒரு சில இடங்களில் கலவரம் நடப்பதாகத் தெரிகிறது என்று இங்கே அங்கத்தினர் அண்ணன் மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏறத்தாழ தினமும் கலவரம் இப்படிப்பட்ட பகுதிகளில் நடக்கின்றன. இப்படிப்பட்ட கலவரத்தைப் பற்றி நாம் அடிக்கடி இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி இப்போது பேசினால், மற்ற விவரங்களுக்கு நேரம் இருக்காது என்ற காரணத்தினால், அதை வலியுறுத்துவதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கு நலக்குழு அமைக்கப்பட்டது அந்தக் குழு இயங்கவில்லை. அந்தக் குழு இயங்கினால், அதிலே நாம் அனைவரும் கூடிப் பேச சந்தர்ப்பம் இருக்கும். என்ன காரணத்தினாலோ, அந்தக் குழு இயங்காமல் இருக்கிறது. என்ன காரணம் என்பதும் புரியவில்லை. ஆகவே, இந்தக் குழு இருந்தால், இந்தத் துறையிலே உள்ள பல குறைபாடுகளைப் பற்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

கொனாளம் கிராமத்தைப் பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இங்கே கூட ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே இதைப் பற்றிப் பேசினார்கள். அங்கே சுடுகாட்டிற்கு நல்லதொரு ரோடு இல்லை என்பதுதான் பிரச்னை. ஆனால், என்ன நடந்தது? அதேபோல்,அங்கேயிருப்பவர்களுக்குக் குடிநீர் பிரச்னை எழுந்தது. ஆனால், 3 மாதங்களாக அந்தப் பகுதியிலே வாழும் அரிசனங்கள் வேறொரு இடத்திற்குச் சென்று அங்கே அவர்கள் வாழ்வதற்குக் கூட வசதியில்லாமல், ஒரு நாள், ஒரு வேளைக்கு உணவு இல்லாமல், அவர்களுக்கு வேலையும் இல்லாமல் சாப்பாடும் இல்லாமல் தங்கள் குடும்பத்தோடு, குழந்தைகளோடு இருப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இதற்கு இங்கே இருந்து கொண்டிருக்கின்ற இந்த மாநில அரசு கவனத்தில் கொண்டு, அவர்களிடையே ஒரு இணக்கமான உறவை உருவாக்கவில்லை என்பதை ஒரு குற்றச் சாட்டாகக் கூற ஆசைப்படுகிறேன். அங்கிருக்கும் அதிகாரிகள், இதைப் பற்றி தெரிந்தும், ஒன்றும் செய்யவில்லை. இதன் காரணம் என்ன? டெல்லியிலே இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்து, அவர்கள் அங்குள்ள சூழ்நிலையை அறிந்து சென்றிருக்கிறார்கள். அவர்களுக்குப் பொதுக் கிணற்றிலே தண்ணீர் விடவில்லை. மீண்டும் அங்கே பிரச்னை எழாது என்பதற்கு இந்த அரசிடம் உத்திரவாதம் இல்லை. ஆகவே, அவர்களுக்கு குடி தண்ணீர் வசதி ஏன் செய்து கொடுக்கக் கூடாது சுடுகாட்டிற்காக பாதையை ஏன் செய்து கொடுக்கவில்லை



அவர்கள் வாழும்போது நிம்மதியாக இல்லாவிட்டாலும். இறந்த பின்னராவது அதைப் பெறவேண்டும் என்ற வகையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் அர்த்தத்தை இந்த அரசு உணர்ந்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்டகாலமாக, ஏறத்தாழ 100 ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாக சேரிகளில் குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அவைகள் நத்தம் புறம்போக்கு நிலம். அவற்றுக்குப் பல இடங்களிலே பட்டா கொடுக்கப்படவில்லை, மனைப்பட்டா ஏதோ ஒரு சில இடங்களிலே கொடுக்கப்பட்டு இருக்கின்றது. மற்ற வீடுகளுக்கும் பட்டா வழங்கிட வேண்டும் குடிசைகளிலே விளக்குகள் எரிகின்றன என்று விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறோம். குடிசைகளில் விளக்குகள் எரியாத இடமே இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். மற்ற வகைகளில் சீர்திருத்திக் கொள்ளக்கூட முடியாத அவர்களின் குடிசைகளில் விளக்குகள் கூட சரியாக எரிவதில்லை, என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து டீ கடைகளிலே தனி டம்ப்ளர்கள் வைத்துக் கொடுக்கிறார்கள் என்பதைக் கண்ணுறும்போது தீண்டாமை எங்கே ஒழிக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது. அதே சமயத்திலே அரசாங்கத்திலே புகார்களைக் கொடுத்தாலும் போலீஸ் துறையிடம் கொடுத்தால்—போலீஸ் துறையைப்பற்றி பேசவேண்டும் என்றால் எவ்வளவு வேண்டுமென்றாலும் பேசலாம். இருந்தபோதிலும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன், அதை இன்னார் தான் சொன்னார்கள் என்பதைச் சொல்லிவிடுகிறார்கள். உதாரணத்திற்கு நான் சொன்னேன் என்றால் இந்த சட்டமன்ற உறுப்பினர்தான் சொன்னார் தனி டம்ப்ளர் வைத்திருக்கிறார்கள் என்று. இன்னார் தான் சொன்னார் என்று காட்டிக் கொடுத்து விடுகின்ற நிலைமை இருப்பதால் நான்கூட நாம் ஏன் அனாவசியமாக இந்தச் சிக்கலிலே போய் மாட்டிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிற அளவுக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நிர்ப்பந்தத்தின் காரணமாக பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இதற்கு மாற்று வழியை நான் கூற ஆசைப்படுகிறேன். இதுபோன்ற சூழ்நிலையில் எந்தக் கிராமத்திலாவது தீண்டாமையை அவர்கள் கடைப்பிடித்து மற்றவர்களுக்கும் இந்த அரசு கொண்டுவரும் திட்டங்களுக்கும் எதிராகவோ அல்லது ஒத்துழைப்பு கொடுக்காமலோ இருந்தால் எப்படி தீண்டாமை என்ற பெயரால் ஒதுக்கி வைக்கப் பட்டார்களோ அதைப்போன்று அந்த நகரமோ அந்த ஊரோ அந்த கிராமமோ அதற்கு அரசாங்கம் கொடுக்கின்ற அத்தனை சலுகைகளையும் நிறுத்தி வைக்குமானால், கண்டிப்பாக தீண்டாமை ஒழிப்புக்கு நீங்கள் போடும் திட்டங்கள் அத்தனையும் அங்கே நல்லமுறையில் நிறைவேறும் அரிசன மக்களின் உரிமைகள் காக்கப்பட்டு சமத்துவம் அங்கே ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி தா. இராசாம்பாள்] [1982 மார்ச் 17

இங்கே கலப்பு மணத்தைப் பற்றி பலரும் பலவிதமாகப் பேசினார்கள். என்னுடைய வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற முறையில் நான் கூறுகிறேன் அவர்களுக்கு கோடி கோடியாகக் கொடுத்தாலும் எவ்வளவு தங்கம் கொடுத்தாலும் பயன் இல்லை. அவர்கள் குழந்தைகளுக்கு ஆறு சதவீதம் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இது போதாது. இதற்கும் மேலான ஒன்றைத் தரவேண்டும் அது வேலை வாய்ப்பு என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எவ்வளவு காசு நீங்கள் கொடுத்தாலும் 4 ஆயிரம் கொடுத்தால் 4 வருடங்கள் கழித்து தான் பெறமுடியும் ஆனால் தங்கள் சமுதாயத்தை எதிர்த்து, குடும்பங்களை விட்டு நிரந்தரவாக கட்டின துணியோடு வெளியே வருகிறவர்கள் எப்படி நிம்மதியாக குடும்பம் நடத்தமுடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? ஆகவே சாதி இழிவுகளை ஒழிப்பதற்கு இது போன்றவர்களை ஊக்கப்படுத்த அவர்களுடைய தகுதிக்கேற்ப உடனடியாக வேலைவாய்ப்பு கொடுத்தால் வரும் காலத்திலே இளைஞர்கள் வாழ்க்கையில் துன்பப்படாமலும் ஒதுக்கித் தள்ளப்படாமலும் தன் சொந்தக் காலிலேயே நின்று வாழக்கூடிய முறையிலே தங்களுடைய உழைப்பினால் முன்னேற்றம் அடைவதற்கான வழி ஏற்படும், இது மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு அண்ணார் திரு. இளையபெருமாள் அவர்கள் கூறினார்கள், 50 ரூபாய் பற்றி. நீங்கள் இந்த 50 ரூபாயை வழங்கக்கூட வேண்டாம். அது இல்லாமல் இருந்தால் அவர்கள் சடலம் போகாமல் இருக்கப் போவதில்லை, சடலத்தை அவர்களுக்குத் தூக்கத் தெரியும், யார் இறந்தாலும் அவர்களுக்குத் தூக்கத் தெரியும். நான்கு பேர்கள் அழுவார்கள், பிறகு கொண்டு போய் புதைத்து விடுவார்கள், அவர்களே குழியை வெட்டுவார்கள். கொடுப்பது நியாயம் என்று நீங்கள் கருதினால் கிராம நல ஊழியர்கள் இருக்கிறார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக அந்தச் சடலத்தை எடுப்பதற்கு முன்னாலே அந்தப் பந்தலிலேயே மரியாதை கொடுப்பதற்கு அவர்கள் மானம் போகாமல் கொடுக்கவேண்டுமென்றால் கொடுக்கலாம், இல்லையென்றால் இந்தத் திட்டத்தை எடுத்துவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைய பாலர் பள்ளிகளை ஆதி திராவிடர்களுக்காக ஏற்படுத்தும்போது கட்டடங்கள் இல்லை என்ற நிலைமையினால் அவை நிறுத்தப்படுகின்றன. அடிப்படைக் கல்விக்கு ஆதாரமாக இருப்பது பாலர் பள்ளிகள். இவைகளுக்கு கட்டடங்கள் இல்லையென்றால் பாலர் பள்ளிகளை நடத்தமுடியாத நிலைமை இருக்கிறது அவர்களுக்குக் குடியிருக்கவே குடிசை இல்லாதபோது அவர்களிடம் கட்டடம் கேட்டால் எப்படிக் கொடுக்கமுடியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? பாலர் பள்ளிகளை கட்டடத்தோடு ஒவ்வொரு அரிசன மக்கள் வாழும் பகுதிக்கும் நீங்கள் கொடுக்க வேண்டும்.



1982 மார்ச் 17] [திருமதி தா. இராசாம்பாள்]

அதைப்போல நுகர்பொருள் அங்காடி என்று வைத்து கட்டிடம் தேவை என்று கூறுகிறார்கள். அவர்களிடம் அரசாங்கத்திற்கு உதவி செய்கிற சூழ்நிலை இல்லை. அவர்களே அநாதைகளாக, ஆதரவற்றவர்களாக இருக்கிறபோது இந்த வசதிகளை எல்லாம் அவர்களால் செய்யமுடியாது. நாம்தான் உதவி செய்ய வேண்டும். ஆகவே சேரிகளில் கட்டிடம் அமைத்து அவர்களுக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4.30)

அடுத்து இந்த 18 சதவீதம்; இதை வேலையில் அமர்த்தும் போது மட்டுமல்ல, புரொமோசனுக்குச் செல்லும்போது இது கடைபிடிக்கப்படவேண்டும். ஏனென்றால் அரசுத் துறைகளிலும், தனியார் துறைகளிலும் கண்டிப்பாக நிர்ப்பந்தித்து பெற்றுத் தர வேண்டும். அவர்கள் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலை வாய்ப்பினைக் கொடுத்து அதன்மூலம் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொள்ளும் சந்தர்ப்பத்தைத் தர வேண்டும். 18 சதவீதத்தை கண்டிப்பாக கையாளவேண்டும். ஒரு ஆண்டிற்குள் அந்த அறிக்கையைப் பெற்று சமர்ப்பிக்கிறோம் என்ற கருத்து கூட இதிலே இருக்கிறது. இதனால் எவ்வளவு சதவீதம் இருக்கிறதென்று புத்தகத்தைப் பார்க்கிறபோது கிடைக்கவில்லை. அதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் பதிலிலே சொல்ல வேண்டும். ஐ. ஏ. எஸ். முதல் துப்புரவு பணியாளர் வரை ஒன்றாக சேர்த்து சொல்லிவிடாமல் துப்புரவு பணியாளர் எவ்வளவு பெர்சென்டேஜ் இளநிலை உதவியாளர் எவ்வளவு பெர்சென்டேஜ் என்று பதவிவாரியாகக் கொடுக்க வேண்டும்.

தரிசு நிலத்தைப் பகிர்ந்தளிக்கும்போது அரிசன மக்களுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். ஏராளமாக செய்வதால் மற்ற பிரிவினரிடம் பொறாமை ஏற்படுகிறது என்ற பொருள்பட அமைச்சர் அவர்கள் அன்றையதினம் சொன்னார்கள். இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பயிற்சிப் பள்ளியிலே படித்துவிட்டு மூன்றாண்டு, நான்காண்டு வேலையில்லாமல் இருக்கிறபோது பக்கத்திலே இருக்கிற கல்லூரியிலே சேர்ந்து பி. யூ. சி., பி. ஏ., படித்தால் அவர்களுடைய நிலை என்ன? ஸ்காலர்ஷிப் தொகையை கழித்துவிட்டுமீதி தொகையைக் கட்ட வேண்டுமென்று உத்தரவைக் கொடுக்கிறோம். அரிசன நலத்துறையிலே, சமூக நலத்துறையிலே இதுபோன்ற உத்தரவு எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. படிப்பதற்கு உதவித் தொகை கொடுக்கிறோம். மேல் படிப்பிற்குச் சென்றால் திருப்பிக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

அதைப்போலவே பி. ஏ., படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு மாணவன் பரிட்சையில் காப்பி அடித்ததால் அவன் மூன்றாண்டு காலம் பரிட்சை எழுதக்கூடாது என்று தடை செய்யப்பட்டது. அதற்குப் பிறகு பரிட்சை எழுதி பாஸ்செய்து விட்டான். அவனுக்கு இன்னும் சான்றிதழ் கொடுக்கப்படவில்லை. கடைசியாக வந்த ஸ்காலர்ஷிப் இன்ஸ்டால்மென்டை திருப்பி அனுப்பி விட்டு, ஏற்கனவே பெற்ற ஸ்காலர்ஷிப் தொகையைக் கொடுத்தால்

தான் சான்றிதழ் கொடுப்போம் என்று கூறப்பட்டிருக்கிறது. இரண்டாண்டுகளாக வேலையில்லாமல் திரிந்து கொண்டிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அவனுடைய வாழ்க்கை பாழடிக்கப் பட்டிருக்கிறது.

இன்னொன்றையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அரிசன நலத்துறை அமைச்சரிடத்திலே, இயக்குநரிடத்திலே எந்த ஒரு காகிதத்தை கொடுத்தாலும் அதற்கான பதில்கள் வருவதே யில்லை. இரண்டு ஆண்டுகளாக நாங்கள் பார்க்கிறோம். மற்ற துறைகளிலிருந்தெல்லாம் பதில் வருகிறது. இந்தத் துறையிலே யிருந்து மட்டும் வருவதேயில்லை. இதை ஏற்கனவே ஒரு முறை நானே சொல்லியிருக்கிறேன். இதில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசனங்களுக்காக அதிகமாக தொகை செலவிடு கிறோம் என்று பத்திரிகையிலும், வானொலியிலும் பிரச்சாரம் செய்கிறார்களே தவிர ஒவ்வொரு மானியத்தையும் எடுத்து செலவிடும் தொகையைப் பார்த்தால் இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதற்கு அதிகாரிகளைக்குறை சொல்வதா அல்லது இந்த அரசைக் குறை சொல்வதா என்றே தெரியவில்லை. ஆங்கிலத்திலே அரசாணை இருக்கிறது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் தானே இருக்கிறார்கள். அதைப்புரிந்து கொள்ள கூடாதா அல்லது நீங்கள் தமிழ், தமிழ் என்று கதறும் அந்தத் தமிழிலேயாவது மீண்டும் ஒருமுறை இந்த அரசாணையை அவர்களுக்குக் கொடுத்து இதனுடைய விளக்கத்தை எனக்குச் சொல்லவேண்டும். பையன் பெயர் சின்னமுத்து, இன்னொருவன் பி. ஏ. படிக்கிறவன் பெயர் தர்மலிங்கம். இதை ஏற்னெவே இயக்குநரிடம் சொல்லி யிருக்கிறேன் என்ற ஒரு செய்தியைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மலைவாழ் மக்கள் நிலையை உண்மையில் எண்ணிப் பார்க்கும்போது இரண்டு மூன்று இடங்களுக்கு நான் சென்று விட்டு வந்தேன். கல்ராயன் மலை, பச்சை மலை, கொல்லி மலை ஆகிய பகுதிகளுக்கு நான் அண்ணன் முனு ஆதி அவர்கள் தலைமையில் உள்ள உயர்மட்டக் குழுவோடு சென்று வந்தேன். மலைவாழ் மக்கள் நலக்குழு என்று ஒன்று அமைத்திருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளாக அது இயங்க வில்லை. அவர்கள் நல்வாழ்வுக்கு நாம் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். செய்யாவிட்டாலும் போகிறது, ஒரு ஆறுதலுக்காகவாவது நேரில் சென்று நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? உங்களுடைய வாழ்க்கை நிலை என்ன? உங்களுக்கு என்ன தேவை, அரசிடமிருந்து என்ன எதிர்பார்க் கிறீர்கள் என்பதைக் கேட்க ஒரு சந்தர்ப்பமே ஏற்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தக் குழுவின் பரிந்துரையின்படி அந்த இலாகாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அரசுதான் அந்தக் கமிட்டியை அமைத்தது, அந்த கமிட்டி கூறியிருக்கிறது. அந்தப் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டதா, இல்லையா என்ற தகவலைக் கூட தெரிந்து கொள்ள இயலவில்லை.



நாவிதர், சலவையாளர், ஒட்டர், நரிக்குறவர் போன்ற சமுதாயத்தினர் மிகவும் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். அவர்களைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினராக பாவித்து அவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், அவர்களுக்கும் தனிச்சலுகை கிடைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மலைவாழ் மக்கள் தாங்கள் வாழும் இடங்களில் சில இடங்களை, இந்த ஆண்டு 1 ஏக்கர், அடுத்தாண்டு 1 ஏக்கர் என்பது போல், வெட்டுக்காடு என்பதுபோல் அவர்கள் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலேயிருந்து அவர்களை அப்புறப்படுத்திவிட்டு ஃபாரஸ்ட்காரர்கள் செடிகளையும் மரங் களையும் வைத்து, அவர்கள் வாழ்க்கையைத் தடை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மரங்களை அவர்களிடமே கொடுத்து வளர்க்கச் செய்ய வேண்டும். அதையும் இப்பொழுது மார்ச் மாதத்தில் கொடுத்தால் வளர்க்க முடியாது. மழைக் காலங்களில் தகுதியான மரங்களை வளரச் செய்ய அவர்களுக்கு வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பூமரத்துப்பட்டி, முட்டல் போன்ற இடங்களில், பாலர் பள்ளி ஏற்படுத்துவதற்கும் ஒரு முன்மொழிவு இருப்ப தாகக் கேள்விப்படுகிறேன். அவைகள் அனைத்தும் மலைப் பகுதியைச் சேர்ந்தது. அங்கே மலைவாழ் மக்களில் உள்ள பெண் யாராவது படித்திருந்தால்—8-வது படித்திருந்தால் கூடப் போதும்; அவர்களை ஆசிரியராக நியமித்துக் கொள்ளலாம் என்ற அரசாணை இருக்கிறது. ஆனால், 1-வது படித்த பெண்கள் கூட அங்கே இல்லை. ஆகவே, வெளியிலுள்ள ஆண்களை நிய மித்தால்தான் அவர்கள் சென்று பாடம் கற்பிக்க முடியும். ஆள் கிடைக்கவில்லை, பாலர் பள்ளிக்கு ஆசிரியை கிடைக்க வில்லை என்று அந்தப் பாலர் பள்ளியை ஏற்படுத்தாமல் விடக் கூடாது. ஆண்கள் யாரையாவது போட்டு, அம்மக்கள் முன்னேற்றத்திற்கு அங்கு ஒரு பள்ளியைத் திறக்க வேண்டும்.

கொடுங்கலில் ஒரு உறைவிடப் பள்ளி ஏற்படுத்த வேண்டும். பச்சை மலையில் ஒரு ஏ.என்.எம். அதிக நாளாகப் போடப் படாமல் இருக்கிறது. அங்கே அடிக்கடி சென்று பார்க்க முடியாத சூழ்நிலையில் அவர்கள் அடிக்கடி கடிதம் போட்டுக் கொண்டிருக் கிறார்கள். தயவு செய்து அங்கே ஒரு ஏ.என்.எம். போடவும், முதலில் குறிப்பிட்ட பள்ளியைத் திறக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியிலே ஒன்றே ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் நகர்ப்பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். அதோடு, இத்திட்டத்திற்காக ரூ. 4,000 கொடுப்பதைப்பற்றி அனைவரும் மிக விளக்கமாகப் பேசி விட்டார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களுக்கு ரூ. 4,000 வேண்டாம். ரூ. 4,000-ல், அரசே ரூ. 1,000 எடுத்துக் கொண்டு, கட்டிக் கொடுக்க முடியுமா; நீங்கள் சொல்கின்ற அந்த எஸ்டிமேட்டில் என்று சற்று

யோசித்துப் பாருங்கள். கண்டிப்பாக முடியாது. இப்போதுள்ள சூழ்நிலையில் மண் சுவர் வைத்து மேலே கூரைதான் போட முடியும். ஏனென்றால் முன்பு கட்டிய வீடுகள் எல்லாம், அங்கே உள்ள புறம்போக்கில், சீப்பாக, ஏறத்தாழ, ரூ. 2, ரூ. 3 பெற்றுக் கட்டக்கூடிய சூழ்நிலை இருந்தது. இப்பொழுது அப்படி இல்லை. அனைவரும் கடைக்குச் சென்று அனைத்துப் பொருள்களையும் விலைக்கு வாங்கி அவர்கள் வீடு கட்ட வேண்டியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, அவர்கள் குடியிருக்கும் வீட்டைக் காலி செய்துதான் அவர்கள் வீட்டைக் கட்டுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, நாம் அது சொட்டை, இது சொட்டை என்று சொல்லி ஓராண்டு, இரண்டாண்டு காலமாக தவணையைக் கொடுக்காமல் அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டால் அதுவரை அவர்கள் எங்கே குடியிருப்பது? ஆகவே, அன்புச் சகோதரர் மதிப்பிற்குரிய அண்ணன் பழனிவேல் அவர்கள் சொன்னதுபோல், நீங்கள் கண்டிப்பாக இரண்டே மாதத்தில், 10 தவணைகளாகக் கொடுத்தாலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை, கட்ட, கட்ட அவர்கள் எவ்வளவு கட்டியிருக்கிறார்களோ, அதற்கேற்ப இரண்டு மாதத்திற்குள், 60 தினங்களுக்குள் பணம் கொடுத்து, அவர்கள் வீடு கட்டி, குடும்பம் நடத்தக் கூடிய சந்தர்ப்ப சூழ்நிலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் நன்றாகப் பேசுகிறார்கள். அதைத்தான் நானும் கவனித்துக் கொண்டிருக்கிறேன். நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது, முன்பு பேசியதைவிட. நான் சொல்ல விரும்புவது ஆதிதிராவிட மக்களுக்கு ரூ. 3,400 அல்ல, ரூ. 3,200 தருகிறோம். அந்த எண்ணூறு ரூபாயை அவர்களுடைய உழைப்பைக் கொண்டு வீடு கட்ட வேண்டும். ஆக, 3200 ரூபாய். ஆயிரம் ரூபாய் மான்யமாகத் தருகிறோம், வட்டி கிடையாது. இவ்வளவு சலுகைகளையும் தந்து, லோன் சேங்க்ஷன் செய்தவுடன் 30 சதவீதம், அதாவது ரூ. 960 கொடுக்கிறோம். பேஸ்மென்ட் லெவலுக்கு வந்தபிறகு 1280 ரூபாய் கொடுக்கிறோம்; ரூஃப் லெவலுக்கு வந்த பிறகு 960 ரூபாய் கொடுக்கிறோம். இந்தக் கடன் அவர்களுக்குப் பர்டனாக இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வாறு செய்கிறோம். சிறுகக் கட்டிப் பெருக வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டுத் தருகிறோம். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என்று இருபது ஆண்டுத் தவணைகளில் திருப்பித் தந்தால் போதும்.

(மாலை 4-40)

4,000 ரூபாயை 5,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கை நியாயமானதாகவும் இருக்கலாம். ஆனால் இருக்கின்ற நிதி ஆதாரங்களைக் கொண்டு தான் செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதை நினைவில் வைத்துக் கொள்கிறோம். இப்பொழுது இருக்கிற நிலையில் 75 சதவீத ஆதிதிராவிட மக்கள் பலன் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் மெத்த மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்கிறேன்.



**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது, 60 நாட்களுக்குள்ளாக அந்தப் பணத்தைக் கொடுத்தால்தான் வீட்டைக் கட்ட முடியும். காலங்கடத்தினால் கட்டிய வீடு இடிந்துவிடும் என்று சொல்கிறார்கள். எனவே அந்தக் காலத்திற்குள் கொடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, பணம் இருக்கிறதே அது ரொம்பப் பொல்லாதது. ஒரே நேரத்தில் அந்தப் பணத்தைக் கொடுத்தால் செலவாகிவிடும் என்பதால், லோன் சேங்க்ஷன் ஆனவுடன் 30 பர்சென்ட், அதாவது 960 ரூபாய் கொடுத்து விடுகிறோம். பேஸ்மென்ட் லெவலுக்கு வந்தவுடன் 1,280 ரூபாய் கொடுக்கிறோம்; ரூஃப் லெவலுக்கு வந்தவுடன் 960 ரூபாய் கொடுக்கிறோம். வீடு கட்டுவதற்காகத்தானே பணம் கொடுக்கப்படுகிறது. எனவே, கட்டக் கட்டப் பணம் கொடுக்கப்படுகிறது. எடுத்தவுடனேயே 3,600 ரூபாயைக் கொடுத்தால் அவர்கள் அந்தப் பணத்தை எங்கே வைப்பார்கள்? எவராவது திருடிக் கொண்டு போய் விடுவார்கள். பத்திரமாக இருக்காது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

**திருமதி தா. இராசாம்பாள்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறைந்தது இந்த மானியத்தில் உள்ள பிரச்னைகளை முழுமையாகச் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேனே தவிர குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. இவைகளையெல்லாம் நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன். இந்தத் தொகை ஒழுங்காகச் செலவு செய்யப்பட்டு மக்களுக்குச் சென்று சேர வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே சொல்கிறேன். (மணியடிக்கப்பட்டது) காலம் இருந்தால் பேசுகிறேன். இல்லையென்றாலும் பிரச்னை இல்லை. சொன்னாலும் செய்ய மாட்டீர்கள். சொல்லவில்லை என்றாலும் செய்யாமல் போகப் போகிறீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தபோதிலும் என்னுடைய கடமை என்று நினைத்துச் சொல்கிறேன்.

அமைச்சரவர்கள் கூறிய இதே தகவலை ஓரிரு நாட்களுக்கு முன்பாகச் சொன்னார்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் அந்த வீட்டுக்கு விண்ணப்பம் செய்து, ப்ளூ பிரின்ட் வாங்கி அடிமட்டத்தைக் கட்டுவதற்கு எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பது கிராமங்களுக்குப் போய் அவர்களை அணுகி விசாரித்தால் அந்தக் கொடுமையான சூழ்நிலை தெரியும். அந்த மக்கள் பொறுப்புணர்ச்சியோடுதான் இருந்து தங்களுக்கு வீடு இல்லையே, தங்கள் சந்ததியினர் குடியிருப்பதற்கு வீடு இல்லாமல் இவ்வளவு காலமாக வாழ்வது சரியல்ல என்ற நோக்கத்தோடு அரசு ஏதோ கொடுக்கிறது; கட்டிடம் கட்டிக் கொண்டு இருக்கலாம் என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள். எனவே, அவர்கள் பொறுப்பற்ற நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). பேரவைத்

துணைத் தலைவரவர்களே, இங்கே என்னுடைய கட்சிக் கொறடா திரு. தங்கமணி அவர்கள் தங்களுடைய பகுதியில் பல வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைக்கூடச் சொல்ல முடியவில்லை.

கமிட்டி அமைக்க வேண்டுமென்று அண்ணன் அவர்கள் கூறினார்கள். மாவட்ட அளவில் காரியங்கள் நடக்காவிட்டாலும் பரவாயில்லை. எங்கள் உரிமைகளை ஞாபகப்படுத்துகிறோம்; நடக்கவில்லை என்றாலும் அரசுக்குத் தெரிவித்தோம் என்ற சூழ்நிலையில் சொல்ல விரும்புகிறேன்.

உஞ்சிக்குறிச்கி என்ற இடத்தில் 1944 லிருந்து அரிஜன் ஒருவர் உழவடை செய்து கொண்டிருந்தார். அது ஒரு புறம் போக்கு நிலம். அதுகூடத் தவறு என்று சொல்லி, பிறகு கோர்ட்டுக்குச் சென்று, அது தவறு இல்லை என்று நிரூபணம் ஆனதற்குப் பிறகும் அந்த நிலம் அவருக்குக் கொடுக்கப்படவில்லை.

100 கோடி ரூபாய்த் திட்டம் விஞ்ஞான ரீதியாகவும், அறிவியல் பூர்வமாகவும் பார்த்தால் வளரும் இந்தத் தமிழ் நாட்டிற்குச் சரியான திட்டமே இல்லை என்பதால் அதைக் கடுமையாக எதிர்த்து, எங்கள் குழந்தைகளைச் சோம்பேறிகளாகவும், பிச்சைக்காரர்களாகவும், அடிமைகளாகவும் ஆக்குகின்ற நிலைமைதான் உருவாகும். 6-லிருந்து 11 வயது வரை உள்ள பிள்ளைகள் 93%, 97% என்று கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீதமுள்ள குழந்தைகளுக்கு நீங்கள் எப்பொழுது கொடுக்கப் போகிறீர்கள் என்ற கேள்விக்கே நான் போகவில்லை. அந்தத் திட்டத்தையே feudal minded என்பதால் கடுமையாகக் கண்டித்து அமர்கிறேன்.

*திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களாலே வைக்கப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் இங்கே மானியக் கோரிக்கைக்குக் கூடுதல் தொகை ஒதுக்கி வைத்திருப்பது கண்டு உள்ளபடியே பெருமை அடைகிறேன். இந்த ஆண்டு 41 கோடி ரூபாய் இந்த ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காக ஒதுக்கி இருப்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஒதுக்கீட்டுத் தொகையிலே ஏறத்தாழ 50 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கி இருப்பதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.



ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமானால் அந்தச் சமுதாய மக்களுடைய கல்வி மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து இங்கே 50 சதவிகிதம் ஒதுக்கி இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த ஆண்டு ஆதி திராவிடர் பழங்குடி நலனுக்காக 17 புதிய இல்லங்கள் திறக்கப்படவிருப்பது கண்டு மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்: மேலும் 1982-83 ஆம் ஆண்டு 9 நலப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் 4 உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்திக் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் ஒன்றை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பள்ளிகளைத் தரமுயர்த்தும் போது அதற்குரிய ஆசிரியர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் வீடு கட்டுவதற்காக 444 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் அந்த ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுகின்ற அந்தத் திட்டத்தை இந்த மாநிலத்திலே உள்ள அத்தனை மாவட்டங்களுக்கும் சரிசமமாகப் பகிர்ந்து ஆங்காங்குள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் பயன்தரத் தக்க வகையிலே செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைகள் காப்பகம் அமைக்க சுமார் 5.77 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதை நான் வரவேற்கிறேன். பரிசுத் திட்ட வருமானத்தில் இருந்து இத்துறைத் திட்ட வளர்ச்சிக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது குறித்து புரட்சித் தலைவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் நண்பர்களும் மற்றவர்களும் இந்த ஆட்சியிலே ஆதிதிராவிட மக்களுக்கு அதிகமான நன்மைகள் கிடைக்கவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள். குறிப்பாக நீண்ட நாட்களாக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் இளையபெருமாள் அவர்கள் சமயம் கிடைக்கும்போதெல்லாம், ஆதி திராவிட மக்களுக்காக பல கேள்விகளையும், விளக்கத்தையும் கேட்பார்கள் என்பதை அறிந்து பெருமைப் படுகிறேன். ஆனால் ஒன்றை அவர் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் காந்தியாருடைய வாரிசு என்று சொல்லிக்கொண்டு அவர்கள் 20 ஆண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டார்கள். அப்போதும் அரிசன நலம் இருக்கத்தான் இருந்தது. அன்றிலிருந்து அவர்கள் நடத்திய திட்டங்களை, இந்த ஆட்சி வந்த பிறகு எந்தத் திட்டத்தையாவது நிறுத்தி வைத்திருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்தச் சமுதாய மக்கள் மேலும் மேலும் சமுதாயத்திலே முன்னேற வேண்டும் என்று தாராளமான நோக்கத்தோடு பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும் சரி, இப்போது புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலும் சரி எவ்வளவு மேலான திட்டங்களை எல்லாம் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை எண்ணி, அவர்கள் ஒரு பாராட்டாவது இந்த மானியக்

கோரிக்கையிலே சொல்லி இருப்பார்கள் என்று நினைத்தேன், ஆனால் ஏமாந்தேன். ஏனென்றால் சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலை சம்பந்தமாக வரவேண்டும் என்றால், இப்போது ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்து 30 ஆண்டு காலம் ஆகியும் இந்தச் சூழ்நிலை எந்த ஆட்சியிலாவது வந்ததா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைவர் என்றால் அவருக்கு எவ்வளவு அதிகாரங்கள் உள்ளன, அந்த சமுதாய மக்களுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்த்து அத்தகைய அ.றிய வாய்ப்பை, அளித்து காந்தி கண்ட கிராம ராஜ்யத்தை உருவாக்க இந்த தாழ்த்தப்பட்ட மக்கள்முன்னேற்றத்திற்காக 18 சதவிகிதம் ஒதுக்கி இருக்கிறார்களே அதற்குஎவ்வளவு பாராட்டுகளைத் தர வேண்டும் என்று மனதிலே கைவைத்து சொல்லுங்கள். கிராம அதிகாரிகளுக்கு எவ்வளவு அதிகாரங்கள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். கடந்த 35 ஆண்டுகளாக அவர்கள் வைத்ததுதான் கிராமங்களிலே சட்டம். அப்பேற்பட்ட அதிகாரங்களைக் கொண்ட பதவியிலே இந்தப் பரம்பரை உத்தியோகஸ்தர்களை நீக்கிவிட்டு அந்தப் பதவியிலே 18 சதவிகிதம் பேர்களை இந்ததாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கி இருப்பது யாருடைய ஆட்சியிலே என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே எவ்வளவு தைரியமாக எவ்வளவு ஜாதி இந்துக்களுடைய எதிர்ப்புக்கு மத்தியில் அவர்கள் எவ்வளவு துணிச்சலோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தக் காரியத்தை செய்கிறார்கள் என்பதை, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு வழிவகை செய்து வருகிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். 18 சதவீதம், ஏறத்தாழ நூற்றுக்கணக்கான கிராம அதிகாரிகளுடைய பதவிகள் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க இருக்கின்றது. அந்தச் சமுதாய மக்களை முன்னேற்றம் அடையச்செய்து மற்ற ஜாதி இந்துக்களுடன் சமநிலை அடைவதற்கு வேண்டிய வழிவகைகளை செய்துகொண்டிருக்கின்றது.

(மாலை 4.50)

மேலும் குறிப்பாக, அறநிலயத் துறையிலே, கடந்த 20 ஆண்டுக் காலம் இல்லாத அளவுக்கு, அந்த ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலேயும் ஒரு அரிஜன் கட்டாயமாக இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றி, அதை நடைமுறைப் படுத்திக் கொண்டு இருக்கின்றோம். அந்த ரீஜினல் கமிட்டியிலே ஒரு அரிஜன் அவசியம் உறுப்பினராக இருக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் சட்டம் போட்டு நான் 3 ஆண்டு பணியாற்றி இருக்கிறேன். இவைகளை ஏன் சொல்லுகிறேன் என்றால் காங்கிரஸ் ஆட்சி காலத்தில், நாங்கள் தான் அரிஜன மக்களுக்காக, நாங்கள் உழைக்கிறோம், காந்தியார் அரிஜன மக்களுக்காக உழைக்கச் சொன்னார், அவருடைய வாரிசான நாங்கள் என்று சொன்னீர்களே



அதற்காகத்தான். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலே வந்த நாங்கள், தமிழகத்தினுடைய மக்கள் முன்னேற்றத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்கு பாடுபடுவோம் என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட இந்த சலுகைகள் இல்லை என்பதை நான் ஆணித்தரமாக இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அப்பேர்ப்பட்ட முன்னேற்றகரமான திட்டங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கிற நேரத்தில், எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் ஏதோ ஆங்காங்கு சில, சித்திரவதைகள், சில்குறைகள் இருக்கத்தான் செய்யும், எந்த ஆட்சியிலும், அவைகளைப் பெரிதுபடுத்திக் கொண்டு, மலை போன்ற, நன்மைகளையெல்லாம் மறைத்து, நீங்கள் பேசுவீர்களேயானால் உண்மையிலேயே இந்த இனத்து மக்களுக்கு நன்மை செய்வதாக நான் நினைக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் இன்னும் தீண்டாமை ஒழியவில்லை என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல கொடுமைகள் அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது. வட இந்தியாவிலே இதை விட பயங்கரமான கொடுமைகள், நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டு வருவதை நாம் அறிவோம். தாழ்த்தப்பட்ட மக்களிடையே எங்கே கலவரம் ஏற்படுகிறதோ, எங்கே அமைதிக்குப் பங்கம் ஏற்படுகிறதோ, அங்கே நம்முடைய புரட்சித் தலைவர் உடனுக்குடன் நேரடியாகச் சென்று அந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்கிற ஒரே தலைவர், தமிழகத்தின் தலைசிறந்த தலைவர் புரட்சித் தலைவர் தான் என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, அண்ணன், திரு இளையபெருமாள் அவர்களுக்கு கூறிக்கொள்வேன், திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கணாம் கிராமத்தில் நடந்த கற்பழிப்பு விவகாரம் குறித்து கடுமையான நிலை இந்த நாட்டிலே இருந்தது. அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு கேவலமான நிலைக்கு கொண்டுவிடப் பட்டார்கள் என்பதை அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும் நேரடியாக என்னிடத்திலேயும் அங்குள்ள நிலைமைகளைக் கூறிய பின், தலைவர்கள் நேராக சங்கணாம் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள ஜாதி இந்துக்கள் எவ்வளவு சக்தி படைத்தவர்களாக இருந்தாலும் சரி, பலாத்கார நிலயினை பெற்றவர்களாக இருந்தாலும் சரி, அங்கு நீதி விசாரணை நடைபெற ஆணையிட்டு, அங்கே இப்போது நீதி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், நாங்கள் சமுதாயத்திற்கு ஒட்டுமொத்தமான திட்டத்திலே நாட்டம் கொண்டு எந்தச் சீரிய திட்டத்தை யார் கொண்டு வந்தாலும், அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டு இருந்தாலும், மேலும் இன்னும் பல பழைய சலுகைகள் கொடுப்பதில் சற்று மேலும் உயர்வு

இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 18 சதவீதம் சரியாகக் கொடுக்கப்பட்டது இந்த ஆட்சியில்தான் என்பதை ஆணித்தரமாகக் கூறமுடியும். எங்களுடைய மாவட்டத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே, ஏறத்தாழ 1000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஓட்டுநர்களாகவும், கண்டக்டர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களிலே 1 சதவீதம் கூட தாழ்த்தப்பட்டவர்களாக இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே இந்த அரசாங்கம் இந்த நிலையினை ஆராய்ந்து பார்த்து, உடனடியாக 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் எடுக்கும் வரையில் வேறு எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் வேலைக்கு எடுக்கக் கூடாது என்று சொல்லி, கிட்டத்தட்ட, 3, 4 இண்டர்வியூக்களை வைத்து, ஏறத்தாழ 258 ஓட்டுநர்களையும் கண்டக்டர்களையும் அங்கே நியமித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் போதுமான அளவுக்கு கிடைக்காததால், அவர்கள் கிடைக்கிறவரையில் அவ்வப்போது கேட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள ஒதுக்கீடு முழுவதற்கும் இன்றைக்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் நியமனம் செய்து கொண்டிருக்கிறோம். இவைகளை எல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால் இந்த அரசு வந்த பிறகு எப்படி நடந்து கொள்கிறது என்பதற்காகத்தான். அது மட்டுமல்ல. இதைப்போன்று கல்வித் துறையிலும் சரி, வேறு எந்தத் துறையிலும் சரி அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற 18 சதவீதம் இடங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆணித்தரமாக அடித்துக் கேட்பதற்கு இந்த ஆட்சியிலே உரிமை பெற்றிருக்கிறார்கள். அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்குப் பதிலாக அதை புத்தகங்களாக இந்த அரசில் வழங்கி வருகிறோம். அந்த புத்தகங்கள் அந்த மாணவர்களுக்கு உரிய காலத்தில் கிடைக்கவில்லை. கடந்த ஆண்டில் 4,5 மாதங்கள் கழித்துதான் வழங்கப்பட்டது. இந்த ஆண்டில் எப்படியாவது ஜூன் மாதத்தில் கிடைக்க அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிசன் நலத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகளில் போதிய கண்காணிப்பு இல்லை. அந்த மாணவர்கள் எப்படிப் படிக்கிறார்கள் என்பதை யாரும் பார்ப்பதில்லை. பள்ளிக்கூடக் கணக்குகளை தணிக்கையாளர்கள் தணிக்கை செய்கிறார்கள். அவர்களுக்கு என்ன தேவை, எப்படிப் படிக்கிறார்கள் என்பதை உடனுக்குடன் கவனிக்க வேண்டும். அப்படியானால் தான் அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த முடியும். அப்படி கண்காணித்து அவர்களுடைய கல்வியின் தரத்தை உயர்த்த நம்மால் முடியவில்லை என்றால் இந்தப்



பள்ளிகளை மாநில கல்வி இலாகாவினரிடம் ஒப்படைத்து, அவர்கள் நல்லமுறையில் நடத்த, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் இல்லங்களுக்கு கட்டிடம் கட்ட இந்த ஆட்சியில் முதலிடம் கொடுக்க வேண்டும். பல்வேறு இடங்களில் மகளிர் இல்லங்களுக்குப் போதுமான கட்டிட வசதி இல்லாமல் இருக்கிறது. இருக்கிற கட்டடங்களில் நல்ல கழிப்பிட வசதி இல்லை; சுகாதார வசதி இல்லை. அந்த இல்லங்களில் தங்கிப் படிக்கின்ற மாணவிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மகளிர் இல்லங்களுக்கு கட்டிடம் கட்டுவதில் முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர் படிப்புக்கு படிக்கின்றவர்களுக்கு அரசாங்கம் தாராளமாக கடன் உதவி செய்து கொடுக்க வேண்டும், 10, 15 பேர்கள்தான் ஒரு மாவட்டத்தில் படிப்பார்கள். ஆகவே, ஒரு மாவட்டத்திலிருந்து எத்தனை மனுக்கள் கடன் கேட்டு வந்தாலும் அத்தனை பேர்களுக்கும் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நிறைய பேர் வழக்கறிஞர்களாக வந்தால்தான் இந்த சமுதாய மக்களுக்கு உதவியாக இருக்கும். நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அவர்களிடம் போகும்போது குறைந்த கட்டணத்தில் வழக்குகளை நடத்த முன்வருவார்கள். ஆகவே, மனு கொடுத்த அத்தனை பேர்களுக்கும் அந்த உதவியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் இப்போது மந்த நிலையில் இருக்கிறது என்று இங்கே சொன்னார்கள். அவர்கள் சொன்னது நியாயம்தான். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே நாட்டம் செலுத்தி, ஒரு வீட்டுக்கு குறைந்தது 10,000 ரூபாயாவது செலவழித்து, இலவசமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும்; குறைந்த அளவிலே கட்டிக்கொடுத்தாலும் வசதியான வீடுகளாக கட்டிக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயிற்சி பெறுகிறவர்களுக்கு மாதம் 100 ரூபாய்தான் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவர்கள் மிக கஷ்டப்பட்டுப் படித்தால் தான், சுறுசுறுப்பாக இருந்தால்தான், ஆர்வமாகப் படித்தால் தான், நல்லமுறையில் அந்தப் பயிற்சியில் வெற்றிபெற முடியும், அதற்கு ஊக்கமளிக்கும் வகையில் மாதம் 200 ரூபாய் என்ற அளவுக்கு உதவித்தொகை அளிக்க வேண்டும், 20, 30 மாணவர்கள்தான் படிக்கிறார்கள். அதனால் அதில் பெரிய இழப்பு ஒன்றும் அரசுக்கு ஏற்படாது. அனைவருக்கும் 200 ரூபாய் வீதம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு பி. துரைராஜ்] [1982 மார்ச் 17

வட்டந்தோறும் தீண்டாமை ஒழிப்பு ஆலோசனைக் குழுவை நிறுவ வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் தலைமையில் ஆலோசனைக் குழு இருந்தது. வட்டந்தோறும் ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன மாதந்தோறும் அந்தக் குழு கூடி தீண்டாமை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரித்து, தீண்டாமைக் குற்றம் நடந்ததாக தெரியவந்தால் போலீஸ் அதிகாரிகளுக்கு அதைத் தெரிவித்து, உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வசதி வாய்ப்பு இருந்தது. அதைப்போல மீண்டும் வட்டம் தோறும் தீண்டாமை ஒழிப்பு ஆலோசனைக் குழுக்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மாணவர்களுக்கு இலவச உடை வழங்குகிறோம். உடையை தைத்துக் கொடுக்கிறோம்; தைத்துக் கொடுக்கின்ற உடை மாணவர்கள் அளவுக்கு சரியாக இல்லை என்ற பெரிய குறை இருக்கிறது. சரியாக இல்லாத காரணத்தால் அவர்கள் அதைப் பிரித்து 'ரீ மாடல்' செய்து தைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு இரட்டைச் செலவு ஆகிறது; ஆகவே மாணவர்களுக்கு சரியான அளவில் உடைகளைத் தைத்துக் கொடுக்கவேண்டும். 3 மாதத்திற்கு முன்னால் மாணவர்களின் அளவுகளை எடுத்து அதற்குத் தகுந்தபடி தைத்துக் கொடுக்கவேண்டும். இல்லை என்றால் தையல்கூலியை அந்த மாணவர்களின் பெற்றோர் ளிடம் கொடுத்து, அவர்களைத் தைத்துக் கொள்ளச் சொல்ல வேண்டும் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மாணவர்கள் படிக்கின்ற பள்ளியில் பொருளாதாரத்தில் நலிந்த, ஏழை எளிய மக்களுடைய குழந்தைகள் படிப்பதாக இருந்தால் வறுமையில் வாடுகின்ற அந்த மாணவர்களுக்கும் இரண்டு சீருடைகளை இலவசமாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-00)

இந்த பள்ளிகளில் பயிற்றுவிக்கும் நிலைமை எப்படியிருக்கிறது என்றால் அங்கேயிருக்கும் மாணவர்களுக்குத் தகுந்த ஆசிரியர்கள் கிடையாது. அதை 1:30 அல்லது 1:25 என்ற அடிப்படையில் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதன் மூலம் அந்த பள்ளிகளின் தரம் உயரும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்காக இந்த அரசு 1½ கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதை நான் வரவேற்கிறேன். இந்த சமுதாயக் கூடங்களை ஆதிதிராவிட மக்கள் பெருவாரியாக வாழும் கிராமங்களில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், இந்த சமூக கூடங்கள் அந்த குடியிருப்பில் வாழும் மக்களின் திருமணங்கள் மற்றும் வேறு பல நிகழ்ச்சிகளுக்கு



1982 மார்ச் 17] [திரு பி. துரைராஜ்]

உதவகரமாக இருக்கும் வகையில் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அரிசனங்கள் வாழும் பகுதிகளில் இன்றைக்குத் திருமணம் மற்றும் பல விழாக்கள் நடக்கிறது என்று சொன்னால் அவர்கள் இரவு நேரங்களில் பந்திபோஜனங்கள் நடத்துவதற்கு இடம் இல்லாமல் தெருவில் நடத்துகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இத்தகைய சமூகக் கூடங்கள் இருந்தால் அது பல வகைகளில் அந்த மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஷெட்யூல்ட் காஸ்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஒன்று அமைக்க வேண்டும் என்று ஏற்கனவே கொள்கை அளவில் ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது, இந்த மக்களுக்குச் செய்ய வேண்டிய பல்வேறு நற்பணிகளுக்கு அரசாங்கப் பணம் போதவில்லை, இப்படிப்பட்ட ஒரு பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆந்திராவில் இருக்கிறது, கருநாடகத்தில் இருக்கிறது. அங்கேயெல்லாம் நம்முடைய நலத்துறை இயக்குநர் சென்று பார்த்து இருக்கிறார்கள். அங்கெல்லாம் 1 கோடி ரூபாய் அளவிற்கு எல்.ஐ.சி. மற்றும் வங்கிகளிடமிருந்து நிதி வாங்கி பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். அதேபோன்று ஒரு பைனான்ஸ் கார்ப்பரேஷனை நம்முடைய மாநிலத்திலும் ஆரம்பித்து, அதன்மூலம் நல்ல பல திட்டங்களை இந்த சமுதாய மக்களுக்காக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டு வருகிறார்கள். இந்த சமுதாய மக்களுக்குச் செய்யப்படுகிற நலன் குறித்துப் பார்ப்பதற்காக ஒரு ஆலோசனைக் கமிட்டி மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் அமைக்கப்படவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கூட இரண்டு மூன்று தினங்களுக்கு முன் நான் நேரில் சந்தித்தபோது கேட்டேன், இந்தச் சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவதற்குள் ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். பிற்பட்டோர் நலத்திற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு விட்டது. பழங்குடியினர் நலனுக்காக ஒரு குழு அமைக்கப்பட்டு 1 ஆண்டு ஆகிவிட்டது. இன்னும் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குழு அமைக்கப்படவில்லை. அதை அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தனிப்பட்ட நிறுவனங்கள் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று இடங்கள் 18% ஒதுக்கப்படவேண்டும் என்று இந்த அரசு ஆணையிட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். இது நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்பதை தீவிரமாக அரசு கண்காணிக்க வேண்டும். புரட்சித்தலைவர் ஆட்சியில் தனிப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஒதுக்கீடு 18% இருக்க வேண்டும் என்று அறிவித்திருப்பதற்காக இந்த அரசுக்கு மீண்டும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த நிலை தீவிரமாக எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று

எடுத்துச் சொல்லி இந்த மான்யக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். அருமை நண்பர் துரைராஜ் அவர்களை நான் நீண்ட நாட்களாக அறிந்தவன். அப்படியிருப்பினும், நான் இந்த அரசு செய்த எதையும் வரவேற்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கு நான் பதில் அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு உறுப்பினர் சொன்ன அத்தனை கருத்துக்களுக்கும் மற்றொருவர் விளக்கம் சொல்வது என்பது வேண்டாம்.

*திரு. எல். இளையபெருமாள்: நான் இந்த அரசு செய்த காரியங்களை வரவேற்கவில்லை என்று சொன்னார்கள். அதற்காக ஒரு விளக்கத்தை தங்களுடைய அனுமதியோடுதான் தெரிவிக்கிறேன்.

அவர்கள் 3 விஷயங்களைச் சொன்னார்கள். நான் வரவேற்கவில்லை என்று சொன்னார்கள். சங்கணாங்குளத்தில் சொன்னதை நான் வரவேற்று நன்றி தெரிவித்து இருக்கிறேன். அது மட்டுமல்ல, கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமாக என்று வருகின்ற நேரத்தில் இந்த சமுதாய மக்களுக்கு ஒதுக்கீடு செய்ததை வரவேற்று இருக்கிறேன். பஞ்சாயத்து தேர்தலில் இந்த சமுதாய மக்களுக்கு ஒதுக்கீடு செய்ததை வரவேற்று இருக்கிறேன். நன்றி தெரிவித்திருக்கிறேன். அப்போது அருமை சகோதரர் இங்கே இல்லாமல் இருந்து இருக்கக்கூடும் என்று நினைக்கிறேன்.

அருமை சகோதரர் 15% என்று சொன்னார்கள். அரசாங்கம் கொடுத்த அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அரசுத் துறையில் 13% பொது நிறுவனங்களில் 11% என்று இருக்கிறது. அருமைச் சகோதரருக்கு மேலும் ஒரு விளக்கத்தைத் தருகிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராய் இருந்த நேரத்தில், அகில இந்திய அளவில் அமைக்கப்பட்ட ஒரு குழுவிற்கு நான் தலைவராக இருந்த போது, மத்திய அரசுக்கு ஒரு அறிக்கைக் கொடுத்தேன். அந்த அறிக்கை நம்முடைய அரசிடம் இருக்கும். நான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்த போதிலும், அந்த ஆட்சியில் செய்யாமல் விடப்பட்டுள்ளதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இப்போதுகூட உத்தமர் கக்கனுக்காக இந்த அரசு செய்த உதவிக்கு தமிழக மக்கள் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஒரு கக்கனுக்கு உதவி செய்துவிட்டு, நூற்றுக்கணக்கான கக்கன்களுடைய கண்ணைப் பிடுங்குகிற அளவுக்கு அவர்களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்யாமல், அந்த மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டிய புத்தகங்களைக் கொடுக்காமல், தீண்டாமைக் கொடுமைகள் தொடரப்படுமேயானால், இதற்கு விடிவே இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.



திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நன்மைகள் காங்கிரஸ் ஆட்சியிலே செய்யப்பட்டதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த காங்கிரஸ் ஆட்சியை 1967–லே தமிழகம் வெளியேற்றியிருக்கிறது. கேரளத்தில் அமைக்கப்பட்ட அரசாங்கமும் இன்றைக்கு மதியத்திலேயிருந்து கோவிந்தா என்று போய்விட்டது.

திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அண்ணன் இளையபெருமாள் அவாகள் விளக்கம் சொன்னார்கள். என்னை சொல்வதற்கு அனுமதிக்க வேண்டும். இன்று வரையில், மத்திய அரசாங்கமும் இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கமும் செய்யாத வகையில், கடந்த 20 ஆண்டுகளாக இருந்த தேக்க நிலையை மாற்றி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீத ஒதுக்கீடு வேண்டும் என்று நிர்ணயித்து அதை அளித்துள்ளது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, இப்படிப்பட்ட ஒதுக்கீடு வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை. யாரும் கேட்காமலேயே தெய்வாதீனமாக, தெய்வத்தின் வாக்காக, எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களே, அந்த சமுதாய மக்களின் முன்னேற்றம் கருதி இதைக் கொடுத்தார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவல்களைத் தருகிறார்கள். அதனால் ஒரு கிளாரிபிகேஷன்.... (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மானியத்திலே பேசுபவர்களுக்குத்தான், குறுக்கிட்டு சந்தேக விளக்கங்கள் கேட்க அனுமதி உண்டு. இப்படி இது போய்க் கொண்டேயிருந்தால் முடிவேயிராது.

திரு. எல்.இளையபெருமாள்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் ஆதிதிராவிட மக்களுக்கு உதவி எதுவும் செய்யவில்லை என்பதுபோல மாண்புமிகு சகோதர உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அது தவறான கருத்தாகும். மத்திய சர்க்கார் கொடுத்த 9 கோடியில் தான் மாநில சர்க்கார் அவர்களுக்கு பல உதவிகளைச் செய்து வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் எழுது பொருள் அச்சுத்துறை மானியக் கோரிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசின் சார்பாக மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ளதை வரவேற்று என்னுடைய ஒருசில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 73.16 லட்சம் பேர் ஆதிதிராவிடர் இனத்தையும் 3.11 லட்சம்பேர் பழங்குடியினர் இனத்தையும் சேர்ந்தவர்கள் வாழ்கின்றார்கள் என்ற நிலை இருந்தது, இன்றைய நிலையில்,

ஆதிதிராவிடர்கள் 1 கோடியையும், பழங்குடியினர் 5 லட்சம் மக்கள் தொகையினையும் எட்டிவிட்டனர் என்று தெரிகின்றது. இவர்களுடைய நலனுக்காக 4,110.31 இலட்சம் ஒதுக்கியதை வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977-ல் தமிழகத்தில் புரட்சித் தலைவர் அரசு பதவியேற்ற பின்பு ஆதிதிராவிட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், ஏராளமான உதவிகளை செய்து அனைத்துத் துறைகளிலும் 18 சதவிகித ஒதுக்கீட்டை ஏற்படுத்தி மிகவும் பின்தங்கிய பகுதிகளிலும், இந்தப் பழங்குடி மக்களுக்கு, ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு அவர்களுடைய வாழ்வை முன்னேற்றுகிற விதத்தில், பொருளாதார ரீதியாக அவர்கள் முன்னேறுகிற விதத்தில், அதை அனைத்து துறைகளிலும் செயல்படுத்தி அவர்கள் முன்னேற்றத்திற்கு வழி வகை செய்துள்ளதை நான் பெரிதும் வரவேற்று பாராட்டுகிறேன்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களின் மேம்பாட்டில் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறை காட்டப்பட்டிருக்கின்றது. கல்விக்காக 2,117.58 லட்சம் செலவிட கருதியுள்ளதை நான் மிகவும் வரவேற்கிறேன். கல்வித் துறையில் தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவர்களுக்கென கல்லூரி, கல்லூரி விடுதி போன்ற அனைத்து இடங்களிலும், ஏன் பள்ளிகளிலும் கூட(ஈ,ஸி. எனப்படும்) இஃகாடு மெஸ் எனப்படும் கல்வி ஸ்தாபனங்களால் முன்பணம் எதுவும் கட்டாமல் தங்கிப்படிக்கத்தக்க வசதியை புரட்சித் தலைவர் அரசுதான் 1977-ல் உத்தரவு பிறப்பித்து, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் குறையை போக்கியிருக்கிற என்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5.10)

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமளிக்க பள்ளி இறுதித் தேர்வில் 300 மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்களுக்கு தனிப் பரிசு வழங்கி ஊக்குவிக்கின்ற திட்டத்தை மேற்கொண்ட புரட்சித் தலைவர் அவர்களின் அரசை நான் பாராட்டுகிறேன்.

1982—83லே ஆதிதிராவிட பழங்குடியின மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுப் பள்ளிகளுக்குக் கூடுதலாக ஆசிரியர்களை நியமித்ததை நான் வரவேற்கிறே உடல் வலுவையும் கட்டுப்பாட்டையும் நாட்டுப்பற்றையும் வளர்க்கும் சாரண இயக்கத்தில் பங்கு பெறும் ஆதிதிராவிட சாரணியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சீருடைகள் வழங்க அரசு முடிவெடுத்துள்ளதை நான் பாராட்டுகிறேன்.

ஆதிதிராவிட பழங்குடி மக்களின் குழந்தைகளுக்காக குழந்தைகள் காப்பகம் அமைக்க 5.77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி குழந்தைகளின் நலனைப் பேணிய புரட்சித் தலைவர் அவர்களின் அரசை நான் பாராட்டுகிறேன். அரசு இலாக்காக்களில் தட்டச்சு; சுருக்கெழுத்து பணிகளில் போதுமான அளவிற்கு பயிற்சி பெற்றவர்கள்



கிடைக்காமல் போவதால் அந்த இடங்கள் அப்படியே காலியாகி இருப்பதை மனதில் கொண்டு, அரசு அந்த இடங்களை நிரப்ப அவர்களுக்குப் போதியப் பயிற்சி, தர நன்கு பயிற்சி பெற்ற ஆதிதிராவிட பழங்குடியின் இளைஞர்களை உருவாக்க தட்டெழுத்து, சுருக்கெழுத்து சிறப்புத்திட்டம் ஒன்றின் கீழ் 4.13 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி உள்ளதை நான் பாராட்டுகிறேன்.

நடப்பாண்டிலே மட்டும் 20 மாணவர் இல்லங்களைத் துவக்கி அறிவுப்பசியைப் போக்கும் வேலையினை நிறைவுடன் செய்த புரட்சித் தலைவர் அவர்களின் அரசை மன நிறைவுடன் பாராட்டுகிறேன்.

சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு கடந்த 10 ஆண்டுகளாக புழக்கத்தில் இருந்த ஆதிதிராவிட மாணவர் இல்லங்களில் பழைய சாமான்களை மாற்றவும், மேஜைகள் வழங்கவும் மலைப் பகுதிகளில் உள்ள அரசு விடுதிகளில் மாணவர்கள் உறங்க சிமெண்டால் படுக்கைகள் உண்டாக்க 1982—83-ல் அரசு முடிவு எடுத்திருப்பதை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கும் மீனவர்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க 1982—83—ல் 300 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதை நான் வரவேற்கிறேன்.

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை.)

பழங்குடி மக்களுக்காக வீடு கட்டும் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராம வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்காக கடன் வழங்கும் தொகைக்காக 450 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதை நான் வரவேற்கிறேன். வீட்டுமனைகள் வழங்கும் திட்டத்தில் 1982—83-லே 125 இலட்சம் ரூபாய் ஒதுக்கி வீட்டு மனைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே மிக மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றது. முன் தமிழகத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டம் ஏால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படவில்லை என்று சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயலாற்றி அதற்கு என்னென்ன வழிவகைகளைச் செய்யவேண்டுமோ செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இந்த அதிகாரத்தை கொடுத்திருக்கின்றது. ஆனால் அந்த அதிகாரத்திற்காக ஒருசிலர் நீதிமன்றங்களுக்குச் சென்று தடைபெற்று அதனால் இப்போது மாநிலத்திலே உள்ள அரசு அலுவலகங்களின் மூலம் செய்யப்படுகின்றது என்பதை வரவேற்று, இந்த வீட்டுமனையைப் பொறுத்தவரையிலே கடந்த இரண்டாண்டுக் காலமாக பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்குக் கொடுக்கப்படாமல் உள்ளது என்பதைக் கூறிக் கொண்டு, இதற்காக மூன்றாண்டுத் திட்டத்தை உருவாக்கி இந்த வீட்டுமனை வழங்குகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையிலே விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு சீ. சிவப்பிரகாசம்] [1982 மார்ச் 17

தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டுவசதி வளர்ச்சி நிறுவனம் என்ற இந்த நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிட பழங்குடி மக்கள் 4 சதவீதம் கடன் பெற மானியமும், தொழில் தொடங்க 25 சதவீத மானியமும், வழங்கவும் பல்வேறு முன்னேற்ற வசதிகளை இந்தத் துறையின் மூலம் செய்து இந்த வீட்டுவசதி வளர்ச்சிக்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதை வரவேற்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம் ஒரு வீட்டுக்கு கொடுக்கப்படும் கடன் தொகையை 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரமாக மாற்ற வேண்டுவதுடன் மானியத்தை பழங்குடி மக்களுக்கு 50 சதவீதமாக ஆக்கவேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வசதியைப் பொறுத்தவரையிலே ஆதி திராவிட பழங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதியிலே சிறப்பாகச் செயல்படுத்த தமிழ்நாடு பரிசுச்சீட்டு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கிய புரட்சித் தலைவர் அவர்களின் அரசை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

அடுத்து, மின்வசதியைப் பொறுத்தவரையிலே ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு மின்வசதி அளிக்கப்படாமல் இருப்பதை மிகமிக விரைவாக கவனித்து பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளான ஏற்காடு, அருநத்தமலை, கல்ராயன்மலை, கொல்லிமலை ஆகிய பகுதிகளில் உள்ள குக்கிராமங்களுக்கு மின்வசதி அளிக்க நீண்டதொரு திட்டத்தை விரைவாகச் செயலாக்கி, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற பழங்குடி மக்களுக்கு மின்வசதியை உருவாக்கித்தர வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சமூதாய நலக் கூடங்களை உருவாக்கி, ஆதி திராவிட பழங்குடியினர் மக்களின் திருமணம், கூட்டங்கள், பொதுநிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்துள்ளதை வரவேற்கிறேன்.

கலப்பு மண தம்பதிகளுக்கு பரிசு தர 2.50 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கியதை வரவேற்கிறேன்.

பழங்குடியினருக்கு பல அரசு துறைகளும் நன்மை செய்ய தலைமைத் திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக மாவட்ட ஆட்சியரை செயல்பட வைத்துள்ளதைப் பாராட்டுகிறேன்.

பழங்குடியினர் வாழ்கின்ற மலைப்பகுதியில் பழங்குடியினர் மக்கள் விளைவிக்கின்ற பொருள்களை விரைவாக எடுத்துச் செல்ல பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சாலை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

ஆதி திராவிட மக்களிலுள்ள அருத்ததியினர் இன இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க கூட்டுறவு முறையில் காலணி தொழிற்கூடங்களையும், தோல் பதனிடும் தொழிற்கூடங்களையும் ஏற்படுத்தக் கேட்டுக் கோள்கிறேன்.

பழங்குடியினர் மக்கள் முன்னேற்ற நலனுக்காக பெரும் பல நோக்க கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்பட்டு அவைநன்கு செயல்பட்டு வருவதை வரவேற்று, இந்த சங்கங்கள் மூலம் இன்னும் பல திட்டங்களை பழங்குடி மக்களுக்கு செயலாக்கக் கேட்டுக் கொள்



1982 மார்ச் 17] [திரு.சீ.சிவப்பிரகாசம்]

பழங்குடி மக்களின் கடன் தொல்லையைப் போக்கக் கடன் நிவாரணச் சட்டத்தை விரைவாக செயலாக்கம் கொண்டுவர கேட்டுக் கொள்கிறேன்.

பழங்குடி மாணவிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த கொல்லிமலையில் உள்ள வாழவந்தி நாட்டில் தங்கும் வசதியுடைய பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று உருவாக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

கொல்லிமலையில் உள்ள பெரும் பலநோக்க கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கொல்லிமலையில் விளையும் பழங்களைக் கொண்டு பழப் பதனிடும் தொழிற்கூடம் ஒன்று உருவாக்க முயற்சிகளை எடுத்துக் கொண்ட இத்துறை அமைச்சர் அவர்களுக்கும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்குடி மக்கள் சார்பில் போடப்படும் ஒரு சில திட்டங்களை சிறப்பாக செயல்பட வைக்க, காலாகாலத்தில் செயல்பட வைக்க விரைவாக நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன். பழங்குடி மக்கள் நலத்தைச் சிறப்பாக மேம்படுத்த மாவட்ட பழங்குடியினர் மேம்பாட்டு நல அதிகாரி ஒருவரை உருவாக்கக் கேட்டுக் கொள்கிறேன். பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்காக தனித்துறையை ஏற்படுத்த மாண்புமிகு புரட்சித்தலைவரையும் மாண்புமிகு அமைச்சரையும் கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிட மக்கள் வாழும் பகுதிகளில் சிறப்பாக திட்டங்கள் செயல்படுவதை கவனிக்கவும், பொருளாதாரத் துறையில் பின் தங்கிய ஆதி திராவிட மக்கள் குறைகளை நீக்கவும், அடிப்படை நிலையிலே ஒரு குழு ஏற்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன்.

தோட்டக்கலைத் துறையின் சார்பில் ஒரு பெரிய அளவிலான பழ ஆராய்ச்சிப் பண்ணையை கொல்லிமலையில் ஏற்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயநலக் கூடம் ஒன்று பழங்குடி மக்கள் வாழ்கின்ற கொல்லிமலையில் உள்ள வாழவந்தி நாடு கிராமத்தில் உருவாக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதி திட்டத்தின்மூலம் இன்றைய நிலையில் கொல்லிமலையில் பழங்குடியினர் புதிய கிராமங்களை உருவாக்க முன் வந்துள்ளனர். இந்த கிராமங்கள் உருவாக்க 50% மான்யத்தை ஆதிதிராவிட வீட்டு வசதி நிறுவனம் வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட பழங்குடி பள்ளிகளில் விளையாட்டுப் பகுதிக்காக, துறையின் சார்பில் ஒவ்வொரு பள்ளிக்கும் நிதி ஒதுக்கம் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட நல இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றும் கண்காணிப்பாளர்களுக்கு மாவட்ட ஆதி திராவிட நல அலுவலராகப் பதவி உயர்வு கொடுப்பது குறித்து அரசு

விரைவாக ஆய்வு செய்யக் கேட்டுக் கொள்கிறேன். 'ஆபீஸர் ஆன் ஸ்பெஷல் ட்யூடி' பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளதால், பழங்குடியினர் துணைத்திட்டம் விரைவாக செயல்படுத்த காலதாமதமாவதால இந்தப் பதவியை விரைவாகப் பூர்த்தி செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரப் பணிகள் பொறுத்தவரை பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவ வசதியைச் சிறப்பாக செயலாக்க எனது தொகுதியில் மலைவாழ் மக்கள் துணைத்திட்டத்தின் மூலம் வலப்பூர் பிரிவிலிருந்து குழிவளவு வரை உள்ள 28 கி.மீ. சாலையைத் தார்ச்சாலையாக அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தலில் 18 சதவீத இடம் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ஒதுக்கி, ஆதிதிராவிட மக்கள் வாழ்வில் முன்னேற புரட்சித் தலைவர் தீட்டிய இந்த திட்டத்தின் மூலம் புரட்சித் தலைவர் அரசு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஆதிதிராவிட மக்களுக்கு சலுகைகளை செய்கின்றதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

(மாலை 5.20)

மாணவர் மாணவிகள் விடுதிகள் இல்லாத இடங்களில் விடுதிகளை உடனே கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் காளப்பநாய்க்கன்பட்டி, மங்களபுரம், காரைக்குறிச்சி, போன்ற இடங்களில் பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வனத்துறைக்கு சொந்தமான நிழல் தரும் மரங்கள் உள்ள பகுதிகளில் ஏலம், காப்பி பயிரிட மலைவாழ் மக்கள் துணைத் திட்டத்தில் இரண்டு ஹெக்டேர் நிலம் ஒதுக்க இத்திட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மலைவாழ் மக்கள் வசிக்கின்ற இடமான சேந்தமங்கலம் ஒன்றியத்திலுள்ள நடுக் கோம்பை, வாழவந்திகோம்பை போன்ற இடங்களில் மலைவாழ் மக்களின் குழந்தைகள் கல்வி மேம்பாட்டிற்காக தங்கும் விடுதிகள் வசதியுடன் கூடிய ஒரு ஆரம்ப உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தரவேண்டும்.

பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அத்யாவசியப் பொருள்கள் கொடுக்கவும், விளையும் பழங்களை சங்கத்தின் மூலம் வாங்கவும், லாரியை மானிய முறையில் அவற்றிற்கு வழங்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எழுதுபொருள் அச்சுத்துறை. இது தமிழகத்தில் எட்டு ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. நவீன முறையில் அது செயல்பட புதிய இயந்திரங்களை வாங்கி இத் துறை சீரும் சிறப்புமாக செயல்பட வழிவகை செய்யவேண்டும்.



அச்சுத்துறையில் பணிபுரிகிற அச்சக பணியாளர்களுக்கு குடியிருப்புகள், தொழிலாளர் நல மருத்துவ வசதி, பஸ், தேநீர், பணியாளர் நல நிதி, கூட்டுறவுச் சங்கம், ஆகிய வசதிகளை செய்து கொடுத்துள்ள புரட்சித் தலைவர் அவர்கள் அரசைப் பாராட்டுகிறேன். இத்துறைக்கு ரூ. 10,28,26,00 செலவிட நிதி ஒதுக்கியிருப்பதை வரவேற்று, அமைச்சர் அவர்கள் சிறந்த திட்டங்களை செயலாக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நல மானியக் கோரிக்கை மீது குடியரசுக் கட்சி சார்பில ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் விடுபட்டுள்ள ஒன்றிரண்டு கருத்துக்களை, பிரச்னைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழகம் முழுவதும் பெரும்பாலான பகுதிகளில் வீட்டுமனைகள் கிடைக்காத ஒரு முக்கிய பிரச்னை காரணமாக சங்கடப்பட்டுக்கொண்டிருக் கிறார்கள். வீட்டு மனைகளுக்காக நிலம் எடுக்கவேண்டுமென்று மாவட்ட நல அதிகாரிகளும் தாசில்தார்களும், வருவாய்த்துறை அதிகாரிகளும் அந்தந்த இடங்களுக்குசென்று வீட்டுமனை வேண்டப் படுகின்ற இடங்களைப் பார்வையிட்டு அதை அந்த தாழ்த்தப் பட்ட மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிப் பதற்கு முன்னால் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கிவிடுகிறார்கள். இது ஒரு தொகுதியில், ஒரு இடத்தில் மாத்திரம் நடைபெறுவதல்ல. தமிழ்நாடுமுழுவதும் 99% இடங்களில் கோர்ட்டுக்குச்சென்றுதடை வாங்கப்படுகிறது. இப்படி தடை வாங்கும் காரணத்தால்—அந்தத் தடைகளை ஐந்து அல்லது ஆறு மாதங்களில் உடைத் தெறிந்து விடும் தடைகள் என்றால் பிரச்னை இல்லை.—ஆனால் எட்டு, ஒன்பது, பத்து, பதினைந்து ஆண்டுகள் இந்தத்தடைகள் இருப்பதன் காரணத்தால் வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுப்பது என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. அந்த ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் கிடைத்தாக வேண்டும். அதிகாரிகள் எவ்வளவுதான் சுறுசுறுப்பாக வேலை செய்தாலும்கூட கடமையுணர்ச்சியோடு பணியாற்றினாலும்கூட கோர்ட்டுக்கு சென்று தடை வாங்கிவிடுகிற காரணத்தால் நில ஆர்ஜிதம் செய்கிற வேலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார்கள் இது சென்ற ஆண்டோ அல்லது ஐந்தாறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிற விவகாரம் அல்ல.

1957-ல் இருந்து இப்படி தடை வாங்கும் விவகாரம் நடை பெற்றுக்கொண்டு வருகிறது. இதற்கு ஒரு முக்கியமான மாற்று யோசனையை அரசு கண்டுபிடித்தாக வேண்டும். எவ்வளவோ கட்டுப்பாடுகளை நீதிமன்றங்களுக்கு விதித்துக் கொண்டிருக்

கிறோம். எவ்வளவோ சட்டங்களைத் தளர்த்திக் கொண்டிருக்கிறோம். இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அந்த நிலச்சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்கு சென்று தடை வாங்குவதை, அப்படிப்பட்ட தடை உத்தரவுகளை மட்டும் தரக்கூடாது என்ற உத்தரவை, சிவில் கோர்ட்டுக்கு அப்படி தடை செய்கிற அதிகாரத்தை நிச்சயமாக இந்த அரசு முன்வந்து அந்த அதிகாரத்தை எடுக்கவேண்டும் என்று அந்த ஆதிதிராவிட மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் தமிழ்நாடு முழுவதும் இந்த மக்களுக்கு காலம் முழுவதும் வீட்டுமனை கிடைக்காமல் போய்விடும். அரசு புறம்போக்கு நிலமானால் வீட்டு மனைகள் வழங்கலாம். அரசுக்குச் சொந்தமான இடங்களில் வீட்டு மனைகள் வழங்கலாம். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்க நில ஆர்ஜிதம் செய்கிறபோது அந்த நிலம் இந்த மக்களுக்குக் கிடைக்காமல் தடை வாங்கிவிடுகிறார்கள்.

அதிலும் இன்னொரு தந்திரம். எப்படிப்பட்ட தந்திரம்? நிலத்தின் சொந்தக்காரர், அந்த நிலத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஏதுவாக இருப்பதற்காக, ஒரு தந்திரமான வேலையைச் செய்கிறான். அந்த நிலத்தை ஒரு அரிசனின் பேரிலே எழுதி வைத்து விடுகிறான். அப்படி எழுதி வைத்து விட்டு, அந்த அரிசனின் பேரிலே இருக்கின்ற நிலத்தையா எடுக்கப் போகிறீர்கள் என்று அரசாங்கத்திடம் முறையீடு செய்து, அதிலே இருந்து தப்பிக்கும் தந்திரத்தைச் செய்கிறான். இதிலே தப்பித்துக் கொள்வதற்காக இப்படிப்பட்ட புத்திசாலித்தனமான தந்திரமான ஏற்பாட்டைச் செய்கிறார்கள். எனவே, அது அரிசனன் நிலமாக இருந்தாலும் சரி, அரிசனின் மேல் எழுதி வைக்கப்பட்ட நிலமாக இருந்தாலும் சரி, டீ. சி. புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, ரெவின்யூ புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, இந்த அரிசன மக்களுக்காக என்று சொல்லுகிறபோது, அதிலே தடை வாங்குவதற்கு, எந்த நிலையிலும் அதை தடுப்பதற்கு சிவில் கோர்ட்டுக்குப் போனால், அதைத் தடை செய்கின்ற வகையிலே அரசாங்கம் ஒரு சட்ட முன்வடிவை கொண்டு வந்து, நீக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. இந்தச் சமுதாயத்திலே சாதியின் பெயரால் தாழ்த்தப்பட்ட மக்கள் சுரண்டப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ்மக்கள் என்ற பெயராலே இன்றைக்கு பல போலி சான்றிதழ்களைப் பெற்று. அதிலே வேலை வாய்ப்பை அவர்கள் பெற்று அந்த சாதியினர் சுரண்டப்படுகின்ற நிலைமை இருக்கிறது. திருப்பத்தூர் வட்டாரத்திலே குறும்பர் என்ற சாதியினர் இருக்கின்றனர். குறும்பர் என்றால் அவர்கள் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இதை அவர்கள் குறும்பன் என்று போட்டு, அவர்கள். தவறான சான்றிதழை வாங்கிவிடுகிறார்கள். குறும்பன் என்றால் மலைவாழ் மக்களாகக் கருதப்படுகிறார்கள். எனவே, 'ர்' என்பதை 'ன்' என்றாக்கி, இத்தகைய தவறான சான்றிதழைப் பெற்று,



அவர்கள் வேலையிலே சேர்ந்து விடுகிறார்கள். இதைத் தாசில்தார் கண்டுபிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து கோர்ட்டிலே உத்தரவு போட்டு, அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இதேபோன்று, கம்மா ரெட்டியார் என்று சொன்னால், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். கொண்டா ரெட்டி என்றால், மலைவாழ் மக்களாகக் கருதப்படுகிறார்கள் எனவே, இந்தப் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் கொண்டா ரெட்டி என்று போட்டுக் கொண்டு, அதற்கான சான்றிதழை வாங்கி, இன்றைக்குத் தேர்தலிலே நிற்கின்ற நிலைமையைக்கூட உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். பல பேர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், சாதியின் பெயரால் இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்கின்றன. தமிழகத்திலே சாதியின் பெயரால் பெரிய தலைவர்களே கூட இதிலே தலையிட்டிருக்கிறார்கள். எனவே, இவற்றைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். அதிகாரிகளிடம் இப்படிப்பட்ட சான்றிதழ்கள் வழங்கக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

4,5 தினங்களுக்கு முன்னால், பிற்பட்டோர் நல மானியத்திலே பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள், மிகவும் பிற்பட்டோர் வகுப்பைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறினார்கள். நான் இந்த அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலைமை வந்தால், அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்யும் கொடுமையாகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு நார்ம் வைத்து அரசாங்கம் அதிலே ஒரு முடிவைச் செய்திருக்கிறது. இன்ன தகுதி உடையவர்கள்தான் தாழ்த்தப்பட்டவர்களாக, மலைவாழ் மக்களாக இருக்க முடியும் என்பதை முடிவு செய்திருக்கிறார்கள். சமுதாயத்திலே ஏழைகளாக இருப்பார்கள். ஆனால் சமுதாயத்திலே தாழ்த்தபபட்டவனும் ஏழையாக இருப்பான். பிற்படுத்தப்பட்டவனும் ஏழையாக இருப்பான். இவர்கள் இருவரையும் ஒன்றாகச் சேர்க்கக்கூடாது. தாழ்த்தப்பட்ட மக்களிடையே இருக்கின்ற ஏழ்மை, பிற்பட்ட முற்பட்ட சமுதாயத்திலே மிகவும் ஏழ்மையாக இருக்கின்றவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் இரண்டு பேரும் ஏழ்மையாகத் தானே இருக்கிறார்கள், இருவரையும் ஒன்றாகச்சேர்த்துக் கொள்ளுங்கள் என்று தத்துவம் பேசுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களில், ஒரு வேளை உணவுக்கும் அல்லல் படுகிறார்கள், அதேபோல். பிற்படுத்தப்பட்ட மக்களிலும் ஒரு வேளை உணவுக்கு வழியில்லாமல் அல்லல் படுகிறார்கள். ஆனால், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சமுதாயத்திலே ஒரு உரிமை பெற்று வாழ்கிறார்கள் அந்தஸ்து பெற்று வாழ்கிறார்கள். ஆனால் மூன்று வேளை சோற்றுக்கு வழியிருந்தாலும், ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன், சமுதாயத்திலே அத்தகைய உரிமை பெறமுடியாது அந்தஸ்து பெறமுடியாது. ஆகவே, எந்த நிலையிருந்தாலும் சரி எவ்வளவு கீழ்த்தரமான, வறுமையிலே வாடும் நிலைமையிலே இருந்தாலும், பிற்பட்ட சமுதாயத்தினரைத் தாழ்த்தப்பட்ட மக்கள் பட்டியலிலே நிச்சயமாகச் சேர்க்கக்கூடாது. அது வேறு, இது வேறு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்

[திரு. ஜி. மூர்த்தி] [1982 மார்ச் 17

பொருளாதாரத்திலே இரண்டு பேரும் சமமான நிலையிலே உள்ளவர்கள் என்று சொல்லுகிறார்கள். அதனால் இந்தச் சலுகையைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்றவர்கள், அந்த சமுதாயத்தோடு உறவு வைத்துக்கொள்ளத் தயாரா என்றால் முன்வருவது கிடையாது. இந்த சமுதாயத்தோடு உறவு வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று ஒரு இயக்கத்தின் தலைவர் சொல்கிறார் என்ற பெருமை இந்தச் நாட்டிலே இருக்கிறது. தலைவன் சம்பந்தி என்று சொல்லிவிட்டார் என்பதற்காக, எல்லாத் தொண்டர்களும் தாழ்த்தப்பட்ட மக்களோடு சம்பந்தியாக இருக்க முன்வருவதில்லை. தலைவர் சொன்ன மாத்திரத்தில் போராட்டத்திற்குத் தொண்டன் வருவான். ஆனால், சம்பந்தியாக வேண்டுமென்று சொன்னால், அதற்கு முன்வர மாட்டான், எதிர்ப்பு தெரிவிப்பான்; போராட்டத்திற்கு வருவான்; சிறைச்சாலை செல்வதற்கும் வருவான்; அப்படி வருகின்ற தொண்டன் சம்பந்தியாக வரமாட்டான்.

(மாலை 5-30)

சம்பந்தியாக வைத்துக்கொள்ளவேண்டும் தாழ்த்தப்பட்ட மக்களை என்று சொன்னால் மாத்திரம் வீட்டுக்குள்ளே போய் அகிங்கிவிடுகிற அசிங்கமான தன்மைதான் தமிழகத்திலே நடைபெற்று வருகிறது. அப்பேர்ப்பட்ட பட்டத்தை எங்களுக்கு வழங்கவேண்டுமா? காந்தியடிகள் எங்களைப் பார்த்து அரிசனங்கள் என்று சொல்லிவைத்தார். அது ஒரு பெரிய பட்டம். இது இரண்டாவது பட்டம். நாங்கள் எல்லாம் சம்பந்தி. எத்தனை பேர்கள் எங்களைச் சம்பந்தியாக ஏற்றுக் கொள்கிறார்கள்? இந்த நாட்டிலே எத்தனை பேர்கள் எங்களுக்கு சம்பந்தி அந்தஸ்தைத் தந்திருக்கிறார்கள்? எங்களை சத்பந்தியாக வைத்துக்கூட இந்த நாட்டிலே இன்றைக்கு அரசியல் நடத்துகிறார்கள். எல்லோரும் நடத்தினார்கள், இப்போது இவர்கள் நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையைப் போக்கத்தான் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் வேறு எந்தச் சாதியையும் சேர்க்கக்கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொண்டு அதிலே அந்த மக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லா ஆட்சிக் காலத்திலேயும் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது கொடுமைகள் நடைபெற்றன. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே நடைபெற்றது. தி.மு க. ஆட்சிக்காலத்திலே நடைபெற்றது. அண்ணா தி.மு க ஆட்சிக் காலத்திலே நடைபெற்றது. இனிமேல் எந்த ஆட்சி வந்தாலும் சரி, அந்தக் கொடுமைகள் நடைபெறும். இது தவிர்க்க முடியாத ஒன்று. அதற்கு அரசாங்கத்தையோ ஆளும் இயக்கங்களையோ ஆட்சியிலே உள்ள மந்திரிகளையோ முதல்வர்களையோ குறை சொல்லிக் கொண்டு போவதைக் காட்டிலும் இப்படி நடைபெறுவதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து ஆகவேண்டும். இது எல்லா ஆட்சிகளிலும் நடக்கிறது, காரணம் ஆட்சியிலே இருக்கின்றவர்கள் மாத்திரம் அதற்கு பொறுப்பில்லை, சமுதாய அமைப்பு அதற்குப் பொறுப்பு. ஒரு ஊரின் ஒரு பகுதியிலே மேல் சாதி



1982 மார்ச் 17] [திரு. ஜி. மூர்த்தி]

மக்களும் இன்னொரு பக்கத்திலே கீழ் சாதி மக்களுமாக பரம்பரை பரம்பரையாக வம்சாவழியாக இருக்கின்ற அப்பேர்ப்பட்ட பாகுபாடு ஒரே கிராமத்திலே இருக்கின்ற காரணத்தினால் சமுதாய அமைப்பை மாற்றுவதற்கு நாம் வழிவகை கண்டாக வேண்டும். இதிலே ஆளுகின்றவர்களையோ மந்திரிகளையோ குறைசொல்லிக் கொண்டு போவதில் நியாயம் இல்லை என்ற காரணத்தினால் அந்த மக்களுக்குச் சமத்துவம தருவதற்கு வழிவகை செய்தாக வேண்டும். மேல் சாதிக்காரர்களைப் பார்த்து, சாதி இந்துக்களைப் பார்த்து நீங்கள் திருந்தி விடுங்கள் என்று சொன்னால் திருந்தமாட்டார்கள். 2 ஆயிரம் ஆண்டுக்காலமாகத் திருந்தியதாக வரலாறு இல்லை, திருந்தப் போவதும் இல்லை. காரணம் அவர்களுக்குச் சிந்தனையும் கிடையாது, பகுத்தறிவும் கிடையாது. சமத்துவம் தருவதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள சமுதாயப் பாதுகாப்பிற்காக தங்கள் மீது நடத்தப்படுகின்ற கொடுமைகளிலிருந்து தங்களை மேல்சாதிக்காரர்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்வதற்கு ஒரு சக்தி வாய்ந்த அமைப்பினை தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதிகளிலே ஏற்படுத்தியாக வேண்டும். 500 பேர்கள் தாழ்த்தப்பட்ட. மக்கள் இருந்தால் 1000 பேர்கள் மேல்சாதிக் காரர்கள் அடிக்க வருகிறார்கள். 500 பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்தால் 3,000 பேர்கள் அடிக்க வருகிறார்கள். குறைந்த பட்சம் ஒரு ஐயாயிரம் பேர்களைக் கொண்ட தாழ்த்தப்பட்ட அமைப்பு ஒரே இடத்திலே இருக்குமானால் அடிக்கவராவிட்டாலும் ' அடிக்க வருகிறவர்கள், 5 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள், உள்ளே புகுந்தால் உதைப்பார்கள் என்ற மாரல் பியராவது இருக்கும். ஆகவே செப்ரேட் செட்டில்மெண்ட், தனிக் குடியிருப்புகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

நாங்கள் நம்பிக்கையை இழந்துவிட்டோம். இதற்கு முந்தைய சர்க்கார் அல்லது இந்த நாட்டை யார் ஆண்டாலும் சரி எங்களைப் பாதுகாப்பதற்கு முன் வருவார்கள் என்ற நம்பிக்கையை நாங்கள் இழந்து விட்டோம். இந்த நாட்டிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலைமை மேல் சாதிக்காரர்களுடைய அரவணைப்பிலே, தயவிலே வாழ்கிற பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. தன்னைத்தானே உயர்த்திக் கொள்கின்ற தன்மையில் சமுதாய எதிர்ப்பிலிருந்து தங்களைத் தவிர்த்துக் கொள்கின்ற முறையிலே தனிக் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீடுகள் கட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டுகிறோம். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களிலே வீடுகளைக் கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதை விட்டுவிட்டு அரசாங்கமே அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து அவற்றிலே அவர்களைக் குடியேற்றுகிற நிலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். கிராமப்புறங்களிலே 10 ஆயிரம் வீடுகள் கட்டி தாழ்த்தப்பட்ட மக்களைக் குடியேற்றுகின்ற இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அந்த மக்களுக்கு சமுதாயப் பாதுகாப்புக் கிடைப்பதற்கு வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய சிறப்ப ஐந்து ஆண்டுத் திட்டம் என்ற பெயரில் 80,90கோடி ரூபாய் இந்த ஐந்து ஆண்டுகளிலே செலவிடுவதற்குத் திட்டம் தீட்டி இருக்கிறார்கள். மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். வட்டார அளவிலே உள்ள பி.டி.ஓக்கள் மூலமாகச் செயல்படுத்த வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பி. டி. ஓக்கள், அவர்களுக்கு உள்ளிட்ட அதிகாரிகள்,கிராம சேவக்குகள் போன்றவர்கள் எல்லாம் இந்த மக்களுடைய சமுதாயப் பிரச்சினைகளை அறிந்து அந்த எண்ணத்தோடு அதைச் செய்வார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த 5 ஆண்டுக் காலத்திலாவது,இந்தத் திட்டம் முடிகிற வரையிலாவது வட்டார அளவிலே தனித் தாசில்தார்கள் இதற்கென்றே நியமிக்கப்பட்டு அவர்கள் மூலமாக மனுக்களைப் பெற்றுப் பரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை நல்லமுறையிலே நிறைவேற்ற ஏற்பாடு செய்யமுடியும். பி.டி.ஓவுக்கு ஏற்கனவே வேலைகள் அதிகமாக இருக்கின்றன. இந்த வேலையைக் கொடுத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனிச் சிறப்புத் திட்டத்தைக் கொடுத்தால் அதற்கான தகவல்களை அவர்கள் சேகரிக்கமுடியாது. ஆபீஸிலேயே உட்கார்ந்துகொண்டு அதை எழுதிவிடுவார்கள். உண்மையான நிலைமையைத் தெரிவிக்க முடியாது. வட்டார அளவிலே அதற்காகத் தனித் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டு இந்தப் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு, அதன் மூலமாக அவர்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்குக் கடன் வாங்கியிருக்கிறார்கள். ஆதி திராவிட நலத்துறையிலும், கூட்டுறவு வங்கிகளிலும் கடன் வாங்கியிருக்கிறார்கள். அரசாங்கம் சிறு விவசாயிகளுக்குப் பலகோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் தாலுக்கா அளவிலே ஒரு பத்து பேர் என்ற வீதத்திலே இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய்தான் வாங்கியிருப்பார்கள். தமிழகம் முழுவதும் பார்த்தால் ஒரு 80 லட்சம் அல்லது 90 லட்சம் தான் அவர்கள் வாங்கியிருக்கிற கடன் வரும். ஒரு கோடி கூட இருக்காது. ஆகவே இந்தக் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்து அந்த ஏழை மக்கள் பயன்பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நகர சுத்தித் தொழிலாளர்கள். இந்த நாட்டைச் சுத்தமாக வைத்திருக்கிற மிக முக்கியமான வேலை செய்பவர்கள். ஆனால் பரிதாபம் அதிலே தான் நூற்றுக்கு நூறு சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் வேலைவாய்ப்பை நம்பியிருக்கிறார்கள் இதுவரையில் தாழ்த்தப்பட்ட அல்லாதவர்கள் ஒருவர் கூட நகராட்சியிலே கால்வாய் தள்ளுகிற, தெரு பெருக்கிற வேலைக்கு வருவதில்லை. சமத்துவம் பேசுகிற அத்தனை சமுதாயத்தினரையும் பார்த்துக் கேட்கிறேன். இந்த ஒரு வேலைக்கு யாராவது அப்ளிகேசன் போடுவது உண்டா? பிறப்பாலே கலெக்டராகத்தான் ஆகவேண்டும், எஸ்.பி. யாகத்தான் ஆகவேண்டும் என்ற எண்ணுகிற நேரத்தில் பிறப்பாலேயே தெரு பெருக்கத்தான்



போக வேண்டும் என்று இந்த நாட்டிலே ஒரு சமுதாயம் சபிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சமுதாயத்தின் தலையெழுத்தை மாற்ற வேண்டியது இந்த அரசாங்கத்தின் பொறுப்பு. தினமும் தெருவைப் பார்த்தே தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிற தெரு பெருக்குகிற தொழிலாளி, சேற்றிலே இறங்கி தோலை நனைத்து அதை வெண்மையாக்கி வெளியே கொணர்ந்து அழகான வண்ணத்திலே தோலை உருவாக்குகிற டேனரி தொழிலாளி, நாள்தோறும் காலை எழுந்து மாலை வரையில் உடற்பயிற்சி செய்து கொண்டிருக்கிற பீடித் தொழிலாளி இவர்கள் அத்தனை பேருக்கும் அரிசி மற்றும் அத்யாவசியப் பொருள்களை விநியோகிக்க வேண்டும். நாம் காவல்துறைக்கு விநியோகித்துக் கொண்டிருக்கிறோம். அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அதை விட மோசமான, மிக இழிவான தொழிலைச் செய்கிற, மற்றவர்கள் எல்லாம் பார்த்து கேவலப்படுத்துகிற அளவில் மோசமான தொழிலைச் செய்து கொண்டிருக்கிற இத்தகைய நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும் பீடித் தொழிலாளர்களுக்கும், டேனரி தொழிலாளர்களுக்கும் அத்யாவாசியப் பொருள்களைப் பாதி விலையில் விநியோகிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு எத்தனையோ அமைப்புகள் நாட்டிலே வந்து கொண்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள அமைப்பினை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அனைத்து உரிமையையும், அதிகாரத்தையும் பெற்ற மற்ற சமுதாயத்தினர் ஜாதிக்கள் பெயராலே அமைப்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். படையாச்சிகள் சங்கம், தேவர்கள் சங்கம், பிராமணர்கள் சங்கம் தேவை தானா இந்த நாட்டிலே? யாரைப் பழி வாங்குவதற்காக, யாரை ஒடுக்குவதற்காக, நசுக்குவதற்காக இவற்றை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? செக்குலரிசம் பேசுகிற இந்த நாட்டிலே ஜாதிகள் பெயராலே வைத்துக்கொண்டிருக்கிற இந்த அமைப்புகளைத் தடை செய்ய வேண்டும். ஆர். எஸ். எஸ். என்கிற இயக்கம் இனவெறியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது. இவற்றைத் தடை செய்யவேண்டும். தேசியப் பாதுகாப்பு சட்டத்திலே கைது செய்து உள்ளே தள்ள வேண்டும். எல்லோரும் ஒரு மதத்தை ஒரு சமுதாயத்தை பழி வாங்குவதற்காக இது போன்று வைத்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக இவற்றை தடை செய்து ஒரு உத்தரவைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் நிலையிலே எவ்வளவோ முன்னேற்றம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு வேலை கிடைப்பதே கடினம். சேர்ந்து 10 ஆண்டிலே புரமோஷன் வரக்கூடிய நிலை இருக்குமானால் 9-ஆம் ஆண்டிலே அவர்கள் மீது ஒரு ரிமார்க்கை வைத்து புரமோஷன் எலிஜிபிலிட்டி இல்லாமல் செய்கிற புத்திசாலித்தனமான தீண்டாமை, 'இன்டெலக்சுவல் அன்டச்சபிலிட்டி' அலுவலகங்களிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் உடைத்தெறியக்

கூடிய வகையில், தாழ்த்தப்பட்ட மக்கள் திறமையில்லை என்ற காரணத்தினாலே, தகுதியில்லை என்ற காரணத்தினாலே பதவி உயர்வு தரப்படவில்லையானால் அதற்கு விளக்கம் தருவதை விட்டு, எதிலே தகுதியில்லாமல் இருக்கிறானோ, அந்த தகுதியை அரசாங்கம் அவனுக்கு ஏற்படுத்தி தரவேண்டும், படிப்பிலே தகுதியில்லையா. அவனைப் படிக்க வைக்க வேண்டும். டெக்னிக்கல் குவாலிபிகேஷன் இல்லையா அதை அரசாங்கமே அவனுக்குக் கொடுக்கவேண்டும். அதுவரையிலும் அந்த புரமோஷன் இடம் வேகன்ட்டாகவே இருக்க வேண்டும். நிரப்பக்கூடாது. காரணம் இன்றைக்கு எஸ்.டி., எஸ்.சி.யில் இருக்கிற வேகன்சிக்கு ஆள் இல்லை என்று சொன்னால் பி.சி.யிலேயிருந்து, பார்வேர்டிலேயிருந்து வருகிற வர்களைப் போடுவதற்கு எந்தச் சட்டம் வழி வகுக்கிறது? அரசியல் சட்டத்திலே இருக்கிறதா? இது குறித்து ஏதாவது சட்டத்தைப் பிறப்பித்து இருக்கிறோமா என்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அதிகாரிகள் இப்பேர்ப்பட்ட நிலைமையை அனுசரித்து பிறருக்கு வெளியே தெரியாமல் இப்படிப்பட்ட புத்திசாலித்தனமான தீண்டாமையை அரசாங்கத்திலே அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-40)

இந்த அரசாங்கத்திற்குத் தனிப்பட்ட முறையிலே ஒன்றை என்னுடையவேண்டுகோளாக விடுக்க ஆசைப்படுகிறேன். இன்றைக்கு மாவட்டங்கள் பிரிக்கப்படுகின்றன. வட ஆற்காடு மாவட்டம் கூட இரண்டாகப் பிரிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பேரறிஞர் அம்பேத்கார் அவர்களுக்கு மிகவும் பெருமை அளிக்கக் கூடிய அரசு இது. அதனாலேதான் அவர் விரும்பிய 18% ரிசர்வேஷனை, உள்ளாட்சித் தேர்தலிலே அந்த மக்களுக்காக ஒதுக்கிய கழகம், அரசு, நம்முடைய புரட்சித் தலைவருடைய அரசு என்பதை இன்றைக்குத் தமிழகம் உணரும். தன்னை சம்பந்தி ஆக்கிக் கொண்டவர்கள், சம்பந்தி என்று சொல்லிக் கொண்டவர்கள் எல்லாம் இந்நாட்டிலே 9, 10 ஆண்டுக்காலம் ஆண்டபோது, இப்படிப்பட்ட ரிசர்வேஷனைக் கொடுப்பதற்கு மனம் இல்லாமல் போனது, மார்க்கம் இல்லாமல் போனது, சிந்தனை இல்லாமல் போனது; இரண்டு ஆண்டுகளிலே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர்தான் அந்த மக்களுக்கு 18% ஒதுக்கி, இந்த நாட்டிலே இருக்கிற யார் எதிர்த்தாலும், எந்தக் கட்சி எதிர்த்தாலும், எப்படிப்பட்ட பெரிய மனிதர் எதிர்த்தாலும் அதை உடைத்தெறிந்து அந்த மக்களுக்குச் சமுதாய அந்தஸ்து கொடுக்க முன்வந்திருக்கிறார். அவரை, இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன், வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கப் போகிறீர்கள். அந்த மாவட்டத்திலே, தாழ்த்தப் பட்ட மக்கள், பேரறிஞர் அம்பேத்காருடைய கொள்கையிலே பற்றுள்ளவர்கள், பாசம் உள்ளவர்கள்—பகுத்தறிவு இயக்கம் வட ஆற்காடு மாவட்டத்திலே சிறப்பாக இயங்குகின்ற இயக்கம்-இருக்கின்ற காரணத்தால், அந்தப் பெருமக்களுக்குப்



பெருமை தேடுகின்ற வகையில், வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது, வேலூர் மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று இந்த அவைக்கு வேண்டுகோளாக வைக்கிறேன்.

கர்நாடகத்திலே பேரறிஞர் அம்பேத்கார் சிலையைச் சட்ட மன்றத்தின் முன்னால் வைத்திருக்கிறார்கள். ஆந்திராவிலே அந்தச் சிலையை வைப்பதாக, முன்னாள் முதல்வர் அவர்கள் உறுதி அளித்தார்கள். மராட்டியத்திலே வைக்க இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெருமையைத் தமிழகம் தேடிக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பெருமையப் புரட்சித்தலைவர் தேடித் தரவேண்டும் என்ற காரணத்தினாலே, தமிழகச் சட்டமன்றம் முன்பு அரசுச் செலவிலேயே பேரறிஞர் அம்பேத்காருக்கு ஒரு சிலையை வைக்க வேண்டும். அதற்கான ஒரு நடவடிக்கையை நம்முடைய புரட்சித் தலைவர் எடுக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்கள் முன் நின்று அந்தக் காரியத்தைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பேரணாம்பட்டிலே, டவுனிலே மாத்திரம் 18,000 பேர்கள் இருக்கிறார்கள். அந்த மக்கள் திருமணம் செய்து கொண்டாலும் சரி அல்லது கெட்ட காரியம் நடந்தாலும் சரி, மற்றவர்கள் எல்லாம் பார்க்கின்ற அளவிலே, அல்லது வந்து போகின்ற அளவிலேகூட இடம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு, கண்டிப்பாக ஒரு கல்யாணக் கூடம், சமுதாயக் கூடம் கட்டித் தரப்பட வேண்டும். நீண்ட நாள் கோரிக்கை இது. இதை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக முடித்துத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

நலங்காநல்லூர் எனகிற ஒரு பகுதி. இதுவரை பள்ளிக்கூடமே பார்க்காத பகுதி. ஏற்கனவே, நான் இதை இங்கே சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள், 5, 6 வயதிலேயிருந்து 15 வயதிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், மற்றைய மேல்ஜாதிக்காரர்கள் நிலத்திலே ஆடு, மாடு மேய்ப்பதற்குச் செல்கிறார்கள். காரணம் அந்த ஊரிலே பள்ளிக்கூடம் இல்லாத நிலைமையிருக்கிறது. இது இப்போதில்லை, சுதந்திரம் வாங்கியதிலேயிருந்து, அங்கே, அந்த இடத்திலே பள்ளிக்கூடம் இல்லை. தயவுசெய்து அங்கே ஒரு ஆதி திராவிடர் நல்லப்பள்ளி ஆரம்பித்து, அந்த மக்களுக்குக் கல்விக் கண் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டிலே ஆதி திராவிடர் நல விடுதி இருக்கிறது அதற்குச் சொந்தக் கட்டிடம் கிடையாது. வாடகைக் கட்டிடத்திலே இன்றைக்கு அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பேரணாம்பட்டைப் பற்றி நன்றாகத் தெரியும். அங்கே 8,9 மணி ஆகிவிட்டால் வெளியே நடமாடுவது கஷ்டம். காரணம், அப்படிப்பட்ட சூழ்நிலை உள்ள இடம். அந்த இடத்திலே அந்த மாணவர்களை அடைத்துவிட்டு, அவர்கள் வெளிவருவதற்குப் பயப்படக்கூடிய

சூழ்நிலையிருக்கிறது. உடனடியாக வாடகைக் கட்டிடத்தை மாற்றி அந்த மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய விடுதியைக் கட்டித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பேரணாம்பட்டிலே ஒரு எலிமென்டரி ஸ்கூல் இருக்கிறது. 1953 ஆவது ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த எலிமென்டரி ஸ்கூல் இதுவரையிலும் உயர்நிலைப் பள்ளியாக்கப்படவில்லை. ஏறத்தாழ 750 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் உயர்நிலைப் பள்ளியாக்கப்படவில்லை, அதை அமைச்சரவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டிலே வேலை இழந்த தோல்பதனிடும் தொழிலாளர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் டானரியிலே இருந்தவர்கள். இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். காரணம், டானரியிலே சென்றுபார்த்தால், தங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள் மற்றசமுதாயத்தினரை. வேலைக்கு அழைத்து ஒரு வாரத்திலே வீட்டுக்கு அனுப்புகிறார்கள் இது வரையில் நிரந்தரமாக்கப்பட வில்லை. அதனாலே, இப்படி வேலை இழந்தவர்கள் 2,000, 3,000 பேர்கள் பேரணாம்பட்டு நகரத்திலே இருக்கிறார்கள். அன்றாடம் பிழைப்புக்குத் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக, நம்முடைய டாட்கோ மூலமாக, அந்த மக்களை வாழ வைப்பதற்கு கூட்டுறவு முறையிலே ஒருதோல் பதனிடும் தொழிற்சாலையை அமைச்சர் அவர்கள் ஆரம்பிக்க வேண்டும். ஏற்கனவே, அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதில் முனைப்பு காட்டி முடித்துத் தந்து, அந்த மக்களுடைய வாழ்வில் விளக்கேற்றி வைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மானியக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பில், 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகை 412 இலட்சமாகும் என்றும், இதில் ஆதி திராவிடர் 73.16 இலட்சம் பேர், பழங்குடியினர் 3.11 இலட்ச பேர் என்றும் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்திருக்கின்ற இந்தக் குறிப்பிலே கூட, சமுதாயத்தினுடைய அடித்தட்டிலே இருக்கின்ற இந்த மக்களில் பெரும்பாலான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ இருக்கிறார்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அடித் தட்டிலே இருக்கின்ற இந்த மக்களை எந்தவொரு ஆசும்



தன்னால் இயன்ற வரையிலே கல்வி, பொருளாதாரத்திலே மேம்பாடு, வேலைவாய்ப்புகள், குடியிருக்கின்ற வீடுகள் ஆகிய இவைகளிலே கைதூக்கி விட வேண்டுமென்பதிலே நமக்குள் கருத்து வேறுபாடு இருப்பதற்கு நியாயம் இல்லை.

ஆனால் இன்றையதினம் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு உறுப்பினர்கள் காலையிலிருந்து கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து பேசிய பல சட்டமன்ற உறுப்பினர்கள் கூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தச் சமுதாய மக்களுக்கு நம்பிக்கையினுடைய நாயகராக விளங்குகிறார் என்றெல்லாம் கூட சொன்னார்கள். அதை நான் வேண்டாமென்று கூட சொல்லவில்லை. ஆனால் இன்றையதினம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள்கூட தொழிலாளர் நல மானியத்திலே பதில் சொல்லும்பொழுது எந்த அரசாங்கமும் செய்யாத அளவிற்கு 70,000-க்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டித்தர இருக்கிறோம் என்றெல்லாம் பெருமையாகச் சொன்னார்கள். ஆனால் உண்மை நிலையை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலே தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்ட வேண்டுமென்பதற்காகத் தனியாக வாரியத்தையே அப்பொழுது முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்தார்கள். அவருடைய திட்டம், இந்த தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை ஆதி திராவிட மக்களுக்கும் ஏறக்குறைய ஐந்தாண்டுக் காலத்திலே இலவசமாகவே வீடு கட்டித் தர வேண்டுமென்ற நல்ல திட்டம். ஒரு ஆண்டுக்காலத்திலே ஏறக்குறைய 40,000 வீடுகளை அவர்கள் கட்டித் தந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு இன்று வரையிலேயும் அந்தத் திட்டம் சரியான முறையிலே செயல்படுத்தப்படாத நிலையிலே இருந்து வருவதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இதுவரையிலும் இந்த நான்காண்டுக் காலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த வாரியம் வீடு கட்டும் பணியைச் செய்யப் போகிறதா அல்லது அந்தத் திட்டத்தை கைவிடப் போகிறதா என்பதுகூட அறுதியிட்டுச் சொல்லப்படாமல் இருப்பது உண்மையிலேயே வருந்தத் தக்கதொரு காரியமாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் செய்தித்தாளில் ஒரு விஷயத்தைப் படித்தேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடலூரில் ஒரு அரசு விழாவிலே பேசும்பொழுது அவருக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் குழந்தைவேலு என்று கருதுகிறேன், செய்தியிலே படித்தது—அவர்கள் இந்த வீடு கட்டும் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று பேசியதாகவும், அவருக்கு பதில் அளிக்கும் வகையிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்

படுத்த முடியும், என்னிடத்திலே பணம் ஏது, ஏழைகள் என்றால் ஆதிதிராவிடர்களிலே மட்டும்தானா ஏழைகள் இருக்கிறார்கள், மற்ற ஜாதிகளில் இல்லையா என்று பதில் சொன்னதாகப் பத்திரிகையில் படித்தேன். உண்மை எந்த அளவிற்கு என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வார்களே யானால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

இன்னும் ஒரு செய்தி வருகிறது. சென்னைக்கு, மத்தியிலே இருந்து தாழ்த்தப்பட்டோர் கமிஷன் வந்ததாகவும், கோட்டையிலே நம்முடைய அரசு அதிகாரிகள், மாண்புமிகு அமைச்சர், முதலமைச்சர் ஆகியவர்களையெல்லாம் சந்தித்த நேரத்தில், தமிழக அரசு இந்த வீடு கட்டும் திட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்தப் போகின்றோம்.

(மாலை 5.50)

ஏற்கனவே 4000 ரூபாய் அளவிலே கட்டினார்கள், அது போதாது, அதை 6 ஆயிரம் ரூபாய் அளவிலே நாங்கள் கட்டப் போகிறோம் என்று சொன்னதாகவும், உடனே அந்தக் கமிட்டி கூட, இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசாங்கம்தான் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒரு திட்டத்தைச் செயல் படுத்துகின்றது என்று பாராட்டியதாகவும் பத்திரிகையிலே படித்தேன். ஏறத்தாழ இந்த இரண்டு செய்திகளும் வருகிற போது இந்த அரசாங்கத்தினுடைய இரட்டைக் கொள்கை யாக காணப்படுகிற செய்தியாக இருக்கிறதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும் வாரியம் சென்னையிலே இருந்து விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டது. அங்கே அதிகாரிகள் இருக்கிறார்கள், அலுவலர்கள் இருக்கிறார்கள். அதற்கு ஒதுக்குகின்ற பணம் அங்கே இருப்பவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு கூட போதாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இது குறித்து நல்ல முடிவு எடுக்க வேண்டாமா என்று கேட் கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்வது, எல்லா ஜாதி களிலும் ஏழைகள் இருக்கிறார்கள், நான் அதை மறுக்கவில்லை. ஆனாலும் ஏதோ ஒரு பகுதி மக்களுக்கு முதலிலே எடுத்து இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தல் பிறகு எல்லோரும் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவிக்க விரும்பு கிறேன். வீடு கட்டும் திட்டத்தைக் கைவிடாமல் நிச்சயமாக அதற்காக பணத்தை ஒதுக்கி 6 ஆயிரம் ரூபாயில் கிராமப்புறங் களில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமல்லாமல், நகரங்களிலும் கட்டித்தரும் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே 4,000 ரூபாய் அதில் 3,000 கடன், ஆயிரம் மானியம் அழகான வீடுகள் என்று நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அவருக்கே உரித்தான சாமர்த்தியமான முறையில் சொன்னார்கள். ஆனால் கிராமங்களிலே போய்ப் பார்த்தால் உண்மை நிலை விளங்கும். கடனுக்காக விண்ணப்பங்கள் போடு



கிறார்கள். அந்தக் கடன் தருகின்ற நிலையங்களிலே ஏராளமான ஊழல் இருக்கின்றது. பெரும்பாலானவர்கள் சொல்லுகிறார்கள். என்னுடைய தொகுதி மக்கள் சொல்லுகிறார்கள். நீங்கள் எங்கே பணத்தைத் திருப்பிக் கட்டப்போகிறீர்கள், அதிலே எங்களுக்கு ஆயிரத்தைத் தாருங்கள் என்று கேட்கும் அளவுக்கு லஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை அங்கே இருக்கின்றது. நான் கேட்கிறேன், 20 ஆண்டுக் காலத்தில் அந்த 4 ஆயிரத்தை எப்படி அவர்கள் திருப்பிக் கட்டுவார்கள்?

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

ஏற்கனவே நாங்கள் கட்டித் தந்த வீடுகளுக்கு நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த என்னுடைய கிராமத்தில் வீட்டு வரியை விதிக்க நான் விரும்பியபோது என்னுடைய கிராமத்திலே இருந்த ஆதிதிராவிட மக்கள் என்னைக் கேட்டார்கள். 4,000 ரூபாய் மதிப்பீடு போட்டு, 100 ரூபாய் உடைய வீடுகளுக்கு எட்டணா என்று விதித்தாலும் 4000-க்கும் நீங்கள் வரி போடுவீர் களேயானால் நாங்கள் எங்கே இருந்து கட்டுவோம் என்று கேட்ட அந்த மக்களைப் பார்த்து நீங்கள் 4000 ரூபாயை அது வட்டியோ இல்லையோ, அதைத் திருப்பிக் கொடுங்கள் என்று சொல்ல முடியாது. இப்படிப்பட்ட நிலைமையை நீங்கள் சிந்தித்துப் பார்த்து கடன் கொடுப்பதைக் கூட நீங்கள் நிறுத்திவிட்டு இலவசமாகவே நல்ல வீடுகளைக் கட்டித்தருவீர்களே யானால், அந்தப் பணி சிறப்பாக அமையும். அப்போதுதான் நீங்கள் ஏற்கனவே சொன்னதைப்போல நம்பிக்கை நாயகனாக விளங்க முடியும், அது நியாயமாகவும் இருக்கும், நீதியாகவும் இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று கல்வி. இங்கே கூட நண்பர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் ஆதிதிராவிடர் களுக்கு அத்தனை காரியங்களையும் செய்து விட்டதாகச் சொல்ல வில்லை. ஆனால் பெருமைக்குரிய காரியங்களை நாங்கள் செய்திருக்கிறோம். சென்னை உயர்நீதி மன்றத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஜோலார்பேட்டையைச் சேர்ந்த மாண்புமிகு வரதராஜன் அவர்களை நீதிபதியாக நியமித்து வரலாற்றுச் சிறப்பான நிகழ்ச்சியைச் செய்தார்கள். இன்றைக்கு அந்த மாண்புமிகு வரதராஜன் அவர்கள் டெல்லி உச்சநீதி மன்றத்திலே பணியாற்றுகின்ற வாய்ப்பு தமிழகத்திற்கு கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ஆணிவேராக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து வேலைவாய்ப்பு குறித்து இன்றைதினம் 18 சதவிகிதம் வேண்டும் என்று சொல்கிறோம். அதேபோல பல உறுப்பினர்கள் சொன்னார்கள். இன்றையதினம் பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்குப் பல உதவித் தொகைகளைத் தருகிறோம், மாநில

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1982 மார்ச் 17

அரசாங்கத்தில் இருந்து, மத்திய அரசாங்கத்தில் இருந்து ஆதி திராவிட மக்களுக்காக உதவித்தொகை வழங்கப்படுகின்றபோது இதிலே வித்தியாசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரே விடுதியிலே படிக்கும் மாணவர்களுக்கு இடையே வித்தியாசம் இருக்கக்கூடாது. அப்படி வித்தியாசம் இருக்குமானால், அந்த வித்தியாசத்தை நமது மாநில அரசு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று. இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்,

அதேபோன்று ஆதிதிராவிட நலத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு சவுந்திரராஜன் அவர்கள் வருவாய்த் துறையில் இருந்து இந்தத் துறை பிரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அது பிரிக்கப்பட்டுவிட்டதா என்று தெரியவில்லை. அது தனியாக இருக்கின்றதா என்றும் தெரியவில்லை. அப்போது கூட நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல பேர்கள் பாராட்டினார்கள். அதிலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை.

ஆனால் இது இன்றையதினம் எப்படி செயல்படுத்தப் படுகின்றது. இது ஏன் காலதாமதம் ஆகின்றது. அதற்கு காரணம் என்ன என்பதையெல்லாம் அறிவிக்கவேண்டும். அதே போல் இன்றையதினம், ஆதிதிராவிட நலத்துறையில் இருக்கின்ற பாடசாலைகள், பல்வேறு இடங்களில் துவக்கப்பள்ளிகள், கிராமங்களில் இருக்கின்ற துவக்கப்பள்ளியானாலும் சரி, உயர்நிலைப் பள்ளி ஆனாலும் சரி, நடுநிலைப்பள்ளிகளானாலும் சரி, அல்லது நகரங்களில் இருக்கின்ற பாடசாலைகள் ஆனாலும் சரி, இந்தப் பாடசாலைகள் எல்லாம் உரிய கட்டிடத்தைப் பெறுவது இல்லை. நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர் இளைய பெருமாள் அவர்கள் கூட சொன்னார்கள். அரக்கோணத்திலே இருக்கின்ற உயர்நிலைப்பள்ளி கூடம் பல்வேறு வசதிகளைப் பெற வில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் தன்னுடைய தொகுதியாக இருந்தாலும் சரி, அந்தத் தொகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு காரியங்களைச் செய்வதிலே தயக்கம் காட்டக்கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று புத்தகம் தருவது, நோட்டுப்புத்தகம் தருவது, இப்படிப்பட்ட நேரங்களிலேதான் நாங்கள் பல நேரங்களில் சொன்னோம். அதற்கான ஒரு தொகையை துவக்கப்பள்ளி யானாலும் சரி, நடுநிலைப்பள்ளியானாலும் சரி, உயர்நிலைப் பள்ளியானாலும் சரி. புத்தகத்தை, அவர்களுடைய பெற்றோர்கள் நேரத்திலே வாங்கிக் கொடுத்துவிடுவார்கள். பிறகு அந்தத் தொகையை அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால், அதிகாரிகள் அந்த உரிய தொகையை பெற்றோர்கள் இடத்தில் அளித்துவிடுவார்கள். இதிலே பிரச்னையே இல்லை. நீங்கள் புத்தகமாக தருகிறோம் என்று சொன்னீர்கள். நிலைமை என்ன? ஜூலையில் பள்ளிக்கூடம் திறந்தால் நீங்கள் தருகின்ற புத்தகம் ஜனவரியிலேயே வருகின்றது. எப்படி அந்தப் பிள்ளைகள் படிப்பார்கள்? அதிலே உங்களுக்கு என்ன கஷ்டம்? பக்கங்களை



1982 மார்ச் 17] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அவர்கள் வாங்கிக்கொண்ட பிறகு நீங்கள் அந்தப் பணத்தைப் பெற்றோர்களுக்கு கொடுத்து விடுவீர்களேயானால், குழந்தைகள், அந்தப் பள்ளிப்பிள்ளைகள் காலத்தில் புத்தகங்களை படிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் சொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இன்னும் பல்வேறு பிரச்னைகள். நம்முடைய நண்பர் அறங்காவலர்கள் போடுவதைப்பற்றிச் சொன்னார்கள். நாங்கள் ஏதோ தாழ்த்தப்பட்ட மக்களையெல்லாம் அறங் காவலர்களாக நியமிக்கிறோம் என்று. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேகூட தாழ்த்தப்பட்ட மக்களை அறங்காவலர்களாக நியமித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் நிச்சயமாக, அவர்களை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்று அப்போது ஒரு சட்டத்தையே இயற்றியது. இன்றையதினம் நீங்கள் அந்தச் சட்டத்தை தொடர்ந்து இருக்கின்றீர்கள்.

அதேபோல், கோவில்களிலும் கூட வாய்ப்பு இருக்குமானால், இவர்கள் அர்ச்சகர்களாக வரலாம் என்று ஒரு சட்டத்தை இயற்றினோம். அதன் மீது உச்சநீதி மன்றத்திலே சென்று தடையைப் பெற்றார்கள். இவைகளையெல்லாம் இந்த அரசாங்கம் பின்பற்றி இந்தத் தடைகளை நீக்குவதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு கூட வாய்ப்பு வசதிகளை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் எத்தனையோ பிரச்சனைகள். இன்றையதினம் தாழ்த்தப் பட்டவர்களாக இருக்கின்றவர்கள் பல்வேறு இடங்களிலே குடிநீர், தன்னிறைவுத்திட்டம் என்று வருகிற போது, முதலிலே நம்முடைய வடஆற்காடு மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே கலசபாக்கம், துரிஞ்சாபுரம் ஒன்றியங்களிலே திட்டம் நிறைவேறின. மாவட்ட நலத்துறை அதிகாரிகள் கூட என்னை வந்து சந்தித்தார்கள். உங்களுடைய ஒன்றியங்களிலே பல இடங்களிலே குடிநீர்த் தேக்கத் தொட்டிகளைக் கட்டப்போகிறோம் என்று சொன்னார்கள். அதற்கு வேண்டிய பணமெல்லாம் ஒதுக்குவதாகச் சொன்னார்கள். அதிகாரிகள் ஜீப் வண்டியிலேயெல்லாம் கூட போய்ப் பார்த்தார்கள். என்னைக்கூட சந்தித்தார்கள். நான்கூட பல் வேறு இடங்களிலே கட்ட வேண்டுமென்று எனக்குத் தெரிந்த குறிப்புகளையெல்லாம் கொடுத்தேன்.

ஆனால், இன்றைக்குப் பார்க்கின்றபோது, இந்தத் தன்னிறைவு திட்டத்திலே அதிகமான அளவிலே பல்வேறு இடங்களிலே இந்தத் திட்டம் சரியான முறையிலே செயல்படுத்தப் படவில்லை என்று நான் இந்த நேரத்திலே அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு சொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று, பாதை அமைக்கின்ற பணி கூட, இடுகாட்டிற்குப் பாதை அமைக்கின்ற பணி நல்ல பணிதான். பல இடங்களில் இப்படிப்பட்ட பணிகள் நடைபெற்றன. அந்தப்பணிகளை கூட நீங்கள் தொடர்ந்து செய்து இருக்கிறீர்கள். ஆனால், பல்வேறு

இடங்களில் பாதை அமைக்கின்றபோது நடந்து செல்கின்ற அளவிற்கு பாதை இருக்குமானால், அந்த அகலத்திலேயே செய்துவிட்டு இருக்கிறார்கள். அது போதாது. அகலமான அளவிலே சாதாரணமாக வண்டி வாகனங்கள் செல்லுகின்ற அளவிற்கு ஒரு 12 அடி அகலத்திலாவது அந்தப் பாதை அமைக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோலத்தான் மின்சார விளக்கு. குடிசைகளில் விளக்கு அமைக்கின்ற பணி. இது ஒரு நல்ல திட்டம்தான். ஆனால் என்ன நிலைமை. முதலிலே நான் சொன்னேன். ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஏதோ குறைவான நபர்களுக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு நிறுத்திவிட்டார்கள். அதையும் தொடர்ந்து கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதேபோன்று, அரிஜனங்கள், ஆதிதிராவிட மக்களுடைய காலனிகளில் விளக்குகள், மின்சார விளக்குகள் எரிவதே இல்லை. ஒருகாலத்திலே நாங்கள் மின்சார விளக்குகளை யெல்லாம் போட்டோம். ஆனால் விளக்குகள் எல்லாம் எரிகின்ற சூழ்நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தவில்லை: அதையும் தயவுசெய்து நீங்கள் கவனித்து எல்லா அரிஜன காலனிகளிலும் விளக்குகள் எரிவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6-00)

இன்னொன்றையும் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பல்வேறு இடங்களில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்துகிறார்கள். அந்த நிலத்திற்கு உரிய பணத்தையும் நிலச் சொந்தக்காரர்கள் பெற்றுக்கொண்ட பின்னாலும் அந்த நிலம் சரியான முறையில் பிரித்து, பட்டாக் கொடுக்கப்படுவதில்லை. அரசாங்கம் நிலத்திற்குரிய பணத்தைக் கொடுத்தாலும் அந்த நிலத்தை அளந்து, யார் யாருக்குப் பட்டா கொடுக்க வேண்டுமோ அவர்களுக்கு கொடுக்க ஒழுங்காக வேலை நடைபெறவில்லை. இன்னும் சில இடங்களிலே மனையைக் கொடுக்க அதன் உரிமையாளர்கள் தயாராக இருந்தாலும் இந்த அதிகாரிகள் நிலத்தை கையகப்படுத்தி, ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு வழங்குவதில் வீணாக காலதாமதம் செய்கிறார்கள். அதிகாரிகள் எல்லாம் சுறுசுறுப்பாக பணியாற்றி, உரிய நேரத்தில், உரிய நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் போளூர் வட்டத்தில் மேல்விராய நல்லூர் கிராமம் இருக்கிறது. அது சம்பந்தமாக இங்கே ஒரு வினாவைக் கூட நான் எழுப்பினேன். இன்னும் 10 நாட்களில் அந்த மனைகள் பிரித்துத் தரப்படும் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். உறுதிமொழி கொடுத்து ஏறத்தாழ ஓராண்டு ஆகிவிட்டது. இந்தத் துறை இயக்குநரை வேலூரில் சந்தித்த



போது நினைவுபடுத்தினேன். ஆனால் இன்றுவரையில் காரியம் நடக்கவில்லை. ஒருவேளை அமைச்சர் அவர்கள் கூட நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கலாம்; இயக்குநர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கலாம். இருந்தாலும் இன்னும் காரியம் நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனைகளை பிரித்து வழங்குவதாக இருந்தாலும், பட்டா வழங்குவதாக இருந்தாலும் அவர்களுக்காகச் செய்யப்படுகிற வேறு எந்தப் பணியாக இருந்தாலும் எல்லாப் பணிகளும் வேகமாக, விரைவாக நடைபெற தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்போது மேல்நிலைப் பள்ளிகளை ஏராளமாக நாம் திறந்திருக்கிறோம். கிராமங்களில் கூட மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறோம். இந்த நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக ஒன்றை விடுக்க விரும்புகிறேன். கிராமப்புறங்களில் எங்கெல்லாம் மேல்நிலைப் பள்ளி தொடங்கப்படுகிறதோ அங்கெல்லாம் மாணவர் விடுதியையும் ஏற்படுத்த வேண்டும். அமைச்சரவர்கள் அதிலே அக்கறையோடு செயல்பட வேண்டும். இப்போது நகர்ப்புறங்களில்தான் விடுதிகள் இருக்கின்றன. கிராமத்தில் இருக்கிற மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்துவிட்டால் உணவுக்கு எங்கே போவது? எங்கே தங்குவது? எப்படி படிப்பது என்ற பிரச்சனை இருக்கிற காரணத்தால் கிராமத்தில் மேல்நிலைப் பள்ளியை ஆரம்பித்தாலும் அங்கே இருக்கிற மாணவர்கள் நகரத்தை நோக்கித்தான் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, குறைந்தது 50 மாணவர்கள் தங்கிப் படிக்கின்ற அளவில் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் ஒரு விடுதியை ஏற்படுத்தி, அங்கே மாணவர்கள் தங்கிப் படிக்கத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதி கலசப்பாக்கத்தில் இரண்டாண்டுகளுக்கு முன்னால் ஒரு மேல்நிலைப்பள்ளியில் மிகுந்த சிரமப்பட்டு ஒரு விடுதியை ஆரம்பித்தார்கள். அங்கே 30 மாணவர்கள் தங்கிப் படிக்க வசதி இருக்கிறது. இடம் போதவில்லை; கடுமையான போட்டி இருக்கிறது. ஆகையால் அந்த விடுதியில் குறைந்தது 100 மாணவர்களாவது தங்கிப் படிக்கக்கூடிய அளவுக்கு அதை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே குடிதண்ணீர் பிரச்சனையைத் தீர்ப்பதில் முதலிடம் கொடுத்து, அரசாங்கம் தனியாக ஒரு தன்னிறைவுத் திட்டத்தைப் போட்டு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மலைவாழ் பழங்குடி மக்களைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வடாற்காடு மாவட்டத்தில்கூட ஜவ்வாது, ஏலகிரி மலைப்பகுதிகள் இருக்கின்றன. அங்கே இருக்கிற பழங்குடி மக்கள் பற்றி நண்பர் திரு. மூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மிகவும் ஏமாந்தவர்கள். வடாற்காடு மாவட்டத்திலே கலசபாக்கம்

தொகுதி வருகிறது; வாணியம்பாடி தொகுதி வருகிறது; செங்கம் வருகிறது; திருப்பத்தூர் வருகிறது; போளூர் வருகிறது; அணைக்கட்டு வருகிறது. இப்படி பல தொகுதிகள் இருக்கின்ற வடாற்காடு மாவட்டத்தில் இந்த ஜவ்வாது, ஏலகிரி பழங்குடி மக்கள் வாழ்க்கை நடந்துகொண்டிருக்கிறது.

1977-லே நான் சட்டமன்றத்திற்கு வந்தபிறகு பல தடவை அங்கே போயிருக்கிறேன். ஏற்கெனவே 1975–76 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது ஜவ்வாது மலைப் பகுதியில் தெரு விளக்குகள் போடப்பட்டன. இப்போது அந்த விளக்குகள் எப்படி எரிகின்றன என்று கேட்டால், விளக்குகள் வந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகின்றன; கடந்த 4, 5 ஆண்டுகளாக எரியவில்லை என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி எத்தனையோ தடவை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே சொல்லியிருக்கிறோம். சூப்பரண்டெண்டிங் எஞ்சினீயரிடமும் சொல்லியிருக்கிறோம். இருந்தபோதிலும் அந்த தெரு விளக்குகள் எரியக்கூடிய சூழ்நிலை இல்லை. அவர்கள் எல்லாம் வாய் இல்லாத பூச்சிகள். அவர்கள் பிரச்சனையில் தனிக் கவனம் செலுத்தவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அந்தப் பகுதிகளுக்கு வரவேண்டும். ஏற்கெனவே இந்தத் துறையில் இருந்த அமைச்சர் அவர்கள் ஒருமுறை வந்திருக்கிறார்கள். நீங்களும் அங்கே வந்து பார்க்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பிரச்சனை என்ன என்பது உங்களுக்குத் தெரியும்.

என்னுடைய தொகுதியில் தேக்குமரத்தூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் காங்கிரஸ் ஆட்சியில் ஒரு கிணறு வெட்ட உத்தரவு போட்டார்கள். உத்தரவு போட்டு 10 ஆண்டுகாலமாக அந்தக் கான்ட்ராக்டர் கிணறு வெட்டாமலே விட்டுவிட்டார். அந்த மக்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஓடையில் தண்ணீர் செல்கிற நேரத்தில் குளிக்கிறார்கள். பிறகு தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நேரங்களில் மாதக்கணக்கில் நாம் 'தண்ணீர் தண்ணீர்' சினிமாவில் பார்த்ததுபோல் அந்த கிராமத்தில் நிகழ்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது. நானும் எத்தனையோ பேரிடத்தில் சொல்லிப் பார்த்து விட்டேன். அவர்கள் "அங்கே தண்ணீர் வசதிக்காக ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள். பிறகு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளை அணுகி, துளைக்கிணறு ஒன்றாவது அங்கே போடமுடியுமா என்று கேட்டேன். அந்த ஊருக்குச் செல்லும் பாதை மிகவும் குறுகலான பாதையாக இருப்பதால், அந்த துளைபோடும் கருவியை அங்கே எடுத்துச் செல்லமுடியாது என்று சொல்லி விட்டார்கள். பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி அங்கே ஒரு கிணறாவது வெட்டுங்கள் என்று சொன்னேன். வெட்டப்படும் என்று சொல்லி, எனக்கு பதில் எழுதியிருக்கிறார்களே தவிர அங்கே கிணறு வெட்டப்படவில்லை. ஆகவே, அங்கே ஒரு கிணறு வெட்டுவது குறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



நான் காலையில் கூட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கருத்தைச் சொன்னேன். அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். 2–3 மாதங்களுக்கு முன்பு அந்த ஜவ்வாது மலைப் பகுதியில் மலேரியா நோய் வந்து, அது பற்றிய தகவல் கீழே இருக்கின்ற மருத்துவ அதிகாரிகளுக்கு வந்து, அவர்கள் உடனடியாக தடுப்பு ஊசி எடுத்துச் செல்லமுடியாத காரணத்தால் அங்கே உயிரிழப்பு ஏற்பட்ட பரிதாபகரமான காட்சி ஏற்பட்டது. அது ஒரு வேதனைப்பட வேண்டிய விஷயமாகும். ஆகவே தான் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், நிச்சயமாக அந்தப் பகுதியில் அந்த மலைப் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜவ்வாது, ஏலகிரி மலைப்பகுதிகளை இணைத்து, தனியாக ஊராட்சி ஒன்றியம் ஒன்று அமைக்கப்போவதாக ஏற்கெனவே பேரவையில் ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது. ஆனால் இன்று வரையில் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதிகளை இணைத்து அங்கே தனியாக, மலைப்பகுதிக்கென ஒரு ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படவேண்டும். இது குறித்து ஏற்கனவே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே ஒரு தீர்மானம் போட்டு இருக்கிறோம். ஆகவே, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிற வகையில் ஜவ்வாது மலை, ஏலகிரி மலைப் பகுதியை இணைத்து ஒரு ஊராட்சி ஒன்றியம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரெவின்யூ துறையில் கூட ஒரு வட்டார ஆட்சி அலுவலகத்தையும், தாசில்தார் அலுவலகத்தையும் அங்கே ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் நம்முடைய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள், கிராம கர்ணம் இல்லை, மணியம் இல்லை, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றால், கீழ்ப்பகுதிகளில் வசித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, ஒரு சான்றிதழ் பெற வேண்டும் என்று சொன்னால் கூட அந்த மக்கள் கீழ்ப்பகுதிக்கு வரவேண்டியிருக்கிறது. அங்கே சரியான சாலை வசதி இல்லை, போக்குவரத்து வசதி இல்லை. பல இடங்களில் இருந்து கால்நடையாகத்தான் வரவேண்டி இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு தாலுக்கா அலுவலகம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. மூர்த்தி :** மாற்றுச் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் ஜவ்வாது மலைப்பகுதியில் இருக்கும் மக்கள் மலைஜாதி மக்கள் அல்ல. ஆனால் அவர்கள் மலைவாழ் மக்கள் என்று சான்றிதழ் பெற்று வருகிறார்கள். அவர்கள் ரெட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த விவரம் தெரியுமா?

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள மக்களைப் பற்றித்தான் எனக்குத் தெரியும். அவர்கள் மலைவாழ் மக்கள் தான். எல்லாப் பகுதிகளையும் நான் சுற்றிப் பார்க்க முடியாது. என்னுடைய தொகுதியில் 37 கிராமங்கள் இருக்கின்றன. அதில் 33 கிராமங்களை நான் பார்த்து இருக்கிறேன். 28 கிராமங்களுக்கு நடந்து சென்றே பார்த்து இருக்கிறேன். ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திருமூர்த்தி அவர்களுக்கு எல்லா இடங்களும் தெரிந்து இருக்கக்கூடும். அவர் சொல்கிற தகவல் உண்மையாகவும் இருக்கலாம். உண்மைக்கு மாறாகவும் இருக்கலாம். எனக்குத் தெரிந்தவரையில் என்னுடைய தொகுதியில் உள்ளவர்கள் மலைவாழ் மக்கள் என்று மட்டுமே என்னால் சொல்லமுடியும்.

இந்த பழங்குடி மக்கள் நலனை குறித்து மாநில அளவிலே ஒரு கமிட்டி இருப்பதாக ஒரு தகவல் எனக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கமிட்டிக்குத் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் இருப்பதாகவும், அதிலே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கத்தினர்கள் என்றும், அதிலே பல உயர்தர அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர் என்றும், அந்தக் கமிட்டி 6 மாதத்திற்கு ஒரு முறை கூடும் என்றும், அந்தக் கமிட்டியில் வடாற்காடு மாவட்டத்தின் சார்பில் நானும், நம்முடைய மாண்புமிகு வாணியம்பாடி தொகுதி உறுப்பினர் திரு. ந. குலசேகர பாண்டியன் அவர்களும் உறுப்பினர்கள் என்றும் தகவல் இருந்தது, ஏறத்தாழ 2 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. இதுவரையில் அந்தக் கமிட்டி கூட்டப்பட்டதாக எங்களுக்கு அழைப்பு வரவில்லை. நான் உண்மையிலேயே இந்த நேரத்திலே இந்த அளவிலே தெரிவித்துக் கொள்ளவிரும்புவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கலாம், ஆனாலும் இந்தக் கமிட்டியை அவர்கள் தலைமை தாங்கிக்கூட்டியிருக்கலாம்; அல்லது அந்தத் துறையினுடைய அமைச்சரையாவது தலைமை தாங்கச் செய்து, இங்கே பேசப்பட்ட பிரச்னைகளைப் பற்றி விவாதித்திருப்பார்களேயானால் பல காரியங்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டிருக்கும். ஆனால் இந்த இரண்டாண்டுக்காலமாக அந்தக் கமிட்டி கூட்டப்படாததற்கு நான் உண்மையிலேயே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனியேனும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நிலவுவதை மனத்தில் நிறுத்தி, அந்தக் கமிட்டியை அவ்வப்போது கூட்டி, அதனுடைய ஆலோசனையைப் பெறவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



மகிழ்ச்சியடைவோம். பிற்பட்டோர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சராக இருக்கிற இந்த தருணத்தில்தான், அவர் எங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்றாரோ, அதே தொகுதியிலேதான், குணாளம் இருக்கிறது. அங்கே நடைபெற்ற சம்பவங்கள் குறித்து அனைவருக்கும் தெரியும். அரக்கோணத்திலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது குறித்து இந்த அவையிலேயே ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தது. அதே போன்று கூடையநல்லூர் சம்பவம். அது குறித்துக் கூட ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் பரவலாக இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. நீங்கள் வேண்டுமானால் ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்று இருக்கலாமே தவிர, அந்த மக்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூட, காங்கிரஸ் கட்சியின் நிதியிலிருந்தோ, மத்திய அரசாங்கத்தின் நிதியிலிருந்தோ பண உதவி செய்ததாக டி.வி.யிலே பார்த்தேன். அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சென்றிருந்தார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே இருந்திருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதை மறந்துவிடக் கூடாது என்று நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அடுத்து, கலப்புத் திருமணம் என்று எடுத்துக்கொண்டால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் பேசும்போது, தலைவர் சொல்லிவிட்டார், செய்துவிட்டார், ஆனால் தொண்டர்கள் பின்பற்றுகிறார்களா இல்லையே என்று கேட்டார்கள். அவரேகூட மேலும் பேசும்போது சொல்லியபடி; எத்தனையோஆண்டுக்காலமாக ஜாதி வேறுபாட்டின் காரணமாக, ஜாதிவெறிகளின் காரணமாக சமுதாயத்திலே விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே அதைப் போக்குகின்ற சந்தர்ப்பத்தில் எங்களுடைய தலைவர் அவர்கள் ஒரு உதாரணமாக விளங்கினார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. (மணியடிக்கப் பெற்றது) அவர்கள் இந்த நேரத்திலே தன்னுடைய மகனுக்குத் திருமணம் செய்து சம்பந்தி என்ற சொல் வேண்டாம் என்று வைத்துக் கொண்டாலும் கூட, அந்த வகுப்பிலிருந்து பெண் எடுத்தார்கள். அப்படி எடுத்ததின் காரணமாகவே அந்த சமுதாயத்திற்கு ஒரு விடிவு ஏற்பட்டுவிடும் என்பது பேச்சல்ல; இந்தியாவிலேயே எந்த ஒரு அரசியல் தலைவரும் துணிந்து இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்காத நேரத்தில், அவர் துணிந்து எடுத்தார் என்று சொன்னால், அதை பாராட்டுவதற்கு மனம் வரவில்லை என்றாலும் கூட, தூற்றக் கூடாது என்பதை இந்த நேரத்திலே, இந்த அவையிலே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப் பதக்கங்கள், அதற்கு வேண்டிய பத்திரங்கள் பணம் போன்றவைகள் எல்லாம், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது—கலப்பு மணம் புரிந்துகொண்டவர்களுக்கு வழங்கப் பட்டன.

இன்னொன்று, இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் யாரோ கூட இதைப்பற்றி பேசும்போது குறிப்பிட்டார், இந்தத் துறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தன்னுடைய அதிகாரத்தின்கீழ் எடுக்கப்போவதாக பத்திரிகைகளிலே பார்த்தேன். அப்படி எடுத்தால் உண்மையிலேயே அந்த மக்களுக்கு பல நன்மைகள் ஏற்பட வழி கிடைக்கும். இப்போது கூட இந்தத் துறை அமைச்சருக்கு வேறு துறை கொடுத்துவிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த ஆதித்திராவிடர் நலத்துறையை எடுத்துக் கொள்ளலாம். அது இந்தப் பணிகள் வேகமாக நடைபெறுவதற்கும், அவர்களுடைய எதிர்காலம் வளமாக இருப்பதற்கும் பயன்பெறும். அவர்களும் சந்தோஷப்படுவார்கள். நாங்களும் சந்தோஷப்படுவோம். அதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. அந்தப் பணிகள் தொடர்ந்து தீவிரமாக வேகமாக, நடைபெற்று, அந்த இலாகா தொடர்ந்து சுறுசுறுப்பாக பணியாற்ற வேண்டும் என்பதையும் கேட்டு, அதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள் : Mr. Deputy Speaker, Sir, he has mentioned my name. I must clarify the position. Otherwise, it will mislead the House. அவர்கள் என்னுடைய பெயரைச் சொன்னதன் காரணத் தால்நான் சொல்ல வேண்டி இருக்கின்றது. அருமைச் சகோதரர் திருவேங்கடம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அரக்கோணத் திலே உள்ள பள்ளிக்கூடம் பற்றி நான் சொன்னதைச் சொன்னார்கள். 1970-ஆம் ஆண்டு அரக்கோணத்திலே அந்தப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பள்ளி இதுவரையிலும் மேம்பாடு அடையவில்லை, லெட்ரின் வசதி இல்லை. அங்கே ஷிஃப்ட் சிஸ்டம்தான் இப்போது இருக்கின்றது. இது பற்றி எல்லாம் நான் சொன்னது உண்மை என்பதை மாண்புமிகு சகோதரர் திருவேங்கடம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியைப் பற்றிச் சொன்னார்கள். பிரதம அமைச்சரவர்கள் காங்கிரஸ் கட்சியின் நிதியிலிருந்து 7 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள். அவ்வாறு கொடுத்தது உண்மை தான். ஆகவே நான் சொன்னதெல்லாம் உண்மை என்பதை சொல்லி என்னுடைய பெயரைக் குறித்துச் சொன்னதற்காக தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயரைச் சொன்ன உடனேயே தன்னிலை விளக்கம் அளிக்கவேண்டும் என்ற அவசியம இல்லை. குற்றச்சாட்டு ஏதாவது சொன்னால்தான் தன்னிலை விளக்கம் அளிக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்



திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் பேசுகின்றபோது ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்று நான் சொன்ன கருத்தை அவர்கள் சொல்லி கடைய நல்லூர் போன்ற நிகழ்ச்சிகள் நடந்தன என்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையிலே இந்தியாவிலே உள்ள வேறு எந்த மாநிலத்தைக் காட்டிலும் இங்குள்ள மக்கள் அமைதியாக வாழ்கிறார்கள். நடக்கின்ற நிகழ்ச்சிகள் ஆதிதிராவிடர்கள் என்பதால் உயர்ஜாதி மக்கள் அவர்களை அடிப்பதற்காக அல்லது அவர்களைத் தாக்குவதற்காக நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் சில சூழ்நிலைகளை ஒட்டி அதற்கேற்ப நடக்கின்ற நிகழ்ச்சிகள்தான். ஆகவே திட்டமிட்டு ஆதி திராவிடர்களைத் தாக்கவேண்டும் என்ற வகையிலே எதுவுமே இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் நீலகிரி மலைப் பகுதியைச் சேர்ந்த தொண்டாமுத்தூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே ஆதிவாசிகள் நிறைந்து வாழ்கின்ற அந்தப் பகுதியின் பிரதிநிதி என்ற முறையிலே அவர்களின் கோரிக்கைகள் சிலவற்றைப் பிரதிபலிக்கின்ற ஒருசில கருத்துக் களை இங்கே சொல்கின்ற வாய்ப்புத் தந்தமைக்காக நான் முதலிலே நன்றியினைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன், அரசியல் சட்டம் நமது நாட்டிலே ஏற்படுத்தப்பட்டபோது உலகத்திலே உள்ள பல அரசியல் சட்டங்களை எல்லாம் ஒப்புநோக்கி அதிலுள்ள ஒன்றினை எடுத்துக்கொண்டு நம்முடைய அரசியல் தலைவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் உலகத்திலே வேறு எந்த நாட்டிலும் இல்லாத நல்ல கருத்துக்கள் அரசியல் சட்டத்திலே இடம் பெறுகின்ற வகையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஆதி திராவிட மக்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் என்று தனிப்பட்ட உரிமையையும் சலுகைகளையும் அரசியல் சட்டத்திலே கையாண்ட ஒரு தன்மை நமது நாட்டுக்கு ஏற்பட்டிருக்கின்ற ஒரு பிரத்தி யேகமான நிலைமை என்பதை நாம் உணரவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே உலகத்திலே எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் இல்லாத ஒரு நிலை நமது நாட்டின் சமுதாய அமைப்பிலே ஏற்படுத்தப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் மலைவாழ் மக்கள் என்றும் இருந்த நிலைமையின் காரணமாகத்தான் சுதந்திரம் முழுமை அடைய வேண்டும் என்றால் பொருளாதார நிலைமை இந்த நாட்டிலே உயரவேண்டும் என்றால் சமுதாயத்திலே இருக்கின்ற எல்லா மக்களுக்கும் சமத்துவம் ஏற்படவேண்டும் என்றால் இந்த தாழ்த்தப்பட்ட மக்களும், ஆதிவாசிகளும், பிற்படுத்தப்பட்டவர்களும் சமமான உரிமைகளைப் பெற வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசியல் சட்டம் இயற்றிய வர்கள், அந்தப் பெரியவர்கள் எல்லாம், நமது வணக்கத்திற்குரிய தலைவர்கள் எல்லாம் இதற்கென்று முன்னுரிமையை, சலுகையை அளிக்கின்ற நிலைமையினை அரசியல் சட்டத்திலே பிணைத்திருக்

அதுமட்டுமல்ல பல சட்டங்களை தாழ்த்தப்பட்டவர்களுக்கென்றும் ஆதிவாசிகளுக்கும் என்றும் உரிமைகளைக் காக்கின்ற சட்டங்களை நாட்டிலே மத்திய மாநில அரசுகள் எடுத்து கையாண்டு கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய உரிமைகளைக் காத்துக் கொள்கின்ற வகையிலே இந்த சமுதாயத்திலே அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காகத்தான் இந்தச் சலுகைகளைக் கொண்ட சட்டங்கள் என்பதை நாம் உணர்கிறோம். அந்த வகையிலே அத்தனைச் சலுகைகளையும் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் எல்லா துறைகளிலும் இட ஒதுக்கீடுகள், கல்வி நிலையங்களிலே இட ஒதுக்கீடுகள் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக கடன் உதவிகள், தொழில்கள் நடத்துவதற்காக உதவிகள், மற்றும் அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகக் கொடுக்கின்ற உதவிகள் ஆகிய அனைத்தும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமுதாயத்திலே ஒரு அந்தஸ்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான். அதற்காகத்தான் கலப்பு திருமணங்களை ஊக்குவிக்கின்ற திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன.

(இரவு 6-20)

பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பு ஏற்றதற்கு பின்னால் இந்த நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொண்டுவரப்பட்ட திட்டங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னாலும், இன்னும் தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்ற அடிப்படையில் இந்த நாட்டில் மட்டுமல்ல கல்வி கூடங்களில் எல்லாம், மாணவர்கள் படிக்கின்ற அந்த இல்லங்களில் எல்லாம் பிரச்னைகள் எழுகின்றன சண்டை சச்சரவு ஏற்படுகிறது. கலவரங்கள் ஏற்படுகிறது என்றால் அவைகளுக்குக் காரணம் இந்தச் சலுகைகள் எல்லாம் தந்த பின்னாலும்கூட அந்தச் சமுதாய சமத்துவம் இந்த நாட்டில் மலரவில்லை என்பதைத் தான் அவைகள் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன என்பதை பொறுப்பு உடைய அத்தனை பேரும் கவலையோடு உற்று நோக்குகிற காலம் இந்தக் காலம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் தந்தை பெரியார் அவர்கள் இயக்கம் கண்டபின்னால், பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டில் அரசியல் இயக்கத்தில் வித்திட்ட பின்னால் அவர்களின் கொள்கை வழி வருகிற புரட்சித் தலைவர் ஆட்சி நடைபெறுகிற காரணத்தால் அந்த வித்தியாசங்கள் மிகவும் குறைந்திருக்கிறது. ஆனால் எங்களுக்கு இருக்கிற ஐயங்களெல்லாம் அந்தக் கொள்கைகளை எல்லாம் நிலைமைகளை எல்லாம் மக்கள் மத்தியில் மறைத்து அண்மைக்கால நிகழ்ச்சிகளை பார்க்கும்போது எங்கே அதுபோன்ற கலவரங்களை இங்கும் வித்திட்டு விடுவார்களோ எங்கே கலவரங்களை தூண்டி, மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல் ஒரு நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற ஐய உணர்வு யாவருக்குமே ஏற்பட்டிருக்கிறது. அதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்ப்பதைவிட அந்த காரணங்களுக்கு உரியவர்களை நாம் அடையாளம் கண்டு, இந்த சமுதாயத்திற்குக்



காட்டுவதே ஜாதி அடிப்படையில அமைந்த சச்சரவுகளை தீர்க்கின்ற வழியாக அமையும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து என்று சொல்லிக்கொள்ள விழைகிறேன். மதப் பிரச்சாரங்களை யாரும் தடை செய்ய முடியாது. ஆனால், மதத்தைப் பரப்புகிறோம் என்ற கண்ணோட்டத்தோடு, மதத்தைப் பரப்ப வேண்டுமென்ற நோக்கத்திற்காக, பணத்தைக் காட்டி சில சலுகைகளைக் காட்டி அந்த ஆதி திராவிட இன மக்களை தங்கள் பால் ஈர்ப்பதற்கு சில முயற்சிகள் பல காலமாக இந்த நாட்டில் நடந்து கொண்டிருப்பதை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். இந்து மதத்திற்குரிய உரிமையை தடுக்க முடியாது. இந்துக்களாக இருந்து, இந்து தெய்வங்களை வழிபடுகிறவர்களை அவர்கள் மனம் மாறி ஒரு மதத்துடன் தொடர்பு கொள்வதை நாம் தடை செய்ய முடியாது. அதற்கு எதிர்ப்புப் பிரசாரத்தை இந்துக்கள் நடத்த முடியாது. ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற ஏழ்மை தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றின் காரணமாக, அதை ஒரு கருவியாக ஆக்கிக்கொண்டு அவர்களுக்கு ஏதாவது உதவி கொடுத்து, அவர்களை ஈர்க்கும் முயற்சிதான் இன்று பல இடங்களில் பல கலவரங்களுக்கும், மன மாச்சரியங்களுக்கும் இடமளிக்கிறது என்பதை உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மக்களிடையே இருக்கின்ற தாழ்வு மனப்பான்மை, சமுதாயத்திலே தாங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றவர்கள் என்ற எண்ணம் இருக்கின்ற வரையில் அவர்களை வைத்து அரசியல் சூதாட்டம் நடத்துகிறவர்கள், அவர்களை வைத்து கலவரத்தைத் தூண்டி இந்த நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துகிறவர்கள் இந்த நாட்டிலே இருந்து கொண்டுதான் இருப்பார்கள் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அந்த வகையில் இந்த சமுதாயம் மொத்தமாக முன்னேறுவதற்கு நாம் செய்யவேண்டியது தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவு கொள்கைகளை, பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குக் கற்றுத் தந்த அந்தக் கொள்கைகளை, பட்டிதொட்டிகளில் எல்லாம் இருக்கின்ற மக்கள் அவற்றை மறந்துவிடுகின்ற சூழ்நிலைக்கு நாம் அவர்களை ஆளாக்கி விடக்கூடாது. அரசியல் விழிப்புணர்ச்சியை தந்தை பெரியார் அவர்கள் நமக்கு கற்றுத்தந்த அந்தக் கொள்கைகளை அவர்களிடையே பரப்புவதன் காரணமாகத்தான், அவர்கள் நமக்கு கொடுத்த நெறிகளை எடுத்துச் சொல்வதன் மூலமாக, அவற்றை நினைவு கூர்வதன் மூலமாக நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழகத்தில் நாம் ஐயப்படுகின்ற அளவில் ஜாதி சண்டைகள் இல்லாமல், அவற்றை ஒழிக்க முடியும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை என்று நான் இங்கே சொல்லிக் கொள்ள விழைகிறேன். அந்த வகையில், திராவிட இயக்கத்தைச், சார்ந்தவர்கள் தங்கள் பணியை எதிர்காலத்தில் இந்த திராவிட இனத்தவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆற்றுவதற்குரிய கடமை இருக்கிறது என்பதை உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மா. சின்னராசு] [1982 மார்ச் 17

பலமுறை நான் சுட்டிக்காட்டியதைப் போல், கல்வியில் அவர்கள் தாழ்ந்திருக்கிறார்கள். பல பள்ளிகள் பல ஆண்டுகாலமாக அவர்களுக்கு நடத்தப்பட்டு வந்தாலும்கூட, ஆனைக்கட்டி, ஆலந்துறையில் இருக்கின்ற முண்டாந்துரை போன்ற பகுதி இருட்டுப் பள்ளம் போன்ற பகுதி, அதைப்போல் நீலகிரி மாவட்டத்திலே இருக்கின்ற பில்லூர் போன்ற பகுதிகளில் இருக்கின்ற இருளர் ஜாதியினர் பல காலமாக கவனிக்கப்படாமல் இருக்கிறார்கள். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஆதிவாசிகளை இந்தத் துறை கணக்கெடுக்காமல் இருக்கிறது. அந்த ஆதிவாசிகள் இந்தத் துறையினரால் கணக்கெடுக்கப்படாமல், பல காலமாக இருந்திருக்கிறார்கள் என்ற நிலை நீடிக்காமல் இருக்க, புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்ட பின்னால், அங்கு சில பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, சில முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அந்த இருளர் ஜாதியினருக்கு, ஆதிவாசிகளுக்கு நிரம்ப அளவில் சலுகைகளை, ஏற்கனவே மற்றவர்களுக்கு கொடுக்கப்படுவது போன்ற சலுகைகளை, அவர்களுக்கு வழங்க முன்வரவேண்டும். அந்த வகையில் அவர்களுக்கு இருக்கின்ற பள்ளியின் தரத்தை நல்லமுறையில் நிலைநாட்டுவதற்கு அந்தப் பள்ளிகளையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் இருக்கின்ற இடத்தில் 4, 5 சிறிய பள்ளிக்கூடங்கள், உறைவிட பள்ளிக்கூடங்களை, இணைத்து உயர்நிலைப் பள்ளி இருக்கின்ற சின்ன தடாகம் போன்ற பெரிய கிராமத்தில் ஒரே பள்ளியாக, விடுதியாக அமைப்பதன் மூலம் அவர்களுக்கு தரமான கல்வியைக் கொடுப்பதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தத் துறை இன்னும் சிறப்பாக நடைபெற மாவட்ட அளவில் பிரித்து தனியாக ஒரு அதிகாரி, அவர்களின் கீழ் பல அதிகாரிகள், என்ஜினியர்கள் போன்றவர்கள், சர்வேயர்கள் போன்றவர்கள் என்று நியமிக்கப்பட்டு அதன் வாயிலாக அதற்கு ஒதுக்கப்படுகிற பணம், போடப்படுகிற திட்டங்கள் நல்லமுறையில் செலவு செய்யப்பட வழிவகை செய்யவேண்டும். கோவை மாவட்டம் ஆதிவாசிகள் அதிகமாக வாழும் இடம், அங்கே அவர்கள் நல்வாழ்வு வாழ திட்டங்களை அமைத்து செயல்படுத்தவேண்டும்.

ஆனைக்கட்டி கூட்டுறவுச்சங்கம் விசேஷமாக ஆதிவாசிகளுக்கு என்று அமைக்கப்பட்டுள்ள சிறப்பான கூட்டுறவுச் சங்கம். அந்தச் சங்கம் கொல்லிமலையில் உள்ள சங்கத்தைப்போல் நல்லமுறையில் வளர அரசு தேவையான உதவிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.



1982 மார்ச் 17] [திரு. ஜே. எஸ். இராசு]

காலமாக புறக்கணிக்கப்பட்டு, அழுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டு வாழ்கிறதோ, எந்த ஒரு சமுதாயம் 80 சதவிகிதம் கல்வி அறிவற்று இருக்கிறதோ, அரசாங்க புள்ளி விவரப்படி எந்த ஒரு சமுதாயம் 50 சதவிகிதத்துக்குக் கீழ் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறதோ அந்த சமுதாய நல்வாழ்விற்கான மானியத்தின் மீது இந்த மன்றம் இப்போது விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறது. அத்தகைய முக்கியமான விவாதத்தில் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அநேகமாக பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த மானியத்தின் மீது மட்டும் பேசி தங்கள் உரைகளை நிறைவு செய்திருக்கிறார்கள், வழக்கம்போல் நம் அருமை நண்பர் குடியரசுக் கட்சியைச் சார்ந்த திரு மூர்த்தி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை சற்று தொட்டுப் பார்த்தார்கள். ஊறுகாய் இல்லாவிட்டால் சிலருக்கு உணவு உள்ளேபோகாது. அதைப்போல் மூர்த்தியின் பேச்சில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடாவிட்டால் அவருக்கு நிறைவு வராது, அந்த வகையில் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் விமர்சிக்ககொண்டு வந்தார்கள் (குறுக்கீடுகள்) காலாகாலமாக ஒதுக்கி வைக்கப்பட்டு, இழிந்த நிலையில் இருந்த தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த ஒரு திருமகளை பகுத்தறிவு இயக்கத்தின் வாரிசாக விளங்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தலைவரான டாக்டர் கலைஞர் அவர்கள் தன் மருமகளாக ஏற்றுக் கொண்டது மிகப் பெரிய பாராட்டுதற்குரிய, பரந்த மனப்பான்மைக்கு எடுத்துக் காட்டாக அமையும் ஒரு சீர்திருத்த காரியமாகும்.

அவர்களுக்கு பேரனோ பேத்தியோ பிறந்து அதை அவர்கள் இன்று தனது கரங்களில் எடுத்து கொஞ்சுகிற காட்சியை அறிவுலகமே வரவேற்று மகிழ்கிறது. அத்தகைய பரந்த மனப்பான்மை மூர்த்தி போன்றவர்களுக்கும் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமே தவிர உதாரணத்திற்குத் தேவைப்படுகிற, எடுத்துக்காட்டாக திகழ்கின்ற கலைஞரின் செயலை இடறிப் பார்ப்பது எந்த வகையிலும் அவர்களுக்கு நல்லதல்ல என்பதை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. ஜி. மூர்த்தி: ** **

(மாலை 6.30)

*** *** ***

*** *** ***

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணையின்படி அகற்றப் பெற்றது.

திரு. ஜே எஸ். இராசு: துணைத் தலைவர் அவர்களே, யார்
என்ன சாதி, யார் உயர்ந்தவன், யார் தாழ்ந்தவன் என்பதிலே
எங்களுக்கு அக்கறையில்லை. மூர்த்திக்கே அந்த வேலை இருக்
கட்டும் நான் இந்த நேரத்தில் கொள்கை ரீதியான சிலவற்றை
இங்கே தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய
ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அத்தனை பேர்களும்,
தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பழங்குடியினருக்கு அதிக நிதி ஒதுக்கி
யிருப்பதாக, அதை குறித்து பலபட பாராட்டிப் பேசினார்கள்.
நானும் அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். ஆனால்.
ஒன்றை மறந்துவிட்டு, பாராட்டுவது என்பதை என்னால் புரிந்து
கொள்ள முடியவில்லை. விவசாயத்திற்கு நாம் ஆண்டுதோறும்
அதிகயான அளவுக்கு நிதியை ஒதுக்குகிறோம். அதேபோல்,
பிற்பட்டவர்களுக்கும் ஆண்டுதோறும் நிதி அதிகமாக ஒதுக்கு
கிறோம். அதேபோல்தான் கல்வித் துறைக்கும் அதிகமாக ஒதுக்கு
கிறோம்; தொழிலாளர் நலத் துறைக்கும் அதிகமாக ஒதுக்கு
கிறோம். இப்படி ஆண்டுக்கு ஆண்டு ஒவ்வொரு துறைக்கும
அதிகமான நிதியை ஒதுக்குகிறோம். அதைப்போலவே ஆதி
திராவிடர் நலத்துறைக்கும் சற்று அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்
கிறதே தவிர, இதிலே புதிதாக அரசாங்கம் ஏதோ ஒதுக்கி, புரட்சி
கரமான காரியத்தைச் செய்திருக்கின்றது என்று ஒத்துக்கொள்
வதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும்,
என்னாலும் சொல்லிக் கொள்ள முடியவில்லை. நியாயமான,
தேவையான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதுதான் எங்களது
குறை. எனவே, இந்த விவாதத்திலே கொள்கை ரீதியாக,
ஒன்றிரண்டு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வகுப்பு உரிமை என்பதும், இட ஒதுக்கீடு என்பதும் நாம்
நீண்டகாலமாக போராடியதற்குப் பிறகு, இந்தியத் துணைக்
கண்டத்திலே தந்தை பெரியார் அவர்களால் அறிமுகப்படுத்தி,
பேரறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்டு, பெருந்
தலைவர் காமராஜ் அவர்களால் ஆதரவு தெரிவிக்கப்பட்டு,
எல்லாவற்றிற்கும் மேலாக பிரதமர் நேரு அவர்களாலே
பாராட்டப்பட்டு, கொள்கை ரீதியாக செய்யப்பட்ட ஒரு முடி
வாகும். காலம் காலமாக தாழ்த்தப்பட்ட நிலைமையிலே
வைக்கப்பட்ட சமுதாயம் ஜாதியின் காரணமாக, தாழ்த்தப்பட்ட
பிற்படுத்தப்பட்ட நிலைமையில் இருப்பதைக் காரணமாகக்
காட்டி அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயம், பிற்படுத்தப்பட்ட
சமுதாயம் ஆகியவற்றிற்கு உதவுவது நல்லது என்பதற்காகத்
தான் சட்டத்திலே நல்லமுறையிலே பாதுகாப்பு தந்து,
இன்றைக்கு அது ஒரு கொள்கையாக ஏற்புக்கொள்ளப்பட்டு நடை
பெற்று கொண்டு வருகிறது. நம்முடைய அரசாங்கமும் அதை
நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது. இதற்கு முன்பு இருந்த
திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமும் இதை நல்ல
முறையிலே நிறைவேற்றி வந்தது. ஆனால் இந்த கொள்கைக்கு
எதிர்ப்பாக, நான் அறிந்தவரை தமிழ்நாட்டிலே பல எதிர்ப்புகள்
கிளம்பியிருக்கிறது என்பதை என்னால் பார்க்க முடிகிறது.



நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்—இந்த அருமையான
திட்டம் பற்றி அண்மையிலேகூட மாண்புமிகு இந்தியப் பிரதமர்
இந்திராகாந்தி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.
இட ஒதுக்கீடு என்பது ஒத்துக்கொள்ளப்பட்ட பிரச்சனை; "இதிலே
பேச்சு வார்த்தைக்கே இடமில்லை; இது இந்த நாட்டில் அங்கீகரிக்
கப்பட்ட கொள்கை" என்று பேசியிருக்கிறார்கள். இது அரசாங்
கத்தின் 'கமிடட் பாலிசி'. இந்த நியாயமான கொள்கையை
தமிழ்நாட்டில் இன்றைக்கு கேலி பேசுகிறார்கள்; கிண்டல் செய்
கிறார்கள். வேடிக்கையாக விமர்சிக்கிறார்கள். நான் சான்றாகச்
சொல்ல விரும்புகிறேன். ஹெரான் ராமசாமி என்பவர் நாடகம்
எழுதுகிறார், அந்த நாடகத்திலே நடிக்கிறார். அவர் எழுதிய
மகா கவி பாரதியார் நாடகத்தில், இப்படிப்பட்ட கொள்கைக்கு
இடர்பாடான பல கருத்துக்களை, பல காட்சிகளை கேலி
செய்து காட்டி வருகிறார். இதை எப்படி இந்த அரசாங்கம்
அனுமதிக்கிறது என்பதை அன்போடும் அதே நேரத்தில் ஆர்வத்
தோடும், அக்கறையோடும் கேட்க விரும்புகிறேன். அது மட்டு
மல்லாமல், 'இந்தியா டுடே' என்று ஒரு நாடகம் நடத்தப்
படுகிறது.

அந்த நாடகத்திலே பல காட்சிகள் இந்த இட ஒதுக்கீட்டுக்
கொள்கையைப் பற்றி, பகுத்தறிவு இயக்கத்தின் பேரிலே இந்த
ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பதாகப் பெருமை பேசும் இந்த
ஆட்சியில் அரசியல் சட்டம் ஒத்துக்கொண்டிருக்கின்ற இந்த சீரிய
கொள்கையைப்பற்றி, 'இந்தியா டுடே' என்ற நாடகத்திலே
"சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடி நம்முடைய இதயத்
திலே இன்றைக்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்ற பாரதியாரின்
பெயரால் போடும் நாடகத்திலேயும் இட ஒதுக்கீட்டுக்
கொள்கையை கண்டிக்கிறார்கள். நான் அரசாங்கத்தைக்
கேட்டுக் கொள்கிறேன், குண்டர்களைப் பிடிப்பதற்குப் போடப்
பட்ட சட்டத்தை, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பிடிப்
பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தைச் விபச்சாரம் செய்
கிறவர்களைப் பிடிப்பதற்காகப் போடப்பட்ட அந்தக் கடுமை
யான சட்டத்தை பத்திரிகையின் மீது போடப்பட்ட சட்டத்தை
இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கேலி செய்கிறவர்கள்மீது
பாய்ச்சுமா என்பதைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன். அத்துடன் இந்த நாடகங்களை தடை செய்யுமாறும்
கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை
உங்களது அரசாங்கம் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்த வரு
கிறது எந்த அளவுக்கு அதிலே சீரியஸாக இருக்கிறது என்பதை
சற்று விளக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில்
அரசுத் துறையில் 114 இலாக்காக்கள் அல்லது பிரிவுகள் இருக்
கின்றன. அதேபோல் தனியார் துறை அல்லது கவர்ன்மென்ட்
அண்டர்டேக்கிங்ஸ், அரசு சார்ந்த துறைகள் 4.. இருக்கின்றன.
இவைகளில் எல்லாம் நாம் ஒப்புக்கொண்ட இந்த இட ஒதுக்
கீட்டுக் கொள்கை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை
என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலப் பணியாளர்கள் பணி, 'தட் இல்', ஸ்டேட் சர்வீஸ்-என்பதில் டெபுடிகலெக்டர்கள், டிஸ்ட்ரிக்ட் சூப்பிரண்டெண்டென்ட் ஆப் போலீஸ், கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர்கள் இந்த வகைகளிலே வருகின்ற நம்முடைய மாநிலப் பணியாளர்களிலே 11 விழுக்காடுதான் இருக்கிறார்கள். 18 விழுக்காடு இல்லை. அதேபோல் குரூப் 2 சர்வீஸ் என்பதில்—சீனியர் இன்ஸ்பெக்டர் ஆப் கோவாப்ரேடிவ்ஸ், இ. ஓ. பார் டெம்பிள்ஸ், இ. ஓ., டவுன்ஷிப் பஞ்சாயத்து என்ற இந்த வகையிலே வருகின்ற பணிகளிலே 100க்கு 10 பேர்கள்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் ஒவ்வொரு துறையை எடுத்துக் கொண்டாலும் 18 சதமானத்தை எய்தாத நிலையைத்தான் தமிழகம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அரசு சாராத துறைகளிலே மெக்கானிக்கல் எஞ்சினியர்ஸ், சிவில் எஞ்சினியர்ஸ் இவர்களிலே 1 சதமானம் தான் தாழ்த்தப்பட்ட மக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். சிறப்பு நிலைப் பணியாளர்கள் பகுதியிலேயும் 100-க்கு 7 சதமானம்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அலுவலகப் பணியாளர்கள் என்ற வகையிலும் 100–க்கு 7 சதமானம்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மூர்த்தி பேசிய போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை ரெபர் பண்ணிப் பேசியதை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

**திரு எல். இளையபெருமாள்:** அதிலே அன்–பார்லிமெண்டரி வெர்ட்ஸ் ஒன்றும் இல்லையே. ஏன் நீக்க வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அன்–பார்லிமெண்டரி இல்லை என்றாலும் அது தேவையில்லாதது, ஆகவே வேண்டாம். அந்தப் பகுதி முழுவதையும் நீக்கும்படி உத்திரவிடுகிறேன். அப்படிப்பட்ட ரெபரன்ஸ் இன்றைக்கு இந்த இடத்திலே இந்த காண்டக்ஸ்டிலே வேண்டாம்.

**திரு. ஜே. எஸ். இராசு;** அதைப்போல பொது சார்பு நிலைத் தகுதி பணியாளர்கள் கண்டக்டர்கள், பியூன்கள், வாட்சுமேன்கள் இவர்களைப் பொறுத்தவரையில் 100-க்கு 12 பேர்கள்தான் தாழ்த்தப்பட்டவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். இதைப் போன்ற சான்றுகளை இந்த மன்றத்திலே ஏராளமாக என்னால் காட்டமுடியும். மருத்துவத் துறையாக இருந்தாலும், குடும்பநலத்துறையாக இருந்தாலும், மருத்துவர் கல்வித் துறையாக இருந்தாலும், பொது சுகாதாரத் துறையாக இருந்தாலும், இதிலே பல்வேறு கட்டங்களில் பணியாற்றுகின்ற தரவாரியான அதிகாரிகளில் பெரும்பாலும் 18 விழுக்காடு பூர்த்திசெய்யப்படவில்லை என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, இந்த திட்டத்தை நிறைவேற்ற நல்ல தொடக்கத்தை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து இந்த 4,5 ஆண்டுக் காலத்திலே தமிழக அரசு இதிலே அதிகமான கவனம் செலுத்தி இருக்குமானால் நிச்சய



மாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 விழுக்காட்டிற்கு மேலேகூட இடம் கிடைத்திருக்கும். ஆகவே, இதிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி வேலைவாய்ப்பில் மட்டுமல்ல, கல்லூரிகளிலே மாணவர்கள் சேர்த்துக் கொள்வதிலேகூட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். சான்றாகச் சொல்கிறேன் ஒன்றைமட்டும். அரசாங்கத்திலிருந்து மானியம் பெற்று, உதவி பெற்று நடத்தப்படுகின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே 1978 ஆம் ஆண்டு 3 இயர்ஸ் லா கோர்ஸ் துவக்கப்பட்டது.

(இரவு 6.40)

அதிலே 160 மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அதிலே எஸ்.சி.-க்கு 18 சதவீதம் தரவேண்டும். அப்படி தரப்பட்டிருந்தால் 119 மாணவர்களிலே 29 பேர் தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்கள் சேர்க்கப்பட்டு இருப்பார்கள். ஆனால் பரிதாபம், 12,13 மாணவர்கள்தான் அண்ணாமலை யூனிவர்சிட்டியிலே லா காலேஜிலே அந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இப்படி பல்வேறு உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போக முடியும். இருந்தாலும்கூட அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இவற்றோடு நான் முடித்துவிடுகிறேன்.

அடுத்து வேறு ஒரு பிரச்னை. ஸ்டேட் ஹரிஜன் வெல்பேர் கமிட்டி என்று நீண்ட காலமாக நம்முடைய மாநிலத்தில் இருந்து வந்தது. எந்த ஆண்டும் தொய்வில்லை. திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலும், காங்கிரஸ் ஆட்சியிலும் இருந்தது. ஆனால் என்ன காரணத்தினாலோ ஸ்டேட் ஹரிசன் வெல்பேர் கமிட்டியை அமைக்க இந்த அரசு முன் வரவில்லை. அதற்கான பர்டிகுலர்ஸ் எல்லாம் எடுக்கப்பட்டது. எம். எல். ஏ.-க்கள் பற்றியும் மற்றவர்கள் பற்றியெல்லாம் இங்கே இருந்தேகூட குறிப்பு எடுத்துக்கொள்ளலாம். விவரங்கள் அனுப்பப்பட்டும்கூட இரண்டு ஆண்டு காலமாக இந்த கமிட்டி அமைக்கப்படவில்லை, அது அமைக்கப்பட வேண்டும். அதிலே அங்கத்தினராக இருக்க வேண்டுமென்ற அங்கலாய்ப்பு எனக்கல்ல. ஆனால் நான் சொல்ல வருவது, ஆறு மாதத்திற்கு ஒரு முறை நான்கு மாதத்திற்கு ஒரு முறை முன்பெல்லாம் கூடுவோம். நானேகூட இந்த கமிட்டியிலே 2,3 முறை இருந்திருக்கிறேன். அப்படி கூடுகிறபோது தாழ்த்தப்பட்ட சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி சார்பற்ற தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திலே அக்கறை கொண்டவர்களும் இதிலே அங்கத்தினராக சேர்க்கப்பட்டு கூட்டங்கள் நடந்து எங்களுடைய கருத்துக்கள் தீர்மானம் வடிவிலே நிறைவேற்றப்பட்டு அரசுக்கு வரும். அரசு அதை ஆராய்ந்து பின்னர் அமைச்சரவைக்குச் சென்று நாங்கள் 10 கோரிக்கைகள் வைத்தால் அதிலே 4,5 ஆவது ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வந்ததைதான் தமிழகத்தினுடைய கடந்த கால ஆட்சியின் வரலாறு. இது ஒரு ஸ்டான்டிங் கமிட்டி, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த குழு கலைக்கப்பட்டு மீண்டும்

புதுப்பிக்கப்படும். இத்தகைய வாய்ப்பை ஏன் இந்த அரசு தருவதற்கு தயாராக இல்லை? நான் அறிந்த வரையில் 'தி பைல் இஸ் பெண்டிங் வித் தி ஆனரபிள் சீப் மினிஸ்டர்'. முதல்வரிடம். வேறு பைல்கள் தேங்கி கிடந்தால் அது வேறு விஷயம், ஆனால் இவ்வளவு முக்கியமான ஒரு பைல் இவ்வளவு அதிகநாள் அவரிடம் தேங்கியிருப்பது உண்மையாக இருக்குமானால் முதலமைச்சர் அவர்கள் விரைவில் கையெழுத்திட்டு, நீங்கள் யாரையோ போடுங்கள், போடுகிறபோது சீக்கிரமாக போட்டு அந்த கமிட்டியை நியமித்ததாக இந்த கூட்டத்திலேயே கூட நீங்கள் அறிவிப்பு செய்யலாம். தயாராக இருந்தால் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வேறு ஒரு பிரச்னை. எதற்கெடுத்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்றால் இழிவாக பார்க்கக்கூடிய ஒரு தன்மை சமுதாயத்திலே நிலவி வருகிறது. கள்ளச்சாரயம் காய்ச்சுபவர்களை பற்றி கடுமையாக சட்டம் போட்டிருக்கிறீர்கள். வாழ வழியற்றவர்கள், வேலை கிடைக்காதவர்கள் எல்லா ஜாதிக்காரர்களும் காய்ச்சுகிறார்கள். ஆனால் அகப்பட்டு கொள்பவர்கள் தாழ்த்தப்பட்ட ஜாதிக்காரர்கள்தான். மனம் திருந்தி நாங்கள் இனிமேல் காய்ச்சுவதில்லை. நாங்கள் விட்டுவிட்டோம், நாங்கள் கூலி வேலை செய்கிறோம் உழைத்து பிழைக்கிறோம் என்று சொன்னதற்கு பிறகு கூட தாழ்த்தப்பட்ட ஜாதியை சேர்ந்த எத்தனையோ இளம் வாலிபர்களை, அவர்களது மனைவி மக்களை கதற விட்டு விட்டு காவல் துறையினர் ஜெயிலுக்கு அழைத்துச் செல்கிறார்கள்; கேஸ்கள் போடுகிறார்கள். மனம் திருந்தியவனை குத்திக் கொண்டிருந்தால் அவன் துணிந்து மீண்டும் காய்ச்ச புறப்படுவானானால் நீங்கள் போட்டிருக்கிற சட்டம் அவனிடம் செல்லாது என்பதை தெரிவித்து இத்தகைய போக்கு தமிழகத்தில் இருக்கிறது என்பதை மிகுந்த வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். உள்ளபடியே மனம் திருந்தியவர்களையெல்லாம் கூட இந்த வழக்கிலே போட்டு அலைக்கழிக்கிறார்கள். இத்தகைய தவறான போக்கை போலீஸ் துறை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்திலே உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள், 31-3-81 வரை 25,714 ஆதி திராவிட குடியிருப்புகள் மின் இணைப்பு தரப்பட்டன என்று அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால் எனக்கு தெரிந்த வரையில் இயக்குநருக்கு, அரசாங்கத்திற்கு என்ன தெரிவித்திருக்கிறார்கள் என்றால், ஈ. பி.யிலே தரப்பட்ட புள்ளி விவரங்கள் தவறு. எத்தனையோ காலனிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகள் மின் இணைப்பு தரப்படாமலே இருக்கிறது; என்ற தகவல் எங்களுக்கு வருகிறது. நீங்கள் தருகிற புள்ளிவிவரத்தை மதிக்கிறேன், ஆனால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு விட்டது என்றும் மிச்சம் இருப்பது 1,328 காலனிகள்தான் என்றும் அறிக்கையிலே கொடுத்திருக்கிறீர்கள். அக்கறையோடு தெரிவித்துக் கொள்கிறேன். புள்ளி



விவரம் ஏட்டிலே இனிக்கும். நடைமுறையிலே கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியிலே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். உதாரணமாக புள்ளிவிவரம் இருக்கும், கோனேரிபாளையம் என்ற ஊரில் குழாய் கிணறு போடப்பட்டது. தண்ணீர் முழுவதும் கிடைக்கிறது என்று இருக்கும். ஆனால் முழுவதும் கிடைக்கிறதா என்பதைதான் பார்க்கவேண்டும். குழாயை போட்டு விட்டோ, கிணறை வெட்டி விட்டோ நீங்கள் குழாய் வெட்டிவிட்டோம் தண்ணீர் சப்ளை செய்து விட்டோம் என்று சொல்வது நல்லதல்ல. அத்தகைய புள்ளி விவரங்கள்தான் இந்தப் பக்கங்களை நிரப்பிக் கொண்டிருக்கின்றன என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தன்னிறைவுத் திட்டம் நடைபெற்றதே அதிலேகூட எத்தனையோ தாழ்த்தப்பட்ட குடிமக்கள் வாழ்கிற பகுதிகள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருப்பதை என்னாலே நிச்சயமாகச் சொல்ல முடியும். அதிலேகூட அதிக அளவு பணம் வேறு பகுதிகளுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் பங்கு ஒழுங்காகக் கிடைக்கவில்லை என்பதுதான் எனக்குள்ள வருத்தம். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இன்றைக்கிருக்கின்றன. ஆனால்,, அரசு அதிகாரிகள் தருகிற அறிக்கையை நம்பி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஏமாற மாட்டார் என்று நான் கருதுகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகக் கூட இன்றைக்கு நிறைவேற்றப்பட்ட யூனியன்களிலே பல கிராமங்களிலே, பருங்கூர் என்ற ஒரு ஊரில் அரியலூர் பக்கத்திலே இருக்கிறது. இன்னும் பிறருடைய தயவிலேதான் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் எடுத்துக் குடிகிறார்கள். குடத்தைத் தூக்கிக்கொண்டு யாரோ ஒருவர் வீட்டிற்கோ, குளத்திற்கோ போய்தான் இன்றைக்குத் தண்ணீர் பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, எல்லா கிராமங்களுக்கும் போதுமான அளவுக்கு, ஆண்டு முழுவதும் தரக்கூடிய அளவுக்குத் தண்ணீர் கிடைக்கிறதா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மருத்துவக் கல்லூரியில் படிக்கும் தாழ்த்தப்பட்ட, மாணவர்கள் உரிய நேரத்தில் விண்ணப்பித்திருந்தும் இன்று வரை ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படவில்லை. நான் சொல்வது 11-2-1982 ஆம் நாள் வரை. இன்றைக்கு நீங்கள் கொடுத்திருந்தால் நான் பாராட்டுகிறேன். 11-2-1982-ஏ லேட். லேட் என்றால், அதிகமான லேட். 1981 ஜூன் மாதத்திலே இந்த ஸ்காலர்ஷிப் தரப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்றுவரை தரப்படவில்லை. முதல் செமஸ்டர் முடித்துவிட்டு, மாணவர்கள் இரண்டாவது செமஸ்டருக்குப் போகிறார்கள். மீண்டும் கேட்கிறார்கள். அங்கே இருக்கிற டி. டபிள்யூ.ஓ. சொல்கிறார், நான்

இயக்குநருக்கு எழுதியிருக்கிறேன். பதில் வந்தால், பேர்ட்டிலே எழுதிப் போடுவேன், பார்த்துக் கொள்ளுங்கள் என்று. கைப் பணத்தைப் போட்டு இன்றைக்கு அந்த மாணவர்களும் மாணவி களும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருக்கால் இன்றுவரை அனுப்பவில்லை என்றால். சீக்கிரமாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜூன் மாதம் கல்லூரி தொடங்கினால் அடுத்த ஆண்டு மார்ச் வரை அட்மிஸன் நடக்கிறது. இது உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு கொடுமை. ஜூன் மாதம் அட்மிஷன் தொடங் கினால், ஜூலை, ஆகஸ்ட் செப்டம்பரோடு அட்மிஷன் முடித்து விடுவார்கள். ஆனால் இன்றைக்குக் கூட அட்மிஷன் நடக்கிறது அதோடு மட்டுமல்ல, சென்னை மாநகரத்திலே 500 தாழ்த்தப் பட்ட மாணவர்களுக்கு ஆஸ்ட்டலிலே அட்மிஷன் கிடைக்க வில்லை. நீங்கள் கணக்கெடுங்கள். அதிகாரிகள் சொல்ல மாட்டார்கள். அதிகாரிகளைத் தாக்கிப் பேசி எனக்குப் பழக்கம் இல்லை: ஆனால் அதிகாரிகள் எப்படிப்பட்டவர்கள் என்று எங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவே, அதிகாரிகளை நம்பியே நீங்கள் ஆட்சி நடத்தக் கூடாது, 500 மாணவர்கள் இதே சென்னை மாநகரத்தில் ஆஸ்ட்டலிலே அட்மிஷன் கிடைக் காமல் கல்லூரியிலே சேர்ந்து, இதற்காகச் செலவழித்து, நட்டப் பட்டு, இன்றைக்கு படிப்பை விட்டுவிட்டு வீடுகளுக்குத் திரும்பி யிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்திலாவது இத்தகைய கொடுமைகள் நிகழா வண்ணம் விடுதிகளிலே இடங்களை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மிகவும் முக்கியமானது. இன்று நம்முடைய மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்கள் இங்கே இருக் கிறார்கள். மிக அருமையான கிராமப் புறங்களிலே தாழ்த்தப் பட்ட மக்களுக்காக வீடு கட்டித் தருவதாகக் குறிப்பிட்டார் கள். ஆனால், அவர் சொல்லும்போது, தவறாக ஒன்றைச் சொல்லிவிட்டார். 78,000, 80,000 வீடுகளைக் கட்டி கொடுத் திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது முழுத் தவறு 78,000 வீடுகள் கட்ட கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தான் உண்மை. கடன் கொடுத்ததை, கட்டிக் கொடுத்ததாகச் சபையிலே சொல்வது சபையை திசை திருப்புவதாகும். அதோடு மட்டுமல்ல, நீங்கள் திருச்சிக்கோ, மதுரைக்கோ, திருநெல்வேலிக்கோ போகும்போது. கட்டப்படுகிற வீடுகளை உங்களிடம் அதிகாரிகள் காண்பிப்பார்கள். தி.மு.க. ஆண்டாலும் நீங்கள் ஆண்டாலும், யார் ஆண்டாலும் அதுதான் நிலைமை. நான் அமைச்சரைப் அன்புகூர்ந்து கேட்கிறேன், பல கிராமங்களில் கட்டி முடிக்கப்படாத வீடுகள் பாதியிலே குட்டிச் சுவராக இருக்கின்றன. இரண்டு ஆண்டுகளாக, 6 மாதமாக, 9 மாதமாக கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்ற அவைகளை உங்களுக்கு அதிகாரிகள் காண்பிக்க மாட்டார்கள். நீங்கள் கருதுகிறீர்கள், நீங்கள் தருகிற ரூ. 4,000-ல் வீடுகட்டிக் கொள் கிறார்கள் என்று. இல்ல, ரூ. 6,000, ரூ. 7,000 ரூ. 8,000 செலவில் தான் கட்ட முடிகிறது. ஆனால் நான் சொல்வது,



கட்டிய வீட்டைப் பார்க்க முன்வருகிற நம்முடைய அமைச்சர் அவர்கள் கட்டாத வீடுகள் இலட்சக்கணக்கிலே இருக்கின்றன, ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்றன, அவற்றையும் பார்க்க வேண்டும். என்னுடைய தொகுதியில் நூத்தப்பூர் வெம்பா வருக்கு வாருங்கள் செய்க்குமைக்கு வாருங்கள். முதல் தவணை கொடுத்து 2 வருடம் ஆகிறது. இன்னும் இரண்டாவது தவணை தரப்படவில்லை.

இங்கே கூட எனக்கு ஒரு செய்தி தரப்பட்டது, கும்பகோணம் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் முதல் தவணைய க—மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் இங்கே இருக்கிறார். ரூ. 1,000—மோ, ரூ. 900—மோ, கொடுத்திருக் கிறார்கள். கொடுத்து நீண்ட நாட்களாகி விட்டன. ஆனால், டிமான்ட் நோட்டீஸ் வந்து விட்டது. வீடு குட்டிச்சுவராக இருக்கிறது, செங்கலோடு நிற்கிறது. இரண்டாவது லோன் கொடுக்கப்படாததால் வீடுகள் கட்டி முடிக்கப்படாத நிலையில் இருக்கிறது. ஆனால் முதல் தவணையாகக் கொடுக்கப்பட்ட 100-க்குரிய முதல் தவணைக் கடனை கட்டும்படி டிமாண்ட் நோட்டீஸ் இரண்டு பேருக்கு வந்து விட்டது. ஆ இப்படி நீங்கள் அரசாங்கத்திலுள்ள அதிகாரிகள் தரும் புள்ளி விவரத்தை நம்புவது உண்மை என்றாலும் கூட, அதில் தவறு இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6—50)

இப்போதே தலைமை வீட்டு வசதி சங்கம் 30 இலட்சம் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற ஃபைல்களுக்கு சேங்க்ஷன் செய்தாலே 60 கோடி ரூபாய் வரையில் தேவைப்படும். இப்பொழுது சத்துணவுக்காக 100 கோடித் திட்டம் என்று ஒதுக்கியிருக்கிறீர்களே அதிலே 60 கோடி ரூபாயை இதற்கு ஒதுக்கியிருக்கலாம். நான் அதற்குள் போகவில்லை.

தலையாரி, வெட்டியான் ஆகியவர்களை வைத்துக்கொண்டு கிராம முன்சீப், கணக்குப் பிள்ளைகளை விட்டு விட்டீர்கள். தலையாரி, வெட்டியான் ஆகியவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 60 வயதில் வீட்டுக்குப் போக வேண்டும்; போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பென்ஷன் இல்லை. எனவே, அருள்கூர்ந்து உங்கள் செல்வாக்கை மாண்புமிகு முதல்வரிடத்திலே பயன் படுத்தி, வருவாய்த்துறை அமைச்சரிடத்திலே கூறி அந்த வெட்டியான், தலையாரி ஆகியவர்களுக்குப் பென்ஷன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பும் அவர்கள் வீடு வீடாக அலைந்து கொண்டிருந்தார்கள் வரி வசூலிக்க. இப்பொழுதும் வீடு வீடாக அலைகிறார்கள் வசதி யில்லாத காரணத்தால். ஆகவே, அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் போடுகிறீர்கள். நீண்ட நாளாக நடை பெறுவது, இது அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதேநேரத்தில் 100 கோடி ரூபாய்த திட்டத்திலே போடும் சத்துணவுத் திட்டத்தில் — நான் கருதுகிறேன், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள்தான் தாழ்த்தப்பட்ட ஏழைச்சிறுவர்கள்தான் கையிலே ஒரு தட்டை ஏந்திக் கொண்டு நிற்கப் போகிறார்கள். உடையார் வீட்டுப் பையனோ, ரெட்டியார் வீட்டுப் பையனோ, படையாச்சி வீட்டுப் பையனோ, நாயுடு வீட்டுப் பையனோ அந்தக் கியூவிலே போய் நிற்கப் போவதில்லை. காலா காலத்திற்கும் சேரிகளிலே உள்ளவர்கள்தான் வந்து நிற்கப்போகிறார்கள். எனவே அவர்களுக்குள்ள மரியாதையை, ஃபீலிங் கக் கெடுக்கப் போகிறீர்கள். பொதுவாக மனிதாபிமானத் தன்மையிலே அந்தத் திட்டத்தை வரவேற்கிறோம். ஆனால், அங்கே தாழ்த்தப்பட்ட சிறுவர்கள் வந்து நிற்கப் போகிறார்கள் என்பதை நினைத்துப் பார்ப்போமே யானால் அந்தச் சமூகத்தின் கதி இது தானா என்பதை எண்ணி வருந்துகிறேன்.

கிராமப்புறங்களிலேயிருந்து வீட்டு மனைகளுக்காக ஏராளமான விண்ணப்பங்கள் அமைச்சருக்கும், இயக்குநருக்கும், செயலாளருக்கும் வருகின்றன. திருச்சி மாவட்டத்தில், என்னுடைய தொகுதியிலேயிருந்து கடந்த இரண்டாண்டுகளில் 30 கிராமங்களில் வீட்டு மனைப் பட்டா வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரணாரை பூலாம்பாடி, பெரம்பலூர், துறைமங்கலம், பொம்மனபாடி, நெடுவாசல், களரம்பட்டி, காரியானூர், கைகளத்தூர், குரும்பலூர், வி. களத்தூர், அரசலூர், சத்திரமனை, அயன்பேரையூர், செங்கணம், தேவையூர்- குரும்பலூர், மலையாளப்பட்டி என்று பட்டியலிட்டுக் கொடுத்திருக்கிறோம். இதைத் தயவு செய்து அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். திருச்சி மாவட்டத்திலே ஒரு ஆண்டில் எனது தொகுதிக்கு இரண்டே இரண்டு ப்ரப்போசல்கள் தான் அரசுக்கு வந்திருக்கின்றன. அவர்கள் புள்ளி விவரங்களைத் தருவார்கள். இதைக்கூட நான் குறைத்துத்தான் சொல்கிறேன். வேறு பகுதிகள் இருக்கின்றன; இதே கோரிக்கை மாவட்ட அளவில் இருக்கிறது. ஆனால், ஒரு, தொகுதியிலே இரண்டே இரண்டு இடங்களுக்குத்தான் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றால் நிலப்பட்டா தர ஆலம்பாடியிலுள்ள மத்தியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. இந்த ஒன்பதில் அது இல்லை. அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அச்சுத் துறையைப்பற்றி யாரும் பேசாததால் இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். ஏனென்றால் அது தனி இனமாக இருக்கிறது.

அரசு அச்சகத்தில் அச்சுக்கோர்ப்புப் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவுட்டர்ன் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் தொழிலாளர்கள் வேலை செய்வதற்கான பொருள்களும், வேலையும் சரியாகத் தருவதில்லை. ஒரு நாள் வேலை தராமல் மறுநாள் இரண்டு நாள் வேலையையும் சேர்த்து அவுட்டர்னாகக் கொடுக்கச் சொல்கிறார்கள். அப்படிக் கொடுக்க முடியாத தொழிலாளர்களுக்கு ஆண்டு ஊதியம் நிறுத்தியும், பணி இறக்கம் செய்தும் தண்டனை வழங்குகிறார்கள்.



அரசு அச்சகத்தில் மூன்று ஷிப்டுகள் வேலை நடக்கிறது' குறைந்தது 4,000 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். அவர்களுக்குப் போதுமான லெட்ரின் வசதி கிடையாது. 150 ஆண்டுகளுக்கு முன்பு 1,000 தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட லெட்ரின்தான் இருக்கிறது. ஆனால், இன்னும் எந்தவிதமான மாற்றமும் அடையவில்லை. இதையெல்லாம் அமைச்சரவர்கள் பார்த்துப் புதிய லெட்ரின்களைக் கட்டுவதற்கு ஆணையிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாதம் ஒரு முறை அண்ணா சாலையில் உள்ள இயக்குனரகத்தில் பிரிவு அதிகாரிகள் கூட்டம் நடைபெறுகிறது. அதில் கலந்து கொள்ள மாவட்டக் கிளை அச்சகங்களிலிருந்து முதல் வகுப்புப் புகை வண்டியில் வந்து சேருகிறார்கள். அதனால் தொழிலாளர்களுக்கு எந்தவிதப் பயனும் இல்லை. மாறாக நிர்வாகத்திற்கு வீண் செலவு ஏற்படுகிறது. இங்கே உள்ள இயக்குநர் டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ்-க்குப் போகிறார். அது வேறு. அதுவல்லாமல் அவர்கள் இங்கே வந்து வீண் செலவை வைக்கிறார்கள்.

அதைத் தவிர்க்க வேண்டும்.

அடுத்து அரசு அச்சகத்திலே ஒரு மருத்துவசாலை இருக்கின்றது. டிஸ்பென்சரி. அங்கே ஒரு டாக்டர் இருக்கிறார். அவர் தேவைப்பட்ட மருந்துகளை வாங்க முடியாது, இன்டன்டு போட்டு. ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அனுப்பிதான் இங்கே இருந்துதான் மருந்துகளை வாங்க முடியும். அதற்கு இவர்களே வாங்கிக் கொள்ளலாம். அத்தகைய முறைகளை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பெயரிலேயே 'சாரதி' என்ற பெயரைப் பெற்றிருக்கிறார்கள். விஜயசாரதி என்றால் வெற்றிகரமான இயக்குநர் என்று பொருள். இந்தத் துறை கொஞ்சம் சிக்கலான துறை. பிடிபடுவது கஷ்டம் ஏமாற்றுவதற்கு நிறைய பேர்கள் இருக்கிறார்கள். நடிப்பிலே தயவு செய்து நீங்கள் மயங்கவேண்டாம். உங்கள் பெயருக்கேற்ப இந்த நலத்துறை என்ற வண்டியை நல்லமுறையிலே இயக்கி, பெரம்பலூர் வரை நீங்கள் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைத்தினம் இந்த மானியக் கோரிக்கையின் மீது ஏறத்தாழ 18 உறுப்பினர்கள் பங்கு கொண்டு தமிழகத்தினுடைய ஆதிதிராவிட நலத் துறை பற்றியும், எழுதுபொருள் அச்சுத்துறை பற்றியும் அதிலே அரசினைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ள வேண்டிய வழிவகைகளை குறித்து 18 மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விவாதத்திலே பங்கு கொண்டு

[திரு. எம். விஜயசாரதி] [1982 மார்ச் 17

தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்ளுகிறேன். அரசைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த உணர்வின் அடிப்படையிலேயே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்களோ அந்த உணர்வுக்கு மதிப்பினை அளித்து அவர்கள் தெரிவித்திருக்கக் கூடிய அனைத்துக் கருத்துக்களையும் கவனத்திலே கொண்டு செயலாற்றும் என்பதனை முதலிலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தமிழ்நாட்டு ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு பழனிவேல் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கொள்கை விளக்கக் குறிப்பிலே 1971 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பினை நாம் அறிவித்திருக்கிறோம். 1981 ஆம் ஆண்டின் ஆதிதிராவிடர் பற்றிய மொத்த மக்கள் தொகை பற்றி விவரங்கள் தனியாக வெளியிடப்படாததன் காரணமாக அந்த 1971 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கினை கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறோம். என்பதையும் தோராயமாக எண்ணிப் பார்க்கிற போது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 93 லட்சம் ஆதி திராவிட மக்கள் வசிக்கிறார்கள் என்பதையும் இங்கே அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறோம் 93 லட்சம் மக்கள் இருக்கக் கூடிய நிலையினை இங்கே விவாதத்திலே கலந்து கொண்ட உறுப்பினர்கள ஒவ்வொருவரும் அந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தினை வாழ்க்கை நிலையினைக் கருத்திலே கொண்டு, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கக் கூடிய அந்த மக்கள் மேன்மை நிலைக்கு வரவேண்டும் என்ற ஒரே உணர்வோடு தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்பதனை இந்த அரசு முழுமையாக உணர்ந்து இருக்கின்றது என்பதனை முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

[இரவு 7–00]

தமிழக அரசைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருந்தாலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இதற்கு முன்பு பல்வேறு ஆட்சிக் காலங்களிலே இந்த மக்களின் மீது கொண்டிருந்த அன்பிற்கும், இந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு காட்டிய அக்கறைக்கும், புரட்சித் தலைவர் அரசு எந்த விதத்திலும் சளைத்ததல்லாமல், இந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலே தற்போது கண்ணும் கருத்துமாக இருந்து பணியாற்றி அதிகமாகவே செய்து வருகிறது என்பதை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னது போல், தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுடைய நலிந்த நிலையினைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய பொருளாதாரத் தன்மையை உயர்க்கி.



1982 மார்ச் 17] [திரு. எம். விஜயசாரதி]

பொருளாதாரத் தன்மையை உயர்த்துவதன் மூலமாக சமுதாயத் திலே இருக்கக்கூடிய மற்ற பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நிகராக அந்த மக்களைக் கொண்டுவருவதன் மூலமாக, சமுதாயத்தின் அடித்தளத்திலே தத்தளிக்கின்ற அந்த மக்கள் மத்தியிலே இருக்கக்கூடிய அந்த தாழ்வு உணர்வை அந்த மக்கள் மத்தியிலேயிருந்து அகற்றி, அப்படி அகற்றுவதன் மூலமாக மற்றவர்களுக்கு தாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலைக்கு கொண்டுவரவேண்டுமென்ற உணர்வோடு, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நடவடிக்கைகள் எடுத்து, அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதோடு மட்டுமின்றி, அந்த நடவடிக் கைகளின் மூலம் எத்தனை மக்கள் அந்தப் பயனை அடையப் போகிறார்கள் என்பதனை கருத்திலே கொண்டு, இந்த அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது என்பதை முதலிலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் இந்திய நாட்டின் மற்ற மாநிலங்களையும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளையும் குறிப்பிட்டு, எடுத்துச் சொல்லி, அந்தப் பகுதியிலே எல்லாம் இருக்கக்கூடிய தீண்டாமை உணர்வினையும் ஆதி திராவிட மக்களின் மீது இழைக்கப்படுகின்ற கொடுமைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த மக்களுடைய நிலையினை உயர்த்துவதன் மூலமாக பொருளாதாரத் தன்மையை உயர்த்துவதன் மூலமாக அந்த மக்களை மற்றவர்களுக்கு நிகரானவர்கள் என்கிற அந்த உணர்வை ஏற்படுத்தி, அந்த உணர்வை ஒழிப்பதன் மூலம் அந்தத் தீண்டாமையை விரட்டுவதற்கு வாய்ப்பாக நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்ற உணர்வோடு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் இன்றைக்கு பணியாற்றி வருகிறார் என்பதை நான் முதலிலே எடுத்துச் சொல்லக்கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆதி திராவிட நலத்துறையைப் பொறுத்தவரையில் இதற்கு ஒதுக்கப்பட்ட தொகையினைப் பற்றி பல்வேறு உறுப் பினர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். தொகையினை உயர்த்துவது ஒன்றும் புதுமையான காரியம் அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஜே. எஸ். இராசு அவர்கள் கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். தொகையினை உணர்த்துவது புதுமையான காரியம் அல்ல என்று சொன்னாலும் கூட தொகையினை உயர்த்தியுள்ளதே ஒவ்வொருவரும் மகிழ்ச்சி அடையத்தக்க நிலைமை உருவாகி இருக்கிறது என்பதை நான் எடுத்துச்சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்தத் தொகையினைப் பொறுத்தவரையில் ஒதுக்கப்பட்டு இருக்கின்ற மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் 2 பங்கினை ஆதி திராவிட நலத் துறையில் கல்விக்காக செலவழிக்கப்படுகிறது என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதுபோல் கல்வியின் தரத்தை இந்த சமுதாயத்தினைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இந்த தரத்தை நாம் உயர்த்த வேண்டும் என்றும் பல்வேறு வசதிகளை செய்து தரவேண்டும் என்றும் ஒரே உணர்வோடு இந்த அரசைப்

[திரு. எம். விஜயசாரதி] [1982 மார்ச் 17

மூன்றில் இரண்டு பங்கினை கல்விக்காக நாம் ஒதுக்கிட்டு
சென்றபோது கல்வியின் மூலமாக இந்த மக்களுடைய குழந்தைகள்
நல்ல கல்வியைப் பெற்று, வருங்காலத்தில் நல்ல பதவிகளில்
அமருவதற்கும் வசதி செய்து தரவேண்டுமென்ற உணர்வோடு
இன்றைக்கு பணியாற்றி வருகிறோம் என்பதை நான் முதலிலே
தெரிவிக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆதி திராவிட
நலத்துறையைப் பொறுத்தவரையில் இநதத் துறையின் மூலமாக
1,073 பள்ளிகள் நலத்துறையின் மூலமாக பழங்குடியினர் பள்ளி
களாகும் எனபதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவனாக
இருக்கிறேன். இதில் மொத்தமாக 33,531 மாணவ மாணவியர்கள்
இன்றைக்கு பயின்று வருகின்றார்கள் என்பதை நான் எடுத்
துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாணவர்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசும்,
மாநில அரசும் 10-வது வகுப்புக்குமேல் படிக்கின்ற மாணவர்
களுக்குக் கல்விச் சலுகை அளிக்க உதவித்தொகை அளித்து,
ஊக்குவிப்பதன் மூலம் செயல்படுத்தி வருகிறோம் என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

1981–82 ஆம் ஆண்டு, இதுவரை 352.87 லட்சம் ரூபாய்
உதவித்தொகையாக 50,949 மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்
கிறது என்பதை நான் இங்கே எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

மாணவர் இல்லங்களைப் பொறுந்தவரையில் தமிழ்நாடு
முழுவதும் 681 மாணவர்கள் இல்லங்கள் உள்ளன என்பதையும்
அவைகளில் ஏறத்தாழ 41,135 மாணவ மாணவியர்கள் பயின்று
வருகின்றார்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துச்சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று
நான் கருதுகிறேன். 1981 ஆம் ஆண்டு தமிழ்நாட்டினுடைய
சட்டமன்றத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளுடைய
கூட்டத்தை நான் கூட்டியபோது அங்கே அந்தக் கூட்டத்தில்
கலந்துகொண்டு அனைத்து உறுப்பினர்களும் தெரிவித்திருக்கிற
கருத்துக்கள் அடிப்படையில் இந்த மாணவர்களைப் பொறுத்த
வரை அவர்களை விடுதிகளிலே சேர்க்கும்போது தற்போது
இருக்கிற அந்தக் கணக்கினை உயர்த்தித் தரவேண்டும் என்றும்
அவ்வாறு உயர்த்துவதன் காரணமாகப் பல்வேறு மாணவர்கள்
பயனடைவார்கள் என்றும் எடுத்துச் சொன்னதைப்போல அதைக்
கருத்திற்கொண்டு இந்த அரசானது தமிழ்நாடு பூராவும்
அனைத்து மாவட்டங்களுக்கும் விடுதிகளிலே சேருகின்ற
மாணவர்கள் எண்ணிக்கையை 10 சதவீதம் உயர்த்துகின்ற
வகையில் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை இங்கே
நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த 10 சதவீதம் என்பது
குறைவானதாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்
திருக்கிற உணர்வுகளுக்கு மரியாதை கொடுக்கின்ற வகையில்



1982 மார்ச் 17] [திரு. எம். விஜயசாரதி]

இந்த 10 சதவீதம் தற்போது குறைவாக இருந்தாலும் வரும்
ஆண்டுகளிலே இருக்கக்கூடிய நிதிநிலைமையை அனுசரித்து அதை
மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்
கொள்ளும் என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த 10 சதவீதத்தை நாம் உயர்த்துவதன் மூலமாக அரசுக்கு
ஆகக்கூடிய கூடுதல் செலவு ஏறத்தாழ 28,72,000 ரூபாயாகும்
என்பதையும் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அண்ணன் இளையபெருமாள் அவர்கள் பேசும்
போது ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக நடத்தப்படுகிற
பள்ளிகளிலும், கல்வித் துறையின் மூலமாக நடத்தப்படுகிற
பள்ளிகளிலும் தங்கி பயிலக்கூடிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு
வழங்கப்படக்கூடிய இலவசப் புத்தகங்கள் காலாகாலத்திலே
சென்று சேரவில்லை என்று சொன்னார்கள். அவரைத்
தொடர்ந்து மேலும் பல மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தக்
கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்தி,
ஒரு கருத்தை இங்கே எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்றைக்கு நடைபெற்ற அந்த சட்டமன்ற உறுப்பினர்கள்
கூட்டத்திலே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கலந்து
கொண்டு இந்தக் கருத்தைத் தெரிவித்ததன் வாயிலாக அரசைப்
பொறுத்தவரையில் 1981 ஆம் ஆண்டு, 30-6-1981–க்குள்
அனைத்துப் பள்ளிகளுக்கும் அந்தப் புத்தகங்கள் வழங்கப்பட
வேண்டுமென்று இயக்குநருக்கு ஆணை பிறப்பித்திருக்கிறோம்
என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் அத்தகைய குறைகள்
ஏற்படாதவண்ணம் ஆதிதிராவிடர் நலத்துறை நடத்துகின்ற
பள்ளிகளுக்கு மட்டுமின்றி, கல்வித் துறையின் மூலமாக நடத்தப்
படுகின்ற அனைத்துப் பள்ளிகளிலும் தங்கி பயிலக்கூடிய மாணவர்
களுக்கு அரசின் சார்பிலே அளிக்கப்படுகிற இலவசப் புத்தகங்கள்
காலாகாலத்திலே சென்று சேரவேண்டுமென்ற உணர்வோடு
மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களே அந்தப் பொறுப்பை
ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரத்தியேகமாக ஆணை பிறப்
பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின் மூலம் 30–6–1982-க்குள்
இலவச புத்தகங்கள் அனைத்து மாணவர்களுக்கும் தமிழ்
நாட்டைப் பொறுத்தவரையில் வழங்கப்பட வேண்டுமென்ற
கருத்தை நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே இருக்கக்கூடிய குறைகள்
ஏதாவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால்
தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுத்து விரைவில் அத்தகைய
குறைகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை
நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

விடுதிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச்சொன்னார்கள். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக இன்று விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கும் நல்ல வசதிகளைச் செய்து தந்து, அவர்கள் கல்வியை நல்ல முறையில் கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற உணர்வோடு, தமிழக அரசு மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் ஆங்காங்கு விடுதிகளைக் கட்டிக்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

(இரவு 7.10)

புதிய கட்டிடங்கள் கட்டுவதைப் பொறுத்தவரையில், இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கும் மாணவியர்களுக்காக 150 கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டும் என்ற உணர்வோடு 50 புதிய விடுதிகளை ஒவ்வொரு ஆண்டும் நாம் கட்ட இருக்கிறோம். இந்த விடுதிகளைக் கட்டுவதற்கு மைய அரசோடு தொடர்பு கொண்டு, அவர்களுடைய உதவியைப் பெற்று கட்டுவதற்கு இருக்கிறோம். இத்திட்டத்திற்கு மத்திய அரசு தரும் நிதி உதவி, நாம் விடுதி கட்டும் போது, ஒரு மாணவிக்கு ஆகும் செலவாக ரூ. 4600 அவர்கள் தருகிறார்கள். மீதி தொகையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற வகையில் அவர்கள் முடிவு எடுத்து இருக்கிறார்கள். என்பதை நான் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் உள்ளபடியே பார்க்கிறபோது ஒரு மாணவிக்குத் தரப்படுகின்ற பணம், தற்போது ஏற்பட்டு இருக்கும் விலையேற்றத்தின் காரணமாகப் போதாது. தற்போது ஒரு மாணவிக்கு ஆகும் செலவானது ரூ. 9600. அவ்வாறு அதிகமாக ஆகும் தொகையை மாநில அரசே ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த வகையில் ஒரு வருஷத்திற்கு 50 விடுதிகள் என்ற அடிப்படையில் 3 ஆண்டுகளில் 150 விடுதிகளைக் கட்டிவிட முடிவு எடுத்து இருக்கிறோம். மத்திய அரசின் உதவியோடு இந்தத் திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆகவே, மீண்டும் மைய அரசோடு தொடர்பு கொண்டு மொத்தத்தில் செலவாகக்கூடிய தொகையில் பாதியை அவர்கள் ஏற்கவேண்டும் என்று நாம் கேட்க இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாணவர் இல்லங்களைப் பொறுத்தவரையில், இது வரையில் மொத்தமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், மாணவருக்கும் மாணவியருக்கும் சேர்த்து 245 புதிய விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதியை அரசு வழங்கியிருக்கிறது. இதிலே 88 கட்டிடங்கள் முடிவுற்ற நிலையில் உள்ளன. 96 கட்டிடங்கள் முடிவுறுகின்ற பல்வேறு நிலையில் உள்ளன என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். இதற்கு மொத்தப் பண ஒதுக்கீடு 8.5 கோடி ரூபாய் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்



தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாணவர்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் 15 புதிய விடுதிகள் துவங்கவேண்டும் என்ற உணர்வோடு, அதை ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டு இந்த அரசு செயல்பட்டுக்கொண்டுவருகிறது என்பதை நினைவு படுத்தி, இந்த ஆண்டும் 15 புதிய விடுதிகள் துவங்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராசாம்பாள் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை வங்கிகள் மூலம் அளிக்கவேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கு ஒப்ப, அரசைப் பொறுத்த வரையில், ஸ்டேட் பாங்கு அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஸ்டேட் பாங்கு கிளைகள் மூலம் அந்தத் தொகையை வழங்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அரசு மாணவர்களுக்குத் தரும் அந்த உதவித்தொகையை வங்கிகள் மூலம் அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம், நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் பேசுகிறபோது நிதி ஒதுக்கீட்டைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 1982-83 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு இருக்கும் 41.10 கோடி ரூபாயில், நிர்வாகச் செலவுக்கு எவ்வளவு என்றும், திட்டங்களுக்காக எவ்வளவு என்றும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுக் காட்டவில்லை என்று சொன்னார்கள். நிர்வாகச் செலவுக்காக 6.90 கோடி ரூபாயும், திட்டங்களுக்காக 34.20 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற தகவலை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நூலகங்களைப் பற்றி அவர்கள் பேசுகிறபோது, எத்தனை பள்ளிகளில் நூலகங்கள் உள்ளன என்ற வினாவை எழுப்பினார்கள். தமிழகத்தில் ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் நடைபெறுகிற அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல் நிலைப் பள்ளிகளிலுமே நூலகங்கள் உள்ளன என்றும், ஒரு பள்ளிக்கு ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் வரையில் தேவைப்பட்ட புத்தகங்களை வாங்குவதற்காகக் கொடுக்கப்படுகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக மாநில அரசின் உதவித் தொகையைப் பற்றி அண்ணன் இளையபெருமாள் அவர்கள் எடுத்துச் சொன்ன சில கருத்துக்களுக்கு (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ''அண்ணன்'' போன்ற வார்த்தை எல்லாம் வேண்டாம். அப்படி எல்லாம் சொல்லக் கூடாது.

நபர் ஒன்றுக்குக் கொடுத்த படிப்பு உதவித் தொகையானது குறைவாகவும், மாநில அரசுகள் கொடுத்த உதவித்தொகையானது அதிகமாகவும் இருந்து வந்தது. அவ்வாறு இருக்கக்கூடிய அந்த வித்தியாசத்தைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு, மாநில அரசுகளானது, அந்த வித்தியாசத்தை ஈடுகட்டிக் கொடுத்து வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1974–75க்குப் பிறகு மைய அரசின் உதவித் தொகை கூடுதலாக இருந்ததின் காரணமாக மாநில அரசு உதவித் தொகை கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். (குறிக்கீடு)

தற்போது மைய அரசினாலே கொடுக்கக் கூடிய படிப்பு உதவித் தொகை விகிதாச்சாரப்படி மாணவர்களுக்குக் கொடுத்து கொண்டிருக்கிறோம். அப்படி இருந்தும் கல்லூரிகளுக்கும், கல்லூரி விடுதிகளுக்கும் ஆகும் செலவு அதிகப்படியாக இருக்கும் காரணத்தால் அதை ஈடு கட்டும் பொருட்டு, மாநில அரசின் மூலம் வட்டியில்லாத கடன் படிப்பு உதவித் தொகை, வகுப்பிற்கு ஏற்றவாறு ரூ. 500/-லிருந்து 170 வரையிலுமாக கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மொத்தத்தில் தற்போது உதவித் தொகைக்காக 4 கோடி ரூபாய் செலவாகிறது என்று கணக்கிட்டுப் பார்க்கிறபோது, அதை மைய அரசு இரண்டே கால் கோடி ரூபாயும், மாநில அரசு ஒன்றே முக்கால் கோடி ரூபாயும் கொடுக்க வேண்டும் என்று வகை செய்யப் பட்டுள்ளது. இதனால் மைய அரசுதான் மொத்தத்திலே, முழுத் தொகையையும் அளிக்கிறது என்ற தகவல் தவறான தகவலாகும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

**திரு. எல். இளையபெருமாள்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, மைய அரசு உதவித்தொகை.... (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்தபிறகு கிளாரிபிகேஷன் கேட்கலாம் என்ற ஒரு முறை இருக்கிறது. ஆகவே நீங்கள் நோட் செய்து வைத்துக் கொள்ளுங்கள். கடைசியில் கேட்க அனுமதி தருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பழங்குடியினரைப் பொறுத்த வரையில் பல்வேறு உறுப்பினர்களும் பங்கு கொண்டு அந்த மக்களுக்கு இருக்கக்கூடிய குறைபாடுகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரையில் பழங்குடியினருக்கு என்று சில துணை மேம்பாட்டுத் திட்டத்தை தமிழகத்திலே செயல்படுத்தி வருகிறது என்பதையும் அதன்மூலம் 1981-82க்கு 393.65 லட்சம் செலவிடப்பட்டது என்பதையும், 1982-83 ஆம் ஆண்டுக்கு 453.36 லட்சம், இந்த துணை மேம்பாடு திட்டத்தின் கீழ் செலவிடப்பட இருக்கிறது என்பதையும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இக்கணிசமான அளவிலே பண ஒதுக்கீட்டைச்



செய்து. பழங்குடியினர் நலனுக்காகவும், அந்த மக்களுடைய கல்வி முன்னேற்றம், சுகாதாரம், குடிதண்ணீர் வசதி, சமூக நலம், கிராமத் தொழில் முன்னேற்றத்திற்காகவும் மட்டும் இன்றி சாலைப் போக்குவரத்து, விவசாய மேம்பாடு ஆகியவைகளுக்காகவும் இந்தத் தொகையானது செலவிடப்படுகிறது என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[இரவு 7.20]

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பேசுகின்றபோது பழங்குடியினர் சேகரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதிகள் இல்லை. என்ற கருத்தைச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 12 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது இயங்குகின்றன. இவற்றை இந்தப் பழங்குடிமக்கள் பயன்படுத்தி அவர்கள் சேகரிக்கும் பொருட்களை இந்தச் சங்கங்களின் மூலமாக விற்பனை செய்து இன்றைக்கு அதற்கான உதவிகளை அவர்கள் பெற்று வருகிறார்கள் என்ற கருத்தை எடுத்து வைக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோது வீட்டுமனைகளைப் பற்றிய கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு பழனிவேல் அவர்கள் கூட இன்றைக்குக் கொடுக்கக்கூடிய இந்த அளவானது மிகக் குறைவானது என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஒரு புள்ளிவிவரத்தை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1966 முதல் 1977 வரையில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 1,10712, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கான மொத்தச் செலவு 282.78 இலட்சமாகும். ஆனால் தமிழகத்தினுடைய முதல்வராக புரட்சித்தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு 1977 முதல் 31-12-81 வரையில் மொத்தமாக 1,15,256 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி இருக்கின்றது என்பதையும் அதற்காக மொத்தமாக 412.74 இலட்சம் செலவு செய்து அந்தப் பட்டாக்கள் வழங்கப்பட்டன என்பதையும் நான் உங்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துகின்ற சட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலமாக அதிகமான அளவிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைகளை அளிக்கவேண்டும் என்ற உணர்வோடு அந்த புரட்சிகரமான சட்டத்தை புரட்சித்தலைவருடைய அரசு கொண்டு வந்து செயல் படுத்திக்கொண்டிருந்தபோது நிலச்சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்திலே வழக்குகளைத் தொடுத்து அதன்மூலமாக அந்தச் சட்டமானது செல்லுபடியாகாது என்ற தீர்ப்பினை உயர்நீதி மன்றம் வழங்கியிருக்கின்றது. அதை எதிர்த்து நாம் தற்போது உச்சநீதிமன்றத்திலே அப்பீல் செய்திருக்கிறோம் என்பதையும் நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருந்தாலும் கூட இந்தத் திட்டத்தை நாம் நிறுத்திவிடக்கூடாது என்ற உணர்வோடு தொடர்ந்து அதிலே தனியான அக்கறை செலுத்தி 1894-ஆம் ஆண்டு மைய அரசின் சட்டத்தின்கீழ் தற்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகத் துரிதமாக இன்றைக்கு நிலங்களைக் கையகப்படுத்துகின்ற பணிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1982–83-ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே ஒதுக்கப் பட்டிருக்கக்கூடிய மொத்த ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே 125 இலட்சம் ரூபாயையும் நாம் செலவிடுவோம் என்ற நம்பிக்கையினைப் பெற்றிருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டுவசதி பற்றிய விவாதத்திலே கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களும் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக் களில் அரசு கவனம் செலுத்தும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு ஏற்கெனவே கேள்வி நேரத்திலே நான் பதிலளிக்கின்றபோதுகூட இந்தப் பிரச்சினை பற்றி இந்த அவையிலே எழுந்தபோது அந்தத் திட்டத்தின்படி இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தை அரசு கைவிடவில்லை என்பதையும் தற்போது இருக்கக்கூடிய விலையேற்றத்தின் காரணமாக அந்தத் திட்டத்தை எந்த வகையிலே செயல்படுத்தலாம் என்பது குறித்து ....(குறுக்கீடு).... இலவச வீடுகளைத் தொடர்ந்து கட்டிக் கொடுப்பது பற்றி தற்போது ஏறி இருக்கக்கூடிய விலை யேற்றத்தின் காரணமாக அந்த திட்டத்தை எந்த வகையிலே தொடர்ந்து செயல்படுத்துவது என்பது பற்றி அரசின் பரிசீலனை யில் உள்ளது என்பதை மீண்டும் நான் மாண்புமிகு உறுப்பி னர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இருந்தாலும் இதுவரையில் நாம் ஏற்றிருக்கக்கூடிய மற்றொரு திட்டமான ரூரல் ஹவுஸிங் ஸ்கீமின் மூலமாக அதிகமாக ஆதி திராவிட. மக்கள் பெறக்கூடிய வாய்ப்புக்களை அவர்கள் தொடர்ந்து பெறவேண்டும் என்ற உணர்வோடு இந்த அரசைப் பொறுத்தவரையிலே அந்தத் திட்டத்திற்கு முழுமையான அளவுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே ஒவ்வொரு ஆண்டும் 40 ஆயிரம் வீடுகள் வீதம் ஏற்படுத்திக்கொண்டு 2 இலட்சம் வீடுகளை 5 ஆண்டுக் காலத்திற்குள் கட்டுவதற்கான ஆணைகளை இந்த அரசு பிறப்பிக்க இருக்கின்றது என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

விவாதத்திலே கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களும் இந்த மக்களுடைய பொருளாதாரத் தன்மையினை நாம் உயர்த்த வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியுமென்று நான் கருதுகிறேன், தமிழக அரசைப் பொறுத்தவரையில் மைய அரசின் ஆலோசனையின் பேரில் சிறப்பு கூட்டமைப்புத் திட்டத்தினை நாம் தற்போது தமிழகத்திலே மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோம். மைய அரசு தந்திருக்கக் கூடிய ஆலோசனையினை ஏற்று எந்த எந்த வழிகளிலே அவைகளைத் தொடர்ந்து செயல் படுத்த முடியுமோ அந்தந்த வழிகளிலே அவற்றை நாம் நிறை



தமிழகத்தைப் பொறுத்தவரை 18 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாகத் தகவல் இருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் சிறப்பு கூட்டமைப்பு திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ 9 இலட்சம் ஆதிதிராவிடக் குடும்பங்களை வறுமைக் கோட்டினைக் கடக்கச் செய்யவேண்டு மென்ற அந்த உணர்வோடு இந்த அரசு அந்த முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1980–81-ம் ஆண்டைப் பொறுத்தவரையில் பொதுத் துறையின் மூலமாக இந்த "ஸ்பெஷல் காம்பொனன்ட் ப்ளான்" செலவு, மொத்தத் தொகை ரூ. 83.04 கோடியாகும்; 1981-82-லே செலவிடப்பட்ட தொகை ரூ. 114.04 கோடி என்பதையும் இங்கே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மக்களுடைய பொருளாதாரத் தன்மையினை உயர்த்த வேண்டுமென்று என்னிடத்திலே ஏற்கனவே ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாகப் பல்வேறு இடங்களுக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். பல்வேறு திட்டங்களை நாம் நிறை வேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் நன்கு அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்களில் பலரும் பேசுகின்றபோதுகூட குறிப்பிட்டு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

சிறு தொழில்களுக்கு வட்டி இல்லாத கடனையும், இலவசத் தொழில் கருவிகளையும் வழங்குகிறோம். உழவுக்கு மாடுகள் வழங்குகிறோம். பாசனக் கிணறுகளுக்கு மானியம் வழங்கு வதையும், தனியாருக்கு கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு வகையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலமாக ஏற்கனவே நாம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம்.

இருந்தாலும் பொருளாதார உணர்வோடு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகத் தமிழ கத்தைப் பொறுத்த வரையில் நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தினைக் கொண்டு வந்து சமுதாயத்தினுடைய நலிந்த பிரிவினரான இந்த மக்களுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்ற வேண்டுமென்ற உணர்வோடு செயல்படுகிறோம் என்பதையும் மைய அரசு இதற்கும் உதவி செய்கிறது என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மக்கள் தொழில் செய்வதற்கு "மார்ஜின் மணி" குறியீட்டுக் கடன் வழங்கக் கூடிய அந்தத் திட்டம் இன்றைக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது என்பதையும் அதைப் பொறுத்த வரையில் மைய அரசின் பங்கு 49%, மாநில அரசி னுடைய பங்கு 51% ஆக மொத்தமாக 1980-81–ம் ஆண்டுக்கு மைய அரசின் பங்காக ரூ. 98 இலட்சமும், மாநில அரசின் பங்காக ரூ. 102 இலட்சமும் பங்குத் தொகையாக அளிக்கப் பட்டது.

[திரு. எம். விஜயசாரதி] [1982 மார்ச் 17

1981-82-ம ஆண்டுக்கு மொத்தமாக மாநிலமும், மைய அரசும் சேர்ந்து 1 கோடியினை அதற்கு வழங்கியிருக்கிறது. ஆக இரண்டு ஆண்டுகளில் 300 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையாக இதற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூ. 300 இலட்சத்திலே ரூ. 257.90 இலட்சம் ''மார்ஜின் மணி''யாக, குறியீட்டுக் கடனாக இந்த ஆதிதிராவிடர் நலத்துறை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும், 53 பல்வேறு வகையான பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு வகையான தொழில்களிலே இவைகள் முதலீடு செய்யப்பட்டு, 50,240 பேர்கள் இதன் மூலமாகப் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற கருத்தினையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மொத்தமாகக் கடன் தொகைகள் வழங்கியதன் மூலமாக வங்கிகள் மூலமாகக் கடன் உதவியினை ஏறத்தாழ 10 கோடி ரூபாயினை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகக் கடனாக ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்காக அளிக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கினையும் நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[இரவு 7-30]

சிறப்பு கூட்டமைப்புத் திட்டத்தைத் செயல்படுத்துவதன் மூலம் கண்காணிக்கின்ற மைய அரசானது அதனைச் செயல்படுத்துகிற விதத்தில் பாராட்டுகிற வகையில், ஊக்கம் அளிக்கிறவகையில் உள்ளது என்பதோடு மாநில அரசுக்கு சிறப்பு நிதி உதவியாக அளித்து வருகிறது என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். 1980-81-ம் ஆண்டைப் பொறுத்தவரையில் ரூ. 9.56 கோடி சிறப்பு மைய நிதி உதவியாக மாநில அரசுக்கு வழங்கப்பட்டது என்றும் அந்தத் தொகை முழுமையாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொண்டுவந்து அதன் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு பல்வேறு வகையான தொழில்களையும் பல்வேறு வகையில் வருமானத்தை ஈட்டிக்கொள்கிற வழிவகையையும் அரசு செய்து தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1981-82-ம் ஆண்டைப் பொறுத்தவரையில் பத்து கோடி ரூபாய் மைய அரசு அளித்திருக்கிறது. அதில் ரூ. 8.18 கோடி இதுவரை கிடைத்திருக்கிறது என்பதை எடுத்து வைக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். பொருளாதாரத் தன்மையை உயர்த்தவேண்டும் என்ற உணர்வோடு அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுகிறபோது இங்கே நான் ஒரு கருத்தை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நான் கூட்டியிருந்த அந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய குழுக் கூட்டத்தில் கூட கலந்து கொண்ட பல்வேறு உறுப்பினர்கள் எத்தனை நாட்களுக்கு இந்தத் துறை மூலமாக கொடுத்த கடன்களையே அந்த மக்களுக்கு திரும்பத் திரும்ப கொடுத்து நாம் செலவிட இருக்கிறோம் என்றும் நிரந்தரமாக அந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தருகிற வகையில் புரட்சிகரமான வகையில் திட்டங்கள் தீட்டவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்



1982 மார்ச் 17] [திரு. எம். விஜயசாரதி]

சொன்னதன் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களோடு பேசியபிறகு தமிழகத்தைப் பொறுத்தவரையில் மைய அரசின் சிறப்பு நிதி உதவியாக கிடைக்கக்கூடிய அத்தகைய திட்ட அளவில் கிடைக்கக்கூடிய தொகையைப் பயன்படுத்தி இந்த அரசு புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அவை எல்லாவற்றையும் எடுத்து வைக்கமுடியாத நிலை இருப்பதால் முக்கியமாக அந்த மக்களுக்கு எந்தெந்த தொழில்களை நாம் ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதுபற்றிய ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு மாவட்டங்களில் அந்தந்த மாவட்டங்களில் கிடைக்கக்கூடிய கச்சாப்பொருள்களைக் கொண்டு அந்தந்த மாவட்டத்திலே சிறு தொழில்களை ஏற்படுத்தி அந்தத் தொழிற்சாலைகள் மூலமாக அதிலே ஆதி திராவிட மக்கள் நிரந்தர மாத வருமானம் பெறுகிறவண்ணம் தொழில் துறையில் அவர்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்கிற கொள்கையை இந்த அரசு ஏற்றிருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அந்த நிதி உதவியோடு இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் ஐந்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ. 7.45 இலட்சம் செலவில் கால்நடை மருத்துவமனைகளை நம் தமிழகத்தில் ஐந்து இடங்களைத் தேர்வு செய்து அமைத்து இருக்கிறோம் என்பதை முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அவ்வாறு அமையக்கூடிய கால்நடை மருந்தகங்கள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அல்லது ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மிக அருகாமையில் இருக்க வேண்டும் என்ற வகையில் அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு அந்த இடங்களைத்தேர்வு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அதுமட்டுமின்றி, ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு பூச்சி மருந்துகளையும் விதைகளையும் வழங்குவதற்கு ரூ. 14.95 இலட்சம் செலவில் முழுச் செலவுகளையும் அவர்களுக்கு அந்தத் தொகை அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மாவட்டங்களில் இருக்கக்கூடிய மாவட்டத்தொழில் கழகங்கள் மூலமாகத் தொழில் செய்ய விரும்புகிற ஆதிதிராவிட மக்களுக்கு அவர்கள் மனு செய்வதன் வாயிலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு இலட்சம் வீதம் ஏறத்தாழ 14 மாவட்டங்களுக்கு 14 இலட்சம் ஒதுக்கீடு செய்து தொழில் செய்ய விரும்புகிற ஆதி திராவிட மக்களுக்கு அந்த மாவட்டக் கழகங்கள் மூலமாக என்னென்ன தொழில்களை அவர்கள் செய்கிற சூழ்நிலை இருக்கிறதோ அதை அவர்களுக்குத் தெரியப்படுத்தி அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி அவர்கள் சொல்கிற கருத்துக்களையும் ஏற்று அவர்கள் சுயமாகப் பொருள் ஈட்டுவதற்கான வாய்ப்புகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 4 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய நூற்பாலையை ஏற்படுத்த இருக்கிறோம் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதற்கு ஆகக்கூடிய மொத்த செலவு ரூ. 4 கோடி. அதில் ரூ. 2 கோடியை அந்த ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக மானியமாக அளித்து, இதிலே ஏறத்தாழ இந்த ஆண்டிலே இதை நாம் ஏற்படுத்துவதன் வாயிலாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு ஏறத்தாழ 400 பேர்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பு தருகின்ற புரட்சி கரமான திட்டத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில் அறந்தாங்கியிலும், மதுரையைப் பொறுத்தவரையில தேனியிலும், தர்மபுரி ஆகிய இடங்களிலே கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தி, ஒவ்வொன்றுக்கும் ரூ. 33.75 இலட்சம் செலவில் நாம் கொடுத்து, அதிலே, ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையிலும் 225 பேர்கள் முழுமையாக ஆதி திராவிட மக்களாக வேலைக்கு அமர்த்துகின்ற வகையிலே இந்த 3 மாவட்டங்களிலும் செய்ய தற்போது நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது என்பதையும் நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6,700 ஹெக்டேர் நிலங்களில், ரூ. 10 கோடி செலவில் தொளை கிணறுகள், ஆழ் கிணறுகள், திறந்த கிணறுகள் போடுவதற்காகத் திட்டமிடப் பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு திட்டங்களின் வாயிலாக, ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தரப் படுகின்றது என்பதையும், அவ்வாறு வழங்கப்படுகின்ற நிலங் களானது பெரும்பாலும் தரிசு நிலங்களாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்கு நான் பணிவோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்கள் பெரும்பாலோர் விவசாயக் கூலிகளாக இருந்து வருகிறார்கள் என்பதையும், அவர்கள் அன்றாட செலவுக்குக்கூட பணமில்லை என்கிற சூழ்நிலையிலே அவர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்ட அரசு நிலங்களை சீர்செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதை உணர்ந்து, இந்த அரசினைப் பொறுத்தவரையில் அதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதையும், முதற்கட்டமாக செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்ட பட்டா நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்தித் தருவதென்றும், இன்றைக்கு டியூப் வெல் கார்ப்பரேஷன் மூலம் ஏறத்தாழ 1982-83 ஆம் ஆண்டு காலத்திலே, இந்த 5 மாவட்டங்களுக்கும் 2,000 தொளை கிணறுகள் 3 இலட்சம் ரூபாய் செலவிலே ஏற்படுத்துவதன் மூலம், 10,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடைகின்ற வாய்ப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருப்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



இன்றைக்கு காலையிலேகூட, இங்கே கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்றபோது, பல்வேறு உறுப்பினர்கள் தமிழகத்திலே இருக்கக்கூடிய அருந்ததி மக்களுடைய நிலைமையைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் மொக்கையன் அவர்கள், தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த மக்கள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, ஏற்கனவே நான் கூட்டியிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலேகூட, பல்வேறு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அதே கருத்துக்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டுமென்ற வகையிலே, நகரப் பகுதிகளிலே உள்ள காலணி தைக்கின்ற அருந்ததி மக்களுக்கு இலவசமாக பங்குகள், (BUNKS) தோல் தைக்கும் தையல் எந்திரம், இதர கருவிகளை அளிக்க இருக் கிறோம் என்பதையும், இதற்காக 35 இலட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும், தமிழகம் முழுவதும் இதனால் 500 பேர்கள் பயனடைவார்கள் என்பதையும் நான் இங்கே சொல் வதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்னொரு திட்டத்தையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். இந்தத் திட்டத்தை நாம் செயல் படுத்துவதன் மூலம், ஒவ்வொரு மாவட்டத்திலும் மிகவும் பின் தங்கிய பகுதிகளில், நடப்பு ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் வருகின்ற ஊராட்சி ஒன்றியத்தைத் தேர்ந்தெடுத்து, அதிலே ஒரு பகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஆயிரம் குடும்பத்தைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொடுக்க இருக்கிறோம். அவர்களை ஒரே ஆண்டில் வறுமைக் கோட்டினைக் கடக்கச் செய் கின்ற பிரத்தியேகத் திட்டம் தற்போது அரசினுடைய பரி சீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்து அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதன் மூலமாக 1,000 குடும்பங்கள் வீதம் சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் பயன் அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இரவு 7.40)

தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளையும் நாம் தீர்த்து வைக்கமுடியும் என்ற உணர்வோடு இந்த அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆண்டு முடிவிலே பார்க்கிறபோது இந்தக் குறிப்பிட்ட பகுதியானது முழுமையடைந்த பகுதியாக இருக்கும் என்பதிலே சந்தேகம் யாருக்கும் தேவையில்லை என்பதையும் நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அச்சுத் துறையைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுடைய நலனை உத்தேசித்து உற்பத்தித் திறனை மனதிலே கொண்டு அரசு அச்சகங்களுக்கு நவீன இயந்திரங்களை வாங்க வேண்டுமென்ற உணர்வோடு சுமார் 39 லட்சம் மதிப்புள்ள 26 நவீன அச்சு மற்றும் கட்டுமான இயந்திரங்கள் வாங்குவது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1981—82 ஆம் ஆண்டிலே ரூ. 49,67,455 மதிப்புக்கு 36 இயந்திரங்கள் வாங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது, 1980-81 ஆம் ஆண்டில் அரசு ஆணை பிறப்பித்து கையால் பேப்பர் தரும் அச்சு இயந்திரங்கள், ஒரு பிளேட்டனும் பெறப்பட்டு உள்ளன என்பதையும் அவற்றிற்கு 3,09,100 ரூபாய் மதிப்பு என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு அச்சகத்தை விரிவாக்கும் திட்டத்தின்கீழ் சுமார் 79 லட்சம் செலவில் மதுரை மாநகரில் உள்ள வட்டார அச்சகத்தில் காப்பு அச்சகம் ஒன்று வங்கும் திட்டமும் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதையும் அதன் மூலமாக ரூபாய் 20 முதல் 40 வரையில் மாதம் ஒன்றுக்கு சிறப்பு ஊதியம் அவர்களின் விகிதாச்சாரப்படி கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சூளைப் பகுதியிலே தற்போது இயங்கி வருகின்ற அரசு அச்சகம் அந்த இடத்திலே இப்போது இயங்குவதற்கான வசதிகள் இல்லாத காரணத்தினால் வேறு இடத்திற்கு அதை மாற்றி அங்கே முழுமையான ஒரு அச்சகத்தை ஏற்படுத்துவதற்கு சுமார் 260 லட்சம் திட்டம் அரசின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மைய அச்சகத்தைப் பொறுத்தவரையில் சென்ற 1981-82 இல் சில முக்கிய பணிகளை அந்த அச்சகமானது மேற்கொண்டிருக்கிறது என்பதையும் திருப்பத்தூர் இடைக்கால தேர்தல் வாக்கு சீட்டுகளையும், சட்டமன்றப் பேரவை மேலவை உறுப்பினர்களுடைய விவாதங்களையும் பஞ்சாயத்துத் தேர்தல் குறிப்புகள், புத்தகங்கள், படிவங்கள் போன்றவையும் மக்கள் தொகை குடும்ப அட்டைகளையும் கோயம்புத்தூரில் உணவுப் பங்கீட்டு அட்டைகளையும் அந்த அச்சகம் தயாரித்து இருக்கிறது. இதைத்தவிர 25 லட்சம் குடும்ப அட்டைகளை அச்சடிக்கும் பணியை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



எழுதுபொருள் கிடங்கில் பணி புரியும் 248 தொழிலாளர்கள் தற்போது பெயர் அழைத்து வருகைப் பதிவேட்டில் குறிக்கும் முறை இருந்து வருகிறது. அந்த முறையை மாற்றி அரசு அச்சகத்தில் உள்ளதுபோல அடையாள முறையிலே வருகையைப் பதிவு செய்யும் திட்டமும் அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. அரசு ஆணையின்படி இந்த துறையினைச் சேர்ந்த பணியிலே இருக்கும்போது இறந்து போன தொழிலாளர்களின் நிரந்தரவான குடும்பங்களை பேணுகிற பொறுப்பு அந்த குடும்பத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய படிப்பு, திறமைக்கேற்ப நிரந்தர அடிப்படையிலே வேலைகள் தாமதமின்றி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. நடப்பாண்டை பொறுத்தவரையில் இதற்கு முன்பு எப்போதும் இல்லாத வகையிலே புரட்சித்தலைவர் அவர்களுடைய அரசு சுமார் 50-க்கும் மேற்பட்ட இறந்த தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அச்சகத் துறையிலே வேலை வழங்கி அவர்களின் குடும்பங்களின் துயர் துடைக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களைப் பொறுத்தவரையில் 164 பேர்கள் எழுது பொருள் அச்சகத்துறையிலே தற்போது பணி புரிகிறார்கள். சென்ற ஆண்டைப் பொறுத்தவரையில் இத்துறை சிறந்த வேலை வாய்ப்பு நிறுவனம் என்கிற வகையிலே குடியரசுத் தலைவர் அவர்களின் விருதினை பெற்றது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அரசு அச்சகத் தொழிலாளர்களுக்கு பன், தேநீர் முதலியவற்றிற்கு பதிலாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஏறத்தாழ ரூ. 7.50 அலவன்சாக வழங்கப்படுகிறது. தற்கால நிலையை உத்தேசித்தும், விலைவாசி உயர்வை கருதியும் ரூபாய் 7.50—லேயிருந்து 10 ரூபாயாக இந்த அரசு உயர்த்தி இருக்கிறது என்பதை தெரிவிக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1.6 லட்சம் ரூபாய் கூடுதலாக செலவாகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

அரசு அச்சகத்திலே ஈய நச்சு பிரிவுகளான லைனோ. மோனோ, மற்றும் அச்சு வார்ப்பு பிரிவுகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஈய நச்சு படியான பாலும், வைட்டமின் மாத்திரைகளும் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் தற்போது பாலுக்கு பதிலாக 40 காசு ஈய நச்சுப்படியாக அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்த 40 காசை இந்த அரசானது 60 காசாக உயர்த்தி இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேரும் இந்த விவாதங்களிலே பங்கு கொண்டு பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களின் உணர்வுகளின் அடிப்படையிலே இந்த அரசும் அவற்றை பூரணமாக உணர்ந்திருக்கிறது. இவற்றை என்னுடைய பேச்சிலே குறிப்பிடப்

பட்டிருக்கிற கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கூர்ந்து கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவற்றில் பலவும் நான் ஏற்கனவே கூட்டியிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலே எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசை பொறுத்தவரையில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் கட்சி பாகுபாடின்றி எந்த கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சமுதாய மக்களுடைய மேம்பாட்டிற்காக அவர்கள் எடுத்து தெரிவித்திருக்கக் கூடிய கருத்துகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு ஆவண செய்வதில் தயக்கம் காட்டவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 7·50)

மாநில அளவிலான குழுவை அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஏற்கனவே பழங்குடி மக்களின் நலனுக்காக இருக்கக்கூடிய ஆலோசனை குழுவை தொடர்ந்து மூன்று, நான்கு கூட்டங்களை கூட்டியிருக்கிறோம். ஆதி திராவிடர்கள் ஆலோசனை குழு அமைப்பதற்கு இந்த அரசிற்கு தயக்கமில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு. கோப்பு அனுப்பப்பட்ட போது அதிலே குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் கல்வித் தகுதியையும், வயது போன்றவற்றையும் தான் அறிந்து கொள்ள விரும்புவதாக தெரிவித்ததன் காரணமாக தற்போது அந்த கோப்பானது அனைத்து தகவல்களையும் சேகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. விரைவிலே அதற்கான நடவடிக்கையை எடுத்து நிச்சயமாக இந்த அரசு அந்த குழுவை ஏற்படுத்தும், கூட்டத்தை விரைவிலே கூட்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே கூட்டியிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்தக் கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ராசு அவர்கள் அந்த கூட்டத்திலே கலந்து கொள்ளாததன் காரணமாக இந்த கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

இந்த விவாதங்களிலே கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்கள் மட்டுமின்றி வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களும் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்களை நிச்சயமாக அரசு கவனத்திலே கொண்டு செயலாற்றும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். விவாதத்திலே பங்கு கொண்டு கட்சி பாகுபாடின்றி நீங்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்களைச் சமுதாய மக்களின் நலனுக்காக என்கின்ற வகையில் அரசு ஏற்றுக் கொண்டு அவற்றைக் கவனத்திலே கொண்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை முழுமையாக எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு அதற்கான உறுதியினை நான் அளித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்ததற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றவர்கள் தயவுசெய்து அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அவையினரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே, ஆலோசனைக் குழுவைப் பொறுத்தவரையில், உறுப்பினருடைய கல்வித் தகுதி, வயது போன்றவற்றைக் கேட்பதால் தேக்கமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இங்கே, who is who புத்தகம் வழங்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாகவே தெரிந்து கொள்ளலாம் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, மேல்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டதற்குப் பிறகு, பி.யூ.சி. டிகிரி கோர்சஸுக்கு முன்னால் வருகிற முதல் ஆண்டு கிடையாது. பி.யூ.சி. படிக்கிற மாணவர்கள் கிடையாது. அவர்கள் பூராவும் மேல்நிலைப் பள்ளியில் பயில்கிறார்கள். பி.யூ.சி. படிக்கும் நேரத்திலே மாணவர்களுக்கு மத்திய சர்க்கார் உதவியோடு ரூ. 800, ரூ. 900, ரெசிடன்ஷியல் ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டது. இப்பொழுது அந்தக் கல்வி கிடையாது. மேல்நிலைப் பள்ளிக்கு வரவேண்டும். இங்கே, மேல்நிலைப் பள்ளியில் பயில்பவர்களுக்கு விடுதி வசதி கிடையாது. ஆனால், விடுதி வசதியும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பது ஒரு நியதி. பள்ளியிலே இருக்கக் கூடிய விடுதிகளைப் பொறுத்தவரையில், 50, 60 சீட்கள்தான் இருக்கும். ஆனால், இங்கே பேசப்படுகிற நேரத்திலே 10 சதவீதம் அதிகரிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் அது அமுலாக்கப்படவில்லை. பி.யூ சியிலே படித்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் விடுதியில் தங்கி படித்து வந்தார்கள். ஸ்காலர்ஷிப்பும் மத்திய சர்க்காரிடத்திலிருந்து வாங்கி வந்தார்கள். இப்பொழுது, அப்படிப்பட்ட வசதியில்லாத ஒரு சூழ்நிலையில், இந்த அவல நிலையைப் போக்க இந்த மாநில சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலோசனைக் குழுக் கூட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் இல்லை என்பதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களாக அல்லாதவர்களும் மற்றவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள் என்றும் அவர்களுடைய வயது, கல்வித் தகுதி, அரசியல் தொடர்பு போன்ற பல்வேறு வகையான குறிப்புரைகளை அறிந்து கொள்வதற்காக அந்தந்த மாவட்டங்களுக்கு அவை தகவல் சேகரிக்க அனுப்பப்பட்டன என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலே பயிலக்கூடிய மாணவர்களுடைய நலனைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசு நிச்சயமாக அதில் ஆவண செய்யும் என்பதை மட்டும் நான் இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன்.

எடுத்துக்கொள்வதற்கு உத்தரவு வழங்கினோம் என்று சொன்னார்கள். தமிழகத்திலே எந்த விடுதியிலும் 10 சதவீத உயர்வு கொடுக்கப்படவில்லை. தமிழக முதல்வரிடமும் சொன்னேன், அமைச்சரிடமும் சொன்னேன், ஆயிரம் மாணவர்களுக்காவது குறைந்தபட்சம் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அது நடைபெறவில்லை. அதைவிட குலுக்குச் சீட்டு முறையில் குலுக்கிப் போடப்பட்டு, நிறைய மார்க் வாங்கிய நீண்ட தூரத்திலிருந்து வந்த மாணவனுக்கு இடம் கிடைக்கவில்லை, குறைந்த மார்க் வாங்கிய அருகில் உள்ள மாணவனுக்கு இடம் கிடைத்திருக்கிறது. ஆகவே தான் கல்வியின் தரம் பாதிக்கப்பட்டது என்பது ஒன்று.

இரண்டாவது, புத்தகங்கள் 30—6—1982-க்குள் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், இன்று நடப்பது, இன்று மார்ச் மாதம் 17 ஆம் தேதி. தமிழகத்திலே 6 ஜில்லாக்களில் புத்தகம் கொடுக்கப்படவில்லை யென்று சொன்னேன், அமைச்சர் அவர்களுக்குக் குறிப்பிட்டுச் சொன்னேன். அவர்களிடம் சொன்ன பிறகுதான் சென்ற மாதம் 15 ஆம் தேதி கொடுக்கப்பட்டது. ஆகவே, உங்களுடைய உத்தரவைக் கல்வித் துறையில் உள்ள டி.இ.ஓ., சி.இ.ஓக்கள் நிறைவேற்றவில்லையா? அல்லது மாவட்டத்திலே இருக்கிற ஆதி திராவிடர் நல அதிகாரி செய்யவில்லையா என்பது விளக்கத்திலே கொடுக்கப்படவில்லை. பிறகு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேச வேண்டாம். சந்தேகம்தான் கேட்கலாம். சந்தேகம் கேட்க வேண்டுமென்றால் கேட்கலாம். டிபேட் முடிந்து விட்டது. இரண்டாவது டிபேட்டுக்கு நாம் போக வேண்டாம்.

**திரு. எல். இளையபெருமாள்:** இது கேள்விதான். இரண்டு கோடி ரூபாயிலே இருப்பதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். சமுதாயம் வாழ்வதற்குத் தேவையான இந்தக் கல்வியிலே கேட்காமல் விட்டுவிட்டால் சரியாக இருக்காது; அமைச்சர் சொன்னதால் நான் கேள்வி கேட்கிறேன். தாங்கள் வருத்தப்படுவதாக இருந்தாலும் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கிறேன்; இல்லாவிட்டால் நிறுத்தி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.** இன்றைக்கு எல்லோருக்குமே விவாதத்தில் அதிக நேரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மற்ற மானியங்களுக்கு இது முன்மாதிரியாக இருக்காது. இன்றைக்கு மட்டும் இந்தச் சலுகை.

**திரு. எல். இளையபெருமாள்:** மத்திய அரசு கொடுக்கப்பட்ட பணம் பற்றித் தவறான கருத்தில் சொல்லப்பட்டதாக அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் சொன்னார்கள். இப்பொழுதும் சொல்கிறேன். பத்தாண்டுகளுக்கு முன்பு மாநில உதவித் தொகையைவிட மத்திய உதவித் தொகை அதிகமாக இருந்தது உண்மைதான். ஆனால் அப்பொழுது ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் படித்த மாணவர்கள் குறைவு



அப்பொழுது கொடுத்த பணம் அதிகம். ஆனால் இன்று கல்லூரிகளில் வரும் மாணவர்களின் பல தொல்லைகளுக்கும் சமுதாயச் சண்டைகளுக்கும், ஹுமிலேஷன் வருவதற்கும் காரணம், மாநில அரசு கொடுக்கும் உதவி, இந்தச் சமுதாயத்தைப் போன்று மற்றப் பின் தங்கிய சமூக மக்களுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகையைப் பொறுத்தவரையில் இன்று இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் அதிகமான காரணத்தால் மத்தியில் கொடுக்கப்படும் பணம் பிரிக்கப்படும்பொழுது 800, 900, 1000 என்றுகூட கிடைக்கவில்லை. ஆகவே, அன்றைக் கிருந்த நிலைமைகளை நீங்கள் வைத்துக்கொண்டால் ஒருவருக்கு 200, 300, 400 தான் கொடுக்க வேண்டிய அவல நிலையை இருப்பதால் வருங்காலத்தில் அந்தச் சமுதாயத்தினர் கல்வியின் சிறந்து நடப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை. அதை முதலமைச்சரவர்களும் ஏற்றுக் கொண்டார்கள்; நியாயம் என்று சொன்னார்கள். 1967-க்கு முன்பு இப்படிப்பட்ட அவல நிலை வந்தபொழுது அந்த அதிக பணம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 1967-க்குப் பிறகு கொடுக்கப்படவில்லை என்பதற்கு என்ன சொல்கிறார்கள்?

பிறகு வீட்டு மனை விஷயத்தைப் பொறுத்தவரையில் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கருத்துக் களுக்கு மதிப்புக் கொடுத்து, அவற்றைக் கேட்க வேண்டுமென் பதற்காக நேரம் கொடுக்கப்பட்டது. ஆனால் இது இரண்டாவது டிபெட் மாதிரி ஆகிவிடக் கூடாது. இந்த முன்மாதிரி வேண்டாம்.

**திரு. எல். இளையபெருமாள் :** வீட்டுமனையைப் பற்றிச் சொன்னார்கள். நான் அதற்காக நன்றி சொல்லக் கடமைப் பட்டேன். ஆனால் இப்பொழுது சுமார் 500 ஆண்கள்-பிள்ளைகள். பெண்கள் சேத்துப்பட்டில் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டதற்குக் காரணம், முதலமைச்சரைப் பார்த்தார்கள்; தொழிலாளர் நல அமைச்சரைப் பார்த்தார்கள்; அரிசன நலத் துறை அமைச்சரைப் பார்த்தார்கள்; வீட்டு வசதி வாரியத் தலைவரைப் பார்த்தார்கள். ரெவின்யூ அமைச்சர் இரண்டாயிரம் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்றுவரையில் அது கொடுக்கப்படவில்லை. 500 ஆண்களும் பெண்களும் சிறையில் இருக்கிறார்கள். நீங்கள் செய்கின்ற நன்மையான காரியங்களை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி செய்யாது திரித்துக் கூறுகின்ற நிலைமையில் சொல்வது சரியல்ல. இப்பொழுது பணம் பாழாக்கப்பட்டது என்று சொன்னால் அந்த அமைச்சரும் இல்லை; இன்றைக்கிருக்கின்ற செயலாளருக்கும் அதுபற்றித் தெரியாது; சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் ....

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர்கள் முதலிலேயே பேசினார்களா இல்லையா? இப்பொழுதுதான் பேசுகிறாரா அல்லது முதலிலேயே பேசினாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சில நேரங்களில் தீர்ப்புகள் வெளியான பிறகு புது பாயிண்ட்ஸ் கிடைக்கும்.

திரு. எல். இளையபெருமாள்: நான் முன்பு சொன்ன பாயிண்டுகளுக்கே பதில் இல்லை.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக நாங்கள் அவற்றைப் பரிசீலனை செய்து எந்த உணர்வோடு மாண்புமிகு உறுப்பினரவர்கள் வெளியிட்டிருக்கிறார்களோ அதே உணர்வோடு அவற்றைப் பரிசீலனை செய்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இரவு 8.00)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி ரொம்ப சுருக்கமானதுதான். இந்த பாலிசி நோட்டில் 31-1-1982 வரையில் 69,109 வீடுகள் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டிருக்கின்றன என்று போடப்பட்டிருக்கின்றது. எனக்குத் தெரிந்த வரையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சுமார் 40 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதாகத் தகவல். நான் கேட்கவிரும்புகிறேன். அந்த 69,109 வீடுகளும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி ஏற்பட்ட பிறகு கட்டப்பட்ட வீடுகளா? அல்லது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கட்டப்பட்ட 40 ஆயிரம் வீடுகள்போக 29,109 வீடுகள்தான் உங்கள் ஆட்சியில் கட்டப்பட்டதா என்பதும், அப்படிக் கட்டப்பட்டு இருப்பது உண்மையா என்பது என்னுடைய முதல் கேள்வி.

இரண்டாவதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) My question is so simple. தலைமையிலே உள்ள பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் குழு எத்தனை முறை கூட்டப்பட்டது, என்பதைச் சம்பந்தப்பட்ட சக உறுப்பினர் கேட்கிறார்.



கேட்பதும் தொடர்ந்து விளக்கங்களை அனுமதிப்பதுதான் மரபு. எல்லோரும் கேள்வியைக் கேட்கலாம் என்று சொன்னால் இது கேள்வி நேரமாக ஆகுமே தவிர, விவாத நேரமாக ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு நடைபெற்ற ஆதிதிராவிடர் நலம் மானியம் என்பதாலே சற்று ரிலாக்ஸ் பண்ணி டிஸ்கிரிஷன் கொடுத்திருக்கிறேன். இதுவே முன்மாதிரியாகி விடக்கூடாது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே பின்னர் எப்படிச் சந்தேகம் கேட்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசியவர்கள்தான் சந்தேகம் கேட்க முடியும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, விவாதத்திலே கலந்து கொண்டவர்கள்தான் கேள்வி கேட்க முடியுமா— இது முற்றிலும் ** ** ஆக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு ரகுமான்கான் அவர்கள் சொன்ன வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன். அமைச்சர் பதில் சொன்னால் கேட்டுக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக்குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ள வீடு ளாவது ரூரல் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக கட்டப்பட்டுள்ள வீடுகள். தாட்கோ மூலம் இலவசமாக கட்டப்பட்ட வீடுகள் அல்ல.

பழங்குடியினர் குழுவின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அத்தகைய குழு இருப்பது எனக்குத் தெரியாது.

மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் இருந்து இப்போது கேள்விகளைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அது ஏற்கனவே வைக்கப்பட்டது. அதைப் படித்துவிட்டு வந்து அவர்கள் பேசுகிறபோது கொண்டு வரவேண்டும். அமைச்சர் பேசியதிலே கருத்து வேறுபாடோ அல்லது கேட்கவேண்டும் என்று இருந்தால் கேட்கலாம். கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்து இப்போது கேட்பது சரியாக இருக்காது. பேசுவதற்காகத்தான் அது வைக்கப்பட்டிருக்கின்றதே-தவிர, அதைப் பேசிவிட்டுதான் உறுப்பினர்கள் முன்பே பேசியிருக்கவேண்டும்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களின் முன்னேற்றத்தைக் கருதி முகவை மாவட்டத்திலே 4 கோடி ரூபாயிலே நூற்பாலை ஆரம்பிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அறந்தாங்கி, தேனி போன்ற பகுதிகளில் நூற்பாலை ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. முகவை மாவட்டத்தில் எந்த இடத்தில் இது ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனியாக கேள்வி போடுங்கள்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலே நான் பேசும்போது இந்த ஆதிதிராவிட மக்களுக்கு அடிப்படையான ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்று சொன்னால் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எடுக்கக் கூடிய நிலங்களை ஏழைகளுக்கு அரிசனங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்றும், குறிப்பாக கோவில் நிலங்களை அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்படுமா என்று ஒரு அடிப்படையான கேள்வியை எழுப்பியிருந்தேன். அமைச்சர் பதிலில் அது குறித்து ஒன்றும் காணோம். அடுத்தபடியாக இந்த ஆலோசனைக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கமாட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால்......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் எழுப்பிய பிரச்சனை வருவாய் துறை மானியத்திலே வருகிறது. அந்த நிலச் சீர்திருத்தச்சட்டம் அது வருவாய்த் துறை மானியம் வருகிறபோது அவர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆலோசனைக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் இருக்கிறார்கள். ஆகவே கல்வித் தகுதி போன்றவைகளை who is who இதில் மட்டும் பார்த்துக்கொள்ள முடியாது, கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, அமைச்சர்கள் பேசுகிற போதும் இடைமறித்து பாய்ண்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்கிறார்கள். முடித்த பிறகும் பாய்ண்ட் ஆப் கிளாரிபிகேஷ்ன் கேட்கிறார்கள். 1968-ஆம் ஆண்டு முதல் 1975 வரையில் தொடர்ந்து பேரவைத் தலைவருடைய தீர்ப்பு இருக்கிறது. அமைச்சர் அனுமதித்தாலும், இடைமறித்து கிளாரிபிகேஷன் கேட்கக் கூடாது. அமைச்சர் பேசி முடித்து உட்கார்ந்த பிறகுதான் கிளாரிபிகேஷன் கேட்கவேண்டும் என்ற 10, 15 தீர்ப்புகள் இருக்கின்றன. நடைமுறையிலே இடைமறிக்கும் கிளாரிபிகேஷன் கேட்கிறார்கள். முடித்த பிறகும் கேட்கிறார்கள். அவையினுடைய நேரம் நீட்டிக்க வேண்டி இருக்கிறது, ஏதாவது ஒரு முறையை கடைப்பிடிக்க துணைத்தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதே தீர்ப்பு தொடர்ந்து வழங்கப்பட்டு வரும். யாராக இருந்தாலும் அமைச்சர் பேசுகிறபோது இனிமேல் குறுக்கிடக்கூடாது.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பழங்குடியினர் நலத்திற்காக குழு ஒன்று மாநில அளவிலே இயங்கி வருகிறது. அதனுடைய தலைவராக நான் இருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற குழுவானது Tamil Nadu Tribal Development Authority, என்கிற குழுவாகும். அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள்.

திருமதி நா. இராசாம்பாள்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, மலைவாழ் நலக்குழு முதலமைச்சர் தலைமையில் அப்படி ஒன்று இல்லை என்று கூறினார். அதில் நான் கூட உறுப்பினராக இருக்கிறேன், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிவப்பிரகாசம், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், ஆகியோர் உறுப்பினர்களாக கொண்ட குழு சமூக நலத்துறையிலே ஒரு ஜீ.ஓ. போட்டு வெளியிடப்பட்டுள்ளது அமைச்சருக்குத் தெரியவில்லை. ஏன் அது அவருக்குத் தெரியவில்லை.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், மாணவர்கள் இல்லங்களில் எண்ணிக்கையை அதிகரிப்பது பற்றிக் கூறினார்கள். ஏற்கனவே உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு என்று தனியாக இல்லங்கள் இருக்கின்றன. அதிலே ஏற்கெனவேயிருந்த எண்ணிக்கை அப்படியே இருக்கின்றன. தற்சமயம் அதேமாதிரி கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தனியே இல்லங்கள் இருக்கின்றன. இந்த எண்ணிக்கையும் அப்படியே இருக்கின்றது. மேல் நிலைப்பள்ளிகளில் வந்ததற்கு பிறகு அதிகமான மாணவர்கள் உயர்நிலைப்பள்ளிகளுக்கான மாணவர் இல்லங்களில் படிக்க வேண்டிய அவர்கள் இடம் பிடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருப்பதால், அமைச்சர் 10 சதம் உயர்த்தியதாக அறிவிக்கப்பட்ட அந்த எண்ணிக்கையை நிரந்தரமாக இந்த மாணவர்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை பரிசீலனை செய்யலாம்.

(இரவு 8.10)

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: விவாதம் முடிவுற்றது. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் பெறுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கோரிக்கை எண் 31 பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

திருவாளர்கள் சு. பாலன், கே. ஆர். சுந்தரம், எ.டி. கருப்பையா ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பேற்றுக்கொள்ளப் பெற்றன.

திரு. கே. எம். தங்கமணி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதத் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— ''மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 41,10,31,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத்துறை

திரு. த. வேணுகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. இல. பலராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி-''மானியக் கோரிக்கை எண் 44.எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,21,26,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்',.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று' கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 18-3-82 தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8.11 மணிக்கு ஒத்திவைக்க பெற்றது.



8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

144. தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் (தமிழ்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

108. கோரிக்கை எண் 31.—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

109. கோரிக்கை எண்.31—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் இணைப்புகள் 1982.83 (தமிழ், ஆங்கிலம்).

110. 1982-83-ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத் துறையின் சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

111. கோரிக்கை எண்.44— எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு I

(7 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 519-க்கான விடையைக் காண்க.)

விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டிற்கும் கேரள மாநிலத்திற்கும் இடைப்பட்ட மாநில பொது எல்லை தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி, கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களை ஒட்டி வருகிறது. இந்த மாநில பொது எல்லை 806 கிலோ மீட்டர்கள் (சுமாராக 500 மைல்கள்) தூரம் உள்ளது. இந்தப் பொது எல்லையை ஏற்கனவே (மாநில சீர் அமைப்புக்கு முன்னால்) கூட்டாக நில அளவை செய்யப்பட்டவை, நில அளவை செய்யப்படாதவை என்று இரண்டாகப் பிரிக்கலாம்.

திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஏற்கெனவே நில அளவை செய்யப்பட்ட பகுதிகள் திறந்த எல்லையின் நீளம் சுமார் 558 கி.மீ. (330 மைல்கள்). இந்த எல்லையில், முன்பே சர்வே செய்யும்போது எல்லைக்கற்கள் நடப்பட்டன. ஏற்கனவே நில அளவை செய்யப்பட்ட இப்பகுதியை வருடத்திற்கு 50 மைல்கள் வீதம் சரிபார்க்க வேண்டும். சரிபார்க்கும் வேலையின்போது ஏற்கெனவே கற்கள் நடப்பட்ட இடங்களில் கற்கள் காணாமல் இருந்தால், அவற்றை சரியான இடங்களில் கூட்டாக இருமாநில அளவர்களாலும் அளந்து பார்த்து கற்கள் நடப்படும்.

கூட்டாக நில அளவை செய்யப்படாத பகுதி நீலகிரி கன்னியாகுமரி, மற்றும் செங்கோட்டை (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய மாவட்டங்களில் உள்ளது. இந்த எல்லையின் நீளம் சுமார் 272 கி.மீ. (170 மைல்கள்). இப் பகுதிகள் இரு மாநில அலுவலர்களாலும் தற்போது கூட்டாக நில அளவை செய்யப்பட்டு, பூமியில் (காடுகள் தவிர) கற்கள் நடப்பட்டு உள்ளன.

(ஆ) ஏற்கனவே நில அளவை செய்யப்பட்ட பகுதிகளை வருடத்திற்கு 50 லினியர் மைல்கள் வீதம் கூட்டாக இரு மாநில அலுவலர்களாலும் சரிபார்த்து ஆவணங்கள் தயாரிக்க சுமார் பத்து வருடங்கள் ஆகும்.

நில அளவை செய்யப்படாத பகுதிகளில் கூட்டாக நில அளவை செய்து ஆவணங்கள் தயாரித்து இரு மாநில அரசுகளாலும் அங்கீகாரம் செய்ய சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

## இணைப்புகள்.

(52 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 31.

### பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் கொள்கை விளக்கக் குறிப்பு.

ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலன் என்ற தலைப்பின் கீழ் 1982—83 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31—ல் ரூ. 4,110.31 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச் சட்டமன்ற பேரவையினை வேண்டுகிறேன்.

2. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகை 412 இலட்சமாகும். இதில் ஆதி திராவிடர் 73.16 இலட்சம் பேர், பழங்குடியினர் 3.11 இலட்சம் பேர். மொத்த மக்கட் தொகையில் இது முறையே 17.76 சதவீதமும் 0.76 சதவீதமும் ஆகும். தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 39.05 சதவீதம். இதில் கல்வி அறிவு பெற்ற ஆதி திராவிடர் 21.81 சதவீதமும் பழங்குடியினர் 9.02 சதவீதமும் ஆவர்.

3. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டு வந்த பலமுனைத் திட்டங்களின் கீழும் கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவு தொழில் போன்ற பல பொதுத் துறை திட்டங்களின் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறையினர் செயற்படுத்தி வரும் நலத் திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

4. ஆதி திராவிடர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்த புதிதாகக் கொண்டு வரப்பட்ட உட்பகுதித் திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டு



வருவதை இந்த அவையினர் நன்கறிவர். ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலனுக்கென கொண்டு வரப்பட்ட சிறப்பு உட்பகுதித் திட்டத்தின் நோக்கங்களாவன:—

(i) ஆதி திராவிடர்களில் பாதிபேர் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளனர். இவர்கள் வறுமை நிலையிலிருந்து விடுபட்டு நல்ல நிலைமைக்கு வர ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உதவுதல்.

(ii) ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின் வசதி, சுகாதாரவசதி, பள்ளிக்கூட வசதி முதலியவற்றை செய்து கொடுத்தல்.

இவ்விரண்டு நோக்கங்களையும் எய்த, இதர வளர்ச்சித் துறைகளின் முயற்சியையும் நிதி வாயில்களையும் ஒருங்கு திரட்டி பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் கீழ் பொதுத் துறையிலிருந்து குறைந்தது 18 சதவீத நன்மையை ஆதி திராவிடர்கள் பெற அரசு வழி வகுத்துள்ளது. இதற்காக ஒவ்வொரு வளர்ச்சித் துறைக்கும் திட்ட இலக்கும் நிதி இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதன் விவரங்கள் இணைப்பு எண். IX-ல் குறிக்கப்பட்டுள்ளன. திட்டங்களின் முன்னேற்றத்தைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திட்ட இலக்கையும் நிதி இலக்கையும் செயல் முறை நிதி இலக்குகளை நிர்ணயிக்குமாறு வளர்ச்சித் துறைகள் அனைத்தும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இச் சிறப்பு உட்பகுதி திட்டம் பிரிக்க இயலாத துறைகளிடமிருந்து உதவி கணக்கெடுப்படவில்லை. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 18 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது, இவர்களில் பாதிபேர் அதாவது 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களின் வறுமை நிலையைப் போக்கி மேம்பாடுற்ற நிலைமைக்குக் கொண்டுவர ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட கால கட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1.8 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் மேம்பாடுற்ற நிலைமைக்குக் கொண்டு வரப்படுவர். 1980—81 ஆம் ஆண்டில் பொதுத் துறையிலிருந்து ரூ. 71.64 கோடி ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. 1981—82 ஆம் ஆண்டில் பொதுத் துறையிலிருந்து ரூ. 83.04 கோடி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 114.04 கோடி பொதுத் துறையிலிருந்து ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கு எடுத்துக்கொள்ளப்படும்

5. பழங்குடியினர் நலனுக்காக பழங்குடியினர் நலத்துறை திட்டத்தின்கீழ் தனித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ் உள்ள இயல்பான துறைத் திட்டங்களுடன் இத்திட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர பழங்குடியினரான மலைச்சாதியினருக்கான புதிய மேம்பாட்டு திட்டம் ஒன்றும் உள்ளது. பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் செயல்முறைக்கு வந்த பிறகு

பழங்குடியினர் மேம்பாட்டுப் பணிகளில் நல்லதொரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1980—81 ஆம் ஆண்டில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 345.25 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1982-81 ஆம் ஆண்டில் ரூ. 393.65 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது

6. இந்திய அரசுப் பணி அலுவல் நிலையிலுள்ள இயக்குனரின் தலைமையின்கீழ் ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை செயற்பட்டு வருகிறது. பொது நிர்வாகத்தில் இவருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் பதவித்தரத்தில் உள்ள இணை இயக்குநர் ஒருவர் உள்ளார். நேர்முக உதவியாளர் ஒருவரும் உள்ளார். கல்வித் தொடர்பான திட்டங்களில் இவருக்கு உதவியாக கல்வித் துறை துணை இயக்குனர் உதவி புரிகிறார். கணக்குப் பிரிவில் கணக்கு அலுவலர்கள் இருவர் இயக்குனருக்கு உதவியாக இருக்கின்றனர். பல்வேறு கூட்டுறவுத் திட்டங்களை பொறுத்தமட்டில் துணை கூட்டுறவுப் பதிவாளர் ஒருவர் இயக்குனருக்கு உதவுகின்றார். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர்களின் நேரடிப் பொறுப்பில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். மாவட்ட அளவில் சிறப்பு உட்பகுதித் திட்டத்தின் செயல் முறையை ஆய்ந்து கண்காணிப்பது மாவட்ட ஆட்சியாளரின் தனிப் பொறுப்பாகும். குடி உரிமைகள் கண்காணிப்புச் சட்டத்தை முறையாக செயற்படுத்துவதும் மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

7. ஆதி திராவிடருக்கு சிறப்பு உட்பகுதித் திட்டத்தையும் குடி உரிமைகள் கண்காணிப்புச் சட்டத்தையும் செம்மையாக செயல் படுத்தியதன் விளைவாக ஆதிதிராவிடர், பழங்குடியினரின் சமூக-பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்றுள்ளது. இதனால் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குனர் அலுவலகத்தினர் அதிக பொறுப்பேற்றுள்ளனர். இதுவரை ஆதி திராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர், இயக்குனர் அலுவலகத்தின் வரவு–செலவு திட்டத்தில் இடம் பெற்றுள்ள நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டும் பொறுப்பேற்றிருந்தார். இட ஒதுக்கீடு, அரசு பொதுத்துறை நிறுவனங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் ஆதி திராவிடருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்படுவதை ஆய்வு செய்து கண்காணிக்கவும் உயர் அதிகாரக் குழுவின் உறுப்பினர் செயலாளர் என்ற முறையில் பொறுப்பேற்றுள்ளார். இது போன்ற சிறப்பு உட்பகுதித் திட்டம் குடி உரிமைகள் கண்காணிப்புச் சட்டம்; பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் ஆகியவை செயற்படுத்துவதை ஆராய்வது ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குனரின் தலையாய பொறுப்பாகும். சிறப்பு உட்பகுதித் திட்டமும் குடி உரிமைகள் கண்காணிப்புச் சட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவையும் செவ்வனே செயற்படுத்துவது குறித்து அரசுக்குத் தெரிவிக்கும் பொறுப்பையும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்குநரும், மாவட்டங்களிலுள்ள அத்துறை அதிகாரிகளும் ஏற்பார்கள்.



## ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்திட்டங்கள்.

8. ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகை தவிர ''மூலதனச் செலவு'' என்ற தலைப்பில் ரூ. 550.03 இலட்சமும், ''கடன்களும் முன் பணங்களும்'' என்ற தலைப்பின்கீழ் ரூ. 73.61 இலட்சமும், ''கொத்தடிமை'' என்ற தலைப்பின் கீழ் ரூ. 0.26 இலட்சமும், சாட்டியவை என்பதில் ரூ. 2·02 இலட்சமும் 1982–83இல் ஒதுக்கப்பட்டுள்ளன. 1932—83 ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 4736.23 இலட்சம் ஒதுக்கப்படும். ஆதிதிராவிடர் — பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகளை பின்வரும் மூன்று பெருந்தலைப்புகளில் வகைப்படுத்தக்கூடும்.

1. கல்வி.

2. வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு.

3. பொதுச் சுகாதாரம், வீட்டு வசதி.

### அ. கல்வி.

9. ஆதிதிராவிடர்—பழங்குடியினர் மேம்பாட்டிற்கு உறு துணையாக அமைவது கல்வி நலமாகும். தற்போது ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கென்றே உள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கும் பொறுப்பானது ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகையின் பெரும் பகுதியானது கல்விக்காகச் செலவிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக 1981–82 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2,702.17 இலட்சம் ஒதுககப்பட்டதில் ரூ. 1,791.25 இலட்சம் கல்விக்காக செலவிடப்பட்டது. 1982–33 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 4,285.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்வதென கருதப்பட்டுள்ளது. இதில் ரூ. 2,117.58 இலட்சம் கல்விக்காகச் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

### படிப்புதவித் தொகை

10. மெட்ரிக் படிப்புக்கு முந்திய பிந்திய படிப்புப் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இப்படி உதவித் தொகை பெற ஆதி திராவிடர் பழங்குடியினர் கிறிஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களின் பெற்றோர்/காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 3,000 ஆகும். ஆனால், 1981—82 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிறிஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களின் பெற்றோர் / காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய அரசிடமிருந்து படிப்புதவித் தொகை பெறுவதற்கு (இந்து) ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு 1—7—1981 முதல் ரூ.9,000 லிருந்து ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

11. படிப்புதவித் தொகை வழங்கும் நடைமுறையை சீரமைத்து இத்தொகையை தேசியமயமான வங்கிகள் மூலமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்பு

12. இல்லங்களில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிப்பிற்காகப் படிப்புதவி தொகை ஏதும் தற்போது வழங்கப்படவில்லை. ஆனால் மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிப்பு வரையுள்ள பள்ளிகளில் இருக்கும் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்குத் தங்கிப் பயில்வதற்காக 1981-82 ஆம் ஆண்டில் தங்கிப் பயிலும் மாணவர் ஒருவருக்கு வழங்கப்படும் தொகை வீதத்தை திங்கள் ஒன்றிற்கு ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டதால், உணவு தங்குவதற்குரிய கட்டணங்கள் வகையில் ஆண்டொன்றிற்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 250-லிருந்து ரூ. 300 ஆக உயர்ந்துள்ளது.

மாணவர் இல்லம் இல்லாத பள்ளிகளில் படிப்புதவித்தொகைக்குப் பதிலாக I முதல் III வகுப்பு பயிலும் மாணவர்களுககுக் கல்வித்துறையும் IV முதல் IX வரை பயிலும் மாணவர்களுக்கு இத்துறையும் மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிப்பிற்கான பட நூல்களை வழங்குகின்றன. இச்சலுகை ஆதி திராவிடர் பழங்குடியினர், கிறிஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோரின் காப்பாளரின் வருமான வரம்பைக் கருதாமல் அளிக்கப்படுகிறது. இதைத் தவிர இந்த மாணவர்களுக்காகச் செலுத்தப்படும். தேர்வுக் கட்டணம், சிறப்புக் கட்டணத் தொகை அரகத் தேர்வுகள் இயக்குநருக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 7. 9 இலட்சம் மாணவர்கள் பயன் அடைந்தனர். ரூ.129.15 இலட்சம் செலவிடப்பட்டது. 1981-82-ல் (31—1—82 வரை) இத்திட்டத்திற்காக ரூ. 99.55 இலட்சம் செலவிடப்பட்டது. 7.89 இலட்சம் மாணவர்கள் இதனால் பயன் பெற்றனர்.

மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு—மத்திய அரசு

13. தற்சமயம் மேல்நிலைப் பள்ளியிலும் கலைக் கல்லூரியிலும் தொழிற் படிப்பும், தொழில் நுட்பப் படிப்பும் பயிலும் (இந்து) ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்கு மத்திய அரசின் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோரின் / காப்பாளரின் ஆண்டு வருமானத்தைக் கருத்திற்கொள்ளாமல் படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.



மாணவர் இல்லத்தில் தங்கிப் படிப்போர், மாணவர் இல்லத்தில் தங்காமல் பயில்வோர் ஆகிய இருசாராருக்கும் படிப்புதவித் தொகையானது வழங்கப்படுகிறது. 1980—81 இல் மாநில அரசு விதிமுறைகளின்படி மேற்படித் திட்டத்தின் கீழ் 8,229. மாணவர்கள் பயன் பெற்றனர். ஆதி திராவிடர்களுக்காக ரூ. 42.44 இலட்சம் செலவிடப்பட்டது. மத்திய அரசின் விதிமுறைகளின்படி 39,214 ஆதி திராவிடர் மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 278.10 இலட்சம் செலவிடப்பட்டது. 1981 82 இல் (31—1—82) மத்திய அரசு விதிமுறைகளின்படி 40,691 ஆதி திராவிடர் மாணவர்களுக்காக ரூ. 316.48 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இது போலவே பழங்குடியினருக்காக ரூ. 2.08 இலட்சம் செலவிடப்பட்டது. 255 மாணவர்கள் பயனடைந்தனர்.

மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை

மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட கல்வி பயிலும் மாணவர்கள், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள். ஒரு குடும்பத்தில் ஒரு சமயத்தில் இருவர் மட்டுமே பயனடைந்து அதற்கு மேற்பட்டுள்ளவர்களுக்கு மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியில்லாதவர்கள் அனைவரும் அவர்களுடைய பெற்றோரின்-காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.6000 ஆக இருந்தால் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்புதவித தொகையை மாநில அரசிடமிருந்து பெறுகின்றனர். 1980—81 இல் 8,229 மாணவர்கள் பயனடைந்தனர் ரூ42.44 இலட்சம் செலவிடப்பட்டது. 1981–82. இல் (31—1—82 வரை) 6,430 மாணவர்கள் பயனடைந்தனர். ரூ. 19.68 இலட்சம் இதற்காகச் செலவிடப்பட்டது.

செயலூக்கத் திட்டம்

14. கல்வியில் சிறப்படைந்த மாணவர்களுக்கு இத்திட்டத்தில் தொடர்ந்து பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன, ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதி திராவிடர் மாணவர் (ஆண்கள்) இருவருக்கும் கிறித்தவராக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர் (ஆண்கள்) இருவருக்கும் கல்லூரிக் கல்வியைத் தொடர்வதற்கு உதவியளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றிற்கு (விடுமுறைக் காலம் உட்பட) ரூ. 80 கல்விச் சிறப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. அம்மாணவர்கள் மாணவர் இல்லத்தில் தங்க வேண்டும் என்ற நியதியோ அல்லது அவர்களுடைய பெற்றோரின் வருமானத்திற்கு வரம்போ இத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்படவில்லை. 10+2+3 என்ற கல்வி முறை கொண்டு வரப்பட்ட பின்னர், 10 ஆம் வகுப்பில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் வெற்றிபெறும் ஆதிதிராவிடர் (ஆண்கள்) மாணவர்களுக்கும். கிறித்தவ சமயத்திற்கு மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும் 1978–79 ஆம் ஆண்டு முதல் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டிலிருந்து

/ 128 43 27

ஆதி திராவிடர் மாணவியர் கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவியர் பழங்குடி மாணவ மாணவியர் ஆகியோருக்கும் இத்திட்டத்தில் படிப்புதவித் தொகை வழங்கப்படுவது நீட்டிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுத் தேர்வில் மிக அதிகமாக மதிப்பெண்களையும் அதற்கு அடுத்த அதிகமான மதிப்பெண்களையும் ஒரேமாதிரியாக பெறும் மாணவர்கள் இருவருக்கு மேற்பட்டு இருப்பார்களேயானால் அவர்களுக்குஇப் படிப்புதவித் தொகை முழுவதும் (பரிசுத் தொகை முழுவதும்) மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுச்கு அவர்களுடைய உணவுக் கட்டணம், மாணவரில்ல வாடகை கட்டணம் ஆகியவற்றைக் கழித்துக் கொள்ளாமல் வழங்கப்படுகிறது,

1932–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 3.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது,

காந்தியடிகள் நினைவு படிப்புத் தொகை

15. கல்வியிற் சிறந்த இந்து ஆதி திராவிடர் வகுப்பு மாணவர்களுக்கு வழக்கமாக அளிக்கப்படும் படிப்புதவித் தொகையுடன் காந்தியடிகள் நினைவு சிறப்பு உதவித் தொகையானது வழங்கப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மேல் நிலைக் கல்வித் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு இப்படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு மாணவரும் ஒரு மாணவியும் தெரிந்தெடுக்கப்படுவர். படிப்புதவித் தொகை முதலாண்டிற்கு ரூ 1,500 ம் அடுத்து வரும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.1,000 வீதமும் வழங்கப்படுகிறது.

தகுதி வருவாய் பரிசுத் திட்டம்

16. கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி ஆதிராவிடர்கள் பழங்குடியினர் ஆகியோரின் நலனக் கருதி காந்தி நினைவுப் பரிசுத் திட்டத்தைப் போன்றே இப் பரிசுத் திட்டம் 1976-77 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கிறித்தவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த ஒரு மாணவரும் ஒரு மாணவியும் இப் பரிசுத் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

தகுதிக்கென்று வழங்கப்படும் தனிமானியம்

17. 1976-77 முதல் 1979-80 வரை பள்ளி இறுதித் தேர்விலும், புகுமுக வகுப்புத் தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெற்றுள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் கிறித்துவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக ரூ. 300 ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. 10+2+3 என்ற கல்வி முறைப் பாடத் திட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு



1980-81 ஆம் ஆண்டு முதல் பள்ளி இறுதித் தேர்விலும் (10 ஆண்டு பாட முறைத் திட்டம்) மேல் நிலைக் கல்விப் படிப்பின் இரண்டாம் ஆண்டிற்குரிய தேர்விலும் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் கிறித்துவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்தத் தகுதி மானியமானது வழங்கப்படுகிறது. 1982–83 இல் இத்திட்டத்திற்காக ரூ. 9.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடன் படிப்புதவித் தொகைகள்:

(18) பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள் அவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகையைவிட அதிகப்படியான தொகையினை செலவிட வேண்டியுள்ளது. எனவே அரசு இதனைப் பரிசீலித்து நிதியுதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் கடன் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. 1974–75 ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கும் கடன் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கையும் இதற்குச் செலவிடப் பட்ட தொகையும் வருமாறு :

| ஆண்டு | ஆதிதிராவிடர்கள்/ பழங்குடியினர். | | கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிடர்கள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | வழங்கப் பட்ட தொகை. | எண்ணிக்கை. | வழங்கப் பட்ட தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1979–80 | 4,912 | 36.09 | 153 | 0.89 |
| 1980–81 | 6,015 | 57.78 | 153 | 1.13 |
| 1981–82 (31–12–81 வரை). | 4,485 | 31.61 | 158 | 0·94 |

ஆதி திராவிடர்கள் / பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 61.00 இலட்சமும், கிருஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ 1.01 இலட்சமும் 1982–83 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் நீரடி வசதியற்ற கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், ஆதிதிராவிடர்கள் அல்லாத

வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பைக் கற்பதற்காக வழங்கப்படுவதற்கு 60 படிப்புதவித் தொகைகளை மத்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கியது. இத்திட்டம் 1981–82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப் பட்டது. 1982–83ஆம் ஆண்டிற்கு ரூ 2.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள் :

19. (அ) ஆதி திராவிடர்கள் : இம்மாநிலத்தில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் 947 உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | தொடக்கப் பள்ளிகள் .. .. .. | 843 |
| 2 | நடுநிலைப் பள்ளிகள் .. .. .. | 79 |
| 3 | உயர்நிலைப் பள்ளிகள் .. .. .. | 21 |
| 4 | மேல்நிலைப் பள்ளிகள் .. .. .. | 4 |
| | மொத்தம் .. .. | 947 |

இப்பள்ளிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 1·67 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். ஆதி திராவிட நல மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

(ஆ) பழங்குடியினர்.

இத்துறையால் பழங்குடியினர் நலத்திற்காக 126 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு தொடக்கப்பள்ளிகள். | 109 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு நடுநிலைப் பள்ளிகள். | 11 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு உயர் நிலைப் பள்ளிகள். | 2 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு மேல் நிலைப் பள்ளிகள். | 3 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் சேர்ந்தில்லாத பள்ளி. | 1 |
| மொத்தம் .. .. | 126 |

மேற்சொன்ன மாணவர் இல்லங்களுடன் கூடிய பள்ளிகளில் இலவசமாக உணவு வழங்குதல் என்னும் திட்டத்தின்கீழ் 7,643 மாணவர்கள் பயனடைகிறார்கள்.



1981–82 ஆம் ஆண்டில் பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு தொடக்கப்பள்ளிகள் 12 புதியதாக திறக்கப்பட்டுள்ளன.

1981–82 ஆம் ஆண்டில் ஒரு தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகவும், 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

1982–83 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும் 9 ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 4 உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய ஒரு அரசு நடு நிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாகவும் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது 1982–83 இல் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுப் பள்ளிகளுக்கும் கூடுதலாகப் பல் வேறுபட்ட ஆசிரியர்களை நியமிக்கக் கருதப் பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் நலத்துறை நடத்தும் இப்பள்ளிகளுக்குக் கட்டிட வசதி, நூலக வசதி, ஏனைய வசதிகளுக்கு வகை செய்வதற்காக, 1980–81-ல் ரூபாய் 1 கோடி செலவில் அனுமதிக்கப்பட்ட திட்டம் ஒன்று தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1982-83-ல் சென்னை மாநகரிலுள்ள புளியந்தோப்பில் 8 வகுப்பறைகளுடன் கூடிய பள்ளிக் கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்காக ரூபாய் 5·00 இலட்சம் நிதி ஒதுக்கீடு 1982–83 வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

20. மாணவ, மாணவியருக்கு உடைகள் வழங்குதல்.

ஆதிதிராவிட பழங்குடியினர் நலப்பள்ளிகளில் அல்லது அரசினர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

4 முதல் 10 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலுகின்றவர்களும் அரசினர் ஆதிதிராவிட நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுமான மாணவர்களுக்கு இரண்டுஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளகளில் 1 முதல் 8 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவராயிருப்பினும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகிறது. இந்த இரண்டு ஜதை உடைகளும் கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே வழங்க ஆணை

பிறப்பிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுப் பள்ளி ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் ஆகியவற்றைச் சேர்ந்த சாரணர்களுக்கும் சாரண பயிற்றுநர்களுக்கும் சீருடைகள் வழங்க 1982–83 ஆம் ஆண்டில் கருதப்பட்டுள்ளது இதற்காக 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1.28 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

21. கல்விச் சுற்றுலா.

மாணவர்கள் தங்களது பொதுஅறிவை வளர்த்துக் கொள்ளுவதற்கு வசதி அளிக்கும் வண்ணம் ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை முக்கியமான இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கான திட்டம் 1969–70 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 40 மாணவர்களை கல்விச் சுற்றுலாவில அழைத்துச் செல்வதற்கு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும், ரூ. 1,000 வழங்கப்படுகிறது. இதற்காக 1982–83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுக்காக ரூ. 0.35 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

22. நண்பகல் உணவு.

ஆதி திராவிட நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது, மாணவர்கள் பள்ளிக்குத் தவறாது வருகை தர அவர்களை ஊககுவிப்பதும், பொருளீட்டுவதற்காக மாணவர்களை அவர்களது பெற்றோர்கள் இதர வேலை பார்க்க அழைத்துச் செல்வதைத் தவிர்ப்பதும் நண்பகல் உணவு அளிப்பதன் நோக்கமாகும்.

''கேர்'' நிறுவன உணவுத் திட்டத்தின்கீழ் கல்வித் துறை ஒரு கல்வியாண்டில் 85 நாட்களுக்கு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 80 கிராம் உணவு தானியம் வழங்கி வருகிறது. எஞ்சியுள்ள 135 நாட்களுக்கு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 22 காசு என்ற வீதத்தில் கொள்முதல் செய்யப்படும் அரிசியைக் கொண்டு மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 947 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்குவதற்காக 1982–83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 46.36 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

23. மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள். நோட்டுப் புத்தகங்கள் எழுது பலகைகள் முதலியவற்றை வழங்குதலும் பள்ளிகளுக்குச் சாதனங்கள் வழங்குதலும்.

இம்மாநிலத்தில் ஆதி திராவிடர்களுக்காகவும் பழங்குடியினருக்காகவும், 1,073 பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. இக்கல்வியாண்டில் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலப் பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு, இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு



அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் அதனைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுதுபலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், 1981–82 ஆம் ஆண்டில் 1.74 இலட்சம் மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 9.85 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

24 ஆசிரியர்களுக்கான இல்லங்கள்:

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்குச் சமவெளிகளில் ரூ. 15,080 செலவிலும், மலைப் பகுதிகளில் ரூ. 17,000 செலவிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதுவரை 182 ஆசிரியர் இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இதற்காக 1982–83ஆம் ஆண்டில் ரூ. 4.44 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர்கள் குடியிருப்புகளைப் பராமரிப்பதற்கான செலவும் அடங்கும்.

25 குழந்தைகள் காப்பகம்:

1977-78 ஆம் ஆண்டிலிருந்து 1980–81 ஆம் ஆண்டுவரையில் ஒவ்வோராண்டும் 50 என்ற வீதத்தில் குழந்தைக் காப்பகங்களை ஏற்படுத்த அரசு அனுமதித்து வந்துள்ளது.. 200 குழந்தைக் காப்பகங்களை ஏற்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றிலும் 70 குழந்தைகள் உள்ளனர். பணி புரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பினை அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வதும், வளர்ந்து வரும் வயதில் அவர்களுக்கு தூய சுகாதாரமான நல்ல பழக்கவழக்கங்களைக் கற்பிப்பதும், பள்ளிப் படிப்பைத் தொடராமல் பள்ளிகளிலிருந்து இடையே நின்று விடுவதைக் குறைப்பதற்கு உதவும் வண்ணம் அக்குழந்தைகளுக்குப் பள்ளி செல்லும் பழக்கத்தை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். 3–5 வயதுள்ள குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். பள்ளி செல்லும் வயதடையும் நிலைக்கு முன்னரே அக்குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பதும் இதன் நோக்கமாகும். இதற்காக 198 –83 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.77 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

26 தட்டச்சு சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம்:

தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லையாதலால், தட்டச்சர், சுருக்கெழுத்தர், பதவிகளில் அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 18 சதவீத இடங்களை நிரப்ப இயலாது போகிறது. இதனைக் கருத்திற்கொண்டு தனியார் நடத்தும் வணிகக்கல்வி நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மாணவர்

களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்தில் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு செயல்பட முனைந்தது. இத்திட்டத்தின்படி 950 மாணவர்களுக்கு தட்டச்சுப் பயிற்சியும், 475 மாணவர்களுக்கு சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 4.13 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 27 சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி:

சட்டத் தொழிலை மேற்கொள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினரைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்புகிற சட்டம் பயின்ற பட்டதாரிகள் இவருக்கு (ஆதிதிராவிடர், பழங்குடியினர்) 1974-75 முதல் அரசு கீழ்க்கண்ட நிதி உதவியை அளிக்கிறது.

(i) வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம் முதலியவை வகையில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 கடன்.

(ii) புத்தகங்கள், மேசை, நாற்காலி முதலியவை வாங்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 உதவித் தொகை.

### 28 கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்:

கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம், அரசியல், கணிதம், போன்ற பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சென்னை மாநகரில், ''மாணவர்களுக்காக'' ஒரு நிலையமும் மாணவிகளுக்காக ஒரு நிலையமும், ஆக இரண்டு நிலையங்கள் இரு திங்கள் காலத்திற்கு செயல்பட்டன. இந்த வசதி, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. 1976-77 ஆம் ஆண்டில் 189 கல்லூரிகள் அனைத்திற்கும் இந்தப் பயிற்சி வசதி ஓராண்டில் இரு திங்கள்கட்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கான கால அளவில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 1,000 ஒருமித்தத் தொகை கொடுக்கப்படும். 1982-83-லும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொழில் நுட்ப நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுக்கும் இச்சிறப்புப் பயிற்சித் திட்டத்தை 1981-82 ஆம் ஆண்டில் அரசு நீட்டியுள்ளது. இம் மாநிலத்திலுள்ள ஏழு பொறியியல் கல்லூரிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆணையிட்டது.



### மாணவர் இல்லங்கள்:

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. எழும் தேவை, நிதி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் புதிய மாணவரில்லங்கள் திறக்கப்படுகின்றன. தனியார் மாணவர் இல்லங்களும் அரசினால் ஒவ்வோராண்டும் படிப்படியாக நிர்வாகத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள விகிதாசாரங்களின்படி ஆதி திராவிடர், பழங்குடி நல மாணவர் இல்லங்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

| ஆதிதிராவிடர் மாணவரில்லங்கள் | சதவீதம். |
|---|---|
| (1) | (2) |
| ஆதி திராவிடர், பழங்குடியினர் .. .. | 75 |
| பிற்பட்ட வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தினர் .. | 20 |
| முன்னிலை வகுப்பினர் .. .. .. | 5 |
| மலைவாழ் பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் | |
| மலைவாழ் பழங்குடியினர் .. .. | 60 |
| ஆதி திராவிடர்கள் .. .. .. | 30 |
| பிற்பட்டோர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினர். .. | 10 |

1980-81 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கென்று 646 மாணவர் இல்லங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 40,535 மாணவர்கள் இருந்தனர். மாணவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் 10 சதவீதம் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு அனுமதித்து 1981-82 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பழங்குடியினரைப் பொறுத்தமட்டில் 20 மாணவர் இல்லங்கள் உள்ளன. இதில் மொத்தம் 895 மாணவர்கள் உள்ளனர். 1981-82 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர்களுக்காக 15 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் 600 மாணவர்கள் இருந்தனர். ஆதி திராவிடர்களுக்காக 15 புதிய மாணவர் இல்லங்களைத் திறப்பதற்கு 1982-83 ஆம் ஆண்டில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

புதிய மாணவரில்லங்கள் நிறுவுவதற்கும், 681 மாணவரில்லங்களைப் (ஆதி திராவிடர்களுக்கு 661, பழங்குடியினருக்கு 20) பராமரிக்கும் பொருட்டும் 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 4,32.10 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசு ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு, மாணவர் ஒருவருக்கு ரூ. 2 என்ற வீதத்தில் விளையாட்டுப் பொருட்கள் வழங்குவதற்கான செலவிற்கு அரசு தொடர்ந்து ஒப்புதல் அளித்து வருகிறது.

ஆதி திராவிடர் மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்கள் பின்வருமாறு:—

| மாணவர் இல்லங்களின் வகை. | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ஆகும் கட்டணம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| 1. சென்னை நகரிலுள்ள அரசு கல்லூரி மாணவ/மாணவியர் இல்லங்கள், சென்னை மாநகரிலுள்ள அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள். | 95 |
| 2. வெளியூர்களிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள், அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள். | 80 |
| 3. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள். | 60 |

பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் பழங்குடியினர் மாணவர் இல்லங்களுக்கும் அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்களின் விவரம் வருமாறு :—

| வகை. | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கான வீதம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள். | 45 |
| பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி. | 60 |



பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் பழங்குடியினர் மாணவர் இல்லத்துடன் கூடிய அரசு பள்ளி ஆகியவற்றுக்கு பழைய சமையல் பாத்திரங்களுக்குப் பதிலாக 1982-83இல் புதிய பாத்திரங்கள் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

பழங்குடியினர் மாணவர் இல்லத்துடன் கூடிய அரசு பள்ளி: பழங்குடியினர் இல்லங்களில் உள்ளவர்களுக்குக் கர்ணம் மேசைகள் வழங்க 1982-83ல் கருதப்பட்டுள்ளது.

மலைப் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் அரசு மாணவர் இல்லங்களில் உறங்குவதற்கு சிமின்டால் ஆன படுக்கை இருக்கைகள் 1982-83இல் கட்ட கருதப்பட்டுள்ளது.

### அரசு இல்லங்களிலுள்ள மாணவர்களுக்கு கட்டுப்பாட்டு விலைகளில் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்

30. இத்துறை நடத்திவரும் இந்த இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலைகளில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்படுகின்றன.

### மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்.

31. 681 அரசு இல்லங்களில் (அதாவது ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 661, பழங்குடி மாணவர்களுக்கு 20) 133 மாணவர் இல்லங்கள் (ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 119, பழங்குடி மாணவர்களுக்கு 14) அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. பழங்குடி மாணவர்களுக்கான இல்லங்களைக் கட்டும் பணியை ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதுவரையில் ஆதி திராவிடர்களுக்காக 216 மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி நல்கியுள்ளது.

1981-82ஆம் ஆண்டிற்கான மாணவ மாணவியர் இல்லங்கள் திட்டமிட்ட படி கட்டப்பட்டு வருகின்றன.

1981-82இல் கன்னியாகுமரி மாவட்டம், பத்துக்காணியிலும், சேலம் மாவட்டம், ஏற்காட்டிலும் பழங்குடியினர் மாணவியர் இல்லங்கள் கட்டும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவ, மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 245 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

[1982 மார்ச் 17

32. பகுதி நேர சிற்றாசிரியர்கள்—ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்கள் தேர்வுகளைச் சிறப்பாக எழுதத் துணைபுரியும் பொருட்டு பகுதி நேர சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இத்தகைய பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகள் 248 உள்ளன. இவைகளைத் தவிர (அதாவது 248 பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகள் தவிர) கல்லூரி மாணவர் இல்லங்களுக்காக மூன்று பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகளும், தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரத்திலுள்ள நந்தனார் அரசு ம ணவ /மாணவியர் இல்லங்களுக்காக ஐந்து பதவிகளும் உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள். மேல்நிலைக் கல்வி புதியதாகத் தொடங்கப்பட்டதால் ஒன்பதாவது, பத்தாவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பதினைந்தும் அதற்கு மேற்பட்டும் உள்ள உயர் நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களில் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக 1982-83 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.37 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுளளது.

தனியார் நடத்தும் இல்லங்களுக்கான உதவித் தொகை:

33. ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுக்கான அரசு இல்லங்களைத் தவிர, ஆதி திராவிடர் மாணவர்களுக்காக 41 இல்லங்களையும் (உதவித் தொகை பெறுபவை) பழங்குடி மாணவர்கள் தங்கிப் பயிலும் இல்லங்கள் இணைந்த நான்கு பள்ளிகளையும் தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருகின்றன.

உதவித் தொகை பெறும் இல்லங்களுக்கு உணவு மானியத் தொகையை 1981-82 ஆம் ஆண்டிலிருந்து அரசு உயர்த்தியுள்ளது. சென்னை மாநகரிலுள்ள மாணவர் இல்லங்கள், மற்றும் மாவட்ட, வட்ட தலைமை இடங்கள், நிலை-II நகராட்சிகளிலுள்ள உதவித் தொகை பெறும் அனைத்து இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கான கட்டணங்களும் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 ஆக இருந்ததை ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஏனைய இடங்களிலுள்ள அனைத்து மாணவர் இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ 30லிருந்து ரூ. 40-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. தனியாரால் நிர்வகிக்கப்படும் நான்கு பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் இல்லம் இணைந்த பள்ளிகளுக்கான மானியம் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 36 ருந்து ரூ. 46க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென 1982-83 ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 11.66 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.



1982 மார்ச் 17]

வேலை வாய்ப்பும் பொருளாதார மேம்பாடும் வேளாண்மை.

34. உழவுமாடுகள் வாங்கவும் பாசனக் கிணறுகள் தோண்டவும் உவிதத் தொகை:

ஆதி திராவிடர்கள், பழங்குடியினரின் வாழ்க்கை நிலையை மேம்பாடு அடையும் பொருட்டு உழவு மாடுகள், விதைகள், பிற வேளாண்மை கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 600 ரூபாய் என்ற வீதத்தில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. பாசனக் கிணறுகளுக்கான உதவித் தொகையைப் பெருக்கும் நோக்கத்துடன் பாசனக் கிணறு வெட்டுவதற்காக உதவித் தொகை அளிக்கும் திட்டத்தை அரசு மாற்றி அமைத்துள்ளது. அதன்படி கிணறு வெட்டுவதற்காகும் மொத்த செலவில் 1/3 பாகம் உதவித்தொகையாகவும், 2/3 பாகம் நிலவள வங்கியிலிருந்து பெறும் கடனாகவும் கொள்ளப்படும். பாசனக் கிணறுக்கான கடனுதவி வணிக வங்கிகளிடமிருந்தும் பெறப்படும் என்று அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. பயனடைவோர் ஒருவர் பெறும் உதவித் தொகையின் உயரளவு ரூ. 5000 ஆகும். 1982-83 இல் இதற்காக ஆதி திராவிடர்களுக்கு ரூ. 5.59 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூ. 1.61 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர இந்த இனங்களுக்காக கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு ரூ. 0.95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனம் பெருமளவில் பாசனக்கிணறுகளைத் தோண்டும் திட்டத்தை மேற்கொண்டுள்ளதால் 1982-83 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் எனக் கருதப்படுகிறது.

36. தோட்டக்கலை:

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லி மலை, சின்னக் கல்ராயன் மலை, பெரிய கல்ராயன் மலை ஆகிய இடங்களில் (தோட்டக்கலையை மேம்படுத்துவதற்கு இந்த இடங்களில் தட்ப—வெட்ப நிலை சாதகமாக உள்ளது) வாழும் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு தருமபுரி தோட்டக் கலை—மலைத் தோட்டப் பயிர் இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. ஆத்தூர் தோட்டக் கலை உதவி இயக்குநர் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். இதற்கு ஆதி திராவிடர் பழங்குடியினர் நல நிதியிலிருந்து நிதி உதவியானது அளிக்கப்படுகிறது. இத் திட்டத்தின்படி பழங்கள், காய்கறிகள் முதலியவற்றை வெற்றிகரமாகவும், கணிசமான வருமானம் தரத்தக்க வகையிலும் உற்பத்தி செய்வதற்காகப் பழங்குடியினருக்கு நடைமுறை ஆலோசனை, அறிவுரை, தொழில் நுட்ப உதவி ஆகியவை அளிக்கப்படுகின்றன. பழங்கள், உணவுக்குச் சுவையூட்டும் பொருள்கள், காய்கறிக்ள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான

பொருள்கள் அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. சுமார் 8,714.56 ஏக்கர் பரப்பளவு இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்காக, 1982–83 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

36. தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல்:—

கருமார், தச்சர், தையல் தொழில்கள் மற்றும் இதர 18 தொழில்களில் தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள், கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியவர்களுக்குக் கருவிகள் சாதனங்கள் ஆகியவற்றை இலவசமாக வழஙகும் திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1982–83 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 6.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றின் விலைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டிருந்த உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது.

37. சிறு தொழில் கடன்:—

சைக்கிள் கடைகள், ஓட்டல்கள் (சிற்றுண்டிச் சாலைகள்), மளிகைக் கடைகள், அச்சகம் முதலியவை போன்ற முப்பத்தொரு (31) தொழில்களை நடத்துவதற்காக ஆதி திராவிடர்களுக்கு சிறு தொழில் கடன் வழங்கும் திட்டம் 1968–69-லிருந்து தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. கடன் தொகை வரம்பானது தொழில் வகைகளுக்கு ஏற்ப ரூ. 125-லிருந்து ரூ. 15,000 வரை வழங்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்காக ரூ. 10.00 இலட்சமும் கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்காக ரூ. 1.00 இலட்சமும் பழங்குடியினருக்காக ரூ. 0.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைக் கருத்தில் கொண்டு 1982–83 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை உகந்தவகையில் திருத்தியமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

38. பயிற்சி நிலையங்கள்:

வேலைவாய்ப்பு பயிற்சித் துறையிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ. 25 பெறும் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த பயிற்சியாளர்களுக்கு ஆதி திராவிடர் நல நிதியிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ. 20 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் பெறும் பயிற்சி உதவித் தொகை மொத்தம் ரூ. 45 ஆகிறது. ஆதி திராவிடர் மாணவர் அனைவருக்கும் ரூ. 55 பயிற்சி உதவித் தொகையும், பழங்குடி மாணவர்களுக்கு ரூ. 82.50 பயிற்சி உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்



படுகின்றது. தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறு ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப் படும் பயிற்சி உதவித் தொகை 1—8—1980 ஆம் நாளிலிருந்து ங்கள் ஒன்றுக்கு ரூ. 45 என்பது ரூ. 55 ஆக அதிகரிக்கப்பட்டு ள்ளது.

1982–83 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 12.94 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலைவாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

கூட்டுறவு.

39 (அ) ஆதி திராவிடர்கள் :

தொழில் துறையில், ஆதி திராவிடர்கள் துரிதமாக முன்னேற வசதி செய்து கொடுக்கும் நோக்கோடு குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், பயிற்சி நிலையங்கள், பயிற்சி-உற்பத்தி நிலையங்கள், பணி நிலையங்கள் பலவற்றை அரசு நிறுவியுள்ளது. இவை இத்துறையில் போதிய தொழில் நுட்ப அறிவைப் பெற்றுள்ள தொழில்-வணிக இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர், தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவர்களால் நடத்தப்படுகின்றன. இந் நிலையங்களையும் சங்கங்களையும் நடத்துவதற்குத் தேவையான செலவுத் தொகை ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

மத்திய அரசு சிறப்பு உதவி.

40. சிறப்பு உட்பகுதி திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென கூடுதல் உதவியாக மத்திய அரசு சிறப்பு உதவியை வழங்குகிறது. 1980–81 ஆம் ஆண்டில் மத்திய அரசின் சிறப்பு உதவியாக ரூ. 9.56 கோடி வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த கிராமப்பகுதி வளர்ச்சித் திட்ட முறையைப் போலவே பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மூலம் சுமார் 50,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவியாக அமைய மாவட்ட கிராம வளர்ச்சி முகவரமைப்புகளிடம் இத்தொகை வழங்கப்பட்டது. இத்தொகையைக் கொண்டு, 15—2—1982 ஆம் நாள் வரையில் குடும்ப நலனை நோக்கமாகக் கொண்ட திட்டங்களின் கீழ் 4.23 கோடி ரூபாய் செலவில் 67,433 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மையும் வேளாண்மை தொடர்பான பணிகளும் தான் ஆதி திராவிடர்களின் முதன்மைப் பணியாக இருந்த போதிலும், இப்பணிகளில் அவர்கள் ஆண்டு முழுவதும் ஆதாயம் ஈட்டத்தக்க அளவில் தொடர்ந்து ஈடுபட இயலாது. மேலும், நகர்பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர்களை வறுமைக்கோட்டிற்கு

மேல் உயர்த்திக் கொண்டு வரவும், அவர்களுடைய வாழ்க்கைத் தொழில் முறையைப் பலதிறப்படுத்தவும் வருவாய் ஈட்டும் தொழில்கள்/தொழில் பிரிவுகள்/தொழில் பேட்டைகள் முதலிய வற்றை ஏற்படுத்துவதன் மூலம் நிலையான சொத்தாக அவர்களுக்கு அமையப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. திட்டங்களுக்கு நிதியுதவி செய்ய 1981–82 ஆம் ஆண்டில் மத்திய அரசால் வழங்கப்பட்ட மத்திய அரசு சிறப்பு உதவித் தொகையைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்திடம் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. 8.04 கோடி ரூபாய் செலவிலான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசு சிறப்பு உட்பகுதித் திட்டத்தில் ஏற்படும் மொத்தச் செலவு 12.28 கோடி ரூபாய் ஆகும். இதனால் சுமார் 77,817 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைந்தன. 1981–82 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசின் சிறப்பு உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் இதுவரையில் மத்திய அரசிடமிருந்து 8.18 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து மத்திய அரசு சிறப்பு உதவித் தொகையாக 10.20 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இம் மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர்களின் சமூக–பொருளாதார வளர்ச்சிக்காக, சிறப்புக் கூட்டுத் திட்டம் நீங்கலாக மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை வகுப்பது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது. திட்டங்களை வகுக்கத் தலைமைச் செயலாளர் தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள 376 வளர்ச்சி வட்டாரங்களைச் சேர்ந்த ஆதி திராவிடர் குடியிருப்புகளைக் குறித்த அடிப்படைப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இப் புள்ளி விவரங்கள் கணக்கிடு பொறியின் மூலம் தொகுப்பது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது. கணக்கிடு பொறி மூலம் பகுப்பாய்வு செய்யப் பட்ட புள்ளி விவரங்கள் அடுத்த ஆறு திங்கள் கால அளவில் கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வகுக்கப்படும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதிக்கு வகை செய்யப்படும்.

41. (ஆ) பழங்குடியினர்.

பழங்குடியினரைச் சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் பொருட்டும், காடுபடுபொருட்களைப் பழங்குடியினர் விற்பனைச் செய்வதற்கு இயலும் பொருட்டும், அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டும், அவர்களுக்கென இம் மாநிலத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், ஆகியவற்றை அரசு அமைத்



துள்ளது. தற்போது பழங்குடியினருக்காக, மூன்று கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், நான்கு வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை உள்ளன. நியாயமான வட்டி வீதத்தில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலம் பழங்குடியினருக்கு மாற்றுக் கடன் வசதிக்கு வகை செய்வதற்காகப் பழங்குடியினர் பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 12 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் உற்பத்திக்காகக் கடன் வசதியை அளிப்பதோடு மட்டுமின்றி, நுகர்வோர் கடன் வசதி களையும் அளிக்கின்றன. வேளாண்மை இடுபொருட்களை வழங்குவது குறித்து செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்து வதற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மலைவாழ் பழங்குடி யினருக்கு உதவும் பொருட்டு சிறு தொழில்களைத் தொடங்கு வதற்குரிய திட்டம் ஒன்று தனியாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.

42. வேலைக் குறைவாக உள்ள காலங்களில் ஏழை ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிதல், அவர்களுக்கு வேலை வாய்ப்பு களை அளித்தல் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தி லுள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த ஆதி திராவிடர் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கால்நடைக்கு 1,500 ரூபாய் என்ற வீதத்தில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. அவ்வுறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு கால் நடைக்கு ஆதி திராவிடர் நல நிதியிலிருந்து 500 ரூபாய் உதவித் தொகையையும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 1,000 ரூபாய் கடன் தொகையும் பெறத் தகுதியுடையவராவார். ஒவ்வோர் உறுப்பி னரும் இரு கால்நடைகளை வாங்குவதற்கு மட்டுமே மேற்கூறிய உதவியைப் பெறத் தகுதியுடையவராவார். இத்திட்டத்திற்காக ஆதிதிராவிடர்கள், கிறித்துவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் ஆகியோருக்கு வழங்க 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 17.72 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

43. பயிற்சி-வேலை வாய்ப்பு—தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தும் தேர்விற்கு பயிற்சியளித்தல்.—ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், சமயம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு எப்பொழுதெல்லாம் நடத்தப்படுகிறதோ அப்பொழுதே அத்தேர்வினை எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்கு சில்லாம்

பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் 5 மாதங்கட்கு பயிற்சியளிக்கப் படுகிறது. பயிற்சி காலத்தில் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1976-77 ஆம் ஆண்டு வர இம் மாநிலத்தில் 15 நிலையங்கள் செயல்பட்டன. 1977-78 முதல் 1981-82 ஆம் ஆண்டுகளில் தொகுதி IV பணிக்கான தேர்வை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தாததால் மேற்கூறிய கால அளவில் இத்திட்டம் செயல்படவில்லை. இருப்பினும் 198 –83 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.02 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**44. <u>அனைத்திந்திய அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேர்விற்குமுன் பயிற்சி அளிக்கும் நிலையம் :</u>**

இந்திய ஆட்சிப் பணி இந்தியகாவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்கு தேர்விற்குமுன் பயிற்சி அளிக்கும் நிலையம் 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்நிலையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர் இந்நிலையத்துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு உணவுக் கட்டணமாக ரூ. 100 வழங்கப்படுகின்றது. இந்தத் தொகையை அதிகரிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அனைத்திந்திய பணிகளுக்கான தேர்வுகளில் தேறிய ஒவ்வொருவருக்கும் ரூ. 1, 000 மானியம் அளிக்கப் படும். இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 41 மாணவர்கள் அனைத்திந்தியப் பணிகளில் நியமிக்கப்படுவதற்கு இறுதியாக தெரிந்தெடுக்கப்பட்டனர். சென்னையிலுள்ள தேர்வுக்கு முன்–பயிற்சி அளிக்கும் நிலையத்திற்கு துணையாக தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் துணை நிலையங்கள் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

<u>பொது நல்வாழ்வு நிலை வீட்டு வசதி</u>

<u>5. வீட்டுமனைகள் வழங்கும் திட்டம்:</u>

எங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இந்த நிலங்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதி திராவிடர்கள்/பழங்குடியினருக்கு வீட்டு மனைகளாக வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாத போது 1894 ஆம் ஆண்டு நிலங்களை வகைப்படுத்துதல் I ஆம் சட்டத்தின்கீழ் தனியார் நிலங்களை கையகப்படுத்தி ஆதி திராவிடர்கள் பழங்குடியினருக்கு வீட்டுமனைகளாக வழங்கப்படுகிறது.



தகுதி வாய்ந்த குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்படுகின்ற ஒவ்வொரு வீட்டுமனையின் அளவு 3 சென்ட் ஆகும். 1949ஆம் ஆண்டிலிருந்து 1981-82 ஆம் ஆண்டுவரையில் (31-12-81) ஆம் நாளன்று இருந்தவாறு, 3, 78, 213 மனைகள் வழங்குவதற்குரிய 23, 695. 53 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டது. இதில் 3, 19, 897 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும். 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ரூ 935.21 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயன்ற வரையில் சாதி இந்துக்கள் வாழ்கின்ற குடியிருப்புகளுக்கு அருகிலேயே ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினர் வீட்டு மனைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 1982-83ஆம் ஆண்டில் ரூ. 125.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர் என்னும் உணர்வைப் போக்கவும், எல்லா வகுப்பு மக்களிடையே உள்ளத்தளவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும் உண்மையிலேயே நலிந்த பிரிவினர் அனைவருக்கும் உதவி புரியவும் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகளை வழங்குதல் வீடு கட்டிக்கொடுத்தல் என்னும் திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட வீட்டு மனைகளில் கட்டப்பட்ட வீடுகளில் ஆதி திராவிடர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள் உயர் வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள் ஆகியோருக்கு முறையே 80 சதவீதம் 10 சதவீதம் 10 சதவீதம் என்று ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1982–83ஆம் ஆண்டில் தேசிய கிராமப்பகுதி வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக கையகப் படுத்தப்பட்ட மனைகளை சமப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**46. <u>தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிநிறுவனம்</u>**

இந்நிறுவனம் 1973-74 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆதி திராவிடர்களுக்கு மீனவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருதல் மாணவர் இல்லங்கள் பள்ளிக் கட்டிடங்கள் சமுதாய கூடங்கள் ஆகியவற்றைக்கட்டுதல் ஆகிய பணி இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கும் இந்நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது. இந்நிறுவனம் இப்பணியை நிறைவேற்ற இயலும் பொருட்டு ஆதிதிராவிடர் வளர்ச்சி நிறுவனத்திற்கு மாநில அரசு முதலீடு செய்து நிதியுதவி அளிப்பதற்காக மாநில அரசுக்கு மத்திய அரசு உதவி புரியும் திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. பங்கு

முதலீட்டில் 49 சதவீதம் தொகையை மத்திய அரசும் 51 சதவீதத் தொகையை மாநில அரசும் அளிக்கின்றன. இத்தொகை வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிவதற்குரிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடக்கச் செலவுத் தொகையாகப் பயன்படுத்தப்படும். ஆதிதிராவிடர்கள் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்குவதற்காக மொத்தச் செலவில் 25 சதவீதத்தொகை இந்த தொடக்கச் செலவுத் தொகையிலிருந்து 4 சதவீத வட்டிக்கு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இது தொடர்புடைய திட்டங்களின்கீழ் அளிக்கப்படும் உதவித் தொகையோடு மேற்கொண்டும் அளிக்கப்படும் பயனாகும். ஆதி திராவிடர்களுக்கு நிறுவனங்கள் எளிதில் நிதியுதவிப் பெறுவதை இது உறுதிபடுத்துகிறது. 1981–82 திருத்திய மதிப்பீட்டின் படி ரூ. 2.98 கோடி மூலதன பங்குத் தொகையாகக் கருதப்பட்டு இத்தொகையில் ரூ. 0.98 கோடி 1980-81 ஆம்ஆண்டிற்குப் பொருந்தும். இதற்காக 1982-83 ஆம் ஆண்டிற்கு இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகர்ப் பகுதியிலும் கிராமப் பகுதிகளிலும் வாழும் ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிய இயலும் பொருட்டு இந்திய அரசு வழங்கும் மத்திய சிறப்பு உதவியை பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல் தொகுதி திட்டங்களை மேம்படுத்துதல் தொகுதி திட்டங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை கவனிக்க அந்த மத்திய சிறப்பு உதவியை கவனிக்க தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சி நிறுவனத்திடம் அளிப்பது என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது. மேற்கூறிய இந்நிறுவனம் இந்த மேம்பாட்டு வளர்ச்சிப் பணியை கவனிக்க இயலும் வண்ணம் இந்நிறுவனத்தின் நிர்வாகப் பணியாளர்கள் அமைப்பில் வளர்ச்சிப் பிரிவு ஒன்று கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகளை கவனிக்க 15 மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் பதவிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துவக்கச் செலவுத் தொகையும் அதற்கு ஈடான வங்கிக் கடனும் உரிய முறையில் உரிய காலத்தில் அளிக்க உதவி செய்யும் பொருட்டு பயனடைவோரை தெரிந்தெடுத்தல் விண்ணப்பங்களை பூர்த்தி செய்தல் ஆகியவற்றிற்கு தொடர்புடைய வளர்ச்சி வட்டாரங்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் ஏனைய முகவரமைப்புகள் ஆகியவற்றோடு மேற்கூறிய இந்த மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் தொடர்பை ஏற்படுத்துவர். மேற்கூறிய இந்நிறுவனம் 1981–82 ஆம் ஆண்டில் 2.22 கோடி ரூபாய் தொடக்கச் செலவுத் தொகையைக் கொண்டு 43, 291 குடும்பங்களுக்கு உதவி புரிய இயன்றது. மேலும் மேற்கூறிய இந்நிறுவனத்திடம் அளிக்கப்பட்டுள்ள மத்திய சிறப்புதவியை அதிக அளவிற்குப் பயன்படுத்த உறுதி செய்ய இந்நிறுவனம் நகர்ப்பகுதிகள் கிராமப் பகுதிகள் ஆகியவற்றில் வாழும் ஆதி திராவிடர்களுக்காக தொழிற்பேட்டைகள் தொழில் பிரிவுகள்



வருமானம் ஈட்டித் தரும் ஏனைய திட்டங்கள் ஆகியவற்றைத் தொடங்குவதற்காக எல்லாத் துறைகளுடனும் தொடர்பை ஏற்படுத்தி வருகிறது.

சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் மாணவர் இல்லங்கள் ஆகியவற்றைக் கட்டும் இந்நிறுவனத்தின் திட்டம் மன நிறைவளிக்கத்தக்க வகையில் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர்களுக்கும் மீனவர்களுக்கும் வீடுகளைக் கட்டித் தருவதற்காக 1981–82 ஆம் ஆண்டில் 200 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் 300 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராம வீட்டு வசதித் திட்டம்

கிராம வீட்டுவசதி திட்டத்தின்கீழ் கிராம வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 4,000 ரூபாய் செலவில் கிராமப் பகுதிகளில் வீடு கட்டப்படுகிறது. ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மேற்படாதவரும் இத்திட்டத்தின்மூலம் பயனடைவோருமான ஆதி திராவிடர் பழங்குடியினர் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனுக்கும் 1,000 ரூபாய் உதவித் தொகைக்கும் இத்திட்டம் வகை செய்கிறது. ஆதி திராவிடர்கள் பெரும் அளவில் உள்ள இடங்களில் வீடு கட்ட விழையும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேராதவரும் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெற தகுதியுடையவராவர். பயன்பெறும் ஆதி திராவிடர் பழங்குடியினருக்கும் வழங்கப்படுவதற்காக உதவி தொகை குறித்து ஆதி திராவிடர் பழங்குடியினர் நல 1982–83ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 450 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் கூட்டுறவுச் சங்கங்கள் (வீட்டு வசதி) பதிவாளரால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தின்கீழ் 31–1–83 நாள் வரையிலும் 88,934 வீடுகள் கட்டப்பட்டன. இவற்றில் 69,109 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கென கட்டப்பட்டவையாகும்.

47. துப்புரவுப் பணியாளர்கள் பெருக்குவோர் பணி நிலையை மேம்படுத்துதல்—துப்புரவுப் பணியாளர்கள் மலக் கூடையை தலைச் சுமையாக எடுத்து செல்லும் பழக்கம் நீடித்து வருவது குறித்து அரசு பெருங்கவலை கொண்டுள்ளது. பெருக்குபவர்களுக்கும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் தள்ளு வண்டிகள் கையுறைகள் புதை காலணிகள் தட்டுகள் சுரண்டு கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 432 தள்ளுவண்டிகளும் 216 தட்டுகளும் சுரண்டு கருவிகளும் ரூ. 1. 76 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. இத்திட்டத்தை செயற்படுத்த 1979-80ல் 2,980 தள்ளுவண்டிகள் வழங்க 58 நகராட்சிகளுக்கும் 390 தள்ளுவண்டிகள் 480 சுரண்டு கருவிகள் ஆகியவற்றை வழங்க 102 பேரூராட்சிகளுக்கும் ரூபாய் 9,66,400 வழங்கப்பட்டது.

1981–82 ஆம் ஆண்டில் 250 தள்ளுவண்டிகள் 250 சுரண்டு கருவிகள் தட்டுகள் ஆகியவற்றை ரூ 1,30,400 செலவில் 53 பேரூராட்சிகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

48. குடிநீர் வசதிகள்—ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் கிறிஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் நல்ல குடிநீர் வழங்குவதற்கென ஆதி திராவிடர் குடியிருப்புகளில் குடிநீர் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு குடிநீர் கிணறு தோண்டுவதற்காகும் உயர் அளவுச் செலவு வரம்பு ரூ. 7, 500 ஆகும். குடிநீர் கிணறுகள் தவிர, ஆதி திராவிடர்கள் பழங்குடியினர் கிறிஸ்தவர்களாக சமயம் மாறிய ஆதிதிராவிடர்கள் ஆகியோருக்காக ஆண்டுதோறும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் நிலமட்ட நீர்த்தேக்கங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு நிலமட்ட நீர்த்தேக்கம் கட்டவும் ஆழ்கிணறு தோண்டவும் உயர் அளவு செலவு வரம்பு ரூ. 15 000லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண திறந்த கிணறுகளுக்குப் பதிலாக இயன்ற அளவிற்கு துளை கிணறுகள் அமைக்கப்படும் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் கிறிஸ்தவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் குடிநீர் கிணறுகள் அமைத்துக் கொடுப்பதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 30.64 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக தமிழ்நாடு பரிசுச் சீட்டு நிதியிலிருந்து ரூ. 1 கோடி வழங்கப்படவிருக்கிறது.

49. மின்வசதி— ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய ஒவ்வொராண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957–58ஆம் ஆண்டிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 31–3–1981 ஆம் நாள் நிலவரப்படி 25,714 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு விட்டது.

1981–82 ஆம் ஆண்டில் புதிதாக உருவான 888 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படவிருக்கிறது.

50. சமுதாயக் கூடங்கள் ஆதிதிராவிடர் குடியிருப்பில் வாழும் மக்கள் திருமணம் கூட்டங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கென்று அக்குடியிருப்புகளில் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் 1971–72ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொன்றும் ரூபாய் 10,500 செலவில் சமுதாய கூடங்கள் கட்டித்தரப்பட்டன. 1974-75 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொன்றும் ரூபாய் 15,900 மதிப்பீட்டுச் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டிலும் 1981–82 ஆம் ஆண்டிலும் சமுதாயக் கூடங்கள் கட்டுதவற்காக ஏழு இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்கென 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



51. சமுதாய நிலையங்கள்:

ஆதி திராவிடர்கள் அவர்தம் குழந்தைகள் ஆகியோரிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச் செய்யும் பொருட்டு ஆடவர் சமூகப் பணியாளர் ஒருவரும், மகளிர் சமூகப் பணியாளர் ஒருவரும் குற்றேவலர் (பெண்) ஒருத்திக் கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்கள் தலைமையிடத்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள கிராமங்களில் தீவிர பிரச்சாரம் செய்கின்றனர். சிறார்களை நீராட்டி ஆரோக்கியமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தையும் அவர்கள் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலையங்களில் மத்திய உணவும் பல்வகை வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் ஆதி திராவிடர், பழங்குடியினர் சிறார்களுக்கு வழங்கப்படுகின்றன.

இச் சிறார்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 14 ரூபாய் செலவில் ஆண்டுக்கு இருமுறை உடைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1982–83 ஆம் ஆண்டில் 4.58 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

52. நீர்புற சலவைக் கூடம்:

1978-79 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வண்ணான் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு சலவைக் கூடம் அமைத்துத் தரும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சியில் செயற்படுத்தப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் இரண்டு பேரூராட்சிகளில் (மணவாள குறிச்சி, அருமனை) நீர்புற சலவைக கூடங்கள் கட்டித்தரப்பட்டன. 1980-81–ல் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆய்குடியிலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டைவட்டம், பரக்க..க் ...நளத்திலும் நீர்புற சலவைக் கூடங்கள் அமைக்கும் பணி ...டுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருகனூர், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலுள்ள ...லத்தூரிலும் நீர்புற சலவைக் கூடங்கள் அமைக்கும் பணி ...டுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டு ...பரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

53. தீண்டாமை ஒழிப்பு:

திருத்தி இயற்றப்பட்ட குடியுரிமைகள் கண்காணிப்புச் சட்டம் 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் முதற்கொண்டு நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டம் கண்டிப்பாகச் செயல்படுவதற்காக காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவித்தரத்தில் காவல்துறை அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

[1982 மார்ச் 17

தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தருமபுரி, சேலம், நீலகிரி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பதின்மூன்று சுற்றுக் காவல் படைகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு சுற்றுக் காவல் படையிலும் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஒருவரும், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் தலைமைக் காவலர் இருவரும், காவலர் இருவரும் உள்ளனர். 31-3-1981 அம் நாள் வரையில் சுற்றுக்காவல் படைகள் 8,600 **வழக்கு**களைப் பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,045 வழககுகளில் நீதிமன்றங்கள் தண்டனை வழங்கியுள்ளன.

குடியுரிமை கண்காணிப்புச் சட்டம் தொடர்பான குற்றங்களைப் பதிவு செய்து துரிதமான வகையில் விசாரித்து முடிவு செய்து நீதி வழங்கிட அரசு திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க ஆணையிட்டுள்ளது.

இச்சட்டத்தைச் செம்மையாக செயல்படுத்த அரசுக்கு ஆலோசனை நல்கிட மாநில அளவிலான உயர்நிலைக்குழுவை திருத்தியமைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

தீண்டாமைக் கொடுமையினை அகற்றுவதில் தூய்மையும் துப்புரவும் பேருதவியாக அமைவதால் தூய்மையாக துப்புரவுடன் பராமரிக்கப்படும் ஒவ்வொரு வட்டத்து ஆதிதிராவிடர் குடியிருப்பு ஒவ்வொன்றிற்கும் வானொலிப்பெட்டி பரிசாக வழங்கும் திட்டம் ஒன்றும் உள்ளது. இதற்கென 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை நகர்ப்புறம் நீங்கலாக) தீண்டாமை ஒழிக்க முனைப்பு மேற்கொள்ளும் இரண்டு கிராமங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசின் மதிப்பு 1,000 ரூபாய். இரண்டாவது பரிசின் மதிப்பு 500 ரூபாய் ஆகும். இதற்கென 1982-83 ஆண்டு ரூ. 0.23 லட்சம் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சனவரித் திங்கள் 24-ம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. இந்த வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை மக்களின் கவனத்தை ஈர்த்திட மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் ஆகியோரின் நலனுக்காக ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை எடுத்த நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடு ஒன்று 1978-79-லிருந்து அரசால் வெளியிடப்பட்டு வருகிறது. இது போன்று நடப்பாண்டிலும் சிறப்பு வெளியீடு வெளியிடப்பட்டது. தீண்டாமை ஒழிப்பு பற்றி விளக்கச் செய்திப்படம் ஒன்று வெளியிடுவதற்கு அரசு கருதுகிறது.



1982 மார்ச் 17

## 54. கலப்புத்திருமணம்

சாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக கலப்புத் திருமணங்கள் செய்துகொண்டுள்ள தம்பதிகளுக்கு தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968-69 இல் கொண்டுவரப்பட்டது. கிறித்துவ சமயத்திற்கு மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கும் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதி முதல் இத்திட்டம் பொருந்துமாறு நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போது கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் பின்வரும் பரிசுகளும் சலுகைகளும் பெறத் தகுதியுடையவராவர்.

(i) 8 கிராம் (14 காரட்டு) எடையுள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(ii) தம்பதிகளின் ஆண்டு வருமானம் 6,000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் திருமண செலவு வகையில் 300 ரூபாயும் தேசிய மயமாக்கப்பட்ட ஒரு வங்கியில் தம்பதிகளின் பெயரில் கூட்டாக 5 ஆண்டுக்காலவைப்பீட்டுக் கணக்கில் முதலீடு செய்ய 4,000 ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படும்.

21-8-1979 முதல் மேற்சொன்ன சலுகைகள் மனைவியை இழந்த/கணவனை இழந்தவர்களுக்கும் (குழந்தைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி) மணவிலக்கு பெற்றவர்களுக்கும் குழந்தைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி) நீட்டிக்கப்பட்டுள்ளன. கலப்பு மணம் புரிந்து கொண்ட தம்பதிகளின் பெயரில் கூட்டாக அவர்களின் விருப்பப்படி ஆறு அல்லது ஏழு ஆண்டு காலத்திற்குதேசிய சேமிப்பு சான்றிதழ்களாக VI அல்லது VII வெளியீடு) ரூபாய் 4000 ரொக்கத் தொகை வழங்கவும் கருதப்பட்டுள்ளது. ஆனால் அத்தம்பதியினர் தேசிய சேமிப்பு சான்றிதழை விற்கவோ அடமானம் வைக்கவோ கூடாது. ஆறு ஆண்டுக் காலத்திற்குள் அவர்கள் பிரிந்து விட்டால் வட்டி உட்பட சேர்ந்துள்ள தொகை முழுவதும் அரசுக்குச் சேரும்.

(iii) கலப்புத் திருமணம் செய்த தம்பதியினருக்குப் பிறக்கும் குழந்தைகள் பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு இணங்க தந்தையின் சாதியோ தாயின் சாதியோ சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர். ஒரு குழந்தை தொடர்பாக அளிக்கப்படும் உறுதிமொழி அத்தம்பதியினரின் மற்ற குழந்தைகளுக்கும் சாரும்.

(iv) 1979-80 ஆம் ஆண்டு முதல் மேல்நிலை வகுப்பில் அல்லது அதற்குச் சமமான வகுப்பில் தேறியவர்களுக்கு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். முதலாம் ஆண்டு பட்டப்படிப்பிற்காக ஆறு இடங்கள் கலப்புத் திருமண தம்பதிகளின் பிள்ளைகளுக்கென்று ஒதுக்கப்படுகின்றன.

இத் திட்டம் துவங்கியதிலிருந்து 19-3-1981 வரை பழைய திட்டத்தின்கீழ் 843 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தம்பதியினருக்கும் ரூ. 4,300 என்ற வீதத்தில் 146 தம்பதியருக்கு ரொக்கமாக வழங்கப்பட்டன.

இத் திட்டத்திற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 2.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

55. இறுதிச் சடங்குகளுக்கு தொகை அளித்தல்

ஆதி திராவிடர்கள் பழங்குடி மக்கள் கிறிஸ்துவ மதத்திற்கு சமயம்மாறிய ஆதி திராவிடர்கள் குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட்டால் இறுதிச் சடங்குகளுக்காக ரூபாய் 50 நிதி யுதவி வழங்கும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இக்குடும்பங்களின் எளிய பொருளாதார நிலையையும் வறுமைச் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஈமக்கடனுக்கும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 6.91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டங்கள்.

(தன்னிறைவுத் திட்டம்)

56. இம் மாநிலத்தில் 1979–80 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட 69 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட 69 வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள குடியிருப்புகளுக்கு பின் வரும் வசதிகளைச் செய்து கொடுக்க ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை 1980-81 வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 75 இலட்சம் ஒதுக்கியது.

(1) குடிநீர் வழங்கல்

(2) ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் இடுகாடுகளுக்கும் இணைப்புச் சாலைகள் போடுதல், சிறு பாலங்கள் அமைத்தல், இடுகாடுகள் அமைத்தல்.

(3) பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.

இத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 66.23 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகச் சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரைத் தவிர ஏனைய மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு இத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேற் சொன்ன திட்டம் 1982-83-ல் 150 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1982–83 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டிலும் இத்திட்டத்திற்காக ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



பழங்குடியினர் துணைத் திட்டம்:

57. தமிழ்நாட்டிலுள்ள பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகப் பழங்குடியினர் நலத் துணைத்திட்டம் என்று அழைக்கப்படும் சிறப்புத்திட்டம் ஒன்று பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் ஒன்பது பகுதிகளில் அதாவது, சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, ஏர்க்காடு, கல்ராயன் மலை, அரனூத்து மலை, சேலம் மாவட்டத்திலுள்ள பச்சை மலை, வட ஆர்க்காட்டில் ஜவ்வாது மலை, தென் ஆர்க்காட்டில் கல்ராயன் மலை. தருமபுரியில் சித்தேரி மலை, திருச்சிராப்பள்ளியில் பச்சை மலை ஆகிய இடங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலக் கட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள 15,000 பழங்குடி குடும்பத்தினரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு உதவி செய்வதே இத்துணைத் திட்டத்தின் மூல நோக்கமாகும். ஆண்டு ஒன்றுக்கு 3,000 பழங்குடியினருக்கு உதவி அளிக்கவேண்டும் என்று குறியீடு வரையறுக்கப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் துணைத் திட்டத்திற்காக ரூ. 2,896 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1980–81 இல் இத் திட்டத்திற்காக ரூ. 345.25 இலட்சமும் 1981-82 இல் ரூ. 393.65 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டு ரூ. 451·36 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில், தோட்டக் கலை மண் வளப் பாதுகாப்பு சிறிய நீர்ப் பாசனம், கூட்டுறவு, கால் நடை வளர்ப்பு, வன வளர்ப்பு, கல்வி பொது நலம், சமூக நலம், கிராமியத் தொழில்கள், பட்டு வளர்ப்பு, சாலைப் போக்குவரத்து, குடி நீர் வழங்கல், மின் இணைப்பு வழங்குதல் ஆகியவை அடங்கும்.

இத் திட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்பு தொடர்பான துறைகள் வசம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர்கள், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் தலைமைத் திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளாவர்.

ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இடம் ஒதுக்கீடு செய்வதற்கான நியதிகள்.

(i) கல்வி நிறுவனங்களில் செயல்பாடு

58. மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழில் கல்வி, நிறுவனங்கள் உட்பட கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் உரிய இடம் கொடுக்க 18 சதவீத இடங்கள் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

1980-81 இல் கலைகள், பட்டமேற்படிப்பு, மருத்துவம்' பொறியியல் முதலிய படிப்புகளில் ஆதி திராவிடர்/பழங்குடி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்ட விவரங்கள் (சதவீதத்தில்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| | சதவீதம். |
|---|---|
| (i) இளங்கலை வகுப்புகள் (பட்டப்படிப்பு) .. | 9 |
| (ii) பட்ட மேற்படிப்பு வகுப்புகள் .. .. | 9 |
| (iii) பொறியல் .. .. .. .. | 18.6 |
| (iv) பல்தொழில் பயிற்சிப் பள்ளி .. .. | 21 |
| (v) வேளாண்மை படிப்புகள்:— | |
| பி.எஸ்.சி. (வேளாண்மை) .. .. | 21.23 |
| பி.எஸ்.சி. (தோட்டக்கலை) .. .. | 25 |
| பி.ஈ. (வேளாண்மை) .. .. | 18 |
| பி.வி.எஸ்.ஸி. .. .. | 24.20 |
| பி.எப்.எஸ்சி. .. .. | 25 |
| (vi) மருத்துவப் படிப்புகள் ... .. .. | 13 |

(எம்.பி.பி.எஸ்., எம்.டி. எம்.எஸ் முதலியவை)

இதற்கென அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட குழு 9-3-1982 அன்று ஆதிதிராவிடர் நல அமைச்சரின் தலைமையில் கூடி, பொறியியல், மருத்துவம். வேளாண்மை. கால்நடை வளர்ப்பு மற்றும் கலைக் கல்லூரிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களை சேர்த்துக் கொள்வது குறித்து ஆய்வு செய்தது. பல் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் 1971-72-ல் 5.83 சதவீதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர், ஆனால் 1980-81 ஆம் கல்வி ஆண்டில் 21 சதவீதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதைக் கருதிப் பார்த்தால் அவர்களை மேற்கூறிய பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்வது அதிகரித்துள்ளது என்பதை அறியும்போது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. இது போலவே பொறியியல் கல்லூரிகளிலும் 1971—73-ல் 4.37 சதவீதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்: ஆனால் 1980-81 18.6 சதவீதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதிலிருந்து



பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்று தெரியவருகிறது.

(ii) அரசுப் பணிகளில் நியமனம்— மாநில அரசுப்பணிகளில் 18 சதவிகித இடங்கள், ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத் தலைவரும் தலைமைச் செயலகத் துறைகளும் ஆண்டுதோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்பவேண்டும் என்று வரையறுக்கப் பட்டுள்ளதன் மூலம், இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும், அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆராய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், ஆதி திராவிடர் நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரைச் செயலாளராகவும் கொண்ட உயர் நிலைக்குழு ஒன்று செயல்பட்டு வருகின்றது. அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆதி திராவிடர் களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டுள்ள இடங்கள் (சதவீதத்தில்) வருமாறு:—

| | சதவீதம். |
|---|---|
| அரசுத் துறைகள் .. .. .. .. | 13 |
| பொதுத் துறை நிறுவனங்கள் .. .. .. | 11 |

கண்காணிப்புத் துணைக் குழு —பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத்துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு "உயர் அதிகாரக் கண்காணிப்புக் குழு" ஒன்றை அரசு அமைத்துள்ளது. இது உயர்நிலைக்குழுவின் நிலையான துணைக் குழுவாகும், ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு குறித்த விதிகளை பதவி உயர்வு, பதவி மாற்றம் மூலம் செய்யப்படும் அனைத்து நியமனங்களுக்கும் பொருந்தச் செய்வது பற்றிய செயற் குறிப்பை இக்குழு ஆய்வு செய்யும். மேலும் பல நிலைகளில் செய்யப்படும் பணி நியமனங்களை மீண்டும்ஆராய்ந்து தற்போதுள்ள நிலையினை மதிப்பீடு செய்து, அரசுப் பணிகளில் ஆதி திராவிடர் பழங்குடியினருக்குப் போதுமான பிரதி நிதித்துவம் கிடைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வழிவகைகளையும் தெரிவிக்கும்.

59. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் —

கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் அடிமைத்தளைகளில் வீழ்ந்து விடாமல் நல்வாழ்வு வாழ வகை செய்வதில் இந்த அரசு எப்போதும் ஆர்வம் காட்டி வருகிறது. இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள்

வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரையில் தமிழ் நாட்டில் 10 மாவட்டங்களில் 2,929 கொத்தடிமைகள் கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 2,617 பேருக்கு ஏற்கனவே விவசாய நிலம் வழங்கப்பட்டும் வேலை வாய்ப்பு அளித்தும், பயன்பெறும் கடன் வேளாண்மைக் கடன்களும், வழங்கப்பட்டுள்ளன. இதுவரை கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலையில் 24,945 கொத்தடிமைத் தொழிலாளர்கள் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். பழங்குடி மக்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டம் மிகப்பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்துடன் செயல்படுத்தினால் கொத்தடிமையிலிருந்து விடுதலைபெற்ற தொழிலாளர்களின் சமூக பொருளாதார நிலையில் உயர்வர் என அரசு கருதுகிறது.

60. 31ஆம் எண்ணுள்ள இம்மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 41.12 கோடி (ஈட்டிய செலவு உட்பட) செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதோடு ஏனைய மூன்று மானியக் கோரிக்கையின் கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்திற்காகச் செலவு செய்யக் கருதியுள்ள தொகை பற்றிய விவரங்கள் வருமாறு:

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| மானியக் கோரிக்கை எண் 43 பல்வகை .. .. | 0.0026 |
| மானியக் கோரிக்கை எண். 55 பல்வகை மூலதனச் செலவு | 5.5003 |
| மானியக் கோரிக்கை எண். 56 கடன்களும் முன் பணமும் | 0.7361 |
| மொத்தம் | 6.2390 |

ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக மேற் சொன்ன மானியக் கோரிக்கைகள் அனைத்தின்கீழும் மொத்தத்தில் 47.36 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே, இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய மக்களைப்போல் ஆதி திராவிடர் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.



7.2. தொழிலாளர் கல்வித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறது. சென்னை, வட்டாரத் தொழிலாளர் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள தொழிலாளர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். தொழிலாளர்-ஆசிரியருக்கும் தொழிலாளர் பயிற்சியாளர்களுக்கும் ஒட்டு மொத்தத்தொகை வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் அவர்கள் பணிக்கு வராதிருக்கும் காலம் ஊதியத்துடன் கூடிய பணி நாளாகக் கருதப்படுகிறது

7.3. குடும்பங்களுக்கு துணை வருவாய் கிடைப்பதற்காக மகளிருக்கு உதவி புரியும் நலத்திட்டமாக புத்தகங்கள் கட்டுதல் மேலுறைகள் தயாரித்தல் ஆகிய பணிகள், சென்னை நகரிலும், மற்றும் வெளியூர்களிலும் உள்ள சமூக நல நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

7.4. கதர்-கிராமத் தொழில்களை மேம்படுத்துவதற்காக கதர்-கிராமத் தொழில் வாரியத்திலிருந்து ஈச்சம் பாய்கள், சோப்புகள், கதர் துணிகள் முதலியன கொள்முதல் செய்யப்படுகின்றன.

7.5. தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட சென்னை அரசு அச்சகக் குழு (கவர்ன்மெண்ட் பிரஸ் பார்ட்டி) அதன் உறுப்பினர்கள் இறக்க நேரிடின் அன்னாரின் குடும்பத்திற்குத் தேவையான அவசர உதவிகளைச் செய்து வருகிறது. இச்சங்கத்தில் 1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி முடிய 3,021 உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழு, 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி முதல் 1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வரை இறந்த தொழிலாளர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு 49,681 ரூபாய் வழங்கியுள்ளது.

7.6. எழுதுபொருள் அச்சுத்துறையின் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே எப்பொழுதுமே நல்லுறவு நிலவி வருகிறது. பணியாளர்களின் குறைகளைக் கேட்டு அவற்றை நீக்குவதற்கென எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர் முறையாக நேரம் ஒதுக்குகிறார். மைய அச்சகம் மற்றும் சென்னை; வெளியூர்களிலுள்ள அதன் கிளை அச்சகங்களிலும் நிலவி வரும் நல்லுறவான சூழ்நிலையினால் இத்துறை சிறந்த முறையில் செயல்படுகிறது. இவ்வச்சகம் ஏற்றுக்கொண்ட சிறப்புப் பணிகள் அனைத்தையும் குறித்த காலக் கெடுவுக்கு முன்னரே அச்சிட்டு முடித்துக் கொடுத்துவிடுவது சிறந்த சாதனையாகும். இங்கு எப்போதும் நிலவி வரும் தொழில் அமைதியும், பணியாளர்களின் உற்சாகமான ஒத்துழைப்பும் போற்றுதற்குரியன.

ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத் துறை.

1982—83 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு.

இணைப்பு I.

ரூபாய் ஆயிரத்தில்

| தொடர் எண்ணும் திட்டத்தின் விவரங்களும். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். மத்திய அரசும் மாநில அரசும் சமமாக பங்கிட்டுக் கொண்ட திட்டங்கள். | | மாநிலத் திட்டங்கள் | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம் | | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர்கள். | பழங்குடியினர், | ஆதி திராவிடர்கள், | பழங்குடியினர். | ஆதி திராவிடர்கள். | பழங்குடியினர். | ஆதி திராவிடர்கள். | பழங்குடியினர். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | 53,852 | 727 | 2,31,701 | 11,848 | 1,32,961 | 7,475 | 4,08,514 | 11,903 | 4,28,564 |
| I கல்வி | | | | | | | | | |
| 1 படிப்பு .. | 23130 | .. | 4,717 | 68 | 11,975 | 96 | .. | .. | .. |
| தவித் .. தொகை | 213 | 113 | 103ச | .. | 16,871 | 179 | 63,210 | 456 | 63,666 |
| | | | 6.00((எல்) | | 100(எல்) | | | | |
| | | | 101ச(எல்) | | | | | | |
| 2 பள்ளிகள் | .. | .. | 2,632 | 1,235 | 36,385 | 2,798 | 39,017 | 4,033 | 43,350 |
| 3 நண்பகல் உணவு | .. | .. | 571 | .. | 4,065 | .. | 4,636 | .. | 4,636 |
| 4 பள்ளிக் கட்டிடம் | .. | .. | 1,098 | 150 | 881 | 133 | 12,480 | 284 | 12,764 |
| —கட்டுதல்பழுது பார்த்தல். | | | 1,050 | 1 (ஸி) | (ஸி) | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 சீருடைகள் .. | .. | .. | 2,243 | 32 | 6,963 | 319 | 9,206 | 351 | 9,557 |
| 6 சாரணப் பயிற்று நர்-சாரண-சாரணி யர்க்குச் சீருடை வழங்கல் | .. | .. | 64 | 64 | .. | .. | 64 | 64 | 128 |
| 7 பாடப் புத்தகங்கள், நோட்டு புத்தகங் கள், எழுது பல கைகள் வழங்குதல் பள்ளிகளுக்குச் சாதனங்கள் வழங்குதல். | .. | .. | 2,838 | 147 | .. | .. | 2,838 | 147 | 2,985 |
| 8 ஆசிரியர்களுக் கான இல்லங்கள். | .. | .. | 200 | 200 | 29 | 15 | 229 | 215 | 444 |
| 9 கல்விச் சுற்றுலா | .. | .. | 26 | 9 | .. | .. | 26 | 9 | 35 |
| 10 பரிசுப் பொருட்கள் | .. | .. | .. | .. | 58 | .. | .. | | 85 |
| 11 மாணவர் இல்லங் கள்—பராமரிப்புச் செலவுகள். | .. | .. | 3,194 | 294 | 36,490 | 3,232 | 3,9684 | 3,526 | 43,210 |
| 12 மாணவர் இல்லங் களுக்குரிய கட்டி டங்கள் கட்டு தலும் பராமரித் தலும். | 10,000 (ஸி) | 500 ச(ஸி) | 13,500 (ஸி) | 500 (ஸி) | 214 | 6 | 23,714 | 1,006 | 24,720 |
| 13 பகுதிநேர சிற்றா சிரியர்கள். | .. | .. | .. | .. | 129 | 8 | 129 | 8 | 137 |
| 14 உணவு மானியம் | .. | .. | .. | .. | 1,049 | 117 | 1,049 | 117 | 1,166 |
| 15 ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு தகுதியின் அடிப் படையில் வழங் கப்படும் மானியம். | .. | .. | 950 | .. | .. | .. | 950 | | 950 |
| 16 தேர்வு முன் பயிற்சி நிலை யங்கள். | 509சச | .. | 122 | .. | .. | .. | 631 | .. | 651 |
| 17 கல்வி நிலையங் கள், பல்கலைக் கழகங்கள் ஆகிய வற்றிற்கு இழப் பீட்டுத் தொகை. | .. | .. | .. | .. | 252 | .. | 252 | .. | 252 |
| 18 கல்லூரி மாண வர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல். | .. | .. | 100 | .. | .. | .. | 100 | .. | 100 |
| 19 திறமையான மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை(பயிற்சி நிலையங்கள்) | .. | .. | .. | .. | 320 | .. | 320 | .. | 320 |
| 20 பட்டயக் கணக் கர் தேர்வுகள். | .. | .. | .. | .. | 10 | .. | 10 | .. | 10 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21 தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி. | .. | .. | 103 47ச | .. | 263 | .. | 413 | .. | 413 |
| 22 திறமையான மாணவ, மாணவிகளுக்குத் தனிப் பயிற்சி. | .. | .. | .. | .. | 25 | . | 25 | .. | 25 |
| 23 சிறார் நல மையங்கள் ஏற்படுத்தல். | .. | .. | 577 | .. | .. | .. | 577 | .. | 577 |
| 24 ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறையைச் சேர்ந்த கல்விப் பிரிவில் கூடுதல் பணியாளர்கள் நியமித்தல். | .. | .. | 630 | .. | .. | .. | 630 | .. | 630 |
| 25 தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஆதி திராவிடர் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி உதவித்தொகை. | .. | .. | 261 | .. | 1,033 | .. | 1,294 | | 1,294 |
| மொத்தம் I கல்வி | 33,852 | 615 | ,578 | 2,700 | 1,17,112 | 6,903 | 2,01,542 | 10,216 | 2,11,758 |



II வேலைவாய்ப்பு-பொருளாதார முன்னேற்றம்—

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26 வேளாண்மை | .. | .. | 559 95ச | 161 | .. | .. | 654 | 161 | 815 |
| 27 கூட்டுறவு | .. | 52சச | 1 | .. | .. | .. | 1 | 52 | 53 |
| 28 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள். | .. | .. | 1,572 200ச | .. | .. | .. | 1,772 | .. | 1,772 |
| 29 குடிசைத் தொழில்கள் | .. | .. | 176 1ச | .. | 239 | 37 | 416 | 37 | 453 |
| 30 பயிற்சி உற்பத்தி நிலையங்கள். | .. | .. | .. | 50 | .. | .. | .. | 50 | 50 |
| 31 தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு உதவித் தொகை. | .. | .. | 600 25ச | 25 | .. | .. | 625 | 25 | 650 |
| 32 பயிற்சி வேலை வரையப்புப் பிரிவு 4. | .. | .. | 1 1ச | .. | .. | .. | 2 | .. | 2 |
| 33 தோட்டக்கலை | .. | .. | .. | .. | .. | 294 | .. | 294 | 294 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 34 சிறுவணிகக் கடன் | .. | .. | 1,000 (எல்) 100-(எல்)ச | 50 (எல்) | .. | — | 1,100 | 50 | 1,150 |
| 35 அலுவலகத் தேர்வுகளில் வெற்றி பெற சிறப்புப் பயிற்சி அளித்தல். | .. | ச1ச | | — | .. | .. | 2 | .. | 2 |
| 36 முப்படைகளில் கமிஷன் பதவி தரத்தில் நியமிக்கப் பெற ஆதி திராவிடர்-பழங்குடியினர்க்குத் தனிப்பயிற்சி அளித்தல். | — | — | .. | .. | 1 | .. | 1 | .. | 1 |
| 37 ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மகளிர்க்கு வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளை பழுதுபார்ப்பதில் பயிற்சி அளிக்கும் திட்டம். | — | — | 27 | .. | .. | .. | 27 | .. | 27 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 38 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் ஆதிதிராவிடர்களுக்கு நலம் பயக்கும் தனித் திட்டங்கள் (ஆதி திராவிடர்களுக்கான தனித் துணைத் திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவி). | .. | .. | 1,10,000 | .. | .. | .. | 1,10,000 | .. | 1,10,000 |
| மொத்தம் | .. | 52 | 1,14.360 | 286 | 240 | 331 | 1,14,600 | 669 | 1,15,269 |
| II வேலை வாய்ப்பும், பொருளாதார முன்னேற்றமும். | | | | | | | | | |
| II சுகாதாரம், வீட்டுவசதி ஏனைய திட்டங்கள்— | | | | | | | | | |
| 39 வீட்டு வசதிகள் | .. | .. | 30,000 (1) (வி) | 200 | .. | .. | 30,001 | 200 | 30,201 |
| 40 வீட்டுமனைகள் | .. | .. | 200(சா) 100 12,500 | .. | .. | .. | 12,800 | .. | 12,800 |
| 41 பொது சுகாதாரம் | .. | .. | 3,352 | .. | .. | .. | 3,352 | .. | 3,352 |
| 42 குடிநீர்க் கிணறுகள் | .. | .. | 2,462 244வி | 378 | .. | .. | 2,686 | 378 | 3,064 |

| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 43 | மருத்துவம் | .. | .. | .. | 25 | 147 | 241 | 147 | 266 | 413 |
| 44 | மின்வசதி | .. | .. | 1 | 1 | 1 | .. | 2 | 1 | 3 |
| 45 | சாலைகள் | .. | .. | .. | 110 | .. | .. | .. | 110 | 110 |
| 46 | விளம்பரம் (ஆதிதிராவிடர் வாரவிழா) | .. | .. | .. | .. | 33 | .. | 33 | .. | 33 |
| 47 | தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசுகள் | .. | .. | .. | .. | 23 | .. | 23 | .. | 23 |
| 48 | துப்புரவாக வைத்திருக்கும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குப் பரிசு. | .. | .. | .. | .. | 62 | .. | 62 | .. | 62 |
| 49 | சமுதாய நிலையங்கள்/கூடங்கள். | .. | .. | 150 | .. | 458 | .. | 608 | .. | 608 |
| 50 | கலப்புத் திருமணங்கள். | .. | .. | 250 | .. | .. | .. | 250 | .. | 350 |
| 51 | தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டு அதிகார மன்றம். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 52 | துணி வெளுக்கும் துறைகள் கட்டுதல். | .. | .. | 10<br>10(எல்) | ..<br>20 | ..<br>.. | ..<br>.. | ..<br>.. | ..<br>.. | ..<br>.. |



| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 53 | துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதலும், துப்புரவாளர்கள் சுத்தித் தொழிலாளர்கள் பணியை மேம்படுத்துதலும். | .. | .. | 2 | .. | .. | .. | 2 | .. | 2 |
| 54 | பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல். | ..<br>.. | ..<br>.. | 62சச<br>.. | .. | ..<br>.. | ..<br>.. | ..<br>.. | 62 | 62 |
| 55 | ஈமக்கடன்கள் செய்வதற்காக தொகை அளித்தல் | .. | .. | .. | .. | 691 | .. | 691 | .. | 691 |
| 56 | ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் | .. | .. | 7,500 | .. | .. | .. | 7,500 | .. | 7.500 |
| 57 | தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்குப் பங்கு மூலதன முதலீடு. | .. | 20.000ஜி | .. | .. | .. | .. | 20,000 | .. | 20,000 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 58 ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நல இயக்ககத்தில் கண்காணிப்புப் பிரிவு. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| மொத்தம் III சுகாதாரம், வீட்டு வசதி ஏனைய திட்டங்கள். | 20,000 | 62 | 56,763 | 715 | 1,415 | 241 | 78,178 | 1,018 | 79,196 |
| IV பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்— | | | | | | | | | |
| 59 பழங்குடியினர் மேம்பாட்டுக்கான துணைத்திட்டம் குறித்து முன்னோடி நடவடிக்கைக்காக ஒருங்கிணைப்பு மேம்பாட்டு திட்ட பணிகளுக்கான வல்லுநர் குழு. | .. | .. | .. | 38 | .. | .. | .. | 38 | 38 |
| 60 பழங்குடியினர் தங்கி பயிலும் வசதியுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும் பராமரித்தலும். | .. | .. | .. | 3,000 | .. | .. | .. | 3,000 | 3,000 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 61 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் திட்டம். | .. | .. | .. | 1,900 | .. | .. | .. | 1,900 | 1,900 |
| 62 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின்வசதி திட்டம். | .. | .. | .. | 1,450 | .. | .. | .. | 1,450 | 1,450 |
| 63 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின் கீழ் சிறு பாசனத் திட்டம், | .. | .. | .. | 1,125 | .. | .. | .. | 1,125 | 1,125 |
| 64 கல்ராயன் மலைக்கான நிருவாக அமைப்பை ஏற்படுத்துதல். | .. | .. | .. | 265 | .. | .. | .. | 265 | 265 |
| 65 பழங்குடியினர் ஆராய்ச்சி வளர்ச்சி. | .. | .. | .. | 99 | .. | .. | .. | 99 | 99 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 66 பழங்குடியினர் மேம்பாடு ஒருங்கிணைப்புத் திட்ட பகுதியால் 'பெஞ்ச்' சர்வே திட்டம். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 67 தொன்மைப் பழங்குடியினர் மேம்பாடு, | .. | .. | .. | 106 | .. | .. | .. | 106 | 106 |
| 68 பரவலாக வாழும் பழங்குடியினர் தொகுதிகள். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 69 ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் பகுதிகளில் பழங்குடியினருக்கு இல்லம் கட்டுதல். | .. | .. | .. | 135 | .. | .. | .. | 135 | 135 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 70 மகப்பேறு—குழந்தைகள் நல நிலையங்களை அமைத்தல். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| மொத்தம்—IV பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம். | .. | .. | .. | 8,121 | .. | .. | .. | 8,121 | 8,121 |
| V கொத்தடிமைகள் புது வாழ்வுத் திட்டம். | | | | | | | | | |
| 71 கொத்தடிமைகள் புது வாழ்வு. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 72 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வீட்டு வசதிக்கான உதவி. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 73 கொத்தடிமைகளுக்கான நிலக் குடியேற்றத் திட்டங்கள். | .. | .. | .. | 24 | .. | .. | .. | 24 | 24 |
| மொத்தம் V—கொத்தடிமைகள் புது வாழ்வுத் திட்டம். | .. | .. | .. | 26 | .. | .. | .. | 26 | 26 |
| VI நெறிப்படுத்தலும்—நிர்வாகமும்— | | | | | | | | | |
| (சா) 74 தலைமையிடம் மற்றும் மாவட்டப் பணியாளர்கள். | .. | .. | .. | .. | 2 (சா) 14,192 | .. | 14,194 | .. | 14,194 |
| மொத்தம்VI—நெறிப்படுத்தலும் நிர்வாகமும். | .. | .. | .. | .. | 14,194 | .. | 14,194 | .. | 14,194 |



சுருக்கம்.

(ரூபாய் ஆயிரத்தில்.)

| தொடர் எண்ணும் விவரங்களும். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். மத்திய மாநில அரசுகள் சம அளவில் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்.A | | மாநிலத் திட்டங்கள். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | பெரு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதிதிராவிடர். | பழங்குடியினர். | ஆதிதிராவிடர். | பழங்குடியினர். | ஆதிதிராவிடர். | பழங்குடியினர். | ஆதிதிராவிடர். | பழங்குடியினர். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| (I) கல்வி .. | 33,852 | 613 | 50,578 | 2,700 | 1,17,112 | 6,903 | 2,01,542 | 10,216 | 2,11,758 |
| (II) வேலை வாய்ப்பு பொருளாதார மேம்பாடு. | .. | 527 | 1,14,360 | 286 | 240 | 331 | 1,14,600 | 669 | 1,15,269 |
| (III) சுகாதாரம், வீட்டுவசதி, ஏனைய திட்டங்கள். | 20,000 | 62 | 56,763 | 715 | 1,415 | 241 | 78,178 | 1,018 | 79,196 |
| (IV) பழங்குடியினர் பகுதி துணைத் திட்டங்கள். | .. | .. | .. | 8,121 | .. | .. | .. | 8,121 | 8,121 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (V) கொத்தடிமைகள் புது வாழவுத் திட்டம். | .. | .. | .. | 26 | .. | ... | .. | 26 | 27 |
| (VI) நெறிப்படுத்தலும்—நிர்வாகமும் தலைமையிடப் பணியாளர்—மாவட்டப் பணியாளர்கள். | .. | .. | .. | .. | 14,194 | .. | 14,194 | .. | 14,194 |
| மொத்தம். | | | | | | | | | |
| வருவாய் சாட்டியது. | .. | .. | 200 | .. | 2 | .. | 202 | .. | 202 |
| வருவாய் அனுமதித்தது. | 23,852 | 227 | 1,90,288 | 11,297 | 1,32,859 | 7,475 | 3,47,201 | 10,852 | 3,65,998 |
| மூலதனம் .. | 30,000 | 500 | 24,002 | 501 | .. | .. | 54,002 | 1,001 | 55,003 |
| கடன்களும், முன்பணங்களும். | .. | .. | 7,211 | 50 | 100 | .. | 7,311 | 50 | 7,361 |
| பெரு மொத்தம். | 53,852 | 727 | 2,21,701 | 11,848 | 1,32,961 | 7,475 | 4,08,514 | 11,903 | 4,28,564 |

ச கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்கள்.
சச மத்திய, மாநில அரசுகள் சம அளவில் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள்.
சா சாட்டியது.
ஸி மூலதனம்.
எல் கடன்களும், முன்பணங்களும்.



## இணைப்பு II.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும் மாணவ, மாணவியரின் மொத்த எண்ணிக்கையும்.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | தொடக்கப் பள்ளிகள். ஓராசிரியர் பள்ளிகள் உட்பட பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவிகள். | மொத்தம். | நடுநிலைப் பள்ளிகள். பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | 5 | 2,101 | 2,331 | 4,432 | 1 | .. | 115 | 115 |
| 2 செங்கல்பட்டு .. | 107 | 14,092 | 12,570 | 26,662 | 19 | 2,539 | 1,540 | 4,079 |
| 3 வட ஆற்காடு .. | 156 | 11,798 | 11,865 | 23,663 | 4 | 1,377 | 1,197 | 2,574 |
| 4 தென் ஆற்காடு | 179 | 13,081 | 11,894 | 24,975 | 6 | 1,849 | 919 | 2,768 |
| 5 தஞ்சாவூர் .. | 154 | 8,158 | 8,049 | 16,207 | 7 | 1,418 | 1,204 | 2,622 |
| 6 திருச்சிராப்பள்ளி | 118 | 8,594 | 8,788 | 17,382 | 22 | 4,672 | 4,101 | 8,773 |
| 7 இராமநாதபுரம் | 23 | 1,738 | 1,423 | 3,161 | 3 | 332 | 138 | 470 |
| 8 மதுரை .. | 20 | 1,890 | 1,964 | 3,854 | 8 | 471 | 505 | 976 |
| 9 சேலம் .. | | 814 | 661 | 1,475 | 2 | 474 | 386 | 860 |
| 10 தர்மபுரி .. | 8 | 363 | 365 | 728 | 2 | 559 | 405 | 964 |
| 11 கோயம்புத்தூர் | 18 | 1,024 | 833 | 1,857 | 2 | 359 | 342 | 7 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12 நீலகிரி .. | 5 | 134 | 122 | 256 | 2 | 317 | 219 | 536 |
| 13 திருநெல்வேலி .. | 21 | 1,345 | 1,245 | 2,590 | .. | .. | .. | .. |
| 14 கன்னியாகுமரி .. | 4 | 279 | 270 | 549 | .. | .. | .. | .. |
| 15 புதுக்கோட்டை | 9 | 501 | 421 | 922 | 1 | 208 | 158 | 366 |
| 16 பெரியார் .. | 4 | 152 | 162 | 314 | .. | .. | .. | .. |
| மொத்தம் — | 843 | 66,064 | 62,963 | 1,29,027 | 79 | 14,575 | 11,229 | 25,804 |



ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் எண்ணிக்கையும் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கையும்

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | உயர்நிலைப் பள்ளிகள். | | | | மேல்நிலைப் பள்ளிகள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவிகள். | மொத்தம். | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவிகள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | .. | .. | .. | .. | 1 | 1,275 | 916 | 2,191 |
| 2 செங்கல்பட்டு | 7 | 1,592 | 840 | 2,432 | .. | .. | .. | .. |
| 3 வட ஆற்காடு .. | 1 | 591 | 400 | 991 | .. | .. | .. | .. |
| 4 தென் ஆற்காடு | 5 | 635 | 486 | 1,121 | 2 | 1,705 | 1,409 | 3,114 |
| 5 தஞ்சாவூர் .. | 2 | 209 | 110 | 319 | .. | .. | .. | .. |
| 6 திருச்சிராப்பள்ளி | 4 | 235 | 98 | 333 | .. | .. | .. | .. |
| 7 இராமநாதபுரம் .. | 1 | 311 | .. | 311 | .. | .. | .. | .. |
| 8 மதுரை .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 9 சேலம் .. | 1 | 208 | 112 | 320 | .. | .. | .. | .. |
| 10 தருமபுரி .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 11 கோயம்புத்தூர் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 12 நீலகிரி .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 திருநெல்வேலி .. | — | — | — | — | 1 | 434 | 216 | 650 |
| 14 கன்னியாகுமரி .. | — | — | — | — | — | .. | .. | .. |
| 15 புதுக்கோட்டை .. | — | — | .. | .. | — | .. | .. | .. |
| 16 பெரியார் | — | — | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | 21 | 3,781 | 2,046 | 5,827 | 4 | 3,414 | 2,541 | 5,955 |



இணைப்பு II—தொடர்ச்சி.

ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளின் எண்ணிக்கையும் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கையும்

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | மொத்த பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் | வாடகைக் கட்டிடங்களில் செயல்படும் பள்ளிகளின் எண்ணிக்கை. | அரசு கட்டிடங்களில் செயல்படும் பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 சென்னை .. .. | 7 | 3,376 | 3,362 | 6,738 | | 7 |
| 2 செங்கல்பட்டு .. .. | 133 | 18,223 | 14,950 | 3,31,173 | .. | 125 |
| 3 வட ஆற்காடு .. .. | 161 | 13,766 | 13,462 | 27,228 | 4 | 147 |
| 4 தென் ஆற்காடு .. .. | 192 | 17,270 | 14,708 | 31,978 | 2 | 190 |
| 5 தஞ்சாவூர் .. .. | 163 | 9,785 | 9,363 | 19,148 | 39 | 124 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 144 | 13,501 | 12,987 | 26,488 | 42 | 102 |
| 7 இராமநாதபுரம் .. .. | 27 | 2,391 | 1,561 | 3,651 | .. | 27 |
| 8 மதுரை .. .. | 28 | 2,361 | 2,469 | 4,830 | 1 | 27 |
| 9 சேலம் .. .. | 15 | 1,498 | 1,150 | 2,655 | 1 | 14 |
| 10 தருமபுரி .. .. | 10 | 922 | 770 | 1,692 | .. | 10 |
| 11 கோயம்புத்தூர் .. .. | 20 | 1,383 | 1,175 | 2,558 | 2 | 18 |
| 12 நீலகிரி .. .. | 7 | 451 | 341 | 792 | 3 | [illegible] |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 திருநெல்வேலி .. .. | 22 | 1,779 | 1,461 | 3,240 | .. | 22 |
| 14 கன்னியாகுமரி .. .. | 4 | 279 | 270 | 549 | 1 | 3 |
| 15 புதுக்கோட்டை .. .. | 10 | 709 | 579 | 1,288 | 1 | 9 |
| 16 பெரியார் .. .. | 4 | 152 | 162 | 314 | .. | 4 |
| மொத்தம் .. | 947 | 87,834 | 78,779 | 1,66,613 | 113 | 834 |



## இணைப்பு III

பழங்குடியினர் பயிலும் பள்ளிகள் பற்றிய விவரங்கள் (பழங்குடியினரின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப்பகுதிகளின் கீழ்வரும் பள்ளிகளும் ஒருங்கிணையாத வளர்ச்சித் திட்டப் பகுதிகளின் கீழ் வரும் பள்ளிகளும் உட்பட)

தங்கிப்பயிலும் பள்ளிகள்.

| மாவட்டம். | தொடக்கப்பள்ளிகள். | | | | மொத்தம். | | நடுத்தரப் பள்ளிகள். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பழங்குடியினரின் ஒருங்கிணையாத வளர்ச்சித் திட்டப்பகுதியின் கீழ் வருபவை. | | பழங்குடியினரின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப்பகுதியின் கீழ் வருபவை. | | | | | |
| | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகள் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகள் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்க. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | 1 | 50 | .. | .. | 1 | 50 | .. | .. |
| 2 வட ஆர்க்காடு .. | 1 | 50 | 4 | 200 | 5 | 250 | .. | .. |
| 3 தென் ஆர்க்காடு | 4 | 250 | 16 | 800 | 20 | 1,050 | .. | .. |
| 4 தருமபுரி .. | 1 | 100 | 7 | 350 | 8 | 450 | .. | .. |
| 5 சேலம் .. | 9 | 476 | 13 | 650 | 22 | 1,126 | 3 | 370 |
| 6 நீலகிரி .. | 18 | 1,150 | .. | .. | 18 | 1,150 | 3 | 310 |
| 7 கோயம்புத்தூர் | 11 | 520 | .. | .. | 11 | 520 | 2 | 132 |
| 8 பெரியார் .. | 5 | 265 | .. | .. | 5 | 265 | 1 | 100 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 திருச்சிராப்பள்ளி | 10 | 410 | 4 | 185 | 14 | 595 | .. | .. |
| 10 மதுரை .. | 2 | 68 | .. | .. | 2 | 68 | .. | 60 |
| 11 இராமநாதபுரம் | 1 | 11 | .. | .. | 1 | 11 | .. | .. |
| 12 திருநெல்வேலி | 1 | 66 | .. | .. | 1 | 66 | .. | .. |
| 13 கன்னியாகுமரி | 1 | 105 | .. | .. | 1 | 105 | 1 | 115 |
| மொத்தம் .. | 65 | 3,521 | 44 | 2,185 | 109 | 5,706 | 11 | 1,087 |



## இணைப்பு III—தொடர்ச்சி.

பழங்குடியினர் பயிலும் பள்ளிகள் பற்றிய விவரங்கள் (பழங்குடியினரின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப்பகுதிகளின் கீழ்வரும் பள்ளிகளும் ஒருங்கிணையாத வளர்ச்சித் திட்டப்பகுதிகளின் கீழ்வரும் பள்ளிகளும் உட்பட)—தொடர்ச்சி.

| மாவட்டம். | தங்கிப்பயிலும் பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள். | | தங்கிப்பயிலும் பள்ளிகள், மேல் நிலைப்பள்ளிகள். | | தங்கிப்பயில வசதியில்லாத பள்ளிகள். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. |
| (1) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 1 சென்னை .. | ... | .. | .. | .. | .. | .. | 1 | 50 |
| 2 வட ஆற்காடு .. | 1 | 100 | .. | .. | .. | .. | 6 | 350 |
| 3 தென் ஆற்காடு .. | 1 | 400 | .. | .. | .. | .. | 21 | 1,450 |
| 4 தருமபுரி .. | .. | .. | .. | .. | .. | .. | 8 | 450 |
| 5 சேலம் .. | .. | .. | 2 | 202 | .. | ... | 27 | 1,716 |
| 6 நீலகிரி .. | .. | .. | .. | .. | .. | .. | 21 | 1,460 |
| 7 கோயம்புத்தூர் .. | .. | .. | .. | .. | .. | .. | 13 | 65 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 பெரியார் .. | .. | .. | .. | .. | .. | .. | 6 | 36 |
| 9 திருச்சிராப்பள்ளி .. | .. | .. | .. | .. | .. | .. | 14 | 595 |
| 10 மதுரை .. | .. | .. | .. | .. | 1 | 84 | 4 | 212 |
| 11 இராமநாதபுரம் .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 11 |
| 12 திருநெல்வேலி .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 66 |
| 13 கன்னியாகுமரி .. | .. | .. | 1 | 130 | .. | .. | 3 | 350 |
| மொத்தம் .. | 2 | 500 | 3 | 350 | 1 | 84 | 126 | 7,727 |



## இணைப்பு IV.

ஆதிதிராவிடர்களுக்குரிய அரசு மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும் மாணவர்களின் எண்ணிக்கையும் (1981-82).

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | கல்லூரி மாணவர் இல்லங்கள். மாணவர்கள். | | கல்லூரி மாணவர் இல்லங்கள். மாணவியர். | | தொழிற் பள்ளி மாணவர் இல்லங்கள். மாணவர்கள் | | உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள். மாணவர்கள். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவியரின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | 3 | 700 | 1 | 30 | 1 | 250 | 2 | 280 |
| 2 செங்கல்பட்டு .. | 2 | 80 | .. | .. | .. | .. | 40 | 2,062 |
| 3 வட ஆற்காடு .. | 3 | 150 | .. | .. | .. | .. | 27 | 1,461 |
| 4 தென் ஆற்காடு .. | 3 | 190 | 1 | 50 | .. | .. | 47 | 3,801 |
| 5 தஞ்சாவூர் .. | 3 | 225 | 1 | 50 | .. | .. | 36 | 1,839 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 3 | 225 | .. | .. | 1 | 55 | 42 | 3,682 |
| 7 புதுக்கோட்டை .. | 1 | 200 | 1 | 75 | .. | .. | 16 | 914 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 மதுரை .. | 2 | 100 | 1 | 75 | 2 | 118 | 45 | 2,991 |
| 9 இராமநாதபுரம் .. | 1 | 50 | .. | .. | .. | .. | 55 | 3,822 |
| 10 திருநெல்வேலி .. | 2 | 80 | 1 | 50 | .. | .. | 40 | 2,190 |
| 11 கன்னியாகுமரி .. | 1 | 107 | 1 | 50 | 1 | 40 | 5 | 265 |
| 12 சேலம் .. | 2 | 260 | 1 | 75 | .. | .. | 37 | 1,669 |
| 13 தருமபுரி .. | 2 | 225 | .. | .. | .. | .. | 19 | 790 |
| 14 கோயம்புத்தூர் .. | 1 | 50 | .. | .. | 1 | 40 | 12 | 337 |
| 15 பெரியார் .. | 1 | 50 | .. | .. | .. | .. | 9 | 437 |
| 16 நீலகிரி .. | .. | .. | .. | .. | .. | .. | 9 | 590 |
| மொத்தம் .. | 30 | 2,692 | 8 | 455 | 6 | 503 | 441 | 27,630 |



இணைப்பு IV—தொடர்ச்சி.

ஆதிதிராவிடர்களுக்குரிய அரசு மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் (1981–82)—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள்—தொடர்ச்சி. மாணவியர். | | மொத்த மாணவர்கள். | | மொத்த மாணவியர். | | பெருமொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவியரின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவியரின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மொத்தமுள்ள மாணவ, மாணவியரின் எண்ணிக்கை. |
| (1) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 1 சென்னை .. | 3 | 345 | 6 | 1,230 | 4 | 375 | 10 | 1,605 |
| 2 செங்கல்பட்டு .. | 13 | 507 | 42 | 2,142 | 13 | 507 | 55 | 2,649 |
| 3 வட ஆர்க்காடு .. | 14 | 682 | 30 | 1,611 | 14 | 682 | 44 | 2,293 |
| 4 தென் ஆர்க்காடு .. | 15 | 1,130 | 50 | 3,991 | 16 | 1,180 | 66 | 5,171 |
| 5 தஞ்சாவூர் .. | 14 | 695 | 39 | 2,064 | 15 | 745 | 54 | 2,809 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 13 | 955 | 46 | 3,962 | 13 | 955 | 59 | 4,917 |
| 7 புதுக்கோட்டை .. | 5 | 217 | 17 | 1,114 | 6 | 292 | 23 | 1,406 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 மதுரை .. | 20 | 1,395 | 49 | 3,209 | 21 | 1,470 | 70 | 4,679 |
| 9 இராமநாதபுரம் .. | 16 | 947 | 56 | 3,872 | 16 | 947 | 72 | 4,819 |
| 10 திருநெல்வேலி .. | 25 | 1,105 | 42 | 2,270 | 26 | 1,155 | 68 | 3,425 |
| 11 கன்னியாகுமரி .. | 4 | 165 | 7 | 412 | 5 | 215 | 12 | 627 |
| 12 சேலம் .. | 12 | 576 | 39 | 1,929 | 13 | 651 | 52 | 2,580 |
| 13 தருமபுரி .. | 6 | 240 | 21 | 1,015 | 6 | 240 | 27 | 1,255 |
| 14 கோயம்புத்தூர் .. | 6 | 371 | 14 | 927 | 6 | 371 | 20 | 1,298 |
| 15 பெரியார் .. | 6 | 250 | 10 | 487 | 6 | 250 | 16 | 737 |
| 16 நீலகிரி .. | 4 | 275 | 9 | 590 | 4 | 275 | 13 | 865 |
| மொத்தம் .. | 176 | 9,855 | 477 | 30,825 | 184 | 10,310 | 661 | 41,135 |

| | |
|---|---|
| மாணவர் இல்லங்கள் 15 புதிதாக திறப்பதற்கு முன்பிருந்த மாணவர்களின் எண்ணிக்கை .. .. .. .. .. .. | 40,535 |
| மாணவர் இல்லங்கள் 15 புதிதாக திறந்தபின் அதிகரித்த மாணவர்களின் எண்ணிக்கை .. .. .. .. .. .. | 600 |
| | 41,135 |
| மாணவர்களின் எண்ணிக்கையில் 10 சதவீதம் .. .. | 4,135 |
| மொத்தம் .. | 45,270 |



## இணைப்பு V.

**பழங்குடியினருக்குரிய அரசினர் மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும் மாணவர்களின் எண்ணிக்கையும் (1981–82).**

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | மாணவர் இல்லங்கள். | | மாணவியர் இல்லங்கள். | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவியரின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவ மாணவியரின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 செங்கல்பட்டு .. | 1 | 50 | .. | .. | 1 | 50 |
| 2 வட ஆற்காடு .. | 2 | 75 | .. | .. | 2 | 75 |
| 3 கோயம்புத்தூர் .. | 2 | 115 | .. | .. | 2 | 115 |
| 4 மதுரை .. | 2 | 110 | .. | .. | 2 | 110 |
| 5 திருச்சிராப்பள்ளி .. | 1 | 50 | 2 | 95 | 3 | 145 |
| 6 சேலம் .. | 4 | 130 | 2 | 75 | 6 | 205 |
| 7 கன்னியாகுமரி .. | .. | .. | 2 | 70 | 2 | 70 |
| 8 தென் ஆற்காடு .. | 1 | 75 | .. | .. | 1 | 75 |
| 9 நீலகிரி .. | 1 | 50 | .. | .. | 1 | 50 |
| மொத்தம் .. | 14 | 655 | 6 | 240 | 20 | 895 |

# இணைப்பு VI.

## ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | | ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள். | | | | பழங்குடியினர் மாணவர் இல்லங்கள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வாடகைக் கட்டிடங்கள். | | அரசுக் கட்டிடங்கள். | | வாடகைக் கட்டிடங்கள். | | அரசுக் கட்டிடங்கள். | |
| | | மாணவர் இல்லங்கள். | மாணவியர் இல்லங்கள். | மாணவர் இல்லங்கள். | மாணவியர் இல்லங்கள். | மாணவர் இல்லங்கள். | மாணவியர் இல்லங்கள். | மாணவர் இல்லங்கள். | மாணவியர் இல்லங்கள். |
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை | .. | 2 | 4 | 4 | .. | .. | .. | .. | .. |
| 2 செங்கற்பட்டு | .. | 33 | 11 | 9 | 2 | .. | .. | 1 | .. |
| 3 வட ஆற்காடு | .. | 20 | 13 | 10 | 1 | 1 | .. | 1 | .. |
| 4 தென் ஆற்காடு | .. | 36 | 15 | 14 | 1 | 1 | .. | .. | .. |
| 5 தஞ்சாவூர் | .. | 33 | 11 | 6 | 4 | .. | .. | .. | .. |
| 6 திருச்சிராப்பள்ளி | .. | 38 | 10 | 8 | 3 | .. | .. | 1 | 2 |
| 7 மதுரை | .. | 47 | 18 | 2 | 3 | .. | .. | 2 | .. |
| 8 ராமநாதபுரம் | .. | 49 | 14 | 7 | 2 | .. | .. | .. | .. |
| 9 திருநெல்வேலி | .. | 38 | 24 | 4 | 2 | .. | .. | .. | 2 |
| 10 கன்னியாகுமரி | .. | 4 | 4 | 3 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 11 சேலம் | .. | 35 | 8 | 4 | 5 | .. | .. | .. | .. |
| 12 தர்மபுரி | .. | 18 | 6 | 3 | .. | .. | .. | .. | .. |
| 13 கோயம்புத்தூர் | | 8 | 3 | 6 | 3 | .. | .. | 2 | .. |
| 14 நீலகிரி | .. | 8 | 3 | 1 | 1 | .. | .. | 1* | .. |
| 15 புதுக்கோட்டை | .. | 13 | 5 | 4 | 1 | .. | .. | .. | .. |
| 16 பெரியார் | .. | 6 | 5 | 4 | 1 | .. | .. | .. | .. |
| மொத்தம் | .. | 388 | 154 | 89 | 30 | 3 | 1 | 9 | 5 |

* சேலம் மாவட்டத்திலுள்ள 18 பழங்குடியினர் மாணவர் இல்லங்களும், 2 பழங்குடியினர் அரசினர் இல்லங்களும் வாடகையில்லாக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. இவை தவிர ஆனைப் பள்ளத்தில் உள்ள மாணவர் இல்லம் ஒன்று கூரைவேய்ந்த கொட்டகையில் அமைந்துள்ளது.

## இணைப்பு VII

**மானிய உதவிபெறும் மாணவர் இல்லங்களின் பட்டியலும் 1981–82 ஆம் ஆண்டுக்கு அனுமதி அளிக்கப்பட்ட மானியங்களின் எண்ணிக்கை**

மானியம் (1981-82 ஆம் ஆண்டுக்கு வரையறுக்கப்பட்டது).

| தொடர் எண்ணும், அமைந்துள்ள இடமும் மற்றும் மானிய உதவி பெறும் மாணவர் இல்லங்களின் பெயரும். (1) | ஆதி திராவிடருக்கென்று 1981-82 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட மானியங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| **ஆதி திராவிடர்—** | |
| I சென்னை மாநகர்— | |
| 1 மாநகர் மாணவியர் இல்லம் சென்னை-31 | 45 |
| 2 இராவ் சாகிப் டி. ஆர். எஸ். பிள்ளை இல்லம், மாணவியர் சென்னை-5 | 6 |
| 3 சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை-3 | 26 |
| 4 ஏ. டி. எஸ். எஸ். மாணவர் இல்லம், சென்னை-21 | 77 |
| 5 இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம், சென்னை-4 | 1 |
| மொத்தம் | 155 |
| II செங்கற்பட்டு மாவட்டம்— | |
| 6 வள்ளுவர் குருகுலம், தாம்பரம் | 78 |
| 7 குருகுலம்—உணவு இல்லம், மதுராந்தகம் | 77 |
| 8 இராமகிருஷ்ண மிஷன் இல்லம், மல்லியங்கரணை | 26 |
| 9 புனித மேரி, மகளிர் உயர் நிலைப் பள்ளி உணவு இல்லம், செங்கற்பட்டு | 64 |
| | 245 |
| III வட ஆர்க்காடு மாவட்டம்— | |
| 10 காந்தி மிஷன் குழந்தைகள் இல்லம், வாலாஜாபேட்டை | 55 |
| 11 ஆர். எஸ். எஸ். இல்லம், இராணிப்பேட்டை | 34 |
| | 89 |
| IV தென் ஆர்க்காடு மாவட்டம்— | |
| 12 பர்வதராஜகுல ஏழை மாணவர் இல்லம், காட்டுமன்னார்கோயில் | 29 |
| 13 சேவக சங்க மாணவர் விடுதி, திருக்கோயிலூர் | 45 |
| 14 விக்டர் மெமோரியல் இல்லம், விருத்தாசலம் | 144 |
| | 218 |

| | |
|---|---|
| V. தஞ்சாவூர் மாவட்டம்— | |
| 15 சிரியாஸ் சத்திரம் இல்லம், தஞ்சாவூர் .. .. .. .. .. | 57 |
| 16 சத்திரம் உணவகம், ஒரத்தநாடு .. .. .. .. | 17 |
| 17 இராஜன் இல்லம், ஒரத்தூர் .. .. .. .. .. | 61 |
| 18 கோகிலம் இல்லம், வெள்ளம் பெரம்பூர் .. .. .. .. .. | 305 |
| 19 எல். எம். சி. உணவு இல்லம், சீர்காழி .. .. .. .. .. | 80 |
| 20 கஸ்தூர்பா காந்தி கன்னியா குருகுலம், வேதாரண்யம் .. .. .. | 112 |
| 21 ஆர். எஸ். எஸ். இல்லம், பட்டுக்கோட்டை .. .. .. .. | 65 |
| | 697 |
| VI. திருச்சிராப்பள்ளி மாவட்டம்— | |
| 22 காந்திஜி இல்லம், புத்தனாம்பட்டி .. .. .. .. .. | 115 |
| 23 திருவள்ளுவர் அனாதை இல்லம், லிங்கவாடிமேடு .. .. .. .. | .. |
| | 115 |
| VII. மதுரை மாவட்டம்— | |
| 24 சேவாலயம் மாணவர் இல்லம், மதுரை .. .. .. .. .. | 138 |
| 25 கஸ்தூர்பாய் மாணவியர் இல்லம், மேலூர் .. .. .. .. | 52 |
| 26 காந்திஜி மாணவர் இல்லம், மேலூர் .. .. .. .. .. | 68 |



| | |
|---|---|
| 27 சாந்தி மாணவர் இல்லம், நிலக்கோட்டை .. .. .. .. | 49 |
| 28 விவேகானந்தா-மாணவர் இல்லம், கம்பம் .. .. .. .. | 47 |
| 29 பாரதி மாணவர் இல்லம், திண்டுக்கல் .. .. .. .. .. | 115 |
| 30 மகாதேவ தேசாய் மாணவர் இல்லம், வத்தலகுண்டு .. .. .. | 35 |
| 31 ஆதார பயிற்சி இல்லம், காந்தி கிராமம் .. .. .. .. .. | 25 |
| 32 கஸ்தூரிபாய் மாணவியர் இல்லம், திண்டுக்கல் .. .. .. .. | 64 |
| | 593 |
| VIII. இராமநாதபுரம் மாவட்டம்— | |
| 33 கஸ்தூரிபாய் மாணவியர் இல்லம், மானாமதுரை .. .. .. .. | 46 |
| 34 தக்கர் பாபா இல்லம், மானாமதுரை .. .. .. .. .. | 33 |
| | 79 |

| | |
|---|---|
| **IX.** திருநெல்வேலி மாவட்டம்— | |
| 35 வி. வி. ஸ. அய்யா நினைவு மாணவர் இல்லம், சேரன்மாதேவி .. .. | 126 |
| 36 புனித மைக்கேல் உணவகம், கீழ்கைலாசபுரம் .. .. .. .. | 62 |
| | 674 |
| **X.** நீலகிரி மாவட்டம்— | |
| 37 ஸ்ரீ சற்குரு மாணவர் இல்லம், குன்னூர் .. .. .. .. .. | 65 |
| 38 தென்னிந்திய திருச்சபை நினைவு மாணவியர் இல்லம், உதகமண்டலம் ... | 42 |
| 39 தக்கர் பாபா குருகுலம், நீர்க்காச்சமுண்டு .. .. .. .. ... | 53 |
| | 160 |
| **XI.** பெரியார் மாவட்டம்— | |
| 40 டி. எஸ். இராமன் சரோஜினிதேவி மாணவர் இல்லம், கோபிசெட்டிபாளையம் | 107 |
| **XII.** கோயம்புத்தூர் மாவட்டம்— | |
| 41 பி. எஸ். ஜி. கங்கா நாயுடு நினைவு மாணவர் இல்லம், பீளமேடு .. .. | 38 |
| பெருமொத்தம் .. | 2,622 |



| | |
|---|---|
| மலைக்குடியினர்— | |
| **I** நீலகிரி மாவட்டம்— | |
| 1 ஸ்ரீ சற்குரு சர்வ சமரச சங்கம், டி. ஆர். ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, குன்னூர் .. | 200 |
| 2 ஸ்ரீ சற்குரு சர்வ சமரச சங்கம், டி. ஆர். மகளிர் உயர்நிலைப்பள்ளி, குன்னூர் | 100 |
| 3 தக்கர் பாபா குருகுலம், நீர்க்காச்மண்டு .. .. .. .. | 68 |
| | 368 |
| **II** கோயம்புத்தூர் மாவட்டம்— | |
| 4 சற்குரு சன்மார்க்க தொடக்கப்பள்ளி, கல்லாறு .. .. .. .. | 50 |
| பெருமொத்தம் .. | 418 |

## இணைப்பு VIII

தமிழ் நாட்டில் பழங்குடியினர் நலனுக்காக நடத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல்.

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | கூட்டுறவுச் சங்கத்தின் பெயர். (2) |
|---|---|
| **(அ) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்—** | |
| 1. கோயம்புத்தூர் .. .. .. | துணைக்கட்வு சரக மலைவாழ் பழங்குடியினர் கூட்டுறவு விற்பனைச் சங்கம். |
| 2. கோயம்புத்தூர் .. .. .. | சத்தியமங்கலம் மலைவாழ் பழங்குடியினர் கூட்டுறவு விற்பனைச் சங்கம். |
| 3. நீலகிரி .. .. .. .. | பசினகுடி மலை வாழ் பழங்குடியினர் கூட்டுறவு விற்பனைச் சங்கம். |
| **(ஆ) வனத் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்கள்—** | |
| 1. கோயம்புத்தூர் .. .. .. | உடுமலைப்பேட்டை சரக மலைவாழ் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம். |
| 2. கோயம்புத்தூர் .. .. .. | சர்க்கார்பதி சரக வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம். |
| 3. வட ஆற்காடு .. .. .. | நாயக்கனேரி மலைவாழ் பழங்குடியினர் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம். |
| 4. ராமநாதபுரம் .. .. .. | செண்பகத் தோப்பு மலைவாழ் பழங்குடியினர் வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் |
| **(இ) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்—** | |
| 1. கன்னியாகுமரி .. .. .. | பேச்சிப்பாறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் |
| 2. நீலகிரி .. .. .. .. | தோடர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். |

(ஈ) பழங்குடியினர் துணைத் திட்டப்பகுதியில் உள்ள பெரும் அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல்—

| | |
|---|---|
| 1. சேலம் மாவட்டம் .. .. .. | ஏர்க்காடு. |
| 2. சேலம் மாவட்டம் .. .. .. | கொல்லிமலை. |
| 3. சேலம் மாவட்டம் .. .. .. | கல்ராயன் மலை. |
| 4. சேலம் மாவட்டம் .. .. .. | அரணுத்து மலை |
| 5. வட ஆற்காடு மாவட்டம் .. .. | ஏலகிரி. |
| 6. வட ஆற்காடு மாவட்டம் .. .. | இவ்வாது. |
| 7. வட ஆற்காடு மாவட்டம் .. .. | புதூர்நாடு. |
| 8. தென் ஆற்காடு மாவட்டம் .. .. | வெள்ளி மலை. |
| 9. தென் ஆற்காடு மாவட்டம் .. .. | மோட்டாம்பட்டி. |
| 10. தென் ஆற்காடு மாவட்டம் .. .. | கிளக்காடு. |
| 11. தர்மபுரி மாவட்டம் .. .. .. | சித்தேரி. |
| 12. திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. .. | பச்சை மலை. |

இணைப்பு IX

X சிறப்புக்கூறுத் திட்டம்

| (1) | ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) (2) |
|---|---|
| 1 வேளாண்மை | 499·02 |
| 2 நிலச் சீர்திருத்தம் | 5·00 |
| 3 கிராம மேம்பாட்டிற்கான சிறப்புப் பகுதி | 930·00 |
| 4 சிறு பாசனம் | 62·81 |
| 5 மண்-நீர்வளப் பாதுகாப்பு | 68·75 |
| 6 கால்நடை வளர்ப்பு | 43·19 |
| 7 பால் பண்ணைத் திட்டம் | 8·73 |
| 8 சமுதாய வளர்ச்சித் திட்டம் | 2,627·50 |
| 9 கூட்டுறவு | 10·30 |
| 10 நீர்மேம்பாடு, பாசனம். வெள்ளக்கட்டுப்பாடு | 360·00 |
| 11 மின் உற்பத்திப்பெருக்கம் | 104·80 |
| 12 கிராம சிறு தொழில்கள் (பட்டுப்பூச்சி வளர்ப்பு உட்பட) | 93·98 |
| 13 பொதுக் கல்வி | 462·50 |





| | |
|---|---|
| 14 தொழில் நுட்பக் கல்வி | 101·25 |
| 15 மருத்துவம், பொதுச் சுகாதாரம் | 410·00 |
| 16 கழிவுநீர் அகற்றல்-குடிநீர் வழங்கல் | 2,711·60 |
| 17 வீட்டு வசதி | 638·00 |
| 18 நகர்ப்பகுதி மேம்பாடு | 175·00 |
| 19 ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிற பின்தங்கிய வகுப்பினர் குறித்த நலன் | 1,710·37 |
| அ. தமிழ்நாடு ஆதித் திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் தொடக்க உதவித் தொகை | 200·00 |
| 20 சமூக நலன் | 87·82 |
| 21 சத்துணவு | 93·98 |
| | 11,404.70 |

## இணைப்பு X

### பழங்குடியினருக்கான துணைத் திட்டம்
### 1982–83 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கம்

(ரூபாய் இலட்சத்தில்)

| பகுதி. | மாநிலத் திட்டத்தில் இருந்து ஒதுக்கம். | மத்திய அரசிடமிருந்து சிறப்புதவி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 மண்வளப்பாதுகாப்பு .. .. .. .. .. | 12.00 | .. |
| 2 தோட்டக்கலை .. .. .. .. .. | 12.00 | 24.20 |
| 3 பெரிய அளவிலான பழத் தோட்டத்திட்டம் .. .. | 22.76 | .. |
| 4 கால்நடை வளர்ப்பு .. .. .. .. .. | 12.10 | 21.00 |
| 5 காடு வளர்ப்பு .. .. .. .. .. | 23.15 | 7·80 |
| 6 கூட்டுறவு .. .. .. .. .. | 37.05 | 14·00 |
| 7 சிறு பாசனம் .. .. .. .. .. | 7·25 | 4·00 |
| 8 கிராமப் பகுதிக்கு மின் வசதிகள் அளித்தல் .. .. | 14.50 | .. |
| 9 சாலைப் போக்குவரத்து .. .. .. .. .. | 105.10 | .. |
| 10 வீட்டுவசதி .. .. .. .. .. | 0·35 | 1.00 |
| 11 கிராமத் தொழில்கள் .. .. .. .. .. | 2.97 | 3·00 |
| 12 பட்டுப்பூச்சி வளர்ப்பு .. .. .. .. .. | 22.03 | 3·00 |
| 13 கல்வி .. .. .. .. .. .. .. | 31.80 | 7.50 |
| 14 பொதுச்சுகாதாரம் .. .. .. .. .. .. | 18.37 | 9.50 |
| 15 சத்துணவு (சமூகநலன்) .. .. .. .. .. | 14·71 | .. |
| 16 கிராமப் பகுதிக்கு நீர் வழங்கல் .. .. .. .. | 19·00 | .. |
| 17 சமுதாய வளர்ச்சி .. .. .. .. .. .. | 0.01 | .. |
| 18 சுற்றுலா .. .. .. .. .. .. .. | 0.01 | .. |
| 19 ஆராய்ச்சி மேம்பாடு .. .. .. .. .. .. | 1.00 | .. |
| மொத்தம் ... | 356·36 | 95·00 |

## கோரிக்கை எண்—44.

எழுதுபொருள்—அச்சுத்துறை கொள்கை விளக்கக் குறிப்பு

**அமைப்பு :**

அச்சகங்கள், எழுது பொருள் பிரிவு எனும் இரு பெரும் பிரிவுகளை எழுது பொருள்—அச்சுத் துறை கொண்டியங்குகிறது. இத்துறையில் மொத்தம் 6,226 பணியாளர்கள் பணி புரிகிறார்கள். எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர் இத்துறையின் தலைவராவார். இயக்குநருக்கு உதவியாக நிர்வாகம் சம்பந்தப்பட்ட் பிரிவுக்கு ஒரு துணை இயக்குநரும்; எழுது பொருள் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு ஒரு துணை இயக்குநரும் ஆக இரு துணை இயக்குநர்கள் பணியாற்றுகின்றனர். அச்சகம் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பப் பிரிவுகளுக்குப் பொது மேலாளரும், கணக்குகளைப் பொறுத்த வரையில் தலைமைக் கணக்கு அலுவலரும், எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.

2. இயக்ககம் :

எழுது பொருள்—அச்சுத் துறை இயக்ககம், சென்னை, அண்ணா சாலையில், 220 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இதைத் தவிர, அச்சகத்தின் எல்லாப் பிரிவிலும் உள்ள தளவாடங்களின் இருப்பை ஐந்தாண்டிற்கு ஒரு முறை சரி பார்ப்பதற்கு சிறப்பு பணியாளர்களுக்கு அரசு அனுமதியளித்து உள்ளது. இப்பணியாளர்கள் தங்களது அறிக்கையை 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறுதி வாரத்தில் அனுப்புவர் என எதிர் பார்க்கப்படுகிறது.

இயக்குநர் அலுவலகம், சென்னையிலுள்ள மூன்று அச்சகங் களையும், வெளியூர்களில் ஐந்து அச்சகங்களையும், சென்னை, இராஜாஜி சாலையில் உள்ள எழுது பொருள் கிடங்கையும்; சென்னை, அண்ணா சாலை, உயர்நீதி மன்றக் கட்டிடம் ஆகியவற்றில் உள்ள அரசு வெளியீடு—விற்பனை நிலையங் களையும் நிர்வகித்து வருகிறது.

3. அச்சுப் பிரிவு.

3.1 அச்சுப்பிரிவு பின்வரும் பகுதிகளைக் கொண்டது.

(1) மத்திய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.

(2) உயர்நீதி மன்ற வளாகக் கிளை அச்சகம், சென்னை.

(3) சூளைப் பகுதியில் ஆனைக்காரன் தோட்டத்தில் உள்ள கிளை அச்சகம், சென்னை.

(4) புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகம்.

(5) திருச்சியிலுள்ள வட்டார அச்சகம்.

(6) சேலத்திலுள்ள வட்டார அச்சகம்.

(7) விருத்தாசலத்திலுள்ள வட்டார அச்சகம்

(8) மதுரையிலுள்ள வட்டார அச்சகம்.



3.2. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.

1831 இல் பெரும்பாலும் அரசு இதழ்களை அச்சிடுவதற்கென பத்து தொழிலாளர்களை மட்டுமே கொண்டு சிறிய அளவில் நிறுவப்பட்ட இந்த அச்சகம், தற்போது மாபெரும் நிறுவனமாகத் தழைத்து, வளர்ந்து தனது 150 ஆம் ஆண்டை நிறைவு செய்துள்ளது. இதையொட்டி, தக்கதொரு விழாவை, 1982 ஆம் ஆண்டு கொண்டாடுவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. பணி மேலாளரின் நிர்வாகத்தின் கீழ் 3,526 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணியில் மைய அச்சகம் செயற்பட்டு வருகிறது. மேற்கூறிய பணியாளர்களில் 243 பெண் பணியாளர்களும, 96 உடல் ஊனமுற்றோரும் அடங்குவர். மேலும், 1961 ஆம் ஆண்டு வேலை பழகுவோர் சட்டத்தின்படி 186 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் 27 பேர் உடல் ஊனமுற்றவர் ஆவர். இவ்வச்சகம் அச்சு எந்திரங்கள் (Printing Machines) வரி அச்சு எந்திரங்கள் (Lino Composing Machines), தனி அச்சு பலசணிகள் (Mono Type Key Board) மற்றும் பல தேவையான எந்திரத் தளவாடங்களையும் முழுமையாகப் பெற்று இயங்கி வருகிறது. பின்வரும் எந்திரங்கள் 1981–82 இல் புதிதாக வாங்கப்பட்டன :—

(1) பிளாட்டன் (Platen) அச்சு எந்திரம்—1.

(2) கையால் தள்ளும் உருளை எந்திரங்கள் (Hand Fed Cylinder Printing Machine R^I Size)—3.

பார்வைப்படி அச்சு எந்திரங்கள் (Forme Proof Presses) இரண்டு வாங்குவதற்கு உத்தரவு வழங்கப்பட்டு தளவாடங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

நிலை படிவங்கள், நிலைப்படுத்தப்படாத படிவங்கள், வார அரசு இதழ்கள், அரசுச் சிறப்பு இதழ்கள், காவல் துறை அரசு இதழ் ஆகியவற்றை அச்சிடுவதோடு, அரசு தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகள், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், போக்குவரத்துக் கழகங்கள், உள்ளாட்சி மன்றங்கள் (ஊராட்சி, நகராட்சி) முதலியவைகளால் தரப்படும் அச்சுப் பணிகளையும், வரவு—செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு பரிசுச்சீட்டு, உணவுப் பங்கீட்டு அட்டைகள், மந்தண அறிக்கைகள், விதித் தொகுப்பு மற்றும் நடைமுறை நூல்; தேர்தல் வாக்குச் சீட்டுகள் ஆகிய வற்றையும் மைய அச்சகம் அச்சிட்டு தருகிறது.

மைய அச்சகம் 1981–82 இல் செய்து முடித்துள்ள முக்கிய சில பணிகள் வருமாறு :—

(1) திருப்பத்தூர் தொகுதி இடைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள்.

(2) நாட்குறிப்பேடுகள், சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர்களுக்கான விசேட நாட்குறிப்பேடுகள்.

(3) மாத நாட்காட்டிகள், நாட்காட்டி அட்டைகள்.

(4) வரவு–செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், சட்ட முன் வடிவுகள்.

(5) தொலை பேசிக் குறிப்புப் புத்தகம் (சென்னை நகர அலுவலகங்கள் மட்டும்).

(6) சட்டமன்ற, மேலவை, பேரவை உறுப்பினர்களின் விவாதம்.

(7) பஞ்சாயத்து தேர்தல் குறிப்பு புத்தகங்கள், படிவங்கள்.

(8) அமைச்சர்களின் முகவரியிட்ட கடிதத்தாள்கள், நேர்முகக் கடித உறைகள், அழைப்பிதழ்கள் ஆகியவை.

(9) பரிசுச் சீட்டுகள் முறையானது, சிறப்பு (420 இலட்சங்கள்).

(10) இந்திய ஆட்சிப் பணி (I.A.S.) அலுவலர், இந்திய காவல் பணி (I.P.S.) அலுவலர் பட்டியல்,

(11) பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச் சீட்டுகள், மாணவர் சலுகைப் பயணச் சீட்டுகள் (931 இலட்சம்) மற்றும் துளையிடும் அட்டைகள்.

(12) மனுப் படிவங்கள் மற்றும் அரசுத் தேர்வுகளுக்கான முக்கிய மற்றும் கூடுதல் விடைத்தாள்கள்.

(13) மக்கட் தொகை, குடும்ப அட்டை கணக்கெடுப்பு படிவங்கள்.

(14) கோயம்புத்தூருக்கான உணவுப் பங்கீட்டு அட்டைகள்.

(15) கருவூலக் கணக்குகள், கருவூலக் கணக்கு விதித் தொகுப்பு (தமிழ்நாடு) அடிப்படை விதிகள், கடன்கள்–முன் பணங்கள் குறித்த நடைமுறை நூல்.

தற்போது 125 இலட்சம் உணவுப் பங்கீட்டு அட்டைகள் அச்சிடும் பணி மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகிறது. 1981–82 ஆம் ஆண்டு (31–1–82 வரை) பல துறைகளுக்கு அச்சு வேலைகள் முடித்துக் கொடுத்தமைக்கும், படிவங்கள் புத்தகங்கள் வழங்கியமைக்கும் ரூ. 38,40,883க்கு கோரிக்கை விடுக்கப்பட்டு ரூ. 36,46,751, 31–1–1982 வரை வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையை வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

நிலைப்படுத்திய படிவங்களைத் திருத்தி அமைத்தல் எளிதாக்குதல் முறைப்படுத்துதல் ஆகியவற்றின் ஒரு பகுதியாக 3,156 படிவங்கள் தேவையற்றதென நீக்கப்பட்டன. 1,413 படிவங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. அச்சடிக்கும் வேலைகள் அடக்கவிலை கட்டுப்பாடு முறையில் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. தேவையற்ற படிவங்களை நீக்கியதிலும் படிவங்களின் அளவையும் அச்சடிக்கும் எண்ணிக்கையையும் குறைத்ததிலும் அரசின் செலவில் கணிசமான அளவு மிச்சம் ற் பட்டது.





இவ்வச்சகத்தில் பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பணி நேரங்களில் கவனித்துக் கொள்ள மழலையர் காப்பகம் உள்ளது. மத்திய அச்சகத்தில் தொழிலாளர்களின் தேவையை கவனிப்பதற்காக ஒரு சிற்றுண்டிச் சாலை உள்ளது.

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் டிசம்பர் 15 ஆம் தேதி வரை பணியில் உள்ளபோது இறந்த 14 பணியாளர்களின் குடும்பத்தினருக்கு அந்திமச் சடங்கு செய்யும் பொருட்டு தொழிலாளர் நல நிதியிலிருந்து தலா ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 1,400 அளிக்கப்பட்டுள்ளது. ரூ. 1,50,000 குடும்ப நல நிதியாக இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்க்கு தலா ரூ. 10,000 வீதம் மேற்கண்ட காலத்தில் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அச்சகத்தில் 1981–82 ஆம் ஆண்டில் (1–4–1981 முதல் 31–1–1982 வரை) பெரிய விபத்துக்கள் ஏதும் நேரவில்லை. இதில் ஒரு தொழிலாளர் நல அலுவலரும் ஒரு உதவி தொழிலாளர் நல அலுவலரும் தொழிலாளர்களின் நலன் மற்றும் தேவை ஆகியவற்றை கவனிக்கிறார்கள். தொழிலாளர் நல அலுவலர் மற்ற கிளை மண்டல அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் தேவைகளையும் கவனிக்க பொறுப்புள்ளவர் ஆவார்.

### 3.3. சென்னை சூளையிலுள்ள ஆனைக்காரன் தோட்ட கிளை அச்சகம், சென்னை.

இந்த அச்சகம் 1974 இல் தனியார் வாடகை கட்டிடத்தில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பொழுது இவ்வச்சகம் 697 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது. மேலும் 1961 ஆம் ஆண்டு வேலை பழகுவோர் சட்டப்படி 33 வேலை பழகுபவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வச்சகம் முக்கியமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு, காவல்துறை, மருத்துவத் துறை, வணிகவரித்துறை தொடர்பான அச்சுப்பணிகளை செய்து வருகிறது. மின் உலை (Electrical Furnace 250 kg) ஒன்று இவ்வச்சகத்தில் இவ்வாண்டு நிறுவப்பட்டுள்ளது.

பெண் பணியாளர்களின் நலனுக்கென மழலைக் காப்பகம் ஒன்றும் ஓய்வு அறையும் உள்ளன. தொழிலாளரின் நலனைக் கருதி சிற்றுண்டிச்சாலை ஒன்று இங்கே இயங்கி வருகிறது. பணியிலுள்ளபோது இறந்த இரண்டு பணியாளர்களின் குடும்பத்தினருக்கு அந்திமச்சடங்கு செய்யும் பொருட்டு தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 100 வீதமும் குடும்பநல நிதியாக ரூ. 10,000 வீதமும் 1981 ஆம் ஆண்டில் தரப்பட்டுள்ளது.

ஒரு உதவி தொழிலாளர் நல அலுவலர் இக்கிளை அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் தேவை நலன் ஆகியவற்றை கவனிக்கிறார்.

### 3.4. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள இளை அச்சகம்.

இந்த அச்சகம் 1923 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இவ் வச்சகத்தில் 237 பணியாளர்களும் 2 வேலை பழகுபவர்களும் மூன்று முறை மாற்றுப் பணியில் வேலை செய்கிறார்கள். உயர்நீதிமன்றந்துக்குத் தேவையான அன்றாட வழக்குப் பட்டியல்கள் வாராந்திர வழக்குப்பட்டியல்கள் ஆகியவற்றை உரியகாலத்தில் அச்சடிப்பது இவ்வச்சகத்தின் முதன்மையான வேலையாகும். இத்துடன் மேல்கண்ட வேலை செய்து முடித்து மீதம் உள்ள நேரங்களில் இந்தியச் சட்ட அறிக்கைகள் (சென்னையில் நடைபெறும் வழக்குகள்) மற்றும் சில நிலைப் படுத்தப்பட்ட படிவங்களும் தீாப்புத் திரட்டு இதழும் இங்கு அச்சாகிறது. விபத்துக் காலத்தில் பணியாளர்களுக்கு முதல் உதவி புரிய ஒவ்வொரு முறை மாற்றுப்பணிக்கும் ஒரு முதலுதவி யாளர் இவ்வாண்டு முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

### 3.5. கிளை அச்சகம். புதுக்கோட்டை

இக்கிளை அச்சகம் தன் சொந்தக்கட்டிடத்தில் இருமுறை மாற்றுப் பணியில் இயங்குகிறது. இதில் 250 பணியாளர்களும் 71 வேலை பழகுபவர்களும் இருமுறைமாற்று முறையில் பணியாற்றுகின்றனர். இவ்வச்சகத்தை விரிவுபடுத்தும் மட்டத்தின்கீழ் ரூ. 2.5 இலட்ச மதிப்பில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பதினாறு மாவட்ட அரசிதழ்கள் (தமிழிலும், ஆங்கிலத்திலும்) பத்திரம் பதவுத்துறை, பொதுப்பணித்துறை, நிதித்துறை ஆகியவற்றிற்குத் தேவை யான நிலைபடுத்தப்பட்ட படிவங்கள், உயர் நீதிமன்றத்திற்குத் தேவையான நிலைபடுத்தப்படாத படிவங்கள் ஆகியவை அச் சடிக்கப்படுகிறது. அச்சடிக்கத் தேவையான எல்லாவித எந் திரங்களும் இங்குப் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வச்சகத்திற்கு மேலும் ஒரு கில்லடின் வெட்டும் எந்திரமும் படிவங்களுக்கான அச்சுப்பொறி ( Forme Proof Press ) ஒன்றும் வாங்க ஆணை வைக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப் பொழுது போக்க மனமகிழ் மன்றம் இவ்வச்சகத்தில் செயற்பட்டு வருகிறது. தொழிலாளர்துறை நடத்திய ஆண்டு விளையாட்டு போட்டியில் இவ்வச்சகப் பணியாளர்கள் கலந்து கொண்டார் கள். இவ்வச்சகத் தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் நன்மைக்காக நடத்தப்பட்டு வருகிறது.

### 3.6. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி

இந்த அச்சகம் 1965 ஆம் ஆண்டிலிருந்து அரியமங்கலம் தொழிற்பேட்டையில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்குச் சொந்தமான நான்கு வாடகை கட்டிடங்களில் செயற்பட்டு வருகிறது. இது 167 பணியாளர்களையும், 12 வேலை பழகு பவர்களையும் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் செயற்படுகிறது.



இவ்வச்சகத்தில் அரசு அலுவலகங்களுக்குத் தேவையான பொதுப்படிவங்கள் அச்சடிக்கப்பட்டு மாநிலம் முழுவதும் அளிக்கப்படுகிறது. நில அளவை நிலவரி ஏற்பாட்டுத துறை இயக்குநரின் 'அ' பதிவேடுகளும் இவ்வலுவகத்தில் 1981 ஆம் ஆண்டில் அச்சடிக்கப்பட்டன.

இவ்வச்சகத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டுவதற்காக துவாக்குடி கிராமத்தில் 3.08 ஏக்கர் பரப்பளவு நிலம் ஏற் கெனவே வாங்கப்பட்டுள்ளது. அனைத்து வசதியுடன் கூடிய அச்சகக் கட்டடம் கட்டுவதற்கான நிதி-நிர்வாக ஒப்புதல் பெறுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

பணியாளர்களின் பொழுது போக்கிற்காக வானொலிப் பெட்டி ஒன்று இவ்வச்சகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 3 7 அரசு வட்டார அச்சகம் சேலம்

இந்த அச்சகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மூன்று தனியார் வாடகைக் கட்டடங்களில் 150 பணியாளர் களையும், 11 வேலை பழகுபவர்களையும் கொண்டு இரண்டு முறை மாற்றுப்பணியில் இவ்வச்சகம் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்திற்கெனக் கட்டடம் கட்டுவதற்கான நிலம் சேலம் சிறுதொழில வளர்ச்சி நிறுவன தொழிற்பேட்டையில் (SIDCO) பெறப்பட்டது. இக்கட்டிடம் கட்டுவதற்காக, 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் வழங்கப்படும். இவ் வச்சகம் முக்கியமாக கருவூல நிலைப்படிவங்கள் மற்றும் அச் சகத்தில் செய்யும் பொருள்களான 4 குயர் நோட்டுப் புத் தகங்கள், கோப்புகள் கட்டும் அட்டைகள், தொலைபேசி நோட்டுப்புத்தகங்கள் முதலியவற்றைத் தயாரிக்கிறது. தவிர, வேலைகள் பற்றி சுற்றறிக்கை, பள்ளி இறுதி வகுப்பு (SSLC) பிரதான விடைதாள்கள் முதலியனவும் இவ்வச்சகத்தில்அச்சிடப் படுகின்றன. இவ்வச்சக எந்திரப்பிரிவில் 1980-81 ஆம் ஆண்டு ஓர் உற்பத்தி சாதனை நிகழ்த்தப்பட்டது.

இவ்வச்சகப் பணியாளர்கள் மனமகிழ் மன்றம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இவ்வச்சகத் தொழில்ாளர்களின் மன மகிழ்ச்சிக்காக வானொலிப்பெட்டி ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வச்சகத்தில் நான்கு தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கையாக தீயை எதிர்த்துப் போராட ஆதார பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 3-7 அரசு வட்டார அச்சகம், விருத்தாச்சலம்

இவ்வச்சகம் 1966 ஆம் ஆண்டு துவங்கியது. இது அண்மையில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்திலும், ஒரு பகுதி பழைய கட்டிடத்திலுமாக சேர்ந்து 157 பணியாளர்களையும்: 21 வேலை பழகுபவர்களையும் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது. இவ்வச்சகத்திற்குச சுற்றுச்சுவர் கட்டுவதற்காக 1981 அக்டோபரில் ரூ. 2.10 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை விதை சான்றளித்தல், கால்நடை பராமரிப்புத் துறை, நீதித் துறை, வேலை வாய்ப்புத் துறை, தேசிய மாணவர் படை தொழில் வணிகத் துறை பட்டுப் புழு வளர்த்தல் துறை, வனத் துறை, மற்றும் பள்ளி விவரத் துறை ஆகியவற்றிற்குத் தேவையான படிவங்கள், பதிவேடுசள் ஆகியவை இங்கு அச்சடிக்கப்படுகின்றன. மேலும் இவ்வட்டார அச்சகத்தை விரிவு படுத்தும் திட்டத்தின்கீழ் கூடுதல் பணியாக தமிழ்நாடு தீயணைப்புத்துறை, கூட்டுறவுத் துறை, பொதுப் பணித்துறை ஆகியவற்றுக்குத் தேவையான படிவங்களும் இங்கு அச்சடிக்க படுகின்றன. கம்பி அடிக்கும் எந்திரம்: லேத் மற்றும் இதர பட்டரை வேலைகள் சம்பந்தப்பட்ட எந்திரங்கள் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் கூடிய விரைவில் நிறுவப்பட உள்ளன.

இவ்வட்டார அச்சகத்தில். மனமகிழ் மன்றம் ஒன்று செயல் பட்டு வருகிறது: குடிதண்ணீர் வசதிக்காக இவ்வச்சக வளாகத்தில் ஒரு துளைக்கிணறு அமைக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுவருகின்றன.

### 3.9 அரசு வட்டார அச்சகம், மதுரை

இந்த அச்சகம் 1976-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இது 335 பணியாளர்களையும் 13 வேலை பழகுபவர்களையும் கொண்டு இரண்டு முறை மாற்றுப்பணியில் தன் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தில் நடப்பு ஆண்டில் சில துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் பதிவேடுகள் அச்சடிப்பது போன்ற வழக்கமான பணிகளுடன 5 இலட்சம் எஸ்.எஸ்.எல்.சி குறிப்புத் தாள்களும் (Cumulative Record Sheets) 75 இலட்சம் விடைத்தாள்களும் 13 இலட்சம் விவசாய கணக்கெடுப்புப் படிவங்களும் அச்சடிக்கப்பட்டன.



நடப்பாண்டில் இவ்வச்சகத்தில் வார்ப்படம் தயாரிக்கும் பிரிவில் பயன்படுத்துவதற்காக ஒரு லித்தோ எட்சிங் எந்திரம் (Litho Etching Machine) ஒன்று கூடுதலாக நிறுவப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் முதல் அரசு வெளியீடுகளை விற்பனை செய்ய, சிறு விற்பனை நிலையம் ஒன்று தொடங்கப்பட்டது. ரூ. 1,675 மதிப்புள்ள புத்தகங்களும், வெளியீடுகளும் இதுவரை விற்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் (1981–82) 27 பணியாளர்களுக்கு தொழிலாளர் கல்வி பயிற்சி அளிக்கப்பட்டது. 23 பணியாளர்கள் பம்பாய்க்கும வேறு சில இடங்களுக்கும் சுற்றுப்பயணம் அழைத்துச் செல்லப் பட்டனர். இவ்வட்டார அச்சகத்தில் ஒரு மனமகிழ் மன்றம் இயங்கி வருகிறது.

### 4. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை.

அண்ணா சாலையில் உள்ள அரசு விற்பனை நிலையமும் உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள கிளை விற்பனை நிலையமும் அரசு வெயீடுகளைப் பொது மக்களுக்கு விற்பனை செய் இன்றன. அரசு வெளியீட்டு விற்பனை நிலையத்தில் 57 பணி யாளர்கள் பணி புரிகின்றனர். எழுதுபொருள் அச்சுத்துறை உதவி இயக்குநரின் கீழ்ச்செயற்படும் இந்நிலையத்தில் ரூ. 2.40 இலட்சம் மதிப்புள்ள வெளியீடுகள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் முடிய விற்பனை செய்யப்பட்டுள்ளன, உயர் நீதி மன்ற வளாகத்திலுள்ள துணை விற்பனை நிலையம் மேற் குறித்த காலத்தில் ரூ. 33,489 மதிப்புள்ள வெளியீடுகளை விற்பனை செய்துள்ளது.

1981 ஆம் ஆண்டிலிருந்து விற்பனையை அதிகரிக்கும் உத்தி யாக மாலையில் 5.30 மணி வரை விற்பனை நேரம் அதி கரிக்கப்பட்டுள்ளது.

### 5. எழுது பொருள் பிரிவு, சென்னை.

எழுதுபொருள் அச்சுத்துறையைச் சேர்ந்த எழுதுபொருள் பிரிவு, மைய முகவரமைப்பாக இருந்து அரசு அலுவலகங்களுக் குத் தேவையான எழுதுபொருள், தட்டச்சுப் பொறிகள் கணக் கிடும் பொறிகள், படிப்பெருக்கிகள் ஆகியவற்றை வாங்கி தேவைக்கேற்ப அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வழங்கி வருகிறது. இது, சென்னை இராஜாஜி சாலையில் உள்ள பழைய உயர்நீதி மன்றக் சட்டிடத்தில் அமைந்துள்ளது. மத்திய

அரசின் உதவி பெறும் அல்லது மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கு முன்கூட்டி உரிய தொகையைப் பெற்றுக் கொண்டு எழுதுபொருட்களை வழங்கிவருகிறது.

5.1. எழுதுபொருள் கொள்முதல்

(i) காகிதம் மற்றும் அட்டை, (ii) தட்டச்சுப்பொறிகளும், படிப் பெருக்கிகளும், (iii) கதர்-கைத்தறித் துணிகள், (iv) அச்சகம் மற்றும் சிறைச் சாலையில் தயாரிக்கும் பொருள்கள் நீங்களாக பிற எழுது பொருள்கள் யாவும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வெளி அங்காடியில் ஆண்டு தோறும் வாங்கப்படுகின்றன.

5.2. காகிதம் அட்டை கொள்முதல்.

புதுடில்லியில் உள்ள வழங்கு பொருள்-விற்பனை நிர்வாக இயக்குநர், செய்த ஒதுக்கீட்டிலிருந்து காகிதம், அட்டை போன்றவை, விகிதாசார ஒப்பந்த அடிப்படையில் ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.

சிறப்பு கொள்முதல் குழுவின் ஒப்புதல் பெற்ற பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதன் மூலம், ஒப்பந்த வீத அடிப்படையில், வழங்கு பொருள்-விற்பனை நிர்வாக இயக்குநரிடம் அல்லாமல் வெளியே சிறப்பு வகை காகிதம்,அட்டை முதலியன வாங்கப்படுகிறது.

பணியாளர்களுக்கான வசதிகள்.

பணியாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. அவற்றில் சில இங்கே குறிப்பிடப்படுகின்றன:—

(1) குடியிருப்புகள்:

சென்னை தண்டையார்பேட்டையிலுள்ள அரசு அச்சகப் பணியாளர் குடியிருப்பில் 300 அங்கணங்கள் உள்ளன. இக்குடியிருப்பைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. எல்லா அங்கணங்களுக்கும் கம்பிவலை அடிக்கப்பட்டு மின்விசிறி வசதியுடன், பாதுகாக்கப்பட்ட குடிநீரும், தெரு விளக்கு வசதியும் உள்ளன.

(2) தொழிலாளர் நலம்



தொழிலாளர் நல அலுவலரும், சுகாதார ஆய்வாளரும் குடிருப்புக்கு அடிக்கடி சென்று பணியாளர்களின் நலனைக் கவனிக்கின்றனர்.

(3) மருத்துவ வசதி

அரசு மைய அச்சகத்திலுள்ள மருந்தகத்தைச் சேர்ந்த மருத்துவ அலுவலர் வாரம் ஒருமுறை இயக்கம், எழுதுபொருள் கிடங்கு, உயர்நீதிமன்றக் கட்டடக் கிளை அச்சகம் மற்றும் சூளை ஆணைக்காரன் தோட்டத்திலுள்ள கிளை அச்சகம் ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிடுகிறார். தொழிலாளருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் இந்த மருந்தகத்தில் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

(4) பன் தேனீர், பால் ஆகியவற்றை இலவசமாக வழங்குதல்

அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் அனைத்திலும் பணிபுரியும் எல்லா பணியாளர்களுக்கும் இலவசமாக பன், தேனீர் வழங்குவதற்குப் பதிலாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 7. 50 வீதம் வழங்கப்படுகிறது. ஈயம் உருக்கும் பகுதியில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பணியின் போது ஏற்படும் இடர்பாட்டிலிருந்து பாதுகாப்பளிக்க பாலுக்குப் பதிலாக ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 40 காசுகள் வீதம் ரொக்கப்படியும் வைட்டமின் சத்துக்கள் அடங்கிய மாத்திரைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்த ரொக்கப்படியை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(5) பணியாளர்கள் நல நிதி.

பணியாளர் நல நிதியிலிருந்து விளையாட்டுக்கள் நல நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு தொகை வழங்கப்படுகிறது. தற்போது ஆண்டு ஒன்றிற்கு ரூ. 5000 குடியரசு நாள் விழா விடுதலை நாள் விழா ஆயுத பூஜை முதலியன கொண்டாடவும், வானொலி உரிமம் புதுப்பிக்கவும் தொகை வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(6) கூட்டுறவுச் சங்கம்.

சென்னை மைய அச்சகத்தில் செயல்படும் தமிழ் அரசினர் எழுதுபொருள் அச்சுத்துறை தொழிலாளர் கூட்[illegible] சங்கம் பணியாளர்களுக்கு கடன் வசதி அளிக்[illegible] 31—3.1 முடிய இதன் உறுப்பினர்கள் 2,673 ஆகும்.

1982 மார்ச் 17

பங்கு மூலதனம் வீ. 21.1C இலட்சம் ஆகும்: 190 1 இல் இது ரூ. 3. 90 இலட்சம் நிகர லாபம் ஈட்டியது. உறுப்பினர்களின் பங்குத் தொகையின் மேல் 13 சதவீத ஆதாயப் பங்குத் தொகையும் உறுப்பினர்களுக்கு வழங்கியது.

(7) கூட்டறவு பண்டகசாலை

மைய அச்சகத்தில் செயல்படும் கூட்டுறவு பண்டகசாலை பங்கீட்டு ஏற்பாட்டின்கீழ் வரும் பொருட்கள் உட்பட இன்றியமையாத பொருட்களை நியாயவிலையில் பணியாளர்களுக்கு அளிப்பதன்(மூலம பயனுள்ள பணியாற்றி வருகிறது. '91 ஆம் ஆண்டு 31 ஆம் தேதி முடிய இதன் உறுப்பினர்கள் 1,515 ஆகும். பங்கு மூலதனம் ரூ. 37,190 ஆகும். மாதம் ரூ. 200 உயரளவு வரை தொழிலாளர்கள் பொருட்களை கடனாக வாங்கிக் கொள்ளும் வசதியும் அனுமதிக்கபபட்டுள்ளது. இவ்வாண்டில் உறுப்பினர்களுக்கு 9 சதவிகிதம் ஊதிய பங்குத் தொகையும் வழங்கப்பட்டது.

(8) நலநிதி

பணியாளர் இறக்க நேரிடின் அன்னாரின் உடனடி ஈமச் சடங்கிற்குரிய செலவிற்காக ரூ. 100 வழங்கப்படுகிறது.

(9) வேலை பழகுபவர்

1961 ஆம் ஆண்டு வேலை பழகுபவர் சட்டத்தை அமுல் படுத்தும் வயைிகல் பலவகை பணிகளிலும் சேர்த்து 301 வேலை பழகுபவர் இடங்களுக்கு அரசு ஒப்பளிப்பு அளித்திருப்பதோடு, 45 இடங்கள் டிப்ளமா பெற்றவர்களுக்கென தனியாக ஒப்பளிப்பு வழங்கத்பட்டுள்ளது. இவ்வாறு வேலை பழகுபவர் சென்னை நகரம் ற்றும் வெளியூர்களிலுள்ள அரசு அச்சகங்க்ளுககு பணிபுரிய அனுப்பப்படுகின்றனர்.

(7) பொது

7.1. இத்துறையின் மேலாளர்கள் குறிக்கோளின் அடிப்படையில் நிர்வாக முறையை ஏழு ஆண்டுகளாக நடைமுறைப் படுத்தி வருகின்றனர். இம்முறையைப் பின்பற்றியதால் நல்ல பயன் கிட்டியுள்ளது. இதனால் மைய அச்சகத்தில் அச்சுத்துறையில் உற்பத்தி பெருகி நல்ல பயன் தெரிகிறது. ...த்துறைக்கு வரும் ஒவ்வொரு வேலையும் நன்கு வசதி...கப்பட்டு நல்ல முறையில் திட்டமிடப்பட்டு அச்சிற்கு ...க்கொள்ளப்படுகிறது. பெரும்பாலான வேலைகள் ...டப்பட்ட கால வரையறைக்குள் முடித்து அனுப்பப்பட்

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1982 மார்ச் 18.

பங்குனி 5, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை

போகாறு அகலாக் கடை''

பொருள் வரும் வழி (வருவாய்) சிறிதாக இருந்தாலும், போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மின்சார வாரியத்தின் பழுதடைந்த வாகனங்களைப் பழுதுபார்த்தல்

*வினா எண். 531—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தில் பழுதடைந்த வாகனங்களை தனியார் துறையில் பழுது பார்ப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் மின்சார பணிமனையிலே பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மின்வாரியத்தின் ஊர்திகளின் பெரிய பழுதுகள் மட்டுமே தனியார் துறை பணிமனைகளில் பழுது பார்க்கப்படுகிறது.

(ஆ) மின்வாரிய ஊர்திகளின் பெரிய பழுதுகளைப் பழுது பார்க்கும் அளவுக்கு பணிமனை அமைக்கும் உத்தேசம் வாரியத்தில் தற்போது இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பணிமனைகளில் அந்த ரிப்பேர் பார்ப்பதை விட மின் வாரியத்திலேயே அந்த மாதிரி பணிமனைகளை ஏற்படுத்தினால் வாரியத்தின் செலவை மிச்சப்படுத்த முடியாதா? இது வரையில் ஏற்படுத்தவில்லையென்றால், இனிமேலாவது ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே 5 இடங்களில் பணிமனைகள் இருக்கின்றன. அவைகளின்

மூலமாக ஓரளவிற்கு பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மற்ற பல இடங்களிலும் பணிமனைகள் தொடங்கினால், பணியாளர்கள் நியமிப்பது, நிர்வகிப்பது என்பது சிக்கலானதாகவும், செலவுமிக்கதாகவும் இருக்கும் என்பதால், அதனை விரிவாக்கும் உத்தேசம் இல்லை. மாநில அரசின் எம். வி. எம். ஓ. ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிமனைகளை அங்கீகரித்து வைத்து இருக்கின்றனர். அந்த அங்கீகாரம் பெற்ற பணிமனைகள் மூலமாக மின்வாரிய ஊர்திகளும் கொடுக்கபட்டு பழுதுப்பார்க்கப்படுகின்றன.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் மூலமாகத்தான் மின்வாரிய ஊர்திகள் பழுதுபார்க்கப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், போக்குவரத்துத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் எத்தனை உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் 60 பணிமனைகள் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றின் மூலமாகத்தான் அந்தப் பழுது பார்க்கும் வேலைகள் செய்யப்படுகின்றன.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரிய ஊர்திகளைப் பழுதுபார்க்கும் வேலைகளை மின்வாரியமே பார்த்துக்கொள்ளும் அளவிற்கு அதற்குத் தேவையான பழுது பார்க்கும் ஏற்பாடுகளை முறையாக செய்யாத காரணத்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கு பழுது அடைந்த வண்டிகள் பலவும், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மின் வாரிய ஊர்திகள் கடந்த ஓராண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றைப் பழுது பார்க்க தக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்த தகவலின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அங்கீகாரம் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது? வேண்டியவர் வேண்டாதவர் என்ற அடிப்படையிலா அல்லது குறைந்தபட்சத் தகுதி என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படிபட்ட விவரங்களை பின்னால் போக்குவரத்துத் துறை மூலமாகக் கேட்டுப் பெறலாம். வேண்டியவர், வேண்டாதவர்களுக்கு வழங்குவது என்கிற காலம் மலையேறிவிட்டது.



**கல்ராயன் மலைப்பகுதி நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்தி**

*வினா எண். 532—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள நீர் வீழ்ச்சியில் இருந்து மின்சாரம் எடுப்பதற்காக செய்யப்பட்ட ஆய்வு வேலைகள் முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில் ஆய்வு அறிக்கையின் விவரம் என்ன?

(இ) மின்சாரம் எடுப்பதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ), (ஆ) (இ): கல்ராயன் மலைப்பகுதியில் கோமுகா நதி நீர் வீழ்ச்சியில் இருந்து மின்சாரம் எடுப்பதற்காக வேண்டிய ஆய்வு வேலைகள் எடுத்துக் கொள்ள மின் வாரியத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மின்வாரியம் விரிவான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடந்த ஓராண்டுகளுக்கு முன்பாக இந்த சட்டமன்றத்தில் இது குறித்துக் கேட்கப்பட்டபோது, ஆய்வுகள் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அதனுடைய ஆய்வுகள் முடியவில்லை என்று சொல்கிறார்கள். எப்போது அந்தப் பணிமுடியும் எந்த ஆண்டு அங்கே மின்உற்பத்தி துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கடந்த அக்டோபர் மாதத்தில் தான் அதற்கான அனுமதி அரசால் வழங்கப்பட்டது. 15.15 லட்ச ரூபாய் ஆய்வுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இன்னும் அந்தப் பணி துவங்கபடவில்லை. விரைவில் துவங்கப்படும். இரண்டு ஆண்டுகளில் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, அதற்குப் பின் இந்தத் திட்டம் 5–6 ஆண்டுகளில் முடிக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று சேலம்மாவட்டம் ஆத்தூர் தாலூக்காவில் இருக்கக் கூடிய சின்னகல்ராயன் மலைப்பகுதியில் நீர்வீழ்ச்சி ஒன்று வருகிறது. எப்படிப்பட்ட வறட்சிகாலத்திலும் அந்த நீர்வீழ்ச்சி வருகிறது. ஆசவே, ராமநாயக்கன் பாளையம் பக்கத்தில் உள்ள சின்னகல்ராயன் மலைப் பகுதி நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: தகவலுக்கு நன்றி, அது பற்றி மின் வாரியம் பரிசீலிக்கும்.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார பற்றாக்குறை நாடெங்கும் இருந்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நீர் வீழ்ச்சிகள் எங்கெங்கு உள்ளனவோ அந்த இடங்களிலெல்லாம் மின்சார உற்பத்தி செய்ய-குறிப்பாக குற்றாலம் போன்ற இடங்களில் மின்சார உற்பத்தி செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குற்றாலத்தில் மின் உற்பத்தி செய்தால், குளிக்க முடியாது.

பெரியார் மாவட்டம் சங்கராண்டான் பாளையத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

* வினா எண். 533—திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சங்கராண்டான் பாளையத்தில் பால் குளிரூட்டும் நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) மதிப்பீடு ரூ 25 லட்சங்கள். இந்நிலைய வேலை முடிவடைந்து சாதனை வெள்ளோட்டம் (Trial Run) நடத்த ஏற்பாடாகியுள்ளது. அதன் பின் கூடிய சீக்கிரம் செயல் படுத்தப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டன் சத்திரத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தைதான், பெரியார் மாவட்டத்தில் உள்ள சங்கராண்டான் பாளையத்தில் கொண்டு வருவதற்கான செயல்கள் மேற்கொள்ளப்படுவதாக உள்ளது. ஆகவே, அதை எடுக்காமல் தனியாக சங்கராண்டான் பாளையத்தில் மட்டும் ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே; ஏற்கெனவே நான் தெளிவாக திட்டவட்டமாக சொல்லிவிட்டேன்—அது வந்துவிட்டது. 25 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் தொடங்கயிருக்கிறது என்று



திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய வெப்ப சக்தி மூலம் குளிரூட்டும் சாதனங்களை இயங்கச் செய்ய முடியும் என்று சமீபத்தில் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. ஆகவே, அதைப் பயன்படுத்தி குளிரூட்டும் நிலையங்களை, ஒவ்வொரு கிராமத்திலும் அமைப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா? பரீட்சார்த்தமாக ஏதாவது ஒரு இடத்தில் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சி அரசினிடத்திலே எதுவும் இல்லை.

திரு. ஆர். ரங்கசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராண்டான் பாளையத்தில் இருப்பது போன்ற குளிரூட்டும் நிலையம் ஒன்று சத்திய மங்கலத்தில் ஆரம்பித்து வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எப்பொழுது முடிக்கப்படும் எப்பொழுது வேலை துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அது விரைவில் முடிக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பால் குளிரூட்டும் நிலையம் இங்கே வெகு சீக்கிரத்தில் துவங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப்பால் குளிரூட்டும் நிலையத்தின் மூலமாக எத்தனை கிராமங்களில் எத்தனை பால் உற்பத்தியாளர்களுக்கு பயன் கிடைக்கும் என்பகை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, தற்போது சங்கராண்டான் பாளையத்திலும், அதனைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலும் 40 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அதன் மூலம் 4,000 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. புதியதாக இந்த நிலையத்தை ஏற்பாடு செய்திருக்கிற காரணத்தால் மேலும் 50 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க முயன்றுக் கொண்டிருக்கிறோம். விரைவிலே 10,000 லிட்டர் பால் சேகரிக்க முடியும் என்று நம்பப்படுகிறது. இதனுடைய கொள்முதல் திறன் 30,000 லிட்டர் என்ற அளவில் அமைத்திருக்கிறோம்.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பால் குளிரூட்டும் நிலையங்கள் இந்த ஆண்டு எங்கெங்கே தொடங்கப்பட இருக்கிறது இதுபோன்று நெல்லை மாவட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தில், ஒரு நிலையத்தை துவங்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, நாளை அது குறித்து அறிவிக்கப்படும்.

**திரு. கா. கோ. கிருஷ்ணசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராண்டான் பாளையத்தில் அமைக்கப்படும் குளிரூட்டும் நிலையத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு, குடியிருப்பு வசதிகள் செய்துதரப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண். 534—செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேலம் மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எங்கு; எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : (அ) தற்பொழுது இல்லை.

(ஆ) எழவில்லை.

(முற்பகல் 9.10)

**செல்வி ப. விசயலட்சுமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இக்கேள்வியினைப் பரிசீலனை செய்தாவது மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடத்தை அமைக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் ஒரு கால்நடைத் தீவனத் தொழிற்சாலையும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரில் ஒரு கால்நடைத்தீவன தொழிற்சாலையும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டாவது பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் மதுரையில் 81 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கால்நடைத் தீவனத் தொழிற்சாலை அமைக்க அரசு திட்டமிட்டிருக்கின்றது. இது முடிந்த பிறகு தேவை என்றால் சேலத்தில் தொடங்கப்படும்.





**திரு. சேலம் மு. ஆறுமுகம்** : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன, அவைகள் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை டன் மாட்டுத் தீவனம் தயாரிக்கின்றன. அதனால் அரசுத் துறைக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : ஏற்கெனவே நான் பதிலளிக்கின்றபோது ஆம்பூரிலும், ஈரோட்டிலும் அந்தத் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொல்லி இருக்கிறேன். மதுரையில் வர இருப்பதாகவும் சொல்லி இருக்கிறேன். ஈரோட்டிலே இருக்கின்ற அந்த ஆலையில் 100 டன் தயாரிக்கப்படுகின்றது. அதுபோல் ஆம்பூரிலும் தயாரிக்கப்படுகின்றது, இப்படி இரண்டு இடங்களில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**திரு. கே. குப்புசாமி** : தலைவரவர்களே. மதுரை மாவட்டத்திலே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற மாட்டுத் தீவனத் தொழிற்சாலையை மாடுகள் மற்றும் பிராணிகள் அதிகமாக வாழ்கின்ற ஒட்டன் சத்திரம் பகுதியிலே ஆரம்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : தலைவரவர்களே, தொழிற்சாலை அமைக்க கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எந்த இடம் என்பது மற்ற வசதிகளை எல்லாம் அனுசரித்துத்தான் முடிவு செய்யப்படும்.

**திரு நா. சுந்தரராஜ்** : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு இடங்களில் மாட்டுத் தீவனத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பு அதிகமாக இருப்பதால் கோழித் தீவனம் தயாரிக்கும் திட்டம்பற்றி பரிசீலிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : தலைவரவர்களே, இதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே கேள்வி கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன்** : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே மூன்றிலே இரண்டு பகுதி நிலம் வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கின்றது. அங்கெல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் மழை பெய்கின்றது. ஆகவே அந்தப் பிரதேசங்களில் கால்நடை தீவனம் தட்டுப்பாடாக இருக்கின்றது. ஆகவே தமிழ்நாட்டிலே உபயோகப்படுத்துகின்ற பச்சைப்புல், வைக்கோல், சோளத்தட்டை போன்றவைகளை விட இந்த உற்பத்திச் செலவு கூடுகின்றதா? அப்படியானால் குறைந்த விலையிலே உற்பத்தி செய்து வறட்சிப் பிரதேசங்களுக்கு கொடுக்க விரிவான திட்டத்தைச் செயல்படுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : தலைவரவர்களே, இதுபற்றிய விவரங்கள் இல்லை. இது முக்கியமான விவரம் என்பதால் தனிக்கேள்வி போட்டால் விளக்கம் தரப்படும்.

பழனியிலுள்ள பழனியாண்டவர் கலைக்கல்லூரி.

* வினா எண். 464—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக்கல்லூரியில் M.Com., M.A. (வரலாறு) ஆகிய முதுகலை பட்ட வகுப்புகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

(ஆ) இவ்வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) மற்றும் (ஆ) : பழனி அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் எம். காம். எம். எஸ். ஸி. (கணிதம்) மற்றும் எம். ஏ. (பொருளாதாரம்) ஆகிய முதுகலைப் பட்ட வகுப்புகள் ஆரம்பிக்க மதுரை காமராஜ் பல்கலை கழகத்தை கேட்கப் பட்டது. 1980–81-ம் ஆண்டிலிருந்து எம். காம். வகுப்பு மட்டும் புதிதாக ஆரம்பிக்க மதுரை காமராஜ் பல்கலை கழகம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி, 14–10–1981 தேதி முதல் அவ்வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**திரு. என். பழனிவேல் :** தலைவரவர்களே, பழனியிலே இருக்கக்கூடிய அந்தக் கல்லூரி வளர்ந்து வரக்கூடிய கல்லூரியாக இருக்கின்றது. அந்தக் கல்லூரியிலே எம்.காம்., எம்.ஏ., (வரலாறு) போன்ற பாடங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதுடன் சென்ற ஆண்டு பி.காம் வகுப்பிற்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. ஆகவே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தேவையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அமைச்சரவர்கள் அங்கே இந்த பாடங்களை எல்லாம் ஆரம்பிப்பதற்கும் அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களின் சிரமங்களை தவிர்ப்பதற்கும் உத்தரவிடப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, அரசினுடைய ஆணையை வைத்து இந்த வகுப்புகளை ஆரம்பிக்க இயலாது. பல்கலைக்கழகத்தினுடைய அனுமதி தேவைப்படுகின்றது. மதுரைப் பல்கலைக் கழகத்தினிடத்திலே கேட்டிருக்கிறோம். அனேகமாக வருகின்ற ஆண்டிலே அவர்கள் அனுமதி அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. என். பழனிவேல் :** தலைவரவர்களே, இம்மாதிரி வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழகம் அனுமதி தரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பல்கலைக் கழக ரிஜிஸ்டரார் அங்கே வந்திருந்தபோது இது சம்பந்தமாக நானும் நண்பர் குப்புசாமி அவர்களும் நேரிலேயே எடுத்துச் சொல்லியபோது இந்த ஆண்டு இந்தச் சங்கடங்களைத் தவிர்ப்பதற்கு நாங்கள் இப்போதே முயற்சியை மேற்கொள்வோம் என்று அவர் சொல்லிவிட்டு சென்றார். ஆனால் அதை ஆரம்பித்ததாகத் தெரியவில்லை. ஆகவே இந்த ஆண்டு இதிலே காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க அமைச்சர



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** சென்ற ஆண்டு இந்த வகுப்பைத் துவங்கிய நிகழ்ச்சியில் ஒரு சிறிய கருத்து வேறுபாடு பல்கலைக் கழகத்திற்கும் இந்த பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி நிர்வாகத்திற்கும் ஏற்பட்டது. அதை நானும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் தலையிட்டு தக்க முயற்சிகளை மேற்கொண்டு அந்த வகுப்புகளை நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தோம். இந்த ஆண்டு என்பது இப்போது முடிந்து இனி தொடங்கப்படுகிற கல்வி ஆண்டு என்றுதான் பொருள். அநேகமாக பல்கலைக் கழகம் வருகிற கல்வி ஆண்டில் நிச்சயமாக அந்த அனுமதியைத் தரும் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அருள்மிகு பழனி ஆண்டவர் தேவஸ்தானத்தில் இருந்து எம்.காம்., எம்.ஏ., போன்ற கலை வகுப்புகளை தொடர்வதோடு தொழில் கல்வியை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கிற பாலிடெக்னிக்ஸ் போன்றவற்றை ஆண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் பெண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் என்று தனித்தனியாக ஆரம்பிக்க ஏதாவது முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அவ்வாறு மேற்கொள்ள அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மிகுந்த விவரம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒரு மிகப் பெரிய செய்தியை தெரிந்து கொள்ளாது ஒரு கேள்வி கேட்டிருப்பது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. இப்போது பழனி ஆண்டவர் ஆலயத்தின் சார்பில் பெண்கள் பாலிடெக்னிக் ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் துவங்கவேண்டுமென்று அந்த அறங்காவலர் குழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்வித் துறைக்கு அந்த மாதிரி விண்ணப்பமும் செய்திருக்கிறார்கள்.

**திரு. கே. குப்புசாமி :** 1981–82-ல் பழனி ஆண்டவர் கலைக் கல்லூரியில் எம்.காம். வகுப்பு ஆரம்பித்திருப்பதால், பிஸிக்ஸ், மாத்தமட்டிக்ஸ் துறைகளிலும் எம்.எஸ்ஸி. கொண்டுவருதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பல்வேறு விவரங்களையெல்லாம் இந்த ஒரு கேள்வியில் நான் பதில் அளிக்க இயலாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக அந்தக் கருத்துக்களையெல்லாம் தெரிவித்தால் அந்த நிர்வாகக் குழுவிற்கு அனுப்பி அதையும் பரிசீலிப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

அரசு வனத்துறை நிலங்களை தனியார்களுக்கு வழங்குதல்.

*வினா எண். 465—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வன இலாகாவின் நிலங்கள் 1979, 1980 வருடங்களில் தனி நபர்களுக்கோ, தனியார் நிறுவனங்களுக்கோ வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) அவ்வாறெனில் என்ன அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது?

(இ) வழங்குவதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ, ஆ மற்றும் இ): இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மதுரை கோட்ஸ் கம்பெனிக்கு 1980-ல் நூற்பாலையை விரிவுபடுத்த என்றிருப்பதை 1976 என்று திருத்திப் படிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: வன இலாகாவிற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இடங்களை 90, 99 ஆண்டுகள் பல நபர்களுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. இந்த இடங்களை எடுத்துக்கொள்ள அரசுக்கு உத்தேசமுண்டா? குறிப்பாக ஏ.எம்.எம். அருணாசலம் ட்ரஸ்ட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இடம் தற்போது எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற காரணத்தால் அதற்கு அருகாமையில் ஏறக்தாழ இரண்டாயிரம் ஏக்கர் நிலம் இருப்பதன் காரணமாகவும் இந்த நிலத்தை வேறு தொழில் நிறுவனத்திற்கு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இங்கே தரப்பட்டிருக்கிற பதிலில் மூன்று பேர்களுக்கு தரப்பட்டிருக்கிறது என்ற விவரம் தரப்பட்டிருக்கிறது. தற்சமயம் இரண்டு குத்தகைக்கு தரப்பட்டிருக்கிறது. ஒன்று விற்பனைக்கு தரப்பட்டிருப்பதாக இருக்கிறது. குத்தகைக்கு இரண்டு இடங்கள் தரப்பட்டிருப்பதில் 99 ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டதாக தகவல் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற ஏ.எம்.எம். அறக்கட்டளை பள்ளிக்கூடம் கட்டப்பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிற பள்ளிக்கூடத்தை வாங்கி நடத்துவதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது அந்தப் பள்ளிக் கூடம் கட்டவில்லை என்று சொன்னால் ஒப்பந்தப்படிஅந்த நிலம் திரும்பவும் வனத்துறைக்கு வந்து சேர்ந்துவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மத்திய அரசு இந்தியன் கவுன்ஸில் ஆப் ரிசர்ச் சென்டர், ரப்பர் போர்ட் இவற்றை ஆரம்பிக்க வன இலாகாவிடம் இடங்கள் கேட்கப்பட்டிருக்கிறதா? அதற்காக இடங்கள் கொடுக்கப்படுமா இல்லையென்றால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல தனியார்கள் வைத்திருக்கக் கூடிய வன இலாகா இடங்களை எடுத்து அந்த இரண்டு நிறுவனங்களையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக் கேள்வி வன இலாகாவின் நிலங்கள் தனியார்களுக்குத் தரப்பட்டிருப்பது பற்றியது. அதற்கான தகவல்களை

640-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



நான் சேகரித்து பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரப்பர் போர்டுக்கு நிலம் கொடுப்பதுபற்றித் தெரிவிக்கிறார்கள். அதற்கு தனியாக கேள்வி போட்டால், அதற்கான தகவலைச் சேகரித்துத் தரமுடியும். ரப்பர் போர்டுக்கு நிலம் கொடுப்பதென்றால், அவர்கள் காட்டுக்குள்ளே கேட்பார்கள். இப்போது கொடுக்கப்பட்ட நிலங்கள் எல்லாம் காட்டு நிலங்கள் என்று சொல்வதாக இருந்தாலும், அவைகள் மரங்கள் இல்லாத, பொட்டல் நிலங்களைத் தான் தந்திருக்கிறோம். ஆகவே, காட்டுக்குள்ளே நிலம் வழங்குவது என்பது வேறு; மரங்கள் அல்லாத பொட்டல் நிலங்களை வழங்குவது என்பது வேறு.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் வடக்குப் பகுதியில் 50 குடியிருப்புகள் உள்ளது. அந்தப் பகுதியிலே வசிக்கும் இடத்திற்கும், பாரஸ்ட் இடத்திற்கும் இரண்டு தெருக்கள தான் இருக்கின்றன. அதனால், பாரஸ்ட் இலாகாவினருக்கும், இந்தக் குடியிருப்பு மக்களுக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் நேரில் வந்து.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இதை அனுமதிக்க முடியாது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும் போது கொடுக்கப்பட்ட நிலங்கள் மரங்கள் இல்லாத, வனத் துறைக்குச் சொந்தமான பொட்டல் நிலங்கள் என்று சொன்னார்கள். அதேமாதிரியாக எந்தவிதமான மரங்களும் வளர்வதற்கு லாயக்கில்லாத, வன இலாகாவைச் சேர்ந்த நிலங்களில் பலஇடங்களில் பல்லாண்டுகளாக அரிசன மக்கள் வீடுகளும், குடிசைகளும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடங்களை புறம்போக்கு நிலங்களாக மாற்றி, அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்படுமா? கோவில்பட்டியிலே லிங்கப்பட்டி பஞ்சாயத்திலே, இன்னும் இதைப்போன்ற இடங்களில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இதை அனுமதிப்பதற்கில்லை.

டூரிங் சினிமா பகல் காட்சிகளுக்கு அனுமதி வழங்குதல்

* வினா எண்.—466 திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள எல்லா டூரிங் சினிமா கொட்டகைகளுக்கு பகல் காட்சி சினிமா நடத்த அனுமதி வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் உடன் நடைமுறை படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) மற்றும் (ஆ): டூரிங் திரை அரங்குகளில் பகல் காட்சிக்கு அனுமதி வழங்கக்கோரி அரசுக்கு வேண்டுகோள் வந்துள்ளது. அதன் மீது அரசு எந்த முடிவையும் எடுக்கவில்லை.

**திரு. ப. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த டூரிங் சினிமா கொட்டகை தென்னங் கீற்றுக் கொட்டகை யாக இருந்தது. அதை மாற்றி லைட் ரூபிங் ஷீட் போட்டதால் பல லட்சக்கணக்கான பணம் செலவாகின்றது. அதைச் சரிக்கட்டு கின்ற வகையில், அந்தக் கிராமத்திலுள்ள இந்த டூரிங் சினிமா கொட்டகையில் பகல் காட்சி நடத்துவதற்கு அனுமதி வழங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி அரசு ஆணையிட்டு, அமைக்கப்படுகின்ற டூரிங் திரையரங்குகளுக்கு அதிகமான முதலீடுகள் செய்யப் படுகின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்- அந்த அடிப்படையிலே தான், அதற்கான உரிமத்தை 3 ஆண்டுகள் என்றிருந்ததை. 5 ஆண்டுகள் என்று நீட்டித்து தந்திருக்கிறோம். சுலபத்திலே தீட்பிடித்துக் கொள்ளும் வாய்ப்பு கீத்துக் கொட்டகைகளிலே இருக்கின்ற காரணத்தினால் அதிலும் பகல் காட்சி நேரத்திலே எளிதில் தீப்பிடித்துக்கொண்டு விடுகிறது என்ற அறிவுரையை ஒரு நபர் கமிஷன் விசாரணை யிலிருந்து அவர்களால் அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது, சுலபத்தில் தீப்பிடிக்காத வகையில் அரங்குகள் அமைக்கப்படுகின்ற காரணத்தினால், பகல் காட்சிகள் நடத்த அனுமதி கேட்கிறார்கள். அப்படி அனுமதிக்கிறபோது வேறு பல பிரச்னைகள் வருகின்றன. மக்களுக்கு தேவையான காற்றோட்ட வசதிகள், மற்ற வசதிகள் அந்த அரங்கத்திலே அமைத்து தருவார்களா என்பதை அறிய வேண்டும். பகல் காட்சி அனுமதிக்கப்படுகிற போது ஒட்டுமொத்தகேளிக்கை வரிமுறையை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. வணிக வரித் துறையிடத்திலே பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறோம். அந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலித்ததற்குப் பிறகு தான் அரசு இதிலே முடிவை தெரிவிக்க இயலும்.

**திரு. ஏ. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாக் கொட்டகைகளின் உரிமம் மூன்று ஆண்டாக இருந்தது. ஐந்து ஆண்டாக மாற்றப்பட்டு பல சலுகைகள் எல்லாம் தரப்படுகின்றன. ஆனால் தமிழக அரசு செய்திப் படங்களை பல கொட்டகைகள் போடுவதில்லை. அப்படி போடாத கொட்டகைளை சோதனை செய்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பகல் சினிமாக் காட்சி வைத்துக் கொள்ளலாமா, கூடாதா என்பது கேள்வி அதைப்பற்றித் தான் துணைக் கேள்விகள் அனுமதிக்க முடியும்.



**திரு. க. இரா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலை நேரக் காட்சி, பகல் 10 மணி காட்சி என்று சினிமாக் கொட்டகைகளுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் நலனைக்கருதி, காலையிலே பள்ளிக்கூடம்செல்லாமல் 10 மணி காட்சிக்கு அவர்கள் சென்றுவிடுகிற நிலை இருப்பதால் 10 மணி காட்சி காட்டுவதை அரசு ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகல் காட்சி காட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அதற்கு மாறாக அனுமதிக்கப்பட்டிருக்கிற காட்சியை ரத்துசெய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். கெட்டுப் போகிற மாணவர்கள் பகல் காட்சி நடத்தினாலும், நடத்தா விட்டாலும் கெட்டுப் போவார்கள். காட்சி நடத்துவதாலே மாணவர்கள் கெட்டுப் போவார்கள் என்கிற வாதம் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

வெள்ளைப்பொன்னி நெல் விதை வழங்கும் செயற்குறிப்பு.

*வினா எண். 535—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் விவசாயிகளுக்கு வெள்ளைப் பொன்னி நெல்விதை வழங்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில் அரசு வழங்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) தமிழகத்தில் விவசாயி களுக்கு வெள்ளைப் பொன்னி நெல்விதை வேளாண்மைத்துறை யால் தற்போது வழங்கப்படவில்லை.

(ஆ) வெள்ளைப் பொன்னி நெல் விதைகளை விவசாயி களுக்கு வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி மிக சிறந்த நெல் என்று சொல்கிறார்கள். மாநில வேளாண்மைத் துறையின் மூலமாக நாம் கொடுத்து வருகிற விதை நெல்லைப் போல 50 சதவீதம் கூடுதலாக விளைச்சல் தருகிறது என்றும், அந்த நெல்லுக்கு நோயே வருவதில்லை என்றும்சொல்கிறார்கள். சிங்கப்பூரிலேயிருந்து அந்த நெல்லை கடத்தி வந்து திருச்சி பகுதியிலே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட இரண்டு போகத்திற்கு பிறகு வீரியம் இல்லாமல் போய்விடுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவி செய்கிற இந்த நெல்லை வேளாண்மைத்துறையிலே புகுத்தி விவசாயிகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 18

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையிலே அரசு இதை ஆராயும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வீரியம் மிக்கது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். திருச்சி தென்னாற்காடு மாவட்டங்களிலே கொடுக்கப்பட்ட வெள்ளைப் பொன்னி சரியானதாக கொடுக்கப்படாததால் விவசாயிகளுக்கு 75 சதவீதம் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதனை அரசிற்கு தெரிவித்திருப்பது உண்மைதானா? அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு வருங்காலத்திலாவது நல்ல நெல்லாக கொடுப்பதற்கும், அதற்காக ரிசர்ச் ஸ்டேஷனுக்கு அனுப்பி ஆராய்ந்து பிறகு விவசாயிகளுக்கு அதனை கொடுப்பதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி ரகத்தை இது வரையில் அரசு வழங்கவில்லை. இந்தத் துறையும் வழங்கவில்லை. அவர்கள் தெரிவிக்கிற கருத்துக்கள் அடிப்படையிலே இனிமேல் இதுபற்றி ஆராய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றுதான் நான் தெரிவித்தேன்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிற விதை நெல் சரியான நேரத்தில் கொடுப்பதில்லை. ஆகவே இதைத் தவிர்க்க அரசு விதை நெல்லை முன்னதாக வழங்க முன் வருமா? அதை மானிய விலையில் வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு தொடர்பில்லை. ஆனால் விதை நெல் சரியாக வழங்கப்படவில்லை என்று புகார் வந்தால் அரசு உரிய வகையிலே ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி தஞ்சை மாவட்டத்தில் அதிகம் பயிரிடப்படுகிறது. அதனால் விவசாய இலாக்கா மூலமாக தரமான விதை தருவதற்கு அரசு முன்வருமா? அதிக மகசூல் பெறுவதற்கு ஆராய்ச்சி நடத்தி தமிழகம் முழுவதும் பயிரிட முயற்சிகள் அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1982 மார்ச் 18]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே அப்படி வெள்ளைப் பொன்னி விதை நெல் வழங்குகிற வகையிலே அரசு முயற்சி மேற்கொள்ளவில்லை. வழங்க வேண்டுமென்றால் அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. வேளாண் பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள் அதை ஏற்றிருக்க வேண்டும், இந்திய அரசு திட்டப்படி விதைச் சான்று அளித்திருக்க வேண்டும். இதை மத்திய அரசு அறிவிக்க செய்திருக்க வேண்டும் என்று இப்படி சில விதி முறைகள் இருக்கின்றன. இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டதாக வெள்ளைப் பொன்னி ரகம் இதுவரையிலும் சேர்க்கப்படவில்லை. இனிமேல் சேர்ப்பதற்கு அரசு ஆராயும்.

(முற்பகல் 9.30)

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வெள்ளைப்பொன்னி கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் சொன்னார். ஆனால், இங்கே குறிப்பிட்டதைப் போல், தென்னாற்காடு மாவட்டத்தில் நிறைய பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், மகசூல் சரியில்லை. எனவே, அவற்றுக்கு மாற்று நெல்லாக, புதிய ரக நெல் என்ன கண்டு பிடித்திருக்கிறார்கள், எங்கெங்கு விநியோகம் செய்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி ரகம் வழங்கப்படவில்லை. மற்றைய விதைகள் வழங்கப்படுகின்றன. ஆகவே, வெள்ளைப்பொன்னி ரகத்தினாலே மகசூல் சரியில்லையென்றால் அதற்கு இந்தத் துறை பொறுப்பில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வெள்ளைப்பொன்னி நெல் இன்றைக்குப்பிரபலமாகப்
பேசப்படுகிறது. ஆகவே வருகின்ற பருவத்திலாவது விவசாயி
களுக்குச் சப்ளை செய்வதற்கு அமைச்சர் முன்வருவாரா?
அதோடு, தற்போது வழங்கக்கூடிய விதை நெல்கள் அரசுப்
பண்ணைகளிலே தயாரிக்கப்படுகிறதா? அல்லது, தனியார்
பண்ணைகள் மூலம் வாங்கி விற்கப்படுகிறதா? ஏனென்றால்,
சென்ற ஆண்டு விவசாயிகள் இந்த மாதிரி விதை நெல் வாங்கி
முளைக்காமல் அல்லது சேதாரமாகி, பெரிய நட்டத்திற்கு
உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த
விதைப் பொருள்கள் வழங்கக்கூடிய அந்த இலாகாவை, அந்த

ஆண்டு நேரடியாகக் கவனித்து, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கும் என்ன, என்ன நெல் விதைகள் தற்போது வழங்கப்படுகின்றன என்பதையும் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய விதைப் பண்ணைகளிலே தயாரிக்கப் படுகிற விதைகளை மட்டுமே வழங்கக்கூடிய அளவு நிலைமை இல்லை. தனியார் பண்ணைகளிலே தயாரிக்கப்படுகின்ற, சான்றிதழ்கள் பெற்ற விதைகள் வழங்கப்படுகின்றன. தேவைக் குரிய விதையை நாம் இன்னும் நிறைவு செய்ய முடியவில்லை. அதனால்தான் புதிதாக இரண்டு விதைப் பண்ணைகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் தொடங்கப் பட்டதற்குப் பிறகு, இந்தப் பற்றாக்குறைகள் நீங்கும் என்று கருதுகிறேன்.

திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளைப்பொன்னி நெல்லும் மற்றும் சில உயர்தர நெல்களும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலே இருந்து கடத்தப்படுவதாகச் சொல்கிறார்களே, அதை அரசு அறியுமா? அது உண்மையாக இருக்குமானால், அரசு இறக்குமதி செய்து. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிங்கப்பூரிலே விவசாயமே கிடையாது. டிரான்சிஸ்டரா என்ன, சிங்கப்பூரிலிருந்து வருவதற்கு.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் பயிரிடும் இடங்களில் பயிரிடப்பட்டுள்ள ரப்பர் மரங்கள்.

*வினா எண். 536— திரு. டி. மணி திரு. ஜே. ஹேமச்சந்திரன் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் பயிரிடும் நிலங்களில் ரப்பர் பயிரிடப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அடுத்துள்ள நிலங்களில் நெல் பயிரிடும் விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்களா?

(இ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம். குறுகிய பரப் பளவில் அதாவது 38.87 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடப்படுகிறது.

(ஆ) ரப்பர் தோட்டத்தை அடுத்துள்ள நெல் வயல்களில் இங்கும் அங்குமாக ஓரளவு நிழலினாலும், வேர்களினாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(இ) மிகச் சிறிய பிரச்சனையாக இருப்பதாலும் இதன் மீது தனிப்பட்ட நடவடிக்கை எதுவும் தேவையில்லை என அரசு கருதுகிறது.



திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில், குறிப்பாக, தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு தாலூகாக்களிலே இருபோக நெல் சாகுபடி செய்கின்ற, நீர்த்தேக்கங்களிலிருந்து முறையாக தண்ணீர் பெறுகின்ற நிலங்களில், ரப்பர் மட்டும் பயிரிடுவதில்லை. அல்பீசியா, தென்னை போன்ற பணப் பயிர்களைப் பயிரிடுவதால் ஏற்கனவே அந்த மாவட்டத்தில் நெல் பற்றாக்குறை உள்ளது, அரிசிப் பற்றாக்குறை உள்ளது. இது பரவி வருமேயானால், மீண்டும் அந்தப் பற்றாக்குறை அதிகமாகும். ஆகவே, அதை கவனத்திலே கொண்டு, முறையாக நெல் சாகுபடி செய்கின்ற, நீர்ப்பாசனம் பெற்று விளைகின்ற நிலங்களில், தென்னையோ, அல்பீசியாவோ, ரப்பரோ பயிரிடுவதைத் தடை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு விடை அளிக்கும்போது குறிப்பிட்டதைப் போல 38.87 ஹெக்டேரில்தான் இதுபோல ரப்பர் போன்றவைகள் பயிரிடப்படுகின்றன என்றும் நெல் பயிரிடும் நிலத்தின் அளவு 46,280 ஹெக்டேர் என்றும் தகவல்கள் உள்ளன. ஆகவே, பிரச்னை சிறியதாக இருக்கிற காரணத் தாலே, இதைப்பற்றி முயற்சி மேற்கொள்ளத் தேவை யில்லையென கருதுகிறேன்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தப் பதிலைத்தான் சொன் னார்கள். ஆனால், அங்கு இப்பொழுதிருக்கிற நிலைமை அவ்வாறில்லை. நெல்லை சாகுபடி செய்கின்ற இடத்தில் நெல்லை மட்டும் அல்ல அவர்கள் பயிரிடுவது, அல்பீசியா போடுகிறார்கள், பரவலாகத் தென்னைப் பயிரிடப்படுகிறது. ஏற்கனவேநெல்பற்றாக்குறையாகஇருக்கிறது.முறையாகதண்ணீர் கிடைக்கிற பகுதி, ஒருபோக சாகுபடி என்றாலும் பரவா யில்லை. இருபோகம் சாகுபடி செய்கின்ற, தண்ணீர் முறையாக கிடைக்கின்ற அந்தப் பகுதிகளிலே பரவலாக, இப்பொழுது நோய் பரவுகிறமாதிரி, இந்தப் பணப் பயிர்கள் பயிர் செய்யப் படுகிறது. ஆகவே, த ட செய்யவில்லையென்றால், எதிர் காலத்தில், பற்றாக்குறை பகுதியாக இருக்கிற அந்தப் பகுதியில் மீண்டும் பற்றாக்குறை ஏற்படும். ஆகவே, அதை கவனத்தில் கொண்டு மீண்டும் மறுபரிசீலனை செய்து, பணப்பயிர்களை பயிரிடுவதை தடை செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, மாநில அளவிலே நெல்லுக்குப் பற்றாக்குறை என்பது அல்ல. அவர்கள் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அதுவும் அவர்கள் மூலக் கேள்வியிலே ரப்பரை மட்டுமே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ரப்பரைப் பொறுத்த வரையிலே, நெல்லின் 'மூலம் கிடைக்கின்ற வருமானத்தைக் காட்டிலும், அதிகமான அளவுக்கு வருமானம் இதைப் போடக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. ஆண்டில் இரண்டு மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் வருமானம் கிடைக்கிறது. ஆகவே. வைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது விவசாயிகளின் வருமானத்தையும் கணக்கில் கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது. வேறு சில விளைபொருள்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்' அவ்வாறு இருக்குமானால் அரசு அதைப்பற்றி ஆராயும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்று இந்த விஷயத்திலே நடவடிக்கை தேவையில்லை என்று சொன்னார்கள். இது சரியல்ல. பணப் பயிரான இரப்பர் பயிரிட்டால் அதிகமாக இலாபம் கிடைக்கிறது என்பதால் வசதியுள்ளவர்கள் அவர்களுடைய நிலங்களில் இரப்பரைப் போடுவதால் பக்கத்தில் இருக்கும் ஏழைகள் நெல் பயிரிடுவதற்கு முடியாத நிலைமை ஏற்படுகிறது. இரப்பர் ஷேடோவின் காரணமாக ஏழைகளின் வயல்களில் நெல் பயிரிட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பரவக் கூடிய நிலையிலே அமைச்சரவர்களே கூறியதைப்போல அதிகமான வருவாய் இரப்பரிலே கிடைக்கிறது என்ற காரணத்தினாலே சானல் புரவுகளில்கூட ஏழை விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையைப் பரிசீலனை செய்து இப்படி வயல்களிலே, குறிப்பாக சானல் புரவுகளிலே இரப்பர் பயிரிடுவதைத் தடுப்பதற்கான சட்டமியற்ற அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, வந்திருக்கின்ற தகவலின்படி பெருமளவு பாதிப்பு இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வசதியானவர்கள் இரப்பர் பயிரிடுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் பக்கத்தில் உள்ள ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆராயும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அவருக்கு வந்திருக்கின்ற தகவலின்படி சின்ன அளவில் தான் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். இது சம்பந்தமாகப் பல விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுக்கும் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது அரசின் பரிசீலனையில் வரவில்லையா? மீண்டும்



இதுசம்பந்தமாகப் பரிசீலனை செய்து இப்படி இரப்பர் பயிரிடப்பட்டு ஏழைகளைப் பாதிக்கும் நிலையைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, இது வரைக்கும் அம்மாதிரி புகார் எதுவும் வரவில்லை. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் அரசு ஆராயும்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நஞ்சை நிலங்களில் இரப்பர் மட்டுமல்ல; சில பகுதிகளில் நெல்லுக்கான உற்பத்தி விலை சரியாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் சவுக்கு போட்டு பலன் அடைய விரும்புகிறார்கள். இப்படி மற்றப் பொருட்களைப் பயிரிடுவதால் உணவு உற்பத்தி அதிகம் பாதிக்கப்படும் என்பதால் நெல் பயிரிடுகின்ற இடத்தில் வேறு எந்தப் பயிரும் பயிர் செய்யக்கூடாது என்று அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, அவ்வாறு கட்டுப்படுத்த இயலாது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இரப்பர் பயிரிடப்படுகிறது என்கின்ற வகையில் மூலக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. வேறு இடத்தில் ஏதாவது புகார் இருந்தால் அதைக் குறித்து அந்தக் குறிப்பிட்ட புகாருக்குரிய இடத்தைப் பற்றி ஆராயலாம்.

**திரு. மு. அம்பிகாபதி:** சவுக்கு ஒரு கிலோ 55 காசாகவும், வேலிக்கருவு ஒரு கிலோவிற்கு 45 காசாகவும், கரும்பு ஒரு கிலோ 18 அல்லது 20 காசாகவும் இருக்கிறது. விவசாயிகள் எதைப் பயிரிடுவார்கள் என்று அமைச்சரவர்களை வினவ விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, கேள்வி இரப்பரைப் பற்றியது. சவுக்கையும் கரும்பையும் இரப்பராக இழுத்தால் நான் பதில் சொல்ல முடியாது.

## குண்டாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம்

*வினா எண். 537— **திரு. எம். பிச்சை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி திருச்சுழி—மண்டல மாணிக்கம் நெடுஞ்சாலையில் குண்டாற்றின் குறுக்கே திருச்சுழி அருகாமையில் உள்ள தரைப்பாலத்திற்குப் பதிலாக மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மற்றும் (ஆ): தற்போதுள்ள தரைப்பாலத்திற்குப் பதில் மூழ்குப்பாலம் கட்டப்படுகிறது. பணி 31-5-82-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எம். பிச்சை:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பாலம் கட்டுவதை நான் அறிவேன், மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பாலம் 74–75-ஆம் ஆண்டு திட்டமிட்டுக் கட்டப்பட்டது. திட்டத்தைப் பரிசோதித்துச் சரியான முறையில் புள்ளி விவரங்களைச் சேகரிக்காமல் அரசுப் பணத்தை வீண் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, திருத்திய மதிப்பீடு மூன்றரை இலட்சம் ரூபாயாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. வேலைகள் முடிந்ததற்குப் பின்னாலே அதுபற்றி ஆலோசனை செய்யும்.

## Encroachment of the Road between Palkulam Junction and Black Rock Estate in Thovalai Taluk

*Q. No. 538—THIRU P. VIJAYARAGHAVAN: Will the Hon Minister for Local Administration be pleased to state—

(a) Whether the Government is aware of the encrochment of the Panchayat Road connecting Palkulam Junction to Black Rock Estate in Thovalai Taluk in Kanyakumari District: and

(b) if so, the action taken by the Government to remove the encroachment

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) சாலையின் இரு மருங்கிலும் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆக்கிரமிப்பு உள்ளது. ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்றொரு இடத்தில் தேவகிரிப்பண்ணை உரிமையாளரால் இப்பாதையின்



குறுக்கே ஒரு குறுக்கு கம்பு போடப்பட்டிருக்கிறது. இதன்மேல் வழக்கொன்று பதிவாகி, ஆக்கிரமிப்பாளர்கள் நாகர்கோவில் முனிசீப் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெற்றுள்ளார்கள். ஆகவே அந்தத் தீர்ப்பை எதிர்பார்த்து இந்த வேலைகளெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-40)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தேவகிரி கரும்பாலைப் பகுதியிலே இருக்கக்கூடிய தோட்ட முதலாளிகள் அங்கே இருக்கின்ற பஞ்சாயத்து சாலைகளை அவர்களுடைய சொந்த சாலைகள் என்று சொல்லிக்கொள்கின்ற முறையிலே மக்களுக்கு அது போக்குவரத்துக்குத் தடையாக இருக்கின்றது. ஏற்கெனவே நீதி மன்றத்திலே அது அவர்களுக்குச் சொந்தமான இடம் அல்ல என்று தீர்ப்பு வந்ததற்குப் பிறகும் அந்த தோட்ட முதலாளிகள் ஏழை விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பக்கத்திலே உள்ள தோட்ட உடைமையாளர்களையும் செல்வதற்கு அனுமதிக்காத நிலை இருக்கிறது. தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின்படியும் தொழிலாளர்களும் அவர்களின் சொந்தக்காரர்களும் தோட்டங்களுக்குச் செல்வதற்கு சட்டப்பூர்வமான அனுமதி இருக்கக்கூடிய காரணத்தினால் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்க்காமலேயே மக்கள் செல்வதற்கான வசதியை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தீர்ப்பு கிடைத்ததற்குப் பிறகு தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

## கரசமங்கலம் பஞ்சாயத்துக்குச் சொந்தமான கருங்கல் பாறைகளை அனுமதியில்லாமல் உடைப்பதைத் தடுக்கும் திட்டம்.

* வினா எண். 539—திரு. என். ஏ பூங்காவனம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் காட்பாடித் தொகுதி கரசமங்கலம் பஞ்சாயத்துக்குச் சொந்தமான கருங்கல் பாறைகளை ரயில்வேயில் காண்ட்ராக்ட் எடுத்தவர்கள், அனுமதி பெறாமல் பாறைகளை உடைத்துக்கொண்டு போவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மற்றும் (ஆ) இது பற்றிய புகார் யாதும் அரசின் கவனத்துக்கு வரவில்லை: இருப்பினும் மாவட்ட ஆட்சியர் அனுமதி இல்லாமல் பாறை

களை உடைத்துக் கொண்டு போவது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்றும், கிராம சிப்பந்திகள் இதைக் கண்காணித்து வருகின்றனர் என்றும் அறிவித்துள்ளார்.

திரு என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, கரிசமங்கலம் பகுதியிலே நீண்டகாலமாக ரயில்வேயில் கான்ட்ராக்ட் எடுக்கிறவர்கள் பாறைகளை உடைத்துக் கொண்டு வருகிறார்கள் என்று தாசில்தார், பி.டி.ஓ. மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட பலருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் புகார் வரவில்லை என்று சொல்கிறார்கள். நானே 2, 3 கடிதங்களை எழுதியிருக்கிறேன். கான்ட்ராக்ட் எடுக்கக்கூடியவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பாறைகள் அனுமதியில்லாமல் உடைத்து எடுத்துச் செல்வது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற நிலைமை இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் உடைத்து எடுத்துச் சென்று இருக்கிறார்களே, அவர்கள் எத்தனை ஆண்டுக்காலம் எத்தனை மாதங்கள் எடுத்துச் சென்றார்கள் என்று கண்டுபிடித்து அவர்களிடமிருந்து அந்தப் பணத்தை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: அப்படிச் செய்திருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு இல. பலராமன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற பாறைகள் வருவாய்த் துறைக்கும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. அங்கே நிர்வாகம் இல்லாததின் காரணமாக ஒன்றியத் தலைவர்கள் இல்லாததன் காரணமாக ஏலம் விடாததின் காரணமாக யார் யார் உடைத்து எடுத்துச் செல்கிறார்கள் என்று அரசுக்குத் தெரியாமல் போகிறது. ஆண்டுதோறும் ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் ஒன்றிய மன்றங்கள் மூலமாக அந்த அந்தப் பகுதிகளுக்குட்பட்ட பாறைகள் ஏலம் விடப்பட்டிருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லையென்ற காரணத்தினால் ஆண்டு தோறும் ஏலம் விடாமல் நிறுத்திவைக்கப்படவில்லை. ஏதாவது நிறுத்திவைக்கப்பட்டது என்று புகார் தங்களிடத்திலே இருந்தால் அதை என்னிடத்திலே கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.



பள்ளிப்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

• வினா எண். 540—திரு சி. கணேசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் ஒன்றியம் பள்ளிப்பேட்டை காற்று அழுத்த குடிநீர் தேக்க தொட்டி கட்டி முடித்து பல ஆண்டு காலமாக செயலற்று இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், செயல்பட அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) பள்ளிப்பேட்டை ஊராட்சியில் உள்ள குடிநீர் தொட்டியில் போதிய தண்ணீர் இன்மையினால் அது செயலற்று இருந்தது என்றும், பிறகு மழை பெய்த காரணத்தினால் அந்த பழைய கிணற்றில் தண்ணீர் நிரம்பியதாலும், மேற்படி குடிநீர் தொட்டி பழுது பார்க்கப்பட்டு தற்போது கிராம மக்களுக்கு போதிய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

காலராவுக்கு புதிய மருத்துவ முறை.

* வினா எண். 541—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) காலராவுக்கு புதிய மருத்துவமுறையை புகுத்த மத்திய அரசின் மருத்துவ ஆராய்ச்சி கழகம் முன் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) தமிழக அரசு மருத்துவமனைகளில் அம்முறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:—(அ) காலராவுக்கு இல்லை. ஆனால் சாதாரண வயிற்றுப் போக்கிற்கு புதிய மருத்துவமுறை உள்ளது.

(ஆ) மத்திய அரசின் மருத்துவ ஆராய்ச்சி கழகம் "Oral Dehydration Therapy" என்ற புதிய சிகிச்சை அளிப்பதற்காக திட்டமிட்டுள்ளது. தற்போது நரம்பு ஊசி (Intravenous)

முறைப்படி Saline கொடுக்கப்படுகிறது. புதிய முறைப்படி நரம்பு ஊசி போடாமல் தூளாக உள்ள மருந்தை திரவ வடிவத்தில் வாய் வழியாக செலுத்தப்படுகிறது.

(இ) ஆம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மத்திய ஆராய்ச்சிக் கழகம் கண்டு பிடித்திருக்கிற இந்த மருந்துகளை நம்முடைய தமிழ்நாடு அரசு எந்தப் பகுதியிலே தற்சமயம் உபயோகப்படுத்துகின்ற நிலைமை ஏற்படுத்தி இருக்கின்றது. அப்படி ஏற்படுத்தி இருந்தால் அது வெற்றி கரமாக இருப்பதாக அரசு கண்டுபிடித்து உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாக நாம் டி.ஜி.எஸ்.டி. என்று கான்ட்ராக்ட் போட்டு ஏராளமான பாக்கட்டுகளை வரவழைக் கிறோம், அதுமட்டுமல்லாமல் ஃபிரி சப்ளையாக 1,50,000 பாக்கட்டுகள் கொடுக்கப்பட இருக்கின்றது. ஏற்கனவே கொடுத் திருக்கக் கூடிய ஓரல் டிஹைடிரேஷன் பாக்கட்டுகளை ஒவ்வொரு மாவட்டத்திலும், டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிசர் மூலம் அங்கே உள்ள பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக் கின்றது. அப்படி கொடுக்கப்பட்ட ஸ்டாக் எல்லாம் முடிந்து, இன்னும் 1,50,000 பாக்கட்டுகள் நமக்குக் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அது வந்த உடனே எல்லா பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கும் விநியோகம் செய்ய சௌகரியமாக இருக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுக்கு இலவசமாக கிடைக்கிறது என்று சொன் னார்கள். ஏற்கனவே இருந்த முறைக்கும் இந்த முறைக்கும் பொருளாதாரத்திலே அரசுக்கு லாபம் ஏற்படுகின்ற நிலை இருக் கிறதா, மேலும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மருந்தினால் சுலபமான தடுப்பு முறை ஏற்படுவதற்கு வழி இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இன்ட்ராவினஸ் பாட்டில் விலை ரூ. 6.15 ஆகும். இதனுடைய விலை ரூ. 1.10 ஆகும். இந்த ஓரல் டிஹைடிரேஷன் பாக்கட் இரண்டு பாட்டில்களுக்குச் சமமாகும். ஏறத்தாழ ரூ. 1.10 என்கிற இந்தத் தொகை ரூ. 12.00 ரூபாயை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு வாய்ப்பு இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் ஓரல் டிஹைடிரேஷன் நாம் முதலிலேயே ஆரம்பிப்போமானால் இன்ட்ராவினஸ் கொடுக்கின்ற அந்த நிலைக்குத் தள்ளமாட்டார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே காலரா நோய் கண்டவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுகின்ற நேரத்தில், அந்த நோயாளியின் அபாயகரமான நிலையைக் கணக்கில் கொள்ளாது, அவர்களுடைய வயது, வருமானம் இவைகளைக் கேட்டு புத்தகத்தில் பதிவு செய்து



வைத்தியம் கொடுக்கும்போது அந்த நோயாளி சிவலோகம் அடைந்து விடுகிறான். எனவே இத்தகைய காலரா நோய் கண்டவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும் நேரத்தில் எந்த சான்றிதழும் இல்லாமல் உடனடியாக அவர்களுக்கு குளுகோஸ், சலைன் போன்றவைகளைக் கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமர்ஜன்சி வியாதிகளைப் பொறுத்த வரையில் அது காலராவாக இருந்தாலும், வேறு எந்த வியாதியாக இருந்தாலும், உடனடியாக சிகிச்சை அளிக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம் சில நேரங்களில் இத்த கய தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. புத்தகத்தில் ஃபில் அப் செய்து வயது மற்றும் விவரங்களை எழுதுகிறார்கள். திட்ட வட்டமாக நாம் உத்தரவிட்டிருக்கிறோம். அடிக்கடி டி.எம்.எஸ்.டி.எம்.இ. இவர்களை கூப்பிட்டு சொல்லி இருக்கிறோம். இப்படிப்பட்ட கவலைக்கிடமான நோயாளிகள் வரும்போது முதலில் அவர் களுக்கு வைத்திய சிகிச்சை அளித்து, அதற்குப் பின்னர் எழுத்து வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று சொல்லி ருக் கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, காலரா நோய்த் தடுப்பு மருந்துகளை பிரைமரி ஹெல்த் சென்டர் களுக்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அது ஹெல்த் மினிஸ்டர் கன்ட்ரோலில் உள்ள மருத்துவமனைகளாகும். ஆனால் லோக்கல் அட்மினிஸ்டிரேஷன் அமைச்சர் கன்ட்ரோலில் சென்னை, செங்கையில் உள்ள கம்யுனிகபில் டிசீஸ் ஆஸ்பத்திரிகள், தண்டையார்பேட்டையில் உள்ளது. அதற்கு ந்த மருந்து விநியோகிக்கப்படுகிறதா? அது பற்றித் தங்களுக்கும், லோக்கல் அட்மினிஸ்டிரேஷன் அமைச்சர் கவனத்திற்கும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்து, அந்த காலரா ஆஸ்பத்திரி மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது என்று சொல்லி இருக்கிறேன். தயவு செய்து அந்த ஆஸ்பத்திரியைப் பழுதுபார்த்து முறையாக இயங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். காலரா நோய்க்கு ஓரல் டிஹைடிரேஷன் பரிகாரம் அல்ல. வாய்மூலம் கொடுக்கும் அம்சத்தில் கொடுக்கும் முறை, வாந்தி இருக்குமானால் பிரயோசனம் இல்லை. காலரா வந்து, பேதி இருக்கின்ற காரணத்தால் அதற்கு பேரன்டல் இன்ஜக்ஷன் மூலம் ஆகத்தான் டிஹைடிரேஷன் செய்ய வேண்டும். ஆகவே காலராவுக்கு இந்த ஓரல் டிஹைடிரேஷன் பயன்படுவது இல்லை.

[1982 மார்ச் 18

இரண்டாவது இந்த ஐ.டி. ஆஸ்பத்திரி மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் கவனித்து வந்தாலும் நம்முடைய நல்வாழ்வுத் துறை இலாகாவும் அவ்வப்போது யோசனை சொல்லிக் கொண்டு வருகிறது. இப்போது அந்த மருத்துவமனையில் காலராவினால் அனுமதிக்கப்பட்ட ஒன்றிரண்டு ஆண்டுகளில் ஒரே ஒரு பேஷன்ட்தான் இறந்திருக்கிறார். இந்தப் புள்ளிவிவரங்களை நான் மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் பேசியதற்குப் பின்னர் கேட்டு அது வந்திருக்கின்றது. இருந்தாலும் அங்கே உடனடியாக வண்டியை அனுப்பி அந்த சிகிச்சையை செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். இப்போது அந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஊசிபோட்டு நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மருத்துவக் கல்லூரிகளில் பி.எஸ்.ஸி பட்டதாரிகளுக்கு ஒதுக்கீடு.

* வினா எண். 542—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக்கல்லூரிகள் பி. எஸ்ஸி. பட்டதாரிகளுக்காக 10 சதவிகித இடத்தை மீண்டும் ஒதுக்குமாறு தமிழக அரசிற்கு மாணவர்களிடமிருந்து அண்மையில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு இது பற்றி என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ): 1981–82 ஆம் ஆண்டிற்கான முதலாண்டு மருத்துவப் பட்டப் படிப்பிற்கு 97 இடங்கள் பி. எஸ்ஸி பட்டதாரிகளுக்காக ஒதுக்கப் பட்டு அவ்விடங்களுக்கு மாணவர்களும் சேர்க்கப்பட்டு விட்டனர்.

### மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள்

* வினா எண். 543— திரு செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக்கல்லூரியில் 1980–1981ம் ஆண்டில் சேர்க்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேர் தமிழர்கள்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ): 20 மாணவர்கள்.



1982 மார்ச் 18]

(முற்பகல் 9-50)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவக் கல்லூரியிலே வெளி நாட்டு மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்று இந்த மணியான யோசனை எப்போது உதயமானது. அதுமாதிரி இந்தியாவிலே வேறு மாநிலங்களிலே எங்கே சேர்த்துக் கொள்கிறார்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது 1972 ஆம் ஆண்டு. மற்ற மாநிலங் களைப் பொறுத்தவரையில் தெரியாது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இருந்து மாணவர்கள் இங்கே சேர்க்கப்படுவது 20 பேர் என்று சொன்னார்கள். அவர்களைச் சேர்த்துக்கொள்ள என்ன விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன? தமிழர்கள் பல வெளிநாடுகளில் இருக்கின்றார்கள். அவர்களுக் கெல்லாம் முன்னுரிமை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஒரு சிறு திருத்தம். 1972–ஆம் ஆண்டு என்று சொன்னேன். அது 1968 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் ஒரு கேள்வி கேட்டார்கள். அதற்கு, 1980 ஆம் ஆண்டு வரையிலே நேரடியாக வை. ஓ. சி. மார்க் இல்லாமலே தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஜட்ஜ்மெண்ட் வந்ததற்குப் பிறகு மற்ற மாணவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அதேமாதிரி வை.ஓ.சி. வைத்து, இன்டர்வியூ மார்க் போட்டு எடுக்கிறோம். தமிழ்நாடு ஆரிஜின் என்று அதிலே இருக்கிறது. யாராவது தெலுங்கு பேசி இருக்கக் கூடும். தமிழ்நாடு ஆரிஜின் என்று திட்டவட்டமாக சான்றிதழ் இருந்தால்தான் கொடுக்கப்படும். 1968 ஆம் ஆண்டிலே 9 இடங்கள் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டு 22 இடங்களாக ஒதுக்கியிருக்கிறோம்.

திருவேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற வைத்தியக் கல்லூரிகளில் வெளிநாட்டில் இருக்கின்றவர்களை சேர்க்கவேண்டு மென்றும், அப்படி சேர்ப்பதற்கு கேபிடேஷன்ஃபீஸ் வாங்க வேண்டும் என்றும் ஒரு ஆலோசனையை மத்திய அரசு கூறி இருக்கிறதா? ஆம் எனில், நமது அரசு அளித்திருக்கிற விவரங்கள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் நமக்கு எழுதி இருக் கிறார்கள். மாண்புமிகு சங்கரானந்தம் அவர்கள் எழுதி இருக்

கிறார்கள். நாம் இன்னும் சில விவரங்கள் கேட்டு இருக்கிறோம். அவர்கள் தருகின்ற தொகை போதாது, இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். கடிதப்போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. Exchange of letters are going on. ஆகவே அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு இங்கே மருத்துவக் கல்லூரிகளிலே இடம் அளிப்பது மறுக்கப்படுகிறது. அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஆகவே, இலங்கை தமிழ் மாணவர்களுக்கு என்று சில இடங்களை நம்முடைய மருத்துவக் கல்லூரிகளில் ஒதுக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 22 இடங்களிலே கூட இலங்கை மாணவர்கள் கூட, தமிழ் ஆரிஜி இருக்கக்கூடியவர்கள் அதில் சேர்க்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, சிலோன் ரீப்பாட்ரியேட்ஸ், நம்முடைய தமிழகத்தில் உள்ள சிலோன் ரீப்பாட்ரியேட்ஸ் ஆக இருக்கக்கூடியவர்களுக்கு தனியாக 5 இடங்கள் கொடுக்கப்படுகின்றன.

திரு. கெ. இராமலிங்கம்: தலைவரவர்களே, இந்த வெளிநாட்டு மாணவர்கள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள்? ஆண்டுதோறும் வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கை வேறுபடுகிறது. ஆகவே வெளிநாட்டு மாணவர்கள் எத்தனை சதவீதம் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, 1968-ல் 9 இடங்கள் கொடுக்கப்பட்டன; 1972-ல் 12 இடங்கள்; 1980-ல் 20 இடங்கள்; 1981-ல் பிஜி ஐலண்ட்ஸை சேர்ந்தவர்களுக்கு 22 இடங்கள் கொடுத்திருக்கிறோம்.

### திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தூங்கும் வசதி கொண்ட பேருந்துகளை விடும் திட்டம்

* வினா எண் 544—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தூங்கும் வசதி கொண்ட பேருந்து (SLEEPER COACH) விடும் திட்டம் உள்ளதா?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆம்.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, இப்படி தூங்கும் வசதி கொண்ட எத்தனை பேருந்துகள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு பேருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. இன்னொன்று தயாராகிக் கொண்டிருக்கிறது.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, அந்தப் பேருந்துகளை எந்த எந்த வழித்தடங்களில் விடுவதாக அரசு உத்தேசித்துள்ளது? அந்தப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தன்னுடைய யோசனைப்படி தயாரித்துள்ளதா? அல்லது வேறு மாநிலங்களில் இம்மாதிரியாக இருந்து, அதைப்பார்த்து தயார் செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இன்னும் எந்த எந்த வழித்தடங்களில் விடுவது என்று முடிவு செய்யப்படவில்லை. இது நம்முடைய சொந்த யோசனையில் உருவானது.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, தூங்கும் வசதி கொண்ட பேருந்துகளை இரயில் வசதி இல்லாத குமரி மாவட்டத்தில் விட்டு அந்த மக்களின் தேவையை நிறைவுசெய்த பெருமையை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இப்படிக் கேட்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆகவே இந்தக் கேள்விக்குப் பதில் தேவையில்லை.

### அம்பத்தூரில் பேருந்து நிலையம் அமைத்தல்

* வினா எண். 545—திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் வரை செல்லும் பேருந்துகள் அம்பத்தூரில் பேருந்து நிலைய வசதி இல்லாமல் சாலையிலேயே நிறுத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தர பேருந்து நிலையம் அங்கு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்திடம் பேருந்து நிலையம் கட்ட திட்டமில்லை. ஆனால் அம்பத்தூர் நகரியம் பேருந்து நிலையம் கட்ட திட்டமிட்டு, அதற்குரிய நிலத்தை பல்லவன் போக்குவரத்துக் கழகத்துடன் கலந்து தேர்ந்தெடுக்க உள்ளது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, திருவள்ளூர் நெடுஞ்சாலையில் இந்த பேருந்துகள் எல்லாம் நிறுத்தி வைக்கப் படுவதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறு ஏற்படுகிறது. அங்கே விபத்துகள்கூட அடிக்கடி நிகழ்கிற வாய்ப்பு இருக்கிறது. இப்போது அம்பத்தூர் நகரியம் பேருந்துகளை நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிற இடத்திலே, 'பெர்மிஷன் டு என்டர் அப்பான் தி லான்ட்' என்ற முறையிலே அவர்கள் அனுமதித்தால் அங்கே பேருந்துகளை நிறுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்தைப்பற்றி இன்று காலையில் நான் அதிகாரிகளை அழைத்துப் பேசினேன். நாம் இப்போது பேருந்துகளை நிறுத்தும் இடத்திலிருந்து அந்த இடம் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே, அங்கே பேருந்துகளைக் கொண்டு நிறுத்தி னால் மக்களுக்கு வசதியாக இருக்குமா என்று பார்த்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்தாலும் இடம் தேவை என்றால் அந்த இடத்தை வாங்க தயாராக இருக்கிறோம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, அம்பத்தூர் வரை செல்லுகின்ற அந்த பேருந்துகள் நிற்கிற இடம் அம்பத்தூர் நகரிய எல்லையிலே ஒரு மூலையில் இருக்குமானால், நகர் முழுவதும் பேருந்துகள் சுற்றிவர வாய்ப்பு இருக்கிறது. எனவே ஒரு கிலோமீட்டர் தள்ளி இருந்தாலும் பொதுமக்களுக்கு ஏற்புடையதாக இருப்பதால் உடனடியாக அந்த இடத்திலே பேருந்துகளை நிறுத்துவதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்த இடம் மக்களுக்கு வசதியாக இருக்கிற சூழ்நிலை இருந்தால் நிச்சயமாக அந்த இடத்தை எடுத்துக்கொள்ளவும், அங்கே பேருந்துகளை நிறுத்தவும் நாம் தயாராக இருக்கிறோம்.



தஞ்சை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டெப்போ.

*வினா எண். 546—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சாவூர் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டெப்போவில் ஓட்டுநர்கள் இல்லாமல் சில விரைவுப் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம்எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ): திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தஞ்சாவூர் பணிமனை யிலிருந்து தினசரி செல்ல வேண்டிய அனைத்துப் பேருந்துகளும் தவறாமல் இயக்கப்படுகின்றன. எந்தப் பேருந்தும் நிறுத்தப்பட வில்லை.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநர்கள் கூடுதல் பணி செய்வதால் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்படாமல் இருக்கின்றன. ஆனால் ஓட்டுநர்கள் கூடுதல் பணி செய்வதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. இந்தக் குறையைப் போக்க, நிவர்த்தி செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஓட்டுநர் கள் அங்கே கூடுதல் பணி செய்வதாக தகவல் இல்லை. காரணம் ஒரு பேருந்துக்கு 2.5 ஓட்டுநர்கள் அதாவது 5 ஓட்டுநர்கள் இரண்டு பேருந்துகளுக்கு என்ற வகையிலே கணக்கிட்டு நியமித் திருக்கிறோம். எனவே கூடுதல் பணி செய்வதற்கான அவசியம் இல்லை.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதி யுடன், வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்து ஓட்டுநர்களுக்கு மாதத்திற்கு எவ்வளவு நாள் பணி என்று வரையறுக்கப்பட்டுள்ளது? கூடுதலாகப் பணி செய்கின்றவர்களுக்கு எந்த அளவிற்குச் சம்பளம் அதிகம் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கூடுதல் பணி என்ற பேச்சுக்கு இடமே இல்லை. காரணம் தேவையான அளவிற்கு, சட்டப்படி எவ்வளவு ஓட்டுநர்கள் வைக்க வேண்டுமோ, அவ்வளவு ஓட்டுநர்கள் நாம் வைத்து இருக்கிறோம். ஆகவே, கூடுதல் பணி செய்ய வேண்டிய சூழ்நிலை இல்லை. ஒருவர் டியுடி முடித்து விட்டுப் போனால், அடுத்த நாள் பணிக்கு வேறு ஒரு ஓட்டுநர் வருவார்.

### ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக அளிக்கப்பெற்ற பாடப் புத்தகங்கள்

* வினா எண். 547—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகரில் ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் வழங்கிய வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

(ஆ) அதனால் பயன் அடைந்த குழந்தைகள் எத்தனை பேர்?

(இ) இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களில் செயல் படுத்தத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) சென்னை நகரில் ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் வழங்கிய வகையில் 1980-81-ம் ஆண்டில் அரசுக்கு ஏற்பட்ட செலவு ரூ. 13,695.15 ஆகும்.

(ஆ) அதனால் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 533 ஆகும்.

(இ) இந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்பத்தகங்கள் வழங்குவது போல். உடல் ஊனமுற்ற பள்ளிக் குழந்தைகளுக்கும் வழங்குவதற்கு இத்திட்டத்தை விரிவு படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விதவைகளின் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதுபோல், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் உதவித் தொகை அளிக்கப் படுகிறது. 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கும்



மாணவர்களுக்கு 25 ரூபாய் மாநில அரசு கொடுக்கிறது. 9—ம் வகுப்புக்கு மேல், மேல்பட்டப்படிப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 40 லிருந்து ரூ. 125 வரை கொடுக்கப்படு கிறது. இந்தத் தொகையை தற்போது மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து, வழங்கிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் ( * ) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 2. உரிமைப் பிரச்சினை வானொலி மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 4—3—1982 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. இரகுமான்கான் அவர்கள் சென்னை வானொலி மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை பேரவையில் எழுப்பினார்.

சென்னை வானொலி நிலையம் 1.3.1982 அன்று மாலை 7 மணி ஒலிபரப்பில் சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டபோது எதிர்க்கட்சித் தலைவரின் கேள்வியையும், அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் இருட்டடிப்பு செய்து இருக்கிறது, கேள்வி பதில் சம்பந்தமாக ஒரு பகுதியைச் சொல்லிவிட்டு மறு பகுதியை இருட்டடிப்பு செய்வது அவையின் உரிமை மீறிய செயலாகும் என்று பிரச்சனையை உறுப்பினர் எழுப்பினார்.

வானொலி நிலையத்தாருக்கு எழுதிக் கேட்டு பிறகு என்னுடைய தீர்ப்பை அளிப்பதாகச் சொன்னேன். இது குறித்த வானொலி இயக்குநருக்கு விளக்கம் கேட்டு எழுதப்பட்டது. அவரது விளக்கத்தை பேரவைக்குப் படிக்கிறேன்.

'I am enclosing herewith a copy of the Assembly Review broadcast at 7 P.M. on 1.3.82 from this station. This contains the full script prepared for broadcast with certain portion edited for want of time. I want to assure you that the question and answer relating to Ganga-Cauvery Garland Canal project could not find place in the broadcast of the review only due to constraints of time factor and not due to any deliberate blackout or wilful omission of the proceedings on the part of A.I.R.

பாராளுமன்ற நடைமுறைகள் பற்றிய கவுல் அண்டு ஷெக்தர் புத்தகத்தின் 226—வது பக்கத்தில் வானொலி தொலைக் காட்சி மீதான பிரச்சினைகள் குறித்து கீழ்க்கண்டவாறு விளக்க மளிக்கப்பட்டுள்ளது.

'No breach of privilage is involved, if a member's speech has not been covered in full or has been covered in a summary form in the Press or over Radio or T.V. It is also not a breach of privilege if a particular speech is not covered as adequately as other speeches, or is not given prominance.'

சென்னை வானொலி நிலைய இயக்குநர் கொடுத்துள்ள விளக்கத்திலிருந்தும், அன்று படிக்கப்பட்ட செய்தி குறிப்புகளி லிருந்தும் பேரவை நிகழ்ச்சிகளின் சில பகுதிகள் சுருக்கப் பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா அல்லது தவறுதலாக கவனிக்காமல் விடப் பட்டதா என்பதுதான் பார்க்க வேண்டியது. வானொலி நிலையத்தாரின் விளக்கத்தை கவனிக்கும்போது அவர்கள் வேண்டும் என்றே விட்டு விட்டதாகத் தெரியவில்லை.

எனவே, இயக்குநர் அளித்துள்ள விளக்கத்தினை ஏற்றுக் கொண்டு இப்பிரச்னையை இத்துடன் விட்டு விடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. என். வி. என். சோமு: பேரவைத் தலைவர் அவர்களே நேற்று சென்னை மத்திய சிறையில் மணி என்ற கைதி ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்ற சந்தேகம் எழுந் திருக்கிறது. சிறை அதிகாரிகளே, முதலில் அவர் இறந்து விட்டார் என்ற தகவலை...... (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் எதையும் முறைப்படி அவையில் எழுப்ப வேண்டும். 9-53க்குத் தான் என்னிடம் கொண்டு வந்துக் கொடுத்தார்கள், அதை 10-00 மணிக்கு சட்டமன்றத்திலே எழுப்பி பதில் வேண்டும் என்றால் எப்படி கொடுக்க முடியும்? அமைச்சர்கள் என்ன மந்திரவாதிகளா? ஆகவே முறைப்படி கொண்டு வாருங்கள்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக தஞ்சை மாவட்டத்திலே விவசாயி களிடத்திலே ஜப்தி கொடுமைகள் தாங்க முடியாத அளவுக்கு..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்ற பிரச்னை களையெல்லாம் விதிகள் 54 அல்லது 55 போன்ற ஏதாவது ஒன்றின் கீழ் கொண்டு வாருங்கள், நான் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) நேற்றுக்கூட உங்களுடைய



கட்சியைச் சேர்ந்த ராஜமாணிக்கம் அவர்கள் கொண்டு வந்த சிமெண்ட் பிரச்னைமீது ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டேன். இதுதான் முக்கியம் என்று உங்களுக்கு தோன்றி யிருந்தால் அவரை வாபஸ் வாங்கச் செய்துவிட்டு, இதை எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கலாம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கட்சியினர் கொடுத்ததை நான் முறைப்படித்தான் எடுத்துக்கொண்டு வருகிறேன்.

### (ஆ) கொள்கை விளக்கக் குறிப்புகள் கொடுப்பதில் தாமதம்

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, இண்டஸ்ட்ரீஸ் பற்றி விவாதம் நாளை இங்கே எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. ஆனால் அதுபற்றிய பாலிசி நோட் போன்றவைகள் இன்னும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட வில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே தொழில்துறையின் செயலாளரிடத்தில் இதுபற்றி பேசிவிட்டேன். 11 அல்லது 12 மணியளவில் அவை தயாராகி உங்கள் அனைவருக்கும் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (4. அறிக்கை அளித்தல்)

### பொது நிறுவனங்கள் குழு

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1976—77, 1977—78 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான மேற்படி குழுவின் பதினைந்தாவது அறிக்கையை" அதனுடைய தலைவன் என்ற முறையில் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 245-வது விதியின் கீழ், 1982-83 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

(ஆ) அவைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 288 (1)-வது விதியின் கீழ் 1982-83 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

6. அறிவிப்புகள்

உரிமைக் குழு அவைக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் உரிமைக் குழு (கமிட்டி ஆப் பிரிவிலேஜ்ஸ்), அவைக்குழு (ஹவுஸ் கமிட்டி) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குச் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும், வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்,

வேட்புத்தாள்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 தேதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பெறும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 9—00 மணிக்கும் பகல் 1—00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(முற்பகல் 10.10)

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நகராட்சி மன்றங்கள் தனி அதிகாரிகள் நியமனம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே. 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்மிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(உ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் இன்று மூன்று மாண்புமிகு அமைச்சர்களுடைய மொத்தம் 10 மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பெற இருக்கின்றன. இவை தவிர ஒரு அரை மணி நேர விவாதம் எடுத்துக்கொள்ளப்பெற இருக்கிறது. எனவே இவற்றிற்கு கீழ்க்கண்டவாறு நேரம் ஒதுக்கப் பெறுகிறது :—

| | |
|---|---|
| மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கைகள் | காலை 10 மணி முதல் 1 மணி வரை. |
| அரை மணி நேர விவாதம் | பிற்பகல் 1 மணி முதல் 1½ மணி வரை. |
| மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கைகள் | பிற்பகல் 4 மணி முதல் 6 அல்லது 6½ மணி வரை. |
| மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிகைகள் | பிற்பகல் 9 மணி அல்லது 6½ மணி முதல் 7½ அல்லது 8 மணி வரை. |



8. வரவு—செலவுத் திட்டம் 1982–83 வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண் 1. நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண் 1–நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,07,41,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவரவர்களே, விவசாய கூலி தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி தரப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண் 1–நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,07,41,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சி. பழனிமுத்து: தலைவரவர்களே, பல ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களை சாகுபடி செய்து வரும் ஏழை, எளிய மக்களுக்கு தண்டத் தீர்வையை நீக்கி பட்டா கொடுக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண் 1–நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,07,41,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களுக்கு கூட்டுப்பட்டா கொடுத்திருப்பதை மாற்றி தனிப்பட்டா கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண் 1–நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,07,41,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, இளையான்குடி வட்டம் கருங்கனியேந்தல் கண்மாயில் சர்வே துறையினர் செய்த தவறின் காரணமாக அரசு நிலம் தனியார் கைக்கு போயிருப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிகை எண் 1–நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,07,41,000 இல்

(ஆ) கோரிக்கை எண் 11 மாவட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,41,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, சென்னை மாவட்ட நிர்வாகத்தை இரண்டாகப் பிரித்து பொதுமக்கள் சுலபமாகத் தங்கள் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண். 11-மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,41,17,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. எம். தங்கமணி: தலைவரவர்களே, கோட்டாட்சியர்கள் பொது மக்களின் குறைகளை நேரில் சென்று அறிவது பற்றி விவாவதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 11- மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,41,17,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திண்டுக்கல் மாவட்டம் தனியாக அமைக்கப்படவேண்டுமென்கிற நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியது குறித்து விவாவதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 11-மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,41,17,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,000/க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



திரு. சு. பாலன்: தலைவரவர்களே, சென்னை போன்ற தாழ்வான இடங்களில் மழைக்காலங்களில் கூவம் நதி ஓட்டேரி கால்வாய் இவைகளின் மூலம் ஏற்படும் வெள்ளத்தை தடுக்க சுற்றி தடுப்புச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. கல்லன்: தலைவரவர்களே, அண்மையில் நீலகிரியில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட நட்டத்தைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் —

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, நெல்லை மாவட்டம் சிவகிரி வட்டம், பெரும் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டும் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறாததைக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

(ஈ) கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோசுந்தரம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,37,47,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்ககண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 46—இழபீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,37,47,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிகைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே, என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை *இந்த அவையில் படித்ததாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும ஒதுக்கீடுகளும் ஆகிய மானியக் கோரிக்கைகளுக்காக சற்றேறக்குறைய 75 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருவாய்த் துறைக்காக பல கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருந்தாலும் வருவாய்த் துறையின் அடிப்படையில் இருக்கிற கிராம ஜனநாயகம் என்ற நிலையைப் பார்க்கிறபோது கிராம மணியக்காரர்களை, கணக்குப் பிள்ளைகளை நீங்கள் திடீரென்று ஒழித்துவிட்ட காரணத்தினால் இன்றைய தினம் கிராமங்கள் கேள்வியற்ற நிலைமையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்வது என் கடமை என்று கருதுகிறேன். ஒன்றரை ஆண்டுகளாக திடீரென்று நீங்கள் உத்தரவிட்டு நடு இரவில் கிராம மணியக் காரர்களையும் கணக்கு பிள்ளைகளையும் அவர்கள் கணக்கு வழக்குகளைப் பறித்துக் கொண்டு விட்டதால் இன்றைக்கு கிராமங்கள் கேள்வி கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன.

(முற்பகல் 10.20)

இன்றையதினம் கிராமங்களிலே மக்களுடைய ஆட்சி நடை பெறுகின்றதா என்று சொன்னால், அதுவும் இல்லை. நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே வந்த பிறகு, ஊராட்சி மன்றங்களிலே சென்ற முறை தலைவர்களை ஒழித்துவிட்டு, அங்கே தலைவர் களே இல்லை, ஊராட்சி மன்றங்களிலே உறுப்பினர்கள் இல்லை; பெருந் தலைவர்கள் இல்லை. அதேபோல், இன்றைய தினம் கிராமங்களிலே மணியக்காரர்கள் இல்லை; கணக்குப் பிள்ளைகள் இல்லை என்ற அளவிலே, இளைஞர்கள் அந்தக் காரியங்களைச் செய்ய உத்தரவு போட்டீர்கள். கிராமங்களிலே மணியக்காரர்கள், கணக்குப்பிள்ளைகளுக்குப் பதிலாக, அதற்குப் பலரைத் தேர்ந்தெடுக்கின்ற நிலைமை ஏற்பட்டு, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் நேரடிப் போட்டி நடந்து, அதற்குப் பிறகு இளைஞர்கள் எல்லாம். அந்த மணியக்காரர், கணக்குப்பிள்ளை வேலை தங்களுக்கு கிடைக்கும் என்று ஆவலோடு எண்ணிக் கொண்டிருந்த நேரத்திலே, உச்ச நீதிமன்ற தீர்ப்பு வருகின்ற வரையிலே, அந்தப் பணிகளிலே அவர்களை அமர்த்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு, இன்றையதினம் அந்தக் கொள்கை ஊசலாடிக் கொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்ற தீர்ப்பு வருகின்ற வரையிலும், பல கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுகின்ற

[* 541—606-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப் பெற்றுள்ளன.





அந்த நிலைமையை மாற்ற. மாற்று யோசனையாக பிர்க்கா வாரியாக வருவாய்த் துறையைச் சேர்ந்த ரெவின்யூ இன்ஸ் பெக்டர்கள் இந்த மணியக்காரர், கணக்குப்பிள்ளை வேலைகளை கவனிப்பதற்காக நியமித்தாலும்கூட, அங்கே நிர்வாகம் நடை பெறுகின்றதா என்பதைப் பார்த்தால், அது ஆலோசனைக்குரிய அது மனித இயல்புக்கு உட்படுத்த முடியாத அளவிலேதான், அங்கே இந்த பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அந்த நிர்வாகத்தை சரிவர நடத்த முடியாத நிலைமையிலே இருக்கி றார்கள். ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 5 கோடிக்கு இழப்பு ஏற்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ரெவின்யூ இன்ஸ் பெக்டர்கள் எல்லா கிராமங்களுக்கும் சென்று சரிவர நிர்வாகத்தை செய்ய முடியாத நிலையில், அரசு இத்தகைய மானிய கோரிக்கைகளுக்கு ஒதுக்கி இருக்கின்ற தொகை வீணானது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் குற்றச் சாட்டு. மணியக்காரர்கள், கணக்குப்பிள்ளைகள் வேலைகளை ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் கிராமங்களிலே சரிவர நிர்வாகம் செய்கிறார்களா என்றால், நிச்சயமாகக் கிடையாது. பல கிராமங்களை அவர்கள் பார்க்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அவர்களால் சரிவர அதைப் பார்க்க முடிய வில்லை. இந்த நிலைமையிலே இந்த கிராம நிர்வாகம் என்ற தலைப்பிலே நீங்கள் ஒரு சிம்பாலிக்காக, அந்த கிராம நிர்வாகம் என்ற தலைப்பை அடித்திருக்கிறீர்கள். அதைப் பார்க்கின்ற போது கிராம நிர்வாகம் இல்லாத அளவுக்கு இருப்பதால்தான், அதை அச்சடிப்பதிலும் அதை அடித்திருக்கிறீர்கள். ஆகவே, கிராமங்களில் நிர்வாகம் சரிவர நடக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வது என்னுடைய கடமை யென்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதே நேரத்திலே, இன்றைய தினம் வறட்சியால் பல பகுதிகள், பல இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய நிலைமையைப் பார்க்கின்றபோது, இந்தக் குறிப்பிலே 7 ஆம் பக்கத்தில், சென்னை, நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்கள் தவிர, 13 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன என்று கூறியிருக்கிறீர்கள். அதே குறிப்பிலே நீங்கள் சொல்லியிருக்கி றீர்கள், கிராமப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடாயிற்று. பயிர்கள் நீரின்றி சாவியாயின. உழவுத் தொழிலாளர்கள் வேலையின்றி வாடினர். இவ்வாறு வறட்சியால் பாதிக்கப் பட்டு, தொல்லைக்கு ஆளான மக்களின் துயர்துடைக்க 1980 நவம்பர் மாதத்திலிருந்து எல்லா நிவாரணப் பணிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டியிருந்தது என்று சொல்லுகிறீர்கள். இப்படி 3 மாவட்டங்கள் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டன. அதே நேரத்தில், வரியை நீங்கள் நீக்கவில்லை; சலுகை கொடுக்கவில்லை. வரி போடவில்லை என்று சொல்லிவிட்டு, 1390 ஆம் பசலிக்கு 1980—81-க்கும்

1391 ஆம் பசலிக்கு 1981–82க்கும் இந்த ஆண்டுகளுக்கான நிலவரியை வசூலிப்பதில் நீங்கள் தீவிரம் காட்டினீர்கள் என்பதை நீங்களே ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். 13 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று, சென்னை, நீலகிரி, கோயம்புத்தூர் தவிர. அதே நேரத்திலே நிலவரி வசூலிலே ஜப்தி நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். அதைப் போலவே கூட்டுறவுக் கடனிலேயும் ஜப்தி நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தமாதிரிச் சொல்லக் கூடாது. சபாநாயகர் கவனிக்க வேண்டிய விவகாரம் அது, ஆகவே அதைப்பற்றிப் பேசக் கூடாது. அதை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: அங்கே கடுமையான வறட்சி இருக்கிற நிலை இருக்கிறது. 13 மாவட்டங்களிலே கடன் வசூலிக்கப்படுவதற்காக ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே பாதிக்கப்பட்டு விவசாயிகளுடைய சொத்துக்களை எல்லாம் ஜப்தி செய்யக்கூடிய நிலை இருக்கிறபோது ஆறுதலாக ஏதாவது செய்ய வேண்டுமென்று அமைச்சரிடம் கோரிக்கை கொடுத்திருக்கிறோம். ஆனால் கூட்டுறவுத் துறை அமைச்சர் கூட்டுறவுக் கடனை வசூலித்தே தீர வேண்டும், மத்திய அரசினுடைய கட்டாயத்தினால் வசூலிக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். வருவாய்த் துறைஅமைச்சர், கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் பருவ மழை தவறி கடுமையான வறட்சி இருக்கிறது, பெரிய கொந்தளிப்பு இருக்கிறது, இருந்தாலும் அரசு அதிகாரிகள் மூலமாக வேகம் வேகமாக வசூலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 1980–81, 1981–82 ஆகிய இரண்டு ஆண்டுகளிலேயும் கடன்களை வசூல் செய்வதிலே தீவிரம் காட்டப்பட்டு வருகிறது. பல மாவட்டங்களிலே, குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பல இடங்களிலே சில காரியங்களைச் சென்ற ஆண்டு நீங்கள் செய்திருக்கிறீர்கள். செய்திருக்கின்ற நிவாரண வேலைகளிலே ஓரளவுக்கு பலன் ஏற்பட்டது என்று சொன்னாலும் முழு அளவுக்கு பலன் ஏற்படவில்லை என்பதை இந்த நேரத்திலே செல்வது என்னுடைய கடமையாகும். அங்கே குடிநீர் வசதிக்காக 1153 துளைக் கிணறுகள் ஏற்பாடு செய்தீர்கள். ஆனால் ஏறக்குறைய 30, 35 சதவீதம் நல்ல

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முறையிலே வேலை செய்யவில்லை, இன்றைக்கு கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. அங்கே இருக்கின்ற குடிநீர் வாரிய அதிகாரிகளிடத்திலே கேட்டால் அவரைக் கேளுங்கள் என்றும் இவரைக் கேளுங்கள் என்றும் பல முனைகளிலே மோட்டர்கள் கெட்டுவிட்டன என்று சொன்னால் அவர்கள் அதற்கு அலுவலகம் அந்த இடத்தில் இருக்கிறது என்றும் கைபம்பு கெட்டுவிட்டது என்று சொன்னால் அதைக் கவனிக்கிற அலுவலகம் வேறு இடத்திலே இருக்கிறது என்றும் இப்படி ஒவ்வொரு அலுவலகத்தையும் காட்டுகிறார்களேதவிர அந்த கிணறுகள் எல்லாம் செம்மையாக வேலை செய்யவில்லை என்ற நிலைமை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே மோசமான நிலைமை இருக்கிறது. நான் இந்த அரசுக்கு இந்த நேரத்திலே வேண்டுகோள் விடுப்பது என்னவென்றால் இந்த ஆண்டும் மழையில்லை, எதிர்காலத்திலே கடுமையான பஞ்சம் இருக்கும், அதற்காக அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் மாவட்ட ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற சில நிலைமைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வட ஆற்காடு மாவட்டத்திலே மட்டுமல்ல, பல மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நியமிக்கப்பட்டு ஒரு ஆண்டு தான் இருக்கிறார்கள், ஒரு ஆண்டுக்குள்ளாக மாற்றப்படுகிறார்கள். ஒரு மாவட்டத்திற்குச் செல்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் சரியாக அந்த மாவட்டத்தைப் புரிந்து கொள்வதற்கே 6, 7 மாதங்கள் ஆகும். பிறகுதான் உருப்படியான காரியங்களைச் செய்ய முடியும். ஒரு மாவட்டத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு ஆக்கப்பணிகளைச் செய்ய வேண்டுமென்றால் அவர்கள் குறைந்த பட்சம் 2,3 ஆண்டுகளாவது இருந்தால்தான் செம்மையாக ஆற்ற முடியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது எங்களுடைய மாவட்டத்தில் திரு. பெல்லியப்பா அவர்கள் மூன்று ஆண்டுகள் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்து பல ஆக்கப் பூர்வமான பணிகளை செய்தார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஆண்டுக்காண்டு மாற்றுவதை விட்டு குறைந்தபட்சம் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு இருந்தால்தான் சரிவர பணிகள் நடக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

ரெவின்யூ இலாக்காவை பொறுத்தவரையில் பல பிரச்னைகள் இருக்கின்றன. நவாப் காலத்தில் வழங்கப்பட்ட பில்முக்தா, சுரோர்த்தியம் போன்ற 100 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்ட ஷரத்துக்களுடன் 'உள்ள பட்டாக்கள் இருக்கின்றன. அதற்கு பிறகு சில விவசாயிகளுக்கு மாறியிருக்கிறது. ஆகவே இவற்றில் நடவடிக்கை எடுத்து அனுபவிக்கிற விவசாயிகளுக்கு உதவிட கேட்டுக் கொள்கிறேன். அதேபோல என்.ஜி.ஓ.க்களுக்கு

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1982 மார்ச் 18

அவர்களுடைய கோரிக்கைகள் பல நிறைவேற்றப்படாமல் இருகின்றன. அவர்கள் ரெவின்யூ டிபார்ட்மென்ட்டிலே கடுமையா உழைக்கிறவர்கள். அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தை காஞ்சிபுரத்தில் அமைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தையும், போலீஸ் அலுவலகத்தையும் கட்டினார்கள். வட ஆற்காடு மாவட்டத்தை பிரிக்கிற போது வந்தவாசி, செய்யாறு, அரக்கோணம் போன்ற வட்டங்களை சேர்த்து பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்ற பெயரை வைக்க வேண்டும். இதிலே ஆறு வட்டங்கள் சேர்க்க வேண்டுமென்று இரண்டு மாவட்ட ஆட்சியாளர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். திருத்தணி, அரக்கோணம், உத்தரமல்லூர், போன்ற வட்டங்களை வைத்து பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்ற பெயரை அந்த மாவட்டத்திற்கு வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற வருவாய்த்துறை மானியக் கோரிக்கையிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய்த்துறை தமிழகத்திலே வறட்சி பீடித்திருந்தபோது வறட்சி நிவாரணப் பணிகளை, புரட்சித்தலைவர் அவர்கள் தாயுள்ளத்தோடு அனைத்துக் கட்சிகளையும் கொண்டு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல பல்வேறு கட்சிகளில் இருக்கிறவர்கள் பாராட்டுகிற வகையிலே நடத்திக் காட்டிய அந்த பெருமைக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு கட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளை முறைபடுத்தி, மிகச் செம்மையாக, வறட்சி இந்த மாநிலத்திலே நிலவியது என்றாலும், மக்கள் அதை உணராத வகையிலே பணிகளை மேற்கொண்டது. இதற்காக மாவட்ட அளவிலே பல்வேறு கமிட்டிகள் அமைக்கப்பட்டன. கடந்த காலங்களைப்போல இல்லாமல் வறட்சி நிவாரணப்பணி இந்த இந்த பணிகள் இவ்வளவு மதிப்பீட்டில் மேற்கொண்டிருக்கிறோம் என்று கட்சி பேதங்கள் இல்லாமல் அனைத்து கட்சிகளுக்கும் முன்னறிவிப்பு கொடுத்து அந்த பணிகளை துவங்கியிருக்கிறோம். அந்த விவரங்களை அச்சடித்து கொடுத்து வறட்சி நிவாரணப் பணிகளை அனைத்து கட்சியினரும் கண்காணிக்கிற வாய்ப்பினை இந்த அரசு உருவாக்கிக் கொடுத்தது.



1982 மார்ச் 18] [திரு. வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன்]

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் கொண்டிருக்கிற தாயுள்ளத்தின் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரிலே சென்று அந்த மாவட்ட மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலையைப் போக்குகிற அளவில் ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணித்தார்கள். அதைப்போல இங்கே அங்கம் வகிக்கிற அமைச்சர் பெருமக்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று போர் கால நடவடிக்கையைப் போல பணிகளை ஆற்ற வேண்டுமென்று பொறுப்பினை கொடுத்து வறட்சி இருந்தது என்ற உணர்வே இல்லாத அளவில் பணிகளை ஆற்றியதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கையான நாங்கள் கட்டுண்டு வாழ்வோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம் என்கிற அடிப்படையிலே மத்திய அரசிடத்திலே முரண்பட்டுத்தான் காரியங்களை வாங்க வேண்டும் என்ற நிலையை மாற்றி இந்த மாநிலத்திலே மக்களுக்கு மத்திய அரசு கொடுக்கிற பணத்தை முறையாக சரியாக, மிகப் பயனுள்ள வகையிலே செலவழித்தது என்ற அந்த பாராட்டை மத்திய அரசே வழங்க வேண்டுமென்ற நிலையில் இந்த வறட்சி நிவாரணத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்ட பணிகள் மூலமாக மத்திய அரசிடத்திலேயிருந்து உதவிகளை பெற்றமைக்கு என்னுடைய பாராட்டுதல்களை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், இந்தச் சூழ்நிலையில், மைய அரசு அறிவித்திருக்கிற உத்தரவிலே, அருமை திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு கொள்கையிலே ஒரு தடுமாற்றமும், மயக்கமும் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாக இருக்கின்றது. ஏனென்றால், இந்த மாநிலத்தில், பணிகளைச் செய்து அதன் மூலமாக பிரச்னைகள் நீங்க வேண்டுமென்று சொல்கிறோம். அதில் எந்தவிதமான குறைபாடும் சொல்லவில்லை. ஆனால், 1975 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருக்கிறபொழுது, 'நாங்கள் மேற்பார்வையிடுவோம்' என்று மைய அரசு சொன்ன காரணத்திற்காக, அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். 'மேற்பார்வையிடுவோம் என்று சொல்வதே தவறு. மேற்பார்வையிடுவோம் என்று மாநில சர்க்காரைப் பார்த்துச் சொல்கிறீர்கள். நான் தமிழன். வயிற்றைவிட மானம் பெரிது: ஆகவே, நிதியை வாங்க மாட்டேன்' என்று சொன்னார்கள். நான் அப்படியே பேராசிரியர் அவர்களுக்குப் படித்துக் காண்பிக்கிறேன். அன்றைய தினம் கலைஞர் அவர்கள் சட்ட மன்றத்தில் பேசிய வாசகங்கள் இவைதான். 'மேற்பார்வையிடுவோம், கண்காணிப்பேன் என்று சந்தேகக் கண்ணோட்டத்தோடு ஒரு மாநில அரசை இழிவாக நடத்துவதாக இருந்தால் நாமெல்லாம் தமிழர்கள், உணவைவிட, வயிற்றைவிட மானம் பெரிது என்று மதிப்பவர்கள், நாம் அவர்களிடம் கேட்பது

பிச்சை அல்ல. நாம் கொடுத்த வரிப் பணத்திலேயிருந்து நமக்குத் தர வேண்டிய உரிமையைத்தான் கேட்கிறோம். இதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான், இனிமேல், உங்களிடம் வறட்சி நிவாரண நிதி கேட்கப்போவதில்லையென்று சொன்னேன். ''சுப்பிரமணியம் நிதி அமைச்சராக இருக்கும் வரையிலும் கேட்க மாட்டேன்'' என்று சொன்னார்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்ததற்குப் பின்னாலே விளக்கம் கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அதை முழுவதும் படிக்கிறபொழுது அதிலே உள்ள உண்மை தெரியும். வெளியிலே ஒரு பொதுக் கூட்டத்திலே திரு. சி. சுப்பிரமணியம் அப்படிப் பேசிய காரணத்தால், 'நாங்கள் மேற்பார்வையிடுவோம்' என்று சொல்கின்றபொழுது, ஒரு மாநில அரசாங்கத்திற்கு அதனாலே இழிவு ஏற்படுகிறது. இன்றைக் கிருக்கிற மாநில நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு செய்வதைப் பற்றி யாராவது மத்திய அமைச்சர் தி.நகரிலோ மைலாப்பூரிலோ, பொதுக்கூட்டத்திலே அப்படி பேசுவாரானால், இதே கருத்தைத்தான் இன்றைக்கும் நாவலரும் சொல்லக் கூடிய இடத்திலே இருப்பார் என்று நான் நம்புகிறேன். மேலேயிருந்து அவர்கள் எழுதிய கடிதம் அல்ல, நடுத்தெருவிலே நின்று பேசிய பேச்சுக்குச் சட்டமன்றத்திலே சொல்லப்பட்ட பதில். எனவே, அந்த உணர்ச்சி மாண்புமிகு உறுப்பினருக்கும் மிச்சம் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: நான் உண்மையிலேயே மாண்புமிகு பேராசிரியருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பேராசிரியர் அவர்கள் அந்த நிலைமையிலேயிருந்து இன்னும் மாற்றிக்கொள்ளவில்லையென்பதற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் கண்காணிக்கவே கூடாது, கண்காணிக்கிறேன் என்று சொன்னதே தவறு என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகம், பாராளுமன்றத்திலே.....

திரு. க. அன்பழகன்: இல்லை, அதிலேயே தவறு; கண்காணிப்பதற்கு முறைப்படி அரசு அரசை அணுகலாம். ஆனால், பொதுக் கூட்டத்திலே, கண்காணிக்கிற கடமையைப் பற்றி— அரசாங்க முறையிலே அணுக வேண்டிய ஒன்றை, பொதுக் கூட்டப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திய காரணத்தால் அந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.



அனுப்ப வேண்டுமென்கிறபொழுது கண்காணிப்புத் தேவையில்லை' என்று. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், கண்காணிப்பதே தவறு என்று சொன்ன திராவிட முன்னெற்றக் கழக உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து, 26—2—1982 அன்று 'இந்தியன் எக்ஸ்பிரசில்' வெளிவந்திருக்கிறது. கண்காணிப்பதற்கென்றே ஒரு குழு மைய அரசு போடட்டும். பணம் கொடுக்கின்ற மைய அரசிற்குக் கண்காணிக்கின்ற அத்தனை உரிமைகளும் உண்டுஎன்று வாதிடுகிறார்கள். அதை அப்படியே படித்துக் காண்பிக்கிறேன்.

The centre was urged in the Lok Sabh today by the Congresse-I and opposition Members to set up a watch Dog Body to monitor the implementation of the various plan programmes in the states. Mr.C. T. Dandapani, D.M.K, said an agency to watch the states performance was urgently called for as some of the programmes initiated for the benefit of the weaker section had not taken off. The center which gave money to the states for the programmes was well within its rights to appoint such a body

நான் அதனாலேதான் சொன்னேன் கொள்கையிலே தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்று.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கொள்கையிலே தடுமாற்றம் அல்ல. நிதி வரவு செலவு செய்வதை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற பொழுது, இந்தச் சட்டமன்றத்திலே முதலமைச்சராக இருந்தவர், ஒரு அரசாங்கம், ஒரு அரசாங்கத்தைக் கேட்க வேண்டிய, கண்காணிக்க வேண்டிய கடமையை, அரசியல் பிரச்சாரமாக, பொதுக் கூட்டத்தில் பேசிய காரணத்தால், அவ்வாறு பதில் சொன்னார். அரசியல் முறைப்படி கண்காணிக்கின்ற உரிமை மத்திய அரசுக்கு அவர்கள் தருகிற நிதியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு துறையிலேயும் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், பிரதமர் இந்திரா காந்தி அவர்களே தமிழகத்திற்கு வந்து மாநில அரசினுடைய திட்டங்களைப் பற்றி கலந்து உரையாடுவது மூலமாக ஒரு கண்காணிப்பு நடத்தியதை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, அந்தக் கொள்கை, இங்கே ஏற்கப்பட்டு, அரசாங்கப் பிரச்னையாக இருக்க வேண்டியதை, அரசியல் பிரச்னையாக்கிய காரணத்தால் பேசப்பட்டது.

(முற்பகல் 10.40)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அன்றையதினம் பேரவையிலேயே அன்றைய முதல்வரவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலே யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட் அனுப்புகின்ற நியதி இருக்கின்றபொழுது கண்காணிக்க வேண்டுமா என்று கேட்டிருக்கின்றார்கள். 17-3-1975-ஆம் தேதிய புரொசீடிங்ஸிலே இருக்கிறது. அதற்காகத்தான் குறிப்பிட்டேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கூட ஏதோ கிராம அதிகாரிகளை புரட்சித் தலைவர் அரசு உடனே தூக்கியெறிந்து விட்டது என்று சொன்னார்கள். அப்படித் தூக்கியெறிந்து விட்டது என்று சொல்லுகின்ற பொழுது அந்தச் சட்டம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்படுகின்ற பொழுது சொன்னார்கள். 24,000 கிராம அதிகாரிகளின் இதயங்களில் இரத்தம் வடிய வைத்துவிட்டீர்கள் என்று சொன்னார்கள், 24,000 கிராம அதிகாரிகளைப் பட்டினி போட்டு விட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழக அருமை நண்பர்களைப் பார்த்துக் கேட்கின்றேன், புரட்சித் தலைவர் அவர்கள்தான் செய்தார்களா? நீங்கள் இந்தக் கிராம அதிகாரிகளை வர்க்கிஸ் கமிட்டியினுடைய சீர்த்திருத்தத்தினுடைய அடிப்படையிலே நீக்குவதற்கான அரசாணையைப் போடவே இல்லையா? 1975-ஆம் ஆண்டு வருவாய்த் துறையினுடைய அரசாணை எண் 114 —ஐ அன்று போட்டிருக்கிறீர்கள். இந்த அரசாணை பிறப்பிக்கின்ற தேதியிலேயிருந்து 55வயதைத்தாண்டியவர்கள் கிராம அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள். 30 ஆண்டுப் பணி முடித்தவர்கள் கம்பல்சரி ரிடையர்மெண்ட் கொடுக்கப்படுவார்கள் என்று இப்படிப்பட்ட அரசாணையை நீங்கள் போட்டீர்கள். நானே வாதத்திற்கு வந்துவிடுகிறேன். போட்டு, அந்த வேளையில் அந்த அமைப்பு உங்களை வேண்டிக் கொண்டதன் பேரில் நிறுத்தி வைத்திருந்தால் அந்த அரசாணை நிறுத்தி வைக்கப்பட்டது என்று ஒரு அரசாணை போட வேண்டும். வருவாய்த் துறையினுடைய அந்த அரசாணை எண் 1140—இன்படி நீங்கள் விதித்திருக்கின்ற நியதியின்படி அந்த அரசாணை அன்று செயல்படுத்தப்பட்டிருக்குமேயானால் ஏறத்தாழ 15,000 பேர், 17,000 பேர் கிராம அதிகாரிகள் வீட்டுக்குப் போயிருப்பார்கள். நீங்கள் அந்த அரசாணையை நிறுத்தி வைக்கச் சொல்லியும் ஆணை போடவில்லை. அரசாணையைப் போட்ட நீங்கள் அதை அமுல்படுத்தவும் இல்லை. நான் கேட்கின்ற வினா, அரசாணையைப் போட்டுவிட்டு பிறவி நீங்கள் மௌனம் சாதித்தீர்களே, அந்த மௌனத்தின் பொருகு என்ன? அதன் நிலை என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி



திரு. க. அன்பழகன் : மாண்பமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மிகவும் கருத்துடையவர்கள் என்பது என் நம்பிக்கை. முதல் உத்தரவு போடுகிற பொழுதே 55 வயதுக்கு மேற்பட்டவர்கள். 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்கள் என்று இரண்டுவிதமான கண்டிஷன்கள் போடப்பட்ட காரணத்தால் அந்த உத்தரவை கூட அவர்கள் சொல்வதைப்போல 17,000 பேர்களைப் பாதிக்காது இப்போது 25 வயதிலே, திருமணம் ஆன புதிதிலே உள்ள கிராம அதிகாரிகள் உள்பட நம்முடைய முதலமைச்சரவர்களுடைய திடீர் உத்தரவாலே ஒருநாள் இரவிலே வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டார்கள். இரண்டுக்கும் இடையிலே உள்ள வித்தியாசத்தை 40 வயது இருக்கக்கூடிய ஒருவர் உணருவார் என்று கருதுகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : 40 வயது என்பது தவறு. நான் கேட்டுக்கொள்வது அந்த அரசாணை அமுல்படுத்தப்பட்டிருந்தால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும். அந்த அரசாணை அன்றையதினம் வர்க்கீஸ் கமிட்டி, அம்ப்ரோஸ் கமிட்டியினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் போடப்படுகிறது. நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்த அம்ப்ரோஸ் வர்க்கீஸ் கமிட்டி பரிந்துரை செய்தபடி அடிப்படை மாற்றத்தை கிராமத்திலே நாம் கொண்டு வர வேண்டுமென்றால் முழு நேர ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்ற அந்தப் பரிந்துரையின் அடிப்படையில், 1973-ஆம் ஆண்டு அம்ப்ரோஸ் கமிட்டி அறிக்கை சமர்ப்பித்ததன் அடிப்படையிலே நான் சொல்லுகின்றபடி 15,000 பேர் அல்லது 17,000 பேர் இல்லை என்றாலும்கூட திராவிட முன்னேற்றக் கழகம் போட்ட அந்த ஆணையின்படி அன்றைய தேதியில் 55 வயதைத் தாண்டியவர்கள் தமிழகத்திலே கிராம அதிகாரிகளாக இல்லவே இல்லையா? 30 ஆண்டுப் பணிக்காலத்தை முடித்தவர்களே இல்லையா? ஆகவே, போட்ட அந்த ஆணைக்கு மௌனம் சாதித்ததே திராவிட முன்னேற்றக் கழகம், அதற்கு என்ன பொருள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன்.—மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அதற்குப் பொருள்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குத் தெளிவு இருந்தது என்பது.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு.—மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தெளிவு இருந்தால் அரசாணையே போட்டிருக்க வேண்டியதில்லை,

நிரு க. அன்பழகன் · —மாண்புமிகு துணைத் தலைவரவர்
களே, இப்பொழுதுகூடஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறோம்.
அப்படிக் கொண்டு வருகிற பொழுது அதனாலே சிக்கல்கள்,
இடையூறுகள் அதிகமாக இருக்கின்றது என்று தோன்றுகின்ற
காரணத்தால் தொடர்ந்து அதே, முதலிலே சொன்ன அதே
அடிப்படையிலேயே தொடர்ந்து நிறைவேற்றாமல் கைவிடுகிற
திறமையும், அந்த மனப்பான்மையும் அரசுக்கு உண்டு. இந்த
அரசும் எத்தனை காரியங்களைக் கைவிட்டிருக்கிறது.

நிரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் பேராசிரியர்
அவர்களுக்கு மிகப்பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.
ஒரு அரசாணை போடப்பட்டு, அது இப்படிக் கோரிக்கையின்
மூலம் நிறுத்தப்படுகின்றபொழுது 'கெப்ட் இன் அபேயன்ஸ்'
என்று ஒரு ஜி.ஓ. போடுவார்கள். நான் பேராசிரியர் அவர்
களிடத்தில் தயவு செய்து கேட்டுக்கொள்வது, அந்த அர
காணைக்கு 'கெப்ட் இன் அபேயன்ஸ்' என்று திராவிட முன்
னேற்றக் கழக அரசு போட்டதா என்ற விளக்கத்தைத் தயவு
செய்து தர வேண்டும். என்னுடைய குற்றச்சாட்டே, என்
னுடைய வினாவே, மிகச் சரியாக நேரடியாகக் கேட்கிறேன்.
போட்ட அரசாணையை அமல் நடத்தவும் இல்லை: அதை
நிறுத்தி வைக்கிறோம் என்றும் நீங்கள் சொல்லவில்லை.
அந்த மௌனத்திற்கு என்ன பொருள் என்பதைத்தான் நான்
கேட்க விரும்புகிறேன். ஆகவே, ஏதோ வசை பொழிய
வேண்டுமென்பதற்காக ஏதாவது சொல்ல வேண்டுமென்பதற்காக
புரட்சித்தலைவரவர்களின் அரசைப்பற்றிப் பேசுவதை விட்டு
நீங்கள் தொடங்கிய திட்டம், நீங்களே அதற்குத் தங்களை ஒப்பு
வித்துக் கொண்டீர்கள், அந்தத் திட்டத்தைப் புரட்சித் தலை
வரவர்கள் நடத்துகின்ற பொழுது. இந்த மாநிலத்திலே அமல்
நடத்துகின்றபொழுது அதை ஒரு பிரச்சினையாக ஆக்கி, ஒரு
கால கட்டத்திலே 24,000 கிராம அதிகாரிகளின் இருதயத்திலே
இரத்தம் வடிகிறது இரவே வீட்டுக்குப் போகச் சொல்லி
விட்டீர்கள் வீட்டிலே அடுப்பு பொங்கவில்லை என்று சொல்லு
கிறீர்கள்.



நில அளவைத் திட்டம், பட்டாபாஸ் புத்தகம். இன்றைய
தினம் கிராமப் புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய விவ
சாயிகள் இந்த அரசு என்ன சலுகைகளை அளிக்கிறதோ,
அந்தச் சலுகைகளை பெறமுடியும். பெறுவதிலே
இருக்கின்ற சிக்கலை தவிர்க்கின்ற வகையிலே என்னைப்
பொறுத்தவரையிலே கிராமப் புறங்களிலே அரசு தீட்டுகின்ற
திட்டத்தினுடைய பலனை அந்தத் திட்டங்கள் ஏழை எளிய
வர்களுக்கு எட்டுவதற்கு இடையூறாக இருக்கின்ற பிரச்சினை
எவை என்பதை ஆய்ந்து அவர்கள் இந்த அரசினுடைய சலு
கைகளைப் பெறுவதற்குச் சாதகமாக, அவர்கள் அரசினுடைய
சலுகைகளை மிக எளிதாக பெறவேண்டும் என்ற நோக்கத்
திலே அந்த பட்டா பாஸ் புத்தகச் சட்டத்தையும், இந்த
நில அளவைத் திட்டமும் கிராமங்களிலே இருக்கின்ற விவசாயி
களுக்காக புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வழங்கி இருக்
கின்றது. சர்வரோக நிவாரணி என்று அதைச் சொல்லவேண்டும்.
அதைநான் தெளிவாக விளக்கவில்லை என்றாலும் கூட, இத்தனை
ஆண்டுக்காலம் அதன் தொடர்பாக வருவாய்த்துறை அமைச்சர்
அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்து கொடுக்கப்பட
இருக்கிற பட்டா பாஸ் புத்தகத்தினை மிக விரைவாக ஒரு
சட்டப்படியான டாகுமென்ட்டாக லீகலைசுடு டாகுமென்டாக
இந்தியன் ரிஜிஸ்டிரேஷன் ஆக்டிலே இணைத்து அதற்கு முழு
வடிவைக் கொடுக்கவேண்டும். இந்தப் பட்டா பாஸ் புத்
தகம் இருந்தால் போதும். அதை வைத்து அவர்கள் வில்லங்க
சர்ட்டிபிகேட் எடுக்கவேண்டியதில்லை. தங்களுடைய சொத்து
மதிப்பிற்கு கிராம கர்ணத்தையோ ரெவின்யூ இன்ஸ்பெக்
டரையோ நாடவேண்டிய தேவையில்லை. கிரிமினல் நீதி மன்
றத்திற்கு ஜாமீனுக்குப் போகவேண்டும் என்றாலும் கூட, ஆர்
ஐ. வீட்டு வாசற்படியில் காத்து நிற்கத் தேவையில்லை என்கிற
சூழ்நிலையை, அந்தப் புனிதமான திட்டத்தை, கிராமப்புற
பகுதிகளிலே இருக்கிற ஏழை எளியவர்களுக்கு சர்வரோக
நிவாரணி என்று புரட்சித் தலைவர் அறிவித்துள்ள அந்தத்
திட்டத்தை மிக விரைவில் இந்த மாநிலத்திலே அமல்படுத்தி
இந்தியத் துணைக்கண்டத்திற்கே நாம் வழிகாட்டியவர்களாக
இருக்கவேண்டும். 1952 முதல் இன்று வரை இந்த மாமன்றத்
திலே பேசியிருக்கிறோம். ஒரு ஏழை விவசாயி ஆர். ஐ.
இடத்திலே சென்றால், கர்ணம் இடத்திலே சென்றால், தாசில்
தாரிடத்திலே சென்றால் சிக்கல் ஏற்படுகிறது என்று சொல்லிக்
கொண்டு இருக்கிறோம். ஆனால் புரட்சித் தலைவர் அரசு

(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன்) [1981 மார்ச் 18

ஒன்றுதான் இந்தச் சிக்கலை நிர்வாகச் சீர்திருத்தத்தின் மூலம், அதனுடைய யுக்தியின் மூலம் அந்த ஏழை விவசாயிகளுக்கு இருக்கிற இடர்ப்பாடுகளை எப்படியெல்லாம் நாம் சீர்திருத்தமுடியும், எப்படியெல்லாம் அவர்களுக்குச் சிக்கல் இல்லாமல் செய்யவேண்டும் என்கிற அடிப்படையில் அதைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்தப் பட்டா பாஸ் புத்தகத்தையும், நிலஅளவைத் திட்டத்தையும் விரைவுபடுத்தி அமல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே குத்தகைதாரர்கள் பதிவேடு. இந்த அரசு மக்களை நம்பி இருக்கிற அரசு, சட்டத்தை அமல் நடத்துகின்ற பொறுப்பை மக்களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு முன் வந்து இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே இந்த மாநிலத்திலே தான் இப்படிப்பட்ட ஒரு சட்டம் போடப்பட்டு அதை அமுல்படுத்துகின்ற பொறுப்பை மக்கள் பிரதிநிதிகளிடத்தில் நாம் கொடுக்கிறோம். மக்கள் முன்னேற்றத்திற்காக அந்தச் சட்டமுன்வடிவை அமைச்சர் அவர்கள் நிறைவேற்ற இருக்கிறார்கள். இது உண்மையிலேயே மக்களை நம்பி நடத்திக்கொண்டு இருக்கிற ஆட்சி. நிர்வாகத்திலே மக்கள் நேரடியாகப் பங்கு ஏற்கவேண்டும் என்ற அடிப்படையிலே மக்கள் தந்துள்ள அரசாகப் புரட்சித் தலைவர் அரசு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்ற விதத்தில் அவரைப்பாராட்டி ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்கிறேன்.

சமுதாய நலத் திட்டங்களைப் போடுகின்றபோது அத்தனை தரப்பிற்கும், பாதிக்கப்படாத ஒரு நிலையைக் கண்காணிக்க வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் பணிவுடனும் கனிவுடனும்கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறத்திலே குத்தகைதாரர்கள் பதிவேட்டிலே எவரையும் காலிசெய்யக்கூடாது. அதைப்பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். உழைக்கின்றவனுக்கே நிலம் சொந்தம்; உழைக்கின்றவனுக்கே அங்கே உரிமை இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிற அதே நேரத்திலே சமுதாய நீதி இரண்டு பக்கமும் வழங்கப்படவேண்டும்.

ஒரு சாதாரண விதவை தன் கணவன் இறந்து விட்ட சூழ்நிலையில் தன் மகனுக்கு 15 வயது இருக்கிறபோது ஒரு நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறாள். தாய் தான் பெற்ற மகன் 20 ஆண்டுகள் ஆகும்போது தன் கணவன் ஈட்டிவைத்த, சம்பாதித்து வைத்த நிலத்தைக் கேட்கவேண்டும் என்றால்கூட அங்கே போகமுடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி குத்தகைதாரர்கள் சட்டத்திலே விதவைப் பெண்களுக்கு பணியிலே இருந்து வெளியேறுகின்ற அரசு ஊழியர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். அதே சமயத்தி தற்போதைய குத்தகைதாரர்களை பாதிக்கின்ற வகையி



1981 மார்ச் 18] [திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்]

தங்களுடைய சொந்த உபயோகத்துக்காக வாங்குபவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றால் முந்தைய குத்தகைதாரர்களுக்கே கொடுக்கலாம் என்ற அளவிலே சட்டத்தைத் திருத்தி, நலிந்தவர்கள், பாதிக்கப்படாத அளவிற்கு இருக்கின்ற புனிதமான சட்டத்திற்கு இதிலே என்னென்னவோ காரணங்களைச் சொல்லி மத்திய அரசு அனுமதிமறுத்து இருக்கிறது. அதிலே சொல்லியிருக்கிற காரணங்களிலே ஒரு காரணம் நிச்சயமாக ஒத்துக்கொள்ள முடியாத காரணம். அதற்காக காம்பென்சேஷன் எப்படிக்கொடுக்க வேண்டும் என்று, இந்த ஆக்டிலே போடவில்லை என்று சொல்லி, அதை ஒரு காரணமாகச்சொல்ல, மத்திய அரசு ஒப்புதல் கொடுக்க மறுத்து இருக்கிறது என்று குறிப்பிலே பார்த்தேன், மற்றைய காரணங்கள் நியாயமாக இருந்தாலும் கூட ஆக்ட் 11/79-ல் மற்றைய அரசுகளைவிட திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட மகசூல் அடிப்படையிலே நிலத்தின் விலையை நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு அப்படி இல்லை. அதிலே கூடுதல் தொகை கொடுக்கவேண்டிவரும். இழக்கின்ற நிலத்திற்கு இதைவிட நிலச்சுவான்தாரர்களுக்கு ஏராளமாகப் பணம் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலே லேண்ட் ரெவின்யு 10 மடங்கு கொடுத்தால் போதும் என்று அந்தந்த வகையிலே அந்த இழப்பிற்கு காம்பன்சேஷன் வழங்கவேண்டும் என்று ஆக்ட் 11/79—ல் தெளிவாகப் போட்டு இருக்கிறபோது எப்படி மத்திய அரசு அந்த விதியை இந்தச் சட்டத்திலே போடவில்லை என்று மறுத்து இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை.

இதிலேகூட இதை அனைத்து தரப்பினர்களும் அத்தனைகட்சியினைச் சார்ந்தவர்களும் பாராட்டினார்கள். ஏன், 1962 ஆம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற மாநாட்டிலே பேசிய பண்டித நேரு அவர்கள் கூடச் சொன்னார்கள். 1960 ஆம் ஆண்டு போடப்பட்ட நில உச்சவரம்புச் சட்டங்கள் முறையாகப் போடப்படவில்லை. மத்திய அரசு, மாநில அரசுகள் எதிர்பார்த்த அளவிற்கு வரவில்லை, பினாமியாக ஏமாற்றி விட்டார்கள் அதை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். ஏன், உத்திரப்பிரதேசத்தில் தியோலியிலே 1981 ஆம் ஆண்டிலே கலவரம் நடந்தபோது நில உச்சவரம்பு சட்டங்கள் மூலமாக மாநிலங்களிலே அமுல்படுத்தப்பட்டால்தான் இப்படிப்பட்ட ஜாதிக் கலவரங்களை குறைக்க முடியும் என்று நமது பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்கள்கூட குறிப்பிட்டுள்ளார்கள். நான் வேண்டி, வேண்டி கேட்டுக் கொள்வது மீண்டும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அதற்கு மத்திய அரசு ஒப்புதல் தரவேண்டுமென்ற கருத்தினைவலியுறுத்த வேண்டும்.

(முற்பகல் 10.50)

அதேபோல், வர்கீஸ் கமிட்டி, அம்புரோஸ் கமிட்டி சொல்லி இருக்கின்ற அடிப்படையிலே, மதுரை மாவட்டம்,

[திரு. வடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1981 மார்ச் 81

பெரிய மாவட்டமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து திண்டுக்கல்லை தனி மாவட்டமாக ஆக்கவேண்டுமென்ற1 கோரிக்கையினை நான் வைக்கிறேன். அதேபோல் திருச்சியை,- மிகப் பெரிய மாவட்டமாக இருக்கின்ற அதை, இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று அந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கூட அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கிறார். எனவே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, காவிரிக்குத் தெற்கே திருச்சியைத் தலைநகராகவும், வடக்கே ஸ்ரீரங்கத்தைத் தலைநகராகவும் வைத்து பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையினை நான் வைக்கிறேன்,

அதேபோல் நான் சார்ந்திருக்கின்ற வேடசந்தூர் தொகுதியிலே சில பகுதிகள் உண்மையிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என்ற ஒரு பிரச்சனைகூட இங்கே கிளம்பி இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதியிலே வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியங்களிலே ஒருசில பகுதிகளையும் வடமது ரையைச் சேர்ந்த ஒருசில பகுதிகளையும், குஜிலியம்பாறை ஒன்றியத்தைச் சேர்ந்த ஒருசில பகுதிகளையும் வறட்சிநிவாரணப் பணிக்காக பரிசீலிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைத்து, எனக்கு வழ்ங்கிய வாய்ப்புக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

திருமதி டி. யசோதா ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்தின் கீழ், நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இங்கே சமர்ப்பிக்க ஆசைப் படுகிறேன். மாவட்டங்களிலே இன்றைக்கு நிர்வாகம் மிகவும் தேக்கநிலையிலே இருக்கிறது. அதற்குக் காரணம் மாவட்டங்களுடைய விஸ்தீரணம் மிகவும் அதிகமாக இருக்கிறது. மாவட்டங்களுடைய வேலைப் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மாவட்டங்களை உடனடியாக இரண்டாகப் பிரிக்க வேண்டும், உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால், நான் இருக்கின்ற செங்கை மாவட்டத்தைத் தென் செங்கை என்றும், வடசெங்கை என்றும் இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட வளர்ச்சிக் கூட்டங்களை நடத்துகின்ற போது, அந்த மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து, இரண்டு ஆட்சித் தலைவர்களை நியமித்தால், அது சரியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஏன் என்று சொன்னால், இதற்கு முன்னதாக இதே மானியத்தின் மீது, சென்ற ஆண்டிலே அருமைச் சகோதரர் பூங்காவனம் அவர்கள் பேசுகின்றபோதுகூட இதையே தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.



982 மார்ச் 18] [திருமதி டி. யசோதா]

ஆனால், மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பது நிறைவு பெற்று இருக்கிறதா என்றால் இல்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாவட்டங்களிலே வேலைத் தேக்கம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், சிபாரிசு செய்கின்ற வர்களுடைய பணிகள் சிறப்பாக முடிவடைகின்றன.

அடுத்தாற்போல், குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், லஞ்சத்திற்கு அதிகமாக வேலைப்பளு இருக்கின்ற காரணத்தினால், அவரவர்கள் தங்களுடைய காரியங்களைச் செய்து கொள்வதற்கு, ஏதோ காசைக் கொடுத்தோம், காரியம் முடிந்துவிட்டது என்கிற நிலைமையிலே இங்கே பணிகளை முடித்துக் கொண்டு செல்கின்ற நிலைமை இருக்கிறது. இங்கே ஒரு மாவட்டத்திற்கு ஒரு ஆர்.டி.ஓ. என்று இருக்கிறார். அப்படி இல்லாமல் தாலுகாவிற்கு ஒரு ஆர்.டி.ஓ. வீதம், வட்டாரத்திற்கு ஒரு தாசில்தார் வீதம், 10 கிராமங்களுக்கு ஒரு கிராம சேவக் என்பது போல், 10 கிராமங்களுக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரை நியமித்தால் நிச்சயமாக ஓரளவிற்குப் பணியை மிகச் சுலப மாகவும், விரைவாகவும் முடிக்கமுடியும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் முதியோர் பென்ஷன், விதவைகள் பென்ஷன் ஊனமுற்றோர் பென்ஷன், பட்டதாரிகளுக்குச் சலுகைகள் மற்றும் ஜாதிச் சான்றிதழ்கள் போன்று பலச் சான்றிதழ்களை வழங்க அவர்கள் மனுக்களைப் பெறவேண்டி உள்ளது. இப்படி பல் வேறு வேலைகள் அதிகமாகச் இருக்கின்றபோது அவர்களால்; அத்தனையையும் ஒட்டுமொத்தமாக செய்யமுடியவில்லை. எனக்கு மிகவும் வயதாகிவிட்டது, என்வே உதவித்தொகை கொடுங்கள் என்று கேட்டு மனு எழுதினால், அவருக்கு அந்த மனுவினுடைய பலன் கிடைத்து அந்தப் பணம் கொடுக்கும் நேரத்திலே மனு செய்தவர் உயிரோடு இல்லை என்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். அதற்குக் காரணம் வேலைப்பளு அதிகமாக இருப்பது தான். அதனால்தான் உடனடியாக அந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை,

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மாவட்டங்களிலே பணிபுரிகிற அந்த அதிகாரிகளுக்கு உண்மையிலே அந்த மாவட்டத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் யார் யார் என்ற அடையாளம் கூட தெரியாத சூழ்நிலை இருக்கிறது. தென் செங்கை மாவட்டத்தில் என்னுடைய தொகுதி இருக்கிறது. அங்கே மாவட்ட அதிகாரிகளாக இருக்கிற பலருக்கு நான்தான் அந்த சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் என்று தெரியவில்லை, அந்தச் அளவுக்கு அவர்களுக்கு வேலைப் பளுவும், பாராமுகமும் இருக்கிறது.

[திருமதி. டி. யசோதா) [1981 மார்ச் 18

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட ஒரு அரசாங்க விழா என்னுடைய தொகுதியில் ஒரகடத்தில் நடைபெற்றது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தவிழாவுக்கு வந்திருந்தார்கள். அந்த விழாவிலே சில புதிய மருந்துகளை வழங்கினார்கள். அந்த விழாவுக்கு என்னை அழைக்கவில்லை; இறுதியில் அமைச்சர் அவர்களே அதை விசாரித்ததில் சட்டமன்ற உறுப்பினர் யார் என்று தெரியவில்லை என்று அதிகாரிகள் பதில் சொல்ல, அமைச்சர் அவர்கள் என்னிடம் வருத்தம் தெரிவித்தார்கள்

அதைப்போல இரண்டு நாட்களுக்கு முன்னதாக என்னுடைய தொகுதியில் 'அடல்ட் எஜுகேஷன்' சம்பந்தமாக கல்வித்துறையின் சார்பில் ஒரு அரசாங்க விழா நடைபெற்றது. அது அரசாங்க விழாவாக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னை அழைக்கவில்லை. அந்த அடல்ட் எஜுகேஷன் அதிகாரிக்கு என்னைத் தெரியவில்லை. பக்கத்தில் இருக்கிற திருத்தணி சட்டமன்ற உறுப்பினரை அழைத்திருக்கிறார்கள். அந்த எம்.எல்.ஏ. முன்னிலையில் விழா நடக்கிறது. இதை எல்லாம் பார்க்கும்போது இன்றைக்கு மாவட்ட நிர்வாகம் எந்த அளவுக்கு நடைபெறுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மாமன்றத்திலே அமைச்சர்களும். அவைத் தலைவர் அவர்களும் அளிக்கின்ற உறுதிமொழி அங்கே காற்றிலே பறக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இந்த உறுதிமொழி காப்பாற்றப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு அரிசன மக்களுக்கு இந்த அரசாங்கம் மிகவும் எடுத்துக்கட்டிக்கொண்டு பணியாற்றிக்கொண்டிருக்கிறது என்று நீங்கள் சொல்லும்போது அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அது எந்த அளவுக்கு நடைமுறையில் இருக்கிறது? ஸ்பெஷல் தாசில்தார் ஒருவர் இருக்கிறார். அவர் மாவட்ட அளவில் அரிசனங்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களைக் கவனித்து வருகிறார். ஆனால் அந்த அதிகாரி உடனுக்குடன் அந்த மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்கு அவருக்கு என்ன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது? அரிசன மக்களுக்குப் பாதை வசதி இருக்கிறதா போக்கு வரத்து வசதி இருக்கிறதா? குடிதண்ணீர் வசதி இருக்கிறதா மயான பாதை வசதி இருக்கிறதா அவர்களுடைய தேவை என்ன என்பதை உடனுக்குடன் அவர் சென்று அறிந்து, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு முக்கியமாகத் தேவைப்படும் வாகன வசதி இல்லை. அவர் சிறப்பாகச் செயல்பட உடனடியாக வாகன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



82 மார்ச் 18] [திருமதி. டி. யசோதா]

அதைப்போல மாவட்டங்களிலே இருக்கிற போலீஸ் திகாரிகளுக்கு, போலீஸ் ஸ்டேஷன்களுக்கு வாகன வசதி ருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஜாதிக் கலவரங்ள், மற்ற தகராறுகள் நடைபெறும்போது அதிகாரிகளைப் பாய் பாதுகாப்பு கொடுங்கள் என்று ஏழை எளிய மக்கள் கட்கும்போது 'நீங்கள் டாக்சி பிடியுங்கள், உங்களோடு வந்து ங்கள் காட்டுகிற குற்றவாளிகளைப் பிடிக்கிறோம்' என்று சால்கிறார்கள். ஏழை எளிய மக்கள் டாக்ஸி பிடிக்க எங்கே பாவார்கள்? அதனால் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு, ராமங்களில் நீதி கிடைக்காமல் அவர்கள் ஒடுக்கப்படுகிறார்ள். ஆகவே, போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் உடனடியாக ாகன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு மருத்துவ மனைகளுக்கும் வாகன சதி இல்லை. என்னுடைய தொகுதியில் ஸ்ரீபெரும்புதூரில் ஒரு அரசாங்க மருத்துவமனை இருக்கிறது. அது ஒரு தாலூகா தலைமை மருத்துவமனை. அந்த மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸ் இல்லாத காரணத்தால், அங்கே சிகிச்சை பெற்று, நோய் முற்றி, அந்த நோயாளியை சென்னைக்கு சிகிச்சைக்காக எடுத்துச்செல்லுங்கள் என்று அவர்கள் எழுதிக்கொடுக்கும் போது ஏழை எளிய மக்களால் எடுத்துவர முடியவில்லை. டாக்ஸிக்கு அதிகமாகப் பணம் தேவைப்படுகிறது. அதனால் பல நல்ல உயிர்கள் பறிக்கப்படுகின்றன. ஆகவே, எல்லா மருத்துவ மனைகளுக்கும் உடனடியாக ஆம்புலன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த கிராம அதிகாரிகளுடைய வழக்கு நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் இருக்கிறது. அந்த வழக்கை அரசாங்கம் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரியவில்லை. அவர்களுக்கும் சம்பளம் கொடுக்கிறோம். அவர்களுடைய வேலையை தற்போது கவனித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் சம்பளம் கொடுக்கிறோம். இதற்கிடையில் இன்றைக்கு அரசாங்க நிலத்தில் இருக்கிற மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு, தூக்கிச் செல்லக் கூடிய சூழ்நிலை அதிகமாக இருக்கிறது. மரங்களை எல்லாம் வெட்டித் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வகையிலும் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது ஆகவே அந்த வழக்கைச் சீக்கிரமாகத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது வறட்சி அதிகமாக பாதிக்கும் சூழ்நிலை இருக்கிறது. புதுக்கோட்டை, தர்மபுரி மாவட்டங்களில் அதிகமாக வறட்சி இருக்கிறது. என்னுடைய தொகுதியில் கூட வறட்சி இருக்கிறது. சென்ற ஆண்டைப்போல மிகவும் தாமதமாக வறட்சிப் பணிகளைத் தொடங்காமல் இப்போதிருந்தே

'டெம்பரரி ரிலீஃப்' என்ற முறையில் அல்லாமல் நிரந்தரமான ஒரு பரிகாரம் காண்பதற்கு, இந்த வறட்சியை நிரந்தரமாகப் போக்குவதற்கு உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, நிரந்தர பரிகாரம் காண அரசு முயலவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11.00)

பட்டாவைப் பற்றி இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நானும் அந்த மன்றத்திற்கு வந்த நாளில் இருந்து சொல்லிக் கொண்டு இருக்கிறேன். குறிப்பாக, காலனிகளில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருகிறேன். ஆனால் அந்த வேலைகள் விரைவாக நடைபெறவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். இந்த ஆட்சி வந்து கிட்டத்தட்ட 1¾ வருஷம் ஆகிவிட்டது. இருப்பினும், என்னுடைய தொகுதியில் உள்ள மணப்பாக்கம் காலனி மக்களுக்கு பட்டா கொடுக்கப்பட வில்லை. புரட்சித் தலைவர் அவர்கள வசிக்கும் பகுதிக்குப் பக்கத்தில்தான் இந்தக் காலனி இருக்கிறது. இந்தக் காலனி மக்கள் 10 ஆண்டுகாலமாக அந்தப் பகுதியில் வசித்து வந்தாலும் இன்று வரையில் அவர்களுக்குப் பட்டா கொடுக்கப்படவில்லை. அவர்கள் நான்கு அரசாங்கத்தை பார்த்து விட்டார்கள். அரசாங்கம் மாறி மாறி வந்ததே தவிர அவர்களுடைய நிலை மாறவில்லை. அவர்கள் காங்கிரஸ் ஆட்சியிடம் கேட்டுப் பார்த் தார்கள், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிடம் கேட்டுப் பார்த்தார்கள். பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிடமும் கேட்டுப் பார்த்து விட்டார்கள் ஆனால் இன்று வரையில் அந்தக் காலனி மக்களுக்குப் பட்டா கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இது பற்றி கேட்டால், இன்னுமா கொடுக்கப்படவில்லை என்று கேட்கிறார்கள். அந்த அளவிற்கு மாவட்ட நிர்வாகம் ஒரு தேக்க நிலைமையில் இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், என்னுடைய தொகுதியில் மலைப்பட்டு என்ற இடத்தில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த பகுதியில் கல் உடைக்கும் குத்தகையை இ. சி. சி. என்கிற பெரிய கம்பெனி எடுத்து இருக்கிறது. அவர்கள் ஸ்டே வாங்கி வைத்துக்கொண்டு, அந்தக் கல் உடைக் கும் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். பல ஆண்டு காலமாக இந்த கல் உடைப்புப் பணி நடந்து வந்தாலும், அரசாங்கத்திற்கு அவர்கள் பணம் கொடுக்கவில்லை என்றும் தெரிகிறது. அந்தக் கல் உடைக்கும் தொழிலாளர் களுக்கும் மிகக் குறைந்த கூலிதான் கொடுக்கிறார்கள். ஒரு நாளைக்கு இரண்டு யூனிட் லாரி கல் ஏற்றினால், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று கூலி பெறும் நிலைமைதான் இருக்கிறது



இதைப் பற்றி தாசில்தாரிடம் கேட்டால் அவர் சொல்கிறார், அந்தக் கம்பெனி ஸ்டே கேட்டுவாங்கியிருக்கிறார்கள், வழக்கு இன்னும் தொடரவில்லை என்று சொல்கிறார். இதுபோன்று அரசாங்கத்திற்கு வருமானம் வரும் பிரச்னைகளில் உடனடியாக வழக்குகளைத் தொடர்ந்து, அந்த மலைப்பட்டியில் கல் உடைத்துக் கொண்டு இருககும் இ. சி. சி. கம்பெனி வாங்கி யிருக்கும் ஸ்டேவை உடைத்து, அரசாங்கத்திற்குப் பெறவேண்டிய வருமானத்தையும் பெற்று, அந்தப் பகுதிமக்களுக்கும் நன்மை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீ விபத்தால் மரணம் அடைந்த குடும்பத்தினருக்கு 1,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அது போதாது. குறைந்தபட்சம் 5,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம், வறட்சித் துயர் தணிப்புத் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்பட்டு வந்த போதிலும் என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் இருக்கும் சுங்குவார்சத்திரம் பகுதிக்கு இன்னும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் பலவேறு திட்டங்களை ஆங்காங்கு நிறை வேற்றிக்கொண்டு வந்தாலும், இந்தப் பகுதி மக்களின் தண்ணீர் பிரச்னையைத் தீர்க்கவில்லை. அந்த மக்கள் தண்ணீர், தண்ணீர் என்று அலைந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மொத்தத் தில் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கும் என்னுடைய தொகுதியில் உடனடியாக பாலாற்றுத் திட்டம் கொண்டு வர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்குச் சொந்தமான பனைமரம், புளியமரம், பச்ச மரம், பட்டுப்போன மரம் ஆகியவற்ற ஏலங்கள் விடுகிறபோது பஞ்சாயத்து யூனியனில் ரிஜிஸ்டர் வைத்து விடவேண்டும். அந்த வகையில் தவறுகள் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாவட்ட ஆட்சி நிர்வாகம் வேகமாக, விரை வாகச் செல்லவில்லை. காலிங்கராயன் குதிரை முன்னால் இருவர் பிடித்து இழுக்க, பின்னால் இருவர் தள்ள, மாதம் காததூரம் நடந்ததாம். அதுபோல் மாவட்ட நிர்வாகம் இல்லாது, நிறைய பணியாளர்கள் நியமித்து, மக்களின் குறை களைப் போக்கி, மாவட்டம் வளர்ச்சி பெற வசதி செய்யுங்கள் என்று கேட்டு அமர்கிறேன்.

*டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இன்றையதினம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள கோரிக்கைகளான நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த

துயர் துடைப்பு, இன்ன பிற ஒதுக்கீடுகள் குறித்த மானியக்
கோரிக்கைகள் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்
றக்கழகத்தின் சார்பில் மக்களின் உணர்வுகளை இந்த மன்றத்திலே
பிரதிபலிக்க விரும்புகிறேன்.

மாவட்ட நிர்வாகம் என்று சொன்னாலே அதிலே வருவாய்த்
துறை, வளர்ச்சித் துறை. நிர்வாகத் துறை ஆகிய அத்தனையும்
இணைந்து விடுகிறது என்பதை நாம் உணரமுடியும். அது
தனித்தனியாக வரவேண்டும் என்பது இல்லை. ஆனால் ஒரு
சம்பிரதாய மரபுப்படி இங்கே அப்படி கொண்டு வரப்பட்டு
இருக்கிறது என்று கருதுகிறேன். அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக்கழக அரசு ஏற்பட்ட பிறகுதான்—
சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகள் ஆனபின்பு பெருத்த
அளவிற்கு பிர்க்காக்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டு இருக்
கின்றன. வட்டங்கள் மிக அதிகமான அளவிலே உருவாக்கப்பட்டு
இருக்கின்றன. அது மட்டும் அல்லாமல், மிகப்பெரிய மாவட்டங்
கள் என்கிற முறையில் எவையெவை இருக்கின்றவோ அவற்றை
யெல்லாம் பிரித்து நல்லதொரு நிர்வாகச் சீரமைப்பு செய்து
கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.
ஆண்டு அரசு வருமானம் ரூ. 1450 கோடி என்று இருந்தாலும்,
நிலவரி வசூல் மூலம் மொத்தம் சுமார் ரூ. 20 கோடிக்கும் குறை
வாக இருக்கிறது என்று சொன்னாலும்கூட, அந்த நிதியை நல்ல
முறையில் பயன்படுத்தி மிகச் சிறப்பான முறையில் நிர்வாகத்தை
நடத்தி வருகிறது தமிழக அரசு என்று சொன்னால் அது
மிகையாகாது.

டெல்லியிலே இருக்கக்கூடிய மத்திய அரசு கூட தேசிய கிராம
வேலைவாய்ப்புத் திட்டம் முழு மனநிறைவு தருகிறது என்று
சொல்லி, அதை டெல்லி மத்திய அரசு பாராட்டி, மீண்டும்
இரண்டாம் முறை தேவையான ஒதுக்கீட்டைச் செய்திருக்கிறது
தமிழ்நாட்டிற்கு. இந்திய துணை கண்டத்திலே வேறு எந்த
மாநிலமும் இந்தத் தொகையை பெறமுடியவில்லை என்று
சொல்வதிலேயிருந்து தமிழ்நாடு அரசு எந்த அளவுக்கு நிர்வாகத்
திறமையிலே மிகச் சிறப்பாக இருக்கிறது என்பதை நாம் அறிந்து
கொள்ள முடிகிறது. அது மட்டும் அல்லாமல் மாவட்ட நிர்
வாகம் என்று வருகிறபோது, ஒருவர் விபத்திலே இறந்தால்
இதற்கான உதவித் தொகையை பெற மாநில தலைமையிடத்
திலேதான் வழங்குவதற்கு உரிய அனுமதி பெறமுடியும் என்று
இருந்ததை மாற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களே கொடுக்க
லாம் என்று சட்டத்தைக் கொண்டு வந்ததே இதேஅரசுதான்.
இன்னும் சொல்லப்போனால் இன்ஸ்பெக்ஷன் செல் என்பது
மிகத் தேவையான ஒன்று. அதை உருவாக்கி மிக நல்ல முறை
யிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்று
சொன்னால் அது மிகையாகாது. இன்னும் சொல்லப்போனால்
மாநில தலைநகரத்திலேயே எல்லா அமைப்புகளும் இருக்கிற
நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு துறைக்கான



தலைமையிடமாக இருக்க வேண்டும் என்று சொல்கிற மிகப்
பரந்த நோக்கத்துடன், மாவட்டங்களிலே அபிவிருத்தி செய்யக்
கூடிய வகையிலே ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொன்றை இந்த
அரசு நிறுவியுள்ளது.

பட்டுத்துணி என்று சொன்னால் ''செரிகல்சர்'' என்கிற
அதற்கு சேலத்திலே இயக்குநரகம்—தலைமையிடம்—இருக்கிறது.
விவசாயத்துறையைப் பலப்பல பிரிவுகளாகப் பிரித்து, எண்ணெய்
வித்து, விதைச்சான்றிதழ் அளித்தல், தோட்டக்கலை மார்க்
கெட்டிங் ஆகிய ஒவ்வொன்றையும் தனித்தனியாக பிரித்து
ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அதற்கு தலைமையிடம்
தேர்ந்தெடுத்து இந்த அரசு அமைத்திருக்கிற பாங்கு மிகச்
சிறப்பானது. அதைப்போலவே டவுன் பஞ்சாயத்தில் கூட
கிருஷ்ணகிரியிலே ஆர். டி. டி. பி. என்ற ரீஜினல் டெபுட்டி
டைரக்டர் ஆப் டவுன் பஞ்சாயத்து என்ற அலுவலகம் வந்திருக்
கிறது.

தர்மபுரியிலே ஆர்டிகல்சர் என்று சொல்லக் கூடிய
தோட்டக்கலை இயக்குநரகம் அமைக்கப்பட்டிருக்கிறது.
திருச்சியிலே வேளாண்மை இயக்குநரகம் என்று சொல்லக்கூடிய
அக்ரிகல்சுரல் மார்க்கெட்டிங் கமிட்டி டைரக்டரேட் இருக்கிறது.
விழுப்புரத்திலே அரிசன நலத்துறையின் இயக்குநரகம் அமைக்கப்
பட்டிருக்கிறது. சேலத்திலே பட்டுத்துணி உற்பத்திக்சாக இயக்கு
நரகம் இருக்கிறது. கோவையிலே விதைச் சான்றிதழ்
அலுவலகம், இப்படி எல்லா வேலைகளுக்கும் சென்னையைத்
தேடி எல்லா மாவட்டங்களில் இருப்பவர்கள் வரவேண்டிய
நிலைமையை மாற்றி அந்தந்த மாவட்டங்களுக்கும் முக்கியத்
துவம் அளித்து, அந்த மாவட்டங்களெல்லாம் முக்கியத்துவம்
பெற்றிருக்கவேண்டும் என்ற நிலையில், அங்கேயுள்ள மக்கள்
எல்லாம் முழுமையான அளவில் அரசியலையும், சமுதாயத்தையும்
நாட்டு நடப்பையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற
அடிப்படையில் செய்து இருப்பதும் இந்த அரசுதான்.

இங்கே பேசுகிறபோது கர்ணம் முன்சீப் பற்றிச் சொன்னார்
கள். ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரச வந்த
பிறகுதான், தானாகவே இதைச் செய்துவிட்டது போலச்
சொன்னார்கள். உண்மையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள்
நல்லதம்பி என்ற சினிமா படத்திலேயே இதைப்பற்றிய உணர்வை
சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே அப்படிப்பட்ட
சட்டத்தைப் போட்டு, இவைகளையெல்லாம் நீக்க வேண்டும்
என்று எண்ணினார்கள். ஆனால் இன்றைக்கு இது மட்டும் அல்ல.
கோர்ட்டுக்குப் போனால் எவ்வளவோ விஷயங்கள் இப்படித்
தான் தோற்றுப் போய்விடுகின்றன. ஆனால் அதற்கெல்லாம்
அரசாங்கத்தின் கொள்கையின் தவறுதானா என்பதை எண்ணிப்

பார்க்கவேண்டும். அரிசனர் அர்ச்சகராக வேண்டும் என்னும் விஷயம் கோர்ட்டிலே தோற்றுபோய்விட்டது. குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி, விழா நடத்தி சட்டம்போட்டு, சிலை கூட வைத்திருக்கிறார்கள். ஆனால் அது நடைமுறையில் கோர்ட்டில் தோற்றுப்போய்விட்டது. எல். ஐ. சி. குறித்த மத்திய அரசு டெல்லியிலே போட்டச் சட்டம் கூட, கோர்ட்டிலே தோற்றுப்போயிருக்கிறது. ஆகவே ஆளும்கட்சி என்பதும், அரசாங்கம் என்பதும், வழக்குமன்றம் என்பதும் தனித்தினி தன்மைகள், தனித்தனி தகுதிகள் கொண்டவை. நம்முடைய கொள்கை என்ன, லட்சியம் என்ன? நாட்டு மக்களுடைய உண்மையான உணர்வு என்ன என்பதைப் புரிந்துக்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும், கொள்கைகள் வலியுறுத்தப்படுவதும்தான் ஒரு அரசியல் கட்சியின் முக்கிய வேலையாகும்

கர்ணம், முன்சீப் விஷயத்தைப் பற்றி, "தி. மு. க. நிலை ஒரு தெளிவு" என்று பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அல்ல. அது இரட்டை வேடம். கர்ணம், முன்சீப்பை ஒழித்துவிட்டோம் என்று ஒரு பக்கத்திலே சொல்லிவிட்டு, அவர்களிடத்திலே சென்று சட்டம் அப்படியேயிருக்கிறது. நீங்கள் போக மாட்டீர்கள் என்று சொல்வது இரட்டை வேடம். அதுபோலத்தான் அவசரக் காலச்சட்டம் வந்தபோதுகூட, அவசரச்சட்டத்தின் கொடுமைகளைப்பற்றி கடுமையாக எதிர்த்தார்கள், தீர்மானம் போட்டார்கள்; விமரிசனம் செய்தார்கள். இங்கேயெல்லாம் கூட விவாதம் நடத்தப்பட்டது. ஆனால் அதே அவசரக் காலச்சட்டத்தைப் பயன்படுத்தி அவர்களுக்குத் தேவையற்றவர்களையெல்லாம் பிடித்து உள்ளே தள்ளினார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அது அவர்களுக்கு வாடிக்கை குணமே தவிர, அதிலே ஒரு பெரிய நியாயம் இருப்பதாக நான் நம்பவில்லை.

அடுத்தாற்போல பினாமி நில ஒழிப்புச் சட்டத்தை மீண்டும் நாம் கொண்டு வந்திருக்கிறோம். நமது ஜனாதிபதி அவர்கள் கூட அதைப்பற்றி அருமையாகப் பேசியிருக்கிறார்கள். 20 அம்ச திட்டத்திலே கூட அது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரதமர் அவர்கள் கூட அதுபற்றி உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கூட பினாமி நில ஒழிப்பு சட்டம் அங்கே பாஸ் ஆகாமல் திரும்பி வந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை என்று சொன்னால், அதை மீண்டும் பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய நிலைமைகளை எடுக்கவேண்டியது மத்திய அரசின் பொறுப்பு, மாநில அரசு அதைத் தொடர்ந்து வற்புறுத்தும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



அப்படிப்பட்ட சூழ்நிலையில், எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, உலகத்திலேயே மொத்தம் 1 இலட்சத்து 18 ஆயிரம் அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட அரசியல் கட்சிகளில் குறிப்பிட்ட காலத்தில், மிகக் குறுகிய காலத்தில், நாட்டு மக்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய வகையில் ஒரு அருமையான பட்ஜெட்டைக் கொண்டு வந்து செயலாக்கக்கூடிய வகையில் இருக்கக்கூடிய அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று துணிந்து சொல்வேன்.

(முற்பகல் 11.10)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் பேசுகின்றபோது சில கருத்துக்கள் சொன்னார்கள். இந்த நிர்வாகம் எப்படி இருக்கின்றது என்று சொன்னால் காளிங்கராயன் குதிரை போல் இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் வாடிக்கையாக ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னார்களே தவிர நாட்டு நிலைமையைப் பொறுத்தவரையிலே இதுவசையிலும் எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவக்குச் சிறப்பாக தமிழகத்திலே இருக்கிறது என்பதை நாம ஒத்துக்கொண்டு ஆகவேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவிரும்புகின்றேன். தர்மபுரி மாவட்டத்திலே சிவில் சப்ளை துறையிலே இருந்த மிகப்பெரிய குறை கண்டுபிடிக்கப் பட்டது. அங்கே இருக்கின்ற டி. ஆர். ஓ., டி. எஸ். ஓ., எஸ். பி., கலெக்டர் போன்றவர்கள் எல்லாம் மிக அருமையாகப் பணிபுரிவதை என்னாலே பார்க்க முடிந்தது. ஆங்காங்கே உள்ள சில குற்றங்குறைகளைக் கண்டு பிடித்து அவற்றை எல்லாம் நிவர்த்தி செய்கின்ற வகையிலே மிக அருமையான அளவுக்கு கிண்டி ரேஸ் குதிரையாக நிர்வாகத்தைச் செய்து காட்டி வருகிறார்கள்.

தீவிரவாதிகள் என்பவர்களைப் பொறுத்தவரையிலே இந்தியத் துணைக் கண்டத்திலே குறிப்பாகத் தமிழகத்திலே தர்மபுரி மாவட்டத்திலே மிக அதிக அளவிலே இருந்தாலும் கூட அவர்களை அடக்கி ஒடுக்கி அந்தச் சமுதாய விரோதிகளைக் கட்டுப்படுத்திய பெருமை தர்மபுரி மாவட்ட நிர்வாகத்திற்கு உண்டு. அங்கே பாலக்காட்டிலே மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டபோது கூட மிகச்சிறந்த முறையிலே அதனை ஒழுங்குபடுத்தி அமைதி ஏற்படுத்தப்பட்டது. இப்படி நிர்வாகம் என்று பார்க்கின்றபோது மிக அருமையாக நடந்துகொண்டு இருக்கின்றது என்பதை யாரும் மறந்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நாம் கொண்டு வந்திருக்கக்கூடிய தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையிலே ஏரிகளைத் தூர் எடுத்தத. காரணத்தால் இன்றைக்குப் பல பகுதிகளுக்கு தண்ணீர் போய்க் கொண்டிருக்கின்றது. தற்போதைக்குத் தண்ணீர் தட்டுப்பாடு

இல்லாமல் செய்வதோடு மட்டுமல்லாமல் வருங்காலத்திலும் இனிமேல் வறட்சி ஏற்படாத வகையிலே அதைத் தவிர்த்திருக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலை களில் ஒரு அரசாங்கம் எதைச் செய்கிறதோ அதை வவத்துத்தான் அந்த நாட்டு மக்கள் எடை போடுகிறார்கள் என்பது மட்டுமல்ல, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்க்கக்கூடிய காரியங்களைச் செய்ததையும் வைத்துத்தான் அந்த நாட்டு மக்கள் அரசாங்கத்தையும், ஆட்சியையும், கட்சியையும் எடை போடுகிறார்கள்.

We are always judged on the basis of what we have not done என்று சொல்கின்ற இலக்கணத்தின் அடிப்படையிலேதான் இந்த ஆட்சியின் தத்துவம் இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டி இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கான மானியக்கோரிக்கையைக் கொண்டுவந்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டி வரவேற்று அமர்கிறேன்.

*திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த வருவாய்த்துறை மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். வருவாய்த்துறையிலே பழைய சூழ்நிலையிலிருந்து சிலபல மாற்றங்களை வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த நேரத்திலே எல்லாம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அவற்றை நாங்கள் வரவேற்றிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பினாமி நில ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து சட்டப்பேரவையிலே நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆனால் அந்தச் சட்டத்திற்கு மத்திய அரசு அங்கீகாரம்அளிக்காமல் விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நிலம் கொடுக்கும் பணியினைத் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். இப்போது வறுமைக் கோட்டின் கீழே இருக்கக்கூடிய மக்கள் நன்மை பெறவேண்டும் என்றால் அது வருவாய்த்துறையின் மூலமாகத்தான் முடியும். வேறு துறைகள் எல்லாம் இரண்டாம் பட்சமாகத்தான் இருககின்றன. அந்த கிராம மக்கள் வறுமைக் கோட்டிலே இருந்து விடுபடவேண்டும் . என்றால் அவர்களுக்கு நிலம் வழங்கப்பட வேண்டும் என்பது இன்றியமையாதது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே எவ்வளவோ நல்ல சட்டங்கள் எல்லாம் வந்தும் கூட இலட்சக்கணக்கான உழைப்பாளி மக்களுக்கு நிலம் வழங்கப்படாமல் இருப்பதன் காரணத்தால் அவர்கள் மேலும் வறுமைக் கோட்டுக்குக் கீழேதான் சென்றுகொண்டிருக் கிறார்கள். எனவே சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொண்டுவந்த சட்டத்தை மீண்டும் இப்போது கொண்டு வந்து நிறைவேற்றி மீண்டும் மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்து ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு



நன்மை பெறக்கூடிய வகையிலே அவர்களுக்கு நிலம் கொடுக்கக் கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே வடபாதிமங்கலம் தியாகராச முதலியார் வகையறாவுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் கையகப்படுத்தி கரும்புப் பண்ணைக் கார்ப்பரேஷன் என்ற முறையிலே ஏறத்தாழ 4,000 ஏக்கர் நிலங்களை கரும்புப் பண்ணைக் கார்ப்பரேஷன் வைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அங்கே கரும்பு பயிர் செய்யப் படுவது நடைபெறவில்லை. விவசாயம்தான் நடக்கின்றது. அங்கே நடக்கின்ற விவசாயம் நம்முடைய கிராமப்பகுதிகளிலே ஏழை சிறு விவசாயிகள் சாகுபடி செய்யக்கூடிய அளவுக்குக் கூட இல்லை. இந்த ஆண்டு கூட அங்கே போதுமான விவசாயத்திலே அவர்கள் ஈடுபடாமல் மற்ற விவசாயிகளை விட மிகவும் குறைந்த அளவுக்குத்தான் கண்டுமுதல் செய்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அங்குள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்கள் போதிய வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்: எனவே அந்த கரும்புப் பண்ணைக் கழக நிலங்களை அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக. இன்று உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் பல்வேறு நிலங்கள், உபரி என்று அறிவிக்கப்பட்ட நிலங்கள் பொறுத்தவரை உயர்நீதிமன்றத்தில் தடை வாங்கப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் கூட அந்த வழக்குகள் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் என் கிராமத்தில்கூட 1961 ஆம் ஆண்டு உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் மிச்சம் என்று அறிவிக்கப்பட்ட நிலம் குறித்து வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகளுக்கு நிலம் கிடைப்பதற்கு அந்தச் சட்டம் தடை செய்யப்பட்டிருப்பதால் அந்த வழக்குகளை எல்லாம் விரைவாக முடித்து உள்ளூரில் உள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த நிலங்களை வழங்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இயற்கைச் சீற்றங்கள் காரணமாகவும், அரசு கொள்கைகளாலும் ஏழை விவசாயிகள் பெரிய துன்பத்திற்கு ஆளாகிறார்கள். எனவே ஏழை விவசாயிகளுக்கு நில வரி முழுவதும் ரத்து செய்யப்படவேண்டும். அதோடு அவர்களிட மிருந்து கெடுபிடி மூலம் வசூல் செய்வதை, ஜப்தி போன்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி ஏழை விவசாயிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள், கோவில் நிலங்கள், பினாமி நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், அறக்கட்டளை நிலங்கள் இவற்றை விவசாயத் தொழிலாளர் களுக்கு வழங்க வேண்டும்.

குடிமனை வழங்குவதில் ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. என் தொகுதியில் ஏறக்குறைய 2,000 மனுக்கள் கொடுக்கப் பட்டிருந்தும் அவர்களுக்கெல்லாம் குடிமனைகள் வழங்கப்பட வில்லை. புறம்போக்கு நிலங்களில் உள்ளவர்களுக்குத்தான் குடிமனை வழங்குகிறார்கள். ஆனால் தனியார் நிலங்கள், கோவில் நிலங்கள் இவற்றில் இருப்பவர்களுக்கு குடிமனை வழங்க மறுக்கிறார்கள். அப்படி அவர்களுக்கு பட்டா வழங்க மறுக்கப் படுவதால் அவர்கள் வீடு கட்டும் சொஸைட்டிகளிடமிருந்து கொடுக்கப்படுகிற பணத்தை பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே தனியார் நிலங்களில் குடியிருப்பவர் களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் குடிமனைப் பட்டா வழங்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர் கூலிச் சட்டம் தமிழகம் முழுவதும் கொண்டு வந்திருந்தாலும் அந்தச் சட்டத்தை மீண்டும் பரிசீலித்து கூலியை உயர்த்த நடவடிக்கை எடுத்தாலும் அந்தச் சட்டத்தை சிறப்பாக நிறைவேற்றுவதில்லை. சட்டம் இருந்தும், அதிகாரிகள் இருந்தும் கூலியைக் குறைக்க ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். கீழ்த்தஞ்சையைப் பொறுத்தவரையில் கருப்பம்புளம், ஆயகரும்புலம் பகுதிகளில், செங்கல்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகத்திலும் இந்தக் கூலிச் சட்டத்தை அமல்படுத்த அதிகாரிகள் மறுக்கிறார்கள்.

(முற்பகல் 11.20)

அவைகள் விரைவிலே அமுல்படுத்தப்பட வேண்டும். அதேபோல், விவசாயத் தொழிலார்கள் கூலிச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டுமென்று கேட்கின்றபோது, முதலில் தாசில்தார் வருவதில்லை, போலீஸ் அதிகாரிகள்தான் வருகிறார்கள். தாசில்தார்கள் உடனே வந்து, இந்தப் பிரச்சினையில் தலையிட்டுத் தீர்ப்பதில்லை. முதலிலே போலீஸ் அதிகாரிகள் வருவதால், அவர்கள் கூலி கேட்டு கலகம் செய்கிறார்கள் என்று அவர்கள் மீது வழக்கு போட்டு, சிறைப்படுத்தி, சித்திரவதைக்கு ஆளாக்குகிறார்கள். இவைகளை யெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

[திரு. கோவைத்தம்பி] [1982 மார்ச் 18

நடந்து முடிந்த காலகட்டத்தில், நாட்டில் ஏற்பட்ட வெள்ளம். புயல், வறுமை நிலையில் ஏற்பட்ட இயற்கையின் சூழ்நிலையால் ஏற்பட்ட கோளாறுகளில், வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் திருப்தி அளிக்கின்ற சூழ்நிலையில் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டில் ஏற்பட்ட ஒரு சூழ்நிலையில், ஒரு கட்டத்தில், மிகப் பயங்கரமான வெள்ளத்தால், மிக பயங்கரமான புயலால், வறட்சியால், இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்டிருப்பதைப் போக்குவதற்கு தமிழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளும், மத்திய அரசிடம் உதவியை நாடிய தன்மையும் பாராட்டக்கூடியதாகும். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று, நடந்து சென்று பார்த்த தன்மைகள் நாட்டு மக்களுக்கு திருப்தியளிக்கக் கூடிய சூழ்நிலையிலே இருக்கிறது என்பதை நான் முதல் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, கோவை மாவட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில் வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு வந்தார்கள். நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு, அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாக்கப்படுவதற்கான வழிகளிலே, அவர்களை பத்திரப்படுத்துவதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி, திட்டம் தீட்டி, நீலகிரி மாவட்டம் இயற்கைச் சூழ்நிலையோடு மீண்டும் இருக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை நான் இந்தத் துறையைப் பற்றி பேசும்போது பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை நான் முதலில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வருவாய்த் துறை அமைப்பில் பிர்க்காக்களை பிரிக்கக் கூடிய முயற்சியில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஈடுபட்டு, பெரிய பிர்க்காக்களையெல்லாம்சிறிய பிர்க்காக் களாக, வட்டங்களாக புதிதாக உருவாக்கி, புதிய அமைப்புகளை ஏற்படுத்தி, மனிதர்கள் வாழ்கின்ற நிலைகளிலே மிகப் பெரிய நிலப்பரப்பு, அதேபோல் காடுகள் அடங்கிய பகுதிகளையெல்லாம் பெரிய வட்டங்களாக இருந்தால், அதை மாற்றுகின்ற முயற்சியை எடுத்துக்கொண்டதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக, வால்பாறையை தனி வட்டமாக ஆக்கியதற்காகவும், கோவையில் பல்லடம் வட்டத்தை பிரிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதற்காகவும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன் என்பதையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 மார்ச் 18] [திரு. கோவைத்தம்பி]

இன்று, பினாமி ஒழிப்புச் சட்டம் என்ற பெயரால், ஒரு புதிய சட்டத்தை உருவாக்கி, மத்திய அரசிடம் அந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி, வற்புறுத்தி வருகிறோம என்பதையும, அந்த பினாமி ஒழிப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முழு முயற்சியை அவர் எடுத்துக் கொண்டிருப்பதையும் நாம் எலலோரும் நன்கு அறிவோம். அந்த நிலையில் இன்று பாஸ் புத்தகம் என்ற அடிப்படையில், பட்டா வழங்குகின்ற முறையை வைத்திருப்பதற்காக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலச் சொந்தக்காரர்கள் பினாமி நிலங்களை வைத்திருக்கிறார்கள் என்ற அளவில், பினாமி ஒழிப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். ஏழை எளியவர்களுக்கு உச்ச வரம்பில் மிச்சப்படும் நிலத்தை பகிர்ந்து கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும்போது, பட்டா வழங்கப்படும். அந்த பாஸ் புத்தகத்திலேகூட, பினாமியாக் யாரும் வராமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய அபிப்பிராயத்தை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநிலத்தில் பினாமி ஒழிப்பு என்ற முறையில் நாம் ஏற்படுத்த இருக்கின்ற இந்தச் சட்டத்தின் அடிப்படையில், எதிர்காலத்தில நிலமற்றவர் களுக்கு நிலம் வழங்கப்படும்போது, அதற்கு பாஸ் புத்தகம் வழங்கும்போது, வறுமைக் கோட்டிற்கு கீழே வருகின்ற நிலமில்லாத ஏழைத் தொழிலாளர்களுக்கும, விவசாயிகளுக்கும் அந்த நிலத்தைக கொடுக்கின்ற நேரத்திலேகூட, நடுத்தர மக்கள் இந்த பினாமி சட்டத்தால் வரக்கூடிய நிலத்தை எடுத்துக் கொள்ளாத அளவுக்கு, பாதுகாப்பான முயற்சிகளை, அதற்கான புது முயற்சிகளை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த பினாமி ஒழிப்புச் சட்டத்தின் அடிப்படையில் நாம் நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கும்போது வாரிசுரிமைச் சான்றிதழ் ஒன்றை வழங்கிடுவோமானால் கடன் பெறவேண்டு மானாலும், நிவாரணம் பெற வேண்டுமானாலும் தங்களுக்கு ஏற்படுகின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்வதானாலும் ஒரு வாய்ப்பு ஏற்படும் என்ற அடிப்படையில் வாரிசுரிமைச் சான்றிதழ் களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாவட்ட அளவிலே நடைபெறும் கூட்டங்களில், வட்டார வளர்ச்சிக் கூட்டங்களில், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் அந்தக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வரிடம் கோரிக்கை என்ற அடிப்படையில் மாநிலத்தின் தலைநகருக்கு மக்கள் வெள்ளம் வந்து மனுக்களைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. முதல்வரிடம் கோரிக்கை மனு என்றாலும் அல்லது அரசிடம் கோரிக்கை மனு என்றாலும் அந்த

மனுக்களைப் பெறுவதற்கு மாவட்ட அளவிலேயே -எப்படி மாவட்ட அளவிலே விளம்பரத்துறை அதிகாரிகள் இருக்கின்றார்களோ அதைப்போன்று கோரிக்கை மனுக்களை பெறுகின்ற அளவிற்கு மக்கள் மாவட்ட அளவிலே அவைகளைக் கொடுக்கின்ற அளவிலே அந்த வகையில் அந்தக் கோரிக்கை மனுக்கள் கவனிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற தன்மையிலே மாவட்ட அளவிலே அதிகாரிகளை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே பரம்பிகுளம் ஆளியாறு நீர்த் தேக்கத்திலே நீரைப்பெற்று விவசாயம் செய்கிற விவசாயிகள் முறையாக விவசாயம் செய்கிறபோது இயற்கையின் சீற்றத்தால் அல்லது இயற்கையின் சோதனையால் அந்த இடத்திலே அவர்கள் நீரை அதிகமாகப் பயன்படுத்தும்போது அதற்காக பெனல்டி என்ற அடிப்படையில் அபராதம் என்ற அடிப்படையில், 5, 10, 20, 30, 40, மடங்கு விதித்துவிடுகிறார்கள். அந்த அபராதத் தொகையை தயவு செய்து முடிந்த அளவுக்கு ரத்து செய்ய வேண்டுமென்றும், இல்லையென்றால் குறைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதற்காக முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரி மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன அவைகளின் அதிபர்கள் அரசுக்கு மிகவும் இலேசான குறைந்த குத்தகையைக் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அந்த குத்தகை 10 காசு என்றும் 25 காசு என்றும் வருடத்திற்கு ஒரு ரூபாய் என்றும் 2, 3 ரூபாய் என்றும் வெள்ளைக்காரன் காலத்திலே நிர்ணயிக்கப்பட்ட குத்தகைதான் இருக்கிறது. அந்த தேயிலைத் தோட்ட முதலாளிகளை எல்லாம் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி அந்த குறைந்த குத்தகைக்குப் பதில்ாக அவர்களுக்கு பட்டா வழங்கக் கூடிய நிலையை அல்லது, அவர்களுடைய குத்தகையை உயர்த்தக் கூடிய நிலையை அந்த லீஸை உறுதி செய்யக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் அரசுக்கு வருமானமும் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத் துறையைச் சார்ந்த பகுதிகளிலே மலைப் பிரதேசங்களில் ஏழைகளாக நிலமற்றவர்களாக் இருக்கின்றவர்களுக்கு நிலம் வழங்கும்போது வனத்துறையோடு கலந்து ஆலோசித்து நிலப்பட்டா சான்றிதழ் அல்லது பாஸ் புத்தகத்தை அங்கே இருக்கின்ற வனத்துறையின் அனுமதியோடு வழங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். வருவாய்த்துறை அதிகாரிகள் அங்கே செல்கிற வாய்ப்பு இல்லையென்றாலும் வனத் துறை அதிகாரிகள் அதைப் பார்த்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மலைப்பிரதேசத்தில் நிலமற்ற ஏழைகளுக்கு நிலங்களை பிரித்துக்கொடுக்கும்போது வனத்துறை சான்றிதழோடு அவர்கள் உண்மையிலேயே நிலமற்றவர்களா என்பதைப் பார்த்து அந்த அடிப்படையில் பாஸ் புத்தகம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டா வழங்கும் புத்தகத்தை அறிமுகம் செய்யும்போது நில உச்சவரம்பில் மிச்சப்பட்ட நிலங்களை அரசு நிலமற்றவர்களுக்கு வழங்க முதல்முதலாக அதில் வழங்குவதற்கு உரிய சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நகராட்சியானாலும் மாநகராட்சியானாலும் கிராமப்புறங்களானாலும் வளர்ந்து வருகின்ற கட்டடங்களை நாம் அதிகமாகப் பார்க்க முடிகிறது என்பதையும் நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலே பல ஏழை விவசாயிகள் 1ஏக்கர், 2ஏக்கர், 50 சென்ட், 75 சென்ட் என்று வைத்திருப்பது நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் வரும் என்பதால் அவர்கள் அவற்றை அரசுக்கு அர்ப்பணிக்கக் கூடிய சூழ்நிலை இருப்பதால் அரசு அதை தீர அலசி, ஆராய்ந்து பார்த்து அந்த நிலைமையைப் போக்குகின்ற தன்மையில் சிறு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே தொழில் வளம் பெற்ற பகுதிகள் இருக்கின்றன. அதிகமாக நூற்பாலைகள் இருக்கின்றன. மாநகராட்சி எல்லைக்குள்ளேயே வெறுமனே பல நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கைப்பற்ற முயற்சி செய்தால் தொழில்வளம் பெருகும் நிலை பாதிக்கப்படும். ஆகவே மாநகராட்சியானாலும், நகராட்சியானாலும், பேரூராட்சியானாலும் தொழில்வளம் கருதி தொழிற்சாலைகளைப் பெருக்குகிற திட்டத்தின் அடிப்படையில் முதலீடு இட வருகிற தொழில் அதிபர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே 65 சென்ட் 80 சென்ட் என்று வைத்திருப்பதை அரசு ஆலோசித்து மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11·30)

என்னுடைய தொகுதியிலே வருவாய்த்துறையும், பத்திரப் பதிவுத் துறையும் சேர்ந்து ஒரு சென்ட் நிலத்தின் மதிப்பு 10 ஆயிரம், ஒரு ஏக்கர் நிலத்தின் மதிப்பு 10 லட்சம் ரூபாய் என்று வைத்து ஒரு அபரிமிதமான நிலையை உருவாக்கியிருக்கிறது. பேரூர் தொகுதியில் கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஒருஏக்கர் நிலத்தின் மதிப்பு10 லட்சம் ரூபாய் என்று அரசு அறிவித்திருக்கிறது என்பதையும், அது ஏதோ ஒரு தவறுதலான சூழ்நிலையில் அந்த கணிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்து அதை அரசு மறு பரிசீலனை செய்ய முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

வாக்கெடுப்பு—தொடர்ச்சி



திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற வருவாய்த்துறை மானியத்தின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை சொல்ல முன் வருகிறேன்.

இந்த அறிக்கையிலே முதல் பக்கத்திலே கிராம நிர்வாக முறையை மாற்றி அமைக்க 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாள் முதல் பகுதி நேர கிராம அதிகாரி பதவிகளை நீக்கியது சம்பந்தமாக கூறியிருக்கிறார்கள். 1½ ஆண்டு காலமாக பதவி நீக்கப்பட்ட பின்னாலும் அவர்களுக்கு எந்த ஒரு வேலையும் இல்லாமல் ஊதியம் கொடுத்து வருகிற நிலை இருக்கிறது. கிராம நிர்வாகத்திலே எழை, எளிய கிராம மக்கள் சான்றிதழ் பெற வேண்டுமென்று சொன்னாலும் கூட மிகப்பெரிய சிரமத்திற்குள்ளாகிறார்கள். அரசாங்கத்திலே ஒரு சாதாரண சலுகையை பெறவேண்டுமென்றாலும் கூட அந்த கிராம மக்கள் இன்றைக்கு மிகப்பெரிய கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த அவசர சட்டம் கொண்டு வந்த நேரத்திலேயே இவற்றைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறோம். இந்த கிராம அதிகாரி பதவிகளுக்கு என்ன தகுதி இருக்க வேண்டுமென்று சொல்கிறீர்களோ அந்த தகுதியுள்ளவர்கள் அந்த பதவிகளில் இருந்தால் அவர்களை வைத்துக் கொண்டு, மற்றவர் களை, வயதானவர்களுக்கு நஷ்டயீடு, கொடுத்து. அவர்களை பதவி விலக ஒத்துக்கொள்ள செய்திருக்கலாம். கிராமப்பகுதிகளில் எந்த ஒரு காரியமும் நடக்க முடியாத ஒரு சூன்யமான நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என்று நான் கடுமையாக குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

வருவாய்த் துறையை பொறுத்தவரையில் கிராமப்பகுதிகளிலே எல்லா காரியங்களையும் அவர்கள் தான் ஆற்றவேண்டியிருக்கிறது. இன்றைக்கு வறட்சி என்று சொல்லக் கூடிய நேரத்திலே 80-81-ல் கோயம்புத்தூர், நீலகிரி, சென்னை ஆகிய மூன்று மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் எல்லாம் வறட்சி என்று கடந்த ஆண்டு ஒரு நிலையை சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் நெல்லை மாவட்டத்தில் பெரும்பகுதி, தாமிரபரணி பாசனம் பாயக்கூடிய பகுதிகள் தவிர மீதி இடங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கோவில்பட்டி வட்டாரம், விளாத்திக்குளம் வட்டாரம். சங்கரன்கோவில் வட்டாரம், ஒட்டப்பிடாரம் வட்டாரம், நாங்குநேரி வட்டாரம் ஆகிய வட்டாரங்கள் குடிக்க குடிதண்ணீர் கூட இல்லாமல் ஆடு மாடுகளுக்கும் தண்ணீர் கிடைக்காமல் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக கலெக்டர் அவர்கள் எழுதியிருந்தாலும், இந்த வட்டாரங்களை வறட்சிப் பகுதிகள் என்று அறிவிப்பதோடு, நிவாரண நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதேமாதிரி



வாக்கெடுப்பு—தொடர்ச்சி



மேற்கு முகவை மாவட்டம் இதிலே சாத்தூர் தாலுக்கா, ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகா, அருப்புக்கோட்டை தாலுக்கா, இராஜாபாளையம் தாலுக்காவில் ஒரு பகுதி மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. திருச்சி மாவட்டத்திலே மணப்பாறை தாலுக்கா முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குளித்தலை தாலுக்காவில் ஒரு பகுதி தோகைமலை, பஞ்சப்பட்டி மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குடிக்க தண்ணீர் இல்லாதது மட்டுமல்ல, ஆடு மாடுகளுக்கு தீவனம் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. பருவ மழை இல்லாத காரணத்தால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக் கிறது. அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் பகுதிகளை எல்லாம் வறட்சிப் பகுதி என்று அறிவித்து நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

உழவுத் தொழிலாளர்களுக்கு நியாயக்கூலி என்ற சட்டத்தை போட்டிருக்கிறோம். அந்தச் சட்டம் எப்படி அமலாகிறது என்பதை அமைச்சர் அவர்கள் பல இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு சங்கம் வலுவாக இருக்கிறதால் ஓரளவு அங்கே நியாயக் கூலி கிடைக்கிறது. மீதி எல்லா மாவட்டங்களிலும் இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று தான் கூலி கிடைக்கிறது. அந்தக் கூலியை ஒரு ரூபாய் உயர்த்த வேண்டுமென்று கேட்டாலும் கூட அவர்கள் வேலையில்லாமல் போவது மட்டுமல்ல, குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டு ஊரை விட்டே வெளியேற்றக்கூடிய நிலை இருக்கிறது. அமைச்சர் அவர் களிடத்தில் இது சம்பந்தமாகப் பல மனுக்கள் அனுப்பப்பட்டு, அந்த நகல்கள் எங்களுக்கு வந்திருக்கின்றன. ஆகவே, இதை அமுல் நடத்துவதற்கு, உழவுத் தொழிலாளர்கள் நியாயக் கூலிச் சட்டங்களை அமுல் நடத்துவதற்கு, வேறு ஒரு தனி ஏற்பாடு வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக, வருவாய்த் துறையை எடுத்துக் கொண்டால், முதியோர் உதவித் தொகை வழங்குவது அந்த இலாகா தான். அதே மாதிரி இன்றைக்கு விவசாயத் தொழிலாளர் களுக்குப் பென்ஷன் கொடுக்கக் கூடிய ஏற்பாட்டை அவர்கள் தான் செய்கிறார்கள். அதே மாதிரியாக, விதவைகளுக்குப் பென்ஷனும் அவர்கள் மூலமாகத்தான் வழங்கப்படுகிறது. ஆனால் அதற்கென்று தனி அதிகாரிகள் கிடையாது, தனி தாசில்தார்கள் கிடையாது, தனி ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கிடையாது. ஆகவே, போட்ட பெட்டிஷன்கள் அப்படியே உறங்கிக்கொண்டிருக்கின்றனவே தவிர, அந்தப் பணியைச் சீராக அமுல் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இல்லை. ஆகவே, இது சம்பந்தமாக, முதியோர் உதவித் தொகை, விவசாயத் தொழிலாளர்களுக்குப் பென்ஷன், அதே மாதிரியாக விதவைகளுக்குப் பென்ஷன், இந்தக் காரியங்களைச் செய்வதற்கு,

வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

[திரு. சோ. அழகர்சாமி] [1982 மார்ச் 18

தனியாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை, இதற்கென்று விசேஷமாக எல்லா வட்டங்களிலும் போட வேண்டும்; துணை தாசில்தார்களையும் தாசில்தார்களையும் இதற்குப் பொறுப்பாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக, இன்றைக்கு நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தை எல்லா இடங்களிலும் அமுல் நடத்தி, அவை பூராவையும் ரிசர்வே செய்து, யார், யார் சாகுபடி செய்கிறார்களோ, அவர்களுக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கக் கூடிய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அப்படி நடவடிக்கை எடுக்கப்படும் காலத்தில் 19 நோட்டீஸ் என்ற ஒன்று கொடுக்கிறார்கள். அந்த நோட்டீஸிலே, யார் நிலத்தில் சாகுபடி செய்கிறார்களோ, அவர்கள் பெயர் இருக்காது. சர்வே பண்ணுகிறவர் அந்த இடத்திற்குப் போய், அங்கே இருக்கிற யாரோ ஒருவரைப் பார்த்து, யார் சாகுபடியாளர்கள் என்று கேட்கிறார். அப்படிக் கேட்கும்போது, அந்த யாரோ ஒருவர், தனக்குத் தெரியாத ஒரு பெயரைச் சொல்கிறார். அந்தப்பெயரை இவர்கள் பதிந்து கொள்கிறார்கள். அந்தப் பெயருக்கும் அந்த நிலத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. ஆனால், அந்த நோட்டீஸ் போகும்போது அந்தப் பெயரில்தான் போகிறது. ஆகவே, அதைச் சீராக்க வேண்டுமென்றால், இதற்குத் தனியாக அதிகாரி நியமிக்க வேண்டும். 19 நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்னாலே, இந்தக் குத்தகை நிலம் ஆரம்பத்திலே யாரிடம் இருந்தது, இப்பொழுது அதை யார் உழுகிறார்கள், யார் அனுபவத்தில் இருக்கிறது, இடைக் காலத்திலே அந்த நிலம் இவருக்கு எப்படி வந்தது என்ற சரித்திரத்தை எழுத வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி எழுதுவதும் கிடையாது, பதிவதும் கிடையாது. ஆகவே, அந்த நிலத்தைச் சர்வே செய்யக் கூடிய காலத்தில், அந்த நிலம் யாரிடத்தில் இருக்கிறது என்பதை உண்மையாகத் தெரிந்துகொள்வதற்கு. ஒரு தனி அதிகாரியைப்போட்டு அந்த அதிகாரியினுடைய அத்தாட்சியோடு பதியப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக, இன்றைக்கு உச்ச வரம்புச் சட்டம் என்றும், இனாம் ஒழிப்புச் சட்டம் என்றும் பல சட்டங்களை அமுல் நடத்தக்கூடிய காலத்தில், அவற்றை எப்படி அமுல்படுத்துகிறோம் என்பதைப் பற்றியெல்லாம் நாம் ஆராயவேண்டும். உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொல்கிறேன், தர்மபுரி மாவட்டத்திலே, தெங்கனிக்கோட்டை தாலுகாவில் நெல்லுமரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே நேரடியாகச் சென்று பார்த்தேன். அந்தக் கிராமத்திலே சாரதம்மாள், அஞ்சம்மாள் என்று சொல்லக்கூடிய இரண்டு சகோதரிகளுக்குச் சொந்தமான நிலம் இனாம்தாருடைய நிலம் இருக்கிறது. இனாம் ஒழிப்புச் சட்டத்தின் அடிப்படையிலே, அந்த இனாம் ஒழிப்பின்போது யார் சாகுபடி செய்கிறார்களோ, அவர்களுக்கு அந்த நிலத்தை சொந்தமாக்கி இருக்க வேண்டும். அந்த இனாம் ஒழிப்பு



வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

1982 மார்ச் 18] [திரு. சோ. அழகர்சாமி]

சட்டத்தின் அடிப்படையிலே அந்த நிலத்தைச் சாகுபடி செய்யக் கூடியவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்று சொல்லும் போது, பரம்பரையாக பல ஆண்டு காலமாக அங்கே குடியிருந்து வீடு கட்டிச் சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு அதைப் பட்டா செய்து கொடுப்பதற்குப் பதிலாக இனாம் தாரருக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. இனாம்தாரருக்குப் பட்டா கொடுத்ததற்குப் பின்னால், உச்ச வரம்பு சட்டம் வருகிறது. உச்ச வரம்புச் சட்டத்திலே, மிச்ச நிலமாக, ஏறக்குறைய 800 ஏக்கரோ, 600 ஏக்கரோ வருகிறது. அப்பொழுது மிச்ச நிலம் என்று அறிவித்த உடனே, ரெவினியூ அதிகாரிகள் அல்லது, உச்ச வரம்புச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த நிலத்தை தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த உச்ச வரம்பு நிலத்திலே தொடர்ந்து அந்தப் பழைய இனாம்தார், மற்றும் இப்பொழுது உள்ள புதிய நிலச் சுவான்தார், அந்த நிலத்திலே சாகுபடி செய்யக்கூடியவர்களை துன்பத்திற்கு உள்ளாக்கி அந்த நிலம் எங்களுக்குத்தான் சொந்தம். எங்களிடம் தான் பட்டா இருக்கிறது என்று பழைய பட்டாவைக் காட்டி, கோர்டிலே இன்ஜக்ஷன் வாங்கி, பரம்பரையாக, ஏறக்குறைய 40, 50 ஆண்டுகளாகச் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளை வெளியேற்ற அவர்கள் சாகுபடி செய்த ராகி போன்ற பயிர்களை லாரிகளில் ஏற்றும்போது, போலீஸ் துணையுடன்தடுத்து அவர்களை எல்லாம் நடுத்தெருவிலே நிறுத்தக்கூடிய மோசமான நிலை, நம்முடைய ரெவினியூ அதிகாரிகளின் நடவடிக்கை காரணமாக, உச்ச வரம்புச் சட்டத்தைச் சரியாக அமுல் நடத்தாததன் காரணமாக, ஏற்பட்டிருக்கிறது. இனாம் ஒழிப்புச்சட்டம் அமுலான உடனே, அந்த மக்களுக்கு அந்த விவரங்களை எடுத்துச் சொல்லி, அந்தச் சட்டத்தின் உரிமைகளைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டும் ரெவின்யூ அதிகாரிகள். நம்முடைய நண்பர் டாக்டர் அவர்கள் இங்கே பேசிய மாதிரி, சாதாரண விவசாயிகளுக்கு அவற்றைப் பற்றிச் சொன்னால், தீவிரவாதிகள் என்று சொல்லியும், சமூக விரோதிகள் என்று சொல்லியும் அவர்கள் மீது வழக்குகளைப் போட்டு தடுப்பதோடு மட்டும் அல்லாமல், பரமபரையாகச் சாகுபடி செய்து வந்த 40-க்கு அதிகமான விவசாயிகளை இன்றைக்கு நிலத்தை விட்டு வெளியேற்ற முயற்சி நடப்பதோடு, இன்றைக்கு அவர்கள் மீது பலவிதமான வழக்குகளைப் போட்டுத் துன்பத்திற்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், சட்டங்களை முறையாக அமுல் நடத்த இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

(முற்பகல் 11.40)

இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தின் கீழ் 4,37,117 குத்தகைதாரர்கள் பதிவு செய்யப் பட்டுள்ளனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி 1969ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. மொத்தமாக 20 இலட்சம் பேர்கள் குத்தகை சாகுபடியாளர்கள் இருக்கிறார்கள் என்று ஒரு குழுவின் அறிக்கையில் பார்த்ததாக

எனக்கு ஞாபகம். அப்படி 20 இலட்சம் பேர்கள் இருக்கும் பொழுது 4 இலட்சம் பேர்கள்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் மீதி செய்யப்படவில்லை. பதிவு செய்வதற்காக மனுப்போட்டாலும் பதிவு செய்வதற்கு அதிகாரிகள் மறுக்கிறார்கள். நிலச்சுவான்தாரர்களுக்குச் சாதகமாகவே அவர்கள் எல்லாவிதமான முயற்சிகளையும் செய்கிறார்கள்; எல்லாவிதமான தஸ்தாவேஜுகளையும் அவர்களுக்குச் சாதகமாகவே கொடுக்கிறார்கள்; அவர்களுக்குச் சாதகமாகவே சாட்சிகளையும் சொல்கிறார்கள். நாட்டிலே இப்படி ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டும்.

ஆரம்ப காலத்திலேயே சொன்னேன், ஆங்காங்குள்ள, கிராமங்களிலுள்ள அத்தனை கட்சிகளையும் சேர்ந்தவர்களைக் கொண்ட, சர்வ கட்சியினரையும் கொண்ட குழுவை ஏற்படுத்தி அதன் மூலம் பரிசீலனை செய்து, யார் சாகுபடி செய்கிறார்கள், யாருடைய நிலம் என்று உண்மையை எழுத வேண்டும். பிறகு யாருக்கு உரிமையோ அந்த உரிமையைக் கொடுக்கவேண்டும். சட்டப்படி உரிமையில்லை என்றால் போகட்டும். ஆனால் தகுதியுள்ளவர்கள் நாம் போட்ட சட்டத்தின்படி பெறக்கூடிய உரிமையைக் கூட பெற முடியாமல் அதிகாரிகளே தடுக்கிறார்கள் என்றால் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே பெண்ணாகரம் வட்டத்திலே கரியம்பட்டி என்ற கிராமத்திலே சங்கர ரெட்டியார் என்பவருக்கு 300 ஏக்கர் நிலம் இருக்கிறது. இதையெல்லாம் நான் நேரடியாகப் போய்ப் பார்த்துவிட்டு வந்து சொல்லுகிறேன். இரண்டு நாட்கள் சுற்றிப் பார்த்தபொழுது கிடைத்த விவரங்கள் இவை. பெருமாள் என்பவர் அங்கே சாகுபடி செய்து வருகிறார். அவரைப் பலவந்தமாக வெளியேற்ற வேண்டுமென்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் போலீஸ் அதிகாரிகள் செய்கிறார்கள்: ரெவின்யூ அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

பெண்ணாகரம் தாலுக்காவிலே வல்லாவரம் என்ற கிராமத்திலே கமலம்மாள் என்னும் நில உடைமையாளர் இருக்கிறார். அவருக்கு 120 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே 16 அரிசன விவசாயிகள் பல ஆண்டுக் காலமாக சாகுபடி செய்து வருகிறார்கள். ஆனால் ரெவின்யூ அதிகாரிகள் அவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பைக் கொடுக்க மறுக்கிறார்கள். நான்தான் சாகுபடி செய்கிறேன், எனக்குப் பதிவு செய்து கொடுங்கள் என்று சொன்னால் பதிவு செய்ய மறுக்கிறார்கள். இம்மாதிரி நிலையினால் ஏழை எளிய அரிசன மக்கள் அந்த ஊரை விட்டே குடிபெயர்ந்து போகக்கூடிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.







டெங்கனிக்கோட்டையிலே ஒரு பஸ் முதலாளி இருக்கிறார். நஞ்சுண்டப்பா என்பது அவருடைய பெயர். அவருடைய நிலத்தைப் பச்சையப்ப கவுண்டர் என்பவர் பல ஆண்டுக் காலமாகச் சாகுபடி செய்கிறார். அவ்வாறு சாகுபடி செய்பவருக்கு எதிராக டெங்கனிக்கோட்டை தாசில்தார் செயல்பட்டு பஸ் முதலாளியாகிய அந்த நிலச்சுவான்தாரருக்கு பதிந்து இருக்கிறார். இதுபற்றி அப்பீல் செய்யப்பட்டவுடன் ஓசூர் சப்-கலெக்டர் நியாயமாக சாகுபடி செய்தது அந்த விவசாயிதான் என்று அப்பீலிலே சொல்லியிருக்கிறார். ஆனால் மறுபடியும் விசாரணைக்குக் கொண்டு வந்து ஆர்.டி.ஓ.விடம் வந்து நிலச்சுவான்தாரருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கும் மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி பல யிடங்களில் இன்றையதினம் நிலைமைகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன.

பல நேரங்களில் குடியிருக்கும் வீட்டைக் கூட காலி செய்யச் சொல்லுகிறார்கள். அவர்கள் சாகுபடி செய்கிறார்கள் என்பதால் வீட்டையும் காலி செய்யச் சொல்லி வெளியேற்றுகின்ற நடவடிக்கைகள் நடந்து, ஆண், பெண், அத்தனைபேர்களையும் போலீஸ் ஸ்டேஷனில் மூன்று நாட்கள் வைத்திருந்தார்கள். சென்ற மாதம் 18, 19, 20 ஆகிய மூன்று நாட்களில் பெண்ணாகரம் தாலுக்காவிலே கொச்சாரப் நடந்திருக்கிறது. பட்டி என்ற கிராமத்தில் ஒரு ஏழை விவசாயி 12 வருஷ காலமாக சாகுபடி செய்து வருகிறார். அங்கே வீட்டில் குடியிருந்து வருகிறார். அவரை போலீஸ் அதிகாரிகள் ரெவின்யூ அதிகாரிகளின் துணையோடு போலீஸ் ஸ்டேஷனில் மூன்று நாட்கள் வைத்திருந்து, பலவந்தமாக, கட்டாயமாக நிலத்தை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள்.

உளுந்தூர்பேட்டையிலே ஒரு கிராமத்தைப்பற்றி அமைச்சரிடத்திலே பெட்டிஷன் கொடுத்திருக்கிறேன். அந்தக் கிராமத்தில் மீனாட்சி அம்மாள் என்ற ஒரு இனாம்தாரர் இருக்கிறார். 115 ஏக்கர் உச்சவரம்பிலிருந்து மிச்சமாக வந்திருக்கிறது. அந்த நிலத்திலே பலர் சாகுபடி செய்கிறார்கள். உச்சவரம்புச் சட்டம் வந்த பிறகு பல பேருக்குக் கிரயத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாகப் பலமுறை அரசாங்கத்திற்கு பெட்டிஷன் கொடுத்தும், அமைச்சரிடத்தில் நேராகச் சொல்லியும் நடவடிக்கைகள் இல்லை. உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் 71 ஏக்கர்கள் நிலத்தை அரசு எடுத்திருந்தும் அந்த நிலத்திலே சாகுபடி செய்யக்கூடியவர்களுக்குப் பட்டா கொடுக்காமல், பழையபடி நிலச்சுவான்தார் யார் யாருக்கு என்று சொல்கிறாரோ அவர்களுக்கு ரெவின்யூ அதிகாரிகள் பட்டா கொடுக்கிறார்கள். இந்த முறைகேடுகளைக் குறித்து அமைச்சரவர்கள் சீரான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேலம் மாவட்டத்திலே மேட்டூர் வட்டத்திலே காவேரி என்பவரின் மகன் கோபால் என்பவர் இருக்கிறார். அவர் வெங்கடேசப் பெருமாள் கோயில் நிலத்திலே சாகுபடி செய்கிறார். 30 வருடங்களாக அவர் சாகுபடி செய்கிறார் என்று ரிக்கார்டுகள், தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. பெருமாள் கவுண்டர் என்பவர் தர்மகர்த்தாவாக வந்திருக்கிறார். அவர் அந்த நிலத்திலிருந்து இவரை வெளியேற்றுவதற்காகத் தன்னுடைய சகலவிதமான செல்வாக்கையும் பயன்படுத்தி வெளியேற்றுவதற்கு முயற்சி செய்கிறார்; வெளியேற்றியும் விட்டார் என்று தெரிகிறது. இப்படிப் பல கொடுமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

நிலவரி பாக்கிக்காக ஜப்தி நடக்கிறது. நில வரி பாக்கி என்று சொல்லக்கூடிய இடத்தில், இன்றைக்கு நாம் தண்டத் தீர்வை என்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் போடுகிறோம். பி.ஏ.பி. யாக இருந்தாலும் சரி, அமராவதியாக இருந்தாலும் சரி, அல்லது பவானியாக இருந்தாலும் சரி, பாசன வசதியுள்ள இடங்களிலே கால்வாய்க்குப் பக்கத்தில் தண்ணீர் கசியும். அங்கே நெல் தவிர வேறு எதையும் பயிர் செய்ய முடியாது. நெல் பயிர் செய்தால் நெல் பயிர் செய்வதற்காகத் தண்டத் தீர்வை.

அதே மாதிரி இன்னும் பல இடங்களில் கிணறுகளில் இருந்து பாசனம் நடக்கின்றது. ஆனால் அந்த வாய்க்கால்களில் இருந்து வருகின்ற தண்ணீர் அந்த நிலங்களில் வழிந்து ஓடுவதால், கிணற்றுப் பாசனம் செய்கின்ற அந்த நிலத்தின் சொந்தக்காரர்களை, அவர்கள் தண்ணீரை சேதப்படுத்திவிட்டதாக அவர்கள் மீது தண்டத் தீர்வை போடும் நிலைமை இருக்கின்றது. எனவே இந்த தண்டத் தீர்வை போடும் பழக்கத்தை அறவே நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிலவரி பாக்கிக்காக ஜப்திக்குச் செல்லுகிறார்கள். அப்படி போகின்ற காலத்திலே அவர்கள், தாங்கள் 4, 5 ஆண்டுகளாக விவசாயிகள் போராட்டங்கள் என்று நடத்தியதன் காரணமாக, எங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் வரிகொடா இயக்கம் நடத்தியதன் காரணமாக, மின்பாக்கிக் கட்டணத்திற்காக போராட்டம் நடத்தியதன் காரணமாகவும் இந்த நில வரியைக் கட்ட முடியாமல் போய்விட்டது. ஆனால் நாங்கள் இப்போது நிலவரியைக் கட்டத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அந்த நில வரி 2 ஆயிரம், 3 ஆயிரம், 4 ஆயிரம் என்று மொத்தமாக இருக்கின்றது. அதை எங்களாலே மொத்தமாகக் கட்ட முடியவில்லை. எனவே இப்போது மின்சார பாக்கியைக் கட்டுவதற்காக அளிக்கப்பட்டிருக்கின்ற சலுகையைப் போல 1 பிளஸ் 1 என்று கட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லியும் கூட, அதையும் மீறி இன்றைக்குப் பல



இடங்களில் பம்ப் செட்டுகளை ஜப்தி செய்திருக்கிறார்கள். அப்போது விவசாயிகள் நீங்கள் பம்ப் செட்டுகளை எடுத்துச் செல்லாதீர்கள், தயவு செய்து வண்டியை எடுத்துச் செல்லுங்கள் என்று சொல்லியும்கூட அங்கே வந்த அதிகாரிகள், பம்ப் செட்டுகளை ஜப்தி செய்தால்தான் விவசாயிகள் சீக்கிரமாகக் கட்டுவதற்கு முயற்சி செய்வார்கள் என்று சொல்லி பம்ப் செட்டுகளை ஜப்தி செய்து கொண்டு போயிருக்கிறார்கள். தாராபுரம் தாலுகா புங்கத்துறை கிராமம் எம். எஸ். சாமிநாதனுடைய 7.5 எச்.பி. பம்ப் செட்டு, காங்கேயம் அகஸ்தியலிங்கம் பாளையம் பெரியசாமி கவுண்டர் பம்ப் செட்டு 5 எச்.பி. காடையூர் கிராமம் பரங்கிதோட்டம் என்ற கிராமத்திலே 5 எச்.பி. பம்ப் செட்டு போன்றனவகளை வருவாய்த் துறையிலே இருந்து வந்த அதிகாரிகள் ஜப்தி செய்து கொண்டு போயிருக்கிறார்கள்.

இதிலே வேடிக்கை என்னவென்றால் 5 ஆயிரம் ரூபாய் பாக்கிக்கு 500 ரூபாய் தருகிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு அதிகாரிகள் 5 ஆயிரம் மொத்தமாகத் தரவேண்டும் என்று சொல்லி இல்லை என்றால் பம்ப் செட்டுகளைக் கழட்டுவோம் என்று சொன்னார்கள். அவர்கள் மொத்தமாக கட்ட முடியவில்லை என்று மறுத்தவுடன் அப்போது அங்கே வந்த ஒரு போலீஸ் அதிகாரி தலையிட்டு அந்த ரெவின்யு அதிகாரிகளை வற்புறுத்தியதன் பேரில் 500 ரூபாயை வாங்கிக் கொண்டார்கள். இங்கே போலீஸ் அதிகாரிகள் நல்லவர்களாக இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கொடுமையான காரியங்களிலே இந்த ரெவின்யு அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த குருசாமி கவுண்டர் என்பவரிடம் பிறகு போலீஸ் அதிகாரியின் தலையீட்டின் பேரில் 500 ரூபாயை வாங்கிச் சென்றிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே தண்டத் தீர்வை செய்வது கூடாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு மாடு, 2 மாடு இருந்தால் அதை ஜப்தி செய்யக்கூடாது என்று வெள்ளைக்காரன் போட்ட சட்டத்தை மீறுகிற வகையில் சட்டவிரோதமாக நடக்கின்றார்கள். ஒரு ஜோடி மாடு உள்ளவர்கள் கலப்பை வைத்திருப்பவர்களிடம் ஜப்தி பண்ணக் கூடாது அதேபோன்று பம்ப் செட்டு ஜப்தி பண்ணக்கூடாது என்று இருக்கின்ற அந்தப் பழைய ரூலுக்கு விரோதமாக இன்றைக்கு அரசாங்கம் செல்லுகிறது என்று சொன்னால் இது விவசாயிகளைக் கொடுமைப்படுத்துவதாகும் என்பதைத் தெரிவித்து அந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நில உச்சவரம்பில் இருந்து எடுத்த நிலத்தை நாம் ஏழை விவசாயிகளுக்கு, அரிசனங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் மத்தியிலே புயல் வெள்ளம் காரணமாக ஓராண்டு, ரெண்டாண்டுகள் கட்டி மற்ற தவணைகளை கட்டாமல்

இருக்கிறார்கள். மொத்த தவணைகளையும் கட்டாதவர்களிடமிருந்து அந்தத் தவணையைக் கட்டவில்லை, ஆகவே நீங்கள் அந்த நிலத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று சொல்லும் முறை இருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து நிறைய மனுக்கள் வந்திருக்கின்றன. அவர்கள் ஓராண்டு இரண்டாண்டு கட்டவில்லை என்றாலும் கூட, பின்னாலே அவர்களிடம் இருந்த 2 ஆண்டுகளிலே வசூல் செய்யும் வகையில் அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றக்கூடாது என்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து ஐயம்பாளையம் பண்ணை. திருச்சி மாவட்டம் முசிறி தாலுகாவில் உச்சவரம்பில் இருந்து மிச்சம் எடுத்ததற்குப் பிறகு அதற்குக் காம்பன்சேஷன் அதிகமாக நிர்ணயித்து ஓப்பன் மார்க்கட்டிலே இருப்பதைவிட அதிகமாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது நியாயம் அல்ல. காம்பன்சேஷனைக் குறைக்க வேண்டும். ஏற்கனவே நாம் சட்டத்திலே போட்டிருக்கிறோம். அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நட்டயீட்டைக் குறைத்து இலகுவான விலையை நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மிராஸ்தார்கள் குத்தகை கேட்கிறார்கள். உச்சவரம்பில் மிச்சநிலம் வந்ததற்குப் பின்னாலே, அந்தச் சட்டம் நிறைவேறியதற்குப் பின்னாலே, அந்த நிலங்களுக்கு அரசாங்கம் தான் பொறுப்பு அந்த நிலத்திற்கு அரசு சொந்தக்காரர்களாக ஆகிவிடுகிறது. அதற்குப் பிறகு அங்கே நிலச்சுவான்தாரர்கள் தங்களுடைய அதிகாரத்தைக் காட்டி குத்தகை வசூல் செய்யும் நிலை இருக்கின்றது. எட்டையபுரம் ஜமீனில் பல்லாயிரக் கணக்கான நிலங்கள் இருக்கின்றன. அவைகள் கோர்ட்டிலே நடவடிக்கையிலே இருக்கின்றன. அந்த நிலத்தைப் பிரித்துக் கொடுக்க முடியாத நிலையிலே அந்தக் கோர்ட்டிலே தாவாவில் இருக்கிறது. அந்த கோர்ட்டு நடவடிக்கை சீக்கிரத்திலே முடிகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக பாம்பு கடித்து இறக்கும் விவசாயிக்கு உதவிப் பணம் கொடுப்பதில் ரொம்பத் தாமதம் ஆகிறது. அது தாசில்தாருக்குப் போய், ஆர்.டி.ஓ.விற்குப் போய் தாமதம் ஆகாமல், உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது பற்றி விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முகவை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதோடுமட்டுமல்லாமல், இராமநாதபுர மாவட்டத்திற்குள்ளேயே தலைநகரை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

மாவட்ட அதிகாரிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதம் எழுதினால், பதிலே வருவது கிடையாது. பல சட்டமன்ற உறுப்பினர்கள் இதைப் பெரிய குறையாகச் சொல்லிக்



கொண்டிருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் மக்களுடைய கோரிக்கையை அல்லது அதாவது மக்களுடைய பிரதிநிதியாக இருந்து ஏதாவது எழுதினோம் என்று சொன்னால் உடனடியாக அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதில் எழுதுவதில்லை என்று சொன்னால் அப்புறம், பொதுமக்கள் எழுதி, எப்படிப் பதில் போடப் போகிறார்கள்? ஏதாவது சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதினால் ஒன்று உண்டு அல்லது இல்லை, முடியும் அல்லது முடியாது என்று சொல்லக்கூடிய பதிலையாவது உடனடியாக அந்த அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டுமென்ற உத்திரவினை அனுப்பி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, மாவட்ட அதிகாரிகள் டூர் புரோகிராம் போட்டால் பல எம். எல். ஏக்களுக்கு வருவது கிடையாது. ஆனால் எனக்கெல்லாம் வருகிறது. ஆனால் நம்முடைய திருச்சி எம்.எல்.ஏ. மாண்புமிகு கருப்பையா அவர்களுக்கு அந்த டூர் புரோகிராம் வருவதில்லை என்று சொன்னார்கள். இப்படிப் பல நண்பர்களிடம் இருந்து புகார்கள் வருகின்றன என்று கருதுகிறேன். ஆகவே இதையெல்லாம் உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, சாகுபடியாளர்களுக்குப்பல ஆண்டுகளாக, மாண்புமிகு ஆளும்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்கூடச் சொன்னார்கள், குத்தகைக்குச் சாகுபடி செய்கிறவர்களுக்குக் கட்டுப்படியாக வில்லை என்று. விதவைகள் நிலத்தை மற்றவர்களிடமிருந்து மீட்டுக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். உண்மையிலே சொந்த சாகுபடி பண்ணுகிறவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை. குத்தகைக்குக் கொடுத்துவிட்டு, அப்புறம் சொந்தமாக தன்னுடைய குடும்பத்திற்கு வரவேண்டிய வருமானம் வருவதில்லை. கேரளா போன்று ஒருங்கிணைந்த ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். சிறு நிலச்சுவான்தாரர்களாக இருந்தால், கூடுமானவரையில் அதிகமாக காம்பன்சேஷன் கொடுங்கள். அப்படித்தான் கேரளாவிலே கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி பெரிய நிலச் சுவான்தாரர்களாக இருந்தால் காம்பன்சேஷனைக் குறைத்துவிடுங்கள், ஸ்லாப் சிஸ்டத்திலே. உழுகிறவனுக்கே நிலம் சொந்தமாகவேண்டுமே தவிர, அது கோவில் நிலமாக இருந்தாலும் சரி, நிலச்சுவான்தாரர்கள் நிலமாக இருந்தாலும் சரி, குத்தகை என்று சொல்லி வாங்கினால், குத்தகையும் கொடுத்து, சொந்தமாக விவசாயமும் செய்து, அப்புறம் விவசாயிக்குக் கட்டுப்படி ஆகவில்லை என்று சொல்லும் போது இவனுக்குக் குடும்பத்தை நடத்த முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, உழவு முறையிலே, இன்றைக்கு அரசாங்கம் சாகுபடி பண்ணக்கூடியவர்கள், ஆக இந்த இரண்டு பேர்தான் இருக்கவேண்டுமே தவிர, மத்தியிலே, ஒரு குத்தகை வாரம் என்று சொல்லக்கூடிய முறைகளை அறவே நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கரும்புப் பண்ணை சம்பந்தமாக, தஞ்சாவூரிலே இருக்கிறது. அதை ஒரு முன் மாதிரி பண்ணையாக நடத்த வேண்டும். அதைக் கலைக்க வேண்டுமென்ற யோசனை வேண்டாம் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்று கேட்டால் அந்தக் கரும்புப் பண்ணையைக் கலைக்க வேண்டாம், கரும்புப் பண்ணை என்று சொல்லக்கூடியது அது நில உச்சவரம்பிலேயிருந்த காலத்திலே இருந்து நம்முடைய அரசாங்கப் பண்ணை வைத்து இருக்கிறது. அந்த பண்ணையை அரசாங்கம் சிறந்த முறையில், ஏனென்று சொன்னால், கரும்பு விவசாயம் செய்தால் இரட்டை வரப் போவது இல்லை. கரும்பு விளைந்து நல்லமுறையிலே ஆலக்குக் கொடுக்கப்போகிறோம்.

அதுமட்டுமல்ல. அது நல்ல பாசன வசதிகள் இருக்கக்கூடிய இடம் எனவே, அந்தப் பண்ணையைக் கலைத்துவிடாமல் ஒருசிறந்த பண்ணையாக ஒரு முன்மாதிரி பண்ணையாக நடத்தி, அங்குள்ள விவசாயிகளுக்கும், வேலை செய்பவர்களுக்கும், நல்ல முறையில் அரசாங்கச் சட்டத்தின்படி ஊதியங்களும், சலுகைகளும் கொடுக்க வேண்டிய முறையிலே ஒரு மாதிரிப் பண்ணையாக நடத்த வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைய தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு வருவாய்த துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த் மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு தமிழகத்தில் வறட்சி நிலவித் நேரத்தில் அதை, சீராகவும், செம்மையாகவும் இந்த வறட்சியைப் போக்குவதற்கும், இந்த அரசு பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி இருக்கின்றது. அதற்காக என்னுடைய பாராட்டுதல் களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாலுகா மட்டத்திலே, மாவட்ட அளவிலே சீராகவும் செம்மையாகவும் நடைபெற, சர்வகட்சி குழுவை நியமித்து அதன் வாயிலாக அந்தப் பணத்தை வறட்சிப் பகுதிகளுக்குப் ஒதுக்கி இந்த அரசு நல்லமுறையிலே செய்து இருக்கின்றது. அதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பெல்லாம் வறட்சி நிலவுகின்ற நேரத்தில், பணம் மத்திய அரசிடம் இருந்து வாங்கப்பட்டாலும், அந்தப் பணம் ஒழுங்காகச் செலவு செய்யப்படவில்லை. அது மட்டுமல்லாமல், அந்தப் பணத்திற்குச் சரியான கணக்குகளும் காட்டவில்லை. தமிழகம் வறட்சியை மீண்டும் மீண்டும் சந்திக்கின்ற அபாய கட்டத்தில் இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்குவதற்கு நல்ல நடவடிக்கைகளை எடுத்திருக்கிற இந்த



அரசைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில், இந்த ஆண்டும் ஓரளவிற்கு மழை குறைவாக இருக்கின்றது, அதையும் கருத்திலே கொண்டு, இந்த நிவாரணப் பணியை மீண்டும் செயல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று மாவட்ட நிர்வாகம் சரியாகச் செயல்பட வேண்டுமென்றால், மாவட்டங்கள் சிறிய அளவில் இருக்க வேண்டும். இன்றையதினம் தமிழகத்தில் இருக்கின்ற பெரிய மாவட்டங்களாக உள்ள மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதேபோன்று தென் ஆர்க்காடு மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மதுராந்தகம் தாலுகாவும் பெரிய தாலுகாவாக இருக்கிறது. அங்கே நிர்வாகம் நல்லமுறையில் நடைபெற வேண்டுமென்றால் அதையும் இரண்டாகப் பிரிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் அதைப்பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து, அந்தப் பணியைத் துரிதமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல நீலகிரி மாவட்டம் ஒரு மலைப்பிரதேசமாக இருக்கிறது. அங்கும் சில தாலுகாக்களைப் பிரிக்க வேண்டு மென்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்புகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஊட்டியை ஊட்டி, குந்தா என்று இரண்டு தாலுக்காக்களாகவும், அதைப்போல கூடலூரை கூடலூர், பந்தலூர் என்று இரண்டு தாலுகாக்களாகவும் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு கோட்டாட்சி, மாவட்ட ஆட்சி அலுவலகங்களில் வீட்டுமனைப் பட்டா, நிலப்பட்டா கேட்டு மக்கள் அனுப்பிய மனுக்கள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கின்றன. தன்னிறைவுத் திட்டம் போன்று ஏதாவது ஒரு சிறப்புத் திட்டம் கொண்டுவந்து தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த மனுக்களை எல்லாம் உடனடியாகப் பரிசீலனை செய்து, இரண்டு ஆண்டுக்குள் தீர்வு காண்பதற்கு - ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால்தான் ஏழை எளிய மக்கள் பயனடைய வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்கு இருக்கிற ஒரு பெரிய குறை பாடு விவசாயத் தொழிலாளர்கள் நிலைமைதான். அந்த நிலைமையைப் போக்குவதற்கு அரசு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் விவசாயத் தொழிலாளர்களைப் பழி வாங்குவதற்காக நெல் விளையக்கூடிய

நிலங்களில் எல்லாம் சவுக்கு வைத்து நாசம் செய்கிறார்கள். அதனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் கஷ்டப்படச் செய்கிறார்கள். இதற்கு என்னுடைய தாலுகாவில் உள்ள ஒரு உதாரணத்தை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

1978-ல் ஒருபோகம் பயிர் செய்த நிலம் 35,826 ஏக்கர். அது 1980-ம் ஆண்டு 30,217 ஏக்கர் என்ற அளவுக்கு குறைந்து விட்டது. இருபோகம் பயிர் செய்யும் நிலம் 11,249 ஏக்கர் ; அந்த நிலைமை மாறி இன்றையதினம் அது 9,421 ஏக்கர் என்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. அதைப்போன்று மூன்று போகம் பயிர் செய்யும் நிலம் 1978-ல் 1,811 ஏக்கர் இருந்தது. 1980-ல் அது 186 ஏக்கராகக் குறைந்துவிட்டது. இதனால் சுமார் 9,000 ஏக்கர் பரப்பளவு விவசாயம் செய்யும் நிலம் குறைந்துள்ளது. சுமார் 20,000 டன் நெல் உற்பத்தி குறைந்து விட்டது; அந்த அளவுக்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல விளை நிலங்களில் குறிப்பாக நன்செய் நிலங்களில் சவுக்கு பயிர் செய்வது தடைசெய்யப்பட வேண்டும். அதே நேரத்தில் நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து சவுக்கு பயிரிடும் நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த விலக்கை ரத்து செய்ய வேண்டும். இப்படிப்பட்ட பல தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுராந்தகம் ஏரியில் தூர் வார உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வீணாக கடலில் கலக்கும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி, தேக்கி வைத்து, புதிய ஏரிகளை ஏற்படுத்தி, அந்த நீரைக்கொண்டு விவசாயத்தைப் பெருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நில உச்சவரம்புச் சட்டத்தில் மாற்றம் பல கொண்டு வந்திருக்கிறோம். அவை மத்திய அரசுக்குச் சென்று, ஒப்புதல் கிடைக்காமல் தடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால் ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை. அவர்கள் நன்மை பெற முடியாமல் தடை செய்யப்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசீலனை செய்து தேவையான மாற்றுச் சட்டங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் என்னுடைய தாலுகாவில் ஏற்பட்டிருக்கிற ஒரு நிலைமையை மட்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்தத் தாலுகாவில் சிறுநல்லூர் என்ற கிராமத்தில் பெரிய நிலச்சுவாந்தார்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். தங்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றுவதற்காக 1958 ஆம் ஆண்டு பினாமி முறையில் நில





மாற்றங்கள் செய்திருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த ஊரில் மைனர் பி. எம். பாஸ்கரரெட்டியார் சொத்தை மாற்ற அவருடைய சகோதரர் பி. எம். கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் பவர் ஏஜென்ட் பெற்றிருக்கிறார். பவர் ஏஜென்ட் பெற்று அந்த நிலத்தை கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் விற்றிருக்கிறார். யாருக்கு அதை விற்றிருக்கிறார் என்றால் பிரபல தத்துவமேதை டி. எம். பி. மகாதேவன் என்பவருக்கு விற்றிருக்கிறார். ஆனால் பாஸ்கர ரெட்டியாருக்கு பவர் ஏஜென்டாக இருக்கிற கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார்தான் இந்தத்தத்துவமேதை மகாதேவன் என்பவருக்கும் பவர் ஏஜென்டாக இருக்கிறார். இப்படி பவர் ஏஜென்ட் என்ற முறையில் பினாமி நிலமாற்றம் நடைபெற்றிருக்கிறது. அந்த நிலங்களை அவரே அனுபவித்துக் கொண்டிருக்கிறார். இது சம்பந்தமாக நானே அந்தத் தத்துவமேதையைச் சந்தித்துக் கேட்டேன். அப்போது அவர் சொன்னார். எனக்கும் விவசாயத்திற்கும் சம்பந்தம் இல்லை. என் பெயரில் நிலம் இருக்கிறது என்றால் என்னுடைய நண்பர் ஏதோ ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கிச் சென்றார். அதிலே ஏதாவது எழுதி வைத்திருப்பார், ஆனால் எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டார். அத்தகைய நிலங்களை எல்லாம் நம்முடைய அரசாங்கம் கைப்பற்ற வேண்டும். இதைப் போல பல இடங்களில் இருக்கிறது. இந்த பவர் ஏஜென்ட் என்று எங்கெல்லாம் நிலம் வைத்திருக்கிறார்களோ அதை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ள தகுந்த நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1970 ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டத்தில் 15 ஸ்டான்டர்டு ஏக்கராகக் குறைக்கப்பட்ட பிறகு அந்தச் சட்டத்தி லிருந்து தப்பிக்க பலவிதமாக சட்டத்தை ஏமாற்றியிருக் கிறார்கள். பினாமி முறையில் நிலங்களைப் பிரித்து வைத்திருக் கிறார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் அதே சிறுநல்லூர் கிராமத்தில் 30—3—70-ல் விற்பனை செய்யப்பட்ட நிலம், அதனுடைய டாக்குமென்ட் நம்பர் 524. அதேமாதிரி டாக்குமென்ட் எண்கள் 527, 665, 666.. இந்த டாக்குமெண்டுகளிலே பினாமி விற்பனை நடைபெற்று இருக்கிறது. அதை விற்றவர்கள் எல்லாம் பெரிய நிலச்சுவான்தார்கள். தங்களுடைய நிலத்தைக் காப்பாற்றுவதற்காக இப்படிச் செய்திருக்கிறார்கள்.

அதைப்போன்று பொசஷன் மார்ட்கேஜ் என்ற அமைப்பை ஏற்படுத்தி, 30–3–70 அன்று டாக்குமென்ட் நம்பர் 525 மற்றும் டாக்குமென்ட் நம்பர் 526 ஆகியவைகளில் பொசஷன் மார்ட்கேஜ் கொடுத்து, பல தவறுகள் நடைபெறுவதற்கு வழிவகை செய்திருக் கிறார்கள். அதையெல்லாம் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

பள்ளிக்கு தானம் என்று சொல்லி சில நிலங்களை வழங்கி இருக்கிறார்கள். டாகுமென்ட் 656-ல் பள்ளிக்கு நிலம் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பள்ளிக்கு எந்த விதமான வசதியோ முன்னேற்றமோ இல்லை. அவர்கள் அதை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அதையும் அரசு கைப்பற்றவேண்டும்.

இந்த பினாமி பரிமாற்றங்கள் தடுக்கப்படவேண்டுமானால் கிராமத்தில் புதுக்கணக்கு எடுத்து, யார் யார் எந்த எந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்று அறிவிக்கவேண்டும். அதைச் செய்தால்தான் இந்த நிலைமையைத் தடுக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் ஒரு குறிப்பு கொடுத்தேன். அதை அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி அதை எடுத்து இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள விழுதமங்கலம் கிராமத்தில் ஒரு 75 ஏக்கர் நிலப்பரப்பு அதிகாரம் பெற்ற அதிகாரியால் 18-6-81 தேதியிட்ட ஆணைப்படி எடுக்கப்பட்டது. ஆனால் அந்த அலுவலகம் திடீரென்று 1-3-82 முதல் கடலூருக்கு மாற்றப் பட்டுள்ளது. அந்த அதிகாரம் பெற்ற அதிகாரி அலுவலகத்தை மீண்டும் காஞ்சீபுரத்திலோ அல்லது மதுராந்தகத்திலோ கொண்டு வந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் 200 ரூபாய் வரைதான் கொடுக்கப்படுகிறது. அதை உயர்த்தி மேலும் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுராந்தகத்தில் தீயணைப்பு நிலையம் இருக்கிறது. அதற்கு ஆம்புலன்ஸ் வண்டி வாங்கிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிற தென்னாற்காடு மாவட்டத்தை .... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்களைப் பேச அழைக்கிறேன். ஐந்து நிமிடங்களில் அவர் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

* திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மிகச் சுருக்கமாகப் பேசும்படி ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறீர்கள். இந்தக் குறுகிய நேரத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்



அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது அகில இந்திய பார்வார்ட் பிளாக் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். வருவாய்த்துறைக்கு கிராமப்புற நிர்வாகம்தான் மிக அடிப்படையானது என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருந்தாலும், கிராம அதிகாரிகள் 14-11-80 நாளன்று நீக்கப்பட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடன், இந்த மன்றத்திலே அது குறித்து வரவேற்றுப் பேசியது எங்களுடைய இயக்கம்தான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். கிராமப்புற நிர்வாகம் சீர்கேடு அடைந்ததற்கும், நில உச்சவரம்புச் சட்டங்கள் நிறைவேற்றப் பட முடியாமல் பல இடங்களில் நிலைமைகள் ஏற்பட்டதற்கும் காரணம், கிராமப்புற நிர்வாகத்தைக் கவனித்துவந்த கிராமப்புற அதிகாரிகள்தான். அந்தக் கிராமப்புற அதிகாரிகள் நீக்கப் பட்ட அன்றையதினம்தான் கிராமப்புற மக்களுக்கு உண்மையான சுதந்திரம் தங்களுக்குக் கிடைத்தது என்று எண்ணினார்கள் என்று இந்த மன்றத்திலேயே நான் குறிப்பிட்டுப் பேசி இருக்கிறேன். அதனை ஆளும் தரப்பில் இருந்தவர்களும் வரவேற்றார்கள்.

ஆனால் அப்படி நீக்கப்பட்ட பின்னர் அதற்கு மாற்று ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு உச்சநீதி மன்றம் தடைவிதித்து விட்டது என்ற காரணத்தால் மாற்று ஏற்பாடு எதையும் செய்ய முடியவில்லை என்று சொன்னீர்கள். அதனால் ஆங்காங்கு இருக்கின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். இருப்பினும், அந்தப் பகுதி நேர கிராம அலுவலர்களுக்கு இன்னும் தொடர்ந்து நாம் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. உச்ச நீதி மன்றத்தில் அரசு தொடர் நடவடிக்கைகளை முனைப்பாக எடுக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, உடனடியாக அந்த வழக்கை எடுத்து முடித்து, அந்தக் கிராம அதிகாரிகள் தேர்வு எழுதி காத்துக்கொண்டு இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக, தற்போது நியமிக்கப்பட்டு இருக்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அந்தந்த கிராமங்களில் இல்லாமல், வேறு இடங்களில் இருக்கிறார்கள். ஜூன் மாதம் பள்ளி மாணவர்களுக்கு என்ன அவதிகள் வரும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் பல்வேறு சான்றிதழ்கள் பெற வேண்டியிருக்கும். சிறு விவசாயிகள் என்கிற முறையில் அவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் இந்த அரசால் அறிவிக்கப்பட்டு இருந்தபோதிலும், அந்த சிறு விவசாயி என்ற சான்றிதழ் பெறுவதற்காக அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பெரும் அவதிப்படுகிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்

கொள்கிறேன். இன்னும் ஓராண்டு காலம் இந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களே இந்தக் கிராம அதிகாரிகள் பணியைத் தொடர்ந்து செய்து வந்தால், நிச்சயமாக அவர்கள் லட்சாதிபதிகளாக ஆகும் நிலைமை இருக்கிறது. முன்னால் 5 ரூபாய்க்கு சான்றிதழ்கள் பெற முடியும் என்று சொன்னால், தற்போது 50 ரூபாய் கொடுக்கவேண்டும் என்கிற அளவிற்கு நிலைமைகள் வளர்ந்து இருக்கின்றன என்பதை என்னால் இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அது மட்டும் அல்ல, இன்றைக்கு காண்டிராக்ட் எடுக்கிறவர்களுக்கு சால்வன்சி சர்டிபிகேட்டுகளுக்காக, பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கு சொந்தக்காரர் என்று கொடுக்கக்கூடிய சர்டிபிகேட்டுகளுக்காக, விண்ணப்பம் காலையிலே கொடுத்தால், மாலையிலே சர்டிபிகேட் கிடைத்துவிடுகிறது, ஆனால் மாணவர்களால் இந்தத் தாலுக்கா அலுவலர்களை நேரில் பார்த்து தேவையான சர்டிபிகேட்டுகளை வாங்கமுடியவில்லை. இதைத் தவிர்க்க நீங்கள் நிச்சயமாக ஏதாவது ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே மாவட்டக் கலெக்டரின் தலைமையின் கீழ் இருக்கும் பல வேலைகளை பிரித்து, வேலைப் பளுவை குறைக்கவேண்டும் என்று பரவலாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தாசில்தார்களுக்கும், தாலுக்கா அலுவலர்களுக்கும் இப்படிச் சான்றிதழ்கள் கொடுப்பது போன்ற வேலைகள் மட்டுமல்லாமல், விதவைகள் பென்ஷன் கொடுப்பது, விவசாயிகளுக்குப் பென்ஷன் கொடுப்பது போன்றவைகளும் வருகிற காரணத்தால் அவர்களுடைய வேலைப் பளு சொல்ல முடியாததாக இருக்கிறது. அது மட்டும் அல்ல, இப்போது சிவில் சப்ளைஸ் வேலைகளும் அவர்களுக்கு வந்துவிட்டால் ப்ரொக்கியூர்மெண்ட் வேலைகளையும் அவர்கள் செய்யவேண்டியவர்களாகிவிடுவார்கள். ஆகவே நடைமுறையில் செய்ய வேண்டிய பல நியாயமான காரியங்களை அவர்கள் செய்யமுடியாத நிலையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை விவசாயிகளுக்குக் குறைந்தபட்சக் கூலியை வாங்கிக் கொடுப்பதும் இவர்களுடைய பொறுப்பு. இது மிக முக்கியமான வேலை. ஆனால் இந்த வேலையைக்கவனிக்க இவர்களுக்கு நேரம் இல்லை. எஸ். பி. அம்புரோஸ் அவர்களின் தனி நபர் குழுவில் கொடுத்த பரிந்துரைகளில் ஒரு பகுதிதான் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் சற்று ஆழ்ந்து பார்த்து அமுல் நடத்தவேண்டும். அதேபோல கிராமப் புற நில்ங்களில் உள்ள நிலங்களைக் கையகப்படுத்தாது இருப்பதின் காரணமாக, பல வேலைகள் தடைபடுகின்றன. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரோடு போடுகிறார்கள். ஆனால் இந்த ரோடுகளைச் சில பகுதிகளில் போட முடிவதில்லை. அதற்குக் காரணம் அந்த நிலங்களை அரசு கையகப்படுத்தி எடுத்துக் கொள்ளாததுதான். மத்திய அரசின் பொதுப்பணித்



துறையிலே, ரெயில்வேயிலே அவர்களுடைய நிலங்களைக்கையகப் படுத்துவதற்குக் கட்டாய சட்டங்கள் இருக்கின்றன. கிராமப் புறநிலங்களைக் கையகப்படுத்துவதற்கு அப்படிப்பட்ட கட்டாய சட்டம் இல்லாத காரணத்தால், தனி நபர்கள், அந்த நிலங்களில் ரோடு போடவிடாமல் தடுத்து கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலையிருக்கிறது. அது இன்றையதினம் கிராமப்புற வளர்ச்சிக்குப் பெரிதும் பாதகத்தை விளைவித்து வருகிறது. ஆகவே, எது எதற்கோ அவசரச் சட்டத்தைக் கொண்டு வருகிறோமே, இதற்கும் ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்தால் எவ்வளவோ நல்லது. கிராமப்புறங்களில் ரோடுகள் போடும் பணிகளைக் கட்டாயமாக நிலங்களைக் கையகப்படுத்தும் உரிமையை அரசு பெற்றால்தான் முழுமையாகச் செய்ய முடியும்.

நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு அனுமதி மறுத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். நாம் இந்த மன்றத்தின் மூலமாகமீண்டும் அதைக் கொண்டு வந்து நிறைவேற்றி, சட்டமாக ஆக்கி, அதன்மூலம் ஏழை எளிய மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் கையகப்படுத்தப்பட்ட, அரசாங்கத்தின் சார்பில் எடுக்கப்பட்ட பினாமி நிலங்களைப் பிரித்துக்கொடுத்து, அவர்களுக்கு நன்மை செய்ய முடியும். நில உச்ச வரம்புச்சட்டம் சட்டமாக ஆக்கப்படுவது மிக முக்கியம். சென்ற கூட்டத் தொடரிலேயே நான் சொன்னேன். தோப்பு என்ற பெயரால் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய மாவட்டத்திலேயே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அது குறித்து எழுதிக் கொடுத்திருக்கிறேன். சாப்டூர் ஜமீன்தார் 2,670 ஏக்கர் நிலத்தை தோப்பு என்ற பெயரால் வைத்துக் கொண்டு, அதை இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டு வருகிறார். எந்த தோப்பு அழிக்கப்பட்டாலும் "If it loses the character of a thope", the land should be returned to the Government" என்றிருக்கிறது.

ஆனால் அவர் தோப்பை அழித்து நிலமாக்கிக் கொண்டிருக் கிறார். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் கிட்டத்தட்ட 2,670 ஏக்கர் நிலப்பரப்பை தோப்பு என்ற பெயரால் வைத்துக் கொண்டு, இப்போது தோப்பை அழித்து அவ்வளவு நிலங் களுக்கும் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, சிறுமலை என்ற பகுதியிலே ஒரு தனி நபருக்கு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிலம் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அவர் அங்குள்ள மரங்களை வெட்டிக் கொண்டிருக்கிறார். ஆகவே இதுபோல தோப்பு என்ற பெயரை வைத்துக் கொண்டு அல்லது கரும்பு நிலங்கள் என்ற பெயரை வைத்துக் கொண்டு, அவர்கள் பினாமி சட்டங்களை அல்லது உச்சவரம்புச் சட்டங்களை நிறைவேற்ற முடியாமல் செய்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, இப்போது பட்டா பாஸ் புத்தகங்கள் கொடுக்கப்படுகிறது, வரவேற்கிறேன். உண்மையிலே ஒருவருக்கு என்னென்ன நிலங்கள் இருக்கின்றன, அவர் சிறிய விவசாயியா, பெரிய விவசாயியா என்பதை, அதைப்பார்த்தே புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அவைகளை வழங்குவதில் இன்னும் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்தப் பட்டா பாஸ் புத்தகங்களிலேயே சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று பதிவு செய்யப்பெற்று, அரசு அதைக் கடன் வழங்குவதற்கும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதற்குமேலும் சான்றிதழ்கள் வாங்கிவரவேண்டும் என்ற நிலை இருப்பதை மாற்றியாகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டும் அல்ல, அப்படிப்பட்ட சான்றிதழ்களைச்பெறுவதற்காக அவர்கள் தாலுக்கா அலுவலகங்களுக்கு சென்று படவேண்டிய சிரமங்களும் குறைகிறது. பட்டா பாஸ் புத்தகத்திலேயே அவர்கள் விற்கிறபோது அல்லது வாங்குகிறபோது சிறிய விவசாயியா அல்லது பெரிய விவசாயியா என்று ரெஜிஸ்திரார் அலுவலகத்திலேயே பதிவு செய்யக்கூடிய ஒரு முறையையும் ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் அது அவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் வழங்கப்படவேண்டும்.

இதிலே இன்னொன்று இப்படி பட்டா பாஸ் புத்தகங்களை அளிக்கிறபோது ஒருவருக்கு ஒரு கிராமத்தில் சொந்தமாக இருக்கிற நிலங்கள்தான் பதிவு செய்யப்படுகின்றன. இன்னொரு கிராமத்தில் இருக்கும் நிலங்கள் அதிலே இடம் பெறுவதில்லை. இதனால் பெரிய விவசாயிகள்கூட ஒரு கிராமத்தில் இருப்பதை கொண்டு பாஸ் புத்தகத்தைக் காட்டி, சிறிய விவசாயிகளுக்குரிய சலுகைகளைப் பெற்றுக் கடன் வாங்கிக் கொண்டுவிடுகிறார்கள்.

(பிற்பகல் 12.10)

அதுமட்டுமல்ல, இயற்கையின் சீற்றத்தால்—(மணியடிக்கப் பட்டது)—தீ விபத்திலே பாதிக்கப்பட்ட கிராமத்திலே உள்ள ஏழை மக்களுக்கு 50 ரூபாயும் 5 கிலோ அரிசி, மண்ணெண்ணெய் போன்றவைகள் கொடுக்கப்படுகின்றது, வேஷ்டிகள் கொடுக்கப்படுகின்றன என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் அந்த உதவி அவதிப்படுகின்றவர்களுக்குக் காலாகாலத்திலே போய்ச் சேருகின்றதா என்றால் இல்லை. என்னுடைய தொகுதியிலே கூட சென்ற மாதம் 50 வீடுகள் எரிந்துவிட்டன. தீ பிடிக்கின்றபோது குழ்ந்தைகள் இறந்துவிட்டால் குழந்தைகளின் தாய் தந்தையருக்குப் பணம் உதவி செய்யப்படும் என்று கூறப்படுகின்றது. ஆனால் இந்த உதவியைச் செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கேட்டால் அப்படி எந்த விதியிலே இருக்கின்றது என்பது தெரியவில்லை, எனவே பார்த்துச் சொல்கிறேன் என்று சொல்கிறார்கள். இங்கே மானியக்கோரிக்கையிலே இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுக்கலாம் என்று இருக்கின்றது. ஆனால் அதைக் கொடுக்க விதி இல்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றியாகவேண்டும்.



அடுத்து நிர்வாகம் திறமையாக நடப்பதற்காகப் பெரிய மாவட்டங்களைப் பிரிக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அந்த வகையிலே மதுரை, இராமநாதபுரம் இரண்டையும் பிரித்தாகவேண்டும். இராமநாதபுரம் மேற்குப் பகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி முத்துராமலிங்கத்தேவரின் பெயரை வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதுரை மாவட்டத்தில் உள்ள பெரியகுளம், ஆண்டிப்பட்டி ஆகிய ஊர்களை திண்டுக்கல்லோடு சேர்த்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஊர்களுக்கு மதுரைதான் பக்கம் என்று மக்கள் தங்களது எதிர்ப்பினைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த ஊர்களை மதுரையோடு சேர்த்து அதன்படி அந்த மாவட்டத்தைப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிர்வாகத்தினைப் பொறுத்தவரையிலே கலெக்டரிடம் தான் அத்தனையும் இருக்கிறது. அவர்தான் அனைத்தையும்பார்க்க வேண்டி இருக்கின்றது. எந்தத் திட்டத்தைஎடுத்துக்கொண்டாலும் அவரிடத்திலேதான் அதற்காகச் செல்லவேண்டியிருக்கின்றது. தன்னிறைவுத் திட்டம் என்றாலும் அதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்தான் பொறுப்பு, ரெவின்யூ என்று வைத்துக் கொண்டாலும் அதற்கும் அவர்கள்தான் பொறுப்பு.... (மணியடிக்கப் பட்டது). அவர்களுடைய வேலைப்பளுவைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, கிராமப்பகுதியிலே நீர்பிடிப் பகுதிகளை நிலப் பிரபுக்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் அந்தப் பகுதிகள் கெட்டுவிடுகின்றன. உதாரணமாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே 10 குளங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். பத்து ஏக்கர் நிலத்திற்கு மேல் ஆக்கிரமித்திருக்கிறார்கள். 10 ஏக்கர் நிலம்தான் மீதமாக இருக்கின்றது. ஆகவே இவ்வாறு நீர்பிடிப்பகுதிகளில் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களை வெளியேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற வருவாய்த்துறை மானியங்களின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பேட்டின் இறுதியிலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் "வருவாய்த்துறை ஈடுபடாத அரசுத் திட்டமே இல்லை; ஏதாவது ஒரு வகையிலே அது எந்தத் திட்டத்திலும் ஈடுபட்டிருக்கும், ஆகவே வருவாய்த்துறை என்பது குன்றின்மேலிட்ட விளக்காக நிர்வாகத்திலே ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றது என்ற கருத்தினை தெரிவித்திருக்கிறார்கள்;

அவ்வளவு இன்றியமையாத முக்கியமான ஒரு துறையைப் பற்றி மிகக்குறைந்த நேரத்திலே விமர்சிப்பதுப் என்பது இயலாத காரியம் என்றாலும் இரண்டொரு கருத்துக்களைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருவாய்த்துறை என்பதும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கின்ற துறை என்பதும் பொதுவாக எந்த ஒரு ஆட்சியிலும் மிகப் பெரிய பங்கை வகித்துக்கொண்டிருக்கின்ற இரு பெரும் துறைகளாகும்; அப்படி முன்னணியிலே இருக்கின்ற வருவாய்த்துறை ஒரு காலத்திலே வருவாயை மட்டும் தேடித் தருகின்ற துறையாக இருந்தது. சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கின்ற துறை எப்படியாவது மக்களைக் கட்டி மேய்க்கவேண்டும் என்ற அந்த எண்ணத்திலேதான் நீண்டகாலம் இருந்தது. குறிப்பாக அன்னியர் ஆண்ட காலத்திலேயும், அரசர்கள் ஆண்ட காலத்திலேயும் இந்த தத்துவம்தான் அந்தக் காலத்திலே இருந்தது. ஆனால் காலப்போக்கிலே சமத்துவம், சகோதரத்துவம், சமநீதி, மக்கள் நல்வாழ்வு என்ற இலட்சியங்களை நோக்கி உலகம் விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இந்த மாறுதலுக்கு ஏற்ப ஒவ்வொரு கால கட்டத்திலேயும் மக்களை ஆண்டு வருகின்ற ஒவ்வொரு ஆட்சியும் காலத்திற்கேற்றவாறு சில மாற்றங்களை அவ்வப்போது உருவாக்கி வருவது நாம் கண்டறிந்த உண்மையாகும்.

அந்த வகையில் காங்கிரஸ் அரசு ஆண்டாலும்சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டாலும் சரி, அல்லது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, தேவையான சில மாற்றங்களைக் கொண்டு வருவதை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது கூட பட்டா புத்தகங்கள் பற்றி ஆளும்கட்சியைச் சார்ந்த பல உறுப்பினர்கள் பேசினார்கள். அதைப் பாராட்டினார்கள். அது ஒரு நல்ல திட்டம்தான். ஆனால் இந்தத் திட்டத்தைக்கூட அறிமுகப்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை பெருமையுடன் நான் குறிப்பிடுகிறேன். அதில் வேறு சில தொடர்பான குறிப்புகளை இணைக்கும் ஒரு புதிய முறையைத்தான் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதைப் பாராட்ட வேண்டியதுதான். அதே போல் புதிய தாலுக்காக்களை உருவாக்கியிருக்கிறார்கள். புதிய மாவட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். புதிய அலுவலர்களை, நியமித்திருக்கிறீர்கள் இந்த இலாகாவில், பணிகளை வேகமாக நடைமுறைப்படுத்துவதற்காக என்று. அவை எல்லாம் பாராட்டப்படவேண்டிய நல்ல காரியங்கள்தான்.

இருந்தபோதிலும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அண்ணா அவர்கள்எதிர்க்கட்சிகளின் கடமைகள் பற்றி ''ஆளும்கட்சி போடுகிற திட்டங்களில்–சட்டங்களில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லவேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமை என்று'' குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணா அவர்கள்



சொன்ன இலக்கணத்திற்கேற்ப சில விஷயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன். பொதுவாகவே இந்த வருவாய்த் துறையில் இரண்டு கோளாறுகள் இருக்கின்றன. ஒன்று காலதாமதமாகிறது, இரண்டாவது, ஊழல் வளர உறுதுணை புரிகிறது. இந்த இரண்டு அம்சங்களை நாம் கவனத்தில்கொண்டிருப்போமானால், அல்லது இனிமேலாவது இதில் நாம கவனமாக இருந்தால் நிச்சயமாக மக்களுக்கு நல்ல பயன் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடிமட்டத்திலுள்ள க்ளார்க்ஸ், ஹெட்க்ளார்க்ஸ், சூப்பரின்டென்டென்ட்ஸ், தாசில்தார்கள் போன்றவர்கள் எல்லாம் வாங்கும் லஞ்சம் இருக்கிறதே, பணம் அதற்கு அண்மைக் காலத்தில் தரப்பட்டிருக்கக்கூடிய புதிய பெயர் (Speed Money) ஸ்பீட் மணி. விஷயத்தை சீக்கிரமாக செய்யவேண்டுமென்பதற்காக தரப்படுகிற பணம் இது. அதற்கு அவர்கள் மட்டுமல்ல காரணம். ஒவ்வொரு க்ளார்க் மேஜையிலும் பார்த்தால் மூவாயிரத்திற்கு அதிகமான பேப்பர்கள் பெண்டிங்காக இருக்கின்றன.

'They are not able to give any solution' அவைபற்றி முடிவு எடுக்க வேண்டுமென்றால் சீக்கிரமாக அவை பைசலாக வேண்டுமானால் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் அதை விரைவு படுத்த ஸ்பீட் மணி கொடுக்கிறார்கள், ஆனால் அதிகாரிகள் முடிவெடுக்கும் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர்கள் பெறுவது தான் லஞ்சம் என்றவகையில் இந்தத் துறை வளர்வதுபோல் நான் சொல்கிற ஊழலும் வளருகிறது. இதற்கு ஒரு கட்சிதான் காரணம் என்று சொல்லவில்லை. அகில இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் காரணம் என்று சொல்லவில்லை. இந்தத் துறையில் இந்த நிர்வாகத்தில் இருக்கிற நீண்டகாலமாக இருக்கிற குறைகளை நீங்களாவது முடிந்த அளவிற்கு குறைக்கவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இதில் கவனமாக இருக்கவேண்டும்.

நான் ஒன்றை மனம் திறந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராம அதிகாரிகள் ஒழிப்பு பற்றி எல்லோரும் பேசி விட்டார்கள். ஆண்டித் தேவர் அவர்கள் பகுதியில் பரவாயில்லை அவர் தொகுதியில் லஞ்சம் 50 ரூபாயோடு நிற்கிறது; ஆனால் பிற பகுதிகளில் ஒரு கையெழுத்து வாங்குவதற்கு ரூ. 100, ரூ. 200 என்றளவிற்கு லஞ்சக் கொடுமை வளர்ந்திருப்பதை சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை. இந்த நிர்வாக ஊழல்களை காலப்போக்கில் ஒழிக்கவேண்டும், அதற்கு அரசு முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெறுகின்றன. அதிகாரிகள் கடமை உணர்வின்றி நடந்து கொள்கிறார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பல்வேறு வகைகளில் அதிகாரிகளை ஓப்பனாக கண்டித்திருக்கிறார்கள்.

கணக்குப்பிள்ளைகள், கிராம முன்சீப்கள் இவர்களை எடுத்து விட்ட பிறகு இன்று தாலுகா ஆபீஸில் யாருமே இல்லை; ஹெட்குவார்ட்டேர்ஸ் தாசில்தார் தான் இருக்கிறார். எப்போது போன் செய்தாலும் நான்தான் ஹெட்குவார்ட்டேர்ஸ் தாசில்தார் பேசுகிறேன் என்றுதான் ஒரு குரலைக் கேட்கமுடியும். போலீஸ் ஸ்டேஷனில் பாராக்காரன் சொல்வதுபோல், நான்தான் பாரா இருப்பவன் பேசுகிறேன் என்று சொல்வதுபோல், தாலுகா ஆபீஸ்களிலும் ஹெட்குவார்ட்டேர்ஸ் தாசில்தார் பேசுகிறார். வருவாய்த் துறை ஆணையர் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். மூன்று நாட்கள் கலக்ஷனுக்கு போகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உத்தரவின்படி எல்லோருமே கலக்ஷனுக்கு போய்விடுகிறார்கள். போவது தவறு என்று சொல்லவில்லை. வரிவசூலுக்கு இன்னும் டி. ஆர். ஓ—ம் கலக்டரும்தான் புறப்படவில்லை.

'The entire Taluk Office, R. D. O. Office and Collectorate is not working properly.'

எல்லா அதிகாரிகளும் வெளியே சென்று விடுகிறார்கள். இது நிதர்சமான உண்மை இப்படியிருந்தால் நீங்கள் கொடுக்கிற புள்ளிவிவரங்கள் எப்படி சரியாக இருக்கும்? எப்படி திட்டங்களை நிறைவேற்ற முடியும்? இரண்டு ஆண்டுகளாக எந்தக் காரியங்களும் தாலுகா ஆபீஸில் நடைபெறவில்லை.

(பிற்பகல் 12.20)

நிலம் வழங்குவதிலே மட்டுமல்ல; மற்ற எல்லா காரியங்களிலும் தாலுகா ஆபீசுகளில் வேலைகள் முற்றும் சரிவர நடைபெறவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மரங்கள் எல்லாம் ஒரு பைன் மாானிங் திடீரென்று காணாமல் போய்விடுகின்றது. திருமானூரில் சர்வே எண் 2-ல் தோப்புப் புறம் போக்கில் இருந்த 69 இலுப்பை மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. அதேபோல், வடுகபாளையத்தில் 2 டி.சி. மரமும், 11 புளிய மரமும், வெட்டப்பட்டுள்ளன. இலந்தைக் கூடத்தில் ஒரு புளியமரமும், 2 டி. சி. மரமும் வெட்டப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் அங்கே நடைபெற்று கொண்டிருக்கின்றன. ஊர் பூராவும் எல்லா இடங்களிலும் தோப்பு இல்லை; துரவு இல்லை; மரம் மட்டைகள் இல்லை. ஆண்டித் தேவர் அவர்கள்கூட ரெவின்யூ இன்ஸ்பெக்டர் லட்சாதிபதி என்று கூறினார்; ஆனால், நான் சொன்னால்



உங்களுக்கு கசப்பாக இருக்கும். ரூ. 10,000 வேண்டுமென்றால் உடனே ரெவின்யூ இன்ஸ்பெக்டரால் கொடுக்க முடியும். நான் பங்கு கேட்கவில்லை. இந்த நிலைமைகள் எல்லாம் ஆங்காங்கே வளர்ந்து கொண்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ரெவின்யூ இன்ஸ்பெக்டரே இப்படியென்றால், இன்னும் டாப் அலுவலில் உள்ள அதிகாரிகள் எப்படி இருப்பார்கள் என்பதை யோசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் கடன் வசூல், ரொம்பவும் கெடுபிடியாக நடக்கிறது. 9–3–82 அன்று புள்ளம்பாடியில், கந்தசாமி என்பவர் வீட்டிலே கடனுக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இந்த மாதம் 25ஆம் தேதி ஏலம் விடப் போகிறார்கள். எல்லோரும் கடன் வாங்குகிறார்கள். எல்லோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்றால், இல்லை. இவர் தி.மு.க.-காரர் என்பதால் நடந்திருக்கிறது.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி இங்கே பலர், பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இதிலே என்னுடைய கருத்தைச் சொல்லி, சீக்கிரம் முடித்து விடுகிறேன். இது மிகவும் முக்கியமானது அரசின் கொள்கை ரீதியானது. 1978 ஆம் ஆண்டு புதிதாக நிலச் சீர்திருத்தச் சட்டம் அவசரம், அவசரமாகப் போடப்பட்டு, அதையொட்டி 1979 ஆம் ஆண்டு புதியதாக நிலச் சீர்திருத்த மசோதா 11-வது சட்டம் என்று நிறைவேற்றப்பட்டு, பழைய நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் அரசு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு வகை, தொகையில்லாமல் நட்ட ஈடு கொடுப்பட்டதாகவும், அதனால், அந்த நிலங்களை அடமானம் பெற்ற ஏழை, எளிய முன்னாள் குத்தகை சாகுபடிதாரர்கள் தவணைகளைக் கட்ட முடியாமல் போய் விடுவதாகவும், அதன் காரணமாக, நில அடமானங்கள் ரத்து செய்யப்பட்டு, அதுவரை கட்டிய தவணைகளையும் இழந்து விடும் நிலைமை ஏற்பட்டு விட்டதாகவும், அவர்களைக் காப்பாற்றும் வகையில் மேற்படி புதிய சட்டம் கொண்டு வரப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

மேலும், பழைய சட்டங்களின்கீழ் அரசு கையகப் படுத்தப்பட்டு அடமானம் செய்து கொடுக்கப்பட்ட நிலங்கள் உட்பட ஏக்கர் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ. 3,500 நிலக்கிரயம் நிர்ணயிக்கப்படுவதற்கும், அதன்படி பழைய நிலக்கிரயங்களை மறுபரிசீலனை செய்து சரிப்படுத்தி நேர்செய்வதற்கும் மேற்படி புதிய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், 27–10–78க்குப் பிறகு, அரசு கையகப் படுத்தப்படும் நிலங்களுக்கு மட்டும்தான் மேற்படி புதிய சட்டம் பொருந்தும் என்றும், 27-10-78க்கு முன் அடமானம் பெற்ற நிலங்களுக்கு பொருந்தாது என்றும், தற்போது அரசு ஆணைகள் கூறுகின்றன.

மேலும், நில அடமான ரத்து நடவடிக்கை, தற்போது தீவிரப் படுத்தப்பட்டு வருகின்றன. புதிய நிலச்சீர்திருத்தச் சட்டத்தினால் காப்பாற்றப்பட்டு விடுவோம் என்று முழுமையாக நம்பியிருந்த ஏழை, எளிய பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த லட்சோப லட்சம் அடமானதாரர்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்றால் மிகையாகாது. மூன்று சாதாரண ஏக்கருக்கு குறைவான நிலங்கள் தான் இவர்களின் அடிப்படை ஜீவாதாரம்.

இந்த அவல நிலைமையில் இருந்து இந்த ஏழை எளிய விவசாயக் குடும்பங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், மேற்படி 1979-ஆம் வருட புதிய நிலச் சீர்திருத்த 11-வது சட்டத்தை குறைந்தபட்சம் 1970–71-ல் இருந்து பின்தேதியிட்டு அமுல்படுத்தும் வகையில் ஓர் அவசரச் சட்டமும், அதன் வழிப்பட்ட சட்ட திருத்தமும் கொண்டு வரப்படுவதைத் தவிர, வேறு வழி கிடையாது. மேலும் கடந்த காலத்திற்கும் செல்லுபடியாகும் வகையில், திருத்த மசோதா கொண்டு வரும் மரபு எப்போதும் இருந்து வருகின்றது. பெருவாரியான மக்களின் நலன் கருதி. அரசியல் நிர்ணய சட்டமும் அதற்கு ஆதரவளிக்கின்றது. மேற்படி திருத்தச் சட்டம் கொண்டு வந்து அமுல்படுத்தப்படும் வரை, வருவாய்த் துறை தற்போது எடுத்துவரும் 'நில அடமான ரத்து' போன்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி வைப்பதற்குரிய அரசு ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

**திரு துரைமுருகன்:** பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர் களே, சட்டமன்றத்திலே அங்கத்தினர்கள் பல்வேறு கருத்துக் களைச் சொல்வார்கள். அதிலே அமைச்சர் அவர்கள் கவனத்திற் கொண்டு வருவதற்காக, அந்த இலாகாவைச் சார்ந்த அதிகாரிகள் வந்து உட்கார்ந்து, அங்கத்தினர்கள் பேசுவதை குறிப்பு எடுப்பார்கள். பிறகு அமைச்சர் ஏதாவது தகவல் கேட்டால், அதைத் தயாரித்து தருவார்கள். ஆனால், நான் பார்க்கிறேன்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அங்கத்தினர்கள் பேசும் பேச்சுக்களை, குறிப்பெழுதி அதிகாரிகள் அதன்மீது நடவடிக்கை எடுப்பார்கள். அமைச்சருக்கு ஆலோசனை கூறுவார்கள். எனவே, இதெல்லாம் தேவையில்லை. உட்காருங்கள்.

**திரு. ஜே. எஸ். இராசு:** தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தை எடுத்துக் கொண்டதற்காக, எனக்கு மேலும் இரண்டு நிமிடம் கூட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திருவிடைமருதூர்—53—சாத்தனூரில் 19 ஏக்கர் 46 சென்ட் நிலம் நில உச்ச வரம்புச் சட்டத்திலே எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னும் அது அரசுக்கு வரவில்லை. யாரிடத்திலே இருந்து எடுக்கவேண்டுமோ அந்த நிலச்சுவான்தாரிடமே இருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் அவர் அந்த நிலத்தை விற்றுக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. இவைகளை அரசு களைந்தாகவேண்டும் என்று கூறி உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர்கள் இன்றைக்கு இந்தக் கோரிக்கைகளைப் பற்றித் தெளிவாகப் பேசியிருக் கிறார்கள். பலவற்றை வரவேற்றும், சிலவற்றிலே இருக்கின்ற குறைபாடுகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் வரவேற்றதற்காக எந்த அளவுக்கு மகிழ்ச்சி அடைகிறேனோ அதே அளவுக்கு இருக்கிற குறையை எடுத்துச் சொல்கிறபோது நியாயமான கோரிக்கைகளை அரசு கவனிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொன்றாகச் சொல்லி வந்தார்கள். சென்ற ஆண்டு நடைபெற்ற வறட்சிப் பணிகளைப்பற்றிச் சொல்கிறபோது பெரும்பாலான உறுப்பினர்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப் பாராட்டுவதற்கு எல்லாம் காரணம் வறட்சிப் பணிகளிலே எல்லாக் காரியங்களும் திறம்பட நடப்பதற்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டது மட்டுமல்ல, தானே பல மாவட்டங் களுக்குச் சென்று பார்த்து அதிகாரிகளை ஊக்குவித்து அவைகளை விரைவுபடுத்திச் செய்திருக்கிறார்கள் என்பதால் நீங்கள் எல்லாம் பாராட்டுகிற அளவுக்கு இருப்பது மட்டுமல்ல, தேடித் தேடிப் பார்த்து ஏதாவது அதிலே குறை இருந்தால் அதைச் சொல்லி அந்தக் குறையை நீக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே நீங்கள் முயற்சிகளை எடுத்துக் கொண்டாலும் அந்த முயற்சிக்கு வேண்டிய ஆதாரங்கள் கிடைக்காத அளவுக்கு திறம்பட நடத்தியிருக்கிறார்கள். மீண்டும் திறம்பட காரியங் களை அரசு செய்யும் என்பதை இந்த அவையின் முன்னாலே நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சி வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மிகக் கடுமையாகத் அதைப்பற்றிப் பேசினார்கள். வெள்ளை அறிக்கை ஒன்று இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டு இரண்டு நாட்கள் பேசி, அது போதாது என்று அன்று மாலையிலும் பேசி ஏறக்குறைய 74 உறுப்பினர்கள் இங்கே பேசி அதற்குப் பிறகு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். இந்த அரசு வறட்சி நிவாரணப் பணிக்கும் மாவட்ட ரீதியில் ஒரு குழுவை அமைத்து அந்தக்

குழுவில் எல்லாக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாத கட்சிக்கு அங்கே இருக்கின்ற பொதுமக்களுடன் தொடர்பு உள்ளவர்கள் இவர்களையெல்லாம் போட்டோம் என்பது உங்களுக்குத் தெரியும். அந்தச் கூட்டம் எல்லா மாவட்டங்களிலும் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். மாவட்ட வறட்சி நிவாரணக் குழுக் கூட்டங்கள் எத்தனை நடந்தன, யார், யார் அவைகளிலே கலந்துகொண்டார்கள் என்ற செய்திகளை எல்லாம் நான் இப்போது பேசுவது என்றால் நேரம் போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன்முதலாக வறட்சி வருகிறபோது போர்க்கால நடவடிக்கை—போர்க்கால நடவடிக்கை என்றால் தமிழகத்திலே எந்த இடத்திலே காவல் துறை இருந்தாலும் அந்தக் காவல் துறையிலே உள்ள தொலைபேசி மூலமாக பேசுவதற்கு வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபடுகிற எல்லா அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது.

அதேபோல போலீசிலே இருக்கிற வயர்லெஸ்ஸை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தமிழக முதல்வர் அவர்கள் தனியாக ஒரு உத்தரவை போட்டார்கள் என்பதை உங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். இதுபோன்ற காரணங்களினால் தான் இவ்வளவு சிறப்பாக இந்த திட்டம் நடைபெற்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

இன்றைக்கு வறட்சி நிவாரணப் பணிகள் மூலமாக தோண்டப்பட்ட துளை கிணறுகள் 7,249; ஆழப்படுத்தப்பட்ட கிணறுகள் 19,461; நிறைவுற்ற பாசனப் பணிகள் 15,448; நிறைவுற்ற சாலைப் பணிகள் 5,571: நிறைவுற்ற குளங்கள் 4,715: இந்த குளங்களில் பெரிய குளங்களால் எவ்வளவு ஏக்கர்கள் நன்மை பெற்றன ஏன்றால் 9,07,121 ஏக்கர் நிலங்கள் பயன்பெற்றன. சிறிய குளங்கள் வெட்டப்பட்டதினால் 1,37,110 ஏக்கர் நிலங்கள் நன்மை பெற்றிருக்கின்றன. மொத்தமாக சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு 10,44,731 ஏக்கர்கள் இதனாலே பயன்பெற்றுள்ளன. என்ற செய்தியை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்த வறட்சி வந்ததாலே தக்காவி கடன் தள்ளுபடி மட்டும் 27 கோடியே 95 லட்சத்து 72 ஆயிரத்து 419 ரூபாய் செலவு செய்திருக்கிறோம். இதனாலே பயன் அடைந்தவர்கள் 18 லட்சத்து 80 ஆயிரத்து 445 வளர்ச்சி பாதிக்கப்பட்ட பகுதிகளிலே நிலவரி தண்ணீர் தீர்வை தள்ளுபடி 7 கோடியே 42 லட்சம் செய்திருக்கிறோம் என்ற செய்தியை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக அரசு செலவழித்ததைப் பற்றிச் சொல்லவேண்டு



மென்றால் வறட்சி நிவாரணத்திற்காக மாநில அரசு செலவு செய்தது 56.2 கோடி. தக்காவி கடனாக அரசு கொடுத்தது 5 கோடி. மொத்தம் அரசு செலவு செய்தது 61.2 கோடிஆகும் தக்காவி கடன் தள்ளுபடி ஆனது 27 கோடி. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளித்தாலே 7கோடியே 42 லட்சம். இவைகளை மொத்தமாக பார்க்கிற போது அரசு செலவு செய்ததையும், தள்ளுபடி செய்ததையும் சேர்த்துப் பார்த்தால் 96.3 கோடி இன்றைக்கு இந்த ஒரு ஆண்டில் எதிர்பாராத செலவு இந்த அரசிற்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த எதிர்பாராத செலவு 96.3 கோடி வந்த போது மாநில அரசு இதுவரையில் கொடுத்தது 20 கோடி ரூபாய். 14 கோடி கடனாகவும், 6 கோடி மானியமாகவும் கொடுத்திருக்கிறது. இன்னும் நாம் எதிர்பார்ப்பது 10 கோடியாகும். இதிலே சுமாராக 7 கோடி கடனாகவும் 3 கோடி மானியமாகவும் கொடுக்கும் என்று உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசுகிறபோது இதுவரையிலும் வறட்சி நிவாரணப் பணி எவ்வளவு சிறப்பாக நடந்தது என்பதையும், இதனாலே மாநில அரசிற்கு எதிர்பாராத செலவு எவ்வளவு வந்தது என்பதையும், எவ்வளவு திறம்பட பணி புரிந்தார்கள் என்பதை பற்றியெல்லாம் இங்கே பேசுகிற உறுப்பினர்கள் எல்லாம் இன் றக்கு பல மாவட்டங்களிலே மழை பெய்யவில்லை என்று சொன்னார்கள்.

ஆனால், பல மாவட்டங்களிலே மழை பெய்யாவிட்டாலும் பொதுவாக என்னிடத்திலே இருக்கிற கணக்குகளை எல்லாம் பார்க்கிறபொழுது, சில மாவட்டங்களிலே குறைந்திருக்கிரது. உதாரணம் சொல்ல வேண்டுமானால், சராசரி ரெயின்ஃபால், ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த ஆண்டு எவ்வளவு குறைந்திக்கிறது என்பதைப் பார்க்கும்போது, சில மாவட்டங்களில் மிக்க அதிகமாகக் குறைந்திருக்கிறது. சில மாவட்டங்களில் அதிகமாக இருக்கிறது, சில மாவட்டங்களில் சரியாக இருக்கிறது. இவையெல்லாம் பார்க்கும்போது சில மாவட்டங்களில், சில தாலுகாக்களில் குறைந்திருக்கிறது. அவைகளை எல்லாம் அரசு கவனித்துக் கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கவனித்து வந்தால் போதுமா? என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று நீங்கள் கேட்கக்கூடும். முதன் முறையாக இன்றைக்கு முதலமைச்சரின் அனுமதியின் பேரில், முதலில் குடிதண்ணீருக்கான வேலையைச் செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திற்கு 1 இலட்சமும் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு 1 இலட்சமும், திருச்சிராப்பள்ளிச்கு 1 இலட்சமும், புதுக்கோட்டைக்கு 1 இலட்சமும், திருநெல்வேலிக்கு 1 இலட்சமும் முன்பே வழங்கப்பட்டு விட்டது. அந்த வேலைகளும் நடந்துக் கொண்டிருக்கின்றன. தேவைபட்டால், அங்கே தண்ணீர்ப்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1982 மார்ச் 18

பஞ்சம் வந்தால், வேண்டிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்வார்கள், இந்த அரசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசிய உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள்-தவறாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறேன்— மாளிகையிலே இருந்து குடிசையைப் பார்ப்பதைப் போல் சிலவற்றைச் சொன்னார்கள். மாளிகையிலிருந்து குடிசையைப் பார்ப்பது என்ன என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும், ஒரு நிர்வாகம் திறப்படச் செயல்பட வேண்டுமென்றால், கீழ் மட்டத்திலே தான் முதலிலே சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று தமிழக புரட்சித் தலைவர் கருதி, அதற்கு வேண்டிய சீர்திருத்தங்களை கீழ் மட்டத்திலே செய்து வந்தார் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாவட்ட நிர்வாகம் என்று சொல்லும்போது, நங்கள் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சிலர் சொன்னார்கள். மாவட்டத்தைப் பிரிப்பதற்கு முன்னாலே, என்ன என்ன காரியங்கள் கீழே நடந்து இருக்கின்றன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒன்றைச் சொல்வதானால், இன்றைக்கு கிராமத்தைப் பொறுத்த வரைக்கும், கிராமத்திலே இருக்கிற கிராம பணியாளர்கள், கிராமக் காவலர்கள், பாசனக் காவலர்கள் இவர்களுக்கெல்லாம் முதலில் போக்குவரத்து வசதி செய்யவில்லை. அவர்களுக்கெல்லாம் இன்றைக்கு சைக்கிள் வாங்கிக் கொள்ளலாம் என்ற வசதியை, இந்த அரசு செய்திருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, உங்களுக்குச் சொல்வதானல், இன்றைக்கு வருவாய்க் கிராமங்கள் 16,546 இருக்கின்றன. அந்த 16,000 கிராமங்களில் இன்றைக்குக் கிராம அதிகாரிகள் ஏறக்குறைய 11,954 கிராமங்களுக்கு வர இருக்கிறார்கள். இன்றைக்கு அரசு அதிகாரிகள், கிராமங்களுக்கு வந்தால் அங்கே புது இடங்களுக்குச் சென்று. தனியார் வீட்டுக்குச் சென்று எந்த கிராம அதிகாரியும் அந்த கிராம நிர்வாகத்தை மேற்பார்வை செய்யக் கூடாது. ஆனால், கிராம அதிகாரிகளானாலும், மற்ற எந்த அரசு அதிகாக்களானாலும், பல்வேறு தரப்பட்ட அரசு அதிகாரிகளானாலும், கிராமத்தினுடைய பொது இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்பதற்காக இன்றைக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. விடுதலை அடைந்து இவ்வளவு காலத்திற்குப் பிறகு, இன்றைக்கு 16,000 கிராமங்கள் இருக்கின்றபொழுது, இருக்கின்ற சுவடிகள் எண்ணிக்கையைப் பார்ப்போமானால், 1,311 தான் இருக்கின்றன. அவற்றையும் இந்த அரசு அதிகப்படுத்த இருக்கிறது என்பதையும் எல்லா கிராமங்களுக்கும் அரசினுடைய பொது இடம் இருக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதைச் செய்கிறபொழுது, அப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் இல்லாமல், ஒவ்வொரு கிராமத்தினுடைய நிர்வாகமும் இன்னமும் திறமையாக அமையும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1982 மார்ச் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதைப் போல் கிராம நிர்வாகத்தை அபிவிருத்திச் செய்வதற்கு, கிராம அதிகாரிகளுக்கு அடுத்தபடியாக இருப்பவர்கள் வருவாய்த் துறையில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள்தான். இன்றைக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களைப் பற்றிச் சொல்வதானால், ரொம்பப் பேருக்குத் தெரியாது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்று ஒருவர் இருக்கிறார் என்று இன்றைக்குப் பேசினார்கள், அதிலே எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. அவர்களுக்கு இந்த வருவாய்த் துறையில் என்ன வேலைகள் என்பது ரொம்பப் பேருக்குத் தெரியாது. ஆனால் இன்றைக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பொறுத்தவரைச் சொன்னால், அவர்களுக்கு 20, 27 வேலைகள் இருக்கின்றன. இந்த அரசு வந்த பிறகு, அதுபற்றி அச்சடித்து, எல்லா தாலுக்காக்களிலும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அலுவலகங்களிலும் வைக்கப்பட்டுள்ளது.

Duty of the Revenue Inspectors, Duty of the Tahsildar, Duty of the R.D.O., Duty of the D. R. O.

இப்படி இன்றைக்குப் போடப்பட்ட பிறகு, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களைப் பற்றி மட்டும் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு புதிய 323 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை உருவாக்கியிருக்கிறது. முதலிலே இந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அலுவலகங்கள் 774, அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு அலுவலகம் இல்லாமல் இருந்தது. 200 ஆண்டுகள், 150 ஆண்டுகளாக அவர்களுக்கு அலுவலகம் இல்லாமல் இருந்தது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் வீதிகளிலே, தெருக்களிலே நிற்பார்கள். யாரேனும் ஏழை எளிய பொதுமக்கள் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களைப் பார்க்க வேண்டுமேயானால் தெரியாது. அவர்களுக்கு இடமில்லாத காரணத்தால், இப்படி அவர்களுக்கு இடம் இல்லாத காரணத்தால் நகரங்களிலே அவர்கள் குடியிருந்தார்கள். இன்றைக்கு இந்த அரசு உத்தரவுப் போட்டிருக்கிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அந்த பிர்க்கா தலைமையிடத்திலே இருக்க வேண்டும் என்று. அவர்களுக்கு அலுவலகம் கட்டிக கொடுத்திருக்கிறது. முதலிலே இருந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் 774 தான். ஆனால் இன்றைக்கு அரசு ஆணையிட்டுக் கட்டிடங்கள் முடிந்தும், முடியாமலும் இருப்பது 758. இந்த ஆண்டு 100 கட்டுவதற்கு அரசு அனுமதித்திருக்கிறது. இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் மொத்தமுள்ள 1,097 இடங்களுக்கும் கட்டிடங்கள் நிச்சயமாகக் கட்டப்பட்டு அவர்கள் எல்லோருக்கும் அலுவலகம் வைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1982 மார்ச் 18

பார்த்தால் முதலிலே கண்ணுக்குத் தெரிவது கிராமங்கள், அடுத்து ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் கண்ணுக்கும் பட்டிருப்பார்கள்; அதற்குப்பிறகு தாசில்தார்கள் கண்ணுக்குப் பட்டிருப்பார்கள். இன்றைக்கு இப்படித்தான் நடக்கிறது என்பதை நான் தெரிவுத்துக் கொள்கிறேன்.

நான் எதற்காக சொல்கிறேன் என்றால், முதலிலே வருவாய் வட்டங்கள் 132 தான் இருந்தன. ஆனால் இன்றைக்கு 166 இருக்கின்றன. ஆக இரண்டாண்டுகளில் 166 ஆக ஆகியிருக்கிறது என்றால் எந்த வேகத்தில் அதிகரித்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

தாசில்தார் அலுவலகங்கள் முதலில் எப்படி இருந்தது, இன்றைக்கு எப்படியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது தாசில்தாரைப் பார்க்கச் சென்றால் தாசில்தார் எழுந்து நிற்பார்; மறுபடியும் உட்கார மாட்டார். எனென்றால் வருபவர்களை உட்கார வைப்பதற்கு நாற்காலி இருக்காது, ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நிற்க வைத்துவிட்டுத் தாங்கள் உட்காரக் கூடாது என்பதற்காக நின்று கொண்டே பேசி அனுப்புகிற காலம் ஒரு காலம். ஆனால் இன்றைக்கு அப்படி அல்ல. எல்லாத் தாலுக்கா ஆபீஸ்களிலும் வருஷாவருஷம் 10 இலட்சம் 14 இலட்சம் ரூபாய் என்று அரசு கொடுக்கிறது அப்படி மாவட்டம் ஆட்சித் தலைவரிடத்தில் கொடுத்துவிட்டு எப்படியாவது செலவு செய்யுங்கள் என்று சொல்லவில்லை. அப்படிக் கொடுக்கின்றபொழுது ஒரு உத்தரவையும் போட்டிருக்கிறது. முதலில் கொடுக்கப்படும் பணத்திற்கு தளவாட சாமான்களை முதலிலே வாங்க வேண்டியது தாலுக்கா ஆபீசுக்கு; அதற்குப் பிறகு வாங்க வேண்டியது ஆர். டி. ஓ. ஆபீசுக்கு என்று உத்தரவு போட்டிருக்கிறது.

இதற்கு முன்பாக எத்தனையோ தாலுக்கா ஆபீஸ்களில் தொலை பேசி எண்கள் இல்லை. ஆனால் இன்றைக்கு தொலை பேசி எண் இல்லாத தாலுக்கா ஆபீசே உங்களாலே சொல்ல முடியாது.

எத்தனையோ தாலுக்கா ஆபீஸ்களிலே முதலில் ஜீப் இல்லை. இருந்தாலும் இங்கே சொன்னார்களே, விகடராமன் குதிரை என்று, அந்த விகடராமன் குதிரையைப் போன்ற அந்த ஜீப்புகளைப் பார்த்துவிட்டு சொல்லியுருப்பார்கள் திருமதி யசோதா என்று கருதுகிறேன். ஆனால் இன்றையதினம் விகடராமன் குதிரையை எடுத்துவிட்டு, அந்த ஜீப்புகளெல்லாம் வேகமாக ஓடும் ஜீப்புகளாக இருக்கிறது என்று சொல்ல ஆசைப் படுகிறேன்.



1982 மார்ச் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

உங்களுக்கு ஒரு விஷயத்தை மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்வேன். இப்படி தாலுக்காவிலுள்ள வாகனங்களை மாற்ற வேண்டும், அதிலே இரண்டாண்டுகளிலே மாற்றவேண்டும் என்ற சுற்றறிக்கை - ஒரு கோப்பை முதலமைச்சருக்கு அனுப்பினோம். அதிலே இந்த ஆண்டு 30, அடுத்த ஆண்டு 30, அதற்கடுத்த ஆண்டு 10 என்று அனுப்புகின்றபொழுது அவர்கள் அந்தக் குறிப்பிலே எழுதினார்கள், இந்த ஓட்டை ஜீப்புகளிலே போனால் எங்கேயாவது விழுந்துவிட்டால் அதிகாரிகளுடைய உயிருக்கே ஆபத்து வந்துவிடும்; இதை மாற்றத்தான் வேண்டுமென்கிறபொழுது ஓட்டை ஜீப்புகள் அத்தனையும் மாற்றுங்கள் என்று ஒரே உத்தரவில் 70, 75 வாகனங்களுக்குப் போட்டது, தமிழகத்தின் வரலாற்றில் மட்டுமல்ல இந்தியத் துணை கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலாவது அப்படி நடந்திருக்கிறதா என்று விசாரித்துப் பார்த்தேன். ஒரே உத்தரவில் ஒரே ஆண்டில் இப்படி 77, 78 ஜீப்புகளைக் கொடுத்த அரசு இந்த அரசுதான் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கின்றபொழுது இந்த நிர்வாகத்தை எவ்வளவு சிறப்பாகக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக இந்த அரசு எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதைத்தான் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாலுக்கா அலுவலகங்களில் ஆண்களும்,பெண்களும் வேலை செய்கிறார்கள். அங்கே கழிப்பிட வசதிகள் கிடையாது. ஆனால் இன்றைக்கு எல்லா தாலுக்கா அலுவலகங்களிலும் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, வரவேற்பாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். முன்பெல்லாம் எம்.எல்.ஏ.க்கள் உட்காருவதற்கு இடம் இல்லாத நிலை இருந்தது. இப்போது வரவேற்பாளர்கள் உட்காருவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தாலுக்கா அலுவலகங்கள் எல்லா விதமான வசதிகளோடு பெரிய பங்களாக்கள் போல் கட்டப்பட்டு இருக்கின்றன. இன்றைக்கு 20-21 இலட்சம் ரூபாய் செலவில் அவைகள் கட்டப்பட்டு இருக்கின்றன என்பதைப் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட்டாட்சியாளர்களுக்கு எவ்வளவு பணிகள் இருக்கின்றன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். கோட்டாட்சித் தலைவர் அவர்களுக்கு (ஆர்.டி.ஓ.) 55 விதமான வேலைகள் இருக்கின்றன. அவர்கள் எப்போது இருக்க வேண்டும் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும், எவ்வளவு நாள் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும், எவ்வளவு நாள் தலைமையிடத்தில் இருக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டுள்ளது. அதற்கு அடுத்து மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி இங்கே சொன்னார்கள், எல்லா வேலைகளையும் கலெக்டர்கள் தான் செய்கிறார்கள் என்று. இருக்கின்ற வேலைகளை கலெக்டர்களும் மாவட்ட வருவாய் அதிகாரிகளும் பங்கு கொள்கிறார்கள்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1982 மார்ச் 18

அதற்கென்று ஏற்கனவே உத்தரவுகள் இருக்கின்றன. இன்றைக்கு மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு 57 விதமான வேலைகள் இருக்கின்றன அவைகள் என்ன என்பதையும் இன்றைக்குச் சொல்லியிருக்கிறோம். மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கு 62 பணிகள் உள்ளன. யார் யாருக்கு என்னென்ன பணிகள் என்று வரையறுக்கப்பட்டு இருக்கின்றன. மாவட்ட வருவாய்த்துறையைப் பொறுத்தவரையில் பூரண அதிகாரம் பெற்றிருக்கிறது. எவ்வளவு சட்டங்கள் வருகின்றன, எவ்வளவு மனுக்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன, எவ்வளவு தீர்ப்புகள் கூறவேண்டும், தாலுக்கா ஆபீசை இன்ஸ்பெக்ட் செய்ய வேண்டும், இப்படிப்பட்ட வேலைகள் இருக்கின்றன.

இந்த அளவிற்குப் பணிகள் இருக்கின்ற அந்த பரிதாபக்குரிய மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு ஓராண்டுக்கு முன்பு வரையிலும், போக்குவரத்து வாகன வசதி கிடையாது. வாகன வசதி இல்லை என்ற காரணத்தினால் அவரால் விரைவான முறையில் பணிகளைச் செய்ய முடியவில்லை. தாலுக்கா ஆபீஸ் இன்ஸ்பெக்ஷன் போகவேண்டும் என்று சொன்னால், தாசில்தாரிடமிருந்து ஜீப் வாங்கிக் கொண்டு போகவேண்டும். அவருடைய ஜீப்பையே வாங்கிக் கொண்டு போய் அங்கே இன்ஸ்பெக்ஷன் செய்தால் அது எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதேபோல் ஆர். டி. ஓ. ஆபீஸ் போக வேண்டுமென்று சொன்னால் அவரிடமிருந்து ஜீப் வாங்கி போகவேண்டும். இது முன்னால் இருந்த நிலைமை. இன்றைக்கு ஏறக்குறைய 7 அம்பாசிடர் கார்களை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். மீதி இந்த ஆண்டு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முன்பெல்லாம் டெலிபோன் வசதி சரியாக இல்லை. இன்றைக்கு டெலிபோன் வசதி மட்டுமல்ல, டெலக்ஸ் வசதியும் அளிக்கப் பட்டு இருக்கிறது. எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்றாலும் உடனடியாகத் தலைமைச்செயலகத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்க வேண்டும். அங்கே நடக்கின்ற கலவரம் ஏற்பட்டு இருக்கின்ற வறட்சி, தீ விபத்து போன்றவைகளை சொல்லவேண்டும். எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும் துரிதமாக தகவல் கொடுப்பதற்கும் இன்றைக்கு டெலக்ஸ் வசதி செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எவ்வளவு சிறப்பாக வேலை செய்து கொண்டு வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். மாவட்டத்தின் நிர்வாகத்தைப் பற்றி பேசுகிறபோது, குறை காணாததால் அதிலே இருக்கின்ற நன்மைப் பற்றி எல்லோரும் தெரிவித்தார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனையோ சட்டங்களை இந்த அரசு கொண்டு வந்து இருக்கிறது, எந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் இந்த அரசு



1982 மார்ச் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வந்ததற்குப் பிறகு மக்களுடைய முற்போக்கு எண்ணங்களுக்கு ஏற்றவாறு வருவாய்த்துறை மற்ற துறைகளிலே பல சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்து அதை நிறைவேற்ற வேண்டும் என்று தமிழக முதல்வர் எடுத்துக்கொண்ட முயற்சிககு ஏற்ற வாறு வருவாய்த் துறையைப் பொறுத்தவ ரயிலும் 40 சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் எந்தச் சட்டமுன்வடிவுகளைக் கொண்டு வந்தாலும் பெரும்பாலும் அவற்றை இங்கே ஏற்று இருக்கிறீர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சங்கடத்தைச் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு விவசாயிகளெல்லாம் வரி வசூலினால் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள், என்று உங்களுக்குத் தெரியும். விவசாயிகள் அதிலே பொதுவாக உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகள் இருக்கிறார்களே அவர்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். அவர்களுக்கு நில வருமான வரி இருந்தது. தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி 1955 என்று இருந்தது. அதன்மூலம் இன்றைக்கு விவசாயிகளுக்கு ஒரு வருஷம் இலாபம் வந்தால், அவர்களுக்கு கஷ்டம் மறு வருஷம் இயற்கையினால் முடியாது. வந்தால், அதற்குப்பிறகு அவர்கள் அதை ஈடு செய்ய கொண்டு அதை எண்ணிப்பார்த்து ஒரு சட்டத்தை இந்த அரசு வரியை வந்தது. அதைக் கொண்டு வந்ததன் மூலமாக எவ்வளவு அரசு எப்படி எல்லாம் நாங்கள் தள்ளுபடி செய்கிறோம். வரியை மட்டுமே எண்ணிக்கொண்டு இருக்கவில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. முன்பு 60 ஆயிரம் விவசாயிகள் வருமானவரி கொடுத்தவர்கள், இன்றைக்கு 36 ஆயிரம் பேர்தான் வருமானவரி கொடுக்கிறார்கள். கொடுக்கின்ற எண்ணிக்கை குறைச்சல். வருமானவரி நாளுக்கு நாள் அதிகரிக்காமல் நாளுக்கு நாள் குறைந்து இருக்கிறது. அதிலே 24 ஆயிரம் பேர் இன்றைக்கு நன்மை அடைந்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50).

அதுமட்டுமல்ல, இன்னமும் சில சலுகைகள் அளிக்க இங்கே ஒரு சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்கு செலக்ட் கமிட்டிக்கு முன்னாலே கொண்டு வந்து இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே சொல்கிறபோது ஒன்றைச் சொன்னார்கள். நில உச்ச வரம்புச் சட்டம். அதில் எடுக்கப்பட்ட நிலம். எடுக்கப்பட்ட நிலத்திலே, தவணை கட்டாதவர்கள் நிலத்தையெல்லாம் திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைச் சொல்கிறபோது நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். அதிலே இருக்கிற சங்கடங்கள் என்னவென்றால் இந்தச் சட்டமுன்வடிவை

நிறைவேற்றியபோது நான் தெளிவாக இங்கே சொன்னேன். இதற்கு முன்னாலே நில உச்சவரம்புச் சட்டத்தை அரசு கொண்டு வந்தது. அது நில உச்ச வரம்பு சட்டமா இல்லையா என்று நான் சந்தேகப்படுகிறேன் என்று இங்கே தெளிவாகச் சொன்னேன். அப்படி கூறுவதற்குக் காரணம் அந்தச் சட்டத்தினால் நிலமற்ற ஏழைக்கு வெள்ளாமை செய்கிற குத்தகைதாரர்களுக்கு நன்மை அளிக்க வேண்டும். ஆனால் அந்தச் சட்டத்தினால் பெரும்பாலான இடங்களில் மார்க்கெட் வேல்யூ - சந்தைக்கடை வேல்யூவை விட அதிகமாக வேல்யூ நிர்ணயிக்கிற அளவுக்கு அதிலே சங்கடங்கள் இருந்தன. என்பதைத் தெரிவித்தேன்.

அது மட்டுமல்ல, திருச்சியிலே பல இடங்களிலெல்லாம் சில பேர்கள் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே 1 ஏக்கர் ரூ. 15 ஆயிரம், ரூ. 16 ஆயிரத்திற்கு விற்றிருக்கிறார்கள். எவ்வளவு சங்கடங்கள்? இந்தச் சங்கடத்தை எப்படி நிலமற்ற ஏழைகள் பொறுப்பார்கள்? நிலமற்ற ஏழை என்றால், நிலம் உள்ளவர்கள் இடத்திலேயிருந்து நிலத்தை வாங்கி அதை நிலம் அற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டு, நிலமற்றவர்களிடத்திலேயிருந்து பணத்தை வாங்கிஅதைப் பணக்காரர்கள் இடத்திலே கொடுக்கிறார்கள். நிலமற்ற ஏழைகளுக்குப் பணத்தை கொடுத்துவிட்டு அவர்களிடத்திலே இருந்து பணத்தை வாங்கிக் கொடுக்கிறார்கள். இது எவ்வளவு சங்கடமாக இருக்கிறது என்பதைத்தான் இங்கே கொண்டுவந்தபோது சொன்னேன். அதுமட்டுமல்ல, அப்படிப்பட்டச் சட்டத்தை கொண்டுவந்தபோது அந்த நிலத்தில் உள்ள பயிரை அதில் என்ன பயிர் போடப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது, 'காம்பன்சேஷன்' நஷ்ட ஈடு. கடலை போட்டவர்களுக்கு ஒரு காம்பன்சேஷன், கரும்பு போட்டவர்களுக்கு ஒரு காம்பன்சேஷன். பருத்தி போட்டவர்களுக்கு ஒரு காம்பன்சேஷன். அது மட்டுமல்ல, அறுவடை காலமாக இருந்தால் அப்போது நிலத்தினுடைய வேல்யூ குறையும். மற்ற நாட்களில் கூடும். எனவே அதிகாரிகள் அந்த காம்பன்சேஷன், நஷ்ட ஈடு நிர்ணயிக்க முடியாத நிலைமை இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இவைகளையெல்லாம் மாற்றுவதற்காகத்தான் நிலத்தினுடைய அடிப்படை தீர்வையில் காம்பன்சேஷன் கொண்டு வர வேண்டுமென்று இந்த அரசு கொண்டு வந்தது மட்டுமல்லாமல், எவ்வளவு நல்ல நிலமாக இருந்தாலும் சரி, அதில் கரும்பு விளைந்தாலும் சரி, அல்லது பொன்னே விளைந்தாலும் சரி, ஒரு ஏக்கருக்கு 3,500 ரூபாய்க்கு மேலே காம்பன்சேஷன் போகக்கூடாது என்று இந்த அரசு உத்தரவு போட்டது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே இதிலே இருக்கிற சங்கடங்களையெல்லாம் நாங்கள் சட்டத் துறையைக் கலந்து ஆலோசனை செய்து பார்த்தோம்.



இப்போது கொடுக்கப்பட்ட நிலத்திற்கு 3,500 ரூபாய்க்கு மேல் இல்லை என்பது உறுதியாகிவிட்டது. ஆனால் இதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட நிலம் இருக்கிறதே, அதற்கு என்ன வழி என்று கேட்டார்கள். யார், யாரிடமிருந்து நிலம் எடுக்கப்பட்டதோ அவர்களுக்கு எல்லாம் உத்தரவுபோடப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு காம்பன்சேஷன் வைத்திருக்கிறோம். அந்தப் பணம் தவணைகளில் வரும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த உத்தரவை மாற்றி இன்றைக்கு இருக்கிற புதிய சட்டத்தின்படி காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்ற முயற்சியில் சட்டத்துறையை கலந்தாலோசித்தோம். எந்தச் சட்ட வல்லுநரும் அதற்கு ஆதரவு தரமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மனதார உணருகிறோம் ; முடியவில்லை.

நிலத்திற்கான பணத்தைக் கட்ட முடியாமல் விட்டுவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அதைப் பார்க்கும்போது இரண்டு தவணை, மூன்று தவணை பணத்தைக் கட்டிவிட்டு அதற்குமேல் தவணை கட்டமுடியாமல் நிலத்தை விட்டுவிடுகிறார்கள் என்றால் அதிலிருந்து கிடைக்கிற விளை பொருளை விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு தவணை கட்டமுடியாமல் இருக்கிறார்கள் என்பதுதான் இதிலே இருக்கிற சங்கடம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை எல்லாம் என்ன செய்வது என்பதை இந்த அரசாங்கம் ஆராய்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். இந்த அரசு இன்றைக்கு முறையற்ற நில மாற்றங்களுக்குக் கொண்டு வந்த சட்டத்தை இந்த அரசு நல்லமுறையிலே நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். சிலர் நல்ல முயற்சிகளை எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் பினாமி நிலம் என்று சொன்னார்கள். நான் அதை முறையற்ற நில மாற்றம் என்று சொல்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

முதன்முதலாக இந்தச் சட்டத்தை நிறைவேற்றி 30-8-1980-ல் மைய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அதன் பிறகு ரிமைன்டர்கள் 6-10-70-ல் ஒன்று போடப்பட்டது; 25-10 80-ல் ஒன்று போடப்பட்டது ; 15-12-80-ல் ஒரு ரிமைன்டர் போடப்பட்டது. அதன் பிறகு 3-2-1981-ல் ஒரு ரிமைன்டர் போடப்பட்டது. இன்டரிம் ரிப்ளை ஒன்று அவர்களிடத்திலே இருந்து வந்தது. வந்தபிறகு மீண்டும் ரிமைன்டர் போட்டோம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நாங்கள் செய்த முயற்சிகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, இதைக் கைவிடவில்லை என்று கருதி அவர்களும் இதைப்பற்றி ஆராய்ந்து ஒரு கடிதத்தை மைய அரசுக்கும் இந்திய பேரரசினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும் எழுதினார்கள். அதன் பிற

பதில் வந்தது. இப்படி 17, 18 கடிதங்கள் அனுப்பினோம். 1980 ஆம் ஆண்டு, 8-ம் மாதம் 30-ம் நாள் முதல் கடிதம் அனுப்பப் பட்டு, அதைத் தொடர்ந்து 17, 18 கடிதங்களை அனுப்பினோம். இதிலே அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முயற்சி எடுத்துக் கொண்டால் போதுமா, வேலை முடிந்து விட்டதா என்று கேட்டால் முடியவில்லை. நான் தெரிவித்துக் கொள்வேன். இன்றைக்கு இருக்கிற சட்டத்தை மாநில முதலமைச்சர் ஒப்புதல் பெற்று, மீண்டும் அந்தச் சட்டத்தை இந்த அவைக்குக் கொண்டுவந்து, மீண்டும் மைய அரசுக்கு அனுப்ப இந்த அரசு தயாராக இருக்கிறது என்ற செய்தியை உங்களுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இங்கே சொல்லுகிற போது மாவட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் எல்லாம் அதிகப்படியாக வசூல் செய்வதிலே விவசாயிகளைக் கஷ்டப்படுத்துகிறார்கள் என்று ஒரு செய்தியைச் சொன்னார்கள். இதுபற்றி ஒரு கணக்கை உங்களுக்குத் தெரிவிக்கிற போது, நீங்கள் எல்லாம் பயந்துவிடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கு வரவேண்டிய தொகை 60,51,65,491 ரூபாய். இந்த அரசு வசூல் செய்வதில் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கு இது ஒன்றே எடுத்துக்காட்டு. அதில் இந்த ஆண்டு வசூல் செய்யப்பட்ட தொகை 8 கோடி ரூபாய்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் ஏறத்தாழ 52 கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது என்ற செய்தியைச் சொல்லும்போது நீங்கள் எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு இந்த அரசு விவசாயிகளைக் கஷ்டப்படுத்தக் கூடாது என்பதிலே அக்கறை கொண்டிருக்கிறது என்பதை.

[பிற்பகல் 1.00]

புயல் வருகிறது, வெள்ளம் வருகிறது என்று சொன்னால், முன்பு இருந்த அரசு எல்லாம், 2 அணா விளைச்சல் இருந்தால் அவர்களுக்கு முழுவதும் தள்ளுபடி. இரண்டு அணா என்று சொன்னால் இரண்டு கலம் அல்லது அதற்குக் குறைவாக விளைச்சல் இருந்தால் தள்ளுபடி கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது 6 அணா. 6 அணா என்றால் 50 சதவீதம் விளைச்சல் இருந்தால் தள்ளுபடி கொடுக்கிறோம் அதாவது 10 கலம் அல்லது அதற்குக் குறைவாக விளைச்சல் இருந்தால் இன்றைக்கு வரி தள்ளுபடி செய்கிறோம். அப்படி செய்த காரணத்தால்தான் நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு நாம் தள்ளுபடி செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த ஆட்சி வந்தபிறகு ஆதிதிராவிடர்களுக்காக எவ்வளவு அதிகமான பட்டாக்களைக் கொடுத்து இருக்கிறோம் தெரியுமா? அவற்றைச் சொல்லவேண்டுமானால், ஆதிதிராவிட மக்களுக்கு வருவாய்த்துறை மூலமாக மாத்திரம்—வருவாய்த்துறை தருவது மட்டுமல்லாமல், ஆதித்திராவிடத் துறையும் தனியாகக் கொடுக் கிறது—கொடுத்ததை நான் இங்கே தெரிவிக்கிறேன். 1-4-73 முதல் 31-3-77 வரையிலும் கொடுக்கப்பட்ட நிலப்பட்டாக்கள் 18122 நபர்கள். ஆனால் 1-7-77 முதல் 31-3-81 வரையிலும் கொடுக்கப்பட்டவை 26,631 நபர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், கூட்டு மனைப்பட்டா கொடுக்கப் பட்டதைப் பொறுத்தவரையில், 1-4-73 முதல் 31-3-77 வரையில் 21,283 பேருக்குக் கொடுக்கப்பட்டன. 1.7-77 முதல் 31-3 81 வரையில் கொடுக்கப்பட்டது 41,135 பட்டாக்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சிகரமான செய்தியாக சொல்ல விரும்புகிறேன். இந்த வகையில் ஆதித்திராவிட மக்களுக்காக இந்த அரசு காரியங்களைச் செய்து வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த தகவல்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். முக்கியமாக அவர் களின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவர விரும்புகிறேன். 1944 முதல் தஞ்சை மாவட்டத்திலே ஒரத்தநாடு பகுதியில் உள்ள வெள்ளச்சேவல் கிராமத்தில் 62 ஏக்கர் நிலங்களை அரிசனங்கள் பயிரிட்டு வந்தார்கள். 1974 ம் ஆண்டில் அவர்கள் பேல் வழக்கு தொடரப்பட்டது. 1968 வரையிலும் அந்த கேஸ் நடந்தது. பின்னர் அவர்கள்மீது போடப்பட்ட கேஸ் உண்மைக்கு மாறானது என்று சொல்லப்பட்டது. இருப்பினும் இன்று வரையில் அந்த மக்களுக்குப் பட்டா வழங்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இது பற்றி முன்பும் சொல்லியிருக்கிறேன். ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: விசாரித்து, ஆவன செல்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசுகின்ற நேரத்தில் பட்டாபாஸ் புத்தகம் பற்றிப்பேசி னார்கள். நிலவுடமை மேம்பாட்டு திட்டம் பற்றி பேசினார்கள். இந்த நிலவுடமை மேம்பாடு திட்டத்தைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புகிறேன், 1979 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் மூலம், இதுவரையில் 8,000 சதுர கிலோ மீட்டர்கள்தான் நிறைவேற்றப்பட்டுள்ளன. 18 இடங்களில்தான் இந்தத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசும்போது அவர்கள் முக்கியமான திட்டங்கள் கொண்டு வந்து இன்றைக்கு இப்படியே நீங்கள் செய்து

கொண்டுபோனால் எப்போது முடிப்பீர்கள் என்று கேட்டார்கள். இதே முறையில் போனால் இன்னும் நாம் செய்யவேண்டிய 72,000 கிலோமீட்டர் அளவீடை 10-15 ஆண்டுகளில் செய்யமுடியும் என்று சொன்னேன். அப்போது அவர்கள் ஒரு நல்ல திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று சொன்னால் 2 ஆண்டு காலம் அல்லது 3 ஆண்டு காலத்தில் அதை முடித்தால் தான் நல்லது. அப்போதுதான் அந்தத் திட்டத்தின் பலன்கள் மக்களுக்குப் போய்ச்சேரும். அப்போதுதான் மக்களும் இந்தத் திட்டத்தை இந்த அரசு செய்தது என்பதை உணர்வார்கள். ஆகவே, இந்த மீதம் இருக்கின்ற 72000 கிலோ மீட்டர் தூரத்தை இன்னும் இரண்டு ஆண்டுகளில் செய்யவேண்டும் என்று சொல்லி, இந்த ஆண்டு அந்தப் பணியைச் செய்வதற்காக 6.81 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள் என்கிற நல்ல செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே என்னென்ன நன்மைகள் செய்து இருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் உங்களுக்கு நான் சொல்லவேண்டியதில்லை. உங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிற நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டம் என்கிற அறிக்கையைப் படித்துப் பார்த்து இருப்பீர்கள். அதன் மூலமாக இந்த அரசு எடுத்து வருகிற நிலைமைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். இந்த நிலவரி மேம்பாட்டுத் திட்டத்தினாலே என்னென்ன நன்மைகள் என்று கேட்பீர்களேயானால் அதை இங்கே எடுத்துச் சொல்ல எனக்கு நேரம் இல்லை நீங்கள் எல்லாம் குறிப்புகள் படித்திருப்பீர்கள். படிக்காதவர்கள் அந்தப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, பட்டா பாஸ் புத்தகம். சட்டம் வந்தால் தான் இன்றைக்கு பட்டா பாஸ் புத்தகம் கொண்டு வரமுடியும். பட்டா பாஸ் புத்தகம் சட்டத்தின் அடிப்படையிலே வழங்கப்படயிருக்கிறது. இது நிலங்களை வைத்திருப்பவர்களுக்கு அதன் உடைமைக்கு உரிமைச் சான்றாக ரெக்ககனைஸ் பண்ணப்படும். இதனுடைய மூலப்பிரதி வட்டாட்சியர் அலுவலகத்திலே இருக்கும். அது மட்டுமல்ல, யார் வாங்குகிறார்களோ அவர்களிடத்திலேயும் இந்தப் பட்டா பாஸ் புத்தகத்தின், ஒரு பிரதி இருக்கும். இந்தப் புத்தகத்தை கொடுக்கிறபோதே, அவர்கள் வைத்திருக்கும் நிலங்களுடைய வரைபடமும் போடப்படும்; தரம் எழுதப்படும். நஞ்சையா, புஞ்சையா என்று எழுதப்படும்; வரி எவ்வளவு என்று எழுதப்படும். அது மட்டும் அல்ல, அந்த நிலத்தை யாருக்கு விற்பதாக இருந்தாலும், அல்லது வாங்குவதாக இருந்தாலும், வாங்குபவர்களும், விற்பவர்களும் அந்தப் பட்டா பாஸ் புத்தகத்தைப் பதிவு அலுவலகத்திலே கொண்டுவந்து கொடுத்தால், யார் வாங்குகிறார்களோ அவர்களுக்கு



விற்கிறார்களோ, அவர்களுக்கு மைனஸ் பண்ணியும் அதிலேயே எழுதிக் கொடுக்கப்படும். யார் கடன் வாங்கினாலும் அந்தப் பட்டா பாஸ் புத்தகத்திலேயே பதிவு செய்யப்படும். இப்போதெல்லாம் வில்லங்கம் சர்டிபிகேட் என்று இருக்கிறது அந்த வில்லங்கம் சர்டிபிகேட்டுகளை வாங்குவது அதிகமான சங்கடங்களை ஏற்படுத்தும். ஆகவே அப்படி வில்லங்கம் சர்டிபிகேட் வாங்காமல், அதிலேயே வில்லங்கம் சர்டிபிகேட்டும் இருப்பதைப் போல, பட்டா பாஸ் புத்தகத்திலேயே கடன் வாங்கினால் எழுதப்படும், கடன் திருப்பிக் கொடுத்தாலும் அதுவும் எழுதப்படும், இப்படிப்பட்ட பட்டா பாஸ் புத்தகத்தை இந்த அரசு விரைவிலே கொண்டு வந்து செயல்படுத்தயிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக நிர்வாகத்தில் திறமை உள்ள தூய்மை உள்ள இந்த அரசு பலவற்றைச் செய்யவிருக்கிறது. அடுத்துச் சொல்லவேண்டும் என்றால், எல்லையைக் காப்பதற்கு இந்த அரசு எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேநேரத்தில், பல ஊர் பெயர்களையும் மக்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு, இந்த அரசு மாற்றிக் கொண்டுவரயிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால், இராமநாதபுரம் மாவட்டத்தில் குன்னக்குடி என்பதை குன்றக்குடி என்று மக்கள் கேட்டது போல மாற்றவும், திருகோஷ்டியூர் என்பதை திருகோத்தியூர் என்பதாகவும், திருமயம் என்பதை திருமெய்யம் என்றும், ஸ்ரீரங்கம் என்பதை திருவரங்கமாகவும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள வேதாரண்யத்தை, திருமறைக்காடு என்றும்; மாயவரம் என்பதை மயிலாடுதுறை எனவும், தென்னாற்காட்டில் சிதம்பரம் என்றுள்ளதை தில்லை எனவும், தென்னாற்காட்டில் விருத்தாச்சலம் என்பதை திருமுதுகுன்றம் என்றும் இப்படி இந்த அரசு மக்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு, அந்த ஊர்களுக்கு தமிழில் உள்ள பழைய பெயர்களையே மீண்டும் கொண்டு வரயிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால் இங்கே பணம் வாங்குகிறார்கள், அங்கே பணம் வாங்குகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்......(குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, மக்களுடைய எண்ணத்தை ஏற்று, ஊரின் பெயர்களையெல்லாம் பெயர்மாற்றம் செய்யவிருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். தெருப்பெயர்கள், ஜாதிப்பெயர்களால் இருந்தது என்ற காரணத்தால் அவைகளெல்லாம் மாற்றப்பட்டு வருகின்றன. அப்படியே சில ஊர்பெயர்களும் ஜாதிப்பெயர்களாக இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் கள்ளப்பட்டி, துலுக்கப்பட்டி, போடிநாயக்கனூர் என்று. ஆகவே அவைகளையும் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது எந்த வகையில் இப்போது எடுத்துக் கொண்டிருக்கும் சப்ஜக்டோடு சம்பந்தம் உள்ளது என்று தெரியவில்லை. பேசிய உறுப்பினர்கள் விளக்கம் கேட்பதில் பொருள் இருக்கவேண்டும். இதற்கும் இந்த விவாதத்தற்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதோ கேட்கவேண்டும் என்று நினைத்தார் கேட்டுவிட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய எண்ணங்களை அவர்கள் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். தமிழிலே முன் இருந்த பெயர்கள், தமிழ் இலக்கியத்திலே இருந்த பெயர்கள் சில, இடையிலே வடமொழியின் ஆதிக்கத்தினால் மாறி விட்டன. உதாரணமாக வேதாரண்யத்தை, திருமறைக்காடு என்று சொன்னேன், சிதம்பரத்தை தில்லை என்று சொன்னேன், இவைகள் எல்லாம் தமிழிலே, இலக்கியங்களிலே இருக்கின்றன அதற்கு ஆதாரங்கள் காட்டி, அந்தப் பெயர்கள் எல்லாம் மாறிவிட்டன என்று பொது மக்கள் கடிதம் மூலம் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவேதான் சொன்னேன், பொது மக்களுடைய எண்ணத்திற்கு ஏற்றவாறு இத்தகைய மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்று.

அடுத்து, கடைசியாக நான் முடிப்பதற்கு முன்னாலே, மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று பலர் சொன்னார்கள். நான் முதலிலே தெரிவிக்கிறபோதே, நீங்கள் கோபுரத்திலேயிருந்து கொண்டு குடிசையைப் பார்க்கிறீர்கள் என்று சொன்னேன். முதலிலேயே நான் சொல்லியவைகளை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள். கீழ் லெவலிலேயிருந்து நாங்கள் எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்துக் கொண்டிருக்கிறோம். மாவட்டங்களைப் பிரிக்கிறபோது, எந்தெந்தப் பெயர்களை வைக்கவேண்டும் என்றெல்லாம் கூட பலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1.10)

இந்த கூட்டப் பேரவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களைப் பிரிப்பதைப் பொறுத்தவரையிலே எந்தக் கொள்கையை இந்த அரசு பின்பற்றுகின்றது என்பதைப் பற்றி விளக்கமாகச் சொல்லி இருக்கிறார்கள். அதனை மீண்டும் நான் படித்துக் காட்ட வேண்டியதில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக சொல்கின்றபோது அங்கே லஞ்சம் வாங்குகிறார்கள், இங்கே லஞ்சம் வாங்குகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். சில இடங்களில் குறைபாடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படி எங்கேயாவது குறைபாடு



இருந்தால் அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் அதிகாரிகள் எல்லோரும் அப்படி அல்ல. அவர்களிலே நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். சாதாரணமாக பொது மக்களிலே எல்லோரும் நல்லவர்களாக இல்லை; அவர்களிலே கெட்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆகவே பொது வாழ்க்கையிலே ஈடுபடுகின்றவர்களும் அப்படித்தான், தமிழ்நாட்டிலே பல்வேறுபட்ட சமுதாயத்திலே இருந்து அதிகாரிகளாக வருகிறார்கள், அரசியல்வாதிகளாக வருகிறார்கள். ஆனால் இந்த அரசினைப் பொறுத்தவரையிலே நல்ல முறையிலே காரியங்களைச் செய்யத் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இதற்கு முக்கியமாக இரண்டே இரண்டு வார்த்தைகள்தான் சொல்லவேண்டும். இந்த இரண்டு வார்த்தைகளும் ஒன்றோடொன்று பிணைந்திருப்பது. அதாவது தூய்மை, எளிமை. ஒருவருக்குத் தூய்மை வந்துவிட்டால் எளிமை வந்துவிடும், எளிமை வந்துவிட்டால் தூய்மை வந்துவிடும். ஆனால் இவற்றிலே ஒன்று போய்விட்டால் மற்றதும் போய்விடும். ஆகவே இந்தக் கொள்கையினை எல்லோரும் பின்பற்றவேண்டும். இதனை அதிகாரிகளும் பின்பற்றி மக்களின் எண்ணங்களைத் தெரிந்து அவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நூற்றுக்கணக்கான வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை எல்லாம் படித்துப் பார்த்து வேண்டிய பதில்களைச் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி இருப்பதற்கெல்லாம் பதில் சொல்லி இருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

### (அ) கோரிக்கை எண். 1 நிலவரித்துறை

திரு. கு. பா. பழனியப்பன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் சி. பழனிமுத்து, ஜே. ஹேமச்சந்திரன், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 1-நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,07,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 11 மாவட்ட நிர்வாகம்

*திருவாளர்கள் சு. பாலன், கே. எம். தங்கமணி, என் பழனிவேல் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ளகேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ். ரூ. 23,41,17,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண். 41 இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் துணிப்பு

திரு. கே. கல்லன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், ரா. கிருஷ்ணன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் துணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



(ஈ) கோரிக்கை எண். 46 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

*திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''மானியக் கோரிக்கை எண். 46-இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,37,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

9. அரைமணி நேர விவாதம்,

தூத்துக்குடி-திண்டுக்கல்-கரூர் அகல இரயில் பாதை,

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில், வணிகம், சுற்றுலா ஆகிய பல்வேறு துறைகளில் ஒரு பெரிய புரட்சிகரமான மாறுதலைத் தமிழ்நாட்டில் அதிலும் குறிப்பாக தென் மாவட்டங்களில் ஏற்படுத்தக்கூடிய இந்தத் திட்டம் பற்றி விவாதிக்க நேரம் ஒதுக்கியதற்காக நான் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1968-ம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கான ஒரிஜினல் ப்ரிலிமினரி சர்வே மேற்கொள்ளப்பட்டு 1979-ல் அப்-டேட்டிங் சர்வே முடிக்கப்பட்டது. தமிழகத்திலுள்ள அத்தனை கட்சிகளும் சேர்ந்து வலியுறுத்தியதின் விளைவாக இந்தத் திட்டத்திற்கு டாப் ப்ரையாரிட்டி கொடுக்கவேண்டுமென்று மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வாக்குறுதியை அவர்கள் அளித்தார்கள். அப்போது ரெயில்வே அமைச்சராக இருந்த திரு. கேதார் பாண்டே அவர்கள் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமென்றும் நான்கு ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டம் முற்றிலும் நிறைவேற்றப்படும் என்றும் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்கள். அதையொட்டி மத்திய நிதி அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சென்னையில் ஒரு விழாவில் பேசும்போது இந்தத்திட்டத்திற்குத் தேவையான நிதி அத்தனையும் அளிக்கப்படும், இந்தத் திட்டம் குறித்த காலத்தில் முடிக்கப்படும் என்றும் சொன்னார்கள். இப்படியெல்லாம் பிரதம மந்திரியும், மத்திய அமைச்சர்களும் வாக்குறுதி கொடுத்திருந்தும்கூட இந்தத் திட்டம் என்னவாயிற்று, எந்த நிலையில் இருக்கிறது என்று பார்த்தால் வருத்தமாக இருக்கிறது.

இன்றைக்கு இந்து பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மத்திய ரெயில்வே அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் புதிய ரெயில்வே பாதைகளுக்கு இடமேயில்லை என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே 1981-82 ரெயில்வே

பட்ஜெட்டில் சுமார் இரண்டு கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1982-83-ல் ரெயில்வே பட்ஜெட்டில் 77 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு பைனல் லொக்கேஷன் சர்வேயும் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. கரூர், மதுரை, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் அலுவலகங்கள் கூட இதற்காக திறக்கப்பட்டு விட்டன. இதற்கான நில ஆர்ஜித வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் ரெயில்வே துறையினரிடமிருந்து நம் தமிழக அரசுக்குக் கடிதம் வந்திருக்கிறது. இவ்வளவு ஆன பின்னரும் இத்திட்டத்தை ஊறுகாய் போடுவதற்கு முயற்சி நடைபெறுகிறதோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏறத்தாழ இரண்டே முக்கால் கோடி ரூபாயிலிருந்து ஒரு பகுதியை ரெயில்வே அதிகாரிகள் வேறு காரியங்களுக்காகச் செலவழித்துவிட்டதாக குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. எனவே இவர்கள் இந்த தூத்துக்குடி திருநெல்வேலி பாதையை மட்டும் பூர்த்தி செய்துவிட்டால் போதும்; கரூர், மதுரை-பாளையங்கோட்டை இப்போது அவசியமில்லை என்ற ஒரு முடிவிற்கு வந்து ரெயில்வே அதிகாரிகள் தூத்துக்குடி திருநெல்வேலி பாதையை மட்டும் நிறைவு செய்கிற ஒரு ஆலோசனையை மைய அரசுக்கு வழங்கி இருப்பதாக நான் அறிகிறேன். இது சரியானதல்ல. ஏனென்றால் இந்தத் திட்டம் ப்ராஜக்ட் ஓரியன்ட்டட் திட்டம். இந்தத் திட்டம் தூத்துக்குடி துறைமுகத்தை இந்தியாவின் பிற பகுதிகளோடு இணைக்கக்கூடிய திட்டம் மட்டுமல்ல, தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரமாகிய மதுரையை நேரடியாக இந்தியாவின் பிற மாநிலங்களுடன் இணைக்கக்கூடிய ஒரு திட்டம். விருதுநகர் போன்ற பெரிய வணிக ஸ்தலங்கள் டிரான்ஸ்ஷிப்மென்ட் தொந்தரவு இல்லாமல் நேரடியாக சரக்குகளை இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய இந்தத் திட்டம் வழிவகை வகுக்கிறது.

தென் மாவட்டங்களில் ஹெவி இன்டஸ்ட்ரீஸ் வருவதற்கு இந்தத் திட்டம் வழிவகுக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று தென் மாவட்டங்களில் பெரிய தொழிற்சாலைகள் ஒன்றும் இல்லை.. ப்ராட் கேஜ் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக பெரிய பெரிய தொழிற்சாலைகள் தென் மாவட்டங்களில் ஆரம்பிக்க முடியாத நிலை இருக்கிறது. சேலத்தில் இரும்பாலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதால் இந்தத் திட்டம் சேலம் இரும்பாலையையும், தூத்துக்குடி துறைமுகத்தையும் இணைக்கும். கரூர்-திண்டுக்கலுக்கு இந்தப் பாதை வருகிறபோது பிற்பட்ட பகுதிகள் வழியாக வருகின்றது. வேடசந்தூர் அதன் வழி வருகிறது. வேடசந்தூரில் சிமென்ட் ஆலை வர இருக்கிறது. ஆகவே புது தொழிற்சாலைகளை இணைக்கிற திட்டமாக இது இருப்பதால் இத்திட்டத்தை நிறைவேற வேண்டுமென்று தமிழ்நாட்டிலுள்ள சகல கட்சிகளும் அக்கறை கொண்டிருக்கிற காரணத்தால் இந்தத் திட்டத்தை இந்த



ஆண்டே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மைய அரசை நம் மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 1.20)

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர்—தூத்துக்குடி—திண்டுக்கல் ரயில் பாதைத் திட்டத்திற்கு அரை மணி நேர விவாதத்திலே கலந்து கொள்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் இந்தத் திட்டத்தின் சாத்தியக் கூறுகளைப் பற்றியெல்லாம், அதன் முக்கி த்துவத்தைப் பற்றியெல்லாம் அழகாக எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, நீண்டகாலமாக தமிழக மக்கள், குறிப்பாக தென் மாவட்டத்து மக்கள் வற்புறுத்தி வந்த ஒரு திட்டமாகும். நேரம் கிடைக்கும்போது, நம்முடைய அரசும் மதிய அரசை வற்புறுத்தி வந்த திட்டமாகும். திருச்சி, மதுரை, இராமநாதபுரத்தில் இருக்கின்ற மக்கள், வர்த்தக சங்கங்கள் இந்த திட்டத்தை வலியுறுத்தி, இதுகுறித்து தீர்மானம் மூலமும், தூதுக் குழுக்கள் மூலமும் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இந்தத் திட்டம் தூத்துக்குடி துறைமுகத்துக்கும், சேலம் இரும்பாலைக்கும், கரூர் தொகுதியிலே ஆரம்பிக்க இருக்கின்ற காகித ஆலைக்கும், கரூரிலே உள்ள செட்டிநாடு சிமென்டிற்கும், வேடசந்தூர் தொகுதியிலே உருவாக இருக்கின்ற சிமெண்ட் தொழிற்சாலைக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால், இந்தத் திட்டத்தை எப்படியாவது இந்த ஆண்டு ரயில்வே பட்ஜெட்டில் சேர்த்து விடவேண்டுமென்று, நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் முன் கூட்டியே, ரயில்வே அமைச்சரைப் பார்த்து, இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டு, நம்பிக்கையோடு இருந்தார்கள். ஆனால், அவர்கள் வேண்டுகோளும், நம்முடைய நம்பிக்கையும் வீண் போகின்ற வகையிலே இந்தத் திட்டத்திற்கு ரூ. 70 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியைத் தருகிறது.

அதுமட்டுமல்ல. தூத்துக்குடி-நெல்லை வரைக்கும், கன்னியாகுமரிக்கும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டால், திருவனந்தபுரம் வழியாக சேலத்திற்கு எளிதாக வந்துவிடலாம் என்ற ஆலோசனை கூறியிருப்பதாக இன்றைக்கு இங்கே மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஆனால், இன்றைக்கு வந்திருக்கக்கூடிய செய்தியைப் பார்க்கும்போது, நாடாளுமன்றத்தில் ரெயில்வே அமைச்சர் அவர்கள் இனிமேல், 'நோ நியூ டிரெயின்ஸ்' என்று அறிவித்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டுவிடுமோ என்ற சந்தேகம், அச்சநிலை உருவாகியிருக்கிறது. அதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால்,

பிறந்திருக்கின்ற குழந்தைக்கு 7 வேளை பால் கொடுக்க வேண்டும், அப்படி கொடுத்தால்தான் அது வளரும் என்று சொன்னால், ஒரு வேளை பால் கொடுத்துவிட்டு, இன்றைக்கு அந்தக் குழந்தைக்கு படுத்த படுக்கையாக இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே இந்தக் குழந்தையைக் காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம் உருவாகியிருக்கிறது.

மத்திய அரசைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணராமல், காலம் தாழ்த்தி வருகிறது. அதனால் இதற்கு நிதி ஒதுக்காமல், காலம் தாழ்த்தி வருகிறது. மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால் நம்முடைய மாநில அரசு எந்த வகையிலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்கு மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். அதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற கரூர்-திண்டுக்கல்-தூத்துக்குடி அகல ரயில் பாதை திட்டம் சம்பந்தமாக காங்கிரஸ் கட்சியினுடைய கருத்துக்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறி வந்திருக் கிறார்கள். தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களான ராமமூர்த்தி அவர்கள், துரை சபாஸ்டியான் அவர்கள், கோசல்ராம் அவர்கள் மிகக் கடுமையாக வலியுறுத்திப் பேசியதைப் பற்றி நாம் பத்திரிகைகளிலே பார்த்திருக்கிறோம். இன்றைக்கு நாடாளு மன்றத்திலே முன்னாள் நிதி அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சுமார் 42 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்து, சென்ற ஆண்டு மட்டும் இரண்டு கோடி ரூபாய் இந்த திட்டத்தின் ஆரம்ப வேலைகளுக்காக ஒதுக்கப் பட்டதை நாம் பார்த்தோம். இந்த ஆண்டு அவர்கள் 70 இலட்சம் ரூபாய் இந்த திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இதைப் பற்றி நாடாளுமன்றத்திலே கடுமையான முறையிலே மத்திய அமைச்சரிடம் குறை கூறியிருக்கிறார்கள். அதிலே எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. காரணம், தமிழகம் பாதுகாக்கப் படவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்கள் அங்கே கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறார்கள். ஆனால் சமீபத்திலே நம்முடைய மத்திய ரயில்வே போர்டு தலைவர் குஜரால் அவர்கள் ரயில்வே அமைச்சர் பி. சி. சேத்தி அவர்கள் ஒரு உத்திரவாதம் தந்திருக்கிறார்கள். கரூர்— திண்டுக்கல் பிராட்கேஜ் பாதை வேலைத் திட்டம் விரைவிலே தொடங்கப்படும் என்றும், ஏற்கனவே இதற்கான டெண்டர் கேட்கப்பட்டிருக்கிறதென்றும், இந்தப் பணியைத் தொடங்க 70 இலட்சம் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும், இன்னும் கூடுதலாக பணம் ஒதுக்குவதற்கு திட்டக் கமிஷனைக் கேட்டிருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.





விரைவில் அனுமதி கிடைத்து விடும், கிடைத்த பிறகு விரை வாக செயல் திட்டங்கள் நடைபெறும் என்ற உத்திரவாதத்தை திரு. குஜ்ரால் அவர்களும் திரு. பி. சி. சேத்தி அவர்களும் நாடாளுமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், பெருமதிப்பிற்குரிய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்களும் இராணுவ அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களும் நிச்சயமாக அந்த திட்டத்தைக் கொண்டுவருவதற்கு உறுதுணையாக இருக் கிறார்கள், நிச்சயமாக அது செய்யப்படும். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு எடுக்கிற முயற்சிக்கு முழு ஆதரவு தருவதற்குத் தயாராக இருக்கிறோம். மத்திய அரசு கொண்டு வரவேண்டிய அளவுக்கு இந்த அரசாங்கம் தன்னுடைய கடமையை விரை வாகவும் வேகமாகவும் செய்வதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, இன்றைக்கு கரூர், திண்டுக்கல், தூத்துக்குடி அகல ரயில்பாதை தமிழகத்திற்கு வேண்டும் என்ற விவாதத்திலே கலந்து கொண்டு பேசுவதற்கு அனுமதித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கரூர், திண்டுக்கல், தூத்துக்குடி பாதையைப் பற்றி இன்றைய பத்திரிகையிலே மத்திய ரயில்வே அமைச்சர் சொல்லியிருப்பதைப் பார்த்தால் கைவிடும் அளவுக்கு சொல்லியிருக்கிறார்களே, அதே நேரத்திலே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஏதோ உத்திரவாதம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். உண்மையிலேயே மத்திய அமைச்சர் அப்படி வாக்குறுதி கொடுத்திருந்தால் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறோம். ஆனால் நேற்றைய தினம் அந்த மானியக் கோரிக்கை விவாதத்தின் போது 70 கோடி ரூபாய்க்குப் பதில் 75 லட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பின்னர் விவாதத் திற்குப் பதில் சொல்கிற போது புதிய ரயில் பாதைகள் இல்லை என்றும் சொல்லி விட்டு, தமிழகத்திலே அது வரும் என்று முன்னாள் மத்திய நிதி அமைச்சரும் மற்றவர்களும் உத்திர வாதம் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் எப்படி நாங்கள் நம்புவது என்று தெரியவில்லை. தூத்துக்குடியிலிருந்து திருவனந்தபுரம் வழியாகப் போகும் என்று சொல்லி தமிழகத் திலே செல்கிற அந்தப் பாதைக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் இன்றைக்கு இல்லை என்று சொன்னால் தமிழகத்திலே தொழில் வளம் பெருகவேண்டும், பெரிய தொழிற்சாலைகள் வரவேண்டு மென்ற நிலையில் அந்த ரயில் பாதை வேண்டுமென்று சொல்கிற போது வேண்டுமென்றே அது போடப்படாமல் விடப்படுகிறதோ என்ற அச்சம் இருக்கிறது. அந்த ரயில் பாதை போடப்பட வேண்டுமென்று தமிழகத்திலே உள்ள அத்தனை கட்சிகளின்

உணர்வையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து எழுதி அந்த ரயில் பாதையை அமைக்க வேண்டுமென்று மைய அரசுக்கு வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கரூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி அகல ரயில் பாதை வேண்டுமென்று நீண்ட நாட்களாக தமிழக மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். 1977 ஆம் ஆண்டில் நமது அரசாங்கத்தின் கட்டடமாக டெல்லியில் இருக்கின்ற தமிழ்நாடு ஹவுஸில் அப்போது இருந்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூடி திரு. சி. சுப்பிரமணியம், ஆர். வெங்கட்ராமன், ஆர். வி. சுவாமிநாதன், பி. ராமமூர்த்தி போன்ற தலைவர்களும் என்னைப் போன்ற எளிய உறுப்பினர்களும் கூடி அப்போதே ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அப்போது இருந்த ரெயில்வே அமைச்சர் மதுதண்டவதேயிடம் கொண்டு போய்க் கொடுத்தோம். அப்போதும் அதற்கு உறுதி தரப்பட்டது. அதற்குப் பின்னாலே இப்போது மதிப்பிற்குரிய பிரதம மந்திரி அவர்களும் உறுதி கொடுத்திருக்கிறார்கள். இந்த அகல ரயில் பாதையைக் கொண்டு வந்ததற்குச் சிலருக்குப் பாராட்டு விழாக்கள் கூட நடந்து விட்டன. விருதுநகரிலே பெரும் அளவிலே பாராட்டு விழாக்கள் நடந்ததை நாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டோம். காரணம் யார் பாராட்டப் பட்டாலும் அகல ரயில் பாதை வந்து விட்டால் தகுந்த அளவிலே தமிழகம் முன்னேறி விடும். ஆனால் அதற்கு ஒதுக்கியிருக்கிற பணம் கூட வேறு இடத்திற்குப் போகிறது என்றால் அகல ரயில் பாதை அகலாமல் இருக்கவேண்டுமே என்று சொல்கிற அந்தக் கவலையின் காரணத்தினால் அனைத்துக் கட்சிகளின் சார்பிலே இங்கே நாம் வேண்டுகோள் விடுக்க இருக்கிறோம். இதனால் தென்பகுதி தொழில் வளம்பெறும் என்பதோடு மட்டுமல்ல, இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்கும் உதவிடும். ஒருமைப்பாடு ரயில் தண்டவாளம் போடுவதால் மட்டுமல்ல, தமிழகத்திலே திட்டங்கள் போட்டுகொடுத்த பிறகும்கூட அவை நிறைவேறாமல் போகிறது என்ற மனக்குறை போகும். சேது சமுத்திரத் திட்டமும் அதன் பக்கத்திலே வருகிற திட்டம்தான். அதற்கே சாலதாமதமாயிருக்கிற போது இதற்கும் காலதாமதமாகிறபோது மனத்திலே விரக்தி உணர்ச்சி வராத அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டுமென்றால் மத்திய அரசு விரைவிலே தலையிட்டு நம்முடைய வேண்டுகோளை செவியேற்று அகல ரயில் பாதையை அமைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமாக நாமக்கல் வழியாக சேலத்தினுடைய தொடர்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. தமிழகம் பொருளாதார ரீதியிலே, தொழில் ரீதியிலே முந்திச் செல்வதற்கு வழிவகைகளிலே தொய்வு ஏற்பட்டு விடாமல் இருக்க வேண்டுமென்று காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.



(பிற்பகல் 1·30)

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி, திண்டுக்கல், கரூர் அகல ரெயில் பாதை அரை மணி நேர விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை ஆதரித்து இன்றைக்கு அகல ரெயில்பாதை தமிழகத்தினுடைய மிகப்பெரிய நகரமாகிய மதுரையை மட்டுமல்லாமல் சேலம் போன்ற பெரிய நகரங்களை இணைக்கக் கூடிய ரெயில் பாதை; இதை பன்னெடுங் காலமாக தமிழக மக்கள் வற்புறுத்தி வந்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

தூத்துக்குடியிலே இருக்கிற அனல் மின் திட்டத்திற்கு வேண்டிய மிகப்பெரிய மின் சாதனங்களைக் கொண்டு வருவதற்கு தமிழகத்திலே அகல ரெயில் பாதை இல்லாத காரணத்தால் அந்த இயந்திரத்தின் விலை 20 லட்சம் என்று சொன்னால் அதைக் கொண்டு வருவதற்கு ஆகும் செலவு ஏறத்தாழ 8 லட்சம் ரூபாய் என்றிருக்கிறது. பணச் செலவு மட்டுமல்லாமல் காலம் அதிகமாகிற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழகத்திலே இல்லாமல் இருக்கவேண்டுமென்றால் இந்த அகல ரெயில் பாதையை உடனடியாக மத்திய அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்துகிற பணியிலே கூட இன்றைய தினம் மத்திய சர்க்கார் மந்தப்போக்கை கடைபிடித்துக் கொண்டிருக்கிறது. மூன்றாவது பெர்த்தை கட்டவேண்டுமென்று குரல் கொடுக்கிற போது அதுவும் காலதாமதப்படுத்தப்படுகிறது. அந்த துறைமுகம் வருங்காலத்தில் சர்வதேச தொடர்பை பெறக் கூடிய நிலையில் இருக்கிறது. அதை இணைக்கக்கூடிய இந்த அகல ரெயில் பாதையை போடுவதை துரிதப்படுத்த, இந்த கோரிக்கையை மத்திய அரசிற்கு அனுப்புவதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர், திண்டுக்கல், தூத்துக்குடி அகல ரெயில்பாதை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் முன்மொழிந்த கருத்து இந்த பேரவையினுடைய பொதுக் கருத்தாக ஏற்கலாம். இந்த விவாதத்திற்கு தாங்கள் அனுமதியளித்ததே தமிழ்நாட்டினுடைய உணர்வுகளை பிரதிபலிக்கிறது என்று நான் எண்ணுகிறேன், என்னுடைய கட்சி எண்ணுகிறது. நம்முடைய தமிழகத்தினுடைய தொழில், வணிகம், மக்கள் நலனோடு இணைந்திருக்கிறது இந்த ரெயில் பாதை. நான் திண்டுக்கல் நகரை, வேடசந்தூர் தாலுக்காவை சார்ந்தவன். என்னுடைய பகுதியிலே நீண்டகால ஆய்விற்கு பின்னாலே இந்தத் திட்டம் ஏற்கப்பட்டது. அந்த மக்கள் எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்திருக்கிறார்கள். வேடசந்தூர் வட்டாரம் ஒரு வறட்சி பிரதேசம். இப்போது தான் சில தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கின்றன. இதிலே நாம் 30 கோடி செலவிலே ஒரு

சிமெண்ட் ஆலை கேட்டிருக்கிறோம். திண்டுக்கல்லிலே லெதர் காம்ப்ளெக்ஸ் என்று மாநில அரசின் முயற்சியிலே, மத்திய அரசினுடைய முயற்சியிலே வர இருக்கிறது. தூத்துக்குடியிலே ஒரு துறைமுகத்தை நாம் உருவாக்கியிருக்கிறோம். ஆகவே தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியிலே இந்த ரெயில் பாதை ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது. சமீபத்தில் மத்தியிலேயிருந்து வந்த செய்திகளை கேட்டு இன்றைக்கு தமிழ்நாட்டிலே வர்த்தகர்கள் கவலை அடைந்திருக்கிறார்கள். ஆகவே இந்த கருத்தை நம்முடைய பொது கருத்தாக ஏற்றுக்கொண்டு, இந்த அவை ஒரு தீர்மானத்தின் மூலமாக மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். ஒரு தூதுக் குழுவை டெல்லிக்கு அனுப்பி நம்முடைய கோரிக்கையை வற்புறுத்துவதற்கு மாநிலஅரசு முன்வரவேண்டும். நாங்கள் இந்த அவையின் மூலமாக மத்திய அரசையும், மாநில அரசையும் வற்புறுத்த விரும்புவது என்னவென்றால் ரெயில்வே என்ற ஒரு பட்டியல் இன்றைக்கு மத்திய அரசிடம் இருக்கிறது என்ற காரணத்தாலே அவர்கள் அவ்வப்போது திருத்துகிற திட்டங்களிலே, நாம் அடிக்கின்ற காற்றுக்கு ஆடுகிற நாணல் புல் போல இருக்காமல் இன்றையதினம் ஒன்றை நாம் வற்புறுத்த வேண்டும். இந்த மாநிலத்தினுடைய திட்டங்கள் என்று போடுகிறபோது மாநில அரசைக் கலந்து கொண்டுதான் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்துவதற்கு நம்முடைய மாநில அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விதமான கருத்துக்கு இடம் இல்லாமல் அனைத்துக் கட்சிகளும் ஒருமுகமாக வற்புறுத்துகிற ஒரு கடமையாக, கரூர்—திண்டுக்கல்—தூத்துக்குடி அகல ரெயில் பாதையை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றுவதற்கு முன் வரவேண்டுமென்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தூத்துக்குடி துறைமுகத் திட்டம் வலியுறுத்தப்பட்ட அந்த நாள் முதலாக, அந்தத் துறைமுகத்தாலே ஏற்படக்கூடிய பலன் முழு அளவுக்குக் கிடைக்க வேண்டுமானால், அகல ரெயில் பாதை மூலமாக தமிழ்நாடு வட நாட்டோடு இணைக்கப்பட வேண்டுமென்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. வடக்கேயிருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய பொருள்கள் அகல ரெயில் பாதையிலே வந்த இங்கூட, தமிழகத்திற்குள்ளே குறுகலான ரெயில் பாதையிலே செலுத்த வேண்டிய நிலைமை இருப்பதன் காரணமாக, பொருட்களை மீண்டும் மாற்றுவது என்ற நிலைமை காரணமாக ஏற்படுகின்ற சிக்கலும் அகல ரெயில் பாதையில் எவ்வளவு அதிக பொருள்களைக் கொண்டு வரமுடியுமோ, அல்லது கொண்டு செல்ல முடியுமோ அதைச் செயற்படுத்த இந்த அகல பாதை தேவை என்று மத்திய அரசுக்கு உணர்த்தப்பட்டு வந்திருக்கிறது.





மேலும், தூத்துக்குடி முதலான பகுதியிலேயிருந்து, அல்லது தமிழ்நாட்டினுடைய தென் பகுதியிலேயிருந்து வடக்கே எடுத்துச் செல்லப்படக்கூடிய உப்பு, சிமென்ட், பெர்ட்டிலைசர் முதலான பொருள்களைக் கொண்டு செல்லக்கூடிய வாய்ப்பாகவும், தென் நாட்டிற்கு—தமிழகத்தினுடைய தென் பகுதிக்குத் தேவைப்படுகிற வடக்கே இருந்து வரவேண்டிய நிலக்கரி முதலான பொருள்கள் வருவதற்கு வாய்ப்பாகவும் இந்த அகல ரெயில் பாதையை, தமிழ்நாட்டின் குறையைப் போக்குவதற்கு மட்டும் அல்லாமல், பொதுவாக, இந்திய நாட்டினுடைய மொத்த குறையைப் போக்குவதற்கும் வாய்ப்பாக அமையக்கூடிய ஒன்று என்பதும் பொருளாதார முறையிலே விளக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பாதை ஏறத்தாழ 10, 12 ஆண்டுக்காலமாக வலியுறுத்தப்பட்டு வந்தும், 4 ஆண்டுக்காலமாக வெவ்வேறு அமைச்சரவையாலே உறுதி சொல்லப்பட்டு வந்தும், மறுபடியும் இந்த அகல ரெயில் பாதை வேலை விரைவில் நடைபெறும் என்ற நம்பிக்கையை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் நண்பர் சுந்தரராஜன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலே வற்புறுத்தினாலும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அதே போல் தமிழகத்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னாலும், மத்திய அரசு தங்களுடைய பொருளாதார கண்ணோட்டத்தில், வெவ்வேறு மாநிலங்களுடைய தேவைகளைக் கவனிக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டு, தமிழகத்தினுடைய இன்றியமையாத தேவையை உடனடியாகக் கவனிக்கத் தவறக்கூடிய நிலைமை இருக்குமானால் காங்கிரஸ் உறுப்பினர்கள் வற்புறுத்தினாலும் போதாது என்ற நிலைமையிலேதான் தமிழகச் சட்டமன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம், அல்லது' இப்படிப்பட்ட ஒரு கருத்து எடுத்து பேசப்பட்டு, அந்தக் கருத்து மத்திய அரசுக்கு தெரிவிக்கப்படுவதன் மூலமாக மத்திய அரசு வேறு காரணங்களாலே இதனை அலட்சியப்படுத்தக்கூடிய தன்மை இருந்தாலும், அதை மாற்றிக்கொண்டு இந்தத்' திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யும் என்று நான் எதிர்பார்க்கிறேன். எனவே, இந்த அவையின் சார்பில் இங்கே பேசப்பட்ட வாதத்தினுடைய அடிப்படையில் ஒருமித்த கருத்தை மத்திய அரசிற்குத் தெரிவிக்கிற நல்வாய்ப்பு காரணமாக, இந்தத் திட்டம் விரைவில் வருவதற்கு வழி வகுக்க வேண்டுமென்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தையும், தமிழக மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலேயும் அதை மத்திய அரசாங்கம் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒரு நிலைமைக்கு ஆளாக்கப்படுகின்ற வகையிலேயும் கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு

பொறுப்பேற்ற பின்பு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக எப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிறது என்பதையும் அதற்கு மத்திய அரசாங்கம் என்ன, என்ன, பதில்களை நமக்குக் கொடுத்திருக்கிறது என்பதையும் இங்கே நான் தெளிவாகச் சொல்லக் கட மைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கின்றனவோ அதேபோன்றுதான் தமிழகத்திலே இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து மக்கள் இதை அதிகமாகப் பயன் பெறக்கூடிய அளவுக்கு நிறைவேற்றப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு, தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பை ஏற்ற வுடனேயே 1978 மார்ச்சிலே மத்திய அரசிற்கு, குறிப்பாக பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதினார்கள். இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்தி 1978-லேயே அதற்கான கடிதப் போக்குவரத்தை நாம் ஏற்பாடு செய்திருக் கிறோம். 1968-லே இது துவக்கப்பட்டது என்றாலும் அதற்குப் பின்னாலே, 1978-லேயிருந்து முழு முயற்சி எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். அதைத் தொடர்ந்து 1979 ஆம் ஆண்டு ஏப்ரலிலே, 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலே எழுதிய கடிதத்தை நினைவூட்டி மீண்டும் வலியுறுத்தி நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். அதற்குப் பின்னாலே, தொடர்ந்து 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மத்திய நிதி அமைச்சருக்குத் தமிழக முதல்வர் அவர்கள் இதை வலியுறுத்தி மீண்டும் ஒரு கடிதத்தை எழுதினார்கள். அதற்குப் பின்னாலே 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மத்திய அரசிடமிருந்து நமக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்திலே அவர்கள் சொல்லியிருந்த கருத்து, கரூரிலேயிருந்து திண்டுக்கல் வரையில் புதிதாக அகல இருப்புப் பாதை அமைப்பதற்கும், திண்டுக்கல்லிலேயிருந்து மதுரை வரைக்கும் ஏற்கனவே இருக்கின்ற மீட்டர்கேஜ் பாதைக்கு இணையாக ஒரு அகல இருப்புப் பாதை அமைப்பதற்கும், மதுரையிலேயிருந்து மணியாச்சிக்கு ஏற்கனவே இருக்கின்ற அந்த மீட்டர்கேஜ் பாதையை மாற்றி அகல இருப்புப் பாதையாக அமைப்பதற்கும், மணியாச்சியிலேயிருந்து தூத்துக்குடிக்கு ஏற்கனவே இருக்கிற மீட்டர்கேஜ் பாதையோடு இணைத்து இன்னொரு அகல இருப்புப் பாதையை அமைப்பதற்கும், மணியாச்சியிலேயிருந்து திருநெல் வேலிக்கு ஏற்கனவே இருக்கின்ற மீட்டர்கேஜ் பாதைக்கு இணையாக இன்னொரு அகல இருப்புப் பாதையை அமைப் பதற்கும் அரசு உத்தரவிட்டுள்ளது என்று ஒரு கடிதத்தை நமக்கு அனுப்பியிருந்தார்கள்.

(பிற்பகல் 1.40)

அந்தக் கடிதம் கிடைத்த பிறகு நாம் அதோடு விட்டுவிட வில்லை. தமிழக முதல்வரவர்கள் மீண்டும் 1982 அம் ஆண்டு, அங்கே நான்கு சிமிட்டி ஆலைகள் இருக்கின்றன என்றும், இரசாயன உர ஆலை இருக்கிறது என்று சொல்லியும், பெரிய துறைமுகம் ஒன்று இருக்கிறது என்று சொல்லியும், அங்கே அந்த அகல இருப்புப் பாதை இல்லாத காரணத்தால் என்னென்ன



சிக்கல்கள் இருக்கின்றன என்பதையும், அது வந்தால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு ஒட்டுமொத்தமாக என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதையும் வலியுறுத்தி மீண்டும் ஒரு கடிதத்தை எழுதி, இதை நீங்கள் அனுமதித்திருந்தாலும் துரிதமாக; வேகமாக இந்த வேலைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு ஒரு கடிதம் எழுதினார்கள். இதை இரயில்வே அமைச்சருக்கு மாண்புமிகு முதல்வரவர்கள் எழுதினார்கள்.

அதற்குப் பின்பு 8-3-1982 அன்று மத்திய இரயில்வே அமைச்சரிடமிருந்து ஒரு கடிதம் நமக்கு வந்தது. அந்தக் கடிதத்திலே அவர்கள் குறிப்பிட்டிருப்பது போதிய நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னாலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, மணியாச்சி வழியாக இருக்கிற அந்தத் திட்டத்தை முதலில் நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்' அதற்குப்பின்பு நிதிநிலைமைக் கேற்ப தொடர்ந்து நாங்கள் எடுத்துக்கொள்ள இருக்கிறோம் என்ற கருத்தை முதல்வரவர்களுக்குக் கடிதமாக எழுதியிருக் கிறார்கள்.

அதேநேரத்தில் இதை எப்படிச் செயலாக்க வேண்டும். அதற்காக என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டு மென்பதிலே தமிழக அரசைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எடுத்துச்சொல்லி, மத்திய அரசிலேயிருந்து இது சம்பந்தமாக எந்தத் தாக்கீது வந்தாலும் உடனடியாகச் செய்து தர வேண்டுமென்ற அந்த எண்ணத்தை நாம் தெரிவித்திருக்கிறோம்.

இங்கேகூடச் சொன்னார்கள், இன்றையதினம் பத்திரிகையிலே பார்க்கிறபொழுது, புதிதாக எந்தத் திட்டத்தையும் எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லையே, எனவே இந்தத் திட்டத்தைக் கைவிட்டு விடுவார்களா என்று ஒரு அச்சத்தைத் தெரிவித்தார்கள்.

ஆனால் இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருப்பதிலேயிருந்து நான் புரிந்துகொண்டிருப்பதெல்லாம், இராஜஸ்தான், மேற்கு வங்காளத்திலேயிருந்து வந்திருக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய மாநிலங்களிலே புதிதாக இருப்புப் பாதை அமைக்க வேண்டுமென்று சொல்லிக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் பதில் சொல்கிறபொழுது புதிதாக எடுத்துக் கொள்ள முடியாது என்ற கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார் களேயொழிய, நாம் இப்பொழுது வலியுறுத்துகின்ற இந்த திட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே போடப்பட்ட திட்டம்; ஏற்கனவே இதற்காகப் பணம் ஒதுக்கப்பட்ட திட்டம்; எனவே, இந்தத் திட்டத்தையும் அதோடு சேர்த்து புதிய திட்டம் என்று விட்டுவிடுவதற்கு வாய்ப்பு இல்லை என்ற

எண்ணத்தோடுதான் நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அப்படித் தான் இருக்கவேண்டும். அப்படியில்லையென்றால் நிச்சயமாக மீண்டும் வலியுறுத்துவதற்கு நிச்சயமாக நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

இன்னொன்றையும்கூடச் சொன்னார்கள். அங்கே பணம் சரியான அளவிலே, தேவையான அளவிற்கு ஒதுக்கப்படவில்லை என்றும், அப்படி ஒதுக்கப்படவில்லையென்று சொன்னால் இதில் காலதாமதம் ஏற்படும் என்ற கருத்தை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைக் கொஞ்சம் சிந்திக்கவேண்டிய சூழ்நிலைக்குத்தான் இன்றையதினம் நம்முடைய அரசும், தமிழகமும் ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருந்தாலும் நாம் வலியுறுத்துவதன் மூலம்—நேற்றையதினம் இது சம்பந்தமாக என்னிடத்திலே ஒரு கேள்வியைக் கேட்ட பொழுது மாநில அரசு நிச்சயமாக மீண்டும் அதை வலியுறுத்தும் என்று சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே மாநில அரசு மீண்டும் மத்திய அரசுக்குக் கடிதம்-இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காக-திட்டத்தைப் பொறுத்தவரையில் நமக்குச் சந்தேகமில்லை என்று கருதுகிறேன், இந்தத் திட்டம் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம். இதை வேகப்படுத்த வேண்டும், துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காக மாநில அரசு மீண்டும் அவர்களை வலியுறுத்துவதற்காக நிச்சயமாகத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ நான்குமுறை தமிழக முதல்வரவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு வலியுறுத்தி வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய முயற்சிகளை எடுத்துக்கொண்ட பின்புதான் இந்தத் திட்டத்தைச் செயலாக்கலாமா வேண்டாமா என்று மத்திய அரசு சிந்திக்க ஆரம்பித்தது என்பதையும், அதற்குப்பின்னாலே மூன்று முறை தமிழக முதல்வரவர்கள் கடிதம் எழுதிய பின்புதான் அங்கேயிருந்து இந்தத் திட்டத்தை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் கருதுகிற பொழுது, நீங்கள் இதைக் கேட்கிறபொழுது நிச்சயமாகத் தமிழக அரசு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் அந்தத் திட்டத்தில் மிகவும் அக்கறையோடு வேகமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதிலே ஐயம் இருக்காது என்று கருதுகிறேன்.

அதை விட இன்றையதினம் எங்களுக்கு இருக்கின்ற மகிழ்ச்சி எல்லாம் அத்தனை கட்சிகளினுடைய தலைவர்கள் எல்லாம் தங்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையிலே இந்த நாட்டு மக்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையிலே மாநில அரசுக்கு ஒத்துழைப்பாக, தமிழக அரசுக்கு ஒத்துழைப்பாக, குறிப்பாக மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கின்ற இந்திரா



காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட மிகச் சிறப்பாக தங்களுடைய கருத்தைக் கொஞ்சம் கடுமையாகக் கூட வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைச் சொல்லியாகவேண்டும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அரைமணி நேர விவாதம் மக்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். இது நிச்சயமாக நாளையதினமே மத்திய அரசாங்கத்தினுடைய காதுகளை எட்டிப்பிடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இங்கே மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். அகல இரயில்பாதை அகழ்ந்து விடக்கூடாது. நம்மைவிட்டு அகன்று போய்விடக் கூடாது என்று சொன்னார்கள். நாம் அகலவும் விடக்கூடாது, குறுகவும் விடக் கூடாது. அந்த நிதிநிலைமையைக் குறைக்க விடாமல் அனைவருடைய ஒத்துழைப்போடும் அதை வேகமாகச் செயல்படுத்துவதற்கு மாநில அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும் என்பதையும், உடனடியாக இந்த எண்ணங்கள் பிரதிபலிக்கின்ற வகையிலே, அரசினுடைய எண்ணங்கள் பிரதிபலிக்கின்ற வகையிலே ஒரு கடிதம் எழுதப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[மாலை 4.00]

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

8. வரவு-செலவுத் திட்டம் 1982—83—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(உ) கோரிக்கை எண். 36-பாசனம்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 36,01,59 000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுதீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 36,01,57,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராமநாயக்கன் பாளையம் மலை அடிவாரத்தில் புதிய ஏரி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 36,01,57,000—இல் ரூ.100 குறைக்க வேண்டும்''.

(ஊ) கோரிக்கை எண். 50.—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 50-பாசனம் குறித்த மூலதன செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 42.72,25,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 50-பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,72,25,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடியாத்தம் தொகுதி மோர்தனா அருகே அணை கட்ட கோரியதைப் பற்றி விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 50–பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,72,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83ஆம் ஆண்டிற்கான பாசன மானியக் கோரிக்கையின் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு ** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதை

** 606–628 ஆம் பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



இந்த அவையிலே நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு, குறிப்பேட்டிலே இடம் பெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்டதற்குப் பிறகு என்னுடைய பதிலை இறுதியாக தெரிவிக்க விரும்புகிறேன் என்பதை கூறிக்கொள்கிறேன்.

*திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியத்தின் மீது நான் என்னுடைய கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். ''நீரின்றி அமையாது உலகு'' என்ற வாக்கியத்திற்கு ஒப்ப, வேளாண்மைப் பணிகளின் திட்டங்கள் வெற்றிபெறுவதற்கு நீர்ப்பாசனம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நான் முதலிலே கூறிக்கொண்டு, வட ஆற்காடு மாவட்டம் நீர்ப்பாசனத்திலே மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதற்கு எங்களுடைய மாவட்டத்திலே, ஆற்றுப் பகுதிகளே கிடையாது. ஆற்றுப்பகுதியே இல்லாத மாவட்டத்திலே நீர்ப்பாசனத்தில் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. இருந்தாலும் வேளாண்மை துறையிலே தஞ்சைக்கு அடுத்த மாவட்டமாக எங்களுடைய மாவட்டம் இருக்கிறது. உணவு உற்பத்தியில் அதிக அளவில் எங்களுடைய மாவட்டத்தில் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள்.

வடஆற்காடு மாவட்டம், 3,600 ஏரிகள், 3 இலட்சம் கிணறுகள், 2½ இலட்சம் பம்ப் செட்டுகள் உள்ள மாவட்டம்.

வட ஆற்காடு மாவட்டத்திற்கு இந்தப் பாசனத் துறை மானியக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்த்தால் கூட ஏதோ பெரிய பாசனத்திட்டம், நடுத்தரப் பாசனத் திட்டம், ஏரிகள் புதுப்பிக்கும் திட்டம், சிறு பாசனத் திட்டம் என்று பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றனவே தவிர இந்தத் திட்டங்களினால் எங்கள் மாவட்டம் எந்த பயனும் பெறக்கூடிய வகையிலே இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு 1981–82 ஆம் ஆண்டு நீர்ப்பாசனம் மீதான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்த ஆலோசனைகள்மீது எடுத்த நடவடிக்கை என்று ஒரு குறிப்பு புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தைப் பார்க்கும்போது எந்தப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டதாக அல்லது செய்யப்படுகிறதாகத் தெரியவில்லை. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பரிசீலனையில் உள்ளது, தொடங்கப்படும் நிலையில் உள்ளது. ஆய்வில் உள்ளது. அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்றுதான் கூறப்பட்டிருக்கிறது.

நான் முதலிலே இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எந்தஎந்த பகுதியிலே புதிய அணைகள் கட்டப்பட்டு, ஆங்காங்கே செவ்வனே அந்தப் பணிகள் செய்யப் படுகின்றனவா என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது வடாற்காடு மாவட்டத்திலே பல அணைகள் கட்ட வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டது. செங்கத்தில் குப்பநத்தம் அணை, போளூரில் செண்பகத்தோப்பு அணை, திருப்பத்தூரில் ஆண்டியப்பனூர் அணை, மோர்தானா அணை. பாலாற்றில் பில்லணை போன்ற அணைகள் கட்டப்பட வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டு சில அணைகளை கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்ட அந்த நிலையிலேயே இருக்கிறது. இந்த ஆண்டில் எங்கள் மாவட்டத்தில் எந்த சிறிய பாசனத் திட்டமும் இல்லை, வாய்க் கால்களும் இல்லை. பெரிய பாசனத்திட்டங்களுக்கும் நீங்கள் வாய்ப்பு அளிக்கவில்லை என்பதை முதலிலே தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

நிலத்தடி நீரையே நம்பியிருக்கிறது எங்கள் மாவட்டம். இந்த நிலத்தடி நீரைப் பொறுத்தவரையில் போதிய ஆய்வுகள் செய்து, அதன் அடிப்படையில் நிலத்தடி நீர் இல்லாத பகுதிகளுக்கு நீர்ப் பாசன வசதி செய்வதற்காக ஆங்காங்கே ஏரிகள், குளங்கள், நீர்த் தேக்கங்கள் போன்றவற்றை எல்லாம் அமைக்க வேண்டும், அதன் காரணமாக தண்ணீர் தரைமட்டத்தில் தேங்கி இருக்கும் கிணறுகள் வெட்டினாலும், தண்ணீர் கிணறுகளில் தாராளமாக கிடைக்கும், விவசாயம் செய்ய முடியும் என்ற நிலையில்தான் நாங்கள் இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட அளவிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் நீர்ப் பாசன கருத்தரங்கு அல்லது மாநாடு என்று நடத்த வேண்டும். அப்போதுதான் அந்தந்த மாவட்டத்திலே என்ன என்னகஷ்டங்கள் நீர்ப்பாசனத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்து, அந்த கஷ்டங்களைப் போக்க, உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர் நீர்ப்பாசன மாநாட்டைக் கூட்டி, அங்கே என்ன சங்கடம் இருக்கிறது என்று அறிந்து அதை நிவர்த்தி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வீணாக தண்ணீர் ஆற்றில் வெளியே செல்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தக்கூடிய அளவில் பாசனத்திற்கு மேல் மட்ட வாய்க்கால் தேவை, மேல்மட்ட வாய்க்கால் அமைக்க வேண்டுமென்று 1977-லே இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த வாய்க்கால் ஏற்கெனவே எங்களுடைய கழக ஆட்சி இருந்த நேரத்தில் ஆய்வு செய்யப்பட்ட நிலையில் இருக்கிறது. அந்த வாய்க்காலைப் பற்றி நான் பலநேரங்களில் இந்த மாமன்றத்திலே கேள்விகள் மூலம் கேட்டிருக்கிறேன். ஆய்வில் இருக்கிறது என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு இன்னும் 20 பேர்கள் பேசவேண்டியிருக்கிறது. நீங்கள்சீக்கிரத்தில் முடித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடங்களுக்குமேல் எடுத்துக்கொள்ளக் கூடாது.

(மாலை 4.10)

திரு. த. வேணுகோபால்: ஆய்வில் இருக்கிறது என்று சொன்னால். எத்தனை ஆண்டுகள் ஆய்வில் இருக்கும் என்பது தெரியவில்லை. அந்த மேல்மட்டக் கால்வாய் வேலை துவங்கி, வேலை நடைபெற்று முடிந்தால், கோவிந்தம்பட்டு, தரடாபட்டு, மெய்யூர், நல்லவன்பாளையம் ராதாபுரம், மேல்செட்டிப்பட்டு, கீழ்ச்செட்டிப்பட்டு, மேல்கச்சராப்பட்டு, போன்ற கிராமங்களுக்கு தண்ணீர் பாசனத்திற்கு கிடைக்கும். மேலும், அந்தப் பணி முடி வடைந்தால் திருவண்ணாமலை நகரத்திற்கு குடிநீர் பற்றாக்குறை தீரும், சமுத்திர ஏரிக்கும் தண்ணீர் வரும். தண்ணீர் வந்து அந்த சமுத்திர ஏரி நிரம்பினால், அது துரிஞ்சனாறுக்குச் சென்று நந்தன்கால்வாயில் இணையும். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது சாத்தனூர் அணையின் தண்ணீர் இடதுபுறக் கால்வாய் மூலம் பாய்ந்து கொண்டிருக்கிறது. அந்தக் கால்வாயின் இரு பக்கமும் சிமெண்ட் லைனிங் செய்யவேண்டும். அதன் மூலம் ஏற்பட்டு வரும் கசிவைத் தடுக்க முடியும். அதன் மூலம் மேலும் பல ஏக்கர் நிலம் பாசனம் பெற வாய்ப்பு ஏற்படமுடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாத்தனூர் அணையின் வலதுபுறக் கால்வாய் செல்லுகிற இடையில் தொண்டமானூர் கிராமம் முதல் கிராமமாக இருக் கிறது. அந்த வலது புறக் கால்வாய் மூலமாக 7000–8,000 ஏக்கர் நிலங்கள் பாசனங்கள் பெறும் என்று முதலில் சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு அதிகமான அளவிற்கு நிலங்கள் பாசனங்கள் பெற்றுள்ளன. இருப்பினும், அந்தக் கால்வாயின் முதல் கிராம மாக இருக்கும் தொண்டமானூர் கிராமத்திற்கு தண்ணீர் பாயவில்லை. அதற்குக் கிளைக்கால்வாய் வெட்டி, பயிர் செய் வதற்கு தண்ணீர் பாய்வதற்கு வசதி வாய்ப்புகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொலமஞ்சனூர்க் கிராமத்தில் ஒரு கூட்டுறவு நீரேற்றுச் சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திற்கு ஒரு லட்ச ரூபாய் அளவிற்குக் கட்டிடங்கள் கட்டி, நீண்ட நாட்களாகிவிட்டன. அந்தக் கட்டிடத்தில் அந்தச் சங்கம் செயல்படவும் இல்லை. வேறு பயனுள்ள காரியங்களும் அங்கே செய்யப்படவில்லை. அது ஆற்றின் அருகாமையில் இருக்கிறது. அந்தக் கூட்டுறவு சங்கம் பணி செய்ய ஆரம்பித்தால், அதன் மூலம் பல நிலங்கள் பாசனங்கள் பெறும் நிலையை எய்தும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலாறு படுகை என்று ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருவதால், அந்த ஆற்றின் அருகாமையில் இருக்கும் பல கிராமங்களில் புதிய கிணறு வெட்டுவதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தஆணையை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வறட்சி நிவாரண நிதியின் மூலம் வடாற்காடு மாவட்டத்தில் கிணறுகள் வெட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. கிணறு வெட்டும் வேலை பல இடங்களில் முடிவு அடையாமல் உள்ளன. அவற்றை முடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். கிணறுகள் வெட்டுவதற்காக கடன் வழங்கப்பட்டது. ஆனால் அந்தக் கிணறுகள் வெட்டப்பட்ட இடங்களில் பல பாறையாகப் போய்விட்டன. நஷ்டம் அடைந்த விவசாயிகளிடமிருந்து அந்தக் கடனை வசூலிக்காமல் இருக்கவேண்டும். அல்லது அவர்களுக்கு தவணை நீட்டிப்பு கொடுக்கவேண்டும். சோலையாக இருந்த வடாற்காடு மாவட்டம், இன்றைக்கு பாலைவனமாக இருக்கிறது. (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப் பட்டார்.)

*திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83–ஆம் ஆண்டுக்கான பாசன மானியக் கோரிக்கையைவரவேற்று, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பெரியாறு அணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சிறப்பான பணிகள் பல நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக வறட்சிக்கு இலக்காகி இருக்கும் சிவகெங்கை பகுதியும், திருமங்கலம் பகுதியும் புதிதாக பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுவதற்கு வழிவகையினைச் செய்து கொடுத்து இருக்கும் இந்த அரசுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். சிவகெங்கைபகுதி நீர் வளம் இல்லாத ஒரு பகுதியாகும். அந்தப்பகுதிக்கு பெரியார் வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பாசன வசதி செய்துக் கொடுக்க முன் வந்துள்ள புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு நீர் பாசனத் துறை அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையில். அதே தருணத்தில் வைகையில் 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக வைகையில் உடைப்பு ஏற்பட்டு கால்வாய்கள் சேதம் அடைந்துள்ளன. அவைகளை இன்னும் புதுப்பிக்காத நிலைமை இருந்து வருகிறது. அந்த நிலைமையை நான் 1980 ஆம் ஆண்டு மானியத்தின் போதே இந்த அவையில் சுட்டிக் காட்டிப் பேசியிருக்கிறேன். இன்று வரையில் அந்தக் கால்வாய் புதுப்பிக்கப் பெறவில்லை. ஆகவே அவைகளை புதுப்பித்துத் தருமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்கிறேன்.



முன்பு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வைகையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை, வெள்ளத்தை தடுத்து முதுகளத்தூர் வறட்சிப் பகுதிக்கு பயன்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் வைகை மூலம் பரலியாற்றில் இணைத்து கிருதுமால் நதியும், ரகுநாத காவேரி என்று அழைக்கப்பெறும் குண்டாறையும் இணைத்து பாசனம் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை தீட்டி அதற்கான நிதி ஒதுக்கமும் செய்தது. கிருதுமால் நதியை வைகை ஆற்றுடன் இணைக்கும் பணி நடபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் பரலியாற்றை இணைக்கும் பணி இன்னும் தொடங்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டவிரும்புகிறேன். மானாமதுரைக்கு அருகில் இருக்கும் ஏனாத்கோட்டை என்ற கிராமத்தில், 2, 3 ஏக்கர் நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக விளங்கும் 2, 3 நபர்கள் அதைத் தடுக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக இதுவரையில் ஏறக்குறைய 110 லட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த திட்டம் தொடங்கப் படாமல் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களும் இதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்து எங்களுக்கு பாசன வசதியை ஏற்படுத்தி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதுகளத்தூர் தாலுக்காவிற்கும், கமுதி தாலுக்காவிற்கும், ராமநாதபுரம் தாலுக்காவில் திருப்புலாணி ஒன்றியங்களும், களரி கண்மாய் பகுதிகளுக்கும் நீர்ப்பாசனத்திற்காக பயன்படும் ஒரே ஒரு ஆறாக இருப்பது குண்டாறு எனப்படும் ரகுநாத காவேரியே ஆகும். இந்தக் குண்டாறு மதுரை மாவட்டம் திருமங்கலம் பகுதியில் உற்பத்தியாகி, களரி கண்மாயில் போய் சங்கமம் ஆகிறது. இந்த கண்மாய்களில் ஏறத்தாழ 13 கிராமங்களினுடைய ஆயக்கட்டுகள் அடங்கியிருக்கின்றன. அந்தக் குண்டாறு கமுதியிலிருந்து அதற்குப் பிற்பாடு பேரையூர், முதுகளத்தூர்,

மேலசெல்லாவனூர், கீழச்செலாவ்னூர், ..ப்பனூர், சித்திரங்குடி, இலஞ்சம்பூரி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம், அப்படி நிறைய கிராமங்களுக்கு, ஏறக்குறைய 150 கண்மாய்களின் வழியாக, அங்கே பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த ஒரு ஆற்றைத் தவிர, முதுகளத்தூர் பகுதி, ஏழை எளிய விவசாயிகளுக்கு, பாசன வசதித் தரக்கூடிய நீர்ப்பாசன ஆறுகள் வேறு எதுவும் அந்தப்பகுதியில் இல்லை. அப்படி இருக்க, இந்த ஆறு உற்பத்தியாகும் இடத்தில் திருமங்கலம் பகுதியில் சென்னைப்பட்டி அருகில் குண்டாற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி புதிதாக பாசன வசதி தரவேண்டும் என்ற ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஏற்கெனவே அங்கே பாசனம் பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு பகுதிக்கு பாசனத்தை தடை செய்து, புதிதாக இன்னொரு பகுதிக்கு அந்த வசதியை செய்து கொடுப்பதென்றால், அது எந்த வகையில் நியாயமாகும் என்பதை அரசு தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே பாசன வசதியை அதிலிருந்து பெற்று வரும் எங்களுடைய பகுதியும் சேர்த்து அந்தத் திட்டத்தில் இருக்குமேயானால், அந்தத் திட்டத்தில் எங்களுடைய பகுதிக்கு பாசனம் பாதிக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, எங்களுடைய பகுதிக்கும் பாசன வசதி கிடைக்கும்படி, அந்த மாவட்டத்தில் ஒரு பகுதி இதனால் பாதிக்கப்படாதபடி, மாற்றியமைத்து திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு கடலாடி பகுதிக்கென்று மலட்டாறு திட்டம் ஏற்கெனவே தீட்டப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் சட்டப் பேரவையில், கடந்த 10 ஆண்டு காலமாக முடிவு எடுக்கப் படாமல் ஆய்வில் இருப்பதாக சொல்லப்பட்டு வருகிறது. விரைவிலே அதற்கான முடிவுகளை எடுத்து அந்தத் திட்டத்தைக் இந்த நிதி ஆண்டிலே நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

(மாலை 4.20)

*திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம், பாசனம் மீதான செலவு பற்றிய மானியக் கோரிக்கையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

பாசன வசதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமான தல்ல. பார்க்கப்போனால் இது மிகவும் குறைவாகும். ஆகவே நம்முடைய மாநிலத்திலே இந்தத் தொகையை இரட்டிப்பாக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அதன்படி எல்லா திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



பாசனத் திட்டங்கள் ஆய்வுப்பிரிவுக்கு அதிகமான பொறியாளர்களை நியமிக்கவேண்டும். 20,25 ஆண்டு காலமாக ஆய்விலேயே இருக்கும் சிறிய மற்றும் நடுத்தர பாசனத்திட்டங்களைப்பற்றி மதிப்பீடு செய்து உடனடியாக அவற்றை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பருவமழை சரியாக இல்லாத காரணத்தால் சில மாவட்டங்களில் போதுமான பருவமழை பெய்யவில்லை என்று சொல்லி இருக்கிறீர்கள். அந்த மாவட்டங்களில் நிலவும் வறட்சிக்கு என்ன நிவாரணப் பணிகளை எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள் என்பது பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. இதைக் காண மிகவும் வருத்தமாக உள்ளது. ஆகவே அங்குள்ள விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கு உகந்த திட்டங்களைத் தீட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறுபாசனம் என்பதைப் பொறுத்தவரையிலே தமிழகத்தில் 37,000 ஏரிகள் உள்ளன. ஆற்றுப்பாசனத்தை நம்பி 9,30,000 ஹெக்டேர் நிலங்களும், குளங்கள், ஏரிகள் பாசனத் த நம்பி 9,10,000 ஹெக்டேர் நிலங்களும் கிணற்றுப் பாசனத்தை நம்பி 10 இலட்சம் ஹெக்டேர் நிலங்களும் உள்ளன. இப்போது 37,000 ஏரிகள் உள்ளன. அந்த ஏரிகள் எல்லாம் மண்மேடிட்டு, தூர்ந்து போய் உள்ளன. இதனால் திட்டமிட்ட காலத்திற்கு பாசன நீர்பிடிப்பு குறைந்துவிடுகிறது. வறட்சி நிவாரண வேலை செய்தபோதிலும் கூட ஒரு 5 சதவிகித தூர் மட்டுமே வெளியே கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால் மாவட்டத்திற்கு குறைந்தது 50 ஏரிகள் வீதம் தேர்ந்தெடுத்து மதகு மட்டத்திற்குத் தூர் வாரி புதுப்பித்துக் கொடுக்கவேண்டும். பழுது பார்த்த பிறகும் கூட ஏற்கெனவே வண்டிப்போக்குவரத்துக்குப் பயன்பட்டு வந்த ஏரிக்கரைகளை மீண்டும் வண்டிப்போக்குவரத்துக்குத் தகுதியானவைகளாகச் செப்பனிடவேண்டும். அப்படிச்செய்து அவற்றை வண்டிப் போக்குவரத்துக்குரிய சரியான இடங்களாக மாற்றியாக வேண்டும். வீராணம் ஏரி சோழர் காலத்திலே கட்டப்பட்ட ஏரியாகும். அந்த வீராணம் ஏரியினைத் தூர் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏரிக் கரைகளைப் பலப்படுத்தும்போது மண் அரிமானத்தைத் தடுக்கும்பொருட்டு, தகுதியான மரங்களைக் கரைகளில் வளர்க்கவேண்டும்.

அடுத்து ஏரிகளுக்குச் செல்லும் கால்வாய்களை அகலப்படுத்தினால் வெள்ளக்காலங்களில் ஏரிகளில் விரைவாகத் தண்ணீர் நிரம்பும். உதாரணமாக சேலம் மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம். வசிஷ்ட நதியிலும், சுவேதா நதியிலும் தலா பத்து இடங்களில் தடுப்பு அணைகள் கட்டி ஆத்தூர் தாலுக்காவின் நிலத்தடி நீரை உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீரின் தூய்மை கெடுவதுபற்றிச் சொல்ல விரும்புகிறேன் தொழிற்சாலைகளின் கழிவுநீரைப் பதப்படுத்தவும் தங்களுடைய இடங்களிலேயே தேக்கி தூய்மையைத் பராமரிக்க வேண்டும். தொழிற்சாலை மற்றும் சுகாதார சட்ட விதிகள் இருந்தும் கூட அவற்றைச் சரியாகக் கண்காணிக்காத காரணத்தால் ஆறுகளின் தூய்மை கெடுகின்றது என்பது அரசுக்குத் தெரியாமல் இல்லை. சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது புரியவில்லை.

அடுத்து குட்டை கட்டும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயங்குகிறது. அது ஏன் என்பதுதான் புரியவில்லை. சேலத்திலிருந்து பரிந்துரை செய்யப்பட்ட 50 குட்டைத் திட்டங்களை ஏன் அனுமதிக்கவில்லை, என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழ்நாடு மாநில குழாய்க் கிணறுகள் கழகத்தின் மூலம் மெய்யான ஏழை எளிய சிறிய விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பீர்களேயானால் பெரிதும் மகிழ்ச்சி அடைவோம். ஆனால் ஏதோ ஒரு கண்துடைப்புக் கழகமாக இருந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையையும் இந்தச் சமயத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நீர் ஆய்வு நிலையம் நிறுவப்பட்டதை வரவேற்கிறேன். அதை மேலும் விரிவுபடுத்தி அதனுடைய தரமான ஆலோசனைகள் பொதுப்பணித்துறைக்கும் விவசாயிகளுக்கும் கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

அடுத்து தமிழகத்திலே ஆறுகள்தோறும் கடைமடை வரை பாசன ஆலோசனைக் குழுக்களை நியமனம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வசிஷ்டநதி, கோமுகிநதி, சுவேதா நதி பாயும் பகுதிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கவேண்டும்.

அடுத்து மத்திய தொழில் நுட்பக்குழு பரிந்துரை செய்துள்ளவாறு மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று நீரை வெகு விரைவாக கிழக்கு நோக்கித் திருப்பி விடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுகிறேன். அடுத்து ஏரிகளிலே ஆக்கிரமிப்பு அதிகமாக உள்ளது. இப்படி ஏரிக்குளங்களிலும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும், கரைகளிலும் வாய்க்கால்களிலும் தனியார்களுடைய ஆக்கிரமிப்பு அளவுகடந்து அதிகரித்துவிட்டன. இவற்றைத் தயவு தாட்சண்யமின்றி அப்புறப்படுத்தி பாசனத்தின் முழுப் பயனும் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலுக்காவில் பைத்தூர் ஆற்றில் ஒரு அணைக்கட்ட ஆய்வுகள் பலமுறை நடந்தன. அந்த ஆய்வு நடத்தப்பட்டு கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் ஆகிவிட்டன.



அப்போது அதனுடைய மதிப்பீடு 30 இலட்சம் ரூபாயாக இருந்தது. இப்போது நீண்ட நாட்களாகவே மறு மதிப்பீடுகளிலேயே காலம் கடந்து வருகின்றது. ஆகவே பைத்தூரில் ஒரு அணைக்கட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கந்தசாமி புதூருக்கு மேற்கே ஏரசக்கல் ஓடையின் குறுக்கே ஒரு ஏரி கட்டுவதற்கு ஆய்வு செய்யவேண்டும்.

அடுத்து மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை வாய்க்கால் மூலம் ஆத்தூர் வசிஷ்ட நதியில் சேர்த்துவிடுவதாக பத்திரிக்கையில் வந்திருந்தது. அது உண்மையா? அதுபோன்ற திட்டம் அரசிடம் உள்ளதா? .....(மணியடிக்கப்பெற்றது)

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பாசனம், பாசனம் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தமிழ்நாட்டில் நீர்வளங்களைக் கண்டறிந்து, பாசனத்திட்டங்களை அபிவிருத்திச் செய்து, இருக்கிற பாசன நிலங்களுக்கு பாசன உறுதி செய்து விவசாய நிலங்களுக்கு பாசன வசதி கிடைப்பதற்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில் ஆற்று நீர் மூலம் கிடைக்கக் கூடிய பாசனம் குறைந்து வருகிறது, என்று காரணத்தால் தமிழ்நாட்டில் குழாய்கள் வாரியத்தை அமைத்து அதன் மூலம் நிலத்தடி நீரை பயன்படுத்துகிற, நல்ல பயனுள்ள காரியங்களை செய்ய முன் வந்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக சொல்லப்போனால் காவிரி படுகை மேம்பாடு அடைவதற்கு, வளப்படுத்துவதற்கு அங்கே திட்டங்களைத் தீட்டி, அதை நிறைவேற்றி வருவதில் கால தாமதம் ஏற்பட்டு வருகிறது. எனவே, விரைவில் அந்தத் திட்டத்தைத் தீட்டி இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் முடித்து அந்த விவசாயிகளுக்கு உறுதியான பாசன வசதி கிடைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கடலில் சென்று வீணாகிற நீரை பயன்படுத்தி பாசனத் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது என்பதைக் கொள்கை குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய பகுதியில் ஆறுகளிலிருந்து பல்வேறு நிறைவு திட்டங்கள் மூலமாக பாசன வசதிகளைப் பெற்று, அந்தப் பகுதி நிலங்களில் விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால் அந்தத் திட்டங்களெல்லாம் அரைகுறை

யாக, முழுவதுமாக நிறைவேற்றப்படாத காரணத்தால் விவசாயிகள் முழுவதும் அதனால் பயன்பெற முடியாத நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியில் நீர் இறைவு திட்டங்கள் அனைத்தும் ஒரு குறைந்த, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முழுமையாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 25 ஏக்கருக்கு மேல் இருக்கிற எல்லாப் பகுதி களுக்கும் வடிகால் வெட்டிக் கொடுத்து, அந்தப் பாசன வடிகால்களை சீரமைத்து, பாசன வசதி எற்படுத்திக் கொடுத்தால் அந்தத் திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்த முடியும். எனவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட திட்டங் களை நிறைவேற்றுகிறபோது அந்தத் திட்டங்களுக்காக மக்களிட மிருந்து பணம் வாங்குகிற முறையை மாற்றி, அரசாங்கமே அந்த வசதியைச் செய்து கொடுத்து விவசாயிகள் நன்மை பெறக் கூடிய அளவில் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு செய்யாத காரணத்தால் இப்படிப்பட்ட பாசனம் பெறுகிற பகுதிகள் எல்லாம், இன்னும் சொல்லப்போனால் பரம்பிக்குளம் ஆளியாறு போன்ற பகுதிகளில் பாசனம் பெறுகின்ற நிலங்களின் கணக்குகளை மறைத்து, அதன் மூலம் அரசுக்கு வரும் வருவாயை மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பட்ட சூழ்நிலையைப் போக்குவதற்கும் வரியைக் குறைப்பதற்கும் அந்தப் பாசன பகுதிகளை அரசாங்கமே எடுத்து, செலவு செய்து பாசன வசதியை உறுதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது பகுதியில் வடிகால் வசதி குறைந்திருக்கிறது. அந்தக் குறைவின் காரணமாகத் தண்ணீர் முன்னால் வராமல் இறுதி காலத்தில் வருவதனால் அந்த விவசாயப் பயிர்கள் மூழ்கக்கூடிய அளவில் நிலைமை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு, வடிகால் திட்டங்களை நிறைவேற்றினால் கூட, அந்த வடிகால் திட்டங்கள் நிறைவு பெறாத காரணத்தால், தண்ணீர் தேங்கி பயிர்கள் வீணாகும் நிலைமை இருக்கிறது. அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்னுடைய பகுதியில் வடிகால் வெட்டுவதாகச் சொன்னார்கள். அதை வெட்டுவதற் காக நிலங்களைக் கையகப்படுத்தி, வடிகால் வெட்டுவதற்கு முயற்சி எடுத்தார்கள். அது நிறைவு பெறாமல் இருந்தாலும், நிறைவு விழாவைக் கொண்டாடிச் சென்றுவிட்டார்கள். அந்த வடிகால் நிலங்கள் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. எனவே மனங்கொண்ட நாட்டில் ஆற்றில் இருக்கிற ஆக்கிரமிப்பு களை அகற்றி, வடிகால் வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல முள்ளி யாற்றை கடலுக்கு நேரிடையாக வெட்டி, கடலுக்குள் அந்தத் தண்ணீர் போகாமல் இருக்கும் அளவில் அணையைக் கட்டி, அதன் மூலம் வடிகால் வசதியை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



(மாலை 4.30)

அதேபோல் முள்ளியாறை கடலுக்கு நேரடியாக வெட்டி கடல் நீர் உள்ளே போகாமல் அணை கட்டி அதன்மூலம் வடிகால் வசதியை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கோடை வடிகால் வாய்க்கால்களையும் வெட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். செட்டிபுலம் நீர் இறைவைத் திட்டம், மருதூர் வடக்கு மஞ்சக்கண்ணி நீர் இறைவைத் திட்டம், அகத்தியன்பள்ளி நீர் இறைவைத் திட்டம், பஞ்சத்திக்குளம் மேற்கு, மருதூர் தெற்கு, அகத்தியன்பள்ளி நீர் இறைவைத் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பாசனம் என்ற மானியக் கோரிக்கை மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன். அமைச்சர் அவர்களின் கொள்கை விளக்கக் குறிப்பிலே மேல் பரப்பிலுள்ள தண்ணீரை 95 சதவீதம் உபயோகப்படுத்தி கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்து தமிழ்நாடு பிற மாநிலங் களிலிருந்து தண்ணீர் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இந்தக் குறிப்பில் இருக்கிறது. ஆகவே நான் இங்கே வற்புறுத்த விரும்புவது என்னவென்றால், காவிரியில் இருந்து நமக்குக் கிடைக்கவேண்டிய தண்ணீரை பெற எடுத்திருக்கக்கூடிய தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேலும் தொடர வேண்டும். இரண்டு தரப்பி லும் பேச்சுவார்த்தை, மூன்று தரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்துவதில் நாம் மிக மிக அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மேற்கு நோக்கி பாயும் தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி அவர்களை கேட்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் கேரளத்தில் இருப்பவர்கள் மேற்கு நோக்கி பாயும் தண்ணீர் தங்களுக்குத் தேவையாக இருக்கிறது, இல்லாவிடில் கடல் அரிப்பால் தங்கள் மாநிலம் பாதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அது அவர்கள் தேவை, நம் வறட்சி காரணமாக நிவாரணம் பெற கேட்கிறோம். ஆகவே இரண்டு மாநிலங்களும் நிதானமாகப் பேச்சுவார்த்தை கள் நடத்தி தீர்க்கக்கூடிய பிரச்னையாகக் கருதவேண்டும். இதை ஒரு சூடான பிரச்னையாக மாற்றிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. கேரளா இடதுசாரி ஜனநாயக சக்தி வளர்ந்துவரும் மாநிலம். எனவே இந்த இரண்டு மாநிலங்களும், நம் மாநிலமும் கேரளா மாநிலமும் எந்தளவிற்கு நீக்குப்போக் கோடு பிரச்னையைப் பேசித் தீர்க்க முடியுமோ அப்படிச் செய்வதில் கவனமாக இருக்க வேண்டும்.

அடுத்து, நிலத்தடி நீரைப் பயன்படுத்துகிற வகையில் அரசு முழுமூச்சோடு இறங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம் மாநிலத்தில் மூன்றில் இரண்டு பகுதிகள் வறட்சியான பகுதிகளாகும். ஏழை, நடுத்தர, பணக்கார விவசாயிகள் கூட சொந்த முயற்சியில் பாசனம் பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே ஓரளவு துளிர்ந்து வளர்ந்திருக்கும் சமுதாயக் கிணறுகள் என்ற பாங்கினை அரசு பெற்றிடவேண்டும். இன்று தமிழ்நாட்டில் அது முக்கிய தேவையாக இருந்து வருகிறது. அப்போதுதான் சிறிய, நடுத்தர விவசாயிகளுக்கு, வறட்சியால் பாதிக்கப்படுகிற விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கமுடியும். ஆகவே அந்தத்துறையில் அரசு கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

அடுத்து, நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்து நிறைவேற்றுவதில் நாம் இன்னும் அதிகமான அக்கறை செலுத்த வேண்டும். ஆய்வு நிலையில் நீண்ட காலத்தை அது இழுத்திவிடுகிறது. திண்டுக்கல் தொகுதியில் கூட எண்டலபாறையில் ஒரு ஓடை சிறுமலையில் இருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கு பத்து இலட்சம் ரூபாய் செலவில் ஒரு குளத்தைக் கட்டினால் அங்குள்ள மக்களுக்கு உதவியாக இருக்கும் என்று கோரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது அரசு ஆய்வில் இருக்கிறது. அதையும் பரிசீலிக்கவேண்டும்.

சிறுமலையில் இருந்து ஓடுவருகிற தண்ணீரைத் தேக்கி பயன்படுத்த ஏழலோடு என்ற இடத்தில் ஒரு குளம் அமைக்கவேண்டுமென்று அந்தத் தொகுதி விவசாய மக்கள் கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அதை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும்,

பின்னர் குதிரையாறு திட்டம் வேகமாக அமலுக்கு வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த வட்டாரத்திற்கு அது மிகவும் பயன்படும் ஒரு திட்டமாகும். ஆகவே அதை விரைவில் அமலுக்குக் கொண்டு வர அரசு முயற்சி செய்யவேண்டும்.

ஏற்கனவே திட்டமிட்டு செயலாற்றிக்கொண்டு வரும் பாலாறு பொருந்தலாறு பாசனப் பகுதிகளில் எவ்வளவு தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று திட்டமிருக்கிறதோ அந்தப் பகுதி முழுவதற்கும் தண்ணீர் செல்லவில்லை. இன்னும் அந்தக் கால்வாய் கூட பூர்த்தியாகவில்லை என்று அறிகிறோம். ஆகவே அந்தத் திட்டம் ஏன் தாமதப்படுகிறது என்பது பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து குடகனாறு திட்டம் பொறுத்த ஏன் பல ஆண்டுகளாகியும்கூட அத் திட்ட வேலைகள் முடிக்கப்படாமல் இருக்கிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அதில் சில குறை



பாடுகள் இருந்தாலும் அது அந்த வட்டார மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய திட்டமாகும். அது பாசன உறுதிப்படுத்தக் கூடியதிட்டமாகும். ஆகவே இந்தக் குடகனாறு திட்டத்தை மறுபரிசீலனை செய்து நல்ல திட்டமாக அமல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்று வெள்ளக் காலங்களிலே அதிகமான தண்ணீர் கடலிலே போய் கலக்கின்றது; அதைத் தடுப்பதற்கான முயற்சிகளைத் தொடங்கி, மாநில அரசு ஆய்வு செய்வதாக கடந்த காலத்திலே அமைச்சர் அவர்கள் பலமுறை இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள். காவிரியில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகின்றபோது, அந்தத் தண்ணீரில் ஒரு பகுதியை புதுக்கோட்டை வறட்சிப் பகுதிகளுக்கு உபயோகிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிபட்ட திட்டத்தை ஆய்வு செய்வதற்கு மேற்கொள்ள வேண்டும். சடைமடைப் பகுதிக்குச் சென்று ஆற்று நீர் கடலிலே கலக்கின்ற பல்வேறு சூழ்நிலை தமிழகத்திலே இருப்பதாகக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நிலத்தடி நீரைப் பெறுவதிலும், இப்படிப்பட்ட பெருக்கெடுத்து ஓடும் நீரைக் கட்டுப்படுத்தும் திட்டத்தையும் செய்து, அந்தத் தண்ணீரை வறட்சிப் பிரதேசங்களுக்கு மாற்றுவதற்கான திட்டத்திற்கு நாம் முயற்சிசெய்யவேண்டும்.

அதேபோல், இன்றைக்கு வைகை சீர்திருத்தத் திட்டம் நீண்ட காலமாக அமல் நடத்தப்பட்டு வருகிறது. அதைப்பற்றி இந்தக் குறிப்பிலே பார்த்தால், சரியாக தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, அதை வேகமாக, துரிதமாக அபிவிருத்தி அடைய செய்ய வேண்டும். அப்படி அபிவிருத்தி அடைந்தால்தான், மதுரையிலே உள்ள திருமங்கலம் உசிலம்பட்டி போன்ற தாலுக்காக்களுக்கு அதிகமான உதவியாக இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட வறட்சிப் பிரதேசங்கள் பயனடைவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, மதுரை நகரில் 2, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை வைகை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து, நகரம் முழுவதும் பரவுகின்ற நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. நாம் அதைத் தடுக்க தடுப்புச் சுவர் போடுவதாகச் சொல்லி, அது தாமதமாகி வருகிறது, அதையும், துரிதமாக முடிக்க அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சாதாரணமாகச் சிறிய திட்டங்களைப் போடும்போது, அவைகள் லாபகரமாக இருக்கிறதா என்பதை மட்டும் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்ப்பதும் பழைய முறை. அது இப்போது படிப்படியாக கைவிடப்பட்டு வருகின்றது. பிரிட்டிஷ் காலத்திலே தான் அந்த முறை இருந்தது; பின்னர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இப்படிப்பட்ட நிலை இருந்தது. 1967-க்குப் பின்னால் இதிலே சிறுசிறு மாறுதல் ஏற்பட்டு வருகிறது. ஆகவே, இதிலே அந்த வட்டாரத்திலே உள்ள

மக்களுக்கு லாபம் இருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும். இந்தத் திட்டத்திற்கு இவ்வளவு பணத்தைச் செலவு செய்தால், அதிலே எவ்வளவு லாபம் வரும் என்பதைப் பார்க்கக் கூடாது.

அதேபோல், இன்றைக்கு வாசுதேவநல்லூரில் செண்பகத் தோப்பு அணைக்கட்டுத் திட்டம் ஆய்வில் இருக்கிறது. அந்த அணைக்கட்டு உடைந்திருக்கிறது. ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கிறது. இது குறித்து கேரள அரசோடு பேசி, அங்குள்ள பொதுப் பணித் துறையோடு ஆலோசனைகள் செய்து, அந்த அணைக்கட்டை ரிப்பேர் செய்ய வேண்டும். அதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கெட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

> ''கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
> எடுப்பதூஉம் எல்லாம் மழை''

என்று வள்ளுவப் பெருந்தகை கூறி சென்றிருக்கிறார். உழவுத் தொழலுக்கு இன்றியமையாதது நீராகும். அப்பேர்ப்பட்ட நீர்ப்பாசனத்தைப் பற்றி இங்கே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, ஒரு சில கருத்துக்களை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த காலத்தில் கூறிய பிரச்னைகளின் மீது பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து, அவைகளைப் பற்றி இந்தக் குறிப்பிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அதேபோல், இன்றையதினம் கொடுத்திருக்ககூடிய குறிப்பிலே மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளை, கிழக்கு நோக்கி திருப்பி விடுகின்ற அளவுக்கு செய்யயிருப்பதால், அதன்மூலம் தமிழகம் நல்ல முறையில் செழிப்படையும் என்பதற்கான சீரிய திட்டங்களை செய்ய இருப்பதற்காக் பாராட்டுகிறேன். இதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு தனது அறிக்கையில். கேரளாவில் உள்ள ஆறுகளிலிருந்து உபரியாக 46.66 டி. எம். சி. தண்ணீரை திருப்புவதற்கான சாத்திய கூறு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அந்தக் குழு சொன்னதற்குப் பிறகு, இதிலே காலதாமதம் செய்யாமல், பேச்சுவார்த்தைகள் நடத்தி, சுமுகமான முறையிலே, அந்த ஆறுகளிலே உள்ள நீரைத் திருப்பி விட்டால், நம்முடைய தமிழகத்திலே கோவை மாவட்டம், மதுரை மாவட்டம்,



திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் பயன் படுகின்ற நிலைமை ஏற்படும். இதை விரைவிலே செய்வதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கங்கை—காவிரி இணைப்புத் திட்டம். இன்னும் இந்தத் திட்டம் பற்றி பேச்சுவார்த்தை அளவிலேயே இருந்து கொண்டிருக்கிறது. இந்த திட்டத்தை விரைவிலே முடிக்கவேண்டும். நாம ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறோம். வேற்றுமையிலே ஒற்றுமை காண்பது இந்திய நாடு. ஆகவே, இந்த வகையிலே அண்டை மாநிலங்கள் தங்களுக்கு இருக்கும் உபரி நீரைப் பகிர்ந்து கொண்டால்தான் நாம் வேற்றுமையிலே ஒற்றுமை காண முடியும். ஆகவே, இந்த கங்கை—காவிரி நீர்த் திட்டத்தை விரைவிலே முடிக்கவேண்டும் என்பதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கங்கை காவிரியை உடனடியாக இணைக்காவிட்டாலும் குறைந்தது கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு ஆகியவற்றை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4.40)

இன்றைய தினம் நீர்ப்பாசனத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகவும் சீரிய முறையிலும் எப்படியும் தமிழகத்திலே நம்முடைய காலத்திலே அத்தனை நிலங்களையும் நல்ல வளமுள்ள நஞ்சை நிலங்களாக மாற்றிவிடவேண்டும்ென்ற சீரிய எண்ணத்தோடு பாடுபட்டுக் கொண்டுருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். 500 ஏக்கர் பாசன வசதி அளிக்கும் கண்மாய்களை நவீனப்படுத்துகின்ற திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். புள்ளப்பாளையம் ஏரியை முதலிலே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே பெத்துப்பட்டி ஏரியில் மேடு பரவி புல்வெளியாகி இருக்கிறது. அதைக் கவனித்து அந்த ஏரியை நவீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய விவசாயிகள் ஏழை எளியவர்கள் 1, 2 ஏக்கர் வைத்திருக்கின்றார்கள் தங்களுடைய நிலத்திற்கு தாமே ஒரு பெரிய கிணற்வைத் தோண்டி பம்புசெட்டு அமைத்து மின்சாரம் பெற்று விவசாயம் செய்துகொண்டிருக்கின்ற சிறிய விவசாயிகளுக்கு ஏழை எளிய பாட்டாளிகளுக்கு நல்வாழ்வு கொடுப்பதற்காக நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்துவரும் புரட்சித் தலைவர் அரசு அவர்கள் முன்னேறுவதற்காக குழாய் கிணறுக் கழகம் அமைக்கின்ற புதிய திட்டத்தைக் கொண்டுவந்திருக்

கிறார்கள். அதைப் பாரராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் மூலமாக ஏழை எளிய அரிசன விவசாயிகள் சிறப்பாகப் பயன் அடையத் தக்க வகையில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு நேரங்களிலே நான் இந்தச் சட்டமன்றத்திலே பேசுகின்றபோது கூறியிருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்ற ஒரு கருத்தை நான் எடுத்துச் சொல்லவிரும்புகிறேன். கடந்த நீர்ப்பாசனத் துறை மானியத்திலே நான் பேசும்போது சோத்தாம்பாக்கம் கோம்பை, அதை கீழ்க் கோம்பை என்றும் சொல்லலாம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அங்கே இருக்கின்ற மக்கள் 10, 15 ஆண்டுக்காலமாக அந்தக்கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் புல்வெட்டி கண்மாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் ஆயிரக்கணக்சான ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உண்டிகொடுத்தோரே உயிர் கொடுத்தோர், உண்வெனப்படுவது நிலத்தொரு நீரே என்ற புறநானூற்றுக் கருத்திற்கிணங்க இந்த ஆண்டு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்ககளைக் கொண்டுவந்து இருக்கின்றார்கள். 1982-83 ஆம் ஆண்டு பாசனத் திட்டங்கள் கீழ் பேசுவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்தமைக்காக முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஆயிரக்கணக்கான விவசாயிகள் நலம்பெறுகின்ற அளவுக்கு நல்லதொரு நிலைமையை உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பவானிசாகரிலிருந்து தடப்பள்ளி வாய்க்காலை சீரமைக்க வேண்டும். கீழ்க்கோடியிலிருந்துகொண்டிருக்கின்ற 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் சரியாக விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது கடைக்கோடியிலே இருக்கின்ற அந்த மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய முறையிலே அந்த வாய்க்காலை சீரமைக்கவேண்டுமென்று பன்னெடுங்காலமாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டிலே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு அதை இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலாவது எடுத்து கடைகோடிப் பகுதிகளிலே இருக்கிற அந்த விவசாயிகளின் நலத்திலே அக்கறை எடுத்து நிறைவேற்றித்தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே இருக்கிற அனந்தசாகர் ஏரியை சீர்படுத்த வேண்டும். கோபியிலேயிருந்து பக்கத்திலுள்ள பி. மேட்டுப்பாளையம் என்ற கிராமத்தில் பன்னெடுங்காலமாக அந்த ஏரி மண் மேடிட்டு கிடக்கிறது. அதை செப்பனிட வேண்டுமென்று மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரிடமிருந்து அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நடப்பாண்டிலே இந்த திட்டத்தை எடுத்து அந்த ஏரியை செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் 2,000 ஏக்கர் நிலங்களுககு அந்தப் பகுதியில் பாசன வசதி கிடைக்கும்.

அதேபோல கூகலூரிலே இருக்கிற வாய்க்கால் 40 ஆண்டு காலமாக சோதனை வாய்க்காலாகவே இருக்கிறது. ஒரு வாய்க்கால் சோதனை வாய்க்காலாக இருக்குமானால் 25 ஆண்டுகளுக்கு பின்னாலே அது நிரந்தர வாய்க்காலாக மாற்றியமைக்கப்படும். ஆனால் இந்த கூகலூர் வாய்க்கால் 40 ஆண்டு காலமாக சோதனை வாய்க்காலாகவே இருந்து வருகிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பரிந்துரை செய்யப்பட்டு தலைமைப்பொறியாளரிடமிருந்து மதிப்பீடுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த வாய்க்காலை நிரந்தர வாய்க்காலாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பகுதியாக இருக்கிறது. இதை அமைத்துத் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அந்தப் பகுதியில் 300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற வழி இருக்கிறது.

அதேபோல அப்பர் பவானி என்று சொல்லி பவானிசாகரிலே தண்ணீர் நிரம்புகிறபோது எக்சஸ்ஸாக வருகிற தண்ணீரை எடுத்து திங்களூர், தாளவாடி, கோசலம் போன்ற பகுதிகளிலே இந்த தண்ணீரை நிரப்பி பெரியார் மாவட்டத்திலே வறட்சிப் பகுதியாக இருக்கிற இந்தப் பகுதிகள் நலம்பெறுகிற வசதியை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு பகுதியிலே பொன்விளைந்தகளத்தூர் ஏரி என்று ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினரும் பார்வை யிட்டிருக்கிறார்கள். இந்த அணை பல ஆண்டு காலமாக மண் மேடிட்டு இருக்கிறது. மழை வருகிற போது உடைப்பு வருகிறது என்ற காரணத்தால் அதை கல்லணையாக கட்டித் தர வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் அவர்களை வலியுறுத்தி வருகிறார்கள். அதை செய்து தரவேண்டுமென்று கேட்டு வாய்ப்பு அளித்த துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. செ.சிவசாமி: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, எடுப்பதும் கெடுப்பதும் எல்லாம் மழை என்று வள்ளுவன் வாக்கிற்கிணங்க நமக்கு எந்த அளவு மழை பெய்கிறதோ அந்த அளவிற்குத் தான் நம்முடைய நீர்ப்பாசனம் இருந்து கொண்டி ருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றியமைப்பதற்காக நீண்ட காலமாக கங்கை காவிரி திட்டம் கொண்டு வரப்போவதாக சொல்லப்பட்டது. அது இப்போது அவிந்து விட்டதாக நினைக்கிறேன், விந்திய மலை குறுக்கே இருப்பதால் தண்ணீர் வராது என்று சொல்லப்படுகிறது. விந்திய மலைக்கு தெற்கே மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி போன்ற நதிகளை ஒருங்கிணைத்துஉபரித் தண்ணீரை தமிழகத்திற்கு கொண்டுவரும் இந்தத் திட்டத்தை கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். நமக்கு இருக்கிற கவலையெல்லாம் மழைக் காலத்திலே காவிரியிலே வரக்கூடிய தண்ணீரை தேக்கி அதிகபட்சமாக விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு கொண்டு வரமுடியுமா என்பதை பரிசீலனை செய்யவேண்டும். திருச்சி மாவட்டத்தின் வறட்சிப் பகுதி, புதுக்கோட்டை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டங்களிலே காவிரியின் உபரி மழைத் தண்ணீரை உபயோகப்படுத்துவதன் காரணமாக நல்லதொரு நீர்பாசனத் திட்டத்தை கொண்டு வரமுடியும்.

அதுமட்டுமல்ல, மேற்கே பாயக்கூடிய ஆறுகளை கிழக்கு நோக்கி திருப்புவதன் காரணமாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி நீர்ப்பாசனம் நல்ல முறையிலே கொண்டு வர



முடியும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வைகை திட்டத்தின் அடிப்படையிலே 476 கண்மாய்கள் பாசனத்தை பெறுகிற மிகப் பெரியத் திட்டம். அந்தத் திட்டம் 137 லட்ச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருப்ப தாகச் சொல்லப்படுகிறது.

இந்தத் திட்டங்கள் உருவாகிற அதே நேரத்திலே நமக்கு மழை மூலமாக வரக்கூடிய தண்ணீரைத் தேக்கக்கூடிய நீர் நிலைகள் எங்கெங்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதோ அங்கே யெல்லாம் நீரைத் தேக்கி, அதன்மூலமாக அதிகமான கண்மாய்களில் நீரைத் தேக்குவதன் மூலமாக நல்லதோர் பாசனம் கொண்டு வரமுடியும். அந்த அடிப்படையிலே திட்டங்கள் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4-50)

மழைக் காலங்களிலே, 1978-லே உடைபட்ட கால்வாய்கள் இன்று வரையில் சீர்செய்யப்படாமல் இருந்து கொண்டிருக் கின்றன. வைகைக் கால்வாயின் இரண்டு கரைகளையும் சீர் செய்வதன் மூலமாக நல்லதோர் திட்டத்தைக் கொண்டு வரமுடியும். நிலத்தடி நீர் மூலமாகத்தான் மேற்கொண்டு அதிகமான உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையில் நாம் நிறைவு செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எந்த அளவுக்கு நிலத்தடி நீரை உபயோகிக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நிலத்தடி நீரைக் கண்டுபிடிப்பதற்கென்று ஆய்வுக் குழு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆய்வுக் குழு மூலமாக, எந்த, எந்த இடங்களிலே எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்பதை விவசாயிகளுக்குத் தெரிவிப்பதன் மூலமாக அரசாங்கமே நேரடியாகத் திட்டங்கள் தீட்டி, நல்லதொரு நீர்ப்பாசன நிலைமையைக் கொண்டு வரவேண்டும். அதன் மூலமாக, கிணறுகள் தோண்டுவதற்கு நாம் ஆதரவாக இருக்கலாம். அந்த அடிப்படையிலே நம்முடைய திட்டங்கள் தீட்டப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, வறட்சி நிவாரணப் பணி வேலைகள் செய்யக்கூடிய காலத்திலே சாதாரணமாக, கரைகளைப் பலப் படுத்தும் முறையிலே அன்றாடம் சாதாரண மக்களுக்கு வேலை கொடுக்கும் முறையிலே திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால், இன்றையதினம் கண்மாய்களை ஆழப்படுத்தும் முறையிலே, கண்மாய்களை பலப்படுத்தும் முறையிலே, முழுவதுமே அந்த ஆழப்படுத்தும் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டிகுளம் போன்ற கண்மாய்களைச் சீர்திருத்த உலக வங்கியின் மூலமாக கொடுக்கப்படும் நிதியினைப் பெற்று திட்டங்கள் தீட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதே போல், ஆயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதியுள்ள எல்லா விதமான கண்மாய்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய கண்மாய்களை, குறிப்பாக, ஆர். எஸ். மங்கலம் கண்மாய், கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் தூரத்திற்கு மேலே இருப்பதன் காரணமாக, அதிலே 20 மடைகளுக்கு மேல் இருப்பதன் காரணமாக, அந்தக் கடைசியிலிருந்து இந்தக் கடைசிக்குப் போகவர கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இரண்டு கரைகளின் மேலே பக்கா ரோடுகள் போட்டுக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நதிநீர் கடலில் போய் விழாத அளவுக்கு எந்த அளவுக்கு தேக்குவதற்கு செய்யமுடியுமோ அந்த அளவுக்கு நீர்ப்பாசன நிலைகளை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிமராமத்தைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்கள் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, உத்தரவு போடப்பட்டு இருப்பதாக. ஆனால், நேற்று வரையிலும் அதிகாரிகளிடம் கலந்து பேசியதிலே எந்த விதமான குடிமராமத்தும் செய்ய மாட்டோம், அதற்கு புரவிஷன் கிடையாது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, மீண்டும் வற்புறுத்தி, குடிமாரமத்தை அந்த டிபார்ட்மென்ட் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கண்மாய்களுக்கு உள்ளே நீர்ப்பிடி உள்ள நிலங்களைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அந்த நீர்ப்பிடி நிலங்களைத் தேவைப்பட்டால் வேறு இடங்களிலே நிலச் சொந்தக்காரர்களுக்கு இடம் கொடுத்து, கண்மாய்களிலே அதிகமான தண்ணீர் தேக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டிப்ளமோ பொறியாளர்கள் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைதினம் பி. இ. பட்டம்படித்த பொறியாளர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, டிப்ளமோ பொறியாளர்களைப் பிரிவு அலுவலர்களாக நியமனம் செய்ய உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3:1 டிப்ளமோ என்ற விகிதத்தை மாற்ற உத்தரவிட வேண்டும்.

பணி நிரந்தரம் இல்லாமல் 500 பொறியாளர்களுக்கு மேல் உள்ளனர். சிறப்புத் தேர்வின் மூலமாக அவர்களை நிரந்தரமாக்க வண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அது மட்டுமல்ல, கொடுமுடிஆறுக்காக இன்று வரைக்கும் ரூ.1 கோடி செலவு செய்யப்பட்டு இப்பொழுது அது பாதியிலே நின்று கொண்டிருக்கிறது. ஒருசில செல்வாக்கு படைத்தவர்களின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். அந்த திட்டத்தை உடனடியாக அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், நந்தன்கால்வாயையும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே, சுப்பன் கால்வாய் திட்டத்திற்கு நீண்ட நாட்களாக, பல இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு,ப் இபொழுது பாதியிலடே நின்று கொண்டிருக்கிறது. அதையும்முடிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

*திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தியத்தினை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி சொல்லி, இன்றைக்குத் தர்மபுரி மாவட்டம் மிகவும் பிற்பட்ட மாவட்டம் என்பது நாடறிந்த உண்மையாகும். சென்ற ஆண்டு வறட்சியின் போது, இந்த அரசு தீட்டிய திட்டங்களின் அடிப்படையில் தர்மபுரி மாவட்டத்திலே, வறட்சி மீட்பு நிவாரணப் பணி மிகத் தீவிரமாக நடந்து, பல்வேறு ஏரிகளிலே, கால்வாய்கள் எல்லாம், நல்ல முறையிலே தூர் எடுக்கப்பட்டு, நல்ல பயன் உள்ளதாகத் திட்டங்கள் செயலாக்கப்பட்டதற்காக அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். புரட்சித் தலைவரவர்களையும் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்ததிட்டம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

அடுத்து, புரட்சித் தலைவரவர்கள் தமிழ்நாட்டிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு தர்மபுரி மாவட்டத்திற்கு ஒன்பது நீர்த்தேக்கத் திட்டங்களைக் கொடுத்து அந்தத் திட்டங்களுக்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். அந்த ஒன்பது திட்டங்களையும் மிகவும் சிறப்பாக புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்பட்ட திட்டமென்பதை இங்கே சொல்லி, எங்கள் மாவட்டத்திலே உள்ள மக்கள் புரட்சித் தலைவரவர்களை மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றும் குறைந்தது 3 கோடி, 4 கோடி ரூபாய் அளவிற்கு 9 திட்டங்களும் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன.

அந்தத் திட்டங்களில் ஒன்றுதான் கலவரப்பள்ளு அணைத் திட்டம். ஹோசூருக்கு அருகில் கட்டப்படும் திட்டம். அந்தத் திட்டம் பற்றி வழக்கு மன்றத்திற்குச் சென்று தற்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார், அரசினுடைய கையாலாகாத தன்மையின். காரணமாகத்தான் இந்தத் திட்டத்தின் வேலை நடக்கவில்லை என்று. அவர் அங்கே நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். அவர் ஒரு வழக்கறிஞர். உச்ச நீதிமன்றத்திலே விதிக்கப்பட்டிருக்கின்ற தடையின் காரணமாக அந்த வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் கூட இந்த அரசின் மீது மக்களுக்குக் காழ்ப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கின்றார்கள்.

அடுத்து, தர்மபுரி மாவட்டத்தில் இத்தனை நல்ல திட்டங்கள் செயல்பட்டாலுப்கூட, பெருமளவிற்கான திட்டங்கள் இன்னும் ஆய்வில்தான் இருக்கின்றன. அந்தத் திட்டங்களைப்பற்றி நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வேப்பணப்பள்ளி ஒன்றியத்தில் நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே சிங்கரப்பள்ளி அருகில் ஒரு அணை கட்டுவதற்கான திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதைக் கட்டித் தருவதற்கு முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹோசூர் தாலுக்காவில் சின்னாற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி சிப்காட்டிற்குக் குடிதண்ணீர் கொடுப்பதற்காக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அணையை விரைவில் கட்டி ஹோசூரிலுள்ள சிப்காட்டிற்குத் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

தென்கனிக்கோட்டை வட்டத்தில் தொட்டல்லா அணைக் கட்டைக் கட்டித்தர வேண்றுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்ணகரம் தாலுக்காவில் உள்ள பாப்பாரப்பட்டிக்கு அருகில் ஓடுகின்ற சின்னாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டுத் திட்டம் ஆய்விலே இருக்கிறது. மழைக் காலத்திலே வருகின்ற நீரைத் தேக்கி வைக்கின்ற அளவிற்கு அணையைக் கட்டினால் அந்தப் பகுதியின் வளர்ச்சிப் பயனுள்ளதாக இருக்கும். அங்கு வறட்சியாக உள்ள பகுதிகள் இருக்கின்றன. அவைகள் பாசனம் பெறுவதற்கும் அது வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

சிறுபாசனத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்திலே மிக அதிகமான ஏரிகளைக் கட்டுவதற்கான திட்டங்கள் ஆய்விலே இருக்கின்றன. அந்த ஏரிகளையெல்லாம் நம்முடைய ஆட்சிக் காலத்திலேயே கட்டித்தரவேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்,



என்னுடைய தொகுதியில் வேப்பணப்பல்லி ஒன்றியத்தில் அலேகுந்தாணி என்ற கிராமத்திற்கு அருகில் உள்ள ஏரி, கிருட்டிணகிரி ஒன்றியத்தில் ஆலப்பட்டி ஏரி, வெலகலஹள்ளி ஏரி, குருதொட்டனூர் ஏரி, இட்டிக்கல் அகரம் ஏரி, மந்திரி கவுண்டன் கொட்டாய் ஏரி, படேத்தலா இப்படிப் பல தூற்றுக் கணக்கான ஏரிகள் ஆய்விலே இருக்கின்றன. ஆய்வில் உள்ள அந்த ஏரிகளைக் கட்டித் தருவதற்கு அரசு முற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

படேத்தலா ஏரி என்பது கிருஷ்ணகிரி நகரத்திற்கு அருகில் இருக்கிறது. 1978 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், உலக வங்கி நிதியின் மூலமாக 500 ஏக்கர் பாசனம் பெறும் ஏரிகளைக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் கொண்டு வருகிறோம் என்று அரசு அறிவித்தது. அந்த ஏரி 900 ஏக்கரா ஆயக்கட்டாக இருக்கின்ற ஏரி. இந்தக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் அதைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்கண்டேயா நதியில் இருந்து படேத்தலா ஏரிக்கு கால்வாய் ஐந்து அடி அகலப்படுத்தினால் இன்னும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்ற வாய்ப்பு இருப்பதால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் மிக அதிகமான திட்டங்கள் ஆய்விலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர்படுத்தி, செயல்முறைக்குக் கொண்டு வந்து, ஏரிகளையும், அணைகளையும் கட்டித்தந்தால் தர்மபுரி மாவட்டம் வறட்சி மாவட்டமாக இல்லாமல் மிகவும் செழிப்பான மாவட்டமாக ஆவதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த மாவட்டத்தின் ஒரு பக்கம் கர்நாடக மாநில எல்லையை ஒட்டியும், இன்னொரு பக்கம் ஆந்திர மாநில எல்லையை ஒட்டியும் இருக்கின்ற காரணத்தால் அங்கே மலைப்பகுதி பெரிதும் இருக்கிறது. எனவே மலையிலிருந்து ஓடி வருகின்ற தண்ணீரை ஆங்காங்கு தேக்கி வைக்கும் வகையிலே ஆய்விலே உள்ள திட்டங்களை நல்லமுறையில் செயல்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களையும், அரசையும் கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்] [1982 மார்ச் 18

''நீரின்றி அமையாது உலகம்'' என்பது வள்ளுவன் வாக்கு. தசரதன் மகன் இராமனை அயோத்தி மக்கள் எப்படி விரும்பினர் என்று கம்பன் கூறும்போது, ''உண்ணும் நீரினும் உயிரினும் உன்னையே உவப்பர்'' என்று சொல்லுகிறான். அந்த அளவுக்கு இந்த நீர்ப்பாசனத் துறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறை என்ற காரணத்தால், என்னுடைய ஆலங்குளம் தொகுதியிலே தாமிரபரணி ஆற்றில் இருந்து கோடகன் கால்வாய் மூலம் கங்கைகொண்டான் குளத்திற்கு நீர் கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது.

எனக்கு முன்னதாக ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த பாசத்துக்குரிய தம்பி கருப்பசாமி பாண்டியன் அப்போது நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு குழந்தைவேலுவும் அப்போது சொன்னார்கள். எப்படியும் இந்தத் திட்டத்தை 1978–79-க்குள் நிறைவேற்றித் தந்துவிடுவோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்தத் திட்டம் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. 1980 ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே சொல்லும்போதும் நிச்சயமாக இந்தத் திட்டத்தை அரசு ஏற்றுச் செய்யும் என்று உறுதிப்படுத்தி வந்தார்கள். ஆனால் இதுவரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. தயவு செய்து இந்த 1982-83 ஆம் ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றித் தரவேண்டும் என்று நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சேரன்மாதேவி தொகுதியில் மணிமுத்தாறு கால்வாயில் 80 அடி உயரத்தில் தண்ணீர் இருந்தால்தான் தண்ணீர் விடமுடியும் என்று சொல்லப்படுகிறது. அதை மாற்றி 40 அடி இருந்தாலே தண்ணீர் விட முடியும் என்ற சூழ்நிலை இருப்பதால், 40 அடியிலே கால்வாயை வெட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தில் கடையம் பஞ்சாயத்து யூனியனில் பண்டாரக்குளம் ஊர் குளத்தைச் செப்பனிடுவதற்கு கிட்டத்தட்ட 6 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டதாகக் கேள்வி. அதை நடப்பு ஆண்டிலாவது எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 18] [திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன்]

பிடிப்பு நல்ல நிலையில் இருப்பதாகவும், திருச்சி சூப்பிரன்டெண்டு என்ஜினியர் அலுவலகத்திலிருந்து 3 கோடியே 60 இலட்சத்துக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிகிறேன். ஆகையினால் இந்தத் திட்டத்தைக் கைவிடாது உடனடியாக வேலையை ஆரம்பிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லை மாவட்டத்தில் பச்சையாறு திட்டத்தினால் சுமார் 170 குளப் பாசனங்கள் பயனடையும். இது நெல்லை மாவட்டத்தில் சிறந்த திட்டம். அந்தத் திட்டம் நிச்சயமாக நிறைவேறும் என்று எண்ணிய நேரத்தில் மத்திய திட்டக் கமிஷன் அங்கே போய்ப் பார்த்து சிங்கவால் குரங்குக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று கூறி, மனிதரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்று எண்ணுகின்ற இந்த நேரத்தில் குரங்கு வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்தில் மத்திய அரசு அனுப்பிய திட்டக் கமிஷன் அறிவிப்பு மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கின்றது. எப்படியும் பச்சையாறு திட்டத்தை மேல் மட்டத்தில் அமைக்காவிட்டாலும், சிறிது தாழ்வான இடத்திலாகிலும் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பாமினி ஆற்றிலிருந்து கோவிலூர், முத்துப்பேட்டை, ஆலங்காடு கிராமப் பகுதியில் உள்ள மானாவாரி நிலங்களுக்கு இறவைப் பாசனவசதி செய்யும் கோரிக்கை நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இத்திட்டம் நிறைவேறினால் மேலே கண்ட கிராமங்களும் மானாவாரி நிலங்களும் பயன்படும்.

இது பாரதி நூற்றாண்டு. 'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்' என்று பாரதி பாடினான். நீர்வழிப்பயணம் துவங்க அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதனால் கிட்டத்தட்ட கோடிக்கணக்கான ரூபாய்கள் எரிபொருள் நமக்கு மிச்சமாகும். கூவத்தில் படகுவிட்டு சரக்குப் பொருள்களை ரயிலில் லாரிகளில் கொண்டு போவதைத் தவிர்க்கவேண்டும். அப்படிப்பட்ட நீர்வழிப்பயணத்தை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வரவிரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்து தஞ்சை மாவட்டத்திற்குப் போகின்ற வழியிலே கொள்ளிடம் பாலம் உள்ளது. அந்தப் பாலம் 1954—ல் கட்டப்பட்டது. அந்தப் பாலத்தில் இன்னும் சுங்க வரி வசூலிக்கப்படுகிறது.

நான் சமீபத்தில்கூட அங்கு போய் இருந்தேன். அந்தப் பாலத்திற்கு சுங்க வரி வசூலிக்கிறார்கள். கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக என்று சொல்கிறார்கள். இது நியாயம்தானா? என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதை

[திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்] [1982 மார்ச் 18

அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன். 1954-லே ஆரம்பிக்கப்பட்ட பாலத்திற்கு இன்று வரை சுங்க வரி வசூலிக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு, எண்ணூர் பகுதியிலே, திருவொற்றியூர் பகுதியிலே இருக்கின்ற எண்ணூர் பகுதியில் தொழிற்சாலைகள் மிக அதிகமாக உள்ள இடம். அங்கே தொழிற்சாலைகளுக்கு ஏராளமாக தண்ணீர் கொடுக்கிறார்கள். ஆனால் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கவில்லை. எனவே, தொழிற்சாலைகளுக்கு கொடுக்கின்ற தண்ணீரிலே ஒரு சிறு பகுதியாவது, ஜனங்களுக்கு கொடுத்து, அங்கே குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சென்னை நகரத்தினுடைய குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்ய ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலம் என்ற நீர்த் தேக்கத்திலிருந்து பூண்டி நீர்த் தேக்கத்திற்கு 15 டி.எம்.சி. நீர் கொண்டுவருவதற்கான கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தின் ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டது என்று 1981-82-ல் சொல்லப்பட்டது. ஆனால் 1982-83-ல் அது இன்னும் துவக்கத்திலே இருப்பதாக சொல்லப்படுகிறது. அதையும் விரைவிலே செய்ய வேண்டும்.

அதேபோன்று மேற்கு நோக்கி பாய்கின்ற நதிகளை கிழக்கு நோக்கி பாய்கின்ற திட்டத்திற்கு 1981-82–லே இன்னும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம் என்றுதான் இருக்கிறது. எனவே 1982–83–லே இதற்கான திட்டங்களை பரிசீலனை செய்து தமிழக மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

*திரு. கே. ஜி. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையின் விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். காங்கேயம் தொகுதியைப் பொறுத்தவரையில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று சொல்லி பல ஆண்டுகளாக சொல்லிக் கொண்டிருந்த முந்தைய அரசு செய்யாத காரியத்தை புரட்சித் தலைவருடைய அரசு, நமது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன், எங்கள் பகுதியில் சில இடங்கள் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால், மேற்கு நோக்கி பாய்கின்ற நீர்களை, கேரள அரசோடு ஒப்பந்தம் செய்திருந்த 20 டி.எம்.சி. தண்ணீருக்குப் பதிலாக, 12 டி.எம்.சி. தண்ணீரைத்தான் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் 8 டி.எம்.சி. தண்ணீரை ஒப்பந்தப்படி எடுத்து நல்லார் ஸ்கீமை துரிதப்படுத்தினால், அந்தத் தண்ணீரைக் கொண்டு காங்கேயம் பகுதிகளில் இன்னும்



1982 மார்ச் 18] [திரு. கே. ஜி. கிருஷ்ணசாமி]

வறட்சியாக இருக்கின்ற கீரனூர், பாப்பினி போன்ற கிராமங்களுக்கு இன்னும் ஒரு 5 ஆயிரம் ஏக்கர்களுக்கு விஸ்தரிப்பு தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நொய்யல் ஆற்றின் கரையிலே செட்டிப்பாளையம் என்ற ஊரிலே ஒரு அணையைக் கட்டினால், வறட்சிப் பகுதிகளான முதலிப்பாளையம், ஊதியூர் போன்ற பகுதிகளுக்கு நல்ல வாய்ப்பினை அளிக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது ஆய்வில் இருப்பதாக சொல்கிறார்கள். அதை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நொய்யல் அருகே அணை கட்டி, கரூருக்கு தண்ணீர் கொடுக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை; தடுக்கவில்லை. இருந்தாலும் என் தொகுதியில் ஒரத்துப்பாளையம் அருகில் ஒரு அணை கட்டி, எப்போதும் வறட்சியாக இருக்கிற ஒரத்துப்பாளையம் கிராமத்திற்கும் நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5–10)

சென்னிமலைக்கு அருகில் புஞ்சைப்பாலுதொழுவில் 400 ஏக்கர் பரப்பளவு உள்ள குளம் ஒன்று இருக்கின்றது. அதற்கு நொய்யல் ஆற்றிலிருந்து வாய்க்கால் வெட்டி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிக்கு மேலே சின்ன சின்ன குட்டைகள் பல கட்டிவிட்டதால் தண்ணீர் வரத்து குறைந்துவிட்டது. அதனால் அந்தக் குளத்துப்பாசனம் செயல்படாத நிலையில் இருக்கிறது. அந்தக் குளத்தை முன்னாள் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் இன்னாள் நீர்ப்பாசன துறை அமைச்சர் அவர்களும் நேரில் பார்த்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துதருவதாக உறுதி அளித்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பார்வையிட்டு அங்கே ஒரு அணை கட்டி, அதிலிருந்து வாய்க்கால் வெட்டி, அந்தக் குளத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல வரட்டுக்கரை என்ற ஓடை இருக்கிறது. வரட்டுக்கரை என்று பெயர் இருந்தாலும் அங்கே ஆண்டுதோறும் தண்ணீர் ஓடுகிறது. அந்தப் பகுதியிலே ஒரு அணையைக் கட்டி, அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல எல்.பி.பி. வாய்க்காலுக்கு கான்கிரீட் போட்டால் தண்ணீர் சேதத்தைக் குறைக்கலாம். வைகை அணைக் கால்வாய்க்கு கான்கிரீட்டு போட்டு சீரமைத்திருப்பதைப் போல இந்த எல் பி.பி. வாய்க்காலுக்கும் கான்கிரீட் போட்டுத் தந்தால், தண்ணீர் சேதத்தைக் குறைத்து, பாசனப் பரப்பை அதிகப்படுத்த வாய்ப்பு எற்படும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இன்னும் பல கோரிக்கைகளைப் பற்றிச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. மேலும் இந்த மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் பல முக்கியமான திட்டங்கள் இருந்தாலும் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இல்லாத காரணத்தால் இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பாசனத் துறையால்தான் உணவுத் துறைக்கு உயிரூட்ட முடியும். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் பல்வேறு பாசனத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, கிராமப் பொருளாதாரம் மேம்படுவதற்கும், ஏழை எளிய மக்கள் வளம் பெறுவதற்கும் நல்ல பல திட்டங்களை அறிமுகப்படுத்தி, செம்மையாகச் செயலாற்றிக் கொண்டு வருகிறது.

அதைப்போல இன்றைக்கு நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிறது. அதை மேலே கொண்டுவந்து, விசையேற்றங்கள் மூலம் தண்ணீரை இறைத்து பயன்பட்டுத்த சிறு விவசாயிகள் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு நிலத்தடி நீரைக் கொண்டுவந்து பயன்படுத்தும் திட்டத்தை மானியக் கோரிக்கையில் அறிமுகப்படுத்தி இருப்பது பாராட்டுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த பாசனக் கால்வாய்கள் நீண்ட காலமாக தூர் எடுக்காமல், அதனால் பயன் குறைந்து காணப்படுகிறது. தூர் எடுத்தல், கலிங்கு கட்டுதல் போன்ற வேலைகள் எல்லாம் இன்றைக்கு தனிப்பட்ட கான்ட்ராக்டர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. அவர்கள் இலாப நோக்கோடு அந்த வேலைகளைச் செய்வதால் ஏறத்தாழ ஒதுக்குகிற பணத்தில் பாதிக்குத்தான் வேலை செய்கிறார்கள். மீதிப் பணத்தை அவர்கள் இலாபமாகப் பெற்றுக் கொள்கிறார்கள். அதனால் வேலைகள் சரியாக நடைபெறாமல் பாசனத்திற்கு தண்ணீர் சரியாக வராத நிலை இருக்கிறது. ஆகவே, இந்தப் பணிகளை இந்த ஆண்டு முதல் ஆங்காங்கே பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு கமிட்டிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஏற்ற முறையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவு போட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கால்வாய் 'க்ளோசர் பீரியடு' ஒரு மாதம் என்று வைத்திருக்கிறார்கள். ஒரு மாதம் தண்ணீர் இல்லை என்றால் மகசூல் பாதிக்கப்படுகிறது. ஆகவே அதை 15 நாட்களாக குறைக்க வேண்டும். கால்வாய் பழுது பார்க்கும் வேலையைக்கூட எந்தத் தேதியிலிருந்து தண்ணீர் விடுவது நிறுத்தப்படுகிறதோ அந்தத் தேதியிலிருந்து வேலையை ஆரம்பிக்கும் வகையில் தண்ணீர் நிறுத்தப்படுவதற்கு 10, 15 நாட்களுக்கு முன்னாலே அந்த ஆயக்கட்டு கமிட்டிக்கு தெரிவித்து விட வேண்டும். அப்படியானால் அவர்கள் வேலையைத் தொடங்க உரிய நேரத்தில் தயாராக இருப்பார்கள். அதற்கு தகுந்த உத்தரவுகளைப் போட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல 1962 ஆம் ஆண்டுக்கு முன்னாலே சில விவசாயிகள் கால்வாய் மூலம் பாசனம் பெற்று, இன்று மாடுகளை வைத்து இறைவைப் பாசனம் செய்தும், ஆயில் எஞ்சின் வைத்து இறைவைப் பாசனம் செய்தும் வருகிறார்கள். அவர்களுக்கு மின்சார மோட்டார் வைத்துக்கொள்ள பெர்மிட் வழங்க வேண்டும். அந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதும் சரி, காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதும் சரி, கிடப்பிலே போடப்பட்ட நீரேற்றுத் திட்டங்களை இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நல்லமுறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

அதைப்போல பருவமழைக் காலத்தில் மேட்டூரிலிருந்து காவேரி ஆற்றில் அதிகமாக தண்ணீர் வருகிறது. அதைத் திருப்பி விட்டு, நீரேற்று விசைகள் மூலம் பாசன வசதிசெய்து, புன்செய் நிரங்களை நன்செய் நிலமாக மாற்றுகின்ற வகையில் என் தொகுதியில் 7, 8 நீரேற்று திட்டங்களை அமைச்சர் அவர்கள் அமைத்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் இந்த அரசுக்கும் நான் பாராட்டி, நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, நொய்யல் திட்டம் ஏறத்தாழ 10—15 ஆண்டுகளாக இருக்கும் திட்டமாகும். அதன் மூலம் 20,000 ஏக்கர் கரூர் தாலுக்காவில் நீர்பாசனம் பெற வாய்ப்பு இருக்கிறது என்று ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் அது தற்போது 10,000 ஏக்கர் என்று குறைக்கப்பட்டு இருக்கிறது என்று அறிகிறேன். ஆகவே, அதை 20,000 ஏக்கர் என்கிற முறையில் திருத்தியமைத்து, அந்த வகையில் பாசன வாய்ப்புகளை விரிவுபடுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

புகளூரான் வாய்க்கால் சீரமைப்புப் பணிகள் ஆய்வில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். சின்னசாமி] [1982 மார்ச் 18

திருவெரம்பூர் தொகுதியில், திருச்சி மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் உய்யக்குண்டான் வரையில் தண்ணீர் பாய்வதற்கு வசதி வாய்ப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் அவர்களால் 1982–83 ஆம் ஆண்டுக்கான அவைமுன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை வரவேற்று பேச விரும்புகிறேன்.

வீராணம் ஏரிக்கரையை பலப்படுத்தி நீர்ப்பாசன மதகுகளை நவீனமயமாக்க பல லட்ச ரூபாயை அரசு அனுமதித்து இருக்கிறது. அதற்காக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலேயே உள்ள பெரிய ஏரிகளில் ஒன்று வீராணம். அதை ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் புரட்சித் தலைவர் ஆட்சி காலத்தில் உலக வங்கி உதவிபெற்று, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

லோயர் அணைக்கட்டு, சேத்தியாதோப்பு அணைக்கட்டுகளுக்கு கீழே உள்ள நீர்பாசன வாய்க்கால்களை நவீனமயமாக்க அரசுக்கு தலைமைப் பொறியாளர் பரிந்துரை செய்திருப்பதாக அறிகிறேன். லோயர் அணைக்கட்டு, சேத்தியாத் தோப்பு அணைக்கட்டுகளின் கீழே உள்ள வாய்க்கால்கள் மிகப் புராதனமானவை. தூர்ந்துபோய்விட்டிருக்கின்றன. அதனால் கொள் அளவு குறைந்து போய்விட்டது. அதை தூர் எடுத்து, சீரமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே தஞ்சை சி. டி. சர்க்கிளை சிதம்பரம் பொதுப்பணித் துறை டிவிஷனுக்கு உடனடியாக விஸ்தரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளாற்றின் இருகரைகளிலும் சேத்தியாத்தோப்பிலிருந்து பரங்கிப்பேட்டை வரை வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுகிற வேலை துவங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் பொதுப்பணித்துறை டிவிஷனுக்கு காவிரி நீர் பாசனம்தான் கடைமடைப்பகுதி. மேட்டூர் அணை வருவதற்கு முன்பிருந்து உபயோகத்திலுள்ள வாய்க்கால்களாக அவை இருப்பதால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் எல்லாப் பொதுப்பணித்துறை டிவிஷன்களிலும் புலனாய்வு சப்-டிவிஷன் இருக்கிறது. ஆனால் சிதம்பரம் பொதும் பணித்துறை டிவிஷனில் மட்டும் இன்வெடிஸ்கேஷன் சப்-டிவிஷன் இல்லை. ஆகவே, உடனடியாக அதற்கும் ஒரு சப்-டிவிஷன் அமைத்து, பல நீர்ப்பாசன திட்டங்களைத் தீட்டுவதற்கு



1982 மார்ச் 18] [திரு. கே. ஆர். கணபதி]

வழி வகுக்க வேண்டும். அதன் மூலம் சிதம்பரம் பகுதி முன்னேற்றம் அடைய வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் தொகுதியில் உள்ளடங்கிய வீராணம் ஏரியை ஆழப்படுத்தவும் அதன் வாய்க்காலை ஆழப்படுத்தவும், அதே போல் வீராணம் ஏரியில் இருந்து செல்லும் வடிகால் வாய்க்கால்கள் பெருமாள் ஏரிக்குச் செல்வதால், அதற்கு இருபுறமும் கரைகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மருங்காபுரி வாய்க்காலையும் ஆழப்படுத்த வேண்டும். பெருமாள் ஏரியையும் ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமுட்டம், பாளையங்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு புள்ளம்பாடி சாலையில் இருந்து வாய்க்கால் வெட்டி வெலிங்டன் அணைக்குத் தண்ணீர் விட்டால் வானம் பார்த்த பூமியாக உள்ள அந்தப் பகுதியில் நல்ல விளைச்சல் ஏற்படும். ஆகவே, அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, பொன்னேரி, வாலாசா வாய்க்காலையும் உடனடியாக வெட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயக் கிணறுகளை மருங்காபுரி ஒன்றியத்தில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(மாலை 5.20)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டின் நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்தையும் கூற விரும்புகிறேன். காவிரி நீர்ப் பிரச்சினையில் அறுதியிட்டு இறுதியாக்கப்படாத நிலைமை இருப்பது உள்ளபடியே வருந்தத்தக்க விஷயமாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்பும், இலக்கியப் பெருமையும் பெற்ற "வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி" தமிழகத்தின் வளத்திற்கு உயிர் நாடியாயுள்ளது. தமிழக வளமும், காவிரி நலமும் இரண்டறக் கலந்தது காவேரி. காவிரி இன்றேல் தமிழகம் இல்லை என்பது இயற்கை நிலை, வற்றாத காவிரியும் தமிழ்நாட்டில் வறண்டிடுமோ என்ற அச்சம் காவிரியின் தலை வாயிலில் அணைகளைக் கட்டி நீரைத் தடுத்திட நினைக்கும், மைசூர் மாநிலத்தின் நடவடிக்கைகளால் தோன்றியுள்ளது. 1924 ஆம் ஆண்டின் உடன்பாடு தமிழ் நாட்டுக்கும், மைசூருக்கும் வளம் சேர்த்து கலம் காக்கும் நல்லதோர் ஏற்பாடு. அவ்வுடன்பாட்டினை மீறிக் காவிரியின் துணை நதிகளான ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி ஆகிய நதிகளில் அணைகளைக் கட்டிக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது,

[திரு. செ. இராமலிங்கம்] [1982 மார்ச் 18

1892 ஆம் ஆண்டிலும், 1924 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி இரு மாநிலங்களும் தமது உரிமைகளை வழக்கப்படி அனுபவித்துக் கொள்ள முடியாதபடி, அவ்வுடன்பாடுகளை மீறி, மைசூர் அரசு தனது அணைத் திட்டங்களை நிறைவேற்றுமேயானால், தமிழ்நாட்டின் பசுமைப் புரட்சியெல்லாம் ''பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போனதே'' என்று ஏங்கி வருந்தும் நிலையும், தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சையும் அதை அடுத்த திருச்சியும் பஞ்சப் பகுதிகளாகி பாழடையும் நிலையும் ஏற்படும். தமிழ்நாட்டின் வரலாற்றில் என்றும் காணாத வகையில் தமிழ்நாட்டின் வாழ்வையே அழிக்க வரும் இந்த ஆபத்தினின்றும் நாட்டைக் காப்பாற்றிடத் தமிழக அரசு ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இந்நிலையை உணர்ந்த எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் தமிழகத்தின் ஒருமித்த உணர்வை உரத்து முழக்கமிடும் ஆற்றல்மிகு தலைவராக விளங்கினார். நினைவுக்கெட்டாத காலந்தொட்டு நாம் பெற்று வந்த காவிரி நீரை மட்டுமில்லாமல் இயற்கையன்னை நமக்களித்து விட்ட ஏற்றமிகு உரிமைகளைக் காப்பதற்கு எந்த தியாகமும் செய்ய நீங்கள் தயாராக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அந்தக் காவிரியின் சிறப்பை எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தநேரத்தில் ஒரு கவி அரங்கத்திலே கூட இப்படிக் குறிப்பிட்டார்.

குடமுருட்டிக் காவிரிப் பெண் ஆடுகின்ற காட்சி கண்டு --
காதல் கொள் இடம் இதுதான் என்று, காதல்
கொள்ளிடம் இதுதான் என்று,
வீரசோழன் வருகின்றான் ஓடம்போக்கி என்மேல்
வை கை என்றி வளைக்கின்றான்;
வைகை என்று வளைக்கின்றான்; உன் பல்
மணிமுத்தா என நெளிகின்றான்; காவிரியோ கண்சிமிட்டி என்
மன்னியார் வருகின்றாள் மறந்திடுக அத்தான் என்கின்றாள்..
அவனோ வரட்டுமே; மன்னியார் நம் காதலுக்கு
அவளென்ன கல்லணையா?..
காமினி பாமினி நாமினி காதலர்கள்
ஆம் இனி திருமணமென்று பிறருக்குச் சொல்லிவிடு..
காதல் அக்கினியாறுமோ கண்ணே அருகில் வந்துவிடு..
காதல் அக்கினி ஆறுமோ கண்ணே அருகில் வந்துவிடு,,
அவளோ...,



1982 மார்ச் 18] [திரு செ. இராமலிங்கம்]

யாரும் நம்மீது தப்பெண்ணார்; நம் காதல் பிரிக்க வெண்ணார்
பிறர்
வெட்டார் நம் உறவெனினும் — அத்தான்
வெட்கம் என்னைத் தடுக்குதென்றாள்..
வீரசோழன் விரைந்தணைத்துக் கொண்டவாறு
பாலாறும் முன்னே பருகிடுவோம் வா என்றான்...

(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு சிறந்த கவிதையை வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் நீண்ட நாட்களாக ஊரிலிருந்து வந்து இங்கே தங்கிவிட்டிருக்கிறார்கள். எனவே அந்தக் கவிதையை குறைத்துக் கொண்டு பேசினால் மானியத்தை நிறைவேற்ற வாய்ப்பிருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: சரி சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன்.

மஞ்சளார் முகவதியும் அவன் மடிமீது சாய்ந்தபடி
மணமெப்போது அத்தான் என்றாள்..
பெரியாறு தலைமையிலே பெரிதா நடக்குமென்றான்..
ஆறுகளை ஒன்றாக இணைத்துக் காதல் கதை
பின்னியதாய்க் கருதாதீர்.. ஆங்காங்கு ; வாய்ப்புக்
கூறுகளைச் சீராக்கி வளம்பெருக்கும் நதிகளுக்கு நன்றி சொல்வோம்

என்று தமிழகத்தில் ஓடுகிற ஆறுகளையெல்லாம் ஒன்று சேர்த்து எங்களுடைய தலைவர் அவர்கள், இந்த நதிகளின் வளத்தைக் கொண்டுதான் தமிழகத்தில் வேளாண்மை நடைபெறுகிறது என்று பொருள்பட கும்பகோணம் வேளாண்மைக் கவியரங்கில் இப்பாடலை இயற்றினார். இதை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், இப்படியெல்லாம் பாராட்டுப் பெறுகிற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆறுகள் எல்லாம் இப்போது வறட்சியால் வாடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறதே என்பதைச் சுட்டிக்காட்டத்தான் மேற்கோளாகக் காட்டினேன்.

அந்த 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீண்டும் செயல்படுத்தி அந்த ஒப்பந்தத்தின்படி கர்நாடக அரசு நமக்குள்ள உரிமைப்படி நீர் வழங்குவதற்கு நாம் ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நிலத்தடி நீரைக் கொண்டு நாம் நாற்றங்கால் பாகுபடி செய்யலாம் என்ற வகையிலே தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் கம்யூனிட்டி போர் வெல்கள் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அப்படி அமைக்கப்பட்ட போர் வெல்கள் இன்றையதினம் இயங்காமல் மூடப்பட்டுக் கிடப்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே செய்ய வேண்டிய சில பணிகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். திருவிடைமருதூர் தாலுக்காவில் புத்தகரம், ரெண்டாங் கட்டளை, கடார் கிராமத்திற்கு பாசன வசதியை மேம்படுத்த கீர்த்திமனார் ஆற்றில் ஒரு ரெகுலேட்டர் அமைத்துத் தர வேண்டும்.

அடுத்து திருவிடைமருதூர் தாலுக்காவில் மணலூர் கிராமத்திற்கான வடிகால் தூர்ந்துபோய் உள்ளது, மழைக்காலங்களிலும், வெள்ளம் ஏற்படும்போதும் பயிர்கள் மூழ்கி பெருத்த சேதம் ஏற்படுவதால் அதையும் ஆழப்படுத்தி செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சன்னாபுரம், தேப்பெருமாநல்லூர் கிராமங்களுக்கு பாசன வசதி இல்லை. மோரி வாய்க்காலில் ஒரு தடுப்பு அணை ரெகுலேட்டர் கட்டித்தரவேண்டும். அங்கே பாசன வசதிக்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மண்ணியாற்றில் பெட்ஃபார்ம் கட்டி மானங்காத்தான் வாய்க்காலில் நீர்ப்பாசனத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

அடுத்து திருவிடைமருதூர் தாலுக்காவில் பருத்திக்குடி, படைத்தலைவன்குடி, திருக்கழித்தட்டை, கோயில்பத்து, வளையவட்டம், ஏ. 75 கண்டியமடை போன்ற பகுதிகளில் வாய்க்கால்-வடிகால் வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய சாங்ஷன் செய்யப்பட்டும் வருவாய்த்துறையிலே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுமதி வழங்காத காரணத்தால் அந்த வேலைகள் இரண்டாண்டுகளாக எடுத்துச் செய்யப்படாமல் இருக்கின்றது. எனவே உடனடியாக அதைச் செய்துதர வேண்டும். (மணியடிக்கப் பெற்றது.)



திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நீர்ப்பாசனத் துறையானது சீரோடும் சிறப்போடும் நல்ல பல திட்டங்களை இன்றையதினம் தமிழகத்திலே நிறைவேற்றி வருகின்றது. கிடைக்கின்ற நீரின் அளவை வைத்து மிகப் பரந்த அளவிலே நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழக அரசினுடைய நீர்ப்பாசனத்துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

சில குறிப்பிட்ட முடிவுகளை மேற்கொள்வதன் மூலம் உதாரணமாக பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்தில் பதிவு பெற்ற ஆயக்கட்டுகளில் சூழப்பட்ட மற்றும் இடைப்பட்ட நிலங்களையும் முறைப்படுத்தப்பட்ட ஆயக்கட்டுகளில் சேர்த்து மேலும் ரூ.400 இலட்சம் செலவில் மேலும் 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியளிப்பதற்காகத் திட்டமிட்டிருக்கிறோம். இதே அணுகுமுறையை பெரியார் வைகைப் பாசன அமைப்பில் உள்ள நிலங்களுக்கும் மேற்கொண்டு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோன்று ஆயக்கட்டு நிலங்களில் குறிப்பாக பெரியார் பகுதிகளில் இப்போது குடியிருப்புக்கள் கட்டப்படுகின்றன. அந்த ஆயக்கட்டுக்களை வறட்சி மிகுந்த பகுதிகளிலே விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நடுத்தர பாசன திட்டங்களைப் பொறுத்து ஏற்கெனவே அனுமதியளிக்கப்பட்ட 13 திட்டங்களுடன் மேலும் 3 திட்டங்களுக்கு அனுமதி அளித்து கூடுதலாக 13,863 ஏக்கரா நிலங்களுக்கு புதிய பாசன வசதி செய்யக்கூடிய அந்தத் திட்டத்தை பாராட்டுகிறேன். அதேபோன்று வைகைப் பாசன அமைப்புக்களை நவீனப்படுத்துவதன் மூலம் சிக்கனத்தைக் கடைப்பிடித்து அதன் மூலம் அதிகமான அளவுக்கு பாசன வசதியைப் பெருக்க வேண்டும். இப்போது வைகை அணைக்கு கீழேதான் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுகின்றன. வைகை அணைக்கு மேலே குறிப்பாக பாளையம் பரவு வாய்க்காலை நவீனப்படுத்தி சிமென்ட் லைனிங் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் அதிகமான நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். அப்படிப்பட்ட வாய்ப்புக்களை அளிக்கின்ற வகையிலே நவீன திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1982 மார்ச் 18

வெள்ளத் தடுப்புக்காக இன்றைய தினம் ரூ. 19 கோடி செலவிலே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்ற நேரத்திலே பெரியாற்றில் வைரவன் அணையிலிருந்து பெரியகுளம் வரை மேற்கு மலைத் தொடர்ச்சியின் அடிவாரத்தில் அரசின் ஆய்விலுள்ள 18 ஆம் கால்வாய் திட்டத்தில் ''ப்ளட் கேரியர்'' என்ற வகையில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5.30)

பாசன வளத்தைப் பொறுத்து 1981–82 ஆம் ஆண்டில் 24,410 ஏக்கரையும், 1982–83 ல் 24,120 ஏக்கரையும் புதிய பாசன வசதி செய்து தர இருப்பது நீர்ப்பாசனத் துறையின் சிறந்த செயல்பாட்டிற்கு எடுத்துக் காட்டாகும்:

சிறு பாசனம், தீவிரப்படுத்தப்பட்ட சிறுபாசனம், முன்னாள் ஜமீன் குளங்களை தரப்படுத்தும் சிறப்புத் திட்டம், கண்மாய்களை நவீனப் படுத்துகிற திட்டம் ஆகியவற்றின் மூலம் கிராமப்புற வேளாண்மைப் பொருளாதாரத்திற்குப் பெரிதும் உதவுகின்ற நல்ல பல திட்டங்களை உள்ளடக்கியுள்ளதைப் பாராட்டுகிறேன்.

ஏற்கனவே நிலத்தடி நீரை ஆய்வு செய்ய ஒவ்வொரு மாவட்ட வாரியாக ஆய்வுப்பிரிவுகள் வைத்திருக்கிறார்கள். எல்லா வட்டாரங்களிலும் கிராம வாரியாக ஆய்வு செய்து நிலத்தடி நீரை எடுத்து பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய அனுமதி அளிக்கிற பணியினைப் பாராட்டுகிறேன்.

மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளின் நீரை தமிழகத்திற்குத் திருப்பி விடுகின்ற முறையிலே 'புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு எப்படி மின்சாரத்தை கேரள மாநிலத்திற்கு கொடுக்கிறோமோ அதே போல நாம் தண்ணீரைப் பெறுவதற்குப் புதிய அணுகுமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

பெரியகுளம் பகுதியில் சித்திரை மாதம் முதல் புரட்டாசி வரை 6 மாதங்களுக்கு, தென்மேற்குப் பருவகாலத்தில் பலமான காற்று அடிக்கிறது. அந்தக் காற்றைப் பயன்படுத்தி ''வின்ட் மில் கார்ப்பரேஷன்'' ஒன்றை அமைக்க அரசைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பாசனம் குறித்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய வரவேற்பைத் தெரிவித்துப் பேச விழைகின்றேன்.



1982 மார்ச் 18] [திரு. கே.எம்.எஸ். சுப்பிரமணியன்]

1982–83 ஆம் ஆண்டிற்கு பெரிய மற்றும் நடுத்தரப் பாசனம் ஆகிய திட்டங்களுக்கு ரூபாய் 35 11 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதையும், 24.100 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுவதற்கும் தமிழக அரசு ஒதுக்கீடு செய்திருப்பதற்கு என்னுடைய தாழ்மையான வரவேற்பைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்த மானியத்தின் மீது என்னுடைய தொகுதியிலே சில கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சரிடம் சமர்ப்பிக்கக் கருதுகிறேன்.

தேவாரம், பொட்டிபுரம், ஏரணம்பட்டி பகுதிகள் பயங்கரமான காற்றின் காரணமாக ஏராளமாக மண் மேடாக இருக்கிறது. 18ஆம் கால்வாய் திட்டத்தில், சுத்த கங்கையில் இருந்து ஒரு வாய்க்கால் வெட்டி போடி பகுதியில் இருக்கும் கொட்டகுடி ஆற்றில் சேர்ப்பதற்கு ஒரு பொறியாளர் வந்து ஆய்வு செய்து ஒரு திட்டம் தீட்டப்பட்டிருந்தது இதுநாள் வரை அந்தத் திட்டம் செயல்படாமல் தாமதப்பட்டுக் கொண்டிருக்கிறது அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக மழைத் தண்ணீரிலே வருகின்ற வெள்ளத்தை வீணாக்காமல் கண்மாயிலே திருப்பினால் கிணற்று நீர், நிலத்தடி நீர் பெறுவதற்கு வாய்ப்பு வசதி ஏற்படுமென்று தெரிவித்து அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அவர்கள் அமைச்சராக இருக்கின்ற காலத்திலேயே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போடி பங்காருசாமி நாயக்கன் கண்மாய், சங்கரப்ப நாயக்கன் கண்மாய் மூலம் கொட்டகுடி ஆற்றில் இருந்து வருகின்ற வழியிலே பல இடங்களிலே கசிவு ஏற்பட்டு தண்ணீர் பூமிக்குள் போகிறது, குளத்திற்கு வருகின்ற தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது. எனவே அந்த இரண்டு வாய்க்கால்களையும் புதிதாக நவீனப்படுத்துகிற வகையில் சிமெண்ட் ஸ்லாப்புகள் பதித்து, தண்ணீரை வீணாக்காமல் தடுத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கிடையில் குளத்துத் தண்ணீரை காப்பாற்ற வனத் துறையால் கருவேல மரங்கள் வைக்கபபடுகின்றன. அந்த கருவேல மரங்களைக் காவல் காப்பதற்காக ஒரு பிரிவினருக்கு ஒதுக்கப்படுகிறது, அங்கே மீன்பாசி பிடிக்க மீளை இலாகா அனுமதியோடு தாசில்தாரிடம் ஒப்படைக்கப்படுகிறது. குளங்களைப் பாதுகாக்கும் பணி பொதுப்பணித் துறையினரிடம் இருக்கிறது. அப்படியிருக்கும்போது வெயில் காலங்களில் இந்தக் குளங்களில் உள்ள தண்ணீரை, சிறிதளவுள்ள தண்ணீரைக் கூட மீன்வாசி பிடிக்க குத்தகை எடுத்திருப்பவர்கள் வெளியேற்றி விடுகிறார்கள். இதன் காரணமாக குளங்களில் உள்ள தண்ணீர் அளவு குறைந்து பக்கத்தில் உள்ள கிணறுகளில் தண்ணீர் ஊற்று குறைந்து தண்ணீர் தற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே இந்த

பின்பாசி எடுத்தல், கரிவேல மரங்களைப் பாதுகாத்தல் போன்ற எல்லாவற்றையும் ஒரே துறையின் கீழ் கொண்டு வந்தால் இந்தமாதிரி நெருக்கடிகள் ஏற்படாது.

அதேபோல் ஒவ்வொரு குளத்திலும் உள்ள உள்வாய்களை பலர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள், அப்படிச் செய்து தண்ணீர் பெருகாமல் தடுத்து விடுகிறார்கள். எனவே தமிழக அரசு ஒட்டு மொத்தமாக ஒரு தீர்மானத்தைப் போட்டு அவசர கால வேகத்தில் குளங்கள் உள்வாய் ஆக்கிரமிப்புகளை ஆகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நாகலாபுரத்தில் ஒரு கண்மாய் வேண்டுமென்று அங்குள்ள மக்கள் முறையீடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதை விரைவில் வெட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பல குளங்களின் முகத்துவாரங்கள் அடைக்கப்பட்டி இருப்பதால் தண்ணீர் செல்ல முடியாத நிலை இருக்கிறது. எனவே அந்த குளங்கள் தூர்ந்து போகின்றன. எனவே சிவகங்கை ஆற்றிலிருந்து எந்தெந்தச் குளங்களுக்கு தண்ணீர் செல்கிறதோ அங்கே தடுப்புச் சுவர்கள் கட்டி தண்ணீர் நிரப்ப வேண்டும். நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும் என்ற அந்த அடிப்படையில் நீர்ப்பாசனத் துறையில் புதுமையான முன்னேற்றங்கள் செய்து நாட்டு மக்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மூன்று விஷயங்களை மட்டும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதலாவதாக, காவிரி ஆற்றில் மழை காலங்களில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும்போது சேதமாகும் தண்ணீரை புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள குளங்களில் நிரப்பி சாகுபடிக்குக் கொடுக்கும் திட்டம் தமிழ் நாட்டு அரசின் ஆய்வில் இருக்கிறது. அதை துரிதமாகச் செய்து முடிக்க வேண்டும். அந்த ஆய்வை நடத்தக்கூடிய அதே நேரத்தில் திருச்சி மாவட்டத்தில் இருக்கிற வறண்ட பகுதிகளான கிருஷ்ணராஜபுரம், பஞ்சப்பட்டி, மணப்பாறை போன்ற பகுதிகளுக்கு அந்தத் தண்ணீர் கிடைக்கும் முறையில் அந்த ஆய்வை நடத்தி அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து மேட்டூரிலிருந்து தஞ்சைக்கு தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டவுடன்—ஐந்த மாதம் 1-ம் தேதியிலிருந்து காவிரி தண்ணிர் கிடையாது. குளித்தலை தாலுகா, திருச்சி தாலுகா இந்த இரண்டு தாலுகாக்களிலும் மாயனூர் தென்கரை,



கட்டளை உய்யகொண்டான் பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் சுமார் 75,000 ஏக்கர் இன்றைக்கு காய்ந்து போயிருக்கிறது. எனவே அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கு உய்யகொண்டான் கடைமடைப் பகுதிக்கு பாசனத்திற்கு நீர் கிடைக்கவில்லை. திருவெறும்பூரில் உள்ள பல பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்க பல முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். திரு. அண்ணாதாசன் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் அந்தப் பிரச்னை தீரவில்லை. அங்கே பயிர்கள் காய்கின்றன, வாழைகள் காய்கின்றன, கரும்பு காய்கிறது. ஆகவே, குறைந்த பட்சம் மேட்டூரிலிருந்து 2,500 க்யூசெக்ஸ் தண்ணீர் விட்டால் தான் அப்பகுதிகளுக்கு பாசன வசதி செய்து கொடுக்க முடியும். 7,000 ஏக்கர்கள் நன்செய் சாகுபடி செய்கிறார்கள். அங்குள்ள சிறிய விவசாயிகள் தண்ணீர் இல்லாத நிலையில் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன. உடனடியாக அதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5.40)

மூன்றாவதாக, இந்த திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துக் கால்வாய்களும், தென்கரை, வடகரை, பேட்டுக் கால்வாய், ஐயனாறு வாய்க்கால் போன்றவைகளை 'மாடர்னைசேஷன் ஸ்கீம்' கீழ் எடுத்துக் கொண்டு, அதற்கான திட்டங்களை செயலாக்கம் செய்ய வேண்டும். அதனால் தண்ணீர் சேதமாவது தடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த வாய்க்கால்களில் 'குளோசர்' என்று சொல்லும்போது ஒரு மாதம் ஆகிவிடுகிறது. வாழை இருக்கிறது. கரும்பு இருக்கிறது, இன்னும் மற்ற பணப்பயிர்கள் இருக்கின்றன. ஒரு மாதம் ஆவதால், இந்தப் பயிர்கள் எல்லாம் காய்ந்து விடுகின்றது. ரிப்பேர் வேலை செய்வதற்கான 'குளோசர்' செய்வதை நான் தவறு என்று சொல்ல முடியாது. 15 தினங்களுக்குள் ரிப்பேர் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்தால், நல்லது. அதை ஆக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நீர்ப்பாசனத் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் பேச வாய்ப்பு கிடைத்தமைக்குத் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் இந்த நீர்ப்பாசனத்துறை மிகச் சிறப்பாக காரியங்கள் ஆற்றி வருகின்றது. 1982—83 ஆம் ஆண்டில் ரூ 35.11 கோடி ஒதுக்கப்பட்டு, அதனால் 24,100 ஏக்கர் பாசனம் பெறும் என்ற செய்தி

செவிகளிலே தேனாகப் பாய்கிறது. அதேபோல், இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும், நடுத்தரப் பாசனத் திட்டங்களிலும், சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும், மற்றும் உள்ள திட்டங்களை நிறைவேற்றுவதிலும் அதற்கான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அதேபோல், நிலத்தடி நீர் பற்றி ஆராய்ச்சி செய்வதும், மழை நீரைத் தேக்கி, அதன் மூலம் பாசன வசதியைப் பெருக்குவதிலும், முக்கியமாக இந்தத் திட்டங்களையெல்லாம் ஒருங்கிணைத்து, எப்படி ஒருங்கிணைந்த கிராமப்புறத் திட்டங்கள் செயல்படுகின்றதோ, அதைப்போல் நீர்ப்பாசனத் திட்டங்களை ஒருங்கிணைத்து, அதற்கான திட்டங்களை நிறைவேற்றும் பணிகள் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சென்ற ஆண்டு நடுத்தரத் திட்டங்களுக்காக 10.39 கோடியில் எடுக்கப்பட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் சுமார் 13,863 ஏக்கர் பாசனம் பெறுகிறது. அதேபோல், பல ஆண்டுகளாக எடுக்கப்படாமல் ஆய்வில் இருந்துவந்த சிறுபாசனத் திட்டங்கள், 17 திட்டங்கள் சென்ற ஆண்டு எடுக்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த 17 திட்டங்களில் பெரியார் மாவட்டத்தில், பவானி தாலுகாவிலே ஒன்றும், கோபி தாலுகாவிலே ஒன்றும், சத்தியமங்கலத்திலே ஒன்றும் இப்படி மூன்று திட்டங்கள அனுமதிக்கப்பட்டு, இன்றைய தினம் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் உளமாறப் பாராட்டுகிறேன்.

என்னுடைய சத்தியமங்கலம் தொகுதி, மிகவும் வறட்சியானது. பவானிசாகர் அணைக்கட்டு சத்தியமங்கலம் தாலுகாவிலே இருந்தாலும், என்னுடைய தொகுதியில் அதனால் 15 சதவீதம்தான் பலன் கிடைக்கிறது; மற்ற 85 சதவீதம் மானாவாரி விவசாயத்தை நம்பித்தான், கிணற்றுப் பாசனத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அந்தப் பகுதியில் வடபுறத்திலே மலைப் பகுதி ஏறத்தாழ 40 மைல்களுக்கு நீண்டிருக்கிறது. அந்த 40 மைல் நீளத்தில் சுமார் நூற்றுக்கணக்கான பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. மழைக் காலத்திலே வெள்ளப் பெருக்கெடுத்தோடி, ஆற்றில் கலந்து, பின்னர் கடலிலே கலக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதைத் தடுத்து அங்கே சிறு அணைக்கட்டு கட்டினால், என்னுடைய தொகுதியில் ஒரு நல்ல சூழ்நிலை உருவாகி, விவசாயிகள் உள்ளம் பசுமையாக இருப்பதற்கான சூழ்நிலை ஏற்படும். எனவே, அப்பேர்ப்பட்ட திட்டங்களை, கோலிப்பள்ளம் திட்டம் போல் இன்னும் பல திட்டங்கள் இருக்கின்றன. 10 ஆண்டுகளாக அவைகள் எல்லாம் ஆய்விலே இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் பவானிசாகர் அணைக்கட்டு கட்டும்போது, தங்களுடைய பாசன நிலங்களை எல்லாம் கொடுத்துவிட்டு, இன்றைக்கு வறண்ட பகுதியிலே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்பேர்ப்பட்ட



வர்கள் இருக்கின்ற இந்த இடத்தில், பவானிசாகர் தண்ணீர் தேக்கம் கண்ணிலே தெரியும். ஆனால், அவர்கள் குடிப்பதற்கு அந்தத் தண்ணீர் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் பெரும் மனது வைத்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கம்மநாயக்கன்பாளையம் பெரும்பள்ளத் திட்டம் இருக்கிறது. அதன் மூலமாக 2,650 ஏக்கர் பாசனமும் 1,500 ஏக்கர் இருபோகப் பாசனமும் பெறுகின்ற வாய்ப்பு இருக்கிறது, என்று சொல்லப்படுகிறது. அந்தத் திட்டமும் ஆய்வு முடிந்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கணக்கன்பாளையத் திட்டம் என்றும் சேம்பு பள்ளம் திட்டம் என்றும் கொய்யனூர் திட்டம் என்றும் கொத்தகல்லா பகுதியிலே ஒரு திட்டமும், சீரகள்ளி பகுதியிலே ஒரு திட்டமும் என்று ஏழு திட்டங்கள் ஆய்வில் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை நிறைவேற்றிக் கொடுத்தால் என்னுடைய தொகுதி சிறப்பாக பாசன வசதி பெற்றுத் திகழும் என்று கூறி வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

* திரு. ஏ. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—83 ஆம் ஆண்டிற்கான பாசன மானியக் கோரிக் கயின்மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த மானியக் கோரிக்கையில் நிலத்தடி நீருக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை அதிக அளவிலே பயன்படுத்தவேண்டுமென்ற அடிப்படையிலே நம்முடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக நிலத்தடி நீரை நாம் அதிகமாகப் பயன்படுத்தினால் சிறு விவசாயிகள் குறைந்த அளவிலே கிணறுகள் தோண்டுகிற திட்டம் நிறைவேற்றப்பட முடியாது. ஆகவே மேல் மட்ட நீரை கொண்டுவர காங்கிரஸ் பேரியக்கம் ஆட்சியிலே இருந்தபோது பல அணைக்கட்டுத் திட்டங்களைக் கட்டிக் கொடுத்தது. அதைப்போல் இந்த அரசு எந்த விதமான அணைக்கட்டுத் திட்டத்தையும் கட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் அலங்கா நல்லூர் ஒன்றியத்தில், வறண்ட பகுதியில் நிலத்தடி நீரை அதன் தேவையை உணர்ந்து திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் வைகை மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் என்னுடைய தொகுதியிலே தென்கரை வாய்க்காலிலே 1980 ஆம் ஆண்டிலே ஒரு திட்டம் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு

செய்யப்பட்டது. இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் வைகையிலே தண்ணீரை மிச்சப்படுத்துவதற்கு சிமின்ட் லைனிங் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து லிங்க் கேனால் திட்டத்திற்கு நிதி உதவி உலக வங்கியால் மறுக்கப்பட்டது என்ற காரணத்தினால் அது கைவிடப்பட்டது. அது முக்கியமான திட்டம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அண்மையிலேகூட மதுரையில் குடிநீர் இல்லாமல் இருந்தது, அங்கேயிருந்து கொண்டு வரப்பட்டது, குறைந்த அளவிலே அங்கே நீர் இருந்தாலும்கூட தண்ணீர் தேவைப்படும் போது கொண்டுவர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சோழவந்தான் வடகரைக் கண்மாய் முள்ளைக்காட்டிலிருந்து துருத்தி மடைக்குத் தண்ணீர் செல்கிறது. அங்கே சிமின்ட் லைனிங் உயர்ந்திருப்பதால் தண்ணீர் செல்ல முடியவில்லை, ஆகவே அதை குறைவாக கட்டிக் கொடுத்து தண்ணீர் செல்வதற்கு வழி வகை செய்ய வேண்டும்.

அடுத்து டீப்பனிங் ஆப் வெல்ஸ் என்பதைப் பொறுத்தவரையில் கண்மாய்களின் பக்கக் கரைகளைக் கட்டவேண்டுமென்று சொல் இருக்கிறார்கள். அது மட்டும் போதாது. அதை ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அலங்காநல்லூர் ஒன்றியத்திலே பஞ்சமலை நீர்த்தேக்கம் பல காலமாக கட்டப்படாமல் இருக்கிறது சமீபத்திலே ஏற்பட்ட வெள்ளத்திலே உடைப்பு ஏற்பட்டு அதிகப்படியான பணச்சேதமும் பயிர்ச் சேதமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

(மாலை 5.50)

ஆற்று நீரைப் பொறுத்தவரையில் அதை சென்ட்ரல் பட்ஜெட்டிலே சேர்ப்பதற்கு தமிழக அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த முயற்சி எடுத்தால் நாங்கள் எல்லாம் நிச்சயமாக அந்த முயற்சிக்கு உறுதுணையாக இருப்போம். மேற்கு நோக்கி பாய்கிற நீரை பற்றிச் சொன்னார்கள். அதிலே எங்களுக்கும் உடன்பாடு உண்டு. 1924-லே ஏற்பட்ட ஒப்பந்தத்தை குறித்து நீங்கள் மீண்டும் நடவடிக்கை எடுப்பீர்களானால் அதற்கு நாங்கள் காங்கிரஸ் நண்பர்கள் அனைவரும் ஒத்துழைப்பைத் தருவோம் என்று கூறி அந்தத் திட்டத்தை துரிதமாக நிறைவேற்றுவதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.



திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசனத் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் நமது ஆளுநர் அவர்களும், முதல்வர் அவர்களும் சொன்னபடி அதைப் போல உபரி நீரை கட்டளை கால்வாய் மூலம் புதுக்கோட்டை. கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளுக்கு கொண்டு வந்தால் பாசனம் கிடைப்பதற்கு உதவியாக இருக்கும். பாசனம் கிடைக்க அரசு திட்டம் வைத்துள்ளதை நான் வரவேற்கிறேன் இந்தத் திட்டம் சர்வே செய்யப்பட்டுள்ளது. இதில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்திலே மிகவும் வறட்சி நிலைமை இருந்து வருகிறது, அந்த பகுதியிலே பல காட்டாறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அறந்தாங்கி பகுதியிலே வெள்ளாறு என்று ஒரு ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஆற்றின் குறுக்கே இரண்டு அணைகள் கட்ட திட்டமிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். இந்த திட்டத்தை பெரிய செலவிலே செயல்படுத்துவதை விட சிறு பாசன திட்டமாக ஒரு லட்சம், இரண்டு லட்சம் ரூபாய் செலவில் எடுத்துக் கொண்டு அவைகளை கட்டினால் பல ஏரிகளுக்கு தண்ணீர் கிடைத்து பாசனத்திற்கு உபயோகப்படும். அந்த வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டித்தரவேண்டும்

அடுத்து நீண்டகாலமாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து கேட்கப்பட்டு வருகிற கோரிக்கை. குலமங்களம் ஆற்றிலே அணை கட்டவேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. இந்த அணையை புரட்சித் தலைவர் அவர்களுடைய இந்த அரசு இந்த ஆண்டே எடுத்துக்கொண்டு செயல்படுத்துவதற்கு உள்ளதை வரவேற்கிறேன்,

புதுக்கோட்டை மாவட்டத்திலே மல்லசமுத்திரம், அம்புலியாறு போன்ற பல ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மழைக் காலங்களிலே இரண்டு, மூன்று நாட்கள் தான் தண்ணீர் வருகிறது அந்த அடிப்படையில் சிறு சிறு அணைகளைக் கட்டினால் இந்த பகுதியிலே இருக்கிற மக்களுக்கு ஏரிகள் நிரம்பி பயன்படும் என்பதை வேண்டுகோளாக விடுக்கிறேன்,

புதுக்கோட்டை மாவட்டத்திலே குன்னாண்டார் கோவில் பகுதியில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அங்கே பெரிய ஏரி ஒன்று இருக்கிறது, அதை செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்திலே வெள்ளாறு அம்புலியாறு, மல்ல சமுத்திரம் ஆறுகளின் குறுக்கே சிறுசிறு அணைகளைக் கட்டினால் பாசன வசதி கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது. இவற்றை செய்து தரவேண்டுமென்று கேட்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதிலே வல்லவர். அவர் கொண்டு வந்திருக்கிற இந்த நீர்ப்பாசனத் துறை கோரிக்கைமீது சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நிலத்தடி நீர், நதி நீர் மற்றும் மழை நீர் ஆகியவற்றை முறையாக, முழுமையாகப் பயன்படுத்தி இருப்பது தமிழக அரசுதான் என்பதைத் தமிழகத்திலே இருப்பவர்கள் மட்டும் அல்ல, மற்ற மாநிலத்திலே உள்ளவர்களும் பாராட்டுகிறார்கள் என்று சொல்வதை விட, ஓரளவு பெருமைப்படுகிறார்கள். அந்த அளவு இங்கே நீர்ப்பாசனத் திட்டங்கள் மிக வேகமாக, மிக விரைவாக செயல்பட்டு வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலத்தடி நீரையும், நிலப்பரப்பு நீரையும், மழை நீரையும் மழை காலங்களில், கரைபுரண்டு ஓடி கடலிலே வீணாகின்ற நீரையும் ஒன்றாக இணைத்து முறைப் படுத்தி, தமிழகத்திலே இருக்கிற வறண்ட பகுதிகளுக்கெல்லாம் அவற்றைப் பயன்படுத்துகின்ற முறையிலே, தமிழகத்திலே ஒரு நீர்ப்பாசன வாரியம் அமைக்க அரசு முன் வரவேண்டுமென்று நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

அதே போன்று இன்னும் தமிழகத்திலே பல பகுதிகளிலே நிலத்தடி நீர் எங்கெங்கே இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப் படாத நிலைமையிலே இருக்கிறது. அவற்றை எல்லாம் கண்டு பிடித்து, வறண்ட பகுதியிலே உள்ள மக்களுடைய வாழ்க்கையை வளமாக்குகிற ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்காக இங்கே குழாய்க் கிணறுக் கழகத்தைத் தமிழக அரசு அமைத்திருக்கிறது. நான் அதை மனதார வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இந்தக் குழாய்க் கிணறுகள் கழகத்தின் மூலமாக, ஊருணிக் கிணறுகளை அதிகமாக உண்டாக்குவதற்காக அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன். அதே போன்று இந்த நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற காலத்தில், ஒப்பந்தங்கள் விடும்போது ஷெடுயூல் ஆஃப் ரேட்சுக்குக் கீழே டெண்டர் கொடுத்தால் நிச்சயமாகக் கட்டாது. காரணம், அவ்வாறு ஷெடுயூல் ஆஃப் ரேட்டுக்கு கீழே கொடுக்கும்போது, அதனுடைய தண்ணீர் குவாலிடி மிகக் குறைந்து போகிறது என்ற காரணத்தால். அரசு வருங்காலத்தில் திட்டங்கள் தீட்டும் போது, இப்படிப்பட்ட ஷெடுயூல் ஆப் கீழே டென்டர் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற நடைமுறையைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, தமிழகத்திலே இருக்கிற கண்மாய், ஆற்றங்கரை கால்வாய், ஆக்கிரமிப்புகளை நீக்க ஒரு அவசரச் சட்டத்தைத் தமிழக அரசு கொண்டுவந்து, இந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த ஆக்கிரமிப்பு



களை எல்லாம் அகற்றிய பிறகு, வனத்துறையின் மூலமாக கண்மாய்கள், குட்டைகள், ஆற்றங்கரை, கால்வாய் மற்றும் கூவம், பக்கிங்காம் கால்வாய் கரைகளிலே மரம் நட்டு பாது காப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் மொத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, இந்தத் துறையில் நீர்க்காவலர்கள் பதவி நீண்ட காலமாக, நிரம்பக் காலியாக, நிரப்பப்படாமல் இருக் கிறது. அவற்றை எல்லாம் விரைந்து நிரப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். வைகை, பெரியார் காவேரி, அனந்தாறு, தாம்பிரபரணி, மணிமுத்தாறு ஆகிய நதிகளை எல்லாம் நவீனப்படுத்துவதற்கான திட்டங்களை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்:

அதோடு, இந்தக் கால்வாய்களின் மூலமாக வருகின்ற பாசனத்தையும், மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை வருவாய்த் துறையும், பொதுப் பணித் துறையும் இரண்டும் சேர்ந்தே செய்கின்றன. அதனால், விவசாயிகளுக்கு எண்ணற்ற நன்மைகள் உண்டாகின்றன. ஏற்கனவே கோவை மாவட்டத்திலே நடைமுறையிலே இருப்பதைப் போல், இந்தப் பாசனத்தை அமுல் செய்கிற அதிகாரம் முழுவதையும் இந்தப் பொதுப் பணித் துறை ஏற்றுக்கொள்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று இந்த பான்ட் ஸ்கீம் என்பதைத் தற்போது நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். இது வேளாண்மைத் துறை அதிகாரிகளுக்கும், பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கும் ஏற்பட்ட மனத் தாங்கல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் செயல்படுத்து வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். 100 ஏக்கருக்கு குறைவான ஏரிகளிலே இருக்கிற பாசனங்களை எல்லாம் அரசு இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை. எனவே, 50 ஏக்கர்களுக்கு மேல் உள்ள ஏரிப் பாசனங்களையெல்லாம் அரசு நிர்வாக்த்திலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியான பழனியிலே ஓடுகிற நல்லதங்காள் ஓடையின் குறுக்கே கொத்தையாறுக்குத் தெற்கே ஒரு அணை கட்ட வேண்டுமென்று அரசினுடைய செயற்குறிப்பு இருக்கிறது. இந்த அணை கட்டுவதற்கான ஆய்வினை அதிகாரிகள் மேற் கொண்டும்கூட, நீண்டகாலமாக சில நிலப்பிரபுக்களின் குறுக்கீடு கள் காரணமாக தேக்கி வைக்கப்பட்டு, கால தாமதம் ஆகி வருவதை அரசு கவனத்திலே கொண்டு மீண்டும் வேகமாக ஆய்வினை முடித்து, அந்தத் திட்டத்தைச் செயலாற்றிக் கொடுக்கும்படி நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு.கே.குப்புசாமி] [1982 மார்ச் 18

அதே போன்று கேரளாவிலிருந்து உபரியாகக் கிடைக்கின்ற தண்ணீர் கிட்டத்தட்ட 56.6 டி.எம்.சி வீணாகக் கடலிலே கலக்கிறது- அதைத்தான் மத்திய அரசு நியமித்த நிபுணர் குழு எடுத்துக் காட்டியிருக்கிறது, எனவே, உபரி நீரைக் கேரளா விலிருந்து தமிழகத்திற்குத் திருப்பி கிழக்கு நோக்கி கொண்டு போவதற்கான திட்டத்தை மத்திய அரசோடு கலந்து விரைவு படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று, தென்னகத்தில் ஓடுகின்ற நதிகளை எல்லாம் இணைக் கின்ற ஒரு முனைப்பில் மத்திய அரசு தமிழக அரசு இப்பொழுது தூண்டி வருவதோடு இந்தத் தூண்டுதலை அதிக மாக்கி, இந்த இணைப்பை விரைந்து செயல்படுத்துவதற்காக மத்திய அரசைத் தொடர்ந்து வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று பழனி பகுதியிலே இருக்கிற கோதையாறு மஞ்சளாறு, ஆகிய திட்டங்களை விரைவுபடுத்தி இந்தத் தண்ணீரை, பழனி, ஒட்டன்சத்திரம், வேம்பப்பட்டி ஆகிய வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு போவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அரசைக்கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6.00)

பரம்பிக்குளம் ஆளியார் ப்ராஜக்ட்டிலிருந்து இப்பொழுது தண்ணீர் எக்ஸ்டென்ஷனுக்குப் பல்லடம், கோவை, அவினாசி தாலுக்காக்களுக்குக் கொடுப்பதாக அறிகிறேன், அதை மாற்றி பழனி ஒட்டன்சத்திரம் பகுதிகளுக்குக் கொடுத்துவிட்டு, சர்ப்ளஸ் தண்ணீர் இருக்கின்ற மேல் பவானித் திட்டத்திலிருந்து—மூன்று போகம் விளைகிறது— பல்லடம், கோவை, அவினாசி, தாலுக்காக் களுக்குத் திருப்பி விடுதற்கு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. த ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் முதற் கண் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சரவர்கள் 1982—83-ஆம் ஆண்டுக்கான அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆனால் பலயிடங்களில் இன்றைக்கு நீர்ப்பாசனத்தின் கீழ் உருவாக்கக்கூடிய ஏரிகளை தனி யார்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் அமைச்சரவர்களிடத்திலேகூட 1981—ஆம் ஆண்டில் இதே போன்று ஏரிகளையெல்லாம் தனியார் ஆக்கிரமித்துக் கொண்டு பாசனம் செய்வதற்குக்கூட தடையாக இருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறேன்.



1982 மார்ச் 18] [திரு த. ஆறுமுகம்]

அரியலூர் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கிறது அரியலூர் டிவிஷனில் 5 தொகுதிகள் இருக்கின்றன. பெரம்பலூர் வரகூர், அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் ஆகிய இந்த 5-ல் மூன்று தொகுதிகள் மிகவும் பின் தங்கிய தொகுதிகளாக இருக்கின்றன. பெரம்பலூர் வரகூர் பகுதிகளில் நிலத்தடி நீரைக் கிணறுகளின் மூலம் மேலே கொண்டு தண்ணீர் கொடுப்பதற்கு இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர், திருமானூர் பகுதிகளில் உள்ளவர்கள் புள்ளம்பாடி வாய்க்காலை நம்பிக்கொண்டிருக்கிறார்கள் அந்தப் புள்ளம்பாடி வாய்க்காலில் நீண்ட நாட்களாகத் தூர் எடுக்கவில்லை. அந்த வாய்க்காலை வெட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

1975-ஆம் ஆண்டிலிருந்து புள்ளம்பாடி வாய்க்காலிலிருந்து கண்டிலாதீர்த்தம் என்ற ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரிக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அப்பொழுது பத்து இலட்சம் ரூபாய் செலவு செய்தது போக மீதியுள்ள 10 இலட்சம் ரூபாயை அந்த ஏரிக்குச் செலவு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அந்த கண்டிலாதீர்த்தம் ஏரியைப் பலர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை யெல்லாம் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், கொள்ளிடத்திற்கு நடுவில் கீழ ராமநல்லூர் மேல ராமநல்லூர் என்று இருக்கிறது. 1977-78-இல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் அந்தக் கிராமத்திற்கு ஒரு தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தோம். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் அனுமதிக்கப்பட்டு அரசிடம் வந்து எந்த அளவிற்கு இருக்கிறது என்று தெரியவில்லை. அந்தக் கிராமத்திற்கு தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் சுத்தமல்லி ஓடைத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அது பாராட்டப்பட வேண்டியதுதான், அதற்காக நிர்வாகப் பொறியாளர், உதவிப் பொறியாளர், அரசு அதிகாரிகளெல்லாம் நியமித்து விட்டார்கள் அந்த சித்தமல்லி ஓடைத் திட்டத்திற்கு டெண்டர் விடப்பட்டது. அந்த நேரத்தில் டெண்டர் எடுத்தவர்களே நில அக்கிரமிப்பு செய்துகொண்டு அந்த நிலத்தை விடுவதற்குத் தயங்குகிறார்கள். உடனடியாக அந்த நிலத்திற்கு என்ன தொகையை நிர்ணயிக்க வேண்டுமோ அந்தத் தொகையை நிர்ணயம் செய்து கொடுத்தால் தான் நாங்கள் எங்கள் நிலத்தைக் கொடுப்போம் அல்லது வேறு எங்கேயாவது வேண்டாத இருக்கும் இடம் எங்களுக்கு வேண்டு மென்று கேட்கிறார்கள். அந்த நிலத்தை அவர்களுக்கு ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

புள்ளம்பாடி வாய்க்காலில் பல கிளை வாய்க்கால்கள் தூந்து போயிருக்கின்றனர். அதிலெல்லாம் தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புள்ளம்பாடி வாய்க்காலிலிருந்து பழங்கானத்தம், கோவில் சிலை, உளநகம், சன்னலூர், கரவெட்டிப்பழுதூர், கொளத்தூர், கல்லூர், வைத்தூர், தூத்தூர், வரையில் இந்த வாய்க்கால் பாய்கிறது. அந்த துத்தனேரி வாய்க்காலில் கரையெல்லாம் நல்லமுறையில் இல்லை. 1977 இல் புயலால் பாதிக்கப்பட்ட நேரத்தில் அன்றைக்கு இருந்த நிர்வாகப் பொறியாளர் அந்த வாய்க்காலை நல்லமுறையில் செப்பனிட வேண்டுமென்று திட்டங்கள் தீட்டி சில வேலைகளை, இரண்டு பக்கமும் சிமென்ட் ஸ்லாப் போட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அந்த சிமென்ட் ஸ்லாப் போடப்படவில்லை. சிமெண்ட் ஸ்லாப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

துத்தனேரியிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய தூத்தூர் வாய்க்கால், வைத்தூர் வாய்க்கால், ஓடையூர், நாடாம்பூர் இப்படிப்பட்ட பகுதிகளிலுள்ள வாய்க்கால்கள், கிளை வாய்க் கால்களெல்லாம் தூர் எடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

துத்தனேரியில் இன்றைக்குப் பலர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சொன்னதைப் போல ஒரு அவசரச் சட்டம் போட்டாவது அந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும். இல்லையென்றால் அவர்கள் சொல்கிறார்கள் 10 ஏக்கர், 20 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள்கூட ஆக்கிரமிப்பு செய்து கொண் டிருக்கிறார்கள், என்று அதையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும். இன்றைக்கு நிலத்தை நம்பித்தான் விவசாயிகள் இருக் கிறார்கள்.

புள்ளம்பாடி வாய்க்கால், நந்தியாறு வாய்க்கால் ஆகிய இந்த இரண்டு வாய்க்கால்களையும் நல்லமுறையில் வெட்டித் தூர் எடுத்து அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் பலன் அடையும் வகையில் செய்ய வேண்டும். இப்பொழுது அந்தப் பகுதி விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்கு இந்த அரசு பாடு பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித் தமைக்காக துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர் கிறேன், வணக்கம்.

* திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற, 1982–83 ஆம் ஆண்டுக்கான பாசனம் மீதான மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்



மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான் நீண்ட நெடுங்காலமாக முகவை போன்ற வறட்சி மிக்க மாவட்டங்களில் இன்றைக்குப் புதிய பல திட்டங்களைப் போட்டு இன்றைக்கு அது நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. அந்த வகையிலே இந்த ஆண்டு பெரிய, மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ. 35·11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். அதன் மூலம் ஏறத்தாழ 24,100 ஏக்கர்கள் பரப்பளவு பாசன வசதி பெற உள்ளது என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையிலே மகிழ்ச்சியைத் தருகிற ஒரு செய்தியாகும். பரம்பிக்குளம் ஆளியார் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம். கோவை மற்றும் பெரியார் மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், காங்கேயம் வட்டங்களில் உள்ள 1·15 லட்சம் ஏக்கர் கூடுதல் நிலங்கள் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்க இருப்பதை அந்தப் பகுதி மக்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தரத்தக்க செய்தி ஆகும். இந்தத் திட்டத்தை ஆண்டுதோறும் விரிவுபடுத்திக் கொண்டு போவதற்குப் பதிலாக புதிய கண்மாய்களை உருவாக்கினால் அந்தப் பகுதியிலே நீர்வளம் பாதுகாக்கப்படுவதுடன் நீர் வளத்தை அதிகப்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற காளிங்கராயன் கால் வாய் பாசனம் கீழ்பவானி பாசனங்களில் இருக்கின்ற ஒரு சில பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாக இருக்கும் என்று கருதுகிறேன். காளிங்கராயன் கால்வாயிலே இருக்கின்ற கடை கோடிப் பகுதியிலே இருக்கின்ற சோதனைக் கால்வாய் ஏறத்தாழ 40 ஆண்டுகளாக இன்னும் சோதனை கால்வாயாகவே இருந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே நீர்ப்பாசனம் பெற அந்த நிலங்களை நிரந்தரமான ஆயக்கட்டு பகுதியாக அமைச்சர் அவர்கள் ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காளிங் கராயன் கால்வாய் பகுதியிலே கடைகோடியிலே தண்ணீர் சரிவர கிடைப்பதில்லை. சமீபத்திலே அந்தப் பகுதியிலே சுற்றுப்பயணம் செய்திருந்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கூட அந்தப் பகுதியைப் பார்வையிட்டு சென்றார்கள். அதற்குப் பின்னால் இப்போது ஓரிரு வேலைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல இடங்களில் அந்தக் கால்வாயின் குறுக்கே பல பாறைகள் இருக்கின்ற காரணத் தினால் தண்ணீர் தேங்கி கடைகோடி பகுதிக்கு தண்ணீர் வரவில்லை. அந்தப் பாறைகளை அகற்றி அந்தக் கடை கோடிப் பகுதிக்கு சரியாக தண்ணீர் கிடைக்கின்ற அளவிலே திட்டம் இட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கால்வாயின் பல இடங்களிலே குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்கள் மிகவும் தாழ்வாக இருக்கின்ற

காரணங்களினால் அந்தப் பாலங்களிலே தண்ணீர் போவதற்குப் பதிலாக தேங்கி நின்று கரையிலே வழிந்து கொண்டு இருக்கின்றது.

குறிப்பாக சொல்லப்போனால் ஈரோட்டுக்கு அருகிலே இருக்கின்ற சுண்ணாம்பு ஓடை என்ற ஓடையிலே கட்டப்பட்டிருக்கின்ற அந்தப் பாலத்தில் கால்வாய்த் தண்ணீர் கீழேயும், ஓடைத் தண்ணீர் மேலேயும் சென்று கொண்டிருக்கின்றது. அந்த இடத்திலே பாலம் மிகவும் தாழ்வாக இருக்கின்றபடியால் அங்கே தண்ணீர் போவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. இதுபோன்று பல இடங்களில் பாலம் மிகவும் தாழ்வாக இருப்பதால் அதை உயர்த்திக் கட்டி, கடைகோடிக்கு எளிதாக நீர் போகின்ற அளவிலே திட்டம் தீட்டி தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கீழ்பவானி கால்வாய்ப் பகுதி என்னுடைய தொகுதியிலே கடைகோடிப் பகுதியாக இருக்கின்றது. குறிப்பாக சென்னசமுத்திரம் பகுதிக்கு அந்தப் பாசன காலத்திலே சரியாகத் தண்ணீர் கிடைப்பதில்லை. அதற்காக அந்தக் கால்வாயை சீர்படுத்தி செப்பனிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கீழ்பவானியிலே கால்வாயிலிருந்து தண்ணீர் விடுகின்ற நாள் ஆண்டுதோறும் மாறிக்கொண்டே வருகிறது. எந்தத் தேதியில் இருந்து தண்ணீர் விடப்படுகிறது என்று சரியாகத் தெரியவில்லை. 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்று சொல்வார்கள். ஆனால் கீழ் பவானி பகுதியிலே ஆடி போய், ஆவணி போய் புரட்டாசியிலேதான் தண்ணீர் கிடைக்கும் சூழ்நிலை இருக்கின்றது. அமைச்சர் அவர்கள் அதை ஆண்டுதோறும், ஆடிமாதத்திலேயே தண்ணீர் கிடைக்கும் வகையிலே அதுவும் குறிப்பிட்ட தேதியிலே கிடைக்கும் வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்திலே அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட நொய்யலாறு அணைத் திட்டத்தின் மூலம் கரூர் தாலுகாவிலே ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறவுள்ளது என்பது அந்தப் பகுதி மக்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தரத்தக்க செய்தியாகும்.

(இரவு 6·10)

அதேபோல் கீழ் பவானி கால்வாய்ப் பகுதியிலே இந்த ஆண்டு மூன்றாம் போக எள் பயிருக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு என்ன காரணத்தினாலோ இந்த எள் பயிருக்கு தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டது. அமைச்சர் அவர்கள் தலையிட்டு இப்போதாவது அந்த எள் பயிருக்குத் தண்ணீர் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல், கீழ் பவானி கால்வாய் அணைக்கட்டிலே தண்ணீர் நிறைந்து இருந்தாலும் மேட்டூர் அணையிலே இல்லாமல் இருக்கின்ற நேரத்திலே இந்த அணையிலே இருக்கின்ற தண்ணீரை, தஞ்சாவூருக்குத் திருப்பிவிடுகிறார்கள். அதாவது என் பகுதியிலே இருக்கின்றவர்கள் இந்த கீழ் பவானி அணையிலே நிறைய தண்ணீர் இருந்தாலும் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற அளவிலே சில ஆண்டுகளிலே எங்களுக்கு காலதாமதமாக தண்ணீர் வருகிறது என்று கூறி, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி என் உரையினை முடித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன். நாம் பெரிய பெரிய அணைகள் கட்டி இருந்தாலும் கூட, இன்றைக்கு இந்தக் கண்மாய்களை எல்லாம் அகலப்படுத்தி ஆழப்படுத்தி அதிலே நல்லமுறையிலே பாசனவசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற இந்த அடிப்படையின் காரணத்தினாலேதான் தமிழகத்திலே இருக்கக்கூடிய 37 ஆயிரம் கண்மாய்கள், ஏரிகள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறன. அதன்மூலமாக கிட்டத்தட்ட மூன்றில் ஒரு போகம் பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படியிலேதான் உலகவங்கி உதவியோடு சென்னையிலே ஒரு கருத்தரங்கைக் கூட்டி, அந்தக் கருத்தரங்கின் மூலமாக 8 ஆண்டு திட்டம் ஒன்றைத் தீட்டி, 8 ஆண்டுக்குள்ளாக கிட்டத்தட்ட 120 கோடி ரூபாய் இந்த பாசன வசதிகளை, அதாவது ஏரி, கண்மாய் பாசன வசதிகளை சீர் செய்யவேண்டும். ஏரி பாசனத்தில் நவீனம் என்கிற ஒரு அடிப்படையிலே கருத்தரங்கைப் போட்டு, அதிலே பல கோரிக்கைகள் நம்முடைய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிகிறேன். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்தாலே கிராமங்களிலே இருக்கக்கூடிய அந்த சாதாரண ஆற்றுப்பாசனத்திற்கு வசதி இல்லாமல் இருக்கக்கூடிய பகுதி மக்களுக்கு நல்லமுறையிலே விவசாயம் செய்வதற்கு வழிவகை செய்தவர்கள் ஆவோம் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

கேரளாவிற்கு அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அதேபோன்று நாம் அதைச் செய்யாம ஃபாரின் சர்வீஸுக்கு அனுப்புவதையே நாம் நிறுத்தி வைப்பே மானால், அது நல்லதல்ல, இந்த அரசாங்கத்திற்கு அது சால சிறந்தது அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் அங்கே 5 ஆண்டிற்கு அவர்களை டெபுடேனிலே அனுப்புவோ மானால், மீண்டும் அந்த 5 ஆண்டு முடிவதற்குள்ளாக 2 ஆண்டுக்குள்ளேயோ. அல்லது 3 ஆண்டுக்குள்ளேயோ அவர் களை திருப்பி அழைத்துக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கு மானால் அது அவர்களுடைய பண்டமெண்டல் ரைட்ஸ்க்கு பாதகமாக இருக்கும் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனவே அவர்களையெல்லாம் யார் யார் பாரின் சர்வீஸுக்கு போக வேண்டுமென்று விரும்பு கிறார்களோ அவர்களையெல்லாம் அனுப்பி வைத்து விட்டு இன்றைக்கு நம்முடைய நாட்டிலே நிறைய டிப்ளமோ படித்தவர்கள் நிறைய பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் அதுவும் நிரந்தரம் இல்லாமல் அவர்கள் தற்காலிகமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்பட்டவர்களை இப்படி செய்யக்கூடிய காரியங்களை செய்யச் செய்தால் அது சிறந்ததாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதுமாத்திரம் அல்லாமல், இன்றைக்கு இந்த ஏரி, கண் மாய்க்கு உள்ளே எத்தனையோ ஆக்கிரமிப்புகள் பல இடங்களில் இருக்கிறது, அதை சீர் செய்ய முடியாமல் பல வரத்துப் கால்வாய்கள் சரி செய்யப்படாமல் இருந்து கொண் டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தின் மூலமாக இதை இந்த அரசு செயல்படுத்த முன்வருமானால் அது ஒரு மிகப்பெரிய சாதனையாக சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்து அளவிலே பல காரியங்கள் இருக்கின்றன. அதோடு இந்த நிலத் தடிநீர் இருக்கின்றதே, இந்த நிலத்தடிநீரிலே ஒரு ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள் அவற்றில் கிணறு வெட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருப் பவர்களுக்கு நம்முடைய அரசு ஒரு நல்ல திட்டத்தை நிறை வேற்றி, ஒரு 100 ஏக்கருக்கு, அல்லது ஒரு 50 ஏக்கருக்கு ஒரு பெரிய கிணறு வெட்டி அதிலே பம்புசெட் வைத்துக்கொடுத்து அவர்களுக்கு பாசன வசதியை கொடுத்து அவர்களிடத்திலே வாட்டர் டாக்ஸ் வசூல் பண்ணக்கூடிய அளவிற்கு திட்டம் போட்டு இருப்பதை நான் வறண்ட பகுதியிலேயிருந்து வந்த காரணத்தினால் அதை நான் பாராட்டுகிறேன்.



அதுமாத்திரம் அல்லாமல் இன்றைக்கு பெரியார் மேம் பாட்டுத் திட்டம். என்ன காரணமோ தெரியவில்லை. இந்த நிலக்கோட்டை தொகுதி, இவ்வளவு புறக்கணிக்கப்பட்டுவிட்டது என்று நான் மிகுந்த வேதனைப்பட்டு இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு தன்னுடைய உருவத்தை கண்ணாடியில் பார்த்தால் எப்படித் தெரியுமோ அந்த அளவுக்கு நிலக்கோட்டைத் தொகுதியைப் பற்றியும் தெரியும். பல காலமாக நாங்கள் சொல்லிவருகிறோம். அந்தக் காலத்தில் நான் சட்டமன்றத்தில் பேசும்போது இதைப்பற்றி அடிக்கடிக் குறிப் பிட்டேன். அப்போது சீப் எஞ்ஜினியராக இருந்த பாண்டியன் அவர்களும் அமைச்சர் அவர்களும் ஏன் அதைப்பற்றியே பேசு கிறீர்கள். பெரியாறு மேம்பாட்டுத் திட்டம் வரும்போது நிலக்கோட்டைத் தொகுதியில் 10,000 ஏக்கருக்கு பாசனம் செய்ய தண்ணீர் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். என்ன காரணத்தாலோ மக்கள் வேண்டாம் என்று சொன்னதால் நாங்கள் எல்லாம் 'வாஷ் அவுட்' ஆகிவிட்டோம். இப்போது மீண்டும் இங்கே வந்திருக்கிறோம். ஏழை எளிய மக்களுக்கு உபகாரம் செய்யும் முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் இங்கே வந்திருக்கிறார்கள். முன்னாலே 10,000 ஏக்கருக்கு தண்ணீர் கொடுப்போம் என்று காங்கிரஸ் ஆட்சியிலே சொன்னார்கள். இப்போதும் பெரியார் மேம்பாட்டுத் திட்டத்தில் லிங்க்கானல் அமைக்கும் போது 4000 ஏக்கருக்கு பாசனவசதி செய்வதாகச் சொன்னார்கள் ஆனால் எந்த வேலையும் நடை பெறவில்லை. இரண்டாவது திட்டத்தில் செய்யப்போவதாக அறிகிறேன். அதையும் இந்த முதல் திட்டத்திலேயே செய்தால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மணிமுத்தாறு அணையில் 80 அடி ஹைலெவலில் ஒரு கால் வாய் வெட்டி பாசனத்திற்காக தண்ணீர் கொடுக்கிறார்கள் அதைப்போல இந்த வகையிலும் ஹைலெவலில் ஒரு வாய்க்கால் வெட்டினால் அதிலிருந்து நிலக்கோட்டைக்குத் தண்ணீர் கிடைக்கும். சுமார் 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்த கால் வாய் வெட்ட வேண்டிருக்கும். வைகை அணையில் சுமார் 60 அடி தண்ணீர் இருக்கும்போது அந்தத் தண்ணீரை ஹைலெவல் கால்வாய் மூலம் கொண்டுவரும் திட்டத்தை உருவாக்கினால் நிலக்கோட்டையிலிருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, விவசாயத் தையே நம்பியிருக்கிற மக்களுக்கு பேருதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதை எப்படி யாவது செய்துகொடுக்க வேண்டுமென்று ஆயிரங்கோடி நமஸ்காரம் செய்து என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தினால் மட்டப்பாறை, காமராஜ்புரம் ஏரியாவில் லைனிங் போட்டு மடைகளை, அடைத்திருக்கிறார்கள். அதனால் மக்கள் பாசனம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அதைப்போல சடையம்பட்டி, சில்லம் பட்டி ஏரியாவில் சுமார் 100 ஏக்கர் நிலம் ஏற்கெனவே பாசனம் பெற்று வந்தது. லைனிங் போட்டதால் அந்த ஏரியா மடைகளும் அடைக்கப்பட்டு, பாசனம் செய்ய முடியவில்லை. அவர்கள் தனியாக அனுமதி பெற்று, பாசன வசதிபெற்று வந்தார்கள். அந்த வசதி இப்போது இல்லை. அந்தப் பகுதிகளுக்கு எல்லாம மடை வைத்துக் கொடுத்து, மீண்டும் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு: என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரர்களே, இன்றைக்கு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகள் மக்களுக்கு மிகவும் முக்கியமானவை. இதிலே இன்றைக்கு பாசனம் என்ற தலைப்பில் 36 கோடி ரூபாயும், பாச்னம் குறித்த மூலதனம் என்ற தலைப்பில் 42 கோடி ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற வேலைகளை நிறைவேற்ற வேண்டுமென்றால் பல நூறு கோடி ரூபாய் ஒதுக்கினால்கூட இந்த வேலைகளை எல்லாம் செய்து முடிக்க முடியாது. அவ்வளவு பிரச்சனைகள் நமக்கு இந்த பாசனத் துறையில் இருக்கின்றன. இருந்தாலும் சில முக்கியமான வேலைகளை இன்றைக்கு திட்டமிட்டு செய்து முடிக்க வேண்டும். ஏனென்றால் பல ஆண்டுகளாக பரிசீலனை செய்து, ஆய்வு செய்து ஒப்புக்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் இன்றுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன.

சென்ற ஆண்டு அறிக்கையிலே கூட 12 திட்டங்களை எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டுக்குள்ளாக செய்து முடிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரை அதற்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. உதாரணமாக என்னுடைய தொகுதியில் இருக்கிற குதிரையாறு திட்டத்தை எடுத்துக் கொண்டால் 10 ஆண்டுக்கு முன்னாலே ஒப்புகொள்ளப்பட்ட திட்டம் அது. இந்த ஆண்டில் அதை எடுத்துக்கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த ஆண்டும் அதுபற்றி ஒன்றும் தெரியவில்லை. அமைச்சரவர்கள் அதிலே ஒரு நல்ல முடிவு எடுத்து, இந்த ஆண்டில் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அதைப்போல நவாலூத்தூர் திட்டம் இருக்கிறது. அது கிட்டத்தட்ட 17 இலட்சம் ரூபாய்த் திட்டம். அந்த ஊர் மக்கள் பலமுறை வந்து சொன்னார்கள். அதிகாரிகளிடமும் அமைச்சர் களிடமும் அதுபற்றி பலமுறை சொல்லியிருக்கிறோம். எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். இது இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதையும் நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல உலக வங்கி உதவியுடன் இன்றைக்கு வைகை பெரியாறு மேம்பாட்டுத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலை நடந்து கொண்டிருக்கிறது. அது வரவேற்கக்கூடியதாக இருந்தாலும் உலக வங்கி உதவி மூலமாகக் செய்யக்கூடிய, சிமிண்ட் ஸ்லாப் போடக்கூடிய வேலைகள் சிறு திட்டங்களுக்கும் அமுல்படுத்தப்பட வேண்டும்; அப்படியானால்தான் உறுதியாக, நல்லமுறையில் பணிகள் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல கிருதமால் நதி அணையிலிருந்து 11 குளங்கள் தான் பாசன வசதி பெறுவதாக இன்றையதினம் இருக்கிறது. அதில் ஒன்றான ஐயன்குளம் பாசன வசதி பெறுவது விடுபட்டு, விட்டது. அதைப்பற்றி தலைமைப் பொறியாளரிடம் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஏற்கெனவே அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆகவே, கிருதமால் நதி அணையிலிருந்து ஐயன்குளத்திற்கு வாய்க்கால் வெட்டி, தண்ணீர் வரத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6.20)

திருவாரூர் தாலுக்காவில் விளமல் கிராமத்திற்கு எந்த விதமான பாசனமும் இல்லை. ஒடம்போக்கி ஆற்றில் இருந்து அந்தக் கிராமத்திற்கு உடனடியாகப் பாசன வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் திருவாரூர் தாலுக்காவில் உள்ள தெற்கு பனையூர், வடக்குப் பனையூர் கிராமங்களுக்கு வடிகால்வசதி ஏற்படுத்திக் கொடுக்காத காரணத்தால் அவர்கள் மிகவும் வசதி குறைவான நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்களுக்கு வடிகால் வசதி ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டு, சந்தர்ப்பம் அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள் கிறேன்.

*திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்ல விரும்கிறேன். இன்றையதினம் இந்த நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த வரையில் பல புதிய திட்டங்கள் இருக்கும் என்று எதிர்பார்த் தேன். ஆனால் அப்படி ஒன்றும் இல்லாததுகண்டு மிக்க வேதனை படுகிறேன். இன்றையதினம் உணவுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக ரூ 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில். இந்தக் கொள்கைக் குறிப்பிலேயும் சரி, சாதனைப் பட்டியலிலும் சரி, எந்த விதமான திட்டங்களும் காட்டப்படவில்லை.

கள்ளக்குறிச்சி பகுதியில் கோமுகி அணை இருக்கிறது. அந்த அணையை உயர்த்தித் தரவேண்டும் என்று கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டம் சுமார் 84 லட்ச ரூபாய் அளவிற்கு தீட்டப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப் படவில்லை. ஆகவே, உடனடியாக அந்த அணையை உயர்த்தி, மழைக்காலங்களில் அந்தப் பகுதியில் வரும் தண்ணீர் ஆற்றில் கலந்து வீணாகாமல், சின்னச்சேலம் பகுதிக்கு அந்தத் தண்ணீரை செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வாறு அதை சின்னசேலம் பகுதிக்கு செலுத்தவேண்டும் என்று சொன்னால், சாத்தனூர் அணையில் எப்படி வலதுபுறம் வாய்க்கால் வெட்டி, தென்னாற்காடு மாவட்டத்தில் பாசனத்திற்கு விடப்பட்டுள்ளதோ அதைப்போல் இங்கேயும் ஒரு வலதுபுறக் கால்வாய் வெட்டி. சின்னசே ம் பகுதிக்கு பயனுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால் பாசன வசதி இல்லாத கிராமங்கள் சுமார் 10 பாசன வசதி பெறும். நீர்பிடிப்பு இல்லாத பகுதிகளில் நீர்பிடிப்பு கிடைக்கும். அதன்காரணமாக அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளும் பயன் அடைவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பாக்கம்பாடி ஆற்றில் அணை கட்டுவது குறித்து சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆய்வு செய்யப்பட்டது. அதுகுறித்து மாண்புமிகு முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு அவர்கள் இடத்தைப் பார்வையிட்டார்கள். ஆனால் இதுவரையில் அந்த அணைக்கட்டுவதற்குரிய எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே, அதை உடனடியாக அடுத்த ஆண்டுத் திட்டத்திலாவது சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரம் பகுதியில் முசுகுந்தா நதியின் குறுக்கே ஒரு அணை கட்டவேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்தில் இருந்த மாமன்ற உறுப்பினர்கள் நாச்சியப்பன், பச்சியப்பன் மற்றும் துரை முத்துசாமி ஆகியோர் கேட்டு இருக்கின்றனர். ஆனால் இதுவரையிலும் அதற்கான திட்டம் தீட்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அதையும் அவசியம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கும் ஏரிகள் தூர்ந்து போய் இருக்கின்றன. குறிப்பாக, சிறுவங்கூர் ஏரி தூர்ந்து போய் இருக்கிறது அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயம் செய்யக்கூடிய மக்களுக்கு நிரந்தரமான முறையில் பாசன வசதி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஏற்றவகையில் மணிமுத்தா அணையில் இருந்து மெயின் வாய்க்காலில் கிளை வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு வரவேண்டும். பாப்பக்கால்



ஓடையில் இருந்து அரியபெருமாள் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டும். சிறுவங்கூர் அரியபெருமானூர் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு தனியாக வாய்க்கால் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, கள்ளக்குறிச்சிக்கு அருகில் கோதையாறுக்கு கீழே அணை கட்டவேண்டும் என்று 5-6 ஆண்டுகளாக கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவ்வாறு வரும்போது கீழே இருக்கும் ஆயக்கட்டுதாரர்கள் கிடைக்கவில்லை என்று சொன்னால், மேலே இருக்கும் ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் விடுவது நிறுத்தப்படுகிறது. ஆகவே, பொதுப்பணித்துறை மூலமாக இந்தக் குறைகளைப் போக்கும்வகையில் தலைமைப் பொறியாளர்கள் திரு. ஏழுமலை, அம்ப்ரோஸ் வந்து பார்த்து விட்டுப் போயிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குறைகளைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வட ஆற்காடு மாவட்டம் தென்னாற்காடு மாவட்டத்தை ஒட்டியிருக்கிறது என்ற காரணத்தால், வட ஆற்காடு மாவட்டத்திலே போளூர் தொகுதியிலே செண்பகத் தோப்பு என்ற ஒரு அணையை அரசு ஏற்படுத்தப்போவதாகத் தெரிகிறது. இந்த அணையை உடனடியாக கட்டவேண்டும் என்று அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பலராமன் அவர்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து சின்னசேலம் தொகுதியிலே மலைக்கோட்டாலம் என்ற கிராமத்திலே, ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்ட ஒரு அணையில் வாய்க்கால் உடைந்த பிறகு, இதுவரையில் அந்த அணை கட்டப்படவில்லை. அந்தக் கிராமத்திலே அந்த அணையின் மூலம் தான் தண்ணீர் வர வழியிருக்கிறது. ஆகவே அதை மீண்டும் புதுப்பித்து, அந்தக் கிராம மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த சாதனைக் குறிப்புகளைப் பார்க்கிறபோது தகரை என்ற கிராமத்திலே மேல்பக்கத்திலே வரக்கூடிய மையூரா நதியின் அணையிலிருந்து வரக்கூடிய தண்ணீரை தடுத்து அந்தக் கிராமத்தின் வழியாக நீர் வருமாறு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை, ஏதோ இவர்களின் சாதனை போன்று சாதனைத் திட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டமானது 1976 ஆம் ஆண்டு கவர்னர் சுகாதியா இருந்த காலத்திலே அந்தப்பகுதி மக்கள் மூலமாக வேண்டுகோள் விடுத்த காரணத்தால், அப்போது அங்கே வறட்சி நிலவிய காரணத்தால் அதற்கு அவர் மூலமாக மனு கொடுக்கப்பட்டு வறட்சி நிவாரணத் தொகையில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது. அந்த வறட்சி

நீர்வாரணப் பணி மூலமாக ஆண்டுக்கு ஆண்டு, பெரிய முயற்சி அளவில் கொஞ்சம் கொஞ்சம் ஆக பணிகளைத் தொடங்கி அந்த அணையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் முடியவில்லை. ஆனால் அதை இவர்களுடைய சாதனையாக சாதனைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பொதுவாக கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்த்தால் தென்னாற்காடு மாவட்டத்திற்கு எந்தவிதமான முன்னேற்றத்திற்கும் வழி செய்யப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாறாக தாவாளை திட்டத்தை அவர்கள் செய்ததாக சாதனைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அதை நான் வன்மையாகக் கண்டித்து, இந்தச் சாதனை மலரிலே கள்ளக்குறிச்சி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, தென்னாற்காடு மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று கூறி அதனைக் கிழித்து எறிகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம் குறித்த மானியக் கோரிக்கையின் மீது ஏறத்தாழ 26 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். நீர் விரைவாகச் சென்று பாய்வதைப் போல, குறுகிய காலத்தில் 26 நபர்களைப் பேச அனுமதித்து, எனக்கும் இதிலே கொஞ்சம் நேரம் ஒதுக்கியிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பொதுவாக கருத்து தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், அவரவர்கள் தொகுதி, மாவட்டப் பிரச்னைகளோடு, பொதுவான சில கருத்துக்களையும் சேர்த்து இங்கே தெரிவித்திருக்கிறார்கள். 25 பேர்கள் பேசியது வரைகூடாக இல்லாமல் நிதானமாக இருந்தது. கடைசியாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் சிவராமன் அவர்கள்தான் கொஞ்சம் உணர்ச்சி வயப்பட்டு பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

இங்கே யாருடைய காலத்திலே என்ன சாதனை நடந்தது என்று நாம் ஒருவருக்கொருவர் பெருமை பேசிக் கொள்வதற்காக இந்த விவாதத்தை நடத்தவில்லை. அணை கட்டுவதினாலேயே நல்ல ஆட்சி என்று நாம் கருதுவோமேயானால் பிரிட்டிஷ் காலத்திலே கூட அணை கட்டப்பட்டது, எனவே அது எல்லாம் அவரவர்களுடைய கடமை என்பதை மறந்துவிடக்கூடாது. அதற்கு நாம் எவ்வளவு முன் உரிமையைக் கொடுத்து இப்போது செய்து வருகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி முன் உரிமைகள் கொடுப்பதிலே இன்னும் ஒதுக்கீடு அதிகமாக செய்திருக்க வேண்டும், இப்போது இருப்பது போதாது என்ற வகையில் ஆலோசனைகள் வருமேயானால் அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம், எனவே இந்தக் கருத்தை அத்தோடு நிறுத்திக் கொள்வது நல்லது.



இன்னொன்றும் சொல்வேன், ரிலே ரேஸ்களிலே ஓடுகிறபோது 400 மீட்டர் ஓட்டப்பந்தயம் என்றால், 100 மீட்டருக்கு முதலிலே ஒருவர் ஓடுவார். அவர் ஒழுங்காக ஓடியிருந்தால்தான், அடுத்த 3 பேரும் ஒழுங்காக ஓடி கடைசியிலே ஒருவர் வெற்றி பெற்றதாக அறிவித்து, அவரைத்தான் மேடையிலே வரவழைத்துப் பரிசையும் கொடுப்பார்கள். அதுபோல, இந்த நீர்ப்பாசனத் திட்ட சாதனைகள் என்பது ஆரம்பத்திலே இருந்த ஒரு ஆட்சி ஒழுங்காக ஓடியதினால்தான் நாம் பல்வேறு விஷயங்களை சாதித்திருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இப்போது நாம் அதைவிட நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்லலாமே தவிர, முதலிலே இருந்தவர்கள் ஓடவில்லை, முடமாக இருந்துவிட்டார்கள் என்று சொல்லவில்லை. அதை முதலிலே கருத்திலே கொள்ள வேண்டும். ஆக, எல்லோரும் அவரவர்கள் காலத்திலே உரிய முக்கியத்துவம் கொடுத்துச் செய்வதன் காரணமாகத்தான் முன்னேற்றம் ஏற்படும். அப்படி செய்வதற்குக் காரணம், 'நீரின்றி அமையாது உலகு' என்பதுதான். இந்த நீர்வளத்தைப் பொறுத்தவரையில் அதுவும் சற்று பற்றாக்குறை மாநிலமாக இருக்கக்கூடிய நம்முடைய தமிழகம், அதை மிக கவனமாகப் பயன்படுத்தினால்தான் உணவு உற்பத்தியிலே தன்னிறைவு பெறமுடியும் என்ற அடிப்படையில் நாம் அதைச் செய்திருக்கிறோம்.

முதலிலே விவாதத்தைத் துவக்கிவைத்து பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே ஆய்வு ஆய்வு என்று சொல்லி எவ்வளவு காலம்தான் நீடிப்பது? அதற்கு ஒரு வரைமுறை இல்லையா? என்று கேட்டார்கள். அதற்கு என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஓரே பதில் ஆய்வு முடிந்தவுடனே, அந்தக் காலமும் முடிந்துவிடும். அவ்வளவுதான். விரைவாக செய்யவேண்டும் என்று சொன்னால், முடிந்தவரையில் விரைவாகத்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

இப்போது செண்பகத்தோப்பு அணையைப் பற்றி அவர்கள் கேட்டார்கள். அவர்களுக்கும் மகிழ்ச்சிகரமாக இருக்கும் என்பதற்காக நான் சொல்கிறேன். அது திரும்பவும் ஒரு முறை மறு ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. காரணம் நாம் ஆரம்பித்துவிட்டு அடிக்கல்லை நாட்டிவிட்ட பிறகு, அணையே கட்டாமல் இருந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் கவனமாக மறு பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் ஆய்வே செய்யாமல் அணையைக் கட்டுவது என்றால், கட்டி முடித்தபிறகு அணையைக் காணவில்லை என்று போலீசிலே போய் புகார் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே இதிலெல்லாம் சில அடிப்படைப் பிரச்னைகள் இருக்கின்றன. அந்த செண்பகத்தோப்பு கிராமம் அருகில் ஒரு நீர் தேக்கம் அமைப்பதற்காக ஒரு விரிவான ஆய்வுகள் நடைபெற்று முடிவடைந்துவிட்டது. திட்டத்தின்

மதிப்பீடு ரூ. 468 லட்சம் ஆகும். இதனால் ஏற்கெனவே பாசனம் பெறும் 3,580 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதி-ஸ்டெபிலைசேஷன் செய்யப்படும்.

(மாலை 6.30)

மேலும் 1,856 ஏக்கர் பாசனம் பெறாமல் இருக்கும்பரப்புக்குப் பாசனவசதி அளிக்கப்படும். இந்த மதிப்பீடு அரசுக்கு இன்னும் இரண்டு மாதத்திற்குள்ளாக வந்துவிடும். இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே வட ஆற்காடு மாவட்ட உறுப்பினர்கள் மகிழ்சியடையலாம்.

அதற்கடுத்தபடியாக அருமை மாண்புமிகு சத்தியமூர்த்தி அவர்கள் சில பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். பரளியாறு திட்டப் பணிகள் நில ஆர்ஜிதம் முடியாததால் மந்த நிலையில் இருப்பதாக ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் வருவாய்த்துறையினர் நில ஆர்ஜித நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற காரணத்தால் அது முடிந்துவிடும். அதை ஒட்டி ரூபாய் 350 இலட்சம் மதிப்பீட்டில் மலட்டாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபோது 4,340 ஏக்கர் பரப்பு ஸ்டெபிலைசேஷன் ஆகின்றது. 386 ஏக்கர் கூடுதலாகப் பயனடைகிறது. முதுகளத்தூர் தாலுக்காவிலே உள்ள 54 கண்மாய்களுக்குப் பெரும் பாசனவசதி தருகின்றது என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக இந்த ஆற்றுக்கு மேலே திருமங்கலம் பகுதியிலே ஒரு அணை கட்ட இருக்கிறார்களே, அது பாதிக்கப்படுமா என்றுகேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அது பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று இங்கே கருத்து சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள் கவலைப்படவேண்டியதில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோல் இப்போது கடலில் வீணாகும் ஆற்று நீர் என்று பொதுவாகச் சொல்லலாம். சில நேரங்களிலே காவிரி நீர் என்று சொல்கிறபோது குறிப்பாக கர்நாடக மாநிலத்தினர், மற்றவர்கள் எல்லாம் பாருங்கள்? ''தமிழ்நாட்டுக்கு நீர் இல்லை என்று சொல்கிறார்கள், திடீரென்று உபரி நீரை கிழக்கு இராமநாதபுரம். புதுக்கோட்டை பகுதிகளுக்கு எல்லாம் திருப்பி விடப்போவதாகச் சொல்கிறார்கள்'' என்று நம் மீதே குற்றம் சாட்ட நினைக்கலாம். வெள்ளக் காலத்திலே தமிழகத்திலே எந்தப் படுகையாக இருந்தாலும் உபரியாக வீணாகக் கடலிலே கலக்கக்கூடிய ஆற்றுநீரை நிச்சயமாகப் பயன்படுத்தவேண்டும். அந்த அடிப்படையிலே இப்போது தனியாகவே ஒருகோட்டத்தை, ஆய்வு செய்வதற்காகவே அமைத்து இருக்கிறோம். அந்த ஆய்வுப் பணிகள் நடக்கின்றன. அதையொட்டி திருச்சி மாவட்டத்திலே



சில பகுதிகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கேட்டார்கள். அதுவும் சேர்த்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நவநீதகிருஷ்ணபாண்டியன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். கோடகல் கால்வாய்த் திட்ட அறிக்கை இன்று அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. ரூ. 70-80 லட்சம் செலவிலே அந்தத் திட்டத்தை அவர்கள் தயாரித்து இருக்கிறார்கள். அரசு அது குறித்து ஒரு முடிவு எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்திலே கலவம் அணைக்கட்டும் அரசினுடைய ஒப்புதல் பெறப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. தனிப்பட்ட முறையிலே அவரவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேன். திருநெல்வேலி மாவட்டம் கொடுமுடியாறு பற்றி தற்போதைய நிலை என்ன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். 67.5 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் நாங்குநேரி தாலுக்காவில் 1924 ஏக்கர் நிலத்திற்குப் பாசனவசதி உறுதியளிக்கப்படுகிறது. மேலும் 230 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி அளிக்கப்படுகிறது. சுமார் 2 0 இலட்சம் ரூபாய் செலவிலே இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அரசுக்கு விரைவிலே கிடைக்கும்.

இதற்கு அப்பாற்பட்டு இந்த ஆட்சிக்காலத்திலே பெரிய திட்டங்களே நடக்கவில்லை என்று முழுப்பூசனிக்காயை சோற்றிலே மறைக்க முயற்சிப்பதைப்போல சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. அதை மட்டும் நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். முன்னுரிமை பெற்ற திட்டங்கள் மிக முன்னுரிமை பெற்று இந்த ஆட்சிக் காலத்திலே பாசனத் திட்டங்கள் துரிதமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தர்மபுரி மாவட்டம் என்று எடுத்துக்கொண்டால் உங்களுக்குத் தெரியும், வாணியாறு, முல்லைக்காடு, கலவரம் பள்ளி திட்டங்கள் சில சிக்கல்களின் காரணமாக வழக்கு மன்றங்களில் இருப்பதால் விரைவாக நிறைவேற்றப்பட முடியவில்லை. கேஸிலே உள்ள அணைத்திட்டம் என்று நாம் நான்கைந்து அணைத் திட்டங்களை இப்போது அங்கே எடுத்திருக்கிறோம்.

நம்முடைய மரியாதைக்குரிய பெருந்தலைவர் காமராஜ் அவர்களால் அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்ட மேற்கு முகவை மாவட்டத்திலே 34 ஆண்டுகளுக்குப் பிறகு வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம், அணைமறுவு நீர்த்தேக்கம், நாகேந்திர

நதி நீர்த்தேக்கம் என்று கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய்க்கு மேலே உள்ள நான்கு திட்டங்களை நாம் புரட்சித்தலைவரின் ஆட்சியிலேதான் பெற்று நிறைவேற்றி இருக்கிறோம். இதை எல்லாம் நாம் கொஞ்சம் எண்ணிப் பார்க்கவேண்டி இருக்கின்றது. இதுபோல் குதிரையாற்றுத் திட்டம் பற்றியும் சொல்கிறேன். ஆனால் நான் இவற்றை எல்லாம் சுருக்கமாகச் சொல்வதற்குக் காரணம் இங்கே கேள்வி பதில் நேரத்திலே சிலவற்றைச் சொல்லி இருக்கிறோமே அதையே திருப்பிச் சொல்லவேண்டாம் என்பதற்காகத்தான்.

குதிரையாற்றுத் திட்டம் முடிந்துவிட்டது. 45 ஏக்கர் நிலம் நீர்த்தேக்கம் கட்டுவதன் மூலமாக நீரிலே மூழ்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்ற அடிப்படையிலே மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டும். இப்போது வனச்சட்டம் எல்லாம் கடுமையாக்கப்பட்ட காரணத்தால் அங்கே அனுப்பப் பட்டு இருக்கின்றது. அதிலே கூட சிரமம் மிகவும் இருக்காது என்று எதிர்பார்த்து இப்போது விரைவாக நடவடிக்கை எடுக்கிறோம்.

இதுபோல் புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே என்ன நிலைமைகள் என்பதை நான் இன்னும் ஒருமுறைகூட பரிசீலனை செய்கிறேன். மற்ற மாவட்டங்களுக்கெல்லாம் எவ்வளவோ செய்கின்றபோது தென்னாற்காடு மாவட்டத்தை மட்டும் புறக்கணிக்கவேண்டும் என்பதில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. சிவராமன் அவர்களுக்கும் தெரியும், கோமுகி நதியிலே ஒரு சிறு தவறு நடந்துவிட்டது என்று சொன்னவுடனேயே, காலையிலே வந்து சொல்கிறார், இரண்டு மணி நேரத்திலேயே தலைமைப் பொறியாளர் மற்றும் அனைவரையும் அனுப்பி பார்க்கச் செய்து மறுநாளே அவைகளை எல்லாம் சரி செய்து அந்த நீர் வளத்தைக் காப்பாற்றிக் கொடுத்திருக்கிறோம். எனவே நினைவுபடுத்துகிறபோது நிச்சயமாக யார் சொன்னாலும் உடனடியாகச் செய்யவேண்டும் என்பது பொதுவான கருத்து. ஆனால் நமக்கு இருக்கிற நீர்வளங்களை வைத்துத்தான் நாம் திட்டங்களைத் தீட்டமுடியும். ஏதோ மக்கள் விரும்புகிறார்கள், ஏதோ 1,000 பேர்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக ஒரு பேருந்து விடுவதுபோல் அல்ல, அல்லது வேறு யாராவது ஒன்று செய்வது போல அதை நாம் செய்துவிட முடியாது. நீர்வளம் எப்படி இருக்கிறது? ஒட்டுமொத்தமாக எப்படி ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பதை வைத்து, எவ்வளவு ஒதுக்கீடு செய்ய முடியும் என்பதை எல்லாம் பார்த்துத்தான் சில திட்டங்களை நிறைவேற்ற



முடியும். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த அளவில் மேலும் கூடுதலாக செய்யமுடியுமா என்பதை யோசிக்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தைப்பொறுத்த அளவில் செண்பகத் தோப்பு அணைக்கட்டிற்கு ஒரு நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறேன். இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்-- புல்லூருக்குப் பக்கத்தில் ஒரு ஸ்டோரேஜ் ரிசர்வாயர் கட்ட வேண்டும். பாலாறு படுகை பூராவுமே நிலத்தடி நீரை நம்பியிருக்கிற காரணத்தால் 4, 5 முறை பருவ மழை பொய்த்து விட்டால் அந்தப் பகுதிகள் பாசனம் பெறாமல், விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது எனவே, ஸ்டோரேஜ் ரிசர்வாயர் அங்கே கட்டினால் ஒரு வேளை மழை பொய்த்து விட்டால், பருவமழை தவறிவிட்டால், அந்தப் பாலாற்றில் வெள்ளம் இல்லை என்றால் அங்கே இந்த ஸ்டோரேஜ் ரிசர்வாயர் தண்ணீரைக் கொடுத்து அந்தப் படுகை பூராவுமே சென்று நிலத்தடி நீர் உயருகிறபோது விவசாயத்தைப் பாதுகாக்க முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் கிட்டத்தட்ட ரூபாய் 20 கோடி அளவில் ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். இதற்கு அண்டை மாநில அரசு, ஆந்திர அரசு ஒப்புதலைத் தர வேண்டியிருக்கிறது. காரணம் தோராயமாக 200 அல்லது 300 ஏக்கர் நிலம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அவர்கள் ஒப்புதல் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இதிலே எல்லா கட்சிகளும் என்று நான் நினைக்கிறேன்-இங்கே எதர்க்கட்சிகளாக இருந்தாலும், அங்கே அந்த மாநிலத்திலே ஆளுங்கட்சியாக இருக்கும் நிலைமை இருக்கிறது. எனவே தேசீயக் கண்ணோட்டம் எப்படியிருந்தாலும் கூட, தென் பகுதியில் இருக்கக் கூடிய சில பிரச்னைகளைத் தீர்க்க முடியுமா என்பதைப் பார்த்து, அவர் அவர் கட்சித் தலைமையிடத்தை அணுகி வலியுறுத்தினால், இந்த 2, 3 நல்ல திட்டங்களை, பயனுள்ள திட்டங்களை, வறட்சி பாதிக்கக்கூடிய மாவட்டங்கள் ஓரளவிற்கு நன்மை பெறக்கூடிய திட்டங்களை நிறைவேற்ற முடியும். ஆக, ஒட்டுமொத்தமாக முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசைப் பொறுத்த அளவில் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நதி நீர்ப் பிரச்னையை அமைதியான முறையிலே கவனிக்க வேண்டும் என்று. எனவே எல்லோரும் சேர்ந்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இவைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பொதுவாக கொள்கை குறிப்பிலே தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அதைத் திரும்பவும் சொல்ல விரும்பவில்லை என்றாலும், ஒன்றிரண்டு மட்டும் நானே திரும்பவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

1982-83-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே நடுத்தர புதிய பாசனத் திட்டங்களுக்கு ரூ. 100 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டது. 11 புதிய நடுத்தர திட்டங்கள் அரசின் பரிசீலனையில்

உள்ளது. இத்திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ. 50.79 கோடி. இதை இங்கே சொல்வதற்குக் காரணம் ஏற்கனவே சில திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறோம். அது ரூ. 31 கோடி வருகிறது. ரூ. 50 கோடி அளவில் ஒப்புதல் அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒதுக்கப்பட்ட தொகையை வைத்து, அது முதல் டோக்கன் அல்லாட்மென்ட்டே தவிர, அதை வைத்துக் கொண்டு திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று கருதக் கூடாது. நம்முடைய நிதி ஒதுக்கீட்டிலே முதன்மை பெற்று, அதாவது ஹையஸ்ட் பிரியாரிட்டி, நீர்ப்பாசனத்துறை கவனிக்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம், நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் இந்த நீர்ப்பாசனத் துறைக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்ற அகில இந்திய அளவில் ஒரு கொள்கை எடுத்திருக்கிறார்கள். நாமும் அந்த அடிப்படையில், இதற்குக் கூடுதலான நிதி ஒதுக்கியிருக்கிறோம். இன்னும்கூட சொல்லப் போனால், இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, மாநில அரசின் நிதியை மட்டும் வைத்துக்கொண்டு நிறைவேற்றுவது என்பது ஒன்று. இன்னொன்று, பைனான்ஷியல் இன்ஸ்டிடியூசன் மூலமாக நிதி நிறுவனங்கள் மூலமாக உதவி பெற்று, சில குறிப்பிட்ட முக்கியமான திட்டங்களை நிறைவேற்றலாமா என்பதை அடிப்படையாக வைத்துதான் நீர்ப்பாசன வாரியம், தனியாக இர்ரிகேஷன் போர்டு ஒன்று அமைக்கலாமா என்ற கருத்தை ஏற்கனவே அரசு பரிசீலித்து வருகிறது. அது பரிசீலனையில் இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 6·40)

அதைப்போல சில உறுப்பினர்கள் பேசுகின்றபோது குழாய்க் கிணறு கழகம் நிறுவப்பட்டிருப்பதை வரவேற்றார்கள். அது வறண்ட பகுதிகளான வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு நிரம்ப பயன்படுமென்று நினைக்கிறேன். அந்தக் குழாய் கிணறு கழகம் எல்லாப் பணிகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடிய அளவில் இன்றைய தினம் வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இறுதியாக, குழாய் கிணறு கழகத்திற்குத் தலைவர், இயக்குநர்கள் எல்லாம் நியமிக்கக்கூடிய சில உத்தரவை இன்றைக்குப் போட்டிருக்கிறார்கள். அதன்படி கரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். சின்னசாமி அவர்கள் குழாய் கிணறு கழகத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே. சி. டி. பிரபாகரன் அவர்கள், கடலாடி தொகுதி உறுப்பினர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள், விவசாயச் சங்கச் செயலாளர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சீனிவாசன அவர்கள், தொண்டாமுத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மா. சின்னராசு அவர்கள், தாரமங்கலம் தொகுதி சட்ட



மன்ற உறுப்பினர் திரு. செ. செம்மலை அவர்கள் இயக்குநர்களாகவும், விவசாயத் துறை, நிதித் துறை, கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, பேரறிஞர் அண்ணா பல்கலைக்கழகப் பிரதிநிதி, வேளாண்மைப் பல்கலைக்கழக பிரதிநிதிகள் எல்லாம் இயக்குநர்களாகவும் இருந்து தங்கள் பணிகளை ஆரம்பிக்க இருக்கிறார்கள். ஆரம்பிக்கிற பணி மத்திய அரசு உதவியோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டாயிரம் குழாய்க் கிணறுகள், ஆழ்கிணறுகள், நாம் அமைக்கப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறோமே, அந்தத் திட்டத்தை இந்தக் குழாய் கிணறு கழகம் எடுத்துமிக விரைவாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, எங்கெங்கு சிறுவிவசாயிகள் இருக்கிறார்களோ அல்லது அவர்களுக்கு என்று நிலப்பட்டா வழங்கப்பட்டு போதிய மூலதனம் இல்லாத பயனற்ற நிலை இருக்கிறதோ அங்கெல்லாம் சென்று இக்குழாய் கிணறு கழகம் தன் பணியை துவக்க இருக்கிறது. அது நல்லமுறையில் செயல்படுகிறபோது வறண்ட பகுதிகளில் ஆங்காங்கு இருக்கக் கூடிய ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய அளவிற்கு பாசன வசதியைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. இந்தப் பெயர்களை இங்கே அறிவித்ததற்குக் காரணம் மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தோழமை உணர்வோடு அந்தந்தத் தொகுதிகளுக்குத் தேவையான விஷயங்களை இந்த இயக்குநர்களிடம் தெரிவித்தால் அதற்கு முன் உரிமை கொடுத்து சில பணிகளை மேற்கொள்ள வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றபடி சில பொதுக் கருத்துக்கள் இங்கே சொல்லப் பட்டிருக்கின்றன. குடிமராமத்துப் பணிகள் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே நீர்ப்பாசன ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் இதைப்பற்றி விவாதித்திருக்கிறோம். இந்தக் குடிமராமத்துப் பணிகள், சிறிய சிறிய பணிகள்கூட ஆயக்கட்டுதாரர்களின் குழு ஏற்படுத்தி அவர்கள் மேற்கொள்ள முடியுமா என்று கூட பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அப்படி வருகிறபோது நிச்சயமாக உடனுக்குடன் அந்தப் பகுதிகளுக்குத் தேவையான பணிகளை பொதுப்பணித் துறை மூலம் விரிவாக செயல்படுத்த வாய்ப்பிருக்கிறது.

ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். கண்மாய்கள், ஆற்றங்கரை, கால்வாய்கள் பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்க அவசரச் சட்டம் வேண்டுமென்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினரும் அதை வரவேற்றார். அதை நான் திரும்பச் சொல்லக் காரணம் அப்படி ஏதாவது செய்தால்தான் ஓரளவு அந்தப் பகுதிகளைப் பாதுகாக்க முடியும். ஏதோ ஒரு சிலருடைய சுயநலத்திற்காக இருக்கும் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவை பயன்படும் சூழ்நிலை கெட்டுவிடும்.

அதுகுறித்து முதல் அமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று முதல் கட்டமாக பக்கிங்காம், கூவம் கரைகளையொட்டி இருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றி வனத்துறையிடம் அந்த இடங்களை ஒப்படைத்து வனத்துறை மூலம் ஒரு பசுமையான சூழ்நிலையை க்ரீன் பெல்ட்டைசென்னை நகரில் உண்டாக்கக்கூடிய ஒரு முடிவை நாம் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையும் ஏற்று பல்வேறு இடங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட நிச்சயமாக அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

நீர் காவலர் பணி காலியாக இருப்பதாகச் சொன்னார்கள். அதுகுறித்து பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி விரைவாக நடவடிக்கை எடுப்போம்.

இன்னொரு முக்கியமான காரியம் பற்றி திரு. செங்கோட்டையன் அவர்கள் சொன்னார்கள். பி.எ.பி. பொறுத்தவரையில் அதிக இடங்களுக்கு இனிமேல் விஸ்தரிப்பு கொடுப்பதை விட, இனிமேல் விஸ்தரிப்பு இடம் அதிகமாக ஆக ஆக சுழற்சி முறையில் தண்ணீர் கொடுப்பதால் 2, 2½, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று காலத்தை நீட்டிக் கொண்டிருக்கிறோம். இதைவிட கண்மாய்களை அதிகமாக உண்டாக்கி அங்கே தண்ணீரை விடுவோமேயானால் அதில் கிடைக்கக்கூடிய நிலத்தடி தண்ணீரை வைத்து விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுத்தலாம். இந்த விஸ்தரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தால் 30,000 ஏக்கர்கள் கூட பயன்பட வாய்ப்பிருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நிபுணர் குழு ஏற்கனவே ஒன்று நியமிக்கப்பட்டு அவர்கள் கருத்தைப் பெற்றிருக்கிறோம். விவசாயிகள் கருத்துக்களையும் அறிந்து அடுத்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று முடிவு செய்யும்போது இந்தக் கருத்துக்களை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். அதற்காக இந்தச் சட்டமன்ற தொடர் கூட்டம் முடிந்து பி.எ.பி. விவசாயிகளை எல்லாம் வரவழைத்து ஒரு இடத்தில் பெரியார் மாவட்டம் 'அல்லது கோவையில் ஏதாவது ஒரு மையமான இடத்தில் ஒரு கருத்தரங்கு வைத்து இந்தக் கருத்துக்களை அவர்களிடம் எடுத்து வைத்து அவர்கள் கருத்துக்களையும் பெற்று புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அதேபோல் திருமதி பொன்னம்மாள் அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.' பெரியாறு-வைகை மேம்பாட்டுத் திட்டத்தில் சிவகங்கை பகுதியையும் சேர்த்திருக்கிறோம். பல பகுதிகளைச் சேர்க்க வாய்ப்பிருக்கிறது.

வைகை—பெரியார் மேம்பாட்டுத் திட்டத்திலே, அந்தந்தப் பகுதியைப் பயன்படுத்துகின்றவர்கள் பயனடைய வேண்டுமென்பதற்காக, விவசாயிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும்





வரவழைத்து, கருத்தரங்கு நடத்தி, அவர்கள் கருத்துக்களைக் கேட்டு, அவர்களுடைய தேவைகளை அறிந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக, பாசனத் துறையைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு ஆண்டு நிதி ஒதுக்கீடு அதிகமாக்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் 95 சதவீதம் நாம் மேல் பரப்பு நீரைப் பயன் படுத்துகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதிலிருந்து, நமக்கும் இன்னும் தேவை அதிகம் இருக்கிறது என்பது தெரிகிறது. பற்றாக்குறை நிரம்பயிருக்கிறது. எனவே, நம்முடைய நீர்ப் பாசனத் துறையைப் பொறுத்தவரையில், எந்தெந்தப் பகுதிகளுக்கு, நாம் முன்னுரிமை கொடுக்கவேண்டுமோ, அதைச் செய்கிறோம். அந்தப் பணிகளைச் செய்வதற்காகத் தான் பாசன வாரியம், குழாய் கிணறுகள் வாரியம் என்று இப்படி பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்துவதற்குக் காரணமே, திட்டங்கள் விரைவிலே நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான். புதிய திட்டங்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே தான் இந்த ஆட்சி செயல்பட்டுக்கொண்டு வருகிறது. எனவே, அந்த அளவிற்கு உங்களுடைய யோசனைகளை, ஆலோசனைகளைச் சொன்னதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய கருத்துக்களை அப்படியே குறிப்பெடுத்திருக்கிறோம். இந்த ஆண்டிலே விரைவிலேயே அமுல்படுத்த வேண்டுமென்று சில நண்பர்கள் சில யோசனைகளைச் சொன்னார்கள். அதிலே வேணுகோபால் என்று நினைக்கிறேன், அவரும் அத்தகைய யோசனையைச் சொன்னார். சில பிரச்னைகள் வரும்போது, ஆய்வு செய்வது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. இருந்தாலும் கூட, அவைகளை இன்னும் விரைவுபடுத்தி, இந்த மானியக் கோரிக்கையிலே நீங்கள் சொன்ன குறிப்புகளைப் பற்றி, அடுத்த சந்தர்ப்பத்தில் நான் பதில் வைக்கிறேன். இன்னும் சிலர் பேசும்போது, சில கருத்துக்களைச் சொல்லி, அவைகளை வேகமாக விரைவாகச் செய்யவேண்டும் என்று சொன்ன அடிப்படையிலே அவைகளைச் செய்யவேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக, செய்து முடித்து விட்டு, அதைச் சொல்லக்கூடிய வகையில் நிச்சயமாக இந்த அரசு செய்யும் என்பதைக் கூறி, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானிய கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. இல. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே என்னுடைய தொகுதியில் செண்பகத்தோப்பு அணைக்கட்டை விரைவிலே அமைத்துக் கொடுக்கிறோம் என்று அறிவித்தார்கள். அதற்கு நன்றி கூறுகிறேன். பாலார் ரிசர்வாயருக்காக புல்லூரில் அணைகட்டுவதாகக் கூறினார்கள். அதற்கு

[திரு. இல. பலராமன்] [1982 மார்ச் 18

காங்கிரஸ் கட்சி ஆளும் ஆந்திர மாநிலம் ஒப்புதல் தர வேண்டுமென்று சொன்னார்கள். அங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடிய ஆந்திர அரசோடு, மைய அரசோடு ஏதாவது கடிதத் தொடர்பு கொண்டிருக்கிறீர்களா? அப்படியிருந்தால், நாங்கள் அதற்காக அதைப் பின்தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக, உறுதுணையாக இருக்கிறோம். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. கடிதப் போக்குவரத்து நடத்தியிருக்கிறது. மற்றும், அதிகாரிகளோடும் பேசியிருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் எல்லாவற்றையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. கேட்கப்பட்ட கேள்விக்கு நான் இங்கே பதில் சொன்னேன். அந்தந்த மாநிலத்திலே இப்படிப்பட்ட சில பிரச்னைகள் வருகின்றன. இருந்தாலும்கூட, சிறிய திட்டம் மூலம் 100, 200 ஏக்கர்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக தள்ளிப் போடவேண்டியதில்லை; நீட்டித்துக்கொண்டு போக வேண்டியதில்லை. இதற்கெல்லாம் அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(உ) கோரிக்கை எண் 36—பாசனம்.

திருவாளர்கள் சு. பாலன், சி. பழனிமுத்து ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி--

''மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 36,01,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் சு. பாலன், கே. ஆர். சுந்தரம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி--



1982 மார்ச் 18] [பேரவைத் துணைத் தலைவர்]

''மானியக் கோரிக்கை எண்.50--பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 42,72,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(மாலை 6.50)

(எ) கோரிக்கை எண். 27—கதர்

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,76,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. ந. வேணுகோபால்: துணைத் தலைவர் அவர்களே, கதர் தொழிலுக்கு அதிகமாக மானியம் கொடுத்து விற்பனை செய்வதைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,76,07,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.''

திரு. இல. பலராமன்: துணைத் தலைவர் அவர்களே, வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்கள் கிராமங்களில் அதிகமாக இருப்பதையும், கிராம மக்கள் பொருள் ஈட்டவும் அந்நியச் செலாவணியை பெறவும் கதர் வாரியம் மேலும் பல பணிகள் தீவிரம் காட்ட வேண்டியுள்ளதையும், மையங்கள் பயிற்சி நிலையங்கள் அதிகமாக ஏற்படுத்துதல் பற்றியும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,76,07,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஏ) கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள், கட்டிடங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,71,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. த. வேணுகோபால் : துணைத் தலைவர் அவர்களே, சு.வாளவட்டி கிராமத்தில், உயர்நிலைப்பள்ளி பல வருடங்களாக நடைமுறையில் பள்ளி நடத்தியும், புதிய கட்டிடம் கட்டாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள், கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,71,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. டி. மணி : துணைத் தலைவர் அவர்களே, குழித்துறையிலுள்ள அரசினர் பொதுப்பணித் துறை பயணிகள் விடுதியில் தொலைபேசி தொடர்பு அமைக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,71,47,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

(ஐ) கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,22,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள், பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,22,89,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஒ) கோரிக்கை எண். 51—பொதுப் பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—



''மானியக் கோரிக்கை எண். 51—பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 37,20,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 51—பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 37,20,54,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. இல. பலராமன் : துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மூலம் இருக்கும் பொதுப்பணித் துறை பயணிகள் விடுதிகளை மேலும் விரிவுபடுத்தி, பயணிகள் தங்கவும் சுற்றுலாப் பயணிகளை கவரவும் அவர்கள் உபயோகத்திற்கு இதை விடுவதும் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 51—பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 37,20,54,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூறுவதாக இருந்தால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றிய விளக்கக் குறிப்புகள் *அச்சிடப் பெற்று அவையில் வைக்கப்பட்டுள்ளன. அவைகளையே என் உரையாக குறிப்பிலே எற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறிய பின்னர் எனது பதிலை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். முத்துவேல் : துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு பொதுப்பணிகள் பற்றிய மானியத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கின்ற அகில இந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி பல லட்சக்கணக்கான ரூபாய் செலவிட்டு கட்டடங்கள் பல கட்டியிருந்தாலும் இதற்கு முன்னாலே கட்டப்பட்ட அரசாங்கக் கட்டடங்கள் எல்லாம் பாழடைந்த நிலையிலே இருக்கின்றன. அரசாங்க அலுவலகங்கள் ஆஸ்பத்திரிகள் போன்ற கட்டடங்கள் எல்லாம் வெள்ளை

[*......629-644ம் பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

[திரு. என். முத்துவேல்] [1982 மார்ச் 18

அடிக்கமல் பாழடைந்த நிலையில் உள்ளன. தென் ஆற்காடு மாவட்டத்திலே திண்டிவனம், விழுப்புரம் போன்ற இடங்களில் உள்ள ஆஸ்பத்திரி கட்டடங்கள் எல்லாம் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. என்னுடைய வானூர் தொகுதியிலே தனித் தாசில்தார் இருக்கின்ற இடமாக மாற்றப்பட்டும் அதற்கு வேண்டிய கட்டடத்திற்கு வருவாய்த் துறையிலிருந்து ஒதுக்கப் பட்டும் புதிய கட்டடங்கள் கட்டப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப் பட்ட அந்தக் கட்டடங்கள் பாழடைந்த நிலையிலே இன்றைய தினம் இருக்கின்றன. பொதுப்பணித் துறையிலே அதற்கான கட்டடங்களைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து கோட்டைக்குப்பம், வானூர் போன்ற இடங்களில் காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. அவ்வ களுக்கு அரசாங்கக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். வானூர், மரக்காணம் போன்ற இடங்களிலே பல அரசாங்க கட்டடங்கள் இடிந்த நிலையில் உள்ளன. பழுதுபார்க்கவேண்டுமென்றும் இன்னும் பல கட்டடங்கள் அங்கே கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வானூர், மரக்காணம், தைலாபுரம், கிளியனூர் ஆகிய இடங் களிலே உள்ள சுகாதார நிலையங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப்பெற்றன. வெள்ளைகூட அடிக்கப்பட வில்லை. பராமரிப்பு சரியாக செய்யப்படவில்லை.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியிலே புதுக்குப்பம், இரையூர், வேப்பேரி போன்ற இடங்களிலே கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் பொதுப்பணித்துறையால் அந்த இடங்களிலே, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்தும் பள்ளிகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. பள்ளிகள் கூரையால் வேயப்பட்ட இடங்களில் நடந்து வருகின்றன. எதற்காக சொல்கிறேன் என்றால் இவைகளையெல்லாம் பொதுப் பணித்துறையிலே கட்டப்படவேண்டியவை, இன்னும் கட்டப் படாமல் இருக்கின்றன காரணம் என்னவென்றால் தொடர்ந்து திராவிட முன்னேற்ற கழக உறுப்பினரே அந்த பகுதியில் வெற்றி பெற்று வருகிறார் என்ற காரணத்தால் அரசாங்கம் வெறுப் புணர்ச்சியோடு அந்த பணிகளை கண்காணிக்காமல் இருக் கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திண்டிவனம், விழுப்புரம் பகுதிகளில் காலனிகள் இருக் கின்றன. அந்த காலனிகளில் எல்லாம் மாணவர்களுக்கு இடவசதி இல்லை. கல்வித்துறை இயக்குநரிடத்திலேயிருந்து இடவசதி இல்லை யென்றும் கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று எழுதியும், அனுமதி வழங்கியிருந்தும் பொதுப்பணித்துறையால் துணைக்



1982 மார்ச் 18] [திரு. என். முத்துவேல்]

கட்டிடங்கள் கட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். திண்டிவனம் பகுதியிலும், வானூர் பகுதியிலும் மாணவர்கள் விடுதிகள் கட்டுவதற்கு வசதியிருந்தும் அந்த கட்டடம் கட்டப்படவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர் இருக்கிறார் என்பதால் அந்தப் பகுதியை புறக்கணிக்கிறார்கள். திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக்காலத்தில் பல அரசாங்க கட்டிடங்கள் கட்டியிருந்தும், இப்போது இவற்றையெல்லாம் பழுது பார்ப்ப தில்லை. பொதுப்பணித்துறையினால் கட்டப்படும் கட்டடங்களில் பார்வையாளர்களுக்கு என்று தனியாக எதிரிலே கட்டவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, கழிவு நீர் செல்வதற்கு தனிப்பாதை ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் போகிற போது, பார்வை யாளர்கள் வந்திருந்தால் ஒதுங்குவதற்கும் தனி இடம் இல்லாமல். அதிகாரிகள் இடமில்லாமல் சரியாக பார்க்கமுடியாமல் வெளியே நிற்க வேண்டியிருக்கிறது. இனிமேல் கட்டப்படுகிற கட்ட டங்களில் பார்வையாளர்களுக்கு தனி இடத்தை ஒதுக்கி கட்ட வேண்டும்.

வேப்பேரி என்னும் இடத்தில் பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்ட பள்ளிக்கூடம் இன்னும் ஓர் ஆண்டுக்கூட ஆகவில்லை அதற்குள் மழை நேரங்களில் ஒழுக்கு அந்த கட்டடத்தில் இருக் கிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மரக்காணம் பகுதியிலேயிருக்கிற ஒரு பள்ளிக்கூடம் பொதுப்பணித் துறை யினரால் கட்டப்பட்டு வருகிறது. அதன் வேலை இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது, என்ன காரணம் என்பதை அறிய ஆசை படுகிறேன். வானூர் தனித்தாசில்தார் அலுவலகமாக மாற்றப் பட்டிருப்பதால் அங்கு தாசில்தாருக்கு ஒரு அலுவலகத்தை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம், பாண்டிச்சேரி செல்கிற வழியில் திருச்சிற்றம்பலம் கூட்டு பாதையிலே ஒரு பி.டபிள்யூ.டி. ஆய்வு மாளிகை கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் உடனடியாக அரசு கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(இரவு 7.00)

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானிய கோரிக்கைகள், கதர், பொதுப் பணிகள், கட்டிடங்கள், பொதுப்பணிகள், பணியாளர் அமைப்பும், கருவிகளும் தளவாடங் களும், பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய 4 கோரிக்கைகளின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த நாட்டு மக்களுடைய உணர்வுகளை இந்த மன்றத்திலே வைக்க நான் முன் வருகிறேன். பொதுவாக, கதர் என்பது நாமே நூற்று, நாமே நெய்தல்

செய்யவேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே உருவான ஒன்றாகும். இந்த அமைப்பிலே தமிழகத்திலே இதுவரையிலே சுமார் 327 நூற்பு நிலையங்கள் இருப்பதாக நான் அறிகிறேன். இந்த இந்தியத் துணைக் கண்டத்தினுடைய விடுதலைக்குப் பாடு பட்ட மகாத்மா காந்தி அடிகள் கதருக்கு மிக முக்கியத்துவம் அளித்தார்கள். மற்றவர்கள் எந்தக் கட்சியாக இருந்தபோதிலும் கூட, அதனை மிகவும் போற்றுவதற்குரிய வகையிலே கொண்டாடி வந்திருக்கிறோம். மேலும் கதர் என்பது ஏழைகள், எளியவர்கள் தயாரிக்கக்கூடிய, எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சை எதிர்பார்க்காமல் மிகப்பெரிய டிப்ளமோ அல்லது டிக்ரி எல்லாம் தேவை என்ற நிலையில்லாமல், வாழ்க்கயிலே வலுவிழந்தவர்கள் குடிசைத் தொழிலாக எடுத்துக் கொண்டிருக்கிற ஒரு சாதாரணத் தொழில் ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த 327 நூற்பு நிலையங்கள் இருக்கின்றன என்பது போதாது என்ற நிலையில் அதை மேலும் நல்லமுறையிலே கூடுதலாக்க வேண்டும், நூற்பு நிலையங்களை அதிகரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், காதி, நெசவு ஆகிய துறைகளிலே ஏறத்தாழ 6 000 பேர் உள்ளனர் என்று நான் கருதுகின்றேன். இன்றையதினம் ஆதி திராவிடப் பெண்களுக்கும் விதவைகளுக்கும் மறுவாழ்வு அளிக்கக்கூடிய வகையிலேயும், கீழே வாழ முடியாத நிலையிலேயும், வசதியற்ற நிலையிலேயும் இருக்கக்கூடியவர்களையெல்லாம் ஊக்குவிக்கக்கூடிய முறையில் அவர்களை எல்லாம் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையிலேயும் இதனை மேலும் கூடுதலாக்கித் தந்து, அவர்களை இப்படிப்பட்ட தொழிலாளர்களாக இணைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கக்கூடிய திட்டம் இந்த நாட்டிலே இருக்கிறது, அரசிடம் இருக்கிறது. ஆனால், இந்தக் காதி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் இல்லாமலிருப்பது துரதிருஷ்டமானது. அப்படிப்பட்ட முயற்சிகள், ஊக்கங்கள், சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தினாலேகூட இது அப்படியே சிதைந்து போகக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தினைக் கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தமிழக அரசினைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால், இந்தக் கிராமத் தொழில்—வேலை என்பது மிகச் சிறந்த, அடிப்படை உரிமைகளைக் கொடுக்கக்கூடிய ஒரு திட்டமாகும். கைத்தொழில் ஒன்றினைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்று நாம்



சொல்கின்றோம். இந்தக் கிராமக் கைத்தொழில் மூலமாக ஏறத்தாழ 4½ இலட்சம் பேர் பயன் அடைந்து வருகிறார்கள் என்று நான் நம்புகிறேன். தமிழகத்திலே பட்டித்தொட்டியிலே இருக்கக்கூடியவர்கள், பட்டணத்தை தேடி வராமல் தடுக்கக் கூடிய வகையிலே கிராமம், நகரம் என்ற நிலையை மாற்றி, சிறு நகரம், பெரு நகரம் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு, இந்தச் சூழ்நிலையில் பட்டிதொட்டிகளில் இருக்கக்கூடியவர்கள் மேலும் பட்டணத்தைத் தேடிவரக் கூடாத நிலையில் பல இலட்சம் பேர்கள் அதிலே பலன் பெறத் தக்க வகையிலே ஊக்கம் கொடுக்கக்கூடிய வகையிலே இந்தக் கிராமத் தொழிலை வளர்ப்பதற்கு வேண்டிய வாய்ப்பினை இந்தக் காதி வாரியம் உருவாக்கித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கலப்படம் இல்லாமல், கிராமத் தொழிலாக இருந்தும் மக்களுடைய பாராட்டினைப் பெறக்கூடிய மிக நல்லதொரு அமைப்பாக காதி கிராப்ட் இருக்கிறது. இது ஒன்றுதான் ஓரளவுக்கு ஊழலுக்கு அப்பாற்பட்ட நிலையிலே, புகாருக்கு அப்பாற்பட்ட ஒரு நிலையிலே இருக்கிறது. காரணம், காதி கிராப்ட் ஒரு ஒரிஜினல் — கலப்படம் அற்றது என்று உலகத்தில் எல்லோராலுமே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அடிப்படை அமைப்பாகும். இங்கே உள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் கூட காதி கிராப்டிலே கலப்படங்கள் இருப்பதாகப் புகார் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட ஒரு ஒரிஜினல் அமைப்பு என்று சொல்லக்கூடிய அமைப்பு காதி கிராப்ட். ஆகவே, இன்னும் எங்கெங்கு திறக்க முடியுமோ, வாய்ப்பிருக்கிறதோ அங்கே எல்லாம் காதி கிராப்ட் கடைகள் திறப்பதற்கு வழிவகைகளை உருவாக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொல்கிறோம். இன்றைக்குப் பட்டதாரிகளாக இல்லாமல் இருக்கக் கூடியவர்கள், படிக்காமல் இருக்கக் கூடியவர்கள், எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலே பதிவு செய்ய முடியாமல் இருக்கக் கூடியவர்கள், சங்கம் வைத்துக் கொள்ள வாய்ப்பற்றவர்கள் இப்படிப்பட்ட கீழ் நிலையிலே இருக்கக் கூடியவர்களுக்கு வாய்ப்பளித்திருக்கின்ற ஒரே ஒரு அமைப்பு முறை இந்த காதி கிராப்ட் தான். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையிலே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுப் பணித் துறை. பொதுப் பணித் துறை என்று சொன்னாலே, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்ட் என்று நாம் சொல்வோம். ஆனால், இடைக்காலத்திலே, அது

கொஞ்சம் கொஞ்சமாக நசித்து, கெட்டு, எந்த நிலையில் பாழ்பட்டது என்று சொல்ல முடியாத நிலைக்கு மாறிவிட்டது. மூதறிஞர் இராஜாஜி பி.டபிள்யூ.டி. என்பதை பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மென்ட் என்று சொல்லியிருக்கிறார். அந்த அளவிற்கு அவரது வாயாலேயே அவ்வளவு தூரம் இழிந்து போகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், இன்றையதினம் இந்தத் தமிழ்நாடு அரசு அதைப்பல பிரிவுகளாகப் பிரித்து, பி.டபிள்யூ.டி. மந்திரி என்று சொல்லலாமே தவிர, அவரிடத்திலே அத்தனையும் இல்லை என்பது எனக்குத் தெரியும். கட்டிடங்கள் ஓரிடத்திலே பாதைகள் ஓரிடத்திலே, பாசனத் துறை ஓரிடத்திலே என்று பிரித்து ஒவ்வொரு அமைச்சரிடத்திலும் பிரித்துக் கொடுத்து இதை ஊழலுக்கு அப்பாற்பட்டதாக உருவாக்க வேண்டும்; பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டாக மாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்திலே மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து தரத்தை உயர்த்த வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பதறிந்து உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக என்னுடைய பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) நான் ஒருவன்தான் இருக்கிறேன், அதனால் இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் தான் ஒருவர் தான் இருப்பதாகக் கூறுகிறார்கள். இங்கே டாக்டர் சமரசம் அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்று சொல்கிறார்களா அல்லது பேசுவதற்கு வேறுயாரும் இல்லை என்று சொல்கிறார்களா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இல. பலராமன்) : அவர்களுடைய கட்சிக்காரர்கள் வேறு யாரும் பேசுவதற்கு இல்லை என்ற பொருள்படத்தான் சொல்லியிருக்கிறார்கள். எனவே இது பற்றித் தவறாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

டாக்டர் கே. சமரசம் : நான் சுருக்கமாகச் சொன்னால் புரிந்துகொள்வார் என்று நினைத்தேன். விளக்கமாக வேண்டுமானாலும் சொல்கிறேன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஓரிருவர் மட்டும்தான் பெயர் கொடுத்திருக்கிறோம் என்பதற்காகத்தான் சொன்னேன்.

பொதுப்பணித் துறையானது பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு, இருப்பிடங்களாக இருந்தாலும், இணைப்புகளாக இருந்தாலும், தங்குமிடங்களாக இருந்தாலும், சாலைப் பராமரிப்பாக இருந்தாலும் இப்படிப் பலப்பல விஷயங்களை இணைக்கின்ற வகையில் இருக்கிறது. வறட்சி ஏற்பட்டாலும், பாதைகள் பழுதடைந்தாலும், புயல் ஏற்பட்டாலும், பாலங்கள் பழுதடைந்தாலும் இப்படிப்பட்ட



சூழ்நிலைகளில் மிகவும் வேகமாக நல்லமுறையில் இயங்கும் சூழ்நிலையில் நாம் செய்து கொண்டிருக்கிறோம். இயற்கையாகப் பார்க்கும்பொழுது செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் பொதுப்பணித் துறையில் உருவாக்கப்பட்டிருக்கும் சட்ட திட்டங்கள, மரபுகள், வரைமுறைகள் ஆகியவை எப்பொழுதோ யாராலோ நிர்ணயிக்கப்பட்டவை, 1982 ஆம் ஆண்டிலேயும் அவைகளேதான் அனுமதிக்கப்பட வேண்டுமெனறால் அது நியாயமாக இல்லை. இதைப்பற்றி அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கான்ட்ராக்ட் சிஸ்டத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், பொதுப் பணித் துறையின் நிலையே மிகவும் பரிதாபகரமான நிலையாக இருக்கிறது. அதல் ஈடுபட்டிருப்பவர்கள் நிலை எப்படியிருக்கிறது என்றால் மிகவும் வேடிக்கையாக இருக்கும் சூழ்நிலை இருப்பதால் அதை மாற்றியமைத்து, அதற்குப் புத்துணர்ச்சி ஊட்டுகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்லதொரு அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பொறியியல் பட்டதாரிகள், டிப்ளமா ஹோல்டர்ஸ் ஆகியவர்கள் நல்லமுறையில் வேலை செய்யக்கூடிய வகையில் அவர்களின் தகுதி, திறமை, சர்வீஸ் ஆகியவற்றைப் பார்த்து நிரந்தரமாக்கும் வகையில் வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இன்றையதினம் பள்ளிக் கூடங்கள் என்று பார்க்கின்றபொழுது எலிமெண்ட்ரி ஸ்கூல்ஸ் என்று சொல்லப்படுகின்ற ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் வேறு வகையில், வேறு துறைகளைப் பயன்படுத்திக் கொள்கிறோம். ஹைஸ்கூல்ஸ் என்று சொல்லப்படுகின்ற உயர்நிலைப் பள்ளிகள் அல்லது மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அல்லது மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், இது போன்றவைகளெல்லாம் இன்னும் இந்தத் துறையிலேதான் இருந்து கொண்டிருக்கின்றன.

என்னுடைய தொகுதியான காவேரிப்பட்டணம் தொகுதியில் பன்னத்தூர், மல்லுப்பட்டி, காவேரிப்பட்டணம் ஆகிய இடங்களிலே இருக்கின்ற பள்ளிகளெல்லாம் வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டுப் போவதற்கு முன்னால் உருவாக்கப்பட்ட பள்ளிகள். அவைகள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன; புதிய இணைப்புகள் அதிகம் இல்லாத நிலையிலே இருக்கின்றன. எனவே, அந்தப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்களை உருவாக்கும் வகையில் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1982 மார்ச் 18

காவேரிப்பட்டிணத்தில் பாஸ்கெட் பால் கிரவுண்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டும்கூட இன்னும் பூர்வாங்க வேலைகூட முடியாமல் இருக்கிறது. அதற்கும்கூட காண்ட்ராக்ட்தான் காரணம், ஆகவே அதைப்பற்றி மறுபரிசீலனை செய்து, ஏன், எப்பொழுது பணம் ஒதுக்கப்பட வேண்டும், ஏன் செய்யமுடியவில்லை என்ற விளக்கத்தைப் பெற்று நல்லதொரு செய்தியை அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கிருஷ்ணகிரி அணை பிரசித்தி பெற்ற அணை ஆனால் அங்கே பூங்கா போன்ற அமைப்பு இல்லை. பஞ்சப் பள்ளியிலுள்ள அணையிலும் இதே நிலைமைத்தான். அங்கேயும் பூங்கா அமைப்பு இல்லை அங்கே ஒரு என்ட்ரன்ஸ் கேட் தேவை என்று பொதுப் பணித் துறையினிடத்திலும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் எழுப்பப்பட்டிருக்கிறது. மாநில அரசு என்ற முறையிலே இங்கேயும் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

(இரவு 7.10)

அவைகள் எல்லாம் கலை உள்ளத்தோடு வந்து போகின்ற வர்களைக் கவரக்கூடிய வகையிலே தனியான ஒரு அமைப்பு முறையாக அவைகளை உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே இன்றிருக்கக் கூடிய சூழ்நிலையில், கதரானாலும் பொதுப்பணித் துறையானாலும் அவைகளை எல்லாம் நல்ல முறையிலே இயக்கி, மக்கள் என்ன நினைக்கின்றார்களோ அப்படி நல்லதொரு திட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தினால் இன்றையதினம் இந்த அரசு நல்லதொரு பாப்புலர் அரசு என்று சொல்லத்தக்க வகையிலே அதனை நடத்திச் செல்லுகிற புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் ஒரு பாப்புலர் லீடர் என்ற நிலையிலே இருந்து பீப்பிள் லீடர் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு இருப்பதும், நல்ல நடைமுறையின் காரணமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி வணக்கம்.

* திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று எடுத்துக் கொண்டு இருக்கின்ற இந்த கதர் கிராமக் கைத்தொழில், பொதுப்பணித் துறை ஆகிய மானியங்களின் மீது பேசுவதில் பெருமைப்படுகிறேன்.

196 —ஆம் ஆண்டில் இது தொடங்கப்பட்டது. கதர்த் தொழில் ஏழை எளிய மக்களுக்கு, நாட்டிலே வேலைவாய்ப்பற்ற மக்களுக்கு நல்லதொரு வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதற்காக அரசாங்கம் எடுத்துக் கொண்டதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.



1982 மார்ச் 18] [திரு. எல். இளையபெருமாள்]

கிராமங்களிலே பனை ஓலைகள் நிறைய இருக்கின்றன. குறிப்பாக இராமநாதபுரம், வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில். பனை ஓலைகள் அதிகமாக இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் கூட, நான் தனியே பேசும்போது சொன்னார்கள், பனை ஓலைகளால் பின்னப்பட்ட தொப்பிகள், தொட்டிகள் இவைகளை எல்லாம் வெளிநாடுகளில் மிகவும் விருப்பத்தோடு வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட தொழில்களுக்கு இன்னமும் ஆக்கம் கொடுத்தால் நம்முடைய தொழிலுக்கும் பெருமை, ஏழை எளிய மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கின்ற நல்லதொரு காரணமாக அதைச் செய்வதற்கு ஊக்கம் காட்டி இந்த 3 ஜில்லாக்களிலும் அதிகமாக பனைமரங்கள் இருப்பதால் அந்தப் பகுதிகளில் இந்த வேலை வாய்ப்புக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து அதைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் கிட்டத்தட்ட 12,000 பேர்களுக்குத் தொழிற்பயிற்சி கொடுத்து இருக்கிறோம். அப்படிப் பயிற்சி கொடுத்தவர்களுக்கு போதிய பணம் கொடுத்து அந்தத் தொழிலை அவர்களாகவே தொடங்குவதற்கு உதவி பண்ணவேண்டும். அல்லது அரசாங்கமே சிறு சிறு தொழில்களை உண்டாக்கி அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியத்தைக் கொடுத்து அந்த தொழிலை மேம்பாடு செய்தால், அரசு பணத்தைக் கொடுத்து பயிற்சி கொடுத்தால் பலன் உண்டாகும். ஏதோ அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தோம், அவர்களே பார்த்துக் கொள்வார்கள் என்று விட்டுவிட்டால் உண்மையிலே இன்றிருக்கின்ற பொருளாதாரச் சூழ்நிலையிலே அவர்கள் தனித்து இயங்கவோ அல்லது தொழில் செய்யவோ சாத்தியப்படாது. அவர்களுக்குப் பயிற்சிக்காக கொடுத்த பணம் வீணாகிப்போகும் நிலை உருவாகும்.

பிரம்பு தஞ்சை மாவட்டத்தில் நிறைய கிடைக்கின்றது. திருநெல்வேலி மாவட்டத்திலும் கிடைக்கின்றது. அந்தப் பகுதியிலே இந்தப் பிரம்புத் தொழிற்சாலையை நாம் ஊக்குவித்தால் மிக நன்றாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே 5—ம் பக்கத்திலே என்ன சொல்லி இருக்கின்றது என்றால், தமிழ் நாட்டிலே 4 கோடி பனைமரங்கள் உள்ளன. அவற்றுள் 2 கோடி மரங்கள் பயன்படுத்துவதற்குத் தகுந்தவையாக உள்ளன. இவற்றில் 60 இலட்சம் மரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன, என்று குறிப்பிலே உள்ளது. மீதி உள்ள மரங்களை ஏன் பயன்படுத்தவில்லை. பண வசதி இல்லையா, வாய்ப்பில்லையா, பயிற்சி பெற்றவர்கள் இல்லையா, இது குறித்து அமைச்சர் அவர்கள் விளக்கத்திலே சொல்லவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதுபோலவே நாட்டு செக்கு. இப்போது இயந்திரக் கருவி மூலமாக நாம் அவர்களுக்குச் செய்கிறோம். அவர்களுக்குக் கொடுக்கும் பணம் மட்டுமல்ல, அவர்களுக்கு கொடுக்கின்ற மூலப் பொருள்கள் அவர்களாலும் வாங்கமுடியவில்லை நாமும்

கொடுக்கவில்லை என்றால் அந்த எண்ணை உற்பத்தி தொழில் மிகவும் நலிந்து போகும் நிலை இருக்கின்றது. அந்தத் தொழில் நசிந்து போகாமற் இருப்பதற்கு நாம் ஆக்கம் காட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 7—ம் பக்கத்திலே தோல்பதனிடும் தொழிலுக்காக 21·12 இலட்சம் செலவிடப்படும் என்பதை குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிலிலே திறனம் உள்ளவர்கள் கிராமங்களிலே இருக்கிறார்கள். அவர்களை மாவட்ட ரீதியாக இருக்கின்ற நம்முடைய அதிகாரிகள் சற்று கவனத்தோடு எண்ணி அந்தத் தொழிலில் தேர்ந்தவர்களைக் கொண்டு வந்து செய்தால் அந்த விற்பனை அதிகமாகும். வெளிநாட்டில் வாங்குகின்ற அளவுக்கு நல்லதொரு நிலை உருவாகினால் அந்த மக்களுக்கும் தொழில் நடக்கின்றது. குறிப்பாக சொன்னல் அந்தத் தோல்வேலை செய்யும் சகோதரர்கள் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு, கிராமத்திலே தண்ணீர் இறைப்பதற்கு தோலால் செய்யப்பட்ட பறி என்று சொல்லக்கூடிய தண்ணீர் இறைக்கும் தொட்டியை, ஏற்றத்தில் கட்டி இழுப்பார்கள். நேற்று கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகக் கவலையோடு சொன்னார்கள். அந்தத் தொழில் நசிந்து போய்விட்டது என்று இப்போது பம்ப் செட்டுகள் போட்டுவிட்டதால் அவர்கள் தொழில் நலிந்து விட்டது. அப்படிப் பட்டவர்களை உபயோகப்படுத்துவீர் ளேயானால் அந்த தொழிலைத் தெரிந்தவர்களை நாம் பயன்படுத்துவோமானால் நிச்சயமாக அந்த ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கு கின்ற ஒரு சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்கும். இன்னும் தொடர்ந்து பணி செய்வதிலே அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதில் நாம் அதிக அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும். புதுக் கோட்டை மாவட்டத்திலே 3,500 மரங்களில் அது மாதிரி செய்வதற்கு நாம் கொடுப்பதாக சொல்கிறோம், அது வரவேற்கத்தக்கது. அங்கு 35 சங்கத்திற்கு கொடுக்கப்பட்டதாக சொல்கிறோம். ஆனால் அந்த மரம் ஏறிகள் தொழிலை இப்போது அவர்களும் செய்யமுடியாத நிலை அந்த இடங்களில் நாம் அதிகமாக கவனம் செலுத்துவோமானால், அது பிற்படுத் தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மரம் ஏறி மக்களுக்கு இன்னும் ஒரு உதவி செய்கின்ற நிலையிலே நாம் இருப்போம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். கதர் துறையிலே அந்த வியாபாரம் செய்கின்ற அந்தப் பணியாளர்களுக்கு நாம் கொடுக்கின்ற சம்பளம் அவ்வளவு போதியதாக இல்லை. ஆகவே, அரசு அதில் கவனம் செலுத்தவேண்டும். அதுமட்டுமல்ல அரசாங்கத்திலே பணி செய்கின்றவர்களுக்கு சில துறைகளிலே கீழ்த்தர சிப்பந்திகளாக உள்ளவர்களுக்கு நாம் கதர் உடைகளை கொடுக்கிறோம். அப்படி கொடுக்கின்றபோது வாஸ்தவமாக மில்களிலே நெய்யப்பட்ட மெல்லிய நூலினாலே நெய்த துணி சீக்கிரம் கிழியாது, சீக்கிரம் அழுக்காகாது, ஆனால் கதர் ஆடை சீக்கிரம் அழுக்காகும், சீக்கிரம் கிழிந்துவிடும் நிலையில்



இருக்கின்றது. ஆகவே டிபார்ட்மென்டிலே கீழ்த்தர சிப்பந்தி களாக இருக்கின்றவர்களுக்கு கொடுக்கின்ற ஆடைகளை குறைந்த பட்சம் ஒரு 4 செட்டாவது கொடுப்பதற்கு நாம் வருங்காலத்திலே எண்ணவேண்டும். நான் அவர்களுக்கு அதிகம் வாங்கி கொடுப்ப ற்கு மட்டும் இதைச் சொல்லவில்லை. அவர்களுடைய நிலைமை அது. தூய்மையாக வைத்துக்கொள்கின்ற ஒரு நிலைமை முடியாது. இப்படி செய்வதினால் கோடிக்கணக்கில் ஒன்றும் செலவாகிவிடாது. ஆகவே அதை எடுத்துக் கொண்டால் ஒரு பக்கம் வேலையற்ற மக்களுக்கு உணவு கொடுக்கின்ற வகையிலே இந்த மக்களுக்கு உதவி செய்கிறோம், அதே சமயத்தில் கீழ்த்தர சிப்பந்திகளுக்கு ஒரு உதவியும் செய்கிறோம் என்ற எண்ணத்திலே அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுபோலவே இந்தத் துறையிலே ஒருசில வேலைவாய்ப்பு என்ற வகையிலே பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுக்க சில துறைகளிலே கணிசமான அளவிற்கு இன்னும் முன்னேற்றம் ஏற்படவில்லை. நானும் வாரியத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறேன். அப்போதும் இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கிறேன். கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் அது சரியாக இல்லை என்பதை இந்தச் சமயத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிறகு, பொதுப்பணித்துறையிலே கட்டிடம் கட்டுவதிலே நம் அரசாங்கம் காண்ட்டிராக்ட் முறை ஒழிக்கப்படவேண்டும் என்பதிலே நான் நிச்சயமாக அக்கரை உள்ளவன். ஏன் என்றால், காண்ட்டிராக்ட் முறை கொடுக்கப்பட்டு அவர்களுக்கு பைனல் பில் கொடுத்தப்பிறகு, அந்த காண்டிராக்டர்களை நாம் ஒன்றும் கேட்கமுடியாத நிலைமையில் சட்டம் இருக்கிறது. அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள், அவர்கள் பக்கம்தான் தீர்ப்புகள் வரும் என்று நிச்சயமாக எல்லோருக்கும் தெரியும். ஆனால் டிபார்ட்மென்டிலே செய்தால் நிச்சயமாக நமக்கு நன்மையைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையிலேதான் நம்முடைய துறைகளின் மூலம் கட்டிடங்கள் கட்டச் சொல்கிறேன். ஆனால் என்ன காரணத்தினாலோ நாம் கட்டுகின்ற கட்டிடங்கள் மிகச் சீக்கிரத்திலே விழுகின்ற நிலைமை இருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்திலே ஒரு நீர்த்தொட்டி கட்டப்பட்டது. கட்டி 10 மாதத்திற்குள்ளாக, அல்லது 1 வருஷ காலம்தான் இருக்கும்; அது விழுந்துவிட்டது. ஆனால் நடவடிக்கை எடுக்கப் பட்டது. ஏன் இப்படி என்றால் அதிகாரிகள் நம்முடைய துறைகள் மூலம் செய்கிறபோது அது நல்லமுறையில் இருக்க வேண்டுமென்ற எண்ணங்களை உருவாக்க வேண்டுமென்று அரசாங்கத்திலே உயர்ந்த அளவில் இருக்கின்ற உத்தியோகஸ்தர்கள் கீழ் அளவிலே இருக்கின்ற அதிகாரிகளிடம், 6 மாதத்திற்கு ஒரு தடவையோ, அல்லது ஒரு வருஷத்திற்கு ஒரு தடவையோ

அவர்களை கூட்டி, கலந்து, எத்தனை கட்டிடங்கள் கட்டப்பட்டன, என்ன நிலையில் உள்ளன என்பதை வருஷத்திற்கு ஒரு முறையோ, அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறையோ இதை நீங்கள் பார்ப்பீர்களானால் நிச்சயமாக அது நல்ல பயனை அளிக்கும்.

சிதம்பரம் தாலுக்காவிலே 1894—லே ஒரு மதகு கட்டப்பட்டது. இன்று வரையில் அது நல்ல நிலையிலே இருக்கிறது. ஆனால் நாம் கட்டுகின்ற மதகுகள் பல ஜில்லாக்களிலே காண்ட்டிராக்டர்கள் செய்துவிட்டால் அதிலே ஏதோ செய்துவிட்டார்கள் என்று சொல்லலாம். நம்முடைய அதிகாரிகள் இருக்கின்ற காலத்திலே இந்த மாதிரியான நிலைமைகள் இருக்கின்றன. இவைகளை வருங்காலத்திலே கவனிக்கவேண்டும். இன்னறக்கு உதாரணத்திற்குச் சொல்கிறேன். சிதம்பரத்திலே இருக்கிற ஒரு ஆஸ்பத்திரி பி.டபில்யூ. டிபார்ட்மென்டைச் சேர்ந்தது. ஆனால் அதை முனிசிபல் அதாரிட்டி அந்தக் கட்டிடத்தை தங்களுடைய அலுவலகத்திற்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பி.டபிள்யூ. டிபார்ட்மென்டும் அவர்களிடம் ஒப்படை என்று உத்திரவு போட்டது. உத்திரவு போட்டும், ஓர் ஆண்டு காலம் ஆகியும், அந்தக் கட்டிடத்தை அந்த முனிசிபல் கமிஷ்னரிடம் ஒப்படைக்கவில்லை. ஆனால் உத்திரவு போட்டும், கீழ் உள்ள அதிகாரிகளால் என்ன காரணத்தினாலோ அது காலதாமதம் ஆகியது என்பதை சொல்கிறேன். இதை நான் உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன்.

(இரவு 7.20)

அதைப்போல கடைசியாக நான் கூற விரும்புவது மின்சாரப் பற்றாக்குறை என்று அமைச்சரும் சொல்கிறார்; நாமும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பட்டப்பகலில் நல்ல ஒளி இருக்கும்போதுகூட அலுவலகங்களிலே விளக்குகளைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மின்சார விசிறி (ஃபேன்) களைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப் போட்டுக்கொண்டாலும் வெளியே போகும்போதுகூட அப்படியே போட்டு வைத்துவிட்டு போய்விடுகிறார்கள். அவர்கள் இதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இப்படி பொறுப்பற்ற முறையிலே பொதுப்பணித் துறையில் மட்டுமல்ல, மற்ற அலுவலகங்களிலும் இந்த அவல நிலை இருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில் ஏன் இப்படி பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அல்லது அதிகாரிகள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டிடங்களைப் பொறுத்த வரையில் பல்வேறு சீர்கேடுகள் இருப்பதற்கு, இந்த நிலைகளுக்குக் காரணமாக இருப்பவர்கள் அதிகாரிகள் மட்டும் என்று நான் சொல்லவில்லை. அரசியல்வாதிகளாக இருந்தால்கூட இந்த கட்டிடம் கட்டும் இடத்திலே, குறுக்கிட்டுபோவது சரியல்ல. எம்.எல்.ஏ. சொல்கிறார் எம்.பி. சொல்கிறார், அதனால் இப்படி ஆனது என்று



அதிகாரிகள் சொல்வதற்கு இடம் கொடுக்காமல் அதிகாரிகள் தங்களுடைய விருப்பம்போல சுயேச்சையாக செயல்படுவதற்கு அதை விட்டுவிட வேண்டும். அதில் தவறு ஏற்பட்டால் அந்த தவறுக்கு யார் பொறுப்பாளியாக இருந்தாலும் அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் அஞ்சாமல் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டுவதிலே காலதாமதம் செய்யக் கூடாது. தாமதம் ஏற்பட்டால் விலைவாசி ஏற்றத்தால் கட்டிடம் கட்டமுடியாத நிலை ஏற்படும். அதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற கதர் கிராம கைத்தொழில் மற்றும் பொதுப்பணித் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளை ஆளும் கட்சியின் சார்பில் வரவேற்று சில கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளித்ததற்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வளர்ந்துவரும் இந்தியப் பெருநாட்டில் மற்ற வளங்கள் வளருகிறதோ இல்லையோ மக்கள் வளம் வளர்ந்துகொண்டே வருகிறது. மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்றவகையில் வேலைவாய்ப்பை நம் நாட்டு மக்களுக்கு அளிக்கும் வகையில் மத்திய அரசும் மாநில அரசும் எவ்வளவுத் திட்டங்களை நிறைவேற்றினாலும்கூட அனைத்து மக்களுக்கும் குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற முயற்சியில் நாம் ஒரு சிறிதளவு கூட வெற்றி காணமுடியவில்லை என்பதைப் பார்க்கும்போது இந்தத் துறை மிக முக்கியமான ஒரு துறையாக எண்ணப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

கிராமப்புறத்தில் ஏழை எளிய மக்களுக்கு, குறிப்பாக தாய்மார்களுக்கு, எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறவர்களுக்கு ஓரளவுக்கு வசதியை ஏற்படுத்திக்கொடுத்து, ஓரளவுக்கு ஊதியத்தை ஏற்படுத்திக் கொடுக்கிற ஒரு திட்டம் எது என்றால் அது இந்த கதர் கிராமத் தொழில் துறையாகும். ஆகவே இந்தத் துறையில் தமிழ அரசைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் ஆட்சி இந்த ஆண்டுத் திட்டத்தில் பல நல்ல திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு மா. சின்னராசு] [1982 மார்ச் 18

அவைகளில் பனை பொருள் உற்பத்திக்கும் ஆராய்ச்சிக்கும் பல இலட்சம் ரூபாய் செலவில் புதுக்கோட்டையிலும் தர்மபுரி மாவட்டத்திலும் தொழில் கூடங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் நிறுவுவதற்கான திட்டங்கள் முக்கியமானவை. அதைத்தவிர கதர் தொழில் செய்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஆரம்பத் திட்டம் இருப்பதால் அந்தத் தொழிலினுடைய முக்கியத்துவம் குறித்து, அந்தத் தொழிலில் கிராம மக்கள் அடையும் பலனை கருத்திற் கொண்டு பல லட்சம் ரூபாய் வீடுகட்டும் திட்டத்தை நமது அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தொழிலில் கிராமப்புறங்களில் எளிதாகக் கிடைக்கிற மூலப்பொருட்களைக் கொண்டு, அதிக அளவில் இயந்திரங்கள் (இக்விப்மென்ட்ஸ்) இல்லாமல் சாதாரணமாகச் செய்யக்கூடிய தொழில்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் கிராமப் பொருளாதாரம் மறுமலர்ச்சி அடையும் வாய்ப்பு இருக்கிறது அதில் மிகவும் முக்கியமானது கண்டசாரி சர்க்கரைத் தொழில். எனது தொகுதியில் கலிக்கநாயக்கன்பாளையத்தில் மரம் ஏறும் தொழிலாளர்களைக் கொண்டு நடத்தப்படுகிற கண்டசாரி சர்க்கரைத் தயாரிக்கும் தொழில் இந்த வாரியத்தின் மூலம் செய்கின்ற தொழில்களில் சிறந்ததாக இருக்கிறது. இது இத்துறையில் ஏற்கப்பட்டுள்ள தொழில்களுக்கு ஒரு முன் உதாரணமாக இருக்கிறது என்று கூட சொல்லலாம். அங்கே மிக உயர்ந்த வகையான சர்க்கரை தயாரிக்கப்படுகிறது தென்னம்பதநீரைப் பயன்படுத்தி. ஆனால் அந்தச் சர்க்கரை உற்பத்தி விலை சாதாரணமாக இருக்கும் அஸ்கா (சீனி) சர்க்கரையை விட சற்று கூடுதலாக இருக்கிறது. மருத்துவர்கள் சொல்லுகிறார்கள், இந்தச் சர்க்கரை, சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்குக் கூட சாப்பிடுகிற அளவுக்கு தரம் உள்ளதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தச் சர்க்கரை விலை கூடுதலாக இருப்பதால், அதனை பயன்படுத்துவதற்கு மக்கள் முன்வரவில்லை. இதனால் அதனை உற்பத்திசெய்கிற தொழிலாளர்களுக்கு விற்பனைகுறைவு ஏற்படுகிறது. அதனால் அந்தத் தொழிலும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அரசே அதனைக் கொள்முதல் செய்து, விற்பனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று இந்தப் பொருள்களை விற்பனைசெய்வதை ஊக்குவிப்பதற்கும் உற்சாகப் படுத்துவதற்கும் இந்த சர்க்கரையை கதர் வாரியம் அமைத்துள்ள கடைகளிலும், கூட்டுறவு சங்கங்கள் அமைத்துள்ள கடைகளிலும் விநியோகம் செய்து, மற்றும் மருத்துவமனைகள், மருத்துவ விடுதிகள் ஆகியவற்றில் இந்தச் சர்க்கரையை வாங்கி உபயோகிக்க வேண்டும் என்கிற முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையைப் பின்பற்றினால், அந்தச் சங்கங்கள் மட்டுமல்ல, பனை, தென்னை போன்றவற்றில் இருந்து பொருள்களைத் தயாரிக்கும் சங்கங்களும் நல்ல முறையில் வளரமுடியும், அங்கேயுள்ள தொழிலாளர்களும் முன்னேற்றம் அடைய வசதி வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 மார்ச் 18] [திரு. மா. சின்னராசு]

அதேபோல் இந்தத் துறையின் கீழ் ஆதிதிராவிட மக்களுக்கு என்றும், மலை வாழ் மக்களுக்கு என்றும் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. குறிப்பாக வெஸ்டர்ன்கார்ட்ஸ்ப்ரொக்கிராம், ஹில் ஏரியா டெவலெப்மெண்ட் ப்ரொக்கிராம், மற்றும் பல்வேறு வேலைவாய்ப்புத்திட்டத்தின்கீழ்பல நல்லதிட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. என்னுடைய தொகுதியில் ஆனைக்கட்டி, மற்றும் சிறுவாணி மலைப் பகுதிகளில் இருளர் என்ற வகுப்பினர் இருக்கின்றனர். இந்தத் திட்டத்தின் பலன்கள் அவர்களுக்கு வந்து சேரவில்லை. அவர்கள் அங்கே வன இலாக்கா மற்றும் தோட்ட வேலை சம்பந்தமான தொழிலைச் செய்து வருகின்றனர். ஆகவே இந்தத் திட்டத்தின் மூலம் அந்த ஆதிவாசி மக்களுக்கும் பலன் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைப்பகுதிகளில் இருக்கும் மலைவாழ் மக்களுக்கு பாலமலை என்ற இடத்தில் ஏற்கனவே இருக்கும் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் கதர் நெசவு தொழில்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த கதர் நூற்புத் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் பெண்கள் போதிய அளவிற்கு ஊதியம் கிடைக்கவில்லை என்ற நிலையில் இருக்கிறார்கள். மலைப்பகுதியில் வாழும் இவர்களுக்கு எந்தவிதமான இடுபொருள்களும் கிடைக்கவில்லை. கார், பஸ், ஜீப் செல்ல முடியாத இடங்களில் பலர் வாழ்கின்றனர். பாலமலை என்ற இடத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு தொழில்கூடம் கதர்நல வாரியம் ஆரம்பித்து நடத்தி வந்தது. தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அது பலருக்கு வேலை வாய்ப்பு அளித்து வந்தது. ஆகவே, அதை நிவைவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தச் சங்கங்கள் அங்கே மீண்டும் தொடங்க முயற்சிகளை இத்துறை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கதர் கிராமத் தொழில் மூலம் கிராமப்புற மக்களிடையே உள்ள மூலதனத்தைக் கொண்டு இன்னும் பல முக்கியமானத் தொழில்கள் துவங்க வாய்ப்பு இருக்கிறன. அதற்கான ஒரு ஆய்வு தொடர்ந்து பரந்த அளவில் துறை மேற்கொள்ளவேண்டும். அதன் மூலம் பெரும்பாலும் எண்ணை உற்பத்தி. மற்றும் செங்கல் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யலாம். இந்தத் துறையில் பல ஏழை எளிய மக்கள் ஈடுபட்டு இருப்பதால் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிற முறையில் நடத்துவதற்கு அந்தக் கூட்டுறவு அமைப்புகளை நல்ல முறையில் நடத்துவதற்கு

[திரு. மா. சின்னராசு] [1982 மார்ச் 18

அந்தத் துறை ஊக்கம் எடுத்து எதிர்காலத்தில் சமுதாயத்தில் வேலையில்லாதோர் வாழ்வு பெறும் அளவிற்கு நிலைமைகளை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித்துறையின் மூலம் துவங்கப்பட்டு இருக்கும் கட்டுமானக் கழகம் சிறந்த நோக்கத்தோடு ஆரம்பிக்கப் பட்டு இருக்கிறது. நாட்டில் கட்டுமானங்களுக்கு இருக்கும் கான்ட்ராக்ட் முறையை ஒழிக்கவும், எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு அற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கவும், ஊக்கம் அளிக்கவும் இது சிறந்த திட்டமாகும். பல இடங்களில் கட்டிடங்களுக்கான டிசைன்கள் அதன் தேவைக் கேற்ற வகையில் இல்லை. ஆங்காங்கு ஏற்படுத்தப்படும் கட்டிடங்களின் தேவையைக் கருத்தில் கொண்டு டிசைன் அமைக்கப்படவில்லை.

(இரவு 7.30)

உதாரணமாகப் பள்ளிக்கூட கட்டிடங்கள் என்றால் அதற்குரிய தேவைகளோடு அந்த டிசைன்களை அமைக்க வேண்டும். கிராமப்புறங்களில் கட்டப்படும் பள்ளிக்கூடங்கள் என்றால் அங்கே இடவ தி அதிகமாக கிடைக்க வாய்ப்பு இருக்கிறது, ஆகவே அதற்கேற்றவாறு அறைகளை அமைக்கவும், நகர்ப்புறங் களில் கட்டும் பள்ளிக்கூட கட்டிடங்களுக்கு இட வசதி குறைவாக இருக்குமாதலால் அதற்கேற்றவாறு அமைப்புகள் கொண்ட அறைகளைக் கட்டவும் டிசைன்களைத் தயார் செய்வதற்கு இந்தத் துறை முன்வர வேண்டும். அதே போல நீதிமன்றக் கட்டிடங்கள் என்றால், அங்கேயுள்ள வழக்கறிஞர்களுக்கு தக்க வசதிகளோடு, ஆதிகாரிகளுக்கு தக்க வசதிகளோடு டிசைன்கள் செய்யப்பட வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, கட்டுமானச் செலவுகளை எப்படியெல்லாம் எந்த வழிகளில் எல்லாம் குறைக்கலாம் என்பதைப் பார்த்து குறைத்து செய் வதற்கு வழிமுறைகளை வகுத்து, அதை நாட்டு மக்களுக்கு கொடுக்க வேண்டியது இந்தத் துறையின் மிக முக்கியமான பணி யாகும். இதுதான் தற்போதைய பொருளாதார நிலையில் மிக மிகத் தேவையானஒன்று. கட்டப்பட்ட அரசுத்துறைகட்டிடங்கள், மின்சாதனங்கள் ஆகியவை நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். காலதாமதம் இல்லாமல், குறைபாடுகள் ஏற்பட்டால் பழுதுபார்க்கப்பட வேண்டும். ஆகவே எந்த அளவுக்கு கட்டுமானச் செலவுகளை குறைத்து, நாட்டு மக்களுடைய தேவைக்கேற்ப உதவி செய்ய முடியும் என்பதைப் பார்த்து, அதை ஆய்வு செய்ய எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன். வணக்கம்.



1982 மார்ச் 18]

*திரு. டி. மணி: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை, சுதர், பொதுப்பணித் துறையின் பணியாளர்களும், கருவிகளும் தளவாடங்களும் போன்ற மானிய கோரிக்கைகளின் மீது சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக பனைத் தொழில் சம்பந்தமாக தந்திருக்கிற அறிக்கையிலே நம்முடைய தமிழகத்திலே 4 கோடி பனைமரங்கள் இருப்பதாகவும், அவற்றில் 2 கோடிதான் பயன்படத் தக்கதாக உள்ளதாகவும், அதிலும் 60 லட்சம் மரங்கள் மட்டுமே பயன் படுத்தப்படுவதாகவும் கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத் திலே பனை ஏறும் தொழிலைச் செய்கிற அந்தத் தொழிலிலே தான் பல ஆயிரம் பேர்கள் வேலை செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத் திலும் கிட்டத்தட்ட 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் வரையில் இருந்து வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே விளவங்கோடு தாலுக்காவிலே மட்டும் 15 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தான் அந்தப் பகுதியிலே முதலில் தொழில் செய்து விட்டு அடுத்த சீசனிலே நெல்லைக்கும் சேலத் திற்கும் இதர மாவட்டங்களுக்கும் அடுத்த சீசன் காலத்தில் வந்து பணிபுரிகிறார்கள். அவர்களுடைய தொழிலில் உற்பத்தி செய்கிற கருப்புக் கட்டி என்பது இப்போது மிகவும் விலை குறைவாக இருப்பதால், அவர்களுடைய வருவாய் மிகவும் குறைந்து, வறுமைக்கோடு என்று சொல்லப்படுகிற தரித்திர நிலைக்கும் கீழே அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு, அவர்களுடைய கூட்டுறவுச் சங்கங்களை விஸ்தரிக்கச் செய்து அதன் மூலம் அவர்கள் பல வசதிகளையும் பெறும்படிச் செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம் என்று ஒரு அமைப்பு உள்ளது. ஆனால் அதை அதிகாரிகள் தான் நடத்தி வருகிறார்கள் அதிலே தேர்தல் நடந்து வருடங்கள் பல ஆகிவிட்டன. அதன் கீழாக பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. இருந் தாலும் யதார்த்தமாக வேலை செய்யக்கூடிய பனைமரம் ஏறும் தொழிலாளர்களுக்கு அதில் பங்கில்லை. தலைமைச் சங்கத்தில் சரியான கண்காணிப்பு அமைப்பு இல்லாததால், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் மானியம் பெறுவதோ, கடன் பெறவோ முடியாமல் போகிறது. அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு நல்ல விலை பெற்றுத் தருவதோ முடியாமல் போய்விடுகிறது. இப்போது சரியாக கணக்கிட்டு பார்ப்போமே யானால் 20 ஆயிரம் பனையேறும் தொழிலாளர்கள் இருக்கும் குடும்பங்களில், சுமார் 200,300 பேர்களுக்கே, மானியம், கடன் உதவி போன்ற வசதிகள் இந்த சம்மேளனத்தின் மூலம் வழங்கப் பட்டிருக்கின்றன என்பது தெரியவரும். ஆகவே அந்த நிலையை மாற்றி பரவலாக அந்தத் தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும்

நன்மைகள் தரக்கூடிய அளவில், அந்தச் சங்கத்திலே விஸ்தரிப்பு செய்து, விரைவில் அதிலே தேர்தல் நடத்த ஏற்பாடு செய்து, அவர்களுக்கு பலவகையான உதவிகளும் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்னொரு முக்கியமான பிரச்னை. இந்தப் பனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக இன்று பல்வேறு மாவட்டங்களில் பல உற்பத்தி நிலையங்களை ஏற்பாடு செய்வதாக சொல்லப்படுகிறது என்று ஏற்கெனவே இதற்கு முன்னாலே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் நேரத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நெல்லை மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு பனை பொருள் உற்பத்தி நிலையமும், அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தில் வருகிறபோது, எந்தப் பகுதியிலே அந்தப் பனையேறும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள் அல்லது எந்தப் பகுதியிலே அந்தப் பனை பொருள்களை பயன்படுத்துகிற குடும்பங்கள் அதிகமாக இருக்கின்றன என்பதைப் பார்த்து அந்தப் பகுதியிலே அப்படிப்பட்ட பனைபொருள் உற்பத்தி நிலையத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் இதனாலே பயன் அடைய முடியும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போலவே இதிலே வேலைசெய்கிற தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால் என்ன செய்வது என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த அவையிலே ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அப்படி விபத்து ஏற்பட்டால் அதிலே இறந்துவிடுகிற தொழிலாளியின் குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். முன்பு ஒரு முறை அமைச்சர் அவர்கள் கூட அப்படி யாருக்கேனும் விட்டுப்போயிருந்தால், உதவித் தொகை கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுக்கப்படாமல் இருந்தால், உடனே பழைய ஆணையை மாற்றி, அவர்களுக்கும் கொடுப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அது இதுவரையில் அமுலுக்கு வரவில்லை. எனவே விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு விபத்து நிதி உடனடியாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கீழே விழுந்து ஊனமுற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களால் எந்த வேலையும் செய்ய முடியாது. அவர்கள் பாதுகாப்பில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே ஊனமுற்றவர்களுக்கும் உதவித் தொகையை தந்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து குளச்சலிலே ஒரு தும்புத் தொழிற்சாலை இருக்கின்றது. முன்பு வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே இருந்து அந்தப் பகுதியிலே இது ஒரு பரவலான தொழிலாக இருந்து வந்தது. இதில் 1000 க்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்து வந்தனர். அந்தத் தொழிலிலே சுமார் 200 பேர்களுக்கு குறைவாக தற்போது பணிபுரிகிறார்கள். அங்கே அரசுக்குச் சொந்தமான 5. 6 ஏக்கர் பரப்பிலே அதற்குத் தேவையான கட்டிடமும் அங்கே ஆயிரம் தென்னை மரங்களும் இருக்கின்றன. ஆனால் இன்று சென்று பார்த்தால் அந்தக் கட்டிடங்கள் கட்டிடமாகத் தெரியவில்லை. இடிந்து விழுகிற பயங்கரமான நிலைமையில் இருக்கிறது. பெரும்பாலான தொழிலாளர்கள் அந்தத் தும்புத் தொழிலை நம்பி இருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய இன்னொரு பகுதியாக இருந்தாலும் கூட அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் இன்னொருவிதமான காண்ட்ராக்டரின் கீழே பணியாற்ற வேண்டிய துர்பாக்கியமான நிலைமை இருக்கின்றது. ஆகவே நியாயமான சம்பளம் என்கிற குறைந்தபட்ச சம்பளம் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே நியாயமான குறைந்தபட்ச சம்பளம் கிடைக்க வழி செய்ய வேண்டும். ஆகவே அந்தப் பகுதியிலே ஏராளமாகக் கிடைக்கின்ற தும்பைப் பயன்படுத்தி அந்தத் தொழிலை விரிவுபடுத்தி அதனுடைய வருவாயைப் பெருக்கி பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு பிரிவாக இந்தத் துறையின் கீழ் தேன் உற்பத்தி செய்கின்ற ஒரு ஏற்பாடு இருக்கின்றது. குறிப்பாக இது நம்முடைய மாநிலத்திலே பல்வேறு இடங்களிலே இருந்தாலும்கூட கன்னியாகுமரி மாவட்டத்திலேதான் அதிகப்படியான தேனை உற்பத்தி செய்கிறார்கள். கதர் கிராமக் கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் தேன் வாங்கப்படுகிறது. அடுத்தபடியாக தனியார் நிறுவனங்கள் சில கூட தேனை உற்பத்தி செய்கின்றன. ஒய்.எம்.சி.ஏ. மூலமாகவும் தேன் வாங்கப்படுகிறது. தேன் உற்பத்தியாளர் சங்கம் மூலமாகவும் வாங்கப்படுகிறது. ஆனால் இவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து அரசாங்கத்தினுடைய துறைக்கே கொண்டு வந்து வெளி மாநிலங்களுக்கும் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் வாங்கி உபயோகிக்கின்றவர்களுக்கு நியாயமான விலையிலே தேன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தேன் உற்பத்தி செய்யப்படுகின்ற இடத்திலே அவர்களுக்கு 16 ரூபாய்தான் ஒரு கிலோவுக்குக் கிடைக்கிறது. ஆனால் விற்பனை செய்கின்ற போது அதிகப்படியான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஆகவே வாங்குகிறவர்களுக்கும் உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுப்பணித்துறை சம்பந்தமாக சில விவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக கட்டடங்களைப் பற்றியும் நம்முடைய ஓய்வு இல்லங்களைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தின் அமைச்சர்கள் குமரி மாவட்டத்திற்கு வருகின்ற போது குழித்துறையிலே இருக்கின்ற ஓய்வு விடுதியிலே தங்குகிறார்கள். ஆனால் அந்த ஓய்வு விடுதியிலே தங்குவதற்கான வசதிகள் இருக்கின்றதா என்று கேட்டால் இல்லை. இந்த நிலைமை அமைச்சர்களுக்கே தெரியும். அவர்களுக்கும் கூட நேரடியாக அனுபவம் இருக்கும். அங்கே இருக்கின்ற போது நாகர்கோவில் மாவட்ட ஆட்சித்தலைவரோடு தொடர்புகொள்ள வேண்டும் என்றால் அதற்கு தொலைபேசி வசதி இல்லை. ஆகவே அந்த ஓய்வு இல்லத்திலே தொலைபேசி வைக்க ஏற்பாடு செய்து இப்படிப்பட்ட ஓய்வு இல்லங்கள் சாதாரணமாக மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிலே தகுந்த வசதிகளைச் செய்து கொடுப்பதோடு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய தீயணைப்பு நிலையங்களைப் பொறுத்த வரையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே பல தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த நிலயங்களிலே தீ விபத்து ஏற்படாமல் தடுக்கின்ற நிலைமை இருக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். குழித்துறையிலே அந்த ஓய்வு இல்லத்தின் அருகிலே ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கின்றது. ஆனால் அந்த தீயணைப்பு நிலையம் ஓலைக் குடிசையிலே இருக்கின்றது. இதுபற்றிக் கடிதங்கள்பல எழுதியும்கூட இதுவரையிலே எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்பட வில்லை. ஆகவே அந்த தீயணைப்பு நிலையங்களுக்கு புதிய கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுப்பணித் துறையால் செய்யப்பட வேண்டிய கட்டிடங்கள் கட்டும் பணி காலாகாலத்திலே செய்து முடிக்கப் படுவதில்லை. 1980-81–லே எஸ்டிமேட் போடப்படுகின்றது. அப்போது சிமென்ட் விலை 26 ரூபாய் அல்லது 28 ரூபாய் இருக்கும். ஆனால் அந்தக் கட்டிடங்கள் இன்னும் கட்டி முடிக்கப் படாததன் காரணத்தால் இப்போது சிமென்ட் விலை எல்லாம் ஏறிவிட்டன. சிமெண்ட் விலை 35 ரூபாய் 36 ரூபாய்க்கு வந்துவிடுகின்றது. ஆகவே அவற்றிற்கு ரிவைஸ் எஸ்டிமேட் போட வேண்டி இருக்கின்றது. ஆகவே இந்த நிலைமையில் அந்த வேலைகள் முடிக்கப்பட்டால் அவற்றின் தரமும் சரியாக இருப்பதில்லை. குறிப்பாக கான்க்ரீட் செய்கின்ற போது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இருக்க வேண்டும். அவர்கள் சரியாக பார்க்கவும் முடிவதில்லை. வேலைகளும் அவர்களால் கவனிக்கப்படுவதும் இல்லை. மேலும் அதற்குத் தேவையான அதிகாரிகள் நம்முடைய கையிலே இல்லை. ஆனால் குறிப்பாகப் பொதுப்பணித்துறையிலே பார்க்கின்றபோது டிப்ளமோ படித்தவர்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள்.



ஆனால் அவர்களுக்குத் தகுதியான ப்ரமோஷன் கொடுக்கப்பட வில்லை என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த வேலைகளை காலாகாலத்தில் செய்து முடிப்பதற்காக இந்த டிப்ளமோ படித்தவர்களுக்கு எல்லாம் ப்ரமோஷன் கொடுத்தால் அந்த வேலைகளை முறையாகச் செய்ய முடியும். அவர்கள் நல்ல முறையிலே அந்த வேலைகளைக் கண்காணிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். குறிப்பாக கான்க்ரீட் போடுகின்ற நேரத்திலே அவர்கள் இருந்து கவனிக்க வேண்டி இருக்கின்றது. மேலும் அந்தக் கட்டிடப் பணிகளுக்காக ஒப்பந்தம் செய்கின்ற நேரத்திலே அங்கங்கே உரிய ரேட் இருக்கும். ஆனால் அவர்கள் அந்த ரேட்டிக்குக் கீழே சென்று விடுகிறார்கள். எஸ்டிமேட் ரேட் கீழே செல்கின்றபோது அந்த வேலையினுடைய தரம் பாதிக்கப்படுகிறது. அது தவிர்க்கப்பட வேண்டும்.

(இரவு 7.40)

நான் முதலிலேயே சொல்லியபடி பேச்சுப்பாறை திருவெட்டாறு போன்ற பகுதிகளிலேயும் இன்னும் பல இடங்களிலும் ஓய்வில்லங்கள் இருக்கின்றன. பல்வேறு பகுதிகளிலே இருக்கிற இந்த ஓய்வில்லங்களை அதிகப்படியாக விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி; பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பேச விழைகிறேன்.

இந்த வேலைக் காலத்தில் ஏதேனும் ஒரு நாள் உடல்நலக் குறைவு அல்லது நோய் ஏற்படுமானாலும் அவர் ஏறிய பனை மரங்கள் அத்தனையும் பலன் தராது வீணாகின்ற நிலைமை இருக்கிறது.

இந்தத் தொழிலாளிகள் வாழ்கின்றது பெரும்பாலும் கிராமங்களில் குடிசைகளில் தான். அங்கு மின் வசதி இல்லை. சாலை வசதி இல்லை. அவர்கள் வீடுகளுக்குக் கூரைகளாக பனை ஓலைகளையும் சுவர்களாக மரப்பலகைகளையும் அமைத்து தரையிலே வாழ்ந்து வருகின்றார்கள். அந்தத் தொழிலாளர்கள் மீது இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கென்று வீட்டுவசதிக்கு நிதிஒதுக்கீடு செய்ய, இந்த வாரியத்தின் மூலமாக அத்தகைய ஒரு ஏற்பாட்டைச் செய்ய யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கின்ற 4 கோடி பனை மரங்களில் 60 லட்சம் பனை மரங்கள்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதை உயர்த்துவது முடியுமா என்பது கேள்விக்குறிடாக இருக்கிறது இவ்வளவு நாகரீகம் வளர்ந்து வருகின்ற இந்த நாட்களிலே கூட இவ்வளவு அருப்பாடுபட்டு இந்த மக்களின் உழைப்பின்மூலம் தான் இத்தொழிலை பனைபொருள் செய்வதை, செய்யவேண்டியிருக்கிறதே என்று எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

அந்தத் தொழிலாளர்கள் வாழும் கிராமங்களுக்கு ஒரு இலக்கு வைத்து (டார்கெட்) அத்தனை கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுத்து ஒவ்வொருவருக்கும் வீடு கட்டுவதற்கு இடம் கொடுத்து அரசாங்க மானியத்திலே வீடுகட்டிக் கொடுப்பது போன்ற செயல்களை, சலுகைகளைச் செய்ய வேண்டும்.

பனைத் தொழில் செய்கிறவர்கள் தவறிக் கீழேவிழுந்து உயிர் இழந்தால் மட்டும் அவர்கள் குடும்பங்களுக்கு ரூ. 10,000 அளிக்கப்படுகிறது. கை அல்லது காலை இழந்தால் மிகக் குறைந்த தொகையே அளிக்கப்படுகின்றது. ஒருவருக்கு எலும்பு சேதாரம் ஏற்பட்டால் வாழ்நாள் முழுவதும் அவர் அந்தத் தொழிலைச் செய்ய முடியாது. எலும்பு முறிவு ஏற்பட்டால் கூட செய்ய முடியாத ஒரு தொழிலாகும் அந்தத் தொழில். அந்தத் தொழிலாளர் தன் குடும்பத்திற்கு, தன் ஆயுள் காலம் முழுவதும் பாரமாகத்தான் இருப்பார். ஒருவர் இறந்தால் என்ன தொகை கொடுக்கிறோமோ அந்தத் தொகையை உடல் அங்கஹீனம் ஏற்பட்டால் கூட வழங்க வேண்டும்.



பராமரிப்பதற்கு யாருமே இல்லையென்ற நிலை இருக்கிறது பனைத் தொழிலாளர்கள் வாழும் அத்தனை கிராமங்களிலும் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் துவக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பனைமரத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலம் வறட்சித் திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய கடன் கொடுப்பதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நான்கு மாதங்களாகியும் கூட இதுவரை வழங்கப்படவில்லை. கடலாடித் தொகுதியில்மட்டும் 10,000 தொழிலாளர்கள், பனைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விண்ணப்பித்துள்ள கடன்கள் சுமார் 36 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டு பெற்ற கடன் நிலுவை இல்லாமல் திரும்பச் செலுத்தியிருக்கிறார்கள். அந்நிலையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அந்தக் கடனை வழங்க தாமதப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படுகின்றன. இந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்கள் எந்தெந்த இடங்களில் கட்டப்படவேண்டும் என்று ஏற்கனவே குறிப்புகள் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. அதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட பிறகு ஒப்பந்தக்காரர்கள் கட்டடம் கட்டும் இடத்திற்கு லாரிகளில் மெட்டீரியல்களை எடுத்துச் செல்ல வாய்ப்பு இல்லை என்று அவர்களுக்கு ஏதுவான நகரங்களிலேயே அந்தக் கட்டடங்களைக் கட்டுகிறார்கள். எனவே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது ஆரம்பத்தில் தேர்ந்தெடுத்த இடங்களில் அந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கும்படி குறிப்பாணை அனுப்பவேண்டும்.

என் தொகுதியில் கடலாடியில் ஒரு ஓய்வு இல்லம் கட்டித் தரவேண்டும். மதுரையில் எவ்வளவோ அலுவலங்கள் உள்ளன. 100 கிலோ மீட்டர் தள்ளியிருக்கும் இந்த இடத்திற்கு அதிகாரிகள் வந்தால் அல்லது அமைச்சர்கள் வந்தால் இரவு நேரங்களில் வந்தால் அவர்கள் முகம் கழுவக் கூட இடமில்லை அவர்கள் தங்குவதற்கு இடமில்லை. அப்படி அங்கே அதிகாரிகள் தங்க இடவசதி இல்லாததால் அவர்கள் அங்கே வருவதில்லை. அதன் காரணமாக பல காரியங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. எனவே கடலாடியில் பொதுப்பணித் துறை மூலம் ஒரு ஓய்வு இல்லம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் மற்றும் பொதுப்பணித்துறைப் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் ஒரு சில முக்கியமான விஷயங்களைக் கூறிக் கொள்ள

விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் உள்ள பொதுப் பணித்துறையில் என். எம். ஆர். என்ற பெயரால் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் நிரந்தரமற்ற முறையில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க தமிழக அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை 65 வயது வரை என். எம். ஆர். ஆக வைத்திருக்கக்கூடிய நிலை வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, பொதுப்பணித்துறையில் இருக்கிற எஞ்சினியர்கள் சிலர் பாரின் சர்வீஸ்க்கு சென்றிருக்கிறார்கள். அவர்களைத் திரும்ப அழைக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். அவர்களுக்கு வெளிநாடுகளில் தரக்கூடிய ஊதியம் இந்த நாட்டில் தரப்படுகின்றதா திறமையாளர்களுக்கு உரிய மரியாதை நம் நாட்டில் இருக்கிறதா என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் பல பேர்கள் திரும்பி வருவார்களா என்பது சந்தேகமே, வருவார்கள் என்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கலாம்.

அடுத்து டி. எம். இ. படித்தவர்கள் இத்துறையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ப்ரமோஷன்ஸ் கொடுத்து பல பொறுப்புகளில் கொண்டு வருவதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று பட்டப் பொறியாளர்கள் தட்டுப்பாடு இருப்பதால் அவர்களை பயன்படுத்திக் கொள்ள அரசு தக்க நடவடிக்கைககள் எடுக்க வேண்டும்.

(இரவு 7.50)

அடுத்து, பொதுப்பணித்துறை சுற்றுலா மாளிகைகள் பலயிடங்களில் சீர்கெட்டிருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு மணி அவர்கள் சொன்னது மாதிரி சீர்கெட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் கூட வேதாரண்யம் பகுதியில் உப்பளத் தொழிற்சாலையிருக்கிறது. எண்ணெய் சுத்தகரிப்பு சாலை வருவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே வேதாரண்யம், தேர்டிக்கரை, திருத்துறைபூண்டி ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய சுற்றுலா மாளிகைகளை விரிவாக்க வேண்டும். வாலிநோக்கத்தில் ஒன்று புதிதாக கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் ஆர். எஸ். மங்கலம் இன்ஸ்பெக்ஷன் பங்களா காம்பவுண்ட் பாதியோடு நிற்பதாக கூறுகிறார்கள். அதையும் சீர் செய்ய வேண்டும். இன்ஸ்பெக்ஷன் பங்களாவில் போன் வசதி செய்ய வேண்டும். அதோடு இளையாங்குடி இன்ஸ்பெக்ஷன் பங்களாவை அபிவிருத்தி செய்வதன்மூலம், அங்கே மேலும் ஒரு சூட்டை ஏற்படுத்தி தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் செ. சிவசாமி அவர்கள் என் மூலமாக உங்கள் மூலமாக கூறுகிறார்



கள். வேதாரண்யத்தில் உள்ள பி. டபிள்யு டி பங்களாவை விரிவாக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் எம்,எஸ். மாணிக்கம், என்மூலமாக உங்கள் மூலமாக கூறுகிறார்கள்.

அதேபோல், வால்பாறை 11–1–1982-ல் தாலுகாவாக மாற்றப்பட்டுள்ளது. அங்கே தாலுகா அலுவலக கட்டிடம் வேண்டும். அங்கே உதவி சிறைச்சாலை அமைக்கப்பட வேண்டும். இப்போது அது உடைந்திருக்கிறது. அதனால், கைதிகள் தப்பித்து விடுவார்கள். எனவே, அதை உடனடியாக கவனிக்க வேண்டும். நீதி மன்றத்திற்கு கட்டிடம் இல்லை. பள்ளிக்கூட கட்டிடம் இல்லை. கோட்டூர் மலையாண்டிப் பட்டினத்தில் பள்ளிக்கூட கட்டிடத்தை மேம்பாடு செய்ய வேண்டும்.

தமிழகத்திலே நகர சுத்திக் தொழிலாளர்கள் வீடுகள் இல்லாமல் இருக்கிறார்கள் பி. டபிள்யு. டி. இதை மேற்கொண்டு இலட்சக்கணக்கான நகரசுத்தி தொழிலாளர்கள் மோசமான நிலையில் தண்ணீர் வசதியில்லாமல்' ஒளி விளக்கு வசதி இல்லாமல் இருக்கிறவர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டும். பத்திரிகையாளர்களுக்கு குடிசை மாற்று வாரியத்திலே வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டாலும், இன்னும் வீடுகள் கிடைக்காத பத்திரிகையாளர்களுக்கு பொதுப் பணித் துறைகள் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும. அதேப்போல், நலிவுற்ற கலைஞர்களுக்கு பொதுப்பணித்துறையிலே வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர்களுக்கு 24 வீடுகள் கட்டப்பட இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அமைச்சர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. என்று சொல்லி நிறுத்தி விட்டார்கள் என்ன காரணம் என்று தெரியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்று கேட்கிறாரா என்பது தெரியவில்லை.

திரு. மு. அம்பிகாபதி; அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இதை அவர்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன். அமைச்சர்களுக்கு வீடுகள் வேண்டாம் என்று சொல்லவில்லை அவர்கள் அமைச்சர்களாக இருக்கின்ற வரையில் தான் அந்த வீடுகள் அதற்குப் அதங்குப் பிறகு காலி செய்ய வேண்டும். எனவே, இருக்கின்ற வரையில் அமைச்சர்கள் சில வேலைகளைச் செய்வதற்கு. மக்களுடைய பிரச்னைகளை புரிந்துகொள்வதற்கு படிப்பதற்கு சில வசதிகள் தேவை. நாட்டின் பிரச்னைகளைத்

தீர்ப்பதற்கு அமைச்சர்களுக்கு வீடுகள் தேவை. அதைப்பற்றி அறிவிக்கப்பட்டிருப்பது சரி. மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் ஒன்றை கேள்வி மூலம் கேட்டிருக்கிறார்கள். அவர்களே அதற்கு முடிவெடுத்துக் கொள்ளட்டும்.

அடுத்து சட்டமன்றக் கட்டிடம் கட்டப்படும் என்று நிதியமைச்சராக இருந்து மனோகரன் காலத்திலே அறிவிக்கப்பட்டது. அதைப்பற்றி இதிலே ஒன்றுமே காணோம். இங்கே பல கட்டிடங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய, சட்டமன்றக் கட்டிடத்தைப் பற்றி குறிப்பு எதுவும் இல்லை.

அடுத்து, தமிழகத்திலே வளர்ந்து வரும் கல்வித் துறைக்கேற்ப பள்ளிக்கூட கட்டிடங்களோ, கல்லூரிக் கட்டிடங்களோ இல்லை. கல்லூரிக் கட்டிடங்களை மேம்பாடு செய்து நவீனப்படுத்த வேண்டும். அப்போது மன்னார்குடி இராஜ கோபாலசுவாமி கலைக் கல்லூரி கட்டிடத்தை மேலும் மாடிகளை விரிவுப்படுத்தி மாணவர்கள் மேலும் சிறப்புற நடவடிக்கை எடுக்க வேண்டும். மன்னார்குடி மருத்துவமனைக் கட்டிடம் போதியதாக இல்லை. தஞ்சை மாவட்டத்திலேயே அதிகமான குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிச்சையை மன்னார்க்குடி மருத்துவமனைதான் செய்கிறது. எனவே மன்னார்குடி மருத்துவமனையை மேலும் விரிவுப்படுத்த வேண்டும். அல்லது வேறுஇடத்திலே அந்தக் கட்டிடத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக, ஒன்லி ஒன் பாயிண்ட். இலட்சக்கணக்கான பனைமரம் ஏறும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இறந்து போனால் ரூ. 10,000 மட்டும் கொடுப்பது என்ன நியாயம் எலிசபெத் டெய்லர் காதுக்கு மட்டும் இன்சூரன்சு 25 லட்சம் டாலர் அந்த அம்மா சிரமப்பட்டு நடிப்பதால் ஆனால் நெஞ்சு தேய பனை ஏறுகின்ற தொழிலாளி ஏறும்போது இறங்கும்போது தப்பித்தவறி கீழே விழுந்து இறந்தால், அவன் குடும்பமே நாசம். கீழே விழுந்து சாகவில்லை, அவன் கை ஒடிந்தது கால் ஒடிந்தது என்றால் திரும்பவும் அவனால் பனைமரம் ஏறமுடியும் என்று கருதுகிறீர்களா? எனவே பனைமரத் தொழிலாளி ஏறும்போது இறங்கும்போது இறந்தால் ரூ. 25,000 கொடுக்கவேண்டும். கை ஒடிந்தால் கால் ஒடிந்தால் குறைந்தபட்சம் ரூ. 10,000 க்கு கம்மியாக இருக்கக் கூடாது. தமிழக அரசு இதை அறிவிக்க வேண்டும். ஏனென்றால் எலிசபெத் டெய்லரை விட பனைமரத்தில் ஏறுகிறவன் குறைந்தவனல்ல, வீரம் செறிந்தவன் வலு மிக்கவன் என்பதைக் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன் வணக்கம்.



திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே' 1982–83 ஆம் ஆண்டு கதர், பொதுப்பணித் துறை மானியங்களின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்லி சுருக்கமாகவே முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக கதர் இலாகா என்று சொன்னாலே மகாத்மா காந்தியடிகள் அவர்கள் இருந்த காலத்திலே கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் தேசிய போராட்ட காலங்களிலே அவர்களுக்குப் பொருளாதார மேம்பர்டு ஏற்படுத்துவதற்காகவும் அந்த வகையில் கிராமங்களிலே இருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதற்காகவும் இந்த இலாகா செயல்பட்டு வந்தது. அதற்குப் பிறகு 1960 ஆம் ஆண்டு கதர் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு நாட்டிலே இந்த கதர் வாரியம் இருக்குமா அல்லது எடுத்து விடுவார்களா என்ற ஐயப்பாடுகள் எல்லாம் ஏற்பட்டன. அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அவரைக் கேட்டபோது இதை நல்லமுறையிலே, ஏற்கெனவே இருந்ததைவிட நடத்துவேன் என்று சொன்னார்கள் அது பத்திரிகையிலே வந்தது எனக்கு இன்னமும் பசுமையாக இருக்கிறது.

அண்ணா அவர்களே ராட்டையிலே நூல் நூற்றிருக்கிறார்கள் எப்போது என்று உங்களுக்கு ஐயப்பாடு ஏற்படலாம். 1962—வது ஆண்டு விலைவாசி மறியல் போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தியபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் வேலூர் சிறையிலே இருந்தார்கள். சிறையில் இருக்கின்றவர்களுக்கு கடின தண்டனையாக இருந்தால் சிறையில் ஏதாவது ஒரு வேலையைக் கொடுப்பார்கள் செய்தாக வேண்டும். அதுபோன்று வேலூர் சிறையிலே அதிகாரிகள் அண்ணா அவர்களை அந்தப் பட்டியலிலே இருக்கின்ற எந்த வேலையைச் செய்கிறீர்கள் என்று கேட்டபோது அண்ணா அவர்கள் நூற்பு வேலையைத் தான் செய்தார்கள். அப்போது சிறையில் இருந்தவர்களோடு நானும் இருந்தேன் அப்போது அண்ணா அவர்கள் முதல் நாள் அந்த ராட்டையை நூற்றபோது மெத்த சிரமப்பட்டார்கள். ஆனால் 1, 2 நாட்களிலே அதி நாட்கள் நூற்றது போன்ற பயிற்சியைப் பெற்றுவிட்ட நிலைமையிலே நூற்கின்ற பணியைச் செய்தார்கள், சிறையிலே அவர்கள் இருந்தபோது அப்படி அந்த நூற்பு வேலையைத் தான் செய்தார்கள். நாங்கள் உடன் இருந்து பார்த்த காலங்களிலே.

இன்றைக்கு இந்தப் புத்தகத்திலே பார்க்கிறபோது ஒரு சிட்டம் நூற்றால் 2 பைசா என்ற அளவிலேதான் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கொஞ்சம் அதிகப்படுத்தலாம். சாதாரணமாக நூற்பதற்கு மிகப் பொறுமை வேண்டும். அந்த

முறையில் அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் ஊதியத்தை அதிகப்படுத்தி கிராமங்களிலே இந்த நெசவுத் தொழிலை ஊக்குவிக்கலாம். கிராமங்களிலே பல நேரங்களிலே வேலையில்லாத காலங்களிலே ஆண்களைவிட பெண்கள் வேலை செய்வதற்கு ஒரு வாய்ப்பை அதன் மூலம் ஏற்படுத்தித் தரலாம்.

15 வகையான தொழில்களை இந்த வாரியம் செய்து கொண்டிருக்கிறது. கிராமங்களிலே இவற்றையெல்லாம் நாம் செய்வோமானால் சிறிய தொழில்களாக இருந்தாலும் கூட மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். பேரறிஞர் அண்ணா அவர்கள், மகாத்மா காந்தியடிகள், பெருந்தலைவர் காமராஜ், பெரியார் போன்ற தலைவர்கள் பிறந்த நாட்களிலே கதருக்கு 10 சதவீதம் தள்ளுபடியும், கதர் பட்டுக்கு 5 சதவீதமும் தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளைக் கொஞ்சம் அதிகப்படுத்தினால் கதராடையை கட்டுகிறவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கட்டுகிற நிலைமை ஏற்படுமானால் இந்தத் துறை நல்ல முறையிலே செயல்படமுடியும். அந்த வகையிலே அமைச்சர் அவர்கள் அதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கூட சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே 4 கோடி பனை மரங்கள் இருக்கின்றன, அதிலே 2 கோடி மரங்கள் தான் பயன் தருகின்றன. இவற்றில் 60 லட்சம் மரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன என்ற புள்ளி விவரத்தை கொடுத்திருக்கிறார்கள். இந்தத் துறைக்கு அதிகாரம் இல்லையென்றாலும் அனைத்து மரங்களையும் பயன்பெறத் தக்க மரங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமப்பகுதிகளில் பொதுப்பணித்துறை, மற்றும் நீர்பாசனத் துறைகளை சேர்ந்த ஏரிக்கரைகளிலே தான் இந்த பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. அரசாங்கம் கதர் துறையிலே ஒவ்வொரு ஆண்டும் ஏரிக்கரைகளிலும், அரசாங்க நிலங்களிலும் உள்ள அத்தனை பனை மரங்களையும் பயன்படத் தக்கவைகளாக செய்வதற்கும் முயற்சி எடுக்க வேண்டும். சிறுகச் சிறுக இந்த பனை மரங்கள் அழிந்து விடுகிற நிலைமை இருக்கிறது இன்னும் தீவிரமாக செயல்பட்டு இந்த மரங்களை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.



பேரூர் பகுதியிலே பனை ஓலைகளிலிருந்து ஓலைப்பொருள்களை தயாரிக்க கூடங்களை அமைத்தால் அங்கிருக்கிற ஏழை மக்கள், விவசாயிகள் பயன்பெறுகிற வாய்ப்பு கிடைக்கும். இதை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழத்தை பதப்படுத்துகிற பணியைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டத்தில் ஏராளமான மாமரங்கள் இருக்கின்றன. மாம்பழத்திலிருந்து பதப்படுத்தி ஜாம், ஊறுகாய் போன்றவற்றை இந்தத் துறையில் செய்தால் இலாபகரமாக இருக்கும். விவசாயிகளுக்கும் நல்ல வருவாய் கிடைக்கும்.

அடுத்து தீப்பெட்டிகள் தயாரிக்கும் நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே மல்லவாடியிலே கூட கதர் வாரியத்திலே இதை ஆரம்பிக்கலாமா என்று பார்த்தார்கள். சரியான முறையில் அது தற்சமயம் நடைபெறவில்லை. இதுபோன்ற மறுவாழ்வு இல்லங்களில் இந்த தொழிலை நல்லமுறையில் சம்பந்தப்பட்ட இலாக்கா நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல கிராமங்களிலே விசைச்செக்கு மூலம் எண்ணெய் எடுப்பது. பட்டதாரி வாலிபர்கள் எல்லாம் கூட தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கடன் பெற்று இந்த தொழிலை நடத்தி வருகிறார்கள். நல்ல தொழில் தான். எங்கள் பகுதியிலே மணிலா பயிர், எள் போன்றவை தான் கிடைக்கிறது. அதை வாங்கி அவர்கள் எண்ணெயாகவோ, பிண்ணாக்காகவோ அவர்கள் விற்கிற போது பெரிய வியாபாரிகளோடு அவர்களால் போட்டி போடமுடியவில்லை. அதனால் பல பேர்கள் படித்த இளைஞர்கள் இந்த தொழிலிலே இறங்கி இலாபகரமாக நடத்த முடியாமல் நசிந்து விடுகின்றனர், சிலபேர் பணம் கடனாக கிடைக்கிறதே என்ற வகையிலே வாங்குகிறார்களே தவிர தொழில் நடத்தி இலாபகரமாக இல்லையென்ற உடன் அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன் மார்க்கெட்டிங் மிட்டியிலே பயிர் வாங்கினால் அதற்கு தனியாக செஸ் எல்லாம் கூட வைத்து, அந்த நேரத்தில் நாங்கள் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி செய்தார்கள். நல்லமுறையில் நடப்பதற்கு நீங்கள் கூட அவர்களுக்கு ஏதாவது சலுகை அளித்து நல்லமுறையிலே செயல்படுத்தலாம்.

மலை வாழ்மக்களுக்கு உதவி பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. வடஆற்காடு மாவட்டத்திலே ஏலகிரி, ஜவ்வாது மலைப்பகுதிகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு தெரியுமென்று நினைக்கிறேன். அந்தப் பகுதியிலே பட்டறைக்காடு என்ற இடத்தில் இந்த சமயம் இருந்தது. இவைகள் எல்லாம் சரியாக நடைபெறவில்லை. ஏராளமான மரங்கள் இருக்கின்றன, கிடைக்கும் தேன் கூட நல்ல இனிப்பாக இருக்கும். சந்தன மரங்களிலிருந்து தேன் எடுப்பதற்கு நல்ல வழிவகை இருக்கிறது. அங்கேயெல்லாம் தேன் எடுக்கிற பணியை தீவிரப்படுத்த வேண்டும்.

அதேபோல என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியில் கடலாடியில் ஒரு சோப் யூனிட் இருக்கிறது. அந்த சோப்பிற்கு நல்ல கிராக்கி இருக்கிறது. இதுசம்பந்தமாக நான் வெட்டுத்தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். அதிலே இன்னும் நடவடிக்கைகள் எடுத்து இன்னும் நல்லமுறையிலே செய்யலாம். ஜவ்வாது மலைகளிலே சந்தன மரங்கள் இருக்கின்றன. திருப்பத்தூர் பக்கத்திலே சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கவிருக்கிறார்கள். இவைகளை உபயோகப்படுத்தி சந்தன சோப் மைசூரிலே தயாரிக்கப்படுவதைப் போல உடலுக்கு போடுகிற சந்தன சோப் தயாரிப்பார்களானால் உதவிகரமாக இருக்கும்.

அடுத்து திருவண்ணாமலையில் கதர் உதவி இயக்குநர் அலுவலகம் ஒன்று இருந்தது. $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு முன்பு அதை எடுத்துவிட்டார்கள். அந்த அலுவலகத்தை மீண்டும் திருவண்ணாமலையில் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பொதுப்பணித்துறை பற்றி ஒரே ஒரு கருத்தை தெரிவித்து முடித்து விடுகிறேன்......

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : அடுத்து பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் பேசுவார்கள். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் மற்றும் பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கைகளிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களது கருத்துக்களையும் அவர்களுக்குத் தேவையான கருத்துக்களையும், இந்தத் துறைக்குத் தேவையான கருத்துக்களையும் இங்கு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக கதர் வாரியம் சம்பந்தப்பட்ட மட்டில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவேங்கடம், மணி, சிவனராசு போன்றவர்கள் கதர் வாரியத்தைப் பற்றி பேசுகின்ற பொழுது தெளிவாக என்ன செய்ய வேண்டும், என்ன தேவை என்பதைப் பேசினார்கள். குறிப்பாக, கதர் வாரியம் பலதரப்பட்ட தொழில்கள் செய்து வந்தாலும், குறிப்பாக, பனை மரத்தைப் பற்றி இவ்வளவு ஆர்வத்தோடும், இவ்வளவு தெளிவோடும் பேசுகின்ற சூழ்நிலைத் தமிழகத்திலே உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பதை எண்ணுகின்ற பொழுது, இதுவரை அதைப்பற்றி யாருமே எண்ணாமல், சிந்திக்காமல், கவனித்துப் பார்க்காமல் இருந்த தொழிலைப் பற்றி, இன்றைக்கு எவ்வாறு செய்ய வேண்டுமென்று கருத்துக்கள் கூறுகின்ற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னுக்கு வந்து இந்தத் தொழிலுக்கு வலுவூட்டுகின்ற அளவு பேசியிருக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது உண்மையிலேயே அவர்களை மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



6 கோடி பனை மரங்கள் தமிழகத்திலே இருந்தும் 2 கோடி பனை மரங்கள் மட்டுமே பலன் தந்து, அதிலே 60 இலட்சம் பனை மரங்கள் மட்டும் தான் இப்பொழுது உபயோகிக்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் என்ன, அதற்கு விளக்கம் கூற வேண்டுமென்று மாண்புமிகு இளையபெருமாள் கேள்வி கேட்டு அப்படிப்பட்ட தொழிலுக்கு இன்னும் ஊக்கம் கொடுத்து இன்னும் பலனுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற கருத்தை அவர்கள் முன் வைத்தார்கள். ஆகவே, கதர் வாரியம் கிராமக் கைத் தொழிலைப் பொறுத்த மட்டில், எடுத்துக் கொண்ட தொழில்களிலே இன்றைக்கு அதிக பட்ச கவனத்தை ஈர்க்கக் கூடிய ஒரு தொழிலாகப் பனை ஏறு தொழில் இருக்கின்றது என்பதை என்னும்போதும் இதனை நம்பி ஏறக்குறைய 30 இலட்சம் குடும்பங்கள் தமிழ்நாட்டிலே வாழ்கின்றன என்பதை எண்ணும்போதும் அதன் முக்கியத்துவம் தெரிகின்றதும் இவர்களோடு சேர்ந்து இன்னமும் பலர் பயன்பெறத்தக்க வகையில், அதிகம் பனை மரங்களைப் பலனுக்குக் கொண்டு வரவேண்டுமென்று குறிப்பிடப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், ஏற்கனவே, வயதானவர்கள், இந்தத் தொழிலை ஏற்கனவே பார்த்து வந்தவர்கள் தான் இந்தத் தொழிலை முன்னுக்கு வந்து செய்கிறார்களே தவிர இளைஞர் சமுதாயத்தினர் முன்னுக்கு வந்து செய்ய ஆர்வம் காட்டாத காரணத்தாலே, இந்த அரசு வாரியத்தின் வாயிலாக, பனை மரத்தின் உயர்வுபற்றி, ஒரு பனை மரத்திலிருந்து 39 பலன்கள் கிடைக்கின்றன என்றும், அதில் கிடைக்கின்ற பலன்கள் 39 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது என்பதையும் நாட்டு மக்களுக்கு உணர்த்தி, இந்தத் தொழில் இலாபகரமான தொழில், செய்தால் முன்னுக்கு வரக் கூடிய தொழில் என்ற எண்ணம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் உருவாகி வருகிறது. இளஞ்சமுதாயத்தினரைக் கவரக்கூடிய அளவு அவர்களும் இந்தத் தொழிலில் ஈடுபடவேண்டுமென்பதற்காக இன்னும் பலனுக்குக் கொண்டு வராத பனை மரங்களைப் பலனுக்கு கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஆராய்ச்சி நிறுவனம் அமைத்து, அங்கு கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு செய்து கொண்டு வருகிறார்கள். அதன் வாயிலாக நீண்ட நெடிய மரமாக வளர்ந்திருக்கிற பனை மரத்தைக் குட்டைப் பனை மரமாக மாற்றுவது பற்றியும் 6 மாதங்கள் மட்டுமே அருமையான பதநீர் கொடுக்கிற பனைமரம் 12 மாதங்களும் பதநீர் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதை ஆராய்ந்து பார்ப்பதற்காகவும், கிடைக்கின்ற பதனீரைக் காப்பாற்றிப் பாதுகாத்து மக்களுக்குப் பல நாட்கள் கடந்தாலும் பதநீராகவே கிடைக்கக் கூடிய சூழ்நிலையில் – இப்பொழுது கிடைக்கின்ற பதநீரைப் பாதுகாக்க வேண்டுமென்றால் சுண்ணாம்பைத் தடவித்தான் பாதுகாக்கிறார்கள், சலிக்காமல் போவதற்கு. அப்படி சுண்ணாம்பைத் தடவாமல் வாரக் கணக்கிலே, மாதக் கணக்கிலே பாதுகாக்கக்கூடிய சூழ்நிலை

இருக்கிறதா என்பதை ஆராய்வதற்காக ஸ்ரீவில்லிப்புத்தூர் பக்கத்தில் அமைய இருக்கின்ற ஆராய்ச்சிக் கூட்டத்திலே ஆராய்ந்து வருகிறார்கள். ஆகவே, இவைகள் வெற்றிபெறும் சூழ்நிலை இருக்குமேயானால் நிக்சயமாக இந்தப் பனைத் தொழிலை நம்பி வாழ்பவர்கள் இன்னமும் இந்தத் தொழிலுக்கு வரக் கூடியவர்கள் ஊக்கம் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

(இரவு 8—10)

இந்தப் பனைமரத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும இந்தத் தொழிலை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே பனமரங்களை இன்னும் இலட்சக் கணக்காண பனைமரங்களைப் பலனுக்குக் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே மாவட்டந் தோறும் பனைமரத் தொழில் கூடங்களை அமைத்து வருகிறோம்.

சென்னையிலே மாதவரத்தில் இருப்பதைப்போல கிழக்கு இராமநாதபுரத்திலே மரியூர் என்ற கிராமத்திலேயும், தர்மபுரி மாவட்டத்திலே மாத்தூர் என்ற இடத்திலும், மதுரையிலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் இருபது இலட்சம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள்; அங்கும் இடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தென்னார்க்காடு மாவட்டத்திலேயும் அங்குள்ள ஆட்சித் தலைவரவர்கள் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அங்கும் இப்படிப் பட்ட தொழல் கூடம் உருவாக்க முனைந்திருக்கிறது வாரியம். நெல்லை மாவ்ட்டத்தைப் பொறுத்தமட்டில் எற்கனவே அங்கு ஒரு தொழிற்கூடம் ஆரம்பிக்கப்பட்டிருக்குறது.

அதோடு இல்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், நெல்லை மாவட்டத்திற்கும் இணைத்துச் செயல்படுவதற்காகக் காவல்கிணறு என்ற இடத்தில் அங்கு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப் பல மாவட்டங் ளிலேயும் இப்படிப்பட்ட தொழிற் கூடங்களையும் உருவாக்குவதன் வாயிலாக அங்கு பணிபுரியும் அந்தத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வாழ்வும், வேலைவாய்ப்பும் கிடைப்பதற்கான சூழ்நிலை கிடைக்கிறது. ஆகவே, இன்னும் பல இலட்சக்கணக்கான பனை மரங்கள் பலனுக்கு வருவதற்கான வாய்ப்பிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள், ஏதோ நடிகையின் பெயரைச்சொல்லி அவருக்கே பாதுகாப்பு கொடுத்திருக்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட அருமையான தொழிலைச் செய்யும் தொழிலாளர்களுக்கு இன்னமும் அதிகபட்சம் பாதுகாப்புத் தொகை கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.



இருக்கின்ற பாதுகாப்புப் பணமே சரியாகப் போய்ச் சேரவில்லை, கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள்,

இதை நிறைவு செய்யக் கூடிய நடவடிக்கையை, விரைவாகப் பணம் போய்ச் சேரக்கூடிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் பத்தாயிரம் காணாது என்று சொன்னார்கள். அரசு சார்பாக பத்தாயிரம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜனதா இன்ஷ்யூரன்ஸ் என்ற ஒன்றை நமது வாரியமே மரம் ஏறுபவர்களின் சார்பாக அங்கே ஒரு ரூபாய் கட்டி அந்தத் தொழிலில் இருப்பவர்கள் ஏதாவது காயம் ஏற்பட்டால் ஜனதா இன்ஷ்யூரன்ஸ் வாயிலாக பதினைந்தாயிரம் கிடைக்கக் கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அரசு சார்பாக ஐயாயிரம் அவர் இறந்து விட்டால், ஜனதா இன்ஷ்யூரன்ஸ் வாயிலாக பதினைந்தாயிரம் ரூபாய், ஆக இருபதாயிரம் ரூபாய் கிடைக்கின்ற வாய்ப்பு அந்த பனையேறும் தொழிலாளர்களுக்கு இருக்கிறது என்பதையும் இப்படிப்பட்ட உத்தரவாதம் இருப்பதால்தான் இன்றைக்கு அந்தத் தொழிலில் முன்னுக்கு வந்து செய்யக் கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதைப் பெரிதுபடுத்தி உற்சாகமாகப் பேசிய காரணத்தினால் பனையைப் பற்றி இவ்வளவு விவரமாகக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையேற்பட்டது.

கதர் வாரியத்தைப் பொறுத்தமட்டிலும் கதர் வாரியத்தை இரண்டாக, கதர் என்றும், கிராமக் கைத்தொழில் என்றும் பிரிக்கப்பட்டு இன்றைக்குப் பல இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், சுருக்கமாக யார் யார் கதர்-கிராமத் தொழில்களிலே பலன் பெறுகிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசியதற்குப் பதிலாக விவரங்கள் தரலாம் என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கதரைப் பொறுத்த மட்டிலும் 3?3 கிராமிய நூற்புக் கூடங்கள் தற்போது இயங்கி-வருகின்றன. இதில் 155 கதர் அங்காடிகள்—காதி கிராப்ட்ஸ் உட்பட 667 கதர் அலகுகள், 162 கிராமத் தொழில் அலகுகள், 4 கதர் கூட்டுறவுச் சங்கங்கள், 1,260 கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 45,000 நிதி உதவி பெற்ற கைவினைஞர்கள் மூலம் கதர் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

கிராமக் கைத்தொழில் வேலையைப் பொறுத்தமட்டில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள் மொத்த எண்ணிக்கை 1976-77-லே 2 லட்சத்து 77 ஆயிரம் பேருக்குத்தான் கிராமக் கைத்தொழிலிலே வேலைவாய்ப்பு பெற்றிருந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் இன்றைக்கு 4,65,000 பேர்களுக்கு 1981-82-ல் கிராம கைத்தொழில் மூலம் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றது நடப்பாண்டிலே 1982—83லே 5 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடியவாய்ப்பை இந்த வாரியம் உருவாக்கிக் கொடுத்து வருகிறது ,என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் பேசுகிற போது கதருக்கு காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் மிகவும் முக்கியத்துவம் கொடுத்திருந்தது, அதை ஊக்குவிக்கும் வகையிலே இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் கவனத்திற்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். 76-77 லே ஒட்டுமொத்தமாக கதர் உற்பத்தி 3,81,000-லே மட்டும் தான் இருந்து வந்தது ஆனால் இறைக்கு 1981—82லே 8 கோடி ரூபாய்க்கு அது உயர்ந்திருக்கின்றது என்று நான் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப் பட்டிருக்கிறேன். நடப்பாண்டிலே அது 9 கோடி ரூபாய்க்கு போவதற்கான வாய்ப்பிருக்கின்றது என்பதையும் நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்,

அதோடு மட்டுமல்லாமல், கைத்தொழில் சம்பந்தமாக 5 லட்சம் பேர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்கள ஒட்டு மொத்தமாக் 1976—77-லே 15 கோடி மட்டும்தான் உற்பத்தியாக இருந்தது, கிராமகைத்தொழிலிலே. ஆனால் 1981-82லே அது 37 கோடியாக இருந்தது நடப்பாண்டிலே 46 கோடி ரூபாய்க்கு உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கின்றது. அதன் வாயிலாக இந்த நடப்பாண்டில் 49 கோடி ரூபாய்க்கு விற்பனை இருக்கும் என்று கதர் கிராம கைத்தொழிலிலே குறி நிர்ணயித்து இருக்கிறோம் என்று எண்ணுகிறபோது கிராம-கைத்தொழில் வாயிலாக மக்களுக்கு வேலைவாய்ப்பும் கொடுக்கப்பட்டு வருகிறது. தரமான உற்பத்திகளும் மக்களுக்குக் கிடைக்கும் சூழ்நிலையை பெற்றிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப் பட்டிருக்கிறேன், அதோடு தனித்தனியாகப் பார்ப்போமானால் எண்ணைத் தொழிலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டபோது படித்த பட்டதாரிகளுக்கு இது வெகுவாகப் பலன் தருகிறது என்றாலும் சரியான முறையில் இந்தத் தொழிலை பார்ப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பில்லை என்று திரு. திருவேங்கடம் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் பணம் என்ன நோக்கத்திற்காக கொடுத்தோமோ அதை செய்யவில்லை என்று சொன்னார்கள், ஆனால் எனக்கு





கிடைத்திருக்கின்ற தகவல் படி இன்றைக்குப் படித்த பட்டதாரிகள் கிராமங்களிலே இருப்பவர்களுக்கு கொடுப்பதன் வாயிலாக தினமும் அவர்களுக்கு நிகர லாபம் 50 ரூபாய்க்கு, கிடைக்கும் அளவிலே அந்தத் தொழிலை செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை நான் நேரிலேயும் பார்த்தேன். கிடைத்த தகவலிலும் இருக்கின்றது. ஆயிரத்திலே ஒருவர், இப்படிப்பட்ட தவறுகளைக் செய்யச் கூடிய மனம் படைத்தவர் என்றால் தவறான வழியிலே இந்த பணத்தைப் பயன்படுத்தி இருக்கிறாரே தவிர அது நல்லமுறையிலே பயன்பட்டு வருகிறது. இதன் வாயிலாக பலன் பெற்றவர்கள் இதுவரையில் 2,678 பேர்கள். அவர்கள் ஒவ்வொரு நபருக்கும் கொடுக்கப்பட்ட கடன் 15,500 ரூபாய் அதாவது அவர்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுத்து. மின்விசைச் செக்கு கொடுத்து, மூலதனக் கடனும் கொடுக்கும் அளவுக்கு இந்தக் கதர் வாரியம் நல்லதொரு பணியைச் செய்து வருகிறது. என்ற அடிப்படையில் இதற்குத் தேவைகள் இன்னும் படித்த பட்டதாரிகள் கிராமங்களுக்கு இப்படிப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கிறது என்பதை அறியாத வாலிபர்களுக்காக இதை தெரிந்து கிராமங்களிலே படித்து வேலை இல்லாமல் இருக்கும் அன்பர்களுக்காக இன்னும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இதை அவர்கள கவே முன்னுக்கு வந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக நடப்பாண்டிலே 500 மின்விசைச் செக்குகள் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு சோப்பைப் பொறுத்தவரையில், கதர்வாரியம் இன்றைக்கு மாநிலத்திலே தனியார்கள் தயாரிக்கும் சோப்பை விட தரமான சோப்புகளை இன்றைக்கு தயாரித்துக் கொண்டு வருகின்ற காரணத்தினாலே, நம்பிக்கையுடனும் நாணயத்துடனும் மக்கள் வரவேற்கின்ற காரணத்தினாலே இவர்கள் உற்பத்தியும் பெருகி வருகின்றது. விற்பனையும் இன்றைக்கு பெருகி வருகிறது, என்பதையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த அளவிலே 1976-77லே வெறும் 65 இலட்சம் மட்டுமே தயாரிக்கப்பட்ட இந்த சோப்புகள் இன்றைக்கு 80-81லே 131 லட்சமாக உயர்ந்து. நடப்பாண்டிலே 164 லட்சமாக அது அமைந்திருக்கிறது. நடப்பாணடிலே 82—83லே 2 கோடி ரூபாய் சோப்பு மட்டுமே தயாரிக்கப்படவிருக்கின்றது. என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

(இரவு 8.20)

அந்த அளவிலே 1976-77-லே வெறும் 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சோப்புகள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்த இந்த வாரியத்தில் இன்றைக்கு 1980-81-லே 131 இலட்சத்திற்கு உயர்த்தி, நடப்பாண்டிலே 164 இலட்சத்திற்கு இது உயர்ந்து இருக்கிறது. நடப்பாண்டில் 1982-83-லே 2 கோடி ரூபாய்க்கு சோப்பு மட்டும் தயாரிக்கப்பட இருக்கிறது என்பதை நான்

உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஆகவே, வாரியம் நம்பிக்கையோடும். நாணயத்தோடும் தயாரிப்புகளை உயர்த்திக் கொண்டு வருகின்ற காரணத்தினாலே மக்களுடைய நன் மதிப்புகளை பெறக்கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்த வாரியம் கதர் கிராமத்தொழில் கிராம மக்களுக்கு பெரிதும் உறுதுணையாக உற்ற நண்பனாக தோழனாக பணியாற்றி வருகின்ற காரணத்தினாலே இன்றைக்கு வரவேற்பு கொடுத்து. இன்றைக்கு நாட்டுமக்களுக்கு சேவகம் செய்யக்கூடிய அளவிற்கு, பணி செய்யக்கூடிய அளவிற்கு இந்த வாரியம் பணியாற்றி வருகின்ற காரணத்தினாலே இன்றைக்கு பல இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்துகொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். நடப்பாண்டிலே கைவினைஞர்களுக்கு, கைத்திறன் படைத்த கைவினைஞர்களுக்கு, உதவும் வகையிலே 7 கோடி ரூபாய் திட்டத்திலே 18 ஆயிரம் பேர்களுக்கு கைவினைஞர்களுக்கு உதவுவதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த கிராம கைத்தொழில் வாரியத்தின் வாயிலாக உங்கள் கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமான் அவர்கள் ஆதி திராவிட மக்களுக்காகவும், அரிஜன மக்களுக்காகவும் எந்த சப்ஜெக்டைத் தொட்டாலும் எங்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்பார்கள். கதர் வாரியத்தைப் பொறுத்த மட்டிலே இங்கே கிராம நூற்பு நிலையங்கள், ஆர்ட்டிசான் இல்லம் 320 இயங்கி வருகின்றது என்று நான் சொன்னேன். இந்த ஆண்டு 150 புதிய நூற்பு நிலையங்கள், உருவாக்குவதாக நான் ஏற்கனவே கேள்வி பதில் நேரத்திலே சொல்லியிருக்கிறேன். அதிலே 20 நூற்பு நிலையங்கள் ஆதிதிராவிட பெண்களுக்கு, 49 இலட்சம் ரூபாயிலே அந்த நிலையங்கள் ஒவ்வொரு நூற்பு நிலையத்திலேயும் 30 ஆதிதிராவிட பெண்களுக்கு என்று 20 இடங்களில், கிராமங்களிலே நியமனம் செய்து அதற்கான 49 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட் கதர் நெசவாளர்கள் இருக்கிறார்கள். இதிலே அவர்களுக்கு உதவும் வாயிலாகத்தான் குறிப்பாக கதர் நெசவு செய்பவர்களுக்கு ஆதி திராவிட மக்கள் முன்னுக்கு வராத காரணத்தினாலே அவர்களை முன்னுக்கு கொண்டுவரவேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு உதவும் வாயிலாக இன்றைக்கு 8 நெசவுத்-தொழில் இயல்கூடங்கள் ஒவ்வொரு நெசவுத்தொழில் இயல் கூடங்களிலும் 50 மில்ஸ், கதர் தறிகள் உருவாக்கிக் கொடுத்து அப்படி ஒவ்வொரு கதர் நெசவு தொழில் இயல் கூடங்களிலும் 50 பேருக்கு 8 நெசவுக்கூடங்கள் உருவாக்குவதற்கு அதுவும் ஆதி திராவிட மக்களுக்காக உருவாக்கிக் [illegible]



இலட்சம் ரூபாய் செலவிலே இது நிறுவப்படும். அதன் வாயிலாக, நூற்பு நிலையத்தின் வாயிலாக 600 பெண்களுக்கும், ஆதி திராவிட பெண்களுக்கும், 400 ஆதி திராவிட மக்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கிறது. ஆகவே, ஒட்டுமொத்தமாக ஆயிரம் ஆதி திராவிட மக்களுக்கு இப்போது கதர் வாரியம் உதவி செய்கிறது என்பதை கேட்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சந்தோஷப் படுவார்கள் என்று கருதுகிறேன்.

அதோடு விட்டுவிடாமல், அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே இருக்கின்ற ஒதுக்கப்பட்ட ஆதி திராவிட மக்கள் சாலை ஓரங்களில் வேகாத வெய்யிலிலே வெந்து தவித்து புதுரகத் தோலினால் நல்ல உற்பத்தி செய்து கொடுத்தாலும் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதற்கு வழியில்லை, அவர்களை ஒதுக்குகிறார்கள், இன்னமும் அவர்களை பழைய பெயரைச் சொல்லி அவர்களை, தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும் சூழ் நிலையை உருவாக்குகிறார்கள் என்ற எண்ணத்தை தமிழ் நாட்டிலே இருக்கின்ற காரணத்தினாலே, அந்தப் பணியை செய்பவர்கள், தோலின் வாயிலாக செருப்பு தைப்பவர்கள், மற்ற காலணிகளைத் தயாரிப்பவர்களைப் பார்க்கும் நாம், பட்டணங்களிலே, சாலை ஓரங்களிலே, நிழல்கூட இல்லாத இடங்களில் வேகாத வெய்யிலிலே, வெந்து கொண்டு, நாம் காலை நீட்டியவுடன், அதைப் பழுது பார்த்து கொடுப்பதும், புது அணிகள் தயாரித்துக் கொடுக்கின்ற அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஏறக்குறைய 1000 பேர்களுக்கு பங்குகள் கட்டி அவர்களுக்கான கடைகள் கட்டிக் கொடுத்து அங்கே அவர்கள் ஒவ்வொரு பங்குக்கும் 5,000 ரூபாய் செலவிலே 1000 பங்குகள் கட்டிக்கொடுத்து, அவர்களுக்கு கடனும் கொடுத்து, அதாவது 500 ரூபாய் கடனும் கொடுத்து இயந்திரங்கள் வாங்கி கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, இதிலே 500 ரூபாய் மூலதனம் கடனாக அளிக்கப் படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே கதர் கிராம கைத்தொழில் வாயிலாக ஒரு அமைதியான புரட்சி தமிழ்நாட்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டு வருகிறது என்பதையும் கிராம கைத்தொழில்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கிற காரணத்தாலே சுருங்க, சுருங்க ஆனால் உறுதியாக இந்த வாரியம் செயல்பட்டு தமிழ்நாடு ஒரு குட்டி ஜப்பானாக மாறுவதற்கான சூழ்நிலைகளை இந்த வாரியம் உருவாக்கிக்கொண்டு வருகிறது என்பதையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப் பட்டிருக்கிறேன்.

மற்றபடி பொதுப்பணித் துறையைப் பொறுத்த வரையிலே இங்கே முதன் முதலில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அருமை நண்பர் முத்துவேல் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தாலே எங்களுக்கு சரியான முறையில் இந்த பொதுப்பணித் துறை இயங்கவில்லை, பட்சபாதமாக இயங்குகிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். பொதுப்பணித் துறை என்று சொல்லுகிறபோது இது பொதுவாக எல்லோருக்கும் பொதுவாக இருந்து பணியாற்றுகிற பணியாளனாக இருக்கிற துறையாக இருக்கிறது என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் கல்வி அரங்கங்கள் கட்டுவதற்கு பணத்தைக் கொடுத்தால் கட்டிக்கொடுக்கிறோம். அதைப்போல மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் பணம் கொடுத்தால் அவர்கள் கொடுக்கிற பணத்திற்கு மருத்துவ மனைகளை கட்டிக்கொடுக்கிறோம், இப்படி பலருக்கும் பொதுவாக இருந்து, நல்லபிள்ளையாக இருந்து, பணியாற்றி வருகிற காரணத்தால்தான் இந்தத் துறைக்கு பொதுப்பணித் துறை என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்தப் பெயருக்கு ஏற்ப இருந்து செயல்படுகிறோமே தவிர ஒருபக்கமாக இருந்து பணியாற்றுகிற துறை அல்ல இந்த பொதுப்பணித் துறை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். அவர்கள் விரும்புகின்ற இடங்களிலே கல்வி நிலையங்களுக்கு கட்டிடம் கட்டிக்கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் ஒட்டுமொத்தமாக ஒரு ஆண்டுக்கு இவ்வளவு என்று பணம் ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். அந்தப் பணத்தை வைத்து கல்வி இயக்குநர் அவர்கள் இன்னின்ன ஊர்களிலே இன்னின்ன பள்ளிக் கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கான பணத்தையும் ஒதுக்கி, இடத்தையும் ஒதுக்கிக் கொடுத்தால் அந்தந்த இடங்களிலே அவர்கள் சொன்னமாதிரி கட்டிக் கொடுக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வானூர் தொகுதியில் தாலுக்கா ஆபீஸ் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ரெவின்யூ சம்பந்தமான கட்டிடங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்கள் டிபாசிட் செய்கிற பணத்தை வைத்து நாங்கள் கட்டி வருகிறோம். அந்தவகையிலே அவர்களுடைய தொகுதியிலும் கட்டுகிற வாய்ப்பு வருகிறபோது அதற்கான பணம் ஒதுக்கப்படும்போது தாலுகா ஆபீசும் மற்ற கட்டிடங்களும் கட்டிக்கொடுக்கப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொல்லியதைச் சுட்டிக்காட்டி பி.டபிள்யூ.டி என்றால் பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மென்ட் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை தமிழ்நாட்டிலே, தமிழக மக்கள் மத்தியிலே உருவாக்கியிருக்கிற காரணத்தால், அது எந்தக் காலத்தில் உருவாக்கப்பட்டதோ யார் காலத்தில் உருவாக்கப்பட்டதோ தெரியவில்லை; இந்த பொதுப்பணித்துறை வேஸ்ட் என்றும், காலம் கடந்து கட்டிடம் கட்டுபவர்கள் என்றும், கட்டிடம் கட்டப்பட்ட சிறிது காலத்திலே விழுந்துவிடும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னதைப்போல—ஒரு எண்ணத்தை உருவாக்கிவிட்டார்கள். கான்ட்ராக்டர்கள், ஒப்பந்தக்காரர்கள் சரியான முறையில் வராத காரணத்தால் நீண்டகாலமாக கட்டுமானப் பணிகளைக் கட்டுகிறார்கள் என்ற எண்ணம் இருக்கிற காரணத்தால் இதை மாற்றியமைக்க வேண்டும்; நல்லமுறையில் கட்ட வேண்டும்; பல நூறு ஆண்டுக்காலமாக பெயர் சொல்ல வேண்டும் என்ற முறையில் நல்லமுறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதில் இருக்கிற குறைபாடுகள் தீர்க்கப்பட்டு, இன்றைக்கு பொதுப்பணித் துறை சொல்லி, இந்த வருடம் இந்த மாதம் கட்டி முடிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்குள் கட்டி முடிக்கக்கூடிய வாய்ப்பை இன்றைக்கு இந்த அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் காலதாமதத்தைக் குறைப்பதற்காக இந்த அரசு பல புதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிற காரணத்தால் இனிமேல் காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படும். ஒப்பந்தம் ஏற்படுவதிலே காலதாமதம்; ஒப்பந்தக்காரர்கள் கட்டி முடிப்பதிலே காலதாமதம்—இப்படி இனிமேல் காலதாமதம் ஏற்படாமல் இருக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதில் ஒன்றிரண்டை சுட்டிக்காட்டினால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு திருப்திகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

முன்பெல்லாம் ஒப்பந்ததாரர்களிடமிருந்து, அவர்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுகின்ற வகையில், இணைப்புத் தொகை கூடுதல் வைப்புத் தொகை, மற்றும் பிடிப்புத் தொகை ஆகியவற்றைப் பெறுவதில் முன்பு இருந்தது 2½%, 2½ மற்றும் 5% முறையே இருந்து வந்தது. இதன் காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்குள் போட்டி ஏற்படாமலும் ஒரு ஒப்பந்தக்காரர் மட்டும் முன்னுக்கு வந்து நெகோஷியேட் செய்யக்கூடிய சூழ்நிலையும் இருந்தது. ஒப்பந்தக்காரர்களுக்குள் போட்டி ஏற்பட்டு, பலர் முன்னுக்கு வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற வகையில் இப்போது குறுகிய காலத்தில் டெண்டர் விடப்பட்டு, கட்டிட வேலை சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த சதவீதத்தை ஒரு சதவீதம் இணைப்புத் தொகை

ஒரு சதவீதம் கூடுதல் வைப்புத் தொகை, இரண்டரை சதவீதம் பிடிப்புத் தொகை என்று வைத்திருக்கிறோம். அரசு ஆணை எண். 581-லே. 13-6-1980-ல் இது சம்பந்தமாக உத்தரவிடப்பட்டு, அன்றிலிருந்து நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படி குறைத்து வைத்திருந்தாலும், வைப்புத் தொகையை ஒரே தடவையில் கட்டக்கூடிய சூழ்நிலை இருந்ததால் ஒப்பந்தக்காரர்கள் நழுவிவிடக்கூடிய ஒரு நிலைமை இருந்தது. ஆகையால் அதையும் மாற்றி சுலபமாக மூன்று தவணைகளில் கட்டலாம் என்ற சலுகையைக் கொடுத்ததால் இன்றைக்கு ஒப்பந்ததாரர்கள் பலர் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதில் காலதாமதம் ஏற்படும் என்ற சூழ்நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது. அப்படியே காலம் பிடிக்கும் சூழ்நிலை இருக்குமானால் அதையும் நீக்குவதற்கு பொறியியல் படித்த பட்டதாரிகள் அமைத்து இருக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு, முன்னுக்கு வராத வேலைகளை உடனடியாக நியமனம் முறையில் கொடுத்தும், அவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுத்தும், அந்தக் கட்டிடங்களை, அந்தப் பணிகளை முடிக்கும் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அப்படியும் மீறி ஏதாவது காலதாமதம் ஏற்பட்டால், அந்தப் பணிகளை அரசாங்கத் துறையில் இருக்கும் அதிகாரிகளைக் கொண்டே அந்தப் பணிகளை சிற்சில இடங்களில் செய்ய வழிமுறைகள் பரிசீலிக்கப்பட்டு, வருகிறது. நடைமுறையில் பாளையங்கோட்டையில்கட்டப்பட்டு வருகிற ஒரு கட்டிடம் அரசுத் துறையில் இருக்கும் அதிகாரிகள் மூலமாக அந்தப் பணியை எடுத்து முடிக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பணிகள் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற முறையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(இரவு 8.30)

மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் என்.எம்.ஆர். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது நியாயமான கோரிக்கையாக இருப்பதால் இந்த அரசு இதுவரையில் 756 என்.எம்.ஆர். களை நிரந்தரம் செய்து இருக்கிறது. இன்னும் 222 பேர்களை நிரந்தரம் செய்ய கொள்கை அளவில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் நான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

10 ஆண்டுகாலம் பணியாற்றியவர்களை மட்டும் நிரந்தரமாக்கிக் கொண்டு வந்த நிலைமை மாற்றி 5 ஆண்டுகள் பணியாற்றியவர்களை நிரந்தரமாக்குவது என்று இப்போது இந்த அரசு பரிசீலித்து வருகிறது. என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



பொதுப்பணித்துறை கட்டிடங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் ஊரிலே கட்டிடங்கள் கட்டவில்லை என்றும், ஓய்வு இல்லங்கள் கட்டித்தரவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் குழித்துறையில் ஓய்வு இல்லங்கள் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இப்படிப் பல கோரிக்கைகள் பல இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டவேண்டும் என்று பலர் கேட்டு இருக்கிறார்கள். எங்கெங்கு அதற்கான வாய்ப்பு இருக்கிறதோ, அவற்றை ஆய்வு செய்து, அதற்கான முடிவை எடுக்க இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் அனைத்தும் தமிழகத்தில் உள்ள தேவைகளை மனதில் கொண்டு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு மனதில் கொண்டு அவற்றை எங்கெங்கு செய்து கொடுக்க வாய்ப்புகள் இருக்கின்றதோ அந்தந்த இடங்களில் இந்த அரசு செய்து கொடுக்கும் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(எ) கோரிக்கை எண் 27—கதர்

திருவாளர்கள் த. வேணுகோபால், இல. பலராமன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,76,07,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஏ) கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள் கட்டடங்கள்.

திருவாளர்கள் த. வேணுகோபால், டி. மணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள் கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,71,47,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 38.—பொதுப்பணிகள்— பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,22,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஓ) கோரிக்கை எண்: 51—பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

திரு. இல. பலராமன் அவர்களின் வெட்டுப் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக்கோரிக்கை எண். 51—பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 37,20,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்க பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (19-3-1982) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.



பின்னர் பேரவை இரவு 8-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(10) பேரவைமுன்வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

—எதுவுமில்லை—

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

112. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976—77, 1977—78-ம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை).

113. கோரிக்கை எண். 37, 38 மற்றும் 51—பொதுப் பணித்துறை கட்டிடங்கள், பொதுப்பணிகள், பணியாளர்கள் மற்றும் கருவிகள், இயந்திரத் தளவாடங்கள், பொதுப் பணிகள்-கட்டிடங்கள் மீதான மூலதனக்கணக்கு ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1982—83 (தமிழ், ஆங்கிலம்).

114. 1981—82 ஆம் ஆண்டு பொதுப்பணித் துறை (கட்டிடப் பிரிவு)-யின் பணிகள் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

115. 1982—83 ஆம் ஆண்டின் பாசனம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).

116. 1982—83 ஆம் ஆண்டின் பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

117. 1981—82 ஆம் ஆண்டு நீர்ப்பாசனம் மீதான மானியக்கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது சட்டப்பேரவை உறுப்பினர்கள் அளித்த ஆலோசனைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

118. கோரிக்கை எண். 27—தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் கொள்கையும், திட்டங்களும் பற்றிய குறிப்பு, 1982—83 (தமிழ், ஆங்கிலம்).

119. கோரிக்கை எண். 1, 11, 41 மற்றும் 46-நில வருவாய், மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் நிகழுங் கால நிவாரணப்பணி, இழப்பீட்டுத் தொகை மற்றும் ஒப்படை ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1982—83 (தமிழ், ஆங்கிலம்).

பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

120. வருவாய்த் துறையின் 1981–82 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு—I.

[306-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 465க்கான விடையைக் காண்க]

### விவர அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடி தாலுகா அரண்மனை சிறுவயல் கிராமத்தில் 23 ஏக்கர் வன இலாகா நிலம் திரு. எம். சண்முகம் என்பவருக்கு நூற்பாலை நிறுவ 15 ஆண்டுகளுக்கு 7–2–80-ல் குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகை ஆண்டொன்றிற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1000/– என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா, அலடியூர் கிராமத்தில் 10 ஏக்கர் வன இலாகா நிலம் மதுரை கோட்ஸ் கம்பெனிக்கு 1980–ல் நூற்பாலை விரிவுபடுத்த ரூ. 16,464–க்கு விற்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் வீரப்புலி ஒதுக்கக்காட்டில் ஏ. எம். எம். அருணாசலம் டிரஸ்டிற்கு பள்ளிக்கட்டிடம் கட்டவும், விளையாட்டு மைதானம் கட்டவும் 2 ஹெக்டேர் நிலம் குத்தகைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பிற்பட்டோர் உள்ள வனநிலங்களில் இந்த ஆலைகள் அமைவதால். உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுவதாலும் நூற்பாலையை விரிவுபடுத்துவதால் 700 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுவதாலும் பள்ளிக் கட்டிடத்திற்காகவும் விளையாட்டு மைதானத்திற்காகவும் மேற்கூறிய வனநிலங்கள் நிறுவனங்களுக்குக் குத்தகையிலோ விற்பனையாகவோ வழங்கப்பட்டன.



## இணைப்பு 2.

[338–ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண். 1—நிலவரித் துறை

கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம்

கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் —கொள்கை விளக்கக் குறிப்பு

### 1. முன்னுரை.

மாநிலத்தின் வருவாய் நிர்வாகத்தில் நிலவரி விதிப்பு, நிலவரி வசூல், வேளாண்மை வருமான வரி, நகர்ப்புற நிலவரி, ஏனைய பல்வேறு வரிகள், அரசுக்குச் சேர வேண்டிய கடன்கள் ஆகியவையும் அடிப்படை நிலவரி பதிவேடுகளை வைத்து வருவதும் அடங்கும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், வருவாய் கோட்ட அளவில் கோட்டாட்சியரும், வட்ட அளவில் தாசில்தாரும், பிர்க்கா அளவில் வருவாய்த்துறை ஆய்வாளரும் இப்பணிக்குப் பொறுப்பேற்கின்றனர். வருவாய்க் கிராமங்கள் இந்த அமைப்பின் அடித்தளமாக விளங்குகின்றன. பல ஆண்டுகளாக, வருவாய் நிர்வாகம் முற்றிலும் வருவாய்ப் பணிகளையே மேற்கொண்டிருந்தது. பல ஆண்டுகளாக வருவாய் நிர்வாகம் வருவாய் தொடர்பான பணிகளை மட்டுமே கவனித்து வந்தது. ஒழுங்கு முறைப்படுத்தும் பணிகளையும் கணிசமான அளவிற்கு கவனித்து வந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், இந்த வருவாய் அமைப்பு கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பல்வேறு பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. தொன்று தொட்டு வருகின்ற இம்முறை வெற்றிகரமாக நடைபெறுகிறது. சாதாரண காலங்களில் மட்டுமின்றி, புயல், வெள்ளம், தீ விபத்துக்கள் முதலிய இயற்கைச் சீற்றங்களின் போதும் இம்முறை செவ்வனே நடைபெற்றது. கிராம மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு; பயிரிடுவதற்கு நில ஒப்படை செய்தல், வீட்டு மனைகள் வழங்குதல், பட்டா மாற்றம் செய்தல், பல்வேறு காரியங்களுக்காகச் சான்றிதழ்கள் வழங்குதல் முதலிய முக்கிய பணிகளை வருவாய்த் துறை கவனிக்கிறது. சென்ற நிதியாண்டில் பல்வேறு துறைகளில் எய்திய சாதனைகளும் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளவிருக்கும் செயல் திட்டங்கள் குறித்த விவரமும் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2. கிராம நிர்வாகம்.

2. வருவாய் நிருவாகத்திற்கு கிராமமே அடிப்படை அமைப்பாகும். பகுதி நேர கிராம அதிகாரிகள் முறை மிகவும் பழமையானது. வளர்ச்சிப் பணிகளுக்கும், சமூக நலப் பணிகளுக்கும் கிராமங்கள் முன்னோடியாக இருப்பதால் கிராம நிருவாக முறையை தற்காலத் தேவைகளுக்கும், நிருவாக தேவைக்கும் ஏற்றவாறு வலுப்படுத்த மேற்கொள்ளும் முயற்சியின் ஓர் அங்கமாக மேற்படி முறையை மாற்றியமைக்க அரசு விரும்பியது. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அவசரச் சட்டம் (10/80), பின்னர் இதற்கும் பதிலாக 1981 ஆம் ஆண்டு 3 ஆம் சட்டம் கொண்டுவரப்பட்டது. பகுதிநேர கிராம அதிகாரி பதவிகளை 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாள் முதல் நீக்கியது.

3. பகுதிநேர கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் கிராமங்களுக்கு முழு நேர கிராம நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். கிராம நிர்வாக அதிகாரிகள் பதவிகளுக்கு விண்ணப்பதாரர்களைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு கழகத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது.

4. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் சில கிராமங்களிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்திலும் முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து மாற்றப்பட்ட முழுநேர கிராம அதிகாரிகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். இதர மாவட்டங்களில் பணியாற்ற 11,747 கிராம நிர்வாக அதிகாரிகள் பதவிகளை உருவாக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

5. உச்ச நீதிமன்றம் தடையாணை பிறப்பித்துள்ளதால் நிலைமையைச் சமாளிக்க கிராம நிர்வாக அதிகாரிகள் இடத்தில் பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களையும் வேறு சில வருவாய் ஆய்வாளர்களையும் அரசு அமர்த்தியுள்ளது. இது ஒரு இடைக்கால ஏற்பாடே. இப்போது இருக்கிற பிர்க்கா வருவாய் ஆய்வாளர்கள் கிராம அளவில் எல்லா வகைப் பணிகளையும் கவனிக்க இயலாததால் நில அளவைப் பயிற்சி பெற்றுள்ள வருவாய்ப் பணியாளர்களையும் நிலச்சீர்திருத்தங்கள், நகர்ப்புற நிலவரி, நகர்ப்புற நில உச்சவரம்பு வேளாண்மை வருமான வரி தொடர்பாக பல்வேறு துறைகளில் பணியாற்றும் நில அளவைப் பணியாளர்களும் ஒன்று சேர்ந்து பயிராய்வுப் பணியை நிறைவேற்றிட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டது. அதன்படி அவர்கள் 1391 ஆம் விளைச்சல் ஆண்டில் முதல் போகப் பயிருக்கான பயிராய்வுப் பணியை முடித்துள்ளனர். இரண்டாம் போகப் பயிருக்கான பயிராய்வுப் பணி விரைவில் முடிவுறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.



6. இந்த ஏற்பாட்டின் ஒரு பகுதியாக, சென்னை மாவட்டம் தவிர மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கு உதவ 2,191 பிரிவு எழுத்தர்கள் பதவிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் 1390 ஆம் விளைச்சல் ஆண்டிற்கான ஜமாபந்தி எல்லா மாவட்டங்களிலும் நிறைவு பெற்றுள்ளது.

7. வேளாண்மை தொடர்பான புள்ளிவிவரங்களை முழுமையான கணக்கெடுப்பு அடிப்படையில் அட்டவணையிட்டு வரையறுக்கப்பட்ட அட்டவணைகளைப் பூர்த்தி செய்யும் பணியை பயிராய்வுப் பணிக்காகவும் பயிராய்வு மேற்பார்வைப் பணிக்காகவும் அனுப்பப்பட்டுள்ள வருவாய் மற்றும் நில அளவைத் துறையைச் சேர்ந்த பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

8. 1980 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தையும் (10/80) அதற்குப் பதிலாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தையும் எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தொடரப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டபடி முன்னாள் பகுதிநேர கிராம அதிகாரிகளுக்கு, முன்பு கொடுத்து வந்தது போலவே தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ரிட் மனுக்கள் முடிவுறும் வரை இவ்வாறு கொடுக்கப்படும். உச்ச நீதிமன்றம் இவ்வழக்கினை விசாரித்து முடிந்து அதன் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

### கிராம நிர்வாக அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

9. நியமிக்கவிருக்கும் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு நில அளவையிலும், கிராம நிர்வாகத்திலும் படிப்படியாக பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. தங்களுடைய கடமைகளைப் பொறுத்தவரையில் நிறைவேற்றுவதற்கு போதிய தேர்ச்சியும், அனுபவமும் பெற இப்பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

10. பகுதிநேர கிராமப் பணியாளர்களான கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள், பாசனக் காவலர்கள் ஆகியோர் பணியில் வைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தனியாக விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. அவை தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கிராமப் பணியாளர்கள் பணி விதிகள் ஆகும். இவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கான வயது 60 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 3. தனி நபர் குழு.

11. மாவட்ட வருவாய் நிர்வாகத்தை சீரமைக்க வேண்டுமென்ற கிராம மக்களின் நெடுநாள் கனவு நனவாக மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் திறனை உயர்த்தி நிர்வாகத்தை சீரமைக்கவும் பொதுமக்களின் நலன் கருதி குறைகளை விரைவில் தீர்த்து வைக்கவும் அரசு பலவகையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

திரு. எஸ். பி. அம்புரோஸ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தனிநபர் குழு 184 பரிந்துரைகளை கொடுத்துள்ளது. அவை பெரும்பாலும் தற்போதுள்ள நடைமுறைகளை எளிமைப்படுத்துவது, ஆதாயமற்ற பணியை நீக்கிவிடுவது, கோட்பாடுகளை வகுத்துக்கொண்டு பணிகளை விரைந்து முடிப்பது, வருவாய் அதிகாரிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பது, வருவாய்த் துறை அலுவலகங்களுக்குத் திடீரெனச் சென்று ஆவணங்களைச் சோதனையிடுவது, மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட வருவாய் அதிகாரிகளும் நேரடியாகச் சென்று பணிகளைப் பார்வையிடுவது, வட்ட அலுவலகங்களிலும், கோட்ட அலுவலகங்களிலும் சில பதவிகளை ஏற்படுத்துதல், வட்டாட்சியர்களுக்கு ஜீப் வழங்குதல், மாவட்ட ஆட்சியர்களும் கோட்டாட்சியர்களும் சுற்றுப் பயணத்தில் அதிக காலத்தைக் கழிப்பதைக் குறைப்பது, நிலவரி முறையில் நடைமுறை மாற்றங்கள் செய்வது, நிலத்தைக் கையகப்படுத்துதல் முறையில் நடைமுறை மாற்றங்கள் செய்வது, மாவட்ட ஆட்சியர்களுக்கும், கோட்டாட்சியர்களுக்கும், மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கும் வட்டாட்சியர்களுக்கும் மேலும் நிதி சம்பந்தமாகவும், நிர்வாக சம்பந்தமாகவும் அதிகாரங்களைப் பிரித்து கொடுப்பது ஆகியவை தொடர்பானவையாகும்.

12. அரசு இப்பரிந்துரைகளை கவனமாகப் பரிசீலித்து 97 பரிந்துரைகள் மீது ஆணை பிறப்பித்துள்ளது. ஏனைய பரிந்துரைகள் அந்தந்தத் துறைகளுடன் கலந்தாலோசித்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவை குறித்து விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

4. வருவாய்த் துறை ஆட்சி வரம்பு.

13. மக்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமானால், நிர்வாகப் பிரிவுகளில், மாவட்டங்களில், வருவாய்க் கோட்டங்களில், வட்டங்களில் ஆட்சிப் பகுதியைக் குறைக்க வேண்டும். துணை வட்டங்களை வட்டங்களாக தரம் உயர்த்த வேண்டும்.

14. 1981–82 ஆம் ஆண்டில் 6 தனித் துணை வட்டங்களும் 10 சார் துணை வட்டங்களும் வட்டங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. மாநிலத்தில் இப்போது துணை வட்டம் எதுவுமில்லை. மாநிலம் இப்போது 166 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

15. இது தவிர, திருச்சிராப்பள்ளி வட்டத்தை இரண்டாகப் பிரித்து திருவரங்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.



16. இதுபோலவே, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம் வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பினையும் பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோடு பகுதியையும் இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது. 1978-79-க்கு முன்னால் 774 பிர்க்காக்கள், 132 தாலுக்காக்கள், 48 பகுதிகள், 15 மாவட்டங்கள் இருந்தன. 1978-79-க்கு பிறகு இப்பொழுது 323 பிர்க்கா, 34 தாலுக்காக்கள், 3 வருவாய்க் கோட்டங்கள், 1 மாவட்டம் இவைகள் வருவாய்த்துறையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே தற்போது 1,097 பிர்க்காக்களும், 166 தாலுக்காக்களும், 51 பகுதிகளும், 16 மாவட்டங்களும் உள்ளன.

5. இயற்கையின் சீற்றங்கள்.

17. தீ விபத்து.— தீ விபத்து தற்செயலாகவும் நிகழ்கிறது. மக்களின் கவனக் குறைவாலும் நிகழ்கிறது. எப்படியாயினும் இதில் குடிசைவாழ் மக்கள் தான் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களது குடிசைகளும், உடைமைகளும் தீக்கிரையாகின்றன. குடிசை முழுவதுமாக எரிந்துவிட்டால் அதற்கு 200 ரூபாயும் குடிசை ஓரளவு எரிந்து போயிருக்குமாயின் 50 ரூபாயும் நிவாரணம் அளிக்கப்படுகிறது. தற்போது மாதம் 200 ரூபாய் வருமானம் உடையவர்களுக்கு இந்த நிவாரணம் அளிக்கப்படுகிறது. குடிசைகளில் வாடகைக்கு இருப்பவர்களின் குடும்பத்திற்கு துணிக்காக ரூ. 25 மானியமாக வழங்கப்படுகிறது. இது கூடுமானவரை துணிகளாகவே கொடுக்கப்பட்டு வருகிறது.

18. தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க மானியம் வழங்கப்படும் முறை வருமாறு:—

(1) குடிசையில் அதன் உரிமையாளரே வசித்து வந்து, அந்தக் குடிசை தீ விபத்தில் எரிந்து போய்விட்டால் அவருக்கு ரூ. 200 அல்லது ரூ. 50 ரொக்க மானியம் வழங்கப்படும்.

(2) அதே குடிசையில் அதன் உரிமையாளரும் வாடகைக்கு ஒருவரோ அல்லது பலரோ இருப்பின் அந்த குடிசை தீயில் எரிந்து போய்விட்டால் அதற்கு ரொக்க மானியமாக வழங்கப்படும் ரூ. 200 அல்லது ரூ. 50 அந்த உரிமையாளருக்கும், வாடகைக்கு இருப்பவர்களுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(3) அக்குடிசையில் ஒருவரோ அல்லது பலரோ வாடகைக்கு இருப்பார்களேயானால், அக்குடிசை தீயில் எரிந்து போய்விட்டால் அதற்கு வழங்கப்படும் ரூ. 200 அல்லது ரூ. 50 அங்கு வாடகைக்கு இருப்பவர்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(4) தீயிலோ, வெள்ளத்திலோ, புயலிலோ ஒரு குடிசை சேதம் அடைந்து விட்டால், அதற்குக் கொடுக்கப்படுகிற தொகையும் நிவாரணமாகக் கொடுக்கப்படுகிற ரூ. 200 அல்லது ரூ. 50-ம் அக்குடிசையில் இருந்தவர்களுக்கு மேற்சொன்னவாறு பிரித்துக் கொடுக்கப்படும்.

19. மேற்குறிப்பிட்டவாறு ரொக்கமானியம் கொடுப்பதுடன் வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்படுபவர்களுக்கு இப்போது அளிக்கப்படுகிற நிவாரண உதவியை தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசு அளித்துள்ளது. அதன்படி, தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும் (72 மணி நேரத்திற்கும் மேலாக மின்சக்தி தடங்கல் ஏற்படக் கூடுமாயின்) ஒரு லிட்டர் மண்ணெண்ணையும், வேட்டி அல்லது லுங்கியும், புடவையும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

20. தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தீயில் எரிந்து போன குடிசைகளை அகற்றிவிட்டு புதிதாகக் குடிசை கட்டிக் கொள்ள நிலமேம்பாட்டுக் கடன் உழவர் கடன் என்பதன்கீழ் ரூ. 2,000 வரை கடன் வழங்கப்படும். ஆதிதிராவிடர்களாய் இருந்தால், அவர்களுக்கு இது வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும்.

21. ஒரு குடும்பத்தில் வருமானம் பெறுபவர் தீ விபத்தில் இறந்துபோய் அதனால் அவருடைய குடும்பம் வறுமைக்குள்ளானால், இறந்துபோனவருடைய சட்டப்படிக்கான வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. தீ விபத்தில் உடைமைகளைப் பறிகொடுத்துவிட்டவர்களையும் உரிய முறையில் கருதிப் பார்த்து அவர்களுக்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

22. புயல், வெள்ளம்:—1976 ஆம் ஆண்டிலிருந்து, அடுத்தடுத்து, புயலாலும் வெள்ளத்தாலும் தமிழகத்திற்கு சொல்லொண்ணாத் துன்பம் ஏற்பட்டது. 1980-81 ஆம் ஆண்டுகளில் தான் இத்துயர் நீங்கியது.

23. அதே சமயம், இனிமேலும் புயலும் வெள்ளமும் தமிழகத்தைக் கண்ணீர் கடலில் ஆழ்த்துமானால் மக்களின் துயர் துடைக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. மாநிலத்தின் கடற்கரை நெடுக, புயலால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பாக தங்கி இருக்க 82 புகலிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியது. புயல் தாக்கும் பகுதிகளில் வாழ்பவர்களுக்குப் பாதுகாப்பான புகலிடங்கள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ் மேற்சொன்னவாறு அனுமதி வழங்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்டவர்கள் வீடிழந்து, வானமே கூரையாக எண்ணி வாழ முற்படும்போது அவர்கள் பாதுகாப்பாகத் தங்கியிருக்க 25 புகலிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையும், தமிழக அரசும் இதற்கு ஆகும் செலவை சமமாக ஏற்றுக் கொண்டுள்ளன. புயல் நிவாரண புகலிடங்கள் 5 தென் ஆற்காடு மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவை மகாராட்டிர புயல் நிவாரண மக்கள் குழு ஏற்றுக் கொண்டது. புயல் நிவாரண புகலிடங்கள் இரண்டு கனடா அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் 'யூனிசெப்' நிறுவனத்தின் மூலமாக வழங்கிய நிதியுதவியைக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவை மேற்படி நிறுவனமும் தமிழக அரசும் சமமாக ஏற்றுக் கொண்டது. கடற்கரையோரப் பகுதிகளில் புயல் நிவாரணப்புகலிடங்கள் 50 கட்ட ஐரோப்பிய பொருளாதார அமைப்பு ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளது. மேற்கொண்டு ஆகும் செலவை தமிழக அரசு ஏற்கிறது. இந்த 50 புகலிடங்களில் 23 இடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 27 இடங்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் நாளுக்குள் நிறைவுபெற்றுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 20 புகலிடங்கள் கட்ட ஐரோப்பிய பொருளாதார அமைப்பு மேற்கொண்டு 60 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.



6. வறட்சி நிவாரணம்.

24. மாநிலத்தில் 1980-81 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்ட காரணத்தால் சென்னை, நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்கள் தவிர 13 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன. கிராமப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடாயிற்று. பயிர்கள் நீரின்றி சாவியாயின. உழவுத் தொழிலாளர்கள் வேலையின்றி வாடினர். இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்டு தொல்லைக்கு ஆளான மக்களின் துயர்துடைக்க 1980 நவம்பர் மாதத்திலிருந்து எல்லா நிவாரணப் பணிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டியிருந்தது.

25. வறட்சி நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தும் விதம் பற்றி அரசுச் செயலாளர்களும் துறைத் தலைவர்களும் ஒன்று கூடி விவாதித்து முடிவு செய்தனர். இக்கூட்டம் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் நாள் அன்று நடைபெற்றது. இதற்கு தலைமைச்செயலாளர் தலைமை தாங்கினார். ஏற்கெனவே உள்ள குடிநீர் வாயில்களை பராமரித்தல், கிணறுகளில் விசையேற்றம் நிறுவுதல், இருக்கின்ற துளையிடு கருவிகளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல், குடிநீர் பம்புகள் பராமரிக்கக் கூடுதலாக பணியாளர்களை நியமித்தல். வேலையின்றி வாடும் உழவர்களுக்கு வேலை அளிக்கும் பணிகளை நிறைவேற்றுதல், பொது விநியோக முறையின்கீழ் உணவு தானியங்களை வழங்குதல் ஆகியவை குறித்து கவனம் செலுத்தப்பட்டது. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 ஆம் நாளிலிருந்து 22 ஆம் நாள் வரை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தஞ்சாவூர் புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்குச் சென்று அங்கு

நிறைவேறிவரும் பல்வேறு பணிகளைப் பார்வையிட்டார். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளவேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் அன்று விரிவாக விவாதித்தார்.

26. துளைக் கிணறுகள் அமைக்கும் பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், வேளாண்மை பொறியியல் துறையும பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நிலத்தடி நீர்ப் பிரிவும் மேற்கொண்டன. துளையீடு கருவிகள், ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்தும் பெறப்பட்டன. அவற்றுடன் நம் மாநிலத்திலிருக்கும் துளையீடு கருவிகளும் இப்பணிக்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 7,249 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நிலத்தடி நீர்ப்பிரிவு சோதனை அடிப்படையில் ஏற்கெனவே தோண்டியுள்ள 698 துளைக் கிணறுகள் குடிநீர் காரியத்திற்காக ஒப்படைக்கப்பட்டன. 19,461 கிணறுகள் ஆழப் படுத்தப்பட்டன. பொதுப்பணித் துறை, ஏரிப் படுகைகளில் அல்லது ஏரிகளுக்கருகாமையில் திறந்தவெளி கிணறுகள் தோண்டியுள்ளன. நீர்க்கிடைக்காத பகுதிகளுக்கு லாரிகள், டிராக்டர்கள் மூலமாகவும் நீர்க்கொண்டு சென்று வழங்கப்பட்டது. இவ்வாறு நீர் கொண்டு செல்ல தேவைப்படும் உருக்குத் தொட்டிகளைத் தயாரித்து வாங்கி தேவையுள்ள பகுதிகளுக்கு வழங்கப்பட்டன. நகராட்சிகள். பேரூராட்சிகளில் நீர் வழங்கு பணிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும், தொடர்ந்து மின்சக்தி வழங்கும் வகையில் நீர் வழங்கும் பணிகளுக்கு மின் சக்தி வழங்க தனியாக 50,00,000 ரூபாய் செலவில் மின்கம்பித் தொடர்புகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை நகரில் நீர் வழங்கும் ஏற்பாட்டினை சீரமைக்க ரூ. 87 இலட்சம் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சென்னை நகர் உட்பட வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர் வழங்க அரசு மொத்தம் ரூ. 1,959 இலட்சம் செலவு அனுமதித்துள்ளது.

27. வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகளைப் பொறுத்த வரையில் 50 ஏக்கருக்கு மேலாக உள்ள ஆயக்கட்டு உள்ள ஏரிகளைச் செப்பனிட்டு சீரமைக்கும் பணியை பொதுப் பணி துறை நிறைவேற்றி உள்ளது. 50 ஏக்கருக்கும் குறைவாக உள்ள ஆயக்கட்டிற்குப் பாசனம் அளிக்கும் சிறிய ஏரிகளைச் சீரமைக்கும் பணியையும் புதிய சாலைகள் அமைத்தல், கிராமச் சாலைகளை சீரமைத்தல் பணிகளையும் நெடுஞ்சாலை நிவாரணப் பணிகள் துறை நிறைவேற்றியது. ஏனைய சாலைகளை செப்பனிடும் பணிகளையும், சீரமைப்புப் பணிகளையும் நெடுஞ்சாலை-கிராம பணிகள் துறை நிறைவேற்றியுள்ளது. குளங்கள், ஊருணிகள் ஆகியவற்றைச் செப்பனிட்டு சீரமைக்கும் பணியையும் நீர் நெடுஞ்சாலை நிவாரணப் பணிகள் துறை நிறைவேற்றியுள்ள து





சேகரிப்புக் குட்டைகள் அமைத்தல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறையும், பொது பணித் துறையும் (நீர்ப்பாசனம்) நிறைவேற்றியுள்ளன. காடு வளர்ப்புத் திட்டங்களை வனத்துறை நிறைவேற்றியுள்ளது. மேற்குறிப்பிட்டவாறு தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பல பணிகளுக்கு மொத்தம் ரூ. 2,931 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

28. நீர் வழங்கு பணிகளுக்கும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளுக்கும் மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியையும் பணிகளின் முன்னேற்றத்தையும் காட்டும் இரு விவர அறிக்கைகள் வருமாறு:

மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீட்டை காட்டும் விவர அறிக்கை.

(ரூபாய் லட்சத்தில்.)

| மாவட்டத்தின் பெயர். | நீர் வழங்கு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு. | வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| வட ஆற்காடு .. .. | 314.85 | 510.02 | 824.87 |
| தென் ஆற்காடு .. | 181.57 | 303.00 | 484.57 |
| செங்கற்பட்டு .. .. | 86.12 | 202.14 | 288.26 |
| திருச்சிராப்பள்ளி .. | 182.04 | 169.82 | 351.86 |
| மதுரை .. .. | 142.90 | 185.86 | 328.76 |
| தஞ்சாவூர் .. .. | 40.31 | 64.37 | 104.68 |
| இராமநாதபுரம் .. .. | 201.61 | 480.79 | 682.40 |
| திருநெல்வேலி .. .. | 75.37 | 72.46 | 147.83 |
| சேலம் .. .. | 213.04 | 180.15 | 393.19 |
| தருமபுரி .. .. | 139.49 | 280.06 | 419.55 |
| புதுக்கோட்டை .. | 150.14 | 275.40 | 425.54 |
| பெரியார் .. .. | 71.14 | 50.00 | 121.14 |
| கன்னியாகுமரி .. .. | 3.47 | 7.00 | 10.47 |
| சென்னை .. .. | 87.00 | .. | 87.00 |
| மொத்தம் .. | 1,889.05 | 2,781.07 | 4,670.12 |

| மாவட்டத்தின் பெயர். | நீர் வழங்கு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு. | வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளுக்கு நிதிஒதுக்கீடு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தனி மின் கம்பித் தொடர்கள் அமைத்தல். | 50.00 | .. | 50.00 |
| உருக்குத்தொட்டிகள் அமைத்தல். | 20.00 | .. | 20.00 |
| மண்வளப் பாதுகாப்பு .. | .. | 60.00 | 60.00 |
| காடு வளர்ப்பு .. | .. | 90.00 | 90.00 |
| பெரு மொத்தம் .. | 1,959.05 | 2,931.07 | 4,890.12 |

II. நிறைவேற்றப்பட்ட நீர் வழங்குப் பணிகள், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளின் எண்ணிக்கையை காட்டும் விவர அறிக்கை:

| மாவட்டத்தின் பெயர். | தோண்டப்பட்ட துளைக் கிணறுகள். | ஆழப்படுத்தப்பட்ட கிணறுகள். | நிறைவுற்ற பாசனப் பணிகள். | நிறைவுற்ற சாலைப் பணிகள். | நிறைவுற்ற ஊருணிகள் குளங்கள் மேம்பாட்டுப் பணிகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| வட ஆற்காடு | 1,153 | 6,390 | 2,551 | 1,056 | 490 |
| தென் ஆற்காடு | 824 | 1,946 | 1,646 | 444 | 403 |
| செங்கற்பட்டு | 380 | 1,452 | 1,183 | 345 | 516 |
| திருச்சிராப்பள்ளி. | 727 | 1,591 | 1,129 | 472 | 550 |
| மதுரை .. | 690 | 780 | 853 | 327 | 199 |
| தஞ்சாவூர் | 79 | 61 | 303 | 112 | 123 |
| இராமநாதபுரம். | 1,053 | 1,313 | 2,975 | 713 | 695 |
| திருநெல்வேலி | 310 | 297 | 481 | 142 | 137 |
| சேலம் .. | 608 | 1,392 | 708 | 613 | 111 |
| தருமபுரி | 705 | 2,168 | 1,408 | 624 | 356 |
| புதுக்கோட்டை | 470 | 1,524 | 1,953 | 506 | 897 |
| பெரியார் | 250 | 431 | 187 | 206 | 238 |
| கன்னியாகுமரி | .. | 116 | 71 | 11 | .. |
| மொத்தம் .. | 7,249 | 19,461 | 15,448 | 5,571 | 4,715 |



29. வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பயிர்களின் நிலைமையைக் கருதிப் பார்த்து 13 மாவட்டங்களில் 1390 ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல் வரி, தண்ணீர் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை ஆகியவற்றை தள்ளுபடி செய்து அரசு உத்தர விட்டது. பயிர் விளைச்சலின் மதிப்பு 50 சதவீதத்திற்குக் குறைவாக அதாவது 37 காசுக்கு குறைவாக இருக்கும் பகுதிகளில் வயல்களை நேரடியாகச் சென்று பார்த்து அதற்குரிய நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் நிலவரியை தள்ளுபடி செய்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 742 இலட்சமாகும். ஒரு கிராமத்தில் உழவர்கள் வைத்திருக்கும் நிலத்தில் 50 சதவீதத்திற்கும் குறையாத நிலப்பரப்பிற்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ள இனங்களில் 1390 ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர் செஸ் வரி, அரசுக் கடன் பாக்கிகளையும் வசூலிப்பது 1391 ஆம் விளைச்சல் ஆண்டுக்கு ஒத்திப்போடப் பட்டுள்ளது.

30. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் கிடைக்காத இடங்களில் வைக்கோல் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. சுமார் 8,100 மெட்ரிக் டன் வைக்கோல் விற்கப்பட்டது. இவற்றை ஏற்றிச் செல்லவும் இறக்கவும் ஆன செலவை அரசு ஏற்றுள்ளது. இந்த வகையில் ரூ. 47 இலட்சத்தை உதவித் தொகையாக அரசு வழங்கி உள்ளது. கால்நடைகளுக்கு ரூ. 17.25 லட்சம் செலவில் நோய் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. நோயில் வாடும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க ரூ. 50 லட்சம் செலவில் மருந்துகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. கால்நடைகள் நீர் அருந்துவதற்கு சுமார் 600 நீர்த்தொட்டிகள் கட்டப்பட்டன.

31. குழந்தைகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் சுமார் 3,500 நிலையங்களைத் தொடங்கி சத்துணவு வழங்க சமூக நலத்துறை மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக ரூ. 155.30 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. வறட்சி காலத்தில் சுமார் 6,000 மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்க இத்திட்டம் வகை செய்தது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கைம்பெண்களுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும், முதியோர் உதவித் தொகை பெறுவோர்களுக்கும் 1981 ஜூலை முதல் 1981 செப்டம்பர் வரை மூன்று மாத காலத்திற்கு வாரத்திற்கொருமுறை கூடுதலாக 1 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. இந்த வகையில் 13.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

33. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு உழவர்களுக்கும் ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் குறைந்த விலையில் விதைகள், பூச்சி கொல்லி மருந்து, இரசாயன உரம் வழங்க அரசு ரூ. 3:0 இலட்சம் அனுமதித்துள்ளது.

34. நிவாரணப் பணிகள் விரைவாகவும், செம்மையாகவும் செயல்படுத்த வேண்டுமாயின் பணிகளின் முன்னேற்றத்தை தீவிரமாகக் கண்காணிக்க வேண்டியது அவசியமென 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 ஆம் நாள் அன்று நடைபெற்ற ஆய்வின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். மாவட்ட ஆட்சியர்கள் அவரவருடைய மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முழுப் பொறுப்பேற்றனர். ஏனைய மாவட்ட நிலை அலுவலர்களும் பொறுப்புடன் நிவாரண பணிகளில் ஈடுபட்டு, திட்டமிட்ட முறையில் முறையாகப் பணிகளை நிறைவேற்ற மாவட்ட ஆட்சியருக்கு உறுதுணையாக இருப்பர். மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளுக்குத் தேவைப்படும் தொகை, வருவாய்த் துறை நிர்வாக ஆணையாளர் மூலமாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் வசம் ஒப்படைக்கப்பட்டது. நிவாரணப் பணிகளை நிறமையுடன் விரைவாக நிறைவேற்றிட மக்கள் பிரதிநிதிகளும் பயனுள்ள கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளிப்பது உகந்ததென அரசு கருதியது.

35. மாவட்டங்களில் வறட்சி நிலைமை குறித்து, 1981 மார்ச் 3, 4 ஆம் தேதிகளில், சட்டமன்றப் பேரவையில் விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை இது குறித்து 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் நாளன்று விவாதித்தது. இதற்கு வருவாய்த் துறை அமைச்சர் பதிலளிக்கையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களின் துயர் துடைக்க நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட மாவட்ட அளவிலான பகுதி அளவிலான குழுக்கள் அமைக்க அரசு முடிவு செய்திருப்பதை 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் நாள் அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று ஒவ்வொரு பகுதியிலும் மக்களின் தேவை குறித்தும் அங்கு மேற்கொள்ளவிருக்கும் பணிகள் பற்றியும் தக்க ஆலோசனை நல்கும்படி அமைச்சர் வேண்டினார்.

36. இதற்கிணங்க அரசு இரு குழுக்களை அமைக்க ஆணை பிறப்பித்தது—(i) மாவட்ட அளவிலான குழுவில், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஆகியோரும், (ii) மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் அமைக்கப்பட்ட குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்





கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்பட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர், மாவட்ட அளவிலான குழுக்களின் கூட்டங்கள் கூட்டப்பட்டு அவற்றிற்கு மாவட்ட ஆட்சியரும் உள்ளூர் பகுதி குழுக்களின் கூட்டங்களுக்கு கோட்டாட்சியரும் தலைமை வகிக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டது. நிவாரணப் பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்துதல், பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை கேட்டறிதல், நடைபெற்றுவரும் நிவாரணப் பணிகளைப் பார்வையிடுதல் ஆகியவை குறித்து குழுவின் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். இதற்காக மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரணப் பணிகள் குறித்த விவரங்களை அவ்வப்போது குழு உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. குழுக் கூட்டங்களில் கூறப்படும் கருத்துக்கள், முறையீடுகளைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், மாவட்ட குழுக்களின் தீர்மானங்கள் குறித்து அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும், மாவட்ட ஆட்சியருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. ஆகவே நிவாரணப் பணிகளைச் செயல்படுத்துவதில் மக்களின் பிரதிநிதிகள் தீவிரமாகப் பங்கேற்க வழிவகுத்து விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய குழுக்கள் அமைக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

37. உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிப்பதோடு மட்டுமின்றி, நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக புகார்கள், முறைகேடுகள் ஏதேனும் தெரியவந்தால் அவற்றையும் அவ்வப்போது அரசின் கவனத்திற்குத் தெரியப்படுத்தினால், குறைகளைக் களைவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளலாம் என்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவருடைய பகுதிகளில் தீவிரமாகப் பங்கேற்பதால் வறட்சி நிவாரணப் பணிகளை விரைவாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுத்த பெரிதும் உதவியாக இருக்குமென்றும் வருவாய்த்துறை அமைச்சர் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் நாளில் சட்டப்பேரவையில் நடைபெற்ற நிலவரி வருவாய் மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது உறுப்பினர்களை வேண்டினார்.

38. மாவட்ட அளவிலான குழுக்கள் கூட்டங்களின் நடைமுறை குறிப்புகளை அரசு பெற்று பரிசீலித்துள்ளது. குழுக்களின் உறுப்பினர்கள் கூறியுள்ள கருத்துக்கள், முறையீடுகள் அல்லது புகார்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இந்தக் குழுக்கள் வறட்சி நிவாரணப் பணிகளை விரைவாகச் செயல்படுத்த உதவுவதோடு மட்டுமின்றி புகார்கள், குறைகளை அறிந்து அவற்றைக் களைய உடனடி நடவடிக்கை மேற்கொள்வதிலும் பெரிதும் உதவியுள்ளன.

39. வறட்சி நிவாரணத் திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதை ஆராயவும் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காகவும், செயலாக்க முகவர்களுக்கு கட்டளை பிறப்பிப்பதற்காகவும், வறட்சி நிவாரணக் கொள்கை குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் அரசுத் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், அரசு இரண்டாம் செயலாளர், அரசுச் செயலாளர்கள், துறைத்தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஓர் உயர் அதிகாரக் குழு அமைக்கப்பட்டது. நிவாரண பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை இக்குழு கூடி நிவாரணப் பணியில் ஏற்படும் இடர்பாடுகள், சிக்கல்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்காக, நிவாரணப் பணித்திட்டத்தைச் செயல்படுத்துகிற துறைத் தலைவர்கள், முகவர்கள் ஆகியோருக்கு ஆலோசனை நல்கியது.

40. முதலமைச்சர் அவர்கள், மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தபோது, வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். நிவாரணப் பணிகளை விரைவில் செயல்படுத்த மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட அதிகாரிகளுக்கும் ஆலோசனை நல்கி தக்க உத்தரவுகளை பிறப்பித்தார். வருவாய் அமைச்சரும் தனது சுற்றுப் பயணத்தின்போது, நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். மாவட்ட அளவிலான குழுக்களின் கூட்டங்கள் சிலவற்றை தலைமைதாங்கி நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தும் அதிகாரிகளுக்கு நிவாரணப் பணிகளை விரைவாகவும், முறையாகச் செயல்படுத்த ஆலோசனையும் அறிவுரையும் நல்கினார். 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் நாளில் மதுரையில் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் சிறப்பு மாநாட்டில் வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின் முன்னேற்றம் பற்றி முதலமைச்சரால் ஆய்வு செய்யப்பட்டது. இதனையடுத்து தலைமைச் செயலகத்தில் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் நாளில் நடைபெற்ற மாநில அளவிலான அதிகாரிகள் கூட்டத்திலும் முதலமைச்சர் மறு ஆய்வுப் பணியைத் தாமே நேரடியாக மேற்கொண்டார்.

41. மாநில அளவில், வறட்சி நிவாரணப் பணிகளை வகுத்தல், செயல்படுத்தல், ஒருங்கிணைத்தல் பணிக்கு தனி ஆணையர் மற்றும் வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் பொறுப்பு வகித்தார். அவர் நிவாரணப் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு அடிக்கடி சென்று பார்வையிட்டு நிவாரண திட்டத்தை விரைவாகவும், செம்மையாகவும் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தெரிவித்தார். நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, ஆணையரும் அரசும் வாரம் ஒருமுறை ஆய்வு செய்தனர். வறட்சி நிவாரணத் திட்டம் செயல்படுத்தப்படும்போது நிவாரணப் பணிகள் நடைபெறும் காலம் முழுவதும் கூர்ந்து கவனித்து, மாவட்டஆட்சியருக்கும், செயல்படுத்தும் முகவர்களுக்கும் சுற்றறிக்கைகள், ஆணைகள் ஆகியவற்றின் வாயிலாக தக்க உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளனர்.



42. (அ) கடும் வறட்சியையும் மேற்கொள்ளப்பட வேண்டிய பெருமளவு நிவாரணப் பணிகளையும் கருதி விரிவான அறிக்கை ஒன்றை அரசு தயாரித்து 1981 மார்ச் திங்களில் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. மத்திய அரசு அதிகாரிகள் குழு 1981 ஏப்ரல் திங்களில் இம்மாநிலத்திற்கு வந்து வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு நிலைமையை மத்திய அரசுக்கு எடுத்துரைத்தது. அவர்களுடைய பரிந்துரையின் பேரில் பல நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 48.90 கோடி உச்ச வரம்புத் தொகைக்கு மத்திய அரசு இசைவளித்தது. பின்னர், சென்னை நகரின் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக ரூ. 87 இலட்சம் உச்ச வரம்புத் தொகைக்கு மத்திய அரசு ஏற்பளித்தது. எனவே, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள மொத்த உச்சவரம்புத் தொகை ரூ. 49.77 கோடியாகும்.

(ஆ) வறட்சி நிவாரண உச்சவரம்பு செலவு ரூ. 49.77 கோடி என்று மத்திய அரசு நிர்ணயித்திருந்தபோதிலும் அரசு மொத்தம் ரூ. 57.64 கோடி செலவிட அனுமதித்துள்ளது. 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்திற்காக ரூ. 56.81 கோடி செலவு செய்துள்ளது. மேலும் தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக கிணறு ஒன்றுக்கு அதிக அளவு ரூ. 2,500 வீதம் தக்காவி கடன் வழங்க ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 22,665 பேர் பயனடைந்துள்ளனர்.

43. 31-1-1982 வரை வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்தின் கீழ், பல்வேறு திட்டங்கள் குறித்து ஆன செலவை பின்வரும் அட்டவணை காட்டுகிறது—

| பணிகள்/திட்டங்கள் குறித்த விவரம். | | 31—1—1982 அன்றுள்ளபடி செலவு. |
|---|---|---|
| (1) | | (2) (ரூபாய் இலட்சத்தில்). |
| லாரிகள், டிராக்டர்கள் முதலியவற்றின் மூலம் குடிநீர் கொண்டு செல்லுதல் | .. | 41.24 |
| மருத்துவம்—பொதுச்சுகாதாரம்— | | |
| நோய் தீர்க்கும் மருந்துகள் | .. | |
| நோய் தடுப்பு மருந்துகள் | .. | 147.32 |

| | | |
|---|---|---|
| கால் நடை வளர்ப்பு— | | |
| நோய் தீர்க்கும் மருந்துகள் | .. | 49.99 |
| நோய் தடுப்பு மருந்துகள் | .. | 17.25 |
| தீவனம்— | | |
| தீவனத்தைக் கொண்டு செல்லவும் அவற்றை ஏற்றியிறக்கவுமான செலவுகள் | .. | 46.92 |
| முதியோர்களுக்கும், ஏலாமையுற்றவர்களுக்கும் இடருதவி | .. | 13.74 |
| குடிநீர் வழங்கல்— | | |
| (1) புதிய துளைக் கிணறுகள் அமைத்தல். | | 1,222.17 |
| (2) கிணறுகளை ஆழப்படுத்துதல் | .. | 302.32 |
| (3) குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்காக நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு நிதியுதவி. | | 258.07 |
| (4) தண்ணீர் கொண்டு செல்வதற்கான தொட்டிகள் அமைத்தல் | .. | 27.50 |
| (5) சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல். | | 86.68 |
| வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பணிகள்— | | |
| (1) பாசனப் பணிகள் | .. | 1,843.49 |
| (2) சாலைகள்—ஏனைய ஊரகப் பணிகள். | | 674.44 |
| (3) மக்கள், கால்நடைகள் பயன்படுத்தும் ஊருணி, குடிநீர்க் குட்டைகள் ஆகியவற்றை பழுதுபார்த்தல். | | 252.35 |
| (4) மண்வளப் பாதுகாப்பு | .. | 60.65 |
| (5) காடு வளர்ப்பு | .. | 96.41 |
| சிறு உழவர்களுக்கும், ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் குறைந்த விலையில் வேளாண்மை விளை பொருள்களை வழங்குதல். | | 385.64 |
| சத்துணவுத் திட்டம் | .. | 155.30 |
| மொத்தம் | .. | 5,681.48 |

44. வறட்சித் துயர் தணிப்பு ஏற்பாடுகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள துன்பங்களைப் போக்குவதோடு குடிநீர் வாயில்கள், சாலைகள், சாலைகள் மேம்பாடு, பாசன வாயில்கள் முதலியன போன்ற நிலையான சொத்துக்கள் ஏற்படவும் இது வகை செய்கிறது.



7. நிலமற்ற ஏழை மக்கள் பயிரிட நிலம் வழங்குதல்.

45. நேரடியாகப் பயிர்த் தொழிலில் ஈடுபடக்கூடிய நிலமற்ற ஏழை மக்களுக்கு நீண்ட நாள் தரிசாகக் கிடந்த நிலங்கள் இக்கொள்கையின் கீழ் இலவசமாக வழங்கப்படும். 5 பேர் அல்லது அவர்களுக்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் ''ஏழை'' எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு குடும்பத்தில் 5 பேருக்கு அதிகமாக இருப்பின் அவரது மாத வருமானம் ரூ. 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் ''ஏழை'' என்று கருதப்படுகிறார்.

46. பயிரிடத்தக்க நிலங்கள் தகுதியுள்ளவர்களுக்கும் பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன:

(1) போரில் இறந்துபட்ட அல்லது ஏலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர் பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்கள்.

(2) நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர், பழங்குடியினர்.

2 (அ) பொதுக் காரியங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதனால்; நிலச் சொந்தக்காரராகவோ குத்தகைதாரராகவோ நேரடியாகப் பயிரிட்டு வந்த நிலங்கள் புன்செய் நிலமாயிருந்தால் 3 ஏக்கருக்குக் குறைவாக அல்லது நன்செய் நிலமாக இருந்தால் 1½ ஏக்கருக்குக் குறைவாக வைத்துள்ளவர்கள். ஆனால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருப்பின், நிலத்தின் மதிப்பு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

2 (ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டத்தின் (மத்தியச் சட்டம், 19/1976) கீழ் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்.

(3) முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படையினர், முன்னாள் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர்.

(4) பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்.

(5) தங்கக் கட்டுப்பாட்டு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள்.

(6) முன்னாள் கள் இறக்குவோர்.

(7) ஏனைய நிலமற்ற ஏழை மக்கள்.

(8) விடுதலை செய்யப்பட்ட கைதிகள்.

47. பயிரிடுவதற்காக நிலம் ஒப்படை செய்யப்படுவதில் மேற்கூறிய முன்னுரிமை வரிசைப்படி, போரில் இறந்துபட்ட அல்லது ஏலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர் பிரதேச இராணுவத்தினர் உட்பட முந்நாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு அடுத்த உயர் முன்னுரிமை நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள்/பழங்குடியினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

48. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால், அங்கு ஒருவருக்கு உயரளவு ஒரு ஏக்கர் புன்செய் நிலமோ, அரசு தரிசு நன்செய் நிலமாயிருந்தால் ½ ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகிறது.

49. நிலம் ஒப்படை செய்யப்பட்டவர், அவ்வாறு நிலம் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குள் அந்த நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டுக் காலத்துக்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி பராதீனம் செய்யவோ கூடாது. ஆனால், பயிரிடுவதற்காக, கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடைமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை செய்யப்பட்டவரே நிலத்தை பயிரிட வேண்டும். அல்லது அவருடைய குடும்ப உறுப்பினரோ, கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரோ தான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக் கூடாது.

50. இப்பணியைக் கவனிக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலும், வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் பதவித்தரத்தில் வருவாய் ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய 7 பிரிவுகள் தற்போது உள்ளன. 1981 ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து 1982 ஜனவரி 31-ம் நாள் வரையில் தகுதி வாய்ந்த 11,776 பேருக்கு 15,450.62 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வாரியான நிலைமை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—



1-4-1981 முதல் 31-1-1982 வரை ஒப்படை செய்யப்பட்ட சாகுபடி நிலங்களின் பரப்பைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | | ஒப்படை செய்யப் பட்ட மொத்த பரப்பு. |
|---|---|---|---|
| | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர். | ஏனையோர். | |
| (1) | (2) | (3) | (4) (ஏ.செ.) |
| 1. செங்கல்பட்டு | 6 | 7 | 17.63 |
| 2. தஞ்சாவூர் | 22 | 39 | 19.56 |
| 3. சேலம் | 81 | 630 | 979.99 |
| 4. திருச்சிராப்பள்ளி | 327 | 2,030 | 1,969.95 |
| 5. கோயம்புத்தூர் | * | * | .. |
| 6. மதுரை | 9 | 1,563 | 3,472.95 |
| 7. தருமபுரி | 111 | 3,349 | 6,242.03 |
| 8. இராமநாதபுரம் | 105 | 640 | 677.42 |
| 9. திருநெல்வேலி | .. | 2 | 1.23 |
| 10. வட ஆற்காடு | .. | 207 | 388.71 |
| 11. தென் ஆற்காடு | 51 | 442 | 248.35 |
| 12. கன்னியாகுமரி | 36 | 159 | 69.31 |
| 13. நீலகிரி | .. | 44 | 23.38 |
| 14. புதுக்கோட்டை | 445 | 1,424 | 1,270.25 |
| 15. பெரியார் | 18 | 29 | 69.86 |
| மொத்தம் .. | 1,211 | 10,565 | 15,450.62 |

* நிலுவையிலுள்ள மனுக்கள் ஏதும் இல்லை.

51. தகுதியற்றவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையோ, நில ஒப்படை செய்வதற்குரிய நிபந்தனைகள் மீறப்பட்டு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையோ ரத்து செய்வதற்கான நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன் மாவட்டங்களில் தகுதியற்றவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதை அரசு மறு ஆய்வு செய்து வருகிறது. இப்பணியை மேற்கொள்வதற்காக 23 தனிப் பணியாளர் பிரிவுகள் உள்ளன.

அவை ஒவ்வொரு பிரிவிலும் துணை வட்டாட்சியர் ஒருவர், வருவாய் ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் உள்ளனர். 1981 அக்டோபர் வரையில் 1,03,052 நில ஒப்படை இனங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் நில ஒப்படை செய்வதில் முறைகேடுகள் காரணமாக 13,374 நில ஒப்படைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய நில ஒப்படைகள் குறித்து மேலும் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. மாவட்ட வாரியான விவரங்கள் வருமாறு:—

| மாவட்டத்தின் பெயர். | ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப் பட்ட இனங்கள். | ரத்து செய்யப் பட்ட இனங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சேலம் .. .. .. | 17,639 | 403 |
| 2. புதுக்கோட்டை .. .. | 17,367 | 2,224 |
| 3. மதுரை .. .. .. | 10,908 | 831 |
| 4. தஞ்சாவூர் .. .. | 9,559 | 2,057 |
| 5. இராமநாதபுரம் .. .. | 9,526 | 2,705 |
| 6. செங்கல்பட்டு .. .. | 9,492 | 460 |
| 7. திருநெல்வேலி .. .. | 7,716 | 934 |
| 8. திருச்சிராப்பள்ளி .. .. | 6,061 | 167 |
| 9. வட ஆற்காடு .. .. | 5,863 | 960 |
| 10. கோயம்புத்தூர் .. .. | 3,469 | 961 |
| 11. பெரியார் .. .. .. | 2,432 | 768 |
| 12. தென் ஆற்காடு .. .. | 2,314 | 496 |
| 13. தருமபுரி .. .. .. | 706 | 408 |
| மொத்தம் .. | 1,03,052 | 13,374 |

8. வீட்டுமனை ஒதுக்குதல்.

52. வீட்டு மனைகள் ஒதுக்கும் திட்டமானது, நத்தம் மற்றும் ஏனைய புறம்போக்குகளில் ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதன் மூலமாக பரந்த அளவில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. 'ஏனழ்' என்ற சொற்றொடருக்கான பொருள் விளக்கமும் முன்னுரிமையும் பயிரிடத்தக்க தரிசு நிலங்களுக்கு எவ்வாறு பின்பற்றப்படுகிறதோ அவ்வாறே வீட்டு மனைகள் ஒதுக்குவதற்கும் பின்பற்றப்படும்.



53. 1981-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளிலிருந்து 1982 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ம் நாள் வரை 44.113 வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட 11,613 வீட்டுமனைகளும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட 501 வீட்டு மனைகளும் இதில் அடங்கும். அதன் விவரம் வருமாறு:

| மாவட்டம். | ஆதி திரா விடர். | பழங் குடி யினர். | ஏனை யோர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. செங்கல்பட்டு | 44 | .. | 1,152 | 1,196 |
| 2. தஞ்சாவூர் | 1,300 | .. | 705 | 2,005 |
| 3. சேலம் | 350 | 24 | 1,074 | 1,448 |
| 4. திருச்சிராப் பள்ளி. | 2,336 | 52 | 3,344 | 5,732 |
| 5. கோயம்புத்தூர் | .. | .. | 1,571 | 1,571 |
| 6. மதுரை | 4,278 | 3 | 8.014 | 12,295 |
| 7. தர்மபுரி | 799 | 84 | 10,578 | 11,461 |
| 8. இராமநாத புரம். | 16 | .. | 396 | 412 |
| 9. திருநெல்வேலி | .. | .. | 229 | 229 |
| 10. தென்ஆற்காடு | 618 | 4 | 1,455 | 2,077 |
| 11. வட ஆற்காடு | .. | .. | 238 | 238 |
| 12. கன்னியாகுமரி | 30 | 37 | 188 | 255 |
| 13. நீலகிரி | 30 | .. | 72 | 103 |
| 14. புதுக்கோட்டை | 835 | .. | 2,615 | 3,450 |
| 15. பெரியார் | 977 | 297 | 368 | 1,642 |
| மொத்தம் .. | 11,613 | 501 | 31,999 | 44,113 |

54. சென்னை நகரத்தில் ஆதி ஆந்திரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தும் தனித்திட்டத்தின்படி, 750 சதுர அடி உள்ள ஒரு மனைக்கு 3,000 ரூபாயும், 750 சதுர அடிக்கு மேற்பட்ட நிலத்திற்கு இரண்டு மடங்கு விலையும் செலுத்துவதன்பேரில் ஆதி ஆந்திரர் குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒப்படை செய்யப்படுகிறது. இத்திட்டம் தீவிரமாக செயல் படுத்தப்படுகிறது. 2,170 ஆதி ஆந்திரர்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். இதில் 1,324 ஆக்கிரமிப்புகள் இதுவரை முறைப் படுத்தப்பட்டுள்ளன.

55. அண்மையில், சென்னை மாநகரத்தில் குடிசைப்பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடப்படாத பல்வேறு குடிசைப்பகுதிகளில் உள்ள குடிசைகள் ஆக்கிரமிப்பை முறைப் படுத்துவது பற்றிய பிரச்சினையை அரசு பரிசீலித்து, சென்னை மாநகரத்தில் ஆங்காங்கே விரவிக்கிடக்கின்ற ஆட்சேபணையற்ற குடிசைப்பகுதிகளைத் தவிர ஏனைய எல்லா குடிசைப்பகுதிகளும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் மேம் படுத்துவதற்காக, அறிக்கையிடப்பட வேண்டுமென்றும், ஆக்கிர மிக்கப்பட்ட நிலங்களைத் தொகை ஏதுமின்றி குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் கட்டளையிடப் பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம், இப்பகுதிகளில் மேம் பாட்டுப் பணிகளை மேற்கொண்டு, அனுபோகதாரரிடமிருந்து மனை ஒன்றுக்கு ரூ. 7,700-ம் மேம்பாட்டுச் செலவு ஏதேனு மிருந்தால் அதனையும் பெற்றுக்கொண்டு குத்தகை—விற்பனை பத்திரம் எழுதிக் கொடுக்கும் நிலத்தின் விலையை ஐந்து ஆண்டு களில் தவணைமுறையில் வசூலிக்கக் கருதப்படுகிறது. நிலத்தின் பரப்பு 750 சதுர அடிக்கு அதிகமாயிருந்தால், உயர் அளவு அரை மனை என்ற வரையறைக்குட்பட்டு, அந்த இடம் எப்படி உள்ளதோ அதே நிலையில் கொடுத்து விடுவது என்ற அடிப்படை யில் நில ஒப்படை செய்யப்படும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக அறிக்கையிடப் படாததும், ஆட்சேபணையற்றதும் ஆங்காங்கே விரவிக்கிடப்பது மான ஆக்கிரமிப்புகளைப் பொறுத்தவரையில், மனை ஒன்றுக்கு ரூ. 7,700 வசூலித்தபின் வீட்டு மனை ஒப்படை செய்யப்படும் மனையின் உச்ச வரம்பு 750 சதுர அடியாக இருக்கும்.

56. ''வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தல்'' திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்துவதற்காக அரசு நிலங்களில் வீட்டு மனை அளிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வீட்டின் முன் பக்கத்தில் அல்லது புறக்கடையில் குறைந்தது ஒரு மரமாவது வளர்க்க வேண்டும் என்ற நிபந்தனை கொண்டு வரப்பட்டுள்ளது.

9. வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு

அரசு நிலங்கள்.

57. நெய்வேலியில் இரண்டாம் சுரங்கம் வெட்டுவதற்காக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திற்கு தென் ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டத்திலுள்ள 1,654.03 ஏக்கர் புறம்போக்கு நிலம் அங்காடி மதிப்பை வசூலித்ததன் பேரில் வழங்கப்பட்டது.

58. திருநெல்வேலி மாவட்டத்தில் 332 ஏக்கர் புறம்போக்கு நிலத்தையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 27.97 ஏக்கர் புறம்போக்கு நிலத்தையும், ஈரத்தன்மை குறித்த சோதனை நிலையத்தை (Liquid Test Facility Centre) அமைப்பதற்காக இந்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சித் துறைக்கு இலவசமாக வழங்கலாம் என்று இவ்வரசு 1981 ஜனவரியில் உத்தரவிட்டுள்ளது.



நிலத்தை மாற்றுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் வர
திருவனந்தபுரத்திலுள்ள ஈரத்தன்மை சோதனை நிலைய இயக்
நர் (Lipuid Tes Propulsion Centre) அத்திட்டத்திற்காக அந்நில
தில் சோதனைகளை மேற்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

59. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை நகர்
31.50 ஏக்கர் நிலம் நிலவரி இல்லாமல் இலவசமாக சதகத்துல்
அப்பா கல்லூரிக்கு வழங்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்ட
காரைக்குடி வட்டத்தில் 19.11 ஏக்கர் நிலம் காரைக்கு
இராமசாமி தமிழ் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. தஞ்சாவூ
மாவட்டம் சீர்காழி வட்டத்தில் 11.24 ஏக்கர் நிலம் இலவசமா
பூம்புகார் பேரவை கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

60. செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்ட
திரிசூலம் கிராமத்திலுள்ள (மற்றப்படி பல்லாவரம் கல் உடை
கும் இடம் என்றழைக்கப்படும்) 22.5 ஏக்கர் நிலத்தை
கட்டிடங்கள், மின் அமைப்புகள் முதலியவற்றுடன், மின்கம்பிக
குறித்த ஆராய்ச்சி—சோதனை நிலையத்தை அமைப்பதற்கா
மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 34.59 இலட்சமாக இருக்க
ரூ. 10 இலட்சம் மட்டுமே வசூல் செய்வதன்பேரில் இந்தி
அரசின் கட்டுப்பாட்டில் கீழுள்ள ''செர்க்'' (SERC) நிறுவன
துக்கு மாற்றிக் கொடுக்க 1981 பிப்ரவரியில், இவ்வர
அனுமதி அளித்தது.

61. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை துணை
வட்டம், நகரில், 1 ஏக்கர், 31,066 சதுர அடி பரப்பி
அனைத்து இந்திய வானொலி ஒலிபரப்பு நிலையம் அமைப்பத
காக மாற்று ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் வரை, இந்தி
அரசின் செய்தி—ஒலிபரப்பு அமைச்சகத்திற்கு அந்நிலத்தை
பயன்படுத்த இவ்வரசு அனுமதி அளித்துள்ளது.

62. திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி நகரத்தி
விளையாட்டு அரங்கு ஒன்று கட்டுவதற்காக விளையாட்
இளைஞர் அணித் துறைக்கு, 10 ஏக்கர் 40,0 5 சதுர அ
பரப்புள்ள நிலம் 1981 ஏப்ரல் திங்களில் மாற்றப்பட்டது.

63. வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்ட
புளியமங்கலம் கிராமத்திலுள்ள சுமார் 10 ஏக்கர் நிலம் சே
பாதுகாப்புப் புகலிடங்கள் கட்டுவதற்காக இலவசமாக இந்தி
செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மாற்றப்பட்டது.

64. தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், சுகவாடி
மூக்கண்டபள்ளி கிராமங்களில் 75.31 ஏக்கர் நிலம் தொழி
பிரிவுகளைக் கட்டுவதற்காக ''சிப்காட்'' நிறுவனத்துக்கு 198
ஜூன் திங்களில் இலவசமாக வழங்கப்பட்டது.

65. சென்னை மாநகரிலுள்ள துறைகள், அரசுக்கு சொந்த
மான வாரியங்கள்/நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அரசு
வண்டிகளின் நிரந்தர ஓட்டுநர்களுக்கு வீட்டுமனைகள் ஒதுக்கு

வதற்காக செங்கல்பட்டு மாவட்டம், நெற்குன்றம் கிராமத்தில் 27.13 ஏக்கர் நிலம் 1981 ஜூன் திங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

66. ஓய்வு பெற்ற, ஓய்வு பெறும் காவல்துறைப் பணியாளர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து தருவதற்கு திருச்சி மாவட்டம், நாவல்பட்டி கிராமத்தில் 150 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ள, இறுதி ஆணைகளை எதிர்பார்த்து, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி நிறுவனத்துக்கு 1981 டிசம்பர் திங்களில் அரசு அனுமதி அளித்தது.

## 10. பொதுமக்கள் தொடர்புத்திட்டம்.

67. பொதுமக்கள் தொடர்புத் திட்டமான "மனுநீதித் திட்டம்" குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கிராமங்களுக்கு வருகைதரும் அதிகாரிகள் கிராம மக்களின் பிரச்சினைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைக்க வாய்ப்பளிக்கிறது. இத்திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1—4—1981 முதல் 31—12—1981 வரை வரப்பெற்ற 49,886 மனுக்களில் 27,732 மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டன. அதாவது 56 சதவீத மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டுள்ளன.

## 11. தண்ணீர்க் கட்டண வீதங்கள்.

68. இம்மாநிலத்திலுள்ள நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மண் வளம், வேளாண்மை விளைபொருட்களின் விலை, அண்மையிலுள்ள பாசன வாயில்கள் ஆகியவற்றைப் பொறுத்த நன்செய், புன்செய் நிலங்களுக்கு வரி விதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. நன்செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியில் ஒரு பகுதி தண்ணீர்த் தீர்வையாகும். அரசு நீர்ப்பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெறும் புன்செய் நிலங்களைப் பொறுத்தமட்டில் அந்நிலங்களுக்கு விதிக்கப்பட்ட நிலவரியுடன் தண்ணீர்த் தீர்வையும் கூடுதலாக விதிக்கப்படுகிறது. தண்ணீர்த் தீர்வைத் தர வீதங்கள் முறையின் கீழ் நிர்ணயித்த ஏற்பாட்டின்படி தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. இது பாசன வாயில்களின் வகையைப் பொருத்து வேறுபடுகிறது. பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மற்றும் சிறப்புச் சிறுபாசனத் திட்டப் பணிகளினால் பாசனம் பெறும் பகுதிகளில் தனி தண்ணீர்த் தீர்வை வீதங்கள் நடைமுறையில் உள்ளன.

69. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை சட்டத்தின் கீழ் கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி முறையே நன்செய் நிலங்கள், இதர நிலங்களின் மேல் விதிக்கப்படுகின்றன. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் தீர்வை (திருத்தச்) சட்டத்தைத் திருத்திய தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு



கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டம், 1976 ஜூலை 1 முதல் செயலுக்கு வந்தது. மாநிலத்தில் அரசு பாசன வாயில்களைப் பராமரிப்பதில் ஏற்பட்ட இழப்பைக் குறைக்கும்பொருட்டு சட்டம் இயற்றப்பட்டது. 1977—ல் மேலும் திருத்தப்பட்ட இத்திருத்தங்களின் கீழ், முதல் வகை அல்லது இரண்டாம் வகை பாசன வாயில்களின் மூலம் நிலங்கள் பாசனம் பெறும்போது, நன்செய் வரி விதிப்புக்கு உட்பட்ட நிலங்களுக்குத் தனி நன்செய் தீர்வையும் தண்ணீர் மேல்வரியும் செலுத்தத்தக்கதாகும். அதன் பின்னர், இந்த வரி விதிப்புகள் உழவர்களுக்கு இடர்ப்பாட்டை ஏற்படுத்துவதாக முறையீடு வந்ததனால், இச்சட்டம் கொண்டுவரப்பட்ட நாளிலிருந்து அந்த வரி விதிப்புகளை நீக்குவதற்கு அரசு முடிவு செய்தது. அதற்கிணங்க, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் வரிவிதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, சிறப்பு வரி விதிப்பு, சிறப்புத் தண்ணீர் தீர்வை சட்டம் (சட்டம் 39, 1981) இயற்றப்பட்டது.

70. மாநிலத்திலுள்ள தண்ணீர்த் தீர்வை வீத அமைப்பு முழுவதையும் சீரமைப்பது பற்றி ஆராய அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அரசிடம் கொடுத்துள்ளது. குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

## வணிகப் பயிர் வரி விதிப்பு

71. மாநிலத்தின் வருவாயை அதிகரிப்பதற்காக 1976 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு வணிகப் பயிர் வரி விதிப்புச் சட்டம் 1—7—1976-லிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின்கீழ் சில வணிகப் பயிர்களுக்குக் கீழ்க் காணும் வீதங்களில் வரி விதிக்கப்பட்டது.

(அ) திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு ஏக்கருக்கு ஆண்டிற்கு ரூபாய் 20.

(ஆ) புகையிலை, மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் வேர்க்கடலை ஆகியவற்றிற்கு ஏக்கருக்கு ஆண்டிற்கு ரூ. 12.50.

72. மாநிலத்தில் எல்லா இடங்களிலும் பாதகமான பருவ நிலை நிலவியதால் மேற்படி சட்டத்தின் கீழ் 1386 பசலி (1—7—1976 முதல் தொடங்கும் ஆண்டுக்கு) ஆண்டுக்கு வணிகப் பயிர்களுக்குச் செலுத்த வேண்டிய வரியை அரசு தள்ளுபடி செய்துவிட்டது. மேலும் திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் போன்ற வணிகப் பயிர்களின் மேல் விதிக்கப்பட்டிருந்த வரி வீதத்தை ரூ. 20—லிருந்து ரூ. 15 ஆகக் குறைத்தது. மேலும் புகையிலை, மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் வேர்க்கடலை ஆகியவற்றின் மீதான வரி விதிப்பை 1387 ஆம் (1977 ஜூலைத் திங்கள் முதல்) பசலி ஆண்டிலிருந்து கைவிட்டுவிட்டது.

73. வணிகப் பயிர் வரி விதிப்பை எதிர்த்து விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகளின் பேரில் உழவர்களின் பிரச்சினைகளை ஆராய அரசு அமைத்திருந்த உயர்நிலைக் குழுவிற்கு இப்பிரச்சினை அனுப்பப்பட்டது. 1387, 1388, 1389 ஆம் பசலி ஆண்டுகளுக்கான வணிகப் பயிர் வரி விதிப்பும் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ் வரி விதிப்பை விட்டுவிடும்படி உயர் நிலைக் குழு பரிந்துரைத்தது. அரசு இப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு வணிகப் பயிர் வரிவிதிப்புச் சட்டத்தை அது செயலுக்கு வந்த காலத்திலிருந்தே ரத்து செய்யவும் முடிவு செய்தது. அதற்கிணங்க, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர் வரி விதிப்பு (ரத்து) சட்டம் (சட்டம் 24/81) இயற்றப்பட்டது.

## 12. வேளாண்மை வருமானவரி

74. தமிழ்நாட்டில், வேளாண்மை வருமான வரி 1955 ஆம் ஆண்டிலிருந்து செயலிலுள்ளது. சென்னை மலைத்தோட்ட வேளாண்மை வருமான வரிச் சட்டம் 1955-ல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டபோது, காபி, தேயிலை, இரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத்தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வரி விதிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம், மாநிலம் முழுவதிலும் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கும் இச்சட்டத்தை நீட்டிக்க வகை செய்கிறது. 1958—59 வரி விதிப்பு ஆண்டிலிருந்து செயலுக்கு வந்தது. திருத்தச் சட்டம் வரி விலக்கு வரம்பு 1973 ஆம் ஆண்டில் ரூ. 5,000 ஆகவும் உயர்த்தியது. 1979 ஆம் ஆண்டு 32 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் வரி விலக்கு வரம்பு ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வரி இணக்கத் திட்டத்தின்படி, தற்போதைய வரி விலக்கு வரம்பு 20 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டும் இச்சலுகையை அளிக்கையில், எவ்வித வரம்பும் இல்லாமல் மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கு வரி இணக்கம் செய்துகொள்ள வசதி அளிக்கப்படுகிறது.

75. 1979 ஆம் ஆண்டு 32-ம் திருத்தச் சட்டத்தின் மூலம் எல்லா வகை நிலங்களையும் நன்செய் அல்லது புன்செய் என்ற வகைப்பாட்டிலிருந்து 'பயிர் அடிப்படையில்' 1979-80-ம் வரி விதிப்பு ஆண்டிலிருந்து பயிர்களை 13 தொகுதிகளாகப் பிரித்து ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றப்பட்டுள்ளது. முந்திய ஆண்டின் (கணக்காண்டு) மொத்த வேளாண்மை வருமானத்தின்



மீது ஒவ்வொரு நிதியாண்டுக்கும் வேளாண்மை வரி விதிக்கப்படுகிறது. தற்போதைய வரி வீதம்/இணக்க வரி வீதம் வருமாறு :—

### வேளாண்மை வருமான வரி வீதங்கள்.

1. மொத்த வேளாண்மை வருமானத்தில்: முதல் ரூ. 8,000-க்கு. வரி கிடையாது.
2. மொத்த வேளாண்மை வருமானத்தில்: அடுத்த ரூ. 7,000-க்கு. ரூபாய்க்கு 25 காசு.
3. மொத்த வேளாண்மை வருமானத்தில்: அடுத்த ரூ. 5,000-க்கு. ரூபாய்க்கு 30 காசு.
4. மொத்த வேளாண்மை வருமானத்தில்: அடுத்த ரூ. 5,000-க்கு. ரூபாய்க்கு 35 காசு.
5. மொத்த வேளாண்மை வருமானத்தில்: அடுத்த ரூ. 5,000-க்கு. ரூபாய்க்கு 45 காசு.
6. மொத்த வேளாண்மை வருமானத்தில்: அடுத்த ரூ. 20,000-க்கு. ரூபாய்க்கு 55 காசு.
7. மொத்த வேளாண்மை வருமானத்தில்: அடுத்த ரூ. 50,000-க்கு. ரூபாய்க்கு 60 காசு.
8. மொத்த வேளாண்மை வருமானத்தில்: எஞ்சிய தொகைக்கு. ரூபாய்க்கு 65 காசு.

ஆனால்,

(i) ரூ. 10,000-க்கு மேற்படாத மொத்த வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

(ii) மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 11,100-க்கு மேற்படாதபோது. அது குறித்துச் செலுத்தத்தக்க வேளாண்மை வருமான வரியானது மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-ஐ விட எவ்வளவு அதிகமாக உள்ளதோ அத்தொகையில் எழுபது சதவீதத்திற்கு மேற்படக்கூடாது.

மேலும், ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்தவரையில், மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும் பேரளவு வீதத்தில் வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட வேண்டும்.

### வரி இணக்கத் திட்டத்தின் கீழ் வரும் நிலங்களுக்கான வரி வீதங்கள்.

| பரப்பு. (1) | ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒன்றுக்கு வரி வீதம். (2) |
|---|---|
| | ரூ. பை. |
| 1. முதல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | வரி கிடையாது. |
| 2. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 15.00 |
| 3. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 20.00 |

| பரப்பு | ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒன்றுக்கு வரி வீதம் |
|---|---|
| | ரூ. பை. |
| (1) | (2) |
| 4. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 30.00 |
| 5. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 40.00 |
| 6. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 50.00 |
| 7. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 60.00 |
| 8. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 70.00 |
| 9. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 80.00 |
| 10. எஞ்சிய ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு .. | 100.00 |

ஆனால் ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்தவரையில், 65, 65-ஏ பிரிவுகளின் கீழ் அந்தக் கம்பெனி வேளாண்மை வருமான வரி இணக்கம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்ட நிலத்தின் மொத்தப் பரப்பு முழுவதற்குமாக மேற்சொன்ன 65, 65-ஏ பிரிவுகளின் கீழ் செலுத்தத்தக்க ஒரு மொத்தத் தொகை பேரளவு வீதத்தில் விதிக்கப்பட வேண்டும்.

76. வேளாண்மை வருமான வரி ஆணையாளர், வேளாண்மை வருமான வரித் துறையின் தலைவராவார். வருவாய் வாரியம் நீக்கப்பட்ட பின்னர், அவர் நிலச் சீர்திருத்த ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளார்.

77. மலைத் தோட்டப் பகுதிகள் அல்லாத ஏனைய பகுதிகளில் வசூல் பணியை, கூடுதல் வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் என்ற வகையில் வட்டாட்சியர்கள் கவனித்து வந்தனர். வேளாண்மை வருமான வரி பாக்கிகளை விரைந்து வசூலிப்பதற்காக, வரி வசூல் சட்டத்தின் விதித் துறைகளின் கீழ் வரி வசூல் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

78. மொத்த வருமானத்தில் 90 சதவீதம் மலைத் தோட்டப் பயிர்களிலிருந்தே கிடைக்கிறது. கேட்பு, வசூல், நிலுவை ஆகியவை பற்றிய விவரங்கள், 1968—69-ம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :—



| ஆண்டு. | | | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1968—69 | .. | .. | 248.94 | 194.42 | 54.52 |
| 1969—70 | .. | .. | 260.65 | 206.54 | 54.11 |
| 1970—71 | .. | .. | 250.60 | 193.83 | 56.77 |
| 1971—72 | .. | .. | 271.34 | 215.37 | 55.97 |
| 1972—73 | .. | .. | 293.00 | 225.95 | 67.05 |
| 1973—74 | .. | .. | 270.83 | 225.37 | 45.46 |
| 1974—75 | .. | .. | 284.42 | 217.78 | 66.64 |
| 1975—76 | .. | .. | 373.05 | 252.59 | 120.46 |
| 1976—77 | .. | .. | 362.51 | 244.50 | 118.01 |
| 1977—78 | .. | .. | 697.29 | 524.67 | 172.62 |
| 1978—79 | .. | .. | 1,341.29 | 1,042.19 | 299.70 |
| 1979—80 | .. | .. | 1,003.29 | 693.23 | 310.06 |
| 1980—81 | .. | .. | 936.75 | 579.63 | 357.12 |
| 1981—82 | .. | .. | 721.35 | 394.83 | 326.52 |

(1982 பிப்ரவரி வரை—தற்காலிகமானது.)

79. 1978—79-ம் ஆண்டில், போற்றத்தக்க வகையில், வருவாய் திடீரென உயர்ந்தது. சம்பந்தப்பட்ட கணக்கு ஆண்டில், தேயிலை நல்ல விலைக்கு விற்கப்பட்டதே வருவாய் உயர்ந்ததற்கான முக்கியமான காரணமாகும். அந்த ஆண்டில் ஏராளமான வரிபாக்கி இனங்கள் குறித்து நடவடிக்கை எடுத்ததும் ஓரளவுக்குக் காரணமாகும். 1980—81-ம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 6.48 கோடியாக இருக்க அந்த வரி விதிப்பு ஆண்டில் ரூ. 5.79 கோடி வசூலாகியுள்ளது.

80. 1979—80, 1980—81, 1981—82-ம் வரி விதிப்பு ஆண்டுகளில் வரி இணக்கம் வருமான அடிப்படையில் (Composition and Return basis) வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

மலைத் தோட்டம்.

| ஆண்டு. | | வரி இணக்கம். | வருமானம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1979—80 | .. | 3,401 | 855 | 4,256 |
| 1980—81 | .. | 3,618 | 991 | 4,609 |
| 1981—82 (1981 நவம்பர் வரை). | | 3,546 | 1,003 | 4,549 |

மலைத் தோட்டம் அல்லாதவை.

| வரி இணக்கம். | வருமானம். | மொத்தம். | பெரு மொத்தம். |
|---|---|---|---|
| (5) | (6) | (7) | (8) |
| 51,587 | 4,931 | 56,518 | 60,774 |
| 27,736 | 4,429 | 32,165 | 36,774 |
| 28,696 | 3,995 | 32,691 | 37,240 |

1979—80 ஆம் ஆண்டில் 60,774 ஆக இருந்த வரிவிதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 1980—81 ஆம் ஆண்டில் 36,774 ஆகக் குறைந்தது. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்த 1979 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தில் (சட்டம் எண் 32/79) விலக்கு அளவு அதிகரிக்கப் பட்டதே இதற்குக் காரணம் ஆகும்.

81. இத்துறைக்குப் புதிதாக வந்த வேளாண்மை வருமான வரி உதவி ஆணையாளர்கள், வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக அடங்கல் பயிற்சித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் வேளாண்மை வருமான வரி தொடர்பாக பல்வேறு சட்டங்கள், கணக்கு வைப்பு முறைகள் ஆகியவற்றில் 9 நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். ஏனைய உதவி ஆணையாளர்களுக்கும் வேளாண்மை வருமான வரி அதிகாரி களுக்கும் நினைவூட்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. வேளாண்மை வருமான வரி விதிப்புகளை முடிவு செய்வதில் இந்தப் பயிற்சி அவர்களுக்கு மிகவும் பயன்பட்டது.

82. 1979 ஆம் ஆண்டு 32 ஆம் எண் திருத்தச் சட்டம், வருமானத்தின் மீது வரி விதிக்கப்படுவதற்கான பேரளவு வரி வீதத்தை ரூபாயில் 55 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்த்துவதன் மூலம் இணக்கக் கட்டணத்தைச் சீரமைத்தது. இச்சட்டத்தில் செய்யப்பட்ட மாற்றங்களினால் சிறு உழவர் களுக்கு நிவாரணம் கிட்டியுள்ளது. அதிக அளவிலான நிலங்கள் மீது விதிக்கப்படும் வரி ஓரளவுக்கு உயர்ந்துள்ளது.

83. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் விதித்துறைகள் மேலும் தெளிவாகவும், முழுமையானவையாகவும் இருக்கும் வகையிலும், சட்டத்தில் காணப்படும் சில குறைபாடுகளைப் போக்கவும் அரசு, சட்டப் பேரவையில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் அன்று தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு ஒன்றைக் கொண்டுவந்தது.



சட்டத்தின் விதிகளிலிருந்து வரி விதிப்பதற்குத் தப்புவதைக் குறைக்க இச்சட்ட முன்வடிவு விழைகிறது. அவை பின் வருமாறு :—

(i) தானே வளர்ந்த மரங்களைத் தவிர ஏனைய மரங் களனைத்தையும் விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு வரி விதித்தல் ;

(ii) அரசுப் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துள்ள வருக்கு அந்த நிலத்தின் உடைமை உரிமை, உரிமை, பற்று எதனையும் அளிக்காமல், அதிலிருந்து வரும் வருமானத்திற்கு வரி விதித்தல்;

(iii) நிலம் என்பதில் தரிசு, மேய்ச்சல் நிலங்களைச் சேர்த்தல்;

(iv) நபர் என்னும் பொருள் விளக்கத்தில் பொதுவான குத்தகைதாரர்களையும் சேர்த்தல் ;

(v) மலர்களுக்கும், காய்கறிகளுக்கும் பயிர்களின் அடிப் படையில் தனியாகக் கட்டணம் வசூலித்தல், அடங்கல் பதிவு களின்படி 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பயிர்களுக்கு விளக்கமளித்தல்;

(vi) தோப்பு என்பதில் விறகு முதலியன போன்ற மரங்களைச் சேர்த்தல் (சவுக்கு, பனைமரம், முந்திரி மரங்கள் போன்றவை) ;

(vii) பொதுவான குத்தகைதாரர்களின் சங்கத்தில் ஒவ்வொரு குத்தகைதாரருக்கும் வரி விதித்தல் ;

(viii) வரி விதிக்கப்பட்டவரின் வருமானத்தில் நிறுவனத் தில் உறுப்பினர்களாக உள்ள உரிய வயதடையாத குழந்தை, வாழ்க்கைத் துணைவர் ஆகியோரது வருமானத்தையும் சேர்த்தல்;

(ix) சொத்துக்களை மாற்றம் செய்யும்போது பினாமி நடவடிக்கைகளைத் தவிர்த்தல், அதாவது

(1) உடன்படிக்கை ஒன்றின் மூலம் தனித்து வாழாத அவரது மனைவிக்கு, (2) உரிய வயதடையாத குழந்தைக்கு, (3) மருமகளுக்கு அல்லது மகனது குழந்தைக்கு (மணமான மகள் அல்லாத) ஒருவரால் நேரிடையாகவோ அல்லது மறைமுக மாகவோ மாற்றப்படும் நிலத்தின் வேளாண்மை வருமானம் வரி விதிப்பிற்கு உட்படுத்தப்படும்.

(x) நிறுவனத்திற்குத் தனியாக வரி விதிப்பதுடன், அவருடைய நிறுவனத்தின் வேளாண்மை வருமானத்தில் ஒவ்வொரு பங்குதாரருக்கும் உள்ள பங்கினையும் மொத்த வேளாண்மை வருமானத்துடன் சேர்த்து, பின் வேளாண்மை வருமான வரி விதித்தல்;

(xi) 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்திற்கு இணையாக காலக் கெடுவை 5 ஆண்டுகளிலிருந்து 8 ஆண்டுகளாக அதிகரிப்பதன் மூலம் வரி விதிப்பிலிருந்து தப்புவனவற்றைக் குறைத்தல்.

காப்பி பயிர் செய்து வரும் வரி விதிப்புக்கு உள்ளானவர்களுக்கு, $1:2\frac{1}{2}$ என்பதிலிருந்து $1:1\frac{3}{4}$ என்று விதியைத்தளர்த்துவதன் மூலம் சாதாரண ஏக்கரை ஸ்டாண்டேர்டு ஏக்கராக மாற்றுவதைப் பொறுத்தவரையில் சில சலுகைகள் வழங்கக் கருதப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளாட்சி அதிகார மன்றங்கள், மத்திய அல்லது மாநில அரசு நிறுவனம், அரசுத் தன்மை வாய்ந்த நிறுவனங்கள், பல்கலைக் கழகம் அல்லது கல்லூரி, அறிவியல் ஆராய்ச்சிச் சங்கங்கள் ஆகியவற்றின் வேளாண்மை வருமானத்திற்கு வேளாண்மை வருமானவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கவும். கடனுக்கான வட்டியைச் செலுத்துவதைப் பொறுத்தவரையில் மேற்கொண்டு நிவாரணம் அளிக்கவும் இச்சட்ட முன்வடிவு விழைகிறது. 1961 ஆம் ஆண்டு மத்திய வருமானவரிச் சட்டத்தின் விதித்துறைகளுக்கு பொருந்தாத பொறுப்புக் கழகங்களுக்கு வரி விதிக்கும் தனி விதித் துறையை இயற்றவும் இது வகை செய்கிறது.

84. 1981 ஆம் ஆண்டு வேளாண்மை வருமானவரிச் சட்ட முன்வடிவு (திருத்தம்) ஆய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 13. நகர்ப்புற நிலவரி

85. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள சில பகுதிகளில் உள்ள நகர்ப்புற நிலங்களைப் பொறுத்த மட்டில் நகர்ப்புற நிலவரி செலுத்தத்தக்கதாகும். இந்த வரி, ரயத்துவாரி, நிலவரி ஏற்பாடு, வீடு வரி, மனை வரி முதலியவற்றிற்குப் பதிலாக விதிக்கப்படுகிறது. இச்சட்டம் சென்னை மாநகரில் 1963 ஜூலை, 1 ஆம் நாளிலிருந்தும், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகராட்சிகளிலும், மதுரை மாநகரிலும் 1971 ஜூலை 1 ஆம் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டது.

86. சென்னை மாநகரில் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வரத் தொடங்கியபோது, 1963 ஜூலை 1 ஆம் நாள் அன்றிருந்த அங்காடி மதிப்பு நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு 0.4 சதவீதம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இச்சட்டம் அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டது. சென்னை மாநகர எல்லையிலிருந்து பதினாறு கிலோ மீட்டரும் உள்ள பகுதிக்கு இச்சட்டம் நீட்டிக்கப்பட்டு கடைசியாக 1975 இல் திருத்தியமைக்கப்பட்டது. 1971 ஜூலை 1 ஆம் நாள் அன்றிருந்த அங்காடி மதிப்பு, நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு அடிப்படையாகப் பின்பற்றப்பட்டது. 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதம் வரை என்ற ஒரே படித்தான வீதம் 0.7 லிருந்து 2.5 சதவீதம் வரை என்ற அளவில் உயர்த்தப்பட்டது. குடியிருப்புக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள், குடியிருப்புக் கல்லாமல் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் ஆகியவற்றிற்கிடையே வேறுபாட்டை ஏற்படுத்தி அவற்றிற்கு வெவ்வேறு வரி வீதங்கள் விதிக்கப்பட்டன.



87. 1975-ல் நகர்ப்புற நிலவரிச் சட்டம் திருத்தப்பட்டதன் விளைவாக நகர்ப்புற நிலவரி உயர்ந்ததை எதிர்த்து, தனிப்பட்டவர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும், ஏராளமான முறையீடுகள் வந்தன. அரசு இம்முறையீடுகளை ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைத்து அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு, வருவாய்த்துறையின் 27—12—1976 ஆம் நாளிட்ட 2625 ஆம் எண் ஆணையில் பல சலுகைகளை அளித்தது. தற்போது வரையறுக்கப்பட்டுள்ளபடி நிலை வரி வீதம் வருமாறு:—

சென்னை மாநகர எல்லையோரப் பகுதி நீங்கலான ஏனைய பகுதிகளில் உள்ள நகர்ப்புற நிலங்கள் அனைத்தும் மாநகர எல்லையோரப் பகுதி.

| | | |
|---|---|---|
| 1. முதல் இரண்டு மனைகள் | இல்லை. | இரண்டு மனைகளுக்கும் அதிகமாக உள்ள பரப்பளவிற்கு. |
| 2. மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு அதிகமாகாத போது | அங்காடி மதிப்பில் 0.7 சதவீதம் | |
| 3. மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு அதிகமாகவும் 10 மனைகளுக்குக் குறைவாகவும் உள்ள போது. | அங்காடி மதிப்பில் 1 சதவீதம் | |
| 4. மொத்தப் பரப்பு 10 மனைகளுக்கு அதிகமாகவும் 20 மனைகளுக்குக் குறைவாகவும் உள்ள போது. | அங்காடி மதிப்பில் 1.5 சதவீதம் | |
| 5. மொத்தப் பரப்பு 20 மனைகளுக்கு அதிகமாக உள்ள போது. | அங்காடி மதிப்பில் 2 சதவீதம் | |

சென்னை மாநகர எல்லையோரப் பகுதியிலுள்ள நகர்ப்புற நிலங்கள் அனைத்தும்.

| | | |
|---|---|---|
| 1. முதல் 3 மனைகள் .. | இல்லை | மூன்று மனைகளுக்கு |
| 2. மொத்தப் பரப்பு 7 மனைகளுக்கு அதிகமாகாத போது. | அங்காடி மதிப்பில் 0.7 சதவீதம் | |
| 3. மொத்தப்பரப்பு 7 மனைகளுக்கு அதிகமாகவும் 10 மனைகளுக்குக் குறைவாகவும் உள்ளபோது. | அங்காடி மதிப்பில் 1 சதவீதம் | |

| | | |
|---|---|---|
| 4. மொத்தப் பரப்பு 10 மனைகளுக்கு அதிகமாகவும் 20 மனைகளுக்கு குறைவாகவும் உள்ள போது. | அங்காடி மதிப்பில் 1.5 சதவீதம் | அதிகமாக உள்ள பரப்பளவிற்கு. |
| 5. மொத்தப் பரப்பு 20 மனைகளுக்கு அதிகமாக உள்ளபோது. | அங்காடி மதிப்பில். 2 சதவீதம் | |

88. இந்தச் சலுகைகளைச் சட்ட ரீதியில் கொண்டு வருவதற்காகத் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்ட முன்வடிவை அரசு கொண்டு வந்தது. அப்போதிருந்த சட்டமன்றம் கலைக்கப்பட்டதால் இச்சட்ட முன்வடிவு, செல்திறனற்றுப்போனது. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்தச்) சட்டமுன் வடிவு, 1980 ஜூலையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. சட்டமன்றத்தின் ஆய்வுக் குழுவிற்கு இது அனுப்பப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

89. சிறு தொழில்கள் செலுத்தும் நகர்ப்புற நிலவரியில் 25 சதவீதமும் ஏனைய தொழில்களைப் பொறுத்தவரையில் 10 சதவீதமும் அரசு 1—7—1975 ஆம் நாளிலிருந்து குறைத்துள்ளது. (வருவாய்த் துறையின் 4—11—1978 ஆம் நாளிட்ட 2516 ஆம் எண் அரசாணையில் குறைத்துள்ளது.)

90. வருவாய்த் துறையின் 25—6—1981 ஆம் நாளிட்ட 1465 ஆம் எண் அரசாணையின்படி, தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம், திருநெல்வேலி நகர்ப்புற கூட்டுப் பகுதிக்கும், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களிலுள்ள ஏனைய பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால், 1—7—1981 ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழும் தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலச் சட்டத்தின் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) கீழும் உள்ள நிலப்பகுதிகள் ஒன்றேயாகும்.

91. விளைச்சல் ஆண்டு ஒன்றுக்கு வரியின் மூலம் பெறப்படும் வருமானம் ரூ. 3.82 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 2.81 கோடி வசூல் செய்யப்பட்டது. 1981-82-ஆம் ஆண்டில் ரூ. 3.50 கோடி வசூல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

92. 1982-83 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி நிலை அறிக்கையை வைத்து 26—2—1982 அன்று உரை நிகழ்த்தியபோது நகர்ப்புற நிலத்தின் அங்காடி மதிப்பை 1—7—1981 அன்றுள்ளபடி திருத்தியமைத்து அதன் அடிப்படையில் நகர்ப்புற நிலவரி விதிக்கவும் கருதப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. நகர்ப்புற நிலவரிச் சட்டத்தை மேலும் 16 நகரங்களுக்கு நீட்டிக்கவும் கருதப்பட்டுள்ளது.



## 14. நிலச் சீர்திருத்தங்கள்.

### I. நில உச்சவரம்பு:

93. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டம், 6—4—1960 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது (5 பேர்) ஐவர் வரையுள்ள ஒரு குடும்பத்திற்குரிய நில உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும்; (5 பேர்) ஐவருக்கு மேற்பட்டால், அக்குடும்பத்தில் கூடுதலாகவுள்ள ஒவ்வொருவருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் அனுமதிக்கப்படும் என்றும், ஒரு குடும்பத்தில் ஐவருக்கு மேற்பட்டு எத்தனை உறுப்பினர்கள் இருந்தாலும் அக்குடும்பத்திற்குரிய மொத்த உச்சவரம்பு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் வரையறுக்கப்பட்டது. இந்நில உச்சவரம்பு அளவு குறைக்கப்பட்டது. மூலச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள சில விலக்குகள், 1970 ஆம் ஆண்டு 17 ஆம் சட்டத்திலும், பின்னர் இயற்றப்பட்ட திருத்தச் சட்டங்களாலும் நிறுத்தப்பட்டன. ஒரு குடும்பத்திற்குத் தற்போதுள்ள நில உச்சவரம்பு அளவு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். மேற்கூறியவாறு, ஒரு குடும்பத்தில் ஐவருக்கு மேல் இருப்போருக்காக அனுமதிக்கப்படும் நிலத்தின் அளவு உட்பட ஒரு குடும்பத்திற்குரிய நில உச்சவரம்பின் மொத்த அளவு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். உபரி நிலங்களைக் கையகப்படுத்துதல், பகிர்ந்தளித்தல் ஆகியவற்றில் 31—12—1981 ஆம் நாளன்று இருந்தவாறு ஏற்பட்ட பணி முன்னேற்றம் குறித்த விவரம் பின்வருமாறு:—

| | ஏக்கர். |
|---|---|
| (i) உபரியாகவுள்ளது என்று அறிவிக்கப்பட்ட நிலத்தின் பரப்பு (நிலத்தைக் கையகப் படுத்துவதற்கு முன்னரும், கையகப் படுத்திய பின்னரும் ரத்து செய்யப்பட்ட பரப்பைக் கழிக்கவும்.) | 1,36,641 |
| (ii) கையகப்படுத்தப்பட்ட பரப்பு .. .. | 1,30,416 |
| (iii) நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு முன்னரும் கையகப்படுத்திய பின்னரும் தடை ஆணை விதிக்கப்பட்ட பரப்பு. | 1,01,448 |
| (a) உபரி நிலங்களை ஒருவகை செய்யும் விதிகளின் கீழ் தகுதி வாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு. | 88,907 |
| (b) தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட பரப்பு. | 4,041 |

| | | ஏக்கர். |
|---|---|---|
| (c) உபரி நிலங்களை ஒருவகை செய்யும் விதிகளைச் சேர்ந்த 13 ஆம் விதியின்படி ஒதுக்கி வைக்கப்பட்ட நிலத்தின் பரப்பு. | 8,500 | ,, |

| (iv) பயனடைந்தோர். | எண்ணிக்கை. | ஏக்கர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) ஆதி திராவிடர்கள் | 29,028 | 32,351 |
| (2) பழங்குடியினர் | 26 | 18 |
| (3) ஏனையோர் | 40,068 | 56,538 |
| (v) பகிர்ந்தளிக்கப்படாமலுள்ள நிலத்தின் பரப்பு. | | 18,904 |

உபரி நிலங்களை ஒருவகை செய்யும் விதிகளின்படி ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் பரப்பையும் அரசு குறைத்துள்ளது. இதன்படி, ஒருவருக்கு, 3 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் ஒப்படை செய்யக் கூடும். இது, பலர் நிலம் பெறுவதற்கு வசதியளிக்கும்.

94. தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப் பட்ட தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்புக் கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக 30—8—1980 ஆம் நாளன்று இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. குறிப்பிட்ட சில விலக்குகளுடன் கூடிய நில உச்சவரம்பு கட்டுதல் குறித்த உத்தேசச் சட்டத்தினை ஏய்க்கும் நோக்கத்துடன் 1—1—1958 ஆம் நாளிலிருந்து 6—4—1960 ஆம் நாள் வரையில் உரிமை மாற்றம் செய்யப் பட்ட வேளாண்மை நிலங்களை இச்சட்ட முன்வடிவின் செயல் வரம்பிற்குள் கொண்டு வருவதே, இச்சட்ட முன்வடிவின் நோக்கம் ஆகும். இச்சட்ட முன்வடிவு, சட்டமாக்கப்படுவதன் பயனாக நிலமில்லா உழவுத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந் தளிக்க இயலும் வண்ணம் உபரி நிலங்கள் கிடைக்கப்பெறும். ஆயினும் இச்சட்ட முன்வடிவிற்கு குடியரசுத் தலைவரின் இசைவு அளிக்கப் பெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ii) இந்திய அரசு, பின்வரும் காரணங்களைத் தெரிவித் துள்ளது:—

(அ) செயல்திறன் அற்றவை என்று இச்சட்ட முன் வடிவினால் செய்யக் கருதியுள்ள உரிமை மாற்றங்கள் ஏறத் தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டவையாகும் என்றும், அன்றிலிருந்து இன்றுவரையிலுள்ள கால அளவில் பலமுறை உரிமை மாற்றம் செய்து கொடுக்கப்பட்டிருக்கலாம் என்றும், சட்டத்திலிருந்து தப்பிக்கும் நோக்கத்துடன் முதற்கண் உரிமை மாற்றம் செய்து கொடுத்ததில் தற்போதுள்ள உரிமை யாளருக்கு சம்பந்தமில்லாதிருக்கலாம்;





(ஆ) குறைந்தளவு நிலம் வைத்திருப்பவர்களுக்கும், உண்மையான உழவர்களுக்கும் விலக்களிக்கப்பட்டால், எஞ்சி யிருப்பவர்கள் வெகு சிலராக இருக்கும். எனவே, இச்சட்ட முன்வடிவில் செயல்படுத்த கருதியுள்ளவாறு தனிநடவடிக்கை எடுப்பதற்காக இச்சட்ட முன்வடிவை இயற்றுவதற்கு தக்க காரணம் இல்லை;

(இ) நிலங்கள் பாகப்பிரிவினை செய்யப்படுவதன் விளைவாக, அவை உச் வரம்புச் சட்டத்தின் கீழ் வராததால், இப்பாகப்பிரிவினை தொடர்பான விதித்துறைகளைப் பரிசீலிக்கு மாறு இந்திய அரசு எவ்வப்போது இம்ம நில அரசிடம் வலியுறுத்திக் கூறியுள்ளது. பாகப்பிரிவினை வாயிலாகச் செய்து பெற்ற உரிமை மாற்றங்கள் விலக்கானது. பாரபட்சமான தாகவும், இச்சட்ட முன்வடிவின் செயல் நோக்கத்திற்கு முரணானதாகவும் உள்ளது.

(ஈ) வலுக்கட்டாயமாக காரணங்கள் இருந்தாலொழிய மற்றபடி, முடிந்துபோன நீண்ட நாளைய நில உரிமைகளால் மத்திய அரசு தலையிடுவதில்லை. இச்சட்ட முன்வடிவில் அத்தகைய காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை;

(உ) அரசியலமைப்புச் சட்டத்தின் 31-A (1) பிரிவின் இரண்டாம் வரம்பு நிபந்தனையில் சொல்லியபடி யாதொரு நிலத்தின் அங்காடி மதிப்புக்கு இழப்பீடு தொகை செலுத்து வதற்கான விதித்துறை, உத்தேச சட்டத்தில் இல்லாததால், இது மேற்சொன்ன வரம்பு நிபந்தனைக்கு முரணாக உள்ளது. எனவே இச்சட்ட முன்வடிவு அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதொரு மூலச்சட்டத்தை அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாம் விவர அட்டவணையில் சேர்ப்பதாலேயே, சட்ட முன்வடிவில் செய்யக் கருதிய திருத்தத்தைக் காப்பாற்றுவ தாகாது.

(iii) இக்கருத்துக்கள் முன்னர் 1981-ல் மத்திய அரசு எழுதிய கடிதத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அரசும் அதற்கு ஏற்ற பதிலை எழுதி அனுப்பியது எனினும், சட்ட முன்வடிவுக்கு குடியரசுத் தலைவரின் இசைவு அளிப்பது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம்.

95. இச்சட்டத்தின் கீழ் 4,37,117 குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்; பதிவு செய்யப்பட்ட நிலத்தின் மொத்தப் பரப்பளவு 6,26,538 ஏக்கராகும். 1981 செப்டம்பர் இறுதியில் இருந்தவாறு, மொத்தம் 7,618 விண்ணப்பங்கள் குறித்து விசாரணை முடிவுறாமல் இருந்தது. 1,28,464 விண்ணப்பங்கள் ஒருவகை செய்யப்பட்டன.

[1981 மார்ச் 18

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல் சட்டம்.)

96. 31—1—1982 ஆம் நாள் வரையில் குடியிருப்புப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன; அதன் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர்கள் .. .. .. | 98,540 |
| (2) | பழங்குடியினர் .. .. .. | 243 |
| (3) | பிற்பட்ட வகுப்பினர் .. .. .. | 48,910 |
| (4) | ஏனையோர் .. .. .. .. | 31,032 |
| | மொத்தம் .. | 1,78,725 |

1,151 வழக்குகள் விசாரணையில் உள்ளன; 404 வழக்குகளைப் பொறுத்தமட்டில் நீதிமன்றத்தில் நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கிராமக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உரிமை வழங்கல்) சட்டம்.

97. 31—1—1982 வரையில் குடியிருப்புப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர்கள் | 5 |
| (2) | பிற்பட்ட வகுப்பினர் | 222 |
| (3) | ஏனையோர் | 47 |
| | மொத்தம் .. | 274 |

301 வழக்குகள் விசாரணையில் உள்ளன, எந்த ஒரு இனம் குறித்தும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படவில்லை.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொதுப்பொறுப்புக் கழகங்கள் (வேளாண் நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டம்.

98. 28—2—1982 ஆம் நாளன்று இருந்தவாறு, 57,564 குத்தகைதாரர்களையும், 1,39,099 ஏக்கர் நிலத்தையும் கொண்ட 9,840 பொதுப்பொறுப்புக் கழகங்கள் சரிபார்க்கப்பட்டுள்ளன. 4,786 பினாமி குத்தகைதாரர்கள் இருப்பதும், பயிரிடுவோர் 2,344 பேர் நில உச்சவரம்புக்கு மிகையாக மொத்தத்தில் 16,290.89 ஏக்கர் நிலம் வைத்திருப்பதும் இச்சரிபார்ப்பின் மூலம் தெரிய வந்தது. இதில் 9 பயிரிடுவோர்



1982 மார்ச் 18]

குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. 1,720 பினாமி குத்தகைதாரர்கள், 4,056 பயிரிடுவோர்கள் ஆகியோர் நில உச்சவரம்புக்கு மிகையாக வைத்திருந்த 10,941.99 ஏக்கர் நிலம் ஒருவகை செய்யப்பட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.

99. கிழக்கு தஞ்சாவூரைச் சேர்ந்த வட்டங்கள் தவிர பிற பகுதிகளில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் சட்டம் செயலில் உள்ளது.

இச்சட்டத்தின்படி வழங்கப்படும் ஊதியத்தின் அளவு 1979 அக்டோபரில் உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம்

100. (இச்சட்டம், கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்துக்குப் பொருந்தத்தக்கது) வருவாய் துறையின் 24—2—1979 ஆம் நாளிட்ட 420 ஆம் எண் அரசாணை மூலம் (இது பின்னர் வருவாய்த் துறையின் 1—9—1981 ஆம் நாளிட்ட 1900 ஆம் எண் அரசாணையின் மூலம் திருத்தப்பட்டது) தனி நபர் குழு அளித்த அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி, கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க ஊதியங்கள் குறித்த விவரம் வருமாறு.—

உரிய வயது வந்தோர்—

| | |
|---|---|
| உழுதல், விதைத்தல். நாற்றுப் பறித்தல், செப்பமிடல், களைதரித்து ஒழுங்கு படுத்துதல், நிலங்களையும் வாய்க்கால் களையும பராமரித்தல், விதைப்பதற்கும், நடவு நடுவதற்கும் நிலத்தைத் தயார் செய்தல், இடுபொருட்களை அல்லது விளை பொருட்களை தலையில் சுமந்து செல்லுதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள். | நாள் ஒன்றுக்கு 7 லிட்டர் நெல்லும் ரூ. 2.80—ம் வழங்கப்படும். அல்லது நாள் ஒன்றுக்கு 9 ரூபாய் வழங்கப்படும். |
| நாற்றுநடுதல், களையெடுத்தல் அல்லது திட்டவட்டமாக குறிப்பிடப்படாத ஏனைய வேளாண் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு. | நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல்லும் ரூ. 1.80—ம் வழங்கப்படும். அல்லது நாள் ஒன்றுக்கு 7 ரூபாய் வழங்கப்படும். |

உரிய வயதடையாதவர்கள்—

| | |
|---|---|
| அனைத்துவகை வேளாண்மைத் தொழில்களுக்கும். | நாள் ஒன்றுக்கு 4 லிட்டர் நெல்லும் ரூ. 1.50 ரூபாயும் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு 5 ரூபாய் வழங்கப்படும், |

101. ''உழுதல்'' தவிர ஏனைய வேளாண் பணிகளுக்குரிய வேலை நேரம் நாளொன்றுக்கு 7 மணி நேரமாகும். ''உழவுக்கு'' மட்டும் நாளொன்றுக்கு 5 மணி நேரமாகும்.

### 15. நகர்ப்பகுதி உச்சவரம்பு,

102, கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, பல்வேறு காரணங்களால், நகர்ப்பகுதி மக்கள் தொகை பெருமளவு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், கிராமங்களிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்ற தொழிற்சாலைகளும், ஏனைய நிறுவனங்களும் வளர்ந்து வருகின்றபடியால், கிராம மக்கள், கிராமங்களைவிட்டு வெளியேறுகின்றனர். சிறு நகரங்கள், நடுத்தர நகரங்கள், ஆகியவற்றில் மக்கள் சென்று குடியேறுவதைவிட பெரு நகர்களிலும், அதிகப் பரப்பளவுள்ள மாநகர்களிலும் மக்கள் சென்று குடியேறுவது அதிகமாகும். இதனால் கட்டுக்கடங்காது குடிசைகள் பெருகிவருவதாலும், சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழல்கள் பெருகிவருவதாலும், பொருளாதார சமூகப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே அரிதாகக் கிடைக்கும் நகர்ப்பகுதிகளைப் பயன்படுத்துவதைப் முறைப்படுத்தி, முறையாக மேம்படுத்துவது, ஒரு சிலரிடமே நிலங்கள் குவிந்து, அதனால் ஊகவாணிகம் நடப்பதைத் தடுப்பதும் அவசியமாகும் என்று கருதப்பட்டது.

103. நகர்ப்பகுதிகளிலுள்ள நிலங்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. இதன் பலனாக அரிதிற் கிடைக்கும் மதிப்பு மிக்க நகர்ப்புற நிலங்களை வாங்கி முடக்கி வைப்பதும், பின்னர் அதிக விலைக்கு விற்க முயலும் ஊகவாணிகம் நடத்துவதும் பெருகிவிட்டது. தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கலாம் என்றும், நியாயமான அளவிற்கு அதிகமாக நகர்ப்பகுதி நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்யலாம் என்றும், இவ்வாறு செய்தால் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்று கருதப்பட்டது, தனியாரின் உடைமையில் உள்ள நிலங்களின் அளவுக்கு உச்சவரம்பு விதித்தும், வீடுகளின் அளவை வரையறுத்தும் நகர்ப்பகுதி நிலங்கள் அனைத்தையும் சமுதாயவுடைமையாக்குவதே இதன் நோக்கமாகும். இந்நோக்கத்துடன், தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்–முறைப்படுத்தல்) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது.



104. இச்சட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் வருமாறு:—

(i) தனிப்பட்ட ஒருவர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம் ஒரு கம்பெனி அல்லது ஒரு குழு அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு சங்கம், வைத்திருக்கின்ற காலி நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல்:

(ii) எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகளின் பரப்புக்கு உச்சவரம்பு விதித்தல்:

(iii) நகரப்பகுதி சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுப்பதை முறைப்படுத்தல் ஆகியவையாகும்.

105. பொதுமக்கள் அடைந்த இடர்ப்பாடுகள் குறித்து எண்ணற்ற முறையீடுகளும், பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இவற்றைக் கருத்திற்கொண்டு, குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டத்தை ரத்து செய்து, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்–முறைப்படுத்தல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) அரசு, இயற்றியது. நகர்ப்பகுதிச் சொத்துக்களைச் சமுதாயவுடைமை ஆக்குவதென்ற குறிக்கோளைக் கடைபிடிக்கும் பொருட்டும், பழைய சட்டத்தின் இடர்பாடான விதித்துறைகளின் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை நீக்கும் பொருட்டும் பொது மக்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்கும் வண்ணம் இச்சட்டம் இயற்றப்பட்டது.

106. சட்டத்தின் விதித்துறைகளை எளதாக்கியதாலும், கட்டிட வரைபடங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களின் அனுமதியை பெறுவதில் உள்ள இடர்பாடுகள் அகற்றப்பட்டதாலும், கட்டிடப் பணிகள் விரைந்து நடைபெறத் தொடங்கியுள்ளன.

107. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நிலச் (உச்சவரம்பு கட்டுதல்–முறைப்படுத்தல்) சட்டத்தின் 14, 15, 20 (3), 27, 48 ஆகிய பிரிவுகள் நீங்கலாக ஏனைய பிரிவுகள் 3—8—1976 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன. 14, 15, 20 (3), 27, 48 ஆகிய பிரிவுகள் 17—5—1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு 14 ஆம் சட்டத்தின் மூலம் 20(3) பிரிவு திருத்தப்பட்டு அது 1—2—1979 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

108. புதிதாக இயற்றப்பட்ட தமிழ்நாடு 197 8ஆம் ஆண்டு நகர்ப்பகுதி (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்தல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 24/1978) சென்னை நகர்ப்புற கூட்டுப்பகுதியின் பரப்பு 1400 கி. மீட்டரிலிருந்து 575 கி. மீட்டராகக் குறைக்கப்பட்டு உள்ளது. ஏனைய நகர்ப்புற

கூட்டுப் பகுதிகளைப் பொருத்தமட்டில், எல்லையோரப் பகுதிகளை நீக்கியதன் மூலம் அவை மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்துள்ளன.

109. நிர்வாக அமைப்பு:—நிலச் சீர்திருத்தத்துறை ஆணையர் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பு வகிக்கிறார். நகர்ப்பகுதி நில உச்சவரம்பு இயக்குநர் அலுவல் முறையில் நிலச் சீர்திருத்தத் துணை ஆணையாளராக எல்லா விவகாரங்களிலும் ஆணையருக்கு உதவி செய்கிறார். மாவட்ட துணை ஆட்சியர் பதவித் தரத்தில் 17 தகுதி வாய்ந்த அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| சென்னை | 4 |
| சென்னை மாநகர எல்லையோரப்பகுதி | 6 |
| மதுரை | 2 |
| கோயம்புத்தூர் | 2 |
| சேலம் | 1 |
| திருச்சிராப்பள்ளி | 1 |
| திருநெல்வேலி | 1 |

திருநெல்வேலியில் தகுதிவாய்ந்த அதிகாரியாகப் பணியாற்ற மாவட்டத் தனித்துணை ஆட்சியர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். ஏனைய நகர்க் கூட்டுப் பகுதிகளில் இச் சட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் பணியாற்ற நகர் பகுதி நிலவரி உதவி ஆணையாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

110. இச்சட்டம் பின்வரும் நகர் கூட்டுப் பகுதிகளில் செயலிலுள்ளது:—

1. சென்னை
2. மதுரை
3. கோயம்புத்தூர்
4. திருச்சிராப்பள்ளி
5. சேலம்
6. திருநெல்வேலி



111. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகர் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்துவர அனுமதிக்கப் பட்ட உச்சவரம்பின் விவரம் வருமாறு:—

தமிழ்நாடு சட்டம் 24/1978.

| நகர்க் கூட்டுப் பகுதி. | வகைப் பாடு. | தனிப் பட்ட ஒருவர். | ஒரு குடும் பம். | தொழில் நிறு வனம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (சதுர மீட்டர்கள்.) | | |
| சென்னை .. .. | I | 500 | 2,000 | 2,000 |
| மதுரை .. ..<br>கோயம்புத்தூர்<br>திருச்சிராப்பள்ளி<br>சேலம் .. .. | II | 1,500 | 3,000 | 3,000 |
| திருநெல்வேலி | III | 2,000 | 4,000 | 4,000 |

112. தனிப்பட்ட ஒருவரைப் பொறுத்தமட்டில், ''குடும்பம்'' என்பது, அத்தனிப்பட்ட நபர் அவருடைய மனைவி அல்லது கணவன், அவர்களுடைய உரிய வயதடையாத திருமணமாகாத குழந்தைகள் ஆகியோரை கொண்டது எனப்படும். கணவன், மனைவி, அவர்களுடைய உரிய வயதடையாத திருமணமாகாத இரு குழந்தைகள் கொண்ட ஒரு குடும்பத்தில், ஒவ்வொருவரும் 500 சதுர மீட்டர் (அதாவது 2,000 சதுர மீட்டர்) காலி நிலத்தைச் சென்னை நகர்க் கூட்டுப் பகுதியில் வைத்துக் கொள்ளலாம். சென்னை நகர்க் கூட்டுப் பகுதியில் இருவர் அடங்கிய ஒரு குடும்பம் உச்சவரம்பாக 1,000 சதுர மீட்டர் நிலத்தையும் மூன்று பேர் உடங்கிய ஒரு குடும்பம் வச்சவரம்பாக 1500 சதுர மீட்டர் நிலத்தையும் வைத்துக் கொள்ளலாம். ஏனைய நகர்க்கூட்டுப் பகுதியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளத் தக்க நிலத்தின் உச்சவரம்பு விவர அறிக்கையின் (4) ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய வயதடையாதவர்கள் உச்ச வரம்பிற்குட்பட்ட காலி நிலத்தை வைத்துவரத் தகுதியுடையவராவார். உரிய வயதடைந்த மகன்கள், உரிய வயதடைந்த திருமணமாகாத மகள்கள், பிரிவினையாகாத இந்து கூட்டுக் குடும்பத்தின் நேர்வில் அனுமதிக் கப்பட்டுள்ளது போல் அறிவிக்கப்பட்ட நாளில் கூட்டுக் குடும்பச் சொத்தில் தங்களது பங்கினை பெயரளவில்

வைத்துக் கொள்ள தகுதி உடையவர்களாவர். பிரிவினையாகாத இந்துக் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டுள்ள இச்சலுகை கிருத்துவ, முகம்மதிய மதத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

113. ஒரு கட்டிட ஒழுங்குமுறைப் பரப்பு 500 சதுர மீட்டர் என்று ஒரே படித்தாக அனுமதிக்கப்படுகிறது. குடியிருப்பு வீட்டுடன் உள்ளதும், 1976 ஆகஸ்ட்டு 3 ஆம் நாளுக்கு முன் அல்லது அந்நாளன்று கட்டப்பட்டதுமான ஒரு கட்டிடத்திற்கு இணைந்த நிலப்பகுதியாக கூடுதலாக 500 சதுர மீட்டர் அனுமதிக்கப்படுகிறது. மற்றும் எக்கட்டிடம் தொடர்பாக வகுதிவாய்ந்த அதிகாரியின் ஒப்புதலுடன் குடியிருப்புப் பகுதியைச் சேர்த்துக் கட்டுவதற்காக வரைபடம் பெறப்பட்டுள்ளதோ அக்கட்டிடம் தொடர்பாகவும் மேற்சொன்னவாறு கூடுதலாக இணைந்த நிலப்பகுதியாக அனுமதிக்கப்படுவதற்குப் பொருந்தும்.

114. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப் பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்தல்) விதிகளின் 3 ஆம் விதியின்படி முறையே 100, 250, 300 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலங்கள், முறையே ஒரு குடும்பம் இரண்டு, ஐந்து குடும்பங்கள் பயன்படுத்தும் பாதையாக இருந்தால் அவற்றை அவர்கள் அவ்வாறு வைத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

115. எந்நிலங்கள் தொடர்பாக வரைபடங்களுக்கு 3—8—1976 ஆம் நாளுக்கு முன்னர் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதோ அந்நிலங்களை வைத்துள்ள நபர்கள் அத்தகைய மிகையான காலி நிலத்தை பிறருக்கு விற்பனை செய்யும் பொருட்டு, நில உச்சவரம்புக்கு உட்பட்டு, வைத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

116. இச்சட்டத்தின் செயல் வரம்பிலிருந்து, பயிரிடும் நிலங்கள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. பயிரிடப்படாத நிலமாகப் பெருந்திட்டத்தில் காட்டப்பட்டு, அவை தொடர்ந்து பயிரிடும் நிலமாக பயன்படுத்தப்பட்டு வருமானால், அந்நிலங்களுக்குச் இச்சட்டம் பொருந்தாது. ஆனால், வேளாண்மை அல்லாத வேறு பணிகளுக்காக இந்நிலங்கள் பயன்படுத்தப்படுமானால், இச் சட்டம் அத்தகைய நிலங்களுக்குப் பொருந்தும்.

117. விற்பனைப் பத்திரம், ஏனைய பத்திரங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் காலி நிலங்களா அல்லது பயிரிடும் நிலங்களா என்பது குறித்து பொருத்தமான அதிகாரிகள் சரிபார்க்கப் பயன்படும் வகையில், 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்வதற்காகப் பத்திரங்களை தாக்கல் செய்யும்போது உரிமை மாற்றம் செய்து



கொடுப்பவரும் செய்து கொடுக்கப் பெறுபவரும், எல்லா நேர்வுகளிலும் படிவம் XIII-ல் அமைந்த உறுதிமொழியும் இரு நகல்களைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று பத்திரப் பதிவு செய்யும் அதிகாரிகள் வலியுறுத்த வேண்டும் என்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

118. உச்சவரம்பிற்குக் கூடுதலாகக் காலி நிலம் வைத்துள்ள எந்த நபரும், அவர் அவ்வாறு வைத்துள்ள நிலம் குறித்து, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல் முறைப்படுத்தல்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி, விவர அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும், இச்சட்டத்தில் 11 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின்படி அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் மட்டுமே அவர் அந்நிலத்தை முழுமையாகவோ அதன் ஒரு பகுதியையோ விற்பனை, அடமானம், கொடை, குத்தகை அல்லது ஏனைய பிற வழிகளில் உரிமை மாற்றம் செய்ய முடியும்.

119. இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று உச்சவரம்பிற்குக் கூடுதலாகக் காலி நிலம் வைத்துள்ள ஒவ்வொருவரும், அவ்வாறு கூடுதலாக வைத்துள்ள நிலம் குறித்த அறிக்கை ஒன்றை அப்பகுதியின் அதிகார வரம்பைப் பெற்றுள்ள தகுதி வாய்ந்த அதிகாரியிடம் தாக்கல் செய்யவேண்டும், பொதுமக்களும், நிறுவனங்களும், வணிகபேரவைகளும் முறையீடு செய்ததன் காரணமாக, இந்திய குடியரசு தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டத்தின்படி 6 (1) விவர அறிக்கையைத் தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாள் மேற்கொண்டும் 697 நாட்கள் நீட்டிக்கப்பட்டது. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப் பகுதி நிலச் (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்தல்) சட்டத்தின் செல்திறன் 14—8—1978 ஆம் நாளோடு முடிவடைந்தது. பொது மக்களும், வணிகப் பேரவைகளும் கேட்டுக் கொண்டதன் பேரில், இச்சட்டத்தின் செல்திறன், இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி மேலும் ஒரு திங்கள் கால அளவிற்கு அதாவது 14—9—1978 ஆம் நாள் வரையில் நீட்டிக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழும், 1978 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழும் 15,736 விவர அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. 1978 ஆம் ஆண்டுச் சட்டத்தின் விதித்துறைகளின்படி தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கைகளில் 12,005 விவர அறிக்கைகள் உச்சவரம்பு அளவிற்குள் வருகின்றன என்று அறிவிக்கப்பட்டது. எஞ்சியுள்ள 3,731 விவர அறிக்கைகள் பொருத்தமான அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தாக்கல் செய்யப்பட்டுள்ள விவர அறிக்கைகளையொட்டி, கையகப்படுத்தக் கிடைக்கப்பெறும் உபரியாகவுள்ள காலி நிலங்களின் பரப்பளவு 4,61,57,213 சதுர மீட்டர் ஆகும். பொருத்தமான அதிகாரிகள் அந்த விவர அறிக்கைகளைப் பரிசீலித்து வருகின்றனர். 36,21,645 சதுர மீட்டர் பரப்பளவுள்ள காலி நிலம் உபரியாகவுள்ளது என்று அறிவிக்க, 258 விவர அறிக்கைகள் மீது அவர்கள்

நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த விவர அறிக்கைகள், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற பகுதி நில (உச்சவரம்பு-கட்டுதல், முறைப்படுத்தல்) சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 133 இனங்களில் உபரியான 17,58,046 சதுர மீட்டர் பரப்பளவுள்ள காலி நிலம் குறித்து மேற்படி சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவின் கீழ் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. 81 இனங்களைப் பொறுத்த மட்டில், 13,75,433 சதுர மீட்டர் பரப்பளவுள்ள காலி நிலம் சுவாதீன உரிமையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பொருத்தமான அதிகாரிகள், மேற்படி சட்டத்தின் 9 முதல் 11 வரையிலான பிரிவுகளின்கீழ் அந்த விவர அறிக்கைகளைப் பரிசீலித்து வருவதால், உபரியாக உள்ள நிலம் என்று கிடைக்கப்பெறும் காலி நிலத்தின் பரப்பளவு எவ்வளவு என்பதை இந்நிலையில் மதிப்பிட இயலாது. தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், 1—12—1981 அன்றுள்ளபடி 349 இனங்களில், 1,33,42,264 சதுர மீட்டர் பரப்பிற்கு அரசு விலக்களித்துள்ளது. மேலும், 429 பேருக்கு 6,29,880 சதுர மீட்டர் பரப்பிற்கு விலக்களித்துள்ளது.

120. நகர்க் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றிலும் கையகப் படுத்தப்பட்ட காலி உபரி நிலங்களுக்கு வழங்கத்தக்க ஈட்டுத் தொகை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதி | தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டம். | |
|---|---|---|
| | வகை. | வழங்கத்தக்க தொகை. |
| (1) | (2) | (3) |
| சென்னை .. .. | I | ஒரு சதுர மீட்டருக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல். |
| மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் | II | ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய்க்கு மேற்படாமல். |
| திருநெல்வேலி | III | ஒரு சதுர மீட்டருக்கு 15 ரூபாய்க்கு மேற்படாமல். |



121. இச்செயற்நோக்கத்திற்காக இம்மாநிலத்திலுள்ள நகர்க் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றும், முறையான நகர்ப் பகுதி வளர்ச்சிப் பணியையும், அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக நகர்ப்புறக் கூட்டுப்பகுதியில் அப்பகுதி அமைந்துள்ள இடம், பகுதி, நகர்க் கூட்டுப் பகுதியில் அமைந்துள்ள அந்நிலத்தின் பொதுப் பயன், நகர்ப்புறக் கூட்டுப் பகுதியிலுள்ள அந்நிலத்தின் பயன்பாடு, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கீழே கொடுக்கப் பட்டுள்ளவாறு வெவ்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன; அவற்றின் விவரங்கள் வருமாறு:—

| நகர்ப்புறக் கூட்டுப் பகுதி. | மண்டலங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| சென்னை .. | 20 |
| மதுரை .. | 10 |
| கோயம்புத்தூர் .. | 20 |
| திருச்சிராப்பள்ளி .. | 11 |
| சேலம் .. | 13 |
| திருநெல்வேலி .. | 14 |

அரசு எடுத்துக்கொண்ட உபரி காலி நிலங்களுக்குத் தொகை வழங்குவது தொடர்பாக, இதுவரையில் 3·01 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

122. கையகப்படுத்தப்பட்ட உபரி காலி நிலங்களைப் பொறுத்தவரையில், 12 ஆம் பிரிவின்படி வரையறுக்கப்பட்ட தொகையைப் பெறுவதற்கு யாருக்கு உரிமையுள்ளது என்பது தொடர்பாக எழுந்த தகராறுகள் 13 ஆம் பிரிவின் கீழ் நகர்ப் பகுதி நில நடுவர் மன்றத்திடம் விடப்பட்டுள்ளன என்பதோடு, நடுவர் மன்றம் பிறப்பிக்கும் ஆணைக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுக்களைத் தாக்கல் செய்யலாம். தகுதி வாய்ந்த அதிகாரி, 12 29 ஆம் பிரிவுகளின்படி பிறப்பித்த ஆணையால் பாதிக்கப்படும் எந்த நபரும், நகர்ப்பகுதி நில நடுவர் மன்றத்திடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம் ஏனைய பிரிவுகளின்படி பிறப்பிக்கப் படும் ஆணைகளால் பாதிக்கப்பட்டவர்கள், தங்களது மேல் முறையீடுகளை, மேல்முறையீட்டு அதிகாரியிடம், அதாவது நிலச்சீர்திருத்த ஆணையாளரிடம் தாக்கல் செய்யலாம்.

123. அரசு காலி நிலத்தைக் கையகப்படுத்தும்போது, அந்நிலத்திற்காக வழங்கத்தக்க மொத்தத்தொகையில் 25 சதவீதத் தொகையை அல்லது 25,000 ரூபாயை இவற்றில் எத்தொகை குறைவானதோ அத்தொகையை, உடனடியாக வழங்கவேண்டும். எஞ்சியுள்ள தொகையை, காலி

நிலத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளதாகக் கருதப்படும் நாளிலிருந்து 15 ஆண்டுக்கால அளவில், ஆண்டு ஒன்றிற்கு 6 சதவீத வட்டியுடன் சம ஆண்டுத் தவணைகளில் வழங்க வேண்டும்.

124. மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், அட்டவணையிடப்பட்ட வங்கிகள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சமய அறக்கட்டளை நிறுவனங்கள் முதலியவை வைத்துள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தா.

125. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டத்தின் 20 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் விதித்துறைகளைச் செயற்படுத்தியதில் நடைமுறை இடர்ப்பாடுகள் இருந்தன. இவ்விடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டு, மேற்கூறிய 20 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவிற்குப் பதிலாக தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப் பகுதி நிலத் (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்தல்) (தமிழ்நாடு சட்டம் 11/1979) திருத்தச் சட்டத்தின் மூலம் புதிய உட்பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. பொது அறக் கட்டளைகள் அல்லது சமயப் பொறுப்புக் கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) எதுவும், உச்சவரம்புக்குக் கூடுதலாக உள்ள நிலங்களை முழுமையாகவோ அல்லது அவற்றில் ஒரு பகுதியையோ, விற்பனை செய்தல், அடைமானம் வைத்தல், தானமாகக் கொடுத்தல், குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றின் மூலமோ அல்லது பிற வழிகளிலோ உரிமை மாற்றம் செய்யக் கூடாது என்றும் அவ்வாறு செய்யப்படும் உரிமை மாற்றம் சட்டப்படி செல்லாது என்றும் இச்சட்டம் வகை செய்கிறது: மேலும், பொது அறக்கட்டளைகள் அல்லது சமயப் பொறுப்பு கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) வைத்துள்ள நிலங்கள் பொது அறப்பணிகளுக்கு அல்லது சமயப் பணிகளுக்குத் தேவைப்படுவதும் பயன்படுவதும் அற்றுப்போகுமானால், மேற்கூறிய தமிழ்நாடு சட்டத்தின் விதித்துறைகள் அவற்றிற்குப் பொருந்தும்; மேற்கூறிய தமிழ்நாடு சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் விதித்துறைகளுக்கிணங்க, அத்தகைய உபரி காலி நிலங்களை, அரசு கையகப்படுத்தும்.

126. பொதுமக்கள் நலன் கருதியும், யாதொரு தனி நபருக்கு ஏற்படும் வரம்பிற்கு மீறிய இடையூறுகளைக் களையும் பொருட்டும், விலக்களிப்பதற்குரிய அதிகாரங்களை அரசு கொண்டுள்ளது. தனி நபர் ஒருவர், இச்சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்னர், அதாவது 3—8—1976 ஆம் நாளுக்கு முன்னர், அத்தகைய உபரி காலி நிலத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ விற்பனை செய்வதற்காக, மாநில அரசிடம் அல்லது மத்திய அரசிடம் அல்லது மத்திய அரசுக்கு அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள யாதொரு நிறுவனத்திடம்



அல்லது கழகத்திடம் அல்லது யாதொரு கல்வி நிலையத்திடம் அல்லது மருத்துவ நிலையத்திடம் ஒப்பந்தம் செய்திருந்து, அவர் செய்துள்ள ஒப்பந்தம் முறையானது என்று அரசு ஐயமறத் தெளிந்தால், அத்தகைய காலி நிலத்திற்கு அரசு விலக்களிக்கலாம். முன் தேதியிட்டு விலக்களிக்கும் பொருட்டு, அரசுக்கு அதிகாரம் அளித்து, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நிலத் (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) திருத்தச் சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 62/1981). இச்சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

127. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு ஏற்பளிக்கவும், அதன் பொருட்டு மிகையாகவுள்ள காலி நிலங்களைத் தொடர்ந்து வைத்து வருவதற்குரிய வரம்பு—நிபந்தனைகளை வரையறுப்பதற்கும் உரிய செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

128. இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்திய உபரி நிலங்களை ஒருவருக்கு தொழில் தொடங்குவதற்காகவோ அல்லது தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டுவதற்காகவோ ஒருவருக்கு ஒதுக்கீடு செய்வதற்கு இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் நலனுக்குப் பயன்படுவதாயின், கையகப்படுத்தப் பட்ட நிலங்களை அதன் பொருட்டு ஒரு வகை செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் உள்ளது. இச்சட்டத்தின்கீழ் கையகப் படுத்தப்பட்ட காலி நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்கு விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

129. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டத்தின் 11(3) ஆம் பிரிவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காலி நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்காக விண்ணப்பதாரர் பலருடைய தகுதி குறித்து மதிப்பிடுவதற்காகவும், அரசுக்குப் பரிந்துரைப்பதற்காகவும். அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலி நிலங்களைப் பொறுத்தமட்டில், வசூலிக்கப்பட வேண்டிய நிலத்தின் மதிப்பு, கீழ்க்காணும் முறையில் தீர்மானிக்கப்பட வேண்டும். அதாவது:

(அ) அரசுத்துறை ; நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு செலவு+பணிக்கட்டண வகையில் 40 சதவீதம்.

| | |
|---|---|
| (ஆ) (i) அரசு முகவரமைப்புகளாலும், அரசால் ஏற்பளிக்கப்பட்ட முகவரமைப்புகளாலும் பொருளாதார நிலையில் நலிந்த மக்களுக்கென்று மேற்கொள்ளப்பட்ட, வீட்டு வசதி திட்டங்கள். | நிலத்தைக் கையகப் படுத்துவதற்குரிய செலவு+பணிக்கட்டண வகையில் 40 சதவீதம். |
| (ii) பொருளாதார நிலையில் நலிந்த மக்கள் தவிர ஏனை | அங்காடி நிலவர மதிப்பையச் செலுத்துவ |

(இ) தொழில் நிறுவனங்கள்:—

| | |
|---|---|
| (i) அரசுத் துறை, கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் | அங்காடி மதிப்பு |
| (ii) தனியார் துறை நிறுவனங்கள். | அங்காடி மதிப்பில் ஒன்றரை மடங்கு. |
| (ஈ) பள்ளிகள், மருத்துவமனைகள் முதலியவை போன்ற நிறுவனங்கள். | நிலத்தை கையகப் படுத்துவதற்குரிய செலவு + பணிக்கட்டண வகையில் 50 சதவீதம். |

130. வருவாய்த்துறையின் 1975 ஆகஸ்டு திங்கள் 22 ஆம் நாளிட்ட 1868 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்ட கட்டளைகளுக்கிணங்க (இது பின்னர் திருத்தப்பட்டது) நிலத்தின் அங்காடி மதிப்பைத் தீர்மானிக்க வேண்டும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தை எடுத்துக் கொள்வதில், நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவர் காலதாமதம் செய்தால், மேலே தீர்மானிக்கப்பட்டவாறு காலி நிலத்தின் மதிப்புடன் அம்மதிப்புத் தொகைக்கு, அந்நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீத வட்டியும் விதிக்கப்படவேண்டும்.

131. ஒருவர் நகர்பகுதி நில உச்சவரம்புக்கு உட்பட்டு நகர்ப்பகுதியில் வைத்திருக்கும் காலி நிலத்தை, பிறருக்கு உரிமை மாற்றம் செய்வதிலுள்ள சிக்கலான நடைமுறையை எளிதாக்கும்பொருட்டு' பழைய சட்டத்தில் 25 முதல் 27 வரையிலான பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன என்பதோடு; விற்பனை, தானம், பரிவர்த்தனை, குத்தகை, அனுபோக உரிமையுடன், உடைமையுடன் கூடிய அடைமானம், ஒப்பந்தக்காலம் முடியுமுன் ஒப்பந்தப் பயனைப் பெறுதல் (Surrender Agreement) செட்டில்மெண்ட் அல்லது வேறுவகையில் காலி நிலத்தை, உரிமை மாற்றம் செய்து கொடுக்கையில், உரிமை மாற்றம் செய்பவரும், உரிமை மாற்றம் செய்யப்பட்டவரும், அவர்கள் வைத்துள்ள காலி நிலத்தின் மொத்தப் பரப்பு குறித்து XIII படிவத்தில் விவர அறிக்கையை இரு படிகளில் பத்திரப் பதிவு அதிகாரியின் முன்னிலையில் தாக்கல் செய்யவேண்டும். அப்போதுதான் உரிமை மாற்றம் செய்வது குறித்த அப்பத்திரம் பதிவு செய்யப்படும் என்பதற்குரிய விதித்துறைகளும், புதிய சட்டத்தின் 27 ஆம் பிரிவில் இயற்றப்பட்டுள்ளன.

132, மேற்கூறிய சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்னர் உள்ளாட்சி அதிகார மன்றங்களிடம் தாக்கல் செய்யப்பட்டவையும், சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தால் அல்லது நகர் நாட்டு புற அமைப்புத் திட்ட இயக்குநரால் ஏற்பளிக்கப்பட்டுள்ளவையுமான, கட்டிட வரைபடங்கள் குறித்த



விண்ணப்பங்களுக்கு நகர்ப்பகுதி நில உச்சவரம்புச் சட்டம் இயற்றப்படவுள்ளதால், அத்தகைய வரைபடங்களுக்கு ஒப்புதல் அளிக்கவேண்டாம் என்று கூறி அரசு, 1976 பிப்ரவரியில் கட்டளைகளைப் பிறப்பித்துள்ளதால் உள்ளாட்சி மன்றங்கள் ஒப்புதல் அளிக்க இயலவில்லை. கட்டிட வரைபடங்களுக்கு ஒப்புதலைப் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு 1976 ஆகஸ்டுத் திங்கள் 3ஆம் நாள் வரையில், பொருத்தமான அதிகாரியால் ஒப்புதல் அளிக்கப்படாமல் இருந்ததால், அவ்விண்ணப்பங்களைத் தாக்கல் செய்த விண்ணப்பதாரர்களுக்கு பல இடர்பாடுகள் ஏற்பட்டன. இதன் காரணமாக, கட்டிட வரைபடங்களுக்கு ஒப்புதல் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு, பின்னர் ஒப்புதலளிக்கப்படுகையில் அவ்விண்ணப்பதாரர், 'இச்சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட உச்சவரம்பிற்கு மிகாமல், மொத்தத்தில் நிலம் வைத்துள்ளவருக்கு' வீடு கட்டும் மனையாக விற்பனை செய்வதற்கென்று அக் காலி நிலத்தை வைத்திருக்கலாம் என்பதற்கு வகைசெய்து மேற்கூறிய 5ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது. இச்சட்டமுன்வடிவு, 1980 ஜூலைத் திங்களில் சட்டபேரவையில், கொண்டுவரப்பட்டது; பின்னர் இது தேர்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.

133. நகர்ப்பகுதி நில உச்சவரம்புச் சட்டம் செயற்படுவது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டும், அதுபற்றி அமைச்சரவைக்கு பரிந்துரைகளை நல்கும் பொருட்டும், அமைச்சரவைத் துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பணி நடைபெற்று வருகிறது.

## 16. தக்காவிக் கடன்களை கணக்கிலிருந்து நீக்கிவிடுதல்—

134. 1979. 1980 ஆம் ஆண்டுகளில் தக்காவிக் கடன் என்பதற்கு உழவர்களுக்கு வழங்கப்பட்ட பலவகையான கடன்களில் ரூ. 27,95,72,419—ஐ அரசு கணக்கிலிருந்து நீக்கிவிட்டது. இதனால் 18,80,445 பேர் பயனடைந்தனர்.

## 17 கட்டிடங்கள்.—

135. வருவாய் துறைப் பணியாளர்களின் பணி நிலையை மேம்படுத்தவும் அவர்களுடைய செயல்திறனை மேம்படுத்துவதற்கான சூழ்நிலையை உண்டாக்கவும், அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் அரசு அக்கறை கொண்டுள்ளது.

(அ) ஃபிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கென்று அலுவலகக் குடியிருப்புகளைக் கட்டுதல்.

136. 1978—79ஆம் ஆண்டிலிருந்து, ஃபிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கென 758 அலுவலக குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் 336 குடியிருப்புகள், கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடியிருப்புகளைக்

கட்டும் பணி நடந்தேறிவருகிறது. 1981–82 ஆம் ஆண்டில் 100 குடியிருப்புகளைக் கட்டுவது குறித்த செயற்குறிப்பிற்கு ஒப்புதல் அளிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது

(ஆ) வருவாய்த்துறைக்கென அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்—

137. (i) கோட்ட அலுவலங்கள்.

கடலூரிலும், திருநெல்வேலியிலும், வருவாய்க்கோட்ட அலுவலகங்களுக்காகப் புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ஏனைய 7 வருவாய்க்கோட்ட அலுவலகங்களுக்காக கட்டிடங்கள் கட்டும்பணி நடைபெற்று வருகிறது. தென் ஆற்காடு மாவட்டம், திண்டிவனம், வருவாய்க்கோட்ட அலுவலகத்திற்காக நிலத்தைக் கையகப்படுத்துவற்குரிய செயற்குறிப்பிற்கு அரசு 1981-82 ஆம் ஆண்டில் ஏற்பளித்துள்ளது.

(ii) வட்ட அலுவலகங்கள்:

விருதுநகர், பாலக்கோடு வட்ட அலுவலகங்களுக்காகப் புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய 10 வட்ட அலுவலகங்களுப் புதிய கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 11 இடங்களில் வட்ட அலுவலகங்கள் முதலியவற்றிற்காகப் புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும், மன்னார்குடி வட்ட அலுவலகத்திற்காகக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கும், நிலங்களைக் கையகப்படுத்துவதற்குரிய செயற்குறிப்பிற்கு அரசு 1981–82 ஆம் ஆண்டில் ஏற்பளித்துள்ளது.

138. வருவாய் அலுவலகங்களில், கழிப்பிட வசதிகளுக்கு வகை செய்வதற்காக 1981–82 ஆம் ஆண்டில் அரசு 10 இலட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது,

139. 1682–83ஆம் ஆண்டில். வருவாய்த்துறை அலுவலகங்களில் பார்வையாளர்கள் அமர்வதற்குரிய கூடங்கள் முதலியவை போன்ற கூடுதல் கட்டிடங்களைக் கட்டுவதற்காக ரூ 10இலட்சம் ரூபாய்க்கும், கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 3.54 இலட்சம் ரூபாய்க்கும், சைக்கிள் நிற்பிடம் கட்டுவதற்கு ரூ. 1 இலட்சம் ரூபாய்க்கும் மின் விசிறி மற்றும் மின் இணைப்புகளுக்கு வகை செய்வதற்காக 2.49 இலட்சம் ரூபாய்க்கும் அனுமதி அளிப்பதற்குரிய செயற்குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது,



ரூ. 5 இலட்சமும் 16 இடங்களில் கால்நடைகளை அடைப்பதற்குரிய பட்டிகளைக் கட்டுவதற்கு ரூ. 2.5 லட்சமும் அனுமதிப்பதற்குரிய செயற்குறிப்பு பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

141. இவை தவிர, தற்போது நீர் வழங்கிவரும் 30 கோட்ட வட்ட அலுவலகங்களுக்கு நீர்குளுமையூட்டும் சாதனங்களுக்கு, வகை செய்வதற்காக ரூ. 3.75 இலட்சம் அனுமதிப்பதற்குரிய செயற்குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது.

142. மோட்டார் ஊர்திகள்.—1981–82ஆம் ஆண்டில், 13 அம்பாசிடர் கார்களை வாங்குவதற்கு ரூ. 61.55 இலட்சமும், நான்கு சக்கர, பெட்ரோலில் ஓடக் கூடிய உலோகக் கூடுகள் கொண்ட இரண்டு சரக்கு ஊர்திகளை (Wagonettes)யும் டீசலில் ஓடக்கூடிய 63 ஜீப்புகளையும், வருவாய்த்துறை அலுவலர்களின் அல்லது முதன்மை பெற்றவர்களின் பயனுக்காக புதிய அனுமதியாகவோ அல்லது பழுதடைந்த ஊர்திகளுக்குப் பதிலாகவோ வாங்குவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது.

143 கார் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ள கூடுதல் மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் ஐவருக்கு அலுவலகப் பயனுக்காக, அம்பாசிடர் காருக்கு வசதி செய்து கொடுப்பது குறித்த செயற்குறிப்பு அரசு பரிசீலித்து வருகிறது.

144. மேசை நாற்காலிகள் முதலியன.— வருவாய்த் துறை அலுவலகங்களில் நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்பட்டு, மேலும் பழுது பார்க்க இயலாத நிலையிலுள்ள பழைய மேசை, நாற்காலி முதலியவற்றை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் புதிய மேசை, நாற்காலிகள் முதலியவற்றை வாங்குவதற்காக, 1981-82ஆம் ஆண்டில், அரசு ரூ. 10 இலட்சம் செலவுத் தொகைக்கு அனுமதி அளித்துள்ளது.

145. வருவாய்த்துறை நிர்வாக ஆணையாளர் அலுவலகத்தில், நூலகப் புத்தகங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க இரும்பு அலமாரிகளை வாங்குவதற்கும், பழுது பார்க்க இயலாத நிலையிலுள்ள மேசை, நாற்காலிகளுக்குப் பதிலாகப் புதிய மேசை, நாற்காலிகள் முதலியவற்றை வாங்குவதற்கும், ரூ,1.20 இலட்சம் செலவுத் தொகைக்கு அனுமதியளிப்பதற்குரிய செயற்குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது.

146. இவைத் தவிர,வருவாய்த்துறை நிருவாக ஆணையாளர் அலுவலகத்திலும்' மாவட்ட ஆட்சியர்கள் அலுவலகங்களிலும், பயன்படுத்த, 160 இரும்பு அலமாரிகளை வாங்குவதற்கு ரூ. 1.86 இலட்சம் செலவிற்கு அரசு அனுமதித்துள்ளது.

ஃபிர்கா வருவாய் ஆய்வாளர்களின் அலுவலகங்கள்— குடியிருப்புகளுக்குரிய மேசை நாற்காலிகள்—

147. 287 ஃபிர்க்கா வருவாய் ஆய்வாளர்களின் அலுவலகங்கள்.—குடியிருப்புகளுக்கு, குடியிருப்பு ஒன்றுக்கு கீழ்க்காணும் அளவிலான மேசை, நாற்காலிகளை வாங்குவதற்கு, 1981–82 ஆம் ஆண்டில், ரூ. 3.27 இலட்சம் செலவுத் தொகைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(i) நாற்காலிகள் இரண்டு.

(ii) மேசை ஒன்று.

(iii) விசுப்பலகை ஒன்று.

(iv) அறிக்கைப் பலகை ஒன்று.

148. மேலும், அந்த அலுவலகங்கள், குடியிருப்புகளுக்கு 287 இரும்பு அலமாரிகளை வாங்குவதற்கு, ரூ 2.85 இலட்சம் செலவுத் தொகைக்கு, அரசு மேலும் அனுமதி அளித்துள்ளது.

149. மேலும், 200 ஃபிர்கா வருவாய் ஆய்வாளர்களின் அலுவலகங்கள்— குடியிருப்புகளுக்கு மேலே குறிப்பிட்ட அளவில், மேசை. நாற்காலி வசதிகளுக்காக, ரூ. 3 இலட்சம் செலவுத் தொகைக்கும், ஃபிர்கா வருவாய் ஆய்வாளர்களின், அலுவலகங்கள் குடியிருப்புகளுக்கு 471 இரும்பு அலமாரிகள் வாங்குவதற்கும் ரூ. 4.68 இலட்சம் செலவுத் தொகைக்கும் அனுமதி அளிப்பதற்குரிய செயற்குறிப்பை அரசு ஆய்ந்து வருகிறது.

பணியாளர்களுக்குரிய வசதிகள்—

150. எழிலகக் கட்டிடங்களில் பணியாற்றும் C மற்றும் D வகை அதிகாரிகளின் மதிய உணவருந்தும் கூடங்களுக்கு நீர்க் குளுமையூட்டும் சாதனங்கள் மேசை நாற்காலிகள் வசதிக்காக ரூ. 0.50 இலட்சம் அனுமதியளிப்பதற்குரிய செயற்குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது.

18. வருவாய்த்துறை அலுவலகங்களில் டெலக்ஸ் பொறியை நிறுவுதல்.—

151. அரசுக்கும், துறைகளின் தலைமையகங்களுக்கும், ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கும் இடையில் செய்தித் தொடர்பு முறையைமேம்படுத்தும் நோக்கத்துடன் வருவாய்த் துறை நிருவாக ஆணையாளர் அலுவலகம், சென்னை, இராமநாதபுரம் நீங்கலாக எல்லா மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றில் டெலக்ஸ் பொறியை நிறுவும் செலவிற்கு ரூ. 1.73 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. சென்னை, இராமநாதபுரம், நீங்கலாக, எல்லா மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், (டெலக்ஸ்) பொறி நிறுவப்பட்டுள்ளது. மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள டெலக்சின் மூலம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் (மதுரை) பணி நடைபெறுகிறது.



19. கூடுதல் பணியாளர்கள்.

152. அவ்வப்போது அதிகரித்து வரும் பணியைப் புரிவதற்காக, 1981–82ஆம் ஆண்டில், வட்ட கோட்ட அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூடுதல் பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

| (1) | வட்ட அலுவலகம். (2) | கோட்டாட்சியர் அலுவலகம். (3) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம். (4) |
|---|---|---|---|
| 1. வட்டாட்சியர் | 16 | | .. |
| 2. வட்டத்துணை ஆட்சியர் | 4 | 2 | .. |
| 3. உதவியாளர் | 42 | 4 | .. |
| 4. இளநிலை உதவியாளர் | 15 | .. | .. |
| 5. தட்டச்சு | 11 | .. | .. |
| 6. வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் பதவித் தரத்தில்.) | .. | .. | 9 |
| 7. துணை நில அளவையர் | 12 | .. | .. |
| 8. இரண்டாம் நிலை கணக்கு அலுவலர். | 10 | .. | .. |
| 9. பதிவேட்டு எழுத்தர் | 6 | .. | .. |
| 10. அடிப்படைப் பணியாளர் | 18 | .. | .. |
| 11. புலவர் அளவையர் | 14 | .. | .. |
| 12. எல். ஆர். டி. | 14 | .. | .. |
| 13. மசால்சி | 3 | .. | .. |
| 14. தள உதவியாளர் | 3 | .. | .. |
| 15. சங்கிலியாளர் | 4 | .. | .. |

20. இடைத் தரகர்களை நீக்குதல்:

153. ஜமீன், இனாம், கீழ்க்குத்தகை, எஸ்டேட் ஆகியவற்றில், உழவர்களுக்கும், அரசுக்கும் இடையே உள்ள இடைத் தரகர்களை நீக்கியது. அரசு மேற்கொண்ட வேளாண்மை சீர்திருத்தங்களில் முக்கியமான சீர்திருத்தம் ஆகும்.

154. இது தொடர்பாக கணிசமான அளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. விவரம் வருமாறு:—

(அ) தமிழ்நாடு 1948-ம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் எண் 26/1948) :—

| (1) | எஸ்டேட்டுக்களின் மொத்த எண்ணிக்கை. (2) | பரப்பு ச.கி. மீட்டர். (3) |
|---|---|---|
| 1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. | 5,134 | 29,931.21 |
| 2. 31—12—1981 வரை இந்த ஏற்பாட்டின்கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 5,134 | 29,931.21 |
| 3. எஞ்சியுள்ளது .. | .. | .. |

(ஆ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம், எண் 26/1963):—

| | | |
|---|---|---|
| 1. எடுத்துக் கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. | 2,094 | 4,151.87 |
| 2. 31—3—1981 வரை இந்த ஏற்பாட்டின்கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 2,058 | 4,123.96 |
| 3. எஞ்சியுள்ளது .. .. | 36 | 27.91 |

(இ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்)சட்டம் (சட்டம் எண் 30/1963) :

| (1) | எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. (2) | பரப்பு சதுர கிலோ மீட்டர். (3) |
|---|---|---|
| 1. எடுத்துக் கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. | 13,565 | 4,049.02 |
| 2. 31—12—1981 வரை இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 13,563 | 4,048.46 |
| 3. எஞ்சியுள்ளவை .. .. | 2 | 0.56 |



26/63 ஆம் சட்டத்தின் கீழ் தொடக்கத்தில் அறிக்கையிடப்பட்டு பின்னர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மேல் முறையீடுகளின்கீழ் வருபவையுமான 3 இனாம் எஸ்டேட்டுகள் 1981—82 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் 30/63 ஆம் சட்டத்தின் கீழ்க்கண்டுள்ள புள்ளி விவரங்களில் தவறாக சேர்க்கப்பட்ட காரணத்தால் 26/63, 30/63 ஆம் சட்டங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் ஓரளவு வேறுபட்டிருக்கின்றன.

(ஈ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள்(நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்(சட்டம் 27/ 963):—

| | | |
|---|---|---|
| 1. எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த பரப்பு. | 13 | 83.20 |
| 2. இந்த ஏற்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 13 | 83.20 |
| 3. எஞ்சியுள்ளவை .. .. | .. | .. |

(உ) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்), சட்டம் (சட்டம் 24/1969) :—

| | | |
|---|---|---|
| 1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. | 10 | 324.10 |
| 2. இந்த ஏற்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு. | 3 | 146.17 |
| 3. எஞ்சியுள்ளவை .. .. | 7 | 177.93 |

155. 36 இனாம் எஸ்டேட்டுகள் குறித்து உயர்நீதி மன்றமும் ஏனைய சிவில் நீதிமன்றங்களும் தடையாணை பிறப்பித்துள்ளன. நீதிமன்றங்கள் இத்தடையாணைகளை நீக்கிய பின்னர்தான் இந்த எஸ்டேட்டுகளில் நிலவரி ஏற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளலாம்.

156. இதுபோலவே இரு உரிமைப் பத்திரங்களுக்குட்பட்ட சிறு இனாம்கள் குறித்து உயர்நீதிமன்றம் தடையாணை விதித்துள்ள காரணத்தால் தடையாணை நீக்கப்பட்ட பிறகு அவற்றை இந்த ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும்.

வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டாக்களும், அவற்றால் எத்தனை பேர் பயனடைந்தனர் என்பதும்.

157. பல்வேறு எஸ்டேட்டு ஒழிப்புச் சட்டங்களைச் சேர்ந்த விதித்துறைகளின் கீழ் 30-11-1981 வரை ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை பின்வரும் விவர அறிக்கை காட்டுகிறது:

| சட்டத்தின் பெயர். (1) | பயனடைந்தோரின் எண்ணிக்கை. (2) | வழங்கப்பட்ட பட்டாக்களின் பரப்பளவு. (ஹெக்டேரில்). (3) |
|---|---|---|
| 1. தமிழ்நாடு 1948ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 26/1948). | 23,33,840 | 18,79,869-72-00 |
| 2. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம். | 3,55,963 | 1,93,741-22-05 |
| 3. தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு, குத்தகைக் கிராமங்களின் (நீக்குதல் — ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம். | 6,003 | 5605-91-50 |
| 4. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம். | 5,11,120 | 3,23,223-86-50 |
| 5. கூடலூர் 1969ஆம் ஆண்டு ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் சட்டம் 24/1969). | 6,462 | 10,771.00.00 |

**எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டங்களின் செயல்வரம்பிற்கு அப்பால் பட்டா வழங்குதல்:—**

158. தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் செயலுக்கு கொண்டு வரப்பட்ட பின்னரும் பட்டா வழங்குவதற்குரிய நடைமுறைகள் நிபந்தனைகளை தளர்த்தி நிர்வாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பின்னரும், இச்சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டில் உள்ள நிலங்களைப் பல ஆண்டுகளாக தங்களது அனுபோகத்தில் வைத்து அனுபவித்து வரும் பலருக்கு பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஏனெனில் இச்சட்டத்தின்கீழ் அல்லது அரசின் ஆணைகளின்கீழ் பட்டா வழங்குவதற்குரிய தகுதிகளைப் பெறாத காரணத்தால் அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, அறிவிக்கப்பட்ட நாளன்றும் அதற்கு முன்னரும் நிலத்தை தொடர்ந்து தங்களது அனுபவத்தில் வைத்து வந்தவர்களுக்குப்



பட்டா வழங்குமாறு அரசு 1971ல் ஆணையிட்டது. இச்சலுகை 26/63, 30/63 சட்டங்களின்கீழ் வருபவர்களுக்கும் வழங்கப்பட்டது. எஸ்டேட் ஒழிப்புச் சட்டங்களின் செயல்வரம்பிற்கு அப்பாலும், உரிய தகுதி பெற்றவர்கள் பட்டாவிற்கு விண்ணப்பிக்கும் இயலும்வகையில் விண்ணப்பிப்பதற்கான கால அளவை அரசு அவ்வப்போது நீட்டித்து வந்தது: தென் ஆற்காடு மாவட்டத்தில் சின்னக்கல்ராயன் குன்றுகள் தவிர ஏனைய எல்லாப் பகுதிகளைப் பொறுத்த வரையில் விண்ணப்பித்துக் கொள்வதற்குரிய கால அளவை 31-3-1977 வரையில் நீட்டித்தது. சின்னக்கல்ராயன் குன்றினைப் பொறுத்த வரையில் விண்ணப்பித்துக் கொள்வதற்கான கால அளவு 31-12-1978 வரை நீட்டிக்கப்பட்டது.

நாளது வரை 22,527 பேர்கள் பயனடைந்து உள்ளனர். இதுவரை 34,190,73.00 ஹெக்டேர் அளவுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் உள்ள ஜன்மம் எஸ்டேட்டுகளை நீக்குதல்.**

159. நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் அதிகப் பரப்புள்ள நிலங்களை வைத்துள்ள ஜென்மிகள் Janmies தங்களின் கீழ்பயிரிடு உரிமைகளோடு குத்தகைதாரர்களை அனுமதித்துள்ளனர். குத்தகை உரிமை 1929 ஆம் ஆண்டு மலபார் குத்தகை உரிமைச் சட்டத்தின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டு குத்தகைதாரர்களுகே நிலையான பயிரிடு குத்தகை உரிமைகள். அளிக்கப்பட்டுள்ளன. குத்தகைதாரர்களிக்கு அனுபோக உரிமைகளை அளிக்கும் பொருட்டு, கூடலூர் 1969 ஆம் ஆண்டு ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. இச்சட்டம் 1974 நவம்பர் 27-ஆம் நாளன்று செயலுக்குக் கொண்டுவரப்பட்டது, 324.10 ச.கி.மீ. பரப்புள்ள நிலம் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. முழுப் பரப்பளவையும் பொறுத்த வரையில் ரயத்துவாரி பட்டா வழங்குவதற்குரிய சட்டப்படிக்கான விசாரணைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஜன்மம் நிலம் வைத்துள்ள சிலர் தங்களது நிலத்திற்கு இச்சட்டம் பொருந்துவது குறித்து எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்களை தாக்கல் செய்தனர். இந்த ரிட் மனுக்கள் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள் அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. எனினும் அவர்கள் தலைமை நீதிமன்றத்தில் மேல்முறையீடுகளை தாக்கல் செய்து தடையாணையைப் பெற்றனர். தடையாணைக்குட்பட்ட பகுதிகளில் நிலவரி ஏற்பாட்டுப்பணி உச்ச நீதிமன்றத்தின் திருத்த தடையாணைகளின்படி சட்டப்படிக்கான விசாரணை நிலை வரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 30-11-1981 அன்றுள்ளபடி 146.17 ச.கி.மீ பரப்பளவிற்கு நிலவரி ஏற்பாட்டுமுற

1982 மார்ச் 18]

கொண்டு வரப்பட்டுள்ளது. 10,771,000.00 ஹெக்டேர் பரப்பளவிற்கு ரயத்துவாரிப் பட்டாக்கள் 6,468 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வரிவருவாய் பணிகள்:—

160. இம்மாநிலத்தில் சில பகுதிகளின் முதலாம் நில அளவைப் பணியானது, காலம் பல கடந்ததால் நாளடைவில் நின்றுபோய் விட்டதாலும் தற்போதுள்ள நிலஅளவைப் பொருட்களைக் கொண்டு இப்பணியை தொடர்ந்து செய்ய இயலாததாலும் இத்தகைய பகுதிகளில் அரசு உத்தரவிட்டதன் பேரில் மறு நிலஅளவை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பதிவேடுகளை நாளது தேதி வரையிலானதாகவும் செயல்முறையிலும் கொண்டுவர வரி வருவாய் தொடர் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பெரியார், தென் ஆற்காடு சேலம் ஆகிய மாவட்டங்களில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| மாவட்டம். | வட்டம். | பரப்பளவு (ச.கி. மீட்டர்களில்.) | பயனடைந்தோரின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பெரியார் .. | கோபிச்செட்டி பாளையம். | 657.67 | 88.182 |
| | சத்தியமங்கலம் | 729.07 | |
| ,, | பவானி .. | 699.17 | 47.202 |
| ,, | ஈரோடு .. | 1,548.79 | 1,39,632 |
| தென் ஆற்காடு | கடலூர் .. | 949.13 | 64.785 |
| ,, | திண்டிவனம் | 1,404.14 | 41.476 |
| சேலம் .. | மேட்டூர் .. | 527.61 | 9.646 |

161. கீழ்க்காணும் இடங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் வருவாய்ப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

| மாவட்டம். | வட்டம். | பரப்பளவு. (ச.கி.மீ.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மதுரை | கோடைக்கானல் | 372.96 |
| நீலகிரி .. | கூடலூர் .. | 210.02 |

162. பெரியார் மாவட்டத்தில் உள்ள தாராபுரம் வட்டத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வருவாய்ப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன



1982 மார்ச் 18]

நீலகிரி மாவட்டத்தில் தனி வகைப்பாடு, மறு செட்டில்மெண்டு ஆகிய பணிகளை எடுத்துக் கொள்வது பற்றி சரி பார்த்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மறு நில அளவை நடைபெற்று வரும் எஞ்சியுள்ள பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருக்கிறது.

| மாவட்டம். | வட்டம். | பரப்பளவு. ச.கி.மீ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| வடாற்காடு .... | திருவண்ணாமலை | 264.56 |
| பெரியார் .. .. | தாராபுரம் .. | 641.67 |
| நீலகிரி .. .. | குன்னூர், கோத்தகிரி | 524.68 |
| உதகமண்டலம் .. .. | | 1,195.12 |

22. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தீர்வையில்லா நிலங்கள் மீது ரயத்துவாரி வரிவிதிப்புச் சட்டம்.

163. 1859ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட சில நிலங்கள் நிலவரி விதிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டன. இத்தகைய நிலச் சொந்தக்காரர்கள் ஆண்டு தீர்வையைப்போல் 20 மடங்கு தொகை மொத்தமாகச் செலுத்திவிட்டு நிலவரியின்றி அனுபவித்து வந்தனர். ஏனைய சில நிலங்களுக்கு நிலவரி சலுகை வீதத்தில் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. இத்தகைய நிலங்கள் தீர்வையில்லா நிலங்கள் என்றழைக்கப்படுகின்றன. இத்தகைய நிலங்களுக்கும் ரயத்துவாரி நிலங்களுக்குமுள்ள வேறுபாடு என்னவெனில் ரயத்துவாரி நிலங்களில் உரிமையாளர்கள் அந்நிலத்திற்கு விதிக்கப்பட்ட ஆண்டுவரியை செலுத்த வேண்டும். ஆனால் தீர்வையில்லா நிலங்களின் உரிமையாளர்கள் வரி எதுவும் செலுத்த வேண்டாம். அல்லது சலுகைவீத வரியை மட்டுமே செலுத்த வேண்டும். இந்நிலங்களை செஸ்வரி உட்பட ஆண்டுவரி செலுத்தும் சாதாரண ரயத்துவாரி முறையின்கீழ் கொண்டுவர இயலும் வகையில் மாநிலத்திற்கு வரி விதிக்கப் பெறாத இந்நிலங்களை வைத்திருக்கும் முறையை நீக்கிவிட 1972 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. மேற்கூறிய நோக்கத்தை எய்துவதற்கு தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தீர்வையில்லா நிலங்கள் மீது ரயத்வாரி வரி விதிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் 1 ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இம்மாநிலத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் 4,777.23 ஹெக்டேர் பரப்பளவுடைய தீர்வை விதிக்கப்பெறாத நிலங்களுக்கும் இச்சட்டத்தின் II ஆம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மோகினி இனாம் இனங்கள் எனப்படும் 231.55 ஹெக்டேர் பரப்பளவுடைய நிலங்களுக்குச பொருந்தும். மோகினி இனாம் நிலங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மாயூரம் சீர்காழி நன்னிலம் ஆகிய வட்டங்களில் உள்ளன. இவை சமய நிறுவனங்களாக உள்ளன. இந்நிலங்களைப் பொருத்த வரையில் நிலவரியானது முன்னாள்

அரசர்களால் ரொகக மானியமாக அல்லது படியாகக் கொடுக்கப்பட்டது. இதற்கு ஈடாக அப்போதிருந்த ஆங்கிலேய அரசு அவர்களுக்கு இந்நிலங்களை ஒப்படை செய்தது.

164. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தீர்வையில்லா நிலங்கள் மீது ரயத்துவாரிவரி விதிப்புச் சட்டம் 1973 ஆம் ஆண்டு 31-ஆம் சட்டமாக வெளியிடப்பட்டபோதிலும், வணிகவரிகள் அறநிலையததுறையின் 16-10-1979 ஆம் நாளிட்ட 1646 ஆம் எண் அரசாணையின்படி 16-10-1979 முதல் இது செயலுக்கு கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் எடுக்கவிருக்கும், தீர்வையில்லா நிலங்களின் பட்டியலின் பிற்சேர்க்கை தனியாக விரைவில் அறிவிக்கப்படும்.

## 23. நில அளவைப் பணியில் முன்னேற்றம்.

165. நில அளவை நிலப்பதிவேடு துறை, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப்பகுதிகளைப் பற்றிய வரைபடம் தயாரிக்கும் பணியிலும் நில அளவை செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. மேலும் வகைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், நில ஒப்படை நில உரிமையை விட்டுவிடுதல்- நிலத்தை கையகப்படுத்தல், விற்பனை, வாரிசு உரிமை, பாகப்பிரிவினை, தானம், நீதி மன்ற தீர்ப்பாணைகள், வருவாய்த்துறை விற்பனை ஆகியவற்றின் மூலம் ஏற்படும் உரிமை மாற்றம் முதலிய மாற்றங்கள் ஆகியவற்றை வகைப்படுத்துவதற்காக நில அளவையானது, குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை செய்யபட்டுகிறது. நிலங்களை உட்பிரிவினை செய்வது குறித்து அதற்கான கட்டணங்களை வணிக வரிகள் அறநிலையத்துறையின் 30-10-80 ஆம் நாளிட்ட 1129ஆம் அரசாணையின்படி செலுத்தியதற்கான செலுத்து சீட்டுகள் இணைத்து, விண்ணப்பங்கள் வட்டாட்சியரிடம் கொடுக்கப்பட வேண்டும். சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகியப் பகுதிகளில் நிலங்களை உட்பிரிவினை செய்வதற்காக சப்டிவிஷன் ஒன்றுக்கு 9 ரூபாய் என்ற வீதத்திலும், ஏனைய இடங்களுக்கு 6 ரூபாய் என்ற வீதத்திலும் கட்டணங்களை செலுத்த வேண்டும். நிலங்களின் எல்லைகளை சுட்டிக்க ட்டுவதற்கு லைன் ஒன்றுக்கு 2 ரூபாய் கட்டணம் விதிக்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கான வரைபட நகல்கள் அதற்குரிய விண்ணப்பத் தொகையை வட்டாட்சியரிடம் செலுத்திப் பெறலாம். எல்லா முன்னேற்றத் திட்டங்களுக்கும் உரிய அடிப்படை வசதியாக அமையும் கிராம வட்ட மாவட்ட வரைபடங்களை நில அளவை நிலப்பதிவேடுகள் துறை தயாரித்து அளிக்கிறது. நகர நிலஅளவை திட்டத்தின்கீழ் நகரங்களும், ஊராட்சிகளில் சந்துகளும், தெருக்களும் நிலஅளவை செய்யப்படுகின்றன.



166. நில அளவையும், பராமரிப்பும் ஒருங்கிணைந்த ஒரு முறையாக திகழ்கின்றது. 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழ் சட்டம் எண் 26/1948) எடுத்துக் கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளை அளக்கும் பணி 1949 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அதன்பிறகு தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) (சட்டம் எண் 26/1963) சட்டம் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகை கிராமங்கள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் எண் 27/1963) சட்டம் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறிய இனாம்கள் (நீக்குதல் ரயத்துவாரியாக மாற்றுதல்) (சட்டம் எண் 30/1963) சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் வரும் நிலங்களை அளக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

## 24. நாளது தேதி வரை பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டம்

167. இம் மாநிலத்தில் சென்னை, நீலகிரி, பெரியார் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் சமீபத்தில் நில அளவை செய்யப்பட்ட பகுதிகள், கல்ராயன் மலைப்பகுதிகள் நிலங்களை உட்பிரிவு செய்யும் மும்முரத் திட்டத்தின்கீழ் நில அளவை செய்யப்பட்ட நிலங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் ஏறக்குறைய 30,000 சதுர மைல் பகுதியில் நாளது வரையிலானதாக பதிவேடுகளை புதுப்பிக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு அனுமதி அளித்துள்ளது.

169. 1-1-1982ஆம் நாளன்று இருந்தவாறு இத்தலைப்பின் கீழ் செய்யப்பட்ட பணி குறித்த விவரம் வருமாறு—

| | | |
|---|---|---|
| 1. | இத்திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தில் பணி மேற்கொள்ளப்படும் பகுதியின் மொத்தப் பரப்பளவு | 30,000 ச. மைல் (அ) 80,000 ச.கி.மீ. |
| 2. | நாளது வரையிலான தாகப் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் திட்டத்தின் கீழ்வரும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை (முதல் நிலையில்). | 3.426 கிராமங்கள் |
| 3. | பணி முடிக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு | 24,652.55 ச. கி. மீ. |

[1982 மார்ச் 18

| | | |
|---|---|---|
| 4. | எல்லை கண்டறிதல் பணிமுடிக்கப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 1,456 கிராமங்கள் |
| 5. | 4 ஆம் இனத்தின்கீழ் பணி முடிக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு. | 8,694.62 ச. கி. மீ. |
| 6 | நில எல்லை வரையறுத்தல், நில அளவை செய்தல் பணி முடிக்கப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 1,344 கிராமங்கள் |
| 7. | 6 ஆம் இனத்தின்கீழ் பணி முடிக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு. | 7,954.82 (ச. கி.மீ) |
| 8. | கண்டறியப்பட்ட உட்பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை. | 25,44,245 |
| 9. | ஆய்வு செய்யப்பட்ட நில அளவைக் கற்களின் மொத்த எண்ணிக்கை. | 16,09,451 |
| 10. | நில அளவை செய்யப்பட்ட உட்பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை. | 11,20,805 |
| 11 | புதுப்பிக்கப்பட்ட நில அளவைக் கற்களின் மொத்த எண்ணிக்கை. | 6,90,558 |
| 12. | கண்டறியப்பட்ட ஆக்கிரமிப்புகளின் மொத்த எண்ணிக்கை. | 52,013 |
| 13. | அளவிடப்பட்டு பிரிக்கப்பட்டு இட விவரங்களின் மொத்த எண்ணிக்கை. | 1,37,191 |
| 14. | தெரிவிக்கப்பட்டுள்ள தகராறுள்ள இனங்களில் மொத்த எண்ணிக்கை. | 3,554 |
| 15. | தெளிவான கணக்குகள் தரப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 675 |
| 16. | 13ஆம் பிரிவின்கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 446 |
| 17. | பதிவேடுகளை நாளது வரையிலானதாகப் புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பட்டாக்களின் மொத்த எண்ணிக்கை. | 3,33,649 |
| 18. | பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை | 5,30,697 |



1982 மார்ச் 18]

169. இத்திட்டம் உழவர்களுக்கு மட்டுமல்லாது அரசுக்கும் பயன்தரத்தக்கதாகும். தனது நிலத்தின்மீது தனக்குள்ள, உடைமை, உரிமை, நாற்புற எல்லைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் உழவர்களுக்கு இது சிறந்த பயனுள்ளதாக அமையும். இத்திட்டத்தின்கீழ் நாளது வரையிலான பதிவுகளுடன் அடிப்படை நிலை ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. உழவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது நிலங்களில் வரைபடங்களுடன், பட்டாப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. 1983—84ஆம் ஆண்டோடு முடிவடையும் இவ்விரு ஆண்டு காலத்திற்குள் இத்திட்டத்தை நிறைவேற்ற விரைவு திட்டமொன்றைக் கடைபிடிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் செலவு ஐந்து கோடி ரூபாய் ஆகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## 25. பட்டா புததகத திட்டம்.

170. பட்டாதாரர்கள் உழவர்கள் தாங்கள் வைத்துள்ள நிலங்கள் பற்றிய நாளது வரையிலான விவரங்களை அறிவதற்கு இயலும் வண்ணமும் தாமதம் அல்லது இடையூறின்றி கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்துகடன்கள் பெற இயலும் பொருட்டும், பட்டா புத்தகத் திட்டம் 1972 ஆம் ஆண்டில் அமலுக்கு கொண்டுவரப்பட்டது.

171. நிதித்துறையின் மதிப்பீட்டுக்குழு இத்திட்டம் செயல்படுவது குறித்து ஆய்வு செய்தது. இத்திட்டத்தை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை கண்டறிவதற்காக, முன்னாள் வருவாய்த்துறை வாரியத்தின் நிலவரி (முக்கிய) ஆணையாளரின் தலைமையின் கீழ் குழு ஒன்றை அமைப்பது குறித்து மதிப்பீட்டுக் குழு தனது மதிப்பீட்டு அறிக்கையில் கருத்து தெரிவித்தது. அதற்கிணங்க குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு சில முக்கிய பரிந்துரைகளை செய்துள்ளது. இக்குழுவின் முக்கிய பரிந்துரை உடைமை உரிமைக்கு சான்றாக பட்டா புத்தகத்தை வழங்குவதற்கான சட்டம் ஒன்றை இயற்றுவது தொடர்பானதாகும். இப்பட்டா புத்தகம் இருப்பதனால் வேளாண்மைக் காரியத்திற்கு வில்லங்கச் சான்றிதழை கேட்காமலேயே நிதி உதவி நிறுவனங்கள் கடனுதவி நிறுவனங்கள் கடன்கள் வழங்க முடியும்.

172. அதன்படி, பட்டாப்புத்தக சட்டமுன்வடிவு, (சட்டமுன்வடிவு எண் 49/1981) 1981 ஆம் ஆண்டு மே திங்களில் சட்டமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டது. இச்சட்டமுன்வடிவு கூட்டு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

173. நிலச்சொந்தக்காரர் ஒவ்வொருவருக்கும் வட்டாட்சியர் பட்டா புத்தகம் வழங்குவார் என்றும், விற்பனை, அடமானம், தானம், சொத்து பரிமாற்றம் அல்லது வேறு வகையில் நிலத்தை மாற்றம் செய்வது எதனையும், பட்டாப்புத்தகம் இருந்தாலன்றி மற்றபடி பதிவு அலுவலர் பதிவு செய்யக்கூடா தென்றும் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்டமுன்வடிவு வகை செய்கிறது.

174, மாவட்ட தலைமையிடத்திலுள்ள விவசாயிகள் சங்கங்கள், வங்கிகள் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றின் கருத்துக்களை கூட்டு ஆய்வுக் குழு பதிவு செய்கிறது. இன்னும் சில மாவட்டங்களில் இக்குழு இப்பணியை முடித்து அதன் பரிந்துரைகளுடன் தனது அறிக்கையைச் சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது.

175. ஆகவே, வருவாய்த் துறையின் பணிகளும் பொறுப்புகளும், நிலவரி நிர்வாகம் ஒழுங்கு முறைப் பணிகள் ஆகியவற்றோடு மட்டும் நின்றுவிடவில்லை என்பதை நாம் நினைவுகூறவேண்டும். நாடு விடுதலையடைந்த பின்னர் நாட்டின் வளர்ச்சிக்குத் திட்டங்களைத் தீட்டி வளமான நாடாக ஆக்குவதில் வருவாய்த்துறை முழுமையாக ஈடுபட்டது. அரசுக் கொள்கைகளிலும் வளர்ச்சித் திட்டங்களிலும் சமூகப் பொருளாதார திட்டங்களிலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் வருவாய்த்துறை அரசின் தலையாய அமைப்பாக இருந்து வருவதுடன், மாநில நிர்வாக அமைப்பிற்கு குன்றின்மேல் இட்ட விளக்காகத் திகழ்கிறது. வருவாய்த்துறை ஈடுபடாத அரசுத் திட்டமே இல்லை. ஏதாவது ஒரு வகையில் அது எந்தத் திட்டத்திலும் ஈடுபட்டிருக்கும்.

## இணைப்பு—III

[426-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 36—பாசனம்

### கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச்செலவு கொள்கை விளக்கக்குறிப்பு

தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கு ஏற்படும் செலவும், அவற்றைப் பராமரிப்பதற்கான வழக்கமான செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும், ''கோரிக்கை 36—பாசனம்'' என்பதன் கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.





புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவு ''கோரிக்கை 50—பாசனம்'' மீதான மூலதனச் செலவு என்பதன் கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

**பெரிய மற்றும் நடுத்தர பாசனம் :**

2. பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 35.11 கோடி ஒதுக்கப்படும். பெரிய மற்றும் நடுத்தர பாசன திட்டங்களின் மூலம் 1982-83 ஆம் ஆண்டில் 9,760 ஹெக்டேர் (24,100 ஏக்கர்) நிலங்கள் பாசன வளம் பெறும்.

**பெரிய பாசனத் திட்டங்கள் :**

3. 1981-82 ஆம் ஆண்டில் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் (கோயம்புத்தூர் பெரியார் மாவட்டங்கள்) மற்றும் பெரியாறு—வைகை நவீனப்படுத்தும் திட்டம் (மதுரை மாவட்டம்

ஆகிய இவ்விரண்டு பெரிய திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வந்தன. 1.01 இலட்சம் ஹெக்டேர் (2.50 இலட்சம் ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் எல்லா வகையிலும் முடிவுபெற்று ஏற்கனவே பயனளித்து வருகிறது. இத்திட்டத்தின் ஆயக்கட்டை விரிவாக்கி கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் வட்டங்களில் 0.466 இலட்சம் ஹெக்டேர் (1.15 இலட்சம் ஏக்கர்) கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கான திட்டம் அரசால் ஒப்புதளிக்கப்பட்டு திட்ட வேலைகள் நடைபெறுகின்றன ஆயக்கட்டு விரிவாக்க வேலைகளின் மதிப்பீடு ரூ.14 கோடியாகும். இந்த வேலை 1985-ல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் பதிவுபெற்ற ஆயக்கட்டுகளால் சூழப்பட்ட நிலங்களையும் மற்றும் பதிவுபெற்ற ஆயக்கட்டுகளுக்கு இடைப்பட்ட நிலங்களையும் அத்திட்டத்தின் ஆயக்கட்டுகளில் சேர்க்கவேண்டும் என்ற முறைப்படுத்தப்பட்ட விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, அரசு சமீபத்தில் ரூபாய் 400 இலட்சம் அத்தகைய 12,125 ஹெக்டேர் (25,000 ஏக்கர்) நிலங்களை பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் சேர்க்க ஒப்புதல் அளித்துள்ளது.

மூன்று இலட்சத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலங்களுக்குப் பாசனவசதி அளிக்கக்கூடிய இந்த புதிய திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை இந்தக் கட்டத்திலேயே ஆராய்ந்து அறிவது மிகவும் அவசியமானதும் பயனுள்ளதும் ஆகும் என அரசு கருதுகிறது. ஆகவே, இதற்காக பொறியியல் மற்றும் விவசாயத் துறைகளைச் சார்ந்த தொழில் நுட்ப அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது. இக்குழு பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தின் பல்வேறு அம்சங்களையும், அது செயல்படும் விதத்தையும் ஆராய்ந்து, மற்றும் அப்பகுதி சட்டப் பேரவை உறுப்பினர்கள், விவசாயிகள், பெரியார், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர்களை கலந்தாலோசித்து, திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்த தேவையான ஆலோசனைகளை வழங்கும். மேற்சொன்ன இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

பெரியாறு–வைகை நவீனப்படுத்தும் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கியின் ஆலோசனையின் பேரில், ரூ. 44.50 கோடி மதிப்பீட்டிற்கு இத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தின் மூலம் உலக வங்கியால் ஒப்புக்கொள்ளப்பட்ட மூலத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள 10,305 ஹெக்டேர் (25,500 ஏக்கர்) புதிய நிலங்கள்

பாசன வசதி பெறும். திட்ட வேலைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. இத்திட்டம் டிசம்பர் திங்கள் 1984 ஆம் ஆண்டு முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு ரூ. 10 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்தின் பிரதான கால்வாய்கள், மற்றும் கிளைக் கால்வாய்களில் ''சிமெண்ட் லைனிங்'' வேலை அநேகமாக முடிந்துவிட்டதால் போதுமான அளவு தண்ணீர் சேமிப்பு இருக்கும் என்றும் இந்த சேமிப்பு நீரை பயன்படுத்தித் திருத்தியமைக்கப்பட்டுள்ள திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 10,305 ஹெக்டேர் புதியநிலங்கள் தவிர மேலும் கூடுதலான நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க முடியும் என்று உலக வங்கி கணக்கிட்டுள்ளது. எனவே இறுதியாக கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படும் சேமிப்பு நீரை பயன்படுத்தி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை வட்டம், மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டி மற்றும் திருமங்கலம் ஆகிய வட்டங்களில் ஏற்கனவே 1978-ல் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சுமார் 7,270 ஹெக்டேர் (18,000 ஏக்கர்) மறைமுக (Indirect) ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி அளிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



நடுத்தர பாசன திட்டங்கள்:

4. முந்தைய ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 13 நடுத்தரப் பாசன திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருச்சி மாவட்டத்தில் ஒன்றும், தருமபுரி மாவட்டத்தில் ஒன்றும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும் ஆக மூன்று நடுத்தரப் பாசன திட்டங்களுக்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. அவையாவன :

(அ) பெரியாறு மாவட்டத்தில் நொய்யல் ஆற்றில் ரூபாய் 713 இலட்சம் செலவில் அணை ஒன்று கட்டுதல். இத்திட்டம் திருச்சி மாவட்டத்தில் 3,900 ஹெக்டேர் (9,625 ஏக்கர்) புன்செய் நிலங்களுக்குப் பயனளிக்கும்.

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு வட்டத்தில் கேசரிகுலிஹல்லாவில் ரூ. 279 இலட்சம்செலவில் ஒரு நீர்த்தேக்கம் கட்டுதல். இத்திட்டத்தினால் 1,620 ஹெக்டேர் (4,000 ஏக்கர்) புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும்.

(இ) ரூ. 46.70 இலட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருப்பரப்பு அணைக்கட்டின் வலப்புற கால்வாயை விரிவுபடுத்துதல். இதனால் 97 ஹெக்டேர் (238 ஏக்கர்) புதிய நன்செய் நிலங்கள் இருபோகப் பாசனவசதி பெறுவதோடு மற்றைய நிலங்களுக்கு பாசனஉறுதி செய்யப்படும்.

நொய்யல் அணைக்கட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தி அதிக நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க முடியுமா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1982-83 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நடுத்தர புதிய பாசன திட்டங்களுக்கு ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11 புதிய நடுத்தர பாசன திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இத் திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 50.79 கோடியாகும். இத்திட்டங்களினால் 20,800 ஹெக்டேர் (51,321 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறும்.

**தற்போதுள்ள பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல்:**

5. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 95 சதவீத மேற்பரப்பு நீர் பயன்படுத்தப்பட்டு விட்டதால், மேற்பரப்பு நீரை மேலும் பயன் படுத்துவதற்கான பெரிய திட்டங்களை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. ஆகவே தற்போதுள்ள பாசனத் திட்டங்களை நவீனப்படுத்தி அதன் மூலம் சேமிக்கப் பட்ட தண்ணீரை கூடுதல் நிலங்களுக்குப் பாசனம் அளிக்க பயன்படுத்தத் திட்டமிட வேண்டும்.

இச்சூழ்நிலையில், ஏற்கனவே உள்ள பாசன திட்டங்களை கால்வாய்களில் சிமெண்ட் பூசி நவீன விஞ்ஞான முறைகளைக் கடைபிடித்து அவற்றின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றது.

பெரியாறு—வைகை பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவது தற்போது நிறைவேற்றப்பட்டுவரும் பெரிய திட்டங்களுள் ஒன்றாகும். பழமையான காவிரி டெல்டா திட்டத்தையும் நவீனப்படுத்துவதற்கான பணிகளும் ஒவ்வோராண்டும் அளவாக மேற்கொள்ளப்படுகின்றன. கோதையாறு திட்டம், மணி முத்தாறு பிரதான கால்வாய், பொன்னியாறு திட்டம் முதலிய வற்றை நவீனப்படுத்துவதற்கான ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பாசன திட்டங்கள் ஆய்வு :**

6. பொதுப்பணித்துறையின் ஆய்வுப் பிரிவில் இருபத்தி எட்டு திட்டங்கள் விரிவான ஆய்வின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. இத்திட்டங்கள் ரூ. 63 கோடி செலவில் 21,600 ஹெக்டேர் (52,000 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாக பாசனமும், 7,290 ஹெக்டேர் (18,000 ஏக்கர்) நிலங்களுக்கு பாசன உறுதியும் தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆய்வுப் பணிகளை விரிவுப் படுத்தவும், வருங்காலத்தில் செயல்படுத்துவதற்கானத் திட்டங் களைத் தயாரித்து தொகுத்து அளிக்கவும் பொதுப்பணித் துறையின் ஆய்வுப் பிரிவைப் பலப்படுத்த அரசு முடிவு செய்து ஒரு வட்டம் மற்றும் நான்கு கோட்டங்கள் அமைக்க சமீபத்தில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.



**வெள்ளத் தடுப்பு :**

7. ஆறாவது திட்டத்தில் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக ரூ. 19 கோடி செலவிட நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1982-83 ஆம் ஆண்டில், தற்போது நடைபெற்றுவரும் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக ரூ. 45.54 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 95 இலட்சம் செலவில் வெள்ள நீரை வைகைப்படுகையிலிருந்து குண்டாறு மற்றும் கிருதமால் படுகைகளுக்குத் திருப்பிவிடும் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 1983 ஆம் ஆண்டு முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசு சமீபத்தில் சென்னையையும் அதன் சுற்றுப்புறங்களையும் சார்ந்த பகுதிகளில் இருவெள்ளப் பாதுகாப்பு திட்டங்களை நிறைவேற்ற அனுமதி அளித்துள்ளது. அவையாவன : (அ) அடையாறு ஆற்றின் வலது கரையில் கோட்டூர்புரத்திலிருந்து தெற்கு அடையாறு லாக் வரையில் வசிப்பவர்களுக்கு வெள்ளத்தினால் பாதிக்கப்படாதவாறு ரூ. 6.40 இலட்சம் செலவில் வெள்ளத் தடுப்பு சுவர் அமைத்தல், மற்றும் (ஆ) சென்னை நகரில் அமைந்தகரை மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வெள்ளத்தினால் பாதிக்கப்படாத வாறு கூவம் ஆற்றின் வலது கரையில் கிலோமீட்டர்கள் 3.37லிருந்து 4.22 வரை ரூ. 7.40 இலட்சம் செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் அமைத்தல்.

1982—83-க்கான வரவு செலவு திட்டத்தில் புதிய வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பாசன வளம் :**

8. 1981-82 ஆம் ஆண்டில் (1) குண்டாறு நீர்த் தேக்கத் திட்டம் (40 ஹெக்டேர்கள்) (2) தும்பலஹல்லி நீர்த் தேக்கத் திட்டம் (920 ஹெக்டேர்கள்) (3) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தின் கீழ் ஆயக்கட்டு விரிவாக்க திட்டப்பணியில் ஒரு பகுதி (7,310 ஹெக்டேர்கள்) மற்றும் வறட்சிப் பகுதிகளுக்கான திட்டத் தின்கீழ் நிறைவேற்றப்பட்டுவரும் பாம்பாறு நீர்த்தேக்கத்திட்டம் (1620 ஹெக்டேர்கள்) ஆகிய பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலம் மொத்தமாக 9,880 ஹெக்டேர் (24,410 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாக பாசன வசதி ஏற்படுத்தப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

1982-83 ஆம் ஆண்டில் உப்பாறு நீர்த்தேக்கத்திட்டம் (720 ஹெக்டேர்கள்) மற்றும் பரம்பிக்குளம்—ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதி (9,340 ஹெக்டேர்கள்) ஆகியவற்றை நிறைவேற்றுவதன் மூலம் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின்கீழ் கூடுதலாக 9,760 ஹெக்டேர் (24,120 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாக பாசன வசதி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

**1981–82 ஆம் ஆண்டில் பருவநிலை :**

9. 1981–82 ஆம் ஆண்டில் காவிரியாற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை வழக்கமான அளவிலும், பவானி, பெரியாறு, தாம்பிரபரணி மற்றும் கோதையாறு படுகைகளில் பருவமழை வழக்கத்தைவிட அதிகமாகவும் இருந்தது. தமிழ்நாட்டில், வடகிழக்குப் பருவமழை 1981 அக்டோபர் மாதத்தின் நான்காம் வாரத்தில் அதாவது 22–10–1981 அன்று தான் ஆரம்பித்தது. இம்மழையானது செங்கற்பட்டு, கன்னியாகுமரி, நெல்லை மாவட்ட கிழக்குப்பகுதி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் சில பகுதிகளில் வழக்கத்திற்கு குறைவாகவே பெய்துள்ளது. மற்றப் பகுதிகளில் பொதுவாக இம்மழை வழக்கம் போல் பெய்தது. ஆனால் சிற்சில இடங்களில் மட்டும் அதிகமான அளவில் பெய்தது. எல்லா பெரிய பாசன திட்டங்களும் பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளன. அரசால் நியமிக்கப்பட்ட பயிர் மற்றும் பருவநிலை ஆய்வுக்குழு அவ்வப்போது கூடி நிலைமைகளை ஆய்வு செய்தது.

**சிறு பாசனம் :**

10. 1981–82 ஆம் ஆண்டில் சிறப்புச் சிறு பாசன திட்டத்திற்காக ரூ. 199.57 இலட்சமும், தூர் வாரிப் புனரமைக்கும் திட்டத்திற்காக ரூ. 4.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1-4-1981-ல் நிலுவையில் இருந்த 110 வேலைகளில் 1981-82 ஆம் ஆண்டில் 40 வேலைகள் முடிக்கப்படவிருக்கின்றன. இந்த வேலைகள் முடிவுறும்போது கூடுதலாக 2,040 ஹெக்டேர் (5,001 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறும்.

1981-82 ஆம் ஆண்டில் ரூ. 356.07 இலட்ச மதிப்பீட்டில் 24 புதிய திட்டங்களுக்கு இதுவரை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. விவரங்கள் பிற்சேர்க்கை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1982-83 ஆம் ஆண்டில் சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 255.00 இலட்சமும், தூர் வாரி புனரமைக்கும் திட்டங்களுக்காக ரூ. 3.41 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 30 வேலைகள் முடிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் 2,530 ஹெக்டேர் (6,325 ஏக்கர்) நிலங்கள் பயனடையும்.

மேலும் 31-1–82 அன்று ரூ. 13.10 கோடி மதிப்புள்ள 155 திட்டங்கள் பொதுப்பணித் துறையின் ஆய்வில் இருந்தன.

**தீவிரப்படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டங்கள் :**

11. 40 ஹெக்டேருக்கும் (100 ஏக்கர்) அதற்கு மேற்பட்ட நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய நீர் நிலைகளைப் பராமரிக்கும் பொறுப்பைப் பொதுப்பணித்துறை ஏற்றுக்



கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள 40 ஹெக்டேருக்கு (100 ஏக்கர்) குறைவான நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய நீர் நிலைகளைப் பொதுப்பணித்துறை தரப்படுத்தி, பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கும். இதுபோல், முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த நீர்நிலைகளும் பொதுப்பணித்துறையால் தரப்படுத்தப்படும்.

1974 ஆம் ஆண்டு முதற்கொண்டே இந்த தீவிரப்படுத்தப்பட்டச் சிறுபாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. தேவை ஏற்படும்போது தூர் எடுத்தல், வடிகால் அமைத்தல், மதகுகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்கள் வெட்டுதல் முதலிய பணிகள் மூலம் மாநிலத்திலுள்ள சிறு பாசன நீர் நிலைகளை மேம்படுத்தவும், தரப்படுத்தவும் இத்திட்டம் வகை செய்கிறது. 1981-82 ஆம் ஆண்டில் பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள கண்மாய்களைத் தரப்படுத்துவதற்காக ரூ. 75 இலட்சமும் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் உள்ள கண்மாய்களுக்காக ரூ. 40 இலட்சமும், முன்னாள் ஜமீன் குளங்களுக்கு ரூ. 8 இலட்சமும் ஒதுக்கப்பட்டன.

பராமரிப்பு மற்றும் செப்பனிடும் பணிகளுக்காக 1982-83 ஆம் ஆண்டில் பொதுப்பணித்துறையின் கீழ் உள்ள கண்மாய்களுக்கு ரூ. 75 இலட்சமும், ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் உள்ள கண்மாய்களுக்கு ரூ. 40 இலட்சமும் முன்னாள் ஜமீன் குளங்களுக்கு ரூ.8 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**முன்னாள் ஜமீன் குளங்களைத் தரப்படுத்தும் சிறப்புத் திட்டம் :**

12. மாநிலத்தில் உள்ள 9,886 முன்னாள் ஜமீன் குளங்களில் ஏற்கெனவே 4,698 கண்மாய்கள் தரப்படுத்தப்பட்டுள்ளன. இராமநாதபுரம், செங்கல்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள பெருவாரியான முன்னாள் ஜமீன் குளங்களைத் தரப்படுத்துவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பாசன வசதிக்கு மிகவும் அடிப்படையான இந்தக் கண்மாய்கள் ஆயக்கட்டுதாரர்களுக்குப் பயன்படும் வகையில் சீர் செய்யப்பட்டு தரப்படுத்தப்படவிருக்கின்றன. இதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டம் :**

13. உலக வங்கியின் உதவியுடன் 500 ஏக்கர் நிலங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளுக்குப் பாசன வசதி தரக்கூடிய கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அத்திட்டத்தின் பொருளாதார சாத்தியக்கூறுகள் சம்பந்தமான தெளிவான விவரங்களை அறிந்து கொள்வதற்காக எட்டு முன்னோடித் திட்டங்களை எடுத்துக் கொள்ள அரசு முதலில் முடிவு செய்திருந்தது.

பிள்ளைப்பாக்கம் கண்மாயினை மட்டும் நவீனப்படுத்தவும், மற்ற இரண்டு கண்மாய்களில் நவீனப்படுத்தும் திட்டம் இல்லாமல் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டுமென்றும், மத்திய அரசு கருத்துத் தெரிவித்ததன்பேரில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பிள்ளைப் பாக்கம் கண்மாயில் நவீனப்படுத்தும் திட்டம் எடுத்துக்கொள்ளப் பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மற்ற இரண்டு கண்மாய்களான கம்பிக்குடி மற்றும் கட்டிக்குளம் கண்மாய்களை நவீனப்படுத்தாமல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஆய்வு முடிவு களின்அடிப்படையில் கண்மாய் நவீனப்படுத்தும் திட்டத்திற்க ன கோட்பாடுகள் மத்திய அரசால் முடிவு செய்யப்படும். மத்திய அரசின் கோட்பாடுகள் கிடைத்த பிறகு திட்ட அறிக்கை இறுதி யாக்கப்பட்டு, அது உலக வங்கிக்கு அனுப்பப்படும்.

வறட்சி நிவாரணப் பணிகள் (1981-82) :

14. 1980 ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழைகள் பொய்த்த காரணத்தினால், தமிழ்நாட்டில் உள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டன. பாசன வசதிக்கும் குடிதண்ணீர் உபயோகத் திற்கும் கடும் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் பெரும் பாலான விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கை நடத்துவதற் கான வேலை வாய்ப்புகள் இல்லாது போயின. வறட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் அரசு வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. பொதுப்பணித்துறையில் தொழிலாளர்களுக்குப் பயன்படக்கூடிய வேலைகளைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்கு அரசு ஒப்புதல் அளித்தது. அதன்படி 21 ஹெக்டேர் (50 ஏக்கர்) மற்றும் அதற்கு மேல் ஆயக்கட்டுள்ள கண்மாய்களின் கரைகளை மேம்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல், கால்வாய்களைத் தூர் எடுத்தல், கசிவு நீர்க்குட்டைகளை அமைத்தல், அணைக்கட்டுகள் கட்டுதல், வரத்துக் கால்வாய்கள் வெட்டுதல், பாசனக் கால்வாய் களை ஒழுங்குப்படுத்துதல், போன்ற வேலைகளைப் பொதுப் பணித்துறை நிறைவேற்றியுள்ளது. பொதுப்பணித்துறையின் பாசனப்பிரிவில் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்காக அரசு ரூ. 12.25 கோடி வழங்கியுள்ளது.

1981–ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கும் அக்டோபர் மாதத் திற்கும் இடைப்பட்ட காலத்தில் ரூபாய் 19.73 கோடி மதிப்புள்ள 8,500 வேலைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது. நிறைவேற்று வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட எல்லா வேலைகளும் முடிக்கப் பட்டு சுமார் 139 இலட்சம் நாட்கள் வேலை (Man-days) வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

கண்மாய்க்கரைகளைத் தரப்படுத்துதல் போன்ற வேலைகள் கண்மாய்களில் முழுக் கொள்ளளவிற்கு தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு வகை செய்தன. வாய்க்கால் வெட்டுதல் போன்ற



வேலைகள் இந்தப் பகுதிகளில் நிரந்தரமான பயன்களை ஈன்றன.
இப்பணிகள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பெரிதும்
உதவியுள்ளன.

பொதுப்பணித்துறையால் நிறைவேற்றப்பட்ட வறட்சி
நிவாரணப்பணிகள், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வசிக்கும்
வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரமான பல பயன்
களைத் தந்துள்ளன.

வறட்சி நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு எடுத்துக்
கொள்ளப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை, செலவு செய்யப்
பட்ட தொகை, வேலை நாட்களின் எண்ணிக்கை, முதலிய
விபரங்கள் கொண்ட பட்டியல் பிற்சேர்க்கை 2-ல் உள்ளது.

நிலத்தடி நீர் :

## தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் ஆய்வு

15. தமிழ்நாட்டின் பொருளாதாரம் முக்கியமாக வேளாண்
மையைச் சார்ந்துள்ளது. தமிழ்நாட்டில் ஏற்கனவே மேற்பரப்பு
நீர் 95 சதவீதத்திற்கும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதால்
நிலத்தடி நீர் வளத்தை மேலும் விரிவாகப் பயன்படுத்துவது
முக்கியத்துவம் பெற்றுள்ளது. இம்மாநிலத்தில் 16 இலட்சத்திற்கு
மேல் கிணறுகள் உள்ளன. நிலத்தடி நீர்ப் பிரிவு ஒரு தலைமைப்
பொறியாளர் தலைமையில் கடந்த 12 ஆண்டுகளாக இயங்கி
வருகிறது. இந்தத் தலைமைப் பொறியாளரின் கீழ் மூன்று
வட்டங்களும், பத்து கோட்டங்களும் நிலத்தடி நீர் ஆய்வுப் பணி
யினை மேற்கொண்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும்
எங்கெங்கு நிலத்தடிநீர் உள்ளது என்பதைக் காட்டும் வரைபடம்
தயாரிக்கப்பட்டு வருகிறது. வருங்காலத்தில் நிலத்தடி நீர் மேம்
பாட்டிற்குத் தகுதிவாய்ந்த பகுதிகளைக் கண்டறிய இது பயனுள்
ளதாக இருக்கும்.

நிலத்தடி நீரைப் பயன்படுத்திக்கொள்ள இசைவளிக்கும்
பொருட்டு, வளர்ச்சி வட்டார அடிப்படையில் நீர்வளம்
குறித்து 1978 ஜூன் இறுதிவரையில் நுண்ணிய அளவில்
மதிப்பிடப்பட்டது. இந்த ஆய்வின் அடிப்படையில் மொத்த
முள்ள 374 வளர்ச்சி வட்டாரங்களில் சுமார் 180 வளர்ச்சி
வட்டாரங்களில் நிலத்தடி நீர் மிகையாகப் பயன்படுத்தப்பட்டுள்
ளது எனத் தெரிந்தது. ஆகவே இந்த வளர்ச்சி வட்டாரங்களில்
மேலும் திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்பில்லை. எனவே,
மிகையாக நிலத்தடி நீர் எடுக்கப்பட்டுள்ள வளர்ச்சி வட்டாரங்
களில் கூட நிலத்தடி நீர் கிடைக்கும் பகுதிகளைக் கண்டறி
வதற்காக உபபடுகை வாரியாக (Sub-basinwise) நுண்ணிய அளவில்
ஆய்வை மேற்கொள்ள இத்திட்டமானது மாற்றியமைக்கப்
பட்டது. இது கிராம வாரியாக நிலத்தடி நீரைப் பயன்படுத்து
வதற்குரிய இசைவு அளிக்க வழிவகை செய்யும்.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நுண்ணிய அளவிலான ஆய்வின் அடிப்படையில் நிலத்தடி நீர் ஏற்கெனவே மிகையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள வளர்ச்சி வட்டாரங்களில் கூட இன்னும் நிலத்தடி நீர் இருக்கும் பகுதிகளும் உள்ளன என்றும், இப்பகுதிகளிலுள்ள நீரை மேலும் பயன்படுத்தலாம் என்றும் தெரியவந்தது. இந்த ஆய்வின் முடிவுகள் சிறு பாசனத் திட்டங்களை உருவாக்குவதற்கு ஊக்கமளிப்பதாக உள்ளன.

நீரின் தூய்மைகெடுவது பற்றி ஆய்வு.

16. தமிழ்நாட்டின் சில பகுதிகளில் தொழிற்சாலைக் கழிவுகளும், கழிவுநீரும் ஆறுகளில் விடப்படுகின்றன. இத் தூய்மையற்ற நீர், ஊற்று வழியாக கசிந்து நிலத்தடி நீரைக் கெடுக்க வாய்ப்பிருக்கிறது. இதன் காரணமாக, குறிப்பாக நிலத்தடி நீரைப் பொறுத்தமட்டில், தூய்மைக்கேடு பற்றி ஆய்வு செய்வது மிகவும் முக்கியமானதாகும். எனவே, நீரின் தன்மையில் ஏற்படும் மாற்றங்களைத் தொடர்ந்து கண்காணித்து ஆய்வு செய்வது அவசியமாகிறது. இந்த ஆய்வின் மூலம் நிலநீர் தூய்மைக்கேட்டினை நீக்க வழிவகைகளைக் காண முடியும். இந்த ஆய்வு, ஆரம்ப நடவடிக்கையாக 1982–83 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மேற்கொள்ளப்படும்.

குழாய்க் கிணறுகள் கழகம்.

17. தமிழ்நாடு விவசாயிகள் நிலத்தடி நீரினைச் சிறந்த முறையில் உபயோகப்படுத்தியிருந்தாலும், இன்னும், நிலத்தடி நீரை உபயோகப்படுத்த வாய்ப்புகள் உள்ளன. எனினும், நிலத்தடி நீரினை உபயோகப்படுத்துவதில் பல இடையூறுகள் உள்ளன. பல சிறு விவசாயிகள் கிணறு எடுக்கவோ அல்லது அவர்களுடைய கிணறுகளில் மின்விசை ஏற்றம் அமைக்கவோ வசதியற்ற நிலையில் உள்ளனர். மாநிலத்தின் சில இடங்களில் மிகுந்த ஆழத்தில்தான் நிலத்தடி நீர் கிடைக்கிறது. இப்படிப்பட்ட இடங்களில் கிணறுகள் தோண்டுவதற்குச் செலவு அதிகம் ஆவதால், விவசாயிகள் இச்செலவினை ஏற்கமுடியாத நிலையில் உள்ளனர். இதுமட்டுமின்றி கிணறுகளைத் தோண்டுவதற்கு வேண்டிய கருவிகள் இந்த இடங்களில் உள்ள விவசாயிகளிடம் கிடையாது. இம்மாநிலத்தில் இன்னும் சில இடங்களில் கடைமடைப் பகுதியில் வடிகால் நீர் கடலுக்குப் போய் விழுகிறது. இந்த நீரினைப் பாசனத்திற்கு உபயோகப்படுத்த வாய்ப்புகள் உள்ளன. நிலத்தடி நீரினை கண்டு பிடித்தும், கடலில் போய் விழும் வடிகால் நீரினை உபயோகப்படுத்தியும் சிறு விவசாயிகளுக்குப் பாசன வசதி அளிக்க சமீபத்தில் தமிழ்நாடு மாநிலக் குழாய்க் கிணறுகள் கழகம் அமைக்கப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கான மத்திய அரசின் சிறப்புத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் உதவித் தொகையை வைத்து



உரிய முறையில் ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க இக்கழகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மேற்பரப்பு நீரையும் நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்துப்பயன்படுத்துதல்.

18. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நீர்பாசனத் திட்டங்களின் கீழ் உள்ள நீர்பாசனப் பகுதிகளில் நிலத்தடி நீர் உள்ளது. இந்த நிலத்தடிநீர் தொடர்ச்சியாக இந்தத் திட்டங்களிலிருந்து வரும் மேற்பரப்பு நீரினால் நிறைவு பெறுகிறது. மேற்பரப்பு நீர் வேண்டிய அளவு கிடைப்பதால் விவசாயிகள் இந்த நிலத்தடி நீரினைப் பொதுவாக உபயோகப்படுத்துவது இல்லை. இருப்பினும் வறட்சிக் காலங்களில் நீர்த் தேக்கங்கள் சரிவர நிரம்பப் பெறாததால் விவசாயிகள் தங்கள் விவசாயப் பணிகளை உரிய காலங்களில் ஆரம்பிக்க முடியவில்லை. இந்தக் குறையினைப் போக்க குறிப்பிட்ட சில இடங்களில் புவியியல் நிலைக்கேற்ப நிலத்தடி நீரினைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனை மேலும் விரிவாக ஆய்வு செய்வதற்கு ரூபாய் 17.5 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டப்பகுதியில் முன்னோடித் திட்டம் ஒன்றினை மேற்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. இந்த முன்னோடித் திட்டம் வெற்றி பெறுமானால், தற்போதுள்ள நீர்ப்பாசனப் பகுதிகளுக்கருகாமையில் உள்ள பாசனப் பகுதிகளை விரிவாக்க வாய்ப்பு உள்ளது.

ஆலோசனைப் பணி.

19. நிலத்தடி நீர் ஆய்வின்போது ஏராளமான தொழில் நுட்பப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இம் மாநிலத்தின் எல்லாப் பாகங்களிலும் நிலத்தடி நீர் எந்த அளவிற்குக் கிடைக்கப் பெறும் என்பது பற்றி அதிக அளவிற்குத் தகவல் உள்ளது. இத்தகவலையும், தொழில் நுட்பத் திறனையும் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்தால் அது பயன் தரத்தக்கதாக இருக்கும். தற்போது தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் இவ்வாலோசனைகள் நிலத்தடி நீர்த்துறையினால் வழங்கப்படுகிறது, இதேபோன்ற ஆலோசனைப் பணிகள் விரைவில் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

நீர் ஆய்வு நிலையம்.

20. மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் வளங்களைப் பற்றி மதிப்பிடுவதற்கும், அதனைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதற்கும், மற்றும் அரசுக்கு இது சம்பந்தமான கொள்கைகளை உருவாக்குவதில் ஆலோசனைக் கூறுவதற்கும் நீர் ஆய்வு நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையம் தற்போது சிறிதளவேயான பணியாளர்களுடன் தலைமைப் பொறியாளரின் (நிலத்தடி நீர்) கீழ் இயங்கி வருகிறது. இவ்வாய்வு நிலையத்தின் பணிகள் சீரிய முறையில் நடைபெற அரசு தற்போது அதிகப்படியான பணியாளர்களை இந் நிலையத்தில் அமர்த்துவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது.

காவிரி நீர்.

21. படுகை மாநிலங்களிடையே (B sin States) காவிரி நீர் பங்கீடு பற்றி பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வுகாண நாம் எவ்வளவோ முயன்றும், இன்னும் இதில் தீர்வு காண முடியவில்லை. 1981-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தின் மூலம் பலதரப்பு மக்களின் கருத்தினை அறிந்து, காவிரி நீர் பங்கீடு குறித்து ஒரு வரைவு குறிப்பினைத் தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியது. மத்திய அரசின் ஆலோசனைப்படி 1981-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில முதலமைச்சர்கள் இடையே இருதரப்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இப்பேச்சு வார்த்தைகளில் எவ்விதமான உடன்பாடும் ஏற்படாததால், இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண சம்பந்தப்பட்ட அனைத்துப் படுகை மாநிலங்களின் கூட்டத்தைக் கூட்டுமாறு மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இந்த நீண்ட காலப் பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வு காண முடியும் என இவ்வரசு நம்புகிறது.

கிருஷ்ணா நீர்திட்டம்.

22. சென்னை நகரின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய கிருஷ்ணா நதியிலிருந்து 15 T.M.C. நீரைச் சென்னை நகருக்குக் கொண்டு வருவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் தொடர்பாக ஆந்திர மாநிலம் தனது எல்லைக்குள் ஆய்வுப்பணிகளில் பெரும் பகுதியை முடித்துவிட்டு ஒரு தோராய திட்ட (Tentative project Report) அறிக்கையைத் தமிழக அரசுக்கு அனுப்பி உள்ளது. தமிழக எல்லைக்குள் ஆய்வுப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன. இதுசம்பந்தமாக அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் திட்டம் இறுதியாக்கப்படுமென அரசு நம்புகிறது.

மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் திருப்பிவிடுதல்.

23. கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளில் உபரி நீரைத் தமிழகத்தில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு பாசனம் அளிக்க கிழக்கே திருப்புவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு தனது அறிக்கையில், கேரளாவில் உள்ள வர்மனாபுரம், அச்சன்கோயிலார் மற்றும் கல்லடா ஆற்றுப் படுகைகளிலுள்ள மேற்பரப்பு நீரில் உபரியாக 46.66 டி.எம்.சி. உள்ளது எனவும் இதனைக் கிழக்கே திருப்புவது சாத்தியம் எனவும் தெரிவித்துள்ளது. இதுபற்றிய ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள தமிழக அரசு கேரள அரசோடு இருதரப்புப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கலாமெனவும் தொழில் நுட்பக் குழு பரிந்துரைத்துள்ளது. குழுவின் கருத்தினை இவ்வரசு ஏற்றுக் கொண்டு கேரள மாநிலத்தோடு இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.



மேற்கூறிய படுகைகளில் கிடைக்கப் பெறும் உபரி நீரைத் திருப்பி விடுவதற்காக மேற்கொள்ளும் ஆய்வுப் பணிகளையும், திட்ட மதிப்பீடு தயாரித்தல் அது சம்பந்தப்பட்ட கூடுதல் விபரங்களைச் சேகரித்தல் இவற்றைக் கண்காணிப்பதற்காகவும் மத்திய அரசு ஒருங்கிணைப்புக் குழு ஒன்றினையும் அமைத்துள்ளது.

நாட்டின் நீர்வளத்தை முழுமையாக பயன்படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்ட தேசிய நோக்குத் திட்டம்,

24. நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கும் நீர் மற்றும் நீரினை தேக்கி வைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்தபின் மத்திய அரசு நாட்டிலுள்ள நீர் வளததை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு பல்வேறு ஆறுகளை இணைத்து நீரைப் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்த ஒரு தேசீய நோக்குத் திட்டத்தை தயாரித்தது. மத்திய அரசு தயாரித்த இத்தேசீய நோக்குத் திட்டத்தின்கீழ் இந்திய தீபகற்ப நதிகளின் வளர்ச்சிக்கும் இமயமலை நதிகளின் வளர்ச்சிக்கும் தனியாக, திட்டங்கள் வகுக்க வகை செய்யப்பட்டுள்ளன. தீபகற்ப நதிகளின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. மகாநிதி மற்றும் கோதாவரி ஆற்றுப் படுகைகளிலுள்ள உபரிநீரைப் தெற்கே உபரிநீர் இல்லாத கிருஷ்ணா, பெண்ணாறு, காவேரி படுகைகளுக்கு திருப்பிவிடலாமென்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. தீபகற்ப நதிகள் வளர்ச்சி பற்றிய செயற்குறிப்பின் கீழ் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபநீரை கிழக்கே திருப்பி விடுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியும்குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழக அரசு தேசீய நோக்குத் திட்டத்தை வரவேற்று அதனை செயல்படுத்துவதற்கான முழு ஒத்துழைப்பையும் கொடுப்பதாக மத்திய அரசுக்கு உறுதி அளித்துள்ளது.

நாட்டின் நீர்வளத்தை பயனுள்ள முறையில் உபயோகிப்பது பற்றிய ஆய்வுகள் மற்றும் அளவைப் பணிகள் மேற்கொள்ளுவதற்காக மத்திய அரசு, சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாக "தேசீய நீர்வள அமைப்பு" ஒன்றை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இவ்வமைப்பில் ஒரு அங்கத்தினராக இருக்க ஒத்துக் கொண்டுள்ளார்கள். தமிழக அரசின் பாசன அமைச்சர் மாற்று அங்கத்தினராக இருப்பார்கள்.

பொது.

25. பாசனத்திட்டங்களை நிறைவேற்றும்போது, விலைவாசி ஏற்றத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினைக் தவிர்ப்பதற்காகத் திட்டங்களை குறித்தத் காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில் அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. இத்தகைய பணிகளைத் துரிதமாக செயல்படுத்தவும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டமிட்டபடியே முடிக்கவும், திட்டப்

பணிகளின் முன்னேற்றத்தைக் கூர்ந்து கவனித்து, அவ்வப்போது ஏற்படும் இடையூறுகளை உடனுக்குடன் நீக்கித் திட்டப் பணிகளைக் கண்காணிக்கவும் தலைமைப் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

பொதுப்பணித் துறையில் நீர்ப்பாசன பிரிவின்கீழ் பாசனத் திட்டங்களை ஆய்வு செய்யும் களப்பணிகள், மற்றும் ஆராய்ச்சி பணிகள் ஆகிய கடின பணிகளில் ஈடுபட்டுள்ளப் பொறியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இத்தகைய கடினப் பணிகளுக்கு திறன்மிகு பொறியாளர்களை ஈர்க்கும் பொருட்டும், இவர்களுக்குச் சிறப்பு ஈட்டுப்படி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆயக்கட்டு நிலங்களுக்குக் கிடைக்கவேண்டிய நீர் முழுமையாகக் கிடைக்க வழி செய்ய இவற்றின் பாசன ஆதாரங்களுக்கு நீர் வழங்கும் கால்வாய்களைச் செப்பனிட்டுச் சீரிய முறையில் பராமரிப்பது இன்றியமையாததாகும். ஆனால், இந்த அத்தியாவசிய பணி பற்பல காரணங்களால் செவ்வனே நிறைவேற்றப்படாமல் இருந்து ஆயக்கட்டுதாரர்களுக்குச் சிரமம் ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்தது. இந்நிலைமையைச் சீர் செய்ய, அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பாசன குளங்களுக்கு நீர் வழங்கும் கால்வாய்களைத் தற்போது குளங்களைப் பராமரித்து வரும் சம்பந்தப்பட்ட துறைகளே அக்கால்வாய்களைச் சீரிய முறையில் பராமரித்திட வேண்டும் என்றும் பொதுப்பணித் துறையையும் வேறு துறைகளையும் சார்ந்த பாசன ஆதாரங்களுக்கு நீர் வழங்க, பொதுவாக உள்ள கால்வாய்களை பொதுப் பணித்துறையே பராமரிக்க வேண்டும் என்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அந்தந்த துறைகளின் பராமரிப்பில் உள்ள நீர்வரத்துக் கால்வாய்களை அவ்வப்போது கண்காணித்து உரிய முறையில் பராமரிப்பு செய்திடத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யும்படி, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிதி ஆண்டும் இம்முக்கிய பணிகளுக்காக முடிந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளது.

26. 1981–82 ஆம் ஆண்டு பாசனத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையும் யோசனைகளையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது. அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.



பிற்சேர்க்கை–1.

1981–82ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள்.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்). | பயன்பெறும் நிலங்கள் (பரப்பு—ஏக்கரில்) புதிய நிலங்கள். | இடைப்பட்ட நிலங்கள். | பாசன உறுதி பெறும் நிலங்கள். | கூடுதல் உணவு உற்பத்தி (டன்களில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | வடஆர்க்காடு மாவட்டம்— | | | | | |
| 1. | திருப்பத்தூர் வட்டம், சின்னமோட்டூர் கிராமம் கல்லாற்றின் குறுக்கே தடுப்புச்சுவர் கட்டுதல் | 0.55 | .. | 3 | 39 | 22 |
| 2. | வாணியம்பாடி வட்டம், வடக்குப்பட்டு கிராமம் பாலாற்றில் கோயம் பட்டாடை வாய்க்கால் பிரியும் இடத்தில் தடுப்புச்சுவர் கட்டுதல் | 1.00 | .. | 12 | 88 | 54 |
| | தென்ஆர்க்காடு மாவட்டம்— | | | | | |
| 3. | சிதம்பரம் வட்டம், தில்லைநாயகபுரம், கீழ் மூங்கிலடி, பலதாங்கரை கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் | 2.00 | .. | 70 | 255 | 176 |

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்). | பயன்பெறும் நிலங்கள். புதிய நிலங்கள். | இடைப்பட்ட நிலங்கள். | பாசன உறுதி பெறும் நிலங்கள். | கூடுதல் உணவு உற்பத்தி (டன்களில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்—** | | | | | |
| 4. | பெரம்பலூர் வட்டம், சிருவாச்சூர் கிராமத்தில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல் .. .. | 7.55 | 131 | 57 | .. | 120 |
| | **புதுக்கோட்டை மாவட்டம்—** | | | | | |
| 5. | திருமயம் வட்டம், செட்டிப்பட்டியில் பாம்பாற்றுக்குக் குறுக்கே அணை கட்டுதல் .. | 11.56 | .. | 101 | 162 | 162 |
| 6. | திருமயம் வட்டம், குருந்தூர் அருகில் பாம்பாற்றுக்கு குறுக்கே அணை கட்டுதல். (கலம்பம் திட்டம்) .. | 30.00 | .. | 196 | 2395 | 1347 |
| 7. | ஆலங்குடி வட்டம், குலமங்கலம் கிராமத்தில் வில்லுன்னி யாற்றின் குறுக்கே அணை கட்டுதல் | 10.00 | .. | 4 | 350 | 174 |
| | **தஞ்சாவூர் மாவட்டம்—** | | | | | |
| 8. | தஞ்சாவூர் வட்டம், குருங்குளம் கிராமத்தில் வல்லமாற்று வடிநிலத்தின் குறுக்கே ஒரு கண்மாய் அமைத்தல் | 11.50 | 501 | .. | .. | 365 |
| | **மதுரை மாவட்டம்—** | | | | | |
| 9. | பெரியகுளம் வட்டம், புதுவாத்தூர் கிராமம் அருகில் கொக்கலாற்றின் குறுக்கே ஒரு ஆற்று மதகு அமைத்தல் | 2.38 | .. | 38 | 100 | 80 |
| 10. | உத்தமபாளையம் வட்டம், வைரவன் சால்வாயை மேம்படுத்துதல் .. | 2.05 | 32 | .. | 133 | 92 |
| 11. | பெரியகுளம் வட்டம், உஞ்சம்பட்டி கிராமத்தில் சிகு ஓடையின் குறுக்கே ஒரு புதிய கண்மாய் அமைத்தல் .. | 25.50 | 213 | .. | .. | 155 |
| | **இராமநாதபுரம் மாவட்டம்—** | | | | | |
| 12. | அருப்புக்கோட்டை வட்டம், வடுவார்பட்டி கிராமத்தில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல் .. | 3.40 | 212 | .. | .. | 130 |

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்). | பயன்பெறும் நிலங்கள். புதிய நிலங்கள். | இடைப்பட்ட நிலங்கள். | பாசன உறுதி பெறும் நிலங்கள். | கூடுதல் உணவு உற்பத்தி (டன்களில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | திருநெல்வேலி மாவட்டம்— | | | | | |
| 13. | விளாத்திக்குளம் வட்டம், மாவிலைப்பட்டி கிராமம் அருகில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல் .. | 12.40 | 256 | .. | .. | 172 |
| 14. | கோவில்பட்டி வட்டம், சிதம்பரம்பட்டி கிராமம் அருகில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல் .. | 7.75 | 200 | .. | .. | 160 |
| 15. | ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டநத்தம் கிராமம் அருகில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல் | 4.32 | 162 | .. | .. | 116 |
| 6. | அம்பாசமுத்திரம் வட்டம், கொலுமடை கிராமம் அருகில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல் .. | 3.20 | 111 | .. | .. | 71 |
| 17. | விளாத்திக்குளம் வட்டம், கருப்பூர் கிராமம் அருகில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல் .. | 9.´5 | 313 | .. | .. | 209 |
| | பெரியார் மாவட்டம்— | | | | | |
| 18. | பவானி வட்டம், சின்ன வடைமலைபாளையம் ஜம்பை கிராமத்தில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல். .. | 6.12 | 84 | .. | .. | 65 |
| 19. | சத்தியமங்கலம் வட்டம், வரதம்பாளையம் கிராமத்தில் ஒரு புதிய கண்மாய் அமைத்தல் .. | 16.10 | 292 | .. | .. | 235 |
| 20 | கோபிச்செட்டிப்பாளையம் வட்டம், புளியங்கோம்பை கிராமம் அருகில் காட்டாற்றின் குறுக்கே ஒரு புதிய கண்மாய் அமைத்தல். .. | 9.25 | 186 | .. | .. | 13 |
| | கோயம்புத்தூர் மாவட்டம்— | | | | | |
| 21. | உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி பிரதானக் கால்வாய்க்குக் கரை அமைத்தல் மைல் 15/0 முதல் 19/0—வரை .. | 49.20 | .. | .. | .. | .. |

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்). | பயன்பெறும் நிலங்கள். புதிய நிலங்கள். | இடைப்பட்ட நிலங்கள். | பாசன உறுதி பெறும் நிலங்கள். | கூடுதல் உணவு உற்பத்தி (டன்களில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 22. | உடுமலைப்பேட்டை வட்டம்—அமராவதி பிரதானக் கால்வாய்க்கு கரை அமைத்தல்—மைல் 19/0 முதல் 23/0—வரை | 46.50 | .. | .. | .. | .. |
| 23. | உடுமலைப்பேட்டை வட்டம்—அமராவதி பிரதானக் கால்வாய்க்குக் கரை அமைத்தல்—மைல் 23/0 முதல் 27/0—வரை | 43.70 | .. | .. | .. | .. |
| 24. | உடுமலைப்பேட்டை வட்டம் அமராவதி பிரதானக் கால்வாய்க்குக் கரை அமைத்தல் மைல் 27/0 முதல் 31/0—வரை | 41.00 | .. | .. | .. | .. |
| | மொத்தம் | 356.07 | | | | |




பிற்சேர்க்கை 2.

வறட்சி நிவாரண வேலைகள் 1981–82 ஆம் ஆண்டு விவரங்கள்.

| மாவட்டத்தின் பெயர். | | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை. | எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை. | எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளின் மதிப்பு. | முடிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை | ஏப்ரல் முதல் நவம்பர் 1981 வரை செலவிடப்பட்ட தொகை. | வேலை நாட்களின் (Mandays) எண்ணிக்கை (லட்சம்) | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. | | ரூ. | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | | |
| 1 | செங்கல்பட்டு | 87.00 | 853 | 118.500 | 841 | 89.606 | 8.34 | *சேலம், திருச்சி |
| 2 | வடாற்காடு | 246.00 | 1308 | 419.699 | 1331 | 285.256 | 23.11 | மதுரை முத |
| 3 | தென்னாற்காடு | 158,00 | 1213 | 235.555 | 1120 | 157.175 | 19.39 | லிய 3 மாவ |
| 4 | சேலம் | 80.00 +5* | 402 +14* | 144.797 | 395 +1* | 92.845 +5.818* | 7.50 +0.20* | ட்டங்களில் வேளாண்மைத் |
| 5 | தர்மபுரி | 90.00 | 502 | 150.104 | 425 | 111.220 | 7.50 | துறையால் |
| 6 | தஞ்சாவூர் | 28.00 | 559 | 102.530 | 494 | 44.443 | 6.64 | மண்வளம் |
| 7 | புதுக்கோட்டை | 140.00 | 1093 | 215.850 | 956 | 126.640 | 23.22 | பாதுகாப்பு |
| 8 | திருச்சி | 67.00 +5* | 349 +19* | 77.790 | 321 +8* | 65.604 +10.360* | 6.41 +1.04* | திட்டத்தின் கீழ் எடுத்துக் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 மதுரை | 60.00 +50* | 369 +9* | 107.210 | 345 +3* | 62.370 +5.800. | 7.77 +0.19* | |
| 10 இராமநாதபுரம் | 205.00 | 1,400 | 310.533 | 1,351 | 211.643 | 22.42 | கொள்ளப்பட்ட |
| 11 திருநெல்வேலி | 30.00 | 206 | 43.000 | 174 | 30.010 | 5.37 | குட்டை சம் |
| 12 பெரியார் | 15.00 | 114 | 19.703 | 114 | 16.874 | 1.23 | பந்தமான |
| 13 கன்னியாகுமரி | 4.00 | 68 | 7.270 | 48 | 4.000 | 0.33 | வேலைகள். |
| மொத்தம் .. | 1,210.00 +15.00* | 8,433 +42* | 1,952.541 | 7,925 +12* | 1,297.686 +21.878* | 1,39.25 +1.43* | |



## இணைப்பு—IV

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

(497ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண். 27

### கதர்—கொள்கை விளக்கக் குறிப்பு

### கொள்கையும் திட்டங்களும்

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியைத் தீவிரப் படுத்துவதற்காக 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களை கொண்டே பெருமளவில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித்தரவும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது உட்பட கதர் கிராமத் தொழில் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றை செயல்படுத்துவதும் இவ்வாரியத்தின் முக்கியமான பணியாகும்.

2. 26 கதர் கிராமத் தொழில்கள், கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவின் கவனிப்பில் இயங்கி வருகின்றன. அவற்றுள் கதர்தொழிலுடன் கீழ் குறிப்பிட்டுள்ள 15 கிராமத் தொழில்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.—

1 பனைத்தொழில்

2 செக்கு எண்ணெய்

3 கைக்குத்தல் அரிசி, மற்றும் தானியங்களையும் பருப்பு வகைகளையும் செய்முறைப்படுத்துதல்.

4 தோல்தொழில்

5 மட்பாண்டம் (செங்கற்கள், ஓடுகள்)

6 சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சூளை காளவாய்

7 தேனி வளர்த்தல்

8 தச்சு கருமார் தொழில்

9 பழங்களை பதப்படுத்துதலும், பாதுகாத்தலும்

10 கையால் செய்யப்பட்ட காகிதம்

11 வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை

12 சமையலுக்குப் பயன்படாத எண்ணெய் சோப்பு

13 நார்த் தொழில்

14 பிரம்பு, மூங்கில்

15 பாலிவஸ்திரா

3. தமிழ்நாடு அரசால் கிராமத் தொழில்கள் என அறிவிக்கப்பட்ட பின்வரும் தொழில்களையும் இவ்வாரியம் ஊக்குவித்து வளர்த்து வருகிறது.—

1 ஊதுவத்தி

2 சீகைக்காய்த்தூள்

3 பற்பொடி

4 நீலகிரித் தைலம்

### கதர்

4. இவ்வாரியம் தனது 80 உற்பத்தி நிலையங்கள் மூலமாக நூற்பாளர்களிடமிருந்து கைராட்டை நூல், அம்பர் நூலை அடக்க விலையில் கொள்முதல் செய்கிறது. தற்பொழுது 373 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நிலையத்திலும் 6 கதிர் அல்லது 12 கதிர் உள்ள ராட்டைகளை பெரும்பாலும் பெண்களே இயக்கி வருகின்றனர். இவ்வாரியம் 1—8—1981 முதல் நூற்பாளர்கள் மற்றும் இதர கைவினைஞர்களுக்கான ஊதிய விகிதத்தைதிருத்தி அமைத்துள்ளது. அதன்படி நூற்பாளர்களுக்கு ஒரு சட்டத்திற்கு 2 பைசாகளும், நெசவாளர்களுக்கு 1 பைசாவும் இதர கைவினைஞர்களுக்கு அவர்கள் பெறும் ஊதியத்தில் கூடுதலாக 10 விழுக்காடும் பெறுவார்கள். இதனால் ஒரு நூற்பாளருக்கு ஒரு நாளைக்கு சராசரியாக கூலி ரூ. 5 லிருந்து ரூ. 5.25 வரையிலும் நெசவாளர்களுக்கு ரூ. 15 கிடைக்கும். இதைத்தவிர மேற்கொண்டு நூற்போர் நெய்வோர்களது ஊதியத்தை உயர்த்தி அவர்கள் பெறும் ஊதியத்தில் 8 விழுக்காடு ஊக்க ஊதியமாக அளிக்கும் புதிய திட்டமும் புகுத்தப்பட்டுள்ளது.

5. 1981—82, நடப்பாண்டில், கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு 100 செட் 6 கதிர் ராட்டைகளையும், 12 கதிர்கள் கொண்ட ராட்டைகளில் 75 செட்டையும் விநியோகம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளது. இதுவரை 12 கதிர் ராட்டைகளில் 28 செட்டுகளை விநியோகித்துள்ளது. போதிய அளவிற்கு வலிமை வாய்ந்த ஒரே சீரான நூல் இழையை உற்பத்தி செய்வதற்கும், நூற்கும் போதும் நெய்யும் போதும் ஏற்படும் அறுந்து போகும் தன்மையால் ஏற்படும் பாதகங்களை நீக்கவும் உறுதி செய்யும் பொருட்டு தூசி நீக்கி பஞ்சை பட்டை போடும் ஒரு இயந்திரமும் 33 பஞ்சுடைக்கும் கருவிகளும் வாங்கி நிறுவ அரசு நடப்பாண்டில் ரூபாய் 5 லட்சம் மானியமாக வாரியத்திற்கு அளித்துள்ளது. 85 பஞ்சுடைக்கும் கருவிகளும் தூசி நீக்கி பஞ்சை பட்டை போடும் ஒரு இயந்திரமும் கொள்



முதல் செய்ய இவ்வாரியம் நடவடிக்கை மேற்கொண்டதில் 38 பஞ்சுடைக்கும் கருவிகளையும் பஞ்சு தூசி நீக்கி பட்டையிடும் இயந்திரமும் கொள்முதல் செய்யப்பட்டு அவைகள் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வரப்படுகிறது. எஞ்சியுள்ளவை ள் விரைவில் பெறப்படும். இந்த நிதி ஆண்டிற்குள் அனைத்து பஞ்சுடைக்கும் கருவிகளும் பட்டை போடும் கருவியும் செயல்படத் துவங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6, கச்சாப் பட்டு நூலை, முறுக்கிய நூலாக்குவதற்கு 2 அலகுகளை இதுவரை துவக்கியுள்ளது. மேலும் ஒரு அலகு இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படத் துவங்கும்.

7. பருத்தி ரக கதர் விற்பனையில் வழக்கம் போல் கூடுதலாக 10 விழுக்காடு ஆண்டு முழுமையும் தள்ளுபடி கிடைக்க கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அனுமதித்துள்ளது. மேற்கொண்டு 10 விழுக்காடு பருத்தி கதர் ரகங்களுக்கும், கம்பளி ரகங்களுக்கும், 5 விழுக்காடு பட்டு ரகங்களுக்கும் நடப்பாண்டில் 90 நாட்களுக்கு தள்ளுபடியில் விற்பனை செய்ய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அனுமதித்துள்ளது. இத்துடன் தமிழக அரசு வழக்கமாக வழங்கும் திரு காமராஜ், பேரறிஞர் அண்ணா, மற்றும் தந்தை பெரியார் ஆகியோர்களின் பிறந்த நாள் காலங்களில் 15 தினங்களுக்கு வழங்கிடும் 10 விழுக்காடு தள்ளுபடியுடன் விழாக்காலங்களில் மேற்கொண்டு 5 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியாக அனைத்து ரக துணிகளுக்கு வாரியமும் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனங்களும் செய்யும் 60 நாட்களுக்கான விற்பனையில் தள்ளுபடியளிக்கவும் அனுமதித்துள்ளது.

8. நூல் உற்பத்தி 1979-80 ஆம் ஆண்டில் 223.55 இலட்சம் சிட்டங்களாக இருந்தது. 1980—81-ல் 271.80 இலட்சம் சிட்டங்களாக அதிகரித்துள்ளது. 1981 டிசம்பர் திங்கள் வரை 264.11 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கதர் உற்பத்தியில் 1979-80—ல் ரூ. 519.49 இலட்சமாக இருந்தது 1980-81ல் ரூ. 697.59 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1981 டிசம்பர் திங்கள் வரை ரூ. 649.09 இலட்சம் மதிப்புள்ள கதர் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் இரு சாய சலவை அச்சு அலகில் கதர் துணிகளுக்கு சாயமிடுதலும் அச்சிடுதலும் நடைபெறுகின்றன. மூன்று தையல் அலகுகள் மூலமாக ஆயத்த ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. 1981 டிசம்பர் திங்கள் வரை ரூ. 180 இலட்சம் மதிப்புள்ள துணிகள் சாயமற்றும் அச்சிடப்பட்டன. ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள ஆயத்த ஆடைகளும் தயாரிக்கப்பட்டன. 155 கதர் அங்காடிகள் மூலமாக கதர் துணி விற்பனை செய்யப்படுகின்றது. 1979-80ம் ஆண்டு ரூ.615.24 இலட்சமாக இருந்த கதர் விற்பனை 1980-81ல் ரூ. 692.22 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1981 டிசம்பர் திங்கள் வரை

ரூ. 699.58 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யப்பட்டது. சென்ற ஆண்டு கதர் தொழிலில் 1,020 நபர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு கிடைத்தது. இந்த ஆண்டு இதுவரை 330 நபர்களுக்குப் பயனுள்ள வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டதுடன் மொத்தம் 33,409 நபர்களுக்குப் பயனுள்ள வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

9. அரசின் நிதி உதவியில் இவ்வாரியம் கதர் துணிக்கு வடிவமைப்புகள் தயாரிக்க பவானிசாகரில் ஓர் கூடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. ஆராய்ச்சிக்கான கட்டிடம் முடியும் தருவாயில் உள்ளது. ஆராய்ச்சிக்குத் தேவையான கருவிகள் கொள்முதல் செய்யும் பணியும் முடிவடைந்துள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் இவ்வாராய்ச்சி நிலையம் செயல்படத் துவங்கும்.

10. அரசு நடப்பாண்டில் 500 கதர் நெசவாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக ரூ. 5 இலட்சம் அனுமதித்துள்ளது. அத்தகைய வீடு கட்ட ஏதுவான வடிவமைப்பை வாரியம் தயாரித்துள்ளது, ஒவ்வொரு வீடும் கட்ட ஆகும் செலவு ரூ. 7,500 என கணக்கிடப் பட்டுள்ளது. வாரியம் இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

## கிராமத் தொழில்கள்.

11. கிராமத் தொழில்கள் நுகர்வோர் தேவைக்கேற்ப கிராமங்களில் ஆங்காங்கே கிடைக்கின்ற மூலப்பொருட்களைக் கொண்டும், மனித சக்தியினைக் கொண்டும் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் கிராமப் புறங்களில் உள்ள ஏழ்மை நிலையை நீக்கிட ஏதுவாக அமைக்கப் பெற்றுள்ளன. அதிக அளவில் வேலை வாய்ப்பினை குறைந்த மூலதனத்துடன் ஏற் படுத்தித்தரக்கூடிய முக்கியத்துவத்தை கிராமத்தொழில்கள் பெற் றுள்ளன இதனாலேயே அரசு 1978ம் ஆண்டு தனது பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையை மாற்றி அமைத்துள்ளது. அதற்காக நன்றி கூற வேண்டும். இவ்வாரியம் கடந்த 3 ஆண்டு களில் 93.517 பேர்களுக்குக் கூடுதலான வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது. 1981–82ம் ஆண்டில் 33,417 பேர் களுக்குக் கூடுதலான வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர உள்ளது.

12. இவ்வாரியத்தில் 31-12-1981 வரைக்கான காலத்தில் 162 அலகுகளும் 1260 கூட்டுறவு சங்கங்களும் செயல்படுகின்றன. மேலும் 30,945 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கப் பட்டுள்ளது. கிராமத் தொழில்களின் உற்பத்தி மற்றும் விற்பனை 1979-80—ல் ரூ. 3,273.39 இலட்சமும் மற்றும் ரூ. 3546.28 இலட்சமுமாக முறையே இருந்தன. 1980—81 ல் ரூ. 4123.81 இலட்சமும் மற்றும் ரூ. 4579.16 இலட்சமாகவும் முறையே உயர்ந்துள்ளது. 1981-82 ம் ஆண்டு காலத்தில்



கிராமத் தொழில் பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 4592.50 இலட்சமாகவும் ரூ. 4945.75 இலட்சமாக வும் இருக்கும்படி திட்டமிடப்பட்டுள்ளது. 1981 டிசம்பர் திங்கள் முடிய ரூ. 2945.17 இலட்சம் உற்பத்தியும் ரூ. 3006.03 இலட்சம் விற்பனையும் செய்யப்பட்டன. இதுவரை 4,25,561 பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு கிராமத் தொழில்கள் மூலம் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

13. இவ்வாரியம் கிராமத் தொழில்களை விரிவாக்கவும் முன்னேற்றம் செய்யவும் ஒரு பெரிய திட்டம் தயாரித்துள்ளது.

## பனைத் தொழில்

14. தமிழ்நாட்டில் 4 கோடி பனைமரங்கள் உள்ளன. அவற்றுள் 2 கோடி மரங்கள் பயன்படுத்துவதற்குத் தகுந்தவை யாக உள்ளன. இவற்றில் 60 இலட்சம் மரங்கள் மட்டுமே பயன் படுத்தப்படுகின்றன. அனைத்து மரங்களையும் பயன்படுத்துவ தற்கு தகுந்தவாறு இவ்வாரியம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மாதவரத்தில் ரூ. 9.48 இலட்சம் மதிப்பில் பனைப் பொருட்கள் உற்பத்தி நிலையம் ஏற்படுத்தியுள்ளது. தர்மபுரி மாவட்டம் மாத்தூரில் ரூ. 15·28 இலட்சத்திலும், புதுக்கோட்டை யில் ரூ. 34,31 இலட்சத்திலும் பனைப்பொருட்கள் கூடங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மரியூரில் ரூ. 24·56 இலட்சத்திலும் அமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. 1981 டிசம்பர் திங்கள் வரை பாம்கோலா உற்பத்தி மற்றும் விற்பனை முறையே 2,64,910 பாட்டில்கள் மற்றும் 2,57,342 பாட்டில்கள் ஆகும். டெல்லியில் உள்ள ''ஒக்லா'' தொழில்பேட்டையில் ஒரு பாம்கோலா உற்பத்தி அலகு ஆரம்பிக்க இடம் பெறப்பட்டுள்ளது, இந்நிதி ஆண்டிற் குள் இவ்வலகு செயல்படத் துவங்கும். 1980-81—ல் ரூ. 36.63 இலட்சம் மதிப்புள்ள பனைப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப் பட்டன. நடப்பு ஆண்டு 1981 டிசம்பர் முடிய ரூ. 21 இலட்சம் மதிப்புள்ள பனைப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

15. பொதுப்பணித் துறையைச் சேர்ந்த மாநிலம் முழுவதிலு முள்ள பனை மரங்களை முழு அளவிலும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இவ்வாரியத்தின் கீழ் செயல்படும் பனை வெல்லக் கூட்டுறவு சங்கங்களுக்கு குத்தகைக்கு விட அரசு ஆணை யிட்டுள்ளது. அதன்படி அம்மரங்களை கூட்டுறவு சங்கங்கள் குத்தகை மூலம் எடுத்து சங்கங்களிலுள்ள ஒவ்வொரு கைவினை ஞருக்கும் தலா 100 மரங்கள் வீதம் குத்தகைக்குவிடும், முதற் கண்ணாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 3,500 மரங்கள், 35 மரமேறிகளுக்கு டிசம்பர் 1981-ல் வழங்கப்பட்டது.

16. நுங்கினைப் பதப்படுத்துவதற்காக கோவை பல்கலைக் கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தக்கவழி முறைகளைக் கண்டுபிடிக்க சிறிது

காலம் ஆகும். ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் பனை மரங்களின் உயரத்தைக் குறைப்பதற்காக ஆராய்ச்சியும் நடைபெற்றுகொண்டுள்ளது, பனைமரங்களில் சுலபமாக ஏற ஏதுவான கருவிகளைப் பற்றிய ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பனைத் தொழிலை விரிவாக்கக்கூடிய சாத்திய கூறுகளைக் கண்டறிய ஒரு கருத்தரங்கு ஏப்ரல் 1981-ல் நடைபெற்றது.

### கிராம எண்ணெய்

17. கிராம எண்ணெய்த் தொழிலில் 10,000 விசை செக்குகளை அறிமுகப்படுத்தும் திட்டத்தின்கீழ் இதுவரை 2,678 விசைச்செக்குகள் விநியோகிக்கப்பட்டன. ''டான்சி' நிறுவனம் 1900 விசைச் செக்குகளை உற்பத்தி செய்து விநியோகித்துள்ளது. 1982–83ல் இவ்வாரியம் மேற்கொண்டு 1250 விசைச் செக்குகளை உற்பத்தி செய்ய உள்ளது. விசைச் செக்குகள் இடர்பாடின்றி இயங்கக்கூடிய சாத்தியக் கூறுகளை கண்டறியும் ஆராய்ச்சியை பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம் நடத்தி வருகிறது.

### உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு

18. இவ்வாரியம் இவ்வாண்டு 10 உண்ணா எண்ணெய் வித்துக்கள் சேகரிக்கும் நிலையங்களை துவக்கியதுடன் தற்பொழுது 40 வித்துக்கள் சேகரிக்கும் நிலையங்கள் வாரியத்தின்கீழ் செயல்படுகின்றன. விற்பனையை உயர்த்தி அதன் மூலம் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு பெருக்கிட ஏதுவாக சோப்பு விற்பதற்கு விற்பனை ஏஜெண்டுகள் நியமித்திட வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது எண்ணெய் மற்றும் சோப்பு ஆராய்ச்சி கூடம் ஒன்று குறளகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### தோல் தொழில்

19. கொங்கம்பாளையத்திலுள்ள தோல் அலகினை விரிவாக்கம் செய்ய அரசு ரூ. 21.12 இலட்சம் அனுமதித்துள்ளது. இதற்கான கட்டிடங்களைக் கட்டும் பணியை பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான கருவிகள் வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### சிறப்புத் திட்டங்கள்.

### (1) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

20 இம்மாநிலத்திலுள்ள பழங்குடியினர்களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கும், அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும். அரசு ரூ. 13.36 இலட்சம் இதுகாறும்



வழங்கியுள்ளது. இத்திட்டம் அவரவர் தொழிலில் பயிற்சியளிக்கவும், தேனி பெட்டிகள், மற்றும் கருவிகள் வாங்க உதவி செய்யும் அதன்படி இதுகாறும் 1445 பேர்கள் பயனடைந்துள்ளார்கள். அரசு 1982–83ம் ஆண்டிற்கு மேற்படி திட்டத்திற்கு ரூ. 5.56 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### (2) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

அரசு நீலகிரி மாவட்டத்தில் தேன் பெட்டிகள் தைலம் காய்ச்சும் கருவிகள் வழங்கவும், எண்ணெய் மற்றும் ரொட்டி தயாரிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்காகவும் ரூ. 19.35 இலட்சம் வழங்கியுள்ளது. 1982–83ம் ஆண்டு அரசு இத்திட்டத்தை தொடர்ந்து நடத்திட ரூ. 9.88 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

### (3) வறட்சிப் பாங்கான திட்டம்

தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வறட்சி நிலையை நீக்கிட அரசு ரூ. 117.50 இலட்சம் ஒடுக்கீடு செய்து அதில் பலவகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### சுயவேலை வாய்ப்புத் திட்டம்

21. கிராமிய கைவினைஞர்கள் அவரவர் செய்யும் தொழிலில் தேர்ச்சி பெறும் பொருட்டு 3820 பேர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ. 14.32 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது. 1813 பேர்கள் இத்திட்டத்தின் மூலம் இதுகாறும் பயிற்சி பெற்றனர். எஞ்சியுள்ளோர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

22. கதர்–கிராமத் தொழில்கள் மூலம் கிராமப்புறங்கள் செழிக்க ஆற்றிடும் பணிகளை ஒருமுகப்படுத்தி ஊக்குவிக்கும் முகத்தான் வாரியத்தின் அலுவலர்களைத் திட்ட அலுவலராகவும், தொழில் உதவி திட்ட அலுவலர்களாகவும் செயலாற்ற ஒருங்கிணைந்த திட்ட அமைப்புக்கு இவ்வாரியம் வழங்கியுள்ளது.

### 1982–83 ஆண்டுக்கான திட்டங்கள்

23. கீழ்க்கண்ட இரு திட்டங்களை 1982–83-ம் ஆண்டிற்கு அரசு உதவியுடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

(1) ரூ. 2.85 இலட்சம் கடனில் மரம் அறுக்கும் ஆலை ஒன்று அமைத்தல்.

(2) ரூ. 2 இலட்சம் மானியத்தில் அதிக அகலமான துணி உற்பத்திக்கு ஏதுவான 200 தறிகள் விநியோகித்தல்.

24. மர அறுவை ஆலை நிறுவுவதன் முலம் தேவையான மரத்தை குறைந்த விலையில் கொள்முதல் செய்ய இயலும். அதிக அகலமான துணி உற்பத்தி செய்யும் தறிகளை நெய்வோர் ஒருவருக்கு ரூ. 1000, வீதம் மானிய உதவியுடன் வழங்கி உற்பத்தியாகும் அகலமான துணியை அனைத்தையுமே வாரியம் விற்பனைசெய்திடும்;

## வாரியத்தின் நிதிநிலை.

25. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசின் வரவு-செலவு திட்ட அமைப்பினை பின்பற்றி முறையே கதர் நிதி கிராமத் தொழில் நிதி என இரண்டு தலைப்பு கணக்குகளின்கீழ் தனது வரவுசெலவுத் திட்டங்களை தயாரிக்கிறது.

26. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனது நிதி உதவி கொள்கையின்படி, பல திட்டங்களை அமுலாக்கி நடத்த நிதி உதவி அளிக்கிறது. வணிக முறை அல்லாத இனங்களில் வரவுக்கும் செலவுக்கும் இடையே ஏற்படுகிற வித்தியாசத் தொகையினை தமிழ்நாடு அரசு ஈடு செய்து உதவுகிறது.

27. 1981-82 ஆம் ஆண்டில் முடிவாக ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்களுக்காக கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு கீழ்க்கண்ட நிதிகளை ஒதுக்கியுள்ளது.

| | மான்யம். | கடன். |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) கதர் .. | 1.73 | 26.34<br>246.15 (வங்கி நிதி) |
| (2) கிராமத்தொழில் | 66.73 | 363.00<br>41.40 (வங்கி நிதி) |
| மொத்தம் .. | 68.46 | 389.34 |
| | | 287.55 (வங்கிநிதி) |



28. கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதி உதவியை தவிர தமிழ்நாடு அரசால் வாரியத்திற்கு ஒப்படைக்கப்படும். சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசிடமிருந்து நிதி உதவி இவ்வாரியத்திற்கு கிடைக்கிறது. தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி உதவியின் விவரம் பின்வருமாறு:—

| நிகர செலவின் மானியம். | 1981–82 | 1982–83 |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. தமிழ்நாடு அரசிடமிருந்து கிடைக்கும் மானியம்— | | |
| 1. கதர் நிதி | 36.99 | 37.00 |
| 2. கிராமத் தொழில் | 46.27 | 46.25 |
| 3. தணிக்கைக் கட்டணம் | 31.85 | 12.50 |
| 4. கதர் விற்பனையில் தள்ளுபடி | 53.00 | 55.00 |
| 5. மற்ற சிறப்புத்திட்டங்களை செயல்படுத்த | 22.71 | 25.32 |
| | 190.82 | 176.07 |
| 2. தமிழ்நாடு அரசிடமிருந்து கிடைக்கும் கடன்— | | |
| சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த | 21.74 | 4.67 |
| மொத்தம் .. .. | 212.56 | 180.74 |

## கோரிக்கை எண் 27 கதர் 1982-83.

### 321, கிராமக் கைத்தொழில்களும், சிறு தொழில்களும்

### 1 திட்டத்தில் சேராதவை—

| | (ரூபாய்களில்) |
|---|---|
| AA. கதர் வளர்ச்சிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்-09 உதவி மானியங்கள் | 37,00,000 |

| | |
|---|---|
| AB. தணிக்கைக் கட்டணங்கள் செலுத்த தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 12,50,000 |
| AD. கிராமத் தொழில் நிதிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 46,25,000 |
| AF. பதநீர் இறக்குவோர் துயர் தணிப்பு—மறு வாழ்வுக்காக, தமிழ்நாடு, கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 10,000 |

II. மாநிலத் திட்டம்:

| | |
|---|---|
| JC. கதர் துணி விற்பனை மீது தள்ளுபடி 09. உதவி மானியங்கள். | 55,00,000 |
| JF. கதர் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள்—09. உதவி மானியங்கள். | 14,65,000 |
| AM. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் | |
| JA. பழங்குடி மக்களுக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்கல் 01. சம்பளங்கள்—09. உதவி மானியங்கள் | 4,50,000 |
| JH. நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பு மேம்பாட்டுக்காக தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 5,07,000 |
| JI. நீலகிரி மாவட்டத்தில் தைலங்கள் வடிக்கவும் தைலங்கள் வடிக்கும் இயந்திரங்களை வழங்கவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள் 09. உதவி மானியங்ள். | 1.00,000 |
| மொத்தம் .. | 1,76,07,000 |



## கொள்கை விளக்கக் குறிப்பு.

### கோரிக்கை எண் 37.

பாதுப்பணிகள் கட்டிடங்கள்

இக் கோரிக்கையில் ரூபாய் ஒரு இலட்சம் வரையுள்ள மூலப்
ணிகள், பொதுப்பணித்துறையின் கீழுள்ள கட்டிடங்களின்
ராமரிப்பு மாற்றுப் பணிகள், மற்றும் பழுது பார்க்கும் செல
னங்கள் அனைத்தையும் கொண்டதாகும். பொதுப்பணித்
துறையிலுள்ள கட்டிடங்களுக்கான சொத்து வரி கட்டுதல்
ஆகியவையும் இக்கோரிக்கையில் அடங்கும். 1982-83 ஆம்
ஆண்டிற்கான இக்கோரிக்கையின் மொத்த மூலதனம் ரூபாய்
71.47 இலட்சங்கள் ஆகும்.

### கோரிக்கை எண் 38.

பொதுப் பணிகள் பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்

பொதுப்பணித்துறையின் பணியாளர் அமைப்புக்கு உண்டான
செலவினங்கள் இக்கோரிக்கையில் அடங்கும். இதற்கென
ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1322.89 இலட்சங்கள் ஆகும்.

### கோரிக்கை எண். 51

பொதுப்பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பீட்டிற்கு மேல் உள்ள புதிய
வேலைகளின் செலவினங்களும், இது போன்ற ஒவ்வொன்றும் இவ்
வரையறைக்குட்பட்டதாகவும், ஆனால் ரூபாய் 5 இலட்சத்திற்கு
மேற்பட்ட மதிப்பீடு திட்டத்தின் பகுதிகளில் அடங்கும்
வேலைகளின் செலவினங்களும் இக்கோரிக்கையில் இடம்
பெறுகின்றன. இதன் கீழ் ரூ. 37,20.54 இலட்சம் மானியமாக
கோரப்படுகின்றது.

மாநில அரசின் நில வளர்ச்சி உட்பட்ட பல்வேறு துறைகளின்
தேவைகளுக்கேற்ப திட்டம் தீட்டி வடிவமைத்து கட்டிடங்கள்
கட்டுவது பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவின் பொறுப்பாகும்.
மாநில அரசின் கட்டிடங்களைப் பராமரிக்கும் பணிகளையும்
இத்துறை கவனிக்கின்றது.

5, இவைகளுக்கு மேலாக கடல் அரிப்புத் தடுப்புப் பணி
களும் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.
புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரசு கட்டிடங்களை
சீரமைத்தல் மற்றும் மக்களை புயல் வெள்ளத்திலிருந்து
பாதுகாக்கும் தற்காப்பு இல்லங்கள் கட்டும் பணிகளும்
இக்கட்டிடப் பிரிவைச் சார்ந்ததாகும்.

6 மேலும், உள்ளாட்சித்துறைகள், தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் போன்ற அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான கட்டிடப் பணிகளை முகமை முறையில் சென்டேஜ் சார்ஜ் வசூலித்துக் கொண்டு, பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவினரால் நிறைவேற்றப்படுகிறது.

7. அவையில் வைக்கப்பட்ட திறனாய்வுக் குறிப்பில் 1981—82 ஆம் ஆண்டு இத்துறையினால், முடிக்கப்பட்ட பணிகள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள், மேலும் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்கொள்ளவிருக்கும் பணிகள் முதலியன விவரமாகக் காணலாம். 1981-82 ஆம் ஆண்டு அல்லது முன்னர் துவக்கப்பட்டு, 1981-82 ல் முடிக்கப்பட்ட பணிகள் மதிப்பீடு ரூ. 1,088.09 இலட்சங்கள். மேலும் ரூபாய் 4,261.64 இலட்சங்கள் மதிப்புடைய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒப்புதல் ஆணைகள் அளிக்கப்பட்ட ரூபாய் 2 740.70 இலட்சங்கள் மதிப்பிட்ட பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன. அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ள சிறு வெளியீட்டில் 1982-83 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின் தொடங்கப்படவிருக்கும் பணிகள் பற்றிய விவரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

8. சென்னைப் பெருநகர் பகுதியில் உள்ள காலியிடங்களில் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பன்மாடி அலுவலகக் கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட, வட்ட தலைமையகங்களிலும் இதுபோன்ற அலுவலகக் கட்டிடங்கள் கட்டி, ஏற்கனவே உள்ள தனி நபர் வாடகைக் கட்டிடங்களில் உள்ள அலுவலகங்களை சொந்தக் கட்டிடங்களில் வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுலா மாளிகைகள், ஆய்வு மாளிகைகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட இருக்கிறது. இப் பணிகளுக்கென ரூ. 1,000.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. இப்பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

9. சென்னை அடையாற்றில் கிரீன்வேஸ் சாலையில் உள்ள அரசிற்குச் சொந்தமான காலியிடங்களில் அமைச்சர்களின் குடியிருப்பிற்காக பத்து இல்லங்கள் கட்டுவதற்கு ஏற்கனவே திட்டமிட்டதற்குப் பதிலாக தற்போது ரூ. 202.00 இலட்சங்கள் செலவில் 24 இல்லங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

10. மாநிலத்தின் நகரப் பகுதி மற்றும் வெளியூர் புறங் களில் 150 இடங்களில் ரூ. 300.00 இலட்சம் செல்வில் தேவைக்கேற்ற வகையில் காவல் நிலையங்கள் கட்டுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.





11. மேலும் ஒரு முன்னோடித் திட்டமாக பாளையங் கோட்டை இந்திய மருத்துவ முறைக் கல்லூரியில் தங்கிப் பயிலும் மாணவிகளுக்கென தங்கும் விடுதி கட்டிடத்தைக் கட்டும் பணி பொதுப்பணித்துறையால் நேரிடையாக மேற் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

12. படித்த பொறியாளர்களிடையே நிலவிவரும் வேலை யில்லா நிலைமையை நீக்கவும், தனியார் ஒப்பந்த முறைக்கு மாற்று முறை ஒன்றை உருவாக்கவும், வேலையில்லாப் பட்ட மற்றும் பட்டய பொறியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை சென்னையில் சோதனை அடிப்படையில் நிறுவ அரசு 6—8—1981-அன்று உத்தர விட்டுள்ளது. இச்சங்கத்திற்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன :—

(1) பிணை வைப்புத் தொகை மற்றும் பாதுகாப்புத் தொகை செலுத்துவதிலிருந்து இச்சங்கத்திற்கு விலக்களிக்கப் படும்.

(2) துறையின் மதிப்பீட்டைக் காட்டிலும் 10 விழுக்காடுகள் கூடுதலாக இச்சங்கத்திற்கு நியமனமுறையில் பணிகள் வழங்கப் படும்.

(3) திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையினைப் பின்பற்றும் போது மிகக் குறைந்த ஒப்பந்தக்காரரைக் காட்டிலும் 10 விழுக் காடுகள் அதிகமாகக் குறிப்பிட முன்னுரிமை வழங்கப்படும்.

13 மேற்கண்ட சங்கமானது 29—12—1981 அன்று ''நவீன பொறியாளர்கள் கட்டுமான கூட்டுறவுச் சங்கம் (வரையறுக் கப்பட்டது), சென்னை'' என்ற பெயரில் பதிவு செய்யப் பட்டது. மேலும் 22—1—1982 அன்று கீழ்க்கண்ட நிதி உதவிகள் வழங்கிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது:—

| | ரூ. |
|---|---|
| (1) ஒரு ஆதி திராவிட உறுப்பினருக்கான அரசு அளித்த பங்குத் தொகை. | 2,000 |
| (2) பங்கு மூலதனத்தில் அரசின் பங்கு தொகை. | 40,000 |
| (3) அரசு உதவிபெறும் தொழிற்கூட சட்டத்தின் கீழ் 11 உறுப்பினர்களுக்கு ரூ. 2,000 வீதம் கடன் உதவி. | 22,000 |
| (4) பங்கு மூலதனத்திற்கு அரசின் வட்டி யில்லாக் கடன் தொகை. | 3,00,000 |

இத்திட்டத்தின் குறிக்கோள் பற்றி விரிவாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. பணிகளை ஒப்படைப்பதில் இச்சங்கத்துக்கு முன்னுரிமை அளிக்குமாறு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை தலைமைப் பொறியாளர்களும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கும் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் ஆகியவற்றின் தலைமைப் பொறியாளர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். தனிநிறைவுத் திட்டத்தின் கீழ் எவ்வளவு வேலைகள் ஒப்படைக்க முடியுமோ அவ்வளவு வேலைகளை இச்சங்கத்திடம் ஒப்படைக்குமாறு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். பூர்வாங்க வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, இச்சங்கமானது விரைவில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யப்படும்.

14. உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு ஒருமைப்படுத்தப்பட்ட சத்துணவு அளிப்பு திட்டத்தின்கீழ் பல்வேறு சுகாதார நிலையங்களைக் கட்டுதல், தற்போதுருக்கும் தாதிகள் பள்ளிகளை விரிவுபடுத்தல், புதிய தாதிகள் பள்ளிகளை அமைத்தல், கிராம சுகாதார பயிற்சிப் பள்ளிகளைக் கட்டுதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் அலுவலர்களுக்கான குடியிருப்புகளுடன் 51 கிராமப் புற சுகாதார பயிற்சி நிலையங்களை அமைத்தல், 6 புதிய செவிலியர் நிலையங்களை அமைத்தல் போன்ற பணிகள் ரூ. 243 இலட்சம் செலவில் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

15. டென்மார்க் நாட்டின் உதவியுடன் நிறைவேற்றப்படும் திட்டத்தின் (டேனிடா) கீழ் ரூ. 364 50 லட்சம் செலவில் சேலம் மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் புதிதாக சுகாதார நிலையங்களைக் கட்டுவதற்கு அரசு உத்தேசித்து உள்ளது.

16. 1981–82 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பெரும் திட்டங்களை நிறைவேற்றும் பணியினை பொதுப் பணித் துறையின் கட்டிடப் பிரிவு மேற்கொண்டுள்ளது

| திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. (ரூ. இலட்சங்களில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1. அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் குழந்தைகள் காப்பகப் பிரிவுக்கு தனியாக் கட்டிடம் கட்டுதல். | 199·00 |
| 2. சென்னையிலுள்ள பெரம்பூரில் 100 படுக்கைகள் கொண்ட புறநகர் மருத்துவமனை கட்டுதல். | 170.00 |



| (1) | (2) |
|---|---|
| 3. தேனாம்பேட்டையில் மருத்துவத் துறை இயக்குநர் அலுவலக வளாகத்தில் மருத்துவத் துறை இயக்குநர் மற்றும் பொது உடல் நலத்துறை இயக்குநர் அலுவலகங்களுக்கான பன்மாடிக் கட்டிடம் கட்டுதல். | 106·00 |
| 4. சென்னையிலுள்ள ஸ்டான்லி மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலுள்ள இரண சிகிச்சைப் பிரிவின் மேற்பகுதியில் கூடுதலாக மாடிகள் கட்டுதல். | 241.61 |

17. 13—8—1981 நாளிட்ட அரசு ஆணை எண். 1359, பொதுப்பணித்துறை, வெளியிடப்படுமுன், கட்டிடங்களை பராமரிப்பதற்காக ஒதுக்கப்படும் தொகை கட்டிடங்களின் மூலதன அடக்கவிலையின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பழமையான கட்டிடங்களின் மூலதன அடக்கவிலை குறைவானதால் அவைகளை பராமரிப்பதற்காக இந்த அடிப்படையில் அனுமதிக்கப்படும் தொகை மிக சொற்பமானதாக இருந்தது. ஆதலால், பல கட்டிடங்களைக் குறைந்த அளவு தேவைகளுக்குக் கூட பராமரிக்க முடியாத நிலை இருந்தது. பழமையான மற்றும் புதிய கட்டிடங்களையும் பயனுள்ளதாகப் பராமரிப்பதற்காக கட்டிடங்களின் வயது, வகை, ஆகியவைகளின்படி ஒவ்வொரு கட்டிடத்தின் பரப்பளவை அடிப்படையாகக் கொண்ட தகுந்த மாறுபட்ட மதிப்பீடு கொண்ட வரைமுறைகள் மேற்கண்ட அரசாணையில் வகுக்கப்பட்டுள்ளன. இப்புதிய முறையின் மூலம் பராமரிப்புப் பணிகள் பொருத்தமான கொள்கைகள் அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன.

18. சென்னை, மெரினா கடற்கரையை அசுத்தப்படுத்தி அதனை தகாதமுறையில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது. மெரினா கடற்கரையினை செயற்கை முறையில் அபிவிருத்தி செய்வதைத் தவிர்த்து அதன் சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் கவர்ச்சித் தன்மையைப் பேணுவதற்காக கீழ்க்கண்ட செயற் குறிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன :—

(1) அழகாகப் பூத்துக் குலுங்கும் மரங்கள் மற்றும் தென்னங்கன்றுகளை மறு நடுவை செய்தல் மற்றும் இவைகள் எவ்வெவ்விடங்களில் எம்முறையில் நடலாமென முடிவு எடுக்கும் முன் இப்பணியில் பயிற்சி பெற்ற கலைஞர் ஒருவரின் அறிவுரைகள் பெறப்படும்.

## இணைப்புகள்



(2) கட்டுமரங்களை கடலுக்கு அருகில் குறிப்பிட்ட 5 அல்லது 6 இடங்களில் வைக்க ஏற்பாடு செய்தல்.

(3) அண்ணா நீச்சல் குளத்துக்கு அருகில் திறந்த வெளி உடற்பயிற்சிக் கூடம் ஒன்று கட்டுதல்.

(4) சிற்றுண்டிக்கூடம் அமைத்தல்.

(5) கடற்கரை மணற்பரப்பில் கான்கிரீட்டினால் செய்யப்பட்ட அழகிய வடிவமைப்புடன் கூடிய குப்பைத் தொட்டிகளை அமைத்தல்.

(6) மணற்பரப்பை அசுத்தம் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்க துப்புரவு ஆய்வாளர்களை நியமித்தல்; அசுத்தம் செய்பவர்களுக்கு தண்டனை வழங்க நடமாடும் நீதிமன்றத் துறையினை மீண்டும் அமுலாக்குதல்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1982 மார்ச் 19 ஆம் நாள்

(பங்குனி 6, துன்மதி, திருவள்ளுவர் ஆண்டு—2013)

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

,,வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.''

தொழிலாகிய குறையைச் செய்யாமல் கைவிட்டவரை உலகம் கைவிடும். ஆகையால் தொழிலில் முயற்சி இல்லா திருத்தலை ஒழிக்க வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ்நாடு சிறப்புக் காவலர்கள் பணி.

*** வினா எண் 548**—திரு ரா. கிருஷ்ணன், திரு குமரி அனந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறப்புக் காவலர்கள் தொடர்ந்து 15 ஆண்டுகள் வரை பணியாற்றுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அவர்களின் பணி 5 ஆண்டுகள் முடிந்தவுடன் ரிசர்வ் போலீசாகவும் பின்னர் லோக்கல் போலீசாகவும் பணியாற்ற வகை செய்ய வேண்டுமென அரசிடம் கோரிக்கை உள்ளதா?

(இ) அதன்மீது அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ), (ஆ) மற்றும் (இ) ஆயுதப்படைக்கு மாற்றம் பெற 17 ஆண்டுகள் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணி புரிந்திருக்க வேண்டும் என்ற விதியினை 10 ஆண்டுகள் பணி புரிந்திருந்தால் போதுமானது என்று மாற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, 17 ஆண்டுகளாக பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்தச் சிறப்புக் காவலர்கள், ரிசர்வ் போலீஸ் அல்லது லோகல் போலீசுக்கு வர விரும்பினால் அவர்களால் வர முடியவில்லை. சிலர் வேண்டியவர்கள் யாராவது இருந்தால் அவர்களைப் பிடித்து வந்துவிடுகிறார்கள் இல்லாதவர்கள் வரவே முடிவதில்லை. ஆகவே அந்தப் பணியில் 10 ஆண்டுகளாக இருப்பவர்களுக்கு 10 ஆண்டுகளுக்குள் ரிசர்வ் போலீஸ் பதவிக்கு மாற்றம் பெறத் தக்க வகையில் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலிருந்து மாவட்ட ஆயுதப் படைக்கு மாற்றம் பெற விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆயுதப்படையில் 20 சதவீதம் பதவிகளில் சிறப்புக் காவல் படையினர் நியமிக்கப்படுகிறார்கள். ஏற்கெனவே அப்படி அவர்களை 17 ஆண்டுகளுக்குப் பிறகுதான் சேர்க்கப்படவேண்டும் என்று இருந்தது. இப்போது 10 ஆண்டுகளுக்கு பணிபுரிந்திருந்தால் சேர்க்கப்படுவார்கள். அதிலே எவ்வளவு இடம் இருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் அவர்கள் சேர்க்கப்படுகிற சூழ்நிலை ஏற்படும்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அந்தக் காவலர்களுக்கு பதவி மாற்றத்தைப் பொறுத்தவரையில், வேறு சில மாநிலங்களில், நான் கேள்விப்படுவதைப்போல, எஸ். ஏ. பி, எனப்படும் போலீஸ் துறையில் 2, 3, 5 ஆண்டுகளுக்கு பணி புரியவும் அதற்குப்பிறகு, அதே நபர்கள் ரிசர்வ் போலீசில் 5 ஆண்டுகளுக்கு இருக்கும்படியாகவும், அதற்குப் பின்னால் அவர்களாகவே லோக்கல் போலீசுக்கு வரக்கூடிய ஏற்பாடும் இருக்கிறதே, அதை தமிழக அரசும் மேற்கொள்ள முயற்சி எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மற்றைய மாநிலங்களைப் பொறுத்து என்ன நிலைமைகள் இருக்கின்றன என்ற விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால் அவைகள் எல்லாம் ஆராயப்படவேண்டும்.

காவல் துறையில் மாவட்டக் காவல் பிரிவு, நகரக் காவல் பிரிவு, மாவட்ட ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை என்று 3 பிரிவுகள் உள்ளன. மாவட்டக் காவல் பிரிவையும் நகரக் காவல் பிரிவையும் உள்ளூர்க்காவல் பிரிவு என்றும் சொல்லப்படுகிறது. மாவட்டக் காவலர்களும், நகரக் காவலர்களும், சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் போக்குவரத்தை ஒழுங்கு செய்தல் ஆகிய பணிகள் செய்வார்கள். மாவட்ட ஆயுதப்படை காவல் பணிகள் மற்றும் அவசர காலத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்



படும். தமிழ்நாடு சிறப்புக் காவல் படைகள் அவசரக்காலத் தேவைகளுக்கும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க ஒரு குறிப்பிட்ட காலத்தில் தேவைப்படும்போதும் பயன்படுத்தப்படும். மாவட்டக் காவலர்களும், மாவட்ட ஆயுதப் படை காவலர்களும் ஒரே மாதிரியான தொகுதிகளின் கீழ் நியமனம் செய்யப்படுகின்றனர் ஆனால் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் தனியான பணி விதி தொகுதிகளின்கீழ் நியமனம் செய்யப்படுகின்றனர். மாவட்டக் காவல் துறையின் நியமனம் பெற கல்வித் தகுதி எட்டாவது அல்லது பத்தாவது வரை படித்து இருக்க வேண்டும். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் காவலராக நியமனம் பெற கல்வித் தகுதி, தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கவேண்டும், என்றிருக்கிறது. இப்படிப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில்தான் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுதப்படையில் சேர்க்கப்படுவதற்கு தகுதியிருக்கிறது. அதிலும் எவ்வளவு பேர்களுக்கு கொடுப்பதற்கு இடம் இருக்கிறதோ அந்த அடிப்படையில்தான் சேர்க்க முடியும்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் காவலர்களுக்கு 15 ஆண்டுகள் ஆகியும் சட்டம் ஒழுங்கு பிரிவில் வேலை பார்க்கவேண்டும் என்று கேட்கிற போது அது அவர்களுக்கு கிடைப்பதில்லையே, ஏதாவது அதற்கு விதியிருக்கிறதா? அப்படியிருந்தாலும் தொடர்ந்து 15 ஆண்டுகளாக சிறப்புக் காவலர்களாக பணிபுரிந்தவர்களை சட்டம் ஒழுங்குப் பிரிவிலே சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலிலேயே நான் குறிப்பிட்டேன். 17 ஆண்டுகள் அதிலே பணிபுரிந்தவர்களை ஆயுதப்படைக்கு மாற்றம்செய்யலாம் என்று இருந்ததைத்தான் 10 ஆண்டுகேள அவர்கள் முடித்தாலே போதும் என்று மாற்றியிருக்கிறோம். ஆனால் அப்படி முடித்தவர்கள் அத்தனைப்பேரையும் சேர்த்துக் கொள்வது என்றால் ஆண்டுக்கு ஆண்டு அந்த ஆயுதப்படையை நாம் மிகப் பெரிய அளவில் விரிவு படுத்தவேண்டியிருக்கும். ஆகவே கிடைக்கக்கூடிய காலியிடங்களுக்கு ஏற்ப மூப்புநிலை அடைந்ததை யொட்டி அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோக்கல் போலீசிலே காலி இருக்கின்ற இடங்களில் 20 சதவீதத்தை சிறப்பு காவல் துறையினருக்கு ஒதுக்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், காலி ஆகின்ற இடங்களை இவர்களுக்குக் கொடுத்துவிட்டு மீதி இடங்களைப் பொறுத்தவரையிலே புதிதாக நியமனம் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

## வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினருக்கு வழங்கப்பெறும் ஓய்வூதியம்.

*** வினா எண் 549—திரு. க. பாரமலை :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினருக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் (பென்சன்) ரூபாய் 75-ஐ சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு வழங்குவது போல உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினருக்கு ஓய்வூதியம் (பென்சன்) ரூபாய் 75 முன்பு வழங்கப்பட்டது. பின்பு ரூபாய் 100 ஆக அரசாணை எண் 867, பொது (அரசியல்-அ.) துறை, நாள் 7—5—1981 மூலம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. தற்போது 1—8—1981 முதல் ரூபாய் 150 ஆக அரசாணை எண். 1474, பொது (அரசியல்-அ) துறை, நாள் 29—7—1981 மூலம் மேலும் உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டிய சகோதரர்கள், புரட்சிக் கவிஞர் பாரதியார் போன்றவர்களின் சேவையைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் கொடுப்பதோடு அந்த சந்ததியினருக்கு தகுதியான வேலைவாய்ப்புக்களை அதாவது அரசுப்பணிகளைக் கொடுத்தால் அதன் மூலம் அவர்களால் வயிறார உண்ண முடியாவிட்டாலும் பசியார உண்ணவாவது வழி ஏற்படுமல்லவா ? ஆகவே அதை அரசு கருத்தில் கொண்டு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, வீர பாண்டிய கட்டபொம்மன் சந்ததியினருக்கு முன்பு 75 ரூபாய் கொடுக்கப்பட்டது, அது 100 ரூபாயாக உயர்த்தப்பட்டு பிறகு 150 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அவர்களுக்கு எந்த அளவுக்குத் தகுதி திறமை இருக்கின்ற அதன் அடிப்படையிலே கொடுக்க இயலுமா என்று அதற்காக முயற்சி செய்யப்படுகின்றது.



அடுத்து மருது பாண்டியர் சகோதரர்களின் சந்ததியினைப் பொறுத்தவரையிலே 1980 ஆம் ஆண்டு மூவர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அதிலே திரு. ஜி. ராகப்பன் என்பவர் தலைவர். திரு. பொ. அன்பழகன், திரு. தூத்துக்குடி சண்முகம் ஆகியவர்கள் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அந்தக் குழு அந்த நிலைமைகளைப் பற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கையினை அரசுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டார்கள். அவர்கள 8 அத்தியாயங்களைக் கொண்ட விரிவான அறிக்கையைத் தயாரித்து அரசுக்கு தந்திருக்கிறார்கள். அதிலே பெண் வழி, ஆண் வழி சந்ததியினர்கள் எல்லாம் எவ்வளவு எவ்வளவு என்ற விவரங்களை எல்லாம் திரட்டித் தந்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அது சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டு அதன்படி எந்த அளவுக்குச் சந்ததியினரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உதவி செய்யலாம் என்ற வகையிலே ஆராயப்பட்டு வருகின்றது.

அடுத்து பாரதியாரைப் பொறுத்த வரையிலே அவருடைய சந்ததியினர் பற்றித் தனியாக நடவடிக்கைகள எடுக்கப்பட்டு வருகின்றது. அதுபற்றி மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கூட ஏற்கெனவே ஒரு வினாவுக்கு விடையளிக்கும் போது குறிப்பிட்டிருக்கிறார்கள. அதுபற்றித் தனியாக ஆராயப்பட்டு வருகின்றது.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவரவர்களே, கட்டபொம்மன் சந்ததியினருக்கு 150 ரூபாய் ஓய்வூதியம் கொடுப்பதற்குப் பதிலாக ரூபாய் 250 என்று உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

அடுத்து மருதுபாண்டியர் வாரிசு பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரை சட்ட இலாக்காவுக்குச் சென்றிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவினுடைய அறிக்கையினை அங்கிருந்து விரைவாகப் பெற்று மருது பாண்டியர் சந்ததியினருக்கு பணிகள் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கட்டபொம்மன் சந்ததியினரைப் பொறுத்தவரையிலே 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து அவர்களுக்கு அளிக்கின்ற ஓய்வூதியத்தை 150 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து வருகிறோம், ஆனால 250 ரூபாய் என்பது கொடுக்க இயலாது.

அடுத்து மருது பாண்டியர்கள் வாரிசு பற்றி அளிக்கப்பட்ட அறிக்கை நீண்ட அறிக்கையாக இருக்கின்றது. அதிலே பெண் வாரிசு, ஆண் வாரிசு பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி பலபேர் தங்களைச் சந்ததியினர் என்று சொல்லி இருக்

கிறார்கள். அதன் மூலம் 200-க்கு மேற்பட்டவர்கள் வருகிறார்கள். அவர்களை எல்லாம் அடையாளம் காணக்கூடிய நிலைமை இல்லை. ஆகவேதான் சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது. அ ர்கள் இதுபற்றி ஆராய்ந்து எந்தெந்த முறையிலே சந்ததியினர் என்பதை எல்லாம் கண்டறிந்து அவர்கள் வகுத்துத் தருகின்ற விதிகளின் அடிப்படையிலே சந்ததியினரைத் தேர்ந்தெடுத்து அதற்குப் பிறகு உதவிகள் அளிக்க வேண்டி இருக்கின்றது.

அவர்கள் நான்கைந்து தினங்களுக்கு முன்னால்தான் அறிக்கை தந்தார்கள். அந்த அறிக்கை சட்டத்துறையிலே இருந்து வந்ததற்குப் பிறகு விரைவிலே தக்க முடிவுகள மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–10)

திரு. ரா. கிருஷ்ணன் : இந்த வீரபாண்டிய கட்டபொம்மனைப் பொறுத்தவரையில் வெள்ளை ஆதிக்கத்திற்கு வரி கொடுக்க முடியாது என்று சொல்லி அதற்குக் கிடைத்த பரிசு தூக்குத் தண்டனை. 200 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன, 600 ஏக்கர் நிலங்களுக்கு மேல் விடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிலங்களில் பயிர் செய்ய நீர்ப்பாசன வசதி கிடையாது. ஆகவே அந்த 600 வீடுகள் கட்டினாலும் கூட அந்த கட்டபொம்மன் சந்ததியினர் அங்கே தங்க வசதி இல்லை என்று நாடோடிகளாக இருக்கிறார்கள். ஆகவே அந்த 600 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யக்கூடிய அளவிற்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த 200 வீடுகளிலும் ஆட்கள் வந்து குடியிருப்பார்கள். எனவே அத்தகைய ஏற்பாட்டை செய்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றிய விவரக் குறிப்புகள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அரசு என்ன செய்திருக்கிறது, என்ன செய்ய இயலும் என்பதை எடுத்துச் சொல்ல முடியும்.

திரு. ஆர். மணிமாறன் : வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினர் மொத்தம் எவ்வளவு பேர்களுக்கு மாத மானியம் அளிக்கப்பட்டு வருகிறது ? அப்படிப்பட்ட சுதந்திரப் போராட்ட தியாகிகள் வரிசையில் கட்டபொம்மன், மருது பாண்டிய சகோதரர்கள் இவர்களைப் போன்று—இவர்கள் மேல் கவனம் செலுத்துவது போல்—சென்னிமலையில் வாழ்ந்து வந்த, வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய வீரன் சென்னிமலை என்பவரைப் பற்றி அதிகமான விவரங்கள் அரசினுடைய பார்வையில் வர



வில்லையா ? அப்படி அரசின் பார்வைக்கு, சென்னிமலையைப்
பற்றிய விவரங்களை கேட்டு அரசுக்கு அளித்தால் அவருடைய
சந்ததியைச் சேர்ந்தவர்களுக்கு மானியம் அளிப்பதற்கு அரசாங்
கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; பாஞ்சாலி
யம்மாள் மற்றும் திருவாளர்கள் வீமராஜ் என்ற ஜசவீர
சுப்ரமண்ய கட்டபொம்முதுரை, சோமசுந்தர கட்டபொம்மு
துரை மற்றும் துரைராஜ் பாண்டியன் முதலியவர்களுக்கு உதவித்
தொகை வழங்கப்பட்டிருக்கிறது. வீரபாண்டிய கட்டபொம்மனின்
ρத்த சந்ததியினர்களான காலஞ்சென்ற சீதாமணித்துரையின்
நமாரர்களான திருவாளர்கள் சுப்ரமண்ய கட்டபொம்முதுரை,
நிரு. ஜசவ வீரபாண்டியதுரை மற்றும் காலம் சென்ற ஊமைத்
துரையின் மகன்களான திருவாளர்கள் சுப்ரமண்ய கட்டபொம்மு
துரை, ஜகவீர பாண்டிதுரை மற்றும் சின்ன பொம்முதுரை
ஆகியவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.
பத்து பேர்களுக்கு உதவித் தொகை இப்போது அளிக்கப்பட்டு
வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த வீரபாண்டிய கட்டபொம்
மன் சந்ததியினருக்கு பாஞ்சாலக் குறிச்சியில் அவர்களுக்கு குடி
யிருப்புகள் கட்டப்பட்டிருந்தும் கூட, அவர்களுக்கு நிலங்கள்
வழங்கப்பட்டிருந்தும் கூட அங்கே போதிய பாசன வசதியில்லாத
தால் அந்த நிலங்களில் அவர்கள் விவசாயம் செய்ய முடியாத
நிலையில் இருக்கிறார்கள். என்வே அந்தச் சந்ததியினருக்கு
ஒரு கம்யூனிட்டி வெல் தோண்டி உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய
விவரக் குறிப்புகள் இல்லை.

நல்லதண்ணீர் தீவை சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

*வினா எண் 550—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நிதி
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாயல்குடிக்கு பக்கத்தில் கடலில் உள்ள நல்ல
தண்ணீர் தீவை சுற்றுலா மையமாக்க அரசுக்கு ஏதேனும்
உத்தேசம் உண்டா ?

(ஆ) அந்தத் தீவு அரசுக்குச் சொந்தமா ? தனியாருக்குச்
சொந்தமா ?

(இ) அங்குள்ள தென்னை மரங்கள் யார் பராமரிப்பில்
உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) தீவில் உள்ள நிலங்கள் யாவும் தனி நபர்கள் பெயரில் உள்ளன.

(இ) கீழக்கரையைச் சார்ந்த திரு. எஸ். எம். ஏ. முகம்மது மீராசாகிப் என்பவரின் மனைவி திருமதி சையதுசாரா உம்மாவின் பெயரில் உள்ள 79.84 ஏக்கரில் தென்னை மரங்கள் உள்ளன. அவைகள் பட்டாதாரர் அனுபவத்தில் உள்ளது. மற்ற 55 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட 149.06 ஏக்கர் பரப்புள்ள நிலம் தரிசாகவே உள்ளது.

திரு. செ. சிவசாமி : இந்த நல்லதண்ணீர் தீவை சுற்றுலா மையமாக்க அரசுக்கு உத்தேசமுண்டா என்று கேட்டதற்கு இல்லை என்று சொல்கிறார்கள். அதற்குப் பக்கத்திலுள்ள 21 தீவுகளை சுற்றுலா மையமாக்க திட்டம் இருப்பதாக பட்ஜெட்டில் சொல்லப்பட்டது. எனவே இந்த ஸ்கீமையும் அதோடு சேர்த்து கொள்ள உத்தேசமுண்டா ? உண்டா இல்லையா என்பதை மீண்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதை சுற்றுலா தலமாக ஆக்கப்படுமா என்று கேள்வி கேட்டார்கள். சுற்றுலா தலமாக ஆக்கப்படமாட்டாது என்று குறிப்பிட்டேன்.

மன்னார் வளைகுடா பகுதியில் தூத்துக்குடி கடற்கரை ஓரமாக இராமேஸ்வரம் தீவு வரையுள்ள 21 சிறிய தீவுகள் உள்ளடக்கி தேசிய கடல் பூங்கா (மரைன் நாஷனல் பார்க்) ஒன்று அமைக்கப்படவுள்ளது. இத்தீவுகளில் உள்ள அபூர்வ தாவர இனங்கள், விலங்கினங்கள், மற்றும் பவழப்பாறைகளைப் பாதுகாப்பதே இத்தேசிய பூங்கா அமைப்பதின் முக்கிய நோக்கமாகும். வனவிலங்குப் (பாதுகாப்பு) சட்டப்பிரிவு 25 (1) இன் கீழ் பூர்வாங்க அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் 19–26 பிரிவுகளின்படி தங்கள் கடமைகளை நிறைவேற்றி அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர், யாரிடமிருந்தாவது இதற்கு ஆட்சேபனை வருகிறதா என்று. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் யாரிடத்தில் இருந்தும் எந்தவித ஆட்சேபணையும் வரவில்லை என்று எழுதினார்கள். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்த பதிலில் நல்லதண்ணீர் தீவு, முயல் தீவு ஆகியவைகளைச் சேர்ந்த தீவுகளை தேசிய கடல் பூங்காவாக அறிவிப்பதற்கு ஆட்சேபித்து திருமதி சையதுசாரா உம்மா, அவரது வழக்



கறிஞர் எஸ். எம். ஹமீது அசன் வழியாக, காசிம் மரக்காயர், மற்றும் 7 நபர்களிடமிருந்து வந்துள்ளதென்றும், அந்தத் தீவுகளில் உள்ள தங்கள் நிலங்கள் அரசுடமையாக்கும் பட்சத்தில் தக்க நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றும், அந்த நஷ்ட ஈடு பெரும்தொகையாக கொடுக்க வேண்டியிருப்பதால், நல்லதண்ணீர் தீவு, முயல் தீவு ஆகியவைகளைத் தவிர்த்து மற்றத் தீவுகளை உள்ளடக்கிய பகுதியை தேசிய கடல் பூங்காவாக அறிவிக்கலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். இந்த இரண்டு தீவுகளில் ஆட்சேபணை இருப்பதன் காரணமாக, அவற்றை நீக்கிவிட்டு, மற்ற தீவுகளை தேசிய கடல் பூங்காவாக அறிவிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். அந்த தீவுகளைத் தவிர்த்து ஏனைய தீவுகளை தேசிய பூங்காவாக அறிவிப்பது உசிதமல்ல ; ஆகவே இந்த இரண்டையும் சேர்த்து செய்வதுதான் முறையாக இருக்கும் என்று அரசு கருதுவதன் காரணமாக, இந்த இரண்டு தீவுகளையும் எடுத்துக் கொள்வதன் காரணமாக எவ்வளவு நஷ்ட ஈடு தர வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பதில் வந்ததற்குப் பிறகு முறையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீவுகளுக்குப் பக்கத்தில் திரிசடை தீவு என்ற தீவு இருக்கிறது. அந்தத் தீவில் ஆராய்ச்சி செய்யக்கூடிய நிலையிருக்கிறது. அதையும் சேர்த்து சுற்றுலா மையமாக ஆக்கினால், உலகத்திலே இருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து பார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதோடு, தனியாரிடமிருக்கக்கூடிய அந்தத் தீவுகளை உடனடியாக அரசு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தைச் சுற்றி மொத்தம் 21 தீவுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த 21 தீவுகளில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தத் தீவும், அடங்குகிறதா இல்லையா என்பதைப் பற்றி என்னிடம் குறிப்பு இல்லை. ஆனால், இந்த 21 தீவுகளில் நல்லதண்ணீர் தீவு, முயல் தீவு ஆகியவைகள் அடங்கிய பகுதிகளைச் சேர்க்கவேண்டும். இதை முறையாகச் செய்தால், தேசிய கடல் பூங்காவாக அமைத்தால், சுற்றுலாப் பயணிகள் வந்து பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். டூரிஸ்ட் சென்டர் என்பது வேறு, தேசிய கடல் பூங்கா என்பது வேறு. சுற்றுலாப் பயணிகள் வந்து பார்ப்பதற்கு வசதியான இடமாக அமையும்.

## தமிழ்நாட்டிற்கான கோதுமை ஒதுக்கீடு.

*வினா எண் 551— திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு அதிக கோதுமை ஒதுக்கக்கோரி மத்திய அரசை கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம்எனில் எத்தனை ஆயிரம் டன் கேட்டுள்ளது ?

(இ) மத்திய அரசு ஒதுக்கிய அளவென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ் நாடு அரசு, பொது விநியோகத்திற்கு குடும்ப, கார்டுகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கென மாதம் ஒன்றுக்கு 10,000 டன்கள் கோதுமையும், கோதுமைப் பொருட்களாக்க கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கென 50,000 டன்கள் கோதுமையும் ஒதுக்கும்படி மைய அரசைக் கோரியுள்ளது.

(இ) மத்திய அரசு பொது விநியோகத்திற்கென கடந்த ஏப்ரல் முதல் மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் கோதுமையும் கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கென 30,000 டன்கள் கோதுமையும் வழங்கி வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக 10,000 டன் கோதுமை வேண்டுமென்று கேட்கப்பட்டு, 4,000 டன் தான் வந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இது போதவில்லை என்று மத்திய அரசிடம் கேட்கப்பட்டதா ? மத்திய அரசு தரவில்லை என்றால், மாநில அரசே வட மாநிலங்களில் தனியாக கோதுமை வாங்கி, விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நம்முடைய தேவை, பொது விநியோகத்திற்கு குறைந்த அளவுக்கு 10 ஆயிரம் டன் தேவைப்படுகிறது. கோதுமை உருளை ஆலைகளுக்கு அரைப்பதற்கு 1980 ஆம் ஆண்டுக்கு முன்னாலே 65 ஆயிரம் டன் ஒதுக்கப்பட்டது, 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 65 ஆயிரம் டன்னை குறைத்து 30 ஆயிரம் டன்னாக்கிவிட்டார்கள். அதற்குக் காரணம் அவர்கள் அகில இந்திய அளவிலே எல்லா மாநிலங்களுக்கும் குறைத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். கோதுமையினுடைய இருப்பு குறைந்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். கோதுமை அரவை ஆலைகளின் அரைவைத் திறன் அளவுக்கு 100-க்கு 100 நம்மால் கொடுக்கமுடியவில்லை. 72, 73 சதவீதம்தான் கொடுக்க முடிகிறது. இப்போது 30 ஆயிரம் டன்கள் தாம் கொடுக்கிறார்கள். அதிகமாகத் தரவேண்டுமென்று நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். போன ஏப்ரலில் இருந்து 3 ஆயிரம் டன்கள் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அதிலே ஒரு ஆயிரம் உயர்த்தி 4 ஆயிரம் தருகிறார்கள். மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலையின் அடிப்படையில் வழங்குவதன் காரணமாக நமக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையிலே வாங்கமுடிகிறது. வெளிச்சந்தையிலே விலை அதிகமாக இருப்பதாலே விநியோகத்திலே பல தன்மைகள் இருக்கும் என்பதால் வெளிச் சந்தையிலே வாங்கமுடியாத நிலை இருக்கிறது. மத்திய அரசு இந்த கொள்முதல் விலையிலேயே நமக்குத் தருகிறது.



திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, பத்தாயிரம் டன் கோதுமை குடும்பக் கார்டுகளுக்கு விநியோகிப்பதற்காக கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எந்தஎந்தப் பகுதிகளில் விநியோகிக்கப்படுகிறது. திருவண்ணாமலை போன்ற நகரங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்படவில்லையே, அதற்கும் கொடுக்கவேண்டுமென்றால் எவ்வளவு கோதுமை தேவைப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த பத்தாயிரம் டன்கள் வந்தாலும் நாம் தாராளமாகக் கொடுப்பதற்கான நிலைமை இருக்காது. எல்லா இடங்களுக்கும் ஓரளவிற்குப் பரவலாக தரலாம். 4 ஆயிரம் டன் தருவதின் காரணமாக பெருநகரங்கள் கோயமுத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகியவற்றில் கோதுமையை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற அடிப்படையில் விநியோகிக்கிறார்கள். எந்த எந்த ஊர்கள் என்ற விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. இருக்கின்ற நிலைமைகளை வைத்து, தேவையை உத்தேசித்து தருகிறோம். திருவண்ணாமலையில் எந்த அளவுக்கு இருக்கிறது என்ற விவரக் குறிப்பு இல்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு மாநில அரசுக்கு கோதுமையை என்ன விலைக்குத் தருகிறார்கள்? என்ன விலைக்கு மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை.

## நில உச்ச வரம்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடைமுறைகள்.

*வினா எண் 552.—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில் பெரிய தொழிற்சாலைகள் எதிர்காலத்தில் தங்களுடைய தொழில் நிறுவனங்களை விஸ்தரிப்பதற்கு காலியாக விட்டு வைத்துள்ள நிலங்களையும் உபரி நிலம் என்று கருதி நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்துவதை ஆட்சேபித்து தொழிற் நிறுவனங்கள் அரசிடம் முறையீடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் நிவர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தென்னிந்திய நெசவாலை உரிமையாளர்கள் சங்கத்திடமிருந்து, நகர்புற நில உச்ச வரம்பு சட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்படும் கஷ்டங்களை நீக்கக் கோரி ஒரு விண்ணப்பம் வந்துள்ளது.

(ஆ) நெசவாலைகளின் விலக்கு விண்ணப்பங்கள் மீது அரசு துரித நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பித்து வருகிறது. இதர கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே தொழில் வளம் வளரவும் பல பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலேயும் தொழிற்சாலைகளை விஸ்தரிப்பதற்கு உச்ச வரம்பிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தொழில் செய்கிறவர்கள் தங்களுடைய தொழில்களை மேலே விருத்தி செய்வதற்காக நிலங்களைக் கேட்டால் அவர்கள என்ன செய்யப்போகிறார்கள் என்பதைக் குறித்து வரைபடத்தின் மூலமாகத் தெரிவித்தால் அதற்கான விவரங்களையெல்லாம் கொடுத்தால் 2 ஆண்டு காலத்திற்குள்ளாக அரசு உத்தரவிட வேண்டுமென்று சொல்லி நிலங்களை அவர்களுக்குக் கொடுத்து வருகிறது.



திரு இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு உச்ச வரம்பினின்று விதிவிலக்கு அளிப்பதை பரிசீலிப்பதற்காக என்று குழு உள்ளதா? அந்தக் குழுவில் யார் யார் உறுப்பினர்கள் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் நிலச் சீர்திருத்த ஆணையாளர் அமைப்பாளராக இருப்பார்கள். வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை தொழில்துறை செயலாளர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இயக்குனர் செயலாளராக இருந்து பணியாற்றுவார். அவர்கள் அதைப் பார்த்து சிபாரிசு செய்து அனுப்பினால் அரசு முடிவு எடுக்கும்.

திரு எஸ். ஆண்டித் தேவர் : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் மறுபடியும் விஸ்தரிப்பு என்ற பெயரால் பல ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலைகளுக்குத் தவிர மற்றக் காரியங்களுக்கு பயன்படுத்தக் கூடாது என்று திட்ட வட்டமாக அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நகர்ப்புற உச்ச வரம்பு சட்டத்தில் இது விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தொழிற்சாலைகள் பிரதானமாக மேலுக்கு வருவதற்கு ஊக்குவிக்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்கிற தொழிற்சாலைகள் விவரமான அறிக்கைகளை அந்தக் குழுவிடம் கொடுத்தால் அவர்கள் பரிசீலித்து சிபாரிசு செய்வார்கள்; பிறகு அரசு உத்தரவு போடுகிறது. உத்தரவைப் போடுகிறபோது அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பது மட்டுமல்ல, நிதி வசதி ஆதாரம் இருக்கிறதா என்பதையும் அவர்களால் செய்ய முடியுமா என்பதையும் ஆராய்ந்து, இரண்டு ஆண்டுகளுக்குள் செய்ய வேண்டுமென்றும், ஆறு மாதத்திற்கு ஒரு முறை புராக்கிரஸ் ரிப்போர்ட் அனுப்ப வேண்டுமென்றும் இவ்வளவு விதிமுறைகளை வைத்துத்தான் அரசு உத்தரவு போடுகிறது.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில உச்ச வரம்பு சட்டம் நடைமுறைப்படுத்துவதிலே, தொழிற்சாலைகள் நிரம்பிய கோவை மாவட்டத்திலே அரசு இன்று இரண்டு ஆண்டுகளுக்குள் தொழிற் கூடங்களை கட்டினால்தான் காலி இடங்களை வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு நிலையை 5 ஆண்டுகளாக கூட்டினால் தான் அவற்றைக்

கட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசு தொழிற்சாலைகள் நிரம்பிய கோவை மாவட்டத்திற்கு அந்த காலத்தைக் கொஞ்சம் நீட்டித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆறு மாதத்திற்கு ஒரு முறை புராக்கிரஸ் ரிப்போர்ட் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றை பார்க்கிற போது, வேலை நடந்து கொண்டிருந்தால் மேலும் இதுபற்றி மனு செய்தால் அதையும் அரசு பரிசீலிக்கும்.

திரு என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர நில உச்ச வரம்பானாலும், கிராமப்புற நில உச்ச வரம்பானாலும் நம்முடைய நாட்டிலே விதிவிலக்கு என்ற பெயராலே உச்சவரம்புச் சட்டம் கேலிக் கூத்தாக ஆக்கப்படுகிற வரலாறுதான் நம்முடைய நாட்டு வரலாறு. இதை இரண்டு பகுதியாக பார்க்க வேண்டும். வளர்ந்து வருகிற சிறு நடுத்தர தொழிற்சாலைகளுக்கு உதவி செய்வது; பெருத்த ஏகபோகமான தொழில்கள் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு மேலும் விஸ்தரிப்பதற்கென்று நிலத்தை வைத்துக் கொள்வதற்கு அனுமதி கேட்பது என்று இரண்டு பகுதியாக இருக்கிறது. ஆகவே அதிகாரிகள் கொண்ட குழு மட்டுமல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களும் இணைந்த குழு போட்டு சமுதாய பார்வையோடு அங்கீகாரம் அளிப்பதற்கு அரசுஅனுமதிஅளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியபடி சமுதாய பார்வையோடு பார்ப்பது மிக அவசியம் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இந்தக் குழு சிபாரிசு செய்தாலும் அமைச்சரவைக்கு அது வருகிறபோது சமுதாய கண்ணோட்டத்தோடு பார்க்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர நில உச்ச வரம்பின் கீழ் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குகிற போது எவ்வளவு நிலம் வைத்திருக்கலாம் என்ற நிலை இருக்கிறது. இது போன்ற நிலம் வைத்திருந்து வீட்டு மனையாகவோ மற்றவையாகவோ விற்றவர்கள் எவ்வளவு பேர்கள்? இது குறித்து அரசின் கவனத்திற்கு ஏதுவும் வந்திருக்கிறதா? நில அளவைக் குறைப்பதற்கு அரசு மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நகரங்களை மூன்றாகப் பிரித்து இருக்கிறோம். இன்றைக்கு இது எல்லா நகரங்களிலும் இல்லை. சென்னையை முதல் பிரிவிலே சேர்த்து இருக்கிறோம். சென்னையிலே தொழிற்சாலைகள் 2,000 சதுர மீட்டர் வைத்துக் கொள்ள முடியும். இரண்டாவது பிரிவாக, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலத்தை வைத்திருக்கிறோம். அவர்கள் 3,000 சதுர மீட்டர் வைத்திருக்க முடியும். திருநெல்வேலியை மூன்றாவது பிரிவாக வைத்திருக்கிறோம். அவர்கள் 4,000 சதுர மீட்டரை வைத்துக் கொள்ளலாம். இந்த நகரங்களைத்தான் நில உச்ச வரம்பு சட்டத்திற்குள் வைத்திருக்கிறோம். நில உச்ச வரம்பு சட்டம் வந்ததற்குப் பிறகு 3-8-76-க்கு பிறகு அவர்கள் அந்த நிலத்தை விற்றிருக்க முடியாது. விற்றிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## பள்ளிகளை நடத்த நிர்வாகக் குழுக்கள் அமைத்தல்

* வினா எண் 553—திரு. கா. கோபால கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமூகத்தைச் சேர்ந்தவர் பள்ளியை நடத்தினால் நிர்வாகக் கமிட்டி அமைக்க வேண்டும் என்றும் மற்றவர் நடத்தினால் அது வலியுறுத்தப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973-ன் பிரிவு 15-ன் படி ஒவ்வொரு பள்ளியிலும் பள்ளிக் குழு (School Committee) அமைக்க வேண்டும். ஆனால் சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளி நிர்வாகிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேற் சொன்ன சட்டத்திற்கெதிராக தொடுத்த வழக்கில் பள்ளிக் குழுக்கள் அமைத்தல் தொடர்பான சட்டப் பிரிவு 15 உட்பட பல பிரிவுகள் மொழி மற்றும் மத அடிப்படையில் அமைந்த சிறுபான்மையினர் பள்ளிகளுக்குப் பொருந்தாது என 17-12-75 அன்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதன் காரணமாக சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் பள்ளிக் குழு ஏற்படுத்தும்படி வலியுறுத்த இயலவில்லை.

## மேல் நிலைப் பள்ளிகளில் பாட ஆசிரியர்கள் நியமிக்கும் முறை

*வினா எண் 554—திரு. ஆர். கே. பெருமாள், திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல் நிலைப் பள்ளியில் பாட ஆசிரியர் போடுவதில் அவர்களது இளநிலை பட்டப்படிப்பில் உள்ள பிரதான பாடத்தை வைத்துத்தான் போடுவது என்ற முறையை அரசு கையாளுமா ?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுது முதல் அமுல்படுத்தப் படும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) மேல்நிலைப் பள்ளிகளில் பாட ஆசிரியர்களை நியமிக்கும் போது இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பில் ஒரே பாடத்தை எடுத்துள்ள ஆசிரியர்களுக்கு முதலுரிமை அளிக்கப்படுகிறது. இம்முறை 1981–82 ஆம் ஆண்டு கல்வியாண்டு தொடக்க முதற் கொண்டு அமுல்படுத்தப்படுகிறது.

(முற்பகல் 9–30)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அரசு வெளியிட்ட ஆணை மிக தெளிவாக இருக்கிறது. பி.ஏ.-விலே ஒரு பாடமும் எம்.ஏ.-விலே வேறு பாடமும் எடுத்தவர்களும், பி.ஏ.-விலும், எம்,ஏ.-விலும் ஒரே பாடம் எடுத்தவர்களும் நேர்முகத் தேர்வுக்கு வரும் போது அவர்களுடைய மற்றத் தகுதிகளிலே முந்தைய பதவி, அவர்கள் எடுத்த மதிப்பெண்கள் இவைகளிலே சரிநிகராக இருக்கும்போது, இரண்டிலும் ஒரே பாடம் எடுத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் கல்வித் துறை இயக்குநருடைய ஒரு சர்க்குலர், இரண்டிலும்: ஒரே பாடத்தை எடுத்தவர்களைத்தான் எடுக்கவேண்டும். அவர்கள் இல்லாதபொழுதுதான் மற்றவர்களை எடுக்க வேண்டுமென்று விதித்திருக்கிறது. ஆகவே அரசு அதைப் பரிசீலித்து அந்தக் கல்வித் துறை இயக்குநருடைய சர்க்குலரைத் திருத்த பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இளங்கலை படிப்பிலும் முதுகலை படிப்பிலும் ஒரே பாடத்தை எடுத்தவர்களுக்கு முன்னுரிமை என்ற விதத்தில் ஒரு சலுகை அளிக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலேதான் இயக்குநருடைய உத்தரவு இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு மாறாக இருக்குமேயானால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பரிசீலிக்கின்ற பொழுது, முழுக்க இல்லாவிட்டாலும், பி.ஏ.-விலும், எம்.ஏ.-விலும் ஒரே பாடம் எடுத்தவர்களுக்கு உயர்ந்தபட்சச் சதவீதம் என்றாலும், பி.ஏ.-விலே ஒரு பாடமும் எம்.ஏ.-விலே ஒரு பாடமும் எடுத்து மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றிருந்தாலும்கூட, அந்த சர்க்குலர்படி பணி கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஒரு குறைந்த அளவு சதவீதமாவது ஒதுக்குகின்ற நிலையை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு . செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு பட்டப் படிப்பிலேயும் ஒரே பாடத்தை எடுத்தவர்களைத்தான் முறையான ஒரு தகுதி அடைந்தவர்களாக இன்றைய நிலையிலே நாம் கருதுகிறோம். ஆகவேதான் இந்த ஒரு முன்னுரிமையைத் தருகிறோம். அவர்கள் கிடைக்காத காலத்திலே இளங்கலையிலே ஒரு பாடமும் முதுகலையிலே ஒரு பாடமும் எடுத்தவர்களை வைக்கலாம் என்பதுதான். இப்பொழுதிருக்கிற நிலைமை. அதை நாம் மாற்றி அமைப்போமானால் நாம் தருகின்ற அந்த முன்னுரிமை அல்லது அந்தச் சலுகை அல்லது நாம் எதிர்பார்க்கிற நோக்கம் நிறைவேறாமல் போய்விடும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு பி.டி. பட்டம் கட்டாயமாக வைக்கப்படவில்லை. ஆனால், உயர்நிலைப் பள்ளிகளிலே ஆசிரியர்களாக சேர்பவர்களுக்கு பி.டி. படிப்பு இருகக வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் படுகிறது. அதைத்தவிர்க்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்லூரியிலே ஆசிரியர்களாக வருகின்றவர்களுக்கு முதுகலைப் பாடம் என்று மட்டும்தான் நாம் பேசுகின்றோமே தவிர, அதிலே அவர்கள் உயர்ந்த தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். அதிலும் இப்பொழுது, எம்.பில்., பி.எச்டி..,

பெற்றிருக்க வேண்டும், பெற வேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம். கலலூரி ஆசிரியர்களுடைய தகுதி உயர்நிலையிலே இருக்கிறது. பள்ளி ஆசிரியர்களுக்கு நாம் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தால் போதும் என்றுதான் சொல்கிறோமே தவிர, உயர்ந்த அளவுத் தகுதி அதிலே பெற வேண்டுமெனறு சொல்லவில்லை. ஆனால், பி.டி. பட்டம் தேவை என்று சொல்வதற்குக் காரணம், வகுப்புமுறை போதனா முறையை நாம் பயன்படுத்த வேணடும். அந்த அளவு குழந்தைகளுக்கு அந்த பி.டி. படித்த ஆசிரியர்கள் மூலமாகப் பயிற்சி தருவதுதான் சிறந்தது என்று கருதித்தான் கல்லூரியிலே இருந்துகொண்டிருந்த அந்த வகுப்பை நாம் பள்ளிகளுககுக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே, பயிற்சிபெற்ற ஆசிரியர்களுனடய போதனையை அந்தக் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்வதுதான் அரசினுடைய நோக்கம்.

**திரு. மி. வின்செண்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்ற முழுத் தகுதி பெற்ற எம்.ஏ., பி.எச்.டி. போஸ்ட் கிராஜுவேட்ஸ் பலர் இன்னும் உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுவது உண்மையா ? அவர்களை மேநிலைப் பள்ளிகளில் பணியாற்றச் செய்வதற்கான வாய்ப்பை அரசு கொடுக்க முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணபுமிகு தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான நிலைகளில் அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு நாம் வாய்ப்புகளைத் தந்து கொண்டு வருகிறோம். அதற்காகத் தகுதி படைத்த ஆசிரியர்களுக்கெல்லாம் நாம் வேலை தரமுடியும் என்று சொல்ல முடியாது.

**கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் எற்படும் காலதாமதம்.**

*வினா எண் 555—**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு கலவி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகளை அறிவிப்பதில் அசாதாரண காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இக் குறையை களைந்து விரைவில் தேர்வு முடிவுகளை வெளியிட அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.



(ஆ) காலதாமதத்திற்கான காரணங்களை ஆராய்ந்து உரிய காலத்தில் துரிதமாக தேர்வு முடிவுகளை வெளியிட தக்க நடவடிக்கை எடுக்கும்படி சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை—காமராசர் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணைவேந்தர்கள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு முடிவுகளை அறிவிப்பதில் வீண் காலதாமதம் ஆகும் பிரச்னையைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களைக் கொண்டு ஆராய்ந்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்குச் சட்டக் கல்லூரி தேர்வு முடிவுகள் ஒராண்டுக்கு மேலாகியும் இன்னும் அந்தக் குழு பரிசீலனை செய்வதில் ஏற்படும் காலதாமதம் என்ன என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாகப் பல்கலைக், கழகத் தேர்வுகளில் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதை நாம் அறிவோம். அதை நாம் விரும்பவில்லை. அந்தக் காலாதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று அவ்வப்பொழுது சொல்லிக்கொண்டு வருகிறோம். சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத் துணை வேந்தர்களுக்கு நாம் கடிதம் அனுப்பியிருக்கிறோம். பலகலைக் கழக அதிகாரத்தின்கீழ் இருப்பதால் நாம் இந்த முறையைத்தான் கையாள வேண்டுமென்று கருதி இந்த முறையில் குறைபாட்டை எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆனால் இந்தக் கால தாமதத்திற்கான காரணங்கள் என்னவென்பதை நாம் இங்கே சொல்லியாக வேண்டும்.

(1) தேர்வுகளுக்கிடையே மிகக் குறைந்த வேலை நாட்களே இருந்தன ; (2) தேர்வுகள் தொடங்குவதற்குமுன் வரை பதிவு செய்ய விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில் தேர்வுகள் துவங்குவதற்கு முன்பே அந்தந்த மையங்களுக்கு அறிவுரை அனுப்புவதில் நிர்வாக ரீதியான தாமதம் ஏற்பட்டது. (3) குறிப்பிட்ட தேதிக்குள மதிப்பெண் பட்டியலை தேர்வாளர்கள் அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. (4) விடைத்தாள்களை மதிப்பிட ஒப்புக்கொண்ட சில தேர்வாளர்கள் பிறகு மறுத்ததால் தகுதியுள்ள வேறு நபர்களைக் கடைசி நேரத்தில் தேர்ந்து எடுத்ததாலும் தாமதம் ஏற்பட்டது. தேர்வு முடிவுகளை முடிவு செய்வதற்கு அவசியமான உள் மதிப்பீடு மதிப்பெண் பட்டியலைச் சில கல்லூரிகள் அனுப்பவில்லை.

இந்தக் காரணங்களை நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். உள் மதிப்பீடு மதிப்பெண் வர வேண்டுமென்பது ஒன்று. தேர்வாளர்கள் அவர்களுக்கு அனுப்பிய அந்த விடைத்தாள்களைத் திருத்தி உடனுக்குடன் அனுப்ப வில்லை என்பது ஒன்று. ஆகிய இந்தக் காரணங்களை அவர்கள் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளை யெலலாம் சரி செய்ய வேண்டும். இதிலே அவர்கள் சொல்வது, இந்தக் காரணங்கள் உண்மையாக இருக்குமேயானால் இந்த விடைத்தாள்களைத் திருத்துகின்ற ஆசிரியர்கள் முறையாக ஒத்துழைக்கவில்லை என்கின்ற நிலைமை வெளியாகிறது. அப்படிப்பட்ட நிலைமையிருக்குமேயானால கல்லூரி ஆசிரியர்கள் அதற்கான ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன இந்தப் பதில்கள் அனைத்திலிருந்தும் மாணவர்கள் தரப்பிலேயிருந்து எந்தவிதமான தவறுதலும் இருப்பதாகத் தெரியவில்லை. காலதாமதத்திற்குக் காரணம் முழுமையுமே அரசாங்கமோ அல்லது பல்கலைக் கழக நிர்வாகமோ செய்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தூரத்திலிருந்து வந்து பயிலும் மாணவர்களுக்கு வீண் செலவும், காலதாமதமும் ஏற்படுகிறது. இதை ஈடு செய்யக் கூடிய முறையிலே அவர்களுக்கு ஏதாவது விசேஷமாக உதவித் தொகைகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இதிலே நான் குறிப்பிடவில்லையென்றாலும், மாணவர்கள் காரணம் இல்லை என்று சொல்லமுடியாது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுக்காலத்தில் போராட்டம் என்ற பெயரால் ஆசிரியர்களும், மாணவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கிளர்ச்சியில் ஈடுபட்டதன் விளைவு தேர்வுகளைத் தள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தேர்வுகளை ஒருமுறை தள்ளி வைக்கும்பொழுது அதனுடைய பின் விளைவுகளாகத் தொடர்ந்து வைக்கப்படக் கூடிய நிலைமைகளெல்லாம் இதற்கு ஒரு காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாணவர்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் நமக்கிருக்கின்ற அளவு மாணவர்களுக்கு அக்கறையிருக்குமேயானால இது ஓரளவு விரைவிலே திருத்திக்கொள்ளக்கூடிய ஒரு காரியமாக இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



**திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பல கல்லூரிகளில் மாணவர்களின் தேர்வுகளில் தரம் குறைந்து கொண்டு வருகிறது. ஆசிரியர்களை மிரட்டி பல கல்லூரிகளில் புத்தகங்களை வைத்துக் கொண்டு தேர்வுகள் எழுதுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகத்தின் தரத்தைக் குறையாமல் பாதுகாக்க கடுமையாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை இருக்குமேயானால் கல்லூரித் தலைவர்கள் அந்தச் செயல்களுக்காக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி எடுக்கும் போது அரசு அவர்கள் பக்கம் இருக்கும்.

## மாஞ்சோலை எஸ்டேட் பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான ஹில் அலவன்ஸ்.

*வினா எண் 556—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஹில் அலவன்ஸ் கேட்டு கோரிக்கை எதுவும் அரசுக்கு வந்தனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாஞ்சோலை எஸ்டேட் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களுக்கு ஹில் அலவன்ஸ் கேட்டு கோரிக்கை எப்பொழுது வந்தது? இந்த ஆய்வு முடிந்து எப்பொழுது அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற அலவன்ஸ் வழங்கப்படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதித்துறையின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது அது வந்தவுடன் கல்வித்துறை உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாஞ்சோலை எஸ்டேட்டில் இருக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் அங்கே தனியாக வீடுகட்ட வாய்ப்பு இல்லை. காரணம் பம்பாய்-பர்மா ட்ரேடிங் கார்ப்பரேஷனிடத்தின் நிலம்தான் இருக்கிறது. தனியாக நிலம் இல்லை. அந்தக் கம்பெனி விரும்பினால்தான் ஏதாவது வீடு கொடுப்பார்கள். அப்பொழுது தங்க முடியும்: இல்லையென்றால் தங்கவே முடியாது. பக்கத்தில் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர், 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் கல்லிடைக்குறிச்சி ஊர் இருக்கிறது. அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கை. இந்த இடத்தைவிட உயரம் குறைவாக உள்ள மற்ற சில இடங்களில்கூட இந்த அலவன்ஸ் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே கூடிய விரைவில் இங்கே அந்த ஹில் அலவன்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது மாஞ்சோலை எஸ்டேட் பயணப்படி வழங்குவதற்காக மலை வாசஸ்தலம் என்று குறிப்பிடப்படுகிறது. ஹில் அலவன்ஸ் கொடுப்பதற்காக குறிப்பிடப்படவில்லை. அதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. பரிசீலனை முடிந்த உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

பட்டம் பெற்ற சிறைக் கைதிகளுக்கு விடுதலைக்குப்
பிறகு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் திட்டம்.

*வினா எண். 557—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள மத்திய சிறைச்சாலையில் தண்டனை பெற்ற கைதிகள் தண்டனை காலத்தில் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு விடுதலைக்குப் பிறகு அவர்களை அரசு பணிகளில் சேர்ப்பதற்கு அரசு முன் உரிமை வழங்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுதியின் அடிப்படையில் என்று கூறி இருக்கிறார்கள். அந்தத் தகுதியின் அடிப்படை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசு ஆணை ஒன்று இருக்கின்றது.

தண்டனை பெற்றதைத் தவிர்த்து அரசுப் பணியில் அமர்த்துவதற்கான மற்ற தகுதிகளை முன்னாள் கைதி ஒருவர் பெற்றிருந்தால், அவர் புரிந்த குற்றத்தையும் அதன் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு, விதிமுறைகளைத் தளர்த்தி அவர்களை வேலையிலே அமர்த்தலாம் என்று இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வன்முறை மற்றும் ஒழுக்கக்கேடு நிலையில் குற்றங்களைச் செய்து அவர்கள் தண்டனை பெற்றிருந்தால் அரசுப்பணியில் அவர்களைச் சேர்க்கக்கூடாது என்று இருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்தத் தகுதியின் அடிப்படையில் எத்தனை பேர்கள் வேலை வேண்டும் என்று அரசுக்கு மனுச்செய்துள்ளனர். எத்தனை பேர்களுக்கு வேலை தரப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் எத்தனை பேர்களிடமிருந்து வந்தது என்ற தகவல் இல்லை. ஆனால் 19 பேர்களுக்கு வேலை தரப்பட்டிருக்கின்றது.அரசு மூலமாக அவர்களுக்குத் தருவதைவிட செல்ப் எம்ப்ளாய்மெண்ட் ஆக சுய வேலை வாய்ப்பு அவர்களுக்குத் தர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மாணவர்கள் கைதானால் அவர்கள் படிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சல் மூலம் படிப்பதற்கான வழிவகை ஏற்கனவே இருக்கின்றது.

பர்மா தமிழர்காளல் நடத்தப்பட்ட திருவள்ளுவர்
கூட்டுறவு அச்சகம்.

*வினா எண். 558—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்மா தமிழர்களால் நடத்தப்பட்ட திருவள்ளுவர் கூட்டுறவு அச்சகம் தற்போது தனி அதிகாரியின் நிர்வாகத்தில் பெரிதும் நஷ்டமடைந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை மீண்டும் அங்கத்தினர் தொழிலாளரிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க அரசு முன் வருமா ?

(இ) ஆம் எனில் எப்போது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : (அ) இவ்வச்சகம் தற்பொழுது லாபத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) மற்றும் (இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் (தனி அதிகாரி நியமனம்) சட்டம், 1976—ன் கீழ் நியமனம் செய்யப் பட்ட தனி அதிகாரியின் பதவிக்காலம் முடிந்த பின்னர் மற்ற வரையறுக்கப்பட்ட சங்கங்களுடன் இந்த அச்சகத்திற்கும் நிர்வாகக் குழு அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. பம்பல் நல்லதம்பி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பர்மா தமிழர்களுக்கு என்று இருக்கின்ற ஒரே நிறுவனம் இந்த திருவள்ளுவர் அச்சகம்தான். அங்கே தனி அதிகாரி 1979-லே போட்டதிலிருந்து அது நட்டத்திலே நடந்து கொண்டிருக்கின்றது. அந்த நட்டம் எவ்வளவு ? அதை மீண்டும் அந்தத் தொழிலாளர்களிடம் ஒப்படைக்க காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தவறான தகவல் கிடைத்திருக்கிறது என்று எண்ணுகிறேன். தனி அதிகாரி நியமிக்கப்பட்டது 24—8—1974-லே. அதற்கு முன்னாலே இருந்த நிர்வாகக் குழு பல தவறுகளைச் செய்து அந்த சங்கம் நட்ட நிலைக்கு சென்று விட்ட காரணத்தால் அந்த நிர்வாகக் குழு 1974-லே கலைக்கப்பட்டு அங்கே தனி அதிகாரி போடப்பட்டது. 1974 முதல் 1976 வரை லாபத்தில் இயங்கி வந்தது. பின்னர் தொழிலாளர்கள் போராட்டம் காரண மாக நட்டம் ஏற்பட்டு, 1976-லே 41 ஆயிரமும், 1977-லே 51 ஆயிரமும், 1978-லே 39 ஆயிரமும் நட்டம் ஏற்பட்டது. மீண்டும் தற்போது அந்த தொழிலாளிகள் மீது கிட்டத்தட்ட 23 பேர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, பணி நீக்கம் செய்த பிறகு அங்கு நிர்வாகச் செம்மை ஏற்பட்டு, தற்போது 20,636 ரூபாய் நடப்பாண்டு லாபம் ஏற்பட்டு இருக்கிறது.



**திரு. பம்மல் நல்லதம்பி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர் - அங்கத்தினர்கள் அந்த அச்சகத்தைத் துவங்குகின்ற போது வேலை செய்த தொழி லாளர்கள் எத்தனை பேர்கள் ? தற்போது எத்தனை பேர்கள் உள்ளனர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவர் அவர் களே அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை. தற்போது தவறு நடந்து 23 தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்கள். துவக்குகின்றபோது எத்தனை பேர்கள் சேர்ந் தார்கள், எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்ற தகவல் தற் போது என்னிடம் இல்லை.

**குடியாத்தம் ஊராட்சி ஒன்றியக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.**

*வினா எண் 559—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய கிராமங்களுக்கு குடி நீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை கிராமங்களுக்கு திட்டமிடப் பட்டுள்ளது ?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் 19 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் திட்டமிட்டு அவற்றில் 13 சிற்றூர்களுக்கு ரூபாய் 3.72 இலட்சம் செலவில் திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு மீதமுள்ள 6 சிற்றூர்களுக்கு 1981—82-ல் இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு, 2 சிற்றூர்களில் வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன. மேலும் 2 சிற்றூர்களில் நீர் ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டு தேவை

யான பகிர்மான குழாய்களும் பதிக்கப்பட்டு விட்டன. ஒரு சிற்றூரில் நீர் ஆதாரம் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. மற்ற வேலைகள் விரைவில் துவங்கப்படும்.

மீதமுள்ள ஒரு சிற்றூரில், இன்னும் நீர் ஆதாரம் கண்டு பிடிக்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுத்து முடிக்கப்பட்ட வேலைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடந்த ஆண்டிலும் குடிநீர் வழங்க வாரிய அதிகாரிகளை அழைத்துச் சென்று என்னுடைய தொகுதியிலே நீர் ஆதாரமே இல்லாத கீழ்க்கண்ட கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டன. குறிப்பாக, கல்லப்பாடி, கணவாண், மோட்டூர், மூங்கப்பட்டு, மீஜுர் பகுதி, தட்டப் பாறை, கீலூர், கல்லூர், சுங்கலப்பாடி, மேலாலத்தூர், பாதாபி, கொட்டமிட்டா பகுதி இவைகளையெல்லாம் அந்த அதிகாரிகள் பார்வையிட்டு, கேட்டகரிசேஷனை மாற்றுவதன் மூலமாகத் தான் தண்ணீர் கொடுக்க முடியும் என்று அரசுக்கு எழுதியிருப்பதாக சொல்கிறார்கள். அரசுக்கு அத்தகைய தகவல்கள் வந்திருக்கிறதா? அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 13 சிற்றூர்களில் உள்ள நிலைமைகளைப் பற்றி விளக்கிச் சொன்னார்கள். ஆனால் 6 சிற்றூர்களைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்விக்கு சரியான இன்னின்ன ஊர் என்று சொல்லக் கூடிய நிலை இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் கூறிய கிராமங்களை அரசினுடைய கவனத்தில் எடுத்துக் கொண்டு அவைகளை பரிசீலனைக்கு வந்தால், செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அப்படி வந்தால் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எந்தெந்த ஊர் என்று அவர்கள் சொல்வார்களேயானால், அது அந்த கேட்டகரியிலே வருகிறதா என்று பார்த்து தண்ணீர் கொடுக்க முடியுமா என்று அரசு பரிசீலனை செய்யும்.



குறைந்தபட்ச ஊதிய வீதங்களை அமுல் நடத்தும் திட்டம்.

*வினா எண் 560—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்த பட்ச ஊதிய அமுலுக்கு தனிப்பிரிவை நியமிக்க தமிழக அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) குறைந்த அளவு ஊதிய வீதங்களை தீவிரமாக அமுல் நடத்தும் பொருட்டு தனிப் பிரிவை நியமிக்கும் செயற் குறிப்பை அரசு பரிசீலித்து முதற் கட்டமாக குறைந்த அளவு ஊதியச் சட்டம், சம ஊதியச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களுடன் ஏனைய தொழிற் சட்டங்களையும் அமுல் படுத்த மூன்று தொழிலாளர் துறை ஆய்வாளர்களை 1–8–1981 முதல் நியமித்துள்ளது.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறைந்த பட்ச கூலிச் சட்டத்தை அமுலாக்குவதற்கு ஒரு சிறிய குழு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம், இன்றைக்கு தமிழ் நாட்டிலே ஒரு கோடி பேரை எட்டக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுடைய குறைந்த பட்ச கூலிச் சட்டத்தை அமுல் நடத்துவதில் நிர்வாக ரீதியாக ஒரு அமைப்பு இல்லை. ஆகவே, அந்தச் சட்டத்தை அமுல் நடத்தக் கூடிய முறையிலே கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுடைய குறைந்த பட்ச ஊதியம் அமுல் செய்வதை ரெவின்யூ டிபார்ட்மென்ட் பார்த்துக் கொண்டு இருக்கிறது. அது மேலும் சிறப்பாக செயல்படுவதற்கு அரசு என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டு, இங்கே மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு கருப்பையா அவர்களால் லேபர் டிபார்ட்மென்டே எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. இதைப் பற்றியெல்லாம் பரிசீலனை

செய்து தொழிலாளர்களுக்கு கொடுக்கக் கூடிய கூலிகள் ஒழுங்காக சேர்க்கப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். அதில் மிக அக்கறை செலுத்துகிறது இந்த அரசு என்று சொல்லிக் கொள்கிறேன்.

### அம்பத்தூர் நகரியத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 561—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி அம்பத்தூர் நகரியத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) திட்டம் உடனடியாக செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்பட உள்ளது.

(முற்பகல் 9—50)

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, நிரந்தரமான தண்ணீர் திட்டத்திற்காக இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 10 நாட்களுக்கு முன்பு அம்பத்தூர் நகரியத்தில் கால்கோள்விழா நடத்தியிருக்கிறார்கள். இந்த நிரந்தரத் திட்டத்தோடு தற்காலிகமாக குடிநீர் தருவதற்கு ஏதேனும் துணைத் திட்டம் இருக்கிறதா ? தற்போது 5 இலட்சம் காலன் தண்ணீர் மட்டுமே நிரந்தரத் திட்டத்தின் மூலம் பெற வாய்ப்பு இருக்கிறது. அதுவும் பப்ளிக் ஃபவுண்டன்ஸ் மூலம் தான் தரப்படுகிறது என்று அறிகிறேன். வீட்டுக்கு வீடு குழாய் அமைத்து, தேவைக்கு ஏற்ப தண்ணீர் வழங்க இந்த 5 இலட்சம் காலன் என்ற அளவை அதிகப்படுத்தும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா ? அல்லது வேறு ஏதேனும் திட்டம் அம்பத்தூர் நகரிய மக்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. அந்த கல்நாட்டு விழாவில் நானும் கலந்துகொண்டேன் என்று நினைக்கிறேன். எனினும் சிறப்பாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். மற்றப் பிரச்சனைகள் பற்றி தற்போது என்னிடம் குறிப்பு இல்லை. அவர்கள் எழுதிக் கொடுத்தால், அதை பரிசீலனை செய்து முடிந்தவரை அந்தக் காரியங்களை நிறைவேற்ற இந்த அரசு தன்னால் ஆன முயற்சிகளைச் செய்யும்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே அம்பத்தூர் நகரியத்திலிருந்து 7 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தரப்பட்டு இன்றைக்கு மண்ணூர்பேட்டை என்கின்ற பகுதியில் ஒரு ஆழ்கிணறு தோண்டப்பட்டு, அது பாதியிலே நின்றுகொண்டிருக்கிறது. அதைப்போல அத்திப்பட்டு பகுதியிலே ஒரு கிணறு தோண்டப்பட்டு, வேலை முடிந்து, இன்னும் மின் இணைப்புத் தரப்படாமல் இருக்கிறது. அதற்கு மின் இணைப்பு கொடுத்து, பணிகள் நிறைவேற்றப்படுமானால் ஏறத்தாழ 20,000 மக்களுக்கு குடிநீர் திட்டம் நிறைவேற வாய்ப்பு இருக்கிறது. இதை உடனடியாகத் தீவிரப்படுத்தி, குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

### பொள்ளாச்சி தாலூகாவில் தனி நபர்களால் கட்டப்பெற்றுள்ள அணைகள்.

*வினா எண் 562—திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தாலூகாவில் உள்ள தேவனூர் ஆறு, ஆலாங்கடவு ஆறுகளில் எத்தனை தனி நபர்கள் அணைகள் கட்டியுள்ளார்கள் ?

(ஆ) அதில் அரசுக்கு வரும் வருவாய் எவ்வளவு ?

(இ) மேற்படி அணைகளை அரசு எடுத்துக்கொள்ள முன் வருமா ?

(ஈ) P. A. P. கழிவுநீர் மேற்படி ஆறுகளில் சேருகிறதா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) பொள்ளாச்சி தாலூகாவில் தேவனூர் பள்ளத்திற்கு குறுக்கே எட்டு மண் கொரம்புகளும், ஐந்து அணைக்கட்டுகளும், ஆலாங்கடவு பள்ளத்திற்கு குறுக்கே 21 மண் கொரம்புகளும், ஆறு அணைக்கட்டுகளும் உள்ளன.

(ஆ) தண்டத் தீர்வையோடு ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு ரூ. 34,000 அரசுக்கு வருவாய் கிடைப்பதாக சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

(இ) இது குறித்து அரசு தனியாக பரிசீலித்து முடிவெடுக்கும்.

(ஈ) ஆம்.

**திரு. கோவைத்தம்பி :** தலை ரவர்களே இந்த பொள்ளாச்சி தாலூகாவில் தனிப்பட்ட நபர்கள் கட்டிய அணைகள் மூலம் எவ்வளவு ஏக்கர் தண்ணீர் பாய்கிறது? அரசுக்கு செலுத்துகின்ற தீர்வைக்குரிய கட்டணம் இந்த தனியார்கள் அணைகளிலிருந்து வசூலிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவரவர்களே, அதைத்தான் என்னுடைய பதிலிலே தெரிவித்திருக்கிறேன். மொத்தம் 34,000 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு தண்டத் தீர்வையாக வசூல் செய்யப்படுகிறது. இதை அரசு எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

## சின்னவேடப்பட்டியில் அமைக்கப்படவுள்ள குளம்.

*வினா எண் 563—திரு. கு. ரமணி—மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சின்னவேடப்பட்டி கிராமத்தில் 400 ஏக்கர் பூமியில் ஒரு பெரிய குளத்தை அமைக்க நடைபெற்று வந்த ஆய்வுப்பணி முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், குளத்தை அமைக்கும் வேலை எப்பொழுது ஆரம்பமாகும்!



(அ) ஆய்வுப் பணிகள் முடிந்து விட்டன. திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) தலைமைப் பொறியாளரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. திட்ட அறிக்கை கிடைத்த பின் அரசு முடிவெடுக்கும்.

**திரு. மா. சின்னராசு :** தலைவரவர்களே, குருடிமலைப் பகுதியில் வெள்ளக்காலத்தில் நீர் உற்பத்தி அதிகமாக இருப்பதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. இந்த வெள்ளப் பெருக்கைத் தடுக்கின்ற திட்டத்தின்கீழ் குருடிமலைப் பகுதியில் சிறு அணை கட்டித் தடுப்பதன் மூலம் வெள்ளக் காலத்தில் நிரம்பி வழிகின்ற தண்ணீரைத் தடுக்க முடியும். அதனால் கோவை நகருக்குள் வருகின்ற காட்டாற்று வெள்ளத்தையும் தடுக்க முடியும். ஆகவே, இந்த சின்னவேடப்பட்டி திட்டத்தோடு அந்த மலை அடிவாரத்தில் சிறு அணை கட்டும் திட்டத்தையும் சேர்த்து நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** முதலிலே கோவை மாவட்டத்திலே சின்னதடாகம் கிராமத்திற்கு அருகில் சங்கனூர் பள்ளத்தில் சுமார் 114 இலட்சம் மதிப்பீட்டில் 1,825 ஏக்கர் புஞ்சை நிலங்கள் பயன்பெறுவதற்காக நீர்த்தேக்கம் அமைக்க திட்டம் தீட்டப்பெற்றது. ஆனால் இத்திட்டம் ஆய்ந்தபிறகு, இத்தேக்கமானது காட்டாற்றின் குறுக்கே அமைக்க இருப்பதால் அணையில் வண்டல் நிறைந்து விடும் என்றும், மேலும் இத்திட்டத்தால் கரையோரங்களில் இருக்கும் ஏராளமான விலையுயர்ந்த தோட்ட நிலங்கள் மூழ்கிவிடும் என்றும் முதலில் கருத்து தெரிவித்தார்கள். எனவே இப்போது மாற்றுத் திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதன்படி சங்கனூர் பள்ளத்திற்குக் குறுக்கே ஒரு நீர் சேமிப்பு அணை 'பிக்-அப் அணிகட்' ஒன்றைக் கட்டி, 7.5 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் மூலம் சின்னவேடப்பட்டி அருகில் கட்டப்படவிருக்கும் குளத்திற்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுதான் இப்போது இருக்கும் கருத்துரையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற வெவ்வேறு சிறுசிறு அணைகள் கட்டுவது பற்றி எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தால், அது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

## பாக்கம்பாடி அணைத் திட்டம்.

*வினா எண். 564— திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ---

(அ) கள்ளக்குறிச்சி வட்டம் பாக்கம்பாடி அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: (அ), (ஆ) மற்றும் (இ): வெள்ளாற்றின் பாக்கம்பாடி அருகே அணை கட்டுவதற்கான திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது. தற்போது, வெள்ளாற்றின் நீரியல் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்நீரியியல் கணிப்புகள் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிந்தபின் அரசுக்கு அறிக்கை அனுப்புவதாக தலைமைப் பொறியாளர்(ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாக்கம்பாடி அணைத் திட்டம் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட திட்டமாகும். ஆனால் இவ்வளவு காலதாமதம் ஆனதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. அந்தப் பகுதி மிகவும் வறண்ட பகுதி. களர்நிலமாக இருக்கின்ற பகுதி. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்தால், அந்தப் பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு சுமார் 20 கிராம மக்களுக்குப் பயன் தரும், குடிநீர் இல்லாத பல கிராமங்கள் குடிநீர் வசதி பெறும். ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்து, அங்கே பாசன வசதி ஏற்படுத்திக் கொடுத்தால், அந்தப் பகுதி மேம்பாடு அடைய வசதியாக இருக்கும். ஆகவே, அதை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணை கட்டுவதன் மூலமாக எதிர்பார்க்கும் அளவிற்கு நீர் வரத்து நமக்குக் கிடைக்குமா என்பது தான் காலதாமதத்திற்குக் காரணம். இந்த ஏப்ரல் மாதத்தோடு அந்தக் கணிப்பு வேலைகள் முடிந்து விடும். அதற்கு அடுத்து திட்டங்கள் தயாரித்து நமக்கு அனுப்புவார்கள். அதன் மூலமாக குவையூர் ஏரிக்கும் அதன் கீழே கண்மாய்களுக்கும் நீர் பெறு



வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டு, 2,300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது என்று முதல் நிலை மதிப்பீட்டில் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே விரிவாக நாம் அறிக்கை பெற்ற பிறகு தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க ஆவன செய்யும்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அணைகட்டுகின்றபோது அங்கே வருகின்ற நீர்வரத்தை ஆராய்ச்சி செய்து எந்த அளவிற்கு நீர் வரும் என்பதைப் பரிசீலித்து, அதன் பிறகுதான் கட்டப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே பல அணைகள் கட்டப்பட்டுள்ள இடங்களில், பாசனம் ஏற்கனவே பெற்றுக் கொண்டு இருக்கின்ற பகுதிகள் பாதிக்கப்படாமல், அதற்குத் தண்ணீர் விட்டுவிட்டு, புதிதாகப் பாசன வசதி ஏற்படுத்தும் வகையில் கட்டுகிறார்களா அல்லது புதிதாகக் கட்டப்படுகின்ற அணைகளுக்குக் கீழேயுள்ள நிலங்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் கட்டுகிறார்களா என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் சரியான முறையில் அதற்கு விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று பல இடங்களில் கட்டப்பட்டுள்ள அணைகள் எல்லாம் புதிதாகப் பாசன வசதி ஏற்பட்ட இடங்களுக்குப் பாய்கிறது. கீழே பெரும்பான்மையாகப் பாய்ந்து கொண்டு இருந்த நிலங்களுக்கு பாயாமல் அவைகள், நஞ்சையாக இருந்தவை, புஞ்சையாக மாறும் அளவிற்கு இருக்கிறது. இது குறித்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கனவே பல முறை சொல்லியிருக்கிறேன். இந்தக் கேள்வியை நான் கேட்பதற்குக் காரணம், நீங்கள் தற்போது கட்டும் அணைக்குக் கீழ்ப் பகுதியில் வாழ்பவன் நான், அதனால் பாதிப்பு ஏற்படுமோ என்று அச்சப்படுகிறேன். ஏற்கனவே அங்கே 3—4 அணைகள் உள்ளன. கீழே இருக்கின்ற நிலங்களுக்கு அதை நம்பி 12 சின்ன மடைகள் இருக்கின்றன, ஆகவே அவைகள் பாதிக்கப்படாத வகையில் இந்த அணை இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அந்த வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராசன் சொன்ன கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அல்லது அவருக்கு ஒரு தனி கருத்து இருக்கிறதா என்பது தெரியவில்லை, காரணம், அணை கட்டுவதன் மூலமாக அவர் குறிப்பிடுகிற சில பகுதிகள் நன்மை அடையும் என்ற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே பயன்பெற்றுவருகின்ற பகுதிகள் பாதிக்கப்பட்டு விடக் கூடாதே என்ற நல்ல எண்ணத்தோடு கேள்வி கேட்டு இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்தக் காலதாமதத்திற்கு அதுதான்

முக்கிய காரணம். இன்னொரு அணை கட்டுகிறபோது, ஏதாவது உபரி நீர் இருந்தால்தான் கட்ட முடியுமே தவிர, புதிதாக நாம் ஒரு அணையைக் கட்டிவிட்டு, அதன் காரணமாகக் கீழே இருப்பவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில்தான் அது குறித்து ஆய்வு செய்து வருகிறோம். அந்த ஆய்வுப் பணிகள் இந்த ஏப்ரல் மாதத்தோடு முடிந்துவிடும். அதன் பின்னர் அது குறித்து அரசு முடிவு எடுக்கும் என்று கருது கிறேன். ஏற்கனவே நீர்ப்பாசன வசதி பெற்று இருக்கும் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்காத வகையில் அணைக்கட்டு கட்ட வேண்டும். ஏற்கனவே பாசன வசதி பெற்றுக் கொண்டு இருப்ப வர்களுக்குப் பாசன உறுதி கொடுத்த பிறகு தான் (ஸ்டெபிலை சேஷன் நார்ம்ஸ்) புதிய பாசன வசதிகள் கொடுக்க முடியும். இதை மனதில் கொண்டு நிச்சயமாக அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன், வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். சிவராமன்:** தலைவர் அவர்களே, அந்த அணை கட்டுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அவர் சொல்லும் அணை கோமுகியாறு திட்டத்தின் கீழ் வருகின்றது. இது வெள்ளாறு திட்டம். இதற்கும் அதற்கும் பாதிப்பு இல்லை. ஆகவே, உடனடியாக இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில் திரு. தியாகராசன் குறிப்பிட்டது போல் பழைய ஆயக்கட்டுதாரர்கள், புதிய ஆயக்கட்டுதாரர்கள் என்று பிரச்சினை வருகிறது. அப்படி அந்த அணை கட்டுகின்ற போது, உபரி நீராக வரும் தண்ணீரை ஆற்றிலே விடவேண்டும். மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்க வேண்டும். ஆகவே, அணை கட்டுவதற்கு முன்பு எந்த அளவிற்குத் தண்ணீர் வந்து கொண்டு இருந்ததோ, அந்த அளவிற்குத் தண்ணீர் விடவேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் இந்த அணை மூலம் வருகின்ற தண்ணீர் தேங்கவிடப்படுமானால் நன்மையாக இருக்கும். ஆகவே, பழைய ஆயக்கட்டுதாரர் களுக்கும் புதிய ஆயக்கட்டுதாரர்களுக்கும் அந்தத் தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கும் அளவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மாண்புமிகு உறுப்பினர் தியாகராசன் அவர்களுக்குச் சொன்ன பதிலை இதற்கும் சொல்கிறேன்.



## "இருளர்" சமுதாய மக்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்.

*வினா எண் 458—**திரு பி. எஸ். துரைசாமி**:—மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "இருளர்" என்கின்ற சமுதாயத்தைச் சேர்ந்த பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், "இருளர்" அதிகம் இருக்கின்ற பர்கூரில் அத் திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** (அ) இருளர் என்ற பழங்குடியினர்க்கு மட்டும், தனியாக வீடுகட்டும் திட்டம் ஏதும் இல்லை. மாநிலத்திலுள்ள அனைத்துப் பழங்குடியினருக்கும் வீடுகட்டும் திட்டம் உள்ளது. இருளர்களுக்கும் வீடுகட்டுவது அதனுள் அடங்கும்.

(ஆ) மேற்படி திட்டத்தில் ஹரூர் பகுதியில் 25 வீடுகளும், சித்தேரி மலைப் பகுதியில் 201 வீடுகளும் கட்டுவதற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரால் பரிசீலிக்கப் பட்டு வருகிறது.

**திரு. எம். சேதுராமன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இருளர்கள், விவசாயிகளின் நன்மையைக் கருதி, அவர்களுடைய பயிர்களை நாசம் செய்யாமல் இருப்பதற்காக எலிகளைப் பிடித் தும், அதே நேரத்தில் விஷப் பாம்புகள் கிராமத்தில் இருக்கும் மக்களைத் தொந்தரவு கொடுக்காத வகையில் அவற்றிடமிருந்து அந்த மக்களைப் பாதுகாத்தும் சேவை செய்து வருகின்ற காரணத்தால், அந்த இனத்தவர்களுக்கு வீடுகள் கட்டுவது மட்டுமல்லாமல் நிலங்கள் கூட கொடுத்து அவர்கள் வாழ்க்கையை முன்னேற்றுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் என்ற பிரிவினருக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் இருளர் களுக்கும் சேர்த்து, அந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும்.

1980—1982 ஆம் ஆண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள்.

*வினா எண் 459—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர்—நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1980-1981 மற்றும் 1981-1982 ஆம் ஆண்டுகளில் எத்தனை ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் உயர் நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : 1980-81-ஆம் ஆண்டில் எந்தவொரு ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியும் உயர் நிலைப்பள்ளியாக உயர்த்தப்படவில்லை.

1981-82 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் பாம்பாட்டி பட்டியில் உள்ள நடுநிலைப்பள்ளியும் இராமநாதபுரம் மாவட்டம் சுந்தரராஜபுரத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியும் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன விதியின் அடிப்படையில் அந்த ஆதிதிராவிட நலப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்படுகின்றன. மேலும் அந்தப் பள்ளிகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப் படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளாக இருக்கும் இடங்களில் அங்கே வந்து பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தும், சுற்றுப்புறப் பகுதிகளில் எந்தெந்தப் பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்பதைப் பார்த்தும் அங்கே இருக்கும் தேவையின் அடிப்படையில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதி இரும்பேடு கிராமத்திற்கு இது போன்று உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா? அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல இரும்பேடு பக்கத்திலேயிருந்து அப்படி ஏதாவது கோரிக்கை வந்ததா என்பது பற்றிய குறிப்பு என்னிடத்திலே



இல்லை. 1982—83ஆம் ஆண்டுக்கு 9 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்பதற்காக நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. அதிலே இந்தப் பகுதி வருகிறதா என்பதைப்பற்றி தற்போது எனக்குத் தெரியாது.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981—82ஆம் ஆண்டுகளுக்கு 2 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பார்ட் 11 ஸ்கீமில் எத்தனை நடுநிலைப் பள்ளி களை உயர்த்தியிருக்கிறீர்கள ? அதிலே எனது தொகுதியான துறவூர், கணூர் இரண்டும் எடுத்திருப்பதாகக்கேள்விப்பட்டேன் அதைப்பற்றிய உண்மைகளை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டைப் பொறுத்தவரையில 9 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட விருக்கிறது என்று சொன்னேன். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற தொகுதியிலே இருக்கக் கூடிய பள்ளி களை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டும் என்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போடவும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், ஆதி திராவிட நலத்துறையின் சார்பாக நடத்தப்படுகிற நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமானால், அதன் அருகாமையில் 4, 5 மைலுக்குள்ளாக வேறு ஏதாவது உயர்நிலைப் பள்ளி யிருந்தால, ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளியாக, இந்த நடுநிலைப் பள்ளியே ஆக்கக கூடாது என்று விதியிருக்கிறதா? அதையெல்லாம் தவிர்த்து, இந்த விதிமுறைகளையெல்லாம் கையாளாமல், அந்த மக்களுக்கு நன்மைகள் செய்துதர வேண்டும் என்ற நோக்கத்தில், அந்தப் பளளிகளை உயர்த்துவதற்கான நடவடிககைகளை அரசு எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆதி திராவிட நலத்துறையின்கீழ் 1073 பள்ளிகள் இருக்கின்றன. விதி முறைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தற்போது உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டும் என்றால், அந்தப் பக்கத்திலேயே இருக்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தும், சுற்றுப்புற அருகாமையில வேறு உயர்நிலைப் பள்ளிகள் இருந்தால் அதைப் பார்த்தும், அடிப் படையில் தேர்வு செய்யப்பெற்று, அதன்பிறகு அந்த அடிப் படையில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக

உயர்த்தப்படுகின்றன. நாம் இப்போது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தை அரசு பரிசீலிக்கும்.

### ஆதி திராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குமாத மொன்றுக்கு உணவுக்காக செலவிடப்படும் தொகை

*வினா எண். 460—:திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளில் தற்போது உணவுக்காக மாதம் ஆள் ஒன்றுக்கு செலவிடும் தொகை எவ்வளவு?

(ஆ) அதை மேலும் உயர்த்த அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு, சென்னை நகரில் உள்ள கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களைச் சார்ந்த விடுதிகளில் ரூ. 80 ஆக வழங்கப்பட்டு வந்த தொகையானது, 15 ரூபாய் உயர்த்தப்பட்டு ரூ. 95ஆக அளிக்கப்படுகிறது

புறநகரில் உள்ள கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களைச் சார்ந்த விடுதிகளில் ரூ 65 ஆக வழங்கப்பட்டு வந்த தொகையானது தற்போது ரூ. 15 உயர்த்தப்பட்டு 80 ரூபாயாக அளிக்கப்படுகிறது.

பள்ளி விடுதிகளில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில் 45 ரூபாயாக வழங்கப்பட்டு வந்த தொகையானது 15 ரூபாய் உயர்த்தப்பட்டு 60 ரூபாயாக அளிக்கப்படுகிறது.

198௧–82 கல்வி ஆண்டு முதல் இந்தத் தொகையை செலவிட அரசு நிலை எண். 633, சமூக நலத்துறை நாள் 27—8—1981ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற உதவிகளை ஒரு குடும்பத்தில் 2 பேர்களுக்கு மேல இருந்தால் அளிக்கக்கூடாது என்று மத்திய அரசு



சொல்லி அந்த உத்தரவு அமுல்படுத்தப்பட்டு வருகிறதா ? அப்படி என்றால் அந்த உத்தரவை மறுபரிசீலனை செய்து ஆதி திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்த 3வது பிள்ளைக்கும் இந்த உதவித் தொகை கிடைக்குமாறு செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கேள்வி அரிசன விடுதிகளில் தற்போது உணவுக்காக செலவிடும் தொகையை உயர்த்த முடியுமா என்பது குறித்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக் கூடிய கேள்வி பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது பற்றியது. மைய அரசு அவ்வாறு 2 பிள்ளைகளுக்கு மேல் ஒரு குடும்பத்திலிருந்து வந்திருந்தால் கொடுக்கக் கூடாது என்று விதித்திருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் அந்த விதிமுறையில்லை.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி மாணவகளுக்கு இருக்கும் உணவு விடுதிகளையும், தொழிற் கல்வி படிக்கிற மாணவர்களின் உணவு விடுதிகளையும் நடத்துகிற வார்டன்கள் சில இடங்களிலே ஒருவராகவே இருக்கிறார்கள். இப்படி ஒருவரே இரண்டு மூன்று விடுதிகளைக் கண்காணிக்கிற நிலைமை இருப்பதால் அவர்களால் உணவுப் பொருள்களை வழங்கும் வேலையைச் சரிவர செய்ய முடியவில்லை என்பது போன்ற புகார் அரசுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது, அது உண்மையா ?

(முற்பகல் 10·10)

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதி கண்காணிப்பாளர்கள் ஒரு விடுதிக்கு மேல் பல விடுதிகளைக் கண்காணிப்பதாகவும் அதனால் மாணவர்களுடைய படிப்பில் அவர்களுக்கு கவனக்குறைவு ஏற்படுகின்றது என்றும் தற்போது புகார் உள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள், ஆனால் எனக்குத் தெரிந்த வரையிலே அத்தகைய நிலைமை இல்லை, எனக்கும் தனிப்பட்ட முறையிலே அப்படிப் புகார் வரவில்லை,

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது உதவித் தொகை 80 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது, இப்போது 95 ரூபாயாகக் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள், ஆனால் கல்லூரிகளிலே ஜெனரல் ஹாஸ்டல்களிலே இருப்பவர்களுக்கு குறைந்த பட்சம் 120 ரூபாய் முதல்

150 ரூபாய் வரையிலே செலவு ஆகின்றது. ஆகவே இந்தத் தொகையினை உயர்த்தி 150 ரூபாயாக உதவித் தொகை கொடுக்க அரசு முன் வருமா ?

அடுத்து மத்திய அரசினைப் பற்றிச் சொல்கின்றபோது மத்திய அரசு கொடுக்கின்ற உதவித் தொகை போதுமானதாக இல்லை. அந்தக்கல்லூரி மாணவர்களுக்கு ஆயிரம் ருபாய் கொடுத்தால் கூட ஆண்டு ஒன்றுக்கு 1,200 ரூபாய், 1,300 ரூபாய் கூட செலவாகின்றது. ஆகவே அந்த மீதித் தொகையை நம்முடைய மாநில அரசு கொடுத்து உதவ முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரைப் பொறுத்தவரையிலே விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குத் தற்போது 95 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அது போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இப்போது 1981—82ஆம் ஆண்டுதான் இந்த உணவுக்கான உதவித் தொகை உயர்த்தித் தரப்படுகின்றது. வருகின்ற ஆண்டுகளில் நிதிநிலைமையை அனுசரித்து மாணவர் களின் நிலைமையையும் கருத்தில் கொண்டு அரசு இதில் கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மத்திய அரசினைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். தற்போது தமிழக அரசு இத்தகைய கல்லூரிகளிலே தங்கிப் பயிலக் கூடிய மாணவர்களுக்காக சிறப்புக் கடனுதவியாக அளித்து வருகின்றது. அதையே அரசு தொடர்ந்து செயல்படுத்தும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க தற்போது அரசால் இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், கூட்டுறவுத் துறையிலே.............. (குறுக்கீடு)...............ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றது.......



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி எல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். பதில் சொல்கிறேன்.

### (3) ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலைக் கிடங்கில் தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பாபு ஜனார்த்தனன், கே. எம். தங்கமணி, இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என்.எஸ். வி. சித்தன் ஆகியோர் " சாரம், தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலைக்கிடங்கில் 8—3—1982 அன்று தீ விபத்து ஏற்பட்டுஅதனால் 5 இலட்சம் நூல் பேல்கள் சாம்பல் ஆனதினால் அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் " என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. கே. எம். தங்கமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை சாரத்திலே இயங்குகின்றது. இது தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற ஒரே ஒரு கூட்டுறவு நூற்பாலையாகும். 8—3—1982 அன்று பஞ்சு எரிந்துவிட்டதாகப்பத்திரிகையிலே தகவலும்எனக்கு அதிகாரபூர்வமான தகவலும் வந்திருக்கின்றது. 5 இலட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள பஞ்சுகள் எல்லாம் எரிந்துவிட்டன. இந்த மாதிரி தீ விபத்துக்கள் பல தடவை இதிலே நடந்துவந்திருக்கின்றன. தீ விபத்து ஏற்பட்டவுடன் ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களும் மற்றும் பல தொழிலாளர்களும் ஒன்று கூடித் தீயை அணைத்திருக்கிறார்கள். நல்லவேளையாக யாரும் பலியாகவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கின்றது. இது ஓரளவுக்கு சந்தோஷமாக இருக்கின்றது.

அந்த ஆலையையும் பஞ்சையும் இன்ஷூர் செய்திருக்கிறார்களா ? அங்கு ஏற்பட்ட தீ விபத்தால் ஏற்பட்ட நஷ்டத்தை அந்த இன்ஷூரன்ஸ் தொகையை வாங்கியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. அந்தத் தீ விபத்தால் ஆலை நிறுத்தப்பட்டுள்ளதா? எதிர்காலத்தில் இம்மாதிரியான தீ விபத்துக்கள் நடக்காதவாறு இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்களையெல்லாம் விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சாரம் கூட்டுறவு நூற்பாலையில் 8–3–1982 அன்று நடைபெற்ற தீ விபத்தில் பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பஞ்சு சேதமாகியிருக்கிறது. அந்தத் தீயை அணைப்பதற்கு ஏ.ஐ.டி.யு.ஸி. தொழிலாளர்களும் மற்றத் தொழிலாளர்களும் முன் நின்று செயல்பட்டிருக்கிறார்கள். இப்படி வைக்கப்பட்டிருந்த பஞ்சு தீ பிடிக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள், முன் எச்சரிக்கையான தடுப்பு நடவடிக்கைகள் அந்தப் பஞ்சாலையில் இல்லையா? இரண்டாவதாக, அந்தப் பஞ்சாலை சேதமடைந்ததா, அங்குள்ள தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய வாய்ப்பு ஏதாவது உள்ளதா ? அப்படியிருக்குமானால் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இழந்திருக்கக் கூடிய காலத்தில் ஊதியம் அளிக்க அரசு முன் நடவடிக்கை எடுப்பதற்கான திட்டங்களை ஏதாவது வைத்துள்ளதா என்பதைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதிப்பதற்காக, சாரம் கூட்டுறவு நூற்பாலையில் ஏற்பட்ட தீ விபத்து பற்றி விரிவாக விவாதிப்பதற்காகப், பேரவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கச் சொத்து, அரசாங்கப் பணம் எந்தளவிற்கு கேர்லஸ்ஸாக அதிகாரிகளால் கையாளப்படுகிறது என்பதற்கான ஒரு தெளிவான எடுத்துக்காட்டு 8–3–1982 அன்று தென் ஆற்காடு மாவட்ட சாரம் கூட்டுறவு நூற்பாலையில்ஏற்பட்டிருக்கக் கூடிய தீ விபத்து என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இங்கே மட்டுமல்ல, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் இப்படிப் பட்ட தீ விபத்துக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சென்ற ஆண்டு வட ஆற்காடு கூட்டுறவு நூற்பாலையில் இப்படிப் பட்ட ஒரு தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஒரு சில மாதங்களுக்கு முன்னால் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் இப்படிப்பட்ட ஒரு தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய வன இலாகா பொறுப்பில் இருக்கக் கூடிய அரசு ரப்பர் தோட்டங்களில் பலயிடங்களில் பல இலட்சங்கள் ரூபாய் சேதம் ஏற்படக்கூடிய அளவில் தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. 8–3–1982 அன்று சாரம் கூட்டுறவு நூற்பாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் அந்தத் தீயை அணைக்க நான்கு மணிநேரம் கடுமையாக போராடியிருக்கிறார்கள் என்றால் எந்தளவிற்கு அங்குள்ள அதிகாரிகள் கேர்லஸ்-ஆக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு நட்டம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் கிடைத்திருக்கக்கூடிய தகவல் என்னவென்றால், முப்பது இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பஞ்சு அங்கே வராந்தாவில் வைக்கப்



பட்டிருந்தது. இப்படி இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பஞ்சை, இந்த நாட்டுமக்கள் பணத்திலிருந்து வாங்கக் கூடிய பஞ்சை எந்தளவிற்கு கேர்லஸ்-ஆக வைத்திருக்கிறார்கள் ? இந்தப் பஞ்சை வைப்பதற்கு ஒரு ஷெட் நல்லமுறையில் அங்கே ஏற்படுத்தப்படவில்லையா ? அப்படி ஷெட் இருந்தும் வராந்தாவில் வைத்திருக்கிறார்கள் என்றால் அந்த அதிகாரிகள் மனப்பூர்வமாக அதை அங்கே வைத்திருந்தார்களா ? நான்கு மணி நேரம் போராடி தீயை அணைத்ததற்குப் பிறகு ஐந்து இலட்சம் ரூபாய் நஷ்டத்தோடு மட்டும் நின்றுவிட்டது. இன்னும் கொஞ்சம் தவறியிருந்தால், 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பஞ்சும் எரியக்கூடிய நிலை இருந்தது. ஆகவே அரசு அதிகாரிகள் அரசாங்கச் சொத்தை, அரசுப் பணத்தை கையாளக் கூடிய நிலையில் எந்தளவிற்குக் கவனம் செலுத்தவேண்டுமோ அந்தளவிற்குக் கவனம் செலுத்தவில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

(முற்பகல் 10–20)

ஆகவே, இது ஒரு மிக முக்கியமான பிரச்னை. இந்தக் கூட்டுறவு நூற்பாலை மட்டும் பிரச்னையல்ல. சென்ற ஆண்டிலே ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே கூட்டுறவு நூற்பாலையிலே தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. மற்றும் இதுபோல் பல கூட்டுறவு நூற்பாலைகளிலே தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. மக்களிடையே அங்கே இருக்கக் கூடிய ஊழலை மறைப்பதற்காக, முறைகேடுகளை மறைப்பதற்காக இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அதிகாரிகளே தூண்டிவிடுகிறார்களோ என்றுகூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இங்கே இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சேதம் எந்த அளவுக்கு ஏற்பட்டாலும், அதைப் பாதுகாக்க வேண்டுமென்பது ஒரு முக்கியமான பிரச்னை. ஆகவே, அதைப்பற்றி விரிவாக விவாதிக்க இந்தச்சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலைக்காக மகாராஷ்டிரா கூட்டுறவு விற்பனை இணையத்திலிருந்து 50 பேல்கள் பஞ்சு லாரி மூலம் 8–3–1982 அன்று காலை 11 மணிக்கு வந்து இறங்கியது. 10 பேல்கள் நல்ல நிலையில் லாரியிலிருந்து பஞ்சு குடவுனில் வெராண்டாவில் கீழே இறக்கி வைக்கப்பட்டன. 11-வது பேலை இறக்கும்போது பேலின் மீது சுத்தப்பட்டு இருந்த பேல் தகடும், கீழே இறக்கி வைக்கப்பட்ட பேல்களின் மீது இருந்த பேல் தகடுகள் உராய்ந்ததன் காரண

மாக ஏற்பட்ட நெருப்புப் பொறி பஞ்சு பேல்களில் தீ விபத்து ஏற்பட்டது. உடனே தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் அனுப்பப் பட்டு தீயணைப்புப்படையின் உதவியுடன் தீயணைக்கப்பட்டது.

இந்த எதிர்பாராத தீ விபத்தின் காரணமாக, குடவுன் வெராண்டாவில் ஏற்கனவே அடுக்கி வைக்கப்பட்டிருந்த 40 பஞ்சு பேல்களும் 70 கழிவு பஞ்சு மூட்டைகளும் (வேஸ்ட் காட்டன்), மகாராஷ்டிர கூட்டுறவு இணையத்திலிருந்து வந்து இறங்கிய 11 பேல்களும் ஆக 51 பேல்கள், 70 பஞ்சு மூட்டைகளும் விபத்தில் சேதமடைந்தன. மேற்படி சேதமடைந்த பஞ்சின் விலை பற்றிய விவரங்கள் அனைத்தும் மொத்தமாக சுமார் $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் மதிப்பிருக்கும். இந்தக் கூட்டுறவு மில்லின் நிர்வாக இயக்குநர் இந்த விபத்து பற்றி உடனேயே புதுவையில் உள்ள யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி அலுவலகத்திற்குத் தெரிவித்து சேதத்தின் மதிப்பை ஈடுசெய்ய விண்ணப்பித்துள்ளார். இன்சூரன்ஸ் அலுவலகத்தில் இருந்து பார்வையாளர்கள் வந்து சேதம்பற்றிய ஆய்வு செய்துள்ளார்கள். சேதத்தின் மதிப்புத் தொகை முழுவதுமாக இன்சூரன்ஸ் கம்பெனியில் இருந்து ஈடாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இங்கே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பேல்கள் தீவிபத்தில் சேதமடையவில்லை ; சுமார் $2\frac{1}{2}$ இலட்சம் மதிப்புள்ள 51 பேல்களும், 70 பஞ்சு மூட்டைகளும் மட்டுமே சேதமடைந்துள்ளன. அவ்வாறு சேதமடைந்து உபயோகிக்க முடியாத பஞ்சு மதிப்பு அளவுக்கு இன்சூரன்சு கம்பெனி மூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்தினால் மேற்படி கூட்டுறவு நூற்பாலை இயங்குவதில் எவ்வித தடங்கலும் ஏற்படவில்லை. ஆலை வழக்கம்போல் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதுபோல, ஆலை நிர்வாகத்தின் அஜாக்கிரதையினால் அல்லது நிர்வாகத் திறமையின்மையினால் ஏற்பட்டதல்ல. பேல தகடுகள் உரசப்பட்டு, அதனால் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. இதனால சுமார் $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதுவும் இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து திரும்பப் பெறப்பட்டு, நஷ்டத்தை ஈடுசெய்கின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆலை நிர்வாகமோ அல்லது ஆலை வேலைகளோ இப்போது எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே, இந்த அவையை ஒத்திவைத்து மேலும் விவாதிக்க வேண்டிய தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



## (4) அறிக்கை அளித்தல்.

### துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 15–2–1982 ஆம் தேதியன்று 201 ஆம் எண் வினாவிற்குக் கீழ் எழுப்பப் பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடைக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவை விதி 107-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 15-2-1982 ஆம் தேதியன்று சட்டமன்றப்பேரவை வினா எண் 10844 (புதிய வினா எண் 201) விடை அளிக்கப்பட்டபோது, சட்டமன்ற உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன் கீழ்க்கண்ட துணை வினா ஒன்று எழுப்பினார். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்று அமைப்பதற்கான ஒரு செயற்குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதின் பேரில் 4–2–1982 ஆம் தேதி செய்தித்தாளில் இந்தத் திட்டத்திற்கு ரூ.2.34 கோடி மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகவும், இந்தச் செலவில் மத்திய அரசு 50 சதவிகிதமும், மாநில அரசு 50 சதவிகிதமும் ஏற்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்ததென்றும் உறுப்பினர் குறிப்பிட்டு அப்படி மாநில அரசும் மத்திய அரசும் செய்கின்ற நேரத்தில் ஆளுக்குப் பாதி என்கின்ற இந்தத் திட்டம் அமைய வேண்டுமென்பது உண்மையா என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் அளிக்கையில் '' இந்தச் செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற விண்ணப்பத்தை நாம் போட்டிருக்கிறோம். அவர்கள் என்ன நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை அந்தக் கடிதம் முழுவதையும் பார்த்த பிறகு அதற்கேற்றபடி நாம் நடவடிக்கை எடுக்க இயலும் என்று கூறினேன்.

ஆனால் இந்தச் செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று முதலில் கருதி விண்ணப்பத்தை நாம் போட்டிருக்கிறோம். ஆனால் இத்திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட முறை பிரகாரம் இச்செலவினை மத்திய அரசும் மாநில அரசும் பகிர்ந்து ஏற்கும். அவர்கள் என்ன நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை அந்தக் கடிதம் முழுவதும் பார்த்த பிறகுதான் அதற்கேற்றபடி நாம் நடவடிக்கை எடுக்க இயலும்.

இத்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

## (5) கவன ஈர்ப்புகள்.

### (அ) நந்தனம் காலனியில் ஓர் இளைஞர் கொலை செய்யப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், ரா. உமாநாத், ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ''சென்னை நந்தனம் காலனியில் வசித்து வந்த சந்திரமோகன் என்ற இளைஞர் 2—12—1981 அன்று கொலை செய்யப்பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கடந்த 2—12—1981-ந் தேதி இரவு 00.45 மணிக்கு ஜே. 1 சைதாப்பேட்டை காவல் நிலையத்தைச் சேர்ந்த சிறப்புக் காவலர்கள் (Special Police Offices) இரவு ரோந்தின்போது நந்தனம் வீட்டு வசதி வாரிய அலுவலக கட்டிடத்தின் அருகில், கலைக் கல்லூரி காம்பவுண்டு சுவற்றுக்கு எதிரில், அண்ணா சாலையில், ஒரு ஆண் நபர் இறந்து கிடந்ததைப் பார்த்து, அருகிலுள்ள தீயணைப்பு நிலையத்திலிருந்து போலீஸ் கட்டுப்பாட்டறைக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். உடனே சைதாப்பேட்டை காவல் நிலையத்திலிருந்து தலைமைக் காவலர் 1933, பாலசுப்ரமணியம், காவலர் 1641 இவர்கள் அந்த இடத்திற்கு விரைந்து சென்று, இறந்து கிடந்த ஆண் நபரை பார்வையிட்டு சோதனை செய்தனர். இறந்து போனவர் உடலில் எவ்வித வெளிப்படையான காயமும் இல்லை. இறந்தவரின் சடலத்தை அடையாளம் கண்டுபிடிப்பதற்காக, காவலர் 1641 மூலம் சென்னை அரசாங்க பொது மருத்துவ மனை சவக்கிடங்கிற்கு அனுப்பி பாதுகாப்பில் வைக்கப்பட்டது. சிறப்புக் காவல் அலுவலர்கள் 40, 44 ஆகியவர்கள் கொடுத்த புகாரை சைதாப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 1286/81-ல், பிரிவு 174 இ.பி. கோ -வின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு இது சம்பந்தமாக எல்லா காவல் நிலையங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் தகவல் கொடுக்கும்படி கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. 3—12—1981-ந் தேதி இந்த வழக்கில் இளநிலை உதவி ஆய்வாளர் மேல் விசாரணை நடத்தினார். விசாரணையில் துப்பு ஏதும் கிடைக்கவில்லை. 6—12—1981-ந் தேதி இரவு 7½ மணிக்கு, நந்தனம் காலனி 2-வது தெரு, ஏழாவது வீட்டில் உள்ள திரு. ஆர். ராஜசேகரன் என்பவர் தன் தந்தை எஸ். ரத்தினம் மற்றும் அண்ணன் ஆர். மகேந்திரவர்மன், ஆகியவர்களுடன் சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் ஆஜராகி இந்த வழக்கில் இறந்து போனவர் தன்னுடைய அண்ணன் ஆர். சந்திர மோகன் என்றும் தான் சவக் கிடங்கிற்கு போய் அடையாளம் கண்டுபிடித்து வந்ததாகவும் புகார் ஒன்று எழுதிக் கொடுத்தார். 7—12—1981-ந் தேதி காலை 8 மணியிலிருந்து 10 மணி வரை அரசு பொது மருத்துவ மனை சவக்கிடங்கில், இறந்துபோன ஆர். சந்திரமோகனின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சாட்சிகளும் இறந்து போனவரின் தந்தை எஸ். ரத்தினம் மற்றும் சகோதரர்கள் ஆர். ராஜசேகரன், ஆர். மகேந்திரவர்மன் ஆகியவர்கள் விசாரணை செய்யப்பட்டனர். பிரேத பரிசோதனையில், வலது கையில் இரண்டு சிறிய சிராய்ப்புகளும், வலது காலில் ஒரு சிறிய சிராய்ப்பும், இடது வயிற்றில் ஒரு சிராய்ப்பும், இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் மண்டையின் பின்புறம் லேசாக அடிபட்டு அதனால் மூளையிலிருந்து இரத்த நாளங்கள் பாதிக்கப் பட்டு இரத்தப்பெருக்கு ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்று கருதப் பட்டது. ''விசைரா'' (Viscer ) இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அந்தப் பரிசோதனையிலிருந்து ''விசைராவில்'' எதைல் ஆல்கஹாலோ அல்லது நச்சுப் பொருட்களோ இல்லையென குற்றஞ்சார்ந்த அறிவியல் பேராசிரியரின் அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.



2. விசாரணையின்போது, இறந்துபோன ஆர். சந்திரமோகன் (27) என்பவர் கடந்த பத்து வருடங்களாக மன நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாகவும் அவருக்கு குடிப்பழக்கமும், புகைபிடிக்கும் பழக்கமும் இருந்ததாகவும் தெரியவந்தது. மேலும், இவர் கடந்த சில வருடங்களாக காஞ்சிபுரம் அரசினர் மோட்டார் வாகன பராமரிப்புத் துறை பணிமனையில் உதவியாளராக (Helpe ) பணியாற்றியதாகவும், அடிக்கடி வேலைக்கு வராமல் விடுப்பில் சென்று விடுவார் என்றும், 2—12—1981 ஆம் தேதி மாலை இறந்துபோன ஆர். சந்திரமோகன் சம்பளப் பணம் ரூபாய் 82·40-ஐ வாங்கிக் கொண்டு டீக்கடை மற்றும் பெட்டிக் கடை கடன்கள் ஆகியவைகளை (ரூபாய் 35) கொடுத்துவிட்டு துப்புரவாளர் பொன்னுசாமியுடன் காஞ்சிபுரத்தில் சாராயம் குடித்துவிட்டு மாலை 6 மணியளவில் சென்னைக்கு புறப்பட்டு வந்திருக்கிறார் என்று தெரிய வருகிறது.

3. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் இறுதியாக இறந்து போனவர் அண்ணா சாலையில் தற்செயலாக விழுந்து

பிளாட்பாரத்தில் தலை அடிபட்டு இறந்திருக்கலாம் என்றும் அல்லது வேகமாக வந்த சைக்கிளோ, மோட்டார் சைக்கிளோ ஸ்கூட்டரோ அல்லது ஆட்டோவோ இடித்து தள்ளி மேற்படி காயம் மண்டையில் ஏற்பட்டு அதனால் மூளையில் இரத்த நாளங்கள் உடைபட்டு இரத்தப்பெருக்கு ஏற்பட்டு இறந்திருக்கலாமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். மேலும் இறந்து போனவரின் உடம்பில் எற்பட்ட காயங்கள் சாலை விபத்தால் எற்பட்டிருக்கலாம் என்று திடமாக சொல்கிறார். மேற்கொண்டு விசாரணை தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, இந்த கொலை செய்யப்பட்ட சந்திரமோகனுக்கும் எஸ்.பி.ஓ. பி.சி. 44 ஆர். கணேசன் என்பவருக்கும்—அந்தக்கொலைக்கு முன்னால்—வாய்த் தகராறு ஏற்பட்டு அந்தத் தகராறின் காரணத்தினாலே அவரை கணேசன் என்பவர் வீட்டுவரை துரத்தி வந்ததாகவும் இவர் வீட்டுக்குள்ளே போனவுடன் அவர் வெளியே வாடா கவனித்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போனதாகவும் பிறகு இரண்டாம் தேதி சந்திரமோகன் சம்பளத்தை வாங்கிக்கொண்டு பஸ்ஸிலே வந்து பஸ்ஸைவிட்டு இறங்கியபோது சில பேர்கள் அவரைக் காரிலே கடத்திக் கொண்டுபோய் கொலை செய்திருக்கிறார்கள். அவருடைய பிணத்தை பிளாட்பாரத்திலே பார்த்த அதே பி.சி. 44 கணேசன் என்பவர்தான் சைதாப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவலும் கொடுத்திருக்கிறார், என்று தெரிகிறது. அரசு ஏற்கெனவே புலனாய்வு செய்திருக்கிறது. அந்தப் புலனாய்வின்போது வாய்த் தகராறுக்கும் கொலைக்கும் சம்பந்தம் உள்ளது என்று தெரிந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்—தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை என்று இந்த குறிப்பு அறிக்கை தெரிவிக்கிறது. 7—12—1981ஆம் தேதி காலை 8 மணியிலிருந்து 10 மணி வரை அரசு பொது மருத்துவமனை சவக் கிடங்குகளில் இறந்துபோன ஆர். சந்திரமோகனின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சாட்சிகளும் இறந்துபோனவரின் தந்தை எஸ். ரத்தினம் மற்றும் சகோதரர்கள் ஆர். ராஜசேகரன், ஆர். மகேந்திரவர்மன்ஆகியவர்கள் விசாரணை செய்யப்பட்டனர். பிரேத பரிசோதனையில் வலது கையில் இரண்டு சிறிய சிராய்ப்புகளும், வலது காலில் ஒரு சிறிய சிராய்ப்பும், இடது வயிற்றில் ஒரு சிராய்ப்பும், இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் மண்டையின் பின்புறம் லேசாக அடிபட்டு ஆதனால் மூளையிலிருந்து இரத்த நாளங்கள் பாதிக்கப்பட்டு இரத்தப் பெருக்கு ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்று கருதப்பட்டது.



'விசைரா' இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அந்தப் பரிசோதனையிலிருந்து 'விசைராவில்' எதைல் ஆல்கஹாலோ அல்லது நச்சுப் பொருட்களோ இல்லையென குற்றஞ்சார்ந்த அறிவியல் பேராசிரியரின் அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது. விசாரணையின் போது, இறந்துபோன ஆர். சந்திரமோகன் என்பவர் வயது, 27, கடந்த பத்து வருடங்களாக மன நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாகவும் அவருக்குக் குடி பழக்கமும் புகைபிடிக்கும் பழக்கமும் இருந்ததாகவும் தெரிய வந்தது. மேலும் இவர் கடந்த சில வருடங்களாக காஞ்சிபுரம் அரசினர் மோட்டார் வாகன பராமரிப்புத் துறை பணிமனையில் உதவியாளராக பணியாற்றியதாகவும் அடிக்கடி வேலைக்கு வராமல் விடுப்பில் சென்றுவிடுவார் என்றும் 2—12—81ஆம் தேதிமாலை இறந்துபோன ஆர். சந்திரமோகன் சம்பளப் பணம் ரூபாய் 82-40-ஐ வாங்கிக் கொண்டு டீக்கடை மற்றும் பெட்டிக் கடைக் கடன்கள் ஆகியவைகளை ரூபாய் 35 கொடுத்துவிட்டு துப்புரவாளர் பொன்னுசாமியுடன் காஞ்சிபுரத்தில் சாராயம் குடித்துவிட்டு மாலை 3 மணியளவில் சென்னைக்கு புறப்பட்டு வந்திருக்கிறார் என்று தெரிய வருகிறது. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் இறுதியாக, இறந்துபோனவர் அண்ணா சாலையில் தற்செயலாக விழுந்து, பிளாட்பாரத்தில் தலை அடிபட்டு இறந்திருக்கலாம் என்றும் அல்லது வேகமாக வந்த சைக்கிளோ மோட்டார் சைக்கிளோ, ஸ்கூட்டரோ அல்லது ஆட்டோவோ இடித்து தள்ளப்பட்டு மேற்படி காயம் மண்டையில் ஏற்பட்டு அதனால் மூளையில் இரத்த நாளங்கள் உடைபட்டு இரத்தப் பெருக்கு ஏற்பட்டு இறந்திருக்கலாமென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள். மேலும் இறந்துபோனவரின் உடம்பில் ஏற்பட்ட காயங்கள் சாலை விபத்தினால் ஏற்பட்டிருக்கலாம் என்றும் திடமாகச் சொல்கிறார். மேற்கொண்டு விசாரணை தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. அவர் தந்தையோ அல்லது சகோதரரோ வேறு கருத்துக்களைச் சொல்லி புகார்கள் கொடுத்ததாகத் தெரியவில்லை. அப்படி விசாரணை செய்து இந்த அரசு உண்மையை கண்டுபிடிக்க தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–30)

**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை பொறுத்தவரையில் இங்கே குறிப்பிட்டிருப்பது துப்புரவாளர் பொன்னுசாமியுடன் அன்று மாலை 6 மணிக்கு சாராயம் குடித்ததாகச் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் விசைராவில் எதில் ஆல்கஹாலோ அல்லது நச்சுப் பொருளோ இல்லையென்று போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில்

சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் சாராயம் குடித்ததால் பிளாட்பாரத்தில் விழுந்து விட்டார், அல்லது சாராயம் குடித்ததால் ஏதோ லைட் வெகிக்கிள் அடித்துவிட்டது என்று எஸ்டாபிளிஷ் பண்ணுவதற்கு சாராயம் குடித்தார் என்ற கதையை ஜோடித்திருக்கிறார்கள். சாராயம் குடித்திருந்தால் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் அது தெரிந்திருக்கும். தாங்கள் செய்யக்கூடிய குற்றங்களை மறைப்பதற்காக இப்படிப்பட்ட கதையைக் கட்டுவது போலீஸ்காரர்களுக்கு கைவந்த கலை. குறிப்பாக திருச்சி மத்திய சிறையில் அடித்து கொல்லப்பட்ட நபர் அவர் தூக்கு போட்டு செத்தார் என்று போலீஸ் ரிப்போர்ட், ஆனால் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு இருந்தபோது அவர் கொலை செய்யப்பட்டார் என்பது தான் முருகேசன் கமிஷன் அறிக்கையின் ரிப்போர்ட். ஆகவே உண்மையை வெளிக் கொண்டு வருவதற்கு, குறுக்கு விசாரணை செய்யக்கூடிய அளவிற்கு வாய்ப்பினை பெறுவதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுத்திருக்கிற குறிப்புகளைப் பற்றித் தான் நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற வேறு பல குறிப்புகள் புகார்கள் அடிப்படையிலே இருக்குமானால் மேலும் விசாரணை நடைபெறுவதன் காரணமாக, அதைத் தருவார்களானால் அல்லது தொடர்புடையவர்கள் தருவார்களானால் அதை வாங்கி விசாரணை செய்ய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக போலீஸ் ரிக்கார்ட்ஸ் எல்லாம் பார்த்ததிலே சில முக்கியமான உண்மைகளை போலீஸ் உணர்வு பூர்வமாக மறைப்பதற்கு முயற்சி பிரைமாபேசி தெரிகிறது. போலீஸ் எப்.ஐ.ஆர். இந்த பிணத்தைக் கண்டு பிடித்ததாக கூறும் போலீஸ்காரர்கள் பிணத்தை சட்டையை கழற்றி பார்த்தபோது எந்தக் காயமும் இல்லை. என்று 'ரிபீட்டடாக' எவிடன்ஸ் ஸ்டேட்மென்டிலும், எப்.ஐ.ஆர்.—ல் கடைசியாக சொல்லியிருக்கிறார்கள். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் பல காயங்கள் இருந்ததாக சொல்லப்படுகிறது. மண்டை காயம் நாடியை வெடிக்க வைத்து அதுதான் சாவிலே கொண்டு விட்டதாகவும் இருக்கிறது. அப்படியிருக்கிறபோது எந்தக் காயமும் இல்லையென்று போலீஸ் ரிக்கார்ட் பண்ணுகிறார்கள் என்றால், 'தே ஆர் ட்ரையிங் டு சப்ரஸ் தி ட்ரூத்'; அதிலே வேறுவுமில்லை என்றால் ஏன் இந்த முயற்சியை எடுக்கவேண்டும்.



அதுமாதிரி பி.சி. 44 கணேசன், சாராய நாற்றம் பிணத்தின் வாயிலே அடித்தது என்று கூறியிருக்கிறார். ஆனால் விசைராவில் சுத்தமாக சாராயம் இல்லை என்று இருக்கிறது. சாராயம் குடித்து மோட்டாரிலே அடிபட்டார் என்பதற்கான ஒரு ஜோடனையை ஏற்படுத்துவதற்கு 'ஹீ இஸ் இண்டரஸ்டட்' என்று தெரிகிறது. அடையாளம் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் பத்து நாட்கள் முன்பு விரட்டி வந்தார் என்று தெரிகிறது. ஆகவே என்னுடைய கேள்வி என்னவென்றால் இப்படி 'சப்ரஸ்' பண்ணுவதற்கு முயற்சி என்கிறபோது, அவர்கள் இதிலே ஈடுபட்டதாலே தப்பிப்பதற்கான 'சப்ரஷன்' என்கிற சந்தேகம் அந்த ஜனங்களுக்கும், பெற்றோர்களுக்கும் பலமாக வருவதால் அரசாங்கம் அந்த அதிகாரிகளை உடனே சஸ்பென்ட் செய்து, 302 கேஸ் ரிஜிஸ்ட்டர் செய்து, லோகல் இன்வெஸ்ட்டிகேஷனில் விடாமல், 'ஸ்டேட் கிரைம் பிராஞ்ச் டீமை' ஸ்பெஷலாக ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துறை தலைவர் அவர்களே, நான் முதலே குறிப்பிட்டபடி, உடலில் எவ்வித வெளிப்படையான காயமும் இல்லையென்று முதலிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிறகு சிராய்ப்பு இருப்பதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அத்தகைய புகார்களுக்கு இடம் இருக்குமேயானால் நான் முதலில் கூறியபடி அந்தப் புகார்களுடைய அடிப்படையில் விசாரணை செய்து, இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலும் அதைப்பற்றி ஆராயும்படி சொல்லலாம். தனியாக தொடர்புடையவர்கள் புகார்கள் தருவார்களானால் பிறகு அவர்களெல்லாம் சாட்சி சொல்ல மற்றவைகளுக்குப் பயன்படும் என்ற வகையில் அதையும் அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) கோவை மாவட்டத்தில் பல தொழில் நிறுவனங்கள் இயங்காதது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ஏ.டி. குலசேகர், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி.கா. நல்லப்பன், கு. ரமணி, மா. சின்னராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஏ.டி. குலசேகர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ''கோவை மாவட்டத்தில் ஜோதி மில்ஸ், ஜெய

லட்சுமி மில்ஸ், இராமகிருஷ்ணா இண்டஸ்டிரிஸ், நவ இந்தியா, ஆகிய நிறுவனங்கள் இயங்காததனால் தொழிலாளர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோவை மாவட்டத்தில் உள்ள ஜோதி மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ், இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ், ''நவ இந்தியா'' ஆகிய நிறுவனங்கள் செயல்படாதது பற்றிய விவரங்கள் பின் வருமாறு :—

ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர்.

ஜோதி மில்ஸ் என்ற ஆலை, இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தைச் சார்ந்தது. இங்கு மொத்தம் 707 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். பங்கு தாரர்களுக்குள் ஏற்பட்ட தகராறு காரணமாக 16—12—1981 முதல் இந்த ஆலை இயங்குவது நின்றது. பங்குதாரர்களில் ஒருவரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் கலைப்புக்கு (Liquidation) மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக உயர்நீதிமன்றத்தில் கம்பெனி கலைத்தலுக்கு உத்தரவு விடப்பட்டு 24—12—1981 முதல் அதிகார பூர்வமான கலைப்பு அதிகாரி (Official Liquadator) நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட கலைப்பு அதிகாரியால் ஆலையை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலையைச் சார்ந்த தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 20,000 வழங்கப்பட்டு தொழிலாளர்கள் அத்தியாவசியப் பொருட்கள் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆலைத் தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200 முன் பணமாக 5—3—1982 அன்று அளிக்கப்பட்டுள்ளது.

ஜெயலட்சுமி மில்ஸ், கோயம்புத்தூர்.

இந்த ஆலையில் 675 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஆலையை இயக்க போதுமான நிதி வசதியின்மையால் ஆலை இயங்குவது 16—10—1981 முதல் முழுவதுமாக நிறுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினை குறித்தும், கோயம்புத்தூர், தொழிலாளர் துறை துணை ஆணையர் மற்றும் கோயம்புத்தூர்



மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் முன்பு 15—12—1981, 8—1—1982 மற்றும் 2—3—1982 ஆகிய தினங்களில் ஆலையை இயக்குவது குறித்தும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. வேலை இல்லாமல் இருக்கும் தொழிலாளிகளின் தற்பொழுதைய நிலையை கருத்தில் கொண்டு நிர்வாகத்தால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ. 100 13—1—1982-ல் வழங்கப்பட்டது. மேலும் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிர்வாகத்தால் ரூ. 15,000 நிதி செலுத்தப்பட்டு தொழிலாளர்கட்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அத்தியாவசியமான பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆலையை மீண்டும் இயக்க ஷெட்யூல்டு வங்கியிடமிருந்து நிதி உதவி பெற தக்க ஏற்பாடுகள் ஆலையின் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 20—3—1982-க்கு முன் நிதி உதவி செய்ய வங்கி நிர்வாகத்திற்கு உறுதி அளித்துள்ளதாகத் தெரிகின்றது. இதைத் தொடர்ந்து மேல் நடவடிக்கையினை எடுக்க நிர்வாகம் இரண்டு வார காலம் அவகாசம் கோரியுள்ளது.

இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர்.

இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் என்ற பணிமனையில் மொத்தம் 262 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பங்குதாரர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக 31—12—1981 முதல் நிறுவனம் இயங்குவது நின்றது. சென்னை உயர்நீதிமன்றத்தின் கலைப்பு உத்தரவைத் தொடர்ந்து (Official lipuiaator) அதிகார பூர்வமான கலைப்பு அதிகாரி நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார். இதைத்தொடர்ந்து 7—3—1982 முதல் இந்த நிறுவனம் இயங்கி வருகின்றது. இந்நிறுவனத் தொழிலாளர்களுக்கு முன் பணமாக தலா ரூ. 100, 4—3—1982 அன்று வழங்கப்பட்டது.

நவ இந்தியா, கோயம்புத்தூர்.

நவ இந்தியா என்ற நாளிதழ் வெளியிடும் நிறுவனம் இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தைச் சார்ந்தது. இதில் மொத்தம் 35 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சென்னை உயர்நீதிமன்றத்தின் கலைப்பு உத்திரவினைத் தொடர்ந்து அதிகாரபூர்வமான கலைப்பு அதிகாரி நிர்வாகப் பொறுப்பை ஏற்று 22—1—1982 முதல் இந்த நாளிதழ் நிறுவனம் இயங்கி வருகின்றது.

திரு. ஏ.டி. குலசேகர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில், ஜோதி மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ், இராமகிருஷ்ணா இண்டஸ்டிரிஸ், நவ இந்தியா ஆகியவை

இராமகிருஷ்ணாவைச் சேர்ந்தவை. அந்த நிறுவனம் கம்பெனிகள் சட்டப்படி லிமிடெட் கம்பெனியாக, நல்ல இலாபகரமாக நடைபெற்று வருகிறது. கம்பெனிகள், சட்ட விதிகளில் தொடர்ந்து நஷ்டம் அடைந்து கடன் தொகையைத் திருப்பித் தராத நிலை ஏற்பட்டாலொழிய, கலைப்பு அதிகாரியை அந்தக் கம்பெனிக்கு நியமிக்க முடியாது என்ற விதி உள்ளது. ஆனால், பங்குதாரர் தம் சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி, உயர் நீதிமன்றத்திலே கேஸ் போட்டு, கலைப்பு அதிகாரியை நியமிக்க உத்தரவு பெற்றுள்ளார்கள். அதை எதிர்த்துத் தொழிலாளர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெற்றுள்ளார்கள். அது அரசுக்குத் தெரியுமா? ரூ. 9 கோடிக்கு ஆர்டர்கள் பென்டிங்காக உள்ள நிறுவனம், நல்ல இலாபகரமாக நடைபெற்றுவருகிற அந்நிறுவனத்தைக் கலைக்க இப்பொழுது என்ன அவசியம் ஏற்பட்டுள்ளது? தொழிலாளர்களுக்கு 4 மாத காலமாகச் சம்பளம் கொடுக்கப்படாமல் இன்றைய தினம் ரூ. 200 கொடுத்திருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அந்த ரூ. 200-ஐ வைத்துக் கொண்டு தொழிலாளர்கள் தங்களுடைய அன்றாட வாழ்வை நடத்த முடியுமா என்று தெரியவில்லை. * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கடைசியாக சொன்ன வாக்கியத்தை குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜோதி மில்ஸ் தற்போது மூடப்பட்டுள்ளது. அதைத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஜெயலட்சுமி மில்ஸ் மூடப்பட்டுள்ளது. அதையும் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இராமகிருஷ்ணா இண்டஸ்டிரிஸ், கோயம்புத்தூர் இயங்கி வருகிறது. நவ இந்தியாவும் இயங்கி வருகிறது.

**திரு. தி. கா. நல்லப்பன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் உள்ள இராமகிருஷ்ணா, நவ இந்தியா ஆகிய நிறுவனங்கள் இயங்கி வருவதாகவும், ஜோதி மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ் ஆகியவை இயங்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 3 மாதங்கள் ஆகியும் அந்த இரு மில்கள் முறையாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கு என்ன காரணம்?

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மேலும், கொடுக்கப்பட்டிருக்கிற ஊதியம் தொழிலாளர்களுக்கு மிகவும் குறைவாக உள்ளது. ஆகவே, முதல்வர் நிதியிலிருந்து அந்தத் தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 1,000 கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை மூடப்பட்டு தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற சூழ்நிலை ஏற்படும்போது அரசு பரிசீலனை செய்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 200 என்று கொடுக்கப்பட்டு வருகிறது. எவ்வளவு தொகை கொடுப்பது என்பதைப் பின்னால் யோசனை செய்து கொள்ளலாம். ஆனால், இப்பொழுது இருக்கிற நிலையில் மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலையைத் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. அது வெற்றிபெற வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்பற்றி பின்னால் ஆலோசனை செய்யலாம்.

(முற்பகல் 10-40)

**திரு. மா. சின்னராசு** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜோதி மில்லைப் பொறுத்த வரையில் மூடப்பட்டிருப்பதற்குக் காரணம், வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது என்பதுதான். அரசு, அபிஷியல் லிக்குவிடேட்டர் நியமித்து, அந்த அபிஷியல் லிக்குவிடேட்டர் பணம் தரும் அதிகாரத்தைத் தடை செய்து வழக்குமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள பிரச்னையைத் தீர்ப்பதற்கு நிதி வாய்ப்பைப் பெறும் நிறுவனம், அபிஷியல் லிக்குவிடேட்டர் ஆகட்டும் அல்லது அரசாகட்டும், ஆலையை எடுத்து நடத்துவதற்கு முயற்சி மேற்கொண்டால் அந்த நூற்பாலையை ஓட்ட முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, வழக்கு மன்றத்திலே அரசே மனுச் செய்து, அபிஷியல் லிக்குவிடேட்டருக்குப் பதிலாக மற்ற நலிந்து போன நூல் ஆலைகளை நடத்துவதைப் போல அரசே எடுத்து நடத்த நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24—12—1981 முதல் அதிகார பூர்வமான கலைப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். ஆலையை நடத்துவதற்கான நடவடிக்கைகள் அவரால் எடுக்கப்பட்டு வருகின்றன. அதைத்தான் சொன்னேன். எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டுமென்று விரும்புகிறோம், என்ன ஆகிறது என்று பொறுத்து

இருந்து பார்ப்போம். வெற்றி பெறாமல் ஒரேயடியாக மூட வேண்டிய நிலை ஏற்பட்டால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனையை அப்பொழுது பரிசீலனை செய்யலாம்.

(6) வரவு–செலவுத் திட்டம், 1982–83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,35,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : துணைத் தலைவரவர்களே, வியாசர் பாடி பகுதியில் கூட்டுறவு மூலம் தொழில்கள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,35,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. எம். தங்கமணி : துணைத் தலைவரவர்களே, திண்டிவனம், செஞ்சி வட்டங்களில் வைக்கோல் அதிகமிருப்பதால் திண்டிவனத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,35,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் அவினாசியில் உள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில் ஓராண்டு காலமாக மூடிக்கிடக்கிறதை அரசு மேற்கொள்ள வேண்டும் என விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,35,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



(ஆ) கோரிக்கை எண். 49. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,46,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : துணைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,46,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. இல. பலராமன் : துணைத் தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதால் இங்கு தொழில் வளர எல்லா வட்டங்களையும் பின்தங்கிய பகுதியாக் அறிவிப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,46,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எம். செல்லமுத்து : துணைத் தலைவரவர்களே, திருவாரூரில் ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தக்கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,46,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. தி. கா. நல்லப்பன் : துணைத் தலைவரவர்களே, பெருந்துறை வட்டத்தை பின்தங்கிய பகுதியாக தொழில்

வளர்ச்சியில் அறிவித்து, அரசு புதிய தொழில்கள் தொடங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,46,67,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில் கொள்கையும் திட்டங்களும் பெரும் தொழில்கள், சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் பற்றிய கொள்கைக் குறிப்புகள் * அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நாங்கள் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றியதற்குப் பிறகு சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் பற்றி மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அண்ணன் திரு. கே. ஏ. கே. அவர்களும், பெரும் தொழில்கள் நடுத்தரத் தொழில்கள் பற்றி நானும் பதில் சொல்லவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. து. புருஷோத்தமன்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மானியக் கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் தொழில் துறை இப்போது இரண்டாகப் பிரிக்கப் பட்டு இருக்கின்றது. பெரிய தொழிலுக்கு ஒரு அமைச்சரும் சிறிய தொழிலுக்கு ஒரு அமைச்சருமாகப் பொறுப்பேற்று இருக்கிறார்கள். துணைத் தவைலர் அவர்களே, இந்த விளக்கக் குறிப்பிலே, தமிழ்நாட்டிலே கிடைக்கின்ற மூல ஆதாரங்களைக் கொண்டு தொழிலைத் துவங்கப் போவதாக சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் பல்வேறு மூலப் பொருள்கள் கிடைத்திருந்தாலும், கடந்த 4, 5 ஆண்டுகளாக, அந்த மூலப் பொருள்களைக் கொண்டு தொழில்களைத் துவக்க, சீராக, முறையாக என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

* 877-1085 பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.





அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக் குறிச்சி என்ற ஊரில், கடல் மண்ணில் இருந்து இல்லுமினைட் கிடைப்பதாக சொல்லி இருக்கிறார்கள். அந்த இல்லுமினைட்டிலே இருந்து ஆபரணங்களைத் தயாரிக்கும் நிலை இருக்கிறது. அதைச் செய்யாமல் நம்முடைய அரசு அதைக் கச்சாப் பொருளாக வெளி நாட்டுக்கு அனுப்பு கின்ற நிலையில் இருக்கிறார்கள். அங்கே சிறிய மணல் ஆலை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆபரணங்கள், நிலக்கரி கனிவளங்கள் கிடைப்பதாக சொல்லப்படுகிறது. அப்படிப் பட்ட இல்லுமினைட் தயாரிக்கின்ற நிலையிலே நம்முடைய அரசு இல்லாமல் அதை வெளிநாட்டுக்கு அனுப்பும் நிலை இருக்கின்றது. அந்த இல்லுமினைட் அமிலம் இரும்பு உற்பத்தி செய்கின்ற தொழிலுக்கும், கண்ணாடி தொழில் இன்னும் பல்வேறு ரசாயன தொழில்களுக்கும் தேவைப் படுகின்ற முக்கியமான பொருளாக இருக்கின்ற அதை, நம் முடைய அரசு கச்சாப்பொருளாக ஏற்றுமதி செய்யாமல் பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மணவாளக்குறிச்சி கடல் மணலிலே 18 சதவிகிதம் இல்லுமினைட் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் அந்தத் தொழிலைச் செய்தால் நாம் அன்னிய செலாவணியை மிச்சப்படுத்த முடியும். பெருமளவுக்கு அன்னிய செலாவணியையும் நாம் ஈட்ட முடியும். அதே நேரத்தில் ஆஸ்திரேலியா கடற்கரை மணலிலே இந்த இல்லுமினைட் 3 சதவிகிதம்தான் கிடைக்கின்றது. ஆனால் அங்கே பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அது மிக லாபகரமாக நடந்துகொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அதைப் போல மூலப் பொருள்களைக் கொண்டு பல்வேறு தொழில் களைத் துவங்க இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அதைப்போலவே சேலத்திலே மாக்னசைட் கிடைக்கின்றது. இந்தியாவிலேயே தரம் உள்ள மாக்னசைட் அதிக அளவில் சேலத்திலேதான் கிடைக்கின்றது. அதை முழுமை யாகப் பயன்படுத்திக்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். டால்மியா போன்ற தனியார் துறையினர் இதைக் கச்சாப் பொருளாக எடுத்துச் சென்று, ஒரிசா போன்ற இடங்களில் பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள் நான் கேட்கிறேன். ஏன் அந்த மூலப் பொருளை நாட்டு டைமை ஆக்கி இந்த அரசு தொழிற்சாலையை இங்கே ஆரம் பிக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் வடநாடுகளுக்குச் சென்று வந்தார், அங்கே பல பெரிய தொழிலதிபர்களைச் சந்தித்திருப்பதாக தெரிகிறது. அப்படி சந்தித்து அவர்களை தமிழ்நாட்டில் தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதே போல கேரளாவின் முன்னாள் முதலமைச்சர் திரு நாயனார் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு தொழிலதிபர்களைச் சந்தித்து, நேரடியாக அவர்களை அழைத்துச் சென்று அங்கே பேசியிருக்கிறார்கள். இங்கே உள்ள தொழில் அதிபர்கள் கேரளாவில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களிடத்திலை நாங்கள் இலவசமாக இடங்கள் தருகிறோம், மின்சாரம் தடையின்றி தருகிறோம், தண்ணீர் தருகிறோம், அதற்கு மேல் கடன் தருகிறோம், 5 ஆண்டுகள் வரை நீங்கள் கட்டவேண்டாம். பின்னாலே கட்டலாம் என்று சலுகைகளை எல்லாம் அறிவித்தார். ஆனால் இங்கே இருக்கின்ற தொழில் அதிபர்கள் அங்கே தொழிலாளர்கள் தகராறு இருக்கின்ற காரணத்தினால் அங்கே செல்லவில்லை. அதே நேரத்தில் நம்முடைய தொழில் அமைச்சர் வடநாட்டுக்கு சென்று தொழில் அதிபர்களை அழைத்த போது எந்தெந்த சலுகைகளை எல்லாம் சொன்னார்கள் என்றே தெரியவில்லை. ஏற்கனவே நமக்கு மின்சாரப் பற்றாக் குறை இருக்கின்றது. ஆண்டுக்கு 5 மாதங்கள் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்றது. இந்த நிலையில் என்னவென்ன சலுகைகளை அவர் அறிவித்தார் என்பது நமக்குத் தெரியவில்லை. மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக தொழிலாளர்கள் வேலை செய்ய முடியவில்லை. அவர்களுக்கு அடிக்கடி ''லே ஆப்'' கொடுக்கிறார்கள்.

(முற்பகல் 10-50)

தொழிலாளர்களுக்கு 'லே ஆப்' கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன. சிறு தொழில் செய்கின்றவர்களுக்குக் கூட ஒரு நாளைக்கு 4 மணிநேரம் மின்சாரம் கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. ஆனால் கேட்டால் அனல் மின் நிலையங்கள் சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். காரணம் அங்கே பாய்லர்கள் வேலை செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்குப் பின்னாலே நிலக்கரி வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஏன் என்று கேட்டால் ரயில்வே வேகன் இல்லை என்று சொல்கிறார்கள். கப்பல் வரவில்லை என்றுால்தடிகிறார்கள். இப்படி திட்டமிட்டு செயலாற்ற முடியாது காரணத்தினாலேதான் இப்படி நடந்துகொண்டு வருகிறது.



என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டிலே உள்ள தொழில் அதிபர்கள் நம்முடைய நாட்டிலே இருக்கின்ற அசோக் லேலண்ட், டி.வி.எஸ்., டி.டி.கே. போன்ற நிறுவனங்கள், டியூப் இன்வெஸ்ட்மென்ட் போன்ற நிறுவனங்கள் வெளி மாநிலங்களிலே தொழில் துவங்கி இருக்கிறார்கள். ஆகவே நம்முடைய நாட்டிலே இருக்கின்ற தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்து இங்கே தொழில் துவங்க வேண்டுமென்று சொல்லி, பஞ்சாப்பிலே, அரியானாவிலே எப்படி தொழில் அதிபர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கின்றார்களோ அதைப் போல நம்முடைய அமைச்சர் அவர்கள் நம்முடைய நாட்டிலே இருக்கின்ற தொழில் அதிபர்களுக்கு சலுகைகள் அளிக்கவேண்டுமென்று நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு இராகவானந்தம் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்தியாவிலே தொழில் தகராறு இல்லாத மாநிலம் தமிழ்நாடு மாநிலம் ஒன்றுதான் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது நம்முடைய தொழில் அதிபர்கள் வெளி மாநிலத்திற்கு செல்வதற்கு காரணம் என்ன ! பல்வேறு தொழிற்சாலைகள் பல மாதங்களாக மூடிக்கிடக்கின்ற நிலைமைகளையெல்லாம் மறந்து விட்டு பேசி இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து இங்கே கார்போரண்டம் யூனிவர்சல் என்ற நிறுவனம் 112 நாட்களாக மூடிக் கிடந்தது. மூடிக்கிடந்த நேரத்திலே அவர்களை அழைத்துப் பேச மனம் இல்லாத அமைச்சர் அவர்கள் அதற்குப் பின்னாலே சுமுகச் சூழ்நிலை ஏற்பட்டதற்கு பின்னாலே ...............

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கார்போரண்டம் யூனிவர்சலிலே வேலை நிறுத்தம் நடந்தபோது, நிரம்ப பேசினோம். பேச்சு வார்த்தை நடந்து கொண்டு வந்த பிறகு அவர்களே நாங்கள் போராட்டத்திலேயிருந்து பின் வாங்கிக்கொண்டு வேலைக்குப் போகிறோம் என்று போய்விட்டார்கள். பிறகு இரண்டுபேரையும் சேர்த்து அழைத்துப் பேசவேண்டுமென்று விரும்பினார்கள். நான் அழைத்துப் பேசினேன் வழக்குகள் எல்லாம் உயர்நீதி மன்றத்துக்கு அனுப்பிவிட்டால் போதும், நாங்கள் திருப்தி அடைகிறோம் என்று சொன்னார்கள். அப்படி அனுப்பியாகிவிட்டது. அங்கே அமைதி நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு து. புருஷோத்தமன் :** அப்போதே இது முக்கியமான பிரச்சினை என்று அழைத்துப் பேசியிருந்தால் 112 நாட்கள்

அங்கே மூடப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதே போல் பல்வேறு பெரிய பெரிய தொழிற்சாலைகள், டி.வி.எஸ். நிறுவனம் எத்தனையோ நாட்களாக மூடிக்கிடந்தது. டி.ஐ. சைக்கிள் நிறுவனம் ..........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மானியத்தின்மீது பேசும் போது ஒன்றைச் சொன்னேன். வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடந்து கொண்டு போகுமேயானால், அதை திடீரென்று நிறுத்தக்கூடிய அதிகாரம் இல்லை. ஆனால் அந்த பிரச்சினையை வழக்கு மன்றத்திற்கு அனுப்பிவிட்டு ஸ்ட்ரைக்கை பேன் செய்யலாம். அந்தக் கொள்கைகளை இந்த அரசு இதுவரையில் செயல்படுத்தவில்லை. அரசாகப் பார்த்து தொழிலாளர்களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுக்கக்கூடிய அதிகாரம் இருக்குமேயானால் வேலை நிறுத்தத்தைத் தடை செய்வதில் ஏதாவது பொருள் இருக்கும். எனவே, அப்பேர்ப்பட்ட அதிகாரத்தைப் பெறுவதற்கான ஒரு சட்டத்தை விரைவிலே இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேகொண்டுவர இருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : அதேபோல காட்டுப்பாக்கத்திலே இருக்கின்ற டிராக்டர் இன்டஸ்ட்ரீஸ் இதுவரையில் மூடிக்கிடக்கிறது. பெர்மனென்டாக மூடிக்கிடக்கிறது. அதற்கு என்ன சொல்லுகிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. அதேபோல் என்ஜின் வால்வ்ஸ் கம்பெனி. ஏறக்குறைய ஒரு ஆண்டு காலமாக மூடிக்கிடந்தது. அப்போது நம்முடைய முதல் அமைச்சர் அவர்களிடத்திலே பல்வேறு கோரிக்கைகளை எழுப்பினார்கள். அவசரமாக அழைத்துப் பேசவேண்டுமென்று சொன்னார்கள். அப்போதெல்லாம் பேசாத முதல் அமைச்சர் பின்னாலே சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பின்னாலே அந்தத் தொழிற்சாலைக்குச் சென்று இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை மூடிக்கிடந்தது. அங்கேயிருந்த கூர் காவிடம் , பேசிவிட்டு வந்திருக்கிறார். காரணம் இன்றையதினம் சனிக்கிழமை, அதனால் மூடிக்கிடக்கிறது எனறு அந்த கூர்க்கா சொல்லி, அதைக் கேட்டு விட்டு வந்திருக்கிறார்கள். அந்தளவிற்கு தொழில் தகராறு எற்பட்ட உடனே, உடனடியாக அழைத்துப் பேசியிருந்தால் இந்த நாட்டிலே தொழில் தகராறுகள் ஏற்படாது. தொழில் அதிபர்கள் இங்கே தொழிலைத் துவங்குவதற்கு வசதியாக இருந்திருக்கும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதைப்போல மாநில அரசு நடத்துகிற தொழில்களில் ஏதாவது இலாபகரமாக நடந்திருக்கிறதா என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். நம்முடைய மாநிலத்திலே பல்வேறு தொழிற்சாலைகள் நஷ்டத்திலே செயல்பட்டு வருகின்றன. நீங்கள் இங்கே கொடுத்திருக்கிற குறிப்பிலே கூட அந்த விவரம் இருக்கிறது தமிழ்நாடு சிமின்ட் கார்ப்பரேஷன் இருக்கிறது. அதைப்போல சர்க்கரை ஆலை இருக்கிறது. இந்த இரண்டும் பெறும் இலாபத்தைக் கொடுக்கக் கூடிய தொழில்கள் ஆகும். அந்த தொழில்களிலே கூட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு என்ன காரணம்? உங்களுடைய நிர்வாக திறமையின்மைதான் காரணம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு சிமின்ட் கார்ப்பரேஷன் 1978–79 ஆம் ஆண்டில் 28·37 இலட்சம் நஷ்டம் அடைந்திருக்கிறது. அதைப் போல 1979–80 ஆம் ஆண்டில் 223·31 இலட்சம் நஷ்டம். அதைப்போல் கட்டபொம்மன் ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனில் 26 இட்சம் நஷ்டம். பால்வள நிறுவனத்தில் 223 இலட்சம் நஷ்டம்.

இந்தப் பால்வள நிறுவனம் நஷ்டம் அடைந்திருப்பது ஒரு பக்கம் இருக்க இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே சுமார் 3,000 தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு தினக்கூலி 6 ரூபாய். இது போதாது, ஒரு ரூபாய் கூடுதல் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, கொடுக்காததால் போராட்டம் நடத்தினார்கள். பால்வள நிறுவனம் நஷ்டத்தில் செயல்படுகிறது என்ற காரணத்தைக் காட்டி, போராட்டம் நடத்தியவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அதற்குப் பிறகு ஆளும் கட்சிக்காரர்களை அங்கே நியமித்தார்கள். அவர்களுக்கு தினக்கூலி 6 ரூபய் அல்ல; 7 ரூபாயும் அல்ல; 11 ரூபாய் கொடுக்கிறார்கள். அதைக்கூட எப்படி, எந்தெந்த வகையிலே கொடுக்கிறார்கள் என்கிற விவரம் எல்லாம் நமக்குத் தெரியும்.

அதைப் போல தமிழ்நாடு சிராமிக்ஸ் யூனிட்டில் 21 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனில் 238 இலட்சம் நஷ்டம். தமிழ்நாடு பிளான்டேஷன் கார்ப்பரேஷனில் 21 இலட்சம் ரூபாய் நஷ்டம். அதைப் போல பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 102.45 இலட்சம் ரூபாய் நஷ்டம்,

அதைப் போல தமிழ்நாடு மோப்பெட்ஸ் நிறுவனம் இருக்கிறது. அதனுடைய மூலதனமே 49.71 இலட்சம் ரூபாய்தான். ஆனால் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் 97.78 இலட்சம் ரூபாய். இப்படி நீங்கள் தொட்டது எது துலங்கியது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படி மக்களுடைய வரிப்பணம் கோடிக் கணக்கில் வீணாக்கப்படுகிறது உங்களுடைய ஆட்சியிலே.

அதைப் போல டான்சி நிறுவனம் இருக்கிறது. அதன் மைய அலுவலகம் சென்னையில் இருக்கிறது. டான்சி என்றாலே தமிழ்நாடு சிறு தொழில்கள் கழகம் என்று பொருள். அந்தச் சிறு தொழில்கள் கழகத்தின் மைய அலுவலகம் அமைந்திருக்கிற கட்டிடத்திற்கு வாடகை மாதம் 45,000 ரூபாய். ஒரு ஆண்டுக்கு அந்தக் கட்டிடத்திற்கு வாடகையாக 5,40,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. சிறு தொழில் நிறுவன அலுவலக கட்டிடத்திற்கு இப்படி வாடகை கொடுத்தால் அது நஷ்டம் அடையாமல் என்ன செய்யும் ?

அந்த டான்சி நிறுவனம் 1965 ஆம் ஆண்டு நாடு பூராவும் 59 பிரிவுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஒரே ஒரு மேலாளர் இருந்தார். இப்போது 17 மேலாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் மாதம் 3,000 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இது தவிர கார் அலவன்ஸ், பயணப்படி எல்லாம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் எல்லாம் சென்னையிலேயே அமர்ந்திருக்கிறார்கள். மாவட்டத்திற்கு ஒருவராக இருந்தால் இலாபகரமாக வேலைகள் நடக்க வாய்ப்பு இருக்கும் அதை விட்டுவிட்டு, எல்லோரும் சென்னையில் இருந்துக்கொண்டு சுற்றுப்பயணமாக மாவட்டங்களுக்குப் போகிறார்கள். அதற்கு பயணப்படி, மற்ற படிகள் எல்லாம் கொடுக்க வேண்டும். இந்த வகையிலே பெருத்த நஷ்டத்தை அடைந்திருக்கிறது இந்த டான்சி நிறுவனம்.

அது மட்டுமல்ல. சுமார் 25 நாட்களுக்கு முன்னால் சென்னை தலைமை டான்சி அலுவலகத்திலிருந்து மேட்டூரில் இருக்கிற ஸ்டிரக்சுரல் அன்ட் கல்வனைசிங் யூனிட்டுக்கு ஒரு உத்தரவு போகிறது அவசரம் அவசரமாக அந்த உத்தரவு டெலிகிராமில் போகிறது. அந்த நிறுவனத்திலுள்ள ஆங்கிள், இரும்புக் கம்பிகள் ஏறததாழ 2 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ளவைகளை சென்னைக்குப் பக்கததில் இருக்கிற செம்பரம்பாக்கம் டான்சி எஞ்சினியரிங் யூனிட்டுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவு போகிறது. மேட்டூரில் இருக்கிற அதிகாரி உடனே லாரி பிடித்து அந்த இரும்புப் பொருட்களை செம்பரம்பாக்கம் யூனிட்டுக்கு அனுப்பி வைக்கிறார். உடனே மறுநாள் இங்கிருந்து, அதாவது தலைமை ஆபீசிலிருந்து ஒரு உததரவு போகிறது. என்ன உத்தரவு தெரியுமா ? அந்த இரும்பு





சாமான்களை அனுப்ப வேண்டியதில்லை ; அனுப்பியிருந்தால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று உத்தரவு போகிறது. உடனே மேட்டூர் அதிகாரி செம்பரம்பாக்கம் அதிகாரிக்கு தெரிவித்து, அந்த இரும்புச் சாமான்களை திருப்பி அனுப்பிவிடுங்கள் என்று தெரிவிக்கிறார். இங்கிருந்து திருப்பி அனுப்புகிறார்கள். ஆனால் இதுவரை மேட்டூருக்கு போய்ச் சேரவில்லை ; 25 நாட்களுக்கு மேலாகிவிட்டது. லாரியும் போய் சேரவில்லை ; இரும்பு சாமான்களும் போய்ச் சேரவில்லை. அதற்கு உடந்தையாக இருந்தவர் யார் ? அது எங்கே போனது ? எந்த இரும்பு வியாபாரிக்குப் போனது ? அதில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு ? ஒன்றும் தெரியவில்லை.

பின்னால் இதுபற்றி உத்தரவு போட்ட அந்த அதிகாரி விசாரிக்கிறார். விசாரித்து, இரண்டு ஸ்டோர் கீப்பர்களை வேலை நீக்கம் செய்கிறார். ஒருவர் பெயர் தட்சிணாமூர்த்தி. யாரோ செய்த காரியத்திற்கு இரண்டு ஸ்டோர் கீப்பர்களை வேலை நீக்கம் செய்கிறார் இப்படி ஏழையின் வயிற்றில் அடிப்பவர்சள் உருப்படுவார்களா ?

அதைப் போல வட ஆற்காடு மாவட்டத்தில் விண்ணமங்கலம் தோல் பதனிடும் நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தில் இன்றைக்கு 84.5 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் தேங்கிக் கிடக்கின்றன. அதற்கு என்ன காரணமென்றால் உரிய தரம் இல்லை. வெளி நாட்டுக்கு அனுப்ப வேண்டிய அந்த பதனிடப்பட்ட தோல் அவர்கள் கேட்டமாதிரி தரமானதாக இல்லாத காரணத்தால் தேங்கிக் கிடக்கிறது. அதனால் 84 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வெளிநாட்டார் சொன்ன ஸ்பெசிஃபிக்சேஷன் இல்லை என்று காரணம் சொல்கிறார்கள். மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது என்று சொல்வார்கள். சின்னத் தொழிலாக இருந்தாலும் அங்கே வேலைகள் பெரிய அளவில் நடைபெறுகின்றன. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற சிட்கோ சிறப்புப் பணிகள் குறித்த புத்தகத்தில் அளவு சிறிது, அழகு பெரிது என்று அச்சிட்டிருக்கிறார்கள். ஆனால் அதை அளவு சிறிது களவு பெரிது என்று இருந்தால் சரியாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

தோல் வாங்குவதிலேகூட வெளி மார்க்கெட்டிலே ஆட்டின் தோல் விலை 16 ரூபாய் என்றால் டான்சியிலே மட்டும் அதை 22 ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள். அந்த வகையில் 42 ஆயிரம் அளவில் நஷ்டம் ஏற்படுகிறது. அதே போல தோலைப்

பதப்படுத்தி அதை பாலிஷ் செய்து வெளிநாட்டுக்கு அனுப்புகிற நிறுவனமும் அதன் பக்கத்திலேயே இருக்கிறது. சென்ற மார்ச் மாதம் அதில் சென்னையிலிருந்து ஆஸ்திரேலியாவில் இருக்கும் மெல்போர்ன் என்னும் இடத்திற்கு தோல் கன்சைன்மெண்ட் அனுப்பியிருக்கிறார்கள். அங்கே அது ஓராண்டிற்கும் மேலாக வந்து எடுத்துச் செல்ல ஆள் இல்லாத காரணத்தால் டெமரேஜ் சார்ஜ்ஜே கிட்டதட்ட 1 இலட்சம் ரூபாய்க்கு கட்ட வேண்டிய திருக்கிறது. அதற்கு பொறுப்பு யார்? மார்க்கெட்டிங் மானேஜர் லெதர் என்ற பதவியிலே ஒருவர் இருக்கிறார். பி. எஸ். அம்புலி என்று பெயர். அவர் எம்.டி.யோடு அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போய்க்கொண்டுதான் இருக்கிறார். சமீபத்தில் கூட பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றார். ஆனால் நாம் ஏற்றுமதி செய்த அந்த பொருள்கள் கேட்பாரில்லாது வெளிநாட்டிலே விடப்பட்டிருக்கிறதே, அதை கவனிப்பது யார்? யார் என்றே தெரியவில்லை. இப்படி பல்வேறு தவறுகள் அங்கே நடந்து கொண்டிருக்கிறது.

கடைசியாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறையை யாரோ பாழ்படுத்திவிட்டார்கள் என்பது போல அதற்கு அலங்காரம் செய்ய வேண்டும் என்று நினைத்து, 12 இலட்சம் ரூபாய் அளவிற்கு டான்சி நிறுவனத்திற்கு பர்னிச்சர் யூனிட்டுக்கு ஆர்டர் செய்கிறார்கள். டான்சியிலே பர்னிச்சர் டிசைனில் தலைமைப் பொறுப்பிலே இருப்பவர் சிவானந்த ஆச்சாரியார். மிகவும் நல்லவர். 8 ஆம் வகுப்பு வரை நன்றாகப் படித்திருக்கிறார். ஆனால் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்குகிறார். அவர் ஆதம்பாக்கத்திலே 5 இலட்சம் பெறுமானமுள்ள சிறிய அழகான பங்களாவில் குடியிருக்கிறார். அவர் அந்த நிறுவனத்தில் நெடுநாட்களாக வேலை பார்த்து வருகிறார். அகவே நம்முடைய முதல்வர் அவர்களால் முடிந்த அளவுக்கு அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக, 12 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஒரு ஆர்டரை கொடுத்து, அவர்களுக்கும் உதவி செய்து, முதல்வர் அவர்கள் தன்னுடைய அறையையும் அப்படியே அலங்கரிக்க எண்ணியிருக்கிறார் போலிருக்கிறது. (மணி அடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் கொடுக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்களின் அறையை அலங்கரிப்பதற்காக 12 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படவில்லை. அது குறித்து நேற்றைய மானியத்திலேயே விரிவாகச் சொல்லியிருக்கிறேன்.



திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தை வரவேற்று பேச வாய்ப்பு அளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தொழில் அமைச்சர் திருநாவுக்கரசு அவர்களும், அண்ணன் கே. ஏ. கே. அவர்களும் கொண்டுவந்த மானியங்களை வரவேற்று ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள், தொழில் மானியத்தைப் பற்றியும் தொழில் மானியத்திலே மாநில அரசு என்னென்ன செய்ய வேண்டும், மத்திய அரசு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை வரிசைப்படுத்தி, மாநில அரசுகளுக்கு மத்திய அரசு செய்ய வேண்டிய கடமைகளை நினைவுபடுத்தி, மைய அரசின் தொழிற் கொள்கை பற்றிய பிரச்னையைக்குறித்து ஏதாவது இரண்டொரு வார்த்தை பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் மத்திய அரசை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நாங்கள் தொடமாட்டோம். மைய அரசினுடைய திட்டங்களும், மைய அரசினுடைய முதலீடுகளும் தமிழ்நாட்டிற்கு வந்தால் என்ன, வராவிட்டால் என்ன, எங்களுக்கு அக்கறையில்லை. புரட்சித் தலைவர் அவர்களையும், அவருடைய அரசையும் எதற்காகவாவது தாக்க வேண்டும், ஏதாவது குறை கூறவேண்டும், அதை வைத்துக் கொண்டு மக்களை நம்பச் செய்து ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே அவர் பேசினாரே தவிர, தமிழக மக்களுக்கு தொழில் வளர்ச்சியில் உதவ மறுக்கும் மத்திய அரசை எதிர்த்து ஒரு வார்த்தையும் கூறவில்லை. அப்படி ஏதாவது அவர் கூறியிருப்பாரேயானால் நான் உண்மையிலேயே அவரைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல புருஷோத்தமன் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொழில் திட்டங்கள் எதுவும் துலங்கவில்லை என்று சொன்னார்கள். ஆம், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலே ஏதாவது திட்டங்களை நீங்கள் தொட்டிருந்தால் தானே, துலங்குகிறதா, துலங்கவில்லையா என்பது உங்களுக்குத் தெரியும்.

முதல்வர் அவர்களுடைய அறையை அலங்கரிப்பதற்காக டான்சியில் 12 இலட்சம் ரூபாய் செலவில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருப்பதைப் பற்றிச் சொன்னார். அதை உண்மை இல்லை என்று அமைச்சர் மறுத்திருக்கிறார். ஆனால் அப்படியே கொடுத்திருந்தாலும், அரசு நிறுவனமான டான்சிக்குத்தானே

அந்த 12 இலட்சம் ரூபாய் வருவாய் வரப்போகிறது? வேறு யாரோ தனியார்களுக்கு கொடுத்து, அதன் மூலம் ஏதாவது சுய இலாபம் பெறக் கூடிய அளவில் எதுவும் செய்யப்படவில்லையே?

ஆகவே டான்சியில் மூலமாகத்தான் வேலை துவக்கப்படுகின்றது என்ற உண்மையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே தமிழகத்தினுடைய தொழில் துறையைப் பற்றியும் தமிழகத்தில் தொழில் வளங்களைப் பற்றியும் 1970 ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டிலே இருந்து வருகை தந்திருந்த ஒரு குழு கருத்து தெரிவித்திருக்கின்றது. தமிழகத்தின் தொழில் வளங்களைப் பற்றியும், தமிழ்நாட்டு தொழிலாளர் திறனைப் பற்றியும் ஜப்பான் நாட்டிலே இருக்கக்கூடிய இந்திய தூதரிடத்திலே அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்றத்திலே கூட அதைப்பற்றி விவாதிக்கப்பட்டது. அந்த ஜப்பான் நாட்டுக் குழுவினர் தமிழகத்தைப் பற்றியும் தமிழகத்தினுடைய தொழில் நிலைமை பற்றியும் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்று சொன்னால் ' ஜப்பான் நாட்டுத் தொழில் வளர்ச்சியைப்போல் வேறு எந்த நாட்டிலாவது அதிகமாக ஆரம்பிக்கவேண்டும் என்றால் இந்திய நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் அதற்கான சூழ்நிலை இருக்கின்றது.

அதேபோல் ஸ்கில்ட் லேபர் ஆற்றல் பெற்ற தொழிலாளர்களும் ஜப்பானுக்கு அடுத்து தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள் என்ற ஒரு அறிக்கையினையும் இந்திய நாட்டுத் தூதரிடத்திலே ஜப்பான் நாட்டினர் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி ஜப்பான் நாட்டினரால் பாராட்டப்பட்ட அந்தத் தமிழகம் இப்போது எந்த நிலையில் உள்ளது என்று சொன்னால் ஒவ்வொரு வரும் தமிழ்நாட்டில் தொழில் துறையினைப் பற்றியும், தொழில்களுக்கு மத்திய அரசு செய்யவேண்டிய கடமைகள் பற்றியும், மத்திய அரசு செய்யத் தவறிய கடமைகளைப் பற்றியும் அறிவோம். எனவே எந்தப்பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்றாலும் நாம் மத்திய அரசினுடைய அதிகாரத்தைப் பெறவேண்டி இருக்கின்றது. ஒவ்வொரு பிரச்சினைக்கும் நாம் மத்திய அரசினுடைய ஒப்புதலை வாங்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆனால் துவங்கப்பட்ட பெரிய தொழிற்சாலைகளின் வருமானங்கள் எங்கே செல்கின்றது என்று சொன்னால் மத்திய அரசுக்குத்தான் செல்கிறது. அது மாநில அரசுக்குக் கிடையாது. எனவே தனியார் தொழிலிலே இருந்து வரக்கூடிய பெரும் பங்கும், மத்திய அரசு இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய பெரிய தொழில்களின் வரவும் மாநில அரசுக்கு வராததால்தான்





மாநிலங்களின் நிலைமை இப்படி இருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அந்த வரவுகள் எல்லாம் எப்போது மாநில அரசுகளுக்கு வருகின்றதோ அதுதான் ஒவ்வொரு மாநிலத்தினுடைய பொற்காலமாக இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசினர் அதிகாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு வருமானத்தையும் அவர்களே எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால் அந்த நிலைமை மாற்றப்படவேண்டும். பேரறிஞர் அணணா அவர்கள் தொழில் மானியத்தைப் பற்றிப்பல கருத்துக்களைச்சொல்லியிருக்கிறார்கள். அவற்றிலேஒன்றிரண்டை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். தமிழக மக்கள் பிரதிநிதிகள், தமிழகத்தின் அந்தந்த மாநிலத்தின் சொந்தக்காரர்கள் சிந்திக்கவேண்டும். ''மத்திய சர்க்காரின் தொழில்கள் மாநில சர்க்காருக்குச் சொந்தமாக்கப்படவேண்டும் என்ற திட்டத்தைக் கொள்கை அடிப்படையிலே ஒத்துக்கொள்ளவில்லை என்றாலும் மத்திய அரசினுடைய நிறுவனங்கள், அதனுடைய வருமானங்கள் அந்தந்த மாநிலத்தினுடைய வளர்ச்சிக்குப் பயன் பட்டாக வேண்டும்'' என்று சொல்லி இருக்கிறார்கள். இதே போன்று அடுத்த ஒருதொழில் மானியத்திலும் பேரறிஞர்அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''தொழில் வளர வேண்டும் அதற்காக தொழிலை மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டால் எப்படி? மக்கள் மத்திய சர்க்காரிடம் இல்லை, மாநில சர்க்காரிடத்திலேதான் இருக்கிறார்கள்'' என்று சுட்டிக்காட்டி பேசி இருக்கிறார்கள். ஆகவே தொழிலின் மொத்த வருமானமும் அந்தந்த மாநிலத்திற்கு எந்த நாள் வருகின்றதோ அந்த நாள்தான் மாநிலங்களுடைய பொன்னாளாகும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய நாட்டிலே தேசிய வருமானத்திற்கும் பெர் கேப்பிட்டா இன்கம் என்ற தனி நபர் வருமானத்திற்கும் மிகுந்த ஏற்றதாழ்வு இருக்கின்றது. அந்த ஏற்றதாழ்வினை மத்திய அரசு போக்கவேண்டும். அப்போதுதான் இந்தியாவிலே சீரான தொழில்வளம் அமையும் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இங்கே புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற எண்ணற்ற திட்டங்களை வரவேற்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். பெரிய தொழில்களை தமிழகத்திலே துவங்கவேண்டும் என்று எண்ணத்தினை நான் தமிழக மக்களின் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து டி. ஐ. ஐ. சி. செய்திருக்கின்ற சாதனை அபாரமான சாதனையாகும். தொழிலாளர்கள் முதலாளிகளாக வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இயங்கி வருகின்றது. முந்தைய காலங்களில் வேண்டுமானால் தொழில் முதலீட்டுக் கழகம் என்ற பெயரிலே ஒரு சிலர் வசதி வாய்ப்புக்களைப் பெறக்கூடிய அளவிலே நிலைமைகள் இருந்திருந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே தொழில் முதலீட்டுக் கழகம் சிறிய தொழிலாள வர்க்கத்தினை முதலாளிகளாக மாற்றக்கூடிய அந்தக் காரியத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசின் தொழில் முதலீட்டுக் கழகம் செய்துகொண்டிருக்கின்றது.

ஆனால் இங்கே அருமைச் சகோதரர் புருஷோத்தமன் அவர்கள் ஏதேதோ சொன்னார்கள். தொழில் முதலீட்டுக் கழகத்தினைப் பொறுத்தவரையிலே ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10]

1974–75-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் இந்தத் தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு தெரியுமா ? 50 இலட்சம் ரூபாய்தான் இந்தக் கழகத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ரூ. 400 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. அவர்கள் அதற்குச் சொல்லலாம், அப்போது இருந்த வருவாய் எவ்வளவு, இப்போது எவ்வளவு வருவாய் வருகிறது என்று. அப்போது ரூ. 500 கோடிதான் வருவாய் வந்தது. இப்போது ரூ. 1,400 கோடி வருவாய் வருகிறதே என்று அவர்கள் சொல்லக்கூடும். அப்போது 500 கோடி வருவாய் வந்தபோது ரூ. 50 இலட்சம் ஒதுக்கியிருந்தார்கள், அதன்படி 150 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கவேண்டும்; ஆனால் தொழிலாளர்களை முதலாளிகளாக ஆக்கக் கூடிய இத்திட்டத்திற்காக புரட்சித் தலைவர் அரசு 400 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த் நேரத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நவீன காகித ஆலையை தமிழ்நாட்டில் கொண்டு வர தமிழக அரசு திட்டமிட்டு இடம்தேர்ந்தெடுத்து நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுத்து வரும் இந்த அரசையும், அமைச்சர் அவர்களையும், புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்து, மின்சார உற்பத்தியில் இந்த அரசு அக்கறை காட்டவில்லை என்று சுட்டிக்காட்டினார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு தொழில் துறையில் மந்தமாக்கப்பட்டது முந்தைய ஆட்சிக்காலத்தில்தான் என 1981 ஆம் ஆண்டு நவம்பரில் ஈஸ்டர்ன் எக்கனாமிக்ஸ்-ல் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் 1970ல் இருந்து மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க மறந்து விட்டார்கள், போதிய நாட்டம் செலுத்தவில்லை, எனவே தமிழ்நாடு தொழில் துறையில் மந்தமாகிவிட்டது என்று ஈஸ்டர்ன் எக்சனாமிக்ஸ் சொல்கிறது, நான் சொல்லவில்லை. எனவே மின்சார உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியத்துவம் கொடுக்காதது யார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவர். இந்த மின்சார உற்பத்தி பற்றிக் கூறும்போது உறுப்பினர்கள் ஒன்றை மறந்துவிட மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். சமயநல்லூர் மின்நிலையத்தை விற்றது யார் ? இப்போது நாம் மின் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவில்லை என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். உண்மை நிலையை மக்கள் அறிவார்கள். இந்த நாட்டு அறிஞர்கள் அறிவார்கள். சமயநல்லூர் மின்நிலையத்தை விற்றவர்கள் யார் என்பது பொது மக்களுக்குத் தெரியும், அந்த மின்நிலையத்தை அவர்கள் 57 இலட்சம் ரூபாய்க்கு விற்றார்கள். அதை வாங்கியவர்கள் அதை எவ்வளவு தொகைக்கு விற்றார்கள் என்று தெரியுமா ? அந்த மின்நிலையத்தில் இருந்த உதிரி பாகங்களை ஒரு பாய்லரை மட்டும் ரூ. 51 இலட்சத்திற்கு விற்றார்கள். நாங்கள் ஒரு குழு போட்டோம். அந்தக் குழுதான் அதை விற்கவேண்டும் என்று சொல்லியது என்று சொன்னார்கள். அப்போது இப்போது நல்வாழ்வு துறை அமைச்சராக இருக்கும் டாக்டர் ஹண்டே அவர்கள் இந்தச் சட்டமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உங்கள்பேரில் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். கமிட்டி போட்டோம் என்றால் அந்தக் கமிட்டி என்ன சொல்லிற்று? அதன் செயல்திறனைப் பார்த்துத்தான் எதையும் செய்யவேண்டும் என்று சொல்லியது. நீங்கள் அதை பரிசீலனை செய்யாமல், குழு சொன்னதை ஏற்றுக்கொள்ளாமல் அந்த மின் நிலையத்தை விற்று ஏப்பம்விட்டு இன்றைக்கு மின்சார உற்பத்தி பற்றிப் பேசுகிறீர்கள்.

அடுத்து மத்திய அரசின் தொழில் முதலீடு பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் மிகக் குறைவாகவே முதலீடுகள் வந்து கொண்டிருக்கின்றன. 4 சதவீதம்தான் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் உண்மையில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடியவர்கள் வெட்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு உத்தர பிரதேசத்துக்கு 35 சதவீகிதம் ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப்

பொறுத்தவரையில் 4 சதவீதம்தான் ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசின் திட்டங்கள், மத்திய அரசின் தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் அதிகமாக வரவேண்டும். அதற்கு இங்குள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் குரல் கொடுத்தாகவேண்டும். இதில் கட்சி வித்தியாசம் பார்க்கக்கூடாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் தொழில் துறையில் எந்தவிதமான கருத்துவேறுபாடும் இருக்கக்கூடாது, நாட்டு மக்களின் நலன்கள் கருதித்தான் பார்க்கவேண்டுமே தவிர கட்சி வேறுபாடு பார்க்கக்கூடாது என்று சொன்னார்கள். மத்திய அரசை வலியுறுத்தவேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. நாங்கள் தேசிய கட்சி, ஆகவே மைய அரசை வற்புறுத்துவதா என்றால் நீங்கள் தமிழக மக்களால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் வாழ்வது தமிழ்நாட்டில்தான். ஆகவே தமிழ்நாடு தொழில்துறையில் முன்னேற மத்திய அரசை வற்புறுத்தவேண்டிய கடமை உங்களுக்கும் இருக்கிறது. வட மாநிலங்கள் பலவற்றை பிற்படுத்தப்பட்ட மாநிலங்கள் என்று அறிவித்திருக்கிறது மத்திய அரசு.

ஆனால், தென் மாநிலங்களில் பல மாவட்டங்கள் ஏன் அப்படி அறிவிக்கப்படவில்லை? இந்த மாற்றந்தாய் மனப்பான்மை தமிழகத்திற்கு காட்டப்பட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல், மத்திய அரசின் அனுமதிக்காக மின் உற்பத்திக்கான பலதிட்டங்கள் தமிழக அரசால் போடப்பட்டு, அனுப்பியிருக்கிறார்கள். அவைகள் பற்றி ஓராண்டிற்கு மேலாக எந்தவிதமான பதிலும் சொல்லாமல் இருப்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. நாம் மின் சக்தியைப் பற்றிப் பேசுகிறோம். ஒரு சில முக்கியமான திட்டங்களை மத்திய அரசுக்கு அனுப்பினால் அவைகளை கிடப்பிலே போடுகிறார்கள். ஒன்றிரண்டை நினைவுப்படுத்த விரும்புகிறேன். 615 கோடி ரூபாயில் வட சென்னையிலே அனல் மின் நிலையம் அமைப்பதற்கு. அதிலேயிருந்து 1050 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அது அங்கே கிடப்பிலே இருக்கிறது. அதே போல், 206 கோடி ரூபாயில் மேட்டூர் அனல் மின்நிலையத்தை விஸ்தரித்து, அதிலே இருந்து 420 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய அந்தத் திட்டத்தையும், மத்திய அரசு கிடப்பிலே போட்டிருக்கிறது. 411 கோடி ரூபாயில் தூத்துக்குடி விஸ்தரிப்பு திட்டத்தின் மூலம் 710 மெகா வாட் உற்பத்தி செய்கின்ற அந்தத் திட்டத்தையும் மத்திய அரசு கிடப்பிலே போட்டிருக்கிறது. அதற்கெல்லாம் மத்திய அரசு உடனடியாகஉத்தரவு கொடுக்க, அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் குரல் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்





திலே கேட்டுக் கொள்கிறேன். ஓராண்டிற்குள் இந்தத் திட்டம் துவக்கப்படுமானால், கிட்டத்தட்ட, 1987-88லே நிறைவேற்றப்படும். அப்படி 7, 8 ஆண்டுகளிலே நிறைவேற்றப்படுகின்ற நிலையிருக்கும்போது, இதிலே 2, 3 ஆண்டுகள் என்று தள்ளிப் போட்டால், அதிலே எக்ஸ்பர்டுகள் இப்போது 200 கோடி என்று சொல்லியிருந்தால், பின்னால் அது 500 கோடியாகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதே போல் புரட்சித் தலைவர் அரசு மின் சக்தியை உண்டாக்க காஸ் டர்பைன் திட்டத்தைக் கொண்டு வந்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் 13 கோடி என்ற அளவிலே 6 திட்டங்களை 78 கோடி ரூபாய் அளவிலே கொண்டு வந்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அதுவும் இப்போது கிடப்பிலே அங்கே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

20 கோடி ரூபாய் அளவிலே வெடி மருந்து தொழிற்சாலை ஒன்று எங்கள் மாவட்டமாகிய வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டையில் போட்டிருக்கின்றார்கள். அதற்காக தமிழக அரசுக்கு என் நன்றியை காணிக்கையாக வைக்கிறேன்.

சேலம் இரும்பாலை திட்டத்திற்கு பல கோடி ரூபாய் அளவிலே 76லே திட்டம் போடப்பட்டு, இன்றைக்கு 13 கோடி ரூபாய் அளவிலே நலிந்து போன தொழில் திட்டத்தை, நஷ்டம் ஏற்படக்கூடிய அளவுக்கு இந்த திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை விரிவுப் படுத்த வேண்டும். எனவே, முதலிலே போட்ட திட்டத்தை மீண்டும் செயலாக்குவதற்கு, அந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே திண்டுக்கல்-கரூர் அகல ரயில் பாதை அரை மணி நேர விவாதத்தில் நேற்று பேசியிருக்கிறார்கள். இது தமிழகத்திற்கு மிக முக்கியமான, தேவையான திட்டம். அதுவும் மத்திய அரசின் கிடப்பிலே இருக்கிறது. அதைப்பற்றி பாராளுமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். புதியதாக ரயில் திட்டங்கள் கொண்டு வர மாட்டோம் என்ற கொள்கையை அமைச்சர் அவர்கள் அங்கே சொன்னார்கள். புதிய திட்டம் இல்லையே தவிர, இது பழைய திட்டம் தான் ; எனவே, இதற்கு உறுதுணையாக ஆதரவு கொடுங்கள் என்று நாடாளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு இதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வேடசந்தூரிலே 45 கோடி அளவிலே சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கும் மத்திய அரசு அனுமதி அளிக்க வில்லை. இந்தத் திட்டம் அமைக்கப்பட்டால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே, இந்தத் திட்டத்திற்கும் மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பற்றி, வேடசந்தூரிலே சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி, நாடாளுமன்றத்திலே கேட்கப்பட்ட போது, சிமென்ட் தயாரிப்பதற்கான மூலப் பொருள்கள் அங்கே அதிகமாக கிடைத்தால், உடனடியாக, போர்க்கால நடவடிக்கை போல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பு, அறிவிப்பாக இருக்கிறதே தவிர, நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. ஆகவே, உடனே நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் 100கோடியில் ரயில்வே கோச் பாக்ட்ரி ஒன்று தமிழகத்திலே ஏற்படுத்துவது பற்றிச்சொன்னார்கள். தமிழகத்தில் அதற்கான நிலங்கள், மற்றும் அனைத்து வசதிகளும் செய்து கொடுப்பதாக இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அந்தத் திட்டம் என்ன ஆயிற்று ? எந்த மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? அது ஆந்திரத்திற்குச் சென்றிருப்பதை நீங்கள் உணர்வீர்கள். எனவே, மத்திய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையோடு தமிழகத்தைப் பார்க்கக் கூடாது என்பதைத் தெரித்துக் கொள்கிறேன்,

[முற்பகல் 11-20]

திருத்தணியிலே ஒன்பது கோடி ரூபாயில் சர்க்கரை ஆலை அமைக்க மத்திய அரசு அனுமதி கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணித் தொகுதியை பின்தங்கிய தொகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சியை அதிகமாக ஏற்படுத்துவதற்காகவும், உற்பத்தியை அதிகமாக்குவதற்காகவும் எப்படி கிராமங்களிலே தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு வசதிகள் கிடைப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றதோ அதைப்போன்று ஒவ்வொரு மாவட்டத்திலேயும் 5, 6 பாலிடெக்னிக்குகள், 4, 5 தொழில் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



காவிரி டெல்டா பகுதியிலே எண்ணெய் கிடைக்கிறது என்று பாராளுமன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கே தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தையும் தமிழகத்திலே கொண்டுவரவேண்டும். அண்ணா அவர்கள் கண்ட கனவை நனவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே தொழில் வளத்தை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு முன்வரவேண்டும்.

மகாராட்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் விஜயம் செய்தார்கள். அங்கே இருக்கின்ற தொழில் அதிபர்கள் தமிழகத்திலே தொழில் துவங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப்போலவே புரட்சித் தலைவர் அவர்கள் குவெய்த் நாட்டிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அனுப்பிவைக்க இருக்கிறார்கள். குவெய்த்திலே உள்ள பல தொழிலதிபர்கள் பல மாநிலங்ளிலே தொழிற்சாலைகள் ஆரம்பிக்கிறார்கள். அதைப்போன்று தமிழகத்திலேயும் அவர்கள் துவங்க வேண்டுமென்ற முறையிலே அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கின்றார்கள், அவர்களுக்கும், கிராமங்களைத் தொழில் மயமாக்குவதற்கு திட்டங்களைத் தீட்டி வரும் மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கே. அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் தமிழக மக்களின் சார்பிலே என்னுடைய நன்றியைத் காணிக்கையாக்கிக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான தொழிற் கொள்கை மற்றும் திட்டங்களைப்பற்றிய, பெரிய தொழில்கள் மற்றும் கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் பற்றிய இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பேச விழைகிறேன். இன்றைக்கு பல்வேறு புதிய தொழில்களைத் துவக்குவதற்கும் இருக்கின்ற தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும் தொழிற்சாலைகளிலே தொழில் அமைதியை ஏற்படுத்துவதற்காகவும் தொழிற்சாலைகளிலே உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும் திட்டங்களை உள்ளடக்கிய பல நல்ல திட்டங்களைக் கொண்டதாக மானியக் கோரிக்கைகள் அமைந்திருக்கின்றன. இத்தனையையும் கருத்திலே கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கைகளின் மூலமாக தமிழகத்திலே தொழில் புரட்சிக்கு வித்திட்டிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக கிராம மக்களின் பொருளாதாரம் உயர்வதற்கு கிராமத் தொழில்களிலும், சிறு தொழில்களிலும் அதிக அக்கறை காட்டி வருகிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்திலே எவ்வளவுதான் திறமையுடனும் வேகத்தோடும் மாநில அரசு மக்களுக்காக பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட்டாலும்கூட மாநில அரசினுடைய நிதிப்பற்றாக்குறை, மைய அரசின் தமிழகப் புறக்கணிப்புக் கொள்கை மாநிலத்தினுடைய மின்சாரப் பற்றாக்குறை இவையெல்லாம் தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெரிய தடைக்கல்லாக இருக்கிறது என்பதை உளப்பூர்வமாக நீங்கள் உணர்வீர்கள், என்று கருதுகிறேன்.

மைய அரசின் தொழில் கொள்கை பற்றி பல்வேறு காலக் கூட்டங்களிலே இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர்களிலே பல்வேறு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஆளுங்கட்சியின் சார்பாகப் பேசுகின்றவர்களும் எதிர்க்கட்சி சார்பாகப் பேசுகின்றவர்களும் சுயேச்சையாக பணியாற்றும் மாமன்ற உறுப்பினர்களும் அத்தனை பேர்களும் இதை வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்வீர்கள். மைய அரசின் தொழில் கொள்கை மாநில அரசை, குறிப்பாகத் தமிழகத்தை மிகப் பெரிய அளவுக்கு பாதித்து ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதை மாற்றியமைத்து மைய அரசினுடைய கொள்கையிலே மிகப் பெரிய மாற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகம் அமைந்திருக்கிறது என்பதை உணர்ந்து செயல்படவேண்டும்.

ஏற்கெனவே இருக்கின்ற வரிகள் மூலமாக வசூலித்தது மட்டுமல்ல, புதிய வரிகளை மாநில அரசின் வரம்பிற்குள்ளே இருக்கின்ற வரிகளை வசூலித்து அதையெல்லாம் மைய அரசு எடுத்துக் கொண்ட பிறகு கூட தொழில் சலுகைகளை பங்கிட்டுக் கொடுப்பதிலே மிகப் பெரிய ஏமாற்றத்தை மைய அரசு தமிழகத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறது. அநீதியை இழைத்திருக்கிறது. இந்த துர்பாக்கியமான நிலைமையை மாற்ற வேண்டும்.

வேதாரண்யம் பகுதியிலே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற பெட்ரோலியம் மூலம் அந்த கச்சா எண்ணெயைப் பயன்படுத்திக்கொள்கிற முறையிலே அமைக்கப்படுகின்ற தொழிற்சாலையை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை தமிழகத்திலே அமைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் புறக்கணித்திருக்கிறார்கள், என்று தெரிகிறது. இங்கே இருக்கிற கச்சா எண்ணெயை அஸ்ஸாம் மாநிலத்திற்கு எடுத்துச் சென்று அங்கே தொழிற்சாலைகள் நிறுவுவதாகவும், ஒரிசா பகுதியிலே தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. அதுதான் நோக்கமானால் மாநில அரசு மிகப் பெரிய அளவிலே புறக்கணிக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். பெரியவர் ஹாஜா ஷெரீப் போன்றவர்கள் எல்லாம் மத்திய அரசை வலியுறுத்தி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை வேதாரண்யத்திலே அமைத்திட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதே நேரத்தில் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் தொழிற்சாலையில் பிற்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கிற மத்திய அரசினுடைய கொள்கையிலே மிகப் பெரிய மாற்றத்தை வேண்டுகிறோம். மத்திய அரசினுடைய கொள்கையை நான் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது கூட குறிப்பிட்டேன். அதை தொழில் மானியமாக இருப்பதால் மீண்டும் குறிப்பிடுவது சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். வடபுலத்திலே இருக்கிற 82 மாவட்டங்கள் தொழில் துறையில் பிற்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு, விந்திய மலைக்கு தென்புறத்திலே இருக்கிற தென் மாநிலங்கள், குறிப்பாக தமிழகம் புறக்கணிக்கப்பட்டு, ஒரு மாவட்டம் கூட பிற்பட்ட மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. சிவராமன் கமிட்டி என்ற தனி நபர் குழுவினுடைய அறிக்கையை வைத்து மத்திய அரசிற்கு சாதகமாக, வடபுலத்திற்கு சாதகமாக ஏற்றுக்கொண்டு தமிழகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் பிற்பட்ட மாவட்டமாக அறிவிப்பதற்கு எந்த ஒரு மாவட்டமும், இன்னும், 5, 6 அல்லது 10 ஆண்டுகளுக்கு தேவையில்லை என்ற அந்த அறிக்கையை எடுத்துக்கொண்டு இன்றைக்கு செயல்படுகிற விதம் மத்திய அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. சமீபத்தில் மத்தியில் நடந்த மாநில தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் கூட இதை வற்புறுத்தியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களுடைய வற்புறுத்தலுக்கிணங்க இந்த மன்றத்து உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று சிவராமன் கமிட்டி அறிக்கையை அப்படியே ஏற்று அமல் படுத்தாமல், அதை பரிசீலனையில் ஏற்றுக் கொண்டு, ஏற்கனவே இருந்த பழைய முறையை பின்பற்றி தமிழகத்தில் அதிகமான மாவட்டங்களை தொழிற்துறையில் பிற்பட்ட மாவட்டங்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிவராமன் கமிட்டியினுடைய அறிக்கையை எந்த காரணத்தைக் கொண்டும் மத்திய அரசு பின்பற்றக் கூடாது என்பதையும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அதே போல சேலம் உருக்காலை திட்டத்தைப் பொறுத்த வரையில் மிகப் பெரிய திட்டம் என்று மாண்புமிகு மோகன் குமாரமங்கலம் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபோது அந்த திட்டத்தை மிகவும் அரும்பாடுபட்டு கொண்டு வந்தார்கள்.

இன்றைக்கு அது செயல்படுகிறதை பார்த்தால் அந்த திட்டத்தினுடைய மதிப்பீடு மிகப் பெரிய அளவிலே குறைக்கப்பட்டிருக்கிறது. உருக்காலை திட்டம் என்று கொண்டு வந்தவர்கள் எவர்சில்வர் பிளேட்டுகளை அடிப்பதற்கு ஒரு திட்டமாக போட்டு துவங்கியிருக்கிறார்கள். இரும்பு உருக்காலை தொழிற்சாலை என்று சொல்லிவிட்டு தகர டப்பா தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறார்கள். தகர டப்பா தொழிற்சாலை ஆரம்பித்து மாநில மக்களை, குறிப்பாக, சேலம் மாவட்டத்து மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளைச்சல் நிலங்களை அவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். இரும்பு உருக்காலைக்காக மலையை உடைக்க போகிறோம் குடையப்போகிறோம் என்று சொல்லிவிட்டு, மலையை தோண்டி எலியைப் பிடித்த கதையாக எவர்சில்வர் தகர டப்பா தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

அதற்குப் பதில் அளிக்கிற நேரத்திலே மைய அரசினுடைய தொழில் அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிதாக திட்டம் தயாரித்து அனுப்புங்கள், வல்லுநர்களைக் கொண்டு திட்டம் தயாரித்து அனுப்புங்கள். அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு மீண்டும் விஸ்தரிப்பு செய்கிறோம் என்று சொன்னார்கள். இப்படிப் பட்ட ஒரு உருக்காலை திட்டம் வருவதற்குக் கடந்த 20, 25 ஆண்டு காலமாக மிகப் பெரிய வல்லுநர்களாலே அதற்கான அறிக்கையெல்லாம் கொடுக்கப்பட்டு, மிகப் பெரிய வல்லுநர்களெல்லாம், ஜப்பான் போன்ற மிகப் பெரிய நாடுகளிலே இருந்து வந்த அறிஞர்களெல்லாம் தான் அந்த உருக்காலைத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள், தந்த, பழைய பிராஜக்ட் ரிப்போர்ட்கள். மதிப்பீடுகள், அளவுகள், கொள்கை விளக்கங்கள் அப்படியே மைய அரசின் தொழில் துறையில் இருக்கும் என்று கருதுகிறேன். அதை அப்படியே செயல்படுத்துவதை விட்டுவிட்டு, இன்றைக்குத் தகர டப்பா தொழிற்சாலையை ஆரம்பித்துவிட்டு, நம்மை ஏமாற்றுவதற்காக, மீண்டும் ஒரு புதிய திட்டத்தைத்தயாரித்து அனுப்புங்கள்என்று சொல்வது எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதை மாமன்றத்து உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

தொழில்கள் வளர வேண்டும், மாநிலங்களை நாங்கள் புறக்கணிக்கவில்லை. , எல்லா மாநிலங்களையும் சமமாக பாவிக்கிறோம் என்று சொல்கின்றவர்கள் இரும்பு உருக்காலைத்



தொழிற்சாலையைப் பொறுத்தவரை, எவ்வளவு பெரிய ஏமாற்றத்திற்கு நம்மை ஆளாக்கியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்த்தி, மைய அரசு இதிலே விரைவாக நடவடிக்கை எடுக்கவும் மாநில அரசைப் புறக்கணிக்கும் அந்தக் கொள்கையை விட்டுவிட்டு, குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற சேலம் மாவட்டத்திற்கு ஏற்படுத்தியிருக்கிற அநீதியைப் போக்கும்பொருட்டு, அந்த உருக்காலைத் திட்டத்தை விரைவுபடுத்தவும் வழி செய்ய வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையிலே மிகவும் பிற்படுத்தப்பட்டிருக்கிற, அனைத்து உலகத்திலே இருக்கிற மற்ற நாடுகளை விட சாதாரண நிலையிலுள்ள மணல் மேடுகளைக் கொண்டுள்ள அரபு நாடுகள் எல்லாம் மற்ற நாடுகளைப் பார்த்து கொக்கரிக்கிற சூழ்நிலைக்குக் காரணமாக அமைந்திருப்பது அரப நாடுகளிடம் உள்ள எண்ணெய்க் கிணறுகளும் ஆயில் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகின்ற எண்ணெய் உற்பத்தி ஆலைகளும்தான். ஆனால், இன்றைக்கு அதற்கு ஒரு மாற்றுப் பொருளாக, தமிழகத்திலே அதுவும் குறிப்பாக, பேரறிஞர் அண்ணா பெயராலே அமைந்திருக்கிற தமிழ்நாடு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பக் பல்கலைக் கழகத்தின் சார்பாக, 4, 5 கார்களை எதினாலைக் கொண்டு ஓட்டுகிறார்கள், பரீட்சார்த்தமாக எதினாலைக் கொண்டுஓட்டுவது என்று முடிவு எடுத்து, இன்றைக்கு அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கண்டுபிடிப்பினுடைய விவரங்கள், ஆராய்ச்சிக் குறிப்டகள் அங்கே இருக்கின்றன. இந்த நேரத்திலே, எதினாலை உபயோகப்படுத்தி நாம் மோட்டார் வாகனங்களை ஓட்டுகிறோம் என்று சொன்னால, எதினால் இண்டஸ்ட்ரீஸை நாம் தமிழகத்திலே கொண்டு வரவேண்டும்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்திலே சாகோ இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன் உருவாக்கி, மார்க்கெட்டிங் செசைட்டியை உருவாக்கி, இன்றைக்கு மிகப் பெரிய மாறுதலை உருவாக்கியிருக்கிறார்கள், சாகோவிலிருந்து எதினால் தயாரிக்க முடியும் என்று ஆராய்ச்சி செய்கிறார்கள், எதினால் தயாரிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகுமானால, சேலம் மாவட்டத்தினுடைய பொருளாதாரம் மட்டும் அல்ல அதனால், உயர்த்தப்படுவது, தமிழகத்தினுடைய பொருளாதாரம் மட்டும் அல்ல அதனால உயர்த்தப்படுவது, இந்திய துணைக் கண்டத்தினுடைய பொருளாதாரமே அதனால் உயரும். அரபு நாடுகளிலும் நாம் கை நீட்டி பிச்சை எடுத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இங்கே எதினால் மிகப் பெரிய அளவிலே உருவாக்கப்படுமானால், அதனுடைய

விளைவு மிகப் பெரிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும். அதன் உற்பத்தி செலவு 1 லிட்டருக்கு ரூ 2 தான் ஆகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், எக்சைஸ் டியூட்டி என்று சொல்லப்படுகிற, சுங்க வரி ரூ. 4. ரூ. 5 ஆகிறது. ஆகவே செலவு ரூ. 5, ரூ. 7 ஆகிறது. ஆனால், உண்மையிலேயே, எதினாலை நாமே உற்பத்தி செய்து மோட்டார் வாகனங்களுக்கு உபயோகிக்க முடியும் என்றால், ரூ. 2-ல் ஒரு லிட்டர் தயாரிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி முடியுமானால், மற்றைய ஏழைய நாடுகள் எல்லாம் தமிழகத்தையும், இந்திய துணைக் கண்டத்தையும் பார்த்து ஏங்கி நிற்கின்ற சூழ்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே மைய அரசிடம் எதினால் இண்டஸ்ட்ரீஸ் உருவாக்க நாம் வலியுறுத்த வேண்டும். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் 10, 12 ஆண்டுகளுக்கு முன்னாலே நாடாளுமன்றத்திலே அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கோரிக்கைகளும், ஆலோசனைகளும் பரிசீலிக்கப்படவில்லை. நிச்சயமாக.. அதைக்கூடிய விரைவிலே பரிசீலித்தாக வேணடும். எதினால் இண்டஸ்ட்ரீஸ் சேலம் மாவட்டத்திலே உருவாக்க வேண்டும். அதனுடைய துணைத் தொழில்களாக லிககுவிட் குளுக்கோஸ் என்று சொல்லப்படுகின்ற குளுக்கோஸ் போன்ற பொருள்களின் உற்பத்தித் தொழிற்சாலையைத் துவக்க வேண்டும்.

உப்பு சத்தியாக்கிரகத்தைப் பொறுத்த வரை, இரண்டு இடங்களில் தான் இந்தியாவிலே- மகாத்மா காந்தி அவர்கள் கண்டியிலும், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் வேதாரண்யத்திலும் —நடத்தினார்கள். இந்த உப்பு சத்தியாக்கிரகம் நடத்தப்பட்ட அந்தப் பகுதியிலே, அந்தச் சதுப்பு நிலப் பகுதியிலே உப்பு உற்பத்தி செய்வதற்கு இரசாயனத் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். அதனுடைய ஆய்வு அறிக்கை அரசிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதையும் உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் பகுதியிலே பெட்ரோலியம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால, பரோடா மாநிலத்திலே இருக்கின்ற பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலை அடிப்படையில் பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலை இருந்தாலும், பரோடா மாநிலத்தில் இருக்கின்ற பெட்ரோல் கெமிகல் காம்ப்ளெக்ஸ் என்ற அந்தத் தொழிற்சாலையைத் தமிழ் மாநிலத்திலே தஞ்சை, புதுக்கோட்டை பகுதிகளிலே நிறுவ வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன்.

தொழில் துறையிலே பிற்படுத்தப்பட்ட/மாவட்டமாகச் சேலம் மாவட்டத்தை அறிவித்து, குறிப்பாக, என் தொகுதியான



ராசிபுரம் வட்டத்தை தொழில்துறையில் பிற்படுத்தப்பட்ட வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சர்க்கரை ஆலையைச் சிதம்பரம் தாலுக்காவிலே ஏற்படுத்த வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கையை என் வாயிலாகத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கொள்கைக் குறிப்பில் தொழில் வளர்ச்சி பற்றியும், எதிர்கால வாய்ப்பினைப்பற்றியும் எடுத்து உரைத்ததைப் பார்த்தால் ரோஸி பிக்சர் கொடுத்திருக்கிறது என்பதுதான் என்னுடைய கருதது. இதுபற்றி நான் என்ன கூற விரும்புகிறேன் என்று சொன்னால், உண்மையிலேயே இருக்கக்கூடிய யதார்த்தத்திற்குப் புறம்பான முறையிலே, நன்றாக இருக்கிறது என்று காட்ட வேண்டும் என்று ஒரு சப்ஜெக்ட்டிவ் எண்ணத்திலிருந்து யதார்த்தத்திற்கு புறம்பான பல விஷயங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன என்பது என்னுடைய கருத்து. சுருங்கச்சொன்னால் கவர்ன்மெண்ட் இஸ் டாக்கிங் த்ரூ இட்ஸ் ஹேட்'' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள் ; அதைத் தமிழிலே சொல்லவேண்டும் என்றால் அரசாங்கப் பேச்சு வெறும் பீத்தல்தான். டிக்ஷனரியிலே பார்த்தேன், பீத்தல்என்ற வார்த்தை இருக்கிறது, அதனால்தான் சொல்கிறேன். ஆனால், '' கவர்ன்மெண்ட் இஸ் டாக்கிங் த்ரூ இட்ஸ் ஹேட் '' என்பதுதான் கரெக்ட் வார்த்தை.

இதுவரை மனிதனுக்குத்தான் சீக்கு பிடித்துக்கொண்டிருநதது. இப்பொழுது தொழிலுக்கும் நம் நாட்டிலே சீக்கு பிடித்துக்கொண்டிருக்கிறது. இண்டஸ்ட்டிரியல் சிக்னெஸ் வளர்ந்து வருகிறது. அதாவது, தொழில் நோய் என்று தமிழிலே நாம் சொல்வோம். தொழில் நோய் தீவிரமாகிறது.

ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா ரிப்போர்ட் 1979-ஐன் படி— ஏனென்றால், அதற்குப் பிறகு அந்த ட்ரெண்ட் ஒன்றும் ரிவர்ஸ் ஆகவில்லை. அந்த ஓராண்டில் மட்டும் 345 பெரும் தொழிற்சாலைகள் போண்டியாகி மூடிக் கிடக்கின்றன என்று ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா ரிப்போர்ட் கூறி; அதில் முடங்கிக் கிடக்கும் —அந்த 345 தொழில்களில் முடங்கிக் கிடக்கும் வங்கிக் கடன் தொகை 1,011 கோடி ரூபாய் என்று ரிசர்வ் பேங்க் ரிப்போர்ட் கூறுகிறது. அதாவது நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களின் மொத்தமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கும் மூலதனம் எவ்வளவு இருக்கிறதோ அதற்குச் சமமான தொகையாகும். (குறுக்கீடு) இந்தியா முழுவதற்கும் சொல்கிறேன், ஆர். பி. ஐ. ரிப்போர்ட்டை சொல்கிறேன்.

சிறு தொழில்களைப் பற்றியும் அதே ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது அதைவிடப் பரிதாபமாக இருக்கிறது. 20,326 தொழிற்சாலைகள் சிக்குப் பிடித்துக் கிடக்கின்றன என்று ஆர். பி. ஐ. ரிப்போர்ட் கூறுகிறது. அதுவும் இந்தியாவில்தான் நான் குறிப்பிட்டுக் கேட்க விரும்புகிறேன், இந்த இன்டஸ்ட்ரியல் சிக்னெஸ்-ம் மிஸ்மேனேஜ்மெண்ட் சிக்னெஸ்-ம் தமிழகத் தொழிலில் இல்லையா என்று நான் கேட்கிறேன். அதற்காகத்தான் நான் இதைக் கோட் பண்ணினேன்.

கோவை மாவட்டத்தில் எட்டு மில்கள் இந்த நோயினால் மூடிக்கிடப்பது உண்மைதானே ? சேலம் மாவட்டத்தில் ஆனானப்பட்ட பெரிய மில், மேட்டூர் பியர்ட்செல் போன மாதம் 20-ஆம் தேதியிலிருந்து சிக்குப்பிடித்து மூடப்பட்டுக் கிடக்கிறது. 3,000 தொழிலாளிகள் தெருவில் நிறுத்தப்பட்டுள்ளது தெரியாதா ? ப்ரொடக்‌ஷனைப்பற்றிப் பேசுபவர்கள் இப்பொழுது பேச மாட்டார்கள். ஏனென்றால் முதலாளிகள்தானே ப்ரொடக்‌ஷனை மூடியிருக்கிறார்கள்.

அடையார் ட்ரான்ஸ்பார்மர் அன்ட் ஸ்விச் கீர் லிமிடெட் என்ற அந்த அருமையான யூனிட் சிக்குப்பிடித்து கடந்த 8 மாதங்களாக 40 சதம் தொழிலாளர்கள் லே ஆஃப் செய்யப்படுகின்றனர். அது சர்க்காருக்குத் தெரியாதா ?

கிண்டி டான்சி மோபெட் மேனுஃபாக்சர் பண்ணக்கூடிய யூனிட்—டி. வி. எஸ். 50 வந்தவுடன் அதற்குச் சிக்கு பிடித்துப் போயிற்று. ரீடிசைன் பண்ணுவதிலே டி. வி. எஸ்.னுடைய அதனோடு கேச்சப் பண்ண முடியாததால் அதற்கும் சிக்குப் பிடித்து அதிலே 35 தொழிலாளர்கள் ரெட்ரெச்மெண்ட் செய்யப்பட்டு, இன்னும் ரெட்ரெச்மெண்ட் வரக்கூடிய ஆபத்து அதற்கு இருக்கிறது.

[முற்பகல் 11–40]

இந்த நோய் வரும் ஆண்டில் இன்னும் பரவாதா ? அதைப் பற்றி அரசாங்கம் ஏதாவது அசெஸ் பண்ணிஇருக்கிறார்களா, இந்த நோட்டிலே அதைப் பற்றி அசெஸ்மெண்ட் ஒன்றையும் காணவில்லை. இந்த நெருக்கடிக்கு நீங்கள் கண்ணை மூடிக் கொண்டால் இந்த நெருக்கடி இல்லாமல் போகுமா ? இந்த அபாயத்தை ஏன் மறுக்கிறீர்கள்.

தமிழகத்தில் மூலப்பொருள்கள் பெரும் தொழில்களால் கைப் பற்றப்படுவதால் சிறு தொழில்கள் பாதிக்கப்படுகின்றன.

cornered by big business groups



மத்திய அரசு போதிய அளவு கொடுக்கவில்லை என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் அடிக்கடி கூறுவார். உண்மைதான். ஆனால் மத்திய அரசு போதுமான அளவு கொடுக்காத அந்த மூலப் பொருள் தமிழ் நாட்டில் கூடுதல் விலை கொடுததால் எந்த நேரததிலும் எப்போது வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறதே, அதனுடைய இரகசியம் என்ன ? மத்திய அரசிடம் இருந்து இந்த சிறுதொழில்களுக்கு வரக்கூடிய அந்த மூலப் பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்காமல், வந்த அந்தப் பொருள்கள், அலாட் பண்ணி கையிலே எடுதத பொருள்கள், அவர்களுக்கு கிடைக்காமல் ஸ்ட்ரெய்ட்டாக பிளாக்மார்க்கட்டுக்கு சப்ஸ்டான்சியல் போர்‌ஷன் போகிறது என்று அர்த்தம். ஆகவே, இந்த மூலப்பொருள்கள் வினியோக முறையை பலப் படுததினால், ஸ்மால்ஸ்கேல் இன்டஸ்ட்டிரிஸ்லே தயாரிக்கப்படும் பொருள்கள் மார்க்கட் ஆவதற்கு ஏற்பாடு செய்து அதற்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில தொழிலதிபர்கள் சிறு தொழிலுக்கு நீங்கள் கொடுக்கக் கூடிய சலுகைகளை தாங்கள் பயன்படுத்துவதற்காக தங்களுடைய பெரிய தொழிலை சிறிய தொழிலாக ஸ்பிளிட் பண்ணுகின்ற அந்த சட்ட விரோதமான நடவடிக்கையிலே இறங்கி இருக்கிறார்கள். அதுதான் நாகபபட்டினததிலே இருக்கின்ற ஸ்டீல் ரோலிங் மில்ஸ்-இல் நடக்கின்றது. அதை ஸ்பிளிட் பண்ணுகின்ற முயற்சியிலே இறங்கி அப்படி பண்ணினால்தான், நீங்கள் கொடுக்கும் சலுகைகளைப்பெறலாம் என்ற அந்த நோக்கத்திற்காக ஸ்பிளிட் பண்ணுகிறார்கள். புரொடக்‌ஷன் நோக்கத்திற்காக அல்ல, அட்மினிஸ்ட்ரெஷன் நோக்கத்திற்காக அல்ல. சலுகைகள் தங்களுக்கு குறைவில்லாமல் இருப்பதற்காக அந்த சலுகையில் நுழைந்து வாங்கவேண்டும் என்று இல்லீகல் நோக்கத்திற்காக இப்படிச் செய்கிறார்கள். இதன் விளைவு இன்றைக்கு அந்த மில் தொழிலாளர்கள் வெளியே நிற்கிறார்கள். காரணம், அந்த முறையை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததால், இந்த இலட்சணத்தில் சமீபத்தில் முதலமைச்சரவர்கள் மாநாட்டிலே, டெல்லியிலே கலந்து கொண்ட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பிரதமர் திருமதி. காந்தி ஏற்றிவைத்த பூரண கும்பததை தாங்கி திரும்பி வந்துள்ளார். '' புரொடக்டிவிடி இயர் '' என்பதுதான் அந்த பூரண கும்பம். உற்பத்தித் திறன் ஆண்டு என்ற கோஷம்தான் அந்த பூரண கும்பம். அந்தப் பூரண கும்பமான உற்பததித் திறன் என்ற கோஷத்தை அமல்படுததினால் என்ன வரும் தெரியுமா ? திரு. விசுவநாதன் என்கிற முதலாளி, அவர் மூலமாகப் பேரெடுதத சிம்கோ பாக்டரியிலே நடக்கிற மாதிரிதான் நடக்கும். அதில் தொழிலாளிகள் உற்பத்தித் திறனை ஏற்றி வந்தார்கள், வருடா வருடம். 1974-லே ஒரு கோடியே 10 இலட்சம்ரூபாய் மதிப்புடைய உற்பத்தி ; 1978-லே 3 கோடியே 50 இலட்சம்

ரூபாய் மதிப்புடைய உற்பத்தி; அதற்குப் பிறகு, ஸ்ட்ரைக்குக்குப் பிறகு, 1980-லே 4 கோடியே 39 இலட்சம் ரூபாய் உற்பத்தி; 1981-லே 5 கோடியே 30 இலட்சம் ருபாய் வருமானத்தை உயர்த்தி இருக்கிறார்கள். இப்படி வரிசையாக ஏற்றி இருக்கிறார்கள். முடிவென்ன தெரியுமா ?

அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளையும் அந்த முதலாளி சமீபத்தில் கூப்பிட்டு வைத்து அவர் சொல்லி இருக்கிறார். நடப்பாண்டிலே 1982–83 ஆண்டிலே இந்த ஆண்டுக்கு மீட்டர் உற்பத்தியை பாதியாகக் குறைக்கப் போகிறேன். அதேபோல ஆவடி பாக்டரிக்காக அவர்கள் சப்ளை செய்து வந்திருக்கின்ற புரொடக்ஷன். அதையும் பாதியாகக் குறைப்பது—இந்த வார்த்தை அவர்கள் ப லன்ஸ் ஷீட்டிலே இல்லை, ஒரு நோட்டிலே இருக்கின்றது—பாதியாகக் குறைப்பது புத்திசாலித்தனமாக இருக்கும். புரொடக்டிவிடி இயரிலே புரொடக்ஷனைக் குறைப்பது ''

(It will be prudent)

அப்படி என்கிற வார்த்தை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதன் விளைவாக, இந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு, 300 தொழிலாளர்கள் ரிட்ரெச்மெண்ட், சிம்கோ பாக்டரியிலே செய்யப்பட இருக்கிறார்கள். 1982–83 ஆண்டு கடைசியிலே அனேகமாக பாக்டரியை மூடுவதற்கு சமமான ஒரு நிலைதான் அவர்கள் உண்டாக்குவார்கள். ஏன், உற்பத்தி திறன் ஆண்டு அல்லவா ? ஆகவே, பாதி உற்பத்தியாகக்குறைப்பது, உற்பததித் திறன் ஆண்டல்லவா ? ஆகவே, 300 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்புவது—உற்பத்தித திறன் ஆண்டல்லவா ? ஆகவே, பாக்டரியை மூடுவது.

What is the secret behind

இரகசியம் வேறு ஒன்றும் இல்லை.

Silver oxide zinc battery

என்ற பொருள் உற்பத்தி. அதற்கு 30 பேரே போதும். பயங்கரமான இலாபம் கிடைக்கும் Nickel cadmium battery

என்ற பொருள் உற்பத்தி, அதற்கு 70 பேரே போதும். பயங்கரமான இலாபம் கிடைக்கும். ஆகவே, அந்த முதலாளிக்கு மீட்டர் உற்பத்தியை விட அதிக இலாபம் கிடைக்கும். ஆகவே, அந்த முதலாளி மீட்டர் உற்பத்தியை உதாசீனப்படுத்தி அதை விட்டு விடலாம் என்பது அவருடைய நோக்கம். ஆகவே, உற்பத்தித் திறன் ஆண்டில் உற்பத்தியைப் பெருக்கியதனால் 1,300 தொழி



லாளர்கள் தெருவிலே நிற்கின்ற நிலை, சிம்கோ மீட்டர்லே. அதிலே 400 பேர்கள் பெண்கள், மறந்துவிடாதீர்கள். முதலாளி கூறுகிறார் நாம் போய் முதல்வரைப் பார்த்து, புகளூர் பேப்பர் பாக்டரியிலும், அவர் எங்கோ ஆரம்பிக்க இருக்கும்—திரு. விசுவநாதன்—சுகர்பாக்டரியிலே முதல்வரைப் பார்தது வேலை கேட்க வேண்டுமாம். இந்த முதலாளியின் இலாப வெறிக்கு இவர்கள் நாடோடிகளாக மாற வேண்டுமாம். உற்பத்தித் திறன் ஆண்டின் போலித்தனத்தைப் இப்போதாவது பார்த்தீர்களா ? இது உற்பத்தித்திறன் ஆண்டல்ல, இது இலாப வெறி ஆண்டு என்றுதான் நான் கேரக்டரைஸ் பண்ணுவேன். ஜனவரி 19-லே ஒரு நாள் உற்பத்தித தடை என்றதும், 10 ஆயிரம் பேர் கைது செய்திருக்கக்கூடிய அளவிற்கு, 3 பேரை சுட்டுத்தள்ளக்கூடிய அளவிற்குக் கோபம் வந்தது நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு. 5 வருஷமாக முழு உற்பததியையும் நிறுத்திய மேட்டூர் மில் முதலாளி மீது ஏன் கோபம் வரவில்லை ? அநேகமாக 300 பேரை வெளியே அனுப்பிவிட்டு 1981–82-லே ஸ்டாப்பேஜ் பொசிஷனிலே வைத்து 50 சதவீதம் உற்பத்தியைக் குறைப்பேன் என்று சொன்ன விஸ்வநாதன் பேரிலே ஏன் கோபம் வரவில்லை. ஒரு நாளைக்கு உற்பத்தியை நிறுத்தியதற்கு கோபம் வந்ததற்கு ஏன் இதற்கு கோபம் வரவில்லை. இப்பொழுதே சர்க்கார் தலையிட்டு ஆட்குறைப்பை நிறுத்துவதுடன் மூடுவதையும் நிறுத்த வேண்டும். பியர்ட்ஸ் மில்லையும், சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையையும் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும். ஏற்பாடு செய்ய இந்த அவசர அவசரமான காரியத்தைச் செய்ய வேண்டும். இல்லாவிடில் அந்தத தொழிலாளிகளுக்கு வேறு வழி இருக்காது. இனி ஆரம்பிக்கப்போகிறது முதலாளித் தாக்குதல். உயிரைக் கொடுத்தாவது அவர்களுடைய ரைட்ஸை பாதுகாப்பதைத் தவிரவேறு வழி இல்லை.

அடுத்தபடியாக, எதை வைத்து பிரமாதமாக தொழில் மயமாக்கப்போவதாக நீங்கள் கூறுகிறீர்கள் ? கொள்கைக் குறிப்பில நீங்களே. கூறுவது '' ஒரு மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, மததிய அரசுததுறை திட்டங்களில் செயல்படும் மு லீடுகளின் அளவை பொறுத்து அமைகிறது என்று நீங்கள் கூறுகிறீர்கள் நீங்கள் கூறுவது கரெக்ட். அது உண்மைதான். ஆனால், மததிய அரசு அந்த முதலீடுகளைக் குறைத்துள்ளது என்று நீங்கள கூறுகிறீர்கள். அதை ஒட்டிர்தான் இருக்கும். ஆனால், இதே சென்ட்ரல் கவர் பணட் தொடர்ந்து குறைதது வந்திருக்கிறது என்ற உண்மையை நீங்கள் சொல்லுகிறீர்கள். மத்திய அரசு முதலிடுகளைக் குறைத்துள்ளது என நீங்கள் கூறுகிறீர்கள். மத்திய அரசை அணுகிப் பிரயோஜனம் இல்லையென்று மாண்புமிகு தொழில் அமைச்சர் கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது சொல்லியிருக்கிறார்கள், ஜனங்களைத் திரட்டவும் தயாராக

இல்லை. அணுகியும் பிரயோஜனம் இல்லை. மத்திய அரசின் தொழில் வளர்ச்சித் தடைக் கொள்கையை நீங்கள் தலைவிதியே எனச் சொல்லி அதை ஏற்றுக்கொள்வதைத் தவிர,

There is no objective conclusion to your practice

அடுத்தபடியாக, இங்கே அவை முன்னவர் அவர்கள் பேசும் போது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசிடம் இருந்து எவ்வளவு பெரும் தொகை பெற்றுவிட்டோம் பார்த்தீர்களா என்று சொன்னார். அதை ரொம்ப பெருமையாகச் சொன்னார். பிகரைப் பார்க்கும்போது மிகவும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அதனுடைய உள் ரகசியத்தை, இந்த அவையில் சொல்லாமல் டெல்லியில் அவர் சொல்லிவிட்டார். அங்கு அவர் உண்மையைச் சொல்லிவிட்டார். அவர் சமீபத்தில் நடந்த முதல்வர்கள் கூட்டத்தில் கூறினார் அது எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருக்கிறது. 15 ஆம் தேதி பத்திரிகையில். ''மாநிலத்தின் 6 ஆவது திட்ட காலத்திற்கு மத்திய அரசு 606 கோடி ரூபாய் உதவித் தொகை தருவதாக உறுதி அளித்திருந்தாலும் நிலக்கரி விலையையும், பெட்ரோல், டீசல் விலைகளையும்; உயர்த்தியதின் மூலம் எங்கள் மாநிலத்திலிருந்து 220 கோடி ரூபாயை நீங்கள் எடுத்துக் கொண்டு போய்விட்டீர்கள்.'' என்று அவர்கள் பேசினார்கள். குறிப்பாகச் சொன்னார். அங்கே தான் அந்த உண்மையைச் சொன்னார். இங்கே பார்த்தால் 600 கோடி அங்கே பார்த்தால் 700 கோடி, ஆகவே, மத்திய அரசு உதவித் தொகை ரூபாய் 606 கோடியல்ல. அதில் 220 கோடியைக் கழித்தால் மீதி வருவது 386 கோடி ரூபாய்தான். இந்த 386 கோடியிலேதான் நம்முடைய மாண்புமிகு 2 அமைச்சர்களும் திட்டங்களைத் தீட்ட வேண்டும். இதிலே அவர்களுக்கு என்னதான் கிடைக்கப்போகிறது.

It is at variance with realities.

என்னமோ நீங்கள் தொழில் வளமாக்கப் போவதாக கூறுகிறீர்களே, மின்சாரக் கட்டுப்பாட்டினால், சிமெண்ட் உற்பத்தி பாதித்துள்ளதாக சிட்கோ ரிப்போர்ட்டில் கூறியுள்ளீர்கள். இன்ப்ராஸ்ட்ரக்சுரலில் சிமெண்ட், இன்ப்ரா ஸ்ட்ரக்சுரலில் நிலக்கரி போன்றவைகளுக்கு மத்திய அரசு போதிய அளவு உதவி தரவில்லையென்று இதே அவையில் நீங்கள் கூறியுள்ளீர்கள். அப்படி இருக்கும்போது எப்படி தொழில் திட்டங்கள் வளரும். எவ்வளவு எஸ்டாப்ளிஷ் பண்ணினாலும் இந்த ஏற்பாடு சரியாக இல்லையென்று சொன்னால், இன்ப்ராஸ்ட்ரக்சுரல் பொருள்கள் நமக்கு கிடைக்கவில்லை என்று சொன்னால் மீண்டும் உற்பத்தி நின்று, உற்பத்தி நின்று இதிலே சிக்கல்கள் தான் அதிகமாக வளரும்.



இந்த பின்னணியில் தான் அரசாங்கத்தின் சமீபத்திய கொள்கை முடிவுகளைப் பார்க்க வேண்டும். மத்திய அரசாங்கத்தின் ஓரவஞ்சனையை எதிர்த்து மாற்றுக் கொள்கைக்காக மக்களைத் திரட்டத் தயாராக இல்லை. ஆகவே அவர்களோடு ஏன் எதிர்த்துச் சண்டை போடுவானேன், நாம் இங்கே இருக்கின்ற முதலாளிகளுக்கு கொடுத்து, அப்படியே இண்ட்ஸ்ட்டிரியலைஸ் பண்ணலாம் என்பதுதான் சப்ஸிகுவென்ட்டாக இப்போதைய உங்கள் கொள்கை. இதுவரை அரசுத் துறைக்கு என ஒதுக்கிய தொழில் துறைகளில் நுழைய, தனி முதலாளிகளை அழைப்போம் என்பது தமிழக அரசின் முடிவு. அதனால்தான் மின் துறையில், அரசுக்கு என்று ஒதுக்கிய துறையில் தனி முதலாளிகளை அழைக்கும் பிற்போக்கான கொள்கைகளை நம்முடைய அரசாங்கம் அறிவித்திருக்கிறார்கள். 1973 ஆம் ஆண்டில் இனிமேல் அமைக்கப்படும் சர்க்கரை ஆலைகள் எல்லாம் பொதுத்துறையில்தான் அமைக்கப்படும் என்று அன்றைய அரசாங்கம் ஒரு கொள்கை முடிவை அறிவித்தார்கள்.

(முற்பகல் 11—50)

1977 ஆம் ஆண்டில் இனிமேல் அமைக்கப்படும் சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையில்தான் அமைக்கப்படும் என்று இந்த் சர்க்கார் அறிவித்தது. இப்போது 1982 ஆம் ஆண்டில் இனிமேல் அமைக்கப்படும் சர்க்கரை ஆலைகள், தனிப்பட்ட முதலாளிகள் முன் வந்தால் அவர்கள் நிறுவ அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் போட்டிருக்கிற வாசகங்களில் கொஞ்சம் மாற்றம் இருக்கிறதே தவிர உங்களுடைய எண்ணம் அதுதான். பப்ளிக் செக்டார் முன் வரவில்லை என்றால், கூட்டுறவுத் துறை முன் வரவில்லை என்றால் தனியாருக்குக் கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். பப்ளிக் செக்டார் யார் ? நீங்கள்தான், நான் முன்னுக்கு வரவில்லை என்றால் அவர்கள் முன்னுக்கு வந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னால் அதனுடைய அர்த்தம் என்ன? இது என்ன ஏற்பாடு ? இந்த வார்த்தைகள் எல்லாம் வேண்டாம். பிரைவேட் செக்டாருக்கு கொடுப்பதற்காக இப்படி சுற்றி வளைத்துப் போட்டிருக்கிறீர்கள்.

இந்த சர்க்கரைத் தொழிலைப் பொறுததவரையில் இப்போது என்ன நிலைமை இருக்கிறது ? பொதுத் துறையிலும் கூட்டுறவுத துறையிலும் இருப்பதைவிட தனியார் துறையில் தான் சர்க்கரை ஆலை அதிகமாக இருக்கிறது. அப்படி இருக்கும் போது ஏன் மேலும் முதலாளிகள் ஷுகர் பாக்டரி நடத்த அனுமதிக்க வேண்டும் ? அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இது ஒரு இலாபகரமான தொழில். 1979—80 ஆம்

ஆண்டில் கூட்டுறவுத் துறையில் இருக்கிற சர்க்கரை ஆலைகளில் 2 கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டில் இதே கூட்டுறவுத் துறையில் இருக்கும் சர்க்கரை ஆலைகளில் 1,35,00,000 ரூபாய் லாபம் வந்திருக்கிறது. உங்களுடைய பெர்பார்மன்ஸ் ரிப்போர்ட்டிலே இந்த விவரம் இருக்கிறது.

மின்சாரத்தைப் பற்றிச் சொல்லும் போது, ஏன் தனியார் முன் வந்தால் அவர்கள் நடத்த அனுமதிக்க முடிவு செய்தோம் என்பதற்கு நம்முடைய முதலமைச்சர் ஒரு காரணத்தைச் சொன்னார். தனியாருக்குக் கொடுத்தால் நமக்கு வருகின்ற நஷ்டம் போய்விடும்; அது மட்டுமல்லாமல் நமக்கு பணமும் வரும் என்று சொன்னார். ஆனால் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த வரையில் சர்க்கார் இந்த தொழிலை வெற்றிகரமாக நடத்திக் காட்டியிருக்கிறது. லாபகரமாக இந்த தொழிலை நடத்த முடியும் என்பது அனுபவப்பூர்வமாக தெரிகிறது. அப்படி லாபம் வருகிறது என்று தெரிந்தும் இந்த தொழிலை முதலாளிகளிடம் ஏன் ஒப்படைக்க வேண்டும்? இந்த முடிவால் அரசாங்கத்தின் அந்தரங்கசுத்தியை ஏன் சந்தேகிக்கக்கூடாது?

I doubt your bonafides in this statement of policy.

இதிலே முதலாளிகளிடமிருந்து ஏதாவது, 'கிக்பாக்' பிரதிபலன் கிடைத்திருக்கும் அல்லது எதிர்பார்க்கிறீர்கள் என்று ஏன் சந்தேகப்பட இடம் இருக்கிறதல்லவா? ஏன் சந்தேகப்பட கூடாது? ஐ டோண்ட் சீ எனி அதர் பேசிஸ். ஆகையால் இந்தக் கொள்கையை நீங்கள் உடனடியாக கைவிடுவது நல்லது. ஏற்கெனவே இருப்பதுபோலவே இருக்க வேண்டும்; அதுதான் நமக்கு நல்லது. இல்லை என்றால் உங்கள் தொழில் கொள்கையில் பிரதானமான நோக்கம் இந்த நாட்டிலே முதலாளிகளை கொழுக்க வைப்பது தான் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் புகளூரில் நீங்கள் அமைக்க இருக்கும் பேப்பர் பாக்டரி பற்றிய எங்களுடைய அச்சத்தைத் கூறி தான் ஆக வேண்டும். கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதம் உண்டாக்குவது என்பது திட்டம். சர்க்கரை ஆலைகள் இதுவரை தங்கள் ஆலைகளுக்கு ஆவி உண்டாக்க சக்கையை உபயோகப்படுத்தி வந்தார்கள். அந்தச் சக்கையை பேப்பர் பாக்டரிக்குக் கொடுக்கவும் அதற்கு பதிலாக ஆவி உண்டாக்கும் பாயிலர்களை பேப்பர் பாக்டரி சர்க்கரை ஆலைகளுக்கு பொருத்திக் கொடுப்பதாகவும் ஒப்பந்தம். ஆனால் சர்க்கரை ஆலைகளுக்கு பொருத்தப்படும் பாயிலர்களுக்கு நிலக்கரி வேண்டும் அல்லவா? நிலக்கரிக்கு எல்லா ஒப்பந்தங்களும் செய்து விட்டோம் என்கிறார்கள். உங்களுடைய குறிப்பிலும் இருக்கிறது. அக்ரீமென்ட் நல்லா தான் இருக்கு. ஆனால் நம்முடைய அனுபவம் என்ன?



மின்சாரத்திற்கே போதிய நிலக்கரி கிடைக்காமல், கிடைப்பதும் காலாகாலத்தில் கிடைக்காமல், எண்ணூர் மின் நிலையம் மற்ற தொழில்கள் எல்லாம் 'தத்தளிங்கிண்ணத்தோம்' போடுவது நமக்கு தெரியும். அதைப் பற்றி எல்லாம் ஒத்திவைப்பு தீர்மானம், கவன ஈர்ப்பு தீர்மானம் வருகிறது.

நம்முடைய அனுபவம்—நிலக்கரி இருந்தால் வேகன் இல்லை; வேகன் இருந்தால் நிலக்கரி இல்லை என்ற நிலைமையை நாம இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் அதற்கு தகுந்தாற்போல் நம்முடைய சர்க்கரை ஆலைகள் தாளம் போட வேண்டியிருக்கும். இது "அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாகப் போகிறது" அதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு தகவலைச் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். 1964—1968 ஆம் ஆண்டில் இதே திரு. விஸ்வநாதன் அவர்களின் பள்ளிபாளையம் பேப்பர் பாக்டரி புகளூர் சர்க்கரை ஆலையின் சக்கை பூராவையும் வாங்கி, சர்க்கரை ஆலைக்கு ஆயில் பர்னேஸ்டு பாயிலர் பொருத்திக் கொடுத்தார்கள். ஆனால் ஆயில் பர்னேஸ்டு பாயிலர் முறையை ஓட்டிக் கொடுப்பது தனக்கு கட்டுப்படியாகாது என்று சொல்லிவிட்டார். இது நம்முடைய பாஸ்ட் எக்ஸ்பீரியன்ஸ். அது தோல்வியுற்றது. மீண்டும் புகளூர் சர்க்கரை ஆலை சக்கையையே உபயோகப்படுத்தியது.

Thiru. K.S.G. Haja Shareef: The Hon. Member is not correct in accusing a person who is not in the House. He is right, if he keeps himself only on broader line, without mentioning individuals and talking in a very losse manner.

திரு. ஆர். உமாநாத்: தலைவர் அவர்களே, இங்கே நான் சார்ஜஸ் எதையும் சொல்லவில்லை. பாக்ட்ஸ்ஸைப் பற்றி மட்டும் பேசுகிறேன். மேலும், நான் குறிப்பிடுகின்ற நபர் அந்த இன்ஸ்டிட்யூஷனின் சேர்மன் என்று பாலிசி நோட்டில் இருக்கிறது. ஆகவேதான் சொல்கிறேன்.

ஆயில்-பர்னேசுடு பாயிலர் முறையில் ஓட்டிக்கொடுப்பது, தனக்குக் கட்டுப்படியாகாது என்று சொல்லி, அது தோல்வியுற்றது என்று சொல்லி, மீண்டும் புகளூர் சர்க்கரை ஆலை சக்கையையே உபயோகப்படுத்தியது.

They went back

ஆகவே, 1964-68-லேயே இந்த நிலைமை என்றால், இன்றைய எண்ணெய் விலைக்கும், நிலக்கரி விலைக்கும் எப்படித் தாங்கும்.

It is a serious matter I smell some rat in this whole affair.

இந்த விவகாரத்தில் எலி செத்த வாடை அடிக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்தத் திட்டத்தின் கொள்கை, அதனுடைய உள்ளடக்கத்தை மொத்தமாகப் பார்த்தால், "மங்கியிஷ்ஷாக" இருக்கிறது. "மங்கியிஷ்" என்று சொன்னால், குரங்கு சேஷ்டைகள் அடங்கியதாக இருக்கிறது. இங்கேயிருக்கும் பல்வேறு முடிவுகள், பல்வேறு நிலைமைகள் அதை எடுத்துக் காட்டுகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், தமிழக அரசு, ஐ.டி.பி.ஐ., உலக வங்கி எல்லோரும் பணம் போடுவார்கள். ஆனால், ஒரு பங்கு கூட இல்லாத ஒரு நபர் அதற்குச் சேர்மனாக இருப்பார். அப்படியானால் அதனுடைய நடைமுறை எப்படியிருக்கும் ?

**Tamil Nadu Government will be used as work–horee for the Chairman.**

சேர்மனாக இருப்பவர்க்கு உழைக்கும் குதிரையாகத்தான் தமிழ் நாடு சர்க்கார் அமையும். அதனுடைய நடைமுறை அப்படித் தான் இருக்கும்.

அடுத்து; தமிழ் நாட்டில் "டிட்கோ", "சிட்கோ" போன்ற ஏராளமான "கோ"க்களை பெத்துத் தள்ளியிருக்கிறீர்கள். பிள்ளைகள் பெறுகின்ற மாதிரி நிறைய பெற்று இருக்கிறீர்கள். அவைகள் எப்படி இயங்கிக்கொண்டு இருக்கின்றன என்பதற்கு "டிட்கோ"வின் உதாரணம் கூறுவது அவசியம் என்று கருதுகிறேன். டிட்கோ 9 கம்பெனிகளுக்கு முதலீடு செய்தது. அவைகள் :—

Marthi Crystal Salt
Tamil Nadu Rubber
South rn Boras
Tamil Nadu International Electronics
Fine Measure Instruments
Tamil Nadu Alkaline Batteries
Motor Casting
Dharmapuri Casting
Plastic Resins and Chemical, Limited

இந்த 9 கம்பெனிகளின் பங்குகள், வங்கிக் கடன்கள், டிட்கோ முதலீடு செய்து இருக்கக்கூடிய தொகைகள் அனைத்தும், இந்த 9 கம்பெனிகளில் பூராவுமாக காலியாகிவிட்டன. இந்த 9 கம்பெனிகளில் டிட்கோ முதலீடு 54 இலட்சம் ரூபாய்—அதாவது ½ கோடி ரூபாய் க்ளோஸ். முதலே போச்சு என்கிறபோது



கடன் கொடுத்தது எங்கே வரப்போகிறது. இந்த 9 கம்பெனிகளில், 5 கம்பெனிகளுக்குக் கொடுத்த கடன் 1.90 கோடி ரூபாய்—அதாவது 2 கோடி ரூபாய். முதலீடே போச்சு என்கிறபோது இந்த 2 கோடி ரூபாய் எங்கே கொடுக்கப்போகிறார்கள்.

எப்படியெல்லாம் போச்சு என்பதைப் பாருங்கள். தருமபுரி கேஸ்டிங்ஸ் நிறுவனத்தை மட்டும் தான் சிக் என்று டேக்கன் ஓவர் செய்து இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இரண்டு கம்பெனிகளுக்கு உற்பத்தி முறை தெரியாமலேயே (நோ-ஹௌ தெரியாமலேயே) பணம் கொடுத்து ப்ளோட் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் ப்ளோட் செய்து இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்புதான் கண்டுபிடிக்கிறார்கள். அவர்களுக்கு 'டெக்னிகல் நோ-ஹௌ' தெரியவில்லை என்று. இப்படிப்பட்ட ஒரு கம்பெனிக்கு ஏன் முதலீடும், கடனும் கொடுத்தீர்கள்? இன்னொன்று, வைன்ட்-அப் செய்தாகிவிட்டது. இதற்குக் கொடுத்த மூலதனமும், கடனும் ½ கோடி ரூபாய். நான்கு கம்பெனிகள் இன்சால்வென்சி பெட்டிஷன்—போன்டி பெட்டிஷன் கொடுத்து, பிரகடனப்படுத்திவிட்டார்கள்.

ஒரு கம்பெனி ஆரம்பிக்க சம்பந்தப்பட்ட நபர் 25 சதவீதம் ஷேர் போட்டால், டிட்கோ 26 சதவீதம் போட வேண்டும். தனி நபர் போட்டாச்சு என்று பரிசீலித்த பிறகு தான், அவர் போட்டு விட்டார் என்று தெரிந்த பிறகு தான், டிட்கோ தன்னுடையத் தொகையைக் கொடுக்க வேண்டும். அந்த மாதிரி, 'வெரிபிகேஷன்' நடைபெறுகிறதா என்று கேட்டால், நடைபெறுகிறது ; அது எங்கே என்று கேட்டால் 'சோளா டின்னர் டேபிளில்'. சோளா டின்னர் டேபிளில் வெரிபிகேஷன் நடந்தால் என்ன ஆகும், "பாஸ், பாஸ்" என்று ஆகும். அதனால் என்ன பார்க்கிறோம் என்று சொன்னால், அவங்க அமைக்க முன்வந்து இருக்கும் கம்பெனிக்கு முதலில் அவர்கள் பணம் போடாமலேயே, அவர்கள் பணம் போடுவதற்கு முன்னமேயே, அந்தக் கம்பெனிக்கு டிட்கோ தன்னுடைய தொகையில் ஒரு பகுதி, அல்லது முழுமையாக தொகை போடும் நிலைமைகள் ஏராளமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட கேஸ்கள் ஏராளமாக இருக்கின்றன. கூட்டுத்துறை எப்படி பங்ஷன் செய்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன்.

தமிழ்நாடு கெமிக்கல் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் போர்ட் ஆப் மேனேஜ்மெண்ட் 1977-இல் ஒரு முடிவு செய்கிறது. அந்த யூனிட் வயபிள் இல்லை ; பிழைக்காத கேஸ் என்று ; முடிவு செய்கிறது. அந்தக் கம்பெனியின் போர்ட் ரிசல்யூஷன்படி அது வயபிள் இல்லை. அந்தக் கம்பெனி தன்னை ஏமாற்றி விட்டது, சீட் செய்து விட்டது என்று சொல்லி 'ஐ.டி.பி.ஐ.' அந்தக் கம்பெனியின் பேரில் கிரிமினல் கேஸ் போட்டு இருக்கிறது,

ஆனால், 1979-ல் திடீரென்று அது 'வயபிள்' ஆகிவிட்டது பிழைத்து விட்டது என்று சொல்கிறது. 1977-இல் பிழைக்காத, கேஸ்—நான்—வயபிள் என்று சொல்லப்பட்டு, 1978-இல் கிரிமினல் கேஸ் சீட் செய்து இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிற அந்தக் கம்பெனி 1979-இல் வயபிள், பிழைத்து விட்டது என்று சொன்னால், இடையில் என்ன நடந்தது? இடையில் என்னமோ கிசுகிசு நடந்து இருக்கிறது. என்னமோ விவகாரம் செய்து அதை சரிசெய்தாகிவிட்டது என்று அர்த்தம். அதனால்தான், ஐ.டி.பி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ., ஐ.எப்.சி.ஐ., போன்ற நிதி நிறுவனங்களுக்கு டிட்கோ மேல் நம்பிக்கை இல்லை. அந்த நம்பிக்கையில்லை, அதனால்தான், அந்த நம்பிக்கையில்லாத காரணத்தினால்தான், 8 கூட்டுத்துறை கம்பெனிக்கு கடன் கொடுக்க டிட்கோவிடம் உத்தரவாதம் எழுதி வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அதிலே என்னென்ன கண்டிஷன்கள், என்னென்ன உத்தரவாதங்கள் என்று பார்த்தால்; ஒன்று, அதில் போட்ட டிட்கோ ஷேரை விற்கக்கூடாது; இரண்டு, எஸ்டிமேட்டுக்கு மேல் ஸ்தாபிதச் செலவு மீறினால், அதை டிட்கோதான் கொடுக்க வேண்டும். மூன்று, இந்த நிதிநிறுவனங்களின் பணம் திருப்பிக் கொடுப்பதற்கு முன் டிட்கோ தனது கடனைத் திருப்பி எடுக்கக் கூடாது. டிட்கோ மீது எவ்வளவு அவநம்பிக்கையிருந்தால் இப்படிப்பட்ட இரும்பு வளையம் போட்ட பிறகுதான் ஐ.டி.பி. போன்றவைகளுக்கு கடனாக தொகை கொடுக்க முன் வருவார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

[நண்பகல் 12—00]

முதலீடு செய்து நான்கு ஐந்து ஆண்டுகளாகியும் உற்பத்தி ஆரம்பிக்காத கம்பெனிகள் நிறைய உண்டு. ஆகவேதான் நான் டிமேண்ட் செய்கிறேன் ஒரு என்குயரி வேண்டும் என்று.

I demand an enquiry by a High Court Judge with as istance of Comptroller and Auditor Geneial to enquire into this matter. அப்படிப்பட்ட ஒரு கமிட்டியை அமைத்து இந்தப் பிரச்னைக்கு நிச்சயமாக ஒரு தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம், சாத்தூர் தாலுக்காவில் காரிச்சேரி கிராமத்தில் மெட்ராஸ் சிமெண்ட்ஸ்ஸுக்கு (Quarry) குவாரி செய்ய உரிமை உண்டு. ஆனால், அதை ஒட்டியுள்ள இடத்தில் சட்ட விரோதமாக 9 வருஷங்களாக கிட்டத்தட்ட 60 லேக்ஸ் டன்களுக்கு குவாரி (Quarry) செய்து வருகிறார்கள். இது எப்படி சாத்தியம்? டிபார்ட்மெண்டுக்கு தெரியாதா? இன்ஸ்பெக்ஷன் இல்லையா. இருக்கிறது. இருந்தும் இப்படி நடக்கிறது என்றால், இதில் அதிகாரிகளின் கொல்லூயூஷன் இல்லாமல் எப்படி சாத்தியம் என்று கேட்க விரும்புகிறேன்?



அதே போன்று ஸ்வாகினி தாலுக்கா கிராமத்தில் 1101-1102 சர்வே நெம்பரில் 17 ஏக்கர் நிலத்தில், இராஜபாளையம் பலராம் இராஜா என்பவர் 1972-லிருந்து 76 வரையிலும், 1979-லிருந்து இப்போது வரையில் கிட்டத்தட்ட 8 வருடங்களாக, எந்தவித அனுமதியும் இல்லாமல் குவாரி செய்கிறார். கிட்டத்தட்ட 3 இலட்சம் டனகள் அளவில் சுண்ணாம்புக்கல் எடுக்கப்படுகிறது. இதற்கு ஒரு பெரிய தரத்தில் இருக்கும் கனிவள அதிகாரியும், அந்தத் தாலுக்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், ஒரு டெபுடி ஸ்டேட் ஜியாலஜிஸ்ட்டும் கொல்லுயூட்டாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆகவே, உடனடியாக அந்த ஆபீசர்களை சஸ்பெண்ட் செய்து, இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதோடு, அவர்கள் மீது என்குயரி ஆக்ஷனும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உப்புத் தொழிற்சாலை, உப்புச் சார்ந்த இராசயனத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை போன்றவைகள் நிறுவ தீவிர முயற்சி எடுக்க வேண்டும். அத்தோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் இது குறித்துச் சொன்னதை நான் ஆதரிக்கிறேன். அதற்காக திருச்சியிலிருந்து நாகைக்கும், சென்னையிலிருந்து வேதாரண்யத்திற்கும் பிராட்கேஜ் இரயில் பாதைகள் அமைக்கப் பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய இன்னொரு பாலிசிமேட்டர் பற்றி நான் இங்கே டிஸ்கஸ் செய்ய விரும்புகிறேன். தொழில் முன்னேற்றத்திற்கு தொழில் அமைதி தேவை என்கிறீர்கள். ஆனால், தொழில் தகராறுகள் வரும்போது, பேச்சு வார்த்தைகளை நடத்தி, தீர்வு கண்டு, சுமூகமான முறையில் வேலை நிறுத்தங்களை தவிர்ப்பதோ முடிப்பதோ அல்ல, நீங்கள் செய்வது. அதற்கு மாறாக தொழிலாளிகளை ஒரு கட்டுப்பாடற்ற காட்டு மிராண்டிக் கூட்டம் என்று நினைத்து, வேலை செய்வதாக பாசாங்கு செய்யும் ஒரு சோம்பேறிக் கூட்டம் என்று கருதி, துப்பாக்கிச் சுடுகள் நடத்தி வேலை நிறுத்தங்களைத் தடுத்து அவர்களை ஒடுக்கப் பார்க்கிறீர்கள். இந்த வகையான உங்களுடைய அணுகுமுறை சரியல்ல. உழைக்கும் கூட்டத்தைப்பார்த்து, அந்தத் தொழிலாளிகளைப் பார்த்தா நீங்கள் சோம்பேறிக் கூட்டம் என்று சொல்கிறீர்கள். இந்த அரசாங்கத்திற்கு ஒரு வேளை தெரியாமல் இருக்கலாம், மத்திய அரசின் கணக்கையே உங்களுக்கு உதாரணமாகக் காட்ட விரும்புகிறேன்.

சணல் ஆலை தொழிலாளி 1950-இல் தலா ஒன்று 2½ டன் உற்பத்தி செய்தார் என்றால், 1971-இல் தலா ஒன்று 5 டன் உற்பத்தி செய்திருக்கிறார்கள். நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி 1951-இல் தலா ஒன்று. 35 டன் எடுத்திருந்தால், 1971-இல்

தலா ஒன்று. 69 டன் எடுத்திருக்கிறார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலாளி 1961-இல் தலா ஒன்று 278 கே. ஜி. உற்பத்தி செய்தார்கள் என்றால் 1971 லே தலா ஒன்று 425 கே. ஜி. செய்திருக்கிறார்கள். இவர்களைப் பார்த்தா சோம்பேறிகள் என்கிறீர்கள்? இவர்களையா வேலை செய்யாமல் செய்வதாக பாசாங்கு செய்யக்கூடியவர்கள் என்கிறீர்கள்?

ஏன் உங்களுக்கென்று வேண்டுமானால் தமிழ்நாட்டிலேயே எடுத்துக் கொள்வோம், பஞ்சாலைகளில் அதுவும் பி. அண்டு சி. மில்லிலேயே; பஞ்சு கலவை பிரிவு முதல் நூல் நூற்கும் பிரிவுகள் வரை 1946-இல் 100 கதிர்களுக்கு 18 தொழிலாளிகள் செய்த வேலையை இப்போது 7½ ஆட்கள் தான் பார்க்கின்றனர். மதுரை கோட்ஸ்ல் 1946-இல் 1,000 கதிர்களுக்கு 16 பேர்கள் செய்த வேலையை இப்போது மூன்றே பேர்கள்தான் செய்கிறார்கள். சென்னை, அசோக் லேலண்ட் முதலாளி, டேவிட் செல்போர்ன் என்ற பிரிட்டிஷ் பத்திரிகையாளரிடம் ஒரு இன்டர்வியூ கொடுக்கிறார்கள்.

அப்போது என்ன சொல்கிறார் என்றால், பிரிட்டிஷ்காரர்களைப் பார்த்து '' நீங்கள் பிரிட்டனில் உங்கள் லேலண்ட் தொழிலாளிகளுக்கு வழங்கும் ஊதியத்தின் ஆறில் ஒரு பகுதிதான் நாங்கள் இங்கே சென்னையில் தருகிறோம். ஆனால் சென்னை லேலண்ட் தொழிலாளியின் உற்பத்தித் திறன் பிரிட்டிஷ் தொழிலாளியை விட 15-லிருந்து 20 சதம் அதிகமாக உள்ளது '' என்று லேலண்ட் முதலாளியாக இருக்கும் டேவிட் சல்போர்ன் சொல்கிறார். அப்படி என்றால் பிரிட்டிஷ் தொழிலாளியை விட நம்முடைய தொழிலாளி அதிக திறமைசாலி என அசோக் லேலண்ட் முதலாளி ஒப்புக் கொள்கிறார். அப்படிப்பட்ட நம்முடைய, தொழிலாளியைப் பற்றி கொஞ்சமாவது பெருமைப்பட வேண்டாமா?

A B itisher h s appreciat d b t you are no appreciating worker. அந்த மாதிரி நிலைமை இருக்கிறது. அதற்குப் பதிலாக சோமபேறி என்று சொல்கிறீர்கள். இவனைத்தான் கட்டுப்பாடற்றவன் என்று சொல்கிறீர்கள். இவனைத்தான் கூண்டிலேற்ற திட்டமிட்டுள்ளீர்கள்.

அடுத்து ஒரு நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சி. கடன் காரணமாக ஒரு பஞ்சாலைத் தொழிலாளி மூன்று நாள் லீவு எடுக்கிறார். இன்னொரு பேக்டரிக்குச் சென்று 3 நாட்கள் 9 ஷிப்டும் தொடர்ந்து வேலை செய்கிறார். அந்தத் தொழிலாளிகள் அவர்களுக்கு இருக்கும் கடன் காரணமாக அப்படி வேலை செய்கிறார்கள். அந்த நிலைமை உங்களுக்குத் தெரியாது. அப்படிக் கடன் காரணமாக பெர்மனன்ட்டாக வேலை செய்யும் தொழிற்



சாலையிலே 3 நாள் லீவு போட்டுவிட்டு இன்னொரு தொழிற்சாலைக்குப் போய் அந்த மூன்று நாட்களிலும் டே, நைட் என்று தொடர்ந்து 9 ஷிப்டும் தொடர்ந்து வேலை செய்து 9 நாள் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வீட்டிலே வந்து விழுந்து விடுகிறான். இப்படி உழைத்து உழைத்து அவன் சாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான்.

இப்படிப்பட்ட உண்மை நிலைமை புரியாமல் அந்தத் தொழிலாளி வர்க்கத்தைப் பார்த்து சோம்பேறி என்றும், கட்டுப்பாடற்றவன் என்றும் சொல்வது நிச்சயமாகத் தப்பானது.

இதைவிட நெஞ்சுருக்கும் இன்னொரு உண்மையினை நான் சொல்ல விரும்புகிறேன். சமீபத்திலே ஒரு இரயில்வே இன்ஜின் டிரைவர் ஆக்சிடெண்டிலே செத்துவிட்டார். அப்போது இரயில்வே போர்ட் சேர்மன் வந்தார். அவர் வந்து ஆபீஸர்கள் கூட்டத்தில் பேசியபோது சொன்னார். ' அந்த ஆக்சிடென்டிலே செத்த டிரைவர் 40 மணி நேரம் கன்டினுயுவஸாக வேலை செய்தார்' ஆகவே தான் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது ' என்று சொன்னார். ஆகவே தலைவரவர்களே, நான் உங்களிடத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கம் தொழிலாளர்களின் உண்மை நிலையினைப் பற்றி மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். நான்கைந்து மடங்கு அதிகப்படியாக வேலை செய்து அவர்கள் சாவுப் பாதையிலேதான் போகவேண்டிய நிலைமை இருக்கின்றது. அப்படி எல்லாம் 40 மணி நேரம் வேலை செய்து சாகக்கூடிய அவர்களைப் பார்த்து நீங்கள் இப்படிச் சொல்லக் கூடாது. தொழிலாளர் என்கின்றபோது நீங்கள் இதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் இன்னொரு பக்கத்திலே நீங்கள் பார்ப்பது யாரைத் தெரியுமா? இவர்களைச் சோம்பேரி என்று சொல்லிவிட்டு இன்னொரு பக்கம் பார்க்கிறீர்கள். உற்பத்தியைக் கவனிக்காமல் நாள் பூராவும் குடித்து 5 ஸ்டார் ஹோட்டலில் கூத்தாடும் பெரும் முதலாளிகள் தினமும் ப்ளேனில் பறந்து காலையில் ஒரு நாடு, மதியம் ஒரு நாடு, மாலையில் ஒரு நாடு, இரவிலே பாரீஸ் நகரம் இப்படி எல்லாம் மாறி மாறி வாழ்க்கைச் சுவையின் அயோக்கியத்தனமான ருசிகளை எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் முதலாளிகள்தான் இந்த அரசின் பார்வையில் உற்பத்தியாளர்கள், சுறுசுறுப்பானவர்கள், கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடையவர்கள். அதனால்தான் அவர்களுக்கு எல்லா கன்சஷனும் கொடுக்கிறார்கள். வரி விலக்கு, அது, இது எல்லாம் இலவசம் என்று கொடுக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. What is this policy?

ஆகவே நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் தருகின்ற இடைஞ்சல்களை நீக்க வேண்டும். அப்படி நீக்குவதற்குரிய முயற்சியிலே நாங்கள் ஒத்துழைப்போம். நீங்கள் தமிழக மக்களை நாடுங்கள். தொழிலாளர்களுக்குத் தேவையானதைச் செய்யுங்கள். அவர்களைச் சுரண்டுகின்றவர்களை விரட்டுங்கள், இப்படி நியாயமான ஒரு கோரிக்கை ஒரு புறம். மறுபுறத்திலே தொழிலாளருடைய ஒத்துழைப்பைப் பெற்று இந்த மாதிரி சரியான முயற்சியிலே நீங்கள் இறங்க வேண்டும். அப்படிப்பட்ட முயற்சியில் நீங்கள் இறங்கினால் எங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும். ஆனால் அந்த முறையில் இன்றைக்கு நீங்கள் வேறு ஒரு முறையைக் கையாளுகிறீர்கள். சுரண்டப்படும் உழைப்பாளிகளின் பக்கம் நாங்கள் நிற்கிறோம். சுரண்டும் முதலாளிகள் பக்கம் நீங்கள் நிற்கிறீர்கள்.

'There is no compromise. We stand by this side. you stand by the Exploiter ' side.

ஆகவே அந்த முறையிலே நமக்குள் எந்த காம்ப்ரமைசும் கிடையாது என்பதைச் சொல்லி அந்த முறையினை நீங்கள் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தொழில் பற்றிய மானியக் கோரிக்கை எண் 24, தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு மானியக் கோரிக்கை எண் 49 ஆகியவற்றை வரவேற்று என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விழைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு இன்றைக்கு தொழில் அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அருமை அண்ணன் திருநாவுக்கரசு அவர்களும், ஊரகத் தொழில் அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கே. அவர்களும் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தொழில் துறையிலே ஒரு அமைதியான சப்தம் இல்லாத, ஆரவாரமற்ற புரட்சி இன்றைக்கு நடந்துக் கொண்டிருக்கின்றது என்றால் அது நிச்சயமாக மிகையாக இருக்க முடியாது.

[பிற்பகல் 12-10]

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு திரு. புருஷோத்தமன் அவர்கள் கூறும்போது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தொழில் துறையில் தொட்டது துலங்கவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் தொட்டவை துலங்குகின்றனவா இல்லையா என்பதை இன்று நாட்டு மக்களும் நாடும்



உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் எதையும் தொடவே இல்லை என்பது தான் என்னுடைய கருத்து. அப்படி மீறி தொட்டிருந்தாலும் அது துருப் பிடித்துப் போயிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் மட்டுமல்ல. இந்தியத் துணைக் கண்டத்திலே அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டுவது தோல் தொழில், அதில் நாம் இரண்டாவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தோல் தொழிலில் அன்னியச் செலாவணியை ஈட்டுவ்தில் நம் மாநிலம் முதல் இடத்தில் இருந்துக் கொண்டிருக்கிறது என்பதை நாடு நன்கு உணரும். அந்தத் தொழில் மேலும் நசிந்துவிடாமல், அந்தத் தொழிலில் இருக்கக்கூடிய பிரச்சினைகளில் அரசு சார்பில் ஒட்டு மொத்தமாக பல தீர்வுகளைக் காண வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படக்கூடிய கழிவுநீர் இன்றைக்கு குடிநீரைக் கெடுக்கக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலை இருப்பதால் அதைக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் 120-க்கு மேற்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருந்த போதிலும் ஒவ்வொரு ஊரிலும் ஏழெட்டு நிறுவனங்கள் தவிர, மற்ற நிறுவனங்கள் எல்லாம் வாடகைக் கட்டடங்களில் இயங்கக் கூடிய நிலை இருக்கிறது. இந்த ஆலைகளிலிருந்து வரக் கூடிய கழிவு நீரை மொத்தமாக எடுத்து காமன் ட்ரேனேஜ் மூலம் ஒன்று திரட்டி எப்ளுவன்ட் ட்ரீட்மென்ட் ப்ளான்ட் கட்டுவதற்கு வேண்டிய கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதாலும் இந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக தொடர்ந்து மின்சாரம் ஒழுங்காகக் கிடைக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கென ஒரு தனி தொழிற்பேட்டை ஆம்பூர், வாணியம்பாடி பகுதியில் நிறுவ அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கழிவு நீர் பிரச்சினையைப் பொறுத்து தமிழக அரசு இன்றைக்கு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் நிச்சயமாகப் பாராட்டப்படக்கூடியவையாகும். மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்தத் தொழிலில் இருக்கக் கூடியவர்களை அழைத்து பல்வேறு கூட்டங்களில் பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் மூலமாக இன்றைக்கு சிறிய தோல் பதனிடும் தொழிற்சாலை அதிபர்கள் இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் அதிபர்களுக்கு பினிசிங்

யூனிட்ஸ் போன்றவை அமைக்க பலயிடங்களில் முதலீடுகள் தேவைப்படுவதால் அவர்கள் இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள மெஷின்களை வாங்க முடியாது என்பதால் தோல் பதனிடும் தொழிலுக்காக சேவை சங்கங்கள் அமைத்துள்ளதைப் பாராட்டுகிறேன். அதற்காக தோல் பதனிடும் தொழிற்சாலை அதிபர்கள் சார்பாக அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் பல சேவை சங்கங்கள் அமைக்கவும் நவீனமான இயந்திரங்களைப் பெறுவதற்கும் அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தோல் ஏற்றுமதி செய்வதை விட்டுவிட்டு அதை தோல் பொருள்களாக மாற்றி ஏற்றுமதி செய்வதன் மூலமாக தமிழக அரசுக்கு நல்லதொரு பெயர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் அரசே தோல் பொருள்கள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளை அந்தப் பகுதிகளில் நிறுவுவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தொழிலை நவீனமயமாக்கவும் அதில் பல்வேறு முன்னேற்றங்களைக் கொண்டு வருவதற்கும் இந்தத் தொழிலுக்காகவேண்டி ஒரு லெதர் கார்ப்பரேஷன் அமைத்துத்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்தி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

லெதர் கார்ப்பொரேஷன் அமைப்பதன் மூலம், இந்தத் தொழிலில் பல நல்ல முன்னேற்றங்களைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விண்ணமங்கலத்திலே இருக்கின்ற டான்சி டானரியிலே தோல் பொருள்கள் சுமார் 84 இலட்சத்திற்கு மேல் தேங்கிக் கிடக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். டான்சி நிறுவனம் ஏறத்தாழ 60 யூனிட்டுகளை நடத்திக்கொண்டிருக்கிறது. அதிலே ஒன்றுதான் இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலை. இந்த 60 யூனிட்டுகளில் டான்சி டேனரிதான் மிகவும் லாபகரமாக இயங்கிக்கொண்டு வருகின்ற தொழிற்சாலையாகும். கடந்த ஆண்டில் தோல் தொழில் மிகவும் நலிவுற்று, மோசமான நிலைமையில் இருந்துவந்த காரணத்தினால், பல்வேறு தனிப்பட்ட தோல் தொழிற்சாலைகளும் என்னுடைய பகுதியிலே மூடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிக்கிறேன். இந்த ஆண்டுதான் அந்தத் தொழிலில் சற்று, மேலும் கொஞ்சம் உற்சாகப்படுகின்ற



அளவுக்கு அதிலே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. டான்சி டேனரி தோல் வெளிநாடுகளிலே ஹார்பரிலே ஓராண்டு காலம் தேங்கிக் கிடப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மைதான் என்பது எனக்குத் தெரியும் ; அதிலே மாற்று கருத்தில்லை. ஆனால், இ லே டான்சி தோல் மட்டுமல்ல ; தனிப்பட்ட தோல் நிறுவனங்களின் தோல்களும் பல இடங்களிலே தேங்கிக் கிடக்கின்றன என்பதையும், இந்த ஆண்டுதான் அவைகளுக்கு விமோசனம் வந்திருக்கிறது என்பதையும் (குறுக்கீடு) ரோமங்கள் நிச்சயமாகத் தேங்கிக் கிடக்கவில்லை என்பதைச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இருந்தபோதிலும், இந்த ஆண்டுதான் இந்தத் துறையிலே கொஞ்சம் உற்சாகப்படுகின்ற அளவுக்கு வாணிபம் முன்னேறிக்கொண்டு வருகின்றது. தனிப்பட்ட தோல் அதிபர்கள், தொழிற்சாலை அதிபர்கள் ஒவ்வொரு மாதமும் வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அரசின் சார்பிலும், டான்சி நிறுவனத்திலே மானேஜர் ஆண்டுதோறும் போவதாகக் குறிப்பிட்டார்கள். என்னைக் கேட்டால், மாதந்தோறும் அவரை அனுப்பினால்தான், அதற்கான வாணிகம் செழிப்பாக நடைபெறும். எப்படி தனிப்பட்ட தொழில் அதிபர்கள், முதலாளிகள் வெளிநாடுகளில் சுற்றிக் கொண்டு, ஆர்டரைப் பிடித்து இங்கே அனுப்பிக் கொண்டிருக்கிறார்களோ, அப்படி அரசின் தரப்பிலும் அதிகாரிகளை அனுப்பி அவர்கள் ஆர்டரைப் பிடித்து இந்த டான்சி டானரிக்கு அனுப்பினால், மேலும் வாணிபம் பெருகும். அதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

டான்சி தொழில் நிறுவனத்தில் மட்டுமல்ல ; அந்தப் பகுதியிலே உள்ள ஒவ்வொரு தொழிற்சாலையிலும், தொழில் அதிபர்களுக்கு கிடைக்கக் கூடிய லாபத்திலே தொழிலாளர்களுக்கு பங்கு கொடுக்காது போனாலும்கூட, நிர்வாகத்திலே அவர்களுக்கு பங்கு கொடுக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு தொழிற்சாலையின் நிர்வாகக் குழுவிலே, அந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்கின்ற தொழிலாளி ஒருவருக்கு, அந்த நிர்வாகக் குழுவிலே பங்குகொள்ளச் செய்வார்களானால், அங்கே நடக்கக் கூடிய ஸ்டிரைக் போன்றவைகள் எல்லாம் நடப்பதற்கு இல்லாமல் செய்கின்ற வழிவகைகளைச் செய்வார்கள். தொழில் துறையிலே இருக்கக்கூடிய சிக்கல்களை, நிர்வாகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு பிரச்னைகளை அவர்கள் புரிந்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். இன்றைக்கு தமிழக அரசைப் பொறுத்த வரையில், அரசும், தனியார் துறையும் சேர்ந்து நடத்தக்கூடிய நிர்வாகங்கள், ஜாயின்ட் செக்டார் போன்றவைகள் எல்லாம் மிகவும் முன்னுக்கு வரக்கூடிய சூழ்நிலை *ஏற்பட, அப்பேர்ப்பட்ட நிறுவனங்களையெல்லாம் அரசு ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவைப் பகுதியிலே பவுண்டரிகள் அதிக அளவில் வந்து கொண்டிக்கின்றன. அவைகளை ஊக்குவிப்பதற்காக, அதற்குத் தேவையான மூலப் பொருள்களை நிலக்கரி, இரும்பு போன்றவைகளை குறைந்த விலையில், கன்ட்ரோல் ரேட்டில் சப்ளை செய்வதற்கு, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி தரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆம்பூரில் மாட்டுத் தீவனம் தொழிற்சாலை துவக்கப்பட்டு இயங்கிக் கொண்டு வருகிறது. அங்கே கோழித் தீவனமும் தயாரிக்க அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 12–20]

ஊட்டியிலே உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸில் கலர் பிலிம்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கு மாநில அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து இருந்தாலும் பல்வேறு சந்தேகங்கள் பல்வேறு மட்டங்களிலே இருப்பதால் அந்த கலர் பிலிம்ஸ் தொழிற்சாலையை ஊட்டியிலேயே நிறுவுவதற்கு மாநில அரசு மைய அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிட்கோ மூலமாக கட்டிக்கொடுக்கப்படுகின்ற ஷெட்கள் அவர்களுடைய பொருளாதார தொழில் நுட்ப அறிவை மட்டும் கருத்தில் கொள்ளாமல் பிற்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் 1 சதவீதம் ஒதுக்கி அந்த ஷெட்களை கட்டிக் கொடுப்பதன் மூலமாக இந்த சமுதாயத்திலே பிற்படுத்தப் பட்டவர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் தூக்கிவிடுவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன் வணக்கம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மிஸ்டர் சேர்மன் சார், கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த சபை முன்வைத்த திட்டங்களைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

We must congratulate both the young and energetic Hon. Minister for realising the importance of industrial development of the St t and for taking up the w.rk in a very right earnest and in a big way.

இருந்தாலும்கூட இப்போது இருக்கக்கூடிய சில கஷ்டங்களையும் நான் இந்தச் சபைமுன் அவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டியது



கடமை என்று நினைக்கிறேன். தொழில் பேட்டைகள் தொழிற்சாலைகள் நிரந்தரமாக வெற்றிகரமாக நடக்கவேண்டுமென்றால் சில இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் பெஸலிட்டிஸ் அங்கே முதலில் கொடுக்க வேண்டும். பவர் மிகவும் அவசியமான ஒன்று. பவர் இல்லையென்றால் புரடக்ஷன் அதிகமாகப் பாதிக்கப்படும், புரடக்ஷன் பாதிக்கப்பட்டால் கூலிகளுக்கு வேலை கொடுக்க முடியாது, கூலி கொடுக்க முடியாது, எல்லா சங்கடங்களும் ஏற்படும். இதற்காக நம்முடைய அரசாங்கம் எவ்வளவோ விதத்தில் பவர் ஜெனரேஷன் அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் இருந்தாலும்கூட இப்போது பெரிய ப்ராப்ளமாக அது தோன்றுகிறது. இப்போது இருக்கின்ற பவர் ஸ்டேன்ஷகளில் 5, 6 பவர் ஸ்டேஷன்கள் ரொம்ப எபிஸயன்டாக ஒர்க் பண்ணினால் பவர் கஷ்டத்தை நாம் தவிர்க்காலம் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி இரண்டு முறை ஏற்கனவே சொன்னேன்.

Why not the Govenment import expert technical advice and see what are the difficulties that came in the way in maximising the production; how to stop wastage of power during transmisson; and how to control the distrbution system efficently. These are the three important factors which have to taken into consideration in regard to power position.

அது மட்டுமல்ல, இப்போது பெரிய தொழில் பேட்டைகள், உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். தொழில் வருவதற்கு 2 வருஷமாவது ஆகும். இதற்கிடையில் அந்தத் தொழில் பேட்டைகளுக்கு 5 வருஷத்திற்கு பவர் ஷார்ட்டேஜ் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும்கூட அதற்குள் இருக்கக்கூடிய தொழில் பேட்டைகளுக்கு அதே சிஸ்டத்தை நீங்கள் கொண்டுவந்து பவர் கட் இருக்காது என்ற முறையில் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. ஒவ்வொரு தொழிற்பேட்டைக்கும் டீசல் பிளான்ட் கேஸ் டர்பைன் பிளான்ட் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீடியம், சுமால் ஸ்கேல், லார்ஜ் இன்டஸ்ட்ரியினுடைய கோவாப்ரேஷனை எடுத்துக்கொள்ளலாம். 5, 10 மெகாவாட் என்று போட்டு வைத்தால் கூட பவர் ஷார்ட்டேஜ் வரும்போது அந்த பிளான்ட்ஸ் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதனால் புரொடக்ஷன் குறையாது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இது நான்கு அல்லது ஐந்து

கோடிக்கு மேலே போகாது என்று நினைக்கிறேன். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில தெர்மல் ஸ்டேஷன்களுக்கு நிலக்கரி கொண்டு வருவது கஷ்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் பல முறை இந்த சபையிலே கூறியிருக்கிறேன். நிலக்கரி கொண்டு வருவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். அப்படி உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருக்குமானால் நான் உத்தரவாதம் இருந்து அதை உங்களுக்கு எவ்வளவு வேண்டுமோ அந்த அளவிற்கு, 2 லட்சம், 3 லட்சம் அல்லது 5 லட்சம் டன் அளவிற்கு தொழிற்சாலைகளுக்கு கொண்டு சேர்ப்பதில் எல்லாவிதமான சௌகர்யங்களும் செய்து கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறேன். காரணம் நான் இந்த தொழிலில் இருக்கிறேன். பெரிய கப்பல் கம்பெனிகளிலே சேர்ந்து இருக்கிறேன். இப்போது கப்பல்கள் வேலையில்லாமல் இருக்கின்றன. தூத்துக்குடியிலே 2 லட்சம் டன் வேண்டுமென்றால் 2½ லட்சம் டன் கூட கொண்டு வந்து கொடுக்கலாம். அதைவிட்டு நீங்களே கப்பலை நாங்கள் வாங்குகிறோம் என்றால் அது மிகவும் சிரமமான காரியம். கப்பல் கம்பெனிகள் நடத்துவது மிகவும் கஷ்டமான காரியம். எத்தனையோ கப்பல் கம்பெனிகள் இப்போது தினமும் மூடிக்கொண்டே வருகிறார்கள் உலக நிலவரத்தின் காரணமாக. அதை அவசியம் கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு மின்சார துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். 2 லட்சம் டன், 2½ லட்சம் டன், எவ்வளவு வேண்டுமானாலும் கொண்டு வருவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. இந்த மாதிரி கேப்டிவ் பவர் இருக்கிறபோது நீங்கள் ஏதாவது இடத்திற்கு ட்ரான்ஸ்போர்ட் செய்து ஸ்டாக் கொண்டு வந்து சேர்ப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.

ஓசூரில் இப்போது 70, 80 பெரிய தொழிற்சாலைகள் நடந்து கொண்டிருக்கின்றன ; உருவாகிக்கொண்டும் இருக்கின்றன. ஆனால் தண்ணீர் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. தொழிற்சாலைகளில் வேலை செய்கிற ஆயிரக்கணக்கான மக்கள் இங்கே குடியேறியிருக்கிறார்கள். தொழிலாளர்கள், நிர்வாக சிப்பந்திகள் எல்லாம் அங்கே குடியிருந்து வருகிறார்கள். ஒவ்வொரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டையும் நல்ல முறையில் உருவாக்கினால் லட்சக்கணக்கான மக்கள் அங்கே இருப்பார்கள். இப்போது தண்ணீர் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஓசூரில் கீழாவள்ளபள்ளி என்று டேம் ஸ்கீம் ஒன்று இருந்தது. ஆனால் டேம் கன்ஸ்ட்ரக்ஷனில் கோர்ட் அப்ஜெக்ஷன் வந்து ஸ்டே வாங்கப்பட்டதாக கேள்விப்படுகிறேன். அந்த ஸ்டேயை உடைக்க முடியாதா ? நீங்கள் ஏன் மிதமாக இருக்கிறீர்கள் ? என்ன காரணத்தினால் தயக்கம் என்பதை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். மக்களுக்கு அதனால் அனுகூலம் இருக்கிறதென்றால் இந்த ஸ்டேயை உடைத்து டேம்



கன்ஸ்ட்ரக்ஷனை ஏற்படுத்துவது அவசியம். கவர்ன்மெண்ட் மிகவும் அஜாக்கிரதையாக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். ஓசூரில் இப்போது விருத்தியாகிற சூழ்நிலையில் ஐந்து வருஷங்களில் 2 லட்சம், 3 லட்சம் மக்கள் இருப்பார்கள். ஒவ்வொரு தொழிற்பேட்டையிலும் லட்சக்கணக்கான மக்கள் இருப்பார்கள். தண்ணீர் இண்டஸ்ட்ரீக்கும் வேண்டியிருக்கிறது மக்களுக்கும் வேண்டியிருக்கிறது. இதில் மேலும் அஜாக்கிரதையாக இருப்பீர்களானால் வருகிற கஷ்ட நஷ்டம் உங்களுக்கு தான், இந்த கவர்ன்மெண்டிற்கு தான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சில அங்கத்தினர்கள் பேசுகிறபோது சென்ட்ரல் கவர்ன்மெண்ட் இங்கே இண்டஸ்ட்ரீஸ் கொண்டு வருவதிலே மிகவும் தாமதிக்கிறார்கள், வேண்டுமென்றே கொண்டு வருவதில்லை என்று சொன்னார்கள், அது மிகவும் தவறான யோசனை என்று சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் ஸ்கீம் கொடுக்கிறீர்கள் நீங்கள் தானே அதை கொண்டு வர செய்யவேண்டும் ; ஸ்கீம் மட்டும் அனுப்பி விட்டு அது தானாக வரட்டும் என்று விட்டுவிட்டால் அது வருவது மிகவும் தாமதமாகதான் வரும்.

[பிற்பகல் 12-30]

சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டுக்கு தமிழ்நாடு கவர்ன்மெண்ட் மட்டும் அல்ல. கிட்டத்தட்ட 20 ஸ்டேட் கவர்ன்மெண்ட்களை அவர்கள் பரிபாலனம் செய்ய வேண்டிய கஷ்டம் இருக்கிறது. ஆகவே, இதிலே நாம் தான் முன் ஜாக்கிரதையாக இருந்து, என்ன, என்ன செய்ய வேண்டுமோ, அங்கே போய் அவர்களுக்கு என்ன, என்ன தகவல் கொடுக்க வேண்டுமோ, கணக்கு கொடுக்க வேண்டுமோ, என்ன, என்ன பர்ட்டிகுலர்ஸ் கொடுக்க வேண்டுமோ அதையெல்லாம் கொடுக்க வேண்டும். இங்கே கூட நாம் ஒரு ஸ்கீம் கொடுத்து விட்டால், வெகு சீக்கிரத்தில் வருவதில்லை. இங்கேயும் பல கஷ்டங்கள், பல தாமதங்கள் இருக்கின்றன. என்ன, என்ன சமாச்சாரம் வேண்டுமோ, அதையெல்லாம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதே மாதிரி, நீங்கள் சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டுக்குக் கொடுக்க வேண்டிய ஸ்கீம்களை எல்லாம் கொடுத்த பிறகு, உங்களுடைய பார்லிமெண்ட் மெம்பர்கள் மூலமாகவோ, அல்லது ஸ்பெஷல் ஆபீசர்கள் மூலமாகவோ, அல்லது, அந்தந்தத் தொழில் அதிபர்கள் மூலமாகவோ எடுத்துக் கூற வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் இங்கே நிறைய வரும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ரூபாய் 3 கோடி மூலதனம் வரை பிரீ டீலைசன்சிங் பண்ணிவிட்டார்கள். யார் வேண்டுமென்றாலும், ரூபாய் 3 கோடிக்கு வேண்டிய இன்டஸ்ட்ரீஸ்

ஸ்டார்ட் செய்யலாம் என்று சொல்லிவிட்டார்கள். அது மிகவும் வரவேற்கத் தக்கது. அதனால், பெரிய இன்டஸ்ட்ரியல் க்ரோத் ஏற்படும். ஆனால், நம்முடைய ஸ்டேட் கவர்ன்மென்ட் ரூபாய் 2 கோடி வரைதான் என்று அளவு வைத்திருக்கிறார்கள். பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்ஸ் கொடுக்கக்கூடியவற்றிற்கும். பாங்க் கொடுக்க வேண்டியவற்றிற்கும் சேர்த்து ரூபாய் 2 கோடி தான் வைத்திருக்கிறார்கள். இப்பொழுது ரூபாய் 1 கோடி மிச்சம் மூலதனம் பெறுவதற்கு நிறைய கஷ்டம் ஏற்படுகிறது. அந்த ரூபாய் 1 கோடி காப்பிட்டல் ரெடி பண்ண, இது ஆல் இந்தியா பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்ஸுக்கு போக வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் இதை அவசியம் கவனித்து, இந்த ரூபாய் 1 கோடியும் எப்படி கவர் பண்ண முடியுமோ, அப்படி கவர் பண்ணி, ரூபாய் 3 கோடி அளவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Sir, if the enterpreneurs want to start industries I have told in this House many times that the first and foremost thing is, not only the political stability should be there, but also that political stabillity should give the strength of mind to the entre preneurs that we will help then that we will stand by their side and that we will give all the encouragement for the successful running of their enterprises. That thing is lacking. I am not one of those who is accusing or abusing the party in power or the Government in power like my esteemed frined to my left, who is a leftist. I am a businessman who is very practical, pragmatic and one who want to give constructive suggestion to the Government.

அதை விட்டுவிட்டு, எல்லாவற்றிற்கும் ஒரேயடியாக நீங்கள் ஒப்பாரி வைத்து, எதற்கெடுத்தாலும், தப்பு, பிரைவேட் செக்டாரிலும் தப்பு, பப்ளிக் செக்டாரிலும் தப்பு, எந்த செக்டாரிலும் தப்பு என்று சொல்வார்களேயானால் மக்கள் அவர்களை நன்றாகப் புரிந்து கொள்வார்கள். அவர்களுடைய டிசைன்ஸ் என்ன, அவர்களுடைய நோக்கங்கள் என்ன, அவர்களுடைய கருத்துக்கள் என்ன என்றெல்லாம் மக்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

It is very wrong to accuse the individual industrialist. We do not know the enormous amount of difficulties which the industralists are facing today. If my esteemed friend to the left can start an industry he will realise the practical difficulties faced by the industrialists in our country. The Reserve Bank of India has introduced the credit squeeze. Although I am a part of the Reserve Bank, I should say that it is working against the business community.



திரு. ரா. உமாநாத்: இன்டஸ்ட்ரியினுடைய நிலைமை தெரிவதற்காக இன்டஸ்ட்ரி ஸ்டார்ட் செய்ய வேண்டுமென்று சொல்கிறார் மாண்புமிகு ஹாஜா ஷெரீப் அவர்கள். இன்டஸ்ட்ரி ஸ்டார்ட் செய்ய வேண்டுமென்ற தேவையில்லை. அதனுடைய நிலைமை தெரிகிறது. அதனுடைய உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய மையமான தொழிலாளிகள் மத்தியிலே நான் இருக்கிறேன். எனக்குத் தெரியும். I do not need to start an industry.

THIRU K. S. G. HAJA SHAREEF : I want him to start an industry. He is a free man as I am. If he has got the capacity, if he has got the entre preneurship and if he is really a capable person, he should start an industry, so that he may know the practical difficulties of them.

சார், ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவினுடைய கிரெடிட் ஸ்குவீஸ் மிகவும் தவறுதலான ஒரு பாலிசி என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று அதை அவர்கள் ஸ்லாக்கன் பண்ணியிருக்கிறார்கள். இன்டஸ்ட்ரியலிஸ்ட்டுக்கு பணம் இல்லை என்றால் ப்ரொடக்ஷன் அஃபெக்ட் ஆகிறது. நீங்கள் பவர் கொடுக்காததால் ப்ரொடக்ஷன் அஃபெக்ட் ஆகிறது சிமெண்ட் இல்லாததால் கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்டாப் ஆகிறது. இதற்கிடையில் பணமும் வாங்கிக் கொள்ளுகிறார்கள். பணத்தை வாங்கிக் கொண்டால் வட்டியும் கொடுக்க வேண்டும். முதலுக்கு ஒரு பாகம் கொடுக்க வேண்டும். எப்படி அவர்கள் செய்ய முடியும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஒர்க்கிங் கேப்பிடல் இல்லை என்றால் அவர்கள் எங்கே போவார்கள்? அதற்காகப் பயந்து இன்டஸ்ட்ரியை மூடிவிட்டுப் போக மாட்டார்கள். பிரைவேட்காரர்களிடம் அவர்கள் போவார்கள். அவர்கள் 30 சதவீதம், 40 சதவீதம் கொடுத்து விட்டு, 17 சதவீதம், 18 சதவீதம் என்று நோட்டிலே எழுதி வாங்கிக்கொண்டு மீதியெல்லாம் மேஜைக்கு அடியில் போகிறது.

This should be locked into. Certainly various Chambers of Commerce and business organisations have already made representations about this. I want the Tamil Nadu Government also to make representations and see that they help the entrepreneurs and also the industrialists who are already here to overcome this difficulty.

சார், இப்பொழுது அப்ளிகேஷன்ஸ் பார் தி நியூ இன்டஸ்ரீஸ் சேங்க்ஷனில் மிகவும் தாமதமாகிறது என்று சொல்கிறார்கள். அதற்காக எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஏன் அந்த பைனான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்ஸ்களோ அல்லது பேங்கோ யார் பணம் கொடுக்கிறார்களோ அவர்கள் ஒரு செக் லிஸ்ட்

சிஸ்டத்தை அடாப்ட் செய்யக்கூடாது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். முதலில் யார் கொண்டுபோய் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அவர்கள் ஒரு லிஸ்டைக் கொடுக்க வேண்டும். என்னென்ன டாக்குமென்ட்ஸ் வேண்டும், என்னென்ன இன்பர்மேஷன் வேண்டும், என்னென்ன இணைப்புகள் வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கொடுக்கவேண்டும். ஆனால், இப்பொழுது அந்த சிஸ்டம் சரியாக இல்லை என்று நான் நினைக்கிறேன். அதற்காக, ஒரு மாதத்திலே அல்லது 15 நாட்களுக்கு என்று போகும்பொழுது அந்த ஆபீசில் ஒன்றைக் கேட்கிறார்கள். அதைக் கொடுத்துவிட்டுப் போகும்பொழுது திரும்பவும் இன்னொன்று வேண்டுமென்று கேட்கிறார்கள். இங்கு டைம் கன்ஸ்யூமிங் பேக்டராக இருக்கிறது. எனவே, செக் லிஸ்ட் ஒன்றைக் கொடுத்து விட்டீர்களேயானால் அவர்கள் உடனுக்குடன் என்ன வேண்டுமென்று இருக்கிறதோ அவைகளையெல்லாம் தயாரித்துக் கொடுத்து சீக்கிரத்தில் அந்த இன்டஸ்ட்ரி உருவாகி வருவதற்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

Sir, this is a production year. Certainly, we want to maximise our production. Tamil Nadu is second to none in the industrial production. I have said in various seminars—international or national—that the labour available in Tamil Nadu is second to none in its quality of service, in its peaceful nature and in its working capacity. I am accustomed to Port labour. Port labour is the very best. Although the remuneration they are getting is over Rs. 1,000 per individual for 4 or 5 hours working, still they are the very best.

இருந்தாலும் கூட சில பேக்டரிகளில் நிறையத் தொழில் தகராறுகள் இருக்கின்றன. அதற்காக நான் ஒரு ஆலோசனையைக் கூட அமைச்சரிடத்திலே சொல்லியிருக்கிறேன். எந்தத் தொழிற்சாலையில் தொழில் தகராறு ஏற்படுகிறதோ அங்கே தொழில் மந்திரியோ, முதல் மந்திரியோ அல்லது உங்களைச் சார்ந்த சிப்பந்திகளோ எந்தக் காரணத்தால் இந்த மாதிரி தகராறு ஏற்படுகிறது, அந்தத் தகராறை எப்படித் தவிர்க்க வேண்டுமென்று ஆராய்ந்து உடனுக்குடன் செய்கின்ற முறையைக் கடைப் பிடித்தால் வெகுசீக்கிரத்திலே அந்தத் தொழில் தகராறுகளைத் தீர்க்கலாம். அப்படித்தான் காங்கிரஸ் ஆட்சியிலே செய்து கொண்டு வந்தார்கள். 17 வருஷங்கள் நாங்கள் இருக்கும் பொழுது எவ்வளவு நிறைய இன்டஸ்ட்ரீஸ் வந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது; யாரும் இல்லையென்றுச் சொல்ல முடியாது. எந்தத் தொழிற்சாலையிலே எந்தவொரு தொழில் தகராறு ஏற்பட்டாலும் உடனே அந்தத் தொழில் அதிபர்களைக் கூப்பிட்டுத் தொழிலாளர்களின் தலைவர்களையும்



கூப்பிட்டு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து உடனடியாகத் தீர்த்து வைத்தோம். அந்த மாதிரி முறையை நீங்கள் அனுசரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–40]

நான் இந்த சபையின் முன் பேசும்பொழுது சொன்னேன், மற்ற மாநிலங்களில் இருக்கும்படியான பெரிய கமிட்டி ஒன்று—Industrial Development Advisory Committee என்ற கமிட்டி ஒன்றைப் போடவேண்டும் என்று நான் சொன்னேன். அமைச்சரிடம் பல முறை சொல்லி இருக்கிறேன்.

I have represented to the Chief Minister of our State also. Every time I was getting a favourable reply stating that "we are looking into it and we are attending to it and it will be attended to soon". But it has not come soon. If you announce a main committee, that main committee can branch off into various sub-committees. In that sub-committee you can put a person with knowledge, experience and qualification. You can also co-opt. a couple of members and give recommendations as to what are the new industries that can be started in various branches, whether it is in the filed of automobile, chemical or pharmacutical for here is a tremendous scope here to start small-scale industries and even lesser small-scale industries. I want that the Advisory Commitee should be formed and if it has not been formed already, I want you to announce about it at the earliest opportune time.

Sir, I want all the officers who are connected with the industrial development, including the Hon'ble Ministers, to go round and see in foreign countries who are successfully producing economically. They are the best people. You must also see how they are functioning there, how the industrial estates are functioning there. I have gone round and seen one or two factories abroad. it is a pleasure to go round and find that there is no hitch any where. But here we have got very young, efficient and dedicated officers and they can certainly be [illegible] to go round, and the Hon'ble Ministers can go with them and see for themselves how best we can introduce here these systems obtaining in foreign countries consistant with the nature of things here. I am very much concerned that the industries that are already established, should run smoothly without any hitch. If they do not run smoothly, all the vagaries, about which my Hon'ble friend to the left has said, will come into the picture.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கை திட்டங்கள் என்பதில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். இந்த அறிக்கையிலே சொல்லப்படுகின்ற தொழில் கொள்கை திட்டங்கள் என்ற தலைப்பிலே சொல்லப்பட்டு இருக்கக் கூடிய பல்வேறு அம்சங்கள் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் தமிழ்நாட்டில எப்படிப்பட்ட தொழில்களை உருவாக்க வேண்டும் என்பதனைப் போன்ற பல்வேறு தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள எதுவுமே சொல்லப்படாமல் கடந்த காலத்திலே பெரிய பெரிய தொழிலகள் உருவாக்கப்பட்டு இருக்கக்கூடியவைகளைப் பற்றி மட்டுமே இதிலே சொல்லப்பட்டிருக்கிறது என்று என்னால் சொல்ல முடியும்.

தமிழகத்தில் தொழில் கொள்கையைப் பொறுத்தமட்டிலே 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னால் தமிழகத்திலே காங்கிரஸ் கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றப் பெற்றதற்குப் பின்னால் தமிழகத்திலே பெரிய பெரிய தொழிற்சாலைகள் உருவாகாமல் இருப்பதற்கு, தடுப்பதற்கு, அல்லது தொழில் கொள்கையில் முன்னேறாமல் இருப்பதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் காரணமாக இருந்து வந்திருக்கின்றன என்ற குற்றச்சாட்டினை எங்களாலே சொல்ல முடியும்.

தொழில் கொள்கை சம்பந்தமாக கடந்த ஆண்டு நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்திலே 74 தொழில்களை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்கு தமிழக அரசு மனுப் போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவற்றை ஆரம்பிப்பதற்கு இது வரையில் மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்கவில்லை என்று சொல்லி தொழில் கொள்கை குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் நான் இப்போது கேட்டுக் கொள்வது எல்லாம் 74 தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதில் மத்திய அரசாங்கம் எத்தனை ஆரம்பிக்க வேண்டுமென்று, சொல்லி அனுமதி வழங்கியிருக்கிறது என்று இந்தக் கொள்கை குறிப்பிலே குறிப்பிடப்படவில்லை. எனவே தமிழக சர்க்காரை புறக்கணிக்கக்கூடிய நடவடிக்கையிலே மத்திய அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்று சொல்ல முடியும்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே தொழில் துறையில் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டுமானால், மின்சாரப் பற்றாக்குறை இருக்கக்கூடிய மாநிலம், தண்ணீர் பற்றாக்குறை இருக்கக்கூடிய மாநிலம் போன்றவைகளில் வட மாநிலங்களிலே இருப்பதுபோல, ரயில் போக்குவரத்தை அகலப் பாதையாக எல்லா மாநிலங்களிலேயும் மாற்றி அமைக்கப்பட வேண்டும். வட மாநிலங்களிலே ரயில் போக்குவரத்து அகலப் பாதையாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த மட்டிலும் மீட்டர் கேஜ் பாதையாக இருந்து வந்திருக்கிறது. அதை அகலப் பாதையாக மாற்ற வேண்டுமென்று சொல்லி, பல்வேறு கட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள எடுத்துச் சொல்லியும் கூட, தொழில் வளர்ச்சிக்குப் போதுமானதாக இருக்கக்கூடிய ரயில் பாதையை அகலப் பாதையாக மாற்ற வேண்டும் என்று சொல்லியும் கூட, இதுவரையில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியை பாதிக்கக்கூடிய நடவடிக்கையாக இருந்து வருகின்றது. எனவே, தமிழக சர்க்காரை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை, ரயில் போக்குவரத்து போன்றவைகள் தமிழகத்திலே இருக்கின்ற காரணத்தினால் அவைகளை போக்க கூடிய முறையிலே அது நிறைவு பெறக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லி இந்த மாமன்றத்திலே இருக்கக் கூடிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியை பெருக்குவதற்கு ஏகமனதான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கம் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இந்தத் தொழில் கொள்கையில் தமிழக சர்க்கார் கொடுத்து இருக்கக் கூடிய இந்த அறிக்கையிலே தனியார் துறைக்கு அதிகப்படியான சலுகைகளை கொடுக்கக்கூடிய அளவிலே இருக்கின்றதே தவிர, பொதுத் துறையை பலப்படுத்துகின்ற வகையிலோ அல்லது இருக்கக்கூடிய பொதுத்துறையை பாதுகாக்கக்கூடிய முறையிலே இந்த அறிக்கையில் சொல்லப்படவில்லை. அதற்கு மாறாக பொதுத்துறையை பலப்படுத்துவதற்கு மாறாக, தனியார் துறையை ஊக்குவிக்கின்ற முறையிலே இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் துறைக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இப்படி தமிழகத்திலே இருக்கக் கூடிய பல்வேறு தொழிற்சாலைகள், பொதுத் துறைக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய தொழிற்சாலைகள், கூட்டுறவுத்துறை; கூட்டுத்துறை போன்றவைகளில் இருக்கக் கூடியவைகள் நலிந்து போகக்கூடிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, புதியதாக, தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்குப் பதிலாக இப்போது இருக்கின்ற தொழிற்சாலைகளை பாதுகாக்க வேண்டிய கட்டாயத்திலே தமிழக சர்க்கார் இருந்துக் கொண்டிருக்கிறது எனவே, பொதுத்துறையிலே புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு பதிலாக, ஏற்கெனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை பாதுகாக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க, வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்,

கோவை மாவட்டத்திலே மதுக்கரையிலே இருக்கின்ற ஏ.ஸி.ஸி. சிமெண்ட் பேக்டரி என்று சொல்லக்கூடிய அது கடந்த 6 மாத காலமாக நிலக்கரி இல்லாத காரணத்தினால் தொடர்ச்சியாக லே-ஆப் விடப்பட்டு தொழிலாளர்கள பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள. இது சம்பந்தமாக அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள், அங்கே இருக்கக்கூடிய தொழிற்சங்கங்கள் மத்திய அரசாங்கத்திற்கு, உடனடியாக நிலக்கரி வழங்க வேண்டுமென்றும், நிலக்கரி இல்லாத காரணத்தினாலே சிமெண்ட் உற்பத்தி மட்டுமல்லாமல தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், உடனடியாக நிலக்கரியை அனுப்பி வைக்க வேண்டுமென்றும் சொல்லியும் கூட மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது, ஒரு பக்கத்திலே தொழில் வளர்ச்சியையும் மறுபக்கத்திலே உற்பத்தியையும் பெருக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை, தமிழகத்தினுடைய தொழில்களை முடக்குகின்ற கொள்கையாக இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோல கோவையிலே இருக்கக்கூடிய பஞ்சாலைகள் நிரம்ப இருக்கக்கூடிய பகுதி, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூட குறிப்பிட்டார்கள். கோவையிலே இருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகள், ஜோதி மில்ஸ், ராமகிருஷ்ணா மில்ஸ், ஆகியவைகளைப் பற்றிக் காலையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பேசும்போது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹாஜா ஷெரிப் அவர்கள் பேசும்போது கூட சொன்னார்கள். தொழிலாளர்கள் பிரச்சினையை எப்படி தீர்க்க வேண்டும், தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்று. தன்னுடைய சோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தொழிற்சாலையில், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்குச் சொந்தமான ஒரு ஆலையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய தகராறின் காரணமாக 6 மாத காலமாக அந்தப் பஞ்சாலை மூடி இருக்கிறது என்று சொன்னால் இதுதான் மத்திய அரசாங்கத்தின் தொழில்களை வளர்க்கும் முறையா, அல்லது உற்பத்தியைக் குறைக்கும் முயற்சியா என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர்களுக்கு இருக்கக்கூடிய தகராறின் காரணமாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சம்பந்தப்பட்டிருக்கிறார், இந்நாள் பாராளுமன்ற உறுப்பினரும் சம்பந்தப்பட்டிருக்கிறார். அவர்களின் சொந்தத் தகராறின் காரணமாக, இது 6 மாத காலமாக மூடி, அதனால் தொழிலாளர்கள் கடுமையான நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம் யார், என்பதை இங்குள்ள உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



எங்களுடைய கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இன்றைக்கு கோவை மாவட்டத்தில் திருப்பூர் பகுதியில் பனியன் தொழில்கள் நிரம்ப இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு மத்திய அரசாங்கத்தின் ஒரு கொள்கையால், ஒரு நடவடிக்கையால் அந்தத் தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படுவது மட்டுமல்ல அந்தத் தொழிற்சாலைகளையே மூட வேண்டிய ஒரு பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-50)

கிட்டத்தட்ட 4,000 பனியன் தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு இன்றைக்கு இத்தகைய ஒரு நெருக்கடி வருவதற்குக் காரணம் மத்திய அரசாங்கம் வெளிநாடுகளுக்கு பனியன் ஏற்றுமதி செய்வதற்கு 100 கோடி ரூபாய்க்கு ஆர்டர் கொடுத்திருக்கிறது. அந்த 100 கோடி ரூபாய் ஆர்டரில் தமிழ்நாட்டுக்கு ஒன்றும் இல்லை... ஏற்றுமதி செய்யக்கூடிய பனியன்கள் எல்லாம் வட மாநிலங்களில் தயாரிக்கப்படுபவை. வட மாநிலங்களுக்கு மட்டுமே அந்த ஆர்டரை கொடுத்திருக்கிறார்கள். தென் மாநிலங்களுக்கு, குறிப்பாக கோவை மாவட்டத்திற்கு அந்த ஆர்டர் கிடைக்கவில்லை கோவை மாவட்டம், திருப்பூரில் சுமார் 4,000 பனியன் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளில் சுமார் 40,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்த ஏற்றுமதி செய்யும் ஆர்டர் கிடைக்காத காரணத்தால் பனியன் உற்பத்தியில் தேக்கம் ஏற்பட்டு, தொழில் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே நம்முடைய தமிழக சர்க்கார் வெளிநாடுகளுக்கு பனியன் ஏற்றுமதிக்காக பெற்றிருக்கிற 100 கோடி ரூபாய் ஆர்டரில் ஒரு பகுதியையாவது பனியன் தொழிலையே நம்பியிருக்கிற திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளுக்குப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மிக முக்கியமான ஒரு பிரச்சினை. தொழிலாளர் பிரச்சினை என்பதால் நம்முடைய சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையில் இருக்கிற தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. அந்த ஆலை கடந்த ஓராண்டுக் காலமாக மூடிக் கிடக்கிறது. பலமுறை எடுத்துச் சொல்லியும் இன்னும் திறக்கப்படவில்லை. அதைப்போல கோவை மாவட்டத்தில் காலப்பட்டியிலிருக்கும் பக்தா மில்ஸ் இரண்டாண்டுக் காலமாக மூடிக் கிடக்கிறது. தொழிலாளர்கள் கன்சிலியேஷனுக்கு போனாலும் நிர்வாகம் வரவில்லை. அதனால் தொழிலாளர்கள்

நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அதைப் போன்று ஜோதி மில்ஸ், இராதாகிருஷ்ணன் மில்ஸ் மூடிக் கிடக்கின்றன. இந்த மில்களையெல்லாம் மாநில அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும்; நம்முடைய அரசே நிர்வாகத்தை ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டம் சிறு தொழில்கள் நிறைந்த ஒரு பகுதி. பல்வேறு என்சினீயரிங் பாக்டரிகள் இருக்கின்றன; பஞ்சாலைகள் இருக்கின்றன. பனியன் தொழிற்சாலைகள் நிறைந்திருக்கின்ற ஒரு பகுதி. அந்தத் தொழில்களுக்கு 'ரா மெட்டீரியல்ஸ்' செய்து கொடுக்கக்கூடிய பல்வேறு சிறு, சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இன்றைக்கு அந்த சிறு தொழில்களுக்குத் தேவையான 'கோக் பிக்கேயம்' கிடைக்காத காரணத்தால் அவை மூட வேண்டிய நிலையில் இருக்கின்றன. அந்த சிறு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் மத்திய அரசிடம் பல முறை இதுபற்றி முறையிட்டும், போதுமான அளவுக்கு கோக் பிக்கேயம் கொடுங்கள் என்று சொல்லியும். சரியாகக் கிடைப்பதில்லை. அதனால் அது சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் சரியாகச் செயல்படாமல் இருக்கின்றன; தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, நம்முடைய மாநில அரசு மத்திய அரசிடமிருந்து போதுமான அளவுக்கு கோக் பிக்கேயத்தைப் பெற்று, அதை முறையாக விநியோகிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கடற்கரை மிக நீண்ட பகுதி. நம் கடல் வளத்தைப் பற்றி இதற்கு முந்தைய பட்ஜெட்டிலே கூட விரிவாக விவாதித்திருக்கிறோம். ஆண்டுதோறும் 20 இலட்சத்திற்கு மேற்பட்ட சங்குகள் நம்முடைய கடல் பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்றன. இந்த சங்குகளை அடிப்படையாகக் கொண்டு இங்கே பல சிறு தொழில்களை ஆரம்பிக்கலாம். இப்போது இந்த சங்குத் தொழிற்சாலை மேற்கு வங்கத்தில் மட்டும்தான் இருக்கிறது. நாம் எடுக்கின்ற சங்குகளை கொண்டு போய் மேற்கு வங்கத்தில் தொழில் நடத்துகிறார்கள். 20 இலட்சத்திற்கு மேற்பட்ட சங்குகளை நாம் எடுத்துக் கொண்டிருப்பதால் இங்கேயே மேற்கு வங்கத்தில் இருப்பதைப் போன்று தொழிற்சாலைகளை அமைத்து, இங்கே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை ஒன்று வேதாரண்யத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதனுடைய நடவடிக்கைகள் எந்த அளவுக்கு இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே



சொல்லப்படவில்லை. இருந்தாலும் தமிழக அரசு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையை வேதாரண்யத்தில் ஆரம்பிக்க விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியாகிய அவினாசி தொகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய தொகுதி. ஏதாவது ஒன்றிரண்டுதொழில்களை அங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று பல்லாண்டுகளாகச் சொல்லிவருகிறோம். இதுவரையில் ஒரு தொழிலும் அங்கே ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே, தமிழக அரசு அவினாசி தொகுதியை தொழில் துறையில் பின்தங்கிய தொகுதியாக அறிவித்து, பல தொழிற்சாலைகளை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் எனது தொகுதியில் விவசாயிகளுக்கு என்று கூட்டுறவு பட்டு வளர்ப்பு நிலையம் ஒன்றை அமைப்பதாகச் சொன்னார்கள். அது இப்போது அமைக்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இதுவரையில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும் தொழில்கள், ஊரகத் தொழில் துறை ஆகியவற்றிற்காக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவைமுன் வைத்து இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதும், மானியக் கோரிக்கைகள் மீதும் ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நான் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே முழுவதும் இருக்கின்ற தொழில் நெருக்கடி நிலைமைகளை நாம் நன்றாக அறிவோம். இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, வளர்ச்சி அடைந்து முடிந்து இருக்கிற அமெரிக்கா போன்ற நாடுகளிலே கூட இன்றைக்கு தொழில் நெருக்கடி, கச்சாப்பொருள்கள் பற்றாக்குறை, உற்பத்தியாகின்ற பொருள்கள் உள்ளூரில் விலைபோகாத நிலைமை, மற்றும் தொழிலாளர்களுக்கு பூரண வேலைவாய்ப்பு தரமுடியாத நிலைமை ஆகியவை இருக்கின்றன. வளர்ச்சியடைந்து இருக்கிற நாடுகளில் கூட இத்தகைய நிலைமைகள் பெருகி வருகிறபோது, இந்தியத் துணைக்கண்டம் போன்று கிராமப்புற பொருளாதாரத்தை நம்பி இருக்கின்ற நாடுகளில் அத்தகைய நிலைமைகள் இருப்பதில் வியப்பில்லை. இருப்பினும்; தமிழகத்தைப் பொறுத்தவரையில், 60 விழுக்காடுக்கு

மேல் கிராமப் பொருளாதாரத்தையே நம்பி இருக்கிற நிலையில், சிறு தொழில், பெரும் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியில் காட்டிய ஆர்வத்தின் காரணமாகவும், அக்கரையின் காரணமாக வும், இந்தியத் துணைக் கண்டத்திலேயே தொழில் வளர்ச்சியில் தமிழகம் நான்காவது இடத்தைப் பெறுகின்ற அளவிற்கு, இந்த அரசு சாதனை படைத்து இருக்கிறது என்பதை இங்கே கொடுக் கப்பட்டு இருக்கும் விளக்கக் குறிப்புகள் மூலம் நம்மாலே தெளி வாகப் புரிந்து கொள்ள முடிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் ஒரு சில பொருள் களின் உற்பத்தியில், இந்தியத் துணை கண்டத்திற்கே வழி காட்டக் கூடிய முறையில், முதலிடம் பெறத் தக்க அளவிற்கு நாம் சாதனைகளைப் படைத்து இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, 'எகனாமிக் அடானமி ஈஸ் தி நீட் ஆப் தி அவர் ஆப் தி ஸ்டேட்' என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆங்காங்கு இருக்கின்ற மாநிலங்கள், தங்களிடம், இருக்கின்ற கச்சாப்பொருள்களைக் கொண்டு, தங்களிடத்தில் இருக்கின்ற மூலதனத்தைக் கொண்டு, அவர்களாகவே தொழில் வளர்ச்சியில் அக்கரை செலுத்தி முன்னேறுவதற்கு உரிய முறைக்கு முட்டுக் கட்டையாக இன்றைக்கு 'மைய அரசின் கொள்கை இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டவேண்டும்.

முதல் மூன்று 5 ஆண்டுத் திட்டங்களில் இந்த மாநிலத் திற்கு மைய அரசு வழங்கியிருக்கும் தொகை எவ்வளவு, இப் போது வழங்கியிருக்கும் தொகை எவ்வளவு என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் போது பொறுப்பில் இருந்தது காங்கிரஸ் பேரியக்கம் என்பதாலும், அதற்குப் பின்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இங்கே ஆட்சி நடைபெற்று வந்த காரணத்தாலும், அதற்குப் பின்னாலே ஆளுகின்ற பொறுப்பிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்ற காரணத்தாலும், மைய அரசின் இந்த நிதி ஒதுக்கீட்டுக் கொள்கையில் முரண்பாடு கள் இருக்கின்றன. மைய அரசு தாராளமாக மாநில அரசு களுக்கு செய்யவேண்டிய முதலீட்டு உதவியின் அளவு குறைந்து போய் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்வேன். இதற்கு நியாயமான காரணம் என்ன? இதற்கு வேறு என்ன 'கன்சிட ரேஷன்' என்பது தான் நமக்குப் புரியவில்லை.

உள்ளபடியே, பொருளாதார நிபுணர்கள் எடுத்து வைக்கும் கருத்துக்கள் என்னவென்றால், 'ரா-மெட்டீரியல்ஸ் சோர்ஸஸ், இருக்குமானால் 'சப்போர்ட்டின்-இன்ப்ராஸ்ட்ரக்சர்' இருக்கு மானால், 'குட் அன்ட் ஸ்கில்ட் மேன்-பவர்' இருக்குமானால், அந்த மாநிலங்களில் மைய அரசு அதிகமான முதலீட்டைச்



செய்யவேண்டும் என்பதாகும். ஆனால் அப்படிச் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் ஒரு வேளை இங்கே காங்கிரஸ் அல்லாத இயக்கம் ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கிறது என்பதாலோ என்கிற ஒரு எண்ணம், அதனால் மைய அரசு தொழில் முன் னேற்றத்திற்கு தடையாக இருக்கிறதோ, இடையூறாக இருக்கிற தோ என்கிற ஐயம் சாதாரண மனிதனுக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்ற அக்கரையிலே நான் சொல்கிறேன்.

பொருளாதாரத்திற்குச் சம்பந்தம் இல்லாத, சேமிப்புத் துறைக்குத் தொடர்பில்லாத காரணங்களை வைத்து மைய அரசு முதலீடுகளை நிர்ணயிக்கும் நிலைமைகள் நிச்சயமாக மாற்றப் பட்டாக வேண்டும். இன்றைக்குத் தொழில் துறை வியத்தகு முன்னேற்றங்களைக் காணவேண்டும் என்று துடிப்போடு செயல் பட்டுக்கொண்டு இருக்கிற நேரத்தில், அந்தத் தொழில் துறைக்கு பக்கபலமாக, அடித்தளமாக இருக்கும் மின் துறைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பிலே இருந்த 7 ஆண்டு காலத்திலே முக்கியத்துவம் தரத்தவறிய காரணத்தினால், தமிழ கத்தின் தொழில் துறை இன்றைக்கு பெரும் அளவில் பாதிக்கப் படும் சூழ்நிலை இருக்கிறது.

அதற்கு உதாரணமாக ஒன்றை மட்டும் நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். 1972-73 ஆம் ஆண்டில் கேரள அரசாங்கம் 'இடுக்கி பிராஜெக்ட்டை' தமிழக அரசோடு இணைந்து, சேர்த்து நடத்துவது என்பதற்கு ஒரு முயற்சி எடுத்தது. அதற்காக தமிழ்நாடு அரசு 20 கோடி ரூபாய் முதலீடு செய்வது என்றும், கேரள அரசு 20 கோடி ரூபாய் முதலீடு செய்வது என்றும், அதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பாதிப் பாதி என்கிற முறையில் பகிர்ந்து கொள்வது என்றும் கடிதப் போக்குவரத்து வைத்து, அந்த மின்சார உற்பத்திக்கான ஒரு திட்டத்தை வழங் கியது. அதை ஏற்றுக்கொள்ள அந்த அரசு மறுத்தது. அதை ஏற்றுக்கொள்ள தயங்கியது மின்சார உற்பத்தியில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டிருந்த அக்கரையின்மையை எடுத்துக்காட்டுகிறது. அதன் காரணமாக இன்றைக்கு மிகப் பெரும்பான்மையான அளவிற்கு தொழில் துறை பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். அன்றைக்கு 20 கோடி ரூபாய் முதலீடு போட்டு இருந்தால், இன்றைக்கு ஆண்டுக்கு 15 கோடி அல்லது 20 கோடி ரூபாய் அளவிற்கு நாம் கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்கும் நிலைமை யைத் தவிர்த்து இருக்கலாம். ஆனால் அவர்கள் அனுசரித்து வந்த கவனக்குறைவின் காரணமாக தொழில் துறையில் இன்றைக்கு வியத்தகு முன்னேற்றங்களை நாம் காணமுடியாமல், மின் பற்றாக் குறை ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதை நான் தெளி வாகச் சொல்லியாக வேண்டும்.

சேலம் ஸ்டீல் பிளான்டைப் பொறுத்தவரையில், இங்கே விரிவாகச் சொன்னார்கள். அது ஒரு 'இன்டக்ரேடட் ஸ்டீல் பிளான்ட்' என்கிற வகையில் இருக்க வேண்டும் என்று அன்றைக்கு எதிர்பார்த்தோம். ஆனால், மலையைக் கிள்ளி எலியைப் பிடித்த கதையாக அது இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், மிகப் பெரிய அளவிலே உருக்காலை வருகிறது என்று சொன்னது போய், 70-லே தோற்றுவதாகச் சொல்லி, 72-லே அடிக்கல் நாட்டி, அதற்குப் பின்னால் 77-லே தான் அந்தத் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று இன்றைக்கு உருவாகியிருக்கிற அந்த ஸ்டீல் பிராஜக்ட், ஒரு ஸ்டீல் ரோலிங் கம்பெனியாகத்தான் இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. இப்போதிருக்கக்கூடிய அந்த ஸ்டீல் உருக்காலையிலே இன்ஸ்டாலேஷன்களை செய்து, அதிலே நாம் உற்பத்தியை பெருக்குவோமேயானால் தமிழகம் மட்டும் அல்ல, இந்திய துணைக்கண்டத்தில் இருக்கிற பல்வேறு ஸ்டீல் பிளாண்டுகளுக்குத் தேவையான அடிப்படை பொருள்களை அந்த உருக்காலை அளிக்க முடியும். அதற்காக மைய அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் வாயிலாக நான் கோரிக்கை விடுக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அது மட்டும் அல்ல இந்த ஸ்டீல் பிளாண்டைச் சுற்றி ஆங்காங்கே ஆன்சிலியரி யூனிட்டுகளை நாம்போடுவோமேயானால், அவைகள் அந்த ஸ்டீல் பிளாண்டுகளோடு இணைந்து இயங்குகிற அந்த நன்மையை பயக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நெய்வேலியில் அமைக்கப்பட்டிருக்கும் நிலக்கரிச் சுரங்கத்தைப் பொருத்தவரைக்கும் இன்னையதினம் அங்கே 3, 4 சுரங்கங்களைக்கூட வெட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மின் சக்தியை அதிகரிப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. மின்சார தட்டுப்பாட்டை போக்குவதற்காக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்மிடத்திலே பிரைவேட் செக்டாரில் இருப்பது போன்ற வாகன்கள் இல்லை. மைய அரசு வைத்திருக்கிற செக்டார்களில் அந்த வாகன்கள் சேர்க்கப்பட்டால்தான், நிலக்கரிகளை அதிக அளவில் கொண்டு வர முடியும். இருக்கும் மின்சாரத் தட்டுப்பாடும் ஓரளவு குறைக்கப்படும். அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு சேர்க்கிற நிலைமைகளுக்கு நாம் பதிலளிக்கமுடியும். அந்தவிதத்திலே பிரையாரிட்டி இன்டஸ்ட்ரீஸ்களுக்கு முன்னுரிமை கொடுத்து, நாம் தொழில் வளத்தைப் பெருக்க முடியும். [மணியடிக்கப்பெற்றது.]



நெய்வேலிக்கு அருகாமையில்கூட நாம் அப்படிப்பட்ட திட்டத்தை செயலாற்றுவதற்காக மைய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல எரிபொருள் பிரச்சினை என்பது தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்திய துணைக்கண்டத்திற்கே அது பொதுவாக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக இருக்கிறது. இப்போது தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்துக்கு அருகே ஆயில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. ஆயில் நேஷனல் கேஸ் கமிஷன் கொடுத்திருக்கிற அந்த ரிப்போர்ட்டுகளின் அடிப்படையிலே அந்த இடத்திலே கூட நாம் ஆயில் ரீபைனரீகளை ஏற்படுத்த வேண்டும்.

தமிழகத்திலே ஏற்பட இருக்கிற அந்த ஆயில் ரீபைனரியையும் சேர்த்து இன்றைக்கும் நம் நாட்டில் 6. ரீபைனரிகள் இருக்கும். நாம் இப்போது பெருவாரியாக பெட்ரோ கெமிகல் காம்ப்ளெக்ஸை மறந்துவிட்டோம். பெட்ரோ கெமிகல்ஸ் காம்ப்ளெக்ஸை தஞ்சை மாவட்டத்திலே, கடலுக்கு அருகிலே நாம் ஏற்படுத்துவோமேயானால், குஜராத், ஹரியானா போன்ற மாநிலங்கள் எப்படி இதைப் பயன்படுத்தி, தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேறியுள்ளதோ அது போல நாமும் முன்னேற்றம் அடைய வாய்ப்பு ஏற்படும் (மணியடிக்கப்பெற்றது).

ஏற்றுமதி இறக்குமதி பாலிசியைப் பற்றி ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இது குறித்து மத்திய அரசாங்கம் வைத்திருக்கிற கொள்கை தொழில் வளத்திற்கு மிகவும் பாதகமாக இருக்கிறது. தொழில் துறை முடங்கிப் போக காரணமாக இருக்கிறது. 50 கோடி ரூபாய் வரையில் மூலதனம் போட்டு ஆரம்பிக்கிற தொழிலுக்கு உரிமங்களை அளிப்பதில், மைய அரசுதான் கொடுக்க வேண்டும் என்ற நிலைமையை மாற்றி மாநில அரசுக்கு அந்த அதிகாரங்களைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உற்பத்தி செய்கிற அந்த பொருள்களை வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கிற அந்த தடை விஷயங்களையெல்லாம் அகற்றப்பட வேண்டும். உள்ளூரிலே உற்பத்தியாகிற பொருள்களுக்கு ஏற்றுமதி செய்கிறவர்களுக்கு வழங்கப்படும் அந்த லைசென்சுகள் முறையிலே மிகப் பெரிய மாறுதல்களையெல்லாம் நாம் செய்தாக வேண்டும். பில்லடு போர்டு என்று சொல்வார்களே அத்தகைய சிக்கல்கள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும். அந்தச் சிக்கல்களை எல்லாம் அகற்ற வேண்டும் என்று சொன்னால் ஒரு அபெக்ஸ் இன்ஸ்டிடியூஷன், விரிவான அளவில் உரிமைகளைப் பெறுவதற்காக அமைத்து அதன் மூலம் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

லெதர் ஏற்றுமதியில் மிகச் சிறந்த முன் உதாரணத்தை நம்முடைய ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி இந்தியத் துணைக்கண்டத்திலேயே தயாராகும் மொத்த அளவில் 77 சதவிகிதம் பினிஸ்டு லெதரை நாம்தான் உற்பத்தி செய்கிறோம். அதிலே 64 சதவிகிதம் எக்ஸ்போர்ட் பண்ணக்கூடிய அளவில் இருக்கின்றன.

கடைசியாக பாளையம் சிமென்ட் தொழிற்சாலையைப் பற்றி மட்டும் சொல்லி, நான் முடித்துக் கொள்கிறேன். பாளையம் சிமெண்ட் தொழிற்சாலையை அமைக்க இந்த மைய அரசு ஏதாவது முட்டுக்கட்டைப் போடுவார்களேயானால் அல்லது சொல்கிற காரணங்கள் ஏற்புடைத்ததாக இல்லாமல் இருக்குமேயானால், மைய அரசை வற்புறுத்துகிற விஷயத்தில் இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, தமிழகத்தின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பார்க்காமல், நான் தமிழகத்திலே இருந்து வருகிற உறுப்பினர், என்னுடைய உரிமைக்காக நான் இதை பாராளுமன்றத்தின் முன் வைக்கிறேன் என்று சொல்லி, அந்தப் பாளையம் சிமெண்டை ஒரு கௌரவப் பிரச்சியையனயாக கருதி, நாம் செயல்படுத்த முன் வரவேண்டுமென்று இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் அணு இயல் துறையிலே இந்த சிறு தொழில்கள் சாதனைகளைப் படைத்திருக்கிறது. 1970-72 ஆம் ஆண்டிலே 10 இலட்சம் ரூபாய்தான் முதலீடாகப் போட்டிருக்கிறோம். இன்றைக்கு 80 ஆம் ஆண்டில் 21 கோடி ரூபாய்களை அதிலே போடுவதன் பயனாக மின் அணு இயல் துறையில் மிகப் பெரிய மாறுதல்களை நாம் செய்து முடிக்க முடிகிறது. இன்னொன்றையும் சொல்லி முடிக்கிறேன். கிராமங்களிலே இன்றைக்கு நேஷனல் இன்மம் என்று சொல்லக்கூடிய தேசிய வருவாய் 60 விழுக்காடு இருக்கிறது.

கிராமத்திலே இருக்கின்ற தேசிய வருவாயை மூலதனமாக ஆக்குவதற்காக ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியைப் போட்டு ஆவன செய்யவேண்டும். அந்த தேசிய வருவாயை சிறு தொழில் வளர்ச்சிக்கு எப்படி பயன்படுத்த முடியும் என்பது பற்றி அந்த வல்லுநர் குழு ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அம்பத்தூர் தொழிற் பேட்டை, வில்லிவாக்கம் தொழிற் பேட்டைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக எந்த இடத்திலே தொழிற் பேட்டைகளை ஏற்படுத்தினாலும் அந்தந்த இடங்களில் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் அதிகமாக இருக்கின்ற வகையிலே அவற்றை சேட்டலைட்டவுனாக ஆக்க வேண்டும். செல்ஃப் சபிசியன்சி உள்ள நகரங்களாக தொழில் நகரங்களை ஏற்படுத்த வேண்டும். அம்பத்தூர், வில்லிவாக்கத்திலே உள்ள தொழில் முனைவோர்கள் அரசுக்கு வைத்திருக்கின்ற முக்கியமான பல கோரிக்கைகள் நியாயமானவைகளாக இருக்கின்றன. அவர்கள் பல காலமாக கேட்டுக் கொண்டு வருகிறார்கள். ரென்டல் பேசிசிலே இருப்பதை ஹையர் பேசிலே மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கை அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



கிராமப்புறங்களிலே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பதன் மூலமாகத்தான் அதற்குரிய முறையிலே நாம் கவனம் செலுத்தினால்தான் கிராமப் புற பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்று கூறிக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மானியக் கோரிக்கையிலே சில கருத்துக்களை எடுத்து வைக்க நான் விரும்புகிறேன். ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்பது அந்த மாநிலத்திலுள்ள தொழில்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டு போவதில் மட்டுமில்லை.

*(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை.)*

தொழில் வளர்ச்சி என்பது பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்க முடியும்.

Higher production compatible with balanced regional growth—the employment angle too has to be kept in view.

என்று சொன்னார்கள். அதிகமான உற்பத்தி மட்டுமல்ல, இந்த தமிழகத்தின் வளர்ச்சியை மனத்திலே கொண்டு அந்த உற்பத்தி அமைய வேண்டும். தமிழகத்திலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை மனதிலே கொண்டுதான் இந்தத் தொழில் வளர்ச்சி அமைந்திருக்க வேண்டும். அந்த வகையிலே 1950 ஆம் ஆண்டு துவங்கி 1970 ஆம் ஆண்டு வரை மிக அதிகமான தொழில் வளர்ச்சி தமிழகத்திலே இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது இது எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கக் கூடிய உண்மையாகும். அன்றைக்கு மேற்கு வங்கம், மகாராஷ்டிரம், போன்ற தொழிலிலே முன்னேறிய மாநிலங்களுக்கு இணையாக தமிழகம் அந்த 20 ஆண்டு காலத்திலே தொழில் வளர்ச்சி அடைந்தது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மை. அதைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தால் அடுத்த விஷயத்துக்குப் போகிறேன்.

இப்படி அதிகமாகவளர்ந்து கொண்டிருந்த தமிழகத்தின் தொழில் வளர்ச்சி, 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னால் சரியத் தொடங்கிற்று. அதற்கு என்ன காரணம் என்பதை நாம் பார்க்க வேண்டும். முதலாவது காரணம் இந்த மாநிலத்திலே மத்திய அரசின் முதலீடு என்பது பல்வேறு தொழில்களிலே குறைந்து விட்டது. சில கட்டங்களில் அறவே இல்லை என்று சொல்ல வேண்டும். மிகப் பெரிய தொழில்களை, பல 100 கோடி ரூபாய் அளவுக்கான தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய தகுதியும் வசதியும் மத்திய அரசுக்குத்தான் இருக்கின்றது. மத்திய அரசானது தன்னுடைய மூதலீட்டை இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் படிப்படியாகக் குறைத்து இன்றைக்கு அறவே இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமைக்குக் கொண்டு வந்து நிறுத்தியது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம், இந்த மாநிலத்திலே மின்சாரப் பற்றாக்குறை என்பது ஏற்பட்டுவிட்டது. எனவே மின் உற்பத்தியிலே ஏற்பட்ட பற்றாக்குறை மற்றொரு காரணமாகும்.

மூன்றாவது காரணம் பேசிக் இண்டஸ்ட்ரீஸ் என்பதைப் பொறுத்த வரையிலே தனியார்களிடத்திலே முதலீடு செய்கின்ற ஆர்வம் இங்கே குறைந்துவிட்டது.

நான்காவது காரணம் தொழில் உறவுகள் எப்படி இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு சீரான மூறையிலே இல்லாமல் போய்விட்டது.

ஆக இந்த நான்கு காரணங்களினால் தான் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாகக் குன்றி விட்டது. மத்திய அரசின் மூதலீடு குறைந்தது மட்டுமல்ல. தமிழகத்தின் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசு கொடுத்த அனுமதிகளின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. 1975-76-லே 142 இண்டஸ்ரியல் லைசென்சுகள் மத்திய அரசால் வழங்கப்பட்டன. 1978—79 லே பார்த்தால் 31 ரியல் லைசென்சுகள் மட்டுமே வழங்கப்பட்டன 1980 லே 37 இண்டஸ்ட்ரியல் லைசென்சுகள் மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றது. மத்திய அரசு தமிழகத்தை இந்த விதத்திலே ஒதுக்கித் தள்ளி இருக்கின்றது என்பது மிகத் தெளிவாக இதன் மூலம் தெரிகிறது.

[பிற்பகல் 1—10].

அதை எதிர்த்து தமிழ்நாட்டிலுள்ள சகல கட்சிகளும் ஒன்றுபட்டு நின்று மத்திய அரசிடம் போராடி வாதாடி நம் தமிழ்நாட்டிற்கு நிறைய தொழில்களைக் கொண்டு வர வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி



என்பது மிகவும் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இந்த முப்பது ஆண்டுக்காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் கல்வி வளர்ச்சி அதிகரித்துக் கொண்டே போகிறது. அப்படி கல்வி வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் தொழில் வளர்ச்சி இருந்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் போக்க முடியும். ஆனால் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கிற வகையில் தொழில் வளர்ச்சி இல்லை. ஏராளமான படித்த இளைஞர்கள் இன்று வேலைவாய்ப்பு இல்லாமல் தெருவில் நிற்கக்கூடிய ஒரு பரிதாபகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு பரிகாரம் என்ன?

மின்சாரத்தை எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் இன்றியமையாதது. மின்சார பட்ஜெட்டில் பேசுகிற போது சில விவரங்களை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப்போது விரிவாகச் சொல்லியிருக்கிறேன். இப்போது சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியம் செயல் படுவதில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். மின்சார வாரிய நிர்வாகத்தை அதிகாரிகள் கையில் வைத்திருப்பதற்குப் பதிலாக மின் நிபுணர்கள், சிறந்த தொழில் நிபுணர்கள் கொண்ட குழுவிடம் மின்சார வாரிய நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர்களெல்லாம் இருந்து ஆலோசனைகள் சொல்வார்களானால் மின்சார வாரிய நிர்வாகம் தொழில் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கக்கூடிய ஒரு நிலைமை அடையும். அதைச் செய்ய வேண்டும்.

இப்போது தனியார் துறையினர் மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். நமக்கு மின்சாரப் பற்றாக்குறை இருக்கும் நேரத்தில் அப்படி உற்பத்தி செய்யப்படுவதற்கு ஜெனரேட்டிங் டாக்ஸ் போடுகிறீர்கள். இப்படி வரி போடுவது எந்த வகையில் நியாயமாகும். தொழில் வளர்ச்சி தமிழ்நாட்டிற்கு மிக இன்றியமையாத் தேவை. இன்றுபடித்த இளைஞர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி வேகமாக வளர வேண்டும். அதற்குத் தேவையான அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்தாக வேண்டும். அந்நிலையில் தனியார் மின்சாரம் உற்பத்தி செய்வார்களானால் அவர்களுக்கு ஜெனரேட்டிங் டாக்ஸ் என்று வரி போட்டால் அது சரியல்ல. இது மின் உற்பத்தியைப் பெருக்குவதில் உள்ள ஆர்வத்தை குறைக்கும். புனல் மின் நிலையங்கள் அனேகமாக முடிந்துவிட்டன. இருப்பினும் மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அணு மின் நிலையங்களை ஏற்படுத்தலாம். இப்போது ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரிய நகரங்களில்

சேருகிற குப்பைகளை எரித்து அதிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். அது என்ன முறையில் செய்யப்படுகிறதென்று கண்டறிந்து தமிழகத்தில் செய்யலாம். சென்னை நகரை எடுத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு 2500 டன் குப்பை கிடைக்கிறது. என்று சொல்லப்படுகிறது. ஆகவே அதை வைத்து மின் உற்பத்தி செய்யலாம்.

நிலக்கரி, தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். நிலக்கரி வர வேண்டுமென்றால் ஆந்திராவில் உள்ள சிங்கரேனியிலிருந்து அல்லது பீகாரிலிருந்து வரவேண்டி இருக்கிறது. அதைக் கொண்டு வர ரெயில்வே வாகன்கள் கிடைக்கவில்லை. ஷ்ப்ஸ் கிடைக்கவில்லை என்ற குறைகள் இருக்கின்றன. நிலக்கரி சரியாகக் கிடைக்காததால் மின் உற்பத்தி, தொழில் வளர்ச்சி பாதிக்கப்படக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இதற்கு என்ன மாற்று வழி என்பதை ஆராயவேண்டும். நம் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் நாள் ஒன்றுக்கு 30,000 டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கிறார்கள். இரண்டாவது சுரங்கத்திற்காக ஆயத்த வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பழுப்பு நிலக்கரியை தொழிலுக்கு உபயோகிக்க வழியிருக்கிறது. அங்கே மின் உற்பத்திக்கு 5,000 டன் வரை தான் எடுக்கிறார்கள். மீதி 25000 டன் இருக்கிறது. ஏற்கனவே நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் ப்ரிக் கட்டிங் ப்ளாண்ட் வைத்திருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு பழுப்பு நிலக்கரியிலிருந்து லீக்கோ, கோக் போன்றவை உற்பத்தி செய்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அதிலே இருந்து சார் பைன் உற்பத்தி செய்யலாம். இவைகள் எல்லாம் தொழிற்சாலைக்கு உதவக் கூடிய எரிபொருள்கள். இதை அவர்கள் நியாயமான விலையை வைத்து, தமிழகத்திலே உள்ள தொழிற்சாலைகளுக்கு கொடுத்தால், அதுவே நமக்குப் போதுமானது. ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்தால், ஒரு பக்கம் அதிர்ச்சியாக இருக்கிறது. மற்றெரு பக்கம் வேடிக்கையாக இருக்கிறது.

1956 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்ட நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், இன்றுவரை 50 கோடி ரூபாய் நஷ்டத்திலே ஓடுகிறது. ஆகவே அந்த நஷ்டத்தை இந்த லீக்கோ, கோக், சார்பைன் ஆகியவைகளில் வைத்துதான் விற்கப்படுகிறது. பிடிவாதமான போக்கை இதிலே அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். அதன் விளைவாக தமிழக தொழிற்சாலைகள் அவற்றைப் பெற முடியவில்லை. அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய ஒரு சூழநிலை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் தமிழகத்திலே தொழில் வளர்ச்சிக்கு அது ஒரு முட்டுக் கட்டையாக இருக்கிறது. எனவே இதைப்பற்றி நம்முடைய அரசு மத்திய



அரசாங்கத்தோடு பேசி, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நியாயமான விலையிலே, பீகாரிலே இருந்து நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு என்ன விலையோ அந்த விலைக்கு லீக்கோ, கோக், சார்பைன் போன்றவைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் தொழில் வளர்ச்சி தமிழகத்திலே நாம் எதிர் பார்க்கும் அளவுக்கு இருக்கும் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான ஆலோசனையை இந்த அரசுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் முதலீடு செய்யக் கூடிய தொழில்களில் அரசாங்கத்தின் சார்பிலே டைரக்டர்கள் நியமிக்கிறார்கள். ரொம்ப சரியானது. நாம் பல கோடிக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்கிறோம். மக்கள் பணம், அதற்கு பாதுகாப்பு வேண்டும். எனவே, அரசாங்கத்தின் சார்பிலே நிர்வாகத்திலே பிரதிநிதிகள் இருக்க வேண்டும். அதை நான் மறுக்க வில்லை. ஆனால் யாரை நியமிக்கிறார்கள்? முக்கியமாக துறைகளின் செயலாளர்களை அங்கே டைரக்டர்களாக நியமிக்கிறீர்கள். அரசாங்கத்திலே செயளாலர் பொறுப்பு என்பது ரொம்ப முக்கியமானது. இந்த மாநிலத்தின் அன்றாட நிர்வாகத்திலே செயலாளர் பங்கு, பொறுப்பு அதிகமானது. ஆனால் அப்படிப்பட்ட செயலாளர்களை நீங்கள் பல்வேறு தொழில்களுக்கு, பல்வேறு அமைப்புகளுக்கு டைரக்டராக நியமனம் செய்வதால், மாதத்தில் 15 நாட்கள் அவர்கள் டைரக்டர்கள் கூட்டத்திலே பங்கு கொள்வதற்கே நேரம் சரியாக இருக்கிறது. அரசாங்கத்தின் நிர்வாக வேலைகளை அவர்களால் சரிவர பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, செயலாளர்கள் பொறுப்பிலே இருப்பவர்களை, இது போன்ற டைரக்டர்களாக நியமிக்காமல், அதற்கு அடுத்த நிலையிலே இருப்பவர்களை அல்லது அரசாங்க வேலையிலே இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் அதிகாரிகளை நியமிப்பது நல்லது. இப்படி நியமிப்பதன் மூலம் அவர்களிடம் நீங்கள் நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதைச் சொல்லலாம். அவர்கள் அங்கே போய் டைரக்டர்கள் கூட்டத்திலே அதைச் சொல்லலாம். அதை விட்டு, அரசாங்கத்திலே முக்கிய பொறுப்புகளை வகிக்கின்ற செயலாளர்களை பல்வேறு தொழில் நிறுவனங்களிலே டைரக்டர்களாக நியமிப்பதால், அரசாங்கத்தின் வேலை குந்தகமாகிறது. இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று. இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ஹாஜா செரீப் அவர்கள் ஒரு யோசனையை சொன்னார்கள். உமாநாத் அவர்களைப்பற்றிக் கூறிய யோசனையைச் சொல்லவில்லை. உமாநாத் அவர்கள் தொழில் ஆரம்பித்தால் ஹாஜா

செரீப் அவர்கள் தான் அப்போது அந்தத் தொழிற் சங்கத்தின் தலைவராக ஆகின்ற நிலை ஏற்படும். அதை நான் சொல்ல வில்லை. அட்வைசரி போர்டு வேண்டுமென்று ஹாஜா செரீப் சொன்னார்.

[பிற்பகல் 1-20]

அது ரொம்ப முக்கியமானது. தொழில் துறைக்கு திறமை வாய்ந்த தொழில் துறை நிபுணர்கள் நல்ல தொழிற் சங்கத் தலைவர்கள் பொருளாதார நிபுணர்கள் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படுவது ரொம்ப நல்லது. பல்வேறு தொழில்களிலே ஈடுபட்டிருக்கின்ற தொழில் நிபுணர்களும், தொழிற் சங்கத் தலைவர்களும், பொருளாதார நிபுணர்களும், அங்கம் வகிக்கின்ற இந்தக் குழு அரசாங்கத்திற்கு பல வகைகளிலே உதவியாக இருக்கின்ற காரணத்தினால் அந்த யோசனையை நான் வரவேற்கிறேன்.

சிறு தொழில் வளர்ச்சியைப் பற்றி சில வார்த்தைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே மத்திய அர சாங்கத்தின் முதலீடு குறைந்ததன் காரணத்தினாலே பல பெரும் தொழில்கள் அண்மைக்காலமாக ஏற்படாத நிலை ஏற்பட்டு விட்டது எனினும் நமக்கெல்லாம் மன நிறைவையும் மகிழ்ச்சியை யும் தருகின்ற வகையில் ஓரளவிற்கு சிறு தொழில்கள் தமிழகத் திலே சிறப்பான முறையில் வளர்ச்சி அடைந்து இருப்பதை நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநில அரசின் உதவியோடு சிறு தொழில்கள் தொடங்கப் பட்டு உற்பத்தி, எண்ணிக்கை வேலை வாய்ப்பு ஆகியவற்றிலே மிக மகத்தான சாதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அகில இந்திய அளவிலே ஒப்பிட்டுப் பார்ப்போமானால் தமிழகம் 15 சதவீதம் சிறு தொழில்களைப் பெற்றிருக்கிறது என்பது முக்கியமானது, முதல் மாநிலமாகவும் விளங்குகிறது என்பது அதைவிட முக்கியமானது. நாம் 1984 ஆம் ஆண்டை அடை யும் போது தமிழகத்திலே உள்ள சிறு தொழில்கள் 75 ஆயிரத்தை எட்டும் என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கக்கூடியதாகும். அதற்காக நான் அமைச்சர் அவர்களை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

இத்துடன் நின்றுவிடாதீர்கள். பெரும் தொழில்கள் தமிழகத் திலே வராததால் ஏற்பட்டு விட்ட இழப்பினைச் சிறு தொழில்கள் அமைப்பதன் மூலம் நிறைவு படுத்த நீங்கள் இதைத் துரிதப் படுத்துங்கள். (The Spirit of fifties must be recaptured)



ன்று சொல்ல விரும்புகிறேன். 1950 ஆம் ஆண்டிலிருந்து 970 ஆம் ஆண்டு வரையில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியின் வகத்தை இதிலே காட்டி இதை நீங்கள் செய்ய வேண்டும்.

சிறு தொழில்களுக்கு சில சிரமங்கள் இருக்கின்றன. அவற்றை ல்லாம் நீங்கள் களைவீர்களானால் அவை வேகமாக நடை பறும்.

1. கிளியரென்ஸ் ஆப் லைசென்ஸ்.

2. சப்ளை ஆப் ரா மெட்டிரியல்ஸ்.

3. உற்பத்தி செய்கிற பொருள்களையும், கச்சாப் பாருள்களையும் கொண்டு வருவதிலே டிரான்ஸ் போர்ட்டிலே ள்ள சிரமங்கள்.

4. சாங்ஷனிங் அண்ட் புராசஸங் ஆப் கிரடிட், எக்ஸட்ரா.

இவற்றில் சிரமங்கள் இருக்கின்றன. அதை அரசு கவனித்து வன செய்ய வேண்டும். மாநில அரசு சில விஷயங்களைச் சய்வதற்கு முன்வர வேண்டும். சுமுகமான தொழில் உறவு மிழகத்திலே இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். நிலம், நீர், ன்சாரம் உடனுக்குடன் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் டுக்க வேண்டும். அரசு சில விதி முறைகளிலே சிலவற்றைத் ருத்தி இருக்கிறது. இன்னும் அவற்றை எளிமையாக்க வேண் ம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ரு பக்கம் சிறு தொழில் வளர்ச்சி என்று பெருமைப்படத்தக்க தத்திலே இருக்கிறது. இன்னொரு பக்கத்திலே இந்து, எக்ஸ்பிரஸ் த்திரிகைகளிலே சில நேரங்களிலே வரக்கூடிய விளம்பரங்கள் ம்மை அதிர்ச்சி அடைய வைக்கின்றன. தமிழ்நாடு இண்டஸ்ட் யல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் தொழில்களுக்கு உதவி சய்கிறார்கள். அந்தத் தொழில்கள் சில நேரங்களிலே சரியாக யங்கவில்லை என்ற காரணத்தினாலே அவற்றை லம் விடுகின்ற ஏல நோட்டீஸ் பக்கம் பக்கமாக பத்திரிகைகளிலே ருவதைப் பார்க்கிற போது அதிர்ச்சியாக இருக்கிறது. தமிழ் ாட்டில் ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. சிறு தொழில் ளர்ச்சி ஒரு பக்கம் அதிகமாக இருந்தாலும், இன்னொருபக் த்திலே ஏலம் விடக்கூடிய நிலைமைகள் எதனால் வருகின்றன என் தை எண்ணிப் பார்த்தீர்களா? ஏலம் விடுவதற்கு முன்னால் அரசு தை ஆராய்ந்து பார்த்து, எதனால் அந்தத் தொழிற்சாலைகள் லம் விடப்படுகின்றன, அதற்கு அவசியம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை

எடுத்திருக்கிறதா, ஏல நோட்டீஸ் பிரசுரிக்கப்படுவதற்கு முன்னாலே அதனால் விளையக்கூடிய தீமைகள் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தீர்களா? தொழிற்சாலைகள் கடன் தொகைகளை கால தாமதமாகச் செலுத்தியதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்த்தீர்களா? ஏலம் விடப்பட்ட தொழிற் சாலை களில் எத்தனை சிறு தொழில்கள் என்பதை எண்ணிப்பார்த்தீர் களா? உலக வங்கி நிதியிலிருந்து எத்தனை தொழிற்சாலைகள் நிதி பெற்று ஆரம்பிக்கப்பெற்றன என்பதை எண்ணிப் பார்த்தீர் களா? அதன் மூலம் உலக வங்கி வழங்கும் மானியத்திற்கு கேடு வரும் என்பதை எண்ணிப்பார்த்தீர்களா? இப்படி ஏலம் விடப்படுகிற தொழில்கள் என்ன ஆகின்றன என்பதைப்பற்றி நான் அதிர்ச்சி தரும் ஒரு உண்மையை இங்கே வைக்க விரும்பு கிறேன். பம்பாயிலே இருந்து பெரிய பெரிய முதலாளிகள் இங்கே வந்து இந்த தொழிற் சாலைகளை ஏலம் எடுக்கிறார்கள். தமிழ் நாட்டிலே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் எங்கேயோ இருப்பவர்களால் ஏலம் எடுக்கக்கூடிய பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏலம் விடாமலேயே இந்த தொழிற்சாலை களுக்கு உதவி செய்து மீண்டும் இயங்கவைக்க முடியுமா என்பதை யெல்லாம் பார்க்காமல் அரசாங்கம் ஏல நோட்டீஸ்களை வெளி யிடுவார்களானால் பல டெக்னோக்ராஸ்ட்கள் இங்கே வந்து அரசாங்க உதவிகளோடு ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் கைமாறி ஒரே இடத்திலே குவியக்கூடிய அபாயம் இருக்கிறது. சில பெரிய முதலாளிகள் வாங்கி இந்த தொழிற் சாலைகளை அவர்கள் ஏகபோகமாக்கிக் கொள்கிற முயற்சியிலே இருக்கின்றனர். இது அரசாங்கத்தினுடைய அடிப்படை நோக்கத்திற்கு எதிராக இருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏலம் விடுவ தற்கு முன்னாலே நன்றாக பரிசீலனை செய்து இந்த நடவடிக்கை களிலே ஈடுபட வேண்டு மென்று நான் தெரிவித்துக் இந்த தொழில் மானியத்திலே பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டு தொழில் துறை மானியத்தின் மீது திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்புக்கு வந்த 1976 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் தமிழ் நாட்டிலே தொழிற் துறையிலே பின்தங்கி விட்டது என்று நான் சொல்லவில்லை ; திராவிட முன்னேற்றக் கழகம் சொல்ல வில்லை ; பல்வேறு தொழிற்துறை வல்லுநர்கள் சொல்கிற



ஒரு நிலைமையை நாம் பல்வேறு காலக்கட்டத்திலே பார்த்துக் கொண்டு வருகிறோம். பல நேரங்களில் இந்த பேரவையிலும் சரி, வெளியிலும் சரி, மத்தியிலே இருந்து வருகிற அமைச்சர்கள் அல்லது தொழிற் துறையிலே இருக்கிற வல்லுநர்கள் அதற்கு ஆதாரத்தோடு பேசுவதும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் களும், மற்றவர்களும் அதை மறுப்பதும் போன்ற நிலைமைகள் தமிழகத்தில் இருந்துவந்தாலும் கூட அதற்கு ஒன்றி ரண்டு உதாரணங்களை இந்தப் பேரவையிலே கூட சொன் னார்கள், நானும் தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இங்கே கூட சொல்லப்பட்டது, அசோக் லேலண்ட் நிறுவனம் தன்னுடைய கிளையை இந்த மாநிலத்திலே ஆரம் பிப்பதற்கு முயற்சி எடுத்தது. அதேபோல ரெயில் பெட்டி உபகரணங்களை செய்யும் பல்வேறு தொழிற்சாலைகள் இந்த மாநிலத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வந்த போது மாநில அரசு சரியாக அணுகாததாலே வேறு மாநிலங் களுக்குச் சென்று விட்டன. சென்று விட்ட காரணத்தாலே பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு கிடைக்கவேண்டிய வேலை வாய்ப்பும் நாம் இழந்து விட்டோம். நல்ல அணுகுமுறையை எடுக்க இந்த அரசு தவறிவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்தபோது தொழிற் துறையில் ஒன்றுமே செய்யவில்லை, தொட்டதே இல்லையே என்று குற்றம் சாட்டினார்கள். அதை விரிவாகப் பேச நேரம் போதாது. ஒன்றிரெண்டு எடுத்துக்காட்டுகளை வைப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத் தினுடைய முதல்வர் பொறுப்பை ஏற்றதற்கு பிறகு, ஏற்கனவே இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே சிறப்பான முறையிலே இந்த துறை நடத்தி வந்த போது, அண்ணா அவர்கள் அத்தற்கு எந்த வகையிலும் பின் வாங்காமல் பல்வேறு நீதிய மாநிலங்களில் தமிழகம் பின்னணிக்கு செல்லாத நிலையிலே அண்ணா அவர் களும் சரி, எங்களுடைய தலைவர் டாக்டர் கருணாநிதி அவர் களும் சரி அன்றைய தினம் முதல்வர் பொறுப்பை ஏற்றதற்கு பிறகு. "உறவுக்கு கை கொடுப்போம்" உரிமைக்கு குரல் கொடுப்போம்" என்ற தத்துவத்தின் கீழ் மத்திய அரசை பல்வேறு நேரங்களில் அணுகிதான் தமிழகத்தில் பல்வேறு தொழில்களை ஆரம்பித்தார்கள்.

நான்கூட பொது நிறுவனங்கள் குழுவிலே இருந்த நேரத்தில் பார்க்கிற போது பல்வேறு தொழில்கள் 1972, 1973, 1974, 1975ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற ஒரு நிலைமையை தான் நான் பார்க்கவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால், இங்கே கூட பல்வேறு நண்பர்கள் சொன்னார்கள். தூத்துக்குடி துறை முகம் இன்றைய தினம் தமிழகத்திற்கு தொழில் துறையிலே ஒரு பெரிய வரப்பிரசாதமாக விளங்குகிறது என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் காரணம் இல்லையா என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே போன்றுதான் தூத்துக்குடியிலே ஸ்பிக் உரத் தொழிற்சாலை. அதே போன்றுதான் அரக்கோணத்திலே உருக்காலை. அதே போன்றுதான் ஆலங்குளத்திலே சிமெண்ட் ஆலை. அதே போன்றுதான் தமிழ்நாடு பீங்கான் நிறுவனம், தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம், தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம், இப்படி எத்தனையோ தொழில்கள், தொழில் நிறுவனங்கள் பொதுத் துறையிலேயும் சரி, கூட்டுத் துறையிலேயும் சரி துவங்கப்பட்டிருக்கிறது. கூட்டுத் துறையிலே எத்தனையோ சர்க்கரை ஆலைகள், இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், தமிழகத்திலே 9 ஆண்டுக்காலம் திராவிட முன்னேற்றக் கழகம் சீரும் சிறப்புமாகச் செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்பாக இந்தப் பேரவைக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, அன்றைய தினம், திராவிட முன்னேற்றக் கழகம், பொதுத் துறையிலேயும் சரி, தனியார் துறையிலேயும் சரி, தொழில்கள் துவங்கும்போது, தனியார்கள் இலாபமே சம்பாதிக்க வேண்டாம் என்று கூட நாங்கள் சொல்லவில்லை. ஆனால், இலாபம் என்கிற பெயரால், தொழிலாளிகளை நசுக்கி, கொள்ளை அடிக்கின்ற ஒரு நிலைக்கு இந்த அரசாங்கம் விட்டு விடுகிற தன்மையைத் தான் நாம் இந்தக் குறுகிய காலத்திலே பார்த்து வருகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூட இங்கே மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நீங்கள் அண்ணாவினுடைய கொள்கைக்குப் புறம்பாக இன்றைய தினம் செல்கிறீர்கள் என்பதை நான்



இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் முடிந்த வரையிலும் தனியார் துறையிலே தொழில்கள் துவங்கப்பட்டாலும் கூட, பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோதான் பல பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அது தான் அவரது கொள்கையாக இருந்தது. ஆனால், இன்றைய தினம் நீங்கள் அண்ணாவினுடைய பெயரால் கட்சியை வைத்து ஆட்சிக்கு வந்தாலும், இன்றைய தினம் முதலாளிகள் பக்கம் போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சொல்கின்ற பல் வேறு குறிப்புகளிலே, சர்க்கரை ஆலையா? தனியாருக்குத் தர இந்த அரசு தயாராக இருக்கிறது. மின் உற்பத்தியா? தனியாருக்குத் தர இந்த அரசு தயாராக இருக்கிறது என்று நீங்கள் தனியார் பக்கமே போய்க் கொண்டிருக்கிறீர்கள் என் பதை நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். நீங்கள் தயவுசெய்து அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டாமென்றும் அண்ணாவினுடைய பெயரை நீங்கள் களங்கப்படுத்த வேண்டாம் என்றும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டத்தை நீங்கள் அறிவித்தபொழுது ரூ. 100 கோடி என் றீர்கள். ஆனால், இன்றைய தினம் நீங்கள் கிட்டத்தட்ட ரூ. 190 கோடியிலே அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கின்ற ஒரு நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏன் இப்படிப்பட்ட நிலைமை? சொல்லும்போது ஒரு தொகையைச் சொல்கிறீர்கள். பிறகு அந்தத் தொழிற்சாலையைத் துவங்குவதிலே, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற் பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு புறம் சொல்கிறீர்கள், புதிதாக நாங்கள் தொழில் கள் தொடங்கப்போகிறோம் என்று. நீங்கள் கொடுத்திருக்கிற அந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, ஆண்டுக்கு எத் தனை ஆயிரம் பேருக்கு வேலைகள் கிடைக்க இருக்கின்றன என்றெல்லாம் சொல்கிறீர்கள். நான் மெத்தப் பணிவன்போடு சொல்லிக்கொள்வதெல்லாம் இன்றைய தினம்கூட பல இலட்சக் கணக்கான படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கின்ற கால கட்டத்தில், புதிதாக அவர்களுக்கு வேலை கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், ஏற்கனவே, பல்லாண்டு காலம் வேலை செய்த தொழிலாளர்கள்கூட இன்றைய தினம்

வேலை இழக்கின்ற ஒரு பரிதாபமான நிலைமை இந்த அரசாங்கத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் அவைகளிலேயெல்லாம் கவனம் செலுத்த வேண்டும்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே கூட்டுத் துறையிலே, பொதுத்துறையிலே நீங்கள் தொழிலை ஆரம்பிக்கும்போது, சிறிய சிறிய தொழில்கள், சிறிய சிறிய முதலாளிகளை வைத்துத் துவங்கக்கூடிய நிலைமைகள் வரும்போது, அதற்கான எஸ்டேட்கள் எல்லாம் கட்டிக் கொடுத்திருந்தாலும், ஏற்கனவே இருந்த ஆட்சிக் காலங்களில் அவைகளுக்குச் சரியான ஒரு விளக்கம் சொல்கிற நிலைமையிருந்தது. இப்பொழுது பல பேர் இந்தத் தொழிலைத் துவங்கக் கூட பயப்படுகிறார்கள். காரணம் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு மார்க்கெட் இருக்குமா, அல்லது நியாயமான விலை கிடைக்குமா என்று அவைகளுக்கெல்லாம் ஒரு வழிகாட்டுகிற ஒரு தன்மையை இந்தத் துறை சமீப காலத்திலே இழந்துவிட்டது என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவைகளையெல்லாம் நீங்கள் நல்ல முறையிலே கவனிக்க வேண்டும். அந்த வகையிலே நீங்கள் வழிகாட்டுகின்ற முறையில், அணுகுகின்ற முறையில் செய்ய வேண்டும். மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாய விலை கிடைக்கும் வகையில் அமைப்புக்கள் இருக்கின்றன. அவைகளை ஏற்படுத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது) இன்னும் ஒன்றிரண்டு வேண்டுகோள்களை மட்டும் வைதது நான் முடித்து விடுகிறேன். மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் அதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழில் துறை வடக்குப் பகுதியாக இருக்கின்ற இராணிப்பேட்டை போன்ற இடங்களில் மத்திய அரசாங்கம் பல தொழில்களை ஆரம்பித்திருந்தாலும்கூட, தெற்குப் பகுதியான திருவண்ணாமலை போன்ற பகுதிகளிலே தொழில்துறை இல்லாத நிலை இருக்கிறது. எனவே, திருவண்ணாமலை வட்டத்தைத் தொழில் துறையிலே பின்தங்கிய வட்டமாக அறிவித்து அந்தப் பகுதியிலே தொழில்கள் நல்ல நிலைமையிலே வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நீண்ட நெடுங்காலமாகப் போளூர் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்டுக்கொண்டேயிருக்கிறோம். பின் தங்கிய மக்கள் வாழ்கின்ற பின்தங்கிய பகுதியான போளூர் பகுதிக்குக் கூட்டுறவுத் துறையிலேயாவது அல்லது பொதுத் துறையிலேயாவது ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



இறுதியாக, வேலூர் சர்க்கரை ஆலையிலே ஏராளமாக மொலாசஸ் கிடைக்கிறது. அதேபோல் ஆம்பூர் சர்க்கரை ஆலை இருக்கிறது ; திருப்பத்தூரில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. தென்னார்க்காடு மாவட்டத்திலேகூட கள்ளக்குறிச்சியிலே இருக்கிறது. இவைகளையெல்லாம் சேர்த்து வடார்க்காடு மாவட்டத்திலே—ஒரு பின்தங்கிய பகுதியிலே—இன்றைய தினம் உங்களுக்கும் கெட்ட பெயர் ஏற்படாதவண்ணம் நீங்கள் ஒரு எரி (ஸ்பிரிட்) சாராயத் தொழிற்சாலையை அந்தப் பகுயிலே ஆரம்பித்து பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையில் செய்ய வேண்டும், (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[மாலை 4-00]

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(6) வரவு செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று சாலை தொழில் மானியத்தின் மீது ஏறத்தாழ 10 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான நல்லகருத்துக்களை எல்லாம் இங்கே மிகத்தெளிவாகவும், உணர்வுபூர்வமாகவும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும் தங்களது மேலான கருத்துக்களை எடுத்து வைக்கின்ற நேரத்தில் ஒரு உணர்வினை எடுத்துப் சொன்னார்கள். மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் கடந்த 4 ஆண்டு காலத்தில் சிறு தொழில்கள் நம்பிக்கை ஊட்டுகிற வகையிலே அதிக அளவுக்கு வேலை வாய்ப்பினை கொடுக்கின்ற வகையிலே வளர்ந்திருக்கின்றது என்ற விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். அது மட்டுமல்லாமல் எதிர்காலத்திலே அது மேலும் வளர வேண்டும் என்றும் அப்படி வளருவதற்கான ஒரு நல்ல சூழ் நிலையை அரசு தொடர்ந்து தொய்வு இல்லாமல் உறுதியாக செய்ய வேண்டும் என்ற உணர்வினை அவர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்தார்கள். அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் தொழில்கள் வளருவதுகூட பெரியதல்ல; ஆனால் அந்தத் தொழில்கள் வளருகின்ற நேரத்தில் அந்த வளர்ச்சியின் காரணமாக உருவாகின்ற பயன்கள் பல்லாயிரக்கணக்கான மக்களை சென்று அடைய வேண்டும் என்ற ஒரு நல்ல உணர்வு பூர்வமாக பரிசீலனைக்கு வைத்தார்கள். வளர்ச்சி மட்டும் கொடுக்கத் தேவையில்லை அதற்கு சமூக நீதி அளிக்க வேண்டும் என்ற கருத்து, சோசியல் ஜஸ்டிஸ் என்ற வகையில் நிலைமைகள் எல்லாம் இருக்க வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள் Growth with social justice. இன்னொரு நல்ல கருத்தையும் அவர்கள் பேச்சிலே நினைவு படுத்தினார்கள். குறிப்பாக 'ரீஜினல் இம்பேலன்சஸ்'—தொழில்களில் குறிப்பாக 70 ஆம் ஆண்டு வரையில் வளர்ந்தது எல்லாம் நகரம், நகரத்தை ஒட்டியிருக்கின்ற பகுதிகள்தான். அது கிராமப் புறங்களிலே ஊரகப் பகுதிகளிலே விரிவு பட வேண்டும். Dispersal of Industries.



என்ற வகையில் கிராமப்புற பகுதிகளிலேயும் அது வளர வேண்டும் என்ற நல்ல கருத்தினை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக நான் மிகவும் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல தொழில் வளர்ச்சி. வழி காட்டுகின்ற நல்ல கொள்கையை உள்ளடக்கித்தான் இன்றைய தினம் தமிழக அரசினுடைய தொழில் கொள்கை விளங்கி வருகிறது என்பதனை நான் பின்னாலே விவரங்களோடு விளக்கமாக எடுத்துச் சொல்ல இருக்கின்றேன்.

இதற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகின்ற போது, அவர்களுடைய மேலான கருத்துக்களை இந்த மன்றத்தில் வைக்கின்றபோது, தமிழக அரசினுடைய தொழில் கொள்கை இன்றைய தினம் ஏழைகளின் நலனைக் காக்கின்ற வகையிலே அமையாமல், குறிப்பாக சுரண்டுபவர்கள் பக்கம் இருக்கிறது, உங்களுடைய அணுகு முறையை நீங்கள் பரிசீலனை செய்து காலத்திற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலே மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற உணர்வை இங்கே வைத்தார்கள். இது மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுடைய கணிப்பு, பார்வை, அவர்களுடைய அணுகு முறை. ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில் கடந்த 4 ஆண்டுகளுக்குள்ளாக உருவாக்கி வந்திருக்கின்ற வளர்ச்சிகள் 4 ஆண்டுகளாக நம்முடைய வசதி, வாய்ப்பு, அதிகாரங்கள், நிதி ஆதாரங்கள், இவைகளை வைத்துக் கொண்டு வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களுக்கு கிராம மக்களுக்கு, நலிந்த மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்து இருக்கின்ற பணிகளை ஒரு விருப்பு வெறுப்பு அற்ற முறையிலே பரிசீலனை செய்கின்றபோது ஒரு நல்ல மாறுதலை, இந்த 4 ஆண்டு காலத்திற்குள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை மட்டும் மெத்த பணிவன்போடு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். விவரத்தைப் பிறகு சொல்லுகிறேன். அவர்கள் பேசுகின்ற போது பல கருத்துக்களையும் சொன்னார்கள். சில தொழிற்கூடங்கள் செயலற்று இருக்கிறது, நலிந்து இருக்கிறது, நோய் வாய்ப்பட்டு இருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் சொல்லி, அதுவும் குறிப்பாக ஜாயின்ட் செக்டாரிலே இருக்கின்ற, கூட்டுப் பொறுப்பிலே இருக்கின்ற தொழிற்சாலைகளின் பெயரையும் சொல்லி, டான்சி போன்ற நிறுவனங்களில் இணைந்து இருக்கின்ற சில தொழிற்சாலைகள் எல்லாம் நலிந்து இருக்கிறது, நோய்வாப்பட்டிருக்கிறது, வயயிலாக, இல்லை, இன்றைக்குநஷ்ட ஈட்டிலேஇருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் அவர்கள் மிகத் தெளிவாக விவரங்களோடு சொன்னார்கள். அந்த உணர்ச்சியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு தொழிற்கூடமாக அதற்கு என்ன காரணம், அது எப்போது ஏற்பட்டது,

ஏன் ஏற்பட்டது, அந்த அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்று நான் சொல்வதை விட ஒரு உணர்ச்சியை, ஒரு கருத்தை, அது சம்பந்தமாக சொல்வது என்னுடைய தார்மீக கடமை என்று கருதுகிறேன். குறிப்பாக அவர்கள் தமிழ்நாடு ரப்பர் பேக்டரியைப் பற்றிச் சொன்னார்கள். முகவை மாவட்டத்திலே அது அமைந்திருக்கிறது. அதே போல் மொபட் நிறுவனத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது கிண்டியில் அமைந்துள்ள நிறுவனம். இதில் என்னுடைய தாழ்மையான விவரம் இது எங்கள் ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டது என்பதற்காகச் சொல்லவில்லை, தொடர்ந்து முந்தைய ஆட்சிக் காலத்திலே சில திட்டங்களை செய்யலாம் என்று போட்டிருக்கிறார்கள், சில தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி ஆரம்பிக்கின்ற நேரத்தில் அந்தத் தொழிற்சாலைக்கு, அது ஃபீஸிபிலிட்டியாக இருக்கிறதா, அது தொடர்ந்து நடைபெறுமா அல்லது அந்தத் தொழிற்சாலைக்கு தேவைப்பட்ட மூலதனம் இருக்கிறதா, அல்லது உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருள்களை விற்பனைச் செய்யக் கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்பதையெல்லாம், சில நேரத்தில், அந்தக் காலங்களில, குறிப்பிட்டு நான் சொல்ல விரும்பவில்லை. செய்த காரணத்தினால், சில தொழிற்சாலைகள், 'இல் கன்சீவ்ட் புராஜெக்ட்' ஆக இருந்த காரணத்தினால், ஆட்சிக்கு வந்த பிறகு, அதை நிர்வகிக்கிற பொறுப்பு எங்கள் தலையில் விழுகிறது. நீங்கள் விமர்சனம் செய்கின்ற நேரத்திலே அதனைக் சந்தித்து சமாளிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. அப்படித்தான் மொபட் நிறுவனம், அப்படித்தான் தமிழ்நாடு ரப்பர் தொழிற்சாலை, என்று நான் கருதுகிறேன். இப்படிப் பல. இவைகளையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், ஆட்சி பொறுப்புக்கு, 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு, நாங்கள் உருவாக்கியோ அல்லது திட்டமிட்டோ, அல்லது நாங்கள் ஆரம்பித்து; அதன் காரணமாக, செயலற்று, இருந்து, நலிந்து, அல்லது போதிய அளவிற்கு, அது விரும்பிய விளைவுகளைக் கொடுக்கவில்லை என்றால் பொறுப்பு. ஆனால் ஒரு அரசு என்றால், முந்தைய அரசு போட்ட திட்டங்களுக்கு கூட பொறுப்பு, தார்மீக பொறுப்பு என்ற வகையிலேதான் அவைகளையெல்லாம் சீர்படுத்தவும், செம்மைப் படுத்தவும் நாங்கள் முயல்கிறோம். இன்றைக்கு இந்த மொபட் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் கூட கடந்த 3 மாத காலமாக விரைவாக ஒன்று

Either it should be mended or ended.

[மாலை 4—10]

ஒன்று அதைத் திருத்த வேண்டும், அல்லது பொது மக்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்கிற வகையில் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று அரசு இன்றைய தினம்



ஒரு நல்ல ஆக்கப்பூர்வமான ஆலோசனை செய்து வருகிறது. விரைவில் அதை நடத்தப் பார்க்கிறோம். ஏனென்றால் ஒரு தொழிற்சாலையை மூடிவிட்டால் அதன் தொடர் விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. இதைக் கருத்திற் கொண்டு, 'இல் கன்சீவ்டு பிராஜெக்ட்' என்று சென்ற பல ஆண்டுகளாக முந்தைய ஆட்சியில் இருந்த பொறுப்புகளை எல்லாம் இன்றைய தினம் நாங்கள் தொடர்ந்து செய்து வருகின்ற காரணத்தால் தான் அந்த விளைவுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களுக்கு மிக்க பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் 4 ஆண்டுகளாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கிராமப்புறங்களில், ஊரகப் பகுதிகளில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் கணிசமான அளவுக்கு தமிழக அரசு வெற்றிபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப் பட்ட வெற்றிக்கு, அப்படிப்பட்ட சாதனைகளுக்கு, அப்படிப்பட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கொண்டிருப்பது மாவட்ட தொழில மையங்கள் என்பதை இந்த நேரத்தில் மிக்க பணிவன் போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் 1979 ஆம் ஆண்டு மாவட்ட தொழில் மையம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, மாவட்ட அளவிலே புதிதாக தொழில் முனைவர்களை உருவாக்கி, அவர்களுக்கு தேவைப்பட்ட மூலப்பொருட்களைக் கொடுப்பது, அரசாங்கத்தின் வசதிகளை, நிதிகளை எல்லாம் அவர்களுக்குப் பெற்றுத்தருவது போன்ற ஒருங்கிணைந்த பணிகளைச் செய்து கொடுத்து 1979 ஆம் ஆண்டில தொடங்கப்பட்ட இந்த மாவட்ட தொழில் மையங்கள் மூலமாகச் செய்து கொடுத்து— இன்றைய தினம் நல்லவகையில நம்பிக்கை ஊட்டுகின்ற வகையில் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் நடந்து கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

குறிப்பாக, மத்திய அரசே இதை அண்மையில் பாராட்டி யிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த மட்டில் ஏறத்தாழ 324 டிஸ்ரிக்ட் இண்டஸ்ரியல் சென்டர்ஸ் இருக்கின்றன. 22 மாநிலங்களிலும், அதைப் போன்று பிற பகுதிகளிலும் 324 மாவட்ட தொழில மையங்கள் இருக்கின்றன. அவை எப்படி பணியாற்றுகின்றன; அவை எந்த முறையில் மக்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றன என்று எவாலுவேஷன், பரிசீலனையை சென்ற ஆண்டு செய்தார்கள். அப்படி பரிசீலனை செய்த அறிக்கை ஒன்றை மத்திய அரசு வெளியிட்டிருக்கிறது. அதில் மத்திய சர்க்கார்

குறிப்பிட்டிருக்கிறது. அதிலே தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவரங்கள் நமக்கு எதிர்காலத்தில மேலும் தொடர்ந்து உறுதியாக, நல்ல ஆக்கத்தோடு பணியாற்றுவதற்கு துணையாக இருக்கும் என்ற காரணத்தால மூன்று விவரங்களை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அந்த மத்திய அரசினுடைய நிறுவனம் நம்முடைய மாவட்ட தொழில் மையத்தைப் பொறுத்த வரையில் எம்ப்ளாய்மெண்ட் ஆப்பர்சூனிட்டிஸ் இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் அதிக அளவுககு மாவட்ட தொழில மையம் மூலமாக உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொல்லி, அதை மற்ற மாநிலங்களோடும் ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

The adcitonal employment generated by dis'rict incust rialcent e during 1930-81 was the highest in TamilNadu followed by Gujarats Punjab and O issa.

இன்றைக்கு ஒரு நேரத்தில் சொல்வார்கள். குஜராத் தான் தொழிலிலே முன்னேறிக்கொண்டிருக்கிறது ; பஞ்சாப்தான் முன்னேறிக்கொண்டிருக்கிறது ; அதைப்போல ஒரிசா தான் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால் இன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில 1980–81 ஆம் ஆண்டில புதிதாக அதிக வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருப்பது தமிழ்நாடுதான். குஜராத்தைவிட, பஞ்சாபை விட, ஓரிசாவை விட இன்றைககு தொலை நோக்கில் முன்னோடியாக இருப்பது தமிழ்நாடு என்று புள்ளி விவரத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

புதிதாக வேலைவாய்ப்புகள்— தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 5920 பேருக்கும், குஜராத்தைப் பொறுத்த வரையில் 5406 பேருக்கும், பஞ்சாபைப் பொறுத்தவரையில் 5372 பேருக்கும், ஓரிசாவைப் பொறுத்த வரையில் 5363 பேருக்கும் என்கிற முறையில் இருக்கிறது.

அடுத்ததாக, "Entreprencuiial identification என்ற வகையில் புதிதாக தொழில் முனைவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு உற்சாகம் கொடுப்பதில் தமிழ்நாடு இன்றையதினம் முன்னணியில நின்று கொண்டு இருக்கிறது.

"In terms of the number of entrepieeures idenetified the performance by TIIC during 1980-81 was highest in Tamil Naau closely followed by Kerala and Gujarat



இன்றைக்கு அந்தத் தமிழ் முனைவர்கள்— தமிழகத்திலே 1584 பேர்களும், கேரளத்தில் 1574 பேர்களும், குஜராத்தில் 1535 பேர்களும் என்ற வகையில் விவரங்களைக் கொடுத்து இருக்கிறார்கள்.

அதைப் போலவே, institutional credits வங்கிகளிடமிருந்து நிதி ஆதாரங்கள் சிறு தொழிலகளுககு கொடுத்து உதவுவதிலே நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் அளப்பறிய பணியைச் செய்து இருக்கிறது.

"In terms of credit provided by Financial institutions, the amount advanced by TIIC during 1980-81 was the highest in the case of Gujarat closely followed by Tamil Nadu.

குஜராத்திலும், தமிழ் நாட்டிலே மட்டும் தான், இப்படி வங்கிகளிடமிருந்து நிதி ஆதாரங்களை இப்படிப்பட்டவர்களுக்குப் பெற்றுத் தருவதில் முதன்மையாக இருந்து வருகிறது. ஆக,

Employment opportunities, institutional credit, Entrepreneurial identification.

என்ற இந்த 3 வகைகளிலே சிறுதொழில்களுக்கு உதவி செய்வதில் மற்ற மாநிலங்களை விட முதன்மையாகத் தமிழ் நாடு இருக்கிறது என்று இன்றைக்கு மத்திய அரசு பாராட்டியிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சிறு தொழில்களுக்கு மிக அவசியமான மூலப்பொருள்கள் இங்கேயே கிடைக்கின்றன. சில மூலப்பொருள்கள் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அப்படி இறக்குமதி செய்கிற காலத்தில, சட்டங்கள், சம்பிரதாயங்கள், விதிமுறைகள் சிலநேரங்களில் தடையாக இருந்த நிலைமைகள் சில காலத்திற்கு இருந்த காரணத்தால, சிறு தொழில் முன்னேற்றம் அடைய முடியாமல் இருந்தது. ஆனால், இன்றைய தினம் புரட்சித்தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, குறிப்பாக, வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய பொருள்களுக்கு, அல்லது 'ரா மெட்டீரியல்ஸ'க்கு உள்ள விதிமுறைகளை எளிமைப்படுத்திய காரணத்தால், இந்த நான்கு ஆண்டுகளில், ஒரு மகத்தான முன்னேற்றத்தை தமிழ் நாடு பெற்று இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன், 1977 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அந்த தலைநாளில் 556 இலட்சம் ரூபாய்க்கு வெளிநாட்டில் இருந்து மூலப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு இருந்தது. 1978 ஆம் ஆண்டில் 769 இலட்சம் ரூபாய்க்கு இறக்குமதி

செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டில் 10.44 கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் 26 கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டது. 1980—81 ஆம் ஆண்டில் 30 கோடி ரூபாய் அளவிற்கு இறக்குமதி செய்யப்பட்டது. இதற்குக் காரணம் சிம்பிளிபிகேஷன் ஆப் தி ப்ரொசீஜர் என்கிற வகையில், இறக்குமதி செய்கிற சட்டங்களை ப்ராக்ட்டிகலாகவும், டாக்மேடிக்காகவும் இருக்கின்ற வகையில் செய்து இருக்கிறோம். இதன் காரணமாகத்தான் 5¼ கோடி ரூபாய் அளவிற்கு 1977-ல் இருந்த இறக்குமதி, இன்றைக்கு 30 கோடி ரூபாய் அளவிற்கு வளர்ந்து இருக்கிறது. அந்த அளவிற்கு நாம் விதிமுறைகளை எளிதாக்கி இருக்கிறோம். இதனை டெல்லியில் இருப்பவர்கள் குறிப்பாக மைய அரசிலே இந்தத் துறையைக் கண்காணிக்கிற பொறுப்பிலே இருப்பவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அப்படி பாராட்டியிருப்பதோடு மட்டுமல்ல மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற தொழில் துறை இயக்குநர்களுக்கும் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் அவர்கள் என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்றுகிறார்களோ அந்த நடைமுறைகளை விதிமுறைகளை நீங்களும் பின்பற்றினால் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் பிரச்னை உங்களுக்குச் சுலபமாக இருக்கும். ஆகவே, தமிழ்நாட்டை முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளுங்கள், என்று மற்ற மாநிலங்களில் இருப்பவர்களுக்கு அவர்கள் வேண்டுகோள்கள் தாக்கீதுகள் கொடுத்திருக்கிறார்கள். மைய சர்க்காரிலே பொறுப்பான பதவியில் இருக்கின்ற அதிகாரிகள் மற்ற மாநிலங்களுக்கு எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதியது மாத்திரமல்ல, தமிழக அரசுக்கும் அந்தத் தகவலைச் சொல்லியிருக்கிறார்கள்.

During the recent Port Licensing Authorities meeting at New Delhi on 23-1-1982 the Chief Controller of Imports and Exports specially mentioned to the Heads of all Licensing Officers about the excellent work done by the Director of Industries and Commerce Tamil Nadu. He also recommended similar procedures to be followed in other States and requested the Heads of Licensing officers of other Ports to have discussion with the Director of Industries Tamil Nadu Government in the introduction of such systems which are in vogue in Tamil Nadu.

[மாலை 4.20]

தமிழ்நாட்டில் இன்றைய தினம் நடைமுறையில் இருக்கிற அந்த வழிமுறைகளைக் கேட்டு நீங்கள் பின்பற்றுவீர்களேயானால் இறக்குமதி செய்கிற துறைக்கு அது மிக உபயோகமாக இருக்கும் என்று சொன்னது மட்டுமல்ல.



According to the Chief Controller, Imports and Exports these steps will obviously stimulate developmental activities in a methodical way and reduce the scope for bogus units coming under surface.

போலியாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறார்களே அப்படிப்பட்ட போலிகளைக் கூட தடுப்பதற்கு தமிழ்நாட்டில் உருவாகியிருக்கிற அந்தக் கேடயம், அந்த வழி முறைகள் உதவியாக இருக்கும், பின்பற்றுவீர்களேயானால் என்று எழுதியிருக்கிறார்கள். அப்படி இன்றைய தினம் இறக்குமதிக் கொள்கை ஆனாலும் சரி, ஏற்கெனவே நான் சொன்னதுபோல இண்டர்பிரினியல் ஐடென்டிபிகேஷனாக இருந்தாலும் சரி இன்ஸ்ட்டிடியூஷனல் கிரெடிட் ஆக இருந்தாலும் சரி இப்படி பல வகைகளிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், கடந்த 4 ஆண்டுகளாக தொலை நோக்கு பார்வையிட்டு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இன்றைக்கு எளிமையாக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இந்திய துணை கண்டத்திலே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு சிறப்பான ஒரு முறையை வேறொரு முறையில் இன்றைக்கு சிறப்பாக ஒரு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. அதுதான் இன்டஸ்ட்டிரியல் கோவாப்பிரேட்டிவ் சொசைட்டிஸ். அது ஒரு வகையில் டெமாக்கரிட்டிக் எண்டர்பிரைசஸ் என்று சொல்லலாம். பலம் இல்லாதவர்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு ஒன்றாக தொழில் செய்கிற ஒரு சித்தாந்தம். அந்த சித்தாந்தத்தை இந்திய துணை கண்டம் விடுதலைக்குப் பிறகு அனைத்து மாநிலங்களிலும் முயன்று பார்த்து, இடையிலே விட்டு விட்டு வளர்ந்திருக்கிறார்களே தவிர நம்மைப் போல அதில் கட்டுக்கோப்பாக வளர்ந்தது கிடையாது.

குறிப்பாக 1977-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி வருவதற்கு முன்னால் 300 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இருந்தன. இந்த 4 ஆண்டுக் காலங்களில் குறிப்பாக பட்டு வளர்ப்புத் தொழில், தீப்பெட்டித் தொழில், அதேபோல டேப்பியாக்கா எனப்படும் மரவள்ளிக் கிழங்கு தொழில், லேபர் இண்டஸ்ட்ரிஸ் போன்ற தோல் தொழில் என்று சின்னஞ்சிறு பணியாளர்கள் சிறுசிறு அளவிலே தொழில் செய்பவர்கள் சேர்ந்து, 500-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை கடந்த 4 ஆண்டுகளில் உருவாக்கி அது தற்போது ஒரு பலமான கேடயமாக, பலவீனமானவர்களுக்கு வலிவு அற்றவர்களுக்கு பாதுகாப்பாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக தமிழ்நாட்டில் நீலகிரி மலையில் இன்றைய தினம் தேயிலைத் தொழிலைப் பொறுத்த வரையில், 50 ஆயிரம் பேர்களுக்கு மேலாக, தேயிலையை சிறு விவசாயமாகக் கொண்டு,

அதையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். அந்தத் தொழிலுக்கு சென்ற ஆண்டு ஒரு அறை கூவல் ஏற்பட்டது. குறிப்பாக உலகச் சந்தையிலே ஏற்பட்ட தேக்கம், உலக சந்தையிலே ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளின் காரணமாக, நீலகிரியிலே இருந்த நண்பர்களுக்கு பல சிக்கலை உருவாக்கியது. அதன் காரணமாக டெல்லியிலே இன்றைய தினம் நிதியமைச்சராக இருக்கிற மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் அன்றைய தினம் காமார்ஸ் மினிஸ்டராக இருந்தார்கள். உடனடியாக அவர் ஒரு மாநாட்டைக் கூட்டிய நேரத்தில் தமிழகத்தின் சார்பாக சென்று நாங்கள் சில கருத்துக்களைச் சொன்னோம். இன்றைக்கு தேயிலைத் தொழிலில் உள்ள சிக்கல் தீர வேண்டும் என்றால் சிரமம் தீரவேண்டும் என்றால் அதற்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்றால் கலால் வரியில் ஒரு மாற்றத்தை நீங்கள் உருவாக்கித்தர வேண்டும்.

அதைப்போலவே நீலகிரி மலைப் பகுதியில் ஒரு வித கலால் வரி வசூலிக்கிறீர்கள், இன்னொரு பக்கத்தில் வேறொரு கலால் வரியை வசூலிக்கிறீர்கள். உதகையிலே ஒரு விதமாக வரி, கடலூரில் ஒரு விதமாக வரி. இப்படி டிஸ்பேரிட்டி இருக்கிறது என்று சொன்னபோது மாண்புமிகு பிரணாப் முகர்ஜி அவர்கள் இன்றைக்கு அதை ஓரளவுக்கு போக்கியிருக்கிறார்கள். அதைப் போலவே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சேல்ஸ் டேக்ஸை 5 சதவீதமாக இருந்ததை $2\frac{1}{2}$ சதவீதமாக ஆக்கியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல சிறு தேயிலை விவசாயிகளுக்கு கொச்சி நகரத்திலேயும் குன்னூர் நகரத்திலேயும் 2 கோடவுன்களை 25 லட்சம் ரூபாய் செலவில் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் வகையில, ஒரு பாதுகாப்பு கேடயமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) குறித்துக் கொள்ளுங்கள். கடைசியில் பேசிக் கொள்ளலாம்

அடுத்து, தீப்பெட்டி. தீப்பெட்டியில் ஒரு மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த அரசு. தீப்பெட்டி தொழில் என்பது பொருளாதார நடவடிக்கை மட்டும் அல்ல. ஒரு சமுதாய பொருளாதார நடவடிக்கை.

Social economic enterprise.

குறிப்பாக, சாத்தூர், கோவில்பட்டி திருநெல்வேலி போன்ற டிரடீஷனல் ஏரியாக்களில் மட்டும் இருந்த இந்தத் தொழிலை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வந்துதான் பொம்மிடி போன்ற, தர்மபுரி, போன்ற, கோவையிலே பொள்ளாச்சி போன்ற தாராபுரம் போன்ற நான்-டிரடீஷனல ஏரியாக்களுக்குப் பரவும் வகையில கிட்டத்தட்ட 100 தொழிற்கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.



1977 ஆம் ஆண்டு 11 கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இருந்தது. இப்போது ஏறத்தாழ 81 கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி அங்கே இன்றைக்கு நலிந்த மக்களுக்கு, சாமானிய மக்களுக்கு, இப்படி $1\frac{1}{2}$ இலட்சம் பேருக்கு அஸ்ஸூர்ட் எம்ப்ளாய்மென்ட் உத்தரவாதம் அளிக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. தீப்பெட்டித் தொழில் இன்றைக்கு மூன்று பகுதியாக இருப்பது அனைவருக்கும் தெரியும். விம்கோ போன்ற பல நாட்டு மூலதனத்தை வைத்து நடத்தப்படுகின்ற மலடி நேஷனல மானோபொலிஸ்ட் போன்றவர்கள் இந்தத் தொழிலிலே மிக ஆழமாகவும் வலிமையான இடத்திலேயும் இருக்கிறார்கள். அடுத்து மிடில் செக்டர் என்ற வகையிலே ஒரு கணிசமானவர்கள் சிவகாசி போன்ற பகுதிகளில் இந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். அடுத்து தொழில் கூட்டுறவுச் சங்கம் என்று சொல்கின்ற நம்மைப் போன்றவர்கள் ஒரு பகுதியினர் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறோம்.

மத்திய அரசு இந்தத் தொழிலை வளர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு பெரிய நிறுவனத்திற்கு 7 ரூபாய் 20 பைசா, மிடில் செக்டாருக்கு 4 ரூபாய் 50 பைசா நம்மைப் போன்ற தொழில் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த வரையிலே 1 ரூபாய் 60 பைசா என்ற வகையிலே எக்ஸைஸ் ட்யூட்டி நிர்ணயித்து, டாரிஃப் ப்ரொட்டக்ஷன் கொடுத்து இருக்கிறார்கள். நலிந்த மக்களுக்கும், தாய்மார்களுக்கும் பாதுகாப்பிற்கான ஒரு உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் டெல்லி சர்க்கார் இப்படிப்பட்ட ஒரு முறையை அமல் படுத்தினார்கள். ஆனால் இது பற்றி கேள்வி கேட்டு பல நூற்றுக்கணக்கானவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று ஒரு நான்கு மாதங்களுக்கு முன்பு ஒரு இடைக்கால தடையைக் கூட வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். தங்களுக்கு அந்த உரிமை வேண்டும் என்றும் எக்ஸைஸ் ட்யூட்டி வேறுபாடாக இருக்கக் கூடாது என்றும் அவர்கள் முயற்சித்தார்கள். ஆனால் இன்றைய தினம் இந்த மாமன்றத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்வேன், பாரதியார் விழா நடந்து கொண்டிருந்த அந்தத் தருணத்திலே தான் அந்த அறை கூவல் நமக்குக் கிடைத்தது. அந்த பாரதியார் விழாவிற்கு வந்த மாண்புமிகு அன்றைய நிதியமைச்சரும் இன்றைய ராணுவ அமைச்சருமான மதிப்பிற்குரிய ஆர். வெங்கட்ராமன் அவர்களிடத்திலே ராஜ்பவனுக்குச் சென்று அந்த விவரத்தைச் சொன்னபோது உடனடியாக அவர்கள் உச்ச நீதி மன்றத்திலே தடையை வாங்கி அண்மையிலே நடைபெற்ற பட்ஜெட் அறிவிப்பின் போது நம்மைப் போன்ற தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எக்ஸைஸ் ட்யூட்டி ஒரு ரூபாய் 60 காசு என்றும் அவர்களுக்கு 4 ரூபாய் 50 காசு என்றும் நிர்ணயித்து நமக்கு அப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பைக் கொடுத்தார்கள். அதற்காக

தமிழகத்தினுடைய பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் சார்பாக மத்திய அரசுக்குக் குறிப்பாக நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இன்றைக்கு நமக்கு பாதுகாப்புத் தருகின்ற வகையிலே அது இருக்கின்றது.

நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையில் அந்தத் தீப்பெட்டித் தொழில் ஒரு செல்ப் ரிலையன்ட் தொழிலாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்குத் தேவைப்படும் எல்லாப் பொருட்களைப் பொறுத்த வரையிலும் அதாவது தீப்பெட்டியாக இருந்தாலும், தீக்குச்சியாக இருந்தாலும், பொட்டாசியம் குளோரைடாக இருந்தாலும், நீல காகிதமாக இருந்தாலும், லேபிளாக இருந்தாலும் சிவகாசியிலோ அல்லது கோவில்பட்டியிலோ இருக்கின்ற தனி முதலாளிகளை நம்பிக் கொண்டு தான் இந்தத் தொழில் இருக்கிறது. அதனால் நமக்கு நாமே உருவாக்கிக் கொள்கிற வகையிலே கோவில்பட்டியிலே ஒரு அச்சகத்தையும், அதைப் போல 5 இடங்களில் அட்டை தயாரிக்கின்ற தொழிற்சாலைகளையும், குச்சி தயாரிக்கின்ற தொழிற்சாலைகளையும் நீலநிறகாகிதம் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையையும் குன்றக்குடியில் அதாவது நம்முடைய கிழக்கு முகவை மாவட்டத்திலே ஆரம்பிப்பதற்காக 15 நாட்களுக்கு முன்பு நான் சென்று அடிக்கல் நாட்டி விட்டு வந்திருக்கிறேன். பொட்டாசியம் க்ளோரைடு கூட்டுறவு முறையிலே உருவாக்கச் செய்து, இப்படி இந்தத் தீப்பெட்டித் தொழிலை ஒரு செல்ப் ரிலையன்ட் தொழிலாக ஆக்க வேண்டும் என்றும் தன்னுடைய தேவையைத் தானே நிறைவேற்றிக் கொள்கின்ற ஒரு தொழிலாக இது அமைகின்ற வகையிலே முயலுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இன்றைய தினம் அந்தத் தீப்பெட்டித் தொழில் என்று சொல்கிறார்களே, அது என்ன சமுதாய மாறுதலை உருவாக்கி இருக்கின்றது, அது என்ன பொருளாதார மாறுதலை உருவாக்கி இருக்கின்றது, என்ன அக மாறுதலை உருவாக்கி இருக்கின்றது, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு என்ன பாதுகாப்பைக் கொடுத்திருக்கின்றது என்ற நியாயமான சந்தேகங்கள் சிலருக்கு தோன்றக் கூடும். தாமபுரி, பொம்மிடி போன்றவை மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே எந்தத் தொழிலுமே கிடையாது. அங்கே ஏறத்தாழ 240 தொழில் கூடங்களை அமைத்து ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்து மாவட்ட தொழில் மையத்தின் மூலமாகவும், டீ.ஐ.ஐ.சி. மூலமாகவும், சிட்கோவின் மூலமாகவும் தொழிற்சாலைகளை கட்டி ஏறத்தாழ 5,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து பாதுகாப்பு கொடுத்திருக்கிறோம். 4,000 பேர் தாய்மார்கள். அந்தத் தொழில் எப்படி நடைபெறுகின்றது என்று



ண்டறிவதற்காக 'இந்து' பத்திரிக்கையின் மதிப்பிற்குரிய நிருபர் அவர்கள் சென்று எழுதியிருக்கிறார். நான் இரண்டு வரிகளை மட்டும் இந்த கண்ணியமிக்க சபைக்கு காணிக்கையாக்குகிறேன்.

[மாலை 4-30]

சிவகாசியிலும், கோவில் பட்டியிலும், விருதுநகர் தெருக்களில் எந்தக் காட்சியை காணுவோமோ அந்தக் காட்சியை தர்மபுரி தெருக்களில் தாய்மார்கள் அட்டைப் பெட்டிகளை தீக்குச்சிகளை ஏந்திக் கொண்டு செல்கிற காட்சியைக் கண்டேன்.

As one goes through the more populatised locality of Dharma-puri town, one finds a constant track of women and children carrying wooden frames filled with match sticks.

சிவகாசியை நாம் என்ன சொலகிறோம். ஒரு சிறிய ஜப்பான் என்று சொல்கிறோம். 60 வருஷங்களுக்கு முன்பு முகவை மாவட்டத்தில ஒரு பின்தங்கிய பகுதியாக இருந்தது. அங்கேதான் இரண்டு பெரியவர்கள் தீப்பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். இன்றைக்கு அது கணிசமான அளவிற்கு ரூ. 100 கோடிக்கு மேல் வரவு செலவு நடைபெறுகிற ஒரு தொழில் கேந்திரமாக இருக்கிறது. அப்படிப்பட்ட சிவகாசியின் போல் பொம்ப முடியும் கிருஷ்ணகிரியும், இன்றைய தினம் தர்மபுரியும் மாறியிருக்கிற உணர்வுதான் ஏற்பட்டிருக்கிறது என்று இந்து பத்திரிக்கை நிருபர் சொல்கிறார்.

The slight is becoming familiar in the neighbouring Bommidi and Kushuagiri towns and makes one feel that the district is fast turning into another Sivakasi.

அது மட்டுமல்ல, கவனிக்க வேண்டியது அடுத்த கருத்து.

The enthusiasm of the local people for this new line of economic activity is evidenced from the fact that during the last six months as many as 240 small units each providing additional Employment to 20 families have been added to the tiny sector of match industry which was until recently operating on an insignificant scale.

நிலத்தையே நம்பிக்கொண்டிருந்த அந்த மக்களுக்கு வேறு ஒரு வேலை வாய்ப்பை இந்தத் தொழில் கொடுத்திருக்கிறது. அது மட்டுமல்ல, கடைசியாக சொல்கிறார்கள்.

These units have come as part of the State Government's rural industries programme to weed a section of the working force from crowding on land which is drought-prone and less productive.

நான் ஏற்கெனவே சொன்னது போல விம்கோ போன்ற ஏகபோகவாதியாக, மிடில் செக்டார் என்று சொல்கிறோமே, அப்படிப்பட்ட செல்வாக்குமிக்கவர்கள் நம்முடையதீப்பெட்டியை பற்றி அடிக்கடி சொல்வது, இந்தத் தீப்பெட்டியில் தரம் இல்லை. தரமில்லை என்பது மட்டுமல்ல, விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லி மலைந்து, 'ப்ரோபகாண்டா' என்று சொல்கிறோமோ அந்த அளவில் அந்தத் தொழிலைச் சீர் குலைப்பதற்கு, அந்தப் பணியில் ஈடுபட்டிருப்பதற்கு இந்து பத்திரிக்கை சொல்கிறது.

Two service Co-operatives one at Dharmapuri and another at Bommidi have been formed to take care of these newly established units in respect of raw material supply and also sale of the products. In quality and price, the match boxes made by these tiny units compete well with some of the established units in the large scale sector.

என்று அப்படிப்பட்ட பெரிய ஏகபோக நிறுவனங்கள் உருவாக்குகிற தீப்பெட்டி தரம் போலவே, குறைந்த விலையில் தயாரிக்கக் கூடிய தொழிற் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கியிருக்கிறது என்பதை இந்தப் பத்திரிகை சொல்கிறது.

அதைப் போலவே சேலத்தில் இன்றைக்கு மரவள்ளிக் கிழங்கு பொறுத்த வரையில் 1 லட்சம் பேர் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். 30 ஆண்டுகளாக அந்தச் சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் பொறுத்த வரையில் 40 கோடி ரூபாய் அளவிற்கு அந்த மரவள்ளிக் கிழங்கிலிருந்து உருவாக்குகிற ஜவ்வரிசி, அந்த மாவு, வடபுலத்தில் இருக்கிற வங்காளம் போன்ற பகுதிகளுக்கு, உ.பி. போன்ற பகுதிகளுக்கு, ஒரிஸ்ஸா போன்ற பகுதிகளுக்கு, ஒரு விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு 5 வணிக வேந்தர்கள் அந்த மரவள்ளிக் கிழங்கு விவசாயிகளை கட்டுப்படுத்தி இருந்தார்கள். ஒரு 4 பிராசசிங் யூனிட்டை வைத்திருந்தார்கள். ஆத்தூர், நாமக்கல், சேலம் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகளைக் கட்டுப் படுத்தி இருந்தார்கள். அதற்காக ஒரு தொழிற் கூட்டுறவு சங்கத்தை ஏற்படுத்தி, அதிலே அவர்களை இன்றைய தினம் உறுப்பினர்களாக ஆக்கி ஒரு மாறுதலை, ஒரு திருப்பத்தை உருவாக்கி இருக்கிறது இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றைய தினம் சேலம் மாவட்டத்தில் எப்படி மரவள்ளிக் கிழங்கு சமுதாய பொருளாதார வாழ்விற்கு அடித்தளமாக இருக்கிறதோ, அது போல் வடாற்காடு மாவட்டத்தில் ஆம்பூரிலும், வாணியம்பாடியிலும் தோல் பதனிடும் தொழில் ஒரு தொன்மையான தொழிலாக இருந்து வந்திருக்கிறது,



மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய தொழிலாகவும் அதே நேரத்தில் அந்நியச் செலாவணி இன்றைக்கு தமிழகத்தில் சென்னை துறை முகத்தில் மட்டும் ஏறக்குறைய 400 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைய தினம் தோல், தோல் பொருள்கள் ஏற்றுமதி செய்கின்ற அளவில் ஒரு முக்கிய அந்நியச் செலாவணி அளிக்கக்கூடிய தொழிலாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலை முறைப்படுத்த வேண்டும் என்று அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 4 ஆண்டுகளாக பல நடவடிக்கைகளை எடுத்தார்கள். குறிப்பாக இன்றைய தினம் நம்முடைய மத்திய தொழில் அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு திவாரி அவர்கள் ஒரு மாநாட்டைக் கூட்டி தேயிலைப் போலவே, இந்தத் தொழிலில் இருக்கிற பிரச்சினைகளைப் பற்றிய நம்முடைய கருத்துக்களை கேட்டார்கள். அப்போது ஒரு அந்தக் கண்ணியமிக்கச்சபையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சார்பாக எடுத்துச் சொன்னேன்.

இன்றைக்கு பாரத் லெதர் கார்ப்பரேஷன் என்ற அனைத்திந்திய நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தின் பணி எங்கெங்கே தோல் பொருள்கள் இருக்கின்றனவோ அந்தத் தோல் பொருள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இந்த நிறுவனத்தை அமைத்த பிறகு விந்தியத்திற்கு தெற்கே அந்த பாரத் லெதர் கார்ப்பரேஷன் வரவில்லை. ஆக்ரா சென்றது. கான்பூர் சென்றது, உ. பி. சென்றது, வங்காளம் சென்றது, ஒரிஸ்ஸா சென்றதேதவிர விந்தியத்திற்கு தென் பகுதிக்கு வந்து அதன் கடமையை முழுமையாக ஆற்றவில்லை. இந்தக் குறைபாட்டை, இந்த பலகீனத்தை இந்த மாநாட்டில் சொன்ன பிறகு உடனடியாக மாண்புமிகு திவாரி அவர்கள் சம்பந்தப்பட்ட அதன் தலைவர் திரு. அட்டல் அவர்களுக்கு கட்டளையிட்டு இன்றைய தினம் ஒரு ரீஜனல் ஆபீஸ் வைக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அண்ணா அவர்கள் புகழ் இசையாக இன்று எங்கே சிலை வடிவத்தில் இருக்கிறார்களோ அதற்குப் பக்கத்தில் இன்று ஒரு ஒன்பது அடுக்கு மாடிக் கட்டிடம் இருக்கிறது. அதில் ஒரு மாதத்திற்கு அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாக ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு எம்போரியம் எல். டி. ஸி. சார்பாக வைத்து இருக்கிற ஆர்டிஷான்ஸ் செய்கிற தோல் பொருள்களை வாங்கி பிற பாகங்களுக்கு மார்க்கட்டிங் செய்ய அந்த எம்போரியத்தை விரிவாக்க திவாரி அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, குறிப்பாக கழிவு நீர் பிரச்சினை குறித்து அதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு குழு போட்டு ஆறு மாதத்திற்குள்ளாக அந்தக் குழு பரிசீலனை செய்து இதற்கு வழி வகை

காணவேண்டும் என்றும் அதற்கு அரசு என்னென்ன முயற்சிகளை எவ்வளவு செய்ய முடியுமோ அவைகளையெல்லாம் செய்யும் என்று சொல்லியிருக்கிறோம். அவைகளுக்கெல்லாம் மேலாக புரட்சித் தலைவர் அவர்கள் பல நாட்களாக தோல் தொழிலில் இருக்கிற நண்பர்கள், சிறு முனைவர்கள் எல்லாம்—நம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இங்கே ஒரு லெதர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் இல்லாத காரணத்தால் மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய பணத்தைப் பெற அதை சானலைஸ் செய்ய வாய்ப்பில்லை என்ற காரணத்தால், வாணியம்பாடி நண்பர்கள், திண்டுக்கல் நண்பர்கள், ஈரோடு நண்பர்கள், தமிழ் நாடு பூராவும் பரவிக் கிடக்கும் இத்தொழில் செய்கிற நண்பர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு முடிவு எடுத்து தமிழ்நாட்டில் தோல் தொழில் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு தோல் வளர்ச்சி நிறுவனம் ஒன்றை நிறுவ அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். பத்து கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் கொண்ட அந்த அரசு நிறுவனம் நிறுவப்பட்டதற்குப் பின்னால் அந்நிறுவனம் திட்டவட்டமாக எந்தச் செயல்களை ஏற்கலாம் என்பது பற்றி முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லெதர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் என்ற அந்த நிறுவனம் கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும். ஒன்று, தமிழ்நாட்டில் பலயிடங்களில் தோல் தொழில் உற்பத்திக்கு வசதி செய்து சிறிய தோல் பதனிடுவோரை ஊக்குவித்தல், இரண்டாவதாக, காலணி மற்றும் இதர தோல் பொருள்கள் தயாரிக்கும் நிலையங்கள் அமைக்கவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்ய ஏற்றுமதி உட்பட போதிய உதவி அளித்தல்.

தமிழ்நாட்டில் தொழிலாளர் திறன் மேம்பாடடைய நிலையான பயிற்சிக்கான ஒருங்கிணைந்த கூட்டுச் சாதனம், ட்ரெயினிங் நெட்வொர்க் அமைத்தல். ஆதி திராவிடர் அருந்ததியர் போன்ற தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள வகுப்பினருக்கு பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கப்பட வேண்டிய அவசியமுள்ள இந்த நேரத்தில் மைய கேந்திரத்திற்கு வெளியே தனித்தியங்கும் பரவலான தோல் தொழிலுக்கு உகந்த டீசென்ட்ரலைஸ்ட் லெதர் செக்டார்—ஒரு விரிவான திட்டத்தை மேற்கொண்டு அடிப்படையில் தோல் தொழில் செய்பவர்களை அவர்களை வேலையை சுற்றுப் புறங்களில் செயல் படுத்த அவர்களுக்கு வேண்டிய வசதி அளித்தல்.

அருந்ததியர் வேலை வாய்ப்பிற்காக மத்திய அரசிடமிருந்து சிறப்புப் பகுதி திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று தகுந்த திட்டங்களை ஏற்று நடத்துதல்.



தோல் தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் திட்டத்திற்கு பாரத தோல் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியோடு தக்க நடவடிக்கைகள் எடுத்தல்.

பாரத வர்த்தக நிறுவனம் தோல் வளர்ச்சி நிதியிலிருந்து அளித்த உதவியை மாநில அரசு சார்பாகப்பெற்று சானலைசிங் ஏஜென்சியாக பல திட்டங்களை அளித்தல் என்ற வகையில் பல திட்டங்களை உள்ளடக்கி இந்த 'லெதர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன்' என்ற வகையில் அரசு துவங்க முடிவெடுத்திருக் கிறது என்ற கொள்கை பிரச்சினையை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கிய பிரச்னை. பல உறுப்பினர்கள் சிட்கோ பற்றி சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் அந்தப் பணிகள் மேலும் சீராக பல ஆலோசனைகள் எல்லாம் சொன்னார்கள். அவைகளை எல்லாம் மனதில் வைத்து உரிய நேரத்தில் தக்கது செய்வோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த சிட்கோ நிறுவனம் குறிப்பிட்ட பணிகளுக்காக தொடங்கப்பட்ட அரசு நிறுவனம். குறிப்பாக சிறு தொழில் வளர்ச்சிக்கு சிட்கோ தொழிற் கட்டடங்களை தவணை முறைத் திட்டத்தின்கீழ் அளித்தல். வளர்ச்சி மையங்களை மேம்படுத்தும் மனைகள் கிராமப்புறங்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் மிகச் சிறிய தொழிற் கூடங்கள் அமைத்தல் முக்கிய மூலப் பொருள்கள் விநியோகித்தல், சிறு தொழில்கள் அமைய அல்லது மானியம், வட்டியில்லாத விற்பனைக் கடன் குறைந்த அழுத்த மின்சக்தி, நலிந்த தொழில் பராமரிப்பு, சிறு தொழில்களுக்கு விற்பனை வசதி ஆகிய பணிகளை மேற் கொண்டு இவைகளை செயலாற்றி வருகிறது.

[மாலை 4-40]

குறிப்பாக, இன்றைக்கு 1977 ஆம் ஆண்டில், நான் ஏற்கனவே சொன்னதுபோல், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுவரையில், 429 ஹையர் பர்சேஸ் அடிப்படையில் பெரிய தொழிற்கூடங்களையும், அதே போல் 1,212 டைனி செக்டார் என்று சொல்லக்கூடிய சின்ன சின்ன தொழிற்கூடங்களையும் ஆகமொத்தம் 4 ஆண்டுகளில் ஏறத் தாழ 1,641 தொழிற்கூடங்களைக் கட்டி முடித்திருக்கிறோம். இதற்கு ஏறத்தாழ $6\frac{1}{4}$ கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக் கிறது. 15 ஆயிரம் பேர்களுக்கு இந்தத தொழிற்கூடங்களிலே வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், ஏற்கனவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 700-க்கு மேற்பட்ட தொழிற்கூடங்களை 1956 அல்லது 1958 என்று கருதுகிறேன், இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய

சென்னையில் கிண்டியில் தொழிற்பேட்டை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்தத் தொழிற்கூடம்கூட அன்றைய தினம் தொழில் அமைச்சராக இருந்த ஆர்.வி. அவர்களுடைய பெருமுயற்சியால், தூரநோக்குப் பார்வையோடு முதன்முதலாக இந்தியாவிலே இந்த கிண்டியில்தான் தொழிற்பேட்டையை அமைத்தார்கள். அப்படி அமைத்ததோடு மட்டுமல்ல, அந்தத் தொழிற்கூடத்தைத் தொடங்குவதற்கு, அந்த நல்ல காரியத்திலே ஆட்படுத்த வேண்டுமென்று பண்டித ஜவர்கர்லால் நேரு அவர்களை இங்கே வரவழைத்து அந்த கிண்டித் தொழிற்பேட்டையைத் தொடங்கினார். அப்படி கிண்டி தொழிற்பேட்டையைத் தொடங்கியதற்குப்பிறகு, அம்பத்தூர் தொழிற்பேட்டை தொடங்கப்பட்டது. இன்றைக்கு தமிழக அரசு சிட்கோ என்று சொல்லுகின்ற சிறு தொழில்களை ஊக்குவிக்கின்ற நிறுவனத்தின் மூலமாக தமிழகத்தில் 40, 45-க்கு மேற்பட்ட தொழிற்கூடங்கள், தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அன்றைக்கு ஜவஹர்லால் நேரு அவர்களை வைதது ஆரம்பிக்கப்பட்ட கிண்டி தொழிற்பேட்டையில், 1971, 1972 ஆம் ஆண்டு வரைக்கும் அன்று பொறுப்பேற்றிருந்த அரசாங்கம் வாடகை பெற்று வந்தது. ஆனால், சிட்கோ வந்ததற்குப் பிறகு ஹையர் பர்சேஸ் என்று சொல்லக்கூடிய வகையில் அதை தொழில் முனைவர்களுக்கே உரிமையாக்க வேண்டுமென்று 10 ஆண்டுகளில் இன்ஸ்டால்மென்ட் பேசிசில் வழங்குவது என்று இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள புரட்சித் தலைவர் உருவாக்கியுள்ளார், ஆனால் 1956 முதல் 1972, 1973-க்கு உள்ள இடைவெளியில், இந்த 700 கட்டிடங்களுக்கு வாடகை கொடுத்து, அவர்களுடைய நைந்த பிரச்னையைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்தப் பிரச்னையில் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று 1976 ஆம் ஆண்டு அன்றைய தினம் ஜனாதிபதி ஆட்சி இருந்த அந்த நேரத்தில்தான் இந்த நிலைமைகளை யெல்லாம், அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அப்போது ஒரு முடிவெடுத்தார்கள். அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்று வந்ததற்குப் பிறகு அவர்கள் இந்த பிரச்னையை ஆய்ந்தார்கள். அதற்குப் பிறகு 1980 ஆம் ஆண்டிலே மே மாதம் இடைவெளி ஏற்பட்டு, விடுவிக்கப்பட்டோம். அடுத்து மீண்டும் ஆட்சிக்கு வந்தோம். அப்படி வந்ததற்குப் பிறகு, 1977 ஆம் ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைலர் அவர்கள் ஆய்ந்த இந்தப் பிரச்னைக்கு முடிவெடுத்தார்கள். 20, 25 ஆண்டுகளாக ரெண்டல் ஷெட்டிலே இருந்த அந்த தொழில் முனைவர்கள், அவர்கள் தொழிற்கூடங்களுக்கு ஒரு உத்திரவாதம் தரவேண்டும் என்று முடிவெடுத்து, அதற்கு அரசு ஒரு உத்தரவிட்டது. அதனால் 700 பேர்களுடைய வீட்டில் இன்றைக்கு அகல் விளக்கு நம்பிக்கை நட்சத்திரம் ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக, கீழ்க்கண்டவாறு குறிப்பிட்ட 4 பிரச்னைகளுக்கு உத்தரவிடப்பட்டது.



அன்றையதினம் சொன்ன பிரச்னைக்கு 1976 ஆம் ஆண்டில் உத்தரவு போட்டார்கள். அன்றைக்கு ஜனாதிபதி ஆட்சி இருந்தது. அதற்குப் பிறகு அதைப் பரிசிலனை செய்து இன்றைக்கு முனைவர்களுக்கு அவர்கள் தாங்கக்கூடிய அளவுக்கு 15 ஆண்டுகளில், 20 ஆண்டுகளில் பெறுவதற்கான வசதியை, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்ற வகையில், அவர்களுக்கு இதிலே ஒரு இன்வால்வ்மென்டை ஏற்படுத்தி, அவர்களுக்கு ஒரு உரிமை உணர்வு ஏற்படுகின்ற வகையில் புரட்சித் தலைவர் அவர்கள் 4 முடிவுகளை எடுத்துள்ளார்கள். அந்த சிறப்பான முடிவுகளை தமிழகத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன். 28—6—1976 அரசு ஆணையின்படி இன்றையதினம் கீழ்க்கண்ட நிபந்தனை விதிக்கப்பட்டது:—

(1) சம்பந்தப்பட்ட அதிகாரியால் நிர்ணயிக்கப்பட்ட நடப்பு அங்காடி விலையில் நிலத்தின் மதிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று 76-லே சொன்னார்கள். ஆனால், இன்றைய தினம் தமிழக அரசு முடிவெடுத்திருக்கிறது. நிலத்தை கையகப்படுத்திய செலவும், அதை சீர்படுத்துவதற்கான செலவுத் தொகையும் சேர்த்து மொத்தத் தொகை நிலத்தின் விலையாகும்.

இரண்டாவது, கட்டடங்களுக்கு 31—3—1975-க்குள் கட்டப்பட்டதாக வைத்துக்கொண்டு அந்த மதிப்பிலிருந்து கட்டடங்கள் கட்டப்பட்ட ஆண்டிலிருந்து 2½ சதவீதம்என்ற வீதத்தில் தேய்மான மதிப்பைக் கழித்து 31—3—1975 அன்றுள்ளபடி கட்டடங்கள் மதிப்பை குறைந்த விலையாக நிர்ணயம் செய்ய வேண்டுமென்பது 1976-வது ஆண்டு எடுத்த முடிவு. இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு எடுதது இருப்பது கட்டடங்கள் 31—3—1975 கட்டப்பட்டவைகளாக வைத்துக் கொண்டு அந்த மதிப்பிலிருந்து கட்டடங்கள் கட்டப்பட்ட ஆண்டு முதல் அரசு ஆணையிட்ட நாள் வரை 2½ சதவீதம் தேய்மானம் கழிக்கப்பட்டு கட்டடங்கள் மதிப்பு கணக்குப் போடப்பட்டு 31—3—1975-க்குப் பிறகு தொழிற்கூடங்கள் பெற்றுள்ள தொழில் முனைவர்களைப் பொறுதத வரையில் நிலத்தின் மதிப்பும் கட்டடத்தின் மதிப்பும் நிதியாண்டின் இறுதியில், அதாவது தொழில் கூடங்கள் பெறப்பட்ட ஆண்டில் மார்ச் 31-ஆம் தேதிப்படி கணக்கிடப்பட்டு அதன் பிறகு கட்டடங்கள் கட்டப்பட்ட ஆண்டிலிருந்து 2½ சதவீதம் தேய்மானம் கழிக்கப்பட்டு மதிப்பு நிர்ணயிக்கப்படும்.

மூன்றாவது, ஆரம்பத்திலே செலுத்தவேண்டிய டவுன் பேமென்ட், தவணைத் தொகை நிலம் கட்டடம் இரண்டிற்குமாக நிர்ணயிக்கப்படும் தொகை, மதிப்பில் 50 சதவீதம் ஆகும். மீதமுள்ள 50 சதவீதத் தொகை சம அரையாண்டுத் தொகை

களாக 5 ஆண்டுகள் செலுத்தவேண்டுமென்பது 1976-வது ஆண்டு முடிவு. ஆனால் புரட்சித் தலைவர் அரசினுடைய முடிவு முதலில் செலுத்தப்படும் தவணைத் தொகைனய 20 சதவிதம் நிர்ணயம் செய்து மீதம் உள்ள தொகையை 8 அரையாண்டு சம தவணைகளாக செலுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

கடைசியாக வட்டி. இரு தரப்பினராலும் தவணை முறையில் செலுத்தும் ஏற்பாடு ஒப்புக்கொள்ளப்படுகிற நாளில் வங்கியால் ஒப்பு அளிக்கப்படுகிற வட்டிவீதமே தவணைமுறை திட்டத்திற்கு வட்டிவீதமாகும் என்பது அப்போது 1976-வது ஆண்டு முடிவு. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பின்தங்கிய பகுதிகளுக்கு 9½ சதவிதம் என்றும் அபிவிருத்தியடைந்துள்ள பகுதிகளுக்கு 11 சதவிதம் என்றும் இந்திய தொழில் அபிவிருத்தி வங்கியின் மறு முதலீட்டுத் திட்டத்தின்கீழ் வசூலிக்கின்ற வட்டிவீதங்களே தவணை முறைத் திட்டத்திற்கும் வட்டி வீதங்களாக இருக்கும் என்று இந்த நான்கு பிரச்சினைகள் மீதும் நல்ல முடிவுகளை அறிவித்துக் கொள்கிறேன். 700-க்கு மேற்பட்ட தொழில் கூடங்கள் இதுவரையில் வாடகைக்கு எடுத்துக் கொள்கிற முறையிலே வாடகை செலுத்துகிறவர்களாக அவர்க்ள் இருந்தார்கள். இந்த நாள் வரை அவர்கள் அந்தப் பணம் செலுத்திய பிறகு அவர்கள் உரிமையாளர்களாக ஆகிறார்கள். 20 ஆண்டுக்காலமாக தீர்க்கப்படாத ஒரு பிரச்சினை முதல்வர் புரட்சித் தலைவர்களின் ஆட்சியில் தொழில் வளர்ச்சி கருதியும் தொழில் முனைவர்களுக்கு உற்சாகத்தினையும், தொழிலிலே ஈடுபாட்டினையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தவேண்டுமென்று விழுமிய நோக்கத்தோடு ஹையர் பர்ச்சேஸ் சிஸ்டத்தை ஏற்கெனவே நடைமுறையிலே சிப்காட்டிலே மற்ற அந்த முனைவர்களுக்குக் கொடுப்பதைப்போல்—இரண்டு வகை என்பது ஒழிந்து—ஒரே வகையாக எல்லோருக்கும் ஹையர் பர்ச்சேஸ் என்ற அந்தக் கொள்கையை விரிவுபடுத்தியிருக்கிறார்கள்.

மீண்டும் ஒரு பிரச்சினையைச் சொல்லிவிட்டு விடைபெறலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக நம்முடைய பட்டுத் தொழில். இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பாக திரு. ஆறுமுகம் அவினாசி, சட்டமன்ற உறுப்பினரைத்தவிர எல்லோரும் பேசவேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். ஏனென்றால் இன்றைய தினம் பட்டு நெசவாளர்களுக்கு தொழிலாளர்களுக்கு உதவக்கூடிய தொழிலாக அது இருக்கிறது, அதிக அளவுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய தொழிலாக இருக்கிறது, அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற தொழிலாக இருக்கிறது. இதைப்பற்றி அண்மையில் இரண்டு நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் பழனிமுத்து அவர்களைக் கொண்டு பழனி நகரத்திலே ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. மதுரை



மாவட்டத்திற்கு நானும் சென்றேன். நானும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவன் தான். இந்த நான்காண்டுகளில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு புதிய கலாச்சாரமே ஏற்பட்டு இருக்கிறது. மதுரை, ஒட்டன்சத்திரம் போன்ற பகுதிகளிலே பட்டுத் தொழில் மூலமாக பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. படித்த வாலிபர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தாய்மார்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு 22 கோடி ரூபாயை 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்றைக்கு ஒதுக்கி வைத்து அதனைச் செயல்படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இருக்கிறது என்ற விவரம் உங்களுக்குத் தெரியும்.

குறிப்பாக இந்தப் பட்டுத் தொழில் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் அதிக அளவுக்கு ரூரல்எம்ப்ளாய்மெண்ட் ஜெனரேட் பண்ணுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது. அதிலே இருக்கின்ற இரண்டு பிரச்சினைகளை நான் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். பட்டுப் புழுவை பாழ்படுத்துகின்ற ஊசி பூச்சியை ஒழிக்கக்கூடிய திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். கர்நாடகத்திலிருந்து அந்தப் பயிர் நோய் வந்திருக்கிறது. மத்திய அரசின் உதவியோடு பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இன்றைய தினம் உதவி செய்து வருகிறோம். அது மட்டுமல்ல ஜப்பான் நாட்டிலிருந்து புதிய வகையான பைவோல்டின் இன பட்டுப் புழு முட்டைகளைத்தயார் செய்து அதிக அளவுக்கு அவர்கள் சொன்னதுபோல்—அதிக உற்பத்தி செய்தால் மட்டும் போதாது, உற்பத்தித் திறனையும் அதிகரிக்கவேண்டுமென்று சொன்னதுபோல்—அந்த நோக்கத்தோடு ஜப்பான் நாட்டிலிருந்து பைவோல்டின் புரகிராம் என்ற முறையிலே இந்த ஆண்டு தமிழ்நாட்டிலே 6 மாத காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக ஒவ்வொரு மடங்கிற்கும், 6, 7 மடங்கு அதிக அளவுக்கு அதிக விளைச்சலை கொடுக்கக்கூடிய முறையாகும். அது டாக்டர் கிருஷ்ணசாமி என்ற வித்தகருடைய தலைமையிலே ஒரு குழு போடப்பட்டு அது நல்லமுறையிலே ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

[மாலை 4-50.]

அது வருகிற நேரத்திலே தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் இன்றைக்கு விவசாயம் செய்யக்கூடிய வாய்ப்பும், அதிலே பட்டுப் புழுக்கள் வளர்க்கக் கூடிய, பட்டு நூல் உருவாக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. இதனை மையமாகக் கொண்டு இன்றைக்கு கர்நாடகத்தினுடைய வளர்ச்சிக்கு காரணமாக இருப்பது உலக வங்கி அங்கே கணிசமாக பணம் அளித்திருக்கிறார்கள். நேற்றைய தினம் இந்து பத்திரிக்கையிலே கூட படித்திருப்பீர்கள், அதிலே விவரமாக போட்டு

இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் 1981 ஆம் ஆண்டு தமிழக அரசினுடைய சார்பாக ஒருங்கிணைந்த பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் ஒன்றினை உலக வங்கியினுடைய கடனுதவி கோரி மத்திய அரசுக்கு அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அந்த திட்டத்தினுடைய முதலீடு 70 கோடி ரூபாயாக இருக்கும். அது ஏறத்தாழ 2½ இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற திட்டமாக இருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டம் உலக வங்கியினுடைய துணையோடு கர்நாடகம் போல மற்ற மாநிலங்கள் போல பட்டுத் தொழிலைப் பொறுத்த வரையில் உருவாகி இருக்கிறது. இன்றைய தினம் ஊரகப் பகுதியைப் பொறுத்த வரையில் பட்டுத் தொழில், தோல் தொழில், மரவள்ளிக் கிழங்குத் தொழில், தீப்பெட்டித் தொழில் இப்படி கிராமப் பகுதிகளிலே, அதுவும் பின்தங்கிய பகுதியிலே வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற முயற்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதனை தான் தொடக்கத்திலே மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் சொன்ன நேரத்திலே சொன்னேன். இன்றைய தினம் வேலை வாய்ப்பு கிராமத்திலே உருவாகியிருக்கிறது என்ற விவரத்தை சொல்கிறேன் என்று அவருடைய மேலான பார்வைக்கும் பரிசிலனைக்கும் சில விவரங்களை வைத்திருக்கிறேன். தொடர்ந்து வைப்பேன் என்று சொல்லிக் கொண்டு இங்கே ஏறத்தாழ 10 கண்ணியத்திற்குரிய உறுப்பினர்கள் பல விவரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வெட்டுப் பிரேரணைகள் வாயிலாகபல இடங்களிலே தொழிற்பேட்டைகள்—மாண்புமிகு தங்கமணி, திருவேங்கடம் போன்றவர்கள் தொழிற்பேட்டைகள் வரவேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு சிட்கோ நிறுவனத்தைப் பொறுத்த வரையில் ஒரு 10 கோடி ரூபாயை அடுத்த ஆண்டு இதற்காக ஒதுக்கி வைக்க முடிவு செய்திருக்கிறது. எங்கெங்கு 10 முனைவோர்கள் பீசிபிலிட்டியோடு அந்த தொழில் நடக்கக் கூடிய வாய்ப்போடு முன் வருகிறார்களோ அவர்களுக்கு செய்வதற்கு முனைந்திருக்கிறோம். கடந்த ஆண்டு கணிசமான அளவு அங்கெங்கு டைனிசெக்டர் என்ற வகையிலே மற்ற வகையிலே, குறிப்பாக செரிகல்ச்சருக்கு பெரியார் மாவட்டத்திலே தாராபுரத்திலே இந்திய துணைக் கண்டத்திலே எங்குமே இல்லாத அளவிற்கு செரிக்கல்ச்சர் என்ற வகையிலே ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொக்கலிங்கம் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த திருப்போரூரிலே இன்றைய தினம் ஒரு 100 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி பார்மசிஸ்ட்ஸ் என்று சொல்கிறோமே, மருந்து தயாரிக்கிறவர்களுக்காகவே ஒரு தொழில் பேட்டை 100 பேர்களுக்கு சிறியவர்களுக்காக கையகப்படுத்தி இன்னும் 10, 15 நாட்களில் துவங்க இருக்கிறது. இப்படி ஒவ்வொரு தொழிலுக்கும் பங்ஷனல் எஸ்



டேட் என்ற வகையிலே தோல் தொழிலுக்காக ஆம்பூர் பகுதியிலே விரிவாக்க இருக்கிறோம். எந்தெந்த இடத்திலே வசதிகள் இருக்கிறதோ, வாய்ப்புகள் இருக்கிறதோ, எங்கெங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவார்களானால் நிச்சயமாக அந்தக் கா யத்தைத் தொடர்ந்து விசுவாசத்தோடு செய்வோம் என்று சொல்லி என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. உ. சுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ் பற்றி விரிவாக, அழகாக எடுத்துச் சொன்னார்கள். அதன் மூலமாக சிறிய தீப்பெட்டி உற்பத்தி ஸ்தாபனங்கள் பற்றிச் சொன்னார்கள். நடைமுறையிலே எங்கள் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலே பல கிராமங்களிலே சிறு சிறு கூட்டுறவு தீப்பெட்டி தொழிற்சாலைகளை ஆரம்பித்து நல்ல முறையிலே, நல்ல நோக்கத்தோடு ஆரம்பித்த அந்தத் திட்டம் அங்கே சரியாக செயல்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதன் மூலம் உற்பத்தியான தீப்பெட்டிகள் விற்க முடியாமல், அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருந்த தாய்மார்கள் சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பது தெரியுமா ? இந்த பெடரேஷன் என்கிற அமைப்பினால்தான் இந்தக் கஷ்டம் என்று சொல்லப்படுகிறதே, அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சுப்பிரமணியன் அவர்கள் சொன்ன குறைபாடுகள் ஆங்காங்கு இருக்கின்றன. ஆனால் அது குறையே தவிர குற்றங்கள் அல்ல. காரணம் அது ஆரம்ப காலம். ''இனிஷியல் ஸ்டேஜாக'' இருப்பதால், ''பிரீத்திங் பிராப்ளம்'' என்று சொல்வார்களே அவைகள் எங்களுடைய கவனத்திற்கு வந்து கொண்டு இருக்கின்றன. கண்ணும் கருத்துமாக கவனித்து, சீராகச் செய்து, வெற்றிகரமாக ஆக்குவதற்கு முயன்று கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கல்லன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும், மாநில அரசும் பல சலுகைகள், டீயைப் பொறுத்த வரைக்கும் கொடுத்தும், நீலகிரியிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் ஏறக்குறைய ரூ. 1 கோடி நட்டத்தில் இயங்கி வருகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? இப்பொழுதிருக்கும் மெம்பர்கள் தனியாரிடம் சென்று

கொண்டிருக்கிறார்கள். காரணம், தேயிலைக்கு நாம் கொடுக்கும் விலை சராசரியாக ரூ. 2-க்குக் கொடுக்கிறோம் ; தனியார்கள் ரூ. 2-75 அளவில் கொடுக்கிறார்கள்.

அடுத்தபடி அவைகள் மோஸ்ட் டெமாக்ரட்டிக் செட் அப் என்றார்கள். ஆனால், அங்கு நீங்கள் நியமித்த அனைவரும் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்தானே. இதுதான் டெமாக்ரட்டிக் செட் அப்பா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அங்கு பொறுப்பிலே இருப்பவர்கள் சிறு தேயிலை விவசாயிகள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் இன்று காலை அவைமுன் வைக்கப்பட்ட தொழில் துறை குறிப்புகளின் மீதும், கொள்கைகளின் மீதும் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ஆலோசனைகளை வழங்கினார்கள். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன், மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா ஷெரீப் ஆகியோர் இந்த மாநில அரசுக்கு இருக்கிற சிரமங்களை கவனத்திலே கொண்டு, அரசினுடைய கவலையை அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். மைய அரசு உதவ வேண்டுமென்கிற வேண்டுகோள்களையும், வற்புறுத்த வேண்டுமென்பன போன்ற வேண்டுகோள்களையும் எடுத்து வைத்தார்கள். வழக்கம் போல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதாரங்களோடு எதையும் சொல்லாவிட்டாலும் ஆரம்பிக்கிற பொழுதே, நீங்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே எதுவுமே நடைபெறவில்லை என்றும், நீங்கள் தொட்டதெல்லாம் துலங்கவில்லையென்றும், என்ன நீங்கள் செய்திருக்கிறீர்கள், என்ன நீங்கள் செய்யப் போகிறீர்கள் என்றும் உறுப்பினர் புருஷோத்தமன் பேசும் பொழுது இங்கு நடப்பது போதாது என்று வட மாநிலங்களுக்கெல்லாம் சென்றீர்கள், அங்கே போய் என்ன சொன்னீர்கள் என்றும், இப்படி பல்வேறு விதமான சந்தேகங்களையும் வழக்கமான குற்றச்சாட்டுகளையும் எடுத்து வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்களுக்கும், திருவேங்கடம் அவர்களுக்கும் நான் பதில் சொல்கிறபொழுது, அவர்கள் சந்தேகங்கள் போக்கப்படும், திருப்தி அடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

1977-க்குப் பின்னாலே, இந்திய நாடு முழுவதும் இருக்கிற தொழில் உற்பத்தியினுடைய வளர்ச்சி 5.5 சதவீதமாக இருக்கிற



பொழுது, தமிழகத்தினுடைய தொழில் உற்பத்தியினுடைய வளர்ச்சி விகிதம் 10.5 சதவீதமாக இருந்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல், நீங்கள் தமிழகத்திலே, குறிப்பாக பின்தங்கிய பகுதியிலே, தொழில்களை துவங்கவில்லையென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பின்தங்கிய பகுதிகளிலே தொழில்களைத் துவங்குகிறபொழுது, மைய அரசு மூலதன மானியம்—காப்பிட்டல் சப்சிடி—கொடுக்கிறது. அந்த மானியம் பெறுவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் 1977-க்கு பின்னாலே தொடர்ந்து 5 ஆண்டுகளாக முதலிடம் வகிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். 1978 வரை 613 இலட்சங்கள் மூலதனம் மானியம் பெறப்பட்டது. 1982 பிப்ரவரி வரை ஏறக்குறைய 1,200 இலட்சங்கள் மானியமாகப் பெறப்பட்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால் தமிழகத்திலே பின்தங்கிய பகுதியில் தொழில்கள் கடந்த நான்கைந்தாண்டுகளில் இந்தியாவிலேயே மற்ற எந்த மாநிலத்தோடும் ஒப்பிட முடியாத அளவிற்கு அதிகமாக வளர்ந்திருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.

[மாலை 5-00]

அதுமட்டுமல்ல, மைய அரசினுடைய நிதி உதவிக் கழகமாக இருக்கின்ற ஐ.டி.பி.ஐ. என்ற இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கடன் வழங்குவதில் 1980-81-ல் இந்தியா முழுவதும் 1,603 கோடியாக இருக்க தமிழகத்திற்கு மட்டும் வழங்கிய கடன் அளவு சுமார் 270 கோடி ரூபாய். இது மொத்தத்தில் 17 சதவீதம் என்பதையும், ஐ.டி.பி.ஐ.-யிடம் கடன் பெறுவதிலே இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் 1980-81-லே முதலிடம் வகித்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகின்ற பொழுது தொழில்களே துவங்காமல் சப்ஸிடியோ, கடனோ பெற முடியாது என்பதை அருமை திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போலவே, வேலைவாய்ப்புக்களை உண்டாக்கிக் கொடுப்பதில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1980 ஆம் ஆண்டு வரை 5.13 இலட்சமாக இருந்தது, 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் வரை 5.50 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வின் சதவீதம் 7 சதவீதம் என்பதை நான் சுட்டிக்காட்டுவதிலே மகிழ்ச்சி அடைகின்றேன்.

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1976-77 இல் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு 3,051 மில்லியன் யூனிட்டுகள். ஆனால் 1979-80 இல் 3,750 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, புதிய தொழிற்சாலைகள், இருக்கின்ற தொழில்களில் விரிவாக்கங்கள் ஏற்படாமல் மின் சாரத்தை உபயோகிப்பதன் அளவு கூடியிருக்க முடியாது என்பதை அருமை சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போல, 1970 ஆம் ஆண்டு முடிய தொழிற்சாலை சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6,215. 1981 ஆம் ஆண்டு முடிய பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 9,792.

இப்படி நான் குறிப்பிட்டுச் சொல்லிய அந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து கடந்த நான்கைந்தாண்டுக் காலமாக, 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்றபிறகு தொழில் துறையிலே தமிழகம் வேகமான வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டு வருகிறது என்பதை நான் சொல்லிக் கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன். அதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் போன்றவர்களும், மற்றவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில் நாம் தொழில்களைப் பெருக்குவதற்கு, முதலீடு செய்வதற்குக் கடன் வழங்குவதற்குக் கூட்டுத் துறையிலே தொழில்களைத் தொடங்க சில அரசு நிறுவனங்களை வைத்திருக்கிறோம். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் என்ற அந்த தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையிலும் 1977-78 ஆம் ஆண்டிலே கொடுத்த கடன் 12.27 கோடி. ஆனால் 1981-82 ஆம் ஆண்டில் சுமார் 40 கோடி. 1981-82 ஆம் ஆண்டில் கடன் வழங்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை சுமார் 3,800.

இந்த 3,800 தொழில்களும் உதவி பெறுவதற்குக் காரணம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய கடன் வழங்குகிற அதிகாரத்தை பரவலாக மாவட்டக் கிளைகளுக்கு விஸ்தரித்து, 1981 முதல் ரூபாய் 25,000 வரை கிளைகளே கடன் வழங்கலாம் என்ற அதிகாரத்தைக் கொடுத்த காரணத்தினால் இந்த அளவுக்கு வேகமாக உயர்ந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து, சிப்காட் என்ற நிறுவனம் தொழில்பேட்டைகளை அமைத்துக் கொடுத்தாலும், வட்டியில்லாத விற்பனை வரிக் கடன் Interest—free sales tax loan தவணைக் கடன் வழங்குவதிலும் கவனம் செலுத்தி தொழிற்சாலைகள் வளர்வதற்கு உதவி செய்கின்றது. தவணைக் கடன்களைப் பொறுத்த வரையில் சிப்காட் நிறுவனம் 1979-80 ஆண்டு வழங்கப்பட்ட தொகை 296 லட்சம் ஆகும். 1981-82லே வழங்கப்பட்ட தொகை சுமார் 1,300 லட்சம் ஆகும். வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கியது குறித்துச் சொல்லவேண்டுமானால், சிப்காட் நிறுவனம் துவங்கிய நாளிலிருந்து 31—3—1977 வரைக்கும் 2.92 கோடி ரூபாயாக இருந்தது. 1—4—1977 முதல் 31—12—1981 வரை சுமார் 8.7 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கின்றது. அதைப்போலவே 1977-லிருந்து 1981 வரையில் சுமார் 180 தொழில்களுக்கு நிதி உதவி செய்யப்பட்டிருக்கின்றது. 1977 முதல் 1982 வரையில் சுமார் 300 இண்டஸ்டிரியல் அப்ளிகேஷன்கள் பரிந்துரை செய்யப்பட்டு மைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

வெளிநாடுகளிலே வாழ்கின்ற இந்தியர்களை அழைப்பதற்காகவும், அவர்களிடத்திலே இருக்கின்ற நிதி தமிழகத்திலே தொழில் துவங்க பயன்படவேண்டும் என்பதற்காகவும், சிப்காட்டிலே இதற்கென ஒரு ஸ்பெஷல் விங் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. மைய அரசு 33 தாலுக்காக்களை பின்தங்கிய பகுதியாக அறிவித்து இருக்கின்றது. அது போக மாநில அரசு 24 தாலுக்காக்களை தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக அறிவித்தது.

அதுமட்டுமல்லாமல், Interest-free sales tax loan; அதனுடைய உச்சவரம்பு ஏற்கெனவே 42 லட்சமாக இருந்தது. இப்போது புதிய தொழிற்சாலைகள் துவங்குவதற்கு ஒரு கோடியாக உயர்த்தி இருக்கிறோம். விரிவாக்கத்திற்கு முன்பு இருந்தது 15 இலட்சம், அதை 50 லட்சமாக உயர்த்தி இருக்கிறோம். இதுபோல 5 தொழில்பேட்டைகளுக்கு இந்தியாவிலேயே குஜராத்திலேதான் இந்த வசதி இருக்கின்றது. அடுத்தபடியாக தமிழ்நாட்டிலேதான் 5 தொழில்பேட்டையிலேதான் உற்பத்தி தொடங்கி 5 ஆண்டுகள் வரை மின்வெட்டு கிடையாது என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை).

அதேபோல, பின்தங்கிய பகுதிகளில் எல்லா பகுதிகளிலும் தொழில் வரவேண்டும் என்பதற்காக (Electronics) மின் அணு தொழிற்சாலை, (Drugs and Pharmaceuticals) மருந்து, மருந்து சேர்ந்த பொருள்கள், (Automobiles accessories)

மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழில்கள்— இந்த 3 பிரிவைச் சேர்ந்த தொழில்கள், தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டாலும் அவைகளுக்கு 10 சதவிகிதம் மாநில அரசு மானியமாக அளிக்கும் என்கிற சலுகையும் ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். இப்படி சிப்காட்டின் மூலம், தொழில்களைப் பெருக்குவதற்கான பணி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

அதைப்போல 'டிட்கோ' நிறுவனம். பொதுத் துறையிலே தொழில்களை நிறுவவும், அதேபோல கூட்டுத் துறையிலே— ஜாயின்ட் செக்டார்— நிறுவவும், இந்த நிறுவனம் முனைப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது ஏறக்குறைய 316 கோடி மூலதனத்தில் 33 தொழிற்சாலைகள் தமிழகத்திலே ஆரம்பிக்கப்படுவதற்கு இந்த 'டிட்கோ, காரணமாக அமைந்திருக்கின்றது.

[மாலை 5-10]

மேலும் 172 கோடி செலவிலே மூலதன முதலீட்டிலே 18 கூட்டுத் துறை, ஜாயிண்ட் செக்டார் தொழில்கள். அதேபோல், பொதுத்துறை தொழில்கள் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1977-க்கு முன்னாலே இருந்ததைவிட, அதற்குப் பின்னாலே ஒரு 4,5 ஆண்டுகளில் மட்டும் சுமார் 15 தொழிற்சாலைகள் கூட்டுத்துறையிலே ஜாயிண்ட் செக்டாரிலே துவங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அது போலவே வருகிற ஆண்டுகளில் இன்னும், 8 கூட்டுத் துறையிலே, ஜாயிண்ட் செக்டார் முறையில் தொழிலகள் துவங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைபோல மாண்புமிகு உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் பேசுகின்றபோது, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், நீங்கள் வந்ததற்குப் பிறகு எதையும் தொடவில்லை, அப்படித் தொட்டாலும் அவைகள் துவங்கவில்லை என்று சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் துவங்கப்பட்டது. அவர் சொன்னார் சேலத்திலே இருக்கிற அந்த மேக்னசைட் முறையாகப் பயன்படுத்தப்பட வில்லை என்று சொன்னார்கள். அவர்கள் இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, அந்தப் பகுதியிலே மேக்னசைட் இருந்தது உங்களுடைய கவனத்திற்கு வரவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படு



கிறேன். ஆனால் துவங்கி குறைந்த ஆண்டுகளுக்குள்ளே அது லாபம் ஈட்டுகிற அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல தமிழ்நாடு மினரல்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் துவங்கப்பட்டது. தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் என்ற அந்த பொது நிறுவனம், மாநிலத்தில் எலக்ட்ரானிக் பொருள்களை உண்டாக்குவதற்கு, ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. மத்திய அரசிடமிருந்து இதுவரை 7 இன்டஸ்ட்ரியல் லைசன்ஸ் பெற்று, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல அரியலூரில் சிமெண்ட் ஆலை ஒன்று, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திலே கட்டி முடிக்கப்பட்டு அதனுடைய உற்பத்தியை துவக்கியது. அதேபோல் ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை, ஆலங்குளத்திலே ஓர் ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டு உற்பத்தியை துவங்கியது. பெரிய சர்க்கரை ஆலை சுமார் $1\frac{1}{2}$ ஆண்டிலே கட்டி முடிக்கப்பட்டு தன்னுடைய பணியை துவழ்கியது. இதையெல்லாம் நான் மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய உறுப்பினர்களுக்கு இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, எந்தவிதமான தொழில்களும் தமிழகத்திலே ஏற்படவில்லை என்று சொன்னதற்காக இவற்றையெல்லாம் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், நடத்தக்கூடிய நிறுவனங்கள், கூட்டுத்துறையிலே, பொதுத் துறையிலே நடத்தக்கூடிய நிறுவனங்கள், நஷ்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு அருமை அண்ணன் திரு. கே.ஏ.கே. அவர்கள சுட்டிக்காட்டியதைப் போல, பல தொழில்கள் ஏற்கெனவே துவங்கப்பட்டு நஷ்டத்திலே நடந்துகொண்டிருந்தன. இப்போது நீங்கள் கேட்கிற அல்லது சுட்டிக்காட்டுகிற அந்த நஷ்டங்களுக்கு நாங்கள் பதில் சொலலவேண்டிய நிலைமையில் இருந்தாலும், ஆண்டுக்காண்டு 1977-க்குப் பிறகு அந்தத் தொழில்களில் நஷ்டங்கள் குறைக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்த வரையில் 1981—82 ஆம் ஆண்டிலே அது 125 இலட்சம் ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கிறது. 'சிப்காட்' நிறுவனத்தைப் பொறுத்த வரையில் 1976—77-ல் இலாபம் 4 இலட்சம் ரூபாய்; 1980—81 ஆம் ஆண்டில் 121 ரூபாய் இலட்சம் இலாபம்.

டிட்கோ நிறுவனத்தைப் பொறுத்த வரையில் 1975–76 ஆம் ஆண்டில் நஷ்டம் 190 இலட்சம் ரூபாய் ; 1980–81 ஆம் ஆண்டில் இலாபம் 29 இலட்சம் ரூபாய். தமிழ்நாடு கனிவள நிறுவனத்தைப் பொறுத்த வரையில் அது இலாபத்தில் நடக்கிறது. 1980–81 ஆம் ஆண்டில் இலாபம் 3.50 இலட்சம் ரூபாய்.

அதைப் போல தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் 1981–82 ஆம் ஆண்டில் 30 இலட்சம் ரூபாய் இலாபம் பெற்றிருக்கிறது.

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த வ்ரையில் கூட்டுத் துறையில் இருக்கிற 5 சர்க்கரை ஆலைகள் மொத்தம் 350 இலட்சம் ரூபாய் இலாபத்தில் நடக்க ஆரம்பித்திருக்கின்றன. அதைப் போல பொதுத் துறையில் நடத்தப்படுகிற இரண்டு ஆலைகள் சுமார் 320 இலட்சம் ரூபாய் இலாபம் அடைந்திருக்கின்றன. சென்ற ஆண்டில். ஆனால் மொத்தத்தில் நஷ்டம் என்றாலும் கூட இந்தத் தொழிற்சாலைகள் 1976–77 ஆம் ஆண்டுக்குப் பின்னால் ஒவ்வோர் ஆண்டாக, அந்த நஷ்டம் குறைந்து கொண்டே வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல தமிழ்நாடு சிமின்ட் நிறுவனத்தின் சார்பிலே நடக்கிற இரண்டு சிமிண்ட் நிறுவனங்கள் இலாபத்தில் செயல்பட்டாலும்கூட, மொத்தத்தில் நஷ்டம் என்ற நிலையில் இருந்தாலும்கூட இந்த ஆண்டு லெவி முறையிலே மாற்றம் வந்திருப்பதால், ஒப்பன் மார்க்கெட்டில் ஓரளவு விற்பனை செய்யலாம் என்று இருப்பதால் வரும் ஆண்டில் லாபம் வரும் என்று நிச்சயமாக நம்பலாம்.

அதைப்போல சால்ட் கார்ப்பரேஷன், சிராமிக் நிறுவனம் ஆகியவை இலாபத்தில் செயல்படாவிட்டாலும் படிப்படியாக நஷ்டம் குறைந்து வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சிராமிக் நிறுவனத்தைப் பொறுத்த மட்டில் சிறுமலையில் இருக்கிற செங்கற் சூளை தொழிற்சாலையில் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் ஆண்டுக்கு 18 இலட்சம் கற்கள் உற்பத்திச் செய்யக் கூடிய அளவு திறன் கொண்டதாக அது அமைக்கப்பட்டது. ஆனால் அங்கே ஆண்டுக்கு 4 இலட்சம் கற்கள்தான் உற்பத்தியாகிறது. அதற்குக் காரணம் அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்த பிளான்ட் போடப்பட்ட போது சுமார் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அதிகமாக செலவு செய்து போட்டார்கள். அதனால் அது இலாபம்



அடையும் நிலையை பெற முடியவில்லை என்பதையும் தொடர்ந்து அதை நடத்துவது கஷ்டமாக இருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஹாஜா செரீப் அவர்களும், திரு. நெடுமாறன் அவர்களும் மாநில அளவிலே தொழில் துறையினுடைய வளர்ச்சிக்கு ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே அறிவித்திருந்தாலும் கூட இங்கேயும் இப்போது அவர்களுக்கு உறுதி கூறுவதிலே மகிழ்ச்சியடைகிறேன். மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்த ஆலோசனைக் கூற ஒரு உயர்மட்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

அதைப்போல வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும் இங்கே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் பல பகுதிகளை பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்றும், அவரவர் தொகுதியை பின்தங்கிய தொகுதியாக அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். பின்தங்கிய பகுதிகளைப் பற்றிப் பேசுகிற போது, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பிரபாகரன், திரு. சண்முகம் போன்றவர்கள் பேசுகிற போது சிவராமன் கமிட்டி பரிந்துரையை சுட்டிக்காட்டினார்கள். சிவராமன் கமிட்டி பரிந்துரை பிரகாரம் மத்திய அரசு முடிவு செய்தால் தமிழ்நாட்டில் இரண்டே இரண்டு தாலுக்காக்கள்தான் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகள் என்று வரக் கூடிய பெரும் அபாயம் இருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவேதான் தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் பேசுகிற போது கூட நம்முடைய அரசின் கருத்தை வலியுறுத்தியிருக் கிறோம். ஏற்கெனவே அறிவித்திருக்கிற தாலுகாக்கள் போல மாநில அரசு அறிவித்திருக்கிற 24 தாலுகாக்களையும் மத்திய அரசு தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக ஏற்றுக் கொண்டு அறிவிக்க வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருக் கிற நேரத்தில் இருக்கிற பகுதிகளும் போய்விடுமோ என்ற அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது.

எனவே, ஏற்கனவே நாங்கள் இந்த அரசின் கருத்தைச் சுட்டிக் காட்டியதை இங்கேயும் வலியுறுத்த நான் கடமைப்பட்டு இருக் கிறேன். சிவராமன் அவர்களுடைய பரிந்துரையை பற்றி மாண்பு மிகு மைய தொழில் அமைச்சர் திவாரி அவர்கள் சேலத்தில் சேலம் மாவட்டத்தின் சிறு தொழில் சங்கத்தின் சார்பில், வரவேற்பு கொடுத்தபோது சொன்னார்கள், அது அரசின் முடி விற்காக காத்து இருக்கிறது என்று சொன்னார்கள், ஆகவே

இந்த மாமன்றத்தின் மூலமாக ஏற்கனவே நாங்கள் தெரிவித்த கருத்தை மீண்டும் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். அந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டால், தமிழகத்தில் ஏற்கனவே பரவலாக தொழில் வளர்ச்சி ஏற்பட்டதற்கு தண்டனை கொடுப்பதுபோல் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[மாலை 5.20]

தமிழக அரசைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே 24 தாலுக்காக்களை தொழிலில் பின்தங்கிய பகுதி என்று அறிவித்து இருந்தாலும், இன்னும் ஒரு 6 தாலுக்காக்களை தொழில் துறையின் பின் தங்கிய பகுதியாக அறிவிக்க இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், ஏற்கெனவே மாநில அரசு அறிவித்து இருக்கிற தொழிலில் பின்தங்கிய பகுதியாக இருக்கும் பகுதிகளில் சிறிய தொழில்களுக்கு மட்டும் கடன் வசதி கொடுத்து வந்தோம். அதை நடுத்தர, பெரிய தொழில்களுக்கும் விஸ்தரித்துக் கொடுக்கும் முடிவை ஏற்கனவே முடிவு செய்து இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே சொன்னதைப் போல், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில், மாவட்ட கிளைகளில் இருந்து 25,000 ரூபாய் வரைக்கும் கடன் வழங்கும் அதிகாரம் ஏற்கனவே இருந்தது. அதிலே அதிகமான முன்னேற்றம் இருக்கிற காரணத்தால், பரவலாக சிறு தொழில்கள் இருக்கிற காரணத்தால், சிறு தொழில்களுக்கு 25,000 ரூபாய் வரையில் கடன் கொடுக்கும் நிலைமை போதாது என்ற காரணத்தால், அதை 1 இலட்ச ரூபாய் என்ற அள்விற்கு உயர்த்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

அதுமட்டுமல்ல, எதிர்கால திட்டங்களுக்காக சிலவற்றை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன். தமிழ் நாட்டில் இருக்கிற கனிம வளங்களைக் கண்டறியவும் அவற்றின் மூலம் புதியதொழில்களைத் துவங்க முடியுமா என்று ஆராயவும், இதுவரையில் தொழில் துறையின் இயக்குநரின் வரம்புக்குட்பட்டு இருந்த ஜியாலஜி பிரிவு, தனியான டைரக்டரேட்டாக மாற்றப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே, என்னென்ன தொழில்களை புதிதாகத தொடங்க இந்த அரசு முடிவு செய்து இருக்கிறது என்பதை ஓரிரண்டை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் டெட்கோ மேக்னசைட் செய்வதற்கு சுமார் 5 கோடி முதலீட்டில் ஒரு தொழிற்சாலை நிறுவ இருக்கிறது. அதைப் போலவே, கனிம நிறுவனத்தின் மூலம் இப்போது ரூபாய் 1 கோடிக்கு மேல் வெளிநாட்டுக்கு கருங்கற்களை ஏற்றுமதி செய்துகொண்டு இருக்கிறோம். வெட்டியெடுக்கும் கற்களை அப்படியே ஏற்றுமதி செய்வதால் விலை குறைவாக இருக்கிறது. அதை கட்டிங், பாலிஷுங் செய்து ஏற்றுமதி செய்தால், அதனால் 4 மடங்கு லாபம் கிடைக்கும் சூழ்நிலை இருப்பதால், அதைக் கருத்தில்கொணடு ரூ. 2 கோடி அளவிலே தமிழ்நாடு கனிம நிறுவனம் 'கட்டிங் அன்ட் பாலிஷிங்' யூனிட் போடுவதற்கு முடிவு செய்து இருக்கிறது.

சிவகெங்கை பகுதியில் கிராபைட் கிடைப்பதால், அங்கே சுரங்கப்பணிகள் ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்விக்கொள்கிறேன்.

பாளையம் பகுதியில 40 கோடி முதலீடடில் ஒரு சிமென்ட் தொழிற்சாலை துவங்க ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டு இருந்தாலும்கூட, அது மைய அரசின் லைசென்சுக்காகக் காத்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

அந்தப் போலவே, இங்கே மினி-சிமென்ட் ஆலை நிறுவுவதற்கு முடியமா என்பதையும் இந்த அரசு ஆய்ந்து கொண்டு இருக்கிறது.

திருத்தணியில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க ஏற்கெனவே மைய அரசுக்கு நாம் மனு செய்து இருக்கிறோம். லைசென்சுக்காக காத்து இருகிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு முடிவு செய்து இருக்கிறது.

தனியார் துறையில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருககிறீர்கள. அண்ணா வழியில் இருந்து பிறழ்ந்து போய் இருக்கிறீர்களே என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகிறபோது, தனியாருக்கு உதவி செய்வதற்காக இதைச் செய்து இருக்கிறீர்களா, அல்லது தனி முதலாளிகள ஏதோ தருவதைப் பெற்றுக்கொள்வதற்கு இப்படி நீங்கள் தனியாருக்கு அனுமதிதர இருக்கிறீர்களா என்றும் இப்படி பலவேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரே ஒரு சர்க்கரை ஆலையை அமைக்கத்தான் மைய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அது

5 ஆண்டுகளுக்கு. (பிளேனிங் கமிஷன்) ஒரு சர்க்கரை ஆலை, கூட்டுறவுத் துறையில் அமைக்க மைய அரசு முதலிலே அனுமதி கொடுத்துவிட்டு, பிறகு அவர்களே அவர்களுடைய முடிவை மாற்றிக் கொண்டு, பொதுத்துறையிலே கூட்டுறவுத் துறையிலே இப்படிப்பட்ட தொழிற்சாலையை அமைக்க இயலாத இடங்களில் தனியார்களுக்கு தொழில் செய்ய உரிமங்களை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே அதனையொட்டித் தான் 5 ஆண்டுகளுக்கு ஒரே ஒரு தொழிற்சாலை என்று வந்தால் போதாது என்ற காரணத்தாலே கூட்டுறவுத் துறையிலே, பொதுத் துறையிலே ஆரம்பிக்க முடியாத இடங்களில், வாய்ப்பு இல்லாத இடங்களில் தனியார்கள் முன் வந்தால், அவர்களுடைய மனுக்களை டெல்லிக்கு பரிந்துரை செய்கிறோம். அவ்வளவுதான்.. (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

**திரு. ரா. உமாநாத் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 5 ஆண்டுகளுக்கு ஒன்றைத் தவிர, வேறு எதையும் பொதுத் துறையிலோ கூட்டுறவுத் துறையிலோ ஆரம்பிக்கக் கூடாது என்று சொல்லி மத்திய அரசு சொல்லியிருக்கிறதா ? அதேமாதிரி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பொதுத் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோ ஆரம்பிக்க வசதியில்லாத இடங்களில் தனியார்கள் அமைக்கலாம் என்கிறபோது, தனியார்களுக்கு அதற்குத் தேவையான வசதி இருக்கும்போது, பொதுத் துறையில் நமக்கு ஏன் வசதியிருக்கக் கூடாது அங்கே?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்டிரல் பிளேனிங் கமிஷனிடம் நாம் இரண்டு சர்க்கரை ஆலைகளை அமைக்க கேட்டிருந்தோம். ஒரு சர்க்கரை ஆலைக்குத்தான் அனுமதி தந்தார்கள். இன்னும் 2 மினி சர்க்கரை ஆலைகளை மைய அரசு அனுமதி கொடுத்தால் ஆரம்பிக்கலாம் என்றிருக்கிறோம். பொதுத்துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ, நான் கூட்டுறவுத் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ ஆரம்பிக்க வசதியில்லாத நிலை என்று சொன்னது—வசதி என்பது நிதியைத்தான் சொன்னேனே தவிர, அந்தப் பகுதியிலே இருக்கிற, சூழ்நிலையையோ கரும்பையோ சொல்லவில்லை....... (குறுக்கீடு)

**திரு. ரா. உமாநாத் :** நிதிதான் வசதி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களேயானால், தனியார் துறையில் சர்க்கரை ஆலை ஆரம்பித்தால் அவர்களும் நிதியை கொஞ்சமாகத்தான் போடுவார்களே தவிர—உங்களுக்குத் தெரியும்—பாக்கி எல்லாம் மாநில அரசு, மைய அரசினுடைய பைனான்சியல் நிறுவனங்கள் தான் கொடுக்கும். அப்படி இருக்கும்போது அது உங்களுக்கும் கிடைக்கும் இல்லையா ? ஆகவே நிதி பிரச்னை எப்படி வரும் ?



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, இரண்டு தொழிற்சாலைகளுக்கு கூட்டுறவுத் துறையிலே அமைப்பதாக முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். தஞ்சாவூரிலே ஒன்று, திருத்தணியிலே மற்றொன்று. மைய அரசு இறுதியாக அனுமதித்தாலும் கூட, அந்த இரண்டு தொழிற்சாலைகளைத் தான் நமக்கு பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதிலே இன்னொரு பின்னணி இருப்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கும் மேலாக திருத்தணி ஆலைக்கு உரிமம் பெற நாம் முயன்று வருகிறோம். ஆனால் இதுவரையில் ஏதோ ஒரு காரணம் சொல்லி அதை திருப்பி அனுப்புகிறார்கள் அல்லது ஏதாவது விளக்கம் கேட்டு திருப்பி விடுகிறார்கள். ஆனால் மற்ற மாநிலங்களிலேயிருந்து கூட்டுறவுத் துறையிலே, பொதுத் துறையிலே, தனியார் துறையிலே என்று பல மனுக்கள் வருகிறபோது, அதிலே சிலவற்றை தனியார் துறைகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். எனவே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், இரண்டு கூட்டுறவுத் தொழிற்சாலைகளை கட்ட வேண்டும் என்று நாம் முடிவு செய்திருக்கிறோம். அதிலே இந்தப் பகுதியில்லாது மற்ற பகுதிகளில், கரும்பு உற்பத்தி அதிகமாக இருக்கும் பகுதிகளில் உள்ள விவசாயிகள், அவர்களுடைய இடத்தில் அந்த ஆலையை துவக்க வேண்டும் என்று பல மனுக்களை பல்வேறு இடங்களிலிருந்து கொடுக்கின்றனர்.

ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், தனியார் துறையில் முன் வருபவர்களுக்கும் அனுமதி தருகிறோம் என்று மத்திய அரசு சொன்னதற்குப் பின்னாலும், இந்த மாநிலத்திலிருந்து வரும் மனுக்களை பரிந்துரை செய்து அனுப்ப மாட்டோம் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும், இங்கே தமிழ்நாட்டிற்கு புதிய தொழில்கள் வருவதை தடுத்து விட்டார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டுவிட்டார்கள் என்று குற்றச்சாட்டை சுமத்துவார்கள் என்பது, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கே தெரியும்.

எனவே மற்ற மாநிலங்களுக்கு தொழில் துறையில் தனியார்களுக்கு அனுமதி வழங்குகிறபோது, நம்முடைய மாநிலத்திலும் அந்த வாய்ப்பு இல்லாது போய்விடக் கூடாது என்ற காரணத்தால், நம்மால் முடியாத பகுதிகளில், வாய்ப்பு இல்லாத பகுதிகளில், தனியார்கள் தொழில் துவங்க முன் வந்தால், அவர்களுடைய மனுக்களை பரிந்துரை செய்து, அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கிறோம். அதிலே எந்தவிதமான, தவறும் நடக்க முடியாது. நான் ஏற்கனவே சொன்னேன். அனுமதியை மத்திய அரசுதான் தரவேண்டும். நாம் வெறும் பரிந்துரைதான் செய்து அனுப்புகிறோம் என்று. அப்படி

பரிந்துரை செய்கிறபோது, பொதுத் துறை ஆலைகளும், கூட்டுறவுத் துறை ஆலைகளும் பாதிக்கப்படாத அளவுக்குத்தான், அந்தப் பகுதியிலே மனுக்களை நாங்கள் பரிசீலிக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, தனியார்களிடமிருந்து 6 மனுக்கள் வருகின்றன என்று வைத்துக் கொண்டால், 6 மனுக்களையும் நாம் மத்திய அரசுக்கு அனுப்பினாலும், 6-க்கும் அவர்கள் அனுமதி தரப்போவதில்லை. ஏதோ 5, 6 ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையிலே ஒன்றும், தனியார் துறையிலே ஒன்றுமாகத்தான் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதனாலே பயன் பெறுகிற தொழிலாளர்களும், விவசாயிகளும் பல்லாயிரக்கணக்கில் இருப்பார்கள் என்ற காரணத்தினால்தான், இந்த முடிவுகளை அரசு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கூட்டுறவு நூற்பு ஆலைகளைப் பொறுத்தவரைக்கும் புதிய நூற்பு ஆலைகள் மூன்றும், விரிவாக்கங்கள் செய்வதற்காக சில பிரிவுகளை நிறுவவும் சுமார் 35 கோடி ரூபாய் அளவில் திட்டமிடப்பட்டு, நிறுவப்படயிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு எலக்டரானிக்ஸ் கார்ப்பரேஷன் எல்காட் எனப்படும் நிறுவனம் ஏற்கனவே 7 லைசன்ஸ்களை வழங்கியிருக்கிறது. அதுபோல டெலிவிஷன் செட்ஸ் போன்றவைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவுவதற்காகவும் விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது.

[மாலை 5-30.]

எனவே எல்காட் நிறுவனம் பொதுத்துறையிலேயும், கூட்டுறவுத்துறையிலேயும் தொழிற்சாலைகளை நிறுவ இருக்கின்றது. அந்தத் தொழிற்சாலைகளினுடைய பெயர்கள் எல்லாம் ஏற்கனவே குறிப்பேட்டிலே இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அதனை முழுமையாக அறிவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே தனியாக எலக்ட்ரானிக் தொழிலைப் பொறுத்தவரையிலே அதனை வளரச் செய்வதற்கும், உண்டாக்குவதற்கும் பொதுத் துறையிலேயும் கூட்டுறவுத் துறையிலேயும் அதை ஏற்படுத்துவதற்கும் இந்த எல்காட் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பின்னால்—1980-81-லே தான் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது. பணிகள் நடைபெறுகின்றன.

அடுத்து தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் சார்பிலே உப்பு மெருகிட்ட கற்குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஒரு கோடி முதலீட்டில் துவங்கப்பட இருக்கின்றது. அதுபோல்



மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியிலே சுமார் 4 கோடி ரூபாயிலே நாள் ஒன்றுக்கு 15 டன் காகிதம் தயாரிக்கின்ற சிறிய தொழிற்சாலை ஒன்று துவங்கப்பட இருக்கிறது. டிட்கோவின் சார்பிலே சுமார் 8 தொழிற்சாலைகள் கூட்டு துறையிலே ஜாயின்ட் செக்டார் நிறுவனங்களாக வர இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான்சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மூக்குக் கண்ணாடி போன்ற பொருட்களைத் தயாரிக்கும் திட்டம், கைத்தறி ஆடை தயாரிக்கும் திட்டம், அம்மோனியம் நைட்ரேட், டைட்ரிக் ஆசிட், பொட்டாசியம் குளோரைடு, ரசாயன சாயம் போன்றவற்றைத் தயாரிக்கும் திட்டங்கள் என்று இப்படிப் பல்வேறு தொழில்கள் கூட்டுத் துறையிலே வர இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து உப்பு உற்பத்தியைப் பொறுத்தவரையிலே இந்தியாவிலேயே இரண்டாவது அதிக உப்பு செய்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான். ஆகவே இதிலேயும் அதிகமான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்பதையும், வருகின்ற ஆண்டிலே அந்த நிறுவனம் லாபம் வருகின்ற அளவுக்கு வளர இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஏறக்குறைய 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புகளூரிலே ஆரம்பிக்கப்பட இருக்கின்றது என்பதை ஏற்கனவே இந்த மன்றத்திலே சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகின்றபோது நிலக்கரி கிடைக்காத காரணத்தால் சர்க்கரை ஆலைகள் பாதிக்கப்படக்கூடிய அபாயம் இருக்கின்றது என்று சுட்டிக்காட்டினார்கள்.

நாம் சில துறைகளை ஆரம்பிப்பதற்காக மனுச் செய்கின்றபோது உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால் பாளையிலே சிமென்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க மனுச் செய்திருக்கிறோம். நிலக்கரி போதாது என்ற சாரணத்தால், நிலக்கரி பற்றாக்குறை இருக்கின்றது என்ற காரணத்தால் அவர்கள் இரண்டாவது தடவையாக அந்த மனுவை நிராகரித்திருக்கிறார்கள். ஆனால் நாம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு இருக்கிறோம். இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையிலே நமக்கு உத்தரவாதம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த உத்தரவாதத்தின் பேரிலே நிலக்கரி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் பேரிலே தான் தொடர்ந்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஐ. டீ. பி. ஐ. பணம் சாங்ஷன் செய்திருக்கின்றது. உலக வங்கி 100 மில்லியன் டாலர் அதாவது கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னாலே அனேகமாக மே, ஜுன் மாதத்திலே அதற்கான ஆரம்பம் நடக்க இருக்கின்றது. இரண்டாண்டுகளிலே அந்த நிறுவனம் உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது யாரோ தனியாருக்காகச் செய்யப்படுகின்றது என்று சொன்னார்கள். ஆனால் அப்படி இல்லை. ஐ. டீ. பி. ஐ. போன்ற மத்திய அரசுக்குச் சொந்தமான நிதியுதவிக் கழகம், உலக வங்கி, மத்திய அரசு ஆகிய அத்தனைபேரும் பரிசீலனை செய்த பிறகு தான் மேலும் இந்தியா முழுவதும் இருக்கின்ற பற்றாக்குறையினைக் கருத்தில் கொண்டு இந்தத் தொழிற்சாலை வெகு விரைவிலே அமைய வேண்டும் என்று மைய அரசு விரும்புகிறது. மாநில அரசும் துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது மைய அரசினுடைய உதவி இருந்தால்தான் தமிழ்நாட்டிலே அதிகமான தொழில்கள் வளர முடியும் என்பதை எல்லோரும் சுட்டிக் காட்டினார்கள். நான் சொன்னது, ஏற்கனவே நான் அறிவித்தது எல்லாம் மாநில அரசினுடைய வரையறைக்குட்பட்ட, நிதி ஆதாரங்களுக்கு உட்பட்ட, பொதுத் துறையிலே, கூட்டுத் துறையிலே, கூட்டுறவுத் துறையிலே நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

தனியார்களைப் பொறுத்த வரையில் உற்சாகப்படுத்த, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து எல்லா மாநிலங்களிலும் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கிறார்கள், எவ்வளவு கடன் வழங்குகிறார்கள், எவ்வளவு மானியம் வழங்குகிறார்கள் என்பதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்துத்தான் சில வசதிகளை வழங்கியிருக்கிறோம். முன்பே சொன்னது போல, வட்டி இல்லாக் கடன், மானியம், மின்சார வெட்டிலிருந்து விதிவிலக்கு போன்ற சில சலுகைகளைத் தனியார் நிறுவனங்களுக்கு அளிக்க முன் வந்திருக்கிறோம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து எந்த மாநிலத்திற்கும், தமிழ்நாட்டிலே கொடுக்கப்படுகிற சலுகைகள், வாய்ப்புகள், வசதிகள் குறைவில்லை என்ற உணர்வு அவர்களுக்கு வரவேண்டுமென்றுதான் சில சலுகைகளை உயர்த்தியிருக்கிறோம் கடந்த இரண்டாண்டுகளிலே என்பதை நான் ஏற்கனவே பேசுகிறபோது சுட்டிக்காட்டினேன்.

இப்படி மாநில அரசு என்னதான் முயற்சி செய்தாலும் மைய அரசினுடைய உதவி இல்லாமல் பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் போன்றஇவைகளெல்லாம் வளர முடியாது என்பதை அனைவரும் ஒத்துக் கொண்டார்கள். மைய அரசினுடைய தொழில முதலீடு 4 சதவீதமாகக் குறைந்து விட்டிருக்கிறது கடந்த 10 ஆண்டுகளிலே என்று நாங்கள் சுட்டிக் காட்டியிருக்கிறோம்; அனைவரும் சுட்டிக் காட்டினார்கள்; குறைந்து



கொண்டிருக்கிறது, தேய்ந்து கொண்டிருக்கிறது. மைய அரசினுடைய தொழில் முதலீட்டை அதிகப் படுத்தவேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மாமன்றத்தின் மூலமாக மீண்டும் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல மைய அரசினுடைய "சிங்கிள் செக்டார் ப்ராஜக்ட்" தமிழ்நாட்டிலே ஏற்படுத்துவது கடந்த சில ஆண்டுகளாக் குறைந்து கொண்டு வருகிறது. சமீபத்திலே இராணிபேட்டையில் 20 கோடியிலே வந்திருக்கிற விரிவாக்கம் தவிர மற்றெந்த புதிய திட்டமும் தமிழகத்திலே வரவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்று. இதைக் கருத்திலே கொண்டு மைய அரசு உதவிட வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த மன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறு தொழில்கள் அதிகமாக வருவதற்கு "மிஸ்சலேனியஸ் ப்ராஜகட்" என்று சொல்லி ஒரு புதிய திட்டத்தை முன்னாலே இருந்த தொழில் அமைச்சர் திரு. சனானா அவர்கள் அறிவித்தார்கள். இப்போது இருக்கிற அமைச்சர் அவர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

புதுக்கோட்டையிலே எலக்ட்ரானிக்ஸ் சம்பந்தப்பட்ட தொழிற்பேட்டையையும், திண்டுக்கல்லிலே லெதர்சம்பந்தப்பட்ட தொழிற்பேட்டையையும் அமைக்க வேண்டுமென்று மைய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க மாநில அரசு பரிந்துரை செய்து, ஆய்வுகளைச் செய்து அனுப்பி இருக்கிறோம். இந்தத் தொழிற்சாலைகளை இந்த இரண்டு இடங்களிலேயும் ஆரம்பிக்க வேண்டுமென்ற அந்த வேண்டுகோளையும் இந்த நேரத்திலே மைய அரசுக்கு வைக்கிறேன்.

சேலம் இரும்பாலை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஏறககுறைய 32,000 டன் உற்பத்தித் திறன் கொண்டதாக அதை இப்போது ரோலிங் மில்லாக ஆரம்பித்திருக்கிறார்கள். தொடக்க விழாவிலே கூட இதை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம். தொடர்ந்து மைய அரசுக்கு எழுதிக் கொண்டிருக்கிறோம். உடனடியாக இதை விரிவாக்கம் செய்தால் 70,000 டன்கள் அளவிற்கு உற்பத்தியை உயர்த்த முடியும். இதற்கு சுமார் ரூபாய் 50 கோடி அதிகமாக முதலீடு செய்தால் போதும். இதுவும் மைய அரசினுடைய கவனத்திலே, பரிசீலனையிலே இருந்து கொண்டிருக்கிறது. இதற்காவது அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் இல்லாமல் ஏற்கெனவே நாடாளுமன்றத்திலே பாரதப் பிரதமர் சுட்டிக் காட்டியதைப் போல, சேலம் இரும்பாலை ஆரம்பிக்கிற போது அந்த ஆரம்ப விழாவிலே சுட்டிக்

காட்டியதைப் போல அந்தக் கஞ்சமலைப் பகுதியிலே கிடைக்கிற இரும்புத் தாதுவைக் கொண்டு, கனிமத்தைக் கொண்டு ஒரு இன்டக்ரேடட் ஸ்டீல் ப்ளான்ட்டாக ஆரம்பிக்க வேண்டும், ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிட்புக்கு ஏற்ப அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக வேண்டிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன.

அந்தப் பகுதியிலே இருக்கிற அயர்ன் ஓரினுடைய இரும்புத் தாதுவின் இரும்புக் கன்டென்ட் 38 சதவீதம் தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் 18 சதவீதம் இரும்புக் கன்டென்ட் இருக்கிற அயர்ன் ஓரில் இருந்து கூட டைரக்ட் ரிடக்ஷன் மெதட் மூலமாக ஸ்பாஞ்ச் அயர்ன் தயாரிக்கப்படுகிறது. இந்த புது டெக்னாலஜி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும், இருக்கிற இரும்பு அளவைக் கொண்டு வெற்றிகரமாக சேலத்திலே ஒரு இரும்பு ஆலையைத் துவங்க முடியும் என்பதை மைய அரசு புரிந்து கொண்டு உதவும் என்று நம்புகிறோம்.

அதைப் போலவே தஞ்சை மாவட்டத்திலே எண்ணெய் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பது மகிழ்ச்சியும் தெம்பும் ஊட்டுவதாக இருக்கிறது.

[மாலை 5-40]

ஏறக்குறைய 1,500 பீப்பாய் அளவிற்கு எண்ணெய் அந்தப் பகுதியில் மூன்று, நான்கு கிணறுகளில் இருக்கிறது என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பயன்படுத்தி அந்தப் பகுதியில எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவேண்டும். பத்திரிகைகளில் படித்துப் பார்க்கிறபோது மத்திய அரசின அதிகாரபூர்வமான தகவல் இன்னும் வரவில்லை என்றாலும் அந்தப் பகுதி கிணறுகள், எண்ணெய்க்கிணறுகள் வெற்றிகரமாக அமைய இருக்கின்றன. 1,500 பீப்பாய் அளவிற்கு அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில எண்ணெய் இருக்கிறது, அதை லாபகரமாக, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும் என்றும் சொல்லப்படுகிறது. எனவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு இந்தப்பணியை துவக்க, ரிபைனரி ஆரம்பித்தால் இந்த ரிசர்ச் எல்லாம் முடியும் போது தொழில் துவங்க வாய்ப்பிருப்பதால் அதை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பெட்ரோல் கெமிக்கல் காம்ப்ளக்ஸ் ஒன்று இங்கே ஆரம்பிக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்;



ஃப்ரீ ட்ரேட் ஸோன் ஒன்று பம்பாயில் இருப்பதைப் போல் சென்னை பக்கத்தில் அமைக்க மைய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதையும் நான் இந்த நேரத்தில சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இவற்றையெல்லாம் பற்றிச் சொல்கிறபோது ஒன்றை சட்டமன்ற உறுப்பினர்கள் உணரவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் கட்சிக்கு அப்பாற்பட்டு மைய அரசின் தொழில்கள், சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட்ஸ், மைய தொழில் முதலீடு இப்படிப்பட்ட பொது விவகாரங்களில் இந்த மாநிலத்திற்கு அதிகமான பங்கு கிடைக்கும் வகையில் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் பேச வேண்டுமென்றும், மத்திய அரசின் அமைச்சர்களை வற்புறுத்த வேண்டுமென்றும் உள்ள என் வேண்டுகோளைத் தமிழக அரசின் சார்பில் இந்த நேரத்தில் இங்கே எடுத்துவைப்பது என் நீங்காத கடமையாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகிறபோது கடிதங்கள் எழுதினால் போதாது, எனவே மக்களை ஒன்று திரட்டவேண்டும் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களைப் போல் அந்தளவிற்கு வேகமாக ஈடுகொடுத்து வர இயலாது என்றாலும் மத்திய அரசுக்குத் தொடர்ந்து வற்புறுத்துவதற்கும் மத்திய அரசிடம் வாதாடுவதற்கும் இந்த அரசு பின்வாங்கவில்லை. தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இப்போது முன்பு இருந்ததைவிட லெட்டர்ஸ் ஆப் இட்டென்ட், இன்டஸ்ட்ரியல் லைசென்ஸ் ஓரளவு அதிகமாகத் தரப்படுகிறது, தனியார் துறையைப் பொறுத்தவரை. அந்த அளவிற்கு நாம் மைய அரசைப் பாராட்ட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மைய அரசின் முதலீடும் மைய அரசின் தொழில்களும் தமிழ்நாட்டில் அதிகமாகத் துவங்கவேண்டும். அதோடு இங்கிருக்கிற தொழில்களை விரிவாக்கம் செய்யவும் வேண்டும். ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை— 100 கோடி ரூபாய் செலவில் கலர் பிலிம் தொழிற்சாலை ஆரம்பிக்க திட்டமிருக்கிறது. இருக்கிற தொழிற்சாலைகளை விரிவாக்க வேண்டும். புதுத் தொழிற்சாலைகள் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் மற்ற நிறுவனங்களைப் பொறுத்தவரையில் எல்லாவற்றையும் பற்றிச் சொல்லிவிட்டேன். சிக் யூனிட்ஸ் பற்றி திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்திய நாடு முழுவதும் பொதுத் துறை, கூட்டுத்துறை நிறுவனங்கள் வியாதியால் பீடிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னாலும் தமிழக அரசைப் பொறுத்தவரையில தமிழ்நாட்டில் நடத்துகிற அல்லது நடைபெறுகிற பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுத் துறை நிறுவனங்கள் பல லாபத்தில நடந்து கொண்டிருக்கின்றன என்று ஏற்கெனவே சுட்டிக்காட்டினேன். கூட்டுத் துறை நிறுவனங்கள் கூட, மொத்தம் 15 நிறுவனங்கள் இருக்கின்றன, அவற்றில் 9 இலாபத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிச்சம் உள்ள நிறுவனங்களும் வருகிற ஆண்டில் லாபத்தில் நடை பெறும் என்று நம்புகிறோம். இருக்கிற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் நாம் 12 தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டப்படி வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஏழு தொழிற்சாலைகளுக்கு அவர்கள் பெற்ற கடன்களுக்கு அரசு உத்தரவாதம் கொடுத்து அவைகள் தொடர்ந்து நடக்க வசதி செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டத்தின் கீழ் எட்டு ஆண்டுகள்வரை தான் ஒரு தொழிற்சாலையை வைத்துக் கொள்ளமுடியும் என்பதால் அந்த எட்டு ஆண்டுகள் என்பதை பத்தாண்டுகள் என்று உயர்த்தி சகல யூனிட்களும் நல்ல முறையில் வரவேண்டும் என்பதற்காக இந்த வசதிகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்வே, இப்படி ஒட்டுமொத்தமாக நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதை போல், மொத்தத்தில் இந்த அரசினுடைய நிதி ஆதாரங்களுக்கு உட்பட்டு பொதுத துறை, கூட்டுத் துறை, கூட்டுறவுத் துறை தொழிற்சாலைகளை துவங்கிக் கொண்டிருக்கிறது. தனியார் துறையில் அதிகத் தொழில்கள் வருவதற்கு வேண்டி, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப் படுகிறது. தொழிற்பேட்டைக்குக் கடன் வழங்குவது, மற்றும் வசதிகள் செய்து கொண்டிருக்கிறோம். இதுதவிர, நான் சுட்டிக் காட்டியதுபோல், மைய அரசுடைய முழு ஒத்துழைப்பு நமக்கு இருக்குமானால், நாம் இப்போது மூன்றாவது இடத்திலே இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்—அதற்குக் காரணம் மைய அரசினுடைய அதிக நிதி உதவி இல்லாத சூழ்நிலையிலே இருக்கிறோம்—அதெல்லாம் சரியாக வருகின்ற போது, மைய அரசு கருணை, உதவி அதிகமாகக் கிடைக்கின்ற போது, மற்ற மாகாணங்களோடு போட்டி போடுகின்ற அளவிலே முதலிடத்திற்கு வருகின்ற வாய்ப்பிருக்கிறது. நம்மிடம் ஸ்கில்ட் லேபர் இருக்கிறது; இங்கே அதேபோல் தொழிலில் அமைதி இருக்கிறது. மற்ற எல்லாச் சூழ்நிலைகளும் சரியாகத் தான் இருக்கின்றன. எனவே, இவைகளையெல்லாம் மைய



அரசு கவனத்தில் கொண்டு உதவும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன். எனவே, இங்கே ஆலோசனைகள் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றி தரவேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

*திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முன்னாள் ஆட்சித் தலைவராக இருந்த இராசகோபாலன் அவர்கள் திண்டிவனம் தாலுக்காவிலே, குன்னம் என்னுமிடத்தில் கறுப்புக் கற்களைக் கொண்டு, திண்டிவனத்தில் மைலம் என்ற கிராமத்தில் தொழிற்சாலை ஏற்படுத்தலாம் என்று சொன்னார்கள். அரசுக்கும் பரிந்துரை செய்தார்கள். அது கிடப்பில் போடப்பட்டு விட்டதா ? இல்லை அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? என்று கேட்பதோடு, தென் ஆர்க்காடு மாவட்டத்திலே அருணா சுகர்ஸ், முண்டியம்பாக்கம் சுகர்ஸ்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே கேள்விகள் வேண்டாம். விளக்கமாக, அமைச்சர் அவர்கள் பதிலுரைக்குப் பிறகு கருத்துக்கள் சொல்லக் கூடாது.

திரு. கே. எம். தங்கமணி : சர்க்கரை ஆலைகளில் கிடைக்கின்ற கரும்புச் சக்கைகளைக் கொண்டு, திண்டிவனம் தாலுக்காவிலே ஒரு காகித ஆலை ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குன்னத்தைப் பற்றிக் கேட்டார்கள். 'டாமின்' நிறுவனம் தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும், எந்தெந்த இடத்தில் எந்தெந்தப் பகுதிகளில் கறுப்புக்கல் கிடைக்கின்றது என்பதற்கான ஆய்வுகளைச் செய்கிறது. இங்கே உள்ள கறுப்புக் கற்களின் தரம் உயர்ந்ததாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. ஆகவே, அது நிச்சயம் வெட்டி எடுக்கப் பட்டு பயன்படுத்தப்படும். வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.

கோரிக்கை எண் 24—தொழில்கள்.

திருவாளர்கள் சு. பாலன், கே. எம். தங்கமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. எம். ஆறுமுகம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,35,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திரு. வாளர்கள் சு. பாலன், இல. பலராமன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு எம். செல்லமுத்து அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,46,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



(இ) கோரிக்கை எண் -5

முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 96,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, ''குறைந்த விலையில் உள்ள முத்திரைத் தாள்கள் ஏழைகளுக்கு கிடைக்க வழிவகைச் செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 96,74,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(மாலை 5-50)

(ஈ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,03,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு.சு. பாலன். துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மக்களுக்கு பத்திரப் பதிவு செலவு குறைக்க ஏற்பாடு செய்யாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,03,06,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. கே. எம். தங்கமணி : துணைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் வாங்கும் நிலத்திற்கு பத்திரப்பதிவு கட்டணத்தில் இருந்து விலக்களிப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

''மானியக் கோரிக்கை எண் 6 —பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,03,06,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

(உ) கோரிக்கை எண் 10—பால்வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 86,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, கொள்கைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 86,50,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூறுவதாக இருந்தால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புகள்* மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதனை நான் பேசியதாக ஏற்றுக்கொண்டு அவைக்குறிப்பிலே ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பின்னர் நான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கொள்கைக் குறிப்பில் ஒரு முக்கியமான சாதனையை வெளியிட்டிருக்கிறார்கள் என்ன சாதனை என்று கேட்டால் 2.50 ரூபாயாக இருந்த ஒரு லிட்டர் பாலின் விலை 2.80 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இது அகில இந்திய அண்ணா தி. மு. க. ஆட்சி இன்றைக்குச் செய்திருக்கிற மகத்தான சாதனையாகும். சென்னையிலே

* 1085—1123ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.



3 லட்சம் லிட்டர் பால் உபயோகப்படுத்தப்படுகிறது. தமிழ் நாடு முழுவதும் இந்த அரசு பாலினுடைய விலையை உயர்த்தியிருக்கிறது. இது ஏழை எளிய, நடுத்தர மக்களைப் பாதிக்கக் கூடிய காரியமாகும். ஏற்கனவே பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டது. குடிசைமாற்று வாரியத்தில் உள்ள வீடுகள் கட்டணம் உயர்த்தப்பட்டது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது. ஓட்டல் பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது. அதைவிட மேலாக குங்குமத்திற்கு வரி போடப்பட்டிருக்கிறது. கற்பூரத்திற்கு வரி, மஞ்சளுக்கு வரி இத்தனையும் போதாதென்று இப்பொழுது பாலின் விலையை உயர்த்தியிருக்கிறீர்கள். அது எந்த வகையில் நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

விலைவாசியைக் குறைப்போம் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்துவிட்டு பாலினுடைய விலையை உயர்த்தியிருக்கிறீர்கள் என்றால் நான் ஏழை எளிய நடுத்தர மக்களின் சார்பாக இதற்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு சமாதானம் சொல்வது சரியாகாது. ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையிலே பால் வழங்குவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசியைக் குறைக்க முடியாமல் பால் விலையை உயர்த்துவதற்கு ஒரு அமைச்சர் தேவையில்லை. ஒரு சர்க்கார் தேவையில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். தரப்படுகிற பால் தரமானதாக இல்லை. 4.5 சதவிகிதம் கொழுப்பு பாலிலே இருக்க வேண்டும். ஆனால் அப்படி இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். வேண்டுமானால் கிங் இன்ஸ்டிட்யூட்டிற்கு அனுப்பினால் எந்த அளவுக்கு நான் சொல்வது உண்மை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். முன்பெல்லாம் பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால் அன்னப்பறவை வந்து பாலைத் தனியாகவும் தண்ணீரைத் தனியாகவும் பிரித்துவிடும் என்று சொல்வார்கள். இன்றைக்கு அன்னப்பறவை வந்தால் கூட —அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்—பாலைத் தனியாகவும் தண்ணீரைத் தனியாகவும் பிரிக்க முடியாது, காரணம் பாலே தண்ணீரத் இருக்கக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் வீடுகளிலே வழங்கப்படுவதிலே காலதாமதம் இருக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. மாதவரம் பால் பண்ணையிலிருந்து பால் பல வேறு சென்டர்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிற வேன் மஸ்தூர்கள் முன்பு இருந்தனர். அந்தத் தொழிலாளர்கள் இன்றைக்கு நீக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பி

வைக்கப்பட்டுவிட்டார்கள். அந்தப் பதவியை இன்றையதினம் எடுத்துவிட்டார்கள். இது எந்த விதத்தில் சரியானது என்பதைக் கேட்க விரும்புகிறேன். இது தொழிலாளர் விரோதப் போக்கு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி சென்டரிலிருந்து பல்வேறு டெப்போக்களுக்குக் கொண்டு செல்கிற போது லீக்கேஜ் ஏற்படுகிறது. ஆனால் அதற்குக் காரணம் அந்தத் தொழிலாளர்கள்தான் என்று சொல்லி அந்தத் தொழிலாளர்களின் சம்பளத்தைப் பிடித்தார்கள். அதற்காக என்னுடைய தலைமையிலே போராட்டம் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டார்கள். இன்றைக்கு அந்தப் பதவியை அபாலிஷ் செய்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல. இன்றைக்கு யாரை வைத்திருக்கிறீர்கள்? அவர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லி வீட்டுக்கு அனுப்பிவிட்டீர்கள். இன்றைக்குத் தனியார் மூலமாக இந்தப் பாலை வேனில் வைத்துக் கொண்டு வருகிறீர்கள். இந்தத் தனியார் காண்ட்ராக்ட், அதற்குப் பின்னாலே என்னென்ன இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே இது ஊழலுக்கு வழிவகுக்காதா என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன என்று நம்புவதற்குக் காரணங்கள் ஏராளமாக இருக்கின்றன. இந்தப் பால் வழங்கு துறையிலே இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறாரா, இல்லையா தெரியாது. இது நஷ்டத்திலே ஓடுகிறதா, லாபத்தில் ஓடுகிறதா என்று கேட்டால் நஷ்டத்தில் ஓடுகிறது என்பது தான் ஏற்கனவே கொடுத்திருக்கின்ற கணக்கு ஆகும். 1979—80ல் 233.27 கோடி அதேபோல அதற்கு அடுத்த ஆண்டு 1980—81 26.20இல் கோடி. இப்படி நஷ்டக் கணக்குதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நஷ்டம் தொடர்ந்து இருக்குமானால் நான் கேட்கிறேன், அதற்கு யார் காரணம்? தொழிலாளர்கள் காரணமா? நிச்சயமாக கிடையாது, அதற்கு காரணம் நிச்சயமாக நிர்வாகம்தான். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டு செப்டம்பர்—ஆகஸ்ட் மாதத்தில் 75 ஆயிரம் லிட்டர் என்று நான் நம்புகிறேன், அல்லது ஒரு லட்சம் லிட்டராக இருக்கலாம். எந்திரக்கோளாறு காரணமாக, எனக்குக் கிடைத்திருக்கிற தகவலைச் சொல்கிறேன், வேஸ்டாக சாக்கடையிலே கொட்டியிருக்கிறார்கள். எந்திரக் கோளாறு என்று ஒரு தவறான காரணம். யார் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் கிடையாது.

இன்றைக்கு அரசாங்கம் கட்டிடம் இருந்தும் கூட இரண்டாயிரம், மூவாயிரத்திற்கு என்று மாதவரம் பண்ணையிலே இருக்கக்கூடிய சோனல் ஆபீஸ், ஹெட் ஆபீஸ் என்று இப்படியெல்லாம் தனியார்களுக்குக் கொடுக்கக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. பல தவறான அணுகுமுறைகள் காரணமாகத் தான் இது போன்ற நஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.



அமைச்சர் அவர்கள் கூட ஆரம்பத்திலே இந்தத் துறைக்கு வந்தபோது, மன்னாதி மன்னர்கள், மன்னர் காலத்திலே மாறுவேடம் போட்டு போய்ப் பார்ப்பதைப் போன்று தெருத், தெருவாக, டெப்போ டெப்போவாகப் போய்ப் பார்த்தார்கள். இப்போதுகூட அந்த முறையிலே பழையபடி போக வேண்டும்.

இன்றைக்குப் பால் வழங்கு துறையிலே லாபம் தந்த பாலகம், மில்க் பார்லர் பல இடங்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் தொடர்ந்து வைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல இன்னொரு குற்றச்சாட்டை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1500 தொழிலாளர்களை அவர்கள் வேலைக்கு வரவில்லை என்று அநியாயமாக ஒரு பழியைச் சுமத்தி வீட்டுக்கு அனுப்பி இருக்கிறீர்கள். ஆனால் அதே சமயம் ஒரு சாதாரண ஆள் மாதவரத்தில் பால் பண்ணையிலே ஒரு சீனியர் மஸ்தூர், ஆளும் கட்சி ஆதரவாளர் ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு சொத்து சேர்த்து இருக்கிறார். இன்வெஸ்டிகேஷனில் குற்றவாளி என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு, மீண்டும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. பெயரைக் கேட்டால் கொடுக்கிறேன்.

மதுரையிலே தொழிலாளர்கள் பழிவாங்கியதைக் கண்டித்து ஒரு டோக்கன் ஸ்ட்ரைக் நடத்தினார்கள். 1500 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பினீர்கள். அதற்குப் பின்னாலே நீங்கள் உட்கார்ந்து, லேபர் கமிஷனர் உட்கார்ந்து, தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் உட்கார்ந்து உங்களிடம் ஒரு சமரச ஏற்பாட்டை கோரிக்கைகளை வலியுறுத்திக் கூறினார்கள். எல்லோரும் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று சொல்லியதற்குப் பின்னும் அங்கே குண்டர்களை வைத்துக் கொண்டு, போலீசை வைத்துக் கொண்டு, வேலைக்கு வந்தவர்களை உள்ளே நுழைய விடாமல் ஏற்பாட்டை எல்லாம் செய்துகொண்டு முதலமைச்சர் ஊரிலே இல்லை, நான் இந்த பிரச்சினையை முடித்து விடுகிறேன் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் கூடிப் பேசி என்ன காரணத்தாலோ அதற்கு பிறகு அந்த வாய்ப்பைத் தராமல் 1500 தொழிலாளர்களை அனுப்பிவிட்டீர்கள். வெளியிலே இருந்து ஆட்களை எடுக்கக் கூடாது என்று ஒரு உத்தரவைப் போட்டீர்கள், ஜீ. ஓ. நம்பர் மற்ற விவரங்கள் எல்லாம் என்னிடம் இருக்கிறது. நேரத்தின் அருமை கருதி நான் அவற்றையெல்லாம் சொல்லவில்லை. ஆனால் அதற்கு மாறாக எங்கோ இருந்த உங்கள் அமைப்பாளர்களுக்கு, உங்களுக்கு வேண்டியவர்களுக்கு இன்றைக்கு வேலை கொடுத்து, முதலிலே அவர்களுக்கு ஒரு சம்பளம் நிர்ண

யித்து ஏமாற்றி பிறகு அந்தச் சம்பளத்தை குறைத்திருக்கிறீர்கள். ஆக இன்றைக்கு 1500 தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பி இருக்கிறீர்களே அது என்ன நியாயம்? நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேலவையில் பேசிய பேச்சு கூட என்னிடத்திலே இருக்கிறது. அரசு பால் வழங்குவது நாம் மட்டும் சாப்பிட அல்ல. மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். இதிலே கருத்து வேறுபாடு கிடையாது. அந்தப் பாலிலே கலப்படம் செய்தவர்களை வெளியே அனுப்பினால் உள்ளே சேர்க்க வேண்டுமென்று வேலை நிறுத்தம் நடத்தினால் எப்படி? கலப்படம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டியதுதான். அவர்கள் யார் யார், முதலமைச்சர் சொல்லியிருக்கிறாரா? அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களா? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அதையெல்லாம் சொல்லியிருக்கிறார்களா என்றால் கிடையாது. அடுத்து முதலமைச்சர் சொல்கிறார், அவர்களை உள்ளே சேர்க்க வேண்டுமென்று வேலை நிறுத்தம் செய்தால் எப்படி? வேறு நபர்களை வைத்து ஒரு ஆண்டுக்கு மேலாகப் பணிகள் நடக்கிற போது நான் சொல்வது பாலிலே தண்ணீர் கலந்தார்கள், அதனால் தான் வீட்டுக்கு அனுப்பினோம் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது.

[மாலை 6-00]

ஆனால் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே நம்முடைய அமைச்சர் கே. ஏ. கே. அவர்கள் பேசுகின்ற போது சொல்லிய கருத்து, மதுரையிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஆதரவாக சில கோரிக்கைகளைத் தொழிலாளர்கள் வலியுறுத்திப் போராட்டம் நடத்தினார்கள் என்பதுதான். இப்பொழுது பாரதிக்கு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். பாரதியார் சொல்லியிருக்கிறார், பொய் சொல்லலாகாது பாப்பா என்று. ஒருவேளை பாப்பாவுக்குத்தான் சொல்லியிருக்கிறார், நமக்குச் சொல்லவில்லை என்ற காரணத்தினாலே நமது அருமை கே. ஏ. கே. அவற்றையெல்லாம் சொல்லக் கூடாது என்று இருக்கிறார்களோ, என்னவோ, எனக்குத் தெரியவில்லை. நான் சொல்ல விரும்புவது, அந்தத் தொழிலாளர், இன்றைக்குக் கூட ஊர்வலமாக வந்து பிரச்சினைகளையெல்லாம் உங்கள் முன்னாலே வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் கவனிக்கப்பட வேண்டும் என நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அமெரிக்க பட்டர் ஆயில் என்ற ஒரு கழிவு ஆயில் காண்ட்ராக்ட் ஒரு தனி நபருக்கு கொடுக்கிறீர்கள். அதுவும்



ஒரு குறிப்பிட்ட நபருக்குத் தொடர்ச்சியாகக் கொடுக்கிறீர்கள். அனிமல் ஹஸ்பண்டரியிலே ரூ. 100 க்குத்தான் ஏலம் விட்டார்கள். இன்றைக்கு ஏறத்தாழ ரூ. 1 இலட்சத்துக்கு மேலே போகிறது. அது ஏன், அந்த ஒரு தனி நபர் மட்டும், ஒரு குறிப்பிட்ட நபர் மட்டும் அந்த ஏலத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்? அதற்கு எத்தனை பேரிடம் டெண்டர் கால் ஃபார் பண்ணினீர்கள்? ஆகவே, நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, ஊருக்கு உலகத்திற்குத் தெரியாமல் பல தவறான காரியங்களை நீங்கள் திரைமறைவிலே நடத்திக் கொண்டிருக்கிறீர்கள், நான் அமைச்சரை மட்டும் சொல்லவில்லை, பரவலாக அத்தனை பேரையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஆக, இன்றைக்குத் தவறுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல, நான் இன்னொன்றையும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு சங்கங்கள் கலைக்கப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. பல்வேறு சங்கங்கள் செயல்படாத நிலையில் இருக்கின்றன என்று நீங்கள் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். நான், துணைத்தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அதற்கான காரணங்கள் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். செயல் படாததற்கு என்ன காரணம் ? என்னிடத்திலே கூட ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புகார் மனுவில் எவ்வளவு தூரம் கூட்டுறவு சொசைட்டிகளில், குறிப்பாக, பால் வழங்குகின்ற அந்தத் துறைகளில் தவறுகள் நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்கள். பலபேர் இங்கே கட் மோஷன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அவைகளிலே பல குற்றச்சாட்டுகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே, நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, 1,500 தொழிலாளர்கள், பால்வள நிறுவனத்திலே பணியாற்றியவர்கள், சட்ட விரோதமாக எந்தக் காரியமும் செய்யவில்லை ; பேச்சு வார்த்தையில் நீங்களே உடன் இருந்தீர்கள். லேபர் கமிஷனர் உடன் இருந்தார். இவ்வளவுக்குப் பிறகும், சமாதானம் ஏற்பட்டதற்குப் பிறகும், வேண்டுமென்றே, அவர்களை வீட்டுக்கு அனுப்புவது என்றால், அது எந்த விதத்திலும் நியாயமானது அல்ல. ஏற்கனவே உத்தரவு இருக்கிறது, வெளியாட்கள், இருக்கக் கூடாது என்று. உங்களுக்கு வேண்டியவர்களை நீங்கள் சட்ட விரோதமாக எடுத்து, இவர்களைப் பழி வாங்குவது தொழிலாளியாக சினிமாவில் நடித்த முதலமைச்சருக்கு அழகல்ல என்று சொல்லி, தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்தக் காரியத்தை நடத்துகின்றார்கள்.

'அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர்..............,
(மணி அடிக்கப்பெற்றது).

திரு. மா. சின்னராசு : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கொண்டு வந்திருக்கிற பால் வளம், முத்திரைத்தாள் நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது எனது கருத்துக்களை முன் வைக்க வாய்ப்பினைத் தந்ததற்காக முதலில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து 3 நாட்கள் எனக்கு வாய்ப்பைத் தந்திருந்தாலும், இன்று இந்தத் துறையில், பால் வளத் துறையில், பேசுவதைத்தான் நான் பெருமையாகக் கருதுகிறேன். காரணம், பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் உட்பட்ட கிராமச் சங்கத்தைக் கடந்த 6 ஆண்டு காலமாக நடத்திக் கொண்டு வருகிற ஒரு தலைவன் என்ற முறையில், இந்தத் துறை மானியத்தின் மீது சில கருத்துக்களை, உள்ளபடியே, உழவர் பெருமக்களின் சார்பாகச் சொல்கிற வாய்ப்பைப் பெற்றவனாகக் கருதுகிறேன்.

திரு. ரகுமான்கான் அவர்கள் அவருக்கே உரிய வேகத்தில், பால் விலை உயர்ந்து விட்டது என்று இங்கு அங்கலாய்த்துக் கொண்டார்கள். சாதாரணமாக, அவர்களுக்கெல்லாம் பதில் உரைத்து விவாதம் செய்கிற வழக்கம் இல்லாத நான் ஒரு உழவர் குடியில் வந்தவன் என்ற காரணத்தினால் அந்தக் கருத்துக்குப் பதில் சொல்கிற கட்டாயத்திற்கு ஆட்பட்டிருக்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பால் விலை 2.80 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால் என்னுடைய கிராமத்திலுள்ள என்னுடைய சகோதரன் தான் விற்பனை செய்கின்ற பாலுக்கு 15 ரூபாயைப் பெற்றுச் செல்கிறான், 5 லிட்டர் பாலுக்கு 15 ரூபாய் பெற்று வீட்டுக்குச் செல்கிறான் என்று பொருள். கிராமங்களில் உள்ள வேலைக்கும், உடைமைக்கும் சொந்தமில்லாத உழவர்கள் விற்பனை செய்கின்ற பாலுக்கு நியாயமான விலையைப் பெறுவதற்காகத்தான் இந்த விலை கொடுக்கப்படுகிறது என்பதை முதலில் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் என்று "ஆனந்த்" பாணியில் அமைக்கப்பட்ட பின்னால், 3 டயர் சிஸ்டம் என்ற முறையில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் என்றும், மாவட்ட ஒன்றியங்கள் என்றும், மாநில அளவில் பெடரேஷன் என்றும் அமைக்கப்பட்டதற்குப் பிறகு உற்பத்தியாளர்களுக்கு உரிய விலையும், வசதிகளும் செய்து கொடுக்கின்ற ஒரே அமைப்பு இந்தியாவிலேயே இந்தப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்தான். இந்த ஒன்றியம் கிராமப் புற மக்களின் வாழ்க்கை உயர்விற்கு அமைந்திருக்கிற பெரியதொரு நிர்வாகம். இதை வளர்ப்பதிலயும், நிர்வகிப்பதிலேயும் நமது மாண்புமிகு அமைச்சரவர்கள்



கொண்டிருக்கின்ற இந்த வேகத்திற்கும், அவர்கள் எடுத்துக் கொள்கின்ற அக்கறைக்கும் உற்பத்தியாளன் என்ற முறையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில மாதங்களுக்கு முன்னால் ஈரோடு பகுதியிலேயும், கோவைக்குப் பக்கத்திலேயும், மாநிலத்தின் பல பகுதிகளிலேயும் உழவர் பெருமக்கள் பலரைத் தூண்டி பால் நகரத்திற்குச் செல்லக் கூடாது, உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு அது கொண்டு செல்லப்படக் கூடாது என்று தடை செய்யும் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அங்குள்ள தலைவர்களும், இங்குள்ள தலைவர்களும் உற்சாகத்தோடு அந்தப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்தார்கள். பலயிடங்களில் தூண்டியும் விட்டார்கள். போராட்டம் நடப்பதைப் பார்த்துப் பெருமைப் பட்டார்கள். உழவர் பெருமக்களின் அப்போதைய கோரிக்கை பாலுக்கு விலையை உயர்த்த வேண்டுமென்பது. அந்தக் கோரிக்கை தவறு என்று நான் சொல்லவில்லை. அந்தக் கோரிக்கையின்படி நியாயமான விலை கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது வாங்கி உண்பவர்கள் ஓரளவிற்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் எதிர் பார்க்க வேண்டும். அந்த வகையில் கிராமங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு மிகவும் நல்ல விலையைக் கொடுக்க நடவடிக்கையெடுக்கும் புரட்சித் தலைவரவர்களையும் மாண்புமிகு அமைச்சரவர்களையும் நான் வாழ்த்தி வணங்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, கிராமங்களில் எந்த வேலைக்கும், எந்த உடைமைக்கும் தங்களை உள்ளாக்கிக் கொள்ளாதவர்கள் தினம் பத்து ரூபாய், இருபது ரூபாய் என்ற அளவிற்குப் பெறக் கூடிய நல்ல நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிற புரட்சிகரமானத் திட்டம் இது. இன்றைக்கு இரண்டாவது பால் பெருக்குத்திட்டம் என்ற திட்டத்தை கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்களை நிறைவேற்றி அந்தக் கிராம மக்களின் வாழ்க்கையில் வளம் ஏற்படுத்துவதற்கு நமது அரசு முன் வந்திருப்பதை உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தத் திட்டத்தின்படி ஆனந்த் பாணியில் நமது மாநிலத்தில் இருக்கின்ற அத்தனை பகுதிகளும் முன்னேறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. குறிப்பாகக் கோவை மாவட்டம் இந்தக் கூட்டுறவுத் துறைக்கே மிகவும் முன்னோடிகளாக இருந்த இராமலிங்கம் செட்டியாரவர்களும், பழனியப்ப முதலியார் அவர்களும் இருந்த மாவட்டம். அந்த மாவட்டத்திலே, இன்றும் நீதிபதியாக இருக்கின்ற மாண்புமிகு திரு. செங்கோட்டுவேலன் அவர்கள் அங்கு தமிழ்நாட்டிற்கே எடுத்துக் காட்டான சிட்டி கோவாப்பரேட்டிவ் வங்கியை நிறுவி நடத்தி வந்தார்கள். அந்த அளவிற்குப் பல இயக்கங்களைக் கண்ட தலைவர்கள்

கொண்ட மாவட்டத்தில், இந்த ஆனந்த பாணி வருவதற்கு முன்பே 1943 ஆம் ஆண்டில் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் என்ற கான்செப்டை உள்ளடக்கி ஒன்றியம் துவக்கப்பட்டது. அந்த அளவிற்குப் பெருமைகளைக் கொண்ட அந்த மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் 40 கோடி ரூபாய் செலவில் இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் பால் பண்ணையை, (டயரி காம்ப்ளெக்ஸை) ஏற்படுத்துவதற்குப் பரிசீலனை செய்து வருகிறார்கள் என்பதை அறிந்து நான் அதை வரவேற்பதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். அதை வெகு விரைவில் ஏற்படுத்த வேண்டும். உரிய இடத்தில் அந்த டயரி காம்ப்ளெக்ஸை ஏற்படுத்துவதோடு அந்த மாவட்டத்தின் பல பகுதிகளில் சில்லிங் செண்டர்களையும், ப்ரோஸன் செமன் விநியோகத்திற்கும் ஏற்படுத்துகின்ற திட்டத்தை விரைவு படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள ஆனைக்கட்டியில் பால் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு இடையில் கைவிடப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவரவர்களின் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகுதான், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.ஏ.கே. அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகை தந்து, பார்வையிட்ட பிறகு ஆதிவாசிகள் கொண்ட அந்தக் கிராமப் பகுதியில் மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூறியாக வேண்டும்.

[மாலை 6—10]

இன்று அங்கே 5 ஆதிவாசி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதனாலே திருட்டுத்தனமாக வன இலாகா மரங்களைத் திருடிக் கொண்டு இருந்தவர்களுக்கு உதவியாக இருந்த அந்த ஆதிவாசிகள் முழுவதும் அந்தத் தொழிலை விட்டு விட்டு, சமூக விரோத சக்திகளுக்கு உடந்தையாக இல்லாமல், தினமும் 20 ரூபாய் 25 ரூபாய் வரை தங்கள் குடும்பத்திற்குச் சம்பாதிக்கின்ற அளவுக்குப் பால் உற்பத்தியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் உதவியோடு ஆதிவாசிகள் நலத்துறை உதவியோடு, பால் வள நிறுவனத்தின் உதவியோடு அந்தப் பகுதி மறுமலர்ச்சி பெற்றிருக்கின்றது. அந்தப் பகுதியை முன்னுதாரணமாகக் கொண்டு பார்த்தால், இந்தப் பால் பெருக்கத் திட்டத்தினை நாடு முழுவதும் நிறைவேற்றுகிற காலத்தில் நிச்சயமாக கிராமங்களில் வறுமையே இருக்காது. அதைக் கண்கூடாக குஜராத்தில் பார்க்கிறோம். அந்த வேகம், அந்த அமைப்பு நம் தமிழகத்திலும் இருக்கின்றது. அதை விட உழைப்பாளிகள், ஏழை எளிய விவசாயிகள் இங்கே இருக்கிறார்கள். ஆகவே கோவை போன்ற பகுதி, 'ஆனந்த்' போன்ற பகுதியாக மாறுவதற்கு அதிக காலம் இல்லை என்ற நிலையில் இன்று வளர்ந்து வருகிறது. தமிழகத்திற்கு வளத்தை ஊட்டுகிற இந்த வெண்மைப் புரட்சியை ஏற்படுத்துகிற நமது அரசை இந்த நேரத்தில் பாராட்டி, நமது அமைச்சரை வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்று அந்த உற்பத்தியாளர் ஒன்றியத்தின் ஒரு சில பிரச்சினைகளை ஒரு ஒன்றியத்தின் தலைவர் என்ற முறையில் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அங்கே ஆரம்ப நிலையில் இருக்கின்ற சங்கங்கள், ஆனந்த் பாணியில் துவங்கப்பட்டிருக்கின்ற சங்கங்கள், துவங்குகின்றபோது மார்ஜினல் மணி வேண்டும் என்பது அந்தச் சங்கச் செயலாளர்களின் கோரிக்கையாகும். சங்கம் துவக்கியவுடன் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூட அந்தச் சங்கத்தில் பணம் இருக்காது. மார்ஜினல் மணி கொடுத்தால் அந்தச் சங்கத்தை ஆரம்ப காலத்தில் துவக்கி நடத்துவதற்கு வசதியை ஏற்படுத்தும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அந்தச் சங்கத்தை நிர்வகிப்பதற்கு மிக முக்கிய பொறுப்பை வகிக்கின்றவர்கள் அந்தச் செயலாளர்கள். அவர்கள் அந்தச் சங்கத்தினுடைய வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கின்றவர்கள். அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் கிடையாது. குறைந்த பட்சம் 150 ரூபாயை ஊதியமாக வைத்து, சங்கம் இலாபத்தை ஈட்டும் காலத்தில் கூடுதல் ஊதியம் கொடுக்க அதிகாரம் வழங்கி, குறைந்த பட்ச ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே போல அந்தச் சங்கத்தினுடைய செயலாளர்கள் பலபேர்கள் படித்த பட்டதாரிகள். ஒன்றியத்தினுடைய எந்த வேலை காலியாக இருந்தாலும் அந்தப் பணிக்காக பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது கிராமச் சங்கங்களிலே இருக்கின்ற தகுதியானவர்களுக்கு அந்த வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்பதை அந்தச் சங்கச் செயலாளர்கள் சார்பிலே பணிவோடு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

ஃபுரோசன் செமன் திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டம் மிக நல்ல முறையிலே பால் உற்பத்தியாளர்களுக்கு உதவுகிற திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், கோவை மாவட்டத்திற்கு அதை விரைவிலே நல்ல யூனிட்டாக நடைமுறைப்படுத்த உதவ வேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி அமைகிறேன்.

***திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற பால்பண்ணை வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று பேசுகிறேன்.

1958 ஆம் ஆண்டு இந்த பால்வளத் துறை நிறுவப்பட்டு 1963-லே பால்வளச் சங்கம் துவங்கப்பட்டு, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனம் என்று மாற்றப்பட்டது. தற்போது ஏறத்தாழ 7,178 சங்கங்களை நாம் கொண்டிருக்கிறோம். டிப்டி ரிஜிஸ்திரார் என்று மாவட்ட ரீதியிலே இருக்கின்றவர்கள், அந்தச் சங்கங்களுக்கு வங்கிகள் கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த வங்கிகள் கடன் கொடுப்பது இல்லை.

மேலும் ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு சங்கங்கள் துவங்கப்படுகின்றன. அவைகளுக்குள் போட்டா போட்டி நடக்கின்றன. அப்படி போட்டி ஏற்பட்டு இரண்டு சங்கங்களுமே செயல்படாத நிலை இருக்கிறது. எனவே இதுபோன்ற கிராமச் சங்கங்கள் அமைக்கின்றபோது, எல்லா தரப்பினரையும் ஒன்று கூட்டி, ஒரு நல்ல அமைப்பை உருவாக்கினால் அது நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். பல சங்கங்கள் உருவாகி, தெரிந்தோ தெரியாமலோ அரசியல்வாதிகளின் தூண்டுதலினால், அந்தச் சங்கங்களில் யார் பெரியவர், யார் அரசாங்கத்தின் பக்கம் இருக்கிறார்கள், யார் அரசாங்கத்தைச் சாராதவர்கள் என்ற நிலைமை வந்து விடுகிறது. அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு இடம் கொடுக்காது நல்ல எண்ணத்தோடு இந்தச் சங்கங்களை அமைத்து பால் உற்பத்தியிலே நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தி, கிராம மக்களுடைய பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட தகராறினால் அரசுக்கும் அவப்பெயர்: அதிகாரிகளும் திக்கு முக்காடும் நிலை ஏற்படுகின்றது. எனவே அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட சர்க்குலர் மூலமாக செய்திஅனுப்பி, ஒருகிராமத்திற்கு ஒரு சங்கம்தான் இருக்க வேண்டும். அந்த ஒரு சங்கமும் எல்லா சமுதாய மக்களுக்கும், நலிந்தமக்களுக்கும் ஒன்றுபட்ட நிலையை உருவாக்குவதற்கும், அங்கே ஜாதி காரணமாக, மதம் காரணமாக பேதங்கள் உண்டாகுமானால் அவர்களை ஒற்றுமைப்படுத்தவும் இருக்க வேண்டும். அவர்களைக் கேட்காமலே இருந்தாலும் பரவாயில்லை. ஏன்என்றால் அரசியல்வாதிகள் தூண்டுதலினாலே பலசங்கங்கள் உண்டாகி கிராமத்தின் அமைதி குலைகின்றது. சில இடங்களிலே அதிகாரிகள் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். அந்த மாதிரியான அவல நிலைமை உருவாகாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே நல்ல நிலையிலே பால் வளர்ச்சியை உண்டாக்கக் கூடிய சங்கங்கள் வெற்றி பெற்று இருக்கின்றன. அதேபோல் நாமும், ஆனந்த்



பாணி என்ற முறையிலே—இந்த குறிப்பில் பார்க்கிறோம். 4, 5-வது பக்கங்களிலே இருப்பதுபோல் நாம் பல ஆயிரக் கணக்கான சங்கங்களுக்கு உதவி செய்து இருக்கின்றோம். ஆனால் இந்தக் கிராம மக்களுடைய பொருளாதார வளர்ச்சிக்குப் பால் உற்பத்தியை மட்டும் அல்லாமல், கோழி வளர்ச்சியையும் அரசாங்கம் கவனித்து இரண்டையும் ஒன்றாக இணைத்து அதை ஓர் அமைப்பின்கீழ் கொண்டுவந்தால், கிராம மக்கள், கோழி வளர்த்தல், மாடு வளர்த்தல், போன்ற தொழில்களைச் செய்வார்கள். அதிலும் கைம்பெண்கள் 1 மாடு, 2 மாடுகள் வைத்துக் கொண்டுள்ளவர்களுடைய வாழ்க்கைக்கே இது புத்துயிர் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது.

அதுபோல் நிலைமைகள் இருக்கின்ற இடங்களிலே, சங்கங்கள் நடத்தச் செய்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் சங்கங்கள் பல்வேறு கருத்துக்களுக்கும் இடம் கொடுக்காத முறையிலே நம்முடைய அதிகாரிகள் மூலம் ஒன்றுபட்ட ஒரே சங்கமாக அமைகின்ற நிலைமையை உருவாக்குவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலே மார்ஜினல் மணி என்று கேட்கிற சமயங்களிலே குறிப்பாக, ஆதி திராவிட மற்றும், பின்தங்கிய மக்களுக்கு அரசாங்கம் மூலமாகவும், ஆதி திராவிட வளர்ச்சித் துறையின் மூலமாகவும் உதவி கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தப் பணம் கொடுக்கின்ற ஒரு காரணத்திற்கு சில தவறான எண்ணங்களை உண்டாக்குகிறார்கள்.

குறிப்பாக மாடுகளை வாங்குகின்றபோதுகூட டாக்டர் இருந்துதான் வாங்கவேண்டுமென்றுசொல்வதுநல்லஎண்ணம்தான். ஆனால் அந்த எண்ணங்கள் வீணாக போகின்ற அளவிலே வங்கிக்காரர்களும் சேர்ந்து—நான் எல்லா இடத்தையும் சொல்லவில்லை—சில இடங்களிலே மிக அபாயகரமான நிலை உருவாகுகிறது. இவைகளையெல்லாம் நீக்க நிர்வாகத்திலே இருக்கின்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்து இப்படிப்பட்ட அவல நிலைமைகளை வருங்காலத்திலே போக்குவதற்குஅரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டெபுடி ரிஜிஸ்ட்ரார்களுக்குப் போதுமான சீனியர் இன்ஸ்பெக்டர்கள் இல்லையென்று சொல்லப்படுகிறது. இவைகள் எல்லாம் மிகச் சாதாரணமான குறைகள். இவைகளை நீக்குவதற்கு அரசாங்கம் உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் முத்திரைத் தாள் நிர்வாகத்திலே சில குறைகளைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். முன்பெல்லாம் நம்முடைய தமிழகத்திலே மனிதருக்குள் மனிதர்

நம்பிக்கை கொண்டு இருந்தார்கள். ஆண்டவனை நம்பினார்கள். ஆண்டவன் நம்பிக்கையையும் நாம் போக்கி விட்டோம். பிறகு சட்டத்தை மதிக்க வேண்டும் என்று நினைத்தோம். அதையும் சட்டம் என்ன செய்யும் என்ற எண்ணத்திலே அரசியல்வாதிகளாகிய நாம் கெடுத்து விட்டோம். இப்படி கெடுத்ததினால் ஆண்டவன் நம்பிக்கையும் போய் விட்டது. சட்டத்திற்கு இருந்த மதிப்பும் போய் விட்டது. தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலை இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அது எந்தக் கட்சி என்று நான் சொல்ல விரும்பவில்லை. அதை யார் செய்தாலும் பாவமான காரியத்தை துணிந்து செய்கின்ற அரசியல்வாதிகளாக மாறுகின்ற நிலமை இருக்கின்றது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நம்பிக்கையுள்ள மக்கள் வாய்மொழிப் பத்திரம் என்று சொன்னார்கள். 50 ஆண்டுகளுக்கு முன்பு கிராமத்திலே வாய்மொழிப் பத்திரம் மூலம் என் நிலத்தை உனக்கு கொடுக்கிறேன். இத்தனை ஆண்டுகளுக்குள் நான் பெற்றுக் கொள்கிறேன் என்று எந்தவிதமான ரெக்கார்டுகள் இல்லாமல், கடன் கொடுப்பார்கள், கடன் வாங்குவார்கள். அதை வாய் மொழிப் பத்திரம் என்று சொல்வார்கள். ஒரு சிவில் கோர்ட்டுக்குக் கூட கேஸ் போனதே கிடையாது. பிறகு அது போய் வெண்ணிலைப் பத்திரம் வந்தது. அப்போது 10 பைசா ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டித்தான் பத்திரம் என்று எழுதி வைத்துக் கொள்வார்கள். அவ்வளவு நம்பிக்கையோடு இருந்தார்கள். அதுவும் போயிற்று. பிறகு இப்போது சட்ட ரீதியாக ரிஜிஸ்ட்ரேசன் கொண்டு வந்தோம். இந்த ரிஜிஸ்ட்ரேசன் வந்ததற்குப் பிறகு ரிஜிஸ்ட்ரேசன் ஆபிசுக்குப் போனால் யார் வீட்டை வேண்டுமானாலும் யாரும் பதிவு செய்து கொள்ளலாம். அந்த ரிஜிஷ்ட்ரார் அதற்கு வில்லங்கள் இருக்கிறதா இல்லையா, அது விற்கப்படுகிறதா, இல்லையா, அது யாருடைய நிலம் என்று எல்லாம் பார்ப்பதில்லை. தன்னுடைய வேலை பதிவு செய்வது மட்டும்தான் என்று நினைக்கிறார், அதற்குமேலே வந்தால் நீங்கள் சிவில் கோர்ட்டிலே போய்ப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று மிகச் சுலபமாக சொல்லுகின்ற ஒரு அவல நிலை இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது நகர்ப்புறத்தில் இருப்பவர்களுக்கு அவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தாது. ஏனென்றால், நகரத்தில் படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள், புரிந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வில்லங்க சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்று தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் இருக்கிற மக்கள்—ஒருவர் மற்றொருவருக்கு கொடுக்கும்போது நம்பிக்கையோடு அதை வாங்குகிறார்கள். அங்கே ரெஜிஸ்திரார் அலுவலகத்திலும், சப்-ரெஜிஸ்திரார் அலுவலகத்திலும் யார் சென்றாலும், எங்களுடைய வேலை ரெஜிஸ்டர் செய்வது, அதை நாங்கள் செய்து விடுகிறோம்



என்ற நிலையிலே செயல்படுகிறார்களே தவிர அந்த அப்பாவி மக்களுக்கு, கிராம மக்களுக்கு உதவுகின்ற முறையிலே அவர்கள் இல்லை. பத்திரத்தைப் பதிவு செய்து கொண்ட பின்னால் பல இடங்களிலே அவர்கள் கோர்ட்டுக்குப் போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரே இடத்தை ஒருவர் மூன்று பேர்களுக்கு விற்றிருக்கிற அவலமான நிலைமை கூட நடந்திருக்கிறது. இந்த மாதிரியான அவல நிலைகளுக்கு இடம் கொடுக்காமல் தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6-20)

ரெஜிஸ்திரார் ஆபீஸ் பல இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் இருக்கிறது. வாடகைக் கட்டிடத்திலே இருந்தாலும் வேறுபல அவல நிலைமைகளும் அங்கே இருக்கின்றன. 4 எழுத்தர்கள் இருந்தால் 3 பேருக்கு உட்கார நாற்காலி, மேசை இருக்கும் ; ஒருவருக்கு இருக்காது. அவர்கள் எல்லாம் வசதியாக உட்கார்ந்து வேலை செய்வதற்கு வழியில்லை என்றால் குறித்த வேலையை, குறித்த நேரத்தில் ஒழுங்காகச் செய்து முடிக்க முடியாத அவல நிலைதான் ஏற்படும். அந்த அவலத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமப்புறங்களிலே சகோதரர்களுக்கிடையே பாகப்பிரிவை ஏற்படும். முன்னால் அதற்கு மிகக் குறைந்த பதிவு கட்டணமே இருந்தது. இப்போது 13 சதவீதம் என்று வைத்திருக்கிறார்கள். நகர்ப்புறமாக இல்லாத இடமாக இருந்தால் 12 சதவீதம் என்று வைத்திருக்கிறார்கள். விற்கிறவர்களுக்கு, வாங்குகிறவர்களுக்கு பதிவு கட்டணம் இந்த வீதத்தில் இருந்தால் அவர்களுக்கு அதனால் பாதகம் ஒன்றும் இல்லை; அவர்கள் கொடுத்து விடுவார்கள். ஆனால் ஒரு வீட்டில், இருக்கிற இரண்டு சகோதரர்கள் பாகப் பிரிவினை செய்து கொள்ளும்போது அவர்களுக்கும் இந்த 13 சதவீதம், 12 சதவீதம், கட்டணம் என்று வைத்திருப்பது மிகவும் அவலமான நிலைமையாக இருக்கிறது. வாங்குகிறவர்கள், விற்கிறவர்களோடு இவர்களையும் சேர்த்து கணக்கிடக் கூடாது. இந்தக் கட்டணத்தை இல்லாமல் செய்ய வேண்டும் அல்லது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தானபத்திரம் கொடுக்கிறார்கள். இங்கு, டாக்ஸ் என்று சொல்லி அவர்கள் இன்கம்டாக்ஸ் தள்ளுபடிக்காக அப்படி கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, இந்த தானபத்திரம்பற்றி பத்திரத் துறையில் தகுந்த கண்காணிப்பு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல ; அதில் இருக்கிற

உண்மை என்ன என்று பார்த்து, நியாயமான, உண்மையான சிலவற்றிற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும். அதைப்போல சில செட்டில்மெண்ட் நடக்கிறது ; அதற்கும் விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

அலுவலகங்களில் எழுதுபொருள் கிடைப்பதுகூட இல்லாத ஒரு அவல நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஸ்டாம்ப் வெண்டார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு, ஒரு மினிமம் குவாலிபிகேஷன் வைத்து, அந்தப் பணியைச் செய்யச் சொல்ல வேண்டும்.

மேலும் இந்தத் துறையில் உயர்ந்த அதிகாரிகளை நியமித்து விட்டு அவர்களுக்கு டைப்பிஸ்டு, ஜூனியர் அசிஸ்டன்ட் இல்லாமல் இருந்தால் உயர்ந்த அதிகாரிகாளால் சரியாக வேலை செய்ய முடியாது.. குறிப்பாகச் சொல்லப் போனால் 1—9—1981 முதல் நாம் 6 மாதத்திற்குள்ளாக இந்தக் கட்டணத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

மேலும் ரெஜிஸ்திரார் ஆபிசில் நிலத்தின் மதிப்பை உயர்த்தியிருக்கிறோம் ; வரியையும் உயர்த்தியிருக்கிறோம். நாம் இப்படி உயர்த்தியிருப்பது கிராம மக்களுக்கு சாதாரணமாகத் தெரியாது. சாதாரணமாக கிராமத்தில் இரண்டு பேருக்குள் போட்டி வரும். ஒருவருக்கொருவர் பிரிஸ்டிஜ் இஸ்யூ என்று எண்ணி ஒரு ஏக்கர் நிலத்திற்கு 10,000 ரூபாய், 15,000 ரூபாய் என்று வாங்கி விடுவார்கள். அதை வைத்துக் கொண்டு பொதுவாக மற்ற நிலங்களுக்கும் அந்த விலையை நிர்ணயம் செய்யக்கூடாது. சுற்றுப்புறத்தில் இருக்கிற விலையை விசாரித்துப் பார்த்து, அந்த அளவுச்குத்தான் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இந்தப் பத்திரப் பதிவுத் துறையில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிற விகிதாச்சாரப்படி இருக்கிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நேரம் இல்லாததால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் குறித்த மானியக்கோரிக்கை எண் 5, பத்திரப் பதிவு குறித்த மானியக்கோரிக்கை எண் 6, பால்வழங்கு திட்டங்கள் குறித்த



மானியக்கோரிக்கை எண் 10 ஆகியவற்றின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை அளித்ததற்காக உங்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தை முதலில் காணிக்கையாக்குகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கிராமங்களிலே பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால்தான் ஒரு நாடு செழுமையாக இருக்க முடியும் என்ற ஒரு தத்துவத்தின் அடிப்படையில் இன்றைக்கு செயல்பட்டு வருகிற புரட்சித்தலைவர் ஆட்சியிலே தமிழ்நாட்டிலே கிராமங்கள்தோறும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலே, கிராமங்களிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற அந்த மக்கள் நல்லமுறையில் பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற ஒரு நோக்கத்திலேதான் கிராமங்கள்தோறும் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை ஆரம்பிக்க வேண்டுமன்ற ஒரு நல்ல எண்ணத்தை இந்த அரசு உருவாக்கி வைத்திருக்கிறது. அந்த வகையில்தான் 1981—82 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 338 உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை இந்த அரசு துவக்கி இருக்கிறது. 1982—83 ஆம் ஆண்டிலே 500 உற்பத்தியாளர் சங்கங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதை நினைக்கிறபோது, உண்மையிலேயே கிராமம் முன்னேற்றம் அடையவேண்டும் என்கிற அடிப்படையில் இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட அண்ணல்காந்தியடிகள் சொன்ன கிராமப் பொருளாதாரத்தை, அவருக்குப் பின்னாலே, அமரர் அண்ணாவின் தத்துவத்தை நாட்டில் நிலைபெறச் செய்வதற்காகவே வாழ்ந்து கொண்டு இருக்கும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் நடைமுறைப்படுத்தப்படுகிற வகையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை நான் எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

இப்படி பால் உற்பத்தியாளர் சங்கங்களை கிராமங்கள் தோறும் ஏற்படுத்தி வருகின்ற இந்த நேரத்தில், இதற்கு முன்னாலே பாலின் விலைகளைக் கூட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்கிறபோது பாலின் அளவை வைத்துக் கொடுத்து வந்தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலே, அந்தப் பால் உற்பத்தியாளர்களின் வாழ்க்கை வளம் பெறவேண்டும் என்பதற்காக, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலின் தரத்திற்கு ஏற்றவகையில், அந்தப் பாலில் உள்ள கொழுப்புச் சத்துக்கேற்ற வகையில், விலை நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்கள் வைத்து இருக்கின்ற மாட்டுக்குத் தீவனம் செய்யும் தொழிற்சாலைகள் நாம் ஏற்படுத்தி வந்தாலும்

கூட, கொழுப்புச் சத்தின் அடிப்படையில் பாலின் விலை நிர்ணயித்து இருக்கிற காரணத்தால், ஆங்காங்கு அரசுக்குச் சொந்தமாக உள்ள புறம்போக்கு நிலங்களில், வசதியாக இருக்கின்ற நிலங்களில் அந்தச் சங்கங்களுக்குத் தேவையான தீவனங்களைத் உற்பத்தி செய்துகொள்வதற்கு வசதியாக, அந்தப் புறம்போக்கு நிலங்களை, அரசுக்குச் சொந்தமான நிலங்களை, ஆங்காங்கு இருக்கிற அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிடத்தில் ஒப்படைத்து, மலிவான முறையில் அவர்கள் மாட்டுத் தீவனங்களை உற்பத்தி செய்துகொள்கிற நிலைமைகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு ஒரு மாபெரும் சாதனையை செய்து கொண்டு இருக்கிறது. ஏற்கெனவே உற்பத்தியாளர்கள் சங்கமாக இல்லாமல் இயங்கி வந்த சங்கங்கள் நடைபெறமுடியாத நிலையில் மூடப்பட்டு கிராமங்கள்தோறும் இருக்கும் நிலைமைகளை மாற்றி, அவைகள் எல்லாம் நல்ல முறையில் இயங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு அந்த மூடப்பட்ட சங்கங்களை எல்லாம் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றுவதற்கான வகையில் ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்து, அதன் மூலம் கிராமப் பொருளாதாரம் உயரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ஏறக்குறைய 4,800 ரூபாய் அவற்றிற்கு மானியம் கொடுக்கின்ற வகையில் இந்த ஆண்டு 25 இலட்ச ரூபாய் அதற்காக ஒதுக்கி இருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏற்கனவே மூடிக்கிடக்கின்ற அந்தச் சங்கங்களுக்கு உதவி செய்வதைப்போல, கிராமங்களிலே உற்பத்தியாளர்கள் சங்கங்கள் துவங்குகிறபோது பல கடினமான நிலைகளை உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருக்கிற காரணத்தால், பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வருகிறவர்களும் பல கடினமான நிலைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால், அப்படிப்பட்ட உற்பத்தியாளர் சங்கங்களும் நல்ல முறையில் இயங்கவேண்டும் என்ற அடிப்படையில் அந்த கிராமப்புற உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் மானியங்களை அளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாலை 6–30)

என்னைப் பொறுத்தவரையில் சோளிங்கர் நகரிலே ஏறத்தாழ தினந்தோறும் 5 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்கிற அளவுக்கு கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் இருந்து வருகின்றது. அந்த சங்கத்தினுடைய தலைவராக நான் இருந்து வந்திருக்கிறேன். அந்தச் சங்கத்திற்கு மட்டும் அல்ல, அதனைச் சுற்றியிருக்கிற உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கும் சில



நேரங்களிலே ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படுகிறது. உற்பத்தி செய்கிற பாலை விற்க முடியாத நிலைமை, குளிருட்டும் நிலையத்திலே கூட எடுத்துக் கொள்ள முடியாத நிலைமை ஏற்படுகிறது. குறிப்பாக மழைக் காலத்திலே பாலினுடைய உற்பத்தி அதிகரிக்கிறது. சாதாரணமாக கோடைக்காலத்தில் 500 லிட்டர் பால் உற்பத்தியாகிறது என்றால், மழைக்காலத்தில் 750 லிட்டர் பால் கிடைக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களில் பெரிய பெரிய உற்பத்தியாளர்கள் சங்கங்கள் கூட பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் தருகிற வகையிலே அந்தப் பால் தரம் கெடாத வகையிலே, ஆனால் அவர்களுக்கு நஷ்டம் வராத வகையிலே நல்ல ஒரு திறமையான நிர்வாகத்தின் அடிப்படையிலே அந்தப் பாலை எடுத்துக் கொள்கிற வழி முறைகளை நீங்கள் வகுத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, சோளிங்கரைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற வேண்டுகோளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பத்திரம் பதிவு செய்கிற துறை ஏறத்தாழ 116, 117 ஆண்டுகளாக தமிழகத்திலே இருந்து வருகிற ஒரு பழமையான துறையாகும். 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழகத்திலே 35 பதிவு அலுவலங்கள்தான் இருந்தன. ஆனால் பொதுமக்களுடைய நலம் கருதி நிர்வாகத்தைத் திறமைப்படுத்த வேண்டும் என்ற நல் எண்ணத்தோடு தற்போது அத்துறையில் 43 பதிவு அலுவலகங்கள் செயல்படுகின்றன என்று சொல்லுகிறபோது, நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.

அதேபோல 1977 ஆம் ஆண்டுக்கு முன்னாலே ஒரு சப்-ரெஜிஸ்ட்டிரார் அலுவலகம் தோன்றவேண்டும் என்று சொன்னால், இரண்டாயிரம் ஆவணங்கள் அங்கே பதிவு செய்யப்பட வேண்டும், அல்லது 3,000 ஆவணங்கள் அங்கே பதிவாகவேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆயிரம் பத்திரங்கள் பதிவு செய்கிற சூழ்நிலை ஏற்படுமானால் அந்தந்த இடங்களிலே ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்து ஏற்படுத்தியிருக்கிறது. அந்த வகையிலே என்னுடைய தொகுதியிலே மரக்காணம் பக்கத்தில் குருராஜபேட்டை என்ற கிராமத்திலே இப்படிப்பட்ட சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப, சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரக்கோணத்திற்கும், சோளிங்கருக்கும் இடையில் இருக்கும் அந்தக் கிராமத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

அதுமட்டும் அல்ல, சில நேரங்களில் நீதிமன்றங்களிலே முத்திரைத் தாள்கள் கிடைக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதேபோன்று கோர்ட்டுகளிலும் முத்திரைத் தாள்கள் கிடைக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்று கூறி, இவைகளைப் போக்குவதற்கு, நிலைமைகளை சரி செய்வதற்கு வழி வகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மானியத்தை வரவேற்று பேச வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் வள கோரிக்கையின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்க அறிக்கையிலே பால் உற்பத்தியாளரின் நிலையை உயர்த்தவும் தரமான பாலை மக்களுக்கு வழங்கவும் இந்தத் துறை பெரிதும் வேலை செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால் பால் உற்பத்தியாளருக்குக் கொடுக்கின்ற விலை இன்றைக்குப் போதுமானதாக இல்லை என்ற நிலைமை இருக்கின்றது. அதை அமைச்சரவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குத் தரமான பால் சென்னை நகரிலே மட்டும் இந்தத் துறையின் மூலம் . வழங்கப்படுகிறது. இதுபோன்று கோவை, மதுரை, திருச்சி, சேலம், வடாற்காடு போன்ற நகராட்சிகளிலும் இன்னும் மற்ற இடங்களிலும் கூட இந்தத் துறையின் மூலமாக தரமான பால் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இந்தத் துறையின் மூலமாக மக்களுக்கு வாழ்வளிக்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால் பல நூற்றுக்கணக்கான பால் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியான குடியாத்தத்தைப் பொறுத்தவரையிலே அக்காவரம், பெரும்பாடி, மூங்கபட்டு போன்ற பகுதிகளில் இத்தகைய சங்கங்களை அமைக்க வேண்டும் என்று சென்ற ஆண்டு நான் கேட்டு இருந்தேன். ஆனால் இதுவரையில் அது கவனிக்கப்படாமல் இருக்கின்றது. ஆகவே அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தப் பால் உற்பத்தியாளர்களுக்கு மாடுகளை வாங்க, வேண்டிய கடன் வசதிகளை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகின்றது. அவர்கள் உரிய நேரத்திலே கடன் கிடைக்கக் கூடிய முறையினை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து இந்தப் பால் பெருக்குத் திட்டத்திற்கு புதிய இனவிருத்தி மாடுகளை வாங்கி அளிக்க இந்தத் துறை ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையின் மூலமாகவோ தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவோ மாடுகள் வாங்கவேண்டும் என்றால் தஞ்சை ஜில்லாவிலே இருந்து சென்னைக்கு வந்து, மாதவரம் பால் பண்ணை போன்ற இடங்களுக்கு வந்துதான் மாடுகளை வாங்கவேண்டும் என்று வற்புறுத்தப்படுவதாகவும் அதனால் பால் உற்பத்தியாளர்களுக்கு பெரிதும் சிரமம் ஏற்படுவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தந்த மாவட்ட மையங்களிலே இத்தகைய மாடுகள் வாங்க ஏற்பாடுகளை இந்தத் துறையின் மூலமாகச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்குப் பலவேறு கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக நடைபெறவில்லை என்று சொல்லப்படுகின்றது. அரியநாயகி அம்பாள் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம், அம்பாசமுத்திரம் மணவாளக்குறிச்சி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் போன்ற பல குறிப்பிட்ட சங்கங்கள் ஒழுங்கீனமாக நடந்துகொண்டிருப்பதாக அறிந்து அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருந்தும் கூட அது சம்பந்தமாக இன்றுவரையில் போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தப் பால் உற்பத்தியைப் பெருக்க நாம் எடுத்துக்கொள்கின்ற முயற்சிகளோடு அதிலே வேலை செய்கின்ற ஊழியர்களின் பிரச்சினைகளையும் நாம் கவனிக்கவேண்டும். மாதவரம் பால் பண்ணையில் வேலை செய்த ஊழியர்கள், அய்யனாவரம் பால்பண்ணையிலே வேலை செய்த ஊழியர்கள் அம்பத்தூரிலே வேலை செய்தவர்கள் இப்படி கிட்டத்தட்ட 1500 பேர்களுக்கு மேல் இன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நானே சொல்லி இருக்கிறேன். இந்தப் பிரச்சினை குறித்து அவர்களுடன் 14—12—80 அன்று பேச்சுவார்த்தை நடத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சரைக் கலந்து கொல்வதாகச் சொன்னார்கள். ஆனாலும் இதுவரையில அவர்களுக்கு வேலை எதுவும் அளிக்கப்படவில்லை. அப்படி வேலை அளிக்கப்படாதது மட்டுமல்ல. அவர்கள் மீது பாலிலே தண்ணீர் கலந்ததற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது சரியல்ல. மதுரையிலேயும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. வேலூரிலேயும் சென்னையிலேயும் பல கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த வேலை நிறுத்தங்களைப பொறுத்த வரையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆரம்பத்திலே ஆர்வம் காட்டினார்கள். பின்னர் அதிலே

தொய்வு ஏற்பட்டுவிட்டது. அந்த ஊழியர்கள் வேலை தரப்பட வேண்டும் என்றுஅரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டுயிருக்கிறார்கள். இன்றைக்கும் கூட அமைச்சர் அவர்களை பார்த்து சென்னையிலே உள்ள பல்வேறு சங்கத்தினர் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு ஊர்வலமாக வந்தபோது 25 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினையை, நீட்டிக் கொண்டு போகாமல் நிச்சயமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொளகிறேன். ஒரு சிலர் தாங்களாகவே வேலைக்கு வரவில்லை என்று கூறி அவர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். எனக்குப் பல ஆண்டுகளாகவே தொழிச்சங்கத்திலே இருந்த அனுபவம் இருக்கின்ற காரணத்தால் இதுபற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட நாளிலே வேலைக்கு வராமல் இருப்பதை வைத்து நீங்கள் வேலைக்கு வரவில்லை. எனவே, நீங்களாகவே வேலைக்கு வராமல் நின்று விட்டீர்கள் என்று சொல்லி அவர்கள் வேலையை விட்டு நீங்கியதாக உத்தரவிட்டு விடுவார்கள். அதுபற்றி பிறகு பத்திரிகையிலேயும் மற்ற வழிகளிலேயும் அறிவிப்பார்கள். ஆகவே, அப்படித் தனியார்கள் எடுக்கின்ற அந்த நிலைமையினை இந்தத் துறை எடுத்துக்கொள்ளக்கூடாது. இன்றைக்கு 1,500 குடும்பங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, சில சிறிய சர்ச்சையிலே ஈடுபட்டபல ஊழியர்களை அதாவது 5 ஆண்டு பத்தாண்டு என்று பணிபுரிந்த ஊழியர்களை நீக்கிவிட்டு திரும்ப எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய பழைய சர்வீசை நீக்கிவிட்டு புதிய சர்வீஸ் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பத்திரப்பதிவு துறையினை எடுத்துக்கொண்டால் தென்காசித் தாலுகாவிலே பத்திரப்பதிவு அலுவலகம் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொளகிறேன். அடுத்து பத்திரப்பதிவுத் துறையிலே உள்ள பெரும்பாலான பதிவாளர் அலுவலகங்களிலே ஆவணங்களை வைக்க இரும்பு பீரோக்களும், அலமாரிகளும் இல்லை என்ற நிலைமை இருக்கின்றது.

[மாலை 6—40]

போதிய தளவாடங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். போதிய அடிப்படை வசதி இல்லை, பொதுமக்கள் உட்காருவதற்கு வசதி இல்லை. அந்த நிலை இருக்கிறது. இன்றையதினம் நம்முடைய மாநிலத்தில் பல இடங்களில் மாவட்டப் பதிவாளர்களை உண்டாக்கியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்கது.



ஆனால் மேல் மட்ட அதிகாரிகளை உண்டாக்குகிறார்களே தவிர அடிமட்டத்தில் இருக்கிற ஊழியர்களின் பதவிகளை உண்டாக்காத காரணத்தால் பல அலுவலகங்களில் வேலைகள் ஸ்தம்பித்து இருக்கின்றன. இன்றைக்கு பல ஸ்தானங்கள் காலியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த ஸ்தானங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அந்தப் பணிகளில் ஆதி திராவிடர்களுக்குப் போதிய அளவில் இடம் ஒதுக்கப்படவில்லை. அதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இந்தத் துறையில் வேலை செய்கிறவர்கள் ஒரு குறிப்பிட்ட 3, 4 ஆண்டு காலமாக தொடர்ந்து வேலை செய்யவிடாமல் அடிக்கடி மாற்றப் படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க வேண்டும். அதேபோன்று தவறு செய்கின்ற பெரிய அதிகாரிகளுக்குப் பதவி கொடுக்கப்படுகிறது. ஆனால், சாதாரணமானவர்கள் தவறு செய்தால் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

சென்னை நகரைப் பொறுத்தவரையில் திருமணம் செய்து வைப்பதற்குத் உதவியாக ஒரு பதிவு அலுவலகம் இருந்தால் உதவியாக இருக்கும். சென்ற மானியத்தின்மீது பேசும்போது கூட நான் சொன்னேன். இந்த மாநிலத்தில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலத்தை வாங்குபவர்கள் அண்டை மாநிலத்தில் பதிவு செய்து கொள்கிறார்கள். அங்கே கட்டணம் குறைவாக இருக்கிற காரணத்தால் அவர்கள் அங்கேபோய் பதிவு செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கு வருவாய் வருகிற முறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தாரதம்மியத்தைப் போக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. உச்சி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வழங்கும் திட்டம் மற்றும் பத்திரப் பதிவு ஆகிய கோரிக்கைகள் மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். பால் வழங்கும் திட்டத்தை தமிழகத்தில எல்லாப் பகுதிகளிலும் குறிப்பாக கிராம பகுதிகளில் விவசாயம் செய்யும் மக்கள் தங்களுடைய துணைத் தொழிலாக நடத்திக் கொண்டிருப்பதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. குறிப்பாக நீலகிரி மாவட்டத்தை பொறுத்த அளவில், அங்கே, வானம் பார்த்து பூமியில் விவசாயம் செய்வதால், தொடர்ந்து தங்கள் விவசாயத்தில் லாபம் பெற முடியாமல், அந்த விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைக்காமல் அந்த மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், இந்தப்பால் வளத் துறை, ஒவ்வொரு குடும்பமும் தங்கள் வாழ்க்கையை வளமாக

நடத்துதவதற்குரிய வாய்ப்பாக அமைந்துள்ளதைக்கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் ஒரு கிலோ பாலுக்கு ரூ. 16.50 அளவில், வறட்சி நேரங்களில் ரூ. 17.50 அளவில் கொடுக்கப்படுகிறது. ஆனால் மற்ற பகுதிகளில் ரூ. 15.00 அளவில் கொடுப்பதாக அறிகிறேன். அந்த விலையை உயர்த்திக் கொடுப்பதற்குரிய வழி வகை காண வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்கே எதிர்க்கட்சியைச் சார்ந்த இளையபெருமாள் அவர்கள் ஆதிதிராவிடர்களுக்கு அந்தத் துறையில் போதுமான அளவிற்கு பங்கு கொடுக்கவில்லை என்று வருத்தத்தோடு சொன்னார்கள். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நான் பெருமையோடு சொல்கிறேன். அங்கே ஆதிதிராவிடர்கள் என்றும், தோடர்கள் என்றும், இரும்பர்கள் என்றும், இருளர்கள் என்றும் பலவேறு இன மக்கள் தங்களுடைய வீடுகளில் பசுக்களை வளர்த்து அந்தந்தக் கிராமங்களில, சிற்றூர்களில, அங்குள்ள ஒன்றியங்களில், கிராமச் சங்கங்களை ஏற்படுத்தி தாராளமாகப் பாலை விநியோகம் செய்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து நீலகிரி மாவட்டத்தில மசினகுடி என்னும் பகுதியில் வாழைத்தோட்டத்திலும், கோத்தகிரியிலும், கூடலூரிலும். மூன்று குளிரூட்டும் நிலையங்களை இந்த அரசு ஏற்படுத்தியிருப்பதை நான் பாராட்டுகிறேன. ஊட்டியில கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பால பண்ணைக்கு ஒரு புதிய கட்டிடம் கட்டுகிற பணி வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்குக் கிட்டத்தட்ட ரூபாய் 3 கோடி இந்த அரசு அள்ளித் தந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில நீலகிரி மாவட்டம் பட்டிதொட்டிகள் நிறைந்த ஒரு பகுதி. அங்குள்ள வனப் பகுதிகளில் ஆதிவாசிகள் உள்ள பகுதிகளில பால் உற்பத்தி நலலமுறையில செய்யப்படுகிறது. அங்கிருந்து பால் வெகு தூரத்திற்குச் செலகிறது. சேரன் போக்குவரத்துக்கழக பஸ்கள் செல்லாத இடங்களில் கூட பாலவண்டிகள் பாலைக் கொண்டு செல்கின்றது என்பதை எடுத்துச் சொலல விரும்புகிறேன. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. அந்த உற்பத்தியை 50,000 லிட்டர் அளவிற்குப் பெருக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம. அப்படி 50,000 லிட்டர் என்ற அளவிற்கு வரும்போது நீலகிரி மாவட்டத்தில ஒரு பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நீலகிரி மாவட்டத்தில் எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள ஏராளமாக இருக்கின்றன. அதே நேரத்தில ஆரம்பப் பள்ளிகளும் இருக்கின்றன. அங்கே இப்போது போட்டி போடக்கூடிய அளவிற்கு பால் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எங்கள் மாவட்டத்தில் அதிகமான மாடுகள் வளர்வதால் அந்த மாடுகளுக்கு வேண்டிய அளவிற்குப் போதுமான தீவனம் கிடைப்பதில்லை. முன்பு கர்நாடகத்திலிருந்து பெற்றுக் கொண்டிருந்தோம். இப்போது தமிழ்நாடு பெடரேஷன் மூலம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது வந்துசேர காலதாமதமாகிறது. எனவே, உதகையில் அல்லது கூடலூரில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொளகிறேன். கூடலூரில புல் வளர்க்கும் திட்டத்தை அதிக அளவில கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள நலல முறையில் செயலாற்றிக்கொண்டு வருகிறார்கள. அவர்கள் மாடுகளுக்கு ஏற்படும் பிணிகளை தீர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள. மற்ற பகுதிகளில் உள்ள டாக்டர்கள் அவ்வளவு அதிகமாக செய்வதில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கூடலூர் பகுதியில் ஏராளமான காடுகள் இருக்கின்றன. அங்கே நல்ல ஜாதி மாடுகளை வளர்க்கும் திட்டத்தைக் கொண்டு வந்து அங்கே பசுக்கள் பண்ணை ஒன்றை ஆனந்த் பாணியில் பால்பண்ணை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பத்திரப்பதிவுத்துறை. இதுவரை நீலகிரியில் இல்லாத அளவிற்கு அதை ஒரு தனிப் பதிவு மாவட்டமாக ஏற்படுத்தித் தந்ததற்காக அமைச்சர் அவர்களைப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரியில் உள்ள துணைப் பதிவாளர் அலுவலகம் ஒரு தனியார் கட்டடத்தில், மோசமான கட்டடத்தில் இருக்கிறது. அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கூடலூர் தொகுதியில் குன்னூரில் கருவூலம் பக்கத்தில்தான் ஸ்டாம்ப்ஸ், மற்ற பதிவுத்தாள்கள் கிடைக்கின்றன. எல்லாப் பகுதிகளிலும் அவை பொதுமக்களுக்குக் கிடைக்கும் விஷயத்தில் தனியார்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொண்டாமுத்தூர் பகுதியில் ஒரு சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஏற்படுத்தித் தரவேண்டும்.

(மாலை 6–50)

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 5 முத்திரைத் தாள்கள்—நிர்வாகம், மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு, கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் ஆகிய இந்த மூன்று கோரிக்கை எண்களின் பேரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

பால் உற்பத்தியாளர்களுடைய ஆரம்பக் கூட்டுறவு சங்கங்கள் கிராமங்களிலே இருக்கக்கூடிய சாதாரண விவசாயிகள் மேம்பாட்டிற்கு வரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், கிராமத்திலே வாங்கக்கூடிய அந்தப் பாலில் ஏறக்குறைய 10% கொழுப்பு சத்து இருந்தால்தான் ரூ. 2–50-லிருந்து ரூ. 2–80 வரையில் தருகிறார்கள். ஆனால், அதே சமயத்தில் அந்தப் பாலை நகரப்புறத்திற்குக் கொண்டு வந்து 5 சதம் கொழுப்புச் சத்தை எடுத்துக்கொண்டு, விநியோகிக்கின்றபோது, ஏறக்குறைய அதே விலைக்கு விற்கின்ற சூழ்நிலையைத் தான் பார்க்கிறோம். ஆனால், கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை, அரசு மேற்பார்வையிலே இருக்கின்ற சூழ்நிலையிலே, அரசே கிராமங்களிலே இருக்கின்ற சாதாரண விவசாயிகளைச் சுரண்டுகின்ற ஒரு நிலை இருக்கிறதோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

அடுத்தப்படி, கால்நடைகளைப் பொறுத்தவரை அதற்கான உணவுத்தீவனங்கள் அதாவது பருத்திக்கொட்டை, தவிடு போன்றவைகள் இன்றைக்கு அதிக விலையிலே விற்கின்ற நிலையிருக்கிறது. அதற்குக் காரணம், ஏற்கனவே, பருத்திக் கொட்டை, தவிடு ஆகியவைகளிலே இருந்து எண்ணை எடுப்பதன் காரணமாக, கால்நடைகளுக்கு இந்தத் தீவனம் குறைந்த விலையில் கிடைக்கவில்லை என்பதை இந்தச் சமயத்தில் நான் சுட்டிக் காட்டி, கால்நடைகளுக்கு பருத்திக்கொட்டை; தவிடு போன்றவைகள் இதனால் கணிசமான அளவு கிடைக்காத காரணத்தால், ஆரம்பக் கூட்டுறவு நிலையங்களில் அவர்களுக்கு குறைந்த விலையில் விநியோகிப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பக் கூட்டுறவு சங்கங்களிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு ஏறக்குறைய ரூ. 150 தான் சம்பளமாக கொடுக்கப்படுகிறது. இது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை என்பதை நான் இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு மேலும் சம்பளம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்பதோடு, மாதவரம் பால் பண்ணை, இன்னும் ஏனைய பால்



பண்ணைகளில் வேலை செய்யக்கூடிய அந்தத் தொழிலாளர்கள் ஏற்கனவே தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தொழிலாளர்களுக்காக தங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவிக்கின்ற வகையில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக, முழுமையாக 1500 பேர்களை பழிவாங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை தொழிற்சங்கத் தலைவர்கள் பேசியிருப்பினும், தெரிந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும், அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

முகவை மாவட்டத்திலே மறவமங்கலம் கூட்டுறவு சொசைட்டி தலைவருக்குத் தெரியாமல் ஏ. 1 சொசைட்டி என்று பினாமி சங்கத்தை உபயோகப்படுத்தி, பல மாடுகள் வாங்கியதாக ரூ. 50,000 மோசடி செய்யப்பட்டுள்ளது. இதற்குக் கிராம வங்கியும் உடந்தையாக இருந்திருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் நல்ல நோக்கத்தோடு, ஓரளவுக்கு சிறு விவசாயிகளுக்கு மானியம் கொடுத்து, பால் உற்பத்தியிலே அரசு ஈடுபட்டிருந்தாலும், அது சாதாரண சிறு விவசாயிகளுக்கும், அதே சமயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக இல்லை என்பதை நான் இந்தச் சமயத்தில் சுட்டிக் காட்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற தாண்டாகவுண்டன் பாளையத்தில் ஏற்கனவே பண வசதியுள்ளவர்கள், சாதாரண விவசாயிகளாக இருந்தாலும், ஓரளவுக்கு வங்கியிலே டெபாசிட் செய்யக்கூடிய அளவுக்கு வசதி இருக்கின்ற விவசாயிகளுக்குத்தான் வங்கியிலே மீண்டும் கடன் கொடுக்கப்பட்டு, அவர்கள் கால்நடை வாங்குவதற்குப் பதிலாக வங்கியிலே டெபாசிட் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பல இடங்களிலே கிராமங்களிலே ஆதிதிராவிடர்கள் கொண்டுசெல்லக்கூடிய பாலை மேல்சாதிக்காரர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் வாங்குவதில்லை. அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வருமானால் அது சம்பந்தப்பட்டவரை தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே புறநகர் என்ற ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற பகுதி இருக்கிறது. ஒரு ஏக்கர் ஒன்றரை ஏக்கர் வைத்திருக்கின்ற சிறு விவசாயிகள் பால் கொண்டுபோய்

இரண்டு பர்லாங்க் தூரத்திலே உள்ள மானங்காடு என்ற இடத்திலே கொடுத்தால் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதால் அவர்கள் 3 மைல் தூரம் உள்ள குறிஞ்சமடை என்ற இடத்திலே கொண்டு போய் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரியான நிலைமையைத் தடுத்து நிறுத்தியாகவேண்டும்.

அடுத்து முத்திரைத்தாள்களைப் பொறுத்தவரையில் கிராமக் கருவூலங்களிலே ஒருவர் ஆயிரம் ரூபாய்க்கு முத்திரைத் தாள் வேண்டுமென்று கேட்டால் அவருக்கு அன்றைய தினம் கிடைக்காதது மட்டுமல்ல, சில இடங்களிலே இருக்கின்ற அந்த கமிஷன் ஏஜன்ட்கள் வேறு ஒரு இடத்தில் முத்திரைத் தாள்கள் வாங்கி இது வேறு ஊரிலிருந்து வாங்கியது, ஆகவே அதிகமாகப் பணம் கொடுக்கவேண்டுமென்று சொல்லி பதிவு செய்யக் கூடியவர்களிடத்திலே வாங்குவதாக தெரிகிறது. முத்திரைத் தாள்கள் 1,000 ரூபாய் அல்லது 5,000 ரூபாய்க்குக் கேட்டாலும் கருவூலத்திலே செலான் கட்டினால் கிடைக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்திரைத்தாள்கள் ஏஜன்ட்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட 3 அல்லது 3½% தான் இன்றைக்கும் கொடுக்கிற நிலைதான் இருக்கிறது. அதைப் பரிசீலித்து அதிகமாகக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவைப் பொறுத்தவரையில் அண்ணன் தம்பிகள், அக்காள் தங்கைகள் பிரித்து எழுதுகிறபோது ஏற்கெனவே சொன்னதைப்போல் கடுமையாக விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கு ஆவன செய்யவேண்டும். பத்திரப் பதிவுக்காக வருகின்றவர்கள் பெரும்பாலானவர்கள் நடுத்தெருவிலே நிற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் ஆங்காங்கே உட்காருவதற்காவது குறைந்தபட்சம் வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. எம். சேதுராமன்: பேரன்புமிக்க துணைத்தலைவர் அவர்களே, பால்வளத் திட்டத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்காக நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். திரு. ரகுமான்கான் பேசும்போது தமிழகத்திலே பாலிலே தண்ணீர் இருக்கிறது. தண்ணீரிலே பால் இல்லை. ஆகவே அதைப் பிரித்து எடுக்கமுடியாது என்ற நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். அவருக்கு நான் சொல்வேன். இப்போது நடைபெறுகின்ற ஆட்சியில் பாலிலே தண்ணீர் கிடையாது, ஆகவே பிரித்தெடுக்கவேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் அதைப் பார்த்துத்தான் கலப்பட பால் இருக்கிறது என்று



சொல்லி 1977ல் கலைஞர் என்ற தண்ணீரைப் பிரித்து பால் என்ற புரட்சித் தலைவரை ஆட்சியிலே அமர்த்தினார்கள். தி.மு.க. வினர் புரிந்துகொள்ளாமல் மற்றவர்கள் என்ன யோசிப்பார்கள் என்று எண்ணாமல் பேசவேண்டுமென்பதற்காக பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

பால்வள நிறுவனம் 1972-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்று பால் பெருக்குத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே இன்றைக்கு 9 மாவட்டங்களிலே இந்தத் திட்டம் வேகமாக அமுலாக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. இதற்கு முழுமையாக 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. முதல் கட்டமாக 40 லட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டு 9 மாவட்டங்களிலே செயல்படுத்தப்படுவது பாராட்டத்தக்கது. மாவட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறபோது ஒன்றியங்களிலே ஆனந்த் போன்று அது நடத்தப்படவேண்டுமென்று சொல்கிறார்கள்.

[இரவு 7—00]

அந்த வகையிலே ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். குஜராத்திலே இருக்கிற ஆனந்த் பால் ஒன்றியங்களைப் போல நடத்தப்பட வேண்டுமென்றால் அங்கே பாலிலிருந்து 10 வகையான பொருள்களை எடுத்து தயார் செய்து மக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள். சுத்தமான பாலை மக்களுக்கு வழங்கி அந்த யூனியன் மீது மக்களிடத்தில் ஒரு பற்றை ஏற்படுத்துவதற்குத் தீவிரமாக வேலை செய்கிறார்கள். இனப்பெருக்கத்தின் மூலம் மாட்டை அதிக அளவில் பெருக்கி அங்கேயிருக்கிற விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். அதன் மூலம் அவர்களை அதிக அளவில் பாலை கறக்கச் செய்து, அரசாங்கத்திற்கும், அந்த யூனியனுக்கும் கொடுக்கச் செய்கிறார்கள். மாடுகளுக்கு மருத்துவ வசதி தேவையானால் அதையும் செய்து கொடுக்கிறார்கள். அந்த சென்டருக்கு போன் செய்தால் மருத்துவர்கள் உடனடியாக செல்கிற தன்மையையும் பார்வையிட்டோம். விவசாயிகளுக்குப் புல் வளர்க்கிற க்தியிருக்காது என்பதை அறிந்து மாதம் ஒன்றிற்கு 35 ரூபாயைப் பெற்று மாடுகளுக்கு நல்ல புல்லை வழங்குவதையும் அந்த கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதையும் நேரில் பார்த்தோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே டைரக்டராக இருக்கும் குரியன் அவர்கள் ஏழை விவசாயிகளுடைய அடிப்படை தேவைகளைக் கவனத்திலே கொண்டு அவர்கள் முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தில் நல்லமுறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் நல்ல ஏற்பாடுகளை எவ்வளவு தொகை செலவானாலும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையிலே

ஈரோட்டிலே துவங்கவிருக்கிற யூனியன் ஆனந்த் ப்ளான்ட்டை போல சிறந்து விளங்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

நகரப் பகுதிகளில் கிராமங்களிலிருந்து வரும் பாலை பதப் படுத்தி நகர மக்களுக்கு வழங்குகிறார்கள். இதேபோல பதப் படுத்திய பால் கிராம மக்களுக்கு கிடைக்க வழிசெய்யவேண்டு மென்று கேள்வி நேரத்திலே கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தப்படும் என்று சொல்லியிருக் கிறார்கள். அதை விரைவாகச் செய்ய வேண்டுமென்று பணி வோடு கேட்டுக் கொள்கிறேன். இப்போது மொத்தமாக 3,708 ஆரம்பப் பால் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அந்த ஆரம்பக் கூட்டுறவு சங்கங்களில் மாடுகளுக்குக் கடன் கொடுக்கும்போது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில், அதிகாரிகள் ரிஸ்க் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்ற காரணத்தை காட்டி இப்போது கடன் வழங்குவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வங்கிகளுக்கு 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு உறு துணையாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு அறிவுறுத்துகிற தகவலை அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு மாடுகள் வாங்குவதற்குக் கடன் வழங்க வேண்டும்.

1981 ஆம் ஆண்டு 42 காசு கொள்முதல் விலையில் அதிகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பாலை தனியாரிடத்திலே வாங்குவதைவிடச் யூனியனிலே வாங்குவதுதான் மக்களுக்குத் திருப்தியளிப்பதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பத்திரப் பதிவுத் துறையில் ஆற்காட்டில் 50 ஆண்டு களாக ஒரு சார் பதிவாளர் அலுவலகம் இருந்து வருகிறது. அது ஆரம்ப காலத்தில் எப்படி இருந்ததோ அதைப் போலவே எந்தவித வசதியும் இல்லாமல் இருந்து வருகிறது. அதை நவீனப் படுத்துகிற விதத்தில் கட்டிட வசதிகளை விரிவுப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

திமிரி 40 கிராமங்கள் அடங்கிய ஒரு பேரூராட்சியாக இருக் கிறது. அந்தப் பேரூராட்சிக்கு ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார் பிறந்த வடலூரில் சார் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தித் தரவேண்டு மென்று சட்டமன்ற உறுப்பினர் தங்கராசு அவர்கள் வேண்டு கோள் விடுத்து இருக்கிறார்கள். அதையும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

* திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக் கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நான் நன்றி சொல்லி, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்களும், இந்த அரசும் உண்மையிலேயே இந்தப் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ், பால் பண்ணைத் திட்டத்தின் கீழ், எவ்வித ஜாதி, மத வேறுபாடில்லாமல், எல்லா ஏழை களுக்கும், ரூ. 2,000-க்கு ஒரு மாடு வாங்கினால், அதிலே ரூ. 666 இனாம் என்று வைத்து இருப்பதைப் பாராட்டுகிறேன். அதிலே இப்பொழுது அரிசன மக்கள் மாடு வாங்கினால், அவர்களுக்கு ரூ. 1,000 இனாம், ரூ. 1,000 கடன் என்ற அடிப்படையிலே திட்டத்தை வைத்து, பால் சங்கங்களை ஏற்படுத்தி இருக்கிறார் கள். நம்முடைய அமைச்சர் அவர்களே, அந்தச் சங்கங்களிலே 10,25,000 பேர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால், 10,25,000 மாடுகள் வாங்கியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையிலே, இன்றைக்கு இந்தப் பால் பண்ணை வைத்துக் கொடுத்தாலும், எங்கெங்கே எல்லாம் மாதர் சங்கங்களை நாம் பதிவு செய்திருக்கிறோமோ—ஒவ் வொரு யூனியனிலும் 20, 30 பதிவு செய்யப்பட்ட மாதர் சங்கங் கள் இருக்கின்றன—அங்கங்கே எல்லாம் ஒவ்வொரு பெண்ணுக் கும் மாடு வாங்கிக் கொடுத்து, அவர்களை முன்னுக்குக் கொண்டு வர வாய்ப்பு ஏற்படுத்தினால், அது அவர்கள் குடும்பம் வளர நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்கள் சொல்வார்கள், நூற்றைக் கெடுக்குமாம், குருணி என்று. அதைப் போன்று, இந்தச் சங்கங்களிலே உள்ள சில தரகர்கள், இந்தச் சங்கங்களையே கெடுத்துக் குட்டிச் சுவராக்கி, அரசாங்கம் ரூ. 666 கொடுக்கிறதே, அந்தப் பணத்தை எடுத்து விடக்கூடிய சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறார்கள். பல இடங்களிலே அது நடக்கிறது. என்னுடைய தொகுதியிலே பல இடங்களைப் பார்வையிட்டு இதைச் சொல்ல வேண்டுமென்ற காரணத்தினாலேதான் இந்த மானியத்தின் மீது பேச முன் வந்திருக்கிறேன். அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெயரை வைத்து, அதிகாரிகள் வாங்குகிறார்களோ, என்னவோ, தெரி யாது. 100 சங்கங்கள் என்றால், 10 சங்கங்களிலே இருக்கிற

நபர்கள் இப்படி கொள்ளை அடித்து, எந்த ஏழைகளுக்குப் பணம் கொடுக்க நினைக்கிறோமோ, அந்த ஏழைகள் பணம் பெறமுடியாத அளவுக்கு இன்றைக்குச் செய்கிறார்கள்.

பாலில் உள்ள கொழுப்பு சத்தின் அளவை வைத்து, அதன் விலையைக் கணக்கெடுக்கிறோம். ரூ. 2-80, ரூ. 3 என்று விலை கொடுக்கிறோம். அதிலேகூட சில இடங்களிலே, சங்கத் தலைவர்களும், டைரக்டர்களிலே இரண்டு மூன்று பேர்களும் சேர்ந்து கொண்டு, யார், யார் அதிகமாக நல்ல கொழுப்பு சத்துள்ள பால் தருகிறார்களோ அவர்களுக்கு அந்தக் கணக்குப் படி பணம் கொடுக்காமல், இவர்களே, கொள்ளை அடிக்கக் கூடிய நிலையை உருவாக்குகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். நாம் இனாமாகக் கொடுக்கின்ற பணம், மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிலில்லாமல், எங்கெங்கேயெல்லாம் இப்படி அக்கிரமம் நடக்கிறதோ, அங்கேயெல்லாம் சி.ஐ.டி.க்களைப் போட்டு, கண்டு பிடித்து, இப்படிப்பட்ட ஆட்களைச் சிறையிலே போட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குப் பல ஊர்களிலே மாடுகளை வாங்கிக் கொடுக்கிறோம். இன்றைக்கு விதவைகளுக்கு அரசு மானியமாக உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. அந்த விதவைகளுக்கு உதவித் தொகை கொடுக்கிற வகையிலே ஒவ்வொரு யூனியனிலும் கணக்கெடுத்து, அந்த விதவைகளுக்கெல்லாம் பாதிப் பணம் இனாமாகவும், பாதிப் பணம் கடனாகவும் கொடுத்து, ஒவ்வொரு விதவைப் பெண்ணுக்கும் மாடுகளை வாங்கிக் கொடுத்தால், எத்தனையோ விதவைகள் தங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றும் சூழ்நிலை உருவாகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குப் பால் பண்ணையை வைத்துக் கொடுத்திருக்கிறோம். ஆனால், ஏழை, எளிய மக்கள் தங்கள் கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஒரு உறுப்பினர் கூடச் சொன்னார், புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன, கண்மாய்கள் இருக்கின்றன. அங்கே எல்லாம், பூபா புல் வளர்த்து, அங்கே எல்லாம் கால்நடைகளை மேயவிட்டால் நல்ல, சத்துள்ள பால் அதிக அளவு கிடைக்கிறது என்று சொன்னார்கள். அம்மாதிரி பகுதிகளில், ஜெனிவா புல், பூபா புல் இவைகளை பஞ்சாயத்து போர்ட் மூலமாகவோ—பஞ்சாயத்து போர்ட் இல்லாவிட்டாலும்—யூனியன் மூலமாகவோ, உற்பத்தி செய்து, அவைகளை கிலோ கணக்கிலே கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். இவ்வாறு செய்தால் தீனிக்காக அலைய மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



(இரவு 7-10)

பால் பண்ணையைப் பொறுத்தவரையில், பல இடங்களில் கறவைக் கூடங்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அந்த இடங்களுக்குப் பாதி மானியம் ஆகவும், பாதி கடனாகவும் கொடுத்து இந்தக் கறவைக் கூடங்களைச் செம்மையாகச் செய்ய வேண்டும். ஏனென்றால் பல இடங்களில் மாடுகளைக் கட்டுவதற்குக் கூட வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே அந்தக் கறவைக் கூடங்களை ஏற்படுத்திக் கொடுத்தால் கிராம மக்களுக்குச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மதுரை ஜில்லாவைப் பொறுத்தவரையில் பல அரிசன மக்கள் இதன் மூலம் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அரிசன மக்கள் முன்னுக்கு வருவதற்கு இது வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதோடு மாத்திரமல்லாமல், இன்றைக்கு மாடுகளுக்கு இன்ஷூரன்ஸ் செய்யும் முறை இருக்கிறது. அவ்வாறு இன்ஷூர் செய்யப்பட்ட மாடுகள் இறந்து விட்டால் அதற்குரிய பணம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் சில தலைவர்கள் அந்தப் பணத்தைக் கொடுக்காமல், ஐந்தாறு மாதங்கள் காலங் கடத்திக் கொண்டு வந்து பிறகு கணக்கில் பிடித்துக் கொண்டு போகும் நிலை இருக்கிறது. அவ்வாறின்றி இன்ஷூர் செய்யப்பட்ட மாடுகள் இறந்துவிட்டால் உடனடியாகப் பணம் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஓரேயொரு விஷயத்தைப் பற்றிச் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். மாடு வாங்குவதற்காகச் சந்தைக்குச் செல்லுகிறார்கள். இரண்டாயிரம் ரூபாய்க்கு மாடு வாங்க வேண்டுமென்றால் நிச்சயமாக அந்த ரூபாய்க்கு வாங்குவதில்லை. பல இடங்களிலே 1,000 ரூபாய், 1,200 ரூபாய்க்கு மாடுகளை வாங்கிக் கொண்டு இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கியதாகக் கணக்கு வைக்கப்படுகின்றது. அப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் பால் உற்பத்தி குறைபடுகிறது. இந்தச் சூழ்நிலை இல்லாமல் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டீலக்ஸ் பஸ்களில் நாம் பிரயாணம் செய்கிறோம். அப்படிப் போகும் பொழுது பஸ்ஸில் செல்லக் கூடியவர்களுக்கு இனாமாகப் பால் வழங்கப்படுகிறது. நம்முடைய அமைச்சரவர்கள் உண்மையிலேயே நல்லெண்ணத்தோடுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் குடித்துப் பார்த்திருக்கிறேன். 40 பேர்கள் பிராயாணம் செய்கிறார்கள் என்றால் 40 பேர்களுக்கும் பால் கொடுத்ததாகக் கணக்கு எழுதப்படுகிறது.

ஆனால் உண்மையிலேயே 40 பேர்களுக்குப்பால் கொடுப்ப தில்லை. நான்குபேர், ஐந்து பேர்தான் குடிக்கிறார்கள். மற்றவர் கள் ஏன் குடிக்கவில்லையென்றால் ஒரு லிட்டர் பாலில் பத்து லிட்டர் தண்ணீர் கலக்கப்பட்டிருந்தால் எப்படிக் குடிப்பார்கள்? எனவே இத்திட்டம் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும். இல்லையேல் இனாமாகக் கொடுக்கப்படும் பாலை நிறுத்திவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள்கள் நிர்வாகம் பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில வார்த்தைகளைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

பால் வளர்ச்சியைப் பற்றி இங்கே பேசிய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள், இன்றைக்குத் திடீ ரென்று எல்லா வகைகளிலேயும் வரியை உயர்த்தி விட்டார்கள், பாலின் மேலேயும் வரியைப் போட்டார்கள் என்று சொல்லிவிட் டுப் பிறகு அதைத் திருத்திக் கொண்டு பாலின் விலையை உயர்த்தி விட்டார்கள் என்று சொன்னார்கள். காரணம், அவர் களுடைய நிலையிலே ஏற்பட்ட தடுமாற்றம்தான். அவருக்கு வரிக்கும், விலைக்கும் வித்தியாசம் தெரியாத நிலையில வரி என்றும், விலை என்றும் பேசினார்கள.

இன்றைக்குத் தமிழகத்தில் 30 சத வீதம் மக்கள் நகர்ப் புறங்களிலதான் வசிக்கிறார்கள், அவர்களுக்குத் தேவையான பாலை கிராமப்புறங்களில் வசிக்கின்ற 70 சதவீதம் மக்கள் உற்பத்தி செய்து கொடுக்கிறார்கள. 1971 ஆம் வருடத்திய மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில் 50,000-க்கும் மேற்பட்ட மக்களில் 44,000 பேர் புற நகரங்களில் வசிக்கிறார் கள். அவர்களுக்குச் சுத்தமான பாலை விநியோகிக்கக் கூடிய பொறுப்பை இன்றைக்குப் பால் வள வளர்ச்சித்துறை மேற் கொணடிருக்கிறது.

புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியில் எத்தனையோ துறை களில் எத்தனையோ புரட்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் பசுமைப் புரட்சி என்று சொலவதைப்போல, பால் வளத் துறையில் வெண்மைப் புரட்சிநடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னால அது மிகையாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெண் மையைப் பற்றித் தெரியாமல்தான் நண்பர் ரகுமான்கா





அவர்கள் பாலின் நிறம் கறுமை என்ற அளவில் தண்ணீர் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம் மாள் அவர்கள் கூறியதைப் போல, இன்றைக்குக் கிராமப்புறங் களிலுள்ள ஏழை எளிய மக்கள் பயன் பெறுகிறார்கள்; அந்த மக்கள் கறவை மாடு வாங்க இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கப் பட்டு அதில் மூன்றில் ஒரு பங்கு மானியமாக அளிக்கப்படுகிறது. இதன் மூலம் இன்றைக்கு இலட்சோபலட்சம் ஏழை எளிய மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கண் ணீரைத் துடைத்ததற்காக நன்றிப் பெருக்கோடு அந்த அம்மை யார் அவர்கள பேசினார்கள. ஆனால் அந்த நன்றியுணர்வு கூட இல்லாமல் தண்ணீரைப் பற்றி நண்பர் ரகுமான்கான் அவர்கள் பேசினார்கள்.

இன்றைய தினம் பாலின் விலை உற்பத்தியாளர்களுக்கு 42 பைசா ஒரு லிட்டருக்கு அதிகப்படுத்தப்பட்டு இருக்கின்றது. அதே நேரத்தல் நுகர்வோர்க்கு ஒரு லிட்டருக்கு 30 பைசா தான் கூட்டப்பட்டிருக்கின்றது. இன்றைக்குக் கிராமப்புறங் களுக்குப் பால் உற்பத்தி பெருக்கத்திற்காக கடந்த காலத்தில் இந்த அரசு மேற்கொண்டுள்ள சாதனை போற்றத் தக்கதாகும். இன்றைக்கு மிகப் பெரிய அளவிலே உலகத்திலேயே அதிகமான பாலை உற்பத்தி செய்யும் நாடுகள் நியூசிலாந்தும், டென் மார்க்கும்தான். ஆனால் வறண்ட பாலைவனமாக உள்ள இஸ்ரேல நாடு, உலகத்திலேயே அதிகப் பாலை உற்பத்தி செய் கின்ற மாடுகளை வைத்திருக்கின்றது. ஒரு மாடு சராசரி 45 முதல் 50 லிட்டர் தரக்கூடிய மாடுகளை செயற்கை கருத் தரிப்பு கலப்பின திட்டத்தின மூலம் உற்பத்தி செய்து பாலைப் பெருக்கிக் கொண்டு வருகிறது. அதேபோல நம்முடைய நாட்டிலே, குறிப்பாக தமிழ்நாட்டிலே பால் வள அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று, கறவைமாடுகள் சிறப்பின கன்று வளர்ப்புத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இன்றைக்குத் தமிழகத்திலே மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 11 லட்சம் லிட்டர் பால், மாநிலத்தின் பல பகுதிகளிலும் இருந் தும் சேகரித்து வழங்கப்படுகின்றது. ஆனால் இந்த 11 லட்சம் பால் இன்றைய தினம் ஒழுங்காக மக்களுக்கு விநியோகிக்கப் படாமல இருந்தால், இன்றைக்கு பாலையே பரிபூரண உணவாக கொண்டு வாழ்கின்ற சிறார்களின் கதி என்ன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இன்றைக்கு குறிப்பிட்ட வயது வரையில் குழந்தைகளுக்குப் பாலை பரிபூரண உணவாகக் கொடுத்து வரு கிறோம். 'ஆவின் பால்' இல்லை என்றால் பல்லாயிரக்கணக்

கான குழந்தைகள் 'சாவின் பால்' சென்றிருப்பார்கள் என் பதை கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆனந்த் மூலம் நடத்தப்படுகிற அமுல் டயரிபற்றிச் சொன்னார்கள். குஜராத் மாநிலத்தில ஆனந்த் சிறிய ஊர், கயிரா மாவட்டத்தில் இருக்கின்றது. அங்கே நாள் ஒன்றுக்கு 4 முதல் 5 லட்சம் பாலை உற்பத்தி செய்கின்றார்கள. (குறுக்கீடு) அந்த அடிப்படையில் தமிழகத்திலும் பல பகுதிகளில் பால் உற்பத்தி பெருக வேண்டும். அப்போதுதான் பால் உற் பத்தியாளர்கள் நியாயமான விலைக்குக் கொடுத்து நல்ல பயனை அடைவார்கள. இந்த அரசு பால் உற்பத்தியாளர் களுக்கும் பாலை வாங்குகின்ற நுகர்வோர்களுக்கும் இடையே சுமுக உறவை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்த மைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன் ;** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலினுடைய மானியத்திலே பேசு கின்ற வாய்ப்பினை அளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக ஏழை எளிய மக்கள் தங்க ளுடைய வாழ்க்கையை நல்லமுறையிலே நடத்துவதற்கு கிரா மங்களில இதைப் பயன்படுத்துகிறார்கள். இதிலே சில வேக மான நடைமுறைகள் இல்லை என்பதைச் சொல்லுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஆனந்த் முறையை தமிழ்நாட்டிலே நடைமுறைப் படுத்துவதற்கு வேகம் இருக்கிறது. ஆகவே அந்த ஆனந்த் முறையைப்போல தமிழ்நாட்டு முறையை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது பால்வள கூட்டுறவு சங்கமாக இருக்கின்றது. அவைகள் ஒவ்வொன்றும் தீர்மானம் போட்டு ஆனந்த் முறைலே உற்பத்தி யாளர் சங்கமாக மாற்றுவதற்கு நீண்ட நாட்கள் ஆகும். ஆகவே அரசே ஒரு உத்தரவு போட்டு, கூட்டுறவுச் சங்கங்களை உற்பத்தி யாளர் சங்கங்களாக மாற்றுவதற்கு, நாடுபூராவும் ஒரே நாளில் மாற்றுவதற்கான நடவடிக்கையை அமைச்சர் எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[இரவு 7-20]

அதற்கு அடுத்து, நாம் அடிக்கடி கோடைக்காலங்களிலே பாலின் விலையை ஏற்றுகின்ற அந்த வேலையை ஒரு ஸ்டான் டர்ட்டாக ஒரு இன்சன்டிவ் பிரைஸ்-ஆக எப்போதும் வைத்து விட்டு அந்த கோடைக்காலம் வருகின்றபோது அந்த இன்சன்டிவ் பிரசையும் சேர்த்துக் கொள்ளுகின்ற அந்த நிலைமையை



நாம் ஏற்படுத்த வேண்டும். பொதுவாக நாம் கோடைக்காலங் களில் பிப்ரவரி மாதத்திலேதான் அந்த விலையை ஏற்றுவது வழக்கம். ஆனால் சென்ற முறை செப்டம்பர் மாதத்திலே செய்தோம். அதற்கெல்லாம் ஒரு ரெட்ரோஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து அந்த பிப்ரவரி மாதத்திலேயிருந்து அந்த விலையை விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இதிலே கூட பர்சாஸிங் பிரைசிலேகூட வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒரு விலையும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஒரு விலையும் இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்திலே ஒரு கிலோ கொழுப்புச் சத்து பசும்பாலுக்கு 15½-ம், எருமைப்பாலுக்கு 31-ம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே சென்னை, மாவட்டத்திற்கு கொழுப்புச் சத்து, பசும்பாலுக்கு 16½-யும் எருமைப்பாலுக்கு 35-ம் கொடுக்கப்படுகிறது. எலலா இடத் திலும் ஒரே நிலைதான் இருக்கிறது. ஆனால் செங்கற்பட் டிற்கு ஒரு விலையும் வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒரு விலையும் என்று போடுவது ஏழை விவசாயிகளுக்கு அது மிகவும் பாதிக்கும் என்று சொலகின்றனர். எல்லா இடத்திலேயும் ஓரே அளவிலே இருக்கின்ற அந்த பர்ச்சாசிங் பிரைசை பசும் பாலுக்கும், எருமைப்பாலுக்கும், கொழுப்புச் சத்துக்களை எலலா மாவட்டத்திற்கும் ஒரே அளவிலும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோல் சாதாரணமாக பால் சங்கங்களுக்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் வந்தால் இன்கம்-டாக்ஸ் கொடுக் கின்ற நிலைமை இருககின்றது. மாநில அரசு இது ஏழை எளிய வர்கள நடத்துகின்ற ஒரு தொழிலாக இருட்பதினால், 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருககின்ற அந்த உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வருமான வரி கூடாது என்று மத்திய அரசுக்கு எழுதி அதைச் சீர் செய்யவேண்டும். அதேபோல பாலிலே இருக்கின்ற, சர்ப்ளஸ் வருகின்ற நேரத்திலே, பால்கோவா, போன்ற மற்றப் பொருட்களைச் செய்கின்ற நேரத்திலே, அந்தப் பாலினுடைய உப பொருளுக்கு—பை புராடெக்ஸ்-க்கு சேல்ஸ்-டாக்ஸ் போடுகிறார்கள். அந்த சேல்ஸ்-டாக்ஸ் போடு வதையம், இது ஏழை எளியவர்கள் நடத்துகின்ற தொழிலாக இருப்பதினால், அவைகளைப் போடாமல் இருக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, நம்முடைய அரசிலே செய்ய வேண்டிய அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ரயில்வே நிலையங்களிலே பால் வழங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர்களுடைய சங்கங்கள் பால் வழங்குவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று. அந்தக் கோரிக்கையை மத்திய அரசுக்கு எழுதி எல்லா ரயில்வே நிலையங்களிலும் தனியாருக்குக் கொடுப்பதைவிட்டு, உற்பத்தியாளர் சங்கங்களுக்கு பால் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அதேபோல் மருத்துவமனைகளிலும் நாம் மோனாபலியாக உற்பத்தியாளர்கள் சங்கங்கள்தான் பால் வழங்கச் செய்ய வேண்டும். தனியார் பால் வழங்கச் செய்யக்கூடாது என்ற ஒரு நிலைமையைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல கருத்துக்களை சொல்லவேண்டும். குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்திலே இந்த ஒன்றியங்களை ஏற்படுத்துவதற்கு மிக தாமதம் ஆகின்றது. ஆகவே, தமிழ்நாடு பூராவும். உடனடியாக ஒரு சட்டத்தைப் போட்டு எல்லாம் உற்பத்தியாளர்கள் சங்கமாக மாற்றப்பட்டது. என்பதை அவர்கள் உத்தரவு போட்டாலொழிய அவர்களையெல்லாம் கூட்டி உற்பத்தியாளர்கள் சங்கமாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தால் அது நாளாகும். ஆகவே அப்படி ஒரு உத்தரவைப் போட்டு தமிழ்நாடு பூராவும், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக கூட்டுறவுச் சங்கங்களை உற்பத்தியாளர்கள் சங்கங்களாக மாற்ற ஒரு உத்தரவு போட்டால் அது மிகவும் நல்லபடியாக அந்த உற்பத்தியாளர்கள் ஆனந்த் பேட்டர்னிலே வருவதற்காக ஏதுவாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக பால் விலைத்தைப் பொறுத்தவரையில கன்ஷ்யூமர்கள் பாதிக்கப்படுகிற ஒரு நிலைமை இருக்கிறது. எனவே, மானியம் போன்ற வகையிலே அரசு ஒரு பர்சாசிங் பிரைஸ விவசாயிகளுக்குக் கொடுத்து அந்த வகையை ஈடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய கோரிக்கை, 1,800 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 10,000 பேர்கள் இந்த மாதவரம் பண்ணையிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் கவனித்து அவர்களையெல்லாம் வேலை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருவத்திபுரத்திலே சில்லிங் சென்டர் திறக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம்பூரிலும் அதேபோல் தாமரைப்பாக்கத்திலும் பேசி இருக்கிறார்கள். கூட்டுறவுப் பத்திரிகையிலே அந்த செய்தி வந்திருக்கிறது.



அதைப்பற்றியெல்லாம் ஆதாரங்கள் கொடுத்திருக்கிறேன். ஆகவே அந்த சில்லிங் சென்டரை வட ஆர்க்காடு மாவட்டத்திலே, செய்யாரிலே, திருவத்திபுரத்திலே, ஆரம்பிப்பதற்கு, மற்றும் செய்யாறு, அரக்கோணம், காவேரிப்பாக்கம் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் தாமரைப்பாக்கத்திலே நடந்த கூட்டத்திலே பேசும்பொழுது, நம்முடைய அருமை நண்பர் சேதுராமன் அவர்கள் கூட அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விரைவாக எடுத்து சில்லிங் சென்டரைத் துவங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என்.வி. என். சோமு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய பால் வழங்கு மானியத்தின் தொடக்கத்தில் பேசிய எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டதுபோல இன்றைக்கு பால விலை ஏற்றத்தால் மக்கள் எவ்வளவு அவதிக்கு ஆளாகி இருக்கிறார்கள் சங்கடப்படுகிறார்கள் என்பதை நான் சோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு லிட்டர் பால் 2 ரூபாய் 50 காசாக இருந்தது இன்றைக்கு 2 ரூபாய் 80 காசாக அதிகமாகி இருக்கிறது. 1939 ஆம் ஆண்டில் ஒரு கிலோகிராம் பால் விலை 8 காசாக இருந்தது. 1980-ல அதே ஒரு கிலோகிராம் பால் விலை 4 ரூபாய் அரசாங்கங்கள் மாநிலத்திலே இருந்தாலும் மத்தியிலே இருந்தாலும் இதைப்போன்ற விலைவாசியைக் கட்டுப்படுத்தாவிட்டால் இன்னும் 10 அல்லது 15, ஆண்டுகளில் ஒரு கிலோகிராம் பால 22 ரூபாய்க்கு விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்திருக்கிறார்கள். அதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்குக் கூட 1,500 பேர் பட்டச
ஊழியர்கள் ஊர்வலம் வந்தார்கள். 1,500 பேர்பக்கத்து
றைக்கு வேலையில்லாமல் செய்யப்பட்டுள்ளா— போட்டி
யில நடைபெற்ற ஒரு வேலை நிறுத்தத்தி ம்கப்பட்டால்,
காட்டும் வகையில் அடையாள வேலை நிறு. 1 இலட்சம்
கள் என்பதற்காக அவர்கள் வீட்டுக்கு த மதிப்பீட்டை
கள். இதே மாமன்றத்தில் சென்ற ஆண்டு று அதை மாற்ற
லாளர் மானியத்தில் பேசும்போது—ஏப்ரல ரங்கமே இரண்டு
நினைக்கிறேன—அப்பொதுகூட குறிப்பிட்டு திக விலைக்குத்
னேன். அந்த 1,500 பேர்களுக்கும் ற்றுகிறார்கள்.
**வேண்டுமென்று கேட்டேன்.** ணமாக, அரசு
ண்மைக் காலத்

இந்த ஆண்டும் திரு ரகுமான்கான் அவர்கள லேபர் மானியத்தில் பேசும்போது வலியுறுத்தினார்கள. மீண்டும் மீண்டும் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் விடுத்த வேண்டுகோளகளை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்னதைக் குறித்து வேதனைபபடுகிறேன். அந்த 1,500 தொழிலாளர்கள் 16 மாதங்களாக வேலையின்றி வாடுகிறார்கள். அந்த இடங்களை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களை வைத்து நிரப்பியுள்ளார்கள. வேலையின்றி வாடுகின்ற 1,500 பேர்களில் 250 பேர் பட்டம் பெற்றவர்கள். எம்.ஏ. படித்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள. இன்றைக்குக் கூட அவர்கள் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி ஊர்வலமாக வந்தார்கள். அவர்களில் 28 பேர்களை கைது செய்திருக்கிறார்கள். நான் அமைச்சரவர்களையும் அவை முன்னவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நீங்கள் வேலை தருவது ஒருபுறம் இருந்தாலும் இன்றைக்கு கைதாகி இருக்கிற அந்த 28 பேர்களையும், அவர்கள் இதுவரையில விடுதலை செய்யப்படாமல் இருந்தால, அருள்கூர்ந்து விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் அவர்கள் கனைந்நீய முறையில், அறவழியில் தங்களுடைய கிளர்ச்சியை நடத்தியிருக்கிறார்கள். வன்முறையில் ஈடுபடவிலலை. அமைச்சரர்களை சந்தித்து, முதலமைச்சரை சந்தித்து மகஜர் கொடுக்க வந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள. இதுவரையில் விடுதலை செய்யாமல் இருந்தால் அவர்களை எல்லாம் உடனே விடுதலை செய்யும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பால் வழங்கும் மானிய விவாதத்தின் போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்த 1,500 ஊழியர்களும் வெளியே நின்றுகொண்டிருக்கிறார்கள். ''உழவனுடைய உள்ளத்திலே புயல் இருந்தால் வயலிலே வளம் காணமுடியாது'' என்ற அண்ணாவின் பொன்மொழியை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் பக்கத்தில் இருக்கிறார்கள. இரண்டு பேர்களும் சேர்ந்து விவாதித்து, வீதியிலே நிற்கின்ற அந்த 1,500 ஊழியர்களையும் அருள் கூர்ந்து வேலைக்கு எடுத்து கொள்ள வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

ஒவ்வோராண்டு தொழிலாளர் மானியத்திலும் இதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆட்சியிலே இருப்பவர்கள் அதில் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இப்போதாவது அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.



அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பில் ஏறத்தாழ 7,000 சங்ககங்ள் இருப்பதாகச் சொலலியிருக்கிறார்கள். அதில செயல்படாமல கலைக்கப்பட்ட சங்கங்கள 2,000 இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இந்த எதனால் என்று அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே விளக்க வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன.

பத்திரப்பதிவுத் துறையை எடுத்துக்கொண்டால் முன்னால் செட்டில்மென்ட் செய்தால் முதல் ஆயிரம் ரூபாய்க்கு 25 ரூபாய் என்றும் அதற்குப் பிறகு ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் 26 ரூபாய் கட்டணம் என்றும் இருந்தது. ஆனால இப்போது ஒட்டுமொத்தமாக 3 சதவீதம் என்று போட்டிருக்கிறார்கள். இதனால் பொதுமக்களும்கு எவ்வளவு சங்கடம் ஏற்படுகிறது என்பதை உணர வேணடுமெனறு கேச்டுக்கொளகிறேன்.

ஒரு அண்ணன் தனது தம்பிக்கோ அலலது தனது தங்கைக்கோ, மாமனால் மருமகனுக்கோ ஏதாவது செய்ய வேண்டுமெனறு நினைத்து செய்தால் அது செட்டில்மென்ட் அல்ல கன்வேயன்ஸ் எனறு சொல்லி அதற்கு 13 சதவீதம் ஸ்டாம்ப் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இதனால் மக்கள் எவ்வளவு தவிக்கிறார்கள் என்பதை இந்த அரசு உணரவேண்டும். இரக்கத்தின காரணமாக. அண்ணன் தம்பிக்கோ அலலது மாமனால் மருமகனுக்கோ கொடுக்கக் கூடிய சொத்து வராமல் போய்விடுகிறது. இதை அரசு உணர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று கேடடுக்கொள்கிறேன்.

[இரவு 7-30]

அதேபோல், பதிவுக் கட்டணம் ரூ. 10,000-க்கு 78 ரூபாய் என்று இருந்தது. ஆனால் இப்போது ஒட்டுமெத்தமாக ஒரு சதவிகிதம் என்று உயர்த்திவிட்டீர்கள். அதேபோல், சொத்து மதிப்பீடு செய்வதில் அரசு 'கெய்டு-லைன்ஸ்' கொடுத்துள்ளது. அந்த 'கெய்டு-லைன்ஸ்' படி ஒரு இடத்திற்கு ஒரு இலட்ச ரூபாய் என்று மதிப்பு நிர்ணயம் செய்துவிட்டால், பிறகு பக்கத்து இடத்தில் மனைகள் வாங்குவதில் ஏற்படும் போட்டா போட்டியின் காரணமாக இரண்டு இலட்சம் என்று விற்கப்பட்டால், பதிவாளரும் உடனே 'கெய்டு-லைன்ஸ்' படி ரூ. 1 இலட்சம் என்று ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு இருந்த அந்த மதிப்பீட்டை இரண்டு இலட்சம் அந்தப் பகுதியின் சொத்து என்று அதை மாற்ற நேரிடுகிறது. உடனே மனை விற்பவர்கள் அரசாங்கமே இரண்டு மடங்காக விலையை ஏற்றிவிட்டது, நாங்கள் அதிக விலைக்குத் தான் விற்போம் என்று விலைகளை மீண்டும் ஏற்றுகிறார்கள். இதன் காரணமாக அரசின் இந்தக் கொள்கை காரணமாக, அரசு கொடுத்த இந்த 'கெய்டு-லைன்ஸ்' காரணமாக, அண்மைக் காலத்

தில் மனை விலைகள் அநியாயமாக உயர்ந்து விட்டது. ஆகவே, 'கெய்டு-லைன்ஸ்படி' சொத்தின் மதிப்பு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அடிக்கடி செய்யக் கூடாது என்று அரசு ஆணையிட வேண்டும். இந்தக் கருத்தை அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பதிவாளர் அலுவலகங்கள் சரியான கட்டிடத்தில் அமைய வில்லை. பெரும்பாலானவை வாடகைக் கட்டிடங்களில் இருக் கின்றன. ஆகவே, அரசு புதிய கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் உள்ள அலுவலகம் பார்ப்பதற்கு அலுவலகமாக காணப்படவில்லை. அருகில் மிளகாய் மற்றும் மாவு அரைக்கும் இடமாக இருந்தால் பணியாளர்கள் அங்கு எப்படி பொறுமையாக வேலை செய்ய முடியும் ? பொதுமக்கள் உட்கார நாற்காலி இல்லை. அரசு உடனடியாக இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்லாண்டு காலமாக பதிவாளர் அலுவலகங்களில் பணியாற் றும் செக்ஷன் ரைட்டர்கள் இன்னும் நிரந்தமாக்கப்படவில்லை. 20 ஆண்டுகள் 25 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி அனுபவம் பெற்ற பின்னரும் அவர்கள் இன்னும் நிரந்தரம் செய்யப்பட வில்லை. அவர்களுக்கு பதவி உயர்வும் தரவில்லை. 480 நாட்கள் பணிபுரிந்தால் நிரந்தரம் செய்ய வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்துள்ளதாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச் சர் அவர்கள் முந்தாநாள் மார்தட்டினார்கள். ஆனால் பல்லா யிரக் கணக்கான செக்ஷன் ரைட்டர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, அவர்களை நிரந்தரம் செய்யத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே, அரசாங்கம் ஒரு கொள்கை வகுத்து, 10 ஆண்டு பணியாற்றியவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு மாவட்ட பதிவாளர் பதவி உயர் வில் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பதவி உயர்வு பெற காத்திருக்கிற நேரத்தில் 1981 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட காலியிடங் களில் அவர்களை அமர்த்தி, அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய வில்லை. சென்னையில் ஒரு தாழ்த்தப்பட்ட பெண் சார் பதி வாளர் பதவி உயர்வுக்கு பல முட்டுக்கட்டைகள் போட்டு தடுக்கப் பட்டு இருக்கின்றன. இதையும் அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.



அடிக்கடி பணியாளர்கள் மாற்றுதல் செய்யப்படுவது நிர்வாக திறமைக்கு உகந்தது அல்ல. எந்த சார்பதிவாளரும் ஓர் இடத் தில் 3 ஆண்டுகளுக்கு தொடர்ந்து பணியாற்றிய நிலைமை இல்லாமல் உள்ளது. 31—7—1981 முதல் 5—8—1981 வரை ஏற்பட்ட மாறுதல்களும் ரத்து செய்யப்பட்டவையும் கணக்கில் அடங்காதவை. கட்சிக்காரர்களின் தலையீடுதான் இதற்குக் காரணமாக இருக்குமோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

ஸ்டாம்ப் விற்பனையாளர்களின் பிரச்னை கவனிக்கப்பட வேண்டும். ஸ்டாம்ப் விற்பனை எப்போது ஏற்பட்டதோ அப் போது கொடுத்த 1½ சதவிகிதம் கமிஷன் தான் தொடர்ந்து இன்றும் இருந்து வருகிறது. வெளியூர் விற்பனையாளர்களுக்கு 6¼ சதவிகிதம் இருந்தது. அதனையும் அரசு 1½ சதவிகிதம் என்று ஆக்கிவிட்டது. இதனை எதிர்த்து அவர்கள் நீதிமன்றம் சென்று வெற்றி பெற்றும், அரசு தனது பிடிவாதத்தை தளர்த்திக் கொள்ளவில்லை. இப்போது மாவட்ட பதிவாளர் அலுவலகங் களில் ஸ்டாம்ப் விற்பனை செய்யப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஸ்டாம்ப் விற்பனையாளர்கள் எங்கே தங்கள் பிழைப்பு போய்விடுமோ — ஏற்கனவே கிராம உத்தியோகஸ்தர்கள் பிழைப்பு பிடுங்கப்பட்டதைப் போல்—தங்களுடைய பிழைப்பு பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், சென்னை கலெக்டர் அலுவலகத் தில் இயங்கிவந்த டிரஷரி எங்கோ தங்கசாலையில் ஒரு மூலைக்கு மாற்றப்பட்டுள்ளது. லட்சக்கணக்கான ரூபாய் அங்கே எடுத்துச் செல்லும் ஸ்டாம்ப் விற்பனையாளர்கள் தினசரி அச்சத்தோடும், ஆதங்கத்தோடும் சென்று வரவேண்டியிருக்கிறது. இந்தக் குறையை உடனடியாக நீக்க வேண்டும்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்களே ஒரு வழக்கறிஞர். உங்களுக்குத் தெரியும். காபி ஸ்டாம்ப் பேப்பர் கிடைப்பதே இல்லை. 70 பைசா ஒட்ட வேண்டிய இடத்தில் 75 பைசா ஒட்டவேண்டியுள்ளது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 11 மாண்பு மிகு உறுப்பினர்கள் பத்திரப்பதிவு, முத்திரைத்தாள், பால் வளம் ஆகிய மூன்று மானியங்களின் மீது நல்ல கருத்துக்களை

யெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு, விரைந்து தக்க பரிகாரங்களை அரசு எடுக்கும் என்பதையும் முதலிலேயே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக பத்திரப்பதிவு முத்திரைத் தாள் ஆகிய துறைகளைப் பற்றி நல்ல பல கருத்துக்களையெல்லாம் அனுபவமிக்க உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பத்திரப்பதிவு துறை என்பது ஒரு 100 ஆண்டுகளுக்கு மேலாக நம்முடைய நாட்டில் பணியாற்றி, அது இன்றைக்கும் ஏழை எளிய மக்களுக்கும், மிகச் சாமானிய மக்களுக்கும் உரிமையைப் பாதுகாக்கிற ஒரு கேடயமாக இருப்பதை நாமெல்லாம் அறிவோம். ஆகவே அப்படிப்பட்ட துறையை, அனைத்துப் பகுதியிலும் அமைத்து அது மக்களுக்கு பயன்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்த அரசு ஒரு முடிவை எடுத்திருக்கிறது. குறிப்பாக பொது மக்கள் அனைவருக்கும் நல்லது செய்வதற்காகவும், கிராமப் பகுதிகளுக்கும், வெகு தொலைவில் இருக்கிற மலைப் பகுதிகளுக்கும் சார் பதிவாளர் அலுவலகங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட வேண்டும் என கடந்த 3, 4 ஆண்டுகளாக அதிக அளவில் முயற்சிகள் எடுக்கப்பட்டு, தற்போது அவைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தைப் பொருத்தவரையில் ஏறக்குறைய ஆயிரத்திற்கு மேற்பட்ட ரெவின்யூ பிர்க்காக்கள் இருக்கின்றன. 56 வருவாய் கோட்டங்களும் இருக்கின்றன. ஆகவே தமிழக அரசு இன்றைய தினம் ஒரு கொள்கையைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ரெவின்யூ பிர்க்காவிற்கும் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் தொடங்குவது என்றும், ஒவ்வொரு வருவாய் கோட்டத்திற்கும் ஒரு மாவட்ட பதிவு அலுவலாளர் அலுவலகம் ஒன்றைத் தொடங்குவது என்றும், அதன் வழியாக மக்களுக்கு, இந்த துறையின் வாயிலாக, அந்தத் துறை இன்றைக்கு செயல்படுத்துகிறது 12 சட்டங்களை நிறைவேற்ற முடிவு எடுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, இது வரையில் 450 சார்பதிவாளர் அலுவலகங்கள் மாவட்ட மையங்களாக இருந்து வருகின்றன. இந்த நடப்பு நிதியாண்டான 1982-83 ஆம் ஆண்டுக்கு மேலும் 30 இடங்களில் பரவலாக 16 மாவட்டங்களிலும் தொடங்கயிருக்கிறோம் என்பதை மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே 42 மாவட்ட பதிவு அலுவலங்கள் இருக்கின்றன. ஆண்டுதோறும் கடந்த 3 ஆண்டுகளாக, பெரிய மாவட்டங்களை இரண்டிரண்டாகப் பிரிக்கும் பணி—நடந்து வருகிறது. அப்படி பிரிக்கப்பட்ட முறைப்படி அங்கேயெல்லாம் இந்த ஆண்டு மாவட்ட பதிவு அலுவலகங்களை ஆரம்பிக்கயிருக்கிறோம். அதிலே குறிப்பாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டம் — மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களை பிரதி



நிதியாகக் கொண்டிருக்கிற சேரன் மாதேவி மாவட்டம், ஆகிய இரண்டு பகுதிகளில் இரண்டு மாவட்ட பதிவு அலுவலகங்களை இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாணபுமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கிருஷ்ணகிரி, தர்மபுரி என்பதை இரண்டு மாவட்டங்களாக பிரிய இருக்கிறது. அவைகளுக்கென முறையே இரண்டு பதிவு அலுவலகங்களும் வரயிருக்கின்றன. திருநெல்வேலியில், திருநெல்வேலி-சேரன் மாதேவி என இரண்டு மாவட்டங்களாக பிரிய இருக்கிறது. அதிலே இரண்டு பதிவு அலுவலகங்கள் வரயிருக்கின்றன. இந்த ஆண்டு முதல் 44 மாவட்ட பதிவு அலுவலகங்களை தமிழ்நாட்டின் வரைபடத்திலே கொண்டிருக்கும்.

அடுத்து குறிப்பிட வேண்டும் என்றால், சென்னையில் இன்றையதினம் ஒரு புதிய வளர்ச்சி காரணமாக ஒரு மாறுதல் ஏற்பட்டு வருகிறது. சிறு நகர்ப்புறங்களில் பலமாடி குடியிறுப்புகள் அல்லது அடுக்கு வீடுகள் அதிகமாகி பல இடங்களில் புற்றீசல் போல் தோன்றி வருகிறது. இவைகளிலே முத்திரைச் செலவுகள் சரியாக வசூலிக்கப்படுகிறதா என்பதை அரசு பரிசீலித்தது. இப்போது சென்னையில் என்ன நடவடிக்கை நடந்து வருகிறது என்றால், எல்லா மனை உரிமையாளர்களும், அவர்கள் வைத்திருக்திருக்கும் மனைகளில் பத்தில் ஒரு பங்கு , அல்லது 15-ல் ஒரு பங்கு, அல்லது 20-ல் ஒரு பங்கு என்ற அளவில் 10, 15, 20 நபர்களுக்கு விற்கிறார்கள். மனைகளைப் பெற்றவர்களுடன் விற்பனை செய்தவர்கள் உடன்பாடு ஒன்றைப் பெறுகிறார்கள். அந்தக் காலி மனைமீது கட்டப்படும் கட்டிடங்கள் பதிவு கூட்டுறவு விற்பனை செய்பவர் அல்லது அவர்களுக்கு இணக்கமான ஒப்பந்தக்காரர்கள் மூலம் தான் கட்டப்பட்ட வேண்டும் என்னும் ஒப்பந்தம் கிரய பத்திரங்களிலேயே குறிப்பிடப்படுகிறது.

[இரவு 7-40]

இப்பத்திரங்களைப் பொறுத்தவரையில் அடிமனையில் பத்தில் ஒன்று, பதினைந்தில் ஒன்று உள்ள அங்காடி மதிப்பின் மீது மட்டுமே முத்திரைத் தீர்வை செலுத்தப்படுகிறது. மேலும் ஒப்பந்தத்திற்கு இரண்டரை ரூபாய் முத்திரைத் தீர்வையும் செலுத்துகிறார்கள். காலி மனையின் உரிமையாளர்கள் பல மாடி குடியிருப்புகளைக்கட்டி அதன்பின் ஒவ்வொரு குடியிருப்பையும் ஒருவருக்கு விற்றால அரசுக்கு செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையைப் பொறுக்கையிலே அடிமனைக்

கும், குடியிருப்புக்கும் சேர்ந்து 13, 12 சதவீதம் மட்டுமே தீர்வை செலுத்த வேண்டி இருக்கும். ஆனால் அடிமனையை விற்று மேல் கட்டிடத்தைக் கட்ட ஒப்பந்தம் செய்வதன் மூலம் குடியிருப்பைப் பொறுத்தவரையிலே முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டியதன் அவசியத்தைச் சட்டபூர்வமாகத் தவிர்க்கிறார்கள். காலி மனையிலே பகுதி கிரையமும் மேலே கட்டடம் கட்ட ஒப்பந்தமும் என ஆவணங்களில் குறிப்பிடினும் பெரும்பாலான குடியிருப்புக்கள் கட்டப்பட்டு அதன்பின் ஒவ்வொரு குடியிருப்பும் ஒவ்வொருவருக்கு விற்கப்படுகின்றது என்பதை அரசு கவனத்தில் கொண்டிருக்கின்றது. அதனால் அரசுக்கு நேரும் இழப்பை தவிர்க்க வேண்டி அத்தகைய ஒப்பந்தங்களின் பதிவுகளைக் கட்டாயமாக்கவும் அவற்றின் மீது இரண்டரை ரூபாய் தீர்வை வசூலிப்பதற்குப் பதிலாக அங்காடி மதிப்பில் 13 சதவீதம், 12 சதவீதம் முத்திரைத் தீர்வை வசூலிக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. இதனால் தொடக்க காலத்தில் முதல் ஆண்டில 40 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காகப் பதிவுச் சட்டத்தையும், முத்திரைச் சட்டத்தையும் திருத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் தீவிரமாக வருகின்றது.

அடுத்து மார்க்கெட் விலையினை நிர்ணயம் பண்ணுவதில் இருக்கின்ற சில சிரமங்களையும், நடைமுறைச் சிக்கல்களையும் பற்றி எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். குறிப்பாக பிரிவு 47ஏ-ன்கீழ் தான் இந்த அதிகாரம் இன்றைய தினம் பதிவுத் துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்டபின் முத்திரைச் சட்டத்தின்கீழ் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர் பதிவுத் துறை தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47ஏ-ன் கீழ் சொத்துக்களின் அங்காடி மதிப்புக்களை நிர்ணயிக்கும் அதிகாரம் கோட்ட ஆட்சியாளருக்கு உள்ளது. இந்த அதிகாரத்தினைப் பதிவுத் துறைக்கு மாற்றுவது எனும் முறைக்கேற்ப முதல் கட்டமாக 4 மாவட்ட பதிவாளர் பதவிகளை வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. பிரிவு 47ஏ-ன்கீழ் அங்காடி மதிப்புக்கள் நிர்ணயிக்கப்பாமல இருக்கக்கூடிய பணிகளை இந்த 4 மாவட்டப் பதிவாளர்களும் கவனிப்பார்கள். இதனால் அரசுக்குச் சேரவேண்டிய முத்திரைத் தீர்வையைக் காலம் தாழ்த்தாமல் வசூலிக்க வாய்ப்பு இருக்கின்றது. பொதுமக்களுக்கும் தங்கள் ஆவணம் விரைவிலே திரும்பக் கிடைப்பதற்கும் இந்த முடிவின் காரணமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் காரணமாக பாதிப்பு ஏற்படாது என்பதை மாண்புமிகு இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து சில மாண்புமிகு உறுப்பினர்கள் முத்திரைத்தாள் தட்டுப்பாடு பற்றி சொன்னார்கள். குறிப்பாக நீலகிரி மாவட்டத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற திரு. கல்லன் அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும் இந்த விவரத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அண்மையிலே அரசு ஒரு ஆணையை வெளியிட்டு தமிழகம் முழுவதும் இருக்கின்ற சார்பதிவாளர்கள முத்திரைத்தாள் விற்பனையாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் தவிர்க்க முடியாத நிலைமையில் சார்பதிவாளரிடத்திலே முத்திரைத்தாள் கிடைக்கவில்லை என்றாலும் கூட பிரிவு 41, 42-ன் கீழ் ஆயிரம் ரூபாய் வரை ரொக்கப்பணம் பெற்றும் அதற்குமேல் உள்ள தொகைகளுக்கு கருவூலத்தில் பணம் செலுத்திய சீட்டுகளைப் பெற்றும் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டமைக்கு சான்றளிக்கும் அதிகாரம் சார்பதிவாளருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகவே முத்திரைத்தாள் பற்றாக்குறையால மக்கள் அல்லலுறும் வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு ஏதேனும் ஓரிரு இடங்களில் தவிர்க்க முடியாமல் பற்றாக்குறை தோற்றுவிக்கப்பட்டிருப்பதாக அரசிற்குத் தகவல் கிடைத்தால் உரிய நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்கு உதவுவோம் என்பதையும் அன்பாகவும் பணிவாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சென்ற கொள்கையினை அறிவிக்கும்போது ஒரு விவரத்தை இந்தப் பத்திரப் பதிவு முத்திரைத்தாள பற்றி இந்த கண்ணியம் மிக்க சபைக்குச் சொல்லி இருந்தேன். டாக்குமென்டரி ரைட்டர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கின்ற பிரச்சினை பற்றிச் சொல்லி இருந்தேன். ஆவணங்கள் எழுதுகிறவர்களுக்கு உரிமை வழங்குகின்ற பிரச்சினை பற்றி இதே மன்றத்திலே சென்ற ஆண்டு நான் எடுத்துச் சொல்லி இருந்தேன். கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் இந்த ஆவணங்கள் எழுதும் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் ஜனார்த்தனன் அவர்கள் கூட சென்ற ஆண்டு சொன்னார்கள். அப்படிப்பட்ட 50 ஆயிரம் பேர்களுடைய பிரச்சினைகளுக்கும் அவர்களுடைய நிரந்தரத் தன்மைக்கு ஏதும் குந்தகம் ஏற்படாத வகையிலே மற்றும் தகுதி உள்ளவர்களுக்கும் சிரமம் ஏதும் இல்லாத வகையிலே தமிழக அரசு முயற்சி எடுத்து வருகிறது. ஆவணம் எழுதுகின்றவர்களுக்கு உரிமம் வழங்கும் பொருட்டு பதிவு சட்டத்தில் உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன்படி விதிகள் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அநேகமாக சித்திரைத் திங்கள் முதல் நாள் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாளுக்குள் இவ்விதிகள் செயல்முறைக்குக் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விதிகளால் இன்று இத்தொழிலிலே உள்ளோர் பாதிக்கப் படாமல் இருக்க அரசு தனி விதிகளை ஏற்படுத்தி இருக்கிறது. ஏற்கனவே அந்தத் தொழிலில் தகுதியானவர்கள், நியாயமான வர்கள் இருந்தால் இவர்கள் பாதிக்கக்கூடாது என்பதற்கு எச்சரிக்கையாக தனி விதிகளை ஏற்படுத்தி இருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர் களுக்கு உரிய கட்டணம் செலுத்தியவுடன் உரிமம் வழங்கப்படும். கடந்த ஒரு ஆண்டாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், கல்வித் தகுதி உள்ளவர்கள் யாரையும் இதற்குரிய தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. மற்றவர்கள் பள்ளி இறுதித் தேர்வில் தேறியவர்களாக இருந்தால் அனுமதிக்கப்படுவர். இத் தேர்வில் தேறியவர்கள் 18 வயது நிரம்பப் பெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கும் உரிமம் வழங்கப்படும்.

ஆவணங்களை எழுதத் தெரியாதவர்கள் கையில் ஆவணங் களைக் கொடுத்து எழுதச் செய்வதால் நேரும் அல்லல்கள் அகலும், இந்த முயற்சியால என்று தமிழக அரசு கருதுகிறது.

பத்திரப் பதிவுத் துறையிலே 100 ஆண்டுகளாக செய்யாத பல சீர்திருத்தங்களை கடந்த 4 ஆண்டுகளிலே செய்திருக்கிறோம். இதையெல்லாம் கொள்கைக் குறிப்பிலே கோடிட்டுக், காட்டி இருக்கிறேன்.

பதவி உயர்வு என்பது மிகப் பெரிய அறைகூவலாகவே இருந்து வந்தது இத்துறையிலே. அந்தப் பதவி உயர்வு என்பது மிகச் சாதாரணமான மக்களுக்குக் கூடக் கிடைக்கிற வகையில் கடந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முயற்சியால் காரியங்கள் நடைபெற்றிருக்கிறது.

வேறொரு நடுத்தர மக்களைத் தவிக்கின்ற அவர்கள உள்ளத்தை வாட்டுகின்ற பிரச்னை சீட்டுப் பிரச்னை. இன்னைறக்கு சுதர்சன் சீட்டு நிதி கலைப்பும், கருடா சீட்டு நிறுவனத்தினுடைய வீழ்ச்சியும் பல சீட்டுநிதிகளுடைய மோசடி மிக்க செயல் முறைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இவை மக்களுக்குப் பெரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் இடர்களையும் விளைவித் திருக்கிறது.

சிறு சேமிப்புக்கு நல்லதொரு கருவியாக தமிழ்நாட்டிலே ஏழை நடுத்தர மக்கள் இச்சீட்டு நிறுவனங்களைக் கருதி முதலீடு செய்து அதனால் இழப்பிற்கு பலர் ஆளாகி இருக்கின்றனர். தமிழகத்தில் மட்டும் சுமார் 17,000-க்கு மேற்பட்ட சீட்டுக்கள் இன்றைய தினம் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன,



இப்பிரச்னையில் இரண்டு அம்சங்கள் தொக்கி நிற்கின்றன. சீட்டு நிறுவனங்களின் செயல் முறைகளைக் கட்டுப்படுத்துவது என்பது ஒன்று. இன்னொன்று மக்களின் நம்பிக்கைக்கு உரிய அரசு சீட்டு நிறுவனத்தைத் தோற்றுவிப்பது.

தற்போதுள்ள சீட்டு நிதிச் சட்டத்தின் கீழே சீட்டு நடத்து பவர் செய்கிற குற்றங்களுக்கு ரூ. 100 மட்டுமே அபராதம் விதித்திட இயலும் என்று சட்டத்திலே விதிக்கப்பட்டிருக்கிறது. இது சட்டத்திலே இருக்கிற பலகீனமான பகுதி. சட்டத்திலே இருக்கிற "விக்கஸ்ட் லிங்க்". ஆதலால் தண்டனையை கடுமையாக்கி சீட்டு நடத்த அனுமதிக்கும் விதிகளைத் திருத்தி அதிகக் கட்டுப்பாட்டை விதிக்கவும் தமிழக அரசு விரும்புகிறது. இதனால் மோசடிகள் குறையும். இதற்கான திருத்த வரைவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை நான் இந்த மாமன்றத் திற்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது அம்சம், அரசு நடத்தயிருக்கும் சீட்டு நிறுவனம். அது பதிவுற்று செயல்படத் தொடங்கும் நாள் தொலைவில் இலலை. நம்பிக்கையோடும், அச்சம் இன்றியும் பொது மக்கள் சீட்டிலே சேர இதனால் வாய்ப்பு ஏற்படும். சீட்டு நிதிக் கழகம் அரசினுடைய சார்பாக விரைவில் உருவாக்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன்.

எளியோருக்கு பல சலுகைகளை இந்த சட்டத்தினுடைய வாயிலாக நாங்கள நல்கி வருகிறோம். அவைகளைக் கொள் கைக் குறிப்பிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

இங்கே வெட்டுத் தீர்மானங்களின் வாயிலாகவும், பேசுகின்ற நேரத்திலும் மேலான பல கருத்துக்களை இளையபெருமாள் அவர்கள், சுந்தரம் அவர்கள், அருமை சகோதரர் என்.வி.என்.சோமு அவர்கள் மற்றும் உள்ள கன்னியம் மிக்க உறுப்பினர்கள் எல்லாம் பல விவரங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் மனத்திலே கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பால் வள மானியத்தைப்பற்றி இங்கே அனுபவம்மிக்க பல உறுப்பினர்கள், பால் வள வளர்ச்சிக்கு அனுபவபூர்வமாக நல்ல பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதில் குறிப்பாக இன்றையதினம், கூட்டுறவு சங்கங்கள் ஏறத்தாழ 4,841 இயங்கி வருகின்றன, என்ற விவரத்தை மாண்புமிகு உறுப் பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

இந்த நேரத்தில் ஒரு விவரத்தைச் சொல்வது என்னுடைய தார்மீக கடமை என்று கருதுகிறேன். 1976-வது ஆண்டு, நாங்கள்

பொறுப்புக்குவந்த ஆண்டு, மக்களுக்குத் தொடர்பு கிடடியபோது, 1977-வது ஆண்டு 2338 சங்கங்கள் இருந்தன. இப்போது 1982-வது ஆண்டு 4281 சங்கங்கள் இருக்கின்றன.

(இரவு 7-50)

1977-ல் 8.17 இலட்சம் உறுப்பினர்கள் இருந்தார்கள். இந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசின்முயற்சி காரணமாக 10,25,000 உறுப்பினர்கள் இன்று கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிறார்கள்.

பால் கொள்முதல் 4,33,000 லிட்டர் மட்டுமே 1977-ல் ப்ரொக்யூர் செய்யப்பட்டது. இன்றையதினம் 6,34,000 லிட்டர் என்ற வ கயில் கனிசமாக முன்னேறியிருக்கிறது.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இன்டக்ட்ரேடட் ரூரல் டெவலப்மென்ட் ப்ரோக்ராம்படி ஏறக்குறைய 46 லட்சம் ரூபாய் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கருவிகள், குவளைகள், ரசாயனப் பொருள்கள், சைக்கிள்கள், லாரிகள் முதலியவை வாங்க கடன் மூன்று ஆ டுகளாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இந்த ஆ டும் ஏறக்குறைய 500 கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்களும் மற்ற நண்பர்களும் பால்வள முதல் திட்டத்தைபற்றி தெளிவாகச் சொன்னார்கள். 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தத் திட்டம் 1981 ஆம் ஆண்டு முடிவுற்றது. ஏறத்தாழ பத்து ஆண்டு அந்தத் திட்டத்தின் காரணமாக தமிழ்நாட்டில் 1972 ஆம் ஆண்டு 46,000 லிட்டர் பால் மட்டுமே அன்றிருந்தது. இன்று 4 லட்சம் லிட்டர் என்று அது உயர்த்திருக்கிறது. பால் விற்பனை நாள் ஒன்றுக்கு 1972 ஆம் ஆண்டில் 81,000 லிட்டர் இருந்தது இன்று 36,00,000 லிட்டர் விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் 1972 ஆம் ஆண்டு 4,239 விவசாயிகள் மட்டும் இருந்தார்கள், இன்று 3 இலட்சம் விவசாயிகள் கூட்டுறவுத் துறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். முதல் பால்வள பெருக்குத் திட்டத்தின் விளைவாக இத்திட்டத்தின் காரணமாக அம்பத்தூர், ஈரோடு, சேலம் போன்ற இடங்களில், புதுப் பால் பண்ணைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பத்து ஆண்டுகளில்.

ஏற்கனவே 1972 ஆம் ஆண்டிற்கு முன்பு இந்த மாதவரம், மதுரை பால் பண்ணைகள் மூன்று மடங்கு விரிவுபடுத்தப்பட்டது.



சேலம், ஈரோடு, மதுரை போன்ற இடங்களில் பால் பவுடர் தொழிற்சாலைகள் இந்த மூன்று ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதைப்போலவே இந்தப் பத்தாண்டுகளில் சங்கராண்டபாளையம், சத்தியமங்கலம், சின்னசேலம், ஆம்பூர் விழுப்புரம், திருவண்ணாமலை போன்ற இடங்களில் குளிரூட்டும் நிலையங்கள் பத்து ஆண்டுகளில் 15 கோடி இதற்காக செலவு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் இன்று அடுத்த காலக்கட்டமாக இரண்டாவது கட்டமாக 46 கோடி முதலீட்டில் 4 இலட்சம் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம் அதை 11 இலட்சமாக ஆக்க இருக்கிறோம்.

அதேபோல் 3,60,000 லிட்டர் பால் விற்றுக்கொண்டிருக்கிறோம். அதை 10,80,000 ஆக விற்க இருக்கிறோம். மூன்று லட்சம் விவசாயிகள் முதல் பால்வள பெருக்குத்திட்டத்தில் பலன் பெற்றார்கள். இரண்டாவது பால்வளப் பெருக்குத் திட்டம் முடிகிற நேரத்தில் 1986 ஆண்டு முடிகிறபோது 46 கோடி அதற்காக செலவிடப்படுகிற சூழ்நிலையில் 13 இலட்சம் விவசாயிகள் அதனால் பயன் அடைவார்கள். பல இடங்களில் பண்ணைகள் தோன்றி இருக்கின்றன. சில்லிங் சென்டர்ஸ் தோன்றியிருக்கின்றன.

கோவையில் ஒரு புதிய பால் பண்ணை ஏற்படுத்தப்படும். ஈரோடு சேலம் வேலூர் மதுரை பண்ணையும் விரிவுபடுத்தப்படும் மதுரையில் ஒரு மாட்டுத் தீவனத் தொழிற்சாலையும் ஏற்படுத்தப்படும். ஆறு புதிய குளிரூட்டு நிலையங்கள் தமிழ்நாட்டில் இரண்டாவது பால்பெருக்கு திட்டத்தில் உருவாக்கப்படும்.

சென்னை நகரை பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமு அவர்களும், மற்ற உடன்பிறப்புகளும் ஒரு கருத்தை எடுத்துச்சொன்னார்கள். சென்னை நகரத்தில் பால்விற்பனை பற்றி குறிப்பிட்டார்கள். லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2.80 என்று விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் செப்டம்பர் மாதம் 30 பைசா உயர்த்தியிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு விவரத்தை சொல்வது என் கடமை. ஒரு லிட்டர் பால் ரூ. 2-80-க்கு விற்கப்படுகிறது என்று சொன்னார்கள். பால் உற்பத்தியாளர்கள் மத்தியில் இருந்து ரூ. 2.90-க்கு வாங்கப்படுகிறது. 2.90-க்கு வாங்கி 2.80-க்கு விற்கப்படுகிறது. அதுவும் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் விவசாயிகளுக்கும் பால்வள நிறுவனத்திற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 40 பைசா அவர்களுக்கு உயர்த்திக் கொடுக்கப்பட்டது. அந்த 40 பைசாவை நுகர்வோரிடமிருந்து வாங்கவில்லை. 30 காசுதான் வாங்கினோம். மீதி 10 காசை அரசாங்கம், புரட்சித் தலைவர் அவர்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டு அரசாங்கக் கருவூலத்திலிருந்து விவசாயிகளுக்குக் கொடுத்தார்கள்.

நகரத்திலே இருப்பவர்களிடம் பெறவில்லை. சென்னையிலே ஏறத்தாழ 3½ இலட்சம் லிட்டர்கள் இன்றைக்கு சுமார் 10 இலட்ச கன்சும்ர்கள் இந்தப் பாலை வாங்குகிறார்கள். அவர்களுடைய பொறுப்பிலே இதை விடவில்லை. அரசாங்கமே ஏற்றுக்கொண்டது என்பதை மீண்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல. ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்பதற்காக, ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மெட்ரோபாலிடன் சிடி என்று சொல்லக்கூடிய வகையில், சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி, பெங்களூர், ஹைதராபாத் ஆகிய 6 நகரங்களோடு அங்குள்ள நிலைமை எப்படியிருக்கிறது, எந்த அளவுக்கு கொழுப்புச் சத்து இருக்கிறது, ஒரு லிட்டருக்கு அவர்கள் எவ்வளவு வசூல் செய்கிறார்கள் என்றகுத்து மதிப்பீட்டை எண்ணிப் பார்க்கின்ற நிலையில் ஒரு விவரத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

ஹைதராபாத்— 3 சதவீதம் கொழுப்புச் சத்து, ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 3; பெங்களூரில் 3.5 சதவீகிதம் கொழுப்புச் சத்து,ஒரு லிட்டர் பாலின்விலை ரூ. 3; அதேபோல் கல்கத்தா 3 சதவீகிதம் கொழுப்புச் சத்து, ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 2-80; பம்பாயில் 4.5 சதவீகிதம் கொழுப்புச் சத்து, ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 3-30 என்ற நிலையிருக்கிறது. சென்னையில் விற்கப்படும் பாலின் கொழுப்புச் சத்து 4.5 சதவிகிதம் ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 2-80 தான். 6 நகரங்களிலே, இங்கேதான் பாலின் கொழுப்புச் சத்தும் அதிகமாக இருக்கிறது; அதன் விலையும் குறைவாக இருக்கிறது. அந்த அளவுக்கு இதற்காக ஒரு கோடி ரூபாய்............(குறுக்கீடு). அடுத்து, 1982—83 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே சொன்னதுபோல், பல வளர்ச்சி திட்டங்களைச் செய்து வருகிறோம், மேலும், இந்த வளர்ச்சி திட்டங்களை வேகப்படுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் இன்றைய தினம் அரசு சில முடிவுகளை எடுத்திருக்கிறது. குறிப்பாக திருநெல்வேலியில், ஒரு புதிய பால் பண்ணையைத் தோற்றுவிப்பதற்கான நாம் திட்டமிட்டிருக்கிறோம். செங்கோட்டைப் பகுதியில், நாங்குனேரியில் இரண்டு குளிர் பதனீட்டு நிலையங்களும், திருச்சியில் புதிய பால்பண்ணை ஒன்றும், புதுக்கோட்டையில் ஒரு குளிர்ப்பதன நிலையமும், பட்டுக்கோட்டையில் ஒரு குளிர்ப்பதன நிலையமும், சேத்தியாத்தோப்பில் 4 நடமாடும் கால்நடை மருத்துவமனைகளும், 500 விவசாய உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களும், தஞ்சை மற்றும் திருச்சியில் பிளாஸ்டிக் பைகளில் பால் விற்பனை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதை நான் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் செய்யாறில் ஒன்றுமில்லையா என்று பார்த்துக்



கொண்டிருக்கிறார். நான் பிளடட் ஏரியாவில் இவைகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த பிளடட் ஏரியாக்களில், 9 மாவட்டங்களில் நான் ஏற்கனவே சொன்னதைப் போல், இரண்டாவது பால் வளத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கியிருக்கிறோம். அதன் அடிப்படையில் பால் பண்ணைகள், கால்நடை தீவன ஆலைகள் போன்ற பெரும் திட்டங்களை அங்கே அளித்திருக்கிறோம். இவைகளை இரண்டாவது பால் வள திட்டத்தின்கீழ் அந்த ஏரியாக்களில் மேற்கொள்ளயிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சென்னையில், மாதவரம் பால் பண்ணையில் நடைபெற்ற தொழிலாளர்கள் பிரச்னை பற்றி பெருத்த உணர்வோடு மிகுந்த அக்கறையோடு அங்குள்ள நிலைமைகளைப் பற்றி பல அபிப்பிராயங்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, அதனுடைய அடிப்படைக் காரணங்களை மாண்புமிகு உறுப்பினா சுந்தரம் அவர்களும், மற்ற மாண்புமிகு, உறுப்பினர்களும் தெளிவாக உணர்ந்ததால், கடந்த 16 மாதங்களாக அவர்களுக்கு கிடைத்த தகவல்களையெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தார்கள். குறிப்பாக, மதுரை, சேலம், வேலூர், சென்னை ஆகிய இடங்களிலே பணியாற்றிய தொழிலாளர்கள் பலர் 1980 அக்டோபர், நவம்பரில் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களில் மிகப் பெரும்பாலோர் 1980 டிசம்பர் மாதம், 1981 ஜனவரி மாதம் ஆகிய மாதங்களில் வேலைக்குத் திரும்பினர்.

[இரவு 8-00]

அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை இது முதல் கால கட்டம். சென்னையைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் வேலைக்குத் திரும்பவில்லை. அவர்களைப் பற்றிய சில விவரங்களைச் சொல்லக் கட்மைப்பட்டிருக்கிறேன். 31ஆம் தேதி அன்று அடையாள மறியல் என்று அறிவித்தார்கள். பிறகு 1—11—80 அன்று அதை ஒத்தி வைப்பதாகச் சொன்னார்கள். முதலிலே 31 ஆம் தேதி அடையாள மறியல் என்று சொன்னார்கள். பிறகு அதை ஒத்தி வைப்பதாகச் தாகத் தெரிவித்து விட்டார்கள். பின்னர் தொழிலாளர் நல ஆணையாளரோடு பேச்சு வார்த்தை 18—11—1980 அன்று நடைபெற்றது. அடுத்த பேச்சு வார்த்தை 24—11—1980 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கிடையில் மேற்கூறிய சங்கத்தினர் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமலே 19—11—80 அன்று திடீரென்று வேலை நிறுத்தத்திலே இறங்கினர்,

அவர்கள் 1. நோட்டீஸ் கொடுக்கவில்லை. 2. சமரச பேச்சு வார்த்தையின் போது வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். 3 இந்நிறுவனம் அத்தியாவசிய சேவை செய்யும் நிறுவனமாக கருதப்படுவதால் வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோத நடவடிக்கையாகும். பேச்சு வார்த்தைக்குப் பிறகு பல நேரங்களில் பலர் வேலைக்குத் திரும்புவதற்கு இணங்கியதால் அவர்கள் மீது நடவடிக்கையின்றி அவர்கள் எல்லாம் திரும்ப வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இங்கே கருத்து தெரிவித்தபோது ஆயிரம் தொழிலாளர்கள், ஆயிரம் தொழிலாளர்கள் என்று சொல்கிறார்களே அவர்கள் நிரந்தரத் தொழிலாளர்கள் பார்ட் டைம் ஓர்க்கர்ஸ். பகுதிநேர ஊழியர்கள் உள்பட இருந்தார்கள். இரண்டு தரப்பினரும் வேலைக்கு திரும்பவே இல்லை. ஒரு ஆண்டுக்காலமாக வேலைக்குத் திரும்பவில்லை என்ற காரணத்தினால் அவர்கள் அவர்களாகவே வேலையை விட்டு விட்டார்கள். என்று நிர்வாகம் கருதியது. 15-2-82 அன்று அவர்கள் வேலைக்குத் திரும்புவதாக அறிவித்தார்கள். ஒன்றேகால் ஆண்டிற்குப் பிறகு வேலை அளிக்க இயலாது என்று நிர்வாகம் அறிவித்தது. அதற்குப் பிறகு அவர்கள் உயர்நீதி மன்றத்திலே மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். அதை அனுமதிக்கக்கூடாது என்று ஒரு புதிய மனுவை இவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இரு தரப்பினரும் தீர்ப்பிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அரசைப் பொறுத்த வரையில் எந்தக் கருத்தையும் கூறுவது உகந்ததல்ல என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பல கருத்துக்களைப் பொறுத்த வரையில் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். என்பதைத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.'

திரு பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவர் அவர்களே, மற்ற நகரங்களிலே இருக்கின்ற கொழுப்பு 4·5 இருந்தாலும் விலை குறைவாகத்தான் பெறுகிறார்கள். ஆகவே அந்த விவசாயிகளுக்கு உரிய விலையைக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா? கன்ஸ்யூமர்களுக்கு நட்டத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆகவே லீன் சீசனாக இருப்பதால் அரசு விலை யேற்றத்தை அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை நான் சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்து பேசி ஆவன செய்கிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மாதவரம் பால் பண்ணையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பெற்ற 1500 தொழிலாளர்களைப் பற்றிச் சொல்லி நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற காரணத்தினாலே அதைப்பற்றி எந்த முடிவையும் எடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றை தெளிவாக அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். இறுதியாக பேச்சு வார்த்தையிலே அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு லேபர் கமிஷனர் கலந்து கொண்டு ஒரு சமரச முடிவுக்கு வந்து அதை அமல் நடத்துவதாக ஒப்புக்கொண்டு நீங்கள் உத்திரவு போட்டுவிட்டு, போட்ட உத்திரவிற்கு மாறாக..

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்தை தொடர்ந்து தொய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் முடிந்த முடிவாக என்றைக்குமே சொல்லவில்லை. ஒரு நாள் அல்ல பல நாட்கள், பல நேரங்களில் பல பிரச்சினைகள் பற்றி பேசியிருக்கிறோம். முடிந்த முடிவாக எதுவும் என் சார்பாகச் சொல்லவில்லை. அதைத் திரும்பத் திரும்ப சொல்லி அவர்கள் உறுதிப்படுத்த வேண்டாமென்று பணிவன்போடு தெளிவாக மாண்புமிகு உறுப்பினருக்கு வற்புறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் ஒரு தகவலைக் கொடுக்கிறார், ஒப்பந்தமே இருக்கிறது.................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டாம். தாங்கள் அமருங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து பதிவு செய்வதற்கு பத்திரங்கள் கேரள மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. என்று சென்ற வருடத்திலேயே இந்த அவையிலும், மேலவையிலும் தெளிவாக சொல்லப்பட்டதற்கு பிறகும் இன்னும் அந்த நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்கக் கூடிய முறையிலே அந்த கட்டணத்தை குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏதாவது உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களுடைய உணர்வுகளை நான் மனதிலே கொண்டு ஆவன செய்ய முயல்கிறேன்.

திரு. என். வி.என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1500 தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்கு சென்று இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் 1500 பேர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வதாக உத்தர வாதம் அளித்தால் நீதிமன்றத்திலேயிருந்து வாபஸ் பெற தயாராக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

(பதில் இல்லை).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

இ. கோரிக்கை எண் 5.—முத்திரைத்தாள்கள்— நிர்வாகம்.

திரு. சு. பாலன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 96,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

ஈ. கோரிக்கை எண். 6.—பத்திரப் பதிவு.

திருவாளர்கள் சு. பாலன், கே. எம். தங்கமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி-"மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு" என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,03,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



உ. கோரிக்கை எண். 10-பால் வழங்கு திட்டங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம். அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி-"மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்" என்ற தலைப்பின்கீழ் ரூ.86,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 20—3—1982 ஆம் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 8-07 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

121. 1982—83 ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் பற்றிய செயல் முறைத்திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

122. கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக்குறிப்பு, மார்ச் 1982 (தமிழ், ஆங்கிலம்.]

123. கோரிக்கை எண். 10—பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

124. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் செயலாக்கம் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

125. ''மார்ச் 1982-ல் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்'' என்கிற சிறு புத்தகம்.

126. கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள் நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

127. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெரும் தொழில்கள்) 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

128. தொழில் கொள்கையும் திட்டங்களும் (கிராமத் தொழில்களும்) சிறு தொழில்களும் 1982–83 (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்புகள்.

(702ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 24—தொழில்கள்.

கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

தொழில்துறை கொள்கை.

தொழில் கொள்கையும் திட்டங்களும்.

(பெரும் தொழில்கள்)

1882—83

**வேலை** வாய்ப்பினை பெருமளவில் உருவாக்கவும் நமது மாநிலத்தில் ஒரு பகுதியில் தொழில்கள் பெருகியும், மற்றொரு பகுதியில் குறைந்தும் இருப்பதைப் போக்கி, எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் சீராக அமைந்திடவும் நடவடிக்கை எடுப்பது தான் தமிழ்நாடு அரசு பின்பற்றிவரும் தொழில்துறைக் கொள்கையின் இரு நோக்கங்கள் ஆகும். அதே நேரத்தில் சிறு தொழில்கள் துறையோடு தொடர்பை ஏற்படுத்தவும் இன்றியமையாத் துறைகளின் உற்பத்திக்கும், முக்கியத் துறைகளின் உற்பத்திக்கும் உதவி செய்யவும் இம்மாநிலத்தில் தொழிலுக்கான அடிப்படை வசதிகளை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் பெரிய, நடுத்தர தொழில்களும் இணைந்து சீரான முறையில் வளர்ச்சி பெறச் செய்வதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. திட்டமிட்ட வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பார்த்தால், பெருந் தொழில்களும், சிறு தொழில்களும் ஒன்றுக்கொன்று துணையாக இயங்கும் வகையில் மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய அளவிற்கு அவற்றை முடுக்கி விடுவதிலும் பெருந் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் தனியார் தொழில் முனைவர்களின் திறனை ஊக்குவிப்பதில் அரசு அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. ஆனால், சமூக நீதியை நிலைநாட்டவும், தொழில் நுட்ப உத்திகளைப் புதிதாகக் கண்டு பிடிக்கவும், நலம் பயக்கும் அளவிற்கு வருமான வாய்ப்புக்களை பகிர்ந்தளிக்கவும் அவசியமாயிருக்கிற உற்பத்திப் பிரிவுகளில் மட்டுமே அரசு நேரடியாகத் தலையிடும். அரசு உள்ளூர் வள வாயில்கள், மூலப் பொருள்கள், மனித ஆற்றல் போன்ற வகையில் இம்மாநிலத்தில் கிடைக்கக்கூடிய இயற்கை வள வாயில்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும்,

தனித்தியங்க வல்ல திட்டங்கள் எவை எவை என்பதைக் கண்டறிந்து கட்டுப்படியாகும் திட்டங்களைத் தீட்டி, அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல், செயலூக்கம் அளித்தல், கடன் வசதி, ஏனைய இடுபொருட்கள் ஆகியவற்றை வழங்குதல், பயிற்சி வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல், சிறு தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல் போன்றவற்றில் உதவி செய்வதன் வாயிலாக அவற்றை உற்பத்தியைப் பெருக்கும் வளங்களாக மாற்றிட வேண்டும்.

2. ஒரு மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, மத்திய அரசுத் துறைத் திட்டங்களில் செயல்படும் முதலீடுகளின் அளவைப் பொறுத்து அமைகிறது. தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்துள்ள முதலீடு கடந்த சிலஆண்டுகளில் பெரிதும் குறைந்துள்ளது. அதிகமான பொதுத்துறைத் திட்டங்களை நம் மாநிலத்தில் ஏற்படுத்த மாநிலஅரசு தீவிரமாக முயன்று வருகிறது. ''பெல்'' நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்றை இராணிப்பேட்டையில் தொடங்குவதற்கு மத்திய அரசு அனுமதியளிக்க முன் வந்துள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர சோதனைப் பிரிவு ஒன்றையும் நிறுவ மத்திய அரசு அனுமதியளிக்க முன் வந்துள்ளது. இனிவரும் ஆண்டுகளில் இம்மாநிலத்திற்கு இப்படிப்பட்டத் திட்டங்கள் பலவற்றிற்கு அனுமதி வழங்கப்படும் என்று நம்பப் படுகிறது.

3. பெரிய, நடுத்தரத் தொழில்களில் மேம்பாட்டிலும், வளர்ச்சியிலும் மாநில அரசுக்குள்ள பெரும் பொறுப்பு, தனியார் துறையில் முறையான வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள், நிதி உதவி, ஏனைய உதவிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதேயாகும். இக் குறிக்கோளை எய்துவதற்காக பல கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கழகங்கள் அரசிடமிருந்துத் தேவையான நிதி உதவியும், நிர்வாக உதவியும் பெறுவதுடன் இப்பணிகளுக்காக நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்து பெருமளவிற்கு நிதி உதவியும் பெறுகின்றன. போர்த்திற நோக்கங் கொண்ட காரணங்கள் சிலவற்றிற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடும்படி சில கழகங்களுக்கு கட்டளை இடப்பட்டுள்ளது.

4. பொதுத்துறையில் பெரிய, நடுத்தர தொழிற்சாலைகள் சிலவற்றை அமைத்தும் நிருவகிக்கும் பணியும் தனியார் தொழில் முனைவோர்களின் உடனுழைப்புடன் கூட்டுத்துறையில் தொழிற் பிரிவுகளை உருவாக்கும் பணியும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் (டிட்கோ) ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது, அரக்கோணத்தில் உருக்காலை ஒன்றையும், ஆலங்குளம், அரியலூர்



ஆகிய இடங்களில் சிமெண்ட் தொழிற்சாலைகளையும் டிட்கோ நிறுவனம் நிருவகித்து வருகிறது. இப்பிரிவுகளை விரிவு படுத்துவதோடு வெடி மருந்து தயாரிக்கும் திட்டம் உட்பட பொதுத் துறையில் புதிய திட்டங்கள் சிலவற்றை நிறுவி டிட்கோ நிறுவனம் செம்மையாக செயல்பட இருக்கிறது. அரக்கோணத்தில் உள்ள உருக்கு உருளை ஆலையில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் உருக்குத் தகடுகள், கம்பிகள் தயாரிக்கும் ஆலையும் நிறுவுவதும் மேற்படி பணியில் அடங்கும்.

5. தமிழ்நாடு தொழில் ஆக்கத் கழகத்திற்கு (சிப்காட்) தனியார் துறையில் பெரிய நடுத்தர தொழில்களை மேம்படுத்துதல், நமது மாநிலத்தில் போதிய அளவு வளர்ச்சி அடையாத பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைக்கும் பணியை விரைவு படுத்துதல் ஆகிய இரு பொறுப்புக்கள் உள்ளன. இக்கழகம் ஊக்கத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்துகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிப்பதோடு தொழில் முனைவோருக்கு பல்வேறு துணைப் பணிகளையும் செய்து தருகிறது. மாநிலத்தில் பல இடங்களில் தொழில் மையங்களை உருவாக்கி எளிய நிபந்தனைகளின் பேரில் தொழிற்சாலைகளுக்கு மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் கிடைக்க வகை செய்கிறது. இந்த ஊக்கத் திட்டங்களில் மத்திய அரசின் உதவித் தொகையும் மாநில அரசு வழங்கும் வட்டி இல்லா விற்பனை வரிக்கடனும் அடங்கும். மாநிலத்தில் தொழில்கள் விரைந்து வளர்ச்சி பெற மேலும் பல புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு தொழில் முனைவோரைக் கவரும் வகையில் தனித் திட்டங்களும் ஊக்கத் திட்டங்களும் அண்மையில் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழில் வளர்ச்சிக்கு தனிச் சலுகைகள் பலவற்றையும் அரசு அறிவித்துள்ளது. தொழிற்சாலைகளுக்கு தற்போது அனுமதித்துள்ள வட்டியில்லா விற்பனை வரிக்கடனுக்காக உச்சவரம்பினை ரூபாய் 50 இலட்சத்திலிருந்து ரூபாய் 1 கோடியாக உயர்த்தியுள்ளது. கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் தொழிற் பேட்டைகள் உருவாகி வருகின்றன. தூத்துக்குடி, கும்மிடிபூண்டி ஆகிய இடங்களில் உள்ள புதிய தொழிற் பிரிவுகள் முதல் ஐந்தாண்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு பெறும். மின் அணுவியல், மருந்துகள், மோட்டார் வண்டி துறைத் தொழில்கள் ஆகிய துறைகளில் புதிய தொழிற்களை உருவாக்க உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

6. 1949-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டி.ஐ.ஐ.சி.) தமிழ்நாட்டில் மாநில நிதி உதவி கழகமாகச் செயல்பட்டு வருகிறது. நடுத்தரக்கால கடன்கள் வழங்குதல், இயந்திரங்கள் வாங்கியதற்கான தொகையை காலம்

தாழ்த்திச் செலுத்த உத்திரவாதம் அளித்தல், பொது மக்கள் வாங்காத மூலதனப் பங்குகளையும், முன்னுரிமைப் பங்குகளையும் வாங்குதல் ஆகிய வழிகளில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தவும் ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவு படுத்தி நவீனப்படுத்தவும் இது உதவுகிறது. மேலும், தொழில் நுட்ப வல்லுநர்கள், கிராமப்புற மருத்துவர்கள், போக்குவரத்துப் பணியை நடத்துபவர்கள், ஆகியோருக்கும், ஓட்டல்களுக்கும் குறைந்த வட்டிக் கடன் திட்டங்கள் மூலம் நிதி உதவி வழங்குதல், தொழில் நுட்ப வினைஞர் தொழிலில் முனைவோருக்கான திட்டங்கள் முதலியவற்றின் கீழ் கடனுதவி அளித்தல் போன்ற தனித் திட்டங்களையும் இக்கழகம் செயல்படுத்தி வருகிறது. அதிக அளவில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கக்கூடியனவும், குறிப்பாக பின்தங்கிய, கிராமப் புறப் பகுதிகளில் அமைக்கப்படுவனவும் சிறப்பாக சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் நலிந்துள்ளவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டவையுமானத் தொழில்களுக்கு முன்னுரிமை அளித்து, வருங்காலத்தில், இவற்றிற்காக அதிக உதவியளிக்க இக்கழகம் கருதியுள்ளது.

7. நீண்ட கடற்கரையும், கதிரவனின் ஒளியையும் பெருமளவில் பெரும் பேறுபெற்றுள்ள தமிழ்நாடு, உப்பு உற்பத்தியில் நாட்டிலேயே இரண்டாம் இடத்தை வகிக்கிறது. உப்புத் தொழில் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு, அளிக்கும் தொழில்களில் ஒன்றாகும். இதனால், கடற்கரையிலோ மாவட்டங்களிலோ உள்ள உழவுத் தொழிலாளர்களுக்கு அந்தந்தக் காலங்களில் வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. உப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களை நிறுவுவதற்கு ஊக்கமளிப்பதிலும் மாநில அரசுக்கு தமிழ்நாடு உப்பு—உப்பு சார்ந்த இரசாயனங்கள் வாரியம் ஆலோசன நல்கி வழங்குகிறது. அண்மையில் பொதுத் துறை நிறுவனமாக அமைக்கப்பட்ட உப்பு கழகத்திடம், புதுப் புது இடங்களில் உப்பளங்கள் தொடங்குதல் உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களை ஏற்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது இக்கழகம், இராமநாதபுரம் மாவட்டத்தில் மறையூர் வாலிநோக்கம் என்னுமிடத்தில் ஒன்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் அரவக்காடு—வடக்காடு என்னுமிடத்தில் ஒன்றுமாக இரு பெரும் உப்பளத் திட்டங்களை தொடங்கியுள்ளது. இக்கழகம் புதிய இடங்களில் உப்பு உற்பத்தியை தொடங்கி சிறு உற்பத்தியாளர்களுக்கு நிதி உதவியும் விற்பனை வசதியும் செய்து கொடுக்கும். கடல் இரசாயனங்கள் தயாரிப்புக்கான தொழிற்சாலைகளை நிறுவவும் நடவடிக்கை எடுக்கும்.

8. சர்க்கரைத் தொழில், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும். கிராமப் பொருளாதாரத்தில் இது



முக்கிய அங்கம் வகிக்கிறது. சர்க்கரைத் துறை இயக்குநர் அலுவலகமும், பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்காக 1974 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சர்க்கரை கழகமும் 1982–83 ஆம் ஆண்டிலும் அடுத்து வரும் ஆண்டுகளிலும் பல புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்புகளும் உள்ளன. பொதுத் துறையும் கூட்டுறவுத் துறையும் சர்க்கரை ஆலைகளை அமைக்க முன் வராவிட்டால் கரும்பு கிடைக்கக்கூடிய பகுதிகளில் தற்போது சர்க்கரை ஆலைகள் இருப்பின் அவற்றின் நலனுக்கு குந்தகம் விளைவிக்காமல் சர்க்கரை ஆலைகளை புதிதாக அமைக்கத் தனியார் துறையினருக்கு ஊக்கமளிக்கலாம் என்று அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இந்த வகையில் சர்க்கரை ஆலை நிறுவ அனுமதி கேட்டு மூன்று விண்ணப்பங்கள் வந்தன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

9. தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் (டேஸல்) திருமழிசையில் இயந்திர செங்கற்களை ஒன்றையும் சென்னையிலும் விருத்தாசலத்திலும் மட்பாண்டப் பிரிவுகளையும் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் தனது தொழிற் பிரிவுகளில் உற்பத்தியை பெருக்குவதற்கான திட்டங்களில் கவனம் செலுத்தி கிராமப் புறங்களில் குயவர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் உதவுவதற்கான திட்டங்களை மேற்கொள்ளும்.

10. இம்மாநிலத்தில் மின்னணுத் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் அரசானது தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்தை அமைத்தது. பொதுத்துறையிலும், கூட்டுத் துறையிலும் நவீன மின்னணுத் தொழிற்சாலைகளை அமைக்கும் பொறுப்பை இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் தொலைகாட்சி பெட்டிகள், எலெக்ராலிட்டிக் கெப்பாசிட்டர்கள் முதலியன தயாரிக்க தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ரெசிஸ்டர்கள் உற்பத்தி செய்தல், கதிர் மின் கருவிகளை உற்பத்தி செய்தல், முதலான கூட்டுத் துறை திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் மேலும் பல மின்னணுத் தொழிற்சாலைகளை அமைக்க ஊக்கமளிக்கும் வகையில் இம்மாநிலம் முழுவதும் அமைக்கப்படும் புதிய மின்னணுத் தொழிற்சாலைகளுக்கு " மாநில மானியத் திட்டத்தை " அரசு அறிவித்துள்ளது.

11. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புகலூரில், ஆண்டுக்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதங்களையும் 40,000 டன் எழுது தாள்களையும் அச்சிடுவதற்கான தாள்களையும் உற்பத்தி செய்ய ரூ. 50 கோடி அனுமதி பெற்ற பங்கு மூலதனத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு சுமார் 190 கோடி ரூபாய் நடை மூலதனத்தையும் சேர்த்து செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு, இந்திய நிதி உதவி நிறுவனங்கள், வங்கிகள், உலக வங்கி ஆகியவை நிதி உதவி செய்யும். இத்திட்டத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் வழங்க உலக வங்கி ஒப்புக் கொண்டுள்ளது. இதற்காக உலக வங்கியுடனும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியுடனும் இந்த நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டு அதற்கான பத்திரங்களில் கையெழுத்திட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகலூரில் அமைய இருக்கும் இத்திட்டம் நாட்டில் ஒரு புதுவகையான தொழில் நுட்பவியலுக்கு முன்னோடியாக அமையும். இது தற்போது சர்க்கரை ஆலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தும்.

12. மாநிலத்தில் கனிம தொழில் வளர்ச்சியில் அரசு தனிக் கவனம் செலுத்தும். சேலத்தில் உள்ள மாக்னசைட் கனிமங்கள் சிலவற்றை நடத்துவதற்காக 1979-ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு மாக்னைட் நிறுவனம் ( Tanmag ) கனிம வேலைகளை விரிவாக்கியும் கரிந்த மாக்னைட் ( Dead Burnt Magnesite) உற்பத்திக்கான ஒரு தொழிற் பிரிவு ஒன்றை ரூ. 4.93 கோடி செலவில் ஏற்படுத்தியும் தனது பணியை விரிவு படுத்தும். தற்போது கரும்பாறைகளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யும் தமிழ்நாடு கனிம நிறுவனம், கரும்பாறைகளை மெருகேற்றும் நவீன தொழிற்சாலை ஒன்றை நிறுவும். இம்மாநிலத்தில் உள்ள கிராபைட் படிவங்களை வெட்டி சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றையும் இந்நிறுவனம் நிறுவ உத்தேசித்துள்ளது.

### மத்திய அரசுத் துறைத் திட்டங்கள்.

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த முக்கிய அம்சங்களும் எதிர்காலத்தில் அவற்றை விரிவு படுத்த மத்திய அரசு என்னென்ன செயற் குறிப்புகள் வைத்துள்ளது என்பனவெல்லாம், பின்வரும் பத்திகளில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன :—

### சேலம் உருக்காலை.

மத்திய அரசு நிறுவனமான ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியாவின் ஒரு பிரிவுதான் சேலம் உருக்காலை. வாங்கப்பட்ட உருக்கு பட்டைகளை கொண்டு முதல் கட்டமாக இவ்வுருக்காலை, திட்டமிட்டபடி 13–9–1981-ல் உற்பத்தியைத் தொடங்கியது. முதலில் இவ்வுருக்காலை எளிதில் துருப்பிடிக்காத உருக்கு எவர் சில்வர் கம்பிச் சுருள்கள், தகடுகள் ஆகியவற்றை ஆண்டுக்கு 32,000 டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்டிருந்தது.



1981–82 ஆம் நிதி ஆண்டில் நல்ல தரமான, துருப் பிடிக்காத உருக்குக் கம்பிச் சுருள்கள், தகடுகள் சுமார் 3,200 டன் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சேலம் உருக்காலையில் உற்பத்தியான பொருள்கள் ஏற்கெனவே அங்காடியில் விலைக்கு வந்துள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட பொருள் போன்று தரம் வாய்ந்த பொருளாக இருக்கிறது என அதனை வாங்குபவர்கள் பாராட்டுகின்றனர். 1982–83-ல் நேர்த்தியான உருக்குக் கம்பிச் சுருள்கள் தகடுகள், 11,000 டன் உற்பத்தி செய்யப்படக்கூடும்.

இவ்வுருக்காலை அமைக்கப்படும் பணி மும்முரமாக நடைபெற்று வந்தபோது சுமார் 4,000 முதல் 6,000 தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். பயிற்சி பெறுவோர் உட்பட, சுமார் 1,000 தொழிலாளர்கள் பணியாளர் பட்டியலில் உள்ளனர். அவர்கள், உருக்காலையின் செயல்முறை, பராமரிப்பு, பொது நிர்வாகப் பணி, கட்டுமானப்பணி, ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். முதல் கட்டப் பணிக்கு சுமார் 1,200 பேர் அமர்த்தப்பட்டுள்ளதாக இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது. நிர்வாகப் பணி நீங்கலாக மற்றெல்லாப் பணிகளுக்கும், சேலத்திலுள்ள வேலை வாய்ப்பகம் மூலம் ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உருக்காலைக்கு அருகாமையில் 9.6 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நவீன நகரியம் ஒன்று விரைவாக உருவாகி வருகிறது. இந்த உருக்காலை அமைப்பின் முதல் கட்டமாக, 785 வீடுகள் கட்டுவதென்று திட்டமிடப்பட்டிருந்தது. 293 வீடுகள் கட்டுவது, 25 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனை, நல நிலையம், தொடக்கப்பள்ளி ஆகியவற்றை அமைப்பது போன்ற பொதுவான வசதிகள், ஏனைய வெளியிட வசதிகள் செய்து கொடுப்பது ஆகியவை முதலில் மேற்கொள்ளப்பட்டன. நகரிய அமைப்பின் முதல் கட்டப் பணி விரைவில் முடிக்கப் பெறும் ; எஞ்சிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேலம் உருக்காலைத் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு மூலதனச் செலவாக மொத்தம் 167.51 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது ; அதில், 1981 டிசம்பர் வரை, 142.9 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்த உருக்காலையில் சுய உற்பத்தித் திறனை உயரளவு பயன்படுத்திக் கொள்வதற்காக 42.8 கோடி ரூபாய் முதலீட்டை கொண்டு, உருக்கிக் குளிர வைக்கும் முறையில் உற்பத்தி திறனை இரு மடங்காக்கும் திட்டமொன்று, மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 14–11–1956-இல் அமைக்கப்பட்டது. இது பல தொழிற்சாலைகள் ஒருங்கே அமைந்துள்ள ஒரு தொழிற்பகுதியாகும்.

| | |
|---|---|
| (அ) திறந்த வெளி பழுப்பு நிலக்கரி சுரங்கம். | ஆண்டுக்கு 6.5 மில்லியன டன். |
| (ஆ) அனல்மின் நிலையம் .. | 600 மெகாவாட். |
| (இ) இரசாயன ஆலை .. | ஆண்டுக்கு 1,52,000 டன் யூரியா. |
| (ஈ) நிலக்கரி கட்டி தயாரிப்பு கரிம ஆலை. | ஆண்டுக்கு 3,27,000 டன் லீகோ. |
| (உ) களிமண் சுத்திகரிப்பு ஆலை. | ஆண்டுக்கு 6,000 டன் களி மண். |

பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரியானது, அனல் மின் நிலையத்திற்கும், பி.சி. ஆலைகளுக்கும் இரசாயன உரத் தொழிற்சாலைகளுக்கும் நிலக்கரிக் கட்டி தயாரிப்பு— கரிம ஆலைக்கும் தேவையான நீராவியை, உற்பத்தி செய்யவும் மூலப் பொருளாகப் பயன் படுகிறது. அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின் சக்தியானது, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மின் சக்தித் தேவையை நிறைவு செய்த பிறகு தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் சக்தி வழங்கு அமைப்புக்குக் கொண்டு செல்லப்படுகிறது. களிமண் சுத்திகரிப்பு ஆலையானது, இச்சுரங்கத்தில் வெட்டியெடுக்கும் வெள்ளைக் களிமண்ணைப் பதப்படுத்தி, அதில் ஒரு பகுதியை அறைவை செய்து ஆலைகளில் பயன் படுத்துவதற்கென விற்பனை செய்கிறது. தொழிற்சாலைக்குத் தேவைப்படும் பதப்படுத்தப் பட்ட எரிபொருளான பழுப்பு நிலக்கரியும் (லிக்கோ) கல்கரியும் (கோக்) இந்நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றன.

பழுப்பு நிலக்கரிக் கட்டி தயாரிப்பு கரிம ஆலையைச் சேர்ந்த தார்ப் பொருள் உற்பத்திப் பிரிவிலிருந்து கீழ்காணும் துணைப் பொருள்களும் கிடைக்கின்றன,



### நிறுவனத் திறன்.

| | | |
|---|---|---|
| 1. தார் | .. .. .. | ஆண்டுக்கு 49,100 டன். |
| 2. நியூட்ரல் எண்ணெய் | ... | ஆண்டுக்கு 4,820 டன். |
| 3. கார்பாலிக் அமிலம் | .. | ஆண்டுக்கு 1,470 டன். |
| 4. ஆர்தோ கிரிசல் | .. .. | ஆண்டுக்கு 200 டன். |
| 5. எம். பி. கிரிசல் | .. .. | ஆண்டுக்கு 990 டன். |
| 6. ஸைலினால் | .. .. | ஆண்டுக்கு 220 டன். |
| 7. எம். வி. பினால் | .. .. | ஆண்டுக்கு 480 டன். |

மூலதன முதலீடு (31–12–1981) நிலவரப்படி :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| பங்குகள் .. .. .. .. .. | 35,140.22 |
| மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் .. | 5,394.17 |
| தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன் .. | 78.89 |

31–12–1981 நிலவரப்படி வேலை வாய்ப்புகள் :—

| | பேர்கள். |
|---|---|
| முறையான பணியாளர்கள் .. .. | 8,880 |
| தொழிலாளர்கள் .. ... .. .. | 10,047 |
| மொத்தம் .. | 18,927 |

தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களும் இதில் அடங்குவர்.

நடப்பாண்டுச் சாதனையும் அடுத்த ஆண்டுத் திட்டமும்.

| பொருள். (1) | 1981 கணக்குகள். அளவு. (2) | 1981 கணக்குகள். மதிப்பு. (3) (ரூபாய் லட்சத்தில்.) | 1982 திட்டம். அளவு. (4) | 1982 திட்டம். மதிப்பு. (5) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1. பழுப்பு நிலக்கரி .. .. | 55.69 இலட்சம் டன். | 5,607.37 | 55.98 இலட்சம் டன். | 5,536.49 |
| 2. மின்சக்தி— | | | | |
| (அ) பழுப்பு நிலக்கரி மூலம் .. | 2,668 மில்லியன் யூனிட். | 6,448.83 | 2,790 | 6,757.08 |
| (ஆ) எரி எண்ணெய் மூலம் .. | 206 மில்லியன் யூனிட். | 1,768.99 | .. | .. |
| 3. யூரியா .. .. .. | 1,18,969 டன். | 3,188.20 | 1,08,500 | 2,927.33 |
| 4. லீக்கோ .. .. | 1,18,505 டன். | 604.08 | 1,23,500 | 759.53 |
| 5. சுத்திகரிக்கப்பட்ட களிமண் (டன்னில்.) | 2,660 டன். | 10.89 | 2,975 | 12.50 |
| 6. பி.வி. களிமண் .. .. | 229 டன். | 1.12 | 500 | 2.63 |
| | | 17,629.48 | | 15,995.56 |



விரிவுபடுத்தும் திட்டங்கள்—

கீழ்க்காணும் புதிய திட்டங்கள் தொடர்பான பணி மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகிறது :

(அ) ஆண்டுக்கு 4.7 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் வகையில் இரண்டாம் சுரங்கம் வெட்டுதல்.

(ஆ) 630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாம் அனல் மின் நிலையம் அமைத்தல்.

இரண்டாம் சுரங்கம்—

சுரங்கம் தோண்டுவதற்குரிய சிறப்பு வகைச் சாதனங்களின் துணைப் பாகங்களுக்கு முன்பு தேவைக் குறிப்புகள் கொடுக்கப்பட்டன. அவை இப்பொழுது சுரங்கம் தோண்டுமிடத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன.

நிலக்கரி பரப்புச் சாதனங்கள்—

நிலக்கரியை எடுத்துச் செல்லும் சாதனச் சட்டங்களை நிறுவுதல் முதலிய பணிகள் நடைபெற்று வருகின்றன. பொருள்களைக் கொட்டும் இயந்திரம், பரம்பு பொறிகள், மண்வாரி இயந்திரங்கள் துணை வரப்பெற்று சுரங்கம் தோண்டுமிடத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முதல் சுரங்கம் தோண்டுவதற்குரிய நவீன சாதனம் அமைப்பதற்கு மேம்பாட்டுப் பணிகள் நடந்தேறி வருகின்றன. பொருள்களை கொட்டி வைக்கும் இடத்திற்கும், இரண்டாம் சுரங்கத்தையும், இரண்டாம் அனல் மின் நிலையத்தையும் இணைக்கும் தாழ்வாரத்திற்கும் வேண்டிய நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்டு விட்டன.

இரண்டாம் அனல் மின் நிலையம் :—

ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறனுள்ள நீராவி மூலம் மின் உற்பத்தி செய்யும் மூன்று இயந்திரங்களையும் அவை தொடர்பான துணைப் பாகங்களையும் வழங்கி, நிறுவுவதற்கான ஒப்பந்தங்கள் அங்கேரியிலுள்ள திருவாளர்கள் டிரான்ஸெலக்ட்ரோ நிறுவனத்திற்கும் இந்தியாவிலுள்ள திருவாளர்கள் வினய் இன்ஜினியரிங் கம்பெனிக்கும் சூழல் தட்டு மின் உற்பத்தி இயந்திரம் வழங்கி நிறுவுவதற்குமான ஒப்பந்தம் இத்தாலியிலுள்ள திருவாளர்கள் பிராங்கோ டோசி நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டன. பெரும்பான்மையான கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு விட்டன. ஏனையவற்றிற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் ஆராயப்படுகின்றன.

சுரங்கம் தோண்டுமிடத்தில் சேமிப்புக் கிடங்குகள் சுவிட்சு கட்டுப்பாட்டு அறை, நிருவாக அலுவலகக் கட்டிடம், சிற்றுண்டிச் சாலைக் கட்டிடம் முதலியன கட்டுதல் போன்ற தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கொதிகலன் நிறுவ அடித்தளம், எரிபொருள் வைக்குமிடம் கட்டுப் பாட்டு அறைப்பகுதி, குளிரூட்டுக் கூண்டுகள் முதன்மை நிலையக் கட்டிடத்தின் பகுதிகள் ஆகியவற்றிற்குரிய மண்வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை :

சென்னை, மணலி எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு 1969-ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது. இவ்வாலை பெர்சியன் வளைகுடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தூய்மையாகாத கலங்கல் எண்ணெய்யை நவீன முறையில் தூய்மைப்படுத்துகிறது.

இவ்வாலை தொடங்கிய நாள் முதற்கொண்டு இந்நிலையத்திற்குத் தேவைப்படும் பெட்ரோலிய பொருள்கள் அனைத்தும், மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய், உயர் வேக டீசல், இலகுவான வண்டி, டீசல் எண்ணெய், தார், எரி அடுப்பு எண்ணெய், 'லுபே' எண்ணெய், சமையலுக்குப் பயன்படும் எரிவாயு, 'நாப்தா' போன்ற பெட்ரோலியப் பொருள்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

இவ்வாலையின் நிறுவுதிறன் 2.5 மில்லியன் டன்னாக இருந்தது. உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குத் தடையாக இருந்த செயல் முறைகளை நீக்கி சமநிலைப் படுத்தும் சாதனங்களை நிறுவியதன் மூலம் இவ் உற்பத்தித் திறன் அண்மையில் 2.8 மில்லியன் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாலையின் உற்பத்தித் திறனை இருமடங்குகளாக அதாவது ஆண்டொன்றுக்கு 5.6 மில்லியன் டன்னாக உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஆண்டொன்றுக்கு 20,000 டன்கள் வீதம் பாரபின் மெழுகு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவவும் திட்டமிட்டுள்ளது. 1982 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பாரஃபின் மெழுகுத் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவும் பணியும் 1984 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிக்குள் எண்ணெய்த் தூய்மை ஆலையை விரிவாக்கும் பணியும் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் தூய்மை ஆலை இங்கு இயங்குவதால் இம்மாநிலத்திற்கு அதிக வருவாய் கிடைக்கிறது. கடந்த 12 ஆண்டுகளில் இவ்வாலையில் தயாரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருள்களின் விற்பனை மீதான விற்பனை வரித்தொகை வாயிலாக



இம்மாநிலத்திற்கு ரூ. 164.6 கோடி வருவாய் கிட்டியுள்ளது. தற்போதுள்ள விலை வீதத்தில், இக்கணக்கின் படி ஆண்டொன்றுக்கு ரூ. 3 கோடி வருவாய் கிட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இம்மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கும், ஏனைய நுகர்வோருக்கும், பெட்ரோலியப் பொருட்கள் தொடர்ந்தும், ஒரே சீராகவும் வழங்குவதற்கு வழி வகை செய்கிறது ; இதனால் இம்மாநிலப் பொருளாதார நடவடிக்கை சீரான நிலையில் இருந்து வருகின்றது.

தமிழ்நாட்டில் இந்த எண்ணெய்த் தூய்மை ஆலையை நிறுவியது பெருமளவில் பல்வேறு துணைத் தொழிற்சாலைகள் அமைய தூண்டுகோலாக அமைந்தது. மேலும் இதனை அடுத்துள்ள அப்பகுதிகளில் இயங்கும் இராசாயன உரத் தொழிற்சாலை, பெட்ரோலிய இராசாயனப் பொருள்கள் உற்பத்தி தொழிற்சாலை போன்றவற்றிற்கு மூலப் பொருள்களை வழங்கும் நிறுவனமாகவும் இந்த ஆலை விளங்குகிறது. இத்தொழிற்சாலைகளில் சென்னை உரத் தொழிற்சாலை நிறுவனம், 'லூபே' எண்ணெய் வீதாச்சார அடிப்படையில், கலக்குதல், பீப்பாய்கள் தயாரித்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டுள்ள இந்திய எண்ணெய்க் கழகம், மெட்ராஸ் பெட்ரோலியம் லிமிடெட்டின் மின் அழுத்தமாற்றி எண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை போன்ற நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இத்தொழிற்சாலைகளின் வாயிலாக, நேரடியாகச் சுமார் 1,500 பேருக்கும், மறைமுகமாக 3,000 பேருக்கு மேலாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

பாரத திண்நிலை மின் சாதனம் தொழிற்சாலை :

திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத திண்நிலை மின் சாதனத் தொழிற்சாலை, உயரழுத்தக் கொதிகலன் தொழிற்சாலையாகும். இது 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இத்தொழிற்சாலை செக்கோஸ்லோவோகிய நாட்டு உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு 750 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களைத் தயாரிப்பதற்கு ரூ. 24.5 கோடி தொடக்க முதலீட்டுடன் தொடங்கப்பட்டது. தற்போது, இத்தொழிற்சாலையின் திறன் ஆண்டொன்றுக்கு 2,500 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. 1981-82 இல் ரூ. 284 கோடி மதிப்புள்ள 450 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களைத் தயாரித்துள்ளது. இத்தொழிற்சாலையின் மொத்த மதிப்பீடு ரூ. 133.25 கோடியாகும். இத்தொழிற்சாலையில் சுமார் 14,500 பேர் பணி புரிகின்றனர். அதே நேரத்தில், பாரத திண்நிலை மின் சாதன தொழிற்சாலை சிறந்த பொறியியல் ஆய்வமைப்பாகவும் அதனுடைய உற்பத்தியிலும், பணிகளிலும் அனைத்து நாட்டுத் தரத்திற்கு நிகரான ஒரு தரத்தை எட்டியுள்ளது.

தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் விரிவ ாக்த் திட்டத்தின் மூலம் தற்போதைய திறன் ஆண்டொ ன்றுகு 2,500 மெகாவாட்டிலிருந்து 1984–85 ஆம் ஆண்டுக்குள் 4,000 மெகாவாட்டாக உயரும். ரூ. 22 கோடி முதலீட்டில் மின் விசிறிகள், காற்றைச் சூடாக்கும் சாதனம், எலக்ட்ரோஸ்டேடிக் பிரசிபிகேடர்கள் போன்ற தொதிகலன் துணை சாதனங்கள் தயாரிப்பதற்கு தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமான வட ஆர்க்காட்டிலுள்ள இராணிப்பேட்டையில் தனித் தொழிற்சாலை தொடங்குவதும் இவ்விரிவாக்கத் திட்டத்தில் அடங்கும்.

ரூ. 58.2 கோடி மூலதனச் செலவில் திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்ட பாரத திண்நிலை மின் சாதனத் தொழிற்சாலையில் உருக்குக் குழாய் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 40,000 டன் கொதிகலனுக்கேற்ற உருக்குக் குழாய்களை உற்பத்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டதாகும். மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த 'டீமாக் மீர்'' என்கிற நிறுவனத்திடமிருந்து வரப் பெற்ற எந்திரங்கள் நிறுவப்பட்ட இத்தொழிற்சாலை உயர் அழுத்தக் கொதிகலத் தொழிற்சாலையின் தேவையை ஈடு செய்வதற்காகவும் இந்தியாவிலுள்ள மற்ற நிறுவனங்களுக்குக் குழாய் வழங்குவதற்காகவும் அமைக்கப்பட்டது.

ஐக்கியநாடு வளர்ச்சித் திட்ட நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி ''பாரத திண்நிலை மின் சாதனத் தொழிற்சாலை''யின் பற்றவைப்பு ஆராய்ச்சி நிறுவனம் தொழில் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. தொழில் சார் நோய் மருத்துவப் பணிகளுக்காக தேசீய மைய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தவும் இத் தொர்ழிற்சாலை ஆய்ந்து வருகிறது.

இத்தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளியை சுற்றிலும், அதற்கருகிலுள்ள மாவட்டத்திலும் சிறு தொழிற்சாலைகளை மேம்படுத்த எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. ஏறத்தாழ 320 சிறு நடுத்தரத் தொழிற்சாலைகள் ஆண்டொான்றுக்குச் சுமார் 50,000 மெட்ரிக் டன் கொதிகலன் துணைப் பாகங்களை வழங்குகின்றன. இச் சிறு தொழில் பிரிவுகள் 10,000-க்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. இராணிப்பேட்டையில் புதிய தொழிற்சாலை ஏற்படுத்துவதுடன் சுமார் 45 சிறு தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல துணைத் தொழில்கள் வளர்ச்சியடைவதற்கு இத் தொழிற்சாலை மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளது.



படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

திருச்சிராப்பள்ளி, படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை 1966 ஜூலை 3 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. 2×10 மணி நேர முறை மாற்றுப் பணி திங்களில் 5,000 சிறு படை கலன்களை உற்பத்தி செய்வதே இதன் நிறுவு திறனாகும். ரூ. 8.24 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையிலும் அதனைச் சார்ந்த நிறுவனங்களிலும் தற்போது அதிகாரிகள், பணியாளர்கள், தொழிலாளர்கள் உட்பட 2,746 பேர் பணிபுரிகின்றனர். 31—3—1981 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டில் முழு உற்பத்தியை இத்தொழிற்சாலை எய்தியுள்ளது. 31—3—1980 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டு உற்பத்தியின் மொத்த மதிப்பு ரூ. 3.44 கோடியாகும். இராணுவ வண்டிகள் (Infantry Combat Vehicle) தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைக்கும் இடம் குறித்து செயற் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் பரிசீலனையிலுள்ள பல்வேறு இடங்களுள் திருச்சிராப்பள்ளியில் படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை உள்ள இடமும் ஒன்றாகும்.

இரயில் பெட்டித் தொழிற்சாலை (ஐ.சி.எப்.).

பெரம்பூரில் இரயில் பெட்டித் தொழிற்சாலை 1955 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு வசதிகள் செய்து தரப்படாத 350 அகல இருப்புப் பாதை இரயில் பெட்டிக் கூடுகளாகும். இந்த இரயில் பெட்டித் தொழிற்சாலை இன்றைக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய இரயில் பெட்டித் தயாரிப்புத் தொழிற்சாலையாகும். இதன் ஆண்டு உற்பத்தித் திறன் பல்வேறு வகை வடிவமைப்புகள், பாதைகளுக்கான 750 இரயில் பெட்டிகளாகும். அனைத்து வசதிகளுடன் கூடிய முழுமையான இரயில் பெட்டித் தொழிற்சாலை, இரயில் பெட்டிக் கூடு தொழிற்சாலைக்கு இணைப்பாக 1962ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இத் திட்டம் முழுவதற்குமான மொத்தச் செலவு ரூ. 12.85 கோடியாகும்.

1981 டிசம்பர் அன்றுள்ளபடி தொழிற்சாலையின் மொத்த உற்பத்தி 13,205 இரயில் பெட்டிகளாகும். இத் தொழிற்சாலை 14,485 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

நடப்பாண்டு உற்பத்தித் திட்டம் (1981-82) :

நடப்பாண்டில் (1981 ஏப்ரல் முதல் 1982 மார்ச் வரையி 720 இரயில் பெட்டிகளைத் தயாரிக்கத் திட்டமிடப்ப உள்ளது. இவற்றுள் 8 பெட்டிகள் கல்கத்தா பெருநகர் இரயில்

போக்குவரத்து அமைப்புக்காக தயாரிக்கப்பட்டவை. அவை கல்கத்தாவில் சோதனை ஓட்டம் விடப்பட்டன. 55 இரண்டாம் வகுப்பு சீர்வளி, படுக்கை வசதியுடன் கூடிய இரயில் பெட்டிகளும் ராஜதானி விரைவு இரயிலுக்கான பெட்டிகளும் தயாரிக்கப் பட்டன. இத்திட்டத்தின் முக்கியக் கூறு நைஜீரியாவுக்காக 32 இரயில் வண்டித் தடுப்புப் பொறி (Brake van) அமைக்கப்பட்ட பெட்டிகளைத் தயாரிப்பதாகும். இப்பெட்டிகள் தயாரிக்கப் பட்டு வருகின்றன. நடப்பாண்டின் 720 இரயில் பெட்டிக்கான மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 53.71 கோடியாகும்.

அடுத்த ஆண்டு உற்பத்தித் திட்டம் (1982—83) :

அடுத்த ஆண்டில் 750 இரயில் பெட்டிகளைத் தயாரிக்க இரயில் பெட்டித் தொழிற்சாலை திட்டமிட்டுள்ளது. இதில் சாதாரண வசதிகளுடன் கூடிய இரயில் பெட்டிகளைத் தவிர சீர்வளி படுக்கை வசதிகளுடன் கூடிய 70 இரயில் பெட்டிகளும் அடங்கும். 10 சீர்வளி இரண்டாம் வகுப்பு படுக்கை வசதியுடன் கூடிய இரயில் பெட்டிகள் மீட்டர் இரயில் பாதைக்காக தயாரிக் கப்பட உள்ளன. ஆண்டின் உற்பத்தி மதிப்பு ரூ. 68.60 கோடி யாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதித் துறையில் எய்திய சாதனை :

இரயில் பெட்டித் தொழிற்சாலை தாய்லாந்துக்கு மீட்டர் இரயில் பாதை இரயில் பெட்டிகள் இரண்டை வழங்குவதன் மூலம் 1967-ல் ஏற்றுமதி விற்பனையில் அடி எடுத்து வைத்தது. பர்மா, தைவான், தாய்லாந்து, ஜாம்பியா, டான்சானியா, பிலிப்பைன்ஸ், உகாண்டா. வியட்நாம் ஆகிய நாடுகளுக்குப் பல் வேறுஅளவுகளில் பல வடிவமைப்புக் கொண்ட நவீனவசதிகளுடன் கூடிய தரமான 359 இரயில் பெட்டிகளையும், 266 முழுமையான வசதிகள் கொண்ட இரயில் பெட்டிகளையும், இரயில் பெட்டித் தொழிற்சாலை ஏற்றுமதி செய்தது. அதன் மூலம் அனைத் துலகப் புகழ் பெற்றுள்ளது. 32 இரயில் வண்டி தடுப்புப் பொறி அமைக்கப்பட்ட பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை 1982, பிப்ரவரியில் அனுப்பப்படும். இது வரை ஏற்றுமதி செய்யப்பட்ட இரயில் பெட்டிகளின் மொத்த மதிப்பு ரூ. 22.28 கோடியாகும். 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 2.94 கோடி மதிப்பு உடைய இரயில் பெட்டிகளை ஏற்றுமதி செய்யக் கருதப்பட்டு உள்ளது.

வருங்காலத்தில் இத்தொழிற்சாலையை விரிவுபடுத்துதல்:

இரயில் பெட்டி உற்பத்தித் திறனை அண்மையில் உயர்த்த இரயில் பெட்டித் தொழிற்சாலை உத்தேசிக்கவில்லை. எனினும் இரயில் பெட்டித் தொழிற்சாலையிலேயே உருவாக்கப்படும்

'பாரிக்கலமாக பே
தாள்கள் ஆகியவை அடங்கும்.' ப்பட்கு (ஆப்பில் கலர் பாசிடிவ் திரைப்படச் சுருள்கள் கடைடியகள்) நுள் (A't films) தொழில் எக்ஸ் கதிர் படச் சுருள்கள் ட்லை வ அடங்கும். இந் நிறுவனம் உதகமண்டலத்தில் ஒரு தெ பிரிவும், சென்னை அம்பத்தூரில் ஒரு தொழில் பிரிவும் ஆ இரண்டு தொழில் பிரிவுகளைத் தற்போது நடத்தி வருகின்றி;

1.083 மில்லியன்
1980—81ஆம் ஆண்டில் உற்பத்தியின் அளவு ட்சம் ஆகும். சதுர மீட்டராகும். இதன் மதிப்பு ரூ. 6,604 இ வியாபாரத் 1980—81 ஆம் ஆண்டில் நிறுவனத்தில் மொத்த வனத்திற்கு தொகை ரூ. 5,972 இலட்சம். இதனால் இந்நிறுவனத்தின் கிடைத்த ஆதாயம் ரூ. 363 இலட்சம். இந்நிறு ில்லியன் 1981—82 ஆம் ஆண்டிற்குரிய உற்பத்தி இலக்கு 12 இலட்சம் சதுர மீட்டர் என்றும், இதன் மதிப்பு ரூ. 78,03 இதாகை என்றும், மதிப்பிடப்பட்ட மொத்த வியாபாரத் ம இந் ரூ. 75,40 இலட்சம் என்றும் திட்டம் கொண்டுள்ளது. 'ர்ய்ப்பு நிறுவனம் மொத்தம் 2,914 தொழிலாளர்களுக்கு வேலைவா ளும், அளிக்கிறது. அத்தொழிலாளர்களில் 471 ஆதி திராவிடர்க வர். 53 பழங்குடியினரும், 65 உடல் ஊனமுற்றோரும் அடங்கு

ளின்
தற்போதுள்ள புகைப்படச் சுருள் தயாரிப்பு பொருள்க ுர் அதிகத் தேவையை நிறைவாக்கும் பொருட்டும், அமெ 200 புகைப்படச் சுருள்களைத் தயாரிக்கும் பொருட்டும் ரூ. தல் இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இத் தொழிற் பிரிவில் 4 முனை 5 மில்லியன் சதுர மீட்டர் அளவுக்கு வண்ணம் பூசும் திற ல் சு கூடுதலாக உருவாக்குவதற்குரிய திட்டமொன்றுக்கு மத்திய அனப் ஏற்கனவே அனுமதியளித்துள்ளது. இத் திட்டத்தின் கட்டுமானு பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டது; இத் திட்டம் அ று மதிக்கப்பட்ட இரண்டாண்டு கால அளவிற்குள் முடிவுறும் என த் எதிர்பார்க்கப்படுகிறது.
றி
வ்தி

ரூ. 257 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அனைத்து வசதிற் களுடன் கூடிய ஆராய்ச்சி-வளர்ச்சி நிலையத்தை அமைப்ப ில் குரிய இந்நிறுவனத்தின் செயற்குறிப்பு மத்திய அரசின் ஆய்ப் உள்ளது.
ட்
யை

சினிமா வண்ண பாசிடிவ் சுருள்களைத் தயாரிக்கும் பணி நிறு மேற்கொள்ளும் பொருட்டு புகழ் வாய்ந்த அனைத்து நாட்டு ண்டு வனங்களுடன் சேர்ந்து சிறந்த தொழிலுத்தியைக் கையா இந் திரைப்படச் சுருள் தயாரிப்புப் பொருள்களைத் தயாரிக்க னம் நிறுவனம் முயன்று வருகின்றது. இதன் பொருட்டு இந் நிறுவி வே மத்திய அரசிடமிருந்து ''அனுமதிக் கடிதத்தை'' ஏற்கெனட பெற்றுள்ளது.



சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம்.

சென்னைக்கு அருகில் மணலியில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் அமைந்துள்ளது. இது ஆண்டொன்றுக்கு 1,53,000 மெட்ரிக் டன் யூரியாவும், 5,40,000 மெட்ரிக் டன் என். பி. கே. உரமும் கொண்டு விற்பனை செய்யத்தக்க இரசாயன உரங்களை உற்பத்தி செய்யும் திறன் உடையது. இது 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியது. 1980—81 ஆம் ஆண்டில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் 7.06 இலட்சம் டன் அளவிற்கு எல்லா வகையான இரசாயன உரங்களையும் உற்பத்தி செய்வதால், அதன் உற்பத்தித்திறன் முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் சிறப்பாக அமைந்தது. பயன்பாட்டுத் திறன் பற்றிக் கூறப்போனால் வரையறுத்தத்திறனால் அமோனியா 93 சதவீதம், யூரியா 99 சதவீதம்; என்.பி.கே. உரம் 103 சதவீதமாகும்.

1981 ஏப்ரல்—நவம்பர் திங்களில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனத்தின் உற்பத்தி 1981 டிசம்பர் முதல் 1983 மார்ச்சு வரை உற்பத்தி செய்ய இலக்கிடப்பட்ட அளவு ஆகியவை குறித்த விவரம் வருமாறு :—

| இரசாயன உரத்தின் பெயர். | 1981 ஏப்ரல் முதல் நவம்பர் வரை கணக்குகள். | இலக்கு. 1981 டிசம்பர் முதல் 1982 மார்ச்சு வரை (மெட்ரிக் டன்னில்). | இலக்கு. 1982—83. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| யூரியா .. .. | 75,612 | 32,068 | 1,37,000 |
| காம்ப்ளக்ஸ் .. | 3,89,216 | 1,82,174 | 5,40,000 |

உலகெங்கிலும், கடும் போட்டிக்கு இடையே சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் ஸ்ரீலங்கா யூரியா தயாரிப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்துச் செயலாக்கும் பொருட்டு, கொழும்புவிலுள்ள மாநில இரசாயன உர உற்பத்திக் கழகத்திடமிருந்து ரூ. 3.5 கோடி மதிப்பிற்கு நிருவாக ஒப்பந்தத்தைப் பெற்றது. சென்னை ரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் 1980 மே திங்களிலிருந்து இவ்வொப்பந்தத்தைச் செயலாக்கத்

தொடங்கியது. ஸ்ரீலங்கா யூரியா திட்டத்திற்கென்று சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம் ஆற்றிய பணிகுறித்து அத்திட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பாராட்டு தெரிவித்தனர்.

1980—81 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 5,66,200 மெட்ரிக் டன் விஜய் காம்ப்ளக்ஸ் உரமும், 1,46,900 மெட்ரிக் டன் விஜய் யூரியா உரமும் விற்பனை செய்துள்ளது.

உழவர்களுக்கு மேம்பட்ட வேளாண்மை பயிர் உற்பத்தி நடைமுறைகள் பற்றிக் கற்றுக் கொடுப்பதற்கென்று சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனம், எண்ணற்ற வேளாண்—தகவல், வேளாண்—பணித் திட்ட நிகழ்ச்சியை நடத்துகின்றது.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை நிறுவனத்தின் பணியாளர் பெயர்ப் பட்டியலில் 1982 சனவரி 1 ஆம் நாள் இருந்தபடி மொத்தம் 1,141 தொழிலாளர்கள் உள்ளனர்.

இந்தியன் டிரக்ஸ் அண்டு ஃபார்மக்யூடிகல்ஸ் லிமிடெட் நிறுவனம்

சென்னையிலுள்ள இந்தியன் டிரக்ஸ் அண்டு பார்மக்யூடிகல்ஸ் நிறுவனம் ரூ. 500 இலட்சம் மூலதனத்துடன் 1965 செப்டம்பரில் தொடங்கப்பட்டது. பொது அறுவைச் சிகிச்சை, மகப்பேறு—மகளிர் நோய் இயல் அறுவைச் சிகிச்சை, முடநீக்கியல் அறுவைச் சிகிச்சை, நரம்பியல் அறுவைச் சிகிச்சை, பல் நோய், கண் நோய் அறுவைச் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை நோய் அறுவைச் சிகிச்சை, குரல்வளையில் செய்யப்படும் நுண்ணிய அறுவைச் சிகிச்சை, குடும்ப நல அறுவைச் சிகிச்சை, பிரிக்கக்கூடிய அறுவைக் கத்திகள், செயற்கைக் கை, கால் உறுப்புகளுக்குத் தேவைப்படும் கைப்பிடிகள், உறுப்புகள் ஆகியவகையில் 2·5 மில்லியன் அறுவைச் சிகிச்சை கருவிகளைத் தயாரிக்கும் பணியில் இந்நிறுவனம் தற்போது ஈடுபட்டுள்ளது. தற்போதுள்ள அடிப்படை வசதிகளைப் பயன் படுத்திய பின்னர் அறுவை கத்திகள் உட்பட ஆண்டொன்றுக்கு தயாரிக்கப்படும் அறுவைக் சிகிச்சைக் கருவிகளின் உற்பத்தித் திறனளவு 10,00,000 ஆகும்.

தற்போதுள்ள அடிப்படை வசதிகளை முழுவதும் பயன் படுத்துவதன் வாயிலாக இந்நிறுவனம் தனித்தியங்கி ஆதாயம் ஈட்டும் நோக்கத்துடன் இந்திய மருந்துகள் மருந்தாக்கியல் நிறுவனத்தின் (ஐ.டி.பி.எல்.) துணைத் தொழிற்சாலைகளில், இரசாயனப் பொருள் தயாரிப்புச் சாதனங்களை வாங்கி இணைக்கும் பணியை பலதிறப்படுத்த முற்பட்டுள்ளது. இத்துடன், இந்திய மருந்துகள்—மருந்தாக்கியல் நிறுவனத்தி இரசாயனப் பொருள் தயாரிப்புச் சாதனங்களுக்குத் தேவைப்படும்



பல்வகை கை வால்வுகளை இயக்கி இணைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலைக் கருவிகளுக்கு தேவைப்படும் சில இனங்களும், உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நிறுவனம் புதிய "பால் வால்வு" (B l valve) தயாரிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது. கருவிகள் இணைப்புப் பிரிவு 120 மெட்ரிக் டன் எடையுள்ள துருப்பிடிக்காத மென் உருக்குப் பாகங்களைத் தயாரிக்கும் திறனுடையது. வால்வு தயாரிப்புப் பிரிவு ஆண்டொன்றுக்கு 3,000 வால்வுகளைத் தயாரிக்கிறது.

அடிப்படை வசதிகளை மேலும் பல திறப்படுத்தும் பொருட்டு ரூ. 100 இலட்சம் முதலீடு செய்வதென மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. இதன் காரணமாக மருந்து தயாரிக்கும் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இப்பிரிவு 1978—79 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலிருந்து வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியது. தற்போது மாத்திரைகள், உரை மாத்திரைகள், உண்ணும் நீர் மருந்துகள், பொடி மருந்து, நீர்ம ஊசி மருந்துகள் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவு ஆண்டொன்றுக்கு ரூ. 500 இலட்சம் மதிப்புள்ள மருந்துகளைத் தயாரிக்கும் திறன் கொண்டுள்ளது.

1980—81 ஆம் ஆண்டில் அறுவைச் சிகிச்சை கருவிகள் தயாரிப்புப் பிரிவு, பொதுப் பொறியியல் பிரிவு, மருந்துத் தயாரிப்புப் பிரிவு ஆகியவற்றின் உற்பத்தி குறித்த விவரம் வருமாறு. மேலும் 1981—82 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யக் கருதப்பட்ட அளவு 31—1—1982 வரையில் செய்த சாதனை (1981—82), 1982—83-ம் ஆண்டில் செய்யக் கருதப்பட்டுள்ள திட்ட இலக்கு ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண்ணும், பிரிவும். | 1980—81 ஆண்டில் நடைபெற்ற பணி. | 1981—82 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பு. | 1981—82 ஆண்டு 31—1—1982 வரையிலான சாதனை. | 1982—83 ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1. அறுவை மருத்துவக் கருவிகள் பிரிவு. | 74.16 | 198.00 | 122.99 | 280.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2. பொதுப் பொறியியல் பிரிவு. | 88.39 | 102.73 | 57.88 | 162.00 |
| 3. மருந்துகள் தயாரிப்புப் பிரிவு. | 207.09 | 349.40 | 221.14 | 438.75 |
| 4. இன்ட்ராக் | 124.52 | 145.90 | 109.63 | 170.24 |
| மொத்தம் | 494.16 | 796.03 | 511.64 | 1,050.99 |

சென்னை, திருவாளர்கள் இன்ட்ராக் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து சென்னை இந்திய மருந்து மருந்தாக்கியர் நிறுவனம் (ஐ. டி. பி. எல்.) ஆண்டொன்றுக்கு ரூ. 170 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஊசி மருந்துப் பொடி கொண்ட குப்பிகளை (Pcwer injectoble vials) தயாரிப்பதற்கு தற்காலிகள் (கடன்) உரிமம் பெற்றிருக்கிறது. இம் மருந்து—மருந்தாக்கியல் நிறுவனம் (ஐ. டி. பி. எல்.) 41 அதிகாரிகள், 53 மேற்பார்வையாளர்கள், 1,042 தொழிலாளர்கள் அடங்கிய 1,136 பணியாளர்களைக் கொண்டுள்ளது. இந்திய மருந்து—மருந்தாக்கியல் லிமிடெட், நிறுவனம் (ஐ. டி. பி. எல்.) அதன் வளாகத்தில் அறுவை மருத்துவக் கருவிகளை விற்பனை செய்யும் அமைப்பு ஒன்றையும் கொண்டுள்ளது.

திரவச் சோதனை வசதி நிலையம், மகேந்திர கிரி வனம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மகேந்திர கிரி வனத்தில் நீர்மச் சோதனை நிலையத்தை நிறுவுவதற்கான திட்டத்திற்கு இந்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சி துறை ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கு வேண்டிய நிலங்களை அதாவது பட்டா நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றை இந்திய அரசிடம் இலவசமாக ஒப்படைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட்.

1960 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட திருவாளர்கள் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் இதாலியைச் சேர்ந்த இங்க். ஒலிவாட்டி நிறுவனத்துடன் டெலிபிரிண்டர்ஸ் மற்றும் அதன்



துணைக் கருவிகள் உற்பத்தியை செய்ய ஒத்துழைப்பு உடன்படிக்கை செய்து கொண்டது. 1964 ஆம் ஆண்டு ஆரம்ப கட்டமாக ஆண்டொன்றுக்கு 1,500 டெலிபிரிண்டர்ஸ் உற்பத்தியை எட்டியது. நிறுவனத்தின் திறன் முன்னேற்றம் அடைந்து தற்போதைய அதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 8,000 எண்ணிக்கையை எட்டியுள்ளது. இந்தியாவிலேயே டெலிபிரிண்டர்ஸ் மற்றும் துணைக் கருவிகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரே நிறுவனமாகிய இந்நிறுவனம் தபால் மற்றும், தந்தி பாதுகாப்புப் பணி, இரயில்வே, விமானப் போக்குவரத்து, செய்தி ஏஜென்சி போன்ற எல்லாத் துறைகளின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்கிறது. நிறுவனத்தின் வழங்கப்பட்ட மூலதனத் தொகை ரூ. 123 இலட்சம். இதில் ரூ. 82 இலட்சம் மத்திய அரசினால் வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த மூலதனம் சுமார் 827 இலட்சம்.

உற்பத்தி

நிறுவனத்தின் குறிக்கோளான உற்பத்தியாகிய 8,000 எண்ணிக்கைக்கு எதிராக நிறுவனம் 1980—81-ல் மிக உயர்ந்த அளவான 8,318 எண்ணிக்கை உற்பத்தியை எட்டியது.

1981—82-ம் ஆண்டில் நிறுவனத்தின் உற்பத்தி இலக்கு 8,500 டெலிபிரிண்டர்களும் மற்றும் துணைக் கருவிகளும் மற்றும் ரூ. 100 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களை உற்பத்தி செய்வதாகும். 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் முடிய 7,318 கருவிகளையும் ரூ. 92 இலட்சம் மதிப்புடைய உதிரிகளையும் உற்பத்தி செய்துள்ளது. எனவே 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அதன் இலக்கை எட்டிவிட முடியும் என்று நிறுவனம் எதிர் பார்க்கின்றது.

வருங்கால திட்டம் :

மாற்றுப்பணித் திட்டத்தின் ஒரு பகுதியாக நிறுவனம் மின் தட்டச்சு எந்திரங்கள், எலக்ட்ரானிக் டெலிபிரிண்டர்ஸ் மற்றும் கம்யூட்டர் பெரிபெரல்ஸ் முதலியவற்றை உற்பத்தி செய்யக் கருதியுள்ளது.

இந்நிறுவனத்திற்கு கிண்டியிலுள்ள அதன் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 15,000 மின் தட்டச்சு எந்திரங்கள் செய்ய ஒரு இசைவுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்தியை

மேற்கொள்ள நிறுவனம் இத்தாலியைச் சேர்ந்த ஒலிவாட்டி நிறுவனத்துடன் தொழில் ஒத்துழைப்புக் கொள்ளும். இதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டன. உற்பத்தி வெகு விரைவில் தொடரும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

ஒசூரிலுள்ள நிறுவனத்தின் புதிய தொழிற்சாலையில் எலக்ட்ரோ மெகானிகல் டெலிபிரிண்டர்ஸ் உற்பத்திக்குப் பதிலாக எலக்ட்ரானிக் டெலிபிரிண்டர்ஸ் உற்பத்தியை மேற்கொள்ள நிறுவனம் கருதியுள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன் இத் திட்டம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழில் ஒத்துழைப்புக் கொள்ள தகுந்த நிறுவனத்தை தேர்ந்தெடுப்பது குறித்து நிறுவனம் பரிசீலனை செய்து வருகிறது.

ஆண்டொன்றுக்கு 2,500 எண்ணிக்கையிலான பிளாபி டிஸ்க் டிரைவ் என்ற பொருளை உற்பத்தி செய்ய நிறுவனத்திற்கு இசைவுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான தொழில் ஒத்துழைப்புக் கொள்ள நிறுவனம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

இந்நிறுவனத்திற்கு, 500 எண்ணிக்கை டேட்டா மாடங்களை உற்பத்தி செய்ய பதிவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பொருள்களைச் செய்வதற்கான தொழில் நுணுக்கம் இந்நிறுவனம் மேற்கொண்டது. உற்பத்தி விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

1. நோக்கங்கள்—

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் ஆண்டுக்கு நான்கு இலட்சம் டன் சிமென்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரக்கோணத்தில் ஆண்டுக்கு 3.6,000 டன் உருக்கு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் நடத்துவது இந்நிறுவனத்தின் நோக்கமாகும். 1969 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை குறுகிய காலத்திற்குள் நலிவுற்ற சில தொழில் பிரிவுகளின் பங்கு மூலதனத்தில் பங்கேற்றும் கடனைத் திருப்பிக் கொடுத்தும் டிட்கோ அவற்றிற்கு நிதியுதவி அளித்துள்ளது.



1970 ஆம் ஆண்டில் மத்திய அரசு கூட்டுத்துறை கொள்கைகளை வகுத்தது. அரசு வகுத்த வழிமுறைகளை செயல்படுத்தும் பொருட்டு கூட்டுத்துறை கொள்கையை வகுத்தது. அரசு வகுத்த வழிமுறைகளை செயல் படுத்தும் பொருட்டு கூட்டுத்துறையில் தொழில்களை உருவாக்கும் பொறுப்பு டிட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டது. கூட்டுத் துறைத் திட்டங்களின் மூலதனப் பங்குகளை வாங்குவதன் மூலம் டிட்கோ நிதியுதவி அளிக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| விவரம். | டிட்கோ வாங்கும் மூலதனப் பங்குகள். |
|---|---|
| (1) | (2) |
| ரூ. 100 இலட்சத்திற்கு மேல் செலவாகும் திட்டங்கள். | மூலதனப் பங்குகளில் 26 சத வீதம். |
| ரூ. 50 இலட்சமும் அதற்கு மேலும் ரூ. 100 இலட்சம் வரை செலவாகும் திட்டங்கள். | மூலதனப் பங்குகளில் 15 சத வீதம். |

தனியார் தொழில் முனைவோருக்கு 25 சதவீதம் மூலதனப் பங்குகள் வழங்கப்படுகின்றன. எஞ்சியுள்ள மூலதனப் பங்குகள் பொது மக்களுக்கு விற்கப்படுகின்றன. நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் வங்கிகளிலிருந்தும் காலக் கடன்களும் வாங்கப்படுகின்றன.

2. ஆலங்குளத்திலுள்ள சிமென்ட் தொழிற்சாலையை நிருவகிக்க 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம் அமைக்கப்பட்டது. இது டிட்கோவிற்குச் சொந்தமான கிளை நிறுவனமாகும். புதிய சிமென்ட் தொழிற்சாலை திட்டங்கள் 1—4—1976 அன்று இந்நிறுவனத்தின் நிருவாகப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டன.

2. நிதியுதவி.

தமிழ்நாடு அரசு டிட்கோவிற்குப் பங்கு மூலதனத்திற்குத் தொகை வழங்கியும் கடன்கள் வழங்கியும் நிதியுதவி அளிக்கிறது. இது தவிர உத்திரவாதம் பெற்ற கடனீட்டுறுதிப் பத்திரங்களைத் திரட்டவும் அரசு உத்தரவாதம் அளிக்கிறது. டிட்கோ பொது

[1982 மார்ச் 19

மக்களிடமிருந்து வைப்புத் தொகைகளையும் பெறுகிறது. 31—3—1981 அன்றுள்ளபடி டிட்கோவிற்கு அனுமதி பெற்ற மூலதனம் 30 கோடி ரூபாயாகும். 1981-82 ல் இது 40 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. 31—3—1981 வரை திரட்டப் பட்ட நிதி 1981-82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி திரட்ட உத்தேசித்துள்ள நிதியின் விவரம் வருமாறு :—

| விவரம். | 31-3-81 வரை திரட்டப் பட்ட தொகை. | 1981-82 ஆம் ஆண்டு திருத்த மதிப் பீட்டின் படி திரட்டக் கருதியுள்ள தொகை. | 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட் டின்படி திரட்ட உத்தேசித் துள்ள தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்.) | |
| அரசு வழங்கியுள்ள பங்கு மூலதனத் தொகை. | 28.23 | 5.00 | 7.00 |
| அரசு வழங்கிய கடன் .. | 7.02 | 0.90 | .. |
| பிணையத்துடன் கூடிய கடனீட்டுறுதிப் பத்திரங்கள். | 11.50 | 0.83 | 1.00 |
| குறித்தகால வைப்புத் தொகைகள் (நிகரம்). | 2.71 | (—)0.50 | (—)0.20 |
| மொத்தம் .. | 49.46 | 6.23 | 7.80 |



1982 மார்ச் 19]

3. முதலீடுகள்.

பொதுத் துறை, கூட்டுத்துறை திட்டங்கள் பலவற்றில் 31—3—1981 வரை டிட்கோ முதலீடு செய்துள்ள தொகையும் 1981-82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படியும் 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியும் முதலீடு செய்யக்கூடிய தொகையும் வருமாறு :—

| முதலீடு செய்துள்ள விவரம். | 31—3—1981 வரை டிட்கோ முதலீடு செய்துள்ள தொகை (சுடு செய்த கடன் உட்பட). | 1981-82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின் படி டிட்கோ முதலீடு செய்யக்கூடிய தொகை. | 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி டிட்கோ முதலீடு செய்யக்கூடிய தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்.) | |
| பொதுத்துறை திட்டங்கள் (பதிவுப் பெற்ற அலுவலக நிலையான சொத்துக்கள் உட்பட). | 24.63 | 2.65 | 4.62 |
| கூட்டுறவுத் துறை திட்டங்கள். | 22.27 | 6.17 | 4.25 |
| நிதியுதவி பெறும் தொழிற் சாலைகள். | 0.60 | .. | .. |
| | 47.50 | 8.82 | 8.87 |

பொதுத் துறை, கூட்டுத்துறை திட்டங்களில் திட்டம் வாரியாக முதலீடு செய்துள்ள விவரம் இணைப்பு 1, 2-ல் கொடுக்கப் பட்டிருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின் படியும் 1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப் பீட்டின் படியும் நிதிவாயில்கள், நிதிகளைப் பயன்படுத்திய விவர மும் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

4. தொழில் திட்டங்கள்.

1. பொதுத் துறை தொழில் திட்டங்கள்.

பொதுத் துறையில்: 11 தொழிற் திட்டங்கள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| விவரம். | தொழில் திட்டங்களின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). | உற்பத்தி செய்து வரும் தொழில் திட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களும் பிற தொழில் திட்டங்களில் வேலை வாய்ப்பும். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உற்பத்தி செய்து வரும் தொழில் திட்டங்கள். | 4 | 4,534.91 | 3,387 |
| செயல்படுத்தப்படும் தொழில் திட்டங்கள். | 1 | 301.00 | |
| செயல்படுத்த மேற்கொள்ள விருக்கும்— பரிசீலனையில் இருக்கும் தொழில் திட்டங்கள். | 6 | 4.411.60 | 1.150 |
| | 11 | 9,247.52 | 4,537 |

உற்பத்தி செய்து வரும் தொழில் திட்டங்களுள் ஒரு தொழிற்சாலை (கல்நார் சிமெண்ட் அட்டை தயாரிப்புத் தொழிற்சாலை) 1981ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை நிறுவ ரூ. 247 இலட்சம் செலவாயிற்று. 293 பேர் வேலை வாய்ப்புத் பெற்றுள்ளனர்.



மற்றொரு தொழிற்சாலை ரூ. 301 இலட்சம் செலவில் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையை நவீனப்படுத்துதல்) நிறுவப்பட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் நிறுவப்பட்டுவிடும் என எதிர்பாக்கப்படுகிறது. இதனால் ஆண்டுதோறும் கூடுதலாக 50,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய முடியும். இரு தொழிற்சாலைகள் உற்பத்தி செய்து வருகின்றன. ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. இதற்காகும் செலவு ரூ. 1,234 இலட்சம் இதனால் 1,840 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இத்தொழிற்சாலைகள் மாநிலத்தில் தொழில் துறையில் பின் தங்கியிருக்கும் பகுதியில் அமைந்திருக்கின்றன.

1. கூட்டுத் துறை தொழில் திட்டங்கள்.

கூட்டுத் துறையில் 37 தொழில் திட்டங்கள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| விவரம். | திட்டங்களின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). | தொழில் திட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களும் பிற தொழில் திட்டங்களில் வேலை வாய்ப்பும். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உற்பத்தி செய்து வரும் தொழில் திட்டங்கள். | 15 | 13,305,18 | 4,931 |
| செயல்படுத்தப்படும் தொழில் திட்டங்கள். | 13 | 13,541.37 | 3,600 |
| செயல்படுத்த மேற்கொள்ளவிருக்கும், பரிசீலனையில் இருக்கும் தொழில் திட்டங்கள் | 9 | 12,150.00 | 4,700 |
| | 37 | 38,996.55 | 13,231 |

1981–82ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியுள்ள அல்லது 1981–82ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்ப்பார்க்கப்படுகிற தொழில் திட்டங்களின் விவரம் வருமாறு :—

| தொழில் திட்டத்தின் பெயர். | வேலை வாய்ப்புப் பெறுபவர்களின் எண்ணிக்கை. | திட்டச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட். | 544.00 | 326 (பேர் வேலைக் கமர்த்தப்பட்டுள்ளனர்) |
| 2. அசிட்டிலின் அண்ட் இண்டஸ்ட்டிரியல் கேஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட். | 61.30 | 80 |
| 3. சதர்ன் அக்ரியூரேன் இன்டஸ்டிரீஸ் லிமிடெட் .. .. .. | 939.00 | 180 |
| 4. ஆசியன் பேரிங்ஸ் லிமிடெட் .. | 1,637.57 | 650 |
| 5. மெட்ராஸ் ஷூ பேப்ரிக்ஸ் லிமிடெட் | 96.50 | 300 |
| 6. வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட் .. .. .. | 406.00 | 180 |
| 7. தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் .. .. .. | 5,320.00 | 490 |
| 8. மல்லாடி ட்ரக்ஸ் அண்டு பார்மசுட்டிகல்ஸ் லிமிடெட் .. .. | 134.00 | 100 |
| | 9,138.37 | 2,306 |



1982–83ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கும் தொழில் திட்டங்கள் வருமாறு :—

| தொழில் திட்டத்தின் பெயர். | திட்டச் செலவு. | வேலை வாய்ப்பு பெறுபவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) (ரூபாய் இலட்சத்தில்.) | (3) |
| 1. சிப் ஸ்டீல்ஸ் (இந்தியா லிமிடெட்) | 50.00 | 250 |
| 2. கமர் கெமிக்கல்ஸ் அண்ட் இண்டஸ்டிரீஸ் லிமிடெட் .. | 196.00 | 60 |
| | 246.00 | 310 |

உற்பத்தி செய்துவரும், நிறைவேற்றப்பட்டு வரும் 28 தொழில் திட்டங்களுள் 13 தொழில் திட்டங்கள் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| விவரங்கள். | திட்டங்களின் எண்ணிக்கை. | திட்டச் செலவு. | உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் திட்டங்களின் பிற வேலை வாய்ப்பு அளவும். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில். | (4) |
| உற்பத்தியிலுள்ள திட்டங்கள். | 7 | 1,554.43 | 1,426 |
| நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள் .. | 7 | 4,865.07 | 1,970 |
| | 14 | 6,419.50 | 3,396 |

5. ஆதாய இழப்பு விவரம்.

31-3-1980 வரை டிட்காவிற்கு மொத்தம் ரூ. 631.94 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1980-81ல் ரூ. 29.61 இலட்சம் நிகர ஆதாயம் கிட்டியது. 31-3-1981 வரை ஏற்பட்ட இழப்பு குறித்த தொழிற்பிரிவு வாரியான விவரம், அதற்கான காரணங்கள் ஆகியவை தனித் தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஆலங்குளம் சிமெண்ட்ஸ் நிறுவனம்.

31-3-1976 வரை இத்தொழிற்பிரிவு 'டிட்கோவின்' கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. 1-4-1976-லிருந்து இது, தமிழ்நாடு சிமின்ட்ஸ் நிறுவனத்திற்கு (டிட்கோவின் கிளை நிறுவனம்) மாற்றப்பட்டது. தண்ணீர், நிலக்கரி, மின்சக்தி ஆகியவை பற்றாக்குறை, ஏற்பட்டதன் காரணமாக, 31-3-1976 வரை ரூ. 169.39 இலட்சம் இழப்பு ஏற்பட்டது.

2. தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்.

இந்நிறுவனம், 1973-74-இல் ரூ. 12.34 இலட்சம் 1980-81-ல் ரூ. 43.22 இலட்சம் ஆதாயத்தில் செயல்பட்ட போதிலும் 31-3-1981 வரையிலான கால அளவில் ரூ. 412.33 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்கான பெருமளவு மூலதனச் செலவு உயரளவு மின் கட்டணம், அரசுத் துறைகளுக்கு நிறுவனங்களுக்கு இரும்புக்கம்பி, பட்டை முதலியவற்றை ஆலை வாயில் விலைக்கே வழங்குதல் (இது உற்பத்திச் செலவு, வெளி அங்காடி விலையைக் காட்டிலும் குறைவு) ஆகியவற்றின் காரணமாகவே இத்தொழிற் பிரிவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. உற்பத்திச் செலவு. பங்குத் தொகைக்கு நியாயமான ஆதாயம் ஆகியவற்றின் அடிப்படையில் உருக்கு பொருள்களை விலையிட தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திற்கு இயலும் வகையில் அரசு 1979 டிசம்பரில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. 1981-82, 1982-83-இல் இத்தொழிற்பிரிவு ஆதாயத்தில் செயல்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

3. வளர்ச்சிப் பிரிவு.

அரசிடமிருந்து கடனாகப் பெற்ற தொகைகளை முதலீடு செய்ததும், பல்வேறு கூட்டுத்துறை பொதுத்துறை தொழிற்சாலைகளின் மூலதனப் பங்கில் கடனீட்டுறுதிப் பத்திரங்கள் வெளியிடுதல் ஆகியவற்றின் காரணமாக 31-3-1981 வரை ரூ. 20.61 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 'டிட்கோ' மேற்கு கொண்ட தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அவற்றின்



வளர்ச்சிக்கால அளவு நீட்டதாய் உள்ளதும் இழப்பிற்குக் காரணமாகும். இம்முயற்சியின் பயனாய், 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில் சிறு அளவு ஆதாயம் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. கூட்டுத்துறைத் தொழிற்சாலைகள்.

உற்பத்தியிலுள்ள 15 கூட்டுத்துறைத் தொழிற்சாலைகளில் பின்வரும் தொழிற்சாலைகள் முந்தைய கணக்காண்டில் ஆதாயத்தில் செயல்பட்டன :

(அ) சதர்ன் பெட்ரோகெமிக்கல்ஸ் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.

(ஆ) பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட்.

(இ) தமிழ்நாடு தாதா பார்மசூடிகல்ஸ் லிமிடெட்.

(ஈ) டைனாவிசன் லிமிடெட்.

(உ) ஏசியா டொபாக்கோ கம்பெனி லிமிடெட்.

(ஊ) கிரேட் சீ டிராலர் பில்டிங் யார்டுமண்டபம் லிமிடெட்.

(எ) அரக்கோணம் கேஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங்ஸ் லிமிடெட்.

(ஏ) இன்டர் கான்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட்.

(ஐ) தமிழ்நாடு கெமிகல் பிராடக்ஸ் லிமிடெட்.

எஞ்சியுள்ள தொழிற்சாலைகளும் ஆதாயத்தில் செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. மாநிலத்திற்கு திட்டப் பயன்கள்.

ரூ. 316.82 கோடி மூலதனச் செலவில் பொதுத்துறையிலும் கூட்டுத்துறையிலும் 33 தொழிற்சாலைகள் வளர டிட்கோ ஒரு சாதனமாய் அமைகிறது. மேலும், நடுத்தர, சிறு தொழில்கள்

குடிசைத் தொழில்கள் ஆகியவற்றிற்குப் பெரிதும் தேவைப்படக் கூடிய மூலப் பொருள்களை வழங்குவதற்காக, இம்மாநிலத்திலுள்ள இயற்கை வாயில்களைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் ரூ. 172.42 கோடி கூடுதல் செலவில் பொது, கூட்டுத்துறையின் கீழ் மேலும் 18 தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி அளித்திடவும் கூடுதல் வேலைவாய்ப்பளிக்க இம்மாநிலத்தில் தொழில் மேம்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. விற்பனை வளர்ச்சியை வரி வசூல் வாயிலாக மாநிலக் கருவூலத்திற்குக் கணிசமான தொகை கிடைக்கிறது. இவை தவிர, டிட்கோ வின் தொழிற்சாலைகள் ஆயத்தீர்வை வசூல், வருமான வரி முதலியவற்றின் வாயிலாகத் தேசிய கருவூலத்திற்கும் தொகை அளிக்கின்றன. சில பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதும் இதனால் குறைந்துள்ளது. டிட்கோவின் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சில பொருள்கள் ஏற்றுமதி செய்யப் படுவதன் மூலம் அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது.

7. வேலை வாய்ப்பு.

டிட்கோ, சுமார் 10,298 பேருக்கு நேரடி வாய்ப்பு கிட்டச் செய்ததன் மூலம் வெற்றி கண்டுள்ளது. விவரம் வருமாறு :

| விவரங்கள். | எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 31–3–1981 முடிய உற்பத்தி தொடங்கிய தொழிற் சாலைகளில் வேலைவாய்ப்பு . . . . . | 7,992 |
| 1981–82-இல் உற்பத்தி தொடங்குமென எதிர்ப் பார்க்கப்படும் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு | 2,306 |
| | 10,298 |

நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்கள், பரிசீலனையில் உள்ள திட்டங்கள் ஆகியவற்றில் 7,470 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கவும் டிட்கோ கருதியுள்ளது.

8. வருங்கால திட்டங்கள்.

பொது, கூட்டுத்துறையில் தொழில்களை நிறுவுவதில் டிட்கோ கணிசமான அளவிற்கு அனுபவம் பெற்றதன் காரணமாக, தமிழக அரசிடமிருந்தும் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி



பெறுவதன் மூலம் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம் படுத்த பெரிய அளவிலான தொழிற்சாலைகளை நிறுவ, டிட்கோ தற்போது கருதி வருகிறது. புதிய தொழில்களை நிறுவக் கருதும் தொழில் முனைவர்களுக்கு சிக்கனச் செலவிலும், பல னளிக்கத்தக்க வகையிலும் ஆலோசனை, தொழில் நுட்பப் பணி களை நல்குவதன் மூலம் தனது நடவடிக்கைகளைப் பல்திரப் படுத்தவும் டிட்கோ கருதிவருகிறது. இவ்வாறாக, மாநிலத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்கு டிட்கோ தனது பங்கை ஆற்றுகிறது.

இணைப்பு—1.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பொதுத் துறைத் தொழிற்சாலைகள் குறித்த விவரங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண். | தொழிற்சாலையின் பெயர், அது அமையும் இடம் முடிவு செய்யப் பட்டிருப்பின் அது உற்பத்தி தொடங்கிய நாள் உற்பத்தி தொடங்கப்பட்டிருப்பின்) | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித்திறன் (முடிவு செய்யப்பட்டிருப்பின்) உற்பத்திப்பிரிவுகளைப் பொறுத்த வரையில் 1980–81-ல் அதன் உற்பத்தி. | திட்டச் செலவு. | ஈடுசெய் கடன் உட்பட 31–3–1981 வரை டிட்கோவின் முதலீடு. | 1981–82 திருத்த மதிப்பீடு 1982–83 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய வற்றிற்கிணங்க டிட்கோவின் மூலதனச் செலவு. 1981–82 திருத்த மதிப்பீடு. | 1982–83 வரவு–செலவு திட்ட மதிப்பீடு. | உற்பத்தியிலுள்ள தொழிற்சாலை களில் வேலைக் கமர்த்தப்பட்டு உள்ளவர்களின் எண்ணிக்கை பிற தொழிற்சாலை களில் வேலை வாய்ப்புத்திறன். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). | (ரூபாய் இலட்சத்தில்) | (ரூபாய் இலட்சத்தில்). | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள்.— | | | | | | | |
| 1. | தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம் (1972 சூலையில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | உருக்குப் பாலங்கள் ஆண்டுக்கு 36,000 டன் (1980–81 ல் உற்பத்தி 27,511 டன்) 1981–82 1982–83 முறையே உற்பத்தி 30,000 டன், 32,000 டன் எதிர்பார்க்கப்படுகிறது. | 712.96 | 666.54 | 65.00 | .. | 640 |
| 2 | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சிமெண்ட் தொழிற்பிரிவு ஆலங்குளம்* (1970 சூலையில் உற்பத்தி தொடங்கப் பட்டது). | சிமெண்ட்ஸ், ஆண்டிற்கு 4 இலட்சம் டன் (1980–81-ல் உற்பத்தி—301, 148 டன், 1981–82-ல் 3,10,000 டன், 1982–83 ல், 3,50,000 டன் உற்பத்தி எதிர்ப் பார்க்கப்படுகிறது. | 686.09 | 1,633.87 | .. | .. | 1,637 |
| 3 | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சிமெண்ட் தொழிற் பிரிவு அரியலூர் (1979 ஆகஸ்டில் உற்பத்தி தொடங்கப்பட்டது.) | சிமெண்ட் ஆண்டிற்கு 5 லட்சம் டன் (1980–81-ல் உற்பத்தி 2,46,783 டன், 1981–82 ல் 3,20,000 டன், 1982–83-ல் 4,25,000 டன் உற்பத்தி எதிர் பார்க்கப்படுகிறது. | 2,888.95 | .. | .. | .. | [illegible] |
| 4 | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் கல்நார் தகடுத் தொழிற்பிரிவு—கல் நார் தகடு தயாரிப்புத் தொழிற்சாலை, ஆலங்குளம் (1981 செப்டம்பரில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | கல்நார் சிமெண்ட் தகடு—ஆண்டிற்கு 36,000 டன் (1981–82 ல் 8,000 டன் 1982–83-ல் 30,000 டன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. | 247.00 | 62.00 | 7.00 | .. | 103 |
| நிறைவேற்றப்பட்டுவரும் தொழிற்சாலைகள்: | | | | | | | |
| 1 | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சிமெண்ட் தொழிற் பிரிவுகளை நவீன படுத்துதல், ஆலங்குளம் (1982 மார்ச்சில் முடிக்கப்பெறுமென எதிர் பார்க்கப்படுகிறது.) | நவீனப்படுத்துதல். | 301.00 | 87.00 | .. | .. | .. |

மேற்கொள்ளப்பட உள்ள பரிசீலனையிலுள்ள தொழிற் பிரிவுகள்;

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மக்னீசியம் மெட்டல் பிராஜெக்ட்ஸ் மரியூர், இராமநாதபுரம் மாவட்டம் (1983–84ல் உற்பத்தித் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.). | மக்னீசியம் உலோகம் ஆண்டிற்கு *600 டன் (விமானம் தயாரித்தல், கட்டுமான. அலுமினியம் விண் வெளி ஆராய்ச்சி உலோகவியல் துறை ஆகியவற்றில் பயன் படுத்தப்படுகிறது. | 450.60 | 14 | 15.00 | 50.00 | 200 |
| 2 | ஓயர் ராடு மில் பிராஜெக்ட், அரக் கோணம் (1983–84ல் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப் படுகிறது. | ஸ்டீல் கம்பி முதலியன. ஆண்டிற்கு 25,000 டன். | 400.00 | 0.02 | 50.00 | 45.00 | 1,00 |
| 3 | தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம் விரிவாக்கம் (கூடுதல் உலை அமைத் தல்) (1983–84-ல் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படு கிறது.) | எக்கு குண்டுகள்—ஆண்டுக்கு 50,00 டன். | 500.00 | .. | 5.00 | 50.00 | 100 |
| 4 | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்— கல்நார் பைப் தொழிற்சாலை— அரியலூர் (1983–84ல் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப் படுகிறது.) | கல்நார் குழாய்கள்—ஆண்டிற் 36,000 டன். | 700.00 | .. | 10.00 | 90.00 | 300 |
| 5 | தொழிற்சாலை வெடிமருந்துத் திட் டம், பனமாதங்கி ஒதுக்கக்காடு, காட்பாடிக்கு அருகே (1983–84ல் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.) | தொழிற்சாலை வெடி மருந்துகள்— 10,000 (சுரங்கப்பணி கிணறு தோண்டுதல் சுரங்கப் பாதை அமைத்தல் முதலிய கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படு கிறது). | 1,986.00 | 4.29 | 100.00 | 150.00 | 300 |
| 6 | வெடிமருந்துகள்—வெடிமருந்து வத்தி கள் திட்டம் (1983–84-ல் உற்பத்தி யைத் தொடங்குமென எதிர்பார்க் கப்படுகிறது.) | வெடிமருந்துகள்—40 மில்லியன் வெடிமருந்து வத்திகள்—10 மில்லி யன் மீட்டர்கள். | 375.00 | .. | 10.00 | 75.00 | 150 |
| | | | 9,247.51 | 2,457.86 | 262.00 | 460.00 | 4,537 |

* இத்திட்டங்கள் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளன.

## இணைப்பு

### தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டுத்துறைத் திட்டங்களின் 2. விவரங்களைக் காட்டும் அட்டவணை :

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயர், அதன் அமைவிடம் முடிவு செய்யப்பட்டுவிட்டால் அந்த அமைவிடம், உற்பத்தி தொடங்கி விட்டால், அவ்வாறு உற்பத்திப் தொடங்கிய நாள். | உற்பத்திப் பொருளின் பெயர், உற்பத்தித் திறன் முடிவு செய்யப்பட்டுவிட்டால், ஆண்டு உற்பத்தித் திறன், உற்பத்திப் பிரிவுகள் 1980-81-ல் செய்த உற்பத்தி. | திட்டச் செலவு (இலட்சம் ரூபாயில்.) | "டிட்கோ" வின் பொறுப்பு (இலட்சம் ரூபாயில்) | *முடிசெய் கடன் உட்பட "டிட்கோ" 31—3—1981 வரை செய்த முதலீடு (இலட்சம் ரூபாயில்) | 1981–82 திருத்த மதிப்பீடு 1982–83 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின்படி டிட்கோவின் முதலீடு (இலட்சம் ரூபாயில்). 1981–82 திருத்த மதிப்பீடு. | 1982–83 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | உற்பத்தியை தொடங்கிவிட்ட திட்டங்களில் பணிபுரியும் ஆட்களின் எண்ணிக்கையும் பிற திட்டங்களில் வேலைவாய்ப்பும். | 1980–81-ல் ஈட்டிய நிகர இலாபம் (இலட்சம் ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. உற்பத்தி தொடங்கிவிட்ட பிரிவுகள் : | | | | | | | | |
| 1 ஸதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம் (1975 ஜூனில் உற்பத்தி தொடங்கியது). | யூரியா-5, 12,000 TPA DAP—73,600 கந்தக அமிலம்—1,50,000 TPA பாஸ்பரிக் அமிலம்—52,800 TPA1980–81-ல் உற்பத்தி : யூரியா—4,38,450 டன் TPA —1,39,135 டன். | 10,508.00 | 500.00 | 725.00 | .. | .. | 2,079 | 1,463·00 |
| 2 தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம் (1975 அக்டோபரில் உற்பத்தி தொடங்கியது). | பி.சி.டி. தூள்—3,300 டன் சோடியம்-டை-குரோமேட்—4,315 டன், இவை தோல் *பதனிடுதல், காகிதம் தயாரித்தல், மற்றும் சலவை சோப்புகள் தயாரித்தல் ஆகியவற்றுக்குப் பயன் படுத்தப்படுகின்றன ; (1980–81-ல் ஆன உற்பத்தி : பி.சி.டி. தூள்—1,482 டன் சோடியம் குரோமேட்—631 டன் ; சோடியம் சல்பேட்—3,400 டன்). | 191.35 | 10.40 | 10.40 | 40.00 | 25.00 | 554 | நட்டம் ஏற்பட்டது. (தனித்தியங்கும் திறமையை மேம்படுத்துவதற்காக நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றை இந்நிறுவனம் வகுத்து வருகிறது.) |
| 3 பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட், நரசிங்கப்பட்டி இராமம், மதுரை மாவட்டம் (1975 ஜூலையில் உற்பத்தி தொடங்கியது) இந்நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனமான திருவாளர்கள் தமிழ்நாடு குளோரேட்ஸ் லிமிடெட் 1982 மார்ச்சில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர் | பொட்டாசியம் குளோரேட்—4,825 டன் (தீக்குச்சி தயாரிப்பு தொழிலில் மூலப் பொருளாகப் பயன்படுத்தப் படுகிறது) (1980–81-ல் உற்பத்தி 2,236 டன்). | 91.95<br>— | 6.24 | 6.24 | .. | .. | 152 | 29.79 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 தமிழ்நாடு தாதா பார்ம ஸீடிகல்ஸ் லிமிடெட், பல்லாவரம் செங்கல்பட்டு மாவட்டம்(தற்போது செயல்பட்டு வரும் நிறுவனம் 24-3-73-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. | மருந்துகள், மருந்து தயாரிப்பதற்கான பொருள்களும் (1980–81-ல் உற்பத்தி ரூ. 535 இலட்சம்). | 244.91 | 23.40 | 33.40 | .. | .. | 503 | 3.01 |
| 5 சதர்ன்போராக்ஸ் லிமிடெட் தச்சூர் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம் (1976 ஜனவரியில் உற்பத்திதொடங்கியது). | போராக்ஸ்-15,000 டன், போரிக் அமிலம்-3,000 டன் (கண்ணாடி, மட்பாண்டம், இழைக் கண்ணாடி, மருந்துப் பொருள் நுண் சத்துணவு தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. (1980–81-ல் ஆன உற்பத்தி : போராக்ஸ் 2,210 டன், போரிக் அமிலம் 108 டன்.) | 124.15 | 12·18 | 50.18 | 2.78 | .. | 69 | நட்டம் ஏற்பட்டது (ஆதாயத்தை பெருக்குவதற்காக இந் நிறுவனம் பலதிறப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.) |
| 6 டையனாவிசன் லிமிடெட், அடையாறு, சென்னை (1975 ஜூனில் உற்பத்தி தொடங்கியது). | தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆண்டுக்கு ஒன்றுக்கு 20,000 (1980-ல் ஆன உற்பத்தி 20,922). | 75.00 | 10.00 | 13.50 | 3.00 | (—)6.50 | 362 | 16.08 |
| 7 ஆசியா டொபாக்கோ அண்டு கோ லிமிடெட், மூக்காண்டபள்ளி, தருமபுரி மாவட்டம் (1973 ஜூனில் உற்பத்தி தொடங்கியது). | சிகரெட்டுகள்—450 மில்லியன் | 154.13 | 25.80 | 29.80 | (—) 2.74 | (—)4.00 | 268 | 13.00 |
| 8 தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரீஸ் லிமிடெட், தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை (1976 ஜனவரியில் உற்பத்தி தொடங்கியது). | நிக்கல் காட்மியம் பேட்டரீஸ் 50 இலட்சம் ஆம்பயர் மணி (பாதுகாப்புத்துறையிலும், இரயில்வே துறையிலும் பயன்படுத்தப்படுகிறது). | 114.69 | 16.00 | 29.34 | 10.79 | .. | 26 | நட்டம் ஏற்பட்டது (இந்நிறுவனத்தின் புத்துயிரூட்டும் திட்டம் 1982 மார்ச்சில் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது). |
| 9 கிரேட் சீ ட்ராலர் பில்டிங் யார்டு மண்டபம் லிமிடெட், மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம் * (முதல் கட்ட உற்பத்திப் பணி 1976 ஜனவரியில் தொடங்கியது). | மீன்பிடி இழு படகுகள்—16 | 21.00 (முதல் கட்டம்.) | 1.88 | 2.89 | (—) 1.10 | 5.00 (இரண்டாவது கட்டம்) | 56 | 3.96 |
| 10 மார்த்தி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட், திருப்போரூர், செங்கல்பட்டு மாவட்டம் (1976 ஜனவரியில் உற்பத்தி தொடங்கியது). | தொழிற்சாலை உப்பு 1,20,000 டன். | 65·00 | 6.50 | 12.08 | .. | .. | 72 | நட்டம் ஏற்பட்டது. |
| 11 அரக்கோணம் காஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங் லிமிடெட், அரக்கோணம், வட ஆற்காடு மாவட்டம் (1977 ஏப்ரலில் உற்பத்தி தொடங்கியது), | கனரக வார்ப்புகள், 1000 TPA (இயந்திரங்களில் துணைப் பாகங்களாகப் பயன்படுத்தப்படுகிறது). | 75.00 | 17.50 | 17.50 | .. | .. | 68 | 7.03 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12 தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ஸ் லிமிடெட், காலனி வாசல் கிராமம், இராமநாதபுரம் மாவட்டம் (1977 டிசம்பரில் உற்பத்தி தொடங்கியது). | சோடியம் ஹைடிரோ சல்பேட்-3,300 டன் திரவ சல் பர்டை-ஆக்ஸைடு-4,950 டன் (துணித் தொழிலில் சலவை, சாயமிடுதல், பட்டை போடுதல் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது) (1980–81-ல் ஆன உற்பத்தி சோடியம் ஹைடிரோ சல்பேட்-2,764 டன் திரவ சல் பர்-டை ஆக்ஸைடு 2,834 டன்). | 756.00 | 51.30 | 103.30 | . | .. | 243 | ஆதாயம் ஈட்டியது. |
| 13 இன்டர் கான்டினென்டல் லெதர் லிமிடெட், சிப்காட் தொழில்பேட்டை, ராணிப் பேட்டை, வட ஆற்காடு மாவட்டம் *(1979 ஜூனில் உற்பத்தி தொடங்கியது). | வேலை நிறைவுபெற்ற தோல்கள் 9 இலட்சம். | 120.00 | 10.40 | 10.40 | . | .. | 92 | 20 |
| 14 சதர்ன் ஹைடிரோ கார்பன்ஸ் லிமிடெட், கொளத்தூர் கிராமம், புதுக்கோட்டை மாவட்டம்* (1980 மார்ச்சில் உற்பத்தி தொடங்கியது). | அசிட்டிக் அன்ஹைடிரைடு-1,000 டன், அசிட்டிக் விமி அமிலம் 1,000 டன் (சாயப் பொருள்களிலும். பிளாஸ்டிக் மருந்துகள், மருந்துப் பொருள்கள் முதலியன தயாரிக்கவும் பயன்படுத்தப் படுகிறது). | 220.00 | 15.60 | 97.29 | .. | .. | 61 | நட்டம் ஏற்பட்டது. |
| 15 கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட், வடகுட்டு கிராமம், தென் ஆற்காடு மாவட்டம் (1982 ஜனவரியில் உற்பத்தியை தொடங்கியது). | அச்சுக் காகிதங்களும் எழுதும் காகிதங்களும் ஒரு நாளைக்கு 10,000 டன். | 544·00 | 43.00 | 42.90 | 30.00 | (−) 30.00 | 326 | தற்போது தான் உற்பத்தியை தொடங்கியுள்ளது. |
| | செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் | | | | | | | |
| 1 அசிட்லைன் அண்டு இண்டஸ்டிரியல் கேஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட், தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது). | அசிட்லைன் கேஸ் சிலிண்டர்கள் ஓராண்டிற்கு 25,000. | 61.30 | 6.50 | 19.50 | — | .. | 80 | .. |
| 2 சதர்ன் அக்ரிபர்ன் இண்டஸ்டிரிஸ் லிமிடெட், முன்டியம்பாக்கம், தென் ஆற்காடு மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது). | பர்பூரல் - ஆண்டொன்றுக்கு 3,000 டன் (எண்ணெயை சுத்திகரிக்கவும் பிசின் தயாரிக்கவும் பெயிண்ட் தயாரிக்கவும் பயன்படுத்தப் படுகிறது). | 939.00 | 6[illegible].75 | 47.94 | 15.86 | .. | 180 | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 ஆசியன் பேரிங்ஸ் லிமிடெட், பகலூர் கிராமம், தருமபுரி மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.) | பல்வேறு வகையிலான பேரிங்குகள்-ஆண்டொன்றுக்கு 4.2 மில்லியன் துண்டுகள். | 1,637.57 | 130.00 | 65.22 | 64.78 | .. | 650 | .. |
| 4 மதராஸ் ஷூ பேபிரிக்ஸ் லிமிடெட், வாலாஜாபேட்டை வட ஆற்காடு மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது). | ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் ஷூ ஜோடிகள் (ஏற்றுமதிக்காக). | 96.50 | 8.45 | 3.76 | 7.56 | .. | 300 | .. |
| 5 தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட், மணலூர் கிராமம், இராமநாதபுரம் மாவட்டம்* (1983–84-ல் உற்பத்தியை தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது). | அலுமினிய ப்ளோரைடு—ஆண்டொன்றுக்கு 6,000 டன் (அலுமினியம் தயாரிக்கப் படுகிறது). | 1,609.00 | 164.00 | 159.15 | 9.22 | .. | 510 | .. |
| 6 ஏசியா கார்பன் லிமிடெட், சிப்காட் தொழில் தொகுதி ஒசூர், தருமபுரி மாவட்டம்* (1983–84-ல் உற்பத்தியை தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது). | கார்பன் துண்டுகள்—ஆண்டொன்றுக்கு 10,400 டன் (பல்வேறு தொழில்களில் பயன்படுத்தப்படுகிறது). | 1,142 | 110.50 | 17.39 | 40.00 | 47.61 | 300 | .. |
| 7 வானவில் டைஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், கூடைக்காடு கிராமம், தென்னாற்காடு மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியை தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது). | நெப்தால்ஸ் அண்டு கலர்-சாயங்கள் ஆண்டொன்றுக்கு 450 டன் (துணி, தோல், பேப்பர், பிளாஸ்டிக் முதலிய தொழில்களில் பயன்படுத்தப் படுகிறது). | 406.00 | 41.60 | 89.06 | 82.57 | .. | 180 | .. |
| 8 தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட், தூத்துக்குடி திருநெல்வேலி மாவட்டம் (1982 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது). | சோடா ஆஸ்—ஆண்டொன்றுக்கு 66,000 டன் அம்மோனியம் குளோரைடு, ஆண்டொன்றுக்கு 66,000 டன் (கண்ணாடி, காஸ்டிக் சோடா சோடியம் சிலிகேட் துணிகள், பேப்பர், மரக்கூழ் போன்ற பலத் தொழில்களில் சோடா ஆஸ் பயன்படுத்தப்படுகிறது. அம்மோனியம் குளோரைடு முக்கியமான உரமாக பயன்படுத்தப்படுகிறது). | 5,320.00 | 789.00 (ரூபாய் கடன் உள்பட). | 563.35 | 175.65 | 50.00 | 490 | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9. ஷிப் ஸ்டீல்ஸ் (இந்தியா) லிமிடெட், வளைநோக்கம், இராமநாதபுரம் மாவட்டம்—* (1982-83-ல் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.) | கப்பல்களை உடைத்து இரும்பு, இரும்பல்லாத பொருள்களை பிரித்தல்-ஓராண்டிற்கு 4 கப்பல்கள். | 50.00 | 5.20 | 0.97 | 4.23 | .. | 250 | .. |
| 10. மல்லாடி டிரக்ஸ் அண்டு பார்மாசுடிகல்ஸ் லிமிடெட் சிப்காட் தொழில் தொகுதி, இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்* (1982 மார்ச்சில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.) | இப்ஹரின் அஹட்ரோ குளோரைடு ஆண்டொன்றுக்கு 33 டன் (காச நோய் சம்பந்தமான சிகிச்சைக்கு இன்றியமையாத மருந்தாகும்). | 134.00 | 12.00 | 13.17 | 12.06 | .. | 100 | .. |
| 11. ஆடோமோடிவ் காஸ்டிங்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை (1985-86-ல் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.) | கிரே இரும்பு வார்ப்புகள் ஆண்டொன்றுக்கு 20,000 வார்ப்புகள் (மோட்டார் தொழில்களுக்கு பயன்படுத் தப்படுகிறது.) | 1,800.00 | 156.00 | 1.34 | 25.27 | 57.34 | 400 | .. |
| 12. கமார் கெமிகல்ஸ் அண்டு இண்டஸ்டிரிஸ் லிமிடெட், சிப்காட் தொகுதி, இராணிப் பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்– (1982-83ல் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது). | சல்பூரிக் ஆசிட் ஆண்டொன்றுக்கு 33,000 டன் (உரங்கள் பெட்ரோலிய இரசாயன பொருட்கள் சின்தடிக் டிடர்ஜண்ட் முதலியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.) | 196.00 | 15.50 | .. | 15.50 | .. | 60 | .. |
| 13. பைபர் பைப்ஸ் இந்தியா லிமிடெட், விழுப்புரம் அருகே, தென்னாற்காடு மாவட்டம் (1983-84-ல் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.) | பிச்பைபர் டியூப்கள் ஆண்டொன்றுக்கு 6,220 டன். | 150.00 | 15.60 | .. | .. | .. | 300 | .. |
| 3. செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட வேண்டியுள்ள பரிசீலனையிலுள்ள திட்டங்கள்.— | | | | | | | | |
| 1. இரசாயன சாதனங்கள் திட்டம். | தனிப்பொருட்களுடன் இரசாயன சாதனங்களை நிறுவுதலும், கட்டுதலும். | 100.00 | 10.00 | 0.01 | 5.00 | [illegible].99 | 400 | .. |
| 2. பென்டாயரித்ரோடல் திட்டம். | பென்டயரித்ரோடல் ஆண்டொன்றுக்கு 3,000 டன், சோடியம் பார்மோட் ஆண்டொன்றுக்கு 1,800 டன். | 1,200.00 | 120.00 | 0.32 | 9.68 | 50.20 | 400 | .. |
| 3, பேட்டி அச்சிடு திட்டம் | பேட்டி அசிடு ஆண்டொன்று 1,000 டன் ஸ்டெரிக் அசிடு ஆண்டொன்றுக்கு 4,500 டன் கிளைசிரின் ஆண்டொன்றுக்கு 900 டன், | 450.00 | | | | | | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. பெட்டி அசிடு திட்டம். | பெட்டி அசிடு ஆண்டொன்றுக்கு 12,000 டன், ஸ்டெரிக் அசிடு ஆண்டொன்றுக்கு 4,500 டன், கிளைசிரின் ஆண்டொன்றுக்கு 900 டன். | 450.00 | 40.30 | 0.20 | 10.00 | 30.10 | 150 | .. |
| 4. ரிப்ராகட்டரிஸ் திட்டம். | ரிப்ராகட்டரிஸ் ஆண்டொன்றுக்கு 1,20,000 டன். | 1,500.00 | 150.00 | 5.65 | 17.06 | 45.00 | 900 | .. |
| 5. மூக்குக் கண்ணாடிப் பொருட்கள் தயாரிக்கும் திட்டம். | ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் பொருட்கள். | 200.00 | 20.00 | 0.34 | 0.98 | 18.68 | 300 | .. |
| 6. கைக்கடிகாரம் தயாரிக்கும் திட்டம். | கடிகாரங்கள் ஆண்டொன்றுக்கு 20 இலட்சம். | 3,5200.00 | 350.00 | 0.68 | 1.00 | 25.00 | 1,200 | .. |
| 7. 2-எதில் அக்ஸ்னால் திட்டம். | 2-எதில் அக்ஸ்னால் ஆண்டொன்றுக்கு 1,000 டன். | 1,800.00 | 180.00 | 0.30 | 15.00 | 25.00 | 500 | .. |
| 8. அமோனியம் நைட்ரேட் அண்டு நைட்ரிக் அசிடு திட்டம். | அம்மோனியம் நைட்ரேட் ஆண்டொன்றுக்கு 24,000 டன்-நைட்ரிக் அசிடு (ஆடர் கடைசலாக்கப்பட்டது) ஆண்டொன்றுக்கு 24,000 டன். | 1,100.00 | 184.00 | .. | 20.00 | 50.00 | 200 | .. |
| 9. ப்ரோபைலின் அடிப்படையிலான இரசாயனப் பொருள்திட்டம். | ஐசோப்ரோபைல் ஆல்கஹால் ஆண்டொன்றுக்கு 10,000 டன், ப்ரோபைலின் ஆக்சைடு ஆண்டொன்றுக்கு 10,000 டன்,—ப்ரோபைலின் கிளைகோல்ப்லோயிலஸ் ஆண்டொன்றுக்கு 12,500 டன். | 2,300.00 | 253.00 | .. | .. | 2.00 | 650 | .. |
| 10. ஏனைய திட்டங்கள் (6-வது பத்தியில் உள்ள இலக்கங்கள் தமிழ்நாடு ரப்பர் நிறுவனம் தமிழ்நாடு இண்டர்நேஷனல் எலட்ரானிக் நிறுவனம், முதலியன உள்ளிட்டவையாகும்.) | .. | .. | .. | 54.72 | 3.25 | 30.00 | .. | .. |
| | மொத்தம் .. | 38,996.55 | 3,575.60 | 2,226.75 | 617.39 | 425.40 | 132.31 | .. |

*இத்திட்டங்கள் பின்தங்கிய பகுதிகளில் உள்ளன.

[1982 மார்ச் 19

1981-82 திருத்த மதிப்பீடு, 1982-83 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின்படி நிதி ஆதாரங்களும் நிதி செலவிடப் பட்டமையும் குறித்த விவர அறிக்கை.

(ரூபாய் இலட்சத்தில்).

| விவரங்கள். (1) | 1981-82 திருத்த மதிப்பீடு. (2) | 1982-83 வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு. (3) |
|---|---|---|
| நிதி ஆதாரங்கள்— | | |
| ஏப்ரல் 1 ஆம் நாள் நிலவரப்படி தொடக்க இருப்பு (குறுகிய கால நிகர முதலீடுகள் உள்பட) | 313.82 | 8.67 |
| அரசிடமிருந்து மூலதனப் பங்குத்தொகை. | 500.00 | 700.00 |
| அரசிடமிருந்து கடன் .. .. | 90.00 | |
| உத்தரவாகக் கடனீட்டுப் பத்திரங்களின் உயர்வு. | 82.50 | .. 100.00 |
| தமிழ்நாடு சிமெண்ட் கழகம் குறுகிய காலம் கடனைச் திருப்பிச் செலுத்தியது. | 150.00 | 100.00 |
| நிறுவனத்திற்குள்ளேயே திரட்டப்பட்டமை நடைமுறை மூலதனத்தில் குறைவு. | 110.00 | 12.00 |
| | 1,246.32 | 920.67 |
| நிதிகள் பயன்படுத்தப்பட்டமை— | | |
| பதிவு அலுவலகம்-நிலைச் சொத்துக்களில் சேர்க்கப் பட்டமை. | 2.50 | 2.00 |
| பொதுத் துறை நிறுவனங்களுக்குக் கொடுத்துள்ள தொகை. | 262.00 | 460.00 |
| கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு கொடுத்துள்ள தொகை. | 617.39 | 425.42 |
| | 881.89 | 887.42 |



1982 மார்ச் 19]

| | | |
|---|---|---|
| அரசுக்கு வழிவகை முன்பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டமை. | 300.00 | .. |
| அரசுக்கு கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டமை. | 5·26 | 5·26 |
| குறித்த கால வைப்பீடுகள் (நிகரம்) திருப்பிக் கொடுக்கப் பட்டமை. | 50.00 | 20.00 |
| தள்ளிவைக்கப்பட்ட அன்னிய கடன் திருப்பிக் கொடுக்கப் பட்டமை. | 0.50 | .. |
| மார்ச் 31 ஆம் நாள் நிலவரப் படி இறுதி இருப்பு. | 8.67 | 7.99 |
| | 1,246.32 | 920.67 |

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்.

பொது :

1.1. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினரால் (டிட்கோ) அதனுடைய முழுதும் உடைமை ஆக்கப்பட்ட ஒரு கிளையாக 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது.

1.2. அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாகப் பத்துக்கோடி ரூபாய்களுடன் துவங்கப்பட்ட இக்கம்பெனியின் பங்கு மூலதனம் 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பதினோரு கோடிக்கு உயர்த்தப்பட்டது. மேலும் 1980 ஆம் ஆண்டு சனவரியில் பன்னிரண்டரைக் கோடிக்கு அதிகரிக்கப்பட்டது. இந்தப் பங்கு மூலதனத்தில் ரூ. 11·81 கோடிகள் இது வரையில் மூலதன மாகச் செலுத்தப்பட்டுவிட்டன.

1.3. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தன்னுடைய வாணிபத்தை 1-4-1976 முதல் செயல்படுத்தத் தொடங்கியது. இக் கம்பெனியின் முக்கிய நோக்கம் சிமெண்டைத் தயாரித்தல், அதனை விற்பனை செய்தல் மற்றும், சுண்ணாம்பு சுண்ணாம்

புக்கல் கிளிஞ்சர் சிமெண்ட் ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் அது சம்பந்தப்பட்ட சிமெண்ட்டு தயாரிப்பதற்குத் தேவையான வேறுவகைப் பொருட்களில் ஈடுபட்டு வருதலுமாகும். இக்கம்பெனி நிறைவேற்றிவரும் நோக்கங்கள் பின்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளன :—

2. இந்த ஆண்டின்போது வாணிப உற்பத்தி துவக்கப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்டு ஷீட் ஆலை உள்ளடங்கலாகத் தற்போது பின்வரும் மூன்று ஆலைகள் தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

| | உற்பத்திப் பொருள். | ஆண்டொன்றுக்கு அமைக்கப்பட்ட திறன். |
|---|---|---|
| (1) சிமெண்ட்டு ஆலைகள்— | | |
| 1. ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலை. | சிமெண்ட்டு | 4 லட்சம் டன்கள். |
| 2 அரியலூர். சிமெண்ட்டு ஆலை. | சிமெண்ட்டு | 5 லட்சம் டன்கள். |
| (2) ஆஸ்பெஸ்டாஸ் ஆலை— | | |
| 1. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ். | ஆஸ்பெஸ்டாஸ் ஸீட்டுகள் மற்றும் துணைப் பொருள்கள். | 36, 000 டன்கள். |

2.1. இவற்றோடு, தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தூத்துக்குடி மற்றும் பாண்டிச்சேரி துறைமுகங்களில் இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டைக் கையாண்டு வருகின்றது.

2.2. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆலங்குளத்தில் உள்ள சிமெண்டு ஆலையை நவீனப்படுத்துதல் மற்றும் அதன் மேம்பாட்டுத் திட்டத்தையும் நிறைவேற்றிவருகிறது.

2.3. மேலே கூறப்பட்ட திட்டங்களைத் தவிர, தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் பின்வரும் திட்டங்களையும் மேற்கொள்ள உத்தேசித்து உள்ளது :—

(1) மதுரை மாவட்டத்திலுள்ள பாளையத்தில் பெரிய ஒரு சிமெண்ட்டு ஆலைத் திட்டம்.

(2) ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம்.



3. ஆலங்குளம் சிமெண்டுத் தொழிற்சாலை:—

3.1. ஆலங்குளம் சிமெண்ட்டு தொழிற்சாலையானது 1964 ஆம் ஆண்டின்போது அப்போதைய தமிழ்நாட்டு அரசாங்கத்தின் தொழில் துறையில் தொடங்கப்பட்டது. இந்த ஆலையானது 1970 ஆம் ஆண்டின்போது வாணிப உற்பத்தியில் ஈடுபட்டது. இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்கள் சிமெண்ட்டு உற்பத்தி செய்யும் திறனுடையது. தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் இந்த ஆலையை டிட்கோவிடமிருந்து 1–4–1979 அன்று ரூ. 666 இலட்சம் நிகரக் கணக்கு மதிப்புக்கு எடுத்துக் கொண்டது. இப்போது ஆலங்குளம் ஆலை தனது 12 ஆண்டு பணியை நிறைவு செய்துள்ளது.

3.2. நடைமுறையில் செயற்படுத்தப்படுவதிலிருந்து, பல் வேறுபட்ட காரணங்களின் நிமித்தம், ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலை திட்டமிட்டப்படி தன் உற்பத்தியை எட்ட முடியவில்லை. மேலும், இந்த ஆலைக்காக நிர்ணயிக்கப்பட்ட இருத்தி வைப்பு விலையும் கூட போதுமானதாக இல்லை. இதன் விளைவாக, ஆரம்ப இரண்டு ஆண்டுகளில் ஈட்டிய சொற்ப இலாபத்தைத் தவிர, இத்தொழிற்சாலை தொடர்ந்து இழப்பில் இருந்திருக்கிறது. இந்த ஆலையின் சம்பந்தமான உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு. | ஆண்டின்போது உற்பத்தி. | ஆண்டின்போது விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (எண்ணிக்கை மெட்டிரிக் டன்னில்.) | |
| 1970–71 .. .. | 89,621 | 80,837 |
| 1971–72 .. .. | 3,06,093 | 3,08,068 |
| 1972–73 .. .. | 2,93,525 | 2,98,581 |
| 1973–74 .. .. | 2,80,382 | 2,78,980 |
| 1974–75 .. .. | 2,00,070 | 2,02,264 |
| 1975–76 .. .. | 2,62,729 | 2,58,032 |
| 1976–77 .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977–78 .. .. | 3,09,105 | 3,01,067 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1978–79 | .. | .. | 3,19,277 | 3,20,379 |
| 1979–80 | .. | .. | 2,74,400 | 2,77,655 |
| 1980–81 | .. | .. | 3,01,148 | 3,06,614 |

3.3. நாடளாவிய நிலக்கரிப் பற்றாக்குறை, மின்சாரத்தின் மீதான உயர்ந்தபட்சத் தேவையிலான தடை, உயிர் மின்சக்தி நுகர்பவர்கள் மீது கொண்டுவரப்பட்ட மின்வெட்டு, ரெயில்வே வண்டிகளில் குறைவிநியோகம் ஆகியவையே இந்தத் தொழிற் சாலையின் தாழ்மட்ட உற்பத்திக்குப் பெரும் புறக் கட்டுப் பாடுகளாக இருக்கின்றன. நிறுவனத்தினால் எடுக்கப்பட்டுள்ள தொடர் முயற்சிகளின் விளைவாக, 1981 ஜூலை முதல் நிலக்கரி விநியோகம் முன்னேற்றமடைந்துள்ளது.

3.4. 1981–82 என்னும் நடப்பு ஆண்டின்போது ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலையானது 3,11,200 மெட்ரிக் டன்கள் சிமெண்ட்டு உற்பத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. முந் தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு ஆண்டின் உற்பத்தி 10,000 மெட்ரிக் டன்கள் வரை அதிகமாக இருக்கும். நடப்பு ஆண்டின் முதல் காலாண்டின்போது ஏற்பட்ட பற்றாக்குறை இல்லாது இருந்திருக்குமானால், சிமெண்டு உற்பத்தி இன்னும் அதிகமாக இருந்திருக்கும். இந்த ஆலை 1982–83 ஆம் ஆண்டின் போது 3,65,000 மெட்ரிக் டன்களை உற்பத்தி செய்யத் திட்ட மிட்டுள்ளது.

3.5. இந்தப் பிரிவானது பிற்படுத்தப்பட்ட பகுதியில் 1,637 ஆட்களுக்கு நேரடி வேலை நியமனத்துக்கு வகைசெய்து கொண் டிருக்கிறது. மேலும், கச்சாப் பொருள்கள், உற்பத்தி செய்யப் பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான நேரடி யில்லாத வேலை நியமனத்துக்கும் பெருமளவில் வகைசெய்து கொண்டிருக்கிறது.

4. அரியலூர் சிமெண்ட்டு ஆலை :

4.1. அரியலூர் சிமெண்ட்டு தொழிற்சாலையானது உளலர் செய்முறை ஆலை (Lay Proces Plans) ஆகும். அது 2,876 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் டிட்கோவால் ஆதியில் துவங்கப்பெற்றதாகும். அது ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன்கள் நிறுவன உற்பத்தித் திறனுக்காக ஏற்படுத்தப்பட்டது. அந்தத் திட்டமானது, டிட்கோவிலிருந்து சம பங்களிப்புத் தொகையாக (Equity Contribution) ரூ. 575 இலட்சமும்



அனைத்து இந்திய நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் நிதி உதவி யாக ரூ. 1,800 இலட்சமும் ஐந்து வணிக வங்கியிடமிருந்து ரூ. 501 இலட்சமும் பெற்றுத் துவக்கப்பட்டதாகும். தமிழ்நாடு சிமெண்ட்டு தொடங்கப்பட்டதன் விளைவாக அரியலூர் சிமெண்ட்டு ஆலைத் திட்டமானது செயற்படுத்தப்பட்டது.

4.2. அந்தத் திட்டப்பணி அரியலூரில் 1977 ஆம் ஆண்டு சனவரியில் தொடங்கப்பட்டது. சிமெண்ட்டு உற்பத்தியானது 1–8–1979 இல் தொடங்கப்பட்டது. அரியலூர் சிமெண்ட்டு பணியானது குறிப்பிட்ட காலத்தில் அரைமில்லியன் டன் திட் டத்தினை நிறைவு செய்ததோடு அல்லாமல் அந்த ஆலைக்கு அடிக்கல் நாட்டி 30 மாதங்களுக்குள் வாணிக உற்பத்தியையும் தொடங்கிவிட்டது.

4.3. 1980–81 ஆம் ஆண்டின்போது இந்தத் தொழிற்சாலை 2,46,733 டன்கள் சிமெண்டுக்கு உற்பத்தி செய்தது. இந்த ஆலை செயல்படத் தொடங்கிய முதலாண்டின்போது புறக்கட்டுப் பாடுகளான நிலக்கரிப் பற்றாக்குறை, மின்சக்தியைப் பயன் படுத்துவதிலான தடைகள், நிலக்கரியைக் கொண்டு வருவதற்கும் சிமெண்டைக் கொண்டு செல்வதற்குமான இரயில்வே வண்டி களின் பற்றாக்குறைகள் முதலியவற்றுடன் இயந்திர இயக்கங் களின் கோளாறுகளையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. அந்த இயந்திர இயக்கங்களின் கோளாறுகள் ஏறத்தாழ சரி செய்யப்பட்டுவிட்டன. புறக்கட்டுப்பாடுகளைச் சாமாளிப் பதற்கும், தொடர் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப் போது, நிலக்கரி விநியோக நிலைமை 1981ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து மேம்பாடுற்றுள்ளது.

4·4. நடப்பு ஆண்டான 1981–82இல் அரியலூர் சிமெண்ட்டு ஆலை 3,05,000 மெட்ரிக் டன்கள் சிமெண்டை உற்பத்தி செய் யத் திட்டமிட்டுள்ளது. நடப்பு ஆண்டின்போதான உற்பத்தியை முந்திய ஆண்டோடு ஒப்பிடுகையில், 58,000 மெட்ரிக் டன் களுக்கும் அதிகமாக இருக்கும். 1982–83 ஆம் ஆண்டின்போது 4·5 இலட்சம் டன்கள் சிமெண்டை உற்பத்தி செய்யத் திட்டமிட் டுள்ளது. அது ஆலையின் உற்பத்தித்திறன் விகிதத்தில் 90 சத வீதமாகும்.

4·5. இந்த ஆலையானது 907 ஆட்களுக்கு நேரடி வேலை நியமனத்துக்கு வகை செய்துள்ளது; மேலும் கச்சாப் பொருள் களையும், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளையும் கொண்டு செல்வதற்கெனப் பெருமளவில் நேரடியில்லாத வேலை நியமனங் களையும் அளிக்க வகை செய்துள்ளது.

தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் :

5·1. பல்வகைப் படுத்தும் பொருட்டு முதற்படியாக தமிழ் நாடு சிமெண்ட்டு அனைத்து இந்திய நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு 36,000 டன்கள் அளவு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்டு தகடுகளை உற்பத்தி செய்வதற்கு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்டு ஷீட் திட்டத்தினை அமைத்துள்ளது. இந்த ஆலை ரூ. 250 இலட்சம் செலவில் ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை அதன் வாணிப உற்பத்தியை 1—10—1981-ல் தொடங்கிற்று.

5·2. நடப்பு ஆண்டின்போது, தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் 9,200 மெட்ரிக் டன்கள் ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளையும் துணைப் பொருட்களையும் உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டின்போது ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் அதன் துணைப் பொருட்களின் உற்பத்தி சுமார் 27,000 மெட்ரிக் டன்களாக இருக்கும்.

5·3. இந்த ஆலை 203 ஆட்களுக்கு நேரடி வேலை நியமனத்துக்கு வகை செய்துள்ளது; மேலும் கச்சாப் பொருள்களையும், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளையும் அது போல் பிறவற்றையும் கொண்டு செல்வதற்கெனப் பெருமளவில் நேரடியில்லாத வேலை நியமனங்களையும் அளிக்க வகை செய்துள்ளது.

6. இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டைக் கையாளுதல் :

31—3—1981-ல் முடிவடையும் ஆண்டின்போது, தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் சென்னைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 2,84,887 மெட்ரிக் டன்கள் சிமெண்டையும், தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 2,29,976 மெட்ரிக் டன்கள் சிமெண்டையும் கையாண்டுள்ளது. தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் இதனுடன் தொடர்புடைய அனைவருடைய தேவைகளையும் திருப்திகரமான வகையில் கையாண்டுள்ளது நடப்பு ஆண்டின்போது தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 3,40,000 மெட்ரிக் டன்கள் சிமெண்டைக் கையாளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. ஆலங்குளம் ஆலையின் மேம்பாட்டுத் திட்டமும் நவீனப் படுத்தும் திட்டமும்.

ஆலங்குளத்திலுள்ள ''எலக்ட்ரோ—ஸ்டேடிக் ப்ரசிபிடேட்டர்ஸ்'' மற்றும் வேறு ''சமப்படுத்தும் கருவிகளை'' பொருத்தும் பணி அமைப்பானது முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்தத்



திட்டத்தின் முதல் கட்டத் திட்டமானது நிறைவு செய்யப்பட்டு உள்ளது. இதன்படி சுழல் பேக்கர் மற்றும் சிமெண்ட்டு ஆலை இ.எஸ்.பி. பொருத்தப்பட்டுள்ளது. கூட்டடுப்புகளின் (Kifon) இ. எஸ். பி. அமைப்புக்களும் மற்றும் தொடர்பான பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளது. இந்தத் திட்டத்தை எல்லா வகையிலும் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் வாக்கில் நிறைவு செய்ய முடியும்

7·2. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதானது ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலைப் பகுதியில் காற்று அசுத்தத்தைக் குறைப்பதுடன் சிமெண்ட்டு உற்பத்தியின் அளவினைப் கூட்டுவதற்கும் உதவும். இந்தத் திட்டம் நிறைவடைகிற காலத்தில் ஆலங்குளம் சிமெண்ட்டு ஆலை ஆணடுக்கு 4·5 இலட்சம் டன்கள் சிமெண்ட்டு உற்பத்தியின் அளவினை எட்டும்.

8. பாளையம் சிமெண்ட்டு திட்டம்:

8·1. தமிழ்நாடு அரசாங்கமானது எண். 50896/எம்.ஐ.இ 11/80 தேதியிடப்பட்ட கடிதத்தில் மதுரைப் மாவட்டப் பகுதியிலுள்ள பாளையத்தில் ஆண்டொன்றுக்கு நான்கு இலட்சம் டன்கள் திறனுடைய ஆலை ஒன்றினை அமைப்பதற்கான தம் ஒத்திகைவினைத் தெரிவிதுள்ளது. தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் தனக்கு வேண்டுதலுக்கான இசைவாணையை (Letter of Intent ) வழங்குவதற்காக இந்திய அரசாங்கத்துக்கு விண்ணப்பத்தை அனுப்பியுள்ளது.

8.2. ஆயினும், இந்திய அரசாங்கமானது தமது ஆர். 1719/(80-81) ஐ. எல். 23—3—1981 தேதியிடப்பட்ட கடிதத்தில் இரயில்வே அமைச்சகம் தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தின் விண்ணப்பத்தை போக்குவரத்து நிலையில் இருந்து அனுமதிக்கவில்லை என்று தெரிவித்தது எனினும் விவரங்களை எடுத்துரைத்த பின்பு, தென் இரயில்வே வாரியத்திற்கு அனுப்பிய தமது கடிதத்தில், கரூரிலிருந்து திண்டுக்கல் வரையில் உத்தேசிக்கப்பட்ட புதிய பிராட்கேஜ் (அகன்ற இருப்புப்பாதை) தடத்தின் வழியாக, பாளையத்தில் அமைக்கப்படவிருக்கும் புதிய சிமெண்ட்டு ஆலைக்காக எதிர்ப்பார்க்கப்பட்ட கூடுதல் போக்குவரத்தினைக் கையாளுவதற்கு கஷ்டம் எதுவும் இருக்காது என்று அறிவித்தது..

8.3. எவ்வாறாயினும், இந்திய அரசாங்கம் 16–10–1981 தேதியிடப்பட்ட தமது கடிதத்தில்,நிலக்கரி துறையானது, உத்தேசிக்கப்பட்ட சிமெண்ட்டு ஆலையின் தேவைக்கு வழங்குவதற்கான நிலக்கரி கிடைப்பதின்பேரிலான தடைகள் 1989–1990 வரை தொடர்ந்திருக்கும் என்று சுட்டிக் காட்டியுள்ளதனால்,

ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட தமது முடிவினை மறு ஆய்வு செய்ய இயலாமல் உள்ளது என்று தெரிவித்தது. தமிழ்நாடு அரசு, இந்திய அரசாங்கத்திடம் அவர்களது முந்திய முடிவினை மறு பரிசீலனை செய்யுமாறும்; பாளையத்தின் அருகில் புதிய சிமெண்ட்டு ஆலை ஒன்றினை அமைப்பதற்கான இசைவாணையை வழங்குமாறும் இந்த விஷயத்தை வலி உறுத்தியுள்ளது.

8·4. இந்திய அரசாங்கத்திடம் இருந்துவரும் ''வேண்டுதலுக்கான இசைவாணையை'' பெறுவதற்கு உட்பட்டு, இந்தத் திட்டமானது 1982–1983 ஆம் ஆண்டின்போது செயலுக்கு எடுக்கப்பட முடியும் என்றும் 3 முதல் 4 ஆண்டு காலத்தில் நிறைவு செய்யப்பட முடியும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்துக்கு ரூ. 32 கோடி துல்லியமாக செலவாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது; மேலும் செயல்படுத்தப்படும். போது சுமார் 1,000 பேர்களுக்கு வேலை நியமனத்துக்கு வகை செய்வதுடன் கணிசமான அளவில் நேரடியல்லாத வேலை நியமனத்துக்கும் வகை செய்வதாய் இருக்கும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

9. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம் :

ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு ஷீட் திட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்தியதன் மூலம் ஊக்கம் அளிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 36,000 டன்கள் திறனுள்ள ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டத்தை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் துல்லியமாக ரூ. 750 இலட்சம் செலவாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமாக, தமிழ்நாடு சிமெண்ட்டு நிறுவனம் இந்திய அரசாங்கத்திடமிருந்து அவசியமான வேண்டுதலுக்கான இந்திய இசைவாணையைப் பெற்று உள்ளது. இந்தத் திட்டத்தின் மீதான பணி விரைவில் தொடங்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் துவங்கப்பட்டு 30 மாதங்களில் நிறைவு செய்யப்பட இயலும், இந்தத்திட்டம் செயற்படுத்தப்படும்போது, ஏறக்குறைய 300ஆட்களுக்கான நேரடி வேலை நியமனங்களுக்கு வகை செய்வதுடன் மட்டுமின்றி அதிக அளவில் நேரடியில்லாத வேலை நியமனங்களுக்கும் வகை செய்ய முடியும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.
(சிப்காட்).

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் தேதி முதல் தமிழக அரசிற்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக துவங்கப்பட்டு, தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர



தொழில் வளர்ச்சிக்கான பணியினை தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந்த நிறுவனம் 1972 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 4 ஆம் தேதி முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் துவங்கி கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகவும், இம்மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளில் விரைந்து தொழில்மயமாக்கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. 1981 ஆம் வருடம் டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதிவரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூபாய் 8,651 இலட்சம் உதவித் தொகையாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன், இதன் மூலம் 53,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலைவாய்ப்புக்கு வகை செய்துள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும், அதற்குரிய நிதியுதவிக்கும் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2. இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குவது.

3. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின்கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

4. தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

முதல் பத்தாண்டுகளில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினை துரிதப்படுத்த சிப்காட் தமிழக அரசின் உதவியுடன் பல்வேறு புதிய முறைகளைக் கையாண்டது. சிப்காட், இந்தியத் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினரால் மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அங்கீகரிக்கப்பட்டதால் இந்நிறுவனத்தின் தவணைக் கடன் திட்டம் மாபெரும் வளர்ச்சியினைக் கண்டது.

தவணைக் கடன் ஒப்புதல் அளிக்கும் வகையில் 1979–80 ஆம் ஆண்டில் மாதம் ரூபாய் 50 இலட்சமாக இருந்தது. இதே வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் தொகை மாதம் ரூபாய் 150 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் வழங்கிய தவணைக் கடன் ரூபாய் 296 இலட்சமாகும். 1980–81 ஆம் ஆண்டில் வழங்கிய தவணைக் கடன் முந்தைய

ஆண்டைவிட இரண்டு மடங்குக்கு மேலாக 786.52 இலட்சமாக உயர்ந்துள்ளது. தவணைக் கடனுக்கு ஒப்புதல் அளித்து வழங்கும் வகையில் படிப்படியான முன்னேற்றத்தை அடைந்து வருவதற்கு மேற்கூறிய புள்ளி விவரங்களே சிறந்த சான்றாகும். தவிர, 1981–82 ஆம் ஆண்டில் தவணைக் கடன் வழங்குவதில் சாதனை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சுமார் ரூபாய் 1,500 இலட்சம் வரை வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டுகளில், 27 நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் ரூபாய் 580.50 இலட்சம் தவணைக் கடனாகப் பெற்றது. ஆனால் 1980–81 ஆம் ஆண்டுகளில் 57 தொழில் நிறுவனங்கள் ரூபாய் 1,958.10 இலட்சத்தை இத்திட்டத்தின்கீழ் பெற்றது. இந்த நிதியாண்டில் வழங்கவிருக்கும் தொகை மேலும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளுக்குள்ளாகவே 38 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 1,410·75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளால் அறிவிக்கப்பட்ட ஊக்கத் திட்டங்களான மத்திய மானியம் மற்றும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு முதலீட்டுத் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளுக்கான சலுகைகளும் சிப்காட் நிறுவனத்தினரால் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையிலேயே சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ஒப்புதல் அளித்து வழங்கிய உதவி தொகைகளில் 85 விழுக்காட்டிற்கு மேலாக பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிலையான முதலீட்டின் மீது வழங்கப்படுகின்ற மானியத்தைப் பெறுவதில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடே தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது. சிப்காட் நிறுவனம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு இம்மானியத்தைப் பெற்றுத் தரும் அதிகார பூர்வமான பொறுப்பைத் திறம்பட செயல்படுத்துவதே இந்நிலைமைக்கு முக்கிய காரணமாகும்.

இராணிப்பேட்டை, மற்றும் ஒசூர் தொழில் இணையங்களில் கிடைத்த வெற்றியின் ஊக்கத்தில் சிப்காட் புதிய 5 தொழில் இணையங்களை கும்முடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை மற்றும் மானாமதுரையில் நிறுவுவதற்கு இப்பொழுது முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. புதுக்கோட்டை மற்றும் மானாமதுரையில் உள்ள தொழில் இணையங்களில் ஏற்கனவே நிலம் ஒதுக்கும் பணிகளை ஆரம்பித்தாகிவிட்டது. மேலும் கும்முடிப்பூண்டி, கடலூர், தூத்துக்குடி ஆகிய தொழில் இணையங்களில் நிலங்களை கையகப்படுத்தும் பணியினை மிக விரைவில் ஏற்று செயல்படுத்த இருக்கிறது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட, தளர்த்



தப்பட்ட ஊக்கச் சலுகை முனைப்பு திட்டங்கள், அறிமுகப்படுத்தப்பட்ட கவரக்கூடிய உதவித்தொகை திட்டங்களினால் சிப்காட் வருகிற ஆண்டுகளில் தன்னுடைய திட்டங்களை பல மடங்காக அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு முதல் இரண்டு புதிய திட்டங்களின்கீழ் சிப்காட் நிறுவனம் நலிவுற்ற தொழில் நிறுவனங்களை, இந்திய மறு கட்டுமான நிறுவனத்தின் (IRCI) ஊக்க உதவியுடன் மறுமலர்ச்சி செய்யவும், அயல் நாடுகளில் உள்ள இந்தியர்கள் தங்களது சேமிப்பை தமிழகத்தில் உள்ள தொழில் அமைப்புகளில் முதலீடு செய்யவும் தக்க பணிகளை ஏற்று நடத்தி வருகிறது.

சிப்காட் நிறுவனம் தன்னுடைய ஆரம்ப காலத்திலிருந்து ஆற்றிய பல்வேறு முக்கிய பணிகளும் 1982–83 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் பல்வேறு பணிகளும் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :—

3. சிப்காட் செயல்படுத்தி வரும் பல்வேறு உதவித் திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) ஊக்க சலுகை முனைப்புத் திட்டம்.—தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை ஆதாயமளிக்கும், தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள் பற்றிய ஆய்வுகளை, சிப்காட் தொழில் முனைவோர்களுக்குச் சலுகை விலையில் அளிக்கிறது.

1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாள் வரையில் 41 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இவற்றில் 30 அறிக்கைகள் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டன. 1980–81 (டிசம்பர் 1981 வரை) ஆண்டுகளில்தான் முன் முதலீட்டு ஆய்வுகள் தொடங்கப்பட்டன. மேற்கண்ட ஆய்வுக்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 2.50 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.—ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாய் வட்டியில்லா விற்பனை வரிக் கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம் மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, நகர்ப் பகுதி தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத் திட்டத்தின் கீழ்கடன்கள் வழங்கப்படும்.

[1982 மார்ச் 19

இத் திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் தேதியிலிருந்து சுலபமாக்கப்பட்ட இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியின் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்கு தொழிலை விரிவுபடுத்தும்போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும்போதோ, இச் சலுகை கிடைக்கும். அத் தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும், அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும். திட்டத்தில் நிலையான இருப்புகளில் 25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கோ நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும் போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்தப்பிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சம தொகைகளாக வட்டிஇன்றி இந்தக்கடன் தொகைகளைத் திருப்பியடைக்க வேண்டும்.

புதிய தொழில் இணையங்களை ஏதேனும் பின் தங்கிய மாவட்டங்களில் அமைத்திடவும், மற்றும் மறைமலை நகர், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் வரும். இத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட உள்ள புதிய தொழிற் கூடங்களுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் முந்திய ஆண்டில் செலுத்திய விற்பனை வரித் தொகைக்கு சமமானதாகவும் நிலையான இருப்புகளில் 8 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 8 இலட்சத்திற்கோ எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். இந்தக் கடன் கால் ஆண்டுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் வட்டி எதுவுமின்றி திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின் கீழ் இந் நிறுவனம் துவங்கியதிலிருந்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை 116 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 1,162·20 இலட்சத்துக்கு ஒப்புதல் அளித்து அதில் ரூபாய் 1,083·01 இலட்சம் வமங்கப்பட்டுள்ளது.



1982 மார்ச் 19]

கடந்த எட்டு ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

| ஆண்டு. | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 .. .. | 79·19 | .. | 79·19 |
| 1973–74 .. .. | 57·72 | .. | 57·72 |
| 1974–75 .. .. | 73·63 | .. | 73·63 |
| 1975–76 .. .. | 2·10 | 0·72 | 2·82 |
| 1976–77 .. .. | 49·13 | 29·72 | 78·85 |
| 1977–78 .. .. | 52·60 | 58·88 | 111·48 |
| 1978–79 .. .. | 59·19 | 94·00 | 153·19 |
| 1979–80 .. .. | 105·52 | 140·26 | 245·78 |
| 1980–81 .. .. | 88·79 | 143·55 | 232·34 |
| 1981–82 (டிசம்பர் 1981 வரை). | 20·79 | 106·41 | 127·20 |
| மொத்தம் .. | 588·66 | 573·54 | 1,162·20 |

வழங்கப்பட்ட தொகை.

| ஆண்டு. (1) | | | முதல் பிரிவு. (2) | இரண்டாம் பிரிவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 | .. | .. | 12·19 | .. | 12·19 |
| 1973–74 | .. | .. | 31·56 | .. | 31·56 |
| 1974–75 | .. | .. | 91·48 | .. | 91·48 |
| 1975–76 | .. | .. | 57·60 | .. | 57·60 |
| 1976–77 | .. | .. | 48·32 | 30·26 | 78·58 |
| 1977–78 | .. | .. | 35·19 | 56·04 | 91·23 |
| 1978–79 | .. | .. | 56·80 | 96·24 | 153·04 |
| 1979–80 | .. | .. | 47·26 | 137·74 | 185·00 |
| 1980–81 | .. | .. | 85·53 | 144·91 | 230·44 |
| 1981–82 (டிசம்பர் 1981 வரை). | | | 46·10 | 105·79 | 151·89 |
| மொத்தம் | .. | | 512·03 | 570·98 | 1,083·01 |

மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி ஆண்டு வரிசையாக :

| ஆண்டு (1) | | | | | தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|
| 1972–73 | .. | .. | .. | .. | 23·18 |
| 1973–74 | .. | .. | .. | .. | 40·00 |
| 1974–75 | .. | .. | .. | .. | 74·66 |
| 1975–76 | .. | .. | .. | .. | 75·00 |
| 1976–77 | .. | .. | .. | .. | 75·00 |



| ஆண்டு. (1) | | | | | தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|
| 1977–78 | .. | .. | .. | .. | 100·00 |
| 1978–79 | .. | .. | .. | .. | 150·00 |
| 1979–80 | .. | .. | .. | .. | 180·00 |
| 1980–81 | .. | .. | .. | .. | 250·00 |
| 1981–82 (டிசம்பர்–வரை) | | | .. | .. | 160·00 |

1982–83 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் வழங்குவதற்கான குறியீடு முறையே ரூபாய் 300 இலட்சமும், ரூபாய் 300 இலட்சமுமாகும்.

(இ) நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை.— மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவீதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாக பெற தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள் தளவாடங்கள் மாற்றப்பட்டபோதிலும், அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையதாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத்தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும்.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து ஈட்டுத் தொகை பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடே தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல், இத்திட்டத்தின் கீழ் 2,384 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 699.30 இலட்சமும், 350 பெரிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 2,324.96 இலட்சமும் மானியமாக 1981 ஆம் ஆண்டு

டிசம்பர் 31 ஆம் தேதி முடிய வழங்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு 1981—82-ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை ஆகியவற்றின் தனி இலக்குகள் ரூபாய் 250 இலட்சமாகும்.

மாநில அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானிய திட்டங்களின் கீழ் வராத இடங்கள் இராமநாதபுரம் மாவட்டம், தூத்துக்குடி, தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 வட்டங்களில் நிறுவப்படும் எந்த தொழிற் பிரிவும் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதம் மானியத்தின் இணையான தொகையோ அல்லது 15 இலட்சம் உதவித் தொகையோ இரண்டில் எது குறைவோ அதை பெறும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறும்.

குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியத் திட்டம்.

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானியத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு மற்றும் மோட்டார் வாகன உபரி தொழில்கள் அடங்கும். மேலே கூறப்பட்ட தொழில்கள் மத்திய மற்றும் மானியத் திட்டத்தின் கீழ் வராத தமிழகத்தின் எந்த பகுதியில் நிறுவப்படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூபாய் 20,000 அல்லது ரூ. 10 இலட்சம் ரூபாய் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதை பெறலாம். இத்திட்டம் பாரதத்தின் எந்த பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.



(ஈ) நேரடி நிதி உதவி.—(1) தவணைக் கடன்—கடந்த ஒன்பது ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி கீழ்க்கண்ட அட்டவணைகளில் காணலாம்:—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடியாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972—73 | 108.50 | .. | 108.50 | 26.11 |
| 1973—74 | 197.89 | 7.55 | 190.34 | 33.90 |
| 1974—75 | 191.28 | 7.99 | 183.29 | 117.61 |
| 1975—76 | 27.08 | 7.25 | 19.83 | 162.87 |
| 1976—77 | 140.75 | 47.25 | 93.50 | 82.15 |
| 1977—78 | 340.55 | 69.48 | 271.07 | 123.82 |
| 1978—79 | 233.96 | 10.00 | 223.96 | 141.85 |
| 1979—80 | 580.50 | 12.74 | 567.76 | 296.61 |
| 1980—81 | 1,958.10 | 27.86 | 1,930.24 | 786.52 |
| 1981—82 | 1,410.75 | .. | 1,410.75 | 1,018.76 |
| மொத்தம் | 5,189.36 | 190.12 | 4,999.24 | 2,790.20 |

1981—82 ஆம் ஆண்டுக்கான ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குவதற்கான குறியீடு முறையே 2,500 இலட்சம் மற்றும் 1,500 இலட்சம் ரூபாய் ஆகும்.

1975—76 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 1976—77
ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்ட நிகர ஒப்புதல் கணிசமான
முன்னேற்றம் அடைந்துள்ளது என மேலே உள்ள அட்டவணை
யிலிருந்து வெளிப்படையாக தெரியவருகிறது. ஒப்பளிப்பு மற்று
வழங்குதல் ஆகியவற்றில் 1982—83 ஆம் ஆண்டிற்கான குறியீ
முறையே ரூபாய் 3,000 இலட்சம் மற்றும் ரூபாய் 2,000 இலட்ச
என திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய தொழில் வளர்ச்சி வங்
யின் மறுநிதியுதவி திட்டத்தின் கீழ் சிப்காட்டின் வரையறையா
ரூ. 2,000 இலட்சத்தில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆ
நிலவரப்படி ரூபாய் 1,866.98 இலட்சத்தை எட்டி விட்டது.

நீண்டகால நிலுவைத் தொகையை திரும்பப் பெறுதல் என்ற நிலை 1981–82 தொடக்கத்தில் இருந்த 67.52 சதவீதத்தை விட படிப்படியாக அதிகரித்து, 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் நிலவரப்படி 70.71 சதவீதமாக உயர்ந்துள்ளது. சிப்காட் நிர்வாக குழுவின் துணைக்குழு அவ்வப்போது கூடி நிலுவை பார்வைக் கூட்டங்களில் நிலுவைகளை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்ததாலும் மற்றும் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்பினாலும் கணிசமான முன்னேற்றம் அடைய முடிந்தது. 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் நிலவரப்படி நிலுவைத் தொகை வசூல் ரூபாய் 224.26 இலட்சம் என்பது மொத்தம் நிலுவைத்தொகை ரூபாய் 2,177.15 இலட்சத்தில் 10.9 சதவீதம் ஆகும்.

உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா :— பொறுப்புகளுக்கு உத்திரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக கடந்த எட்டு ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்திரவாத வசதிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டவை. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன: —

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டவை. | பொது மக்களுக்கு வழங்கப் பட்டவை. | நேரடி சந்தா வுக்கு கோரிக்கை பங்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1972–73 | 23.20 | .. | .. | .. |
| 1973–74 | 24.30 | .. | 26.70 | .. |
| 1974–75 | 5.00 | .. | 2.50 | 0.55 |
| 1975–76 | 16.50 | .. | 3.00 | 1.29 |
| 1976–77 | 11.00 | 18.50 | 2.00 | 2.00 |
| 1977–78 | 16.00 | 13.30 | 1.50 | 1.13 |
| 1978–79 | 5.00 | 3.50 | 5.00 | 0.37 |
| 1979–80 | 6.20 | 2.50 | 13.00 | 1.55 |
| 1980–81 | 24.40 | .. | 21.20 | 12.29 |
| 1981–82 | 10.25 | .. | .. | .. |
| மொத்தம் .. | 141·85 | 37·80 | 74·90 | 19·18 |



1982–83 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் குறியீடு ரூபாய் 50 இலட்சமாகும்.

(3) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம்—ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின்கீழ் தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில் நுட்ப, தொழில் அனுபவ, தொழில் முனைவோர்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சிகளின் முதல், நடுத்தர தொழில் திட்டத்திற்கு வங்கியானது, திட்டச் செலவில் 10 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. சிப்காட் நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் பிரதிநிதி என்ற முறையில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்று ரூபாய் 33.58 இலட்சம் அளவுள்ள தொகையை ஆறு தொழில் நிறுவனங்களுக்கு ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 60·00 இலட்சம் ஒப்புதல், அளிக்கவும் ரூபாய் 50.00 இலட்சம் வழங்கவும் குறீயீடாக வரையறுக்கப்பட்டுள்ளது.

வருகின்ற 1981–82 .ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு தொகை ரூபாய் 60.00 இலட்சமாகவும், வழங்கும் தொகை ரூபாய் 50.00 இலட்சமாகவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் நாள் முதல் தவணைக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிறுவனங்களில் ஆரம்ப மூலதன நிதியுதவி பெற தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து ஆய்வுத்தொகை ஏதும் இனி பெற வேண்டியது இல்லை என்று சிப்காட் நிர்வாக குழு தீர்மானித்துள்ளது.

இச்சலுகையினால் பொறியியல் வல்லுனர்களும் மற்றும் தொழில் திறமை வாய்ந்தவர்களுக்கும் பெரும் உதவியாக இருப்துடன் தங்களின் முதல், நடுத்தர தொழில் தொடங்கவும் முடியும். இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்தலிலும், வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம்:—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை. | வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 .. .. .. .. | 4.00 | .. |
| 1978–79 .. .. .. .. | 9.15 | 4.00 |

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை. | வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1979–80 .. .. .. .. | 12.90 | 21.47 |
| 1980–81 .. .. .. .. | 26.50 | 16.29 |
| 1981–82 .. .. .. .. | 33.58 | 20.10 |
| மொத்தம் .. | 86.13 | 61.86 |

இத்திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 50 இலட்சம் ஒப்புதல் அளிக்கவும், ரூபாய் 40 இலட்சம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு அளிக்கப்படும் சலுகைகள்.—தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவுசெய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாக கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின் தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும், முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும், ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் பற்றிய முன் முதலிட்ட ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன்பணமாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களு கு 50 சதவீதமாகும்.



## இணைப்பு 1.

### மத்திய மூலதன உதவித் தொகை திட்டம்.

அ. ஒப்புதல் (நிகரம்).

(ரூபாய் இலட்சத்தில்.)

| ஆண்டு. | பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள். | | சிறு தொழில் நிறுவனங்கள். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|
| | எண். | தொகை. | எண். | தொகை. | எண். | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1978 மார்ச் 31 வரையில் | 154 | 975.89 | 749 | 179.47 | 903 | 1,155.36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 46 | 284.04 | 181 | 62.85 | 227 | 346.89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 52 | 332.72 | 406 | 78.86 | 458 | 412.58 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 69 | 528.42 | 637 | 218.26 | 706 | 746.68 |
| ஏப்ரல் 1981 முதல் டிசம்பர் 1981 வரை. | 29 | 202.89 | 411 | 159.86 | 440 | 362.75 |
| மொத்தம் .. .. .. | 350 | 2,324.96 | 2,384 | 699.30 | 2,734 | 3,024.26 |

1982 மார்ச் 19]

(1) இராணிப்பேட்டை :

அரசு 729·78 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதை சிப்காட் நிறுவனத்திற்கு கொடுத்து ஒதுக்கப்படுவதற்காக இருந்த நிலப்பகுதி 480·68 ஏக்கர் ஆகும். அதில் 93 மனைகள் இருந்தன. அதில் 447.94 ஏக்கர் பரப்பளவு கொண்ட 89 மனைகள் 65 தொழில் முனைவோர்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்டதில் 36 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை துவங்கிவிட்டன. மிஞ்சிய 29 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

(2) ஓசூர் :

1,153 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் அரசினரால் கைப்பற்றப்பட்டு சிப்காட்டுக்குக் கொடுக்கப்பட்டது. 1,022·47 ஏக்கர் அமைந்துள்ள 155 மனைகள் ஒதுக்கீடு செய்வதற்காக கிடைத்துள்ளன. அதில் 872 ஏக்கர் பரப்புள்ள நிலம் 109 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 37 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை துவங்கி விட்டன. மிஞ்சிய 38 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

உட்புறச்சாலைகள் மற்றும் இணைப்பு சாலைகள் எல்லாம் முடிவடைந்து விட்டதால் தொழில் முனைவோர் தங்கள் தொழில் தொடங்க எந்த மனைப் பிரிவை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்புள்ளது. தற்போது சுமார் 50 ஏக்கர் பரப்புள்ள மனையை கோரி வந்துள்ள 21 ஆரம்ப விண்ணப்பங்கள் சிப்காட்டில் பார்வையில் உள்ளது.

புதிய தொழில் இணையங்கள்.

மானாமதுரை மற்றும் புதுக்கோட்டை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரையிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் நத்தம்பண்ணை கிராமத்திலும் புதிய தொழில் இணையங்கள் துவங்க அரசு ஏற்கெனவே அனுமதியளித்துள்ளது. ஏனைய தொழில் இணையங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணி அரசின் அனுமதியுடன் துவங்கப்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுக்க, அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இன்னும் சுமார் மூன்று மாத காலத்திற்குள் புதுக்கோட்டையைப் பொறுத்தவரை நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு 'சிப்காட்' நிறுவனத்துடன் ஒப்படைக்கப்பட்டுவிடும். புறம்போக்கு நிலம் சுமார் 400



1982 மார்ச் 19]

ஏக்கர் ஏற்கெனவே சிப்காட்டினால் எடுத்துக் கொள்ளப்பட்டு மேம்படுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது. மானாமதுரை தொழில் இணையத்தில் 353 ஏக்கர் நிலம் 137 மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் 6 தொழில் முனைவோர்க்கு 29·77 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு விட்டது.

தூத்துக்குடி.

சிப்காட்டின் தலைவர், மற்றும் உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டும், நேரிடையாகப் பார்வையிடப்பட்டும் தொழில் மையத்திற்கான இடம் தூத்துக்குடியில் தெரிவு செய்யப்பட்டு விட்டது. அங்கு நிலம் கையகப்படுத்தும் பணி அரசினால் துவக்கப்பட்டு விட்டது. தூத்துக்குடியில் சிப்காட் தொழில் மையம் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சிப்காட் மேல் நடவடிக்கை எடுத்து நிலங்களை கையகப்படுத்தும் பணியில் முனைப்பாய் உள்ளது.

கடலூர்.

இரசாயனத் தொழில்களுக்கென்று தனியே ஒரு தொழில் மையம் அமைக்கும் சிப்காட்டின் திட்டத்திற்கு, கடலூருக்கருகில் அமைக்க அரசின் அனுமதி பெறப்பட்டு விட்டது. இங்கு கிடைக்கும் மிகுதியான தண்ணீர் வசதியும், கழிவு நீரகற்றும் வசதியும் மிகவும் அருமையாக அமையப் பெற்றிருப்பதால் கடலூர் தொழில் இணையம் விரையில் பிரபலமடைவது உறுதி. இங்கு நிலம் கையகப்படுத்தும் பணியும் மேற்கோள்ளப்பட்டுள்ளது.

கும்மிடிப்பூண்டி.

தமிழ்நாடு அரசு செங்கை மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியில் ஒரு தொழில் இணையம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. இவ்விணையத்திற்காக சுமார் 1,000 ஏக்கர் பரப்புள்ள நிலம் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்கான அலுவலர்கள் அமர்த்தப்பட்டு பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ஆம் நாள் முதல் இங்கு திட்ட அலுவலகம் செயல்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்திலும் ஒரு தொழில் இணையம் துவங்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

மாநில அரசின் நிதியுதவி.

1981–82 ஆம் ஆண்டிற்கு (டிசம்பர் 1981 வரையில்) மாநில அரசு ரூபாய் 200·00 இலட்சம் சம பங்கு மூலதனமாகவும் 300 இலட்சம் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் திட்டத்திற்காகவும் ஒதுக்கியுள்ளது.

பணியின் முடிவுகள்.

1980–81 ஆம் நிதியாண்டில் எல்லா செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர இலாபம் ரூபாய் 21.28 இலட்சம்.

இணைப்பு இரண்டில்

திட்டவாரியான நிதியுதவிகள் பற்றிய விபரங்கள்.

1. 1981–82ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1982–83 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்டக் குறிப்பீடுகள்.

வேலை வாய்ப்பு.

1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் தேதி முடிய சுமார் 53,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை ஏற்படுத்திய வேலை வாய்ப்புகளும், இனி ஏற்படுத்த இருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டு வாரியாக:–

| ஆண்டு. | வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1979–80 .. .. .. .. | 6,800 |
| 1980–81 .. .. .. .. | 9,400 |
| 1981–82 .. .. .. .. | 4,600 |



| வளர்ச்சி மையங்கள். | 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை முன்னேற்றம். | | ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம். | | |
|---|---|---|---|---|---|
| | மேம்படுத்தப்பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. | மேம்படுத்தப்பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. | |
| | | | | மொத்தம். | நிகரம். |
| | ஏக்கர். | ரூபாய் (இலட்சத்தில்.) | ஏக்கர். | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| (1) இராணிப்பேட்டை .. | 729·78 | 115·61 | 275·04 | 100·00 | 59·00 |
| (2) ஓசூர் .. .. .. | 1,071·97 | 153·91 | 695·88 | 150·00 | 99·00 |
| (3) மானாமதுரை .. .. | 489·00 | 22·06 | .. | 145·00 | 110·00 |
| (4) புதுக்கோட்டை .. .. | .. | 8·26 | 919·00 | 100·00 | 50.00 |
| (5) கும்மிடிப்பூண்டி .. .. | .. | .. | 1,001·00 | 270·00 | 120·00 |
| (6) கடலூர் .. .. .. | .. | .. | 517·00 | 125·00 | 75·00 |
| (7) தூத்துக்குடி .. .. | .. | .. | 1,355·78 | 250·00 | 200·00 |

ஆ. வழங்குதல்.

| ஆண்டு. | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | சிறு தொழில் நிறுவனங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1978 மார்ச் 31 வரை .. | 618.43 | 151.62 | 770.05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 178.27 | 30.09 | 208.36 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 232.26 | 41.78 | 274.04 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 319.09 | 109.33 | 428.42 |
| மொத்தம் .. | 1,348.05 | 332.82 | 1,680.87 |

இ. மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

| ஆண்டு. | சிப்காட். | ஏனையவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1978 மார்ச் 31 வரை .. .. | 501.83 | 613.59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 161.50 | 229.63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 125.54 | 165.57 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 301.91 | 425.35 |
| ஏப்ரல் 1981 முதல் டிசம்பர் 1981 வரை. | 199.90 | 346.76 |
| மொத்தம்.. | 1,290.68 | 1,780.90 |





இணைப்பு.

1981–82ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விபரங்கள்—1982–83ஆம் ஆண்டிற்கான திட்டங்களின் குறியீடுகள் :—

| | 1981–82. | | 1982–83 செலவு மதிப்பீடு. |
|---|---|---|---|
| | முன்னேற்ற விபரம். | செலவு மதிப்பீடு. | |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. பகுதிக் கடன்— | | | |
| ஒப்புதல் .. .. | 1,410.75 | 2,500.00 | 3,000,00 |
| வழங்குதல் .. | 1,018.76 | 1,500.00 | 2,500.00 |
| 2. உத்திரவாதமளித்தல்/ நேரடிச்சந்தா— | | | |
| ஒப்புதல் .. .. | 10.25 | 40.00 | 50.00 |
| 3. வட்டியில்லா விற்பனை வரிக்கடன்— | | | |
| ஒப்புதல் .. .. | 127.20 | 300.00 | 300.00 |
| வழங்குதல் .. | 151.89 | 250.00 | 300.00 |
| 4. மத்திய உதவி (சிப்காட் தனியாக)— | | | |
| ஒப்புதல் .. .. | 176.45 | 250.00 | 250.00 |
| வழங்குதல். .. | 213.86 | 250.00 | 250.00 |
| திரும்பப் பெறுவது | 199.90 | 250.00 | 250.00 |
| 5. முக்கிய மூலதனத் திட்டம்— | | | |
| ஒப்புதல் .. .. | 33.58 | 50.00 | 60.00 |
| வழங்குதல் .. | 20.10 | 40.00 | 50.00 |

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

1. முன்னுரை.—நம் நாட்டிலேயே மாநில அளவில் நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், கம்பெனிகள் சட்டத்தின்படி, 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதும், விரைவுபடுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நிறுவனத்தின் அதிகார வரம்பு மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வரும் புதுச்சேரிக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாநில நிதி நிறுவனமாக இது செயற்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியையும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியையும் கலந்தாலோசித்த பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் வாயிலாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சில முக்கியமான விதித்துறைகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அலுவல்களும் நோக்கங்களும்.—இந்நிறுவனத்தின் முக்கிய அலுவல்களும் நோக்கங்களும் வருமாறு :—

(அ) முக்கியமாக நிலம், கட்டிடம், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரக்காலக் கடன்களை வழங்குவது.

(ஆ) இயந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்து கொள்ளும் காலம் தாழ்த்தித் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு (D ferred Payment Contrac ) உத்தரவாதம்/மேல் உத்தரவாதம் அளிப்பது.

(இ) வங்கிகள்/கூட்டுறுதி நிறுவனங்கள் பொது மக்களிடம் இருந்து பெறும் கடன்கள் முதலியவற்றின் வாயிலாக தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பது.

(ஈ) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவது, அவற்றுக்கு உத்தரவாதமளிப்பது.

(உ) மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி அத்தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன் கூட்டியே கடனாக வழங்குவது.



3. உதவியின் அளவும் விவரமும்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கும் நிதி உதவியின் அளவு வருமாறு:—

| | |
|---|---|
| (அ) கடன்கள்— | |
| குறைந்த அளவு .. .. | ரூபாய் 2,000. |
| உயர் அளவு .. .. | ரூபாய் 30 இலட்சம் (தனி நபர் உரிமையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் பங்கு தாரர் உரிமையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் உயர் அளவு ரூ. 15 இலட்சமாகும்). |
| (ஆ) காலம் தாழ்த்தித் தொகை செலுத்துவதற்கான உத்தரவாதம். | ரூ. 30 இலட்சம். |
| (இ) பொதுக் கடன் வெளியீட்டுப் பங்கிற்கு உத்தரவாதமளிப்பது? நேரடியாகக் கலந்து கொள்வது. | ரூ. 25 இலட்சம் (உயர் அளவு). பொதுக் கடன் வெளியீட்டில் 25 சதவீதம் அல்லது தொழிலதிபர் முதலீடு செய்யும் தொகைக்கு நிகரான ஒரு ,தொகை இவற்றில் எது குறைவோ அது. |

இருப்பினும், மேற்கூறிய மூவகைக் கடன்களைக் பொறுத்த மட்டில், தொழில் பிரிவு ஒன்றுக்கு வழங்கப்படும் மொத்த உதவி ரூ. 65 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது.

சிறு தொழில், நடுத்தரத் தொழில் துறைகளில் (அ) புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் (ஆ) ஏற்கனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், வேறு துறைகளில் ஈடுபடுவதற்கும் (ஈ) தற்போதுள்ள தொழில் பிரிவுகளை நவீனமாக்குவதற்கும் இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. சிறு தொழில் துறையிலும், சின்னஞ்சிறு தொழில் துறையிலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் இந்நிறுவனம் பல சிறப்புத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறைந்த வட்டி வீதம் கடன் திருப்பிச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட கால அவகாசம் கடனைத் திருப்பிச் செலுத்த நீண்ட காலக்கெடு குறைந்த மினையத் தொகை போன்ற தாராளமான எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.

அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் எந்த ஒரு பகுதியிலும் தொழில் வளம் குறைந்து தோன்றாவண்ணம் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்கும் முதலிடம் தரப்படுகிறது. வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு, குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்ட காலக் கெடு ஏனைய பல சலுகைகளின் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. கிராமப்புறங்களிலும் தொழில் வளர்ச்சி பின்தங்கிய பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற சிறு சின்னஞ்சிறு தொழில் பிரிவுகளுக்கு இன்னும் பெருமளவில் உதவி புரியும் நோக்கத்துடன், போக்குவரத்துக் கடனாக இருப்பின் 75,000 ரூபாய் வரையிலும் பிறவகைக் கடனாக இருப்பின் 25,000 ரூபாய் வரையிலும் கடனுதவி அளிப்பதற்குரிய அதிகாரங்களை மேற்படி நிறுவனத்தின் வட்டார கிளை அதிகாரிகளுக்கு இந்நிறுவனம் வழங்கியுள்ளது. சிறு, நடுத்தரத் தொழில் துறைகளில் நிறுவப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளுக்கும் தொழில் வளர்ச்சி பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கும் இந்நிறுவனத்தால் விதிக்கப்படும் வட்டி வீதம் பின்வருமாறு :—

| விவரம். | மறுநிதி உதவி அளிக்கப்படும் போது ஆண்டொன்றுக்கு சதவீதம். |
|---|---|
| (1) | (2) |
| சிறு தொழில் துறை— | |
| 1 தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதி* .. | 12.50 |
| 2 தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதி அல்லாத பிற பகுதிகள். | 13.50 |
| 3 தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதி அல்லாத பிற இடங்களில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள். | 13.50 |
| 4 தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள். | 12.00 |
| 5 ஆதி திராவிடர்கள், பழங் குடியினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் (குறைந்த அளவுக் கடன்). | 11.25* |

* குறித்த காலத்தில் தொகை செலுத்துவதற்கு ஒரு சதவீத தள்ளுபடி அளிக்கப்படுகிறது.



| விவரம். | மறுநிதி உதவி அளிக்கப்படும் போது ஆண்டொன்றுக்கு சதவீதம். |
|---|---|
| (1) | (2) |
| நடுத்தரத் தொழில் துறை— | |
| தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியும், அல்லாத ஏனைய பகுதிகளும். | 14.00 |
| போக்குவரத்துக் கடன் .. .. .. | 14.50** |

4. நிதி வாயில்கள்.—முக்கியமாக தமிழ்நாடு அரசு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அளிக்கும் பங்கு மூலதனம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி கடனீட்டுறுதி பத்திரங்கள் வைப்புத் தொகைகள், நிதி முதலியவை இந்நிறுவனத்தின் வாயில்களும், 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளவாறு இந்நிறுவனத்தின் நிதி வாயில்களின் நிலவரம் வருமாறு :—

| | 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 பங்கு மூலதனம் .. .. .. .. | 1,449.56 |
| 2 கடன் பத்திரங்கள் .. .. .. | 1,676.00 |
| 3 இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி. | 4,252.80 |
| 4 பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட கால வைப்பீட்டுத் தொகைகள். | 236.55 |
| 5 நிறுவனத்தின் ரொக்க நிதி .. .. | 127.16 |
| | 7,742.16 |

** குறித்த காலத்தில் தொகை செலுத்துவதற்கு இரண்டு சதவீத தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

3 இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து பெரும் மறு நிதி உதவி.—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, குறைந்த வட்டி வீதத்தில் தாராளமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு மறுநிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனமும் இலவச ஒதுக்கீடுகளும் சேர்ந்து எவ்வளவு தொகை வருமோ அதைப் போல் மூன்று மடங்கு வரை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவி அளிக்கிறது. 1980–81 ஆம் ஆண்டில் இந் நிறுவனம் ரூபாய் 8.92 கோடி மறுநிதி உதவி பெற்று உள்ளது. 1981–82-ல் (1981 டிசம்பர் வரை) ரூ. 12.18 கோடி மறுநிதி உதவி பெற்றுள்ளது. மேலும் 1980–81 ஆம் ஆண்டில் (1980 டிசம்டர் 31 வரையில்) இந்திய தொழில் வளர்ச்சி வங்கிக்கு ரூபாய் 3.82 கோடியும் 1981–82-இல் (1981 டிசம்பர் வரை) ரூ. 4.41 கோடிதான் செலுத்தப்பட்டது. ஆனால் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலும், 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இறுதியிலும் நிலுவையாக உள்ள மறுநிதி உதவித் தொகைகள் முறையே ரூபாய் 36.90 கோடியும் ரூபாய் 50·26 கோடியும் ஆகும்.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி உதவி பெற்று அசலையும் வட்டியையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் எப்பொழுதும் காலந்தாழ்த்தாமல் திரும்பச் செலுத்தி வந்துள்ளது.

1980–81, 1981–82 (ஆம் ஆண்டுகளில்) (1981 டிசம்பர் வரையில்) இந்நிறுவனத்தின் செயலாக்க ஆய்வு.—1981–82ஆம் ஆண்டில் (1981 டிசம்பர் வரை) இந்நிறுவனத்தின் செயலாக்கம் முந்தைய ஆண்டின் செயலாக்கத்தோடு ஒப்பிடுகையில் போற்றத் தகுந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் தொழிற் கொள்கைக்கிணங்க, இந்நிறுவனம் வேலை வாய்ப்பினைப் பெருமளவில் ஏற்படுத்த வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன், சிறு, மற்றும் சின்னஞ் சிறு தொழில் துறைகளிலுள்ள தொழில் நிலையங்கள் அதிலும் குறிப்பாக கிராமம் ஓரளவு நகர்ப்பாங்குள்ள பகுதிகளில் அமைக்கப்படுகின்ற தொழில் நிலையங்களை ஊக்குவிப்பதில் சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. பொருளாதார நிலையில் பின்தங்கி நலிந்துள்ள மக்கள், தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படச் செய்யவும் பல்வேறு புதிய திட்டங்களும் சலுகைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

(4) உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை.—1980–81 (1980 டிசம்பர் 31 வரை) 1981–82 ஆம் (1981 டிசம்பர் 31 வரை) ஆண்டுகளில் இந்நிறுவனத்தின்



செயலாக்கத்தினால், நிறுவனத்திடமிருந்து உதவி பெற்ற தொழில் நிலையங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து உள்ளது. இவ்வாண்டுகளில் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்களின் சுருக்கம் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1980–81 (31–12–1980 வரை) | | 1981–82 (31–12–1981 வரை) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஒப்புதல் அளிக்கப் பட்டவை. | 2,765 | 2,377.91 | 3,799 | 3,118.49 |

இவற்றில் பெரும்பாலானவை இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகள் கிராமப் பகுதிகளிலுள்ள சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்த தொழில் நிலையங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முன்பே தெரிவித்துள்ளவாறு 1980ஆம் ஆண்டு செப்டம்பரில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் வட்டார கிளை அலுவலகங்களுக்கு கடன் வழங்கும் அதிகாரமளித்ததன் மூலம் அந்த ஆண்டில் இந் நிறுவனத்திடமிருந்து பெருமளவிலான சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்த தொழில் நிலையங்கள் நிதியுதவி பெற்றுள்ளன.

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தத் தொகை, வழங்கப்பட்ட தொகை, நிலுவையாகவுள்ள தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| | எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை— | | |
| 31–12–1980 வரை .. | 7,438 | 16,327.40 |
| 31–12–1981 வரை .. | 13,338 | 20,828.66 |

வழங்கப்பட்ட தொகை—

| | | |
|---|---|---|
| 31–12–1980 வரை | .. .. | 12,928.98 |
| 31–12–1981 வரை | .. .. | 15,976.93 |

நிலுவையாகவுள்ள தொகை—

| | | |
|---|---|---|
| 31–12–1980 வரை | .. .. | 7,714.86 |
| 31–12–1981 வரை | .. .. | 10,358.10 |

(i) வேலை வாய்ப்புகள்.—இந்த நிறுவனத்தினால் உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை குறிப்பாக சிறு, சின்னஞ்சிறு தொழில் துறைகளில் உயர்ந்துள்ளதால், வேலை வாய்ப்புகள் பெருமளவில் உயர்ந்துள்ளன. இந்நிறுவனம் வழங்கிய நிதி உதவியால் இவ்வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இவற்றினால் சமுதாயத்தில் நலிந்துள்ள மக்களில் பெரும் பாலானவர்கள் பலன் அடைந்துள்ளனர்.

(ii) இந்நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு விவரங்கள் பின்வருமாறு :—

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1980–81 (1980 டிசம்பர் வரை) | .. | 24,079 |
| 1981–82 (1981 டிசம்பர் வரை) | .. | 28,340 |

(iii) சிறு தொழில்களுக்கு நிதியுதவி.—ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இந்நிறுவனம் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பெரும்பாலோருக்கு பயன்படுகின்ற வகையில் சிறு தொழில் துறைக்கு அதிக அளவில் நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| நிதி உதவியின் அளவு | குறைந்த அளவு ரூபாய் 2,000 உயர் அளவு ரூபாய் 20.00 இலட்சம். இதைத் தவிர காலந்தாழ்த்தி, தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்தரவாதம் அளிப்பது தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளை வாங்குவது போன்ற உதவிகள். |
| வட்டி வீதம் .. .. | தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியிலுள்ள புதிய தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம்.<br>தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியில் தற்போதுள்ள தொழில் பிரிவுகளுக்கும் இதர பகுதியிலுள்ள தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 13. 50 சதவீதம். |
| திரும்பச் செலுத்தும் காலம். | தொழில் திட்டங்களின் தன்மைகளுக்கேற்ப 10 முதல் 16 வரையிலுள்ள அரை ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தத் தக்கதாகும். |



இந்நிறுவனம் தொடக்கப்பட்டதிலிருந்து இத் தொழிலில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின், விவரங்கள் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1980–81 (31-12-1980 வரை) | | 1981–82 (31-12-1981 வரை) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 2,788 | 1,662.97 | 3,770 | 2,615.91 |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை. | 2,765 | 2,377.91 | 3,799 | 3,118.49 |

(iv) தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி.—இம்மாநிலத்தின் கிராம, ஓரளவு நகரப் பாங்குள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனம் பெருமளவில் நிதி உதவி அளித்து வருகிறது.

உதவிகளின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு எளிய நிபந்தனைகளின் பேரில் ரூபாய் 30 இலட்சம் வரை கடன்கள்.

புதிய சிறு தொழில் நிலையங்களுக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களால் தொடங்கப்படும் தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 12.50 சதவீத வட்டி வீதம் தொழில் அமைந்துள்ள பகுதியின் தன்மையைக் கருத்தில் கொள்ளாது நடுத்தரத் தொழில்களுக்கு 14 சதவீதமும்.

கடன்களைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்குரிய அவகாச காலம் 2 ஆண்டுகள் வரை.

கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் கடன்களைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்குரிய காலம் உட்பட 7 முதல் 10 ஆண்டுகள் வரை.

காப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டு வர வேண்டிய நிதி கோருவதில் இணக்கமான அணுகு முறை.

இதைத் தவிர தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளென அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில் பிரிவுகளுக்கும், அவற்றின் நிலையான இருப்பில் 15 சதவீதம் வரை மத்திய அரசு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மேலும் மாநில அரசால் அறிவிக்கப்பட்ட 25 வட்டங்களும், மாநில அரசு அளிக்கும் உதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவையாகும்.

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின் விவரங்கள் பின் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1980–81 (31–12–1980 வரை). | | 1981–82 (31-12-1981 வரை). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 1,477 | 1,306.60 | 2,045 | 1,640.62 |



(v) தொழில் நுணுக்க வல்லுநர்கள் : தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு அதாவது தொழில் நுணுக்கவியல் பட்டம், தகுதிப் பட்டயம், சான்றிதழ்கள் பல்வேறு தொழிலியல் தயாரிப்புகளில் முன் அனுபவம், திறன் கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக இந்நிறுவனம் இத்திட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :—

ரூபாய் 3 இலட்சம் வரை கடன்கள் வழங்குதல்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள புதிய தொழில் நிலையங்களுக்கு சலுகையாக ஆண்டொன்றிற்கு 12.00 சதவீத வட்டி வீதமும் இதர பகுதிகளில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 13.50 சதவீத வட்டி வீதமும், ரூபாய் 2 இலட்சம் வரை கடன் வாங்குவோர் காப்புத் தொகை செலுத்த வேண்டியதில்லை. கடன் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேல் காப்புத் தொகை 10 சதவீதம் கட்ட வேண்டும்.

கடன் தொகையைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட அவகாசக் காலமும் திரும்பச் செலுத்த வேண்டிய கால அளவும், அதிகமானதாகும். இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்கள் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1980–81 (31–12–1980 வரை.) | | 1981–82 (31–12–1981 வரை.) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 30 | 41.72 | 46 | 45.23 |

(vi) போக்குவரத்து உரிமையாளர்களுக்கு உதவி : மோட்டார் பொருத்தப்பட்ட ரிக்ஷாக்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், சுற்றுலா வாடகைகார்கள், லாரிகள், ஆட்டோ டிரெய்லர்கள், டிரக்குகள், டெம்போக்கள், வான்கள் போன்ற போக்குவரத்து

வண்டிகளை வாங்க உதவும் வகையில் இந்நிறுவனம் ஒரு தனித் திட்டத்தை வகுத்துள்ளது. இந்த உதவியின் முக்கிய கூறுகள் வருமாறு :—

(உரிமையாளரே ஓட்டுவது.)

| | |
|---|---|
| வட்டி வீதம் : .. .. | 14.50 சதவீதம் ஒழுங்காகத் தொகையைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. |
| கடன் உதவி | வண்டியின் விலையில் 85 சதவீதம் வரை. |
| கடனைத் திருப்பி செலுத்தும் காலம். | மாதத் தவணைகளில் நான்காண்டு காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். |

உதவி பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| | 1980—81 (31-12-1980 வரை.) | | 1981—82 (31-12-1981 வரை.) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை. | எண்ணிக்கை | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| போக்குவரத்து வண்டி உரிமையாளர்களுக்கு அளித்த கடன் தொகை. | 427 | 142.43 | 349 | 199.91 |

இத்திட்டத்தின் கீழ் முக்கியமாக பயன் அடைந்தவர்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த ஒற்றை வழிப் போக்குவரத்து வண்டி (Single Track) உரிமையாளர்களே ஆவார்கள். சாலைப் போக்குவரத்து வண்டி சிறு உரிமையாளரிடமிருந்து அதிக கோரிக்கைகள் வந்துள்ளதால் 1981-82 ஆம் ஆண்டில் அவர்களை ஊக்குவிக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

(vii) மின் உற்பத்தி இயந்திரங்களை வாங்குவதற்கு உதவி மின் வெட்டுக் காலங்களில் ஏற்படும் இடையூறுகளைக் களைவதற்கு மின் உற்பத்தி இயந்திரங்களையும் டீசல் இயந்திரங்களையும் வாங்கவும், தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கிறது.



உதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| கடனுதவி .. .. | ரூ. 5 இலட்சம் வரை (தகுதி அடிப்படையில் கடன் தொகை உயர்த்தப்படும்.) |
| திருப்பிச் செலுத்தும் காலம் | 3 முதல் 5 ஆண்டுகள் வரை, கடன் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 6 திங்கள் கழித்து கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கலாம். |
| கடன் பெறுவோர் போட வேண்டிய காப்புத் தொகை. | 25 சதவீதம் நடுத்தரத் தொழிலாளர்களுக்கு 13 சதவீதம் சிறு தொழில்களுக்கு. |
| வட்டி வீதம் .. .. | தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம் முதல் 14.00 சதவீதம் வரை. |

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு :—

| | 1980—81 (31-12-1980 வரை.) | | 1981—82 (31-12-1981 வரை.) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள். | 69 | 174.95 | 17 | 20.99 |

இத்திட்டம், தமிழ்நாட்டிலுள்ள தொழில் பிரிவுகள் அனைத்திற்கும் அவை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெற்றிருந்தாலும் சரி இல்லாவிடினும் சரி பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளது.

(viii) உலக வங்கி அளிக்கும் கடனுதவியைப் பெற்றுத் தருதல்.—தமிழ்நாடு தொழில் நிறுவனம் வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்கள், கூட்டு உறுப்புகள், முதலியவற்றை இறக்குமதி செய்தல், தொழில் நுட்ப அறிவுத் திறனைப் பெறுதல் முதலிய வற்றிற்காக உலக வங்கி வழங்கும் அந்நிய செலாவணிக் கடன் உதவியைப் பெற்றுத் தரும் நிறுவனமாக இம்மாநிலத்தில் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் பின்வரு மாறு:—

| | |
|---|---|
| கடனுதவி .. .. .. | ரூ. 30 இலட்சம் வரை. |
| வட்டி வீதம் .. .. | சிறு தொழில் பிரிவுகளுக்கும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள எல்லாத் தொழில் பிரிவுகளுக்கும் ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம் பின் தங்கிய பகுதிகளல்லாத பிற பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 14.00 சத வீதம். |

கடனைத் திரும்பச் செலுத்த 2 முதல் 4 ஆண்டுகள் வரை தொடங்க அனுமதிக்கப்படும் காலம்—

| | |
|---|---|
| திருப்பிச் செலுத்தும் காலம். | கடன் செலுத்தாமலிருக்க அனுமதிக்கப்படும் காலம் உட்பட 7 ஆண்டு முதல் 14 ஆண்டுகள் வரை. |

இத்திட்டத்தின் கீழ் 1981–82-ல் வழங்கப்பட்ட நிதி உதவியின் அளவு பின்வருமாறு கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது.

| | 1980–81 (1980 டிசம்பர் 31 ஆம் நாள் வரை.) | | 1981–82 (1981 டிசம்பர் 31 ஆம் நாள் வரை.) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (தொகை ரூபாய் இலட்சத்தில்.) | | |
| உலக வங்கி கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் ... | 24 | 268.52 | 30 | .. |



(ix) எளிய நிபந்தனையில் கடன் வசதி :—எளிய நிபந் தனையில் கடன் வழங்கும் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், மிகச் சிறிய, சிறு தொழில்களுக்கும் மிகச் சிறிய தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கும் திட் டத்தை இந்நிறுவனம் வகுத்துள்ளது. தொழில் திட்டத் திற்குத் தேவையான மூலதனத்தில் தொழில் முனைவோர் செலுத்த இயலும் மூலதன பங்கு போக, பாக்கி தேவைப் படுகின்ற மூலதனத்தைப் பெறுகின்ற வகையில் இந்நிதியுதவி அளிக்கப்படுகிறது. தகுதிவாய்ந்த தொழில் நுட்பத்திறன் படைத்த வல்லுநர்களாக உள்ள தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில் குறிப்பாக, தமிழ்நாட்டில் கிராமப் பகுதி களிலும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளிலும், தொழில் களை நிறுவ தெரிந்தெடுத்து உதவுகின்ற அடிப்படையில் இத் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

தனி உரிமையாளர் மற்றும் பங்குதாரர் தொழில் நிறுவனங் களுக்கு இந்த உதவியானது நிறைந்த வட்டிக் கடனுதவி வடிவில் ஆண்டொன்றுக்கு சிறு சதவீத வட்டி வீதத்தில் அளிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பொறுத்த வரை (Limited Companies) இந்த நிதி உதவியானது சேர்ந்துவரும் முன்னுரிமைப் பங்குகள் வடிவில் (Cumulative Preference Shares) வழங்கப்படும்.

இத்திட்டத்தின்படி இந்நிறுவனம் வழங்கியுள்ள உதவி பின் வருமாறு.—

(தொகை ரூபாய் இலட்சத்தில்.)

| | 1980–81 (1980 டிசம்பர் 31 வரை.) | | 1981–82 (1981 டிசம்பர் 31 வரை.) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எளிய நிபந்தனை கடன் வழங்கும் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள். | 236 | 15.51 | 22 | 1.95 |

இத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| கடன் தொகையின் அளவு .. | ரூ. 2 இலட்சம் (அல்லது) தொழில் திட்டத்தின் செலவில் 20 சதவீதம் (இவற்றில் எது குறைவோ அது). |
| வட்டி வீதம் .. .. | ஒரு சதவீதம். |
| கடன் தவணைத் தள்ளிவைப்பு கால அளவு. | ஒவ்வொரு தொழில் தகுதியைப் பொறுத்து 5 ஆண்டுகள் வரை. |

(x) சிறிய அளவில் வழங்கும் கடன்/கூட்டுக் கடன் திட்டம்:—சமூகத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள் பெரும் அளவில் பயனடையும் பொருட்டு முன்னரே குறிப்பிட்டுள்ளது போல் சிறிய அளவில் கடன் வழங்கும் திட்டத்தை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தனித்தியங்க வல்ல தொழில் பிரிவுகளுக்கு ரூ. 5,000 முதல் 25,000 வரை கடன் அளிக்கப்படுகிறது. முன்னரே குறிப்பிட்டுள்ளபடி வட்டார/கிளை அலுவலகங்கள் தற்போது ரூ. 25,000 வரை கணிசமான அளவுக்குக் கடன் வழங்குகின்றன. முன்னரே குறிப்பிட்டுள்ளபடி, முக்கியமாக, கிராமப் பகுதிகளிலும் தொழிலில் பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள தொழில்களை மேம்படுத்துவதற்கும் பெரும் அளவில் வேலை வாய்ப்பினை தோற்றுவிப்பதற்கும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுக் கடன் திட்டத்தின் கீழ் நிலையான இருப்புகளை ஏற்படுத்தவும், நடைமுறை மூலதனக் கடன் வசதிக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் வழங்கும் இந்த உதவியைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

(தொகை ரூபாய் இலட்சத்தில்.)

| | 1980–81 (31–12–1980 வரை). | | 1981–82 (31–12–1981 வரை.) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சிறிய அளவில் வழங்கும் கடன்/கூட்டுக் கடன் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள். | 1,735 | 313.84 | 2,404 | 438.98 |



| | |
|---|---|
| வட்டி வீதம் .. .. | ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் உரிய காலத்திற்குள் கடனைச் திருப்பிச் செலுத்தி விட்டால் 1 சதவீதம். வட்டி சிறப்புத் தள்ளுபடியுடன் வட்டி வீதம் ஆண்டு ஒன்றுக்கு 11.25 சதவீதம்.<br>ஏனையோருக்கு, உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 1 சதவீத வட்டி சிறப்புத் தள்ளுபடியுடன் 13.50 சதவீதம். |
| கடனைத் திருப்பிச் செலுத்தாமலிருக்க அனுமதிக்கப்படும் கால அளவு. | 6–12 திங்கள் வரை. |
| திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவு பிணையக் காப்புத் தொகை. | பத்தாண்டு கால அளவில் (நிலையான சொத்துக்களில் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை) எளிய தவணைகளில். |

(xi) ஏனைய திட்டங்கள்.—தொழில் கொட்டகைகள் வாங்குதல், நவீன அரிசி ஆலைகள் அமைத்தல், உணவு விடுதிகள் கட்டுதல் முதலியவற்றிற்குக் கடன் வழங்குதல் போன்ற ஏனைய நிதியுதவித் திட்டங்களைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்துகிறது.

7. இவ்வாண்டில் கொண்டுவரப்பட்ட புதிய திட்டங்கள்/சலுகைகள்.

(i) கடன் சணக்குகள் வட்டி விதித்தல்—சில நடைமுறை மாற்றங்கள்.—கடன் தவணை வசூல் நிறுத்தி வைக்கப்பட்ட நாளுக்கும் கால அளவிற்கும் அரையாண்டு வட்டி செலுத்த வேண்டிய நாளுக்கும் இடைப்பட்ட காலத்தில் அசல் தவணைத் தொகைகளைச் செலுத்த வேண்டிய நாளன்று முறையாகச் செலுத்துவதற்கு வட்டித் தொகையைத் தள்ளிவிடுவதற்கு இந்நிறுவனத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதில் மேற்கூறிய திருத்தம் இந்நிறுவனத்தின் 1980–81 ஆம் ஆண்டுக் கணக்குகளுக்குப் பொருந்தும். 1980 ஆம் ஆண்டு செப்டம்பா

திங்கள் 30 தேதியுடன் முடிவடையும் அரையாண்டுக்கு வட்டித் தொகையைக் கணக்கிடுகையில் இது கடன் கணக்கில் சரிக் கட்டப்படும்.

(ii) பத்திரம் எழுதிக் கொடுத்தல்—திருத்தப் பத்திரம் எழுதுதல்.—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி போன்ற ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் பின்பற்றி வருகிற நடைமுறையைக் கருத்திற் கொண்டு இயந்திரங்களை மாற்றியமைப்பதற்குத் திருத்தப் பத்திரங்கள் எழுத வேண்டுமென வலியுறுத்த வேண்டாமென தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(iii) கடன்கள் (சிறு தொழில்கள் உத்தரவாதம்) திட்டம் 1980-81.—மத்திய அரசு சிறு தொழில்களுக்குக் கடன் உத்தரவாத திட்டத்தை நிறுத்திவிட்டாலும் வைப்பீடு காப்புறுதிக் கடன் உத்தரவாத நிறுவனம் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து உத்தரவாதக் கடன்களைத் தொடர்ந்து அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாலும், நிறுவனம் புதிய திட்டத்தின்கீழ் உத்தரவாதக் கடன்களைத் வைப்பீடு காப்புறுதி கடன் உத்தரவாத நிறுவனத்திடம் தேவையான உத்தரவாதக் கடன்களைக் கோருவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

(iv) புதிய பிரிவுகளைப் பதிவு செய்யத் தடையும் தற்போதுள்ள பிரிவுகளை விரிவாக்குதலும்.—இந்திய அரசினால் பதிவு செய்யத் தடை விதிக்கப்பட்ட அல்லது இந்திய அரசு விரும்பாத விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதில்லை என நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இருப்பினும், ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை அல்லது தொழிற்பிரிவைப் பொறுத்தமட்டில், அதனுடைய தகுதிகளை வைத்து நிதி உதவி அளிப்பது நியாயம் எனத் தோன்றும்போது நிறுவனம் அந்த இனத்தை மாவட்ட தொழில் மையத்தைக் கலந்தாலோசிக்கலாம்.

(v) உடல் ஊனமுற்றோர் நலனுக்காக சில திட்டங்களை நிறைவேற்றுதல்.—அரசின் கட்டளைகளுக்கிணங்க, உடல் ஊனமுற்றோரில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு எளிய நிபந்தனைகளின் பேரில் குறைந்த வட்டி வீதத்தில் நிதி உதவி அளிக்க, நிறுவனம் ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்துள்ளது.

(vi) நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள்—வணிகஞ்சார்ந்த கணக்கு முறையிலிருந்து ரொக்க அடிப்படைக்கணக்கு முறைக்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பைப் பரிசீலித்தல்.—1980-81 ஆம் கணக்கு ஆண்டிலிருந்து நிறுவனம் தன்னுடைய கணக்கு



முறையை வணிகஞ்சார்ந்த அடிப்படையிலிருந்து ரொக்க அடிப்படைக்கு மாற்றிக் கொண்டுள்ளது. இந்த மாற்றத்தினால் 1980-81 ஆம் ஆண்டுக்குரிய கணக்குகளை நிறுவனம் மீண்டும் எழுத வேண்டியுள்ளது. கணக்குகளை முடிப்பதற்கும் தணிக்கைக்கும் மேலும் சற்று காலமாகும்.

(vii) செலுத்தத் தவறிய தொகைகள் மீது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வட்டி விதித்தல்.—கூடுதல் வட்டி விதிப்பு தற்போது பணம் செலுத்தத் தவறியவர்கள் மீண்டும் கடன் வாங்கும் விருப்பத்தைக் குறைக்கும் என்பதாலும் சில தொழில் முனைவர்களுக்கு உண்மையான இடர்பாடுகள் ஏற்படும் பொழுது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கூடுதல் வட்டி விதித்தால் அது நிறுவனத்திற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதாலும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியை கூடுதல் வட்டி விதிப்பு தொடர்பாக அதனுடைய நிலைமையை மறு ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ள நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(viii) புதிய தொழில் முனைவர்களுக்கு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் தொடக்க மூலதன உதவித் திட்டம்.—தமிழ்நாட்டில் மேற்கூறிய திட்டத்தை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் சார்பாகச் செயல்படுத்த நிறுவனம் அதிகாரம் பெற்றுள்ளது.

(ix) வட்டார/கிளை மேலாளர்களுக்கு ஒப்புதலளிக்கும் அதிகாரத்தை அதிகப்படுத்துதல். போக்குவரத்துக் கடனுதவி' வழங்க ஒப்புதலளிக்க உரிமை பெற்ற வட்டார/கிளை மேலாளர்கள், மேலாளர்கள், உதவி மேலாளர் (திட்டம்) ஆகியோர் ஒப்புதல் அளிப்பதற்கான தற்போதுள்ள அளவு 50,000 ரூபாயிலிருந்து 75,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(x) உலக வங்கி கடனுதவித் திட்டத்தின்கீழ் கடன் ஒப்பளிப்பு திட்டம்.— இயந்திரங்களை இறக்குமதி செய்வதாக இருந்தாலும், சாதாரண திட்டத்தின்கீழ் கடனுதவிக்கு ஒப்புதலளிக்க நிறுவனம் அதிகாரம் பெற்றுள்ளது. இத்திட்டம் சாதாரணத் திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப் பெற்றிருந்தாலும் தேவைப்பட்டால், பின்னொரு நாளில் உலக வங்கி கடனுதவித் திட்டத்தின் ஒப்புதலளிக்கப்பட்டதாக மாற்றிக் கொள்ளலாம் என்ற நிபந்தனைக்குட்பட்டு, கடனுக்கு ஒப்புதலளிக்கப்பெறும் இம்மாற்றத்திற்கு மறுப்பேதும் இருக்கக் கூடாது.

8. கடன் வசூல்.—மின்வெட்டு, நிலக்கரி, கட்டை கரி, இன்றியமையா மூலப் பொருட்கள் முதலியன கிடைக்காமை போன்ற இடர்பாடுகளால் கடனுதவி பெற்ற பிரிவுகளின் உற்பத்தியும் இலாபமும் பாதிக்கப்பட்டிருந்தாலும், அவைகளிடமிருந்து நிறுவனம் பெருமளவிற்கு கடன் வசூல் செய்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் நிறுவனம் செய்துள்ள வசூல் பின்வருமாறு :—

| 1980-81 (80 டிசம்பர் வரை). | 1981-82 (81 டிசம்பர் வரை) |
|---|---|
| (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 6,21.73 | 8,00.69 |

வட்டியைச் செலுத்துவதற்கு காலத்தை நீட்டித்தல், கடனின் அசல் தொகையைத் திருப்பித் செலுத்தும் தவணையை மாற்றி அமைத்தல், வட்டி, அசல் தொகைளைச் செலுத்தவேண்டிய தவணைகளைத் தள்ளி வைக்க அனுமதித்தல் முதலியவற்றிற்கு அனுமதி வழங்குவதன் வாயிலாக இடர்பாடுக் கொண்டிருக்கும் தொழிற்பிரிவுகளிடம் நிறுவனம் தாராளமாகவும் நீக்குப் போக்கான முறையிலும் நடந்து வருகிறது.

9. நிதி முடிவுகள்.—ஏற்கெனவே கூறியவாறு, 1980-81 ஆம் ஆண்டில் நிறுவனம் கணக்கு முறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வாரக் கடன்களைக் கணக்கிலிருந்து தள்ளி விடுவதற்கு முன்பாக ஆதாயம் (வரி செலுத்துவதற்கு முன்னதாக) 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளுக்கு பின் வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| 1981-82 ( 1982 மார்ச் வரை) | ரூபாய் 125.00 இலட்சம். |
| 1981-82 (1982 மார்ச் வரை மதிப்பீடு). | ரூபாய் 175.00 இலட்சம். |

10. வட்டார/கிளை அலுவலகங்கள்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தற்போது கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரண்டுஇடங்களில்வட்டார அலுவலகங்களும், கடலூர், தர்மபுரி, ஈரோடு, நாகர்கோயில், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் ஆகிய பத்து இடங்களில் கிளை அலுவலகங்களையும் சென்னையில் தலைமை அலுவலகத்தையும் நிறுவியுள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டின் (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை) செயல்திறன் 1980-81 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காணலாம்.



## தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனமும் முறையே ரூ. 100 இலட்சம், ரூ. 70 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உகபொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது ஆகும்.

### மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய பகுதியில் உள்ளதுமான மாரியூர்-வாலிநோக்கத்திலுள்ள 5,617.66 ஏக்கராக்கள் பரப்பளவில் இந்த உப்பு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 145 இலட்சம் மதிப்பீட்டில் மேற்குறிப்பிட்ட பகுதியில் 1975 ஆம் ஆண்டு முதல் வளர்ச்சிப் பணிகள் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சங்கள் பங்கு மூலதனமாகவும் ரூ. 38 இலட்சங்கள் கடனாகவும் ரூ. 5 இலட்சங்கள் வழிவகை முன்பணமாகவும் அரசு வழங்கியுள்ளது. உப்பு நிறுவனம் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய தமிழ் நாடு தொழிற் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து ரூ. 30 இலட்சமும் கனரா வங்கியிடமிருந்து ரூ. 10 இலட்சம் கடனாகவும், மற்றும் மத்திய மூலதன உதவித் தொகை வகையில் ரூ. 7.79 இலட்சமும் பெற்றுள்ளது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய இந்த திட்டத்திற்காக ரூ. 130 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேம்பாட்டு பணிகளுடன் இத்திட்டம் 1976 ஆம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தியைத் தொடங்கியது. ஒவ்வொரு ஆண்டிலும் உற்பத்திச்செய்யப்பட்ட அளவு பின்வருமாறு :—

| ஆண்டு. | மெட்ரிக் டன்கள். |
|---|---|
| 1976 .. .. .. | 550 |
| 1977 .. .. .. | 3,400 |
| 1978 .. .. .. | 6,500 |
| 1979 .. .. .. | 22,660 |
| 1980 .. .. .. | 29,047 |
| 1981 .. .. .. | 25,600 |

1981ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி குறைப்பாட்டிற்கான காரணம் அந்த ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை திங்களில் பெய்த இடைமழையும் மற்றும் செப்டம்பர் திங்களிலேயே ஆரம்பித்த பருவ மழையுமே ஆகும்.

இந்நிறுவனம் 1981ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தரமான 25,600 டன்கள் உப்பை உற்பத்தி செய்துள்ளது. தவிர தூள் உப்பை சிறிய பைகளிலும், நசுக்கிய உப்பையும் இந்த உப்பு திட்டத்தில் தயாரிக்கப்படுகிறது. பிரதம குழாய் ஏற்றங்களை இயங்கச் செய்ய 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் உயர் அழுத்த மின்சாரம் பெறப்பட்டது. இதனால் பயன் படுத்தப்படும் எரிசக்தி செலவு குறைந்துள்ளது. 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் முடிய ரூ. 53.63 இலட்சம் சேர்ந்த இழப்பை உப்பு நிறுவனம் அடைந்துள்ளது.

இத்திட்டம் பின்தங்கிய பகுதியில் உள்ளதால் துறைமுகம் மற்றும் இருப்புப்பாதை பக்க நிலையங்கள் போன்ற வசதிகள் இல்லை. அதனால் நிறுவனத்திற்கு உற்பத்தி செய்த உப்பை விற்பனை செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் உப்பு நிறுவனம் உப்பை விற்பனை செய்வதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும் வாலிநோக்கத்தில் சிறிய துறைமுகம் ஒன்றினை ஏற்படுத்தும் படியும் அரசை நிறுவனம் கேட்டுள்ளது.

1982–ஆம் ஆண்டில் உப்புத் தொழிற்சாலை 70,000 டன்கள் அளவிலான உப்பை உற்பத்தி செய்யும். தூள் உப்பு மற்றும் நசுக்கிய உப்பு முதலியவைகளும் உற்பத்தி செய்யப்படும். இந்த ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டித்தரப்படும். இதைத்தவிர தொழிற்கூட கட்டிடம், கழிவிடம், போன்றவைகளும் பணியாளர்களுக்கு கட்டித்தரப்படும்.

இந்த உப்புத் தொழிற்சாலையில் சுமார் 600 பேர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும், 50 பேர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் உப்பை ஏற்றுதல், இறக்குதல் ஆகியவை மூலம் மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

மரவக்காடு-வடக்காடு உப்புத் திட்டம் :

1979 ஆம் ஆண்டு முதல் ரூ. 120 இலட்சம் மதிப்பீட்டில் மரவக்காடு–வடகாடு கிராமங்களில் உள்ள 4,092.33 ஏக்கராக்கள் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்வதற்கான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 120 இலட்சம் மதிப்பீட்டிலான விரிவான திட்டங்கள் அறிக்கைக்கு அரசு தனது ஒப்புதலை அளித்துள்ளது. இத்திட்டம் அரசின் பங்கு மூலதனம் மற்றும் நிதி



நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் உதவி தொகை ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றப்படும். தற்பொழுது சுற்று அணைக்கரை மற்றும் உள்கரை போடும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இத் திட்டத்திற்காக, அரசு பங்கு மூலதன வகையில் ரூ: 20 இலட்சமும் தவணை கடனாக ரூ. 5 இலட்சமும் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காக 1981ஆம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 9.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டில் சுற்று அணைக்கரை, கால்வாய்கள், சாலைகள் போடுதல் மற்றும் 200 உப்புப் பாத்திகள் அமைத்தல் வேலைகளுக்காக ரூ. 17.84 இலட்சம் செலவிடப்படும். வாகனங்கள், இயந்திரங்கள் போன்றவைகளை வாங்குவதுடன் திட்ட அலுவலகமும் கட்டப்படும். 1982ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் உப்பு உற்பத்தி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. முதல் ஆண்டில் சுமார் 10,000 டன்கள் அளவிலான உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் 400–500 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும், 20 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் தவிர, மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கப்படும். இத்திட்டம் முழுமையாக செயல்பட்டபின் 100 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், 1,000 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும், தவிர, மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும்.

வேதாரண்யம் பகுதியில் இயற்கை சமநிலை (ecology) பாதிக்கப்படாத வகையில் உப்பு உற்பத்தி செய்வதை எவ்வளவு பரப்பளவில் மேற்கொள்ளலாம் என ஆராய்ந்து அறிக்கை தரும்படி பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கத்தை அரசு கேட்டுக் கொண்டது. அதன்படி சங்கமும் ஒரு அறிக்கையை அரசுக்குத் தந்துள்ளது. இந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதிய திட்டங்கள்.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வடசெம்மஞ்சேரி பகுதியில் உள்ள 540 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 20 இலட்சம் முதலீட்டில் உப்பு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 20 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 300 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

தென்னாற்காடு மாவட்டம், கழுவேலி சதுப்பு நிலப்பகுதியான கண்டாடு கிராமத்திலுள்ள 1,588 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்வதற்கான புலனாய்வை இந்நிறுவனம் மேற்

கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 50 இலட்சமாகும். இத்திட்டத்தின் மூலம் 40 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், 600 நபர்களுக்கு பருவகால வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

மாரியூர்-வாலிநோக்கத்தில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் கனிக்களிலிருந்து (Gypsum) மருத்துவ சிகிச்சைக்குப் பயன்படும் கனிக்கல் தூள் (Planting Pars) மற்றும் எப்சம் உப்பு (Epsum Salt) ஆகியவை தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 15 இலட்சமாகும். இத்திட்டத்தின் மூலம் 20 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்கள் பற்றிய விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அத்திட்டங்கள் 1982–83ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

திட்ட உதவிகள் :

1982–83ஆம் ஆண்டில் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கும் திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்கள் ஆகியவற்றின் செலவிற்காக பங்கு மூலதனம்/கடன் வகையில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கும்படி அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டில்அதிக அளவிலான உப்பு உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் அந்த ஆண்டு பண இழப்பு தவிர்க்கப்பட்டு, வரும் ஆண்டுகளில் நிறுவனம் நல்ல முன்னேற்றத்தை அடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

சர்க்கரைத் தொழில்.

முன்னுரை :

நெசவுத் தொழிலுக்கு அடுத்து சர்க்கரைத் தொழில் தான் முறைப்படுத்தும் தொழில்களில் மிகப் பெரிய தொழிலாக விளங்குகிறது. இத்தொழில் வேளாண்மையை மையமாகக் கொண்ட தொழிலாக இருப்பதால் மிக முக்கிய இடத்தை வகித்து இந்திய கிராமப் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. சர்க்கரையை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலம், இந்நாட்டிற்கு அந்நிய செலாவாணியை ஈட்டித்தரும் தொழில்களின் வரிசையில், சர்க்கரைத் தொழிலும் ஒரு முக்கிய இடத்தை வகித்தது.

1.2. கடந்த இரண்டு பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழிலின் வளர்ச்சி குறிப்பாகக் கூட்டுறவுத் துறையில் அடைந்த வளர்ச்சி போற்றத்தக்க வகையில் உள்ளது



அபரிமிதமான கரும்பு உற்பத்தியினால் தமிழ்நாடு, நாட்டில் ஒரு முக்கியமான சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாடு சர்க்கரை தொழிலுக்கு புதியதாக இருந்த போதிலும் அதன் சாதனை தொடர்ந்து நன்முறையில் அமைந்துள்ளது. முதலாவது ஐந்தாண்டுத் திட்ட கால தொடக்கத்தில் இம்மாநிலத்தில் நான்கு சர்க்கரை ஆலைகளே இருந்தன. ஆனால் ஐந்தாண்டு திட்ட காலங்களில் இத்தொழில் சீரான வளர்ச்சி ஏற்பட்டு 1980–81ஆம் ஆண்டு இறுதியில் 21 சர்க்கரை ஆலைகள் இருந்தன. இவற்றில் 8 ஆலைகள் தனியார் துறையிலும், 10 ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும் 2 ஆலைகள் பொதுத் துறையிலும் எஞ்சிய ஒரு ஆலை மத்திய அரசு நிர்வாகத்தின் கீழும் உள்ளன. இந்த ஆய்வில் 1980–81 சர்க்கரை ஆண்டிற்கான (அக்டோபர் 80முதல் செப்டம்பர் 81வரை) சாதனைகள் முந்தைய ஆண்டில் (1979–80) சாதனைகளுடன் ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளதுடன் 1981–82ஆம் சர்க்கரை ஆண்டிற்கான திட்டங்கள் பற்றிய குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

சர்க்கரை துறை இயக்ககம்.

2.1. அரசு 1969ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சர்க்கரைத் துறை இயக்ககத்தை தோற்றுவித்தது. இவ்வியக்கம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஒருங்கிணைந்து செயல்படச் செய்தல், இந்த ஆலைகளை மேற்பார்வையிடுதல் ஆகிய பணிகளை கவனித்து வருகிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் சார்புடைய பணிகளை மேற்பார்வையிடும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் கூட்டுறவு பதிவாளரின் அனைத்து அதிகாரங்களும் சர்க்கரை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

2.2. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித்திறன் அளவு மற்றும் நிறுவிய உற்பத்தித் திறன் அளவு ஆகிய விவரங்களை இணைப்பு 1-ல் காணலாம்.

3. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளின் செயல் முறை :

3·1. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் முன்னேற்றம் போற்றத்தக்க நிலையிலுள்ளது. இம்மாநிலம் சர்க்கரை உற்பத்தி தொழிலுக்கு புதிதாக இருந்தாலும், கரும்பு பயிரிடும் பரப்பளவை பொருத்தமட்டில் உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், அரியானா மாநிலங்களுக்கு அடுத்து நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆயினும் கரும்பு உற்பத்தியை பொறுத்தமட்டில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. கரும்பு விளைச்சளைப் பொறுத்த மட்டில் அதாவது ஏக்கர் மகசூலில் தமிழகம் முதலிடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் சர்க்கரைத்

தொழிலின் சீரான செயல்பாட்டிற்கு கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் சர்க்கரை ஆலைகளுக்குமிடையே நிலவும் நல்லுறவே காரணமாகும்.

3.2. தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி மற்றும் சர்க்கரை ஆலைகள் பயன்படுத்திய கரும்பின் அளவு முதலிய விவரங்களை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

| ஆண்டு. | | கரும்பு பயிரிடப்பட்ட பரப்பளவு (1,000 ஹெக்டேரில்). | உற்பத்தி செய்யப்பட்ட கரும்பின் அளவு (1,000 டன்களில்). | ஆலைகளில் பயன் படுத்தப்பட்ட கரும்பின் அளவு (1,000 டன்களில்). | மொத்த உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட கரும்பின் அளவு (சத விகிதத்தில்). | ஹெக்டேருக்கு சராசரி விளைச்சல் (டன்களில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1977–78 | .. | 167 | 17,238 | 5,466 | 32 | 103.22 |
| 1978–79 | .. | 154 | 15,431 | 5,768 | 37 | 100.20 |
| 1979–80 | .. | 149* | 15,059* | 4,078 | 27 | 101.00 |
| 1980–81 | .. | 136** | 13,549** | 4,954 | 37 | 100.00 |
| 1981–82 | .. | 172 | 18,920 | 6,424 | 34 | 110.00 |
| 1982–83 | .. | 175 | 19,600 | .. | .. | 112.00 |

* இறுதியாக மாற்றப்பட்ட புள்ளி விபரம். தோராய மதிப்பீடு.

** இறுதியான முன்னறிவிப்பு. **இலக்கு.

3.3. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் அரவை செய்யப்பட்ட கரும்பின் அளவும் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு முதலியவைகளும் மற்றும் 1981–82-ம் ஆண்டிற்கான மதிப்பீடும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



| தொடர் எண்ணும் சர்க்கரை ஆண்டும். | | அரவை செய்யப் பட்ட கரும்பு (இலட்சம் டன்களில்). | சர்க்கரை உற்பத்தி (இலட்சம் டன்களில்). | சர்க்கரை கட்டுமானம் (சதவிகிதத்தில்). | உற்பத்தித் திறன் பயன் படுத்தியது (சதவிகிதத்தில்). |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1. 1977–78 | .. | 54.66 | 4.68 | 8.57 | 79 |
| 2. 1978–79 | .. | 57.68 | 4.92 | 8.52 | 84 |
| 3. 1979–80 | .. | 40.78 | 3.67 | 9.00 | 59 |
| 4. 1980–81 | .. | 49.54 | 4.30 | 8.60 | 69 |
| 5. 1981–82* | .. | 64.24 | 5.57 | 8.67 | 90 |

* தோராய மதிப்பீடு மட்டும்.

சென்ற அரவைப் பருவத்தைக் காட்டிலும் 1981–82 அரவைப் பருவத்திற்கு கரும்பு பெருமளவில் சர்க்கரை ஆலைகளுக்குக் கிடைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு 1981–82 பருவத்திற்கு ஆதாயமுள்ள கரும்பு விலை தமிழக அரசால் அறிவிக்கப்பட்டமையும் மேலும் வெல்ல விலையில் சரிவும் காரணங்களாகும். இதன் காரணமாக சர்க்கரை உற்பத்தி சென்ற ஆண்டைவிட அதிக அளவு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கண்ட பட்டியலிலுள்ள விவரங்களை காணும்போது சர்க்கரை ஆலைகளின் உற்பத்தித் திறன் சீரான அளவில் உயர்ந்து வருவது தெரியவரும். 1979–80 ஆம் ஆண்டில் உற்பத்தித் திறனில் சிறிதளவு குறைவு ஏற்பட்ட தற்கு, எதிர்பாராத விதமான வறட்சி நிலையும் வெல்ல உற்பத்திக்கு கரும்பு திருப்பிவிடப்பட்டதுமே காரணங்களாகும். இருப்பினும் 1980–81-ல் உற்பத்திக் திறன் அளவில் உயர்வு ஏற்பட்டது. 1981–82 அரவைப் பருவத்தில் மேலும் உயர்வு ஏற்பட்டு உற்பத்தித் திறனில் ஏறத்தாழ 90 சதவிகிதம் பயன்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

3.4. கடந்த ஐந்தாண்டுகளில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண்ணும் ஆண்டும். | | அரவை செய்யப் பட்ட கரும்பு அளவு. | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை அளவு. | சர்க்கரை கட்டுமானம். | பயன் படுத்திய உற்பத்தித் திறன். |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சம் டன்களில்). | | (சதவிகிதத்தில்). | |
| 1. 1976–77 | .. | 14.86 | 1.33 | 8.95 | 71 |
| 2. 1977–78 | .. | 23.35 | 2.09 | 8.94 | 89 |
| 3. 1978–79 | .. | 24.27 | 2.13 | 8.78 | 90 |
| 4. 1979–80 | .. | 14.81 | 1.39 | 9.40 | 55 |
| 5. 1980–81 | .. | 16.96 | 1.53 | 9.04 | 58 |

சென்ற ஆண்டை விட 1981–82 அரவை பருவத்தில் தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் செயல் திறனில் நல்ல முன்னேற்றம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு அகில இந்திய அளவில் சர்க்கரை உற்பத்தி 65 முதல் 70 இலட்சம் டன்கள் வரை இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் சுமார் 5.57 இலட்சம் டன்கள் சர்க்கரையை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது 1980–81 ஆம் ஆண்டு உற்பத்தியைவிட 30 சதவீதம் அதிகமாகும். கடந்த மூன்றாண்டுகளில் அதாவது 1978–79, 1979–80 மற்றும் 1980–81 ஆண்டுகளில் சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் பற்றிய விவரங்களை இணைப்பு இரண்டில் காணலாம்.

4. கரும்பு விலை :

4.1 1980–81 ஆம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு 8.5 சதவீதம் அல்லது அதற்கு குறைவான சதவிகித சாக்கரை சத்துடைய கரும்பின் குறைந்த அளவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 13 என மத்திய அரசு நிர்ணயம் செய்தது. 8.5 சதவிகித சர்க்கரை சத்துக்கு அதிகமாக கிடைக்கும் 0.1 சதவிகிதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றுக்கு 15.2941 பைசா வீதம் அதிகமாக கொடுக்கப்பட வேண்டுமெனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. கரும்பு உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதால் கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த அளவு விலை ஆதாயமற்றதென முறையீடுகள் எழுந்தன. நியாயமான மற்றும் ஆதாயமான விலை கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்படவேண்டுமென்ற எண்ணத்தில் தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆலைகளை கரும்பிற்கு அதிகப்படியான விலையை வழங்கும்படி அறிவுறுத்தியது. அதற்கிணங்க 1980–81 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவிகிதம் அல்லது அதற்குக் குறைவான சர்க்கரை சத்துடைய கரும்புக்கான விலை டன் ஒன்றுக்கு ரூ. 175 எனவும் சர்க்கரை சத்து 8.5 சதவிகிதத்திற்கு மேற்படும்பொழுது ஒவ்வொரு 0.1 சதவிகிதத்திற்கும் குவிண்டால் ஒன்றுக்கு 15.2941 பைசாவிற்குப் பதிலாக 20.5882 பைசா எனவும் தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் வழங்கின.

4.2. 1980–81 ஆம் ஆண்டில் கரும்பிற்கு நிர்ணயித்த விலையான குவிண்டாலுக்கு ரூ. 13 என்பதையே 1981–82 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கும் 8.5 சதவீத சர்க்கரைச் சத்துடைய கரும்பிற்கு குறைந்தபட்ச விலையாக மத்திய அரசு நிர்ணயம் செய்தது. கரும்பு சாகுபடி செலவு அதிகரித்திருப்பதையும் சர்க்கரை ஆலைகளின் கொடுக்கக்கூடிய சக்தியினையும் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு 1981–82 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சர்க்கரைச் சத்துடைய கரும்பிற்குக் குறைந்த அளவு விலை, டன் ஒன்றுக்கு ரூ. 165 எனவும் சர்க்கரைச் சத்து 8.5 சதவீதத்திற்கு மேற்படும் பொழுது ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 19.4117 பைசா வீதமும் வழங்க சர்க்கரை ஆலைகளை அறிவுறுத்தியது.



4.3. மத்திய அரசு நிர்ணயித்த கரும்பு விலையும் தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள் வழங்கிய கரும்பு விலைகளின் விவரங்களையும் இணைப்பு மூன்றில் காணலாம்.

4.4. கரும்பு பயிரிடப்படும் பரப்பளவை நிலைப்படுத்துவ்தாலும் ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் வரையறுக்கப்பட்ட கரும்புப் பகுதிகளில் கரும்பு பயிரிடுதலை முழுமையடையச் செய்வ்தாலுமே ஆலைகளுக்கு எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லாமல் சீரான கரும்பு விநியோகத்தை உறுதிப்படுத்த இயலும். தற்போது நடைமுறையில் உள்ளது போல் ஆலைகளின் அரவைப் பருவம் தொடங்கும்போது கரும்பு விலையை அறிவிக்காமல் கரும்பு நடும் பருவத்திற்கு முன்னதாகவே கரும்பு விலையை அறிவித்தலின் மூலமே இது சாத்யமாகும். இதனால் தற்போது சர்க்கரை உற்பத்தியில் ஏற்பட்டு வரும் ஏற்றத் தாழ்வு நீக்கப்படுவது மட்டுமல்லாமல் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கவும் முடியும்.

5. சர்க்கரை விலை :—

5.1. மத்திய அரசு சர்க்கரை விற்பனை மற்றும் விநியோகத்தின் மீது பகுதிக் கட்டுப்பாடு முறையை செயல்படுத்தியுள்ளது. இதன்படி மொத்த உற்பத்தியில் 65 சதவீத சர்க்கரையை லெவி சர்க்கரையாக மத்திய அரசு எடுத்துக்கொள்ளும். எஞ்சியுள்ள 35 சதவிகித சர்க்கரை மட்டுமே சர்க்கரை ஆலைகளால் வெளிச் சந்தையில் விற்க அனுமதிக்கப்படும்.

5.2. 1980-81 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு மத்திய அரசு லெவி சர்க்கரையின் விலையை குவிண்டாலுக்கு ரூ. 297.22 ஆக (இ. 30 ரகத்திற்கு) நிர்ணயம் செய்தது. (ஆயத்தீர்வை நீங்கலாக).

5.3. மத்திய அரசு பல்வேறு மண்டலங்களுக்கான, 1981-82 ஆம் ஆண்டுக்கான லெவி சர்க்கரையின் விலையை அறிவித்துள்ளது. அதன்படி தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டலத்திற்கு லெவி சர்க்கரையில் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 302.13 ஆக (இ. 30 ரகத்திற்கு) நிர்ணயம் செய்துள்ளது (ஆயத்தீர்வை நீங்கலாக).

6. கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் :—

6.1. சர்க்கரைத் துறை இயக்குநர், கரும்பு ஆணையர் என்ற முறையில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பயிரிடப்படும் பகுதிகளை நிர்ணயிப்பதுடன் சர்க்கரை ஆலைகளை சுற்றியுள்ளபகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிகளையும் கவனித்து வருகின்றார். இதற்காக பொறியியல் பணியாளர்கள் இவ்வியக்கத்தின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர். கரும்பு சாலை அபிவிருத்திக்கான செலவு சர்க்கரை ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும். கரும்பு செஸ் நிதியிலிருந்து செலவிடப்படுகிறது கரும்பை வெட்டிய பின் தடங்கலின்றி உடனுக்குடன் ஆலைகளுக்கு எடுத்துச் செல்ல நல்ல பராமரிக்கப்பட்ட சாலைக அவசியமானதால் அதிகம் கரும்பு விளையும் பகுதிகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே புதிய சாலைகளை அமைக்க அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

6.2. கடந்த ஆண்டுகளில் இத்திட்டத்திற்கென செலவிடபட்ட தொகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1978-79 | .. | .. | 109.92 |
| 1979-80 | | .. | 150.00 |
| 1980-81 | .. | .. | 180.41 |
| 1981-82 | .. | .. | 230.00 (திட்ட ஒதுக்கீடு.) |

7. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்:

7.1. தமிழ்நாட்டில் சர்க்கரை தொழிலின் விரைவான வளர்ச்சியால், இத்தொழிலுக்குத் தேவையான அனுபவமிக்க தொழில் நுட்ப பணியாளர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் அதனை ஈடு செய்யும் பொருட்டு 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தியது. இந்த நிலையம் சர்க்கரை ஆலைகளின், உற்பத்தி பணியாளர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளித்து வருகிறது.

8. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம்:—

8.1. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு 41 ஆவது சட்டத்தால் திருத்தப்பட்ட, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (நில உச்ச வரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தை செயல்படுத்தியதன் விளைவாக, அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலங்களில் பயிரிடும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு 22—2—1974 அன்று கரும்பு பண்ணைக் கழகத்தை நிறுவியது. நில உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்ட குத்தகை நிலங்கள் நீங்கலாக கரும்பு பண்ணைக் கழகத்திடம் தற்போது 3,996 ஏக்கர் நிலங்கள் உள்ளது. இக்கழகத்தின் முக்கிய நோக்கம் மேற்படி நிலங்களில் கரும்பு, நெல் மற்றும் இதர பயிர்களை பயிரிடுவதேயாகும். சட்டரீதியான கடமைப்பாட்டின் படி இங்கு பயிரிடப்படும் கரும்பு முழுவதும் வடபாதி மங்கலத்தில் உள்ள திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு அளிக்கப்படுகிறது. இங்கு விளையும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் மற்றும் இதர வியாபாரிகளுக்கும் விற்கப்படுகிறது. கரும்பு பண்ணைக் கழகத்தின் நிலங்களில் கரும்பு சாகுபடியை அதிகரிக்கச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய அரசு ஒரு நிபுணர் குழுவினை நியமித்துள்ளது. இக்குழுவின் அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.



8.2. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2 கோடி ஆகும். இதில் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்ட பங்கு மூலதனமாகும், இதுவரை இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு ரூ. 27·50 இலட்சம் பங்கு முதலீடு செய்துள்ளது; மேலும் ரூ. 15 இலட்சம் நீண்ட கால கடனாகவும் ரூ. 10 இலட்சம் வழி வகை முன் பணமாகவும் அளிக்கப்பட்டுள்ளது. 30—6—1980 வரையில் இக்கழகத்தின் திரண்ட இழப்புத் தொகை ரூ. 56.04 இலட்சமாகும். 1980-81 ஆம் ஆண்டில் (30—6—1981) இக் கழகம் ரூ. 13.68 இலட்சம் நிகர லாபமாக ஈட்டியுள்ளது. தவிர இக் கழகம் 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 8.19 இலட்சம் இலாபம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

9. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் :

9.1. அரசு 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தை நிறுவியது. அதன்படி இக்கழகம் தஞ்சாவூர் அருகிலுள்ள குருங்குளம் கிராமத்தில் ஒன்றும் திருச்சிக்கு அருகிலுள்ள எறையூர் கிராமத்தில் ஒன்றும் ஆக இரண்டு சர்க்கரை ஆலைகளை பொதுத்துறையில் நிறுவியுள்ளது.

9.2. பொதுத் துறையிலேயே புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட வேண்டும் என்ற கொள்கையினை மாற்றி புதிய ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்பட வேண்டுமென 1977—ல் அரசு முடிவு செய்தது. அதன்படி தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்காக பெறப்பட்ட உரிமம் கூட்டுறவு முறையில்

சர்க்கரை ஆலை நிறுவும் பொருட்டு மாற்றப்பட்டது. ஆயினும், இந்த ஆலையின் நிர்மாணப் பணி தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தாரால் மேற் கொள்ளப்பட்டு அரவை தொடங்கியவுடன் அதனை அவ்வாலையினரிடம் ஒப்படைக்கும்படி அரசு அறிவுறுத்தியது. அதன்படி தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம், அந்த ஆலையின் நிர்மாணப்பணியினை 18 மாதங்களுக்கும் குறைவான கால அளவில் செய்து முடித்தது. அவ்வாலை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அதன் அரவையினை தொடங்கியது.

9.3. நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு அரைக்கும் திறன் கொண்ட இரு புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி வட்டத்தில ஒன்றும் தஞ்சாவூர் மாவட்டம் மாயூரம் வட்டத்தில் ஒன்றும் அமைக்க மத்திய அரசிடம் உரிமம் கோரப்பட்டுள்ளது. திருத்தணி திட்டத்திற்கான உரிமம் மத்திய அரசினரால் விரைவில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிய சர்க்கரை ஆலை:

9.4. 1,250 டன் கரும்பு அரைக்கும் திறன் சர்க்கரை ஆலைகளை நிறுவுவதைத் தவிர நாள் ஒன்றுக்கு 500 டன் கரும்பு அரைக்கும் சிறிய சர்க்கரை ஆலைகளை, கரும்பு குறைவாகக் கிடைக்கும் பகுதியில் நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசு உரிமம் வழங்கினால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரண்டு சிறிய சர்க்கரை ஆலைகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. காகிதத் தொழிற்சாலை :

சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் உபரி கரும்புச் சக்கையை பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 டன் வரை காகிதம் உற்பத்தி செய்யும் சிறிய அளவிலான தொழிற்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டது. இதன்படி மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் கூட்டுறவு முறையில் ஒரு சிறிய காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்காக ரூ. 30 இலட்சம் பங்கு மூலதனமாக அரசு அளித்துள்ளது. இக்காகித ஆல்லையை நிறுவும் பொறுப்பு தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் தோராய மதிப்பு சுமார் 360 இலட்சமாகும். இத்திட்டத்திற்கான தொடக்க வேலைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சிறிய சர்க்கரை ஆலையின் செயல் திறனைப் பொறுத்து பிற சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் இது போன்ற சிறிய காகித ஆலை அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.



11. இயந்திரங்கள் பழுது பார்க்கும் தொழில் கூடம் நிறுவுதல்,

சர்க்கரை ஆலைகளில் உள்ள கரும்பு பிழியும் உருளைகளின் மேற்பரப்பிலுள்ள உருக்குப் பகுதியினை ஆண்டுதோறும் புதுப்பிக்க போதுமான வசதிகள் தமிழ்நாட்டில் இல்லை. எனவே, மேற்குறிப்பிட்ட வேலைகளைச் செய்வதை முதன்மையாகக் கொண்டும், மேலும் சர்க்கரை ஆலை இயந்திரங்களுக்கு தேவைப்படும் சிறிய உட்பொருட்களை தயார் செய்வதற்கு ஒரு தொழிற் கூடம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மறைமலை நகரில் 5.5 ஏக்கர் நிலப்பரப்பு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் (எம்.எம்.டி.ஏ.) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிலத்தின் விலையில் 25 சதவீதமான ரூ. 1,03,125 முன் பணமாக கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ. 50 இலட்சமாகும். இதில் அரசின் மூலதனப் பங்கு ரூ. 20 இலட்சமாகும்.

12. சர்க்கரைத் தொழிலில் வேலை வாய்ப்பு :

சர்க்கரைத் தொழில் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் அதிகப்படியான நபர்களுக்கு குறிப்பாக கிராமப் புற மக்களுக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்கிறது. சர்க்கரைத்தொழில் நேரடியாக சுமார் 18 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. தவிர, இத்தொழிலை சார்ந்துள்ள இதர தொழில்களான விவசாயம், போக்குவரத்து மற்றும் பிற தொழில்களின் மூலமாக பல இலட்சம் பேர்களுக்கு மறைமுகமாக வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

13. பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறைலோ புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க முயற்சி மேற்கொள்ளப் படாத இடங்களில், கரும்பு கிடைப்பதைப் பொறுத்தும் ஏற்கனவே இயங்கி வரும் பிற சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகளுக்கும் ஊறு நேரா வண்ணமும் சர்க்கரை ஆலைகள் அமைக்க தனியார் துறைக்கு ஊக்கமளிக்கலாம் என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. இவ்விஷயம் தொடர்பாக ஐந்து விண்ணப்பங்களும் ஆலையின் நிறுவிய திறனை விரிவாக்கம் செய்வது பற்றி இரு விண்ணப்பமும் பெறப்பட்டு அவைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

## இணைப்பு—1

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித்திறனளவு மற்றும் நிறுவிய உற்பத்தித் திறனளவு ஆகியவற்றின் விவரங்கள்:—

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும். | நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன். | நாளது நாள் வரையிலான நிறுவிய உற்பத்தித் திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (நாளொன்றுக்கு டன்களில்) | |
| கூட்டுறவுத் துறை— | | |
| 1. ஆம்பூர் .. .. .. | 2,200 | 2,200 |
| 2. மதுராந்தகம் .. .. | 1,750 | 1,750 |
| 3. அமராவதி .. .. | 2,000 | 2,000 |
| 4. சேலம் .. .. | 2,500 | 2,500 |
| 5. கள்ளக்குறிச்சி .. .. | 2,000 | 2,000 |
| 6. நேஷனல் .. .. | 1,500 | 1,500 |
| 7. தர்மபுரி .. .. | 1,250 | 1,250 |
| 8. வேலூர் .. .. .. | 1,250 | 1,250 |
| 9. திருப்பத்தூர் .. .. | 1,250 | 1,250 |
| 10. உளுந்தூர்பேட்டை .. | 1,250 | 1,250 |
| மொத்தம் .. | 16,950 | 16,950 |



| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும். | நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தி திறன். | நாளது நாள் வரையிலான நிறுவிய உற்பத்தி திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தனியார் துறை— | | |
| 11. இஐடி பாரி .. .. | 4,000 | 4,000 |
| 12. காவேரி* .. .. | 1,000 | 1,250 |
| 13. டெக்கான் .. .. | 2,000 | 1,850 |
| 14. சவுத் இந்தியா .. .. | 1,500 | 2,700 |
| 15. சக்தி .. .. | 4,000 | 4,000 |
| 16. அருணா .. .. | 4,000 | 4,000 |
| 17. மதுரா .. .. .. | 1,100 | 600 |
| 18. கோத்தாரி .. .. | 4,000 | 1,500 |
| 19. திரு. ஆரூரான் .. .. | 2,000 | 2,000 |
| மொத்தம் .. | 23,600 | 21,900 |
| பொதுத் துறை— | | |
| 20. தஞ்சாவூர் .. .. | 1,250 | 1,250 |
| 21. பெரம்பலூர் .. .. | 1,250 | 1,250 |
| மொத்தம் .. | 2,500 | 2,500 |
| சுருக்கம் :— | | |
| கூட்டுறவுத் துறை .. .. | 16,950 | 16,950 |
| தனியார் துறை .. .. | 23,600 | 21,900 |
| பொதுத் துறை .. .. | 2,500 | 2,500 |
| மொத்தம் .. | 43,050 | 41,350 |

*இந்த ஆலை பிப்ரவரி 1979 முதல் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

இணைப்புகள்

**தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் அரைவை செய்த கரும்பின் அளவு சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானம் குறித்த விவரங்கள்.**

| கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1978–79 அரைவை செய்த கரும்பின் அளவு. (டன்களில்) | 1978–79 உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. | 1978–79 சர்க்கரை கட்டு மானம். (சதவீதத்தில்) | 1979 80, அரைவை செய்த கரும்பின் அளவு. (டன்களில்) | 1979 80, உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. | 1979 80, சர்க்கரை கட்டு மானம். (சதவீதத்தில்) | 1980–81' அரைவை செய்த கரும்பின் அளவு. (டன்களில்) | 1980–81' உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. | 1980–81' சர்க்கரை கட்டு மானம். (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| கூட்டுறவுத் துறை. | | | | | | | | | |
| 1 ஆம்பூர் .. | 317,336 | 29,426 | 9.28 | 119.194 | 12,344 | 10.36 | 900,21 | 8,177 | 9.08 |
| 2 மதுராந்தகம் | 269,332 | 23,583 | 8.76 | 148.968 | 13,897 | 9.33 | 209,083 | 19,336 | 9.25 |
| 3 அமராவதி .. | 236,147 | 20,391 | 8.63 | 70.080 | 5,654 | 8.07 | 176,135 | 15,967 | 9.07 |
| 4 சேலம் .. | 460,959 | 38,878 | 8.43 | 367.956 | 32,608 | 8.36 | 300,212 | 26,684 | 8.89 |
| 5 கள்ளக்குறிச்சி .. | 265,532 | 20,455 | 7.70 | 151.294 | 13,700 | 9.05 | 203,464 | 17,327 | 8.52 |
| 6 நேஷனல் .. | 239,274 | 20,298 | 8.48 | 184.780 | 17,232 | 9.33 | 200,700 | 18,300 | 9.12 |
| 7 தர்மபுரி .. | 275,731 | 26,457 | 9.60 | 193.309 | 19,590 | 10.15 | 213,402 | 20,750 | 9.72 |
| 8 வேலூர் .. | 185,698 | 15,953 | 8.61 | 153.967 | 12,524 | 9.35 | 122,590 | 10,981 | 8.96 |
| 9 திருப்பத்தூர் .. | 177,491 | 17,667 | 9.95 | 111.304 | 11,674 | 10.49 | 100,796 | 9,346 | 9.27 |
| 10 உளுந்தூர் பேட்டை. | .. | .. | .. | .. | .. | .. | 79,616 | 6,504 | 8.17 |
| கூட்டுறவுத் துறை மொத்தம் .. | 2,427,400 | 213,108 | 8.78 | 1480.852 | 139,223 | 9.40 | 1,696,019 | 153,372 | 9.04 |
| 2. தனியார் துறை— | | | | | | | | | |
| 11 இஐடி பாரி | 442,783 | 34,621 | 7.82 | 391,971 | 31,731 | 8.10 | 449,899 | 35,560 | 7.90 |
| 12 காவேரி* .. | 169,183 | 12,696 | 7.50 | 172,386 | 13,539 | 7.85 | 221,596 | 17,890 | 8.07 |
| 13 டெக்கான் | 392,802 | 32,509 | 8.28 | 245.498 | 21,220 | 8.64 | 327,085 | 27,938 | 8.54 |
| 14 தெவுத் இந்தியா | 276,540 | 21,962 | 7.94 | 194,431 | 16,569 | 8.55 | 253,985 | 20,843 | 8.21 |
| 15 அருணா .. | 325,380 | 29,275 | 9.00 | 273,373 | 25,824 | 9.45 | 465,670 | 40,891 | 8.78 |
| 16 சக்தி .. | 801,653 | 66,528 | 8.30 | 590,589 | 52,4ப1 | 8.88 | 648,514 | 57,256 | 8.83 |
| 17 மதுரா .. | 107,818 | 8,457 | 7.84 | 103,321 | 8,154 | 7.89 | 151,731 | 10,360 | 6.83 |
| 18 கோத்தாரி .. | 234,507 | 19,695 | 8.40 | 210,726 | 18,830 | 8.94 | 223,622 | 18,957 | 8.48 |
| 19 திரு ஆரூரான் | 219,084 | 18,972 | 8.66 | 133,180 | 12,870 | 9.66 | 172,542 | 16,762 | 9.71 |
| தனியார் துறை மொத்தம். .. | 2,969,750 | 244,715 | 8.24 | 2.315.475 | 201.278 | 8.69 | 2.914,644 | 246,437 | 8.45 |
| 3. பொதுத் துறை. | | | | | | | | | |
| 20 தஞ்சாவூர் | 183.349 | 16.794 | 9.16 | 127,511 | 11.813 | 9·26 | 202,790 | 17,770 | 82.76 |
| 21 பெரம்பலூர் .. | 187.497 | 16.923 | 9.03 | 154,337 | 14.744 | 9·55 | 140,211 | 12,615 | 9,00 |
| பொதுத்துறை மொத்தம் .. | 370.846 | 33.717 | 9.09 | 281,848 | 26.557 | 9·42 | 343,001 | 30,385 | 8,85 |
| தமிழ்நாடு பெரு மொத்தம் .. | 5,767.996 | 491.540 | 8.52 | 4,078,175 | 367.058 | 9·00 | 4.953·646 | 430,194 | 8.68 |

* இந்த ஆலை 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

இணைப்பு—3.

கரும்பு விலை.

(டன் ஒன்றுக்கு விலை-ரூபாயில்).

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும். | 1980–81. | | | 1981–82. | |
|---|---|---|---|---|---|
| | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு. கரும்பு விலை. | தமிழ்நாடு அரசு பரிந்துரைத்த விலை. | ஆலைகள் கொடுத்த விலை. | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு கரும்பு விலை. | தமிழ்நாடு அரசு பரிந்துரைத்த விலை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கூட்டுறவுத் துறை— | | | | | |
| 1 ஆம்பூர் .. .. .. .. .. | 159.10 | 214.10 | 214.10 | 139.20 | 176.60 |
| 2 மதுராந்தகம் .. .. .. .. | 146.80 | 197.60 | 197.60 | 145.30 | 184.40 |
| 3 அமராவதி .. .. .. .. | 130.00 | 175.00 | 175.00 | 139.20 | 176.60 |
| 4 சேலம் .. .. .. .. .. | 140.70 | 189.40 | 189.40 | 137.60 | 174.70 |
| 5 கள்ளக்குறிச்சி .. .. .. .. | 140.70 | 189.40 | 189.40 | 131.50 | 166.90 |
| 6 நேஷனல் .. .. .. .. | 143.80 | 193.50 | 193.50 | 143.80 | 182.50 |
| 7 தர்மபுரி .. .. .. .. | 157.50 | 212.10 | 212.10 | 154.50 | 196.10 |
| 8 வேலூர் .. .. .. .. .. | 146.80 | 197.60 | 197.60 | 139.20 | 176.60 |
| 9 திருப்பத்தூர் .. .. .. .. | 160.60 | 216.20 | 216.20 | 142.20 | 180.50 |
| 10 உளுந்தூர்பேட்டை .. .. .. | 139.20 | 189.40 | 189.40 | 130.00 | 165.00 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| தனியார் துறை— | | | | | |
| 11 இஐடி. பாரி .. .. .. .. | 136.10 | 183.20 | 183.20 | 130.00 | 165.00 |
| 12 காவேரி * .. .. .. .. | 137.60 | 185.30 | 185.30 | 131.50 | 166.90 |
| 13 டெக்கான் .. .. .. .. | 134.60 | 181.20 | 186.50 | 134.60 | 170.80 |
| 14 சவுத் இந்தியா .. .. .. .. | 131.50 | 177.10 | 177.10 | 130.00 | 165.00 |
| 15 அருணா .. .. .. .. | 148.40 | 199.70 | 199.70 | 140.70 | 178.60 |
| 16 சக்தி .. .. .. .. | 140.70 | 189.40 | 225.00 | 140.70 | 178.60 |
| 17 மதுரா .. .. .. .. .. | 130.00 | 175.00 | 180.00 | 130.00 | 165.00 |
| 18 கோத்தாரி .. .. .. .. | 142.20 | 191.50 | 191.50 | 136.10 | 172.10 |
| 19 திரு ஆரூரான் .. .. .. .. | 151.40 | 203.80 | 203.80 | 152.90 | 194.10 |
| பொதுத்துறை— | | | | | |
| 20 தஞ்சாவூர் .. .. .. .. | 145.30 | 195.60 | 195.60 | 140.70 | 178.60 |
| 21 பெரம்பலூர் .. .. .. .. | 148.40 | 199.70 | 199.70 | 140.70 | 178.60 |

குறிப்பு:—1980–81 ஆம் ஆண்டிற்கான கரும்பின் சட்டபூர்வ இறுதி விலை, மத்திய அரசிடமிருந்து "எல்" மதிப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் நிர்ணயிக்கப்படும்.

* இந்த ஆலை 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

[1982 மார்ச் 19

## தமிழ்நாட்டு பீங்கான் நிறுவனம்.

தொழில்துறை மற்றும் டான்சியின்கீழ் செயல்பட்டு வந்த இயந்திர செங்கல் தொழிற்சாலை மற்றும் இதர பீங்கான் தொழிலகங்களை ஒருங்கிணைத்து இயக்கவும், மாநிலத்தில் பீங்கான் தொழிற்சாலை விரிவுபடுத்தவும், செயல் திறனில் முன்னேற்றம் காணவும் டாசல் பீங்கான் நிறுவனம் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14 ஆம் நாளில் நிறுவப்பட்டது. ரூபாய் 200 இலட்சம் அதிகார மூலதனத்துடன் 1974 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 15 ஆம் நாள் முதல் இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 129·79 இலட்சங்களாகும்.

டாசல் நிறுவனத்தின்கீழ் விருத்தாசலம், திருமழிசை, ஓமலூர், பெரம்பூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் தொழிலகங்களைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம் :—

வணிக அடிப்படையிலான பிரிவுகள் :

டாசல் பீங்கான் தொழிற்சாலை, விருத்தாசலம்.

டாசல் உப்பு மெருகிட்ட கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம்.

டாசல் இயந்திர செங்கல் தொழிற்சாலை, திருமழிசை.

வளர்ச்சி நோக்கு பிரிவுகள் :

டாசல் பீங்கான் பணி வசதி நிலையம், விருத்தாசலம்.

பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு அடிப்படையிலான பிரிவுகள் :

டாசல் பீங்கான் கலை நிலையம், விருத்தாசலம்.

டாசல் பீங்கான் கலை நிலையம், பெரம்பூர்.

டாசல் பீங்கான் தொழில் மையம், ஓமலூர்.

பீங்கான் துப்புரவு சாமான்கள், பீங்கான் கோப்பை, தட்டு வகை, குறைந்த மின் அழுத்த தடைகள், உப்பு மெருகிட்ட கற்குழாய்கள், பீங்கான் கலை பொருட்கள் மற்றும் ஜாடிகள் ஆகியவை இந்நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களாகும். பீங்கான் தொழில் வளர்ச்சிக்காக மூலப் பொருட்களை பதப்படுத்திக் கிடைக்கச் செய்தல் மற்றும் சூளையிடுதல் வசதிகள்



1982 மார்ச் 19]

அமைந்த தனி தொழிற்பேட்டையை இயக்குவதும் டாசல் நடவடிக்கைகளில் அடங்கும். டாசல் பீங்கான் தொழிற்சாலை பல தரப்பட்ட பீங்கான் பொருட்களை மாதம் ஒன்றுக்கு சுமார் 100 டன்கள் வீதம் உற்பத்தி செய்கிறது. டாசல் உப்பு மெருகிட்ட கற்குழாய் தொழிற்சாலை பொது சுகாதாரத்திற்கு அவசியமான கற்குழாய்களை சுமார் 500 டன்களுக்கு உற்பத்தி செய்கிறது. பீங்கான் கலை நிலையங்கள் ஆண்டிற்கு சுமார் ரூபாய் 9 இலட்சம் மதிப்புள்ள பீங்கான் கலைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. மேலும், பீங்கான் பொருள் உற்பத்தியில் சுமார் 25 பேருக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 ஆயிரம் பெறுமான நல்ல தரமான ஊறுகாய் ஜாடிகள் ஓமலூரிலுள்ள பீங்கான் தொழில் மையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மாதம் ஒன்றுக்கு 18 இலட்சம் செங்கற்களை உற்பத்தி செய்யும் திறனுடைய இயந்திரச் செங்கல் தொழிற்சாலை தொழில் நுட்ப சிக்கல்களாலும், பெரிய அளவில் பழுதடைந்துள்ள பழைய இயந்திரங்களாலும் சுமார் 4 இலட்சம் செங்கற்களைத்தான் உற்பத்தி செய்கிறது. இத் தொழிற்சாலையின் எதிர் கால அமைப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

எல்லா தொழிலகங்களின் மொத்த ஆண்டு உற்பத்தி சுமார் ரூபாய் 170 இலட்சங்களாகும். சுமார் 1,100 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் உற்பத்தி பொருட்கள் தரத்திற்கும், மலிவான விலைக்கும் பெயர் பெற்றவையாகும். பணி வசதி நிலையத்துடன் கூடிய தொழிற்பேட்டை பீங்கான் சிறு தொழில் முனைவர்களுக்கு சிறந்த முறையில் பணி வசதி அளித்து மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வசதிகளினால் சுமார் 500 பேர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

டாசல் நிறுவனம் அண்மையில் தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற மட்பாண்ட தொழிலாளர்களின் நிலைமைகள், தேவைகள் மற்றும் அவர்களின் வாணிப சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களை கணக்கெடுத்து முடித்துள்ளது. முக்கியத் தேவையான களிமண் கிடைக்காதது மற்றும் செய்த பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்வது மட்பாண்ட தொழிலாளர்களின் முக்கிய பிரச்சினைகள் ஆகும். அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, தரமான உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தும் வகையில், நவீன கருவிகள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குவதற்காக தகுந்த பணி வசதி நிலையங்கள் அமைக்கும் நிலையில் உள்ளன. மேலும் விருதாசலத்திலும், ஓமலூரிலும் பீங்கான் சாமான்கள் மற்றும் குறைந்த மின் அழுத்தத் தடைகள் செய்வதில் சுமார் 20 பேருக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

நிறுவனம் 1982–83 ஆம் ஆண்டில் உப்பு மெருகிட்ட கற்குழாய் தொழிலகத்திலுள்ள மேலும் இரண்டு பழுதடைந்த சூளைகளை ரூபாய் 4 இலட்சம் செலவில் புதுப்பிக்க உத்தேசித்துள்ளது. இதனால் அந்த சூளைகள் முழுத் திறனுடன் இயங்க இயலும். இது தவிர, ஆண்டொன்றுக்கு 8,000 டன் திறன் கொண்ட உப்பு மெருகிட்ட கற்குழாய்களை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை ஒன்று ரூபாய் 92·50 இலட்சம் மொத்த செலவில் அமைக்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. இத்தொழிற்சாலை பின்தங்கிய ஏதாவது ஒரு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு சுமார் 200 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்.

தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு முழுதும் சொந்தமான தனியார் நிறுவனமாக அமைக்கப்பட்டது. கூட்டுத் துறைத் திட்டங்களில் பங்குகொள்வது உட்பட மின்னணுவியல் துணை தொழில்களை வளர்ச்சியுறச் செய்வதும், மேம்படுத்துவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனம், 1980–81–ல் தன்னுடைய பணிகளைத் தொடங்கியது. இது பரிசீலனை செய்வதற்காக சில திட்டங்களை எடுத்துக் கொண்டது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான ஓசூரில் " அலுமினியம் எலக்ட்ரா லிட்டிக் கெப்பாசிட்டர்கள் " தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொண்டது. ஜப்பானிய நிறுவனம் இயந்திரங்களை வழங்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. ஓசூரில் உள்ள தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவன இணையத்தில் கட்டப்பட்ட தொழிற்கூடம் ஒன்று கையகப்படுத்தப்பட்டுள்ளதால் இயந்திரங்கள் வந்து சேர்ந்தவுடன் அடுத்த ஆண்டு தொடக்கத்திலேயே வணிக அளவில் உற்பத்தி தொடங்கப்படும். இத் திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ. 163 இலட்சமாகும். இது ஆண்டொன்றுக்கு 50 மில்லியன் எலக்ட்ரா லிட்டிக் கெப்பாசிட்டர்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. தொழில் நுட்பப் பிரிவிலும், தொழில் நுட்பம் அல்லாத பிரிவிலும், நிர்வாக ஏனைய வகைகளில 150 முதல் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திடமிருந்தும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்தும் இத்திட்டத்திற்கு கால வரம்புக் கடனாக ரூ. 90 இலட்சம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2. ரூ. 19 இலட்சம் மூலதனச் செலவுடன் ஆண்டொன்றுக்கு 50,000 டிஜிட்டல் மின்னணுவியல் கைக் கடிகாரங்களைத் தயாரிக்கும் மற்றொரு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கு ஜப்பானிலிருந்து தொழில் நுட்ப



ஆலோசனை பெற்று வரும் திருவாளர்கள் " செமி கண்டக்டர் காம்ப்ளக்ஸ் " சண்டிகார் என்கிற நிறுவனம் தொழில் நுட்ப உதவி அளிக்கும்.

3. செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரிக்கும் திட்டம் 1982–83-ல் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. இந்நிறுவனம் தேவைக்கேற்ப தளவாடங்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ், கருவிகளை வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்நிறுவனம் மின்னணு ஒலி பெருக்கியைத் (Electronic Megaphone) தயாரித்து அங்காடியில விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது. இக்கருவியை பாதுகாப்புத் துறை, இரயில்வே, தபால்-தந்தித் துறைகளுக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு ஆதரவாக ஆராய்ச்சி மேம்பாட்டுப் பிரிவு ஒன்றும் அமைக்கப்படும்.

5. ரூ. 100 இலட்சம் மூலதனச் செலவுடன் " டிரான்ஸ் ரிசீவர்கள் " (Trans receivers) தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தொழில் நுட்ப உதவிக்காக இங்கிலாந்திலுள்ள புகழ் பெற்ற ஒரு நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.

6. தொலைபேசி கருவிகளைத் தயாரிக்கும் மற்றொரு பெரு முயற்சிக்கு மத்திய அரசின் கொள்கை இசைவு எதிர் பார்க்கப்படுகிறது.

7. மேற்சொன்னவற்றின் அடிப்படையில் அடுத்த ஆண்டில் நிறுவனத்தின் விற்று முதல் (Turn over) ரூ. 300 இலட்சமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

8. மின்னணுவியல் தொழிலானது வளர்ச்சியடையக்கூடிய ஒன்றாக இருப்பதால் இந்நிறுவனம் தானே சொந்தமாக தொழில் பிரிவுகளைத்தொடங்குவதுடன் தகுதி வாய்ந்த தனியார் தொழில் முனைவோர்களின் கூட்டு முயற்சிக்கும் உதவிசெய்ய திட்டமிட்டுள்ளது. கார்பன் மெட்டல பிலிம் ரெசிஸ்டர்கள் (Carbon Metal Film Resistors) சிறு கணக்கிடு பொறிகள (Mini Computors), கதிர் மின் மருத்துவ சாதனங்கள் (X-ray Medical Equipments) பிரிண்டட் சர்க்கியூட் போர்டுகள் (Printed Circuit Boards), வீடியோ பிளேயர்ஸ் (Video Players) ஆகியவைகளைத் தயாரிக்கும் திட்டங்கள் இந்நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளன. இத் திட்டங்கள் கைகூடுமாயின் மூலதனச் செலவு சுமார் ரூ. 300 இலட்சமாக இருக்கும். ஆனால் இதுகூட்டு முயற்சியில் பங்கு கொள்ள முன்வரும் தகுதியான தொழில் முனைவர் கிடைப்பதைப் பொறுத்துள்ளது.

9. எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு அரசின் ஒப்புதலும், இசைவும் பெற வேண்டுமாதலால் மேற்கூறப்பட்ட திட்டங்கள் தவிர, மேற்கொண்டும் இந்நிறுவனம் கீழ்க்கண்ட தொழில்களுக்காக தொழில் முன்னுரிமம் கோரி விண்ணப்பித்து அவற்றிற்கு அனுமதியும் பெற்றுள்ளது.

| திட்டம். (1) | திறன். (2) | மூலதனச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) (3) |
|---|---|---|
| தொலைபேசிக் கருவிகள் .. .. | 2 | 600.00 |
| சிறு கணக்கிடு பொறிகள் .. .. | 50 | 100.00 |
| டெர்மினல்கள் .. .. .. | 2,000 | |
| நடுத்தர அழுத்த மற்றும் உயர் அழுத்த எக்ஸ் கதிர் அமைப்பு. | 100 | 60.00 |
| குறைவழுத்த எக்ஸ் கதிர் அமைப்பு .. | 150 | |
| டிரான்ஸ் ரிசீவர்கள் (மதிப்பு) .. | ரூ. 1 கோடி | 100.00 |
| மெட்டல் பிலிம் ரெசிஸ்டர்கள் 50 மிலியன். | .. | 55.00 |
| கார்பன் பிலிம் ரெசிஸ்டர்கள் 250 மிலியன். | .. | |

10. எதிர்கால மேம்பாட்டிற்காக, ஓசூரில் உள்ள நிலம் மற்றும் கட்டிடம் நீங்கலாக, இந்நிறுவனம் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திடமிருந்து ஓசூரில் மேலும் 35 ஏக்கர் நிலத்தையும் தொழில் வணிகத் துறை இயக்கத்திடமிருந்து திருவான்மியூரில் 5 ஏக்கர் நிலத்தையும் கையகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.

ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதத்தை யும் 40,000 டன் அச்சிடும்தாள் எழுதுதாளையும் தயாரிப்பதற் காக ரூ. 50 கோடி அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் (தற்போது ரூ. 70 கோடியாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது) தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை திருச்சி



மாவட்டம் புகளூரில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 190 கோடி செலவாகும் (நஷ்ட மூலதனத்தையும் சேர்த்து) அரசு உடைமையாக்கப்பட்ட நிறுவனங்களுடன் சேர்த்து மாநில அரசு இத்திட்டத்திற்கான மொத்த பங்கு மூலதனமாக ரூ. 66·5 கோடியில் ரூ. 34 கோடி வழங்கும். உலக வங்கியும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியும் இத்திட்டத்திற்கு மீதமுள்ள பங்கு மூலதனத்தையும், ரூ. 113.5 கோடி வரை கடனும் வழங்கும்.

2. நிறுவனம் தேவையான நிதி ஒப்புதலையும் தேவையான இறக்குமதிக்கான ஒப்புதலையும் இந்திய அரசிடமிருந்து பெற்றுள்ளது.

3. உலக வங்கி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் இத்திட்டத்திற்கு இந்திய அரசு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் மூலம் 100 மில்லியன் டாலர் கடனுதவி அளிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளது. பொதுக் கடன் ஒப்பந்தம் ஒன்றையும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து உதவித் தொகையாக ரூ. 31 கோடியும் ரூ. 101·5 கோடிக்கு மேற்படாத ரூபாய் காலக் கடனும் இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகத்திடமிருந்து ரூ. 6 கோடி காலக் கடனும், இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 6 கோடியும் நிதியுதவி பெறுவதற்கான நேரடிக் கடன் ஒப்பந்தம் ஒன்றையும் இந்நிறுவனம் எழுதிக் கொடுத்துள்ளது.

4. மரக்கூழ்த் தயாரிப்பு இயந்திரங்களை வழங்கவும், அடிப்படை பொறியியல் பணி ஏனைய பணிகளை அமெரிக்காவிலுள்ள பெலாய்ட் ஜோன்ஸ் டிவிசன் இங்கிலாந்திலுள்ள ரீட் இண்டர்நேஷனல் கன்ஸல்ட்டன்ட்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் உடனுழைப்புடன் மேற்கொள்ளவும் திரு-வாளர்கள் பெலாய்ட் வாம்ஸ்லி லிமிடெட்டுடன் இந்நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. திருவாளர்கள் பெலாய்ட் வாம்ஸ்லி நிறுவனம் ரீட் இண்டர்நேஷனல் கன்ஸல்டண்ட் நிறுவனம் ஆகியவற்றுடன் நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்த நிபந்தனைகளின்படி இதுவரையில் உடனடியாகவும் படிப்படியாகவும் சுமார் ரூ. 18.48 கோடி வழங்கியுள்ளது.

5. தமிழ்நாடு வனக் கழகத்திடமுள்ள இருப்பிலிருந்து 70,000 டன் கலப்பின நீலகிரி மரத்தை வன-மீன்துறை இந்நிறுவனத்திற்கு ஒதுக்கியுள்ளது. முக்கிய மூலப் பொருளாக இத்திட்டத்திற்குத் தேவைப்படும் கரும்புச் சக்கையை வழங்கு

வதற்காக சர்க்கரை ஆலைகளுடன் தமிழ்நாடு சர்க்கரை கழகத்துடனும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப் பட்டுள்ளன.

6. 1983–84-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மின்வாரியம் 110 கே.வி. வீதத்தில் புகளூரிலுள்ள நிறுவனத்திற்கு 30,000 கே.வி.ஏ. மின்சக்தியை வழங்க நிறுவனம் தேவையான ஏற்பாடுகளைச் செய்து அதற்கு அரசிடமிருந்து ஆணை பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு நாள் ஒன்றுக்கு 30 மில்லியன் காலன் நீர் என்ற வீதத்தில் காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுத்துக் கொள்ளவும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. கரூர் வட்டம், புஞ்சை புகளூர், திருக்காட்டுத்துறை கிராமங்களின் 6,78.63 ஏக்கர் நிலத்தையும் அக்கிராமங்களிலுள்ள 31·01 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களையும் கையகப்படுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசுத் தலைமையின் ஆய்வாளரின் ஒப்புதலுக்குட்பட்டு 17.5 மெகாவாட் திறன் கொண்ட சுழல் மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை தமிழ்நாடு மின்வாரியம் அனுமதித்துள்ளது. இந்நிறுவனம் தாமே தயாரிக்கும் மின்சக்திக்கு உற்பத்தி வரி விதிப்பினின்று விலக்களிக்கப்படுகிறது.

7. செய்தித்தாள் காகிதம், அச்சிடும்தாள், எழுதுத்தாள் ஆகியவற்றை (குறைந்தது 75 சதவீத கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி) தயாரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட தொழிற்சாலை எதுவும் அதற்காக இறக்குமதி செய்யப்படும் சாதனங்கள் அனைத்திற்கும் 30 சதவீதம் என்ற குறைந்த வீத சுங்கவரி விதிக்கப்படுவதற்குத் தகுதியுடையதாகும் என்று மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் வருவாய்த்துறையிலிருந்து இந்நிறுவனத்துக்குக் கடிதம் வந்துள்ளது. இத்திட்டம் தொழிற்சாலை இந்தக் குறைந்த வீத இறக்குமதித் தீர்வையைப் பெறத் தகுதியுடையதாகிறது.

8. இந்நிறுவனம் 1,90,000 டன் நிலக்கரி பெற கோல் இந்தியா லிமிடெட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. கோல் இந்தியா நிறுவனம் 1983 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 48,000 டன் நிலக்கரியை வழ்ங்கத் தொடங்கும் சிங்கரேணி நிலக்கரி சுரங்கநிறுவனம் 1983 ஜூன் திங்களிலிருந்து இந்நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் 15,000 டன் மென்கரி (Slack Coal) வழங்க ஒப்புக் கொண்டதை உறுதி செய்துள்ளது. மேலும், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் 1983 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் 6,000 டன் சாதாரண சார்பைன்ஸ் ( Charfines ) வழங்க இசைவு தெரிவித்துள்ளது. இவ்வாறாக எரிபொருளின் தேவை நிறைவு செய்யப்பட்டுள்ளது.



9. இத்திட்டத்தை மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்றி செயல்படத் தொடங்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

### தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் (டான்மாக்).

தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் முன்பு தனியார் நிறுவனமாக சேலம் மாக்னசைட் ப்ரைவேட் நிறுவனம் இயக்கிய சுரங்கங்களை மேற்கொண்டு மாக்னசைட் கனிப் பொருளை வெட்டி எடுக்க 17—1—1979 இல் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் ஒப்பிய பங்கு மூலதனம் ரூ. 200 லட்சம் ஆகும். டான்மாக் நிறுவனம் 2,400 பேர்களுக்கு வேலை அளிக்கிறது.

2. கடந்த மூன்று ஆண்டுகளில் இதன் செயலாற்றல் சிறந்ததாகும். 1981–82-ம் ஆண்டில் (டிசம்பர் 81 வரை) இந்நிறுவனத்தின் செயல்திறன் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| கச்சா மாக்னசைட் உற்பத்தி (டிசம்பர் 81 வரை). | | 1,03,917 மெட்ரிக்டன், |
| கச்சா மாக்னசைட் விற்பனை | .. | 1,00,688 மெட்ரிக் டன் |
| விற்பனை வரவு | .. | ரூ. 410 லட்சம். |
| அகற்றப்பட்ட கழிவுகள் | .. | 21,17,155 மெட்ரிக் டன் |

தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே ரூ. 60.64 லட்சமும் இரண்டாவது வருடம் ரூ. 30.79 லட்சமும் டான்மார்க் நிறுவனம் நிகர லாபமாக ஈட்டியுள்ளது. இவ்வருடத்தில்—அதாவது 1981–82-ல் தேய்மானங்களுக்காக ஒதுக்கிய ரூ. 40·37 லட்சம் போக, இந்நிறுவனம் ரூ. 81·22 லட்சம் நிகர லாபமாக ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் ரூ. 1.50 லட்சம் ஊதிய பங்காக (Dividend) அரசுக்கு செலுத்தியுள்ளது.

3. டான்மாக் நிறுவனம் வரும் ஆண்டுகளில் தனது பணிகளை விரிவாக்க உத்தேசித்துள்ளது. கச்சா மாக்னசைட்டை சுத்தப்படுத்தவும், கரிந்த மாக்னசைட் மற்றும் சிறந்த தரமான மாக்னசைட் செங்கற்களை உற்பத்தி செய்யவும் தொழிற்சாலை (Benification–cum–Refractory Projec ) ஒன்றை நிறுவ உள்ளது. இதன் முதல் கட்டமாக சுழலும் சூளை ( Rotary Kiln ) ஒன்றை ரூ. 4.93 கோடி செலவில் நிறுவும். இதற்கான திட்ட அறிக்கை வரப்பெற்று இது

அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினால், நிறுவனத்தில் லாபம் அதிகரிப்பதுடன், வேலை வாய்ப்பும் பெருகும்.

தமிழ்நாடு மாக்னசைட் பிராட்டக்ட்ஸ் லிமிடெட்.

1979ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் திருவாளர்கள் சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட்டிற்கு முன்பு சொந்தமான ஆலையை இயக்க தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்டும், சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட்டும் இணைந்து தமிழ்நாடு மாக்னசைட் பிராட்டக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் கூட்டுத்துறையில் துவக்கப்பட்டுள்ளது. இது டான்மாக் நிறுவனம் விநியோகிக்கும் கச்சா மாக்னசைட்டிலிருந்து கால் சைன்ட் மற்றும் கரிந்த மாக்னசைட்டை உற்பத்தி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனம்.
(டாமின்).

தமிழ்நாடு கனிம நிறுவனம் தமிழகத்திலுள்ள தொழிற் சார்ந்த கனிவளத்தை வணிக ரீதியில் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும், கரும்பாறைகளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யவும் 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரூ. 100 லட்சம் ஒப்பிய பங்கு மூலதனத்துடன் நிறுவப்பட்டது. இதுவரை ரூ. 57.50 லட்சம் பங்கு மூலதனமாகவும், ரூ. 20 லட்சம் கடனாகவும் அரசு அளித்துள்ளது.

2. டாமின் நிறுவனம் 1981–82ஆம் ஆண்டில் (டிசம்பர் 1981 வரை) உற்பத்தி மற்றும் விற்பனை செய்த கனிமங்களின் விவரம் வருமாறு :

| | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) | அளவு. | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) |
| கருப்புக்கல்— | 1,280 கனமீட்டர். | 25·60 | 760 கனமீட்டர். | 38·74 |
| சாம்பல்கல் | 346 கனமீட்டர். | 1·73 | 568 கனமீட்டர். | 14·18 |
| பெரும் கனிமங்கள். | 14,912 டன்கள். | 5·96 | 9,733 டன்கள். | 7·01 |



3. டாமின் நிறுவனம் தனது மூன்றாவது வருடத்தில் ரூ. 68.60 லட்சம் மதிப்புள்ள கனிமங்களை விற்பனை செய்துள்ளது. இதனால் ரூ. 24.82 லட்சம் நடைமுறை லாபமாக கிடைத்துள்ளது இதனால் முந்திய வருடங்களில் அடைந்த நட்டத்தை சரிக்கட்டியதுடன். இந்நிறுவனம் முதலமைச்சர் நிவாரண நிதி மற்றும் "தாரா" திட்டங்களுக்கு நன்கொடை அளித்தல் போன்ற சமூக நலத் தொண்டுகளிலும் பங்கு கொண்டது. 1982–83 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இன்னும் அதிக லாபத்தை ஈட்டும். என்றும், பல சமூக நலத் தொண்டுகளில் பங்கேற்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நடப்பு ஆண்டில் விற்பனை ரூ. 176.25 லட்சம் ஆக அதிகரிக்கும் என்றும், இன்னும் 900 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இந்நிறுவனம் சுமார் 1,600 பேர்களுக்கு வேலை அளிக்கிறது.

(4) (i) சிவகங்கை கிராபைட் திட்டம்.—1982–83 ஆம் ஆண்டில் கிராபைட் கனிமத்தை வெட்டி எடுக்கும் சுரங்கப் பணிகள் முழு அளவில துவங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுத்திகரிப்புப் பணிகள் சிவகங்கையில் கிராபைட் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைத்த பின்னர் மேற்கொள்ளப்படும்.

(ii) கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை.— சென்னைக்கு அருகில ரூ. 152 லட்சம் மூலதனத்தில கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ டாமின் நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து இயந்திரங்களின விலைப்பட்டியல்கள் சேகரிக்கப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன.

1982–83-ல் கரும்பாறைகளை தேக்கி வைக்க ரூ. 20 லட்சம் செலவில் சேமிப்பு கிடங்கு ஒன்றை அமைக்கவும் டாமின் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையில் அரசு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதிகளின் கீழ் அந்நிறுவனங்களை கலைப்பதற்கான நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும், தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு

அளிப்பதற்காகவும் உதவி அளித்து வருகின்றது. இத்தகைய பாதுகாப்பை தற்பொழுது பின்வரும் நிறுவனங்கள் அனுபவித்து வருகின்றன:—

(1) ஓமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

(2) தர்மபுரி ஸ்டில காஸ்டிங்ஸ் லிமிடெட் (முன்னாள் லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்), தர்மபுரி.

(3) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(4) சதர்ன் ஸ்விட்ச் கியர்ஸ் லிமிடெட், சென்னை.

(5) சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.

(6) பிரிமியர் பெர்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை.

(7) தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஓசூர்.

(8) மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்.

(9) அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.

(10) காவேரி ஸ்பின்னிங்ஸ் அண்டு வீவிங்ஸ் மில்ஸ், புதுக்கோட்டை.

(11) சோமசுந்தரம் சூபர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம்.

(12) மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

பின்வரும் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறை மூலதனத்திற்காக வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட். சென்னை. | 14.36 |
| 2. பிரிமியர் பெர்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை. | 20.00 |
| 3. மது ஸ்பின்னிங் அண்டு வீவிங்ஸ் மில்ஸ், கோயம்புத்துர். | 30.00 |
| 4. மீனாட்சி மில்ஸ், மதுரை .. .. .. | 55.00 |
| 5. பின்னி லிமிடெட், சென்னை .. .. | 100.00 |
| 6. இந்தியா மீடடர்ஸ் லிமிடெட், சென்னை .. | 47.00 |



1976–77-ஆம் ஆண்டு நடைமுறை முலதனத்திற்காக வங்கிகள் வழங்கியுள்ள கடன்களுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்த பத்து நலிவுற்ற நூற்பாலைகளில் ஏழு நூற்ப்பாலைகளுக்கு கொடுத்த கடன் உத்தரவாதம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. திருவாளர்கள் மது ஸ்பின்னிங் மில்ஸ் மற்றும் மீனாட்சி மில்ஸ் இவைகளுக்காக கொடுக்கப்பட்ட உத்தரவாதத்தை திரும்பப் பெற அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

நலிவுற்ற தொழிற் பிரிவுகள் விற்பனை வரி பாக்கிகளையும் பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலபத் தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத்தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களை மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்மந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறது. மேற்கூறிய உதவிகள் மூலம் நீண்ட காலமாக மூடிக்கிடந்த தொழிற் பிரிவுகள மீண்டும் திறக்கப்பட்டுள்ளன,

டிராக் தொழிற்சாலை.

இந்த கம்பெனியின் தொழிற்சாலை 12—1—1980 முதல் முடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்காக நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் முதலானவர்களுடன் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏதும் பலனளிக்கவில்லை.

சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஓர்க்ஸ் லிமிடெட், சேலம்.

கண்ணாடி குவளைகள், கூஜாக்கள், விளக்கு பாகங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து வந்த இந்நிறுவனம் 10-12-76 முதல் நிதி இடர்பாடுகள் காரணமாக மூடப்பட்டது. இதனால் 500 தொழிலாளர்கள் வேலை இழந்தனர். அரசு இந்நிறுவனத்தை ஒரு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக 14–10–1977 முதல் ஓர் ஆண்டுக்கு அறிவித்து பிறகு அதன் காலவரையை 13–4–1982 வரை நீடித்துள்ளது. இந்நிறுவனத்திற்கு தொழிற்சாலையை திறப்பதற்கு மூலதன வகையில் இந்தியன் வங்கி வழங்கியுள்ள ரூ. 14.35 இலட்சத்திற்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக தொழிற்சாலை 26–10–1980 தேதியன்று மீண்டும் திறக்கப்பட்டது. ஆனால் நிதி இடர்பாடுகள் காரணமாக தொழிற்சாலை மறுபடியும் 5–3–1981 தேதி முதல் மூடப்பட்டுள்ளது. தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் பொருட்டு தமிழ்நாடு தொழில்

முதலீட்டு நிறுவனம் (T. I. I. C.) வங்கியுடன் கலந்து நிறுவனத்தின் பொருளாதார மற்றும் வியாபார ரீதியான சாத்தியக் கூறுகளை ஆராய ஒரு கன்சல்டன்டை நியமிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

### பிரிமியர் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், சென்னை.

நிதி இடர்பாடுகள் காரணமாக சல்பூரிக் ஆஸிட் மற்றும் சூப்பர் பாஸ்பேட் போன்ற பொருட்களை உற்பத்தி செய்து வந்த கடலூரிலுள்ள இந்நிறுவனத்தின் தொழிற்சாலை 19-8-1976 தேதி முதல் மூடப்பட்டுள்ளது. மேற்கொண்டு நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு நிறுவனம் மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் தயாரிக்கும் விவசாய உரங்கள மற்றும் யூரியா போன்றவைகளை விற்பனை செய்வதில் தற்போது ஈடுபட்டுளளது. இந்நிறுவனத்தை 1974 ஆம் ஆண்டு நவம்பர் முதல் அரசு ஒரு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவித்தது. அதன் காலவரை 29-4-1982 வரை நீடிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் சார்பாக அரசு 1974 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் இந்திய வங்கிக்கு ரூ. 20 இலட்சத்திற்கு உத்திரவாதம் கொடுத்துளளது. மேற்குறிப்பிட்ட ரூ. 20 இலட்சத்தில நிறுவனம் இதுவரை வங்கிக்கு ரூ. 19 இலட்சம் வரை திருப்பிச் செலுத்தியுள்ளது. இந் நிறுவனத்தின் தொழிற்சாலையை மீண்டும் திறக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் ஏதும் பலனளிக்கவில்லை. ஆகையால் நிறுவனம் தனது தொழிற்சாலையை விற்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது,

### இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்.

கம்பெனி சட்டம் 1956 விதிகளின்படி 1963 ஆம் அண்டு ஜூலை திங்கள் 15-ம் நாள் முதல் பொது நிறுவனமாக நிர்மாணிக்கப்பட்டது. 1966—67-ல் இந்த நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கியது. செயல்பட முடியாமல் ஏற்பட்ட சில சிரமங்கள காரணமாய் இந்த நிறுவனம் 14-9-1974-ல் உற்பத்தி நிறுத்தப்பட்டது. தமிழக அரசின் ஆதரவாலும், தமிழ்நாடு மின்வாரியம், நிதி நிறுவனங்கள் இந்திய தொழில் புனரமைப்புக் கழகம் (Industrial Reconstruction Corporation of India) இவற்றின நல்ல ஒத்துழைப்பினால் இந்த நிறுவனம் தனது உற்பத்தியை 8-12-1977 முதல் மீண்டும் துவங்கியது. திருவாளர்கள் பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் நிறுவனம் இதற்கு நிர்வாகம் உதவி தருகிறது. தமிழ்நாடு அரசு இதை ஒரு நலிவுற்ற நிறுவனமாக அறிவித்துள்ளது. இந்தக் காலவரம்பு தற்பொழுது 21-9-1982 வரை நீட்டித்தப்பட்டுள்ளது,



### திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட்.

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட் 1965-ம் ஆண்டு தொடங்கி அம்பத்தூரில் உயர் அழுத்த, குறைந்த அழுத்தமுள்ள ஸ்விட்ச் கியர்களைத் தயாரித்து வந்தது. அதிக நஷ்டம் காரணமாக இந்தத் தொழிற்சாலை 14—3—1978-ல் மூடப்பட்டது. இது ஒரு நலிவுற்ற நிறுவனமாக அரசு 9—11—1978-ல் அறிவித்தது. இந்த காலவரம்பு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, பாரத் ஸ்டேட் வங்கி நிறுவனத்தை புனரமைக்கப்படவேண்டிய நிதி நிலையை அரசுக்கு தந்தது. இந்த நிறுவனம் சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் உற்பத்தியைத் தொடங்கியது.

தற்பொழுது தொழிற்சாலையில் பணியாற்றுவோர் எண்ணிக்கை 610 ஆகும். 31—12—1981 உடன் முடியும் 16 மாதங்களில் இந்த நிறுவனம் ஈட்டிய லாபம் ரூ. 99 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இது இந் நிறுவனத்தின். மொத்த நட்டத்தை கணிசமான அளவு குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வருகிற வருடங்களில் இந்த நிறுவனம் நன்கு இயங்கும் என் எதிர்பார்க்கப்படுகிறது.

### சிமெண்ட் விநியோகம்.

28—2—1982 முதல் சிமெண்டின்மீது இருந்த கட்டுப்பாட்டை மைய அரசு தளர்த்தியுள்ளது. சிமெண்ட் விநியோகத்தின் புதிய முறைப்படி சிமெண்ட் தொழிற்சாலைகள் அவர்களுடைய உற்பத்தி திறனில் மூன்றில் இரண்டு பாகம் உள்ள உற்பத்தியாகும் சிமெண்ட்டை கட்டுப்பாடான விலைக்கு அரசுக்கு லெவி சிமெண்டாக கொடுக்க வேண்டும். இதற்கு மேல் உற்பத்தியாகும் சிமெண்டை வெளிச்சந்தையில் எந்தவிதமான விலை அல்லது விநியோகக் கட்டுப்பாடு இல்லாமல் விற்கலாம். சிறிய சிமெண்ட் ஆலைக்ள் அதாவது நாள் ஒன்றுக்கு 200 டன்கள் அல்லது ஆண்டு ஒன்றுக்கு 66,000 டன்கள் சிமெண்ட் உற்பத்தி செய்பவை, லெவி சிமெண்ட்டாக ஏதும் அரசுக்கு கொடுக்க வேண்டியதில்லை. அவைகளுடைய முழு உற்பத்தியும் விலை அல்லது விநியோகக் கட்டுப்பாடு ஆணையின்கீழ் வராது.

2. சிமெண்ட் விநியோகத்தின்மீது மையஅரசு கட்டுப்பாட்டை தளர்த்தியுள்ளதால் மாநில அரசு இப்போதுள்ள தமிழ்நாடு சிமெண்ட் விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) 1978 ஆணையை ரத்து செய்துவிட்டு புதிதாக தமிழ்நாடு லெவி சிமெண்ட் விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) ஆணை பிறப்பித்துள்ளது. இந்த புதிய ஆணையின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

3. முன் உரிமை பகுதிக்கும், சமூகத்தில் நலிந்த பிரிவின ருடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக லெவி சிமெண்ட் உபயோகப்படுத்தப்படும். இப்போது போலவே மாநிலங்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் மைய அரசிடமிருந்து சிமெண்ட் ஒதுக்கீடுகளை பெறும். இந்த ஒதுக்கீடுகளை கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள இனங்களின் தேவைகள் நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும்.

(1) அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், மற்றும் உள்ளாட்சி அலுவலகங்கள்.

(2) ஆலைக்கட்டடம் கட்டுவதற்காக சிறு தொழில் நிறுவனங்கள் சமூக மேம்பாட்டிற்காக அமைந்துள்ள கிராமங்களில் வீடு கட்டுதல், குடிசை வாழ் மக்கள், ஆதி திராவிடர்கள், ஆதி வாசிகள், சமூகத்திலுள்ள 'ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டுதல் கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம், மேலும் புதிய 20 அம்ச திட்டத்தில் அடங்கிய எல்லா இனங்கள்.

(3) 80 சதுர மீட்டருக்கு மேற்படாமல் தரைமட்டம் அமையும் வீடுகள் கட்டுதல் ;

(4) குடியிருப்பு வீடுகளுக்கு பழுது பார்த்தல்.

(5) நீர்ப்பாசனம், மின்சாரத் திட்டங்கள்.

(6) திரை அரங்குகள், சிற்றுண்டிச்சாலைகள், வங்கிகள், பல மாடி அடுக்குக் கட்டடங்கள், வியாபாரகட்டடங்கள் 80 சதுர மீட்டர் தரைமட்டம் மேலுள்ள கட்டடங்கள் ஆகியவைகளுக்கு லெவி சிமெண்ட் வழங்கப்படமாட்டாது. மேலும் சிமெண்ட்டை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கி வரும் தொழில்களுககு லெவி சிமெண்ட் வழங்கப்படமாட்டாது. அவர்கள் தங்களுடைய தேவைகளை வெளிச்சந்தையிலிருந்துதான் வாங்கிக்கொள்ள வேண்டும்.

(7) புதிய கட்டுப்பாடு ஆணையின்படி தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மட்டுமே லெவி சிமெண்ட்டை விற்பனை செய்வதற்காக உரிமம் வழங்கப்படுவார்கள்.

(8) அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்களுக்கு, லெவிசிமெண்ட்டை தொழில் மற்றும் வணிகத்துறை இயக்கு நரால் பகிர்ந்து அளிக்கப்படும். ஆலை கட்டிடங்கள் கட்டுவதற்கான சிறிய தொழில் தேவைகளுக்கு தொழில் வணிகத்துறை



இயக்குநரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறு ஒரு அலுவலரோ அனுமதிச் சீட்டுகள் வழங்குவார். இந்த அதிகாரம் மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர்களுக்கும் வழங்கப்படும்.

(9) 80 சதுரமீட்டர் தரைமட்டம் மேற்படாமல் கட்டடம் கட்டும் நபர்களுக்கும், வீடுகளை பழுது பார்ப்பதற்கான தேவைகளை நிறைவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரோ, அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறு ஒரு அலுவலரோ அனுமதிச் சீட்டுகள் வழங்கலாம். தற்போது அனுமதிச் சீட்டுகள் வழங்கும் அதிகாரிகளான வட்டாட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களுக்கு இனிமேல் அதிகாரம் கிடையாது. ஆனால் கோட்ட ஆட்சித் தலைவர்கள் கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் அல்லது சென்னையில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர்கள் மூலமே அனுமதிச் சீட்டுகளை வழங்கப்படுவதற்கான அதிகாரம் அளிக்கப்படும்.

(10) லெவி சிமெண்ட்டை பெற தகுதியுடையவர்களின் அனுமதிச் சீட்டுகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அந்த சிமெண்ட்டை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமோ அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமோ பெறலாம். மற்றவர்கள் வெளிச் சந்தையிலிருந்துதான் சிமெண்ட்டை பெற வேண்டும்.

தொழிற்துறைக் கொள்கை விளக்கக் குறிப்பும் திட்டங்களும் கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்.

சிறிய மற்றும் ஊரகத் தொழில் துறையில் கிராமப் பகுதிகளில் தொழில்களை உருவாக்குவதும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதும் மாநில அரசு பின்பற்றி வரும் தொழிற் கொள்கையின் இரு நோக்கங்களாகும். இதற்காக சிறு தொழில், குடிசைத் தொழில், மிகச் சிறிய தொழில், வீட்டுத் தொழில் ஆகியவற்றைப் பரவலாக வளர்ச்சி அடையச் செய்வதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் வேலைவாய்ப்பேற்று இருப்பவர்களும், போதிய வேலைவாய்ப்பின்றி ஏதோ ஒரு வேலையில் இருப்பவர்களும் நாளடைவில் உரிய வேலையினைப் பெற்று பயனடைவர்.

2. இந்நோக்கங்களைக் கருத்தில் கொண்டு இப்போதுள்ள தொழில்களுக்கு ஊக்கமளிக்கவும், சிறு தொழில் துறையிலும், கிராமத் தொழில் துறையிலும் புதிய தொழில்கள் தொடங்கவும் தனித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. நலிவுற்ற தொழில் பிரிவுகளை மீண்டும் செயல்படச் செய்ய நிதி

உதவி அளிக்கப்படுகிறது. நிதி, நிருவாகம், விற்பனை ஆகிய வகையிலும் உதவி அளிக்கப்படுகிறது. வளர்ச்சி நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்துறைக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும், சிட்கோவும் தமிழ்நாடு அரசின் சிறு தொழில் பணி நிலையமும் நாட்டுடமையாக்கப்பட்டுள்ள வங்கிகளும் பொறுப்பேற்க இருக்கின்றன. பொதுவாக இத்துறையில் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தும் பொறுப்பை தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் நிறைவேற்றி வருகிறது. தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கும் மாவட்ட தொழில் நிலையங்களையும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களையும் இது நிருவகித்து வருகிறது. கிராமத் தொழில்களை மேம்படுத்துவதில் சிறு தொழில் முனைவோருக்கு உதவி செய்வதிலும் நேரிட முகவர் அமைப்புகளாகச் செயல்படுவதில் மாவட்ட தொழில் நிலையங்கள் பெருமளவில் வெற்றி கண்டுள்ளன. இந்நிலையங்களைப் பெரிதும் திறனுடையவையாகவும் பயனளிப்பவையாகவும் செய்திட இவற்றை வலுப்படுத்துவதற்கு அரசு முயன்றுள்ளது. தொழில் வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்புக்கும் கணிசமான அளவிற்கு வாய்ப்பளிக்கக்கூடிய தீப்பெட்டித் தொழில், தேயிலைத் தொழில், தென்னை நார்த் தொழில் போன்ற தொழில் துறைகளை மேம்படுத்த அதிக வாய்ப்புள்ளதாய் அவற்றிற்கு தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில் தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் கவனம் செலுத்தும்.

3. பட்டுப்புழு வளர்க்கும் தொழில், தொழிலாளர்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பளிக்கக்கூடிய கிராமத் தொழிலாகும். ஆனால், இதற்காக முதலீடு செய்யவேண்டிய மூலதனத் தொகையோ மிகக் குறைவு. பட்டுப்புழு வளர்ப்புத் துறை, முசுக்கொட்டை மரங்கள் பயிரிடப்படும் பரப்பளவை அதிகரிப்பதோடு, விதைப் பண்ணைகள், பட்டுப் புழுக் கூடு அங்காடிகள், செய்முறை விளக்கப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றை மேம்படுத்துதல், பட்டு நூல் சுற்றும் தொழில் கூடங்களை அமைத்தல். மாவட்ட பட்டுப்புழு வளர்ப்பு நிலையங்களை அமைத்தல் போன்ற துறைகளிலும் கவனம் செலுத்துகிறது. பட்டு நூல் சுற்றல், பட்டு நூல் முறுக்கேற்றுதல் கழிவு கட்டு நூல் சுற்றல், துணைப் பொருட்கள் தொழில் பிரிவு போன்ற புதிய தொழில் பிரிவுகளையும் நிறுவுவதில் இத்துறை கவனம் செலுத்துகிறது.

4. இம்மாநிலத்தில் 1973 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு கைவினை தொழில் வளர்ச்சிக் கழகம் கைவினைத் தொழில்களுக்கு உதவி செய்து அவற்றை மேம்படுத்தி வளர்ச்சி பெறச் செய்யும் பொறுப்பேற்றுள்ளது. கிராமங்களில் வேலைவாய்ப்பற்று இருக்கும் கைவினைஞர்களுக்குப் பயனுறும் வகையில் வேலைவாய்ப்பளித்தல், உள்ளூரில் கிடைக்கக் கூடிய வளவாயில்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்காக பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தவும் புதிய திட்டங்களை வகுக்கவும், புதிதாக விற்பனை நிலையங்களைத் தொடங்கவும் கைவினை தொழில் கழகம் திட்டமிட்டுள்ளது. கைவினைப் பொருள்களின் ஏற்றுமதி வரும் ஆண்டுகளில் கணிசமான அளவு உயரும்.



5. தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகம் (சிட்கோ) ஆலமரம் போல் வேருன்றி நின்று சிறு தொழில்களுக்குத் தொடர்ந்து உதவியளித்து வருகிறது. சிறு தொழில்களுக்குச் கொட்டகைகள் அமைத்துக் கொடுத்தல், 33 பழைய தொழிற் பேட்டைகளிலும் மேம்பாடடைந்த மனைகளில் அமைந்துள்ள 5 தொழிற் பேட்டைகளிலும் சிறு தொழில்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கொட்டகைகளையும் அமைத்துக் கொடுக்கிறது. இயந்திரங்கள் வழங்குதல் இன்றியமையா மூலப் பொருள்களை வாங்கி வழங்குதல் விற்பனை வசதிகளுக்கு வகை செய்தல், வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்குதல் நொடித்த தொழிற் பிரிவுகளை இயங்க வைக்க தொடக்கச் செலவுத் தொகை வழங்குதல். மத்திய அரசு வழங்கும் முதலீட்டு உதவித் தொகையை வாங்கிக் கொடுத்தல் ஏனைய செயலுக்காக உதவிகளை நல்குதல் ஆகியவை உட்பட சிறு தொழில்களுக்கு பல வகையில் தொடர்ந்து உதவியளித்து வருகிறது. சிறு தொழில் துறைக்கு மேலும் பெருமளவில் உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கில் வரும் ஆண்டுகளில் இக்கழகம் தனது பணிகளை கணிசமான அளவிற்குப் பெருக்கிக் கொள்ளும்.

6. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டி.ஐ.ஐ.சி.) புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தவும், விரிவு படுத்தவும், உட்பகுப்பு செய்தல் ஏற்கெனவே உள்ள பிரிவுகளை நவீனப்படுத்தவும், நீண்டகால நடுத்தரக்கால கடன்களை வழங்குவதன் மூலமும், இயந்திரங்களை வாங்கியதற்கான தொகையைக் காலந்தாழ்த்தி செலுத்துவதற்கான உத்திரவாதங்களை அமைத்தும் முன்னுரிமைப் பங்கு மூலதனப் பங்குகளை வாங்குவதற்கான முன்வைப்புப் பண உதவி போன்றவற்றைப் புரிந்து வருகிறது. சிறுதொழிற்துறைக்கும் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் தொழிற் பிரிவுகளை அமைக்கவும் உதவியை இந்நிறுவனம் அதிகரித்துள்ளது. 31—12—1981 வரை 3,799 தொழிற் பிரிவுகளுக்கு ரூபாய் 3,118.49 இலட்சத்தை நிதி உதவியாக ஒப்பளித்துள்ளது. இதில் ரூபாய் 2,515.91 இலட்சம் சிறுதொழில் துறைக்கு ஒப்பளித்துள்ளது. இதனைப் போன்ற பின்தங்கிய பகுதிகளில் 2,045 தொழிற் பிரிவுகளுக்கு ரூபாய் 1,640.42 இலட்சம் நிதியுதவி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தொழில் வல்லுனர்கள், கிராமப்புற மருத்துவ பயிற்சியாளர்கள், போக்குவரத்து பணியை நடத்துபவர்கள் முதலானோர்க்கும்

உணவகங்களுக்கும் உதவியளிக்க இந்நிறுவனம் சிறப்பு திட்டங்களை செயலாக்கி வருகிறது. குறைந்த வட்டி விகிதம் கொண்ட கடன் திட்டங்கள் மூலமாக இத்துறையில் அதிகவேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு இந்நிறுவனம் உதவியளிக்கிறது.

இந்நிறுவனம் வரும் ஆண்டுகளில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் சாத்தியகூறு கொண்ட இத்துறையில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு நிதி உதவியை அதிகமாக வழங்க முனைந்துள்ளது.

7. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி) 56 உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது. இக்கழகம் பல திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் உற்பத்தி கணிசமான அளவிற்கு அதிகரிக்கும் என்பதோடு தற்போதுள்ள அரசுத் துறைகளுக்கும் பொதுத் துறை நிறுவனங்களுக்கும் அது ஆற்றிவரும் பணிகளும் சீரடையும்.

கே ஏ, கிருஷ்ணசாமி,
ஊரகத் தொழில் அமைச்சர்

## தொழில் வணிக இயக்குநரகத்தின் கொள்கை குறிப்பு.

### 1982–83.

தொழில் வளர்ச்சித்துறையில் மாநில அரசின் அடிப்படை நோக்கங்கள் இரண்டாகும். தொழில் வளர்ச்சியின் வேகத்தினைத் துரிதப்படுத்துவது முதலாவதாகும். இரண்டாவதாக, துறை வாரியாகவும், வட்டார வாரியாகவும் சீரான முறையில் தொழில்களை வளர்ச்சியுறச் செய்வதாகும். அரசினரது தொழில் கொள்கைகளை, தொழில் துறையில் செயலாக்குவதில் முக்கிய அமைப்பாகத் திகழும் தொழில் வணிக இயக்குநரகம், அது மேற் கொண்டுள்ள பல முயற்சிகளும் பின்வருகின்ற சில முக்கிய நடவடிக்கைகள் மூலம் மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ளது.

1. மாவட்ட தொழில் மையங்களின் வாயிலாக, குறிப்பாக மாநிலத்திலுள்ள பின்தங்கிய பகுதிகளில் தொழிலியல் நடவடிக்கைகளைத் தோற்றுவிப்பது, அதற்காக ஊக்குவிப்புக் கருத்தரங்குகள் நடத்துவது, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுவது உதவி மற்றும், ஏற்கெனவே உள்ள தொழில் நிலையங்களை வலுப்படுத்துவது.

2. மின்னணுவியல், இரசாயனம் போன்ற தனிப்பட்ட தொழில் துறைகளில் அத்தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு அமைப்பு ரீதியான உதவி செய்தல்,



3. மாநிலத்தில், குறிப்பாக பின் தங்கிய பகுதிகளில், சில குறிப்பிட்ட கிராமத் தொழில்களை, வளர்ச்சியடையச் செய்வதற்கு ஒரு முக்கிய கருவியாக தொழிற் கூட்டுறவுத் துறையினைப் பயன்படுத்தி அரசு நேரடியாக ஈடுபடுவது.

மேற்கண்ட செயல்களை நிறைவேற்றுவதில் தொழில் வணிக இயக்குநரகம் எந்த அளவுக்கு வெற்றி அடைந்துள்ளது என்பதனைச் சுருக்கமாக கீழே கூறப்பட்டுள்ளது.

1. தொழில் நடவடிக்கையைத் தேற்றுவிப்பது—

மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்படுவதற்கு முன், நாடி வந்த தொழில் முனைவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், அபிவிருத்தி உதவிகளையும் வழங்குவதை மட்டுமே இந்த இயக்குநரகம் அதன் நடவடிக்கைகளைத் கொண்டிருந்தது. ஊக்குவிப்பு கருத்தரங்குகள் போன்ற நேரடியாக தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகள் ஒரு சிலவே மேற்கொள்ளப்பட்டன. மேலும், இதுமாதிரியான கருத்தரங்குகள் நீண்டகால இடைவெளிக்குப் பிறகுதான் நடைபெறும். மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்பட்ட பிறகு, அவற்றின் அன்றாட செயற்பாடுகளில் தொழில் முனைவர் வளர்ச்சித் திட்டங்கள் ஒரு முக்கிய அம்சமாக அமைந்து விட்டன. கடந்த மூன்றாண்டுகளில் 475 ஊக்குவிப்புக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு உள்ளன. இவற்றில் 24,000-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் கலந்து கொண்டனர். மற்றுமொரு முக்கிய பயனுள்ள அம்சம் யாதெனில், புதிய தொழில் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிகச் சான்றிதழ் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக, பெருமளவில், தொழில் நிலையங்கள் துவங்கப்பட்டன.

மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்பட்ட பிறகு, உரிமங்கள் பெறுவதற்குரிய நடைமுறைகளை எளிமையாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், மூன்றாவது முக்கிய செயலாகும். உள்ளாட்சி எல்லைகளுக்கு உட்பட்ட தொழில் பகுதிகளில் அமைகின்ற சிறு தொழில்களைப் பொறுத்த வரை.

(அ) குறிப்பிட்ட 14 வகைத் தொழில்களைத் தவிர, எந்த ஒரு சிறு தொழிலும் உள்ளாட்சி அமைப்பிடம் உரிமம் பெறுவதற்கு, முன் சுகாதாரத்துறையிடமிருந்து முன் அனுமதி ஏதும் பெறத் தேவையில்லை.

(ஆ) சுகாதாரத் துறையினது முன் அனுமதி தேவை என்று கூறப்பட்டுள்ள 14 தொழில்களில்கூட, அவற்றின் பொருள் தயாரிப்பில் கழிவுகள் இருக்க வாய்ப்பில்லை என்பதை தெளி

வாக்கும் வகையில் தயாரிப்பு முறை விளக்கப்படத்தைச் சான்றாக வைத்து தொழில் நிலையம் உறுதியளித்தால், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரது சிபாரிசின் பேரில் சுகாதார துறையின் அனுமதி இல்லாமலேயே, அத்தகைய தொழில்கள் உரிமம் பெறத் தகுதி பெற்றவையாகும்.

(இ) 25 குதிரைத் திறனுக்கு மேற்படாமல் மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழில்களாயிருந்தால், தொழிற் கூடங்களைக் கட்டுவதற்குரிய விண்ணப்பங்களை, நகரமைப்பு இயக்குநரது ஆய்விற்கு அனுப்பி வைக்கத் தேவையில்லை.

(ஈ) 25 குதிரைத் திறன் வரை மின்சாரம் பயன்படுத்தும் தொழில்கள், தொழில் பகுதிகள் என வரையறுக்கப்படாத இடங்களில் அமைக்கப்பட்டால், மாவட்ட தொழில் மையத்தின் பரிந்துரையின் பேரில், நகரமைப்பு இயக்குநரது ஆய்விற்கு உட்படாமலேயே, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, உள்ளாட்சி அமைப்பினுடைய உரிமம் பெறத் தகுதியுடையனவாகும்.

(உ) கிராமங்களில் தொழில்களை நிறுவுவதற்கு ஊராட்சி மன்றங்கள் உரிமங்களை வழங்குவதற்கு முன் சுகாதாரத்துறை மற்றும் நகரமைப்புத் துறைகளின் முன் அனுமதியைப் பெற வேண்டியதில்லை.

(ஊ) தொழிற்சாலைப் பகுதிகள் அல்லாத இடங்களில் உள்ள, (ஆனால் குடியிருப்பு பகுதிகளைத் தவிர) 50 குதிரைத் திறன் மின்சக்தி அமைப்புக்கு மேற்படாத தொழில் நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்குவதற்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(எ) அய்ந்து குதிரைத் திறனுக்கும் மேற்படாமல் மின் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய ஒரு குடிசைத் தொழிலை, சுகாதாரத் துறையின் அனுமதி இல்லாமலேயே குடியிருப்புப் பகுதியில் நிறுவலாம்.

(ஏ) மின் சக்தியைப் பயன்படுத்தி 10 பேருக்கு குறைவாக தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் அல்லது மின் சக்தியைப் பயன்படுத்தாமல் 20-க்கும் குறைவாக தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு, தொழிற்சாலைத் துறையின் அனுமதியின்றியே உள்ளாட்சி மன்றம் உரிமம் வழங்கலாம்.

(ஐ) 100 பணியாளர் வரை வேலையளிக்கவிருக்கும் தொழிற்சாலைகளின் வரை படங்களை ஒப்புதலளிப்பதற்கு அந்தந்த மண்டலத்திலுள்ள துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.





(ஒ) வழங்கப்பட இருக்கும் மின் இணைப்பு மின் வாரியத்திற்கு இலாபகரமானதாய் இராது என்றாலும் அனைத்து வகைத் தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனுமதிகளை துரிதப்படுத்துவதற்காக மின் வாரியத்தின் வட்டார அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது. தொழில் நிலையத்தை முன்பு நடத்தி வந்தவர் மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவாயினும் சரி, அந்த நிலையத்தைப் புதிதாக நடத்த வந்துள்ளவரை அது பாதிக்காது. அவர் மின் இணைப்புப் பெறத் தகுதியுள்ளவராவார். மின்சாரம் வழங்குவதற்கு முன் நகராட்சி/ஊராட்சி உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்ற முன் நிபந்தனை இல்லை.

சிறு தொழில் நிலையங்களுக்கு, அனுமதிகளைத் துரிதமாகப் பெற்றுத் தருவதில் மூன்று நிலைகளில் அமைந்த குழுக்கள் பேருதவியாய் அமைந்துள்ளன. 9 மாவட்ட தொழில் மையங்கள் சேகரித்த தகவலின்படி, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளில் (நவம்பர் 1981 வரை) 6,000-க்கும் மேற்பட்ட சிறு தொழில்களுக்கு உள்ளாட்சி அமைப்புக்கள் அனுமதி அளித்துள்ளன. இதில் பெருமளவு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படாமல், மாவட்ட தொழில் மையங்களின் பரிந்துரையின் பேரிலேயே உள்ளாட்சி அமைப்புகள் அனுமதியளித்துள்ளன.

நான்காவதாக, கடந்த மூன்று ஆண்டுகளில் தகுதிவாய்ந்த தொழில் நிலையங்களுக்கு பெருமளவில் நிதியுதவி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும். 1978–79 முதல் 1981–82 (டிசம்பர் 1981 வரை)-ஆம் ஆண்டுகளில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து சுமார் 9,000 தொழில் நிலையங்கள் ரூபாய் 19 கோடி கடனுதவி பெற மாவட்டத் தொழில் மையங்கள் உதவி புரிந்துள்ளன.

மாவட்ட தொழில் மையங்கள் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, சிறுதொழில் துறையின் வளர்ச்சி துரிதமடைந்திருப்பது மட்டுமின்றி, வளர்ச்சி குன்றிய பகுதிகளுக்கும் இத் தொழில் வளர்ச்சி பரவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 31—3—1978-இல் 18,789 ஆக இருந்த நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிலையங்களின் எண்ணிக்கை 1980-ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் 28,642 ஆக உயர்ந்தது; இது, 1981 ஆம் ஆண்டு அக்டோபர் இறுதியில் 39,875 ஆக உயர்ந்தது. தருமபுரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தென்னாற்காடு, இராமநாதபுரம் போன்ற பின்தங்கிய பகுதிகளில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 100 சதவீதம் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். 1978–79 முதல் 1981 டிசம்பர்

வரை மற்றும் ஏப்ரல் 1981 முதல் டிசம்பர் 1981 வரையில், மாவட்ட தொழில் மையங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தினைக் காட்டும் இரு அட்டவணைகள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

மாவட்ட தொழில் மையங்கள், மேற்கொண்ட பயனுள்ள கூட்டு நடவடிக்கைகளின் காரணமாக, தீவிர கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் கிராம இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்களின் கீழ் ஏப்ரல்—நவம்பர் 1981-க்கு உள்ளிட்ட காலத்தில் சுமார் 12,000 பேருக்கு பயிற்சி வசதி அளிக்கப்பட்டது.

அபிவிருத்தி ஆணையாளர் (சிறு தொழில்கள்), அனைத்து இந்திய அளவில் மாவட்ட தொழில் மையங்களின் நடவடிக்கைகள் பற்றி மேற்கொண்ட 1980–81-ஆம் ஆண்டின் கணிப்பின்படி, முன்னேற்றம் பற்றிய குறிப்பிட்ட சில குறியீடுகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்பொழுது தமிழ்நாடு, அடைந்துள்ள முன்னேற்றம் அனைத்திந்திய அளவில் சராசரி முன்னேற்றத்தைக் காட்டிலும், அதிகமாகவே உள்ளது. ஒரு மாவட்ட தொழில் மைய அளவில் கூடுதலாக வேலை வாய்ப்பினைத் தோற்றுவித்திருப்பது என்ற அடிப்படையில் பார்த்தால், மாநிலங்களிலேயே தமிழ்நாடுதான் முதலாவதாகத் திகழ்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியுதவு அளித்ததில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. 1979–80 மற்றும் 1980–81 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் அமைந்திருந்த கைவினைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்களுள், 78·45 சதவீத கைவினைத் தொழில்களும், 80·78 சதவீத சிறுதொழில் நிலையங்களும் நகர்ப்புறமல்லாத பகுதிகளில் அமைந்திருந்தன என்று அக்கணிப்பில் காட்டப்பட்டுள்ளது. சில மாநிலங்களின் ஒப்பீட்டு விவரங்களைக் காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது,—

| மாநிலம். | நகர்ப்புறம் அல்லாத பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கைவினைத் தொழில் மற்றும் சிறு தொழில் நிலையங்களின் சதவீதம். | |
|---|---|---|
| | 1979–80. | 1980–81 |
| தமிழ்நாடு .. .. .. | 78.45 | 80.78 |
| ஆந்திரப் பிரதேசம் .. | 96.00 | 91.78 |
| குஜராத் .. .. .. | 56.99 | 53.83 |
| அரியானா .. .. | 48.76 | 52.47 |
| கர்நாடகம் .. .. .. | 71.02 | 79.50 |
| கேரளா .. .. .. | 88.40 | 78.24 |
| மகாராஷ்டிரா .. .. | 75.11 | 71.06 |
| பஞ்சாப் .. .. .. | 57.54 | 59.41 |



மூலம்—புது டெல்லி அபிவிருத்தி ஆணையாளர் (சிறு தொழில்கள்) வெளியிட்டுள்ள மாவட்ட தொழில் மையங்களின் சாதனைகள் பற்றிய தொகுப்பு.

நகர்ப்புறம் நீங்கலான பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப் பரவச் செய்வதில் வெகுவாக முன்னேறியுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதனை மேற்கண்ட அட்டவணை குறிப்பிடுகிறது. நெஞ்சிற்கு நிறைவு தரும் மற்றொரு அம்சம் யாதெனில், 1979–80ஆம் ஆண்டில் அடைந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டிலும் 1980–81ஆம் ஆண்டில் அதிக முன்னேற்றம் காணப்பட்டதாகும். ஆனால் சில மாநிலங்களில் 1980–81-ல் இந்த முன்னேற்றம் குறைந்துள்ளது.

எதிர்காலத் திட்டங்கள் :

மாவட்ட தொழில் மையங்கள் திட்டம் மேலும் தொடர்ந்து நீடிப்பதற்கு, மைய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் நடவடிக்கைகளைச் சிறப்பான முறையில் மேற்கொள்ளக்கூடிய வகையில் மாவட்ட தொழில் மைய அமைப்பிற்கு ஒரு இறுதி வடிவம் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுவாக தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதற்கும், மாநிலத்தில் தொழில்களே இல்லாத புதிய பகுதிகளிலும், தொழில் வளர்ச்சி குன்றிய பகுதிகளிலும் தொழில் அபிவிருத்தியைப் பரப்புவதற்கும், அதிலும் புதிய தொழில்களைப் பரப்புவதற்கும், மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இயக்குநகரத்தின் இதர பிரிவுகளின் வளர்ச்சி நடவடிக்கைகள் :

மின் மற்றும் மின்னணுத் தொழில்—

அடிப்படை வசதிகளை அமைத்துத்தருவது ; திட்டத் தொகுப்புகள் தயாரிப்பதில் உதவி ; பொருள் விற்பனை வசதிகள் ; இயந்திர சாதனங்கள், இயந்திர பாகங்கள் முதலியவற்றிற்குப் போதுமான சோதனை வசதிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, மாநிலத்தில் மின் மற்றும் மின்னணுத் தொழில்களின் வளர்ச்சியை இத்துறை பேணி ஆதரித்து வருகிறது.

சென்னை, அடையாறிலுள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டையில் 78 தொழில் நிலையங்கள் நன்முறையில் செயல்பட்டு வருகின்றன. இது போலவே, உயர் தரமான மின்னணுச் சாதனங்களைத் தயாரிப்பதில் ஓசூரிலுள்ள மின்னணுத் தொழிற் பேட்டையிலுள்ள தொழில் நிலையங்களின் பங்கு மகத்தானதாகும். இந்த இரு தொழிற் பேட்டைகளும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. இதர மாநிலங்களிலும் இவை போன்ற அமைப்பினைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்குடன், அம்மாநிலங்கள், அவற்றின் பிரதிநிதிகளை இத்தொழிற் பேட்டைகளுக்கு அனுப்புகின்றன. திருச்சிராப்பள்ளி, காக்களூர், கோயமுத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பேட்டைகள் வேகமாக முன்னேற்றமடைந்து வருகின்றன.

சென்னை-41-ல் உள்ள மின்னணுவியல் தொழில் வளாகத்தில் அமைந்திருக்கும் மகளிர்க்கான மின்னணுவியல் தொழில்கூடத் தொகுதியில் ஏற்கனவே 26 தொழிற் கொட்டகைகள் கட்டப்பட்டு தகுதிவாய்ந்த மகளிர் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டு விட்டன. இந்த மேன்மையான திட்டம் மகளிர் தொழில் முனைவர்களுக்கு மட்டுமே உரிய பிரத்தியேகமான திட்டமாகும். மேற்கண்ட தொழில் வளாகத்திலுள்ள மகளிர்க்கான மின்னணுவியல் தொழிற்கூடத் தொகுதியில் சிறிய தொழிற்கூடக் கொட்டகைகளுக்கான தேவை அதிகரித்து வருவதால், மகளிர் பலனடையும் வகையிலும் மகளிருக்கான வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வகையிலும் மின்னணுவியல் தொழில் வளாகத்திலுள்ள மகளிருக்கான மின்னணுவியல் தொழிற்கூடத் தொகுதியில் கூடுதலாக 'கியூ' வரிசையை சேர்ந்த சிறப்புத் தன்மை வாய்ந்த இரு தொழில் கொட்டகைகளை ஒரே வரிசையில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடையாறு, ஒசூர் மற்றும் காக்களூர் (திருவள்ளூர்) ஆகிய தொழிற் பேட்டைகளில் மொத்தம் 112 தொழிற் கூடங்களை இத்துறை அமைத்துள்ளது. ஒரு சில நிலையங்களைத் தவிர, ஏனையவனைத்தும், முழுமையாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. 14 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1982–83 ஆம் ஆண்டில் மேலும் 10 தொழிற் கூடங்கள் கட்டப்படும்.

தொழிற் கூடங்களைத் தவிர, பல்வேறு தொழிற் பேட்டைகளில், மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்காக 184 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் 171 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வருகின்ற ஒன்றிரண்டு ஆண்டுகளில், செப்பனிட்ட மனைகள் அதிகமாகத் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அத்தேவையினை நிறைவேற்றும் பொருட்டு, சென்னை, திருப்போரூர்



சாலையில் பெருங்குடியில் ஏற்கனவே உள்ள செப்பனிட்ட மனைகள் தொழிற்பேட்டைக்கருகில் மேலும் நிலங்களை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாதுகாப்புச் சாதனங்கள், அச்சிட்ட மின்வடிவு அட்டைகள், காப்புத் தடைகள், '' கபாசிட்டர்கள் '' ''ஜி. எல். எஸ். '' விளக்குகளுக்குரிய மின்னிமைக் கம்பிகள் மருத்துவ மின்னணுச் சாதனங்கள் , '' ஆசிலாஸ்கோப் '' பற்றவைக்கும் மின்னணுச் சாதனங்கள் ; மின்னணு கைக்கடிகாரங்கள் மற்றும் சுவர்க் கடிகாரங்கள், மின்னணு ஒலிச் சங்குகள் முதலிய உயர்தரமுள்ள பொருள்களைத் தயாரிப்பது உட்பட, தொலைக்கர்ட்சிக் கருவிகள், '' வீடியோ '' ஒலிப்பதிவு நாடாக்கள் போன்ற நுகர்வு மின்னணுப் பொருள்களை, இத் தொழிற்பேட்டைகளில் தயாரிக்கப்படுகின்றன. நமது மாநிலத்தில் சிறு தொழில் துறையில் தயாரிக்கப்படுகின்ற தொலைக்காட்சிப் பெட்டிகள் வெளி மாநிலங்களில் நன்மதிப்பைப் பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மின்னணுச் சாதனங்களின் ஏற்றுமதியை மேலும் ஊக்கப்படுத்துவதற்காக, மாநிலத்தில், '' தடையில்லா வர்த்தகப் பகுதி '' (Free Trade zone) ஒன்றை ஏற்படுத்துவதற்கு கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. மின்னணுத் தொழிலின் வளர்ச்சி, நல்ல நிலையினை அடைந்துள்ளது. ஆதலால், அடுத்த ஓரிரு ஆண்டுகளில், இத்தொழில் வியத்தகு முன்னேற்றம் அடையுமென எதிர்பார்க்கலாம்.

மின்னணுக் கருவிகளையும், மின்னணு பாகங்களையும் மிக நுட்பமாக சோதனை செய்வதற்குரிய வசதிகள் அனைத்தும் அமைந்துள்ளன. அடையாறிலுள்ள மின்னணுச் சோதனை மற்றும் வளர்ச்சி நிலையம், மின்னணுப் பொருள்களின் தரத்தை மேலும் மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிறு தொழில் மின்னணுத் தொழில்கள் அனைத்தும், இந்த நிலையத்தால் பயன்பெற்றுள்ளன

மின்சரகத் தொழில்கள் :

மின்னணுத் தொழிலின் வளர்ச்சியுடன் இணைந்தாற்போல் மின்சாரத் தொழிலும் சீரான வளர்ச்சியை அடைந்துள்ளது. தயாரிக்கப்படும் வீட்டு உபயோக மின்சாரச் சாதனங்களின் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் வீட்டு உபயோக மின்சார சாதனங்கள் (தரக்கட்டுப்பாடு)ஆணை 1981 என்பதனை, தொழில் வணிக இயக்குநரகம் செயலாக்கி வருகிறது.

காக்களூரிலுள்ள மைய மின் ஆய்வுக் கூடம் மேற்கொண்டு வரும் அநேக மின்சார சோதனை முறைகளுக்கு இந்திய தர நிர்ணய நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது. மேலும் பலவற்றிற்கு அங்கீகாரம் வர வேண்டியுள்ளது.

அரசு மருத்துவ மனைகளின் மின் மருத்துவ சாதனங்களை செப்பனிட்டுப் பராமரித்தல் :

கிண்டி, தஞ்சாவூர், கோயமுத்தூர், மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட நான்கு மின் மருத்துவச் சாதனங்கள் செப்பனிடு நிலையங்கள், இந்த ஆண்டும் பயனுள்ள வகையில் பணியினை நிறைவேற்றி வந்துள்ளன. இந்த நிலையங்கள் மொத்தம் 2,600 மின் மருத்துவச் சாதனங்களை செப்பனிட்டு பழுதுபார்த்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை, உயிரைக் காப்பாற்றுவதற்கு பயன்படுத்தக்கூடியவைகளாகும். 1981–82 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் முடிய 9 மாத காலத்தில் மின் மருத்துவச் சாதனங்களைச் செப்பனிட்டு பழுது பார்த்த தற்கான வருவாய் ரூ. 9.2 லட்சமாகும்.

ரஇசாயனத் தொழில்கள் :

பெரிய எரிபொருள் இரசாயனம் மற்றும் கனரக இரசாயனத் தொழில்கள் முதல், வர்ணம், சாயப் பொருள் மற்றும் நுண் இரசாயனப் பொருள்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் சிறு தொழில்கள் வரை, பல்வேறு வகையான தொழில்கள் இரசாயன தொழில்களில் அமைந்துள்ளன.

மகாராஷ்டிரா, குஜராத், மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், தமிழ் நாட்டில் இரசாயனத் தொழில்கள் சமீப காலத்தில்தான் வளர்ச்சியடையத் துவங்கின. எனினும், கடந்த இருபதாண்டுகளில், இத் தொழில் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. தென் மாநிலங்களில், சிமிட்டி, '' காஸ்டிக் சோடா '' ''நைட்ரேஜினல்'' மற்றும் '' பாஸ்பாட்டிக் '' இரசாயன உரங்கள் போன்ற தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள உற்பத்தித் திறனில் பெருமளவு, தமிழ்நாட்டில்தான் உள்ளது. தென்னிந்திய மாநிலங்களில் தமிழ்நாடு முன்னணியில் திகழ்கிறது. இரசாயன உரங்கள், கன இரசாயனப் பொருட்கள், சிமிட்டி, சர்க்கரை காகிதம், ''ஆல்கஹால் '', '' இரயான் '' நுன்னிழை '' பிவிசி'' போன்ற இரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதில், குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை, ''இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ்'' '' சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் '', '' மேட்டூர் கெமிக்கல்ஸ் ''



போன்ற பெரிய தொழிற்சாலைகள், மாநிலத்தில் இரசாயனத் தொழில்களின் வளர்ச்சிக்குத் துணை புரிந்துள்ளன. கூட்டுத் துறையின் கீழ், தமிழ்நாடு அரசு, பல நடுத்தரப் பெரிய தொழிற் சாலைகளை அமைத்து, மாநிலத்தின் பல்வேறு இரசாயனத் தொழில்களுக்குத் தேவையான '' சோடியம் டை குரோமைட் '', அடிப்படை '' குரோமியம் சல்பேட் '', '' சோடியம் ஹைடிரோ சல்பைட் '' மற்றும் '' யூரியா '' போன்ற இரசாயனப் பொருள் களை தயாரித்து அளிக்கிறது. நெசவாளர்களின் தேவைகளை யும், துணி ஆலைகளின் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக கூடலூரில் சாயப் பொருள்களைத் தயாரிக்கின்ற நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. பெருரகத் தொழில் துறையில் '' சோடா ஆஷ் '' தயாரிக்கக் கூடிய தொழிற்சாலை ஒன்றும், தூத்துக்குடியில் நிறுவப்பட்டு வருகிறது.

1980–81-இல் தென் மண்டலத்திலிருந்து சுமார் ரூபாய் 30 கோடி அளவுக்கு இரசாயனப் பொருள்கள் ஏற்றுமதி ஆயின. இதில் தமிழ்நாட்டின் பங்கு ரூபாய் 14 கோடியாகும்; கர்நாட கத்தின் பங்கு ரூபாய் 9.6 கோடி; கேரளாவின் பங்கு ரூபாய் 4.6 கோடி; மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் பங்கு 1.2 கோடி.

தமிழ்நாட்டில், நிறுவனத்துறையில், வேறு பல இரசாயனத் தொழில்களுக்கு, அதிலும் குறிப்பாக '' ஆல்கஹால் '' அடிப் படையிலான தொழில்கள், வேளாண்மை அடிப்படையானத் தொழில்கள், கனிம அடிப்படையான தொழில்கள், அடிப்படை மருந்துப் பொருள் தொழில்கள் பூச்சிக் கொல்லி இரசாயனத் தொழில்கள் போன்ற தொழில்களின் வளர்ச்சிக்கு, நல்ல வாய்ப் புகள் உள்ளன.

சிறு தொழில் துறையிலும் இரசாயனத் தொழில்கள் வளர்ச்சி அடைந்திருக்கும் பாங்கினைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம்.—

சிறு தொழில் துறையில் பதிவு செய்யப்பட்ட இரசாயனத் தொழில்கள் மற்றும் அவற்றைச் சார்ந்த தொழில்களின் எண்ணிக்கை :

| தொழிலின் பெயர். | 30–12–78இல் | 31–12–79இல் | 31–12–80இல் | 30–6–81இல் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 இரசாயனப் பொருள்கள் | 2,746 | 3,243 | 5,455 | 6,248 |
| 2 உணவுப் பொருள்கள் | 1,698 | 1,968 | 2,990 | 3,530 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | ஊட்டச்சத்துப் பொருள்கள் புகையிலைப் பொருட்கள் .. | 171 | 200 | 268 | 312 |
| 4 | காகிதப் பொருட்கள் .. | 1,887 | 2,228 | 2,837 | 3,109 |
| 5 | " இரப்பர் " மற்றும் " பிளாஸ்டிக் " | 1,254 | 1,354 | 1,680 | 1,807 |
| 6 | உலோகமல்லாத கனிமப் பொருட்கள் .. | 1,091 | 1,496 | 2,006 | 2,204 |
| | மொத்தம் .. | 8,847 | 10,489 | 15,236 | 17,210 |

1978-இல் இருந்த இரசாயனத் தொழில்கள் மற்றும் சார்புத் தொழில்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் 1981ல் முதல் அரை ஆண்டிலேயே கிட்டத்தட்ட இரட்டிப்பாகியுள்ளது. இது ஒரு குறிப்பிட்டத்தக்க வளர்ச்சியாகும். 30–6–1981இல்-தொழில் வணிக இயக்குநரகத்தில் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை 37,840-ஆக இருந்தது. இவற்றில், இரசாயனத் தொழில்கள் 6,248 ஆகவும், இரசாயனம் சார்புடைய தொழில்களின் எண்ணிக்கை 10,962 ஆகவும் இருந்தன. மைய அரசு மற்றும் மாநில அரசு அளித்து வரும் தொழில் நுட்ப உதவி மற்றும் ஊக்குவிப்புப் பணியின் மூலம், இப்படி பலவிதமான சிறு தொழில்களை அமைக்க முடிந்தது. இந்த தொழிலதிபர்களில் பெரும்போலார் இரசாயனத் துறையிடம் உயர் கல்வித் தகுதியுடையவர்கள் அல்லது அனுபவமிக்க தொழில் நுட்பவியலாளர் அல்லது இரசாயனப் பொருள் வியாபாரிகள் ஆவர். இவர்கள் அரசு அளித்து வரும் சலுகைகளையும் உதவிகளையும் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இதன் விளைவுகள், நல்ல பயனை அளித்துள்ளன. இருப்பினும், சோப்புகள், மருந்து கலவைப் பொருள்கள், வாசனைப் பொருட்கள், " பிளாஸ்டிக் " பொருள்கள் தயாரித்தல், இரப்பர் பொருள்கள் தயாரித்தல், வர்ணங்கள், மற்றும் சாயப் பொருள்கள், உயிரியல் சாய நுண் பொருட்கள், சாயங்கள், சாய இடை நிலைப் பொருள்கள், சனிம அடிப்படை இரசாயனப் பொருள்கள், தொழிலியல் இரசாயனப் பொருள்கள் போன்ற சில இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில்களை சிறு தொழில் துறையில் அபிவிருத்தியடையச் செய்வதற்கு, இம்மாநிலத்தில், மேலும், வாய்ப்புக்கள்



உள்ளன. குறைந்த மூலதனம், எளிய தொழில் நுட்பம் இவற்றைக் கொண்டு அதிகமான வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய தொழில்களாவன ;—(1) வாசனைத் திரவியத் தொழிலுக்காக, மலர்களிலிருந்து எடுக்கக் கூடிய எண்ணெய், எலுமிச்சை, புல்லின எண்ணெய், இஞ்சி வகை எண்ணெய் போன்றவை ; (2) வண்ணம் மற்றும் அச்சு மைத் தொழிலுக்குரிய " யூரியா பார்மால்டிஹைடு ", " பினால் பார்மால்டிஹைடு பசை ; (3) "குளோரினேட்டு கனசலால் ", (4) " ஸ்பிக் " மற்றும் இதரத் தொழில் நிறுவனத்திலிருந்து கிடைக்கின்ற அமிலங்களிலிருந்து பாஸ்பேட்டுகள் " ; (5) அச்சு மற்றும் புத்தகக்கட்டுத் தொழிலுக்குரிய அட்டைகள் ; (6) தானியங்கி மற்றும் பஞ்சாலைத் தொழிலுக்குரிய ஓ' வளையங்கள், எண்ணெய் அடைப்புக்கள் ; (7) பாத அணித் தொழிலுக்குரிய இரப்பர் அடிப்படையில் தயாரிக்கப்படும் ஒட்டுவதற்குரிய பசை ; (8) தண்ணீர் பக்குவப்படுத்துவதற்குரிய படிடிகாரம் ; (9) "வெர்மிகுலைட்" எடுத்தல் ; (10) அக்ரிலிக் சீட்டுகள் ; (11) "பால் பாய்ண்ட் பேனா மை"; (12)அரிப்பைத் தடுக்கும் இரசாயனப் பொருட்கள் மற்றும் துருப்பிடிப்பதைத் தடுக்கும் இரசாயனப் பொருட்கள்; (13) முந்திரி ஓட்டினால் தயாரிக்கக்கூடிய பசை மற்றும் இதரப் பொருட்கள் (14) துணி கட்டுமானச் சாமான்கள் ; (15) வடிகட்டும் பொருள்கள் ; (16) ஆய்வுக் கூட இரசாயனப் பொருட்கள் முதலியன ஆகும்.

திருவாளர்கள் " இந்துஸ்தான் ஆர்கானிக் கெமிக்கல்ஸ், குஜராத் அரோமேட்டிக்ஸ் லிமிடெட் ", ராஷ்டிரிய கெமிக்கல் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடேட் " போன்ற பெருரகத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் பல்வேறு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, பல்வேறு வகையான புதிய இரசாயனப் பொருட்களைத் தயாரிக்கத் துவங்கலாம்.

இரசாயனப் பிரிவின் நடவடிக்கைகள் :—

தமிழ் நாட்டிலுள்ள இரசாயனத் தொழில்களின் வளர்ச்சியை துறையின் இரசாயனப் பிரிவு கவனித்து வருகிறது. இப்பிரிவின் நடவடிக்கைகளாவன :—

1. சோதனை வசதிகள் அளிப்பது.

2. முன்னோடித் திட்ட ஆய்வுகளுக்குரிய வசதிகளை அளிப்பது.

3. தேவையின் பேரில், இரசாயனத் தொழிலில் தொழில் நுட்ப ஆலோசனை, சாத்தியக்கூறு அறிக்கைகள், மற்றும் திட்ட தொகுப்புக்களை அளிப்பது.

4. கிடைப்பதற்கரிய இரசாயனப் மூலப் பொருள்களை சிறு தொழில் நிலையங்களுக்குக் கிடைக்கச் செய்வதில் உதவி யளிப்பது.

இரசாயனப் பிரிவிலுள்ள ஆய்வுக் கூடங்கள் அளித்து வரும் சோதனை வசதிகளால் பயனடைந்த தொழிற் சாலைகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது:—

| ஆய்வுக்கூடத்தின் பெயர். | 1981–82-ஆம் ஆண்டில் பயன்பெற்ற தொழிற்சாலை களின் எண்ணிக்கை. (30–11–81 வரை). |
|---|---|
| (1) | (2) |
| 1 இரசாயனச் சோதனை மற்றும் பகுப் பாய்வுக் கூடம், கிண்டி .. .. .. | 860 |
| 2 வட்டார ஆய்வுக்கூடம், மதுரை .. .. | 1,378 |
| 3 வட்டார ஆய்வுக்கூடம், கோயம்புத்தூர் .. | 391 |
| 4 சவ்வரிசி ஆய்வுக்கூடம், சேலம் .. .. | 147 |
| 5. உப்பு, கடல்படு இரசாயனப் பொருள்களுக் கான மாநில ஆராய்ச்சிக்கூடம், தூத்துக்குடி | 54 |
| மொத்தம் .. | 2,830 |

இந்த இயக்குநரகத்தின் இரசாயனப் பிரிவு, தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில் நிலை யங்கள்யாவும் '' பாரபின் '' மெழுகு, தீக்குச்சி மெழுகு, இறைச் சிக் கொழுப்பு, உயர்வேக '' டீசல் '' எண்ணெய் போன்ற மூலப் பொருள்களைப் பெறுவதில், உதவியளிக்கிறது. 1980–81 மற் றும் 1981–82 ஆம் (30–11–1981 வரை) ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட, கிடைப்பதற்கரிவதாயுள்ள மூலப் பொருள்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—



| | 1980–81 | 1981–82 (30-11-1981 வரை.) |
|---|---|---|
| | மெட்ரிக் டன் | மெட்ரிக் டன். |
| '' பாரபின் '' மெழுகு .. .. | 4,913 | 3,848 |
| தீக்குச்சி மெழுகு .. .. .. | 3,519 | 2,760 |
| இறைச்சிக் கொழுப்பு .. .. | 647.5 | 219.3 |

மேற்கண்டவை தவிர, இத்துறையில் பதிவு பெற்றுள்ள சிறு தொழில்கள், வெள்ளை சிமிட்டி, ''டிட்டேனியம் டை ஆக்ஸைடு'' சூடம் முதலிய பொருள்களைப் பெறக்கூடிய வகையில் இரசாய னப் பிரிவு சிறு தொழில்களின் தேவைக் கோரிக்கைகளை சம்பந் தப்பட்ட நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்கிறது.

தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக உலைக்கள எண் ணெய், '' இன்டேன் வாயு '' ஆகியவற்றை வழங்குவதற்கும் வீரியமற்ற சாராய உரிமம் வழங்குவதற்கும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு, இரசாயனப் பிரிவு பரிந்துரை செய்கிறது. பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் சிறு தொழில் நிலையங் கள், உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களையும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களையும் ஒதுக்கீட்டின் மூலம் பெறுவதற்கு வழி வகுக்கும் வகையில், இப்பிரிவு அவற்றின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது. இவ்வாறு, உதவியளிக்கப்பட்ட சிறுதொழில் நிலையங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | 1980-81 | 1981–82 (30-11–82 வரை) |
|---|---|---|
| 1. வீரியமற்ற சாராயம் | 20 | 25 |
| 2. உற்பத்தி திட்டம் ஒப்புதலளித்தல். | 30 | 26 |
| 3. உலைக்கள எண்ணெய் | 108 | 80 |

இரசாயனத் தொழில் தகவல் களஞ்சியம்;

புள்ளி விவரங்களைச் சேகரித்து வைப்பது, தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பது ஆகிய செயல்களை வலுப்படுத்தும் பொருட்டு, அடிப்படை புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கும்,

இரசாயனத் தொழில் திட்டக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கும் மாநிலத்தில் சிறு தொழில் துறையில், ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில்களை அமைப்பதற்கு தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதற்கும், இரசாயனப் பிரிவில் ஒரு தகவல் களஞ்சியம் நிறுவப்பட்டுள்ளது. இத் தகவல் களஞ்சியம் துவக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து 31–12–1981 வரை, 6,424 இரசாயனப் பொருள்களைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. இவை பற்றிய புதிய விவரங்களையும், தொடர்ந்து சேகரிக்கப்பட்டு வருகிறது. 1975 ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரையில், 274 திட்டத் தொகுப்புகள் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் தகவல் சேகரிப்பு முறைகளும், அவற்றைப் பயன்படுத்தக் கூடிய முறைகளும், சீர்திருத்தப்பட்டுள்ளன. இப்பிரிவு வழங்கிய தகவல்களின் பயன் பற்றி, 1979 ஆம் ஆண்டு ஜுன் முதல் 31–12–1981 முடிய, 132 பாராட்டுக் கடிதங்கள் வந்துள்ளன. இத்தகவல் களஞ்சியம் வழங்கிய திட்டத் தொகுப்புகளைப் பெற்ற சுமார் 45 இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில் நிலையங்கள், பல்வேறு நிலைகளில் செயல்பட்டு வருகின்றன.

இ. மாநில புவியியல் பிரிவு—

தொழில் துறையின் புவியியல் பிரிவு, மாநிலத்திலுள்ள கனிம வளங்களை ஆய்வு செய்யும் பணியினை, தொடர்ந்து மேற் கொண்டு வருகிறது. கடந்த 24 ஆண்டுகளில் இப்பிரிவு மேற்கொண்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளின் விளைவாக, சிமிட்டி தொழிற்சாலைகள், சுண்ணாம்பு அடிப்படையிலான இரசாயனத் தொழில்கள், '' அலுமினியம் '' மற்றும் எஃகு தொழிற்சாலைகள் (சேலம் மாவட்டம்), கண்ணாடி, மட்பாண்டத் தொழில்கள் முதலியவை அமைக்கப்பட்டுள்ளன. தக்க இயந்திர சாதனங்களையும், தகுதி வாய்ந்த பணியாளர்களையும் கொண்டுள்ள இப்புவியியல் பிரிவு மேற்கொண்ட கள ஆய்வுகளின் மூலமாகத் தெரிய வந்த கனிப் பொருள் படிமங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி அடைந்துள்ள பல அரசு நிறுவனங்களுள், தமிழ்நாடு சிமிட்டி நிறுவனம், தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம், தமிழ்நாடு கனிப் பொருள் நிறுவனம், தமிழ்நாடு '' மாக்னசைட் '' நிறுவனம் ஆகிய சிலவற்றைக் குறிப்பிடலாம்.

இப்பிரிவு மேற்கொண்ட முக்கியமான கனிப் பொருள் ஆய்வு விவரங்கள் பின்வருமாறு :—

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்தில் வைடூரியம் என்னும் '' கிரைசோபெரில் '' பற்றிய விவரமான ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதுவரையில் கிடைத்த முடிவுகள், நல்ல தரமுடைய மணிகற்களை கண்டறிவதற்கு மேலும் ஆய்வினை மேற்கொள்ள வேண்டுமென்பதை



உறுதிப்படுத்துகிறது. மேலும், மாணிக்கக்கல், நீல மணிக்கல் பளிங்கு படிக்கல், முத்துப் போன்ற வெளிக்களிக்கல் ஆகிய விலை மதிப்பு மிக்க ஆபரண கற்களைப் பற்றிய ஆய்வுகளை திருச்சி மாவட்டத்தில் சின்னதாராபுரம்-கரூர்-குளித்தலை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆபரணக் கற்கள் படிமங்களைக் கண்டறியும் ஆய்வு அடுத்த ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. கரூருக்கு அருகில் புலியூரில் ஏற்கெனவே உள்ள சிமிட்டி தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணாம்புக்கல் படிமங்களை கண்டறியும் பொருட்டு, மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில், சுண்ணாம்புக்கல் படிமம் பற்றிய விவரமான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. குத்தகைக்கு விடப்பட்ட பகுதிகளிலும் குத்தகைக்கு விடப்படாத பகுதிகளிலும் மொத்தம் சுமார் 20 '' மில்லியன் டன் '' சுண்ணாம்புக்கல் படிந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

3. தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யத்திற்கு அருகில் சிலிகா மண் படிந்துள்ளது பற்றிய துவக்க ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்த மணற் படிமங்கள் நல்ல தரமுடையவை என்றும், கண்ணாடி செய்வதற்குத் தகுதி வாய்ந்தவை என்றும், கிரியைக்குப் பிறகு வார்ப்படத் தொழிற்சாலைக்கும் பயன்படும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கனிமப்படிமங்கள் பற்றிய தோற்றப்பணி மேற்கொள்ளப்பட்டது.

4. கோலார் தங்க சுரங்கத்தில் தங்கம் படிந்துள்ள பாறைகள், தெற்கு நோக்கி தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வட்டத்திலுள்ள மகாராஜாகடை காட்டுப் பகுதியினுள் பரவி இருப்பதாகத் தெரிகிறது. தற்போது, தங்கத்தின் விலை மிகவும் உயர்ந்துள்ளதால், இந்திய புவியியல் துறை மற்றும் '' பாரத் தங்கச் சுரங்கம்'' ஆகிய நிறுவனங்களின் கூட்டுடன், மகாராஜா கடைப்பகுதியில் அமைந்துள்ள தங்க படிமப் பாறைகளின் விவரமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

5. கிழக்கு இராமநாதபுரத்தில் முதுகுளத்தூர் வட்டத்தில் உள்ள கோக்கடி, குருவாடி, அவந்தண்டி கிராமங்களில் 'ஜிப்சம்' படிந்துள்ளது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த '' ஜிப்சம் '' படிமங்கள், பூமியின் மண்படிமப் பகுதிகளில் மட்டும் படிந்துள்ளன என்றும், சிமிட்டித் தொழிலுக்கு சராசரி தரம் வாய்ந்ததாக சுமார் 5,20,000 டன் '' ஜிப்சம் '' எடுக்க முடியும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

6. திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்கும் பான்னையன்காயலுக்கும் இடைப்பட்ட கடற்கரையோரப் பகுதியில், இளிஞ்சல் படிமத்தை கண்டறிய மேற்கொண்ட முன் ஆய்வின்படி,

பூமியின் கருமண் பகுதியில் ஒரு மீட்டர் பருமனில் கிளிஞ்சல் சுண்ணாம்பு பாளமாக படிந்திருப்பது தெரியவந்தது. கிளிஞ்சல் சுண்ணாம்பிலிருந்து சுண்ணாம்பு அடிப்படையிலான இரசாயனத் தொழில்களுக்கு உபயோகப்படும் உயர்தரமுடைய சுண்ணாம்பு கிடைக்கும். இந்த ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

7. கோயம்புத்தூர் மாவட்டத்தில், காரமடைக்கருகில், கத்தானி மலையில் மேற்கொள்ளப்பட்ட '' பெல்ட்ஸ்பார் '' ஆய்வின் மூலம், அப்பகுதியில் கருங்கல் பாறைகளுடன் சுமார் 45,000 டன் '' பெல்ட்ஸ்பார் '' படிந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

8. புதுக்கோட்டை மாவட்டத்தில் கனிவள ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. எருச்சி கிராமத்திற்கருகில் மட்பாண்டத் தொழிலுக்குத் தகுதியான வெள்ளைக் களிமண் படிந்திருப்பது காணப்பட்டது. களிமண் படுகைகளைப் பற்றிய ஆய்வு மேலும் தொடரப்பட்டு வருகிறது. தச்சாங்குறிச்சிக்கருகில் படிந்துள்ள சுண்ணாம்புக்கல் சுத்தமற்றதாகவும், சிமிட்டி தயாரிப்பதற்குத் தகுதியற்றதாயும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டது. ஆனால், இது உள்ளூர் சுண்ணாம்புச் சூளைக்குப் பயன்படக் கூடியதாகும்.

9. நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவுகள் பற்றிய புவியியல் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு நிவாரண நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டன. குறிப்பாக மேட்டுப்பாளையம் மற்றும் உதகமண்டலத்திற்கிடையேயுள்ள மலைப்பகுதி இருப்புப் பாதை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தென் பிராந்திய '' இரயில்வே '' கேட்டுக் கொண்டதன் பேரில் கர்நாடக மாநிலத்திலுள்ள '' ஹாசன்—மங்களூர் '' பாதையிலுள்ள மலைப்பகுதி இருப்புப் பாதையைப் பற்றி இதுபோன்ற ஆய்வும், சிறப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

கனிப்பொருள் நிர்வாகம்.—

கனிமச் சலுகைகள் வழங்குவது, கனிப் பொருள் வருவாயை உயர்த்துவதற்குத் தக்க கொள்கைகளை வகுப்பது மற்றும் கனிப் பொருள் நிர்வாகத்தை சீர்படுத்துவது ஆகிய தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட செயல்களில் அரசுக்கு உதவியாக இப் புவியியல் பிரிவு இருந்து வருகிறது. காஞ்சிபுரம், கடலூர், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள வட்டார சுரங்க அலுவலகங்கள், உரிமை ஊதியத் தொகை மற்றும் இதர கனிப் பொருள் வருவாயினை நிலைப்படுத்துவதற்குரிய தொழில் நுட்ப ஆலோசனைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கி வருகின்றன. கனிப்



பொருள் சலுகைகள் கோரி வரும் விண்ணப்பதாரர்களின் தொழில் திட்டங்களையும் இவை சரிபார்க்கின்றன. 1980–81 ஆம் ஆண்டு கனிப் பொருள் வருவாய் ரூபாய் 411.48 இலட்சமாகும். இவற்றில் ரூபாய் 238.58 இலட்சம் சேலத்திலுள்ள அரசு சுரங்கத்தில் '' மாக்னசைட் '' விற்பனையிலிருந்து பெறப்பட்டதாகும். எஞ்சியுள்ள தொகை உரிமை ஊதியம் மற்றும் இதர கனிப் பொருள் வரிகள் மூலம் வசூலிக்கப்பட்டதாகும்.

மாநிலத்தின் கனிப் பொருள் நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதற்கும், மாவட்டங்களில் கனிப்பொருள் நிர்வாகத்தினை சீராக்குவதற்கும் தனியாக ஒரு புவியியல் மற்றும் சுரங்கவியல் இயக்குநரகத்தை அமைக்க அரசு கருதியுள்ளது. தொழில் நுட்ப உதவியளித்தும் தொழில் முனைவர்களுக்கு உதவியளித்தும், கனிப் பொருள் அடிப்படையான தொழில்களின் வளர்ச்சிக்கு, இந்தப் புதிய இயக்குனரகம் ஒரு முக்கிய அமைப்பாகத் திகழும். சுரங்கங்களில் முறையான ஆய்வுகளை மேற்கொள்ளுதல், உற்பத்தியைக் கணித்தல், கனிப்பொருள் வருவாயை வசூலித்தல் மற்றும் கனிமப் படிவங்களை தவறுதலாக எடுப்பதால் ஏற்படுகின்ற உரிமைத் தொகை இழப்பினைத் தடுத்து உரிமைத் தொகையை வசூலித்தல், ஆகிய செயல்களில் இத்துறை தீவிரமான முறைகளைச் செயல்படுத்தும்.

சிறு தொழில் நிலையங்களுக்குரிய தொழில் தொடர்பு உதவி:

அரசு கொள்முதல் திட்டத்தில் சிறு தொழில் நிலையங்கள் பங்கு பெறும்பொருட்டு, பொருள் விற்னை வழங்கல் தலைமை இயக்குனருடன் இணைந்து அத் தொழில் நிலையங்களுக்கு உதவியளிப்பதற்காக 1972 ஆம் ஆண்டில் இயக்குனரகத்தில் தொழில் தொடர்பு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவின் நடவடிக்கை சமீபத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சமீப காலத்தில் அரசு கொள்முதல் திட்ட அடிப்படையில், பல்வேறு ஆணைகளின்படி அரசு வழங்கும் பல்வேறு சலுகைகளின் முழுப் பயனும் சிறு தொழில்களுக்குக் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுப்பதும், அரசு கொள்முதல் திட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு சிறு தொழில்களின் ''ஒரு முனைப் பதிவு'' மேற்கொள்வதிலும், இப்பிரிவு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. சிறு தொழில் நிலையங்களிடமிருந்து பெறப்படுகின்ற அரசாணைகளை மீறி நடந்ததாகப் பெறப்படும் புகார்களை, உடனுக்குடன் கொள்முதல் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து பிரச்சினைகள் தீர வழி வகுக்கப்படுகின்றது. அரசினது கொள்முதல் திட்டத்தில் இருக்கின்ற நலன்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் பொருட்டு, மாவட்ட சிறு தொழிலதிபர்கள் சங்கங்கள் மற்றும் மைய அரசின் கொள்முதல் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கிடையே, அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு இது ஒரு ஆரம்ப நிலையே ஆகும். மாநிலத்திலுள்ள சிறு தொழில் நிலையங்கள் மைய மற்றும் மாநில அரசுகளின் கொள்முதல் திட்டங்களின் பெரும்பங்கினை பெறும் பொருட்டு, இப்பிரிவு மேலும் நன்கு பயன்படுத்தப்படும்.

**தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:**

மாநிலத்தில் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மேம்பாடடையச் செய்வதிலும், குறிப்பாக கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பினைப் பெருக்குவதிலும் தொழிற் கூட்டுறவுத் துறை ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது.

நடப்பு ஆண்டில், இத்துறையில் போற்றத்தக்க அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 297 ஆக இருந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1981 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 799 ஆக உயர்ந்துள்ளது. மகளிரின் நலனுக்காக 320 சங்கங்களும், ஆதிதிராவிடர்களுக்காக 47 சங்கங்களும், பின்தங்கியவர்களுக்காக 5 சங்கங்களும் உள்ளன. கடந்த நான்காண்டுகளில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| வரிசை எண். | ஆண்டு. | தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | மகளிர் சங்கங்கள். | ஆதிதிராவிடர் சங்கங்கள். | பின்தங்கியவர்களுக்கான சங்கங்கள். | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | 1977–78 | 297 | 51 | 21 | 3 | 1,509.20 | 1,762.97 |
| 2 | 1978–79 | 389 | 72 | 23 | 5 | 1,813.70 | 2,035.33 |
| 3 | 1979–80 | 559 | 217 | 23 | 5 | 2,489.33 | 2,874.25 |
| 4 | 1980–81 | 702 | 271 | 47 | 5 | 3,377.06 | 3,748.06 |
| 5 | 1981–82 (30–9–1981 வரை) | 748 | 322 | 47 | 5 | 1,736.52 | 1,915.95 |



முக்கியமான தொழில்களின் வளர்ச்சி பற்றிய விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

**கூசடுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்:**

நீலகிரியில் 13 தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் 6,629 சிறு தேயிலைப் பயிரிடுவோர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு 13,535 ஏக்கர் நிலப்பரப்பு தேயிலைத் தோட்டம் சொந்தமாக இருக்கிறது. இச் சங்கங்கள் 39,000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை அளிக்கின்றன. தற்பொழுது தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மொத்த தேயிலையில் 9 சதவிகிதம் இந்த கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்றன.

தேயிலையின் ஏல விற்பன விலையில் அதன் விலைக் குறைவு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகிய சிக்கல்கள் 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு, கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டன. நடப்பாண்டிலும் இச்சிக்கல் எழுந்துள்ளது. சிறு தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமிழக அரசு கோயம்புத்தூர் மற்றும் கூனூரில் உள்ள விற்பனைக் கூடங்களில் விற்கப்படும் தேயிலையில் விற்பனை வரியை 5 சதவிகிதத்திலிருந்து 2½ சதவீதமாகக் குறைத்துள்ளது. மேலும் உர மானியம் வழங்குவதற்கும் தேயிலை மீதுள்ள கலால் வரியைக் குறைப்பதற்கும் இவ்வரசு மத்திய அரசைக்கேட்டுக் கொண்டது. நீலகிரியில் பகுதி IV—ன் கீழ் வருகின்ற இடங்களிலுள்ள (கூடலூர் தவிர) கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு சுங்க வரியை ரூ. 1.10 லிருந்து 0.60 பைசாவாக இந்திய அரசு குறைத்துள்ளது. பகுதி I—ல் (கூடலூர் பகுதி) உள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு, ஒரு கிலோவுக்கு ரூ. 0-40 என்ற சுங்க வரியிலும் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் டெல்லியில், தேயிலைத் தொழில் பற்றி தேசிய அளவில் நடைபெற்ற கூட்டத்தின் முடிவின்படி அத் தொழிலின் பிரச்சினைப் பற்றி விவாதிக்க சென்னையில் 26 டிசம்பர் 1981 அன்று உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தேயிலைத் தொழிலின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. தேயிலைத் தொழிலின் பிரச்சினைகளை அடிக்கடி விவாதிக்க ஒரு ஆலோசனைக் குழு அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முக்கியமாக, குன்னூர் மற்றும் கொச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற ஏலத்தில் தேயிலை விற்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கோயம்புத்தூரில் புதிய ஏல விற்பனை

நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஏலத்தில் விற்பதற்கு முன்பாக, தேயிலை தனியார் கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டன. அனைத்து கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளுக்கும் '' இன்கோசெர்வ் '' என்றழைக்கப்படுகின்ற நீலகிரி சிறு தேயிலை பயிரிடுவோர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்பது, மைய சங்கமாக உள்ளது. இச் சங்கம் அதற்குச் சொந்தமாக குன்னூரில் ரூ. 15 இலட்சம் மதிப்பில் ஒரு கிடங்கையும், கொச்சியில் ரூ. 10 இலட்சம் மதிப்பில் மற்றொரு கிடங்கையும் அமைத்து பண்டகசாலை வசதிகளை அளித்து வருகிறது.

**விற்பனை வசதி:**

தேயிலைத்தூள் மற்றும் தேயிலையை 10 கிராம், 250 கிராம், 500 கிராம் பொட்டலங்களாக அடைத்து, '' அரைக்கப்பட்ட தேயிலை'' விற்கும் பணியினை ''இன்ட்கோசெர்வ்'' மேற்கொண்டுள்ளது. ''இண்ட்கோ'' தேயிலையின் விற்பனையை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், ''சூப்பர் மார்கெட்டுகள் '', கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் யாவும் அவற்றின் தேயிலைத் தேவைகளை ''இண்ட்கோசெர்வ்;' விடமிருந்து பெறவேண்டுமென, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தியுள்ளார்.

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும், ''இண்ட்கோசெர்வ்'' என்ற மையச் சங்கத்திற்கும் 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சிறு தேயிலைப் பயிரிடுகின்ற உறுப்பினர்களுக்கு சலுகை முறையில் உரங்கள் வழங்கப்பட்டன. இந்தச் சலுகை வீதத்தின் காரணமாக ஆகும் செலவினை கல்கத்தாவிலுள்ள தேயிலை வாரியம் ஏற்றுக்கொண்டது. நீண்டகாலமாக இந்த சலுகை வீத முறை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1981–82 ஆம் ஆண்டில்தான் மலைப் பகுதி வளர்ச்சித் திடத்தின் கீழ், 25 சதவிகிதம் சலுகை விலையில் உரங்கள் வழங்கும் திட்டத்திற்கு புத்துயிரூட்டப்பட்டது.

பிரச்சினைகள் மற்றும் அவற்றின் தன்மைகளைக் கணித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்காக, கூட்டுறவுத் துறையில் சிறு தேயிலை பயிரிடுபவர்களின் கருத்தரங்கு ஒன்று 1981 ஆம் ஆண்டு சூன் திங்களில் நடத்தப்பட்டது. அக்கருத்தரங்கில் உருவான குறிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது தேயிலை விற்பனை நிலவரத்தில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தேயிலைத் தொழில் முன்னேற்றமடைந்து, இதுவரையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை களைய



முடியும் என்ற நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேயிலைக்கென அமைந்திருக்கின்ற சுங்க வரி, விற்பனை வரி போன்றவற்றிலுள்ள சலுகைகள் தேயிலைத் தொழிலை முன்னேற்றப்பாதையில் நடத்திச் செல்லும்.

தயாரித்து முடிக்கப்பட்ட தேயிலையை ஏலத்தில் விற்க வேண்டும் ; எனவே அதனை அனுப்புவதற்கு, தேயிலைத் தொழிற்சாலைக்கு பெட்டிகள் தேவைப்படுகின்றன. இவை தனியாரிடமிருந்து வாங்கப்படுகின்றன. இவற்றைப் பெறுவதில் சிரமங்கள் உள்ளன. இவற்றின் விலையும், தரமும், அவ்வப்போது மாறுபடுகின்றன. சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், ஊகவசமுள்ள சந்தை வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், நியாயமான விலையில் உரிய நேரத்தில் பெட்டிகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு ''ஃபிளைவுட்-வெனியர்ஸ்'' தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றினை நீலகிரி மாவட்டத்தில் அமைப்பதற்காக, பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை, ஓரிரண்டு ஆண்டுகளில் உற்பத்தியைத் துவக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தீக்குச்சி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் :**

1963 ஆம் ஆண்டில், முதலாவதாக தீக்குச்சி தொழிற் கூட்டுறவு பணிச் சங்கம் அமைக்கப்பட்டது. 1976–77 ஆம் ஆண்டு இறுதியில் இதுபோன்ற 11 சங்கங்கள் இருந்தன. இச் சங்கங்கள் இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் செயல்பட்டு வந்தன.

கையினால் தயாரிக்கின்ற தீக்குச்சி தொழிலானது, அதிக வேலை வாய்ப்பினை அளிக்கவல்லதாயிருப்பதால், மாநிலத்தில் இத் தொழில்கள் இல்லாத பகுதிகளில் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக, இவ்வகைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்தது. இதன் பயனாக, 30—9—1981 வரை மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், 100 தொழிற் கூட்டுறவு தீக்குச்சி பணிச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இவற்றின் செயலாக்கம் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| வரிசை எண் மற்றும் விவரங்கள். | 1976–77 வரை. | 31-3-1981 | —30-9-1981 (அரையாண்டு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 தீப்பெட்டி பணிச் சங்கங்களின் எண்ணிக்கை. | 11 | 85 | 100 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2 உறுப்பினர் தீப்பெட்டி நிலையங்கள். | 847 | 5,354 | 6,953 |
| | (ரூ. இலட்சத்தில்.) | | |
| 3 (அ) உறுப்பினர்களின் பங்கு மூலதனம். | 32.28 | 152 | 196 |
| (ஆ) அரசு மூலதனப் பங்கு. | 2.75 | 11.25 | 11.25 |
| 4 தமிழ்நாடு மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கியினால் வழங்கப்பட்ட கடனுதவி. | 38.79 | 208 | 262 |
| 5 தீப்பெட்டிகளின் உற்பத்தி மதிப்பு. | 243.50 | 1,376 | 689 |
| 6 தீப்பெட்டிகளின் விற்பனை மதிப்பு. | 263 | 1,541 | 735 |
| 7 வேலை வாய்ப்பு .. | 16,000 | 55,000 | 1,50,000 |

மேற்கண்ட விவரங்களிலிருந்து, கடந்த நான்காண்டுகளில், தொழிற் கூட்டுறவுகளின் கீழுள்ள கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டித் தொழிலின் வளர்ச்சியானது குறிப்பிடத்தக்கதாக உள்ளது என்பதனை அறியலாம். கூட்டுறவின் கீழ் வருகின்ற தீப்பெட்டி குடிசைத் தொழிற் சாலைகளுக்கு இந்திய அரசு வழங்கிய சுங்கவரிச் சலுகையின் காரணமாக, அத்தொழிற் சாலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளன. பல்வேறு வகைப்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்குரிய சுங்கவரி அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும் தீப்பெட்டி தொழிற்சாலையின் வகை. (1) | ஒரு ''குரோசுக் குரிய'' பழைய சுங்க வரி வீதம். (2) | ஒரு ''குரோசுக் குரிய'' புதிய சுங்க வரி வீதம். (3) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 இயந்திர அடிப்படையில் அமைந்த தொழிற்சாலை. | 4.60 | 7.20 |
| 2 இயந்திரமல்லாத நடுத்தர துறையிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலை. | 4.30 | 4.50 |
| 3 கூட்டுறவு மற்றும் கதர் கிராமத் தொழில் குழுவின் கீழுள்ள குடிசைத் தொழில்கள். | 3.20 | 1.60 |



இத் தொழிலின் முக்கிய அம்சம் யாதெனில், தீப்பெட்டியின் மேல் பெட்டி, அடிப்பெட்டி செய்தல் மற்றும் தீக்குச்சி சிம்பு அடுக்குதல் ஆகிய வேலைகளை குழந்தைகளாலும், முதியவர்களாலும் வீட்டிற்குள்ளேயே செய்ய முடியும் என்பதாகும். கிராமங்களில், அதிக அளவில் மகளிர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தீப்பெட்டி பணிச் சங்கங்களுக்கு அரசினது உதவி :

1. ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 25,000 பங்கு மூலதனமாக வழங்குகிறது.

2. ஒவ்வொரு சங்கத்திற்கும், உறுப்பினர்கள் பங்கு மூலதனம் செலுத்துவதற்கு ரூ. 2,000 மூலதனக் கடனாக வழங்குகிறது.

3. முதல் மூன்றாண்டுகளுக்கு இலவசமாக பணியாளர்களை வழங்குகிறது. அதற்கடுத்துள்ள மூன்றாண்டுகளுக்கு அப்பணியாளர்களின் சம்பளத்தில் முறையே 75 சதவீதம், 50 சதவீதம், 25 சதவீதத் தொகைகளை அரசு வழங்குகிறது.

இதர நிறுவன உதவிகள்:

1. நடைமுறை மூலதனத்திற்கு 4 சதவீதம் வட்டி சலுகைத் தொகையை கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் வழங்குகிறது.

2. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தீப்பெட்டி தொழிற்சாலைகளை அமைப்பதற்கு தொழிற்கூடங்களை வழங்குகிறது.

3. கருவிகள் மற்றும் சாதனங்களை வாங்குவதற்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடன் வழங்குகிறது.

4. தமிழ் நாடு மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கி, நடைமுறை மூலதனக் கடன் கொடுக்கிறது.

தீப்பெட்டி தயாரிப்பதற்காக, உறுப்பினர் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள் அனைத்தையும், இந்த தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு பணிச் சங்கங்கள் கொள்முதல் செய்து நியாய விலையில் வழங்குகின்றன. இச் சங்கங்கள் சுங்க வரியைச் செலுத்தி, உறுப்பினர் தொழிற்சாலைகளின் தீப்பெட்டிகளை விற்பனைக்காக எடுத்து கொள்ளுகின்றன.

ஏற்கனவே உள்ள தொழிற் கூட்டுறவு தீப்பெட்டிப் பணிச் சங்கங்களில், சிவகாசியில் ஆதிதிராவிடர்களுக்கென்றே ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 100 குடும்பங்களுக்கு உதவியளிக்கிறது. 1981–82 ஆம் ஆண்டில் ஐந்து தொழிற் கூட்டுறவு தீப்பெட்டி பணிச் சங்கங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 300 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவியளிக்கும் வகையில், மூன்று சங்கங்கள் பதிவு செய்யப்படவிருக்கின்றன.

II தீப்பெட்டி பணியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:

1976–77 ஆம் ஆண்டு வரை, மாநிலத்தில் 25 தீப்பெட்டி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. ஒவ்வொரு சங்கமும் 20 பேருக்கு வேலையளித்து ஏழ்மையான மக்களுக்கு உதவி புரிய வேண்டுமென்ற நோக்கத்துடன், 1977–78 ஆம் ஆண்டு முதல் அதிக அளவில் இச்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 31—3—1981 இறுதியில் 335 சங்கங்கள் பதிவு செய்யப்புட்டிருந்தன. மகளிர் பலர் இச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 30—9—1981 இல் இச் சங்கங்களின் எண்ணிக்கை 359 ஆகும். 1981–82 ஆம் ஆண்டில் இருபது தீப்பெட்டி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இவற்றில், 15 சங்கங்கள் ஆதிதிராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

தீப்பெட்டித் தொழிலுடன் இணைந்த இதர திட்டங்கள்:

(அ) தொழிற் கூட்டுறவின் கீழ், தீப்பெட்டிக்கு வேண்டிய முகப்பு சீட்டுகளை அச்சிடுவதற்கு, ஒரு அச்சுக்கூடம் சிவகாசியில் இயங்கி வருகிறது. இந்த கூட்டுறவு அச்சகம், ஆண்டொன்றுக்கு ரூ. 50.00 இலட்சம் மதிப்புள்ள முகப்பு சீட்டுகளை



அச்சிடுகிறது. மேலும் ஒரு அச்சகம் கோவில்பட்டியில்
அமைப்பதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவிரைவில் முகப்பு
சீட்டுகளை அச்சிடத் துவங்குமென எதிர்பார்க்கப்பட்டுகிறது.

(ஆ) 1981–82 ஆம் ஆண்டில் தீப்பெட்டி தயாரிப்பதற்குத்
தேவையான ''பொட்டாசியம் குளோரேட்' தயாரிப்பதற்காக
ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்கு அரசு
ஒப்புதலளித்தது. இச்சங்கம், குன்றக்குடியில், பதிவு செய்யப்
பட்டுள்ளது. ரூ. 35 இலட்சம் செலவில் அமைக்கப்பட விருக்
கின்ற இந்த தொழிற் கூட்டுறவுச் சங்கம், அடுத்த ஒரு ஆண்டில்
உற்பத்தியைத் துவங்குமெனவும், நாளொன்றுக்கு இது ஒரு
''மெட்ரிக் டன்'' ''பொட்டாசியம் குளோரேட்'' தயாரிக்கு
மெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை மற்றும்
கோயம்புத்தூர் மாவட்டங்களில் தீக்குச்சி சிம்புகள் தயாரிக்கும்
5 தொழிற்சாலைகளை அமைப்பதற்கு, சாத்தூரிலுள்ள தீப்
பெட்டி கூட்டுறவு இணையத்திற்கு அரசு அனுமதி வழங்கி
யுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் வைப்பார் என்னுமிடத்தில்,
ரூ. 5.00 இலட்சம் செலவில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்
பட்டது. இது 20-1-1982 முதல் செயல்படத்துவங்கியுள்ளது.
தமிழ்நாடு தீப்பெட்டி பணிச் சங்கங்களுக்குத் தேவை
யான தீக்குச்சி சிம்புகளின் ஒரு பகுதியை, இத் தொழிற்சாலை
தயாரிக்கும் அரசின் கீழுள்ள வனப் பகுதியில் கிடைக்கின்ற
மென்மையான மரங்களை, சாத்தூரிலுள்ள தீப்பெட்டி கூட்டுறவு
இணையத்தால் அமைக்கப்பட்ட தீக்குச்சி சிம்பு தொழிற்சாலை
களுக்கு வழங்க, அரசு ஆணையிட்டுள்ளது.

(ஈ) சேவைச் சங்கங்களின் கீழுள்ள தீப்பெட்டி தொழிற்
சாலைகளுக்குத் தேவையான நீலக் காகிதம் தயாரிப்பதற்கு,
ரூ. 125 இலட்சம் மதிப்பில் சின்னஞ்சிறு காகிதத் தொழிற்சாலை
ஒன்றை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்
தொழிற்சாலையை, தொழிற் கூட்டுறவுத் துறையில் விரைவில்
அமைக்கப்படும்.

1982–83 ஆம் ஆண்டுக்குரிய திட்டங்கள் :

மாநில அரசின் தீவிர உதவியினால், எப்படி வேலை வாய்ப்பை
மட்டுமே முக்கியமாகக் கொண்ட கிராமத் தொழில்கள் குறுகிய
காலத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றமடைய முடிந்
தது என்பதனை, மேலே உள்ள விவரங்கள் தெளிவாக்குகின்றன.
தீப்பெட்டித் தொழிற்சாலைகளே இல்லாத புதிய பகுதிகளில்
இத்தொழிலில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியேற்பட்டிருப்பது
மேலும் சிறப்பு வாய்ந்த அம்சமாகும்.

ஐந்து தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கங்களும், 20 தீப்பெட்டிப் பணியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் அமைப்பதற்குரிய கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இச்சங்கங்களை அமைப்பதன் மூலம், மேலும் 10,000 பேருக்குக் கூடுதலாக வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

### கயிறு தொழில்.

உலகிலேயே தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. மேலும் ஹெக்டேருக்கு அதிக அளவில் தென்னை உற்பத்தி செய்கின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பழுப்பு நிற கயிற்றினை நம்பியே கயிறு தொழில் உள்ளது. தற்போது 231 தென்னை நார் பிரித்தெடுக்கும் நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இதுவரை உற்பத்தியில் ஈடுபடாத சுருள்நார், கயிறு, பாய் வகைகள், ரப்பர் கலந்த கயிறு வகைகள் போன்ற இனங்களில், இனி கயிறு தொழிலின் உற்பத்தி மற்றும் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும்.

1979–80-ல் 10 கயிறு கூட்டுறவு சங்கங்களே இருந்த தமிழ்நாட்டில் தற்போது அது பெருகி 42 சங்கங்கள் என்ற அளவிற்கு வளர்ந்துள்ளது. பல இடங்களில் தரமான இருபிரி கயிறு உற்பத்தி செய்ய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 500 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

உற்பத்தி செய்யப்பட்ட பழுப்பு நிற நார், அங்காடியில் தேங்கிடாமல், உடனுக்குடன் பயன்படுத்திட 1982–83 ஆம் ஆண்டு திட்டப்பணியில் சுமார் 600 மி. டன் பழுப்பு நாரினை பயன்படுத்தும் திறனுள்ள இரண்டு சுருள் நார் கயிறு சங்கங்களை ஒவ்வொன்றும் ரூ. 8.57 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளது. மேலும் மூடப்பட்டுள்ள ஈத்தாமொழி கயிறு பயிற்சி பள்ளியை புதுப்பிக்கும் பொருட்டும், பயிற்சியாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் அங்கு ஒரு கயிறு பாய் வகைகள் தயாரிக்கும் சங்கம் ரூ. 5.40 இலட்சம் செலவில் அமைத்திட உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் பழுப்பு நிற நார் முன்னேற்றத்திற்காக கயிறு வாரியம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தினை துவக்கிட முன்வந்துள்ளது. மேற்கண்ட நிலையம், ஏற்படுத்தப்பட்ட பிறகு மேலும் 4 கிளை நிலையங்கள், மாநிலத்தின் பிற பகுதிகளி



அமைக்கப்பட்டு கயிறுபாய், சுருள்நார், ரப்பர் கயிறு தயாரிப்பு போன்ற சொகுசு பொருட்கள் தயாரிப்பில் பயிற்சி அளிக்கப்படும்.

1982–83 திட்டப்பணியில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டு சுருள்நார் கயிறு சங்கங்கள் மற்றும் ஒரு கயிறு பாய்கள் தயாரிக்கும் சங்கத்தின் மூலமாக கூடுதலாக 183 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

### சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் தொழிற் கூட்டுறவு பணிச் சங்கங்கள்

தமிழ்நாட்டில், சுமார் 25,000 கிராம மக்களுக்கு வேலை யளிக்கக் கூடிய மற்றொரு தொழில், இந்த சவ்வரிசித் தொழி லாகும். தமிழ்நாட்டில் 50,000 ''ஹெக்டேர்'' நிலப்பரப்பில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படுகிறது. இதில், 28,000 ''ஹெக்டேர்'' நிலங்கள், சேலம், தர்மபுரி மாவட்டங்களி லுள்ளன. இம்மாவட்டங்களிலுள்ள, சிறு அளவில் அமைந் துள்ள சவ்வரிசி மற்றும் மாவு தயாரிப்பாளர்களிடையே இப் பொருள்களை இருப்பு வைத்துக்கொள்வதற்கு போதுமான வசதியின்மையால் இந்தப் பொருள்களை சந்தையில் கிடைத்த விலைக்கு உடனுக்குடன் விற்க வேண்டிய நிலை உள்ளது. இதன் காரணமாக, உற்பத்தியாளர்கள், இப்பொருள்களுக்குறிய நல்ல விலையினைப் பெற இயலுவதில்லை. மரவள்ளிக் கிழங்கு பயிரிடுகின்ற நிலப்பரப்பை அதிகமாக்கும் பொருட்டு, உள்ளூர் விவசாயிகளுக்கு, போதுமான சலுகைகள் இல்லை என்பதாலும், சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களைத் தயாரிப்பவர்களுக்குத் தரக்கூடிய விலை நிரந்தரமில்லாதிருத்தலாலும், அவர்கள் தங்கள் உற்பத்தியை விற்பதற்கு சில வியாபாரிகளை மட்டுமே நம்பியுள்ளனர்.

மரவள்ளிக் கிழங்குப் பொருள்களுக்கு அதிக விலை அளித்து, பயிரிடுகின்ற நிலப்பரப்பை அதிகமாக்கும் நோக்கத்துடன், 1981–82 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்களின் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கம் போன்ற சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற சங்கம் ஒன்றை, 1982–83 ஆம் ஆண்டில், மாவுப் பொருள் தயாரிப்பாளர்களுக்காக தர்மபுரி மாவட்டத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பயிற்சி வசதிகள் :** கிண்டியிலுள்ள தொழில் நுட்ப நிலையம், இதுவரையில், இயந்திரங்களை இயக்குதல், அச்சு வார்த்தல், கருவிகள் செய்தல், உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப் படுத்துதல் போன்ற ''சான்றிதழ் பாடமுறைகளில்''

பயிற்சி அளித்து வந்தது. 1981–82 ஆம் ஆண்டில் பிரிவு II திட்டங்களின்கீழ் இப்பாட முறைகள், ''கருவி பொறியியல் தகுதிப் பட்டய பாட முறையாக,'' மாற்றப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் இப்பாடமுறை நவம்பர் 1981–லிருந்து துவக்கப் பட்டது. இதனோடு, மின்னணுக் கருவியில் மற்றும் குளிர் சாதனப் பொறியியல் ''சான்றிதழ் பாட முறை'' வகுப்புக்களை மாற்றுவதற்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது. இந்தத் தகுதிப் பட்டயப் பாட முறைகள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். மேற்கண்ட பாட முறைகள் தவிர, அச்சு வார்த்தல் மற்றும் கருவிகள் செய்வதில் தகுதிப்பட்டய மேற்படிப்பும் இரப்பர் தொழில் நுட்பவியலில் சான்றிதழ் வகுப்பும் இந்த நிலையத்தில் நடத்தப்படுகின்றன.

கருவிகள், அச்சு வடிவமைப்பு பயிற்சி நிலையம், திண்டுக்கல்—

கருவிகள் அச்சு வடிவமைப்பதில் ஏற்கெனவே இருந்து வந்த ''சான்றிதழ் பாட முறைகள்'', 1981–82ஆம் ஆண்டு பிரிவு II திட்டத்தின்கீழ், ''கருவி—பொறியியல் தகுதிப் பட்டயப் பாட முறையாக'' மாற்றப்பட்டுள்ளது. இந்தப்பாட முறை, அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

**கிராமப் பணி ஆதார நிலையங்கள்—**

அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசியிலுள்ள கிராமப்பணி ஆதார நிலையங்களில், பொருத்துதல், கடைசல் பிடித்தல் மற்றும் பற்ற வைத்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

முடிவுரை.—தமிழகத்தை தொழில்மயமாக்கும் பயற்சியில் சிறு தொழில் வளர்ச்சிக்கு என அமைந்த எந்தத் திட்டமும் இது வரையில், வளர்ச்சி குன்றிய பகுதிகளில் சிறு தொழில் சீராக வளர்வதற்கு வழி செய்தாக வேண்டும். இந்தச் செயலை நிறை வேற்றும் பொருட்டு, ''வளர்ச்சி மையங்கள்'' என்ற கொள்கைக் கோட்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தீவிர அபிவிருத்திக்கு வேண்டிய வளங்களைக் கொண்டுள்ள பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கெல்லாம் அடிப் படை வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படும். இந்த அடிப் படையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளில் பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக இந்திய அரசு அறிவித்துள்ள தொழில் மைய பகுதி'' (Nucleus Complex Concept) கோட்பாட்டினை, மாநில அரசு வரவேற்றிருக்கிறது. தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை, இதுபோன்ற தொழில் மையப் பகுதிகளை அமைப்பதற்கு புதுக்கோட்டையும், திண்டுக்கல்லும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் உதவியுடன் இத்திட்டங்களைச் செயலாக்க வேண்டிய விவரமான நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.



மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்ற அறிக்கை.

| (1) | 1978–79. (2) | 1979–80. (3) | 1980–81. (4) | 1981–82. 4/81 முதல் 12/81 முடிய. (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| 1. வழங்கப்பட்ட நிரந்தரமான சிறு தொழில்கள் சான்றிதழ்கள். | 1,560 | 5,632 | 6,692 | 4,282 | 18,166 |
| 2. வங்கியின் மூலம் நிதியுதவி சிறு தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. | 1,709 | 3,486 | 2,713 | 1,900 | 8,808 |
| ரூபாய் இலட்சத்தில் .. | 146.187 | 482.54 | 770.36* | 477.01* | 1,876.78 |
| கைவினைஞர்களுக்கு நிதி யுதவி எண்ணிக்கை .. | 2,757 | 5,095 | .. | .. | 7.852 |
| ரூபாய் இலட்சத்தில் .. | 14.72 | 84.23 | .. | .. | 98.95 |
| 3. வங்கிகளால் நேரடியாகவும் மாவட்ட தொழில் மையங்களின் பரிந்துரைகளின் பேரிலும் (கைவினைஞர்கள் உட்பட) வழங்கப்பட்ட நிதியுதவி எண்ணிக்கை .. | .. | .. | 13,668 | 5,596 | 19,264 |
| ரூபாய் இலட்சத்தில் .. | .. | .. | 1,253.10 | 601.05 | 1,854.15 |
| 4. வேலை வாய்ப்பு .. .. | 18,428 | 67,584 | 88,477 | 57,550 | 2,320,39 |

* கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்ட உதவியும் உள்ளிட்டதாகும்.

மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்ற அறிக்கை.

ஏப்ரல் 1981—டிசம்பர் 1981.

| மாவட்ட தொழில் மையங்கள். | வழங்கப்பட்ட சிறு தொழில் சான்றிதழ்கள். நிரந்தர மானவை. | வழங்கப்பட்ட சிறு தொழில் சான்றிதழ்கள். தற்காலிக மானவை. | வேலை வாய்ப்பு. | உற்பத்தியை துவங்கிய கைவினைத் தொழில்கள் மற்றும் கைத்திறத் தொழில்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. செங்கற்பட்டு .. .. | 503 | 1,153 | 5,400 | 156 |
| 2. தருமபுரி .. .. .. | 225 | 685 | 2,700 | 244 |
| 3. கன்னியாகுமரி .. .. | 68 | 240 | 850 | 345 |
| 4. புதுக்கோட்டை .. .. | 166 | 593 | 2,000 | 209 |
| 5. இராமநாதபுரம் .. .. | 361 | 845 | 4,400 | 314 |
| 6. சேலம் .. .. .. | 776 | 1,398 | 9,300 | 145 |
| 7. தென் ஆற்காடு .. .. | 218 | 1,018 | 2,600 | 211 |
| 8. திருநெல்வேலி .. .. | 220 | 692 | 2,500 | .. |
| 9. கோயம்புத்தூர் .. | 659 | 2,039 | 7,900 | 244 |
| 10. வட ஆற்காடு .. .. | 239 | 1,052 | 2,800 | 577 |
| 11. மதுரை .. .. .. | 228 | 1,145 | 2,700 | 477 |
| 12. பெரியார் .. .. .. | 224 | 493 | 2,600 | 116 |
| 13. தஞ்சாவூர் .. .. .. | 132 | 516 | 1,600 | 60 |
| 14. திருச்சிராப்பள்ளி .. .. | 263 | 931 | 3,000 | 164 |
| மொத்தம் .. | 4,282 | 12,230 | 50,350 | 3,262 |



மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்ற அறிக்கை—தொடர்ச்சி.

ஏப்ரல் 1981—டிசம்பர் 1981—தொடர்ச்சி.

| வட்ட தொழில் மையங்கள். | வேலை வாய்ப்பு. | எண்ணிக்கை. | மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக வங்கி தொகை. | தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தேசிய சிறு தொழில் நிறுவனம், கதர் வாரியம், சிட்கோ போன்றவை மூலம் நிதியுதவி. எண்ணிக்கை. | தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தேசிய சிறு தொழில் நிறுவனம், கதர் வாரியம், சிட்கோ போன்றவை மூலம் நிதியுதவி. தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) (ரூபாய். இலட்சத்தில) | (9) | (10) (ரூபாய் இலட்சத்தில்). |
| 1. செங்கற்பட்டு .. .. | 584 | 279 | 82.34 | 1 | 0.44 |
| 2. தர்மபுரி .. .. | 732 | 39 | 16.11 | 231 | 39.45 |
| 3. கன்னியாகுமரி .. .. | 428 | 106 | 12.93 | 283 | 8.33 |
| 4. புதுக்கோட்டை .. .. | 282 | 34 | 16.35 | 14 | 0.97 |
| 5. இராமநாதபுரம் .. .. | 409 | 185 | 51.26 | 378 | 123.43 |
| 6. சேலம் .. .. | 579 | 124 | 86.77 | 274 | 33.58 |
| 7. தென் ஆற்காடு .. .. | 422 | 5 | 1.19 | 606 | 35.34 |
| 8. திருநெல்வேலி .. .. | .. | 325 | 41.84 | 72 | 7.89 |
| 9. கோயம்புத்தூர் .. .. | 372 | 170 | 60.54 | 1,826 | 138.56 |
| 10. வட ஆற்காடு .. .. | 2,023 | 222 | 35.23 | 1,322 | 80.88 |
| 11. மதுரை .. .. | 507 | 63 | 22.81 | 57 | 26.55 |
| 12. பெரியார் .. .. | 276 | 163 | 19.82 | 41 | 13·78 |
| 13. தஞ்சாவூர் .. .. | 258 | 55 | 13.58 | 190 | 33·19 |
| 14. திருச்சிராப்பள்ளி .. .. | 328 | 130 | 16.23 | 301 | 58·66 |
| மொத்தம் .. | 7,200 | 1,900 | 477.01 | 5,596 | 601.05 |

பட்டு வளர்ச்சி இயக்குனரகம்.

வேலை வாய்ப்பினை அதிக அளவில் பெருக்குவது அரசின் கொள்கைகளில் ஒன்றாகும். அந்த வகையில் அதிக வேலை வாய்ப்பு திறனுள்ள கிராமத் தொழிலாக சிறப்புறும் பட்டுத் தொழிலை கடந்த நான்கு ஆண்டுகளாக அரசு கிராமப்புற மேம் பாட்டிற்காக அமல்படுத்துகிறது. அரசின் சீரிய முயற்சி களினால் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படும் பரப்பளவு 49,927 ஏக்கர் அளவிற்கு கடந்த டிசம்பர் 1981-ல் அதிகப்படுத் தப்பட்டுள்ளது.

மானிய உதவிகள்.—

நடப்பு ஆண்டில் கூடுதலாக 7,058 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின்மூலம் 2,935 விவசாயிகளுக்கு மூன்று மாதத்திற்கு பயிற்சியும், பயிற்சி காலத்தில் மாதம் ரூ. 150 பயிற்சி உதவித் தொகையும் அளிக்கப்படும். மேலும் பயிற்சி முடிந்தபின் ரூ. 300 மதிப்புள்ள புழு வளர்ப்பு உபகரணங்களில் 50 சதவீதம் மானியமும் வழங்கப்படும். மேற்கண்ட பயிற்சி திட்டமட்டுமின்றி விவசாயிகளுக்கு நடப்பு ஆண்டில் புழு வளர்ப்பு கருவிகள் விலையில் 25 சதவீதம் மானியம் ரூ. 375, புழு வளர்ப்பு மனை கட்ட 25 சதவீதம் மானிய தொகையான ரூ. 750-ம் வழங்கப்படுகின்றது. தேசியமயமாக்கப்பட்ட வங்கி மற்றும் நிதி உதவி கழகங்களில் தேவையான கடன் பெற, பட்டு வளர்ச் சித் துறை தீவிர நடவடிக்கை எடுக்கிறது.

அடிப்படை வசதிகள்.—அரசின் தீவிர நடவடிக்கைகளின் பய னால் பட்டுக்கூடு அங்காடிகள், பட்டுப்புழு வளர்ப்பு மையங் கள் வித்தகப் பண்ணைகள், மாவட்ட பட்டு வளர்ப்பு மையங்கள் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தற்போது 150 லட்சம் நோயற்ற பட்டு முட்டைகளை உற்பத்தி செய்ய வழி செய்யப்பட்டுள்ளது. பட்டு நூற்புத்திறனை அதி கரிக்க வேண்டி, ரூ. 5.50 லட்சம் செலவில் (ஒரு பேசினுக்கு 50 சதவீதம் மான்யம் ரூ. 1,100 என்ற அளவில்) 500 பேசின் களை நிறுவ அரசு அனுமதி வழங்கி உள்ளது. கூட்டுறவுத துறையில், குக்கிராமங்களில் உள்ள விவசாயிகள் பயன் பெறத் தக்கவகையில் விவசாயிகளை அங்கத்தினர்களாகக் கொண்ட 26 பட்டு நூற்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி சங் கத்தின் அங்கத்தினர்கள் ஒரு நாளைக்கு 400 முதல் 500 கிராம் பட்டினை நூற்கும் திறன் பெற்றவர்களாக உள்ளனர்.

நடப்பு ஆண்டில் முதல் முறையாக பட்டுப்புழு வளர்ப்பு வசதிகளை விவசாயிகளுக்கு வழங்கிட, 25 கிராமப் பட்டுப் புழு வளர்ப்பு நிலையங்கள் பல்வேறு மாவட்டங்களில் ஏற்படுத்தப்



பட்டுள்ளன. மேலும் நியாயமான விலையில், தங்களின் பட்டுக் கூடுகளை, விவசாயிகள் விற்பதற்கு வசதியாக, மேலும் இரண்டு பட்டுக்கூடு அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஈரிபட்டுப் புழு வளர்ச்சி : ஆத்தூரில் ஈரி பட்டுப் புழு வளர்ச்சிக்காக ஒரு ஈரி பட்டுப் புழு முன்மாதிரி நிலையம் அமைக் கப்பட்டு, ஈரி பட்டுப் புழு வளர்த்தலில் 200 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். மேற்கண்ட நிலையத்தினை அமைக்கும் பொருட்டு, பயிற்சி, மானியம் போன்றவற்றிற்காக ரூ. 6,35 லட்சம் 1982–83-ல் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி:—இந்தாண்டு, பைவோல்டின் இன பட்டுப் புழு வளர்ப்பில் தனிக் கவனம் செலுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன் பொருட்டு பட்டு வளர்ச்சித் துறையின் மூத்த இரண்டு அலுவலர்கள், ஜப்பான் நாட்டில் பட்டு வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள புதிய முறைகளை அறிந்து செயல்படுத்த அனுப்பப்பட்டனர். பட்டு வளர்ச்சியில் திறன்பெற்ற விஞ்ஞானியின் பரிந்துரையின் பேரில், சோதனை பட்டு வளர்ப்பு முறைகள் கடைபிடிக்கப் பட்டுள்ளன. அதன் பயனாக, வடாற்காடு, சேலம், கோயம் புத்தூர், தர்மபுரி மற்றும் பெரியார் மாவட்டங்களில் பைவோல் டின் இன பட்டு வளர்ப்பினை 500 பட்டு விவசாயிகள் நடை முறைப்படுத்துகின்றனர்.

தடுப்பு நடவடிக்கை.—தமிழ்நாட்டின் சில மாவட்டங்களில் காணப்படும் ஊசி பூச்சிகளின் (Usi fly) விளைவாக பட்டு வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க திட்டமிடப்பட்டு மேற்படி பூச்சியினை ஒழித்திட நைலான் வலைகளை வாங்கிட, தமிழக அரசின் பங்காக மானியம் வழங்க ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு பயிற்சிகள்.—1981–82ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 40 பட்டதாரிகளுக்கு பட்டு வளர்த்தலில் 11 மாத பயிற்சி அளிக்கவும், மாதமொன்றுக்கு பயிற்சி உதவித் தொகை ரூ. 150 வழங்கிடவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

பட்டுத் தொழிலின் எதிர்காலம்.—தீவிரமாக அமல்படுத்தப் படும் பட்டு வளர்ச்சிப் பணிகள் வருங்காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்,

எம் 5 வகை முசுக் கொட்டைச் செடியினை எல்லா மாவட்டங் களிலும் விரிவுபடுத்த 1982–83ஆம் ஆண்டிலும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டில் மேலும் கூடுதலாக 8,000 ஏக்கர் நிலங்களில் முசுக்கொட்டைப் பயிர் சாகுபடி செய்யவும், இச்

செடியினைப் பயிர் செய்வதற்கான உதவித் தொகை, விவசாயி களின் பயிற்சி திட்டம், புழு வளர்ப்பு உபகரணங்கள் வாங்க மற்றும் புழு வளர்ப்புக் கொட்டைகள் கட்ட முதலான வற்றிற்கு இதுகாறும் வழங்க:படும் உதவித் தொகை ஆகிய வற்றை தொடர்ந்து வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுளது. இதற் காக ரூ. 90 லட்சங்கள் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 5.5 லட்சங்கள் செலவில், 500 குடிசைப் பட்டு நூற்பகங்கள் நிறுவவும், 40 கிராம மட்ட இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங் களை பல்வேறு மாவட்டங்களில் ஆரம்பிக்கவும், திண்டுக்கல்லில் மாவட்ட பட்டு வளர்ப்பு மையம் ஒன்றினை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயிற்சிக்கென கூடுத லாக இரண்டு செயல் விளக்க மற்றும் பயிற்சி மையங்களைத் துவக்கவும், பைவோல்டின் இப் பட்டுப் புழு வளர்ப்புக்கென தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு, ஓர் பைவோல்டின் வித்தகப்பண்ணை ஆரம்பிக்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மேற்கண்ட பல்வேறு திட்டங்களின் வாயிலாக, 1982–83ஆம் ஆண்டின் இறுதியில் தமிழ்நாட்டில் முசுக்கொட்டை செடி சாகுபடி பரப்பு 56,000 ஏக்கர் அளவிற்கு அதிகரிக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. அதேபோன்று பட்டு உற்பத்தி 250 டன்னுக்கு உயரும் எனவும் கூடுதலாக 40,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமெனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி இணையகம், சென்னை-6.

தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி இணையகம் அரசின் தொழில் துறையினரால் நடத்தப்பட்டு வந்த விற்பனை நிலையங்களின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மற்றும் சென்னை மாவட்ட கைத்திறன் கூட்டுறவு சங்கத்தின் வாணிக விற்பனைக் பொருட்களையும் ஏற்றுக் கொண்டு அரசுக்கு சொந்தமான பொது நிறுவனமாக 1973ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நாள் முதல் இயங்கி வருகிறது. தொழிற் துறையினரால் நடத்தப்பட்டு வந்த பயிற்சி நிலையங்களையும் மற்றும் உற்பத்தி நிலையங்களை யும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. கைத்திறன் பொருட் களுக்கென தனிப்பட்ட ஓர் இணையகத்தைத் துவக்கப்பட்டதன் குறிக்கோள் கைத்திறன் பொருட்களின் வளர்ச்சிக்குத் தேவையான வழிமுறைகளை ஆராயவும் மற்றும் கைவினைஞர்களுக்கு பல வழிகளில் உதவி புரிவதுமேயாகும்.

கைவினைஞர்கள் எதிர் நோக்கியுள்ள மிக முக்கியமான பிரச்சினை விற்பனையேயாகும். இதற்காகவே இந்நிறுவனம் மாநிலத்தின் எல்லா பகுதியிலும் மற்றும் வெளி மாநிலங்களில் மூன்று விற்பனை நிலையங்களையும் துவக்கியுள்ளது. இந்நிறு வனத்தின் முயற்சிகளினால் ஆண்டு தோறும் கைத்திறன் பொருட்



களின் விற்பனை அதிகரித்து வருகிறது. இதன்படி 1980–81-ல் ரூ. 143 லட்சமாக இருந்த விற்பனை 1981–82-ல் ரூ. 175 லட்சமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் 1981–82 ஆம் ஆணடு கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ள வாணிபத் தொகை இலக்கை எட்டிவிட முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி இந்நிறுவனம் இவ்வாண்டில் ரூ. 5 இலட்சம் இலாபம் ஈட்டும் என நம்பிக்கை கொண்டுள்ளது. இவ்விணையகம் 1982–83ஆம் ஆண்டின் வாணிபத் தொகையை ரூ. 200 இலட்சமாக அதிகரித்து அதிக லாபத்தை ஈட்ட இயலும் என நம்பிக்கை கொண்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டில் இந் நிறுவனம் புதிய விற்பனை நிலையங்கள் அல்லது கிளை விற்பனை நிலையங்களை சிதம்பரம், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடியில் துவக்கியுள்ளது. இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் இல்லாத பெரு நகரங்களிலும் விற்பனை நிலையங்களை துவக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாணிபத்தை பெருக்குவதும் இந்நிறுவனத்தின் நோக்க மாதலால் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க தனிப்பட்ட கவனம் செலுத்தி வருகிறது. 1981–82-ல் இந்நிறுவனம் மற்ற ஏற்றுமதிப் பொருட்களை தவிர சிறப்பு வாய்ந்த கோயில் இரதத்தினை கோலாலம்பூருக்கும், வியன்னாவிலுள்ள அணு சத்தி துறை அலுவலகத்தை அலங்கரிக்க இரண்டு பெரிய மர சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பலகைகள் மற்றும் கல்லினாலான எண்கரங்கள் கொண்ட ஆஞ்சநேயர் சிலையை கோலாலம்பூருக்கும் ஏற்றுமதி செய்துள்ளது. இலண்டனுக்கு பனை ஓலைப் பொருட் களும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்றுமதியை அதிகரிக்க தொடர்ந்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனம் கைவினைஞர்களிடமிருந்து நேரிடையாக கொள் முதல் செய்யும் பொருட்களைத் தவிர இதன் உற்பத்தி நிலையங் களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பொருட்களையும் தனது விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து வருகிறது. 1981–82ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட தனிப்பட்ட முயற்சிகளி னால் சென்ற கொள்கை விளக்க குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி குறியீட்டான ரூ. 50 இலட்சத்தினையும் கடந்து ரூ. 65 இலட்சத்தை எட்டக்கூடுமென எதிர் பார்க்கப்படுகிறது. 1982–83-ல் உற்பத்தியின் மதிப்பு ரூ. 70 இலட்சமாக இருக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது.

நம் முன்னோர்களால் பரம்பரையாக கட்டிக் காத்துவந்த கலைத்திறனை காப்பதை தன் முக்கிய பணியாக கொண்டுள்ள இவ்விணையகம் அறிவியல் பூர்வமான வழிகளில் பயிற்சி அளிப்ப தன் மூலம் பழைய கலையை அழியாமல் பாதுகாத்து வருகிறது.

1980–81ஆம் ஆண்டுவரை 690 நபர்களுக்கு இந்நிறுவனம் பல்வேறு கலைகளில் பயிற்சியளித்துள்ளது. 1981–82ஆம் ஆண்டில் 222 நபர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். 1982–83ஆம் ஆண்டிலும் இப்பயிற்சி தொடர்ந்து நடைபெறும். இந்நிறுவனத்தின் மூலம் பயிற்சியை முடித்த நபர்களில் சுமார் 265 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்துள்ளது.

கைவினைப் பொருட்கள் பரம்பரை பரம்பரையாக வந்த கலைத்திறனை எடுத்துக் காட்டுகிறது. இந்நிறுவனம் பயிற்சி நிலையங்களை நடத்துவதன் மூலம் இதனை அழியாமல் பாது காத்து வருகிறது. கிராம கைவினைஞர்களின் திறன்களை இந்நிறுவனத்தின் பல்வேறு விற்பனை நிலையங்கள் மூலமாக வெளிக் கொணரப்படுகின்றன. இந்நிறுவனத்தின் ஏற்றுமதி முயற்சிகளின் மூலமாக இத்திறன்களுக்கு பரந்த விளம்பரமும் வாணிபமும் கிடைக்குமென நம்பப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழகத்தின் கைவினைப் பொருட்களுக்கென தனிப் பட்ட பொருட்காட்சிகளை பெங்களூர் மற்றும் பம்பாய் போன்ற நகரங்களில் நடத்தியதன் மூலம் தமிழகத்திலுள்ள வியாபாரிகளும் மற்றும் ஏற்றுமதியாளர்களும் இக்கலைகளை அறிந்து கொள்ள வழி செய்கிறது. இம்முயற்சிகள் வெற்றியளித்துள்ளதால் மேலும் தொடரப்படும்.

கைத்திறன் பொருட்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதே இவ்வினையகத்தின் எண்ணமும் நோக்கமும் ஆகும். கைவினை ஞர்களுக்கு மூலப் பொருட்கள், எரிபொருள் எண்ணெய் போன்ற பிற பொருட்களையும் கிடைக்கச் செய்தல், மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக தேவையான நேரத்தில் கடனுதவி பெற உதவி புரிதல், பொருட்களை விற்பனை செய்ய தேவையான உதவிகள் வழங்குதல், பண்டைய கைவினைஞர்களின் திறமை களை அழியாமல் பாதுகாத்தல் போன்றவற்றால் தான் மேற் சொன்ன குறிக்கோளை அடைய முடியும். ஆகவே பயிற்சிக்கு முக்கியத்துவம் அளித்தல், விற்பனையில் உதவிபுரிதல், ஏற்று மதிக்குத் துணைபுரிதல், மூலப்பொருட்கள் வழங்க உதவி புரிதல் ஆகியவை இதன் முக்கிய எண்ணங்களாகும். 1982-83-ல் கீழ்க் கண்ட புதிய திட்டங்களை அரசு மேற்கூறிய குறிப்பிட்டுள்ள மதிப் பீட்டுச் செலவில் செயல்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. இரத்தினம் மற்றும் வைரங்கள் பட்டை தீட்டும் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி | 4.70 |
| 2. விற்பனை நிலையங்கள் புதுப்பித்தல் | 3·00 |



| | |
|---|---|
| 3. மண் மற்றும் காகிதக் கூழ் பொருட்களுக்கான பொது வசதிக் கூடம், சென்னை. | 2.50 |
| 4. மர சிற்பங்களுக்கான மூலப் பொருள் கிடங்குகள். | 1.00 |
| 5. பனை ஓலைகளுக்கு இரசாயன சாயமிடும் நிலையம், மணப்பாடு. | 0.28 |
| 6. புதிய விற்பனை நிலையங்கள் துவங்குதல் .. | 2.00 |
| 7. ஏற்றுமதி அபிவிருத்தி திட்டம் .. .. | 1.00 |

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ).

**1. தோற்றுவாய் :**

"சிட்கோ" என்று அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு தனியார் நிறுவனமாக 1970-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் நிறுவப்பட்டு பின்னர் 1971-ம் ஆண்டு ஜனவரி 20-ம் நாள் அன்று ஒரு பொது நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் தமிழகத்தில் சிறு தொழில்கள் மற்றும் சிறுசிறு தொழில் களின் வளர்ச்சியை மேம்படுத்துவதும் அதை துரிதப்படுத்துவது மாகும். இவ்விஷயத்தில் இந்நிறுவனம் சமீப காலத்தில் ஒரு சீரான முன்னேற்றம் அடைந்துள்ளது.

**2. சிட்கோவின் பணிகள் :**

சிட்கோ இப்போது மாநில அரசின் ஒரு பெரும் முகவராக, சிறு தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக கீழ்க்கண்ட பின்வரும் பணிகளை ஆற்றி வருகிறது:—

(அ) தொழிற்பேட்டைகளின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(ஆ) சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவையான இன்றி யமையா மூலப்பொருட்களை கொள்முதல் செய்து வினியோகித் தல்.

(இ) சிறு தொழில் பிரிவுகளின் உற்பத்தி பொருட்களுக்கு விற்பனை வசதி செய்து தருதல்.

(ஈ) மேலும், 15 சதவீதம் மத்திய மூலதன மானியம் மற்றும் மாநில அரசு மானியம் வழங்குதல், நலிவுற்ற சிறு தொழில்களுக்கு புன வரம்புத் தொகை உதவி, சின்னஞ்சிறு தொழில்களுக்கு துவக்கப் பணம் மற்றும் விற்பனை வரியை ஈடு செய்ய வட்டியில்லா கடன் உதவி, குறைந்தழுத்த மின்சாரத்தை உபயோகிக்கும் சிறு தொழில்களுக்கு மானியத் தொகை உதவி போன்ற ஒருமித்த திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.

3. பொருளாதாரம் :

சிட்கோவில அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் தற்போது 5 கோடிகளாகும். இதில அரசினால் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 4.55 கோடி ; ஆயினும் இந்நிறுவனத்திற்கு அரசு வழங்கி வரும் மூலதனப் பங்குத் தொகை ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் ரூபாய் 10 கோடியையும் தாண்டிவிடும் நிலை உள்ளதால், இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதன உயர்வுக்கு ஏற்ற வகையில் அதன அங்கீகரிக்கப்பட்ட மூதலனத்தை ரூபாய் 5 கோடியிலிருந்து ரூபாய் 10 கோடியாக உயர்த்துவதற்கு மாநில அரசு அனுமதியளித்துள்ளது. இதைத் தவிர, மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியில் மறுநிதி வழங்கும் திட்டத்தின் கீழும் (IDBI Refinance Scheme) பொது மக்களிடமிருந்து பெறப்படும் சேமிப்பு நிதியின் மூலமும் தனதிட்டங்கள் நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி வசதியை பெருக்கிக் கொள்கிறது.

4. தொழிற்கூட அடிப்படை வசதித் திட்டங்கள் :

(அ) தொழிற்பேட்டை மனைகளை நிர்வகித்தல் :

சிட்கோவிற்கு மாற்றப்பட்டு தமிழ் நாட்டில் பல இடங்களிலும் பரவி அமைந்துள்ள 783 தொழிற் கூடங்களாகிய 33 வழங்கப்படியான தொழிற்பேட்டைகளை சிட்கோ, தமிழக அரசின் சார்பில் அதன் முகவராக ஏற்று தொடர்ந்து நிர்வகித்து வருகிறது.

(ஆ) சீர் அமைக்கப்பட்ட மனைகள் :

கிண்டி, அம்பத்தூர், துவாகுடி, கப்பலூர் மற்றும் மேட்டூர் போன்ற இடங்களில் எல்லா அடிப்படை வசதிகளும் கொண்ட சீரமைக்கப்பட்ட மனைகளை கிடைக்க வழி செய்கிறது. புதிய தொழில்களை துரிதமாக தொடங்கும் பொருட்டு கட்டப்பட்ட மொத்தமுள்ள 991 சீர் அமைக்கப்பட்ட மனைகளில் 837 மனைகள் வழங்கப்பட்டு விட்டன. அம்மனைகளில் சட்ட



ரீதியான விதிகளுக்கேற்ப ஒவ்வொரு தனிப்பட்ட தொழில்களுக்கும் தேவையானபடி தொழில் முனைவர்கள் தொழிற்கூடங்களைக் கட்டி வருகின்றனர். இதன் மூலமாக சுமார் 46,000 முதல் 48,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி வருகிறது.

(இ) சிட்கோவின் தொழிற்பேட்டைகள் :

சிட்கோ அதன் துவக்கம் முதற்கொண்டு 1978-79 ஆம் ஆண்டு வரை சுமார் 514 தொழிற்கூடங்களை தவணை முறைத் திட்டத்தின் கீழ் அம்பத்தூர், இராணிப்பேட்டை, ஒசூர், நாமக்கல் குறிச்சி முதலான இடங்களில் கட்டி வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டு 58 தொழிற் கூடங்கள் அம்பத்தூர், இராணிப்பேட்டை, புதுக்கோட்டை முதலான இடங்களில் கட்டப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டு சுமார் 250, தொழிற் கூடங்கள் வில்லிவாக்கம், கொடுங்கையூர், ஒசூர், மறைமலை நகர், இராணிப்பேட்டை, புதுக்கோட்டை, கப்பலூர் சேலம், பரமக்குடி மற்றும் திருப்பூர் முதலான இடங்களில் கட்டப்பட்டு வழங்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டு ரூபாய் 500 இலட்சம் மொத்த முதலீட்டில் சுமார் 400 தொழிற்கூடங்களை கட்ட உத்தேசித்து அதில 300 தொழிற்கூடங்கள கட்டிமுடிக்கப் பட்டுள்ளது. மேலும் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு உதவியுடன் ஊட்டியில் இந்துஸ்தான் புகைப் பட பிலிம் நிறுவனத்திற்கு அருகில் ஒரு தொழிற்பேட்டை அமைத்து மேலும் 40 தொழிற்கூடங்கள் கட்டுவதற்கும் இந் நிறுவனம் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின கீழ் நடப் பாண்டில் 20 சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 5 இலட்சம் கூடுதல் பங்கு மூலதனத்தை மலைப்பகுதி மேம்பாடு வளர்ச்சி திட்டத்திற்காக மத்திய அரசு அளித்துள்ள நிதியிலிருந்து மாநில அரசு வழங்கியுள்ளது.

(ஈ) 1982-83 ஆம் ஆண்டு தொழிற்கூடங்கள் :

1982-83 ஆம் ஆண்டு தோல் பொருள் முன்னேற்றத்திற்காக பிரத்தியோகமாக 2 தொழிற்கூடங்கள ஈரோட்டிலும், ஆம்பூரிலும், 1 தொழிற்கூடம் மருந்துகளை உற்பத்தி செய்யும் தொழில முன்னேற்றத்திற்காக செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆலந்தூர் கிராமத்திலும், மற்றும் 5 தொழிற் கூடங்கள் பொறியியல் மற்றும் பொது சேவை தொழிற்சாலைகளுக்காக கும்மிடிபூண்டி, வெள்ளக் கோயில், கோபிசெட்டிபாளையம், நெற்குன்றம் மற்றும் கதிர்வேடு ஆகிய இடங்களிலும், மற்றும் தற்போது உள்ள தொழிற்கூடங்களை விரிவு படுத்தி மற்றும் அம்பத்தூர், மாதரவம், கப்பலூர், இராணிப்பேட்டை மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் கூடுதலாக பல (சுமார் 400) தொழிற்

கூடங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக தாழ்ந்தவர்களுக்காக சின்னஞ்சிறு தொழில் கூடங்கள் கிராமப் புறங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டு 533 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்படும்; 1982-83 ஆம் ஆண்டு 500 சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள் சுமார் ரூ. 75 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

(உ) உலக வங்கி திட்டத்தின்கீழ் சுமார் 100 தொழிற் கூடங்கள் நெற்குன்றம், மற்றும் முகப்பேயூர் ஆகிய இடங்களில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

## 5. சிறு தொழில்களுக்கான ஊக்குவிப்பு திட்டங்கள் :

### (அ) மத்திய அரசு மூலதன மானியம் :

நடப்பு ஆண்டு 1981-82-ல் 372 நிறுவனங்களுக்கும், டிசம்பர் 1981 வரை மொத்தமாக சுமார் ரூ. 141.78 இலட்சம் வரையிலும் மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் சென்ற ஆண்டுபோல விறுவிறுப்பான நிலைமை தொடர்ந்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1982-83 ஆம் ஆண்டு 450 சிறு தொழில் நிறுவனங்களுக்கு சுமார் ரூபாய் 150 இலட்சம் வரை மேற்படி மானிய உதவி தரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய மானிய உதவித் திட்டத்தின் உதவித் தொகை விநியோகிக்கும் பொறுப்பில் இந்நிறுவனம் இந்தியாவிலேயே முதன்மை இடம் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

### (ஆ) மாநில அரசு மூலதன மானியம் :

மத்திய மூலதன உதவி திட்டத்தின் கீழ் வராத 8 மாவட்டங்களிலுள்ள 24 வட்டங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதாக அமைந்துள்ளது. தொடக்கத்தில் இத்திட்டத்தின் கீழ் அதிகமான கோரிக்கை வராமல் இருந்தாலும் அண்மையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள தொழிற்சாலை பிரிவுகளிலிருந்து மேலும் மேலும் விண்ணப்பங்கள் பெறக்கூடிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அதிகமான தேவையைக் கருதி இந்நிறுவனம் இந்த திட்டத்தை டிசம்பர் 1981 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்க அரசுக்கு சிபாரிசு செய்துள்ளது; இது அரசின் பரிசீலனையில் உள்ளது.



நடப்பு ஆண்டு டிசம்பர் 1981 வரை சுமார் ரூ. 16·86 இலட்சங்கள் மதிப்புள்ள உதவித் தொகை 96 நிறுவனங்களுக்கு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டு முழுவதற்கும் சுமார் 25 இலட்சமாக உதவித் தொகை அனுமதி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

1982–83-ல், மேலும் 350 சிறு தொழில் பிரிவுகளுக்கு சுமார் ரூ. 50 இலட்சம் செலவில் இந்த உதவித் தொகை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### (இ) மற்ற திட்டங்கள் :

மற்ற பிற உதவி திட்டங்களைப் பொறுத்தவரை 1981–82 ஆம் ஆண்டுக்கான தாற்காலிகமான சாதனை விவரங்களும், 1982–83-க்கான குறிக்கோள் அளவு விவரமும் வருமாறு :—

| வரிசை எண்ணும் திட்டமும். | 31—12—1981 வரையில் சாதனை விவரம். | | 1981–82 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சாதனை. | | 1982–83-ல் எதிர்பார்க்கப்படும் இலக்கு. | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | பண மதிப்பு. | எண்ணிக்கை. | பண மதிப்பு. | எண்ணிக்கை. | பண மதிப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. நலிவுற்ற தொழில்களுக்கான புனரமைப்பு திட்டத்தின் கீழ் முன் வரம்பு தொகை உதவி. | 9 | 9·13 | 15 | 20·00 | 65 | 25·00 |
| 2. சின்னஞ்சிறு தொழில்களுக்கு மானிய உதவி. | 297 | 9·14 | 450 | 25·00 | 425 | 20·00 |
| 3. வட்டியில்லா விற்பனை வரிக் கடன் | 13 | 7·68 | 15 | 10·00 | 71 | 10·00 |
| 4. குறைந்த அழுத்த மின்சார உதவி மானியம். | 135 | 0·81 | 150 | 1·00 | 440 | 10·00 |



**6. இன்றியமையா மூலப் பொருட்களின் விநியோகம் :**

துவக்கத்தில் சிட்கோ இரும்பு எஃகு மூலப் பொருட்களை மட்டும் கொள்முதல் செய்து விநியோகித்து வந்தது. 1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளில் மற்ற மூலப் பொருட்களான கல் கரி, தீப்பெட்டி மெழுகு, பாரபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் பல பொருட்களின் விநியோகத்தையும் படிப்படியாக அது மேற்கொண்டது. 1979–80 ஆம் ஆண்டு வரை இம் மூலப் பொருட்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற முக்கிய இடங்களில் மட்டும் விநியோகிக்கப்பட்டு வந்தது. எனினும் பாரபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, பொட்டாசியம் குளோரேட் முதலான மூலப் பொருட்கள் சிறு தொழில் முனைவோர்களுக்கு அண்மையிலேயே கிடைக்குமாறு சாத்தூர், சிவகாசி, கோவில்பட்டி, குடியாத்தம் முதலான இடங்களில் துணைக் கிடங்குகள் நிறுவப்பட்டன. 1980–81 ஆம் ஆண்டு சேலத்திலும் ஒரு துணைக் கிடங்கு துவக்கப்பட்டுள்ளது. கிண்டி மூலப் பொருட் கிடங்கிலிருந்து மூலப் பொருட்களை விநியோகிப்பதில் ஏற்படும் சிரமத்தையும், நெரிசலையும் தவிர்க்க மேலும் ஒரு கிடங்கு அம்பத்தூரில் 1981–82 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு உள்ளது. அம்பத்தூர் கிடங்கில், இரும்பு எஃகு பொருட்கள் மட்டுமல்லாமல் துத்தநாகம், ஈயம், கல்கரி போன்ற மூலப் பொருட்களும் சிறு தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. 1982–83 ஆம் ஆண்டு திருச்சி, புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் பல மாவட்டத் தலைநகரங்களில் மேலும் சில மூலப் பொருள் விநியோகக் கிடங்குகள் நிறுவி, இதன் மூலமாக சிறு தொழில் முனைவோருக்கு தங்கள் மாவட்ட எல்லைகளுக்குள்ளேயே மூலப் பொருட்கள் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் திட்டங்களும் படிப்படியாக நிறைவேற்றப்படவிருக்கின்றன. மூலப் பொருள் விநியோகத்தில் சிட்கோ முந்திய ஆண்டின் சாதனையான ரூபாய் 18 கோடியை விட அதிக அளவான சுமார் ரூ. 24 கோடி விநியோகத்தை 1981–82 ஆம் ஆண்டில் நெருங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1982–83-ல் இது சுமார் ரூ. 30 கோடியாக உயரும் என்றும், இனி வரும் ஆண்டுகளில் இது மேலும் சிறப்பாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**(அ) இடைக்கால சேமிப்பு கிடங்கு :**

இரும்பு எஃகு பொருட்களுக்காக, ஓர் இடைக்கால சேமிப்புக் கிடங்கை அமைக்க 5 ஏக்கர் பரப்புள்ள மனையை சிட்கோ இவ்வாண்டு தேசிய சிறு தொழில் நிறுவனத்திற்கு ஒதுக்கியுள்ளது. இக்கிடங்கு தெற்கு மாநிலங்களான கேரளம், கர்நாடகம் முதலியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தேசிய சிறு

தொழில் நிறுவனத்தின் சார்பில் சிட்கோவினால் நிர்வகிக்கப்படும். இவ்வழியில் மற்ற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாக தமிழகம் விளங்குகிறது.

(ஆ) கல்கரி கிடங்கு :

கோயம்புத்தூரில் கல்கரியை "கோல் இந்தியா லிமிடெட்" நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இரும்பு வார்ப்படத் தொழிற்சாலைகளுக்கு சிட்கோ மூலம் விநியோகிக்க ஒரு கிடங்கு நிறுவப்பட்டுள்ளது. அம்பத்தூரிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு உலை எண்ணெய் விநியோகிக்கும் திட்டமும் நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது.

(இ) இரும்பு எஃகு மூலப் பொருட்கள் :

இரும்பு எஃகு பொருள்களைப் பொறுத்தமட்டில் 1981–82 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிற்கான ஒதுக்கீடு சுமார் 32,000 மெட்ரிக் டன் என்றாலும், இவ்வாண்டின் முதல் 9 மாதங்களில் 16,367 மெட்ரிக் டன்கள் ஒதுக்கீடுதான் சிட்கோவிற்குக் கிடைக்கப்பட்டுள்ளது.

தற்போது இரும்பு மற்றும் எஃகு தொழில்கள் முன்னேற்றத்தில் இதுவரை எதிர்பாராத ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மந்த நிலை இப்பொருள்களின் தேவையில் ஏற்பட்ட பெரும் மாறுபாடு எதுவும் இந்த மந்த நிலைக்கு காரணமன்று. இது பொதுவான வெளிப்படை உரிமம் (O.G.L.) என்ற முறையின்படி ஏராளமான இறக்குமதி மேற்கொள்ளப்பட்டதுதான் காரணம். எஃகு 1981–82 ஆம் ஆண்டு அதிக விலை ஏற்றம் அடைந்தது. எம்.எஸ். ரவுண்டு, கம்பிச் சுருள்கள் முதலியவை விலைக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு விட்டன. ஏப்ரல் 1981-ல் இருந்தே, தளர்த்தப்பட்ட இறக்குமதி கொள்கையின் காரணமாக C.R. தகடுகள் மற்றும் M.S. தகடுகளை வணிகர்களும், உண்மையில் உபயோகிப்பவர்களும் இறக்குமதி செய்து நாட்டில் குவித்து விட்டனர். உலக எஃகு தொழில்கள், இந்தியாவின் தளர்த்தப்பட்ட இறக்குமதி கொள்கையை அனுகூலமாக கொண்டு நாட்டில் எஃகு பொருட்களை குவிக்க முனைந்தனர். அதன் காரணமாக, இறக்குமதியான C.R. ஷீட்டிற்கும் உள் நாட்டு C.R. ஷீட்டிற்கும் உள்ள விலையானது ஒரு டன்னுக்கு சுமார் ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரை வித்தியாசப்பட்டது. மேற்பட்ட நிலை சிட்கோ போன்ற மற்ற எல்லா இந்திய நிறுவனங்களுக்கும் ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விட்டது. வெளி அங்காடியில் என்ன விலைக்கு விற்கப்படக் கூடுமோ அந்த விலையை நிர்ணயிக்க முக்கிய எஃகு உற்பத்தியாளருக்கு அனுமதி வழங்கப்பட்டதன் மூலம் இந்த நிலைமை மேலும் மோசமாகி விட்டது. அதனால் எஃகு



ஆலைகளின் கூட்டு இணையமானது விலைக் கட்டுப்பாடற்ற எஃகுப் பொருட்களை தயாரித்து, மாநில ஒதுக்கீட்டு அமைப்பின் கீழ் அந்த பொருட்களை சிட்கோவிற்கு விற்க முயற்சித்தன. 1981–82 ஆம் ஆண்டு கடைசி பகுதியில் மேற்படி மந்த நிலை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) கல்கரி :

முந்தைய ஆண்டை விட 1981–82ஆம் ஆண்டில் சிட்கோ கல்கரி விநியோகத்தை நல்ல முறையில் விநியோகித்துள்ளது. கல்கரியை " கோல் இந்திய லிமிடெட் " நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இரயில்வே வேகன்கள் கிடைக்காத சமயத்திலும் லாரிகள் மூலம் கொண்டு வரும்படியான ஏற்பாட்டை செய்ததால் இவ்வதிகப்படியான விற்பனை சாத்தியமாயிற்று.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் உள்ள கல்கரி சேமிப்புக் கிடங்கு திறக்கப்பட்டு டிசம்பர் 1981 வரையில் சுமார் 14,521 டன் கல்கரி விற்கப்பட்ட பிறகும் இந் நிறுவனம் வருகின்ற மாதங்களில் ஏற்படும் தேவைக்கேற்ப கல்கரி வழங்கும் திருப்திகரமான கையிருப்பு நிலைமையில் உள்ளது.

(உ) துத்த நாகமும், ஈயமும் :

உதயபூர், ஹிந்துஸ்தான் துத்த நாக நிறுவனத்தின் விநியோகிப்பாளராக இந்நிறுவனம் துத்தநாகம், மற்றும் ஈயம் விநியோகத்தை மேற்கொண்டுள்ளது. 1981 டிசம்பர் மாதம் வரையில் இந்நிறுவனம் சுமார் ரூபாய் 95 இலட்சம் மதிப்புள்ள 638 டன் அளவுள்ள இப்பொருள்களை விநியோகித்துள்ளது.

(ஊ) மாட்டுக் கொழுப்பு—

சோப்புத் தயாரித்தலுக்காக மாநில வர்த்தக நிறுவனத்தால் (S.T.C.) வழங்கப்பட்ட சுமார் 215 டன் கட்டி அமிலம் (Faty acid) 1981 டிசம்பர் முடிய இந்நிறுவனத்தால் சிறு தொழில் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

7 (அ) சிறு தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை வசதி :

சிட்கோ, சிறு தொழில் நிறுவனங்களின் பொருள்களுக்கான விற்பனைகளை முகவர் என்ற முறையில், நடப்பு ஆண்டு (1981-82) சுமார் ரூ. 150·76 இலட்சம் மதிப்புள்ளஆண்டு பொருட்களுக்கு விற்பனை வசதி பெற்றுத் தர கோரிக்கைகள் பெற்றுள்ளது இவற்றுடன் 1—4—1981 தேதி வரையில் நிலுவையிலுள்ள சுமார் ரூ. 142·53 இலட்சம் மதிப்புள்ள பொருட்களுக்கான

கோரிக்கைகளையும் சேர்த்து 31—12—1981ம் தேதி வரை மொத்தமாக சுமார் ரூ. 293·29 இலட்சம் பெறுமான பொருட்களை சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து சிட்கோ பெற்றுள்ளது, இதில் சுமார் 118·70 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் 31—12—1981 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், 31 அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களின் தேவைகளுக்கு இணங்க (1981–82) சுமார் 83 சிறு தொழில் நிறுவனங்களுக்கு மேற்படி விற்பனை வசதி அளிக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு 150 நிறுவனங்களிடமிருந்து சுமார் ரூ. 300 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை 75 நிறுவனங்களுக்கு விற்பனைக்காக கொள் முதல் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சுமார் 830 பேர்கள் வேலை வாய்ப்பை பெறக் கூடும் என கருதப்பட்டுள்ளது.

(ஆ) சிட்கோ அடியில் குறிப்பிட்டபடி பொருள்களை வாங்குவோர் விற்போர் சந்திப்புகளை ஏற்படுத்தி சிறந்த பொருட்களை அடையாளம் கண்டு அவைகளை அரசு சார்பு நிறுவனங்களுக்கு விநியோகிக்கவும் முற்பட்டுள்ளது.

1. 16—9—1981-ல் திரவ நிலையிலுள்ள பெட்ரோலிய வாய்வு அடுப்புப் பற்றி விவரங்களுக்கான சந்திப்பு (கோயம்புத்தூர்).

2. 27—9—1981-ல் சிறு தொழில் முனைவோர் சங்கத்தின் ஏற்றுமதி 81 பொருட்காட்சி (சென்னை தேனாம் பேட்டையில்).

3. 16—12—1981-ல் கடல் சம்பந்தப்பட்ட பொருட்காட்சி (சென்னை துறைமுகப் பொறுப்பு).

மத்திய அரசின் விநியோகம், மற்றும் பட்டுவாடா துறையின் (D.G.S. அண்டு D.) பொது இயக்குநரது ஒப்பந்தப்புள்ளிகளில் சிட்கோ மேற்கொண்ட பங்கு மிகவும் திருப்தியளிப்பதாக உள்ளது. கடந்த 12 மாதங்களாக அவ்வதிகாரியிடமிருந்து சுமார் 22 இலட்சம் மதிப்புள்ள விநியோக உத்தரவு பெற்றுதரப்பட்டுள்ளது. வரும் 12 மாதங்களில் சுமார் ரூ. 200 இலட்சங்களுக்குரிய உத்தரவு பெறப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) விற்பனைக்கான பொது ஆய்வு நடத்தும் திட்டத்தின் கீழ் 31—12—1980 தேதி வரையில் தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யப்பட்ட 33,883 தொழில் நிறுவனங்க



ளடங்கிய கையேடு ஒன்றை சமீபத்தில் அச்சிட்டு வெளியிட தொழில் வணிகத் துறையினருக்கு பெரும் அளவில் இந்நிறுவனம் உதவியுள்ளது.

(ஈ) 1982–83ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் :—

1982–83ஆம் ஆண்டில் 1—1—1982 தேதி வரை பதிவு செய்துள்ள சிறு தொழில் நிறுவனங்களில் 2 சத விகிதம் குறைவில்லாமல் சிட்கோவின் விற்பனை உதவி திட்டத்தின் கீழ் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதனால் தற்போதும் அண்மையிலுள்ள எதிர் காலத்திலும் தேவை மிகுதியாக உள்ளவை தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய அந்நிறுவனங்களுக்கு சிட்கோ உதவ முடிகிறது. மேலும் அதில் 50 சதவிகிதம் நிறுவனங்களாவது சீரான விற்பனை உத்தரவுகளை பெற முடியும். இவ்வாறு 1982–83ம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ள விற்பனை உதவியின் மதிப்பு ரூ. 6·50 கோடிகளாகும். மேலும் 1982–83ம் ஆண்டில் கூடுதலாக 500 சிறு தொழில் நிறுவனங்களாவது இத்திட்டத்தின் பயனை அடைய வாய்ப்பு ஏற்படும் என்றும், இதனால் சுமார் 5,000 பேர்களுக்கு தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு கிட்டும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும் 1982–83ஆம் ஆண்டில் அரசு துறை மற்றும் அரசு சார்புள்ள நிறுவனங்களுக்கு சிறு தொழில் நிறுவனங்களின் பொருள்களை அளிப்பதற்கு உதவியாகவும், அப் பொருள்களின் விற்பனை தேவை பற்றிய விவரங்களை அந்நிறுவனங்களுக்கு அளிப்பதற்காகவும் இரண்டு விற்பனை தகவல் நிலையங்கள் மதுரையிலும், கோயம்புத்தூரிலும் நிறுவுவதற்குப் சென்னையில் ஒரு வர்த்தக நிலையம் நிறுவுவதற்கும், உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1982–83ம் ஆண்டுக்கான சிட்கோவின் பல்வேறு திட்டங்களுக்கான நிதி முதலீடு மற்றும் அவைகளை அடைவதற்கான நிதிவாயில்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| முதலீட்டு திட்டங்கள், | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. தொழிற் கூடங்களில் அடிப்படை வசதிகள் அளிப்பது மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி நிறுவனம் (உலக வங்கி திட்டம் இணைந்தது) .. .. .. .. | 615 |
| 2. மத்திய முதலீட்டு மானிய திட்டம் .. .. | 150 |

[1982 மார்ச் 1!

| முதலீட்டுத் திட்டங்கள் | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 3. மாநில முதலீட்டு மானிய திட்டம் .. .. | 50 |
| 4. நலிவுற்ற தொழில் புனரமைப்பு திட்டத்தின் கீழ் முன் வரம்புத் தொகை உதவி .. .. | 25 |
| 5. சின்னஞ்சிறு தொழில்களுக்கான துவக்க நிதி உதவி (Seed money) .. .. | 20 |
| 6. வட்டியில்லா விற்பனை வரிக் கடன் .. | 10 |
| 7. குறைந்த அழுத்த மின்சார உதவி மானியம். | 10 |
| மொத்தம் .. | 880 |

நிதி வாயில்கள்.

| | |
|---|---|
| 1. அரசின் பங்கு மூலதனம் மற்றும் கடன் .. | 220 |
| 2. மத்திய அரசு நிதி .. .. .. | 150 |
| 3. தமிழ் நாடு சிறு தொழில் மூலதன நிறுவனம் சின்னஞ்சிறு கூட்டங்களுக்கு வழங்கும் கடன் .. | 75 |
| 4. நிதியுதவி நிறுவனங்கள், வங்கி மற்றும் சிட்கோவிற்கு திருப்பியளிக்கப்படும் கடன் தொகை வரவு .. .. .. | 435 |
| மொத்தம் .. | 880 |

9. சிட்கோ கடந்த நான்கு ஆண்டுகளாக லாபத்தில் இயங்கி வந்துள்ளது. 1980–81ல் அது ரூபாய் 23 இலட்சம் நிகர இலாபத்தை அடைந்துள்ளது. அதன் மூலம் 31—3—1981 வரை அடைந்துள்ள தொடர் இழப்புத் தொகை ரூ. 26·86 இலட்சமாக குறைந்துள்ளது. 1981–82ம் ஆண்டில் இந்நிறுவனம் நிகர இலாபத்தை அடைய முயன்றதாலும் எஃகு பொருள்கள் விற்பனையில் இதுவரை கண்டிராத மந்த நிலை ஏற்பட்டதன் காரணமாக 30—9—1981 வரை முடிந்துள்ள முதல் அரையாண்டில் ரூ. 10.84 இலட்சம் நிகர இழப்பை இந்நிறுவனத்தின் இயக்கம் அடைந்துள்ளது. இருந்த போதிலும் 1982–83ம் ஆண்டு இந்நிறுவனத்தின் இயக்கம் ஓரளவு இலாபத்தை கொடுக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.



1982 மார்ச் 19]

## தமிழ்நாடு தொழில் முதலீடு நிறுவனம் கொள்கை விளக்க குறிப்பு.

1. முன்னுரை.—நம் நாட்டிலேயே மாநில அளவில் நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், கம்பெனிகள் சட்டத்தின் படி 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை, மேம்படுத்துவதும் விரைவுபடுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நிறுவனத்தின் அதிகார வரம்பு மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வரும் புதுச்சேரிக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாநில நிதி நிறுவனமாக இது செயற்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியையும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியையும் கலந்தாலோசித்த பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் வாயிலாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சில முக்கியமான விதித்துறைகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அலுவல்களும் நோக்கங்களும்.—இந்நிறுவனத்தின் முக்கிய அலுவல்களும் நோக்கங்களும் வருமாறு :—

(அ) முக்கியமாக நிலம், கட்டடம், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரகாலக் கடன்களை வழங்குவது.

(ஆ) எந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்து கொள்ளும் "காலம் தாழ்த்தித் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு" (deferred payment contract) உத்தரவாதம் மேல் உத்தரவாதம் அளிப்பது.

(இ) வங்கிகள் ஈட்டுதவி நிறுவனங்கள் பொது மக்களிடம் இருந்து பெறும் கடன்கள் முதலியவற்றின் வாயிலாக தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பது.

(ஈ) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவது, அவற்றுக்கு உத்தரவாதமளிப்பது.

(உ) மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி இத்தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன் கூட்டியே கடனாக வழங்குவது.

3. உதவியின் அளவும் விவரமும் : தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கும் நிதி உதவியின் அளவு வருமாறு :—

(அ) கடன்கள் :

| | |
|---|---|
| குறைந்த அளவு .. .. | ரூபாய் 2,000 |
| உயர் அளவு .. .. | ரூபாய் 30 இலட்சம் (தனி நபர் உரிமையுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் பங்குதாரர் உரிமையுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் உயர் அளவு ரூ. 15 இலட்சமாகும்.) |

| | |
|---|---|
| (ஆ) காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கான உத்தரவாதம். | ரூ. 30 இலட்சம். |
| (இ) பொதுக் கடன் வெளியீட்டு பங்கிற்கு உத்தரவாதமளிப்பது/நேரடியாகக் கலந்து கொள்வது. | ரூ. 25 இலட்சம் (உயர் அளவு) பொதுக் கடன் வெளியீட்டில் 25 சதவீதம் அல்லது தொழிலதிபர் முதலீடு செய்யும் தொகைக்கு நிகரான ஒரு தொகை இவற்றில் எது குறைவோ அது. |

இருப்பினும், மேற்கூறிய மூவகை கடன்களைப் பொறுத்த மட்டில் தொழில் பிரிவு ஒன்றுக்கு வழங்கப்படும் மொத்த உதவி ரூ. 65 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது.

சிறு தொழில், நடுத்தரத் தொழில் துறைகளில் (அ) புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் (ஆ) ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், வேறு துறைகளில் ஈடுபடுத்துவ்தற்கும் (ஈ) தற்போதுள்ள தொழில் பிரிவுகளை, நவீன மாக்குவதற்கும் இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. சிறு தொழில் துறையிலும் சின்னஞ்சிறு தொழில் துறையிலும், தொழிற் சாலைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கவும் இந்நிறுவனம் பல சிறப்பு திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறைந்த வட்டி வீதம் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட கால அவகாசம், கடனைத் திருப்பிச் செலுத்த நீண்ட காலக்கெடு, குறைந்த பிணையத் தொகை போன்ற தாராளமான எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.



அதிக அளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கவும் எந்த ஒரு பகுதியிலும் தொழில் வளம் குறைந்து தோன்றாவண்ணம் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்கும் முதலிடம் தரப்படுகிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு, குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்ட காலக் கெடு, ஏனைய பல சலுகைகளின் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. கிராமப்புறங்களிலும் தொழில் வளர்ச்சியின் பின்தங்கிய பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற சிறு, சின்னஞ்சிறு தொழில்பிரிவுகளுக்கு இன்னும் பெருமளவில் உதவிப்புரியும் நோக்கத்துடன் போக்குவரத்துக் கடனாக இருப்பின் 75,000 ரூபாய் வரையிலும் பிறவகைக் கடனான இருப்பின் 25,000 ரூபாய் வரையிலும் கடனுதவி அளிப்பதற்குரிய அதிகாரங்களை மேற்படி நிறுவனத்தின்வட்டார/கிளை அதிகாரிகளுக்கு இந்நிறுவனம் வழங்கியுள்ளது சிறு நடுத்தரத் தொழில் துறைகளில் நிறுவப்பட்ட பல்வேறு பிரிவுகளுக்கும் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கும் இந்நிறுவனத்தால் விதிக்கப்படும் வட்டி வீதம் பின்வருமாறு :—

| விவரம். | மறுநிதி உதவி அளிக்கப்படும் போது ஆண்டொன்றுக்கு சத வீதம். |
|---|---|
| (1) | (2) |
| சிறு தொழில் துறை : | |
| (1) தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதி | 12·50 |
| (2) தொழில் வளர்ச்சியில் பின் தங்கியுள்ள பகுதி அல்லாத பிற பகுதிகள். | 13·50 |
| (3) தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதி அல்லாத பிற இடங்களில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள். | 13·50 |
| (4) தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள். | 12·00 |

| | |
|---|---|
| (5) ஆதி திராவிடர்கள் / பழங்குடியினர்,/மிகவும் பின் தங்கிய வகுப்பினர் (குறைந்த அளவுக் கடன்). | 11·25 |
| நடுத்தரத் தொழில் துறை : | |
| தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியும், அல்லாத ஏனைய பகுதிகளும். | 14·00 |
| போக்குவரத்துக் கடன்கள் .. .. | 14·00 |

* குறித்த காலத்தில் தொகை செலுத்துவதற்கு ஒரு சதவீதத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

** குறித்த காலத்தில் தொகை செலுத்துவதற்கு இரண்டு சதவீத தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

4. நிதி வாயில்கள்.—முக்கியமாக தமிழ்நாடு அரசு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அளிக்கும் பங்கு மூலதனம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி, கடனீட்டுறுதிப் பத்திரங்கள், வைப்புத் தொகைகள், நிதி முதலியவை இந்நிறுவனத்தின் நிதி வாயில்களாகும். 1981—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் அன்றுள்ளவாறு இந்நிறுவனத்தின் நிதி வாயில்களின் நிலவரம் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்) 1981-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-நாள் அன்றுள்ளபடி. |
|---|---|
| 1. பங்கு மூலதனம் .. .. .. | 1,449·56 |
| 2. கடன் பத்திரங்கள் .. .. .. | 1,676·00 |
| 3. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி உதவி. | 4,252·80 |
| 4. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட கால வைப்பீட்டுத் தொகைகள். | 236.55 |
| 5. நிறுவனத்தின் ரொக்க நிதி .. .. | 127.16 |
| | 7,742.07 |



5. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறும் மறுநிதி உதவி : இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, குறைந்த வட்டி வீதத்தில் தாராளமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு மறுநிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனமும் இலவச ஒதுக்கீடுகளும் சேர்த்து எவ்வளவு தொகை வருமோ அதைப் போல் மூன்று மடங்கு வரை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவி அளிக்கிறது. 1980—81-ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூபாய் 8·92 கோடி மறுநிதி உதவி பெற்று உள்ளது. 1981—82-ல் (1981 டிசம்பர் வரை) ரூ. 12·18 கோடி மறுநிதி உதவி பெற்றுள்ளது. மேலும் 1980—81-ஆம் ஆண்டில் (1980 டிசம்பர் 31 வரையில்) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு ரூபாய் 3·82 கோடியும் 1981—82இல் (1981 டிசம்பர் வரை), ரூ. 4·41 கோடிதான் செலுத்தப்பட்டது. ஆனால் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலும், 1981-ஆம் ஆண்டு டிசம்பர் 31 இறுதியிலும் நிலுவையாக உள்ள மறுநிதி உதவித் தொகைகள் முறையே ரூபாய் 36·90 கோடியும் ரூபாய் 50·26 கோடியும் ஆகும்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உத்வி பெற்று அசலையும் வட்டியையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் எப்பொழுதும் காலந்தாழ்த்தாமல் திரும்பச் செலுத்தி வந்துள்ளது.

1980—81, 1981—82-ஆம் ஆண்டுகளில் (1981 டிசம்பர் வரையில்) இந்நிறுவனத்தின் செயலாக்க ஆய்வு :—1981—82-ஆம் ஆண்டில் (1981 டிசம்பர் வரை) இந்நிறுவனத்தின் செயல்ாக்கம் முந்தைய ஆண்டில் செயலாக்கத்தோடு ஒப்பிடுகையில், போற்றத் தகுந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் தொழிற் கொள்கைக்கிணங்க, இந்நிறுவனம் வேலை வாய்ப்பினைப் பெருமளவில் ஏற்படுத்த வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன், சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழில் துறைகளிலுள்ள தொழில் நிலையங்கள் அதிலும் குறிப்பாக கிராமம் மற்றும் ஓரளவு நகர்ப் பாங்குள்ள பகுதிகளில் அமைக்கப்படுகின்ற தொழில் நிலையங்களை ஊக்குவிப்பதில் சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. பொருளாதார நிலையில் பின்தங்கி நலிந்துள்ள மக்கள், தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படச் செய்யவும் பல்வேறு புதிய திட்டங்களும் சலுகைகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

(1) உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலயங்களின் எண்ணிக்கை.—1980—81 (1980 டிசம்பர் 31 வரை) 1981—82ஆம் (1981 டிசம்பர் 31 வரை) ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் செயலாக்கத்தினால், நிறுவனத்திடமிருந்து உதவி பெற்ற தொழில் நிலையங்

களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து உள்ளது. இவ்வாண்டு களில் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்களின் சுருக்கம் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்).
1980–81.
(31–12–1980 வரை).

| | எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. | 2,765 | 2,377·91 |

1981–82.
(31–12–1981 வரை).

| | எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. | 3,799 | 3118·49 |

இவற்றில் பெரும்பாலானவை இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகள் கிராமப் பகுதிகளிலுள்ள சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்த தொழில் நிலையங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முன்பே தெரிவித்துள்ளவாறு 1980-ஆம் ஆண்டு செப்டம்பரில் தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் வட்டார/கிளை அலுவலகங்களுக்கு கடன் வழங்கும் அதிகாரமளித்தன் மூலம் அந்த ஆண்டில் இந்நிறுவனத்திடமிருந்து பெருமளவிலான சிறு மற்றும் சின்னஞ் சிறு துறைகளை சார்ந்த தொழில் நிலையங்கள் நிதியுதவி பெற்றுள்ளன.

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து ஒப்புதலளிக்கப் பட்ட மொத்தத் தொகை, வழங்கப்பட்ட தொகை, நிலுவையாகவுள்ள தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—



| | எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை : | | |
| 31—12—1980 வரை | 7,438 | 16,327·40 |
| 31—12—1981 வரை .. | 13,338 | 20,828·66 |
| வழங்கப்பட்ட தொகை : | | |
| 31—12—1980 வரை .. .. .. | | 12,928.99 |
| 31—12—1981 வரை .. .. .. | | 15,976.93 |
| நிலுவையாகவுள்ள தொகை : | | |
| 31—12—1980 வரை .. .. .. | | 7,714.86 |
| 31—12—1981 வரை .. .. .. | | 10,358.10 |

(ii) வேலை வாய்ப்புக்கள்.—இந்த நிறுவனத்தினால் உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின்எண்ணிக்கை குறிப்பாக சிறு சின்னஞ்சிறு தொழில் துறைகளில்உயர்ந்துள்ளதால்,வேலை வாய்ப்புக்கள் பெருமளவில் உயர்ந்துள்ளன. இந்நிறுவனம் வழங்கிய நிதி உதவியால் இவ்வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றினால் சமுதாயத்தின் நலிந்துள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் பலன் அடைந்துள்ளனர்.

இந்நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு விவரங்கள் பின்வருமாறு :—

| | எண்ணிக்கை. |
|---|---|
| 1980–81 (1980 டிசம்பர் வரை) .. | 24,079 |
| 1981–82 (1981 டிசம்பர் வரை) .. | 28,349 |

(iii) சிறு தொழில்களுக்கு நிதியுதவி.—ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, இந்நிறுவனம் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பெரும்பாலானோருக்குப் பயன்படுகின்ற

வகையில் சிறு தொழில் துறைக்கு அதிக அளவில் நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| நிதி உதவியின் அளவு .. | குறைந்த அளவு ரூபாய் 2,000 உயர் அளவு ரூபாய் 20,00 இலட்சம். இதைத் தவிர காலந்தாழ்த்தித் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்தரவாதம் அளிப்பது தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளை வாங்குவது போன்ற உதவிகள். |
| வட்டி வீதம் .. .. | தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியிலுள்ள புதிய தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம். |
| | தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியில் தற்போதுள்ள தொழில் பிரிவுகளுக்கும் இதர பகுதியிலுள்ள தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 13.50 சதவீதம். |
| திரும்பச் செலுத்தும் காலம். | தொழில் திட்டங்களின் தன்மைகளுக்கேற்ப 10 முதல் 16 வரையிலான அரை ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தத்தக்கதாகும். |

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து இத் தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின் விவரங்கள் வருமாறு :—

| (1) | 1980–81 (31—12—1980 வரை) எண்ணிக்கை. (2) | தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 2,788 | 1,662.97 |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த தொகை. | 2,765 | 2,377.91 |



| | 1981–82. (31—12—1981 வரை) எண்ணிக்கை. (4) | தொகை. (5) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 3,770 | 26,15.91 |
| ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த தொகை. | 3,799 | 31,18.49 |

(iv) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி —

இம்மாநிலத்தின் கிராம, ஓரளவு நகரப் பாங்குள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனம் பெருமளவில் நிதி உதவி அளித்து வருகிறது.

உதவிகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு :

எளிய நிபந்தனைகளின் பேரில் ரூபாய் 30 இலட்சம் வரை கடன்கள்.

புதிய சிறு தொழில் நிலையங்களுக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களால் தொடங்கப்படும் தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 12.50 சதவீத வட்டி வீதமும் தொழில் அமைந்துள்ள பகுதியின் தன்மையைக் கருத்தில் கொள்ளாது நடுத்தரத் தொழில்களுக்கு 14 சதவீதம்.

கடன்களை திரும்பசெலுத்த தொடங்குவதற்குரிய அவகாச காலம் 2 ஆண்டுகள் வரை; கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் கடன்களைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்குரிய காலம் உட்பட 7 முதல் 10 ஆண்டுகள் வரை.

காப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டு வர வேண்டிய நிதி கோருவதில் இணக்கமான அணுகு முறை.

இதைத் தவிர தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளென அறிவிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில் பிரிவுகளுக்கும், அவற்றின் நிலையான இருப்பில் 15 சதவீதம்

வரை மத்திய அரசு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மேலுப் மாநில அரசால் அறிவிக்கப்பட்ட 25 வட்டங்களும், மாநில அரசு அளிக்கும் உதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவையாகும்

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின் விவரங்கள் பின் வருமாறு :—

| | 1980–81 (31–12–1980 வரை). | | 1981–82 (1981 டிசம்பர் வரையில்). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 1,477 | 13,06.60 | 2,045 | 16,40.62 |

(v) தொழில் நுணுக்க வல்லுநர்கள்.—தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு அதாவது தொழில் நுணுக்கவியல் பட்டம்/தகுதிப் பட்டயம்/சான்றிதழ்கள் பல்வேறு தொழிலியல் தயாரிப்புகளில் முன் அனுபவம், திறன் கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக இந்நிறுவனம் இத்திட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :

ரூபாய் 3 இலட்சம் வரை கடன்கள் வழங்குதல்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள புதிய தொழில் நிலையங்களுக்குச் சலுகையாக ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டி வீதமும் இதர பகுதிகளில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள தொழில்களுக்கும் ஆண்டொன்றுக்கு 13.50 சதவீத வட்டி வீதமும், ரூபாய் 2 இலட்சம் வரை கடன் வாங்குவோர் காப்புத் தொகை செலுத்த வேண்டியதில்லை. கடன் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேல் காப்புத் தொகை 10 சதவீதம் கட்ட வேண்டும்.

கடன் தொகையைத் திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்கு நீண்ட அவகாச காலமும் திரும்பச் செலுத்த வேண்டிய



கால அளவும், அதிகமானதாகும். இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்கள் வருமாறு :—

| | 1980–81 (31–12–1980 வரை). | | 1981–82 (1981 டிசம்பர் வரை). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 30 | 41.72 | 46 | 45.23 |

(vi) போக்குவரத்து உரிமையாளர்களுக்கு உதவி.—மோட்டார் பொருத்தப்பட்ட ரிக்ஷாக்கள், ஆட்டோரிக்ஷாக்கள், சுற்றுலா வாடகை கார்கள், லாரிகள், ஆட்டோ டிரெய்லர்கள், டிரக்குகள், டெம்போக்கள், வான்கள் போன்ற போக்குவரத்து வண்டிகளை வாங்க உதவும் வகையில் இந்நிறுவனம் ஒரு தனித் திட்டத்தை வகுத்துள்ளது. இந்த உதவியின் முக்கிய கூறுகள் வருமாறு :

(உரிமையாளரே ஓட்டுவது).

வட்டி வீதம்.—14.50 சதவீதம். ஒழுங்காக தொகையைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

கடனுதவி.—வண்டியின் விலையில் 85 சத வீதம் வரை.

கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம்.—மாதத் தவணைகளில் நான்காண்டுக் காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

உதவி பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| | 1980–81 (31–12–1980 வரை.) | | 1981–82 (31–12–1981 வரை.) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | | |
| போக்குவரத்து வண்டி உரிமையாளர்களுக்கு அளித்த கடன்தொகை. | 427 | 1,42.43 | 349 | 1,99.91 |

இத்திட்டத்தின் கீழ் முக்கியமாக பயன் அடைந்தவர்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த ஒற்றை வழிப் போக்குவரத்து வண்டி (Single Track) உரிமையாளர்களே ஆவார்கள். சாலைப் போக்குவரத்து வண்டி சிறு உரிமையாளர்களிடமிருந்து அதிக கோரிக்கைகள் வந்துள்ளதால் 1981–82 ஆம் ஆண்டில் அவர்களை ஊக்குவிக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

(vii) மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு உதவி; மின் வெட்டுக் காலங்களில் ஏற்படும் இடையூறுகளைக் களைவதற்கு மின் உற்பத்தி எந்திரங்களையும் டீசல் எந்திரங்களையும் வாங்கவும், தொழில் நிலையங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கிறது.

உதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு :—

கடனுதவி :—ரூ. 5 இலட்சம் வரை (தகுதி அடிப்படையில் கடன் தொகை உயர்த்தப்படும்).

திருப்பிச் செலுத்தும் காலம்:—3 முதல் 5 ஆண்டுகள் வரை; கடன் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 6 திங்கள் கழித்து கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கலாம்.

கடன் பெறுவோர் போட வேண்டிய காப்புத் தொகை :—25 சதவீதம்—நடுத்தர தொழிலாளர்களுக்கு, 13 சதவீதம்—சிறு தொழில்களுக்கு.

வட்டி வீதம் :—தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம் முதல் 14.00 சதவீதம் வரை.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு :—

| | 1980–81 (1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை). | | 1981–82 (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை). | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள். | 69 | 1,74·95 | 17 | 20·99 |





இத் திட்டம், தமிழ் நாட்டிலுள்ள தொழில் பிரிவுகள் யனைத்திற்கும் அவை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத் டமிருந்து நிதியுதவி பெற்றிருந்தாலும் சரி இல்லாவிடினும் சரி பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளது.

(viii) உலக வங்கி அளிக்கும் கடனுதவியைப் பெற்றுத் ருதல்:—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வெளி நாடு ளிலிருந்து இயந்திரங்கள், கூட்டு உறுப்புகள் முதலியவற்றை இறக்குமதி செய்தல், தொழில் நுட்ப அறிவுத் திறனைப் பெறுதல் முதலியவற்றிற்காக உலக வங்கி வழங்கும் அந்நிய செலாவணி டன் உதவியைப் பெற்றுத் தரும் நிறுவனமாக இம்மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| கடனுதவி .. .. | ரூபாய் 30 இலட்சம் வரை. |
| வட்டி வீதம் .. .. | .. சிறு தொழில் பிரிவுகளுக்கும் பின் தங்கிய பகுதிகளில் உள்ள எல்லாத் தொழில் பிரிவுகளுக்கும் ஆண்டொன்றுக்கு 12.50 சதவீதம் பின்தங்கிய பகுதிகளல்லாத பிற பகுதிகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 14-00 சதவீதம். |
| கடனைத் திரும்பச்செலுத்த தொடங்க அனுமதிக்கப்படும் காலம். | 2 முதல் 4 ஆண்டுகள் வரை. |
| திரும்பிச்செலுத்தும் காலம் | கடன் செலுத்தாமலிருக்க அனுமதிக்கப்படும் காலம் உட்பட 7 ஆண்டு முதல் 14 ஆண்டுகள் வரை. |

இத்திட்டத்தின் கீழ் 1981–82-ல் வழங்கப்பட்ட நிதி உதவியின் அளவு பின் வருமாறு கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது:—

| (1) | 1980–81 (1980 டிசம்பர் 31-ஆம் நாள் வரை). எண்ணிக்கை. (2) | 1980–81 தொகை. (3) | 1981–82 (1981 டிசம்பர் 31-ம் நாள் வரை). எண்ணிக்கை. (4) | 1981–82 தொகை. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| உலக வங்கி கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள். | 24 | 268.52 | 30 | .. |

(ix) எளிய நிபந்தனையில் கடன் வசதி.—எளிய நிபந்தனையில் கடன் வழங்கும் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், மிகச் சிறிய சிறு தொழில்களுக்கும் மிகச் சிறிய தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டத்தை இந்நிறுவனம் வகுத்துள்ளது. தொழில் திட்டத்திற்குத் தேவையான முலதனத்தில் தொழில் முனைவோர் செலுத்த இயலும் மூலதன பங்கு போக, பாக்கி தேவைப்படுகின்ற மூலதனத்தைப் பெறுகின்ற வகையில் இந்நிதியுதவி அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்த தொழில் நுட்பத்திறன் படைத்த வல்லுநர்களாக உள்ள தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் குறிப்பாக, தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளிலும் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளிலும் தொழில்களை நிறுவ தெரிந்தெடுத்து உதவுகின்ற அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

தனி உரிமையாளர் மற்றும் பங்குதாரர் தொழில் நிறுவனங்களுக்கு இந்த உதவியானது குறைந்த வட்டிக் கடனுதவி வடிவில் ஆண்டொன்றுக்கு ஒரு சதவீத வட்டி வீதத்தில் அளிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பொறுத்த வரை (Limi ed Compani s) இந்த நிதி உதவியானது சேர்ந்து வரும் முன்னுரிமைப் பங்குகள் வடிவில் (Cum. la ive Preferance Sh re) வழங்கப்படும். இத்திட்டத்தின்படி இந்நிறுவனம் வழங்கியுள்ள உதவி பின்வருமாறு—.



| (1) | 1980–81 (1980 டிசம்பர் 31 வரை). எண்ணிக்கை. (2) | 1980–81 தொகை. (3) | 1981–82 (1981 டிசம்பர் 31 வரை). எண்ணிக்கை. (4) | 1981–82 தொகை. (5) |
|---|---|---|---|---|
| | (தொகை ரூபாய் இலட்சத்தில்). | | | |
| எளிய நிபந்தனைக் கடன் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள். | 236 | 15.51 | 22 | 1.95 |

இத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள் பின்வருமாறு;—

| | |
|---|---|
| கடன் தொகையின் அளவு. | ரூ. 2 இலட்சம் (அல்லது) தொழில் திட்டத்தின் செலவில் 20 சதவீதம் (இவற்றில் எது குறைவோ அது). |
| வட்டி வீதம்—ஒரு சதவீதம். | |
| கடன் தவணைத் தள்ளி வைப்பு கால அளவு. | ஒவ்வொரு தொழில் தகுதியைப் பொறுத்து 5 ஆண்டுகள்வரை. |

(x) சிறிய அளவில் வழங்கும் கடன் / கூட்டுக் கடன் திட்டம்.—சமூகத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்கள் பெரும் அளவில் பயனடையும் பொருட்டு முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல் சிறிய அளவில் கடன் வழங்கும் திட்டத்தை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் தனித்தியங்கவல்ல தொழில் பிரிவுகளுக்கு ரூ. 5,000 முதல் 25,000 வரை கடன் அளிக்கப்படுகிறது. முன்னரே குறிப்பிட்டுள்ளபடி வட்டார/கிளை அலுவலகங்கள் தற்போது ரூ. 25,000 வரை கணிசமான அளவுக்குக் கடன் வழங்குகின்றன, முன்னரே குறிப்பிட்டுள்ளபடி, முக்கியமாக, கிராமப் பகுதிகளிலும் தொழிலில் பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள தொழில்களை மேம்படுத்துவதற்கும் பெரும் அளவில் வேலை வாய்ப்பினை தோற்றுவிப்பதற்கும்

இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுக்கடன் திட்டத்தி கீழ் நிலையான இருப்புகளை எற்படுத்தவும் நடைமுறை மூலதனக் கடன் வசதிக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் வழங்கும் இந்த உதவியை பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

| | (31–12–1980 வரை). | | (31–12–1981 வரை.) | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை | தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (தொகை ரூபாய் லட்சத்தில்.) | | | |
| சிறிய அளவில் வழங்கும் கடன் கூட்டுக் கடன் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப் பட்ட கடன்கள். | 1,735 | 313,84 | 2,404 | 438,98 |

| | |
|---|---|
| வட்டி வீதம் .. | ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்தி விட்டால் 1 சதவீதம் வட்டி சிறப்புத் தள்ளுபடியுடன் வட்டி வீதம் ஆண்டு ஒன்றுக்கு 11.25 சதவீதம். |
| | ஏனையோருக்கு, உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 1 சதவீத வட்டி சிறப்புத் தள்ளுபடியுடன் 13.50 சதவீதம். |
| கடனைத் திருப்பிச் செலுத்தாமலிருக்க அனுமதிக்கப்படும் கால அளவு. | 6—12 திங்கள் வரை. |
| திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவு பிணையக் காப்புத் தொகை. | பத்தாண்டு கால அளவில் (நிலையான சொத்துகளின் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை) எளிய தவணைகளில். |



(xi) ஏனைய திட்டங்கள்.—தொழில் கொட்டகைகள் வாங்குதல், நவீன அரிசி ஆலைகள் அமைத்தல், உணவு விடுதிகள் கட்டுதல் முதலியவற்றுக்குக் கடன் வழங்குதல் போன்ற ஏனைய நிதியுதவித் திட்டங்களைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் செயல்படுத்துகிறது.

7. இவ்வாண்டில் கொண்டு வரப்பட்ட புதிய திட்டங்கள்—சலுகைகள்.

(i) கடன் கணக்குகள் வட்டி விதித்தல்—சில நடைமுறை மாற்றங்கள்.

கடன் தவணை வசூல் நிறுத்தி வைக்கப்பட்ட நாளுக்கும் கால அளவிற்கும் அரையாண்டு வட்டி செலுத்த வேண்டிய நாளுக்கும் இடைப்பட்ட காலத்தில் அசல் தவணைத் தொகை களைச் செலுத்த வேண்டிய நாளன்று முறையாகச் செலுத்து வதற்கு வட்டித் தொகையைத் தள்ளி விடுவதற்கு இந்நிறுத் வனத்துக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதில் மேற் கூறிய திருத்தம் இந்நிறுவனத்தின் 1980–81-ஆம் ஆண்டுக் கணக்கு களுக்குப் பொருந்தும். 30—9—1980-வுடன் முடிவடை யும் அரையாண்டுக்கு வட்டித் தொகையைக் கணக்கிடுகையில் இது கடன் கணக்கில் சரிக்கட்டப்படும்.

(ii) பத்திரம் எழுதிக் கொடுத்தல்—திருத்தப் பத்திரம் எழுதுதல்—இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி போன்ற ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் பின்பற்றி வருகிற நடை முறையைக் கருத்திற் கொண்டு இயந்திரங்களை மாற்றியமைப் பதற்குத் திருத்தப் பத்திரங்கள் எழுத வேண்டுமென வலியுறுத்த வேண்டாமென தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் முடிவு செய்து உள்ளது.

(iii) [சிறு கடன்கள் (சிறு தொழில்கள்) உத்தரவாதம்] திட்டம் 1980–81.—மத்திய அரசு சிறு தொழில்களுக்குக் கடன் உத்தரவாத திட்டத்தை நிறுத்தி விட்டதாலும் வைப்பீடு காப்பு உறுதி கடன் உத்தரவாத நிறுவனம் 1—4—1981ஆம் நாளிலிருந்து உத்தரவாதக் கடன்களைத் தொடர்ந்து அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளதாலும் நிறுவனம் புதிய திட் டத்தின் கீழ் உத்தரவாதக் கடன்களை வைப்பீடு காப்புறுதி கடன் உத்தரவாத நிறுவனத்திடம் தேவையான உத்தரவாதக் கடன்களை கோருவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

(iv) புதிய பிரிவுகளைப் பதிவு செய்யத் தடையும் தற் போதுள்ள பிரிவுகளை விரிவாக்குதலும்.—இந்திய அரசினால் பதிவு செய்யத் தடை விதிக்கப்பட்ட அல்லது இந்திய அரசு விரும்பாத விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள் வதில்லை என நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இருப்பினும், ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை அல்லது தொழிற் பிரிவை பொறுத்த மட்டில் அதனுடைய தகுதிகளை வைத்து நிதி உதவி அளிப்பது நியாயம் எனத் தோன்றும்போது நிறுவனம் அந்த இனத்தை மாவட்ட தொழில் மையத்தைக் கலந்தாலோசிக்கலாம்.

(v) உடல் ஊனமுற்றோர் நலனுக்காக சில திட்டங்களை நிறைவேற்றுதல்.—அரசின் கட்டளைகளுக்கிணங்க, உடல் ஊன முற்றோரில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு எளிய நிபந் தனைகளின்பேரில் குறைந்த வட்டி வீதத்தில் நிதி உதவி அளிக்க, நிறுவனம் ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்து உள்ளது.

(vi) நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள்.—வணிகஞ் சார்ந்த கணக்கு முறையிலிருந்து ரொக்க அடிப்படைக் கணக்கு முறைக்கு மாற்றுவது குறித்த செயற் குறிப்பைப் பரிசீலித்தல்.—1980–81 ஆம் கணக்கு ஆண்டிலிருந்து நிறுவனம் தன்னுடைய கணக்கு முறையை வணிகஞ் சார்ந்த அடிப்படையிலிருந்து ரொக்க அடிப் படைக்கு மாற்றிக்கொண்டுள்ளது. இந்த மாற்றத்தினால் 1980–81 ஆம் ஆண்டுக்குரிய கணக்குகளை நிறுவனம் மீண்டும் எழுத வேண்டியுள்ளது. கணக்குகளை முடிப்பதற்கும் தணிக் கைக்கும் மேலும் சற்று காலமுமாகும்.

(vii) செலுத்தத் தவறிய தொகைகள் மீது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கூடுதல் வட்டி விதித்தல்.—கூடுதல் வட்டி விதிப்பு தற்போது பணம் செலுத்தத் தவறியவர்கள் மீண்டும் கடன் வாங்கும் விருப்பத்தைக் குறைக்கும் என்பதாலும் சில தொழில் முனைவர்களுக்கு உண்மையான இடர்பாடுகள் ஏற்படும்பொழுது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கூடுதல் வட்டி விதித்தால் அது நிறுவனத்திற்கு நிதி நெருக்கடியை ஏற் படுத்தும் என்பதாலும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியை கூடுதல் வட்டி விதிப்பு தொடர்பாக அதனுடைய நிலைமையை மறு ஆய்வு செய்யும்படி கேட்டுக்கொள்ள நிறுவனம் முடிவு செய்துள்ளது.

(viii) புதிய தொழில் முனைவர்களுக்கு, இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் தொடக்க மூலதன உதவித் திட்டம்.—தமிழ் நாட்டில் மேற்கூறிய திட்டத்தை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் சார்பாகச் செயல்படுத்த நிறுவனம் அதிகாரம் பெற்று உள்ளது,



(xi) வட்டார/கிளை மேலாளர்களுக்கு ஒப்புதலளிக்கும் அதிகாரத்தை அதிகப்படுத்துதல்.—'' போக்குவரத்துக் கடன் உதவி '' வழங்க ஒப்புதலளிக்க உரிமை பெற்ற வட்டாரகிளை மேலாளர்கள், மேலாளர்கள், உதவி மேலாளர் (திட்டம்) ஆகி யோர் ஒப்புதல் அளிப்பதற்கான தற்போதுள்ள அளவு 50,000 ரூபாயிலிருந்து 75,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(x) உலக வங்கி கடனுதவித் திட்டத்தின் கீழ் கடன் ஒப் பளிப்பு.—திட்டம் இயந்திரங்களை இறக்குமதி செய்வதாக இருந் தாலும், சாதாரண திட்டத்தின் கீழ் கடனுக்கு ஒப்புதலளிக்க நிறுவனம் அதிகாரம் பெற்றுள்ளது. இத் திட்டம் சாதாரணத் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப் பெற்றிருந்தாலும் தேவைப் பட்டால், பின்னொரு நாளில் உலக வங்கி கடனுதவித் திட்டத் தின் ஒப்புதளிக்கப்பட்டதாக மாற்றிக் கொள்ளலாம் என்ற நிபந் தனைக்குட்பட்டு கடனுக்கு ஒப்புதளிக்கப் பெறும். இம்மாற்றத் திற்கு மறுப்பேதும் இருக்கக்கூடாது.

8. கடன் வசூல்: மின் வெட்டு, நிலக்கரி, சுட்ட கரி இன்றி யமையா மூலப் பொருட்கள் முதலியன கிடைக்காமை போன்ற இடர்பாடுகளால் கடனுதவி பெற்ற பிரிவுகளின் உற்பத்தியும் இலாபமும் பாதிக்கப்பட்டிருந்தாலும், அவைகளிடமிருந்து நிறு வனம் பெருமளவிற்கு கடன் வசூல் செய்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் நிறுவனம் செய்துள்ள வசூல் பின்வருமாறு :

| 1980–81. | 1981–82. |
|---|---|
| (1) | (2) |
| (1980 டிசம்பர் வரை). | (1981 டிசம்பர் வரை.) |

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 621·73 | 800.69 |

வட்டியைச் செலுத்துவதற்கு காலத்தை நீட்டித்தல் கடனின் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்தும் தவணையை மாற்றி அமைத்தல்' வட்டி, அசல் தொகைகளைச் செலுத்த வேண்டிய தவணைகளைத் தள்ளி வைக்க அனுமதித்தல் முதலியவற்றிற்கு அனுமதி வழங்குவதன் வாயிலாக இடர்பட்டுக் கொண்டிருக்கும் தொழிற் பிரிவுகளிடம் நிறுவனம் தாராளமாகவும் நீக்கப் போக்கான முறையிலும் நடந்து வருகிறது.

9. நிதி முடிவுகள்.—ஏற்கனவே கூறியவாறு, 1980–81 ஆம் ஆண்டில் நிறுவனம் கணக்கு முறையில் ஒரு மாற்றத்தை ஏற் படுத்தியுள்ளது. வாராக் கடன்களைக் கணக்கிலிருந்து தள்ளி

விடுவதற்கு முன்பாக ஆதாயம் (வரி செலுத்துவதற்கு முன்னதாக 1980–81, 1981–82 ஆம் ஆண்டுகளுக்கு) பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது :—

1981–82 (1982 மார்ச் வரை) .. ரூபாய் 125·00 இலட்சம்.

1981–82 (1982 மார்ச் வரை மதிப்பீடு) ரூபாய் 175·00 இலட்சம்

10. வட்டார கிளை அலுவலங்கள்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தற்பொது கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரண்டு இடங்களின் வட்டார அலுவலங்களும், கடலூர், தர்மபுரி, ஈரோடு, நாகர்கோவில், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் ஆகிய பத்து இடங்களில் கிளை அலுவலங்களையும் சென்னையில் தலைமை அலுவலகத்தையும் நிறுவியுள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் 1981—82 ஆம் ஆண்டின் (31—12—1981 வரை) செயல்திறன் 1980—81ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காணலாம்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்.

(டான்சி.)

தொழில் வணிகத் துறையின் கீழிருந்த் சிறு தொழிற்சாலைகளை ஏற்று வணிக முறையில் நடத்தும் பொருட்டு 1965 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி), அத்தொழிற்சாலைகளை 1965 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் ஏற்றுக்கொண்டது. இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட தொழிற்சாலைகளின் இருப்புகளின் மதிப்பில் ரூபாய் 400 இலட்சம் அரசால் செலுத்தப்பட்ட பங்குமூலதனமாகவும், எஞ்சிய தொகை அரசிடமிருந்து பெறப்பட்ட கடனாகவும் கருதப்பட்டது.

தற்போதுள்ள சில தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும் திட்டம் உட்பட இந்நிறுவனம் மேற்கொள்ளும் பல புதிய திட்டங்களை செயற்படுத்துவதற்கு, நிலையான மூலதனச் செலவை ஏற்கும் பொருட்டு, இந்நிறுவனத்திற்கு தேவையான நிதி உதவியை , பங்கு மூலதனமாகவோ அல்லது கடனாகவோ அரசு இந்நிறுவனத்திற்கு அளித்து உதவி வருகிறது. புதிய திட்டங்களுக்கான உதவியாக 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 25-00 இலட்சம் பங்கு மூலதனமாக இந்நிறுவனத்திற்கு அரசு அளிக்க



டத்தேசித்துள்ளது. 1981—ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதியில் உள்ளபடி டான்சியின் பங்கு மூலதனம் மற்றும் கடன் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது :—

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| (1) அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | .. | 10·00 |
| (2) செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | .. | 7·72 |
| (3) அரசிடமிருந்து வாங்கிய கடன் | .. | 8·81 |

2. தொழிற்சாலைகளிடையே செயற்படுத்தப்பட்ட சீரமைப்பின் விளைவாக தற்போது இந்நிறுவனத்தில் 56 உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளை கீழ்க்குறிப்பிட்டவகைகளாக பிரிக்கலாம் :—

(1) கட்டுமான/வடிவமைப்புத் தொழிற்சாலைகள்.

(2) கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைகள்.

(3) பொறியியல் தொழிற்சாலைகள்.

(4) இரும்புப் பொருட்கள் வடிவமைப்பு/உற்பத்தித் தொழிற்சாலைகள்.

(5) தச்சுத் தொழிற்சாலைகள்.

(6) தோல் தொழிற்சாலைகள்.

(7) பல்வகை மற்றும் சிறப்பு வகைத் தொழிற்சாகைலள்.

டான்சி நிறுவனத்தின் பெரும்பாலான் தொழிற்சாலைகள் தனியார் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் குறிப்பிட்டபணிகளை ஏற்றுமுடிப்பதோடு மட்டுமல்லாமல், அரசுத் துறைகள் மற்றும் இரயில்வே, மின்சார வாரியம், தபால் தந்தித் துறை. குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசு சார்புடைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் பணிகளையும் ஏற்று நிறைவேற்றி வருகின்றன.

3. இந்நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் 1965–66 ஆம் ஆண்டில் ரூபாய் 389 இலட்சமாக இருந்த உற்பத்தியானது, 1980–81ஆம் ஆண்டில் ரூபாய் 2,060 இலட்சமாக சீராக அதிகரித்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 1,537 இலட்சமாக இருந்த உற்பத்தி, 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 1,835 இலட்சமாகவும், மீண்டும் 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 2,060 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. இந்த இரண்டாண்டுகளில் உண்டான

பல்வகை பற்றும் சிறப்புவகை தொழிற்சாலைகள் :

கிண்டியிலுள்ள, வார்ப்பட தொழிற்சாலை, 625 விசை செக்குகளை உற்பத்தி செய்து கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்கு 1980—81-ல் வழங்கியுள்ளது. மேலும், 400 விசைச் செக்குகள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. மேலும் ரூபாய் 20 இலட்சத்திற்கான பணி ஆணை இத்தொழிற்சாலை களால் பெறப்பட்டுள்ளது.

உதகமண்டலத்திலுள்ள டான்சி, கைக்கடியார இணைப்புத் தொழிற்சாலை, கடந்த ஆண்டில் அடைந்த ரூ. 12·14 இலட்சம் உற்பத்தியை 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 18·03 இலட்சத்திற்கு உயர்த்தியுள்ளது. இத்தொழிற்சாலை, முழு உறுப்புகளையும் இணைக்கும் பணியில் ஒரு நாளக்கு 1,000 கைக்கடியாரங்களை உருவாக்கும் திறனை அடைந்துள்ளது. இத்தொழிற்சாலையில் 104 பேர் பணி புரிகின்றனர். அவர்களில் 85 பேர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அம்பத்தூரிலுள்ள டான்சி ''பாலிஷ்'' தொழிற்சாலை, கடந்த ஆண்டில் அடைந்த ரூ. 23·52 இலட்சம் உற்பத்தியை 1980—81 ஆம் ஆண்டில் ரூபாய் 28·69 இலட்சமாக உயர்த்தியுள்ளது. இத்தொழிற்சாலை, பிரெஞ்சு பாலிஷ், டிரான்ஸ்ப்ரண்ட் பாலிஷ் (Transparent Polish) பட வார்னிஷ், தின்னர், ஜி. பி. தின்னர், என். சி. தின்னர், (N.C. Thinner) காஸ்கெட் ஷெல்லாக் என். சி. லேக்கர் (N. C. Lacquar) போன்ற பொருட்களை உற்பத்தி செய்கிறது. இரண சிகிச்சைக்கு பயன்படக்கூடிய சாராவி (Surgical sprit) தயாரிப்பதற்காக இத்தொழிற்சாலையை விரிவுபடுத்தும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு, தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையில் மேற்கொண்டு பலவிதமான பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டு, சாலைகளில் அடையாள குறிகள் இடுகின்ற மஞ்சள் மற்றும் வெள்ளை நிற வர்ணம் தயாரிக்கும் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் பரிசீலனையில் உள்ளது. ரெட் ஆக்சைடு (Red Oxide) மற்றும் எனாமல் வர்ணங்களைத் தயாரிக்கும் ஒரு திட்டமும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 44 பேர்கள் வேலை வாய்ப்பு பெறும் இத்தொழிற்சாலையில் இது வரை 30 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

5. கீழ்க்கண்ட சில புதிய திட்டங்களும் ஆய்வில் உள்ளன.

(1) பெரம்பூரிலுள்ள தோல் தொழிற்சாலையை விரிவாக்கும் திட்டம்.

(2) ஜி.எல்.எஸ். விளக்குகள் உற்பத்தித் தொழிற்சாலை.



6. 6,000 நபர்களுக்கு டான்சி நேரிடையாக வேலை வாய்ப்பினை அளித்து வருகிறது. இந்நிறுவனம் அதனது பணியாளர்களுக்காக (தொழிலாளர்கள் தவிர) தொழிலாளர் வைப்பு நிதித் திட்டத்திற்குப் பதிலாக ஓய்வூதிய திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இத் திட்டம் அமுலாக்கப்டும்போது இந்நிறுவனத்தில் நிரந்தரமாக சேர்க்கப்பட்ட அரசு பணியார்கள் மற்றும் அவர்களையொத்த ஏனைய நிறுவனப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது மாதந்தோறும் ஓய்வூதியம் பெறுவர்.

7. டான்சியின் கிளை நிறுவனமான தமிழ்நாடு மொபெட் நிறுவனம் 19—8—1977 முதல் செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே தயாரித்து அளித்து வந்த ''மயூரம் டீலக்ஸ்'' என்ற பெயருள்ள வாகனத்திற்குப் பதிலாக ''மயூரம் ஸ்போர்ட்ஸ்'' என்ற பெயருடன் ஒரு புதிய மாதிரியான வாகனத்தை இப்போது இந்நிறுவனம் தயாரித்து வழங்கி வருகிறது. அதில் இரட்டை அமருமிடம், பெரியளவிலான பெட்ரோல் தொட்டி, தனியான முன் பலகை, அதிர்ச்சி உட்கொள்ளும் சாதனங்கள் முதலிய தொழில் நுட்ப அம்சங்கள் உள்ளன. 1979—80 மற்றும் 1980—81-ல் இந்நிறுவனம் முறையே 1,610 மற்றும் 1,654 மோபெட் வாகனங்களை உற்பத்தி செய்தது. 1981 ஜனவரி திங்கள் முதல் மோபெட் விற்பனையில் நலிவுறும் போக்கு ஏற்பட்டுள்ளதால் குறிப்பிட்ட அளவு மோபெட் உற்பத்தியுடன் ஏனைய பணிகளுக்கான ஆணைகளையும் ஏற்பது என இந்நிறுவனம் முடிவெடுத்து (1) இயந்திரங்கள் தொகுதி, (2) கருவி அறை மற்றும் (3) மோபெட் இணைத்தல் மற்றும் உலோகத் தகடு வடிவமைப்பு வேலை தொகுதி ஆக, மூன்று பிரிவுகளைக் கொண்டு 1—7—1981 முதல் இந்நிறுவனம் செயல்படுகிறது. பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆக 250 நபர்களுக்கு இந்நிறுவனம் வேலையளித்து வருகிறது.

கோரிக்கை எண். 5.

முத்திரைத் தாள்கள்—நிருவாகம்.

கொள்கை விளக்கக் குறிப்பு.

(176ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1. பொது ;

சொத்துக்களை வாங்குதல், விற்பனை செய்தல் குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதற்கு, 1899-ம் ஆண்டின் இந்திய முத்திரைத் தாள் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) வகை செய்கிறது. முத்திரைத்தாள் நிருவாகத்தைப் பொறுத்த மட்டில், பத்திரப் பதிவுத் துறைத்தலைவரே தலைமைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி ஆவார்.

2. தமிழ்நாடு முழுவதற்கும், அஞ்சல்சாரா முத்திரைத் தாள்களை வழங்குவதற்குரிய தேவைக் குறிப்புகளை, முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். மாவட்டங்களிலுள்ள கருவூல அதிகாரிகளும், சென்னை மாநகரிலுள்ள முத்திரைத் தாள் உதவிக் கண்காணிப்பாளரும் முத்திரைத்தாள் வருவாய் நிருவாகத்தைக் கவனிக்கின்றனர். மேலும், அனைத்து கருவூலங்களிலும், விற்பனை நிலையங்களிலும், போதிய அளவு முத்திரைத் தாள்கள் எப்போதுமே இருப்பில் இருக்கின்றனவா என்பதை கவனிக்கும் பொறுப்பும், பொது மக்களின் முத்திரைத் தாள் தேவையை நிறைவு செய்யும்பொருட்டு முத்திரைத் தாள்களை வழங்கி, விற்கும் பொறுப்பும் இவர்களையே சாரும். கருவூல அதிகாரிகளும் அலுவல் முறையிலான முத்திரைத்தாள் விற்பனையாளர்களாவார். நிலத்தின் மதிப்பு உயர்ந்துள்ளதன் விளைவாக, நீதித்துறைசாரா முத்திரைத் தாள்களுக்குரிய தேவை கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. நீதிமன்றத்துறை சாரா முத்திரைத் தாள்களை விற்பதில் செயற்கையாக ஏற்படுத்தப்படும் தட்டுப்பாட்டையும், கள்ளச்சந்தை விற்பனையையும் தவிர்க்கும் பொருட்டு, நீதித்துறைசாரா முத்திரைத் தாள்களை, எல்லா பத்திரப் பதிவு அலுவலகங்களிலும் விற்க அரசு தற்போது ஏற்பாடு செய்துள்ளது.

3. முத்திரைத் தாள்களுக்குரிய தேவையைப் கணித்தலும் முத்திரைத் தாள்களை வழங்குதலும்.

20 ரூபாய்க்கும் அதிகமாக மதிப்புள்ள முத்திரைத் தாள்களுக்குரிய தேவைக் குறிப்பு ஆண்டுக்கு ஒரு முறையும் 20 ரூபாய் அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள முத்திரைத்தாள்களுக்குரிய தேவைக் குறிப்புகள் நான்கு திங்களுக்கு ஒரு முறையும் கருவூலங்களாலும், முத்திரைத் தாள் உதவிக் கண்காணிப்பாளராலும் கணிக்கப்படுகின்றன. இத்தேவைக் குறிப்புகள் முத்திரைத் தாள் கண்காணிப்பாளரால் ஒருங்கிணைத்து தொகுக்கப்பட்டு நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் மையப் பண்டக சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இத் தேவைக்குறிப்புகளைத் தொகுக்கையில், பொது மக்களின் முத்திரைத் தாள் தேவையையும் பொதுமக்களின் அவசர எதிர்பாராத தேவையை நிறைவு செய்யும் வகையிலும், அனைத்து மாவட்ட, வட்டத் தலைமை பீடங்களில் எல்லா மதிப்பிலும் முத்திரைத் தாள்கள் போதுமான அளவிற்கு இருப்பில் வைத்திருக்க முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் கருத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளுகிறார். குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத்தாள், ஒரு குறிப்பிட்ட முத்திரைத் தாள் விற்பனை நிலையத்தில் இல்லாது போனால் மாநிலத்



திற்குள்ளேயே அவை அதிகமாயிருக்கிற மாவட்டத்திலேயிருந்து தேவைப்படுகின்ற மாவட்டத்திற்கு மாற்றிக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

4. வருவாயில் பெரும்பகுதி நீதித்துறை சாரா முத்திரைத் தாள்களின் விற்பனையிலிருந்து கிடைக்கிறது. பெரும்பாலான பத்திரங்கள், வீடு, நிலம் முதலிய சொத்துக்களின் அங்காடி மதிப்பையொட்டி முத்திரைத் தீர்வை விதிக்கப்படத் தக்கவையாகும். இவ்வகையான சொத்துக்களின் வெளிச்சந்தை மதிப்பு பற்றிய போதிய விவரங்களை பத்திரப் பதிவு அதிகாரிகள் நன்கறியச் செய்யும் பொருட்டு, அவர்களுக்கு வழிகாட்டிப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தின் வெளிச் சந்தை மதிப்பு, முற்றிலும் குறைத்துக் காட்டப்பட்டுள்ளதென்று பத்திரப் பதிவு அதிகாரிகள் கருதினால் 1899-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47/A (1) பிரிவின்படி அச்சொத்தின் உண்மையான அங்காடி மதிப்பை நிர்ணயிக்க, அப்பத்திரம் தற்போது கலெட்டருக்கு (கோட்டாட்சியருக்கு) அனுப்பப்படுகிறது. இப்பொழுது பத்திரப் பதிவுத் துறைத் தலைவரே தலைமைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதால் சொத்துகளின் அங்காடி மதிப்பை நிர்ணயிக்கும் பணியைப் படிப்படியாக மாவட்டப் பதிவாளர்களிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. இப்பணியை அவர்கள் செவ்வனே மேற்கொள்ளும் வண்ணம் அவர்களுக்கு நில அளவை நில வரி ஏற்பாட்டு முறையில் ஒரு குறுகிய காலப் பயிற்சி அளிக்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47A (1) பிரிவின் கீழ் அங்காடி மதிப்பைத் தீர்மானிக்கும் பணியில் மாவட்டப் பதிவாளர்கள் நன்கு தேர்ச்சி பெற்று, இப்பணியை படிப்படியாக மேற்கொள்ளுவர். இப்பணியில் முதற்கட்டமாக திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், வடஆற்காடு வருவாய் மாவட்டங்களில் அந்தந்தக் கோட்டாட்சியர்களுக்கு 31—12—79-க்கு முன்னரே அனுப்பப்பட்டு, இன்னும் முடிவுறாமல் இருக்கும் கோப்புக்களை உடனடியாக முடிப்பதற்காக மாவட்ட தனிப் பதிவாளர், தேர்வு நிலை துணைப் பதிவாளர் ஒருவர், உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய நான்கு பிரிவுகள் அமைத்திட அரசு அனுமதியளித்துள்ளது.

5. வீடு, நிலம் போன்ற இயங்காச் சொத்துக்களின் மதிப்பு, இம்மாநிலம் முழுவதிலும் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. எனவே, பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டிக் குறிப்புப் பதிவேடுகள் 1-9-81 ஆம் நாளன்றிலிருந்தவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

6. பல மாடிக் குடியிருப்புகளை அல்லது அடுக்கு வீடுகளைக் கட்டி, விற்பனை செய்வதற்காக வர்த்தகர்களும், ஒப்பந்தக் காரர்களும் செய்துகொள்ளும் ஒப்பந்த உடன்பாடுகள் தற்போது பதிவு செய்யப்படுவதில்லை. இதனால் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையில் கணிசமான தொகையைச் செலுத்தாமல் ஏமாற்றி வருகின்றனர் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இக்குறைபாட்டை நீக்கி, வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு, அரசு சில வரையறைகளை விதிக்கக் கருதுகிறது. அத்தகைய பல மாடிக் குடியிருப்புகளை அல்லது அடுக்கு வீடுகளை விற்பனை செய்ய ஒப்பந்தம் மேற்கொள்ளும்போது ஒவ்வொரு அடுக்கு அல்லது குடியிருபபினை தனிப்பட்டவர்களுக்கும், அடி மனையை, எல்லா குடியிருப்புதாரர்களுக்கும் சொந்தமாக்கி விற்க மேற்கொள்ளும் ஒப்பந்தப் பத்திரங்கள்/உடன்படிக்கைகள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டுமென விதிக்கவும், அந்த வீட்டுமனை சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சி எல்லைகளுக்குள்ளும் சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகராட்சி எல்லைகளுக்குள்ளும் அமைந்திருந்தால், விற்பனை மதிப்பில், ஒவ்வொரு 100 ரூபாய்க்கும் அல்லது அதன் பகுதிக்கும் 13 ரூபாய் வீதமும், அந்த மனை வேறு இடங்களில் அமைந்திருந்தால், விற்பனை மதிப்பில் ஒவ்வொரு 100 ரூபாய்க்கும் அல்லது அதன் பகுதிக்கும் 12 ரூபாய் வீதமும் முத்திரைத்தாள் தீர்வை விதிக்கவும், மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்காக, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தையும், 1908 ஆம் ஆண்டு இந்தியப் பத்திரப் பதிவுச் சட்டத்தையும் தகுந்த முறையில் திருத்தவும் கருதப்பட்டுள்ளது, இந்த நடவடிக்கையின் மூலம் தற்போது அரசுக்கு நிகர வருமானம் கூடுதலாக ரூபாய் 540 இலட்சம் கிடைக்கும் என்றும் இவ்வகை கட்டுமானப் பணி தமிழ்நாட்டில் அண்மையில் தொடங்கப் பட்டுள்ளது என்பதால், இனி வருங்காலத்தில் இத் தொகை கணிசமான அளவுக்கு அதிகரிக்கக்கூடும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. எனவே இது நீட்சிப் போக்குள்ள வருவாய் வாயிலாக அமையும்.

7. கிரயப் பத்திரங்கள், தானப் பத்திரங்கள், பரிமாற்றப் பத்திரங்கள் முதலியவற்றின் மீது செலுத்தப்படும் முத்திரைத் தீர்வையை உள்ளாட்சி மன்றங்கள் சார்பில் வசூலித்து, அவ்வசூல் தொகையைப் பல்வேறு உள்ளாட்சி மன்றங்கள், நகரியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கு ஒதுக்குவது பத்திரப் பதிவுத் துறை செய்து வரும் மற்றொரு முக்கிய பணியாகும். இவ்வகையிலான முத்திரைத் தீர்வை வசூல். ஒதுக்கீடு முதலியவை குறித்த விவரங்கள் வருமாறு :—





| ஆண்டு. (1) | வசூலிக்கப்பட்ட தீர்வை. (2) | ஒதுக்கப் பட்ட தீர்வை. (3) |
|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்). |
| 1979–80 .. .. .. | 13.14 | 12.75 |
| 1980–81 .. .. .. | 16.27 | 18.78 |

8. ஒவ்வொர் முத்திரைத்தாள் இனத்தின் கீழும் வரவு, விற்பனை விவரங்கள் வருமாறு :—

| முத்திரைத்தாள்களின் வகை. | வரவுகள். | |
|---|---|---|
| | 1980–81 ஆம் ஆண்டில் வரவுகள் (1980 ஏப்ரல் முதல் 1981 மார்ச் வரையில்). | 1981–82 ஆம் ஆண்டில் வரவுகள் (1981 ஏப்ரல் முதல் 1981 டிசம்பர் வரை.) |
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1 நீதித் துறை சாரா முத்திரைத் தாள்கள். | 40,38,55,538.35 | 37,17,73,668.95 |
| 2 நீதித் துறை சார்ந்த முத்திரைத் தாள்கள். | 6,17,03,650.79 | 5,04,15,766,63 |
| 3 உண்டியல் முத்திரை தாள்கள் .. | 14,24,010.75 | 13,34,565.00 |
| 4 பசை தோய்த்த முத்திரைத் தாள்கள். | 2,25,63,142.70 | 1,90,87,200.51 |
| 5 பல்வகை .. .. | 5,00,89,419.06 | 4,25,83,607.48 |
| மொத்தம் .. | 53,96,35,761.65 | 48,51,94,808.57 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கழித்திடுக— | | |
| திருப்பிச் செலுத்தப் படும் தொகைகள். | | |
| நீதித் துறை சாரா முத் திரைத் தாள்கள். | 15,61,67,193.97 | 12,91,68,170.85 |
| நீதித் துறை சார்ந்த முத்திரைத்தாள்கள். | 26,72,535.83 | 20,02,631.39 |
| திருப்பிச் செலுத்தப் படும் மொத்தத் தொகை .. .. | 15,88,39,729.80 | 13,11,70,802.24 |
| செலவுகள் :— | | |
| 1 முத்திரைத் தாள் கள் விற்பனையில் தள்ளுபடி. | 47,21,321.90 | 40,67,304.52 |
| 2 பணியாளர்கள் செலவு | 7,98,605.85 | 5,44,974.96 |
| 3 நாசிக்கிலுள்ள முத் திரைத் தாள்கள் அச்சகத்திற்குச் செலுத்தத்தக்க முத்திரைத் தாள் களின் மதிப்பு. | 42,84,792.07 | 10,55,707.41 |
| மொத்தச் செலவு | 98,04,719.82 | 56,67,986.89 |
| மொத்த வருவாய் | 53,96,35,761.65 | 48,51,94,808.57 |
| மொத்தச் செலவும் திருப்பிக் கொடுக் கப்பட்ட தொகை களும். | 16,86,44,449.62 | 13,68,38,789.13 |
| நிகர வருவாய் .. | 37,09,91,312.03 | 34,83,56,019.44 |



9. தகுதியுடைய அற நிறுவனங்களுக்கும் கல்வி நிறுவனங் களுக்கும் முத்திரைத் தீர்வையில் ஒரு பகுதி அல்லது முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

10. முத்திரைத்தாள் வருவாய் நிருவாகம் மனநிறைவு அளிப்ப தாக உள்ளது.

கோரிக்கை எண் 6.

பத்திரப்பதிவு கொள்கை விளக்கக் குறிப்பு.

1834ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத் தில் பத்திரப் பதிவுத்துறை அமைக்கப்பட்டது. இது 1864-ஆம் ஆண்டில் தனித் துறையாக அமைக்கப்பட்டது. இத்துறை அமைக்கப்பட்டு நூறாண்டுகளுக்கு மேல் ஆகின்றது. பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராவார். இத் துறை முக்கியமாக 1908ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் 16/1908) செயல்படுவதை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள போதிலும், இத் துறையின் தலைவர் பிறப்பு-இறப்பு திருமணங்களைப் பதிவு செய்யும் தலைமைப் பதிவாளராகவும், சீட்டு நிதிகளின் இயக்குநராகவும் இருக்கிறார். வருவாய்த்துறை வாரியம் கலைக்கப்பட்டதன் விளைவாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின்படி வருவாய் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாகவும் இவர் விளங்குகிறார்.

2. 1908ஆம் ஆண்டு இந்திய பத்திரப்பதிவுச் சட்டத்தின்படி பெரும்பாலும் சொத்துரிமை மாற்றம் குறித்த ஆவணங்களை பதிவு செய்யும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இத்துறைப் பத்திரங்கள் தொடர்பான பதிவேடுகளைப் பாது காத்து வைத்து வருகின்றது. எனினும், அவ்வப்போது பின் வரும் சட்டங்கள் செயல்படுவதை நிர்வகிக்கும் பணியும் பத்திரப் பதிவுத்துறையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

1. இந்தியக் கூட்டுப்பங்குச் சட்டம், 1932.
2. சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975.
3. பிறப்பு-இறப்பு, திருமணப் பதிவு குறித்து பல்வேறு சட்டங்கள்.
4. தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம், 1961.
5. பார்சி திருமணம், திருமண முறிவுச் சட்டம், 1936.
6. வரதட்சணை ஒழிப்புச் சட்டம், 1961.

7. இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899.

8. வணிகர்சாரா நிறுவனங்கள் சட்டம், 1972 (1–7–81-லிருந்து).

3. துறையின் நிர்வாக அமைப்பு.—(i) துறைத் தலைவர் : பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராவார். பத்திரப் பதிவுத்துறைக் கூடுதல் தலைவர் ஒருவரும், பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர் தரத்தில் சட்ட அதிகாரி ஒருவரும், சீட்டு நிதி கூடுதல் இயக்குநர் ஒருவரும், பத்திரப் பதிவுத்துறைத் தலைவரின் (பொது) நேர்முக உதவியாளர் (பத்திரப்பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் தரத்தில்) ஒருவரும், பத்திரப் பதிவுத்துறைத் தலைவரின் (கணக்கு) (முதுநிலைக் கணக்கு அதிகாரி தரத்தில்) நேர்முக உதவியாளர் ஒருவரும், 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ் கட்டடங்களை மதிப்பிடுவதற்குத் தலைமையிடத்திலுள்ள உதவி நிர்வாகப் பொறியாளர் ஒருவரும் இவருக்கு உதவி புரிகின்றனர்.

(ii) பத்திரப் பதிவுத்துறை அதிகாரிகள், பணியாளர்களின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் (ஐ.ஏ.எஸ்.) தரத்தில் .. .. .. .. .. .. | 1 |
| பத்திரப் பதிவுத்துறை கூடுதல் தலைவர் .. .. | 1 |
| பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர் தரத்தில் சட்ட அதிகாரி .. .. .. .. .. | 1 |
| பத்திரப் பதிவுத்துறைத் துணைத் தலைவர்கள் .. | 4 |
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவரின் (பொது) நேர்முக உதவியாளர் .. .. .. .. .. | 1 |
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவரின் (கணக்கு) முதுநிலை கணக்கு அதிகாரி தரத்தில் நேர்முக உதவியாளர் .. .. .. .. .. .. | 1 |
| சீட்டு நிதி கூடுதல் இயக்குநர் (பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர் தரத்தில்) .. .. | 1 |
| பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர்கள் .. | 8 |
| மாவட்டப் பதிவாளர்கள் .. .. .. .. | [illegible] |



| | |
|---|---|
| சீட்டு நிதி ஆய்வு அதிகாரி .. .. .. .. | 1 |
| உதவி நிர்வாக பொறியாளர் .. .. .. | 1 |
| சார் பதிவாளர்கள் .. .. .. .. .. | 619 |
| உதவியாளர்கள் .. .. .. .. .. | 659 |
| இளநிலை உதவியாளர்கள் .. .. | 1062 |
| சுருக்கெழுத்து தட்டச்சர்கள்.... .. .. | 8 |
| தட்டச்சர்கள் .. .. | 84 |
| தற்காலிக பிரிவு எழுத்தர்கள் .. .. | 617 |
| ஆவண எழுத்தர்கள் .. .. | 52 |
| இளநிலை பதிவேடு கட்டுபவர்கள் .. .. | 21 |
| அடிப்படை பணியாளர்கள் .. .. | 1,173 |
| இரவு நேர காவலர்கள் .. .. | 179 |

(iii) பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவர் :—இத்துறை 1–8–1981–லிருந்து 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரின் பொறுப்பில் உள்ளது. பத்திரப் பதிவுத் துணைத் தலைவர்கள் வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு பத்திரப் பதிவுத் துணைத் தலைவருடன், பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர்கள் இருவர் சேர்க்கப்பட்டுள்ளனர். மண்டல அலுவலகத்தை பத்திரப் பதிவு ஆய்வாளர் அலுவலகமாகச் செய்வதற்காக, பத்திரப் பதிவு ஆய்வாளர் அலுவலகங்கள், பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரது அலுவலகங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் சுமார் 10 முதல் 13 வரையிலான பத்திரப் பதிவு மாவட்டங்கள் வருகின்றன. அலுவலகங்களை ஆய்வு செய்தல், விசாரணை செய்தல், மாவட்டப் பதிவாளர், பத்திரப் பதிவு ஆய்வாளர்கள் பணி முன்னேற்ற அறிக்கைகளை ஆய்வு செய்தல் முதலிய பணிகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்களது அதிகார வரம்புக்குள் உள்ள பத்திரப் பதிவு ஆய்வாளர் அலுவலகங்கள், மாவட்டப் பதிவாளர்கள், சார் பதிவாளர்கள், ஆகியோர் மீது கட்டுப்பாட்டு அதிகாரத்தையும் மேற்பார்வை அதிகாரத்தையும் இவர்கள் செலுத்துவர். பதிவாளர் அலுவலகங்கள் குறித்த ஆண்டு ஆய்வுக் குறிப்புகள் பத்திரப் பதிவுத் துறை துணைத் தலைவரால் முடிவு செய்யப்படுகின்றன. மேலும் அவர்கள் 31–12–1981 உடன் முடிவடைந்த காலாண்டிலிருந்து ஒவ்வொரு காலாண்டுக்கும் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் கீழும் 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழும் கிடைக்கும் வருவாய் குறித்தும் கண்காணிக்கின்றனர்.

(iv) பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர்:—மதுரை, திருநெல்வேலி, கடலூர், தஞ்சாவூர், சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆக எட்டு வட்டாரங்

களாக இம்மாநிலம் பிரிக்கப்பட்டு பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளரின் கீழ் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஐந்து அல்லது ஆறு பத்திரப் பதிவு மாவட்டங்கள் உள்ளன. பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளரின் முக்கிய அலுவல்கள், சார் பதிவாளர் அலுவலகங்களை திடீரென ஆய்வு செய்தல், தவறான நடத்தை தொடர்பான புகார்கள், சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுதல் குறித்து விசாரணை செய்தல், முதலியவை ஆகும். மேலும் இவர் சங்கங்களையும், சீட்டு நிதிக் கம்பெனிகளையும் ஆய்வு செய்கிறார்.

(v) மாவட்டப் பதிவாளர்கள் :—இந்த எட்டு வட்டாரங்கள் 42 பத்திரப் பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் மாவட்டப் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் 9 முதல் 15 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. மாவட்டப் பதிவாளர்கள் தங்களது மாவட்டங்களிலுள்ள சார் பதிவாளர் அலுவலகங்கள், சங்கங்கள், சீட்டு நிதிக் கம்பெனிகள் முதலியவற்றை ஆண்டுதோறும் திடீரென ஆய்வு செய்கின்றனர். பொது மக்களிடமிருந்து வரும் புகார்களையும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுதல் குறித்த புகார்களையும் விசாரணை செய்கின்றனர். மேலும் சார் பதிவாளர் ஆவணங்களைப் பதிவு செய்ய மறுத்து பிறப்பித்த ஆணைகளுக்கெதிராக வந்த மேல் முறையீடுகளையும் விசாரணை செய்கின்றனர். நிறுவனங்கள், சங்கங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பதிவாளர்களும் இவர்களேயாவர்.

(vi) சார் பதிவாளர் அலுவலகங்கள்:—இம்மாநிலத்தில், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலுள்ள 42 பத்திரப் பதிவுக் கிளை அலுவலகங்கள் உட்பட 492 பத்திரப் பதிவு அலுவலகங்கள் உள்ளன. சார் பதிவாளர், அலுவலகத்தின் தலைவராவார். ஆவணங்கள், சீட்டுகள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்தல், அவை தொடர்பான பதிவேடுகளைப் பேணி வருதல் ஆகியவையே இப்பத்திரப் பதிவு அலுவலகங்களின் முக்கியப் பணிகளாகும். நீதித்துறை சார்பற்ற முத்திரைத் தாள்களும் நீதிமன்ற கட்டணமாக அளிக்கப்படும் முத்திரைத் தாள்களும் விற்பனை செய்யப்படுவது 1977 இல் 25 சார் பதிவாளர் அலுவலகங்களில் முன்னோடித் திட்டமாகத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. 1980 இல் மேலும் 50 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. நில மதிப்பு உயர்ந்துள்ளதனால், நீதித்துறை சார்பற்ற முத்திரைத் தாள்களின் தேவை கணிசமான அளவுக்கு உயர்ந்தது. நீதித்துறை சார்பற்ற முத்திரைத் தாள் விற்பனையில் செயற்கை பற்றாக் குறையும், கள்ள விற்பனையும் ஏற்படுவதற்கான



வாய்ப்பைத் தவிர்ப்பதற்காக, மாநில முழுவதும் எல்லாப் பத்திரப் பதிவு அலுவலகங்களிலும் நீதித் துறை சார்பற்ற முத்திரை தாள்களை விற்பதற்குத் தற்போது அரசு ஏற்பாடு செய்துள்ளது.

(vii) தணிக்கைப் பிரிவு :—இம்மாநிலத்தில், தற்போது 22 துறைத் தணிக்கைப் பிரிவுகள் செயல்படுகின்றன. 2–1–1981–க்கு முன்னர் சார் பதிவாளர் (நிலை 1) தலைமையில் தணிக்கைப் பிரிவு செயல்பட்டது. சார் பதிவாளர் பதவிகள் 22-ம் தற்போது மாவட்டப் பதிவாளர் பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. ஆவணங்களை மதிப்பிடுவதில் தனிக் கவனத்துடன் அவர்கள் பத்திரப் பதிவு அலுவலகக் கணக்குகளைத் தணிக்கை செய்கின்றனர். பத்திரப் பதிவு ஆய்வாளரது மேற்பார்வையின் கீழ் இத் தணிக்கைப் பிரிவு உள்ளது.

(viii) சீட்டு, நிதி சங்கங்கள் பதிவுச்சட்டம்.—சீட்டு, நிதி, சங்கங்கள் பணியில் மாவட்டப் பதிவாளர்களுக்கு உதவி புரிய 40 சார் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

4. நிர்வாக சீர்திருத்தம். (i) சட்டப் பிரிவு :—வருவாய்த் துறை வாரியம் கலைக்கப்பட்ட பின்னர் முத்திரைத் தாள் சட்டத்தின் கீழ் 1–12–1980–லிருந்து பல்வேறு அதிகாரங்கள் பத்திரப் பதிவுத் தலைவருக்கு வழங்கப்பட்டது. எனவே, பத்திரப் பதிவுத் துறை துணைத் தலைவரின் பதவித் தரத்தில் சட்ட அதிகாரி ஒருவர், சார் பதிவாளர் நிலை 1, உதவியாளர் ஒருவர், சுருக்கெழுத்து தட்டச்சர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட தனிப்பட்ட பிரிவு ஒன்று பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவி புரிவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

(ii) கணக்கு அதிகாரி:—நிதி, கணக்குகள், வரவு-செலவுத் திட்டம் ஆகியவை தொடர்பான விஷயங்களில் பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவி புரிவதற்காக முதுநிலை கணக்கு அதிகாரி ஒருவரையும் அரசு நியமித்துள்ளது.

(iii) உதவி நிர்வாகப் பொறியாளர் .—முத்திரைத் தாள் சட்டத்தின் கீழ் கட்டடங்களை மதிப்பிடுவதற்கு தலைமையிடத்தில் உதவி நிர்வாகப்பொறியர்ளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(iv) நிலுவைப் பணிகளை விரைவில் செய்து முடிக்கும் பொருட்டு, இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவின் கீழ் அனுப்பப்படும் குறிப்பீடுகளைக் குறித்து விசாரணை செய்து ஆணைகள் பிறப்பிப்பதற்காக மாவட்டப் பதிவாளர் தலைமையில் 4 வருவாய் மாவட்டங்களில் தனிப்பட்ட தன்னிச்சையாகச்

செயல்படும் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இப்பணி தற்போது கோட்டாட்சியர்களிடமும் மாவட்ட துணை ஆட்சியர்களிடமும் ஒப்படைக்கப்படுகின்றன.

5. **செயற்குறிப்புகள் :**—பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக கிராமப் பகுதிகளிலும் வெகு தொலைவிலுள்ள மலைப் பகுதிகளிலும் சார் பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(i) 1980—81 இல் செங்கற்பட்டு, கோபிசெட்டிப்பாளையம் ஆகிய இரண்டு புதிய பத்திரப் பதிவு மாவட்டங்களும் 1981—82 இல் அரக்கோணம், உதகமண்டலம் ஆகிய இரண்டு புதிய பத்திரப் பதிவு மாவட்டங்களும் அமைக்கப்பட்டன. 1982—83 இல் மேலும் இரண்டு மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது.

(ii) மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் ஏற்கனவேயுள்ள 42 பத்திரப் பதிவு கிளை அலுவலகங்களைத் தவிர 450 சார் பதிவாளர் அலுவலகங்கள் தற்போது உள்ளன. பெரிய சார் பதிவாளர் அலுவலகங்கள் இரண்டாகப் பிரிக்கப்படவேண்மென்று அரசு முடிவு செய்துள்ளது. 1981—82 இல் 15 புதிய அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டன; அவற்றுள் ஒன்று கொல்லி மலையில் உள்ளது. 1982—83 இல் மேலும் 30 சார் பதிவாளர் அலுவலகங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

6. **பணியாளர் மேம்பாடு :** (i) அடிப்படை பணியாளர்களை இரவில் அலுவலகங்களைப் பாதுகாத்து வரும் பணியிலிருந்து விடுவிப்பதற்காக எல்லாப் பத்திரப் பதிவு அலுவலகங்களிலும் இரவுக் காவலாளை நியமிக்க அரசு முடிவு செய்தது. 1980—81-ல் 75 பதவிகளுக்கும், 1981—82-ல் 100 பதவிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. 1982—83-ல் மேலும் 50 இரவு காவலாள் பதவிகளுக்கு அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது.

(ii) பத்திரப் பதிவு அலுவலகங்களில் பெருகிவரும் பணிச் சுமையைச் சமாளிப்பதற்காக இது வரையில் 225 இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1982—83 ஆம் ஆண்டில் மேலும் 50 இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு அனுமதி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(iii) தகுதிபெற்ற தற்காலிக பிரிவு எழுத்தர்களை இளநிலை உதவியாளர்களாகத் தரம் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. தற்காலிகப் பிரிவு எழுத்தர் பதவிகளுக்குப் புதிதாக ஆட்கள் நியமனம் செய்யப்படுவதற்கு 10—11—80லிருந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.



(iv) 31 சார் பதிவ்ாளர் (நிலை II) பதவிகள் சார் பதிவாளர் நிலை I ஆகத் தரம் உயர்த்தப்பட்டன.

(v) சென்னை, மதுரை, கோயம்பத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் சார் பதிவாளர் பதவிகள் மாவட்டப் பதிவாளர் பதவிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன.

(vi) 1982—82-ல் இளநிலை பதிவேடு கட்டுபவர் பதவிகள் 10-க்கும், ஆவண எழுத்த்ர் பதவிகள் 30-க்கும் அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பத்திரப் பதிவு மாவட்டத்துக்கும் உதவியாளர் ஒருவர் மட்டும் இருந்தார். பணியாளர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு ஏதுமில்லாமல் இருந்தது. ஆனால் பதவிகளின் எண்ணிக்கை இப்போது உயர்த்தப்பட்டு, பத்திரப் பதிவுத்துறை பணியாளர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

7. **பத்திரப் பதிவு அலுவலகத்துக்கு மேம்பாடுகள் :** (i) 26 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும், 181 சார் பதிவாளர் அலுவலகங்களும் தற்போது வாடகைக் கட்டடங்களில் உள்ளன. எல்லாப் பத்திரப் பதிவு அலுவலகங்களையும் படிப்படியாக அரசுக் கட்டடங்களில் அமைக்க கொள்கை அளவில் அரசு ஒப்புக்கொண்டது. விழுப்புரம் பத்திரப் பதிவு மாவட்டத்தில் சத்தியமங்கலத்திலுள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு 1980—81-ல் அனுமதி வழங்கப்பட்டது. 1982—83-ல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) தற்போது 21 மாவட்டப் பத்திரப் பதிவாளர்களின் அலுவலகங்களில் மட்டுமே தொலைபேசி வசதிகள் உள்ளன. மேலும் 19 மாவட்டப் பத்திரப்பதிவாளர் அலுவலகங்களுக்கும் சென்னை மாநகரில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் தொலைபேசி வசதிகள் செய்து தருவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. எஞ்சியுள்ள இரண்டு பத்திரப் பதிவு மாவட்டங்களுக்கும் பத்திரப் பதிவுத்துறைத் துணை தலைவர் அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதிகள் செய்து தருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) புதிதாக மேசை, நாற்காலிகளை வாங்கி வழங்க முடிவு செய்துள்ளது. 1981—82-ல் புதிய மேசை நாற்காலிகள் வழங்குவதற்காக ரூ. 4 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

8. பத்திரப் பதிவு நடைமுறையை மேம்படுத்துதல்.—(i) பத்திரங்களைத் தாக்கல் செய்யும் புதிய முறை ஒன்று 1967 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இதனால், பத்திரங்களின் நகலை பத்திரம் பதிவு செய்ய வருபவர்களே தயாரித்து பதிவு செய்வதற்கு மூலப் பத்திரங்களுடன் கொடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அலுவலகத்தைப் பொறுத்த வரையில் முறையாக உரிமம் வைத்துள்ளவர்கள் மட்டுமே அந்த அலுவலகத்தில் பதிவு செய்வதற்குரிய பத்திரங்களின் நகலை எழுதவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பத்திர நகல் எழுதுவோர் உரிம விதிகள் இயற்றப்பட்டன. தற்போது பத்திரம் எழுதுவோருக்குச் சில தகுதிகளை வரையறுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பத்திரம் எழுதுவோருக்கு உரிமங்கள் வழங்குவதற்காக 1908 ஆம் ஆண்டு இந்தியப் பதிவுச் சட்டத்தில் 89 பி பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.

(ii) பொதுமக்களுக்கு பத்திரங்களின் தூயநகலை வழங்கும் பொருட்டு முதற்கட்டமாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள சில சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு நகல் எடுக்கும் இயந்திரங்களை (ஜிராக்ஸ் புகைப்பட நகல்) ரூ. 3,47,060 செலவில் வாங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது). இத்திட்டம் நன்கு செயல்படுகின்றது என்று தெரியவரின் ஏனைய அலுவலகங்களுக்கும் இந்த இயந்திரங்கள் வாங்கப்படும்.

(iii) கையால் எழுதும் நகல்களை அளிப்பதற்குப் பதிலாக தட்டச்சு செய்த பத்திர நகல்களை வழங்குவதற்காக, வருவாய் மாவட்டத் தலைமையிடத்திலுள்ள சார் பதிவாளர் அலுவலகங்களுக்குத் தட்டச்சுப் பொறிகள் வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

9. சீட்டு நிதிகள் நிர்வாகம்.—(i) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் 1–12–1969 முதல் இம்மாநிலம் முழுவதிலும் செயலுக்கு வந்தது. பத்திரப் பதிவுத் துறைத் தலைவரே அலுவல் முறையில் சீட்டு நிதி இயக்குநராவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவிபுரிய பத்திரப் பதிவு ஆய்வாளர் பதவி தரத்தில் சீட்டு நிதிக் கூடுதல் இயக்குநர் ஒருவர் உள்ளார். மாவட்டப் பதிவாளர்கள் சென்னை வடக்கு சென்னை தெற்கு நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் சீட்டு நிதிகளை ஆய்வு செயயும் அதிகாரிகளாக செயலாற்றுகின்றனர். சென்னை (வடக்கு) சென்னை (தெற்கு) அடங்கிய சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் மாவட்டப் பதிவாளர் தரத்தில் சீட்டு நிதி ஆய்வு அதிகாரி ஒருவர் தனியாக உள்ளார். சார் பதிவாளர்கள், சீட்டு நிதிப் பதிவாளர்களாவர். தமிழ்நாடு



1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் செயல்படுவதை நிர்வகிப்பதற்கென்றே பணியாளர்களை நியமிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவ்விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| பத்திரப் பதிவு அலுவலகங்கள் ஆய்வாளர் பதவித் தரத்தில் சீட்டு நிதிக் கூடுதல் இயக்குநர் .. .. .. .. | 1 |
| மாவட்டப் பதிவாளர் பதவித்தரத்தில் சீட்டு நிதிகள் ஆய்வு அதிகாரி .. .. | 1 |
| சார் பதிவாளர் (நிலை II) பதவித் தரத்தில் சீட்டு நிதிப் பதிவாளர்கள் (விசாரணை வழக்கு தொடருதல்) .. | 21 |
| சீட்டு நிதித் தணிக்கையாளர்கள் .. | 10 |
| சார் பதிவாளர் (நிலை I) பதவித் தரத்தில் கண்காணிப்பாளர் .. .. .. | 1 |
| சார் பதிவாளர் (நிலை II) சீட்டு நிதிகள் சங்கங்கள் பதிவுப் பணிகளைக் கவனிப்பதில் மாவட்டப் பதிவாளருக்கு உதவி செய்யும் பொருட்டு.. சார் பதிவாளர்கள் (நிலை II) .. | 40 |

(ii) 1979–80 ஆம் ஆண்டு முடிவில் 16,668 சீட்டு நிதிக் ம்பெனிகள் இருந்தன. 1980–81 ஆம் ஆண்டு முடிவில் சீட்டு திக் கம்பெனிகள் எண்ணிக்கை 17,423 ஆக அதிகரித்துள்ளது. மிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் ட்டு நிதிப் பதிவாளர்கள் வைத்து வரும் பிணைய வைப்புத் தாகையின் மதிப்பு 1980–81 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 14.59 காடியாகும். ஆனால் 1979–80 ஆம் ஆண்டு இறுதியில் இதன் திப்பு ரூ. 12.53 கோடியாக இருந்தது. உயர் நீதி மன்றமும் ச்ச நீதி மன்றமும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் ட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு தடை விதித்ததனால் 1981, வம்பர் திங்களிலிருந்து பிணைய வைப்புத் தொகையின் மதிப்பு றைந்துள்ளது.

(iii) 1980–81 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்படாத 97 ட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது. 63 இனங்களில், முதலாளர் ள், குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப் ட்டது. ஒரு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஏனைய குற்றங்கள் தொடர்பாக நீதி மன்றங்களில் தாக்கல் செய்த 3,029 இனங்களில், 2,944 இனங்களில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனர். வசூலிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை ரூ. 77,895 ஆகும். 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தை நிர்வகிப்பதற்கு 1979–80-ல் ஆன மொத்த செலவு ரூ. 8.07 இலட்சமாகும். 1980–81-ல் ரூ. 8.55 இலட்சமாகும்.

(iv) சீட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து துணை விதிகளைப் பதிவு செய்தல், பத்திரங்களைத் தாக்கல் செய்தல் ஆகியவற்றுக்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள், தணிக்கைக் கட்டணங்கள் முதலியவை இக்கணக்குத் தலைப்பின் கீழ் இத்துறைக்குக் கிடைக்கும் வருவாய்களாகும்.

(v) சீட்டு நிதித் தொழில் அதிக வருமானம் கிடைக்கக்கூடிய ஒரு தொழிலாகும். ஒன்றுமறியாத பலர் சீட்டு நிதியில் சேர்ந்து, பின்னர் சீட்டுத் தொகையைப் பெற முடிவதில்லை. அத்தகையோர் சீட்டு தொகையைப் பெறுவதற்கு அவர்களுக்குப் போதுமான அளவு உதவுவதற்குத் சீட்டு நிதி ஆய்வாளர் அலுவலகத்தால் இயலவில்லை. இதனைத் தவிர்க்கும்பொருட்டு சீட்டு நிதி நிறுவனம் நடத்த அரசு கருதியுள்ளது. சீட்டு நிதி நிறுவனத்தை அமைப்பதற்குத் தனி அதிகாரியாக சீட்டு நிதி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். வரைவுக் குறிப்பாணையும், மாநில சீட்டு நிறுவனம் சம்பந்தப்பட்ட சங்க விதிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சீட்டு நிதி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு சீட்டு நிதி நிறுவனத்தை 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான நடைமுறைகளைக் கம்பெனி பதிவாளருடன் தனி அதிகாரி மேற்கொண்டு வருகிறார்.

10. வருவாய் வழிவகைகள்.—பத்திரப் பதிவுக்காகத் தாக்கல் செய்யப்படும் பத்திரங்கள் மீது விதிக்கப்படுகின்ற முத்திரைத் தாள் கட்டணம், பதிவுக் கட்டணங்கள், பத்திரங்களைத் தேடுவதற்கான கட்டணங்கள் முதலியவை இத்துறையின் முக்கிய வருவாய் தரக்கூடியனவாகும். முத்திரைத் தாள் கட்டணமும் பதிவுக் கட்டணங்களும் சொத்துக்களின் அங்காடி மதிப்பையொட்டி விதிக்கப்படுகின்றன. சொத்துக்களின் அங்காடி மதிப்பைக் குறிப்பிடும் வழிகாட்டி பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு அங்காடி மதிப்பை எளிதில் மதிப்பீடு செய்ய உதவும் வகையில் பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன. வழிகாட்டி பதிவேடுகளின்படி நிலத்தின் மதிப்பு கணிசமான அளவு உயர்ந்துள்ளதால், கட்டண வீதங்களைத் திருத்தியமைக்க வேண்டிய அவசியமேற்பட்டது. திருத்தியமைக்கும் பணி குறிப்பிட்ட காலமான 18 திங்களில் முடிக்கப்பட்டு, புதிய வழிகாட்டி பதிவேடுகள் 1-9-1981 லிருந்து பின்பற்றப்படுவதற்காக சார் பதிவாளர்

க



லுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கப்பல் அடகுக்
ன் பத்திரம், பிணைமி உரிமை விடுதலைப் பத்திரம் முதலியவை
ன்ற சில பத்திரங்களைப் பொறுத்தமட்டில் முத்திரைத்
ள் கட்டண வீதத்தை அரசு 1—9—1981-லிருந்து உயர்த்தி
ள்ளது. சீட்டு நிதிகள், சங்கங்கள் திருமணங்கள் முதலிய
ற்றைப் பதிவு செய்வதிலிருந்து இத்துறைக்கு ஓரளவு வருவாய்
டைக்கிறது.

பல்வேறு சட்டங்களின் கீழ் 1980-81 ஆம் ஆண்டில் கிடைத்த
வருவாய் வருமாறு :—

| | | ரூ. |
|---|---|---|
| 1 | முத்திரைத் தாள் சட்டம் .. .. | 41,24,00,000 |
| 2 | பத்திரப் பதிவுக் கட்டணங்கள் .. | 5,59,00,000 |
| 3 | சங்கங்கள் பதிவுச் சட்டம் .. .. | 2,08,000 |
| 4 | சீட்டு நிதிகள் சட்டம் .. .. | 14,45,000 |
| 5 | பங்குதாரர்கள் சட்டம் .. | 1,53,000 |
| 6 | இந்து திருமணச் சட்டம் .. .. | 51,000 |
| 7 | சிறப்பு திருமணச் சட்டம் .. .. | 10,000. |

1980-81-ல் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களில் மொத்த எண்ணிக்கை 11,69,637 ஆகும். 1981-82 ஆம் ஆண்டில் ஏப்ரல் 1 முதல் 1981 டிசம்பர் வரையில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 8,51,341 ஆகும்.

11. பதிவுக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்து 1981-82 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள்.—(i) கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினரைப் பொறுத்த மட்டில் கடன்கள் பெறுவதற்கு முழுக் கட்டணச் சலுகையும், ஏனைய வகுப்பினர்களைப் பொறுத்த மட்டில் பாதிக் கட்டணச் சலுகையும் அளித்து, அரசு ஆண்டுக்காண்டு அறிக்கை வெளியிட்டு தள்ளுபடி செய்து வருகிறது. இம்முறை 1—7—1980—லிருந்து நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

(ii) வேளாண்மை உற்பத்திக்காக உழவர்கள் வணிக வங்கியில் ரூ. 5,000-க்கு மேற்படாமல் கடன் பெறுவது தொடர்பாக, அந்த வணிக வங்கியின் சார்பில் உழவர் ஒருவர் எழுதிக் கொடுக்கும் பத்திரம் ஒன்றைப் பொறுத்த மட்டில் பாதி பத்திரப் பதிவுக் கட்டணம் மட்டுமே விதிக்கத் தக்கதாகும். உழவர்

ஒருவர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவராயிருக்கும்போது, ரூ. 5,000-க்கு மேற்படாத கடன் பெறுவது தொடர்பாக வில்லங்கச் சான்றிதழுக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தால் அதற்கு பத்திரங்களைத் தேடுவதற்கான கட்டணம் எதுவும் விதிக்கப்பட மாட்டாது.

அவருக்கு வழங்கப்படும் கடன் தொகை எவ்வளவாக இருப்பினும் அதற்குப் பதிவுக் கட்டணமும், பத்திரங்களைத் தேடுவதற்கான கட்டணமும் விதிக்கப்படமாட்டாது. 30—6—1984 வரையில் கடன்கள் பெறுவதற்காக வணிக வங்கிகள் சார்பில் உழவர்கள் எழுதித்தரும் ரூ. 5,000 வரையிலான அடமானப் பத்திரங்கள், உத்திரவாதத்திற்குச் செலுத்தத் தக்க முத்திரைத்தாள் தீர்வையில் பாதியை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

(iii) கோயம்புத்தூரில் 'ஜவான் பவன்' கட்டுவதற்காக முப்படைகள் நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ. 5 இலட்சத்தைப் பொறுத்த மட்டில் அந்நிதிச் செயலாளருக்கு முன்னாள் இராணுவத்தினர் நல இயக்குநர் அலுவலகத்தின் இணை இயக்குநர் எழுதித் தந்த அடமானப் பத்திரத்திற்கு முத்திரைத்தாள் கட்டணம் பதிவுக் கட்டணங்கள் ஆகிய இரண்டும் தள்ளுபடி செய்யப்பட்டன.

12. வரவு-செலவு.—1977-78 ஆம் ஆண்டு முதல் இத்துறையின் வரவு-செலவு விவரம் வருமாறு—

| ஆண்டு. | வரவு. | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1977-78 .. .. .. | 359.26 | 213.85 |
| 1978-79 .. .. .. | 537.84 | 234.40 |
| 1979-80 .. .. .. | 568.27 | 265.00 |
| 1980-81 .. .. .. | 559.51 | 299.88 |
| 1981-82 .. .. .. | 563.54 (1981 டிசம்பர் வரையில்). | 310.25 (1981 டிசம்பர் வரையில்). |



## கோரிக்கை எண் 10

### பால்வளத்துறை-கொள்கை விளக்கக் குறிப்பு.

1. மனிதனுக்கு தேவையான உணவு வகையில் பால் ஒரு முக்கியமான சத்துள்ள உணவு. பால் வர்த்தகம் கிராமப்புறங்களில் முக்கியமான ஒரு துணைத் தொழிலாகும். பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் ஆங்காங்கு அமைப்பதன் மூலம் பால் உற்பத்தியாளர்களின் நலனைக் காப்பதுடன் நகர்ப்புறங்களிலுள்ள பால் நுகர்வோருக்குச் சிறந்த பால் நியாயமான விலையில் கிடைக்கவும் வழி செய்யப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோர்களது நலனைக் காக்கும்பொருட்டு அனைத்து முன்னேற்பாடான வசதிகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. 1958ஆம் ஆண்டில் மாநிலத்தில் பால் வளத்துறை நிறுவப்பட்டது. 1963ஆம் ஆண்டு முதல் முதலில் நவீன பால் பதப்படுத்தும் ,தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1967ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. கிராமங்களில் கிடைக்கும் அதிகமான பாலை சென்னை மற்றும் மதுரை பால்பண்ணைகளுக்கு அனுப்புவதற்கு முன் பக்குவம் செய்யும் பொருட்டு சில குளிரூட்டும் நிலையங்கள் அவ்வப்போது நிறுவப்பட்டன. 1972ஆம் ஆண்டு பால் கொள்முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகளைத் தமிழ்நாடு பால்வள நிறுவனம் ஏற்றுக் கொண்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனம், நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பொறுப்புகள் வரையறுக்கப்பட்டு (பால் பெருக்குத் திட்டம்) வெற்றிகரமாக செயல்படுத்தும்பொருட்டு அமைக்கப்பட்டது. "பால் பெருக்குத் திட்டம்" தமிழ்நாட்டிம் 9 மாவட்டங்களில் அதாவது செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், பெரியார், கோவை, நீலகிரி, மதுரை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. தமிழக அரசின் பால் அபிவிருத்தி கொள்கையின்படி 1981 பிப்ரவரி 1ஆம் தேதி முதல் தமிழ்நாடு பால்வள நிறுவனம் என்பது மூன்று நிலைகளைக் கொண்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமாக மாற்றப்பட்டது. அப்பணி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

பால்வளத்துறை, குறிப்பாக பால்பெருக்குத் திட்டம் செயல்படாத மாவட்டங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

3.1. பால்வளத்துறை இம்மாநிலத்தில் கிராம அளவில் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதையும் மாவட்ட அளவில் ஒன்றியங்களை நிறுவுவதையும் கவனித்து வருகிறது.

1. கிராம அளவில் ஏற்படுத்தக்கூடும் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பிரசித்தி பெற்ற ''ஆனந்த்'' பாணியில் அமைக்கப்படும். அந்த உற்பத்தியாளர் கூட்டுறவுகளில் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு :—

(அ) முன்பு அமைக்கப்பட்ட வழக்கமான சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பாலுக்கு அதன் அளவின் அடிப்படையில் பணம் கொடுக்கப்பட்டு வந்ததற்கு மாறாக தற்போது அமைக்கப்படும் புதிய சங்கங்களில் உற்பத்தியாகும் பாலை அவ்விடத்திலேயே ஒவ்வொரு அங்கத்தினரும் சங்கத்திற்கு வழங்கும் பாலில் உள்ள கொழுப்புச் சத்து எவ்வளவு என்று முடிவு செய்து அதன் அடிப்படையில் பணம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டதல்ல.

(இ) இச்சங்கங்கள் உற்பத்தியாளர் நலனை ஆதாரமாக கொண்டவையாகும்.

(ஈ) உள்ளூர் விற்பனையில் இவை அதிக அளவில் ஈடுபாடு கொள்வதில்லை.

(உ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கால்நடை மருத்துவப் பணி, செயற்கைமுறைக் கருத்தரிப்பு, கால்நடை சமனீட்டு தீவனம் போன்ற அடிப்படை வசதிகள் உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே கொடுக்கப்படுகின்றன.

(ஊ) இத்தகைய உற்பத்தியாளர்களின் சங்கச் செயலாளர்கள் செயற்கை கருத்தரிப்புப் பணி செய்யும் முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

(எ) உள்ளூர் நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நுகர்வோர் சங்கங்கள் ஆங்காங்கு நிறுவப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவில் ஒருங்கிணைந்த பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பால் உற்பத்தியாளர் சங்கங்களால் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய ஒன்றியமானது அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பணிகளையும், பண்ணைகளை நடத்தும் பணிகளையும் மேற்கொள்ளும்.

3.2. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதின் வளர்ச்சி: (1) இதுகாறும் 3,708 ஆரம்பப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(2) 1981–82ஆம் ஆண்டில் (1981 நவம்பர் 30 வரை) 338 சங்கங்கள் புதியதாக நிறுவப்பட்டுள்ளன. 1980–81ஆம் ஆண்டில் (1980 நவம்பர் 30 வரை) 140 சங்கங்கள் மட்டுமே



புதியதாக பதிவு செய்யப்பட்டன. 1982ஆம் ஆண்டு மார்ச்சுத்
திங்கள் முடிவடைவதற்கு முன்னால் இன்னும் 162 உற்பத்தியாளர்
சங்கங்கள் நிறுவப்படும். 1982–83ஆம் ஆண்டில் 500 உற்பத்தி
யாளர் சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.3. 1981–82ஆம் ஆண்டில் (30–11–1981 வரை) 68 வழக்க
மான வர்த்தக சங்கங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 1982
மார்ச்சுத் திங்கள் முடிவடைவதற்கு முன்னால் இன்னும் 32
வர்த்தக சங்கங்கள் மாற்றியமைக்கப்படும். 1982–83ஆம் ஆண்
டில் 150 வழக்கமான சங்கங்களை ''ஆனந்த்'' முறையிலான
சங்கங்களாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1980–81ஆம் ஆண்டு 19 செயல்படாத சங்கங்கள் புதுப்பிக்கப்
பட்டு உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டன.
1981–82ஆம்ஆண்டு 39 செயல்படாத சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு
உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப்பட்டன. செயல்படாத
சங்கங்கள் புதுப்பிக்கப்படும் பணியில் சிரமங்கள் இருப்ப
தால் 1982–83 ஆம் ஆண்டில் 100 செயல்படாத சங்கங்களை
யேனும் புதுப்பிக்க அரசு உத்தேசித்துள்ளது.

3.3. வழக்கமான சங்கங்கள் "ஆனந்த்" இருத்த முறை சங்கங்கள் செயல்படாத நிலையிலுள்ள சங்கங்கள் கலைக்கப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| துணைப்பதிவாளர் (பால்பதம்) வட்டம். | மாவட்டம். | செயல்படும் சங்கங்கள். ஆனந்த் வாணி. | வழக்கமான சங்கங்கள். | மொத்தம். | செயல்படாத நிலையில் உள்ள சங்கங்கள். | கலைக்கப்பட்டுள்ள சங்கங்கள் | கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம். | கூட்டுறவு பால் வழங்கும் சங்கம். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | சென்னை .. | .... | 5 | 5 | .. | .. | .. | 5 | 5 |
| காஞ்சிபுரம்.. .. | செங்கற்பட்டு .. | 326 | 44 | 370 | 193 | 365 | 419 | 509 | 928 |
| வேலூர் .. .. | வட ஆர்க்காடு .. | 406 | 51 | 457 | 138 | 58 | 485 | 168 | 653 |
| கடலூர் .. .. | தென் ஆர்க்காடு .. | 174 | 12 | 186 | 309 | 53 | 367 | 181 | 548 |
| சேலம் .. .. | சேலம் .. .. | 458 | 6 | 464 | 97 | 52 | 496 | 117 | 613 |
| தர்மபுரி .. .. | தர்மபுரி .. | 231 | 3 | 234 | 44 | 15 | 270 | 23 | 293 |
| ஈரோடு .. .. | பெரியார் .. | 272 | 2 | 274 | 18 | 71 | 281 | 82 | 363 |
| கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர் .. | 225 | 10 | 235 | 91 | 34 | 291 | 69 | 360 |
| | நீலகிரி .. | 82 | 16 | 98 | 12 | 1 | 93 | 18 | 111 |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி .. | 158 | 47 | 205 | 174 | 82 | 205 | 256 | 461 |
| | தஞ்சாவூர் .. | 63 | 58 | 121 | 129 | 106 | 91 | 265 | 356 |
| | புதுக்கோட்டை .. | 17 | 20 | 37 | 43 | 27 | 34 | 73 | 107 |
| மதுரை .. .. | மதுரை .. .. | 412 | 149 | 561 | 441 | 82 | 676 | 406 | 1,084 |
| விருதுநகர் .. | இராமநாதபுரம் .. | 446 | 54 | 500 | 84 | 35 | 479 | 140 | 619 |
| திருநெல்வேலி .. | திருநெல்வேலி .. | 421 | 46 | 467 | 105 | 32 | 489 | 115 | 604 |
| | கன்னியாகுமரி .. | 56 | 11 | 67 | 4 | 3 | 59 | 15 | 74 |
| | மொத்தம் .. | 3,747 | 534 | 4,281 | 1,882 | 1,016 | 4,737 | 2,442 | 7,179 |

3.4. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், ஆரம்பநிலை சங்கங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) தமிழகத்திலுள்ள செயல்படும் பால் கூட்டுறவுகளின் எண்ணிக்கை. | 4,281 |
| (2) பால் வழங்கு கூட்டுறவுகளில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை (செயல்படும் சங்கங்கள் பொருத்த மட்டில்). | (ரூ. 10.28 இலட்சம்) |
| (3) சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (செயல்படும் சங்கங்கள் பொருத்தமட்டில்). | (ரூ. 217.80 இலட்சம்) |

கூட்டுறவு பால் ஒன்றியங்கள்—

| | |
|---|---|
| (1) பால் வழங்கு ஒன்றியங்களின் எண்ணிக்கை. | 18 |
| (2) பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள். | 6 |
| (3) பால் ஒன்றியங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 18,608 |
| (4) செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் .. | ரூ. 36.32 (இலட்சம்) |

உற்பத்தியும் விற்பனையும்—

| | |
|---|---|
| (1) நாள் ஒன்றுக்கு சராசரி உற்பத்தி (சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள் பொருத்த மட்டில்). | 6.34 இலட்சம் லிட்டர். |
| (2) உள்ளூர் சராசரி விற்பனை (சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள் பொருத்த மட்டில்). | 2.20 இலட்சம் லிட்டர். |
| (3) தமிழ்நாடு பால் உற்பததியாளர் கூட்டுறவு இணையத்திற்கு நாள்தோறும் வழங்கும் சராசரி பால் அளவு. | 2.97 இலட்சம் லிட்டர். |
| ஒன்றியங்களுக்கு வழங்கும் பால் அளவு. | இலட்சம் லிட்டர். 171 |



4.1. திட்ட மதிப்பீடுகள்—

(1) ஏழு பால் கொள்முதல் குழுக்கள் தற்போது பால் பெருக்கத்திட்டம் அமல்படுத்தாத 6 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. 1982–83 ஆம் ஆண்டில் கொள்முதல் குழுக்கள் செயல்பட 5.53 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடமாடும் கால்நடை மருந்தகங்கள்—

(2) இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் குமரி மாவட்டங்களில் திட்டமில்லா மதிப்பீட்டின்கீழ்செயல்பட்டு வரும் நான்கு நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களன்றி நான்கு நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுகின்றன. 1982–83ஆம் ஆண்டில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட 1.90 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) வழக்கமான மற்றும் செயல்படாத கூட்டுறவு சங்கங்களை உற்பத்தியாளர்கள் சங்கங்களாக மாற்றியமைக்கவும் மருந்துகள், பால் குவளைகள், பரிசோதனைக் கருவிகள் முதலியன வாங்கும் பொருட்டு சங்கம் ஒன்றுக்கு ரூ. 4,800 வீதம் மானியமாக வழங்க ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) பால் கூட்டுறவுகளுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்காக மானியம் வழங்க 1982–83ஆம் ஆண்டில் ரூபாய் 0.75 இலட்சம் ஒதுக்கப்புட்டுள்ளது.

(5) பால் கூட்டுறவுகளுக்கு தீவனப் பண்ணை பராமரிப்புக்கு மானியம் வழங்க 1982–83-ல் ரூபாய் 0.10 இலட்சம் ஒதுக்கப்புட்டுள்ளது.

(6) பால் கூட்டுறவு சங்கங்களுக்குப் பால் குவளைகள், பால் கருவிகள், குளிர் பதனங்கள், போக்குவரத்து வண்டிகள் ஆய்வுக்கூடம் மற்றும் கிடங்குகள் கட்ட கடனுதவியளிக்க 1982-83ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4.2. 1982–83ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(1) ரூபாய் 86 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 50,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் நிலையம் ஒன்றினை திருநெல்வேலியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 29.00 இலட்சம் 1982-83ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) ரூபாய் 18.26 இலட்ச மொத்த மதிப்பீட்டில் 10,000 லிட்டர் பாலை கையாளுகின்ற குளிரூட்டும் நிலையம் ஒன்றினை புதுக்கோட்டையில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1982–83ஆம் ஆண்டில் ரூபாய் 9.43 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது

(3) 1982–83ஆம் ஆண்டில் ரூபாய் 5.41 இலட்ச திட்ட மதிப்பீட்டில் மேலும் நான்கு நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விருதுநகர், திருநெல்வேலி, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய சார்நிலை அலுவலகங்களின் நிர்வாகத்தை திறன்படுத்தும் பொருட்டு 1982–83-ல் ரூ. 89 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.



(5.1.) திட்ட ஒதுக்கீடு 1980–81 ஆம் ஆண்டின் செலவுக் கணக்குகள் 1981–82 ஆம் ஆண்டில் திட்ட மதிப்பீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு 1982–83 ஆம் ஆண்டிற்கான திட்டமதிப்பீடு பின் வருமாறு :—

கோரிக்கை எண். 10.

| அம்சம். | 1980–81 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1981–82 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1981–82 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1982–83 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| பால்பெருக்குத் திட்டத்தின்கீழ் வராத மாவட்டங்களின் பால் கொள்முதல் குழுக்கள் அமைப்பது. | 3,82 | 4,52 | 5,14 | 5,53 |
| நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைப்பது. | 3,00 | 1,32 | 90 | 7,31 |

| அம்சம். (1) | 1980–81-ம் ஆண்டிற்கான கணக்குகள். (2) | 1981–82-ம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (3) | 1981–82-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. (4) | 1982–83-ம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 3. பால் கூட்டுறவுகளுக்கு மானியம் வழங்குதல்— | | | | |
| (1) நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள். | 61 | 25,65 | 23,09 | 75 |
| (2) தீவனப் பண்ணை பராமரிப்பு .. | 1,18 | 10 | 10 | 10 |
| 4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி உதவி முதலீடு— | | | | |
| (1) நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் பண்ணை வளர்ச்சித் திட்டங்கள். | .. | 5,00 | .. | .. |
| (2) அணைக்கட்டில் சிறப்பு மலை வாழ் மக்கள் நலத்திட்டம். | .. | 44 | .. | .. |
| (3) கோவிக்கரை மற்றும் குஞ்சம்பாறை ஆகிய இடங்களில் மலை வாழ் மக்கள் நலத்திட்டம். | .. | 1,00 | .. | .. |
| 5. துறையின் நிர்வாகத் திறனை பலப்படுத்தும் திட்டம். | .. | 1,39 | 94 | 1,76 |
| 6. புதுக்கோட்டையில் குளிரூட்டு நிலையம் அமைத்தல். | .. | .. | .. | 81 |
| | 8,61 | 39,42 | 30,17 | 16,26 |

கோரிக்கை எண் 10-ன் கீழ் 1982–83 ஆண்டில் திட்டத்தின் கீழ் வரும் பணி மற்றும் திட்டத்தின் கீழ் வராத பணி ஆகியவற்றின் கீழ் பால்வளத்துறைக்காக மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 86.50 இலட்சம் அளவில் அமையும்.



5.2. திட்ட ஒதுக்கீடு—கோரிக்கை எண் 55— பல்வகை மூலதனச் செலவு.

| அம்சம். (1) | 1980–81 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். (2) | 1981–82 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (3) | 1981–82 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. (4) | 1982–83 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 1. பால்வழங்கு கூட்டுறவு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவி முதலீடு. | .. | 1 | 1 | .. |
| 2. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி உதவி முதலீடு— | | | | |
| (1) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம். | 13,07 | 30,00 | .. | .. |
| (2) நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளரின் ஒன்றியம். | 16,93 | .. | 25,00 | 25,00 |
| 3. மேற்கு மலைத்தொடர் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கோடைக்கானலில் பாலாடை, வெண்ணெய் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க கோடைக்கானல் பால் வழங்கு ஒன்றியத்திற்கு பங்கு மூலதன உதவி. | .. | 1 | .. | .. |
| 4. தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு நிதி உதவி முதலீடு. | 15,00 | 1 | 1 | .. |
| 5. திருநெல்வேலியில் பால் பண்ணை மற்றும் பால் பதப்படுத்தும் நிலையம் ஆரம்பித்தல். | .. | .. | .. | 29,00 |
| 6. புதுக்கோட்டையில் குளிரூட்டும் நிலையம் அமைத்தல். | .. | .. | .. | 8,62 |
| | 45,00 | 30,03 | 25,02 | 62.62 |

5.3. திட்ட ஒதுக்கீடு—கோரிக்கை எண் 56. மாநில அரசின் கடன்களும் முன் பணங்களும்.

| அம்சம். | 1980–81 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1981–82 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1981–82 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1982–83 ஆம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1. பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் குவளைகள் சோதனைக் கருவிகள், குளிரூட்டும் சாதனங்கள் மற்றும் வாகனங்கள் ஆய்வுக் கூடம், கிடங்கு முதலியன கட்டுதல் போன்றவற்றிற்கு கடனுதவி. | 2,97 | 5,00 | 5,00 | 5,00 |
| 2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத் திட்டம் பால்வளத் துறை ஆணையாளரின் பொறுப்பிலுள்ள தனி சட்டப்படி அமைத்த கழகங்கள்/வாரியங்கள் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு கடனுதவி. | .. | 30,00 | .. | .. |
| 3. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடன் அளித்தல்— | | | | |
| (1) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம். | 13,06 | .. | .. | .. |
| (2) நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம். | 16,94 | .. | 25,00 | 25,00 |
| 4. மற்கு மலைத் தொடர்வளர்ச்சி திட்டத்தின்கீழ் கோடைக்கானலில் பாலாடை, வெண்ணெய் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க கோடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியத்திற்கு கடன். | .. | 1 | .. | .. |
| | 32,97 | 35,01 | 30,00 | 30,00 |

6.1. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நடைமுறைப் பணிகள்.—1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் நாள் முதல், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமானது, தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் அனைத்து செயலாக்கப் பணிகளையும் எடுத்துக் கொண்டது. தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் பால் பெருக்குத் திட்டப் பணிகளோடு எல்லா முன்னேற்ற பணி திட்டங்களையும் இணையம் அமல் படுத்தி வருகின்றது. ஈரோடு, பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியமானது 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் ஒன்பதாம் நாள் முதல் பால் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் பணிகளை சமப்படுத்தும் பால் பண்ணையுடன் ஈரோடு நகரில் செயலாக்கி வருகின்றது. இதைப் போன்ற பால் உற்பத்தி, நாமக்கல் மற்றும் பரமத்திவேலூர் பால் குளிரூட்டும் நிலையங்களின் பணிகளை, 1981 ஆம் ஆண்டு மே திங்கள் இரண்டாம் நாள் முதல் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் மேற் கொண்டது. நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு பால் வள உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றப் பணிகளும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களுடன் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாள் நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டன. 1981–82 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 2.97 இலட்சம் லிட்டர் பாலை தமிழ்நாடு பால் வள நிறுவனம் உற்பத்தி செய்தது. பால் உற்பத்தி, உற்பத்தியினால் பயனடைந்த விவசாய உறுப்பினர்களின் எண்ணிக்கை, விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் வருமாறு :—

| விவரங்கள். | 1980–81 31-1-81 வரை. | 1981 1-2-81 முதல் 31-12-81 வரை. | 1982 1-1-82 முதல் 31-12-82 வரை. (மதிப்பீடு). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பால் உற்பத்தி (இலட்சம் லிட்டரில்). | 309.47 | 814.00 | 1,100.00 |
| பயனடைந்த விவசாய அங்கத்தினரின் எண்ணிக்கை. | 2,77,312 | 292.00 | 3,00,000 |
| விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை. (இலட்சம் ரூபாயில்). | 1,842.27 | 1,790.00 | 2,800.00 |



6.2 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்தும், 8.5 விழுக்காடு கொழுப்பில்லாத இதர திண்மைச் சத்தும் குறைந்த தரப்பட்ட பாலானது, முக்கியமாக மதுரை மற்றும் சென்னை பண்ணைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. விற்பனை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

| விவரங்கள். | 1980–81 31–1–81 வரை. | 1981 1–2–81 முதல் 31–12–81 வரை. | 1982 1–1–82 முதல் 31–12–81 வரை. (மதிப்பீடு). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (மதிப்பு இலட்சத்தில்.) | | |
| பால் (லிட்டரில்) .. | 1,046.37 | 1,093.91 | 1,388.50 |
| நாளொன்றுக்கு சராசரியான (லிட்டரில்). .. | 3.42 | 3.28 | 3.80 |
| வெண்ணெய் (கி.கிராமில்) .. | 5.52 | 6.06 | 7.00 |
| நெய் (கி. கிராமில்) .. | 5.77 | 3.84 | 5.50 |
| பால்பொடி (கி.கிராமில்) .. | 8.66 | 6.62 | 7.84 |

6.3. 1979–80 ஆம் ஆண்டின் பால் வள நிறுவனத்தின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 29.45 கோடியாகும். இது 1980–81-ல் 31–1–81 வரை ரூ. 32.02 கோடியாக உயர்ந்தது. 1981-ல் (1–2–81 முதல் 31–12–81 வரை) ரூ. 35.19 கோடியாகவும் 1982–ல் ரூ. 46.40 கோடியாகவும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. கால்நடைத் தீவன ஆலை.—மணியொன்றுக்கு நான்கு முதல் ஐந்து டன் வரை உற்பத்தித் திறனும், தற்போது மாதம் ஒன்றுக்கு சராசரியாக 1,500 டன் வரை உற்பத்தி செய்யப்படும் கால்நடைத் தீவன ஆலையானது மாதவரம் பால் பண்ணை குடியிருப்பில் அமைந்துள்ளது. ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிடமிருந்து கால்நடைத் தீவன ஆலை இந்த ஆண்டும் குத்தகைக்கு எடுக்கப்பட்டது. இந்த ஆண்டில் இங்கு உற்பத்தி யான கால்நடைத் தீவனமானது கூட்டுறவு சங்கங்களின் அகங்த்தினர்கள், கால்நடை பராமரிப்புத் துறையின் பண்ணைகள்

மட்டுமின்றி சென்னை மாநகராட்சி உள்ளிட்ட பல்வேறு நிறு வனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. விற்பனை செய்யப்பட்ட கால்நடை தீவன அளவின் விவரங்கள் பின்வருவனவாகும் :—

| விவரங்கள். | 1980–81 1–4–80 முதல் 31–1–81 வரை. | 1981 1–2–81 முதல் 31–12–81 வரை. | 1982 1–1–82 முதல் 31–12–81 வரை (மதிப்பீட்டு அளவு). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கால்நடைத் தீவனம் .. (டன்னில்). | 13,526 | 16,000 | 18,000 |

ரூபாய் பத்து இலட்சம் செலவில் ஒரு குளிகை வடிவில் (முறுக்கு) தீவனம் தயாரிக்கும் ஆலை (Pelli iser Plan) மாதவரத்தில் நிறுவப்பட்டு விரைவில் செயல்பட உள்ளது.

8. பால் பெருக்குத் திட்டம் I.—(அ) பால் பெருக்குத் திட்டம் I- 1981 மார்ச்சு 31 ஆம் தேதியுடன் முடிவுற்றது. இத்திட்டத்தின்கீழ் ஆடை நீக்கிய பால்பொடியும் வெண்ணெய் கொழுப்பும் மலிவான விலையில் வழங்குவது முழுமையாக நிறுத்தப்பட்டு விட்டது. 1980 ஏப்ரல் முதல் திரட்டப்பட்ட இருப்பிலிருந்து மட்டுமே ஆடை நீக்கிய பால்பொடியும், வெண்ணெய் கொழுப்பும் வழங்கப்பட்டது.

அடிப்படை வளர்ச்சிகளுக்காக இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் அளிக்கப் படுகிறது.

நிதி உதவியின் முன்னேற்றம் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | பால் பெருக்குத் திட்டம் I-ன் கீழ் இறுதி நிதி ஒதுக்கீடு. | 1,683.00 |
| 2. | இந்திய பால் பண்ணைக் கழகம் 1981 டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை கொடுத்துள்ள நிதி. | 1,547·70 |
| 3. | உபயோகப்படுத்தப்பட்ட தொகை (30–11–81 | 1.521·57 |



(ஆ) பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியத்தின் மூலமாக உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை யின் நிர்மாணப் பணிகள் முழுமையாக மூடிவடைந்து, 1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகின்றது. சேலத்தில் நிறுவப்பட்டுவரும் சமப்படுத்தும் பால் பண்ணையின் கட்டுமானப் பணிகள் நடைமுறையிலுள்ளது. சங்கிராண்டன்பாளையம், சத்யமங்கலம், சின்னசேலம், ஆம்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங் களின் கட்டுமானப் பணிகள் முடிவுற்று செயலாக்கப் பணிகள் ஆரம்பமாகி விட்டன. திருவண்ணாமலையில் பால் குளிரூட்டும் நிலையத்திற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டது. கட்டு மானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

9. பால் பெருக்குத் திட்டம் II.—பால் பெருக்குத் திட்டம் I-ன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப் பதற்காக பால் பெருக்குத் திட்டம் II, சுமார் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் தவணையாக ரூ. 40 இலட்சம் இந்திய பால்பண்ணைக் கழகத்தால் வழங்கப்பட்டுவிட்டது. ஒவ்வொரு உற்பத்தியாளர் ஒன்றியத் தின் செயலாக்கத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு விட்டன. பால் பெருக்குத் திட்டம் II-ன் குறிக்கோள்கள் கீழே விவரிக்கப் பட்டுள்ளன :—

(1) இத்திட்டத்தின் அமைப்பினை (ஒன்பது மாவட்டங் களில்) ஒன்பது பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களாக பிரிக்கப் பட்டுள்ளன.

(2) 1984–85ஆம் ஆண்டிற்குள் 4,550 பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், இத்திட்டத்தின்கீழ் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (தற்போது அமைக்கப்பட்டுள்ள 2,568 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இதில் அடங்கும்).

(3) பால் கொள்முதலுக்காக பதிமூன்று இலட்சம் கறவை மாடுகள் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 48 விழுக்காடு செயற்கை முறை கருத்தரித்தல் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும். இத்திட்டத்தின் முடிவில் நாளொன்றுக்கு பால் உற்பத்தியானது தற்போதுள்ள நாளொன்றுக்கு உற்பத்தியாகும் 10·90 இலட்சம் லிட்டரிலிருந்து 34·8 இலட்சம் லிட்டராக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

(4) பால் விற்பனை, மாநிலத்தின் முதல் தரம், இரண்டாம் தரம் நகரங்களில் இத்திட்டத்தில் செயல்படுத்தப்படும். ஒழுங்கு படுத்தப்பட்ட பால் பண்ணைகளின் திறன் 70 சதவீதம் தேவை களையும் பூர்த்தி செய்யும் அளவிற்கு அமையும்.

(5) மாநிலத்தில் இத்திட்டத்தின்கீழ் அடங்கும் முக்கிய நகர்ப்புற பகுதிகளில் நாளொன்றுக்கு 10·8 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்வதற்காக 7·17 இலட்சம் லிட்டர் பால் பயன் படுத்தக்கூடிய திறனும், உபரியாக இதற்கு மேலும் பால் சமப் படுத்தும் திறனும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(6) இத்திட்டத்திற்காக ரூ. 40·13 கோடி செலவாகும் என இந்திய பால் பண்ணைக் கழகத்தின் முன் வரைவு அறிக்கையின் படி மதிப்பிடப்பட்டுள்ளது. தேசிய பால்வள வாரியம் மற்றும் இந்திய பால் பண்ணை கழக அங்கீகாரம் கிடைப்பின் மாநில இணையம் மற்றும் ஒன்பது ஒன்றியங்களின் திட்ட அறிக்கைகளின் படி இத்திட்ட மதிப்பீடு அதிகரிக்கலாம்.

ஆறு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் முறையே பெரியார், கோவை, சேலம், உதகமண்டலம், மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு விட்டது.

10. சிறப்புத் திட்டங்கள்.—தமிழ்நாடு அரசினரால் ஒப்ப டைக்கப்பட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் தொடர்ந்து செயல்படுத்தும். முன்னேற்றத்தில் உள்ள சிறப்புத் திட்டங்கள் முறையே மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சியால் பாதிக்கக் கூடிய பகுதிக்கான திட்டம், சிறப்பு கால்நடை பரா மரிப்புத் திட்டம் (கன்று வளர்ப்புத் திட்டம்) ஆகியனவாகும். இந்திய அரசின் ஆதி திராவிடர் நல சிறப்புக் கூட்டமைப்புத் திட்டம் உள்ளிட்ட ஆதி திராவிடர் நலத் திட்டத்தினை செயல் படுத்த பால் பண்ணை வளர்ச்சித் துறையானது தொடர்ந்து செயல்பட்டு வரும்.

சிறப்புத் திட்டத்தின் செயலாக்கம், செயலாக்கப்படும் பகுதிகள், நிதியுதவி, செயலாக்கத்தினால் அடையப்பட்ட முன்னேற்றங்கள் முதலிய குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—



தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் செயல்படுத்தப்படுபவை—

| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | செயலாக்கம். (3) | திட்டத்தின் தன்மை. (4) | 31–12–81 வரை வழங்கப் பட்ட நிதி. (5) | பயன் படுத்தப் பட்ட தொகை. (6) | உருவாக்கப் பட்ட சங்கங்களின் எண் ணிக்கை. (7) | பால் உற்பத்தி அளவு நாளொன் றுக்கு. (8) | பயன டைந்த உழவர்கள் எண் ணிக்கை. (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். | நீலகிரி | .. | 229·12 | 193·57 (1981 நவம்பர் வரை). | 98 | 30,000 | 16,000 |
| | வறட்சியால் பாதிக்கக் கூடிய பகுதிக்கான திட்டம். | இராமநாதபுரம் | .. | 57·44 | 26·57 (1981 நவம்பர் வரை). | 102 | 12,035 | 4,576 |
| 3 | ௸ | தர்மபுரி | .. | 102·19 | 87·66 (1981 நவம்பர் வரை.) | 320 | 35,000 | 31,500 |
| 4 | ௸ | கிருஷ்ணகிரி (பால்பொடி ஆலை.) | .. | 175·00 | 183·23 (1981 டிசம்பர் வரை.) | .. | .. | .. |
| 5 | சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டம் (கன்று வளர்ப்புத் திட்டம்.) | வடார்க்காடு தென்னார்க்காடு, கோவை, மதுரை, சேலம். | .. | 201·89 | 197·76 | .. | .. | 19,415 (திட்டத்தில் கொண்டு வரப்பட்ட கன்றுகள்.) |

பால் பண்ணை வளர்ச்சித் துறையினரால் செயல்படுத்தப்படுபவை:—

| வரிசை எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | செயலாக்கம். (3) | திட்டத்தின் தன்மை. (4) | 31–12–81 வரை வழங்கப் பட்ட நிதி. (5) | பயன் படுத்தப் பட்ட தொகை. (6) | உருவாக்கப் பட்ட சங்கங்களின் எண் ணிக்கை. (7) | பால் உற்பத்தி அளவு நாளொன் றுக்கு. (8) | பயன டைந்த உழவர்கள் எண் ணிக்கை. (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர் நலத் திட்டம். | மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்கள். | பால் கூட்டுறவு களின் ஆதி திராவிடர் உறுப் பினர்களுக்கு கால்நடைகள் வாங்க வசதிகள். | 17·96 | 3·00 | .. | .. | 3,410 |

10·2. 1981–82ஆம் ஆண்டில் திட்டங்களை நிறைவேற்ற ரூபாய் 50 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு இப்பணம் கொடுக்கப்படும். 1982–83ஆம் ஆண்டிற்கும் இதேபோன்று ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10·3. வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிக்கான திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் திறன்கொண்ட உற்பத்தி சமப்படுத்தும் பால்பண்ணை நிறுவப்பட்டு வருகின்றது. இதன் கட்டுமானப் பணிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றது. இத் திட்டத்திற்கு ஆகும் செலவாக மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 275 இலட்சத்தில் இதுவரை ரூ. 175 இலட்சம் நிதி உதவியாக பெறப்பட்டுள்ளது. இத்தொகை 50 சதவீதம் கடன் 50 சதவீதம் மானியம் என்ற முறையில் தமிழ்நாடு பால்வள உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்குத் தரப்பட்டுள்ளது.

11. பால் உற்பத்தியாளர்களின் வளர்ச்சிக்காகவும் அதிகப்படியான பால் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்காகவும் கருதி 1981ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பாலின் கொள்முதல் விலை ஒரு லிட்டருக்கு 42 பைசா வரை உயர்த்தப்பட்டுள்ளது. கொள்முதல் விலையின் உயர்வால் பாலின் உற்பத்தி விலையில் லிட்டருக்கு சுமார் 40 பைசா வரையில் உயர்வு ஏற்பட்டிருந்தாலும் நுகர்வோர் நலன் கருதி தமிழ்நாடு அரசானது விற்பனை விலையை லிட்டருக்கு 30 பைசா மட்டும் (அதாவது ரூ. 2·50 லிருந்து ரூ. 2·80 ஆக) உயர்த்தியது.

சென்னை நகரில், நாளொன்றுக்கு விநியோகம் செய்யப்படும் பாலின் அளவு 2·70 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. வரும் மாதங்களில் இது மேலும் அதிகமாக சுமார் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டராக அமையும்.

11.1. பால் விநியோகத்தில் ஏற்படும் சிக்கலை பெருமளவில் களைந்தெறியவும், சீர்படுத்தவும், சென்னை நகரில் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் பாலகங்கள் மூலம் நுகர்வோருக்கு பால் விநியோகம் செய்கின்ற பணியினை மேற்கொள்ளும். இதன்படி முதல் கட்டமாக முறையே தாம்பரம், வேளச்சேரி, சைதாப்பேட்டை, இராயபுரம் மற்றும் கொரட்டூர் ஆகிய ஐந்து இடங்களில் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு 1982 பொங்கல் திருநாளன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. நுகர்வோரின் தேவையையும், வளர்ச்சியையும் கருதி மேலும் அதிகப்படியான சங்கங்கள் நிறுவப்படும்.



12. பொது.—பால் உற்பத்தியாளர்களுக்கு நல்ல முறையில் ஊக்கமளிக்க கொள்முதல் பாலுக்கு விலை 1981 செப்டம்பர் திங்களில் உயர்த்தப்பட்டது. பாலின் உயர்ந்த கொள்முதல் விலை உயர்வு பால் வற்றிய காலங்களுக்கும் உபரி காலங்களுக்கும் பொருந்தும். இதன்மூலம் பால்பெருக்குத் திட்டம், மற்றும் இதர சிறப்புத் திட்டங்களின் செயலாக்கக் குறிக்கோளாகி பால் உற்பத்தி அதிகப்படியாக உயரும். பால்உற்பத்தியாளர் மட்டுமன்றி பால் நுகர்வோருக்கும் நல்லதொரு சேவை செய்யும் பொருட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

V211,31 N82
N83·34 32
122241

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test, Egmore, Madras-8.
2 The City Bock Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Roa Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirune veli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Mad
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmoi Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-1
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirap-palli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY